# தமிழரசு

16-1-1974        40 காசு

R.R. No-44/74
24 JAN 1974
821



# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஓரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16





பத்தாண்டுகள் முறையாகப் பணியாற்றியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் 1974 சனவரித் திங்களிலிருந்து முதல்நிலைத் தமிழாசிரியர்களாக உயர்த்தப்படுவர் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.
செய்தியே! சித்திரமே!
சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கென இலவசத் தனிப்பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படுமென்று மாநகராட்சித் தனி அதிகாரி அறிவித்துள்ளார்.
அரசு அறிவிப்பு
12
10
அரசு ஊழியர்களின் ஓய்வு ஊதியம் அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்புள்ள 12 மாதச் சம்பளத்தை வைத்துக் கணக்கிடப்பட்டு வந்ததற்குப் பதிலாக, இனிமேல் 10 மாதச் சம்பளத்தை வைத்துக் கணக்கிடுதல் போதுமென அரசு அறிவித்துள்ளது.


தமிழ் நாட்டில் 50 காவலர்களுக்கு ஏற்கெனவே கராத்தே பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் 50 காவலர்களுக்குக் கராத்தே பயிற்சி அளிக்க அரசு அனுமதித்துள்ளது.
கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களில் ஓடக்கூடிய அரசு உந்துகளை ஒன்றாக இணைத்து 4.1.'74 அன்று 'கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்' உருவாக்கப்பட்டுள்ளது.
கட்டபொம்மன்
அரசு ஊழியர்கள், பதவிக் காலம் முடிந்து ஓய்வு பெறும் நாள் மாத நடுவில் வந்தாலும் அவர்கள் அந்த மாத இறுதிவரை பணியாற்றி ஓய்வு பெறலாம் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# பூச்சி தர்பார்





## முதல்வர் கலைஞர்

விவசாயத் துறையைச் சேர்ந்த நீங்கள் மேற்கொண்டிருக்கும் அரும் பணிக்கு இந்த விழா நல்ல தொடக்கமாக அமைந்திருக்கிறது.

நீங்கள் பெறுகின்ற பயிற்சி உங்கள் வாயிலாக உங்களுக்கு அடுத்தவர்கள் பெற்று, அவர்கள் வாயிலாகத் தமிழகத்தில் வயல் வெளிகளுக்குச் சென்றுவெற்றி குவிக்க இருக்கிறது.

அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டது போல, விவசாயிகள் பழைய முறைகளையே பின்பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்ற மனப்பான்மையிலிருந்து விடுபட்டுப் புதிய முறைகளை மேற்கொள்கின்ற பக்குவத்தைப் பெற்றிட வேண்டும்; அந்த முயற்சியை வேளாண்மைத் துறை தீவிரமாக மேற்கொண்டிருக்கிறது.

எந்தெந்த வகையிலெல்லாம் வேளாண்மைத் துறை தனது பணிகளையும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டிருக்கிறது என்பதனை மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறை பெற்றிருக்கும், பெற வேண்டிய வளர்ச்சிக்கு அறிகுறியாகத்தான் அந்தத் துறை, அமைச்சர் ஆதித்தனாரிடம் தரப்பட்டிருக்கிறது.

நமது வேளாண்மைத் துறையானது இடர்ப்பாடுகளைக் கடந்து—தடை பலவற்றைக் கடந்து, செழிப்பும் சிறப்பும் மிகுந்ததாக வளர்ந்து, பல்வேறு மாநிலங்களுக்குத் துணை நின்றிடத் தக்க அளவுக்குப் பசுமைப் புரட்சியில் வெற்றி பெற்று வருகிறது.

இந்தத் துறையின் இயக்குநராக இருந்த அந்தோணி அவர்கள் தனக்களிக்கப்பட்ட எந்தக் காரியத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்பவர். அந்த வகையில் இந்தத் துறையிலும் அவர் பாடுபட்டிருக்கிறார். அந்த அடிப்படையில் நீங்களும் பாடுபட்டு வருகிறீர்கள்.

இந்தத் துறையின் பிரச்சாரக் கருவிகளில் ஒன்றாக இங்கே 'பூச்சி தர்பார்' என்ற நாடகம் நடைபெற்றதைப் பார்த்தேன். தமிழகத்தின் பயிர்களை அழிக்க எங்கிருந்தெல்லாம் பூச்சிகள் வருகின்றன என்று நாடகத்தில் நன்றாக விளக்கப்பட்டிருந்தது.

பூச்சிகளுக்குச் சில தளபதிகளையும் காட்டினார்கள். விவசாயப் பெரு மக்களின் தாக்குதலைத் தாங்க முடியாமல் அவர்கள் மகாராசாவிடம் போகிறார்கள். இறுதியில் மகாராசாவும் சேர்ந்து என்ன முடிவுக்கு ஆளானார்கள் என்பதையும் பார்த்தோம்.



தமிழகப் பயிர்—ஆயிரம் காலத்துப் பயிர். அந்தப் பயிர்களுக்கிடையே களைகள் ஏற்பட்டால், அவற்றைக் களையும் ஆற்றல்—களையும் பொறுப்பு நமக்கே உண்டு. எங்கிருந்தோ வருகின்ற பூச்சிகள் பயிரை அழிக்க வருகின்றன என்றால் அந்தப் பூச்சிகளுக்குச் சரியான பாடத்தைத் தமிழக விவசாயப் பெருங்குடி மகன் தருவான் என்ற நம்பிக்கையை இந்த நாடகத்தின் மூலம் பெற்றேன்.

இந்த நாடகத்தை எந்த நோக்கத்தோடு தீட்டியிருந்தாலும் யார், யார் எந்தெந்தக் கருத்தோடு பார்த்தாலும் அதற்கேற்றாற்போல் அமைந்திருக்கிறது.



இந்த நாடகத்தில் கடை நிலை ஊழியர் ஒருவர் மகாராசாவாக நடித்ததாகவும்—அவருக்கு மேலேயிருக்கிற அலுவலர்கள் மகாராசாவின் தளபதிகளாக நடித்ததாகவும் அறிந்தேன். நல்ல சமதர்மம்!

இதுபோன்ற நாடகம்—பிரச்சார ஏடுகள் நல்ல நூல்களின் மூலம் விவசாயிகள் மத்தியில் நல்ல கருத்துக்கள் பரவ வேண்டும். விவசாயிகள் பழமையான முறைகளிலிருந்து மாறிப் புதிய முறைகளை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மைத் துறை அமைச்சராலும் அதிகாரிகளாலும் அந்த அடிப்படையில்தான் பணியாற்றி வருகிறார்கள். தளபதியாக வந்தவர்கள் பூச்சிகளை அழிக்க விவசாயிகள் இன்னின்ன மருந்துகளைத் தெளித்தார்கள் என்ற விவரத்தைச் சென்னதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

விவசாயிகள் இவ்வளவு ஆக்ரோஷத்தோடு விரட்டுகிறார்களே ஏன் தெரியுமா? அந்த அளவுக்கு இந்த அரசு சலுகை தருகிறது'' என்று சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே சலுகை தருவது போலவே இன்னும் இந்தத் துறையினருக்கு அரசு உற்சாகத்தைத் தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**—வேளாண்மைத் துறை அலுவலர்களின் கோடைக் காலப் பயிற்சி உற்பத்தி முகாமைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.**



'தமிழரசு' சுற்றுலாச் சிறப்பு இதழ் பார்த்தோம்; சென்னையிலிருந்து பாரிசையும், ஜெர்மனியையும், இங்கிலாந்தையும், ஸ்பெயினையும், ஜப்பானையும் பார்க்க வைத்த இதழுக்கு எங்கள் நன்றியை எப்படித் தெரிவிப்பதென்றே தெரியவில்லை.

—வே. இந்திராணி, மதுரை-1.



தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென ஒரு தனித்துறை அமைத்து, அதன் வாயிலாகச் சுற்றுலா வளர்வதற்குத் துணை புரிந்து வரும் தமிழக அரசின் சாதனைகளைத் தொகுத்துத் தனது கட்டுரையில் கொடுத்திருக்கிறார் திரு ஏ. வி பி. ஆசைத்தம்பி அவர்கள். சுவையான நடையில் சாதனைகளைத் தொகுத்துத் தந்த அன்னாருக்கு எனது பாராட்டு.

—நா. மணிமாறன், திருப்பூர்.

தூத்துக்குடித் துறைமுகம் வளர்ந்து வருவதைத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள்.

—தேவ. பழனிச்சாமி, கோவை 7.

இராம. அரங்கண்ணல் அவர்களின் 'நீங்காத நினைவுகள்' கட்டுரை மிகவும் சுவையாக இருந்தது. ஆசிரியல்வாதியும் எழுத்தாளருமான ஒருவர் சுற்றுலாச் சென்றால், அவரது சிந்தனை எந்த அளவு தெளிவாக இருக்கும் என்பதை அவரது கட்டுரை தெரிவித்துள்ளது. திரைப்படத் தயாரிப்பாளர் என்பதால்—கட்டுரையைப் படிக்கும் போது திரைப்படம் பார்த்த உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

—கே. சிவகுருநாதன், சிதம்பரம்.

மதுரை மாநகரில் சங்க காலப் புலவர்களின் சரித்திரச் செய்திகளைக் காட்சிப்படுத்தும் கலைக்கூடம் அமைக்கலாம் என்று சிலம்புச் செல்வர் அறிவித்திருக்கும் கருத்து சிறப்பானதாகும். இந்த அரும்பணிக்கு உதவி செய்திடத் தமிழக மக்கள் தயங்கிட மாட்டார்கள்.

—கு. லீலா, மணியக்காரன்பட்டி.

காவல்துறை அலுவலர்களும் சிறப்பாகக் கட்டுரை எழுத முடியும் என்பதைத் தெளிவாக்கியுள்ளது திரு. எஃப். வி. அருள் அவர்கள் தீட்டியுள்ள கட்டுரை!

—எஸ். தாமஸ், சென்னை-8

உல்லாச உந்து குறித்த விவரங்களைக் கொடுத்து உதவியிருக்கிறீர்கள்!

—செல்லையா, தஞ்சை



# பார்த்தோம் படித்தோம்

ஆண்டுதோறும் விடாமல் தொடர்ந்து இலவச இணைப்பாக நாட்காட்டியை 'தமிழரசு' ஏட்டுக்கு வழங்கி வரும் எந்நாளும் உண்டு என் எங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

—மீனுகுமாரி, சரோஜா, பாளையங்கோட்டை.

தமிழகத்தின் சீர்திருத்தச் செம்மல் பெரியார் அவர்களுக்கு அரசு மரியாதை செய்தது; அதைத் தொடர்ந்து அரசு ஏடான 'தமிழரசு' பெரியாரின் புகைப் படங்களை வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்திருப்பது பாராட்டுக்குரிய செயல்!

—ச. மணிமாறன், மதுரை-2.

சுற்றுலாத் தலங்களின் எட்டுப் பக்கப் புகைப்படங்கள், பெரியார் அவர்களின் 4 பக்கப் புகைப் படங்கள், முதல்வர், கல்வி அமைச்சர் நாவலர் ஆகியோரின் படங்களைத் தாங்கியுள்ள இலவச நாட்காட்டி இத்தனையும் ஏராளமான பக்கங்களும் சேர்த்து 40 காசுகளுக்குத் தந்திருக்கிறீர்களே.........நீங்கள் நீடு வாழ்க!

—கோ. சுந்தரராஜ், சென்னை-1.

வேலை நிறுத்தம் செய்து கொண்டும் அதே நேரத்தில் கல்லூரிப் படிப்புக்குப் பாதகம் ஏற்படாதவாறும் நடந்து கொள்ளும் ஜப்பான் மாணவர்களை திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் மிகமிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். பாராட்டுக்குரிய கட்டுரை இது!

—து. அமிர்தலிங்கம்,
திருவெண்ணெய்நல்லூர்.



# தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுதிகள்



தமிழ்நாட்டில் இது வரை பல்வேறுபொருள்தொடர்பாக வெளியான தமிழ் நூல்களின் தொகையை அறிந்து கொள்ளும் வாய்ப்பு தமிழ் கூறும் நல்லுலகில் ஏற்படாதிருந்த காலத்தில் தமிழ்நாடு அரசு தமிழுலகிற்கு நூற்றொகை வழிகாட்டி ஒன்றினை ஏற்படுத்த எண்ணியது. அவ்வெண்ணத்தின் செயற்பாடு தமிழ் நூல் விவர அட்டவணையாக மலர்ந்தது.

1867-ஆம் ஆண்டு முதல், அச்சான அனைத்து நூல்களிலும் சில படிகள், நூல் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் நூல்கள் அனைத்தும் பதிவு செய்யப் பெற்று, பின்னர் ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஆவணக்காப்பகத்தில் நூல்கள் அனைத்தும் பொருள் பாகுபாடின்றிப் பதிவு செய்யப் பெற்ற கால அடிப்படையில் மொத்தமாக அடுக்கி வைக்கப்படுகின்றன. இலக்கியம், இலக்கணம், நாடகம், வரலாறு, சமயம், சமுதாயம், தத்துவம், மருத்துவம், சோதிடம், அறிவியல், மொழியியல், நில நூல் முதலிய பல்வேறு பொருள் தொடர்பாக வெளியான நூற்றொகையை நுகரவும், ஆய்வு நிகழ்த்தவும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன் தமிழ்நாடு அரசு தமிழ் நூல் விவர அட்டவணை தொகுக்கும் பணியைத் தொடங்கிற்று.

இவ்வட்டவணையில் குறிப்பிட்ட ஒரு கால அளவில் பதிவு செய்யப் பெற்ற தமிழ் நூல்களில் ஒவ்வொரு நூலைப்பற்றியும், ஆசிரியர், பதிப்பித்தவர், பதிப்பகம், அச்சகம், அளவு, விலை முதலிய குறிப்புகளும், அந் நூலில் இடம் பெற்றுள்ள செய்தியின் பிழிவும் இடம் பெறுவதுடன், ஆசிரியர் அகர வரிசை, நூல் அகர வரிசை முதலியனவும் இடம் பெற்றுள்ளன.

இத் தமிழ் நூல் விவர அட்டவணையிலுள்ள வரிசைப்படி நூல்கள் அனைத்தும் இலக்கியம், இலக்கணம் முதலிய பொருள் வாரியாகப் பிரிக்கப் பெற்று, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் மீண்டும் அடுக்கி வைக்கப் பெறுவதால் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலுள்ள தமிழ் நூல்களைப்பற்றி இத் தமிழ் நூல் விவர அட்டவணையின் துணை கொண்டு எளிதில் அறியவும், தமக்குத் தேவையான நூல்களை ஆவணக் காப்பக நூலகத்திலிருந்து பெற்று ஆய்வு நிகழ்த்தவும், இந்த அட்டவணை பெரிதும் பயன்படுகிறது.

தொகுத்தலும் வகுத்தலும் துய்த்தலும் பொருளுக்கு மட்டு மின்றிப் பொருள் தரும் நூலுக்கும் பொருந்துமன்றோ! ஒரு குறிப்பிட்ட கால அளவில் அச்சிடப் பெற்றுப் பதிவாகியுள்ள நூல்களின் எண்ணிக்கை அடிப்படையில் தொகுதிகள் வரையறை செய்யப்பட்டு வகுக்கப் பெறுகின்றன.

இவ் வடிப்படையில் 1867-ஆம் ஆண்டு முதல் 1900-ஆம் ஆண்டு வரை உள்ள காலப் பகுதியில் வெளியான நூல்கள் முதல் தொகுதி என்ற பெயரில் வெளியிடப் பெற்றன. இம் முதல் தொகுதி பொருட் பாகுபாட்டின் அடிப்படையில் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இம் முதல் தொகுதியின் முதற் பகுதியில் தமிழ்க் கட்டுரை, சொற்பொழிவு, தத்துவம், அறம், சமயம், சமூகவியல், மொழியியல் தொடர்பான நூல்களைப் பற்றிக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

முதல் தொகுதியின் இரண்டாம் பகுதியில் அறிவியல், தொழிலியல், நுண் கலைகள், இலக்கியம், வரலாறு, நிலவியல் தொடர்பான நூல்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

மூன்றும் பகுதியில் முதலிரு பகுதிகளின் பொருளகராதி, ஆசிரியர் அகர வரிசை, நூல் அகர வரிசை, உரையாசிரியர்கள், அவர்கள் உரையாற்றிய நூல்கள், சென்ற நூற்றுண்டில் நூல்களை உருவாக்கிய அச்சுக்கூடங்கள், சென்ற நூற்றுண்டில் வெளியான இதழ்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் அச்சிடப் பெற்று உரிமைப் பதிவு செய்யப்பெற்று, ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப் பெறும் சில நூல்களுக்கும் அட்டவணை தொகுக்கப் பெறுகின்றது. 1867 முதல் 1900 வரை அச்சிடப் பெற்று ஆவணக் காப்பகத்தில் கிட்டப் பெறு நூல்கள் பற்றிய,

குறிப்புக்கள் முதல் தொகுதியின் நான்கு, ஐந்து பகுதிகளுள் இடம் பெற்றுள்ளன. ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப் பெறு நூல்கள் வேறு எங்கேனும், இருப்பின் கிடைப்பதற்கும், நம் தமிழ்நாட்டில் அச்சிடப் பெற்ற நூல்களைப் பற்றிய வரலாற்றினை உள்ளவாறு அறிவதற்கும் இப்பகுதிகள் பெரிதும் துணை புரிகின்றன.

இப் பகுதிகளில் உள்ள குறிப்புக்கள் அனைத்தும் அரசிதழின் துணை கொண்டு தொகுத்து வெளியிடப் பெற்றவையாகும். இவ்விரு பகுதிகளுக்குரிய நூல் அகர வரிசை ஆசிரிய அகர வரிசையும் ஐந்தாம் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

1901 முதல் 1910-ஆம் ஆண்டு வரை உள்ள காலப் பகுதியில் வெளியான நூல்கள் இரண்டாம் தொகுதி என்ற பெயரில் வெளியிடப் பெற்றுள்ளன. இவ்விரண்டாம் தொகுதி மூன்று பகுதிகளாக உள்ளன.

முதல் பகுதியில் தத்துவம், அறம், சமயம், சமூக வியல், மொழியியல், அறிவியல், தொழிலியல், நுண் கலைகள் ஆகியவை தொடர்பான நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில் இலக்கியம், வரலாறு, நிலவியல் தொடர்பான நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இப்பகுதியின் இறுதியில் இவ்விரு பகுதிகளிலும் இடம் பெற்றுள்ள நூல்களின் ஆசிரியர் அகர வரிசை, நூல் அகர வரிசை ஆகியவையும் 1901 முதல் 1910 வரை வெளியான இதழ்களும் இடம் பெற்றுள்ளன.

மூன்றும் பகுதியில் 1901 முதல் 1910 வரை வெளியாகி ஆவணக்காப்பகத்தில் கிடைக்கப் பெறுநிலையிலுள்ள நூல்கள் பற்றிய குறிப்புக்கள் தரப் பெற்றுள்ளன.

இத்தமிழ் நூல் விவர அட்டவணை, சென்னை, அண்ணாசாலையில் அமைந்துள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் விலைக்குக் கிடைக்கும். கல்லூரி நூலகங்களிலும் பொது நூலகங்களிலும் இவ்விவர அட்டவணைகள் இடம் பெறுவது ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரும் பயன் நல்குவதாகும்.

தமிழ்த்தேனுண்ணும் வேட்கை மிகப் பெற்ற ஆய்வாளர்கள் இந் நூலின் துணை கொண்டு பயனெய்தலாம்.

இதுவரை அச்சான தமிழ் நூல் விவர அட்டவணைகளின் பட்டியல் :

| தொகுதி | பகுதி | விலை | பதிப்பித்த ஆண்டு |
|---|---|---|---|
| 1 | 1 | 8.00 | 1961 |
| 1 | 2 | 9.25 | 1962 |
| 1 | 3 | 5.50 | 1963 |
| 1 | 4 | 9.25 | 1964 |
| 1 | 5 | 11.00 | 1964 |
| 2 | 1 | 6.00 | 1965 |
| 2 | 2 | 9.40 | 1971 |
| 2 | 3 | 12.25 | 1972 |


உல்லாசச் சுற்றுலாக்களுக்கு
'ஐடிடிஸி' லக்சரி கோச்சுகள்
மற்றும் கார்கள்

சென்னை-காஞ்சிபுரம்-திருக்கழுகுன்றம்-மகாபலிபுரம்-சென்னை

இப்போது தினசரி லக்சரி கோச் சர்விஸ் (இரட்டை 'ஸீட்'கள்)
புறப்பாடு : காலை 7 மணி
திரும்புதல் : மாலை 6 மணி
கட்டணம் : நபருக்கு ரூ. 18

சென்னை மாநகர் சுற்றுலா

ஒவ்வொரு புதன்கிழமையும் சனிக்கிழமையும் மாலை 2-45-லிருந்து 6 மணி வரை
கட்டணம் : நபருக்கு ரூ 7

மற்றும் உங்கள் தேவைக்கேற்ப
லக்சரி கார்கள், ஏர்கண்டிஷண்டு கார்கள், டூரிஸ்ட் கார்கள், டீலக்ஸ் கோச்சுகள், மினி-கோச்சுகள் வாடகைக்குக் கிடைக்கும்

India Tourism Development Corporation
இந்தியா டூரிஸம் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷன்
35, மவுண்ட் ரோடு
சென்னை 600002. போன் : 88520


# காணிநிலம் வேண்டும்



பூவை எஸ். ஆறுமுகம்

உதய சூரியனின் செம்பொற் கதிர்கள் மண்ணைப் பொன்னாக்கி விளையாடிக் கொண்டிருக்கின்றன; விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றன!

அறந்தாங்கி வழியே காரைக்குடி செல்லும் 'பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்' ஆவணத்தான்கோட்டைச் சந்தைப்பேட்டையில் நின்றது.

வீரமணி கம்பீரமான ஒயிலோடும், நேர்மையான பெருமையோடும் கீழே இறங்கினான். பிறந்த மண்ணின் எல்லையில் அவன் பாதங்களைப் பதித்த போது, அவனுடைய நெஞ்சில் பாதம் பதித்த புதிய கனவும், பழைய வைராக்கியமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிழலாடிய விந்தையை அவனால் நன்கு உணர முடிந்தது. ஆடிப் புனலாக ஓடத் தொடங்கிய புதிய ரத்ததின் புதிய உணர்வுகள் அவனை ஓர் இமைப் பொழுது மெய்ம் மறக்கச் செய்திருக்க வேண்டும்! சுயப்பிரக்ஞை கண் திறந்தது; அவன் கண்களைத் திறந்தான்.

பசுமைப் புரட்சியின் அடித்தளங்கள் எத்தனை பெருமையோடும் பெருமிதத்தோடும் இளங் காலை வெய்யிலிலே பளிச்சிட்டு மின்னிக் கொண்டிருக்கின்றன!

அவனது அழகான இதழ்க் கரையில் நயமான புன்னகை விநயமாகக் கரை சேர்ந்தது. ‘தமிழ்ச் சமுதாயத்தின் வளப்பம் மிக்க வருங்காலத்துக்குக் கட்டியம் கூறிடத்தான் இம் மாதிரியான சின்னஞ் சிறு கிராமங்களெல்லாம் கூடப் பொருளாதார ரீதியிலும் விஞ்ஞான முறைமையிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றனவே! அப்பால், தமிழ் மண் நிறக்க—தமிழ்ச் சாதி சிறக்கக் கேட்கவா வேண்டும்!—தனக்குரிய சமுதாயக் கடமையைச் சுற்றி அவன் சிந்தனைகள் அறிவு பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் ஆறுதலோடு பற்றிப் படரத் தலைப்பட்டன.

அப்போது :

உந்திக் கமலத்தினின்றும் புறப்பட்ட குரலொன்று காலத்தை வெல்லும் அறை கூவலுடன் பாய்ந்து வருகிறது.

‘‘அண்ணா! . . . .’’

நாடி வந்த பாசத்தின் அழைப்பொலி ஓடி வந்து அவனுடைய பாசத்தின் நெஞ்சில் எதிரொலித்ததுதான் தாமதம்; அவன் உள்ளம் சிலிர்த்தது; உடலும் சிலிர்த்தது. கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில், அவன் விண்ணுக்குப் பறந்தான்; மண்ணுக்கு மீண்டான். அவன் மெய் உணர்ந்து, விழிப்புப் பெற்ற சமயம் அவன் மெய்யை உணர்ந்தான்.



அள்ளக் குறையாத பாசம் அள்ளக் குறையாமல் பொங்கியது; பீரிட்டது. நன்றியறிவுக் கண்ணீரின் முத்தங்கள் அவனது அழகான கன்னங்களை முத்தமிட்டன; • தேங்காய்ப் பூத் துண்டை எடுத்தான் அவன். ‘அண்ணா!’— யார் அழைத்தார்கள். மாறாத சோகத்தோடும், மறையாத ஏக்கத்தோடும் திரும்பலானான் வீரமணி.

‘‘வீரமணி அண்ணா!’’

வீரமணி புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். ‘‘ஓ! . . . . மாணிக்கமா?’’

‘‘ஆமாங்க, அண்ணாச்சி,’’ என்று வாஞ்சையுடன் கூறினான் மாணிக்கம். ‘‘தஞ்சாவூரிலிருந்து திரும்பிட்டீங்களா? முதலிலே உங்களோட தேர்வு முடிவைச் செப்புங்க. அப்பத்தான் மனசு சமாதானப் படுமுங்க. முடிவு நாம எதிர் பார்த்தாப்பிலே பழம்தானுங்களே?’’ என்று ஆர்வம் மேலிடக் கேட்டான்.

‘‘பழம்தான் தம்பி, பழம் தான்! . . .’’ உன் நல்லெண்ணமும், நல்வாக்கும் பலிச்சிடுச்சு! நான் முதல் வகுப்பிலே தேறியிருக்கேன் மாணிக்கம்!’’ என்றான் வீரமணி ; கனி இதழ்கள் கனிவாய்த் துடித்தன.

‘‘அப்படீங்களா? பலே! . . . . .பலே!’’

மாணிக்கம் பச்சைப் பிள்ளை மாதிரி தாவிக் குதித்தான். சவாலில் கெலித்த களி துள்ளியது.

‘‘நீங்க சொன்ன இனிப்புச் சேதியைக் கேட்டடியும், என்னோடு மேனி முச்சூடுமே ஒரே முட்டாய் இனிச்சுதுங்க!’’ என்றான். தலைமுண்டாசுத் துவாலை தோளுக்குச் சரிந்தது. பெருமிதம் பூத்த பரவசத்தோடு தலையை நிமிர்த்தினான் மாணிக்கம்.

‘‘அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி, மாணிக்கம்,’’ என்று புன்னகை செய்தான் வீரமணி. அரும்பு மீசையை முறுக்கி விட்டான்; கைப் பையைக் கைமாற்றிக் கொண்டான்.

நண்பர்கள் தேடி வந்தனர். பட்டப் படிப்புத் தேர்வில் வீரமணி வெற்றிவாகை சூடிய அமுதச் செய்தி அஞ்சல் செய்யப்பட்டது.

‘‘எங்க வீரமணி அண்ணன் இனிமே பட்டதாரி விவசாயி—விவசாயப் பட்டதாரி! . . . ஆகா!’’—முத்து கைகொட்டிக் களித்தான்.

கைலாசம் கும்மாளம் போட்டான்.

தோழர்கள் குதூகலம் அடைந்தார்கள்.

அன்பு பெருக, பாசம் உருக நின்றான் வீரமணி. இனி, அவன் வீட்டுக்குப் புறப்பட்டாக வேண்டும். அப்பா அங்கே எதிர்நோக்கித்தவித்துக் கொண்டிருப்பார்!

‘‘வாங்க, அண்ணா; ஆளுக்கொரு தேத்தண்ணி ஊத்திக் கிட்டுப் பறியலாம்’’ என்று மாணிக்கம் வேண்டிக்கொண்டான்.

‘‘ஊம்!’’

அடடே! கொம்பிலே வைக்கோலைக் கட்டிக் கொண்டு மாடு ஒன்று ஓடுகிறதே? மேயவா? . . . ஊகூம்!—நீராட! . . .

**சா**லை அத்தளிப்பட்டது.

நட்பு முன் தொடர, நட்பு பின் தொடர்ந்தது.

கை விசி நடந்தான் வீரமணி. ஊராட்சி மன்றம் அவனுக்கு வழி விட்ட நேரத்தில், அவனை உரசிக் கொண்டு அவனுடைய தாய் மாமன் ராமையாத் தேவர் வடக்கே காடு மேடு தெரியாமல், கண் மண் புரியாமல் ரேக்ளாவில் பறந்த காட்சியைக் கண்டதும், அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவன் எதை நினைப்பான்? அல்லது எதை மறப்பான்? என்னென்னவோ எண்ணங்கள் ‘உப்புக்கோடு’ மறித்தன. தன் வசம் இழந்து, மின் விளக்குக் கம்பத்தின் அருகில் அப்படியே நின்றுவிட்டான். அப்போது எதிர்ப்புறத்திலிருந்து நண்பர்களின் அழைப்புக் குரல் கேட்கவே, அவன் சுயநினைவையும் நல்ல நிதானத்தையும் துணை சேர்த்துக்கொண்டு, சாலையைத் துண்டாடிப் பாய்ந்தான்; அவன் போட்டிருந்த ‘டெரின் ஸ்லாக்’ வெகு எடுப்பாக விளங்கியது.

எங்கிருந்தோ சிரிப்பொலி இளங்காற்றில் மிதந்து வந்து கொண்டிருக்கிறது!

வீரமணி திரும்பிப் பார்த்தான்.

கங்காணியர் தென்னந்தோப்புக் கேணியடியிலிருந்து ஐந்தாறு பெண்கள், தண்ணீர்க் குடம் சலசலக்க, சாந்து பொட்டு தளதளக்க வந்து கொண்டிருந்தார்கள்.

கூர்த்த மதி பதித்தான் வீரமணி. இருட்டைக் கீறிக் காட்டும் கொடி மின்னலென, கன்னியர் கூட்டத்தின் மத்தியிலே ‘அந்த முகம்’ பளிச்சிட்டுப் பளபளத்தது!

வீரமணியின் செவ்வதரங்களிலே நளினமான குறுஞ்சிரிப்பு நெளிந்தது. நெஞ்சிலும் நினைவிலும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆசை முகம் ஆயிற்றே அது! . . ‘‘ஓ’’ அம்மான் மகள் அன்னக்கொடி! — எண்ணிய மனம் பூச்சிதறலாக மணத்தது; பூந்தென்றலென இனித்தது.

அன்னக்கொடி நோக்கினாள்.

வீரமணியும் நோக்கினான்.

அவள் என்னவோ சொல்லத் துடித்திருக்க வேண்டும்.

அவனும் என்னவோ பேசத் தவித்திருக்க வேண்டும்.

ஆனால், வாய்ச் சொற்கள் இரு தரப்பினின்றும் பிறந்தால் தானே?

அரைக் கணம், கனவு கண்டு விழித்தவன் மாதிரி தடுமாறினான் அவன். கண்களைத் திறந்து திறந்து மூடினான்; மூடி மூடித் திறந்தான். இதயத்தின் இதயத்தில் ஏதோ தைத்தது. நெருஞ்சி முள்ளாக இருக்கலாமோ? கனவாய் வந்தவள், கனவாய் மறைந்து விட்டாளோ! . . . .

அன்னக்கொடி! . . . . .

அழகின் உச்சி அல்லவா அவள்!

பேசும் விழிகள்!

அவை அவனைப் பேசவொட்டாமல் செய்துவிட்ட வேலைகள் ஒன்றா, இரண்டா?

சிரிக்கும் உதடுகள்!

அவை அவனைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த கட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல.

துடிக்கும் நெஞ்சம்!

அது அவனைத் துடிக்க வைத்து, வேடிக்கை பார்த்து, வேடிக்கை காட்டியது பொய் அன்று; கனவு அன்று; கதையும் அன்றுதான்!

பருவப் பண்புக்கு அவள் ஒரு புதிய அலை!



அந்த அலையே பாசத்தின் நேசம் கொண்ட—நேசத்தின் பாசம் பூண்ட ஆழியாகி, அவனைத் தத்தளிக்கச் செய்த அதிசயங்கள் மகத்தான உண்மைகள்.

அவன் தலைநிமிர்ந்தான்.

அவன் நினைவுகள் தலைநிமிர்ந்தன.

‘‘அன்னக்கொடி! . . . . அம்மான் மகளே அன்னம்!’’

விளைந்தவை :

புன்சிரிப்பு!

பெரு மூச்சு!

அவனும் அவளும் துள்ளித் திரிந்த காலத்திலே,‘‘அம்மான் மகளே! —அத்தை மகனே!’’ என்று உறவு சொல்லி—உறவு கேட்டும், உரிமை கோரி—உரிமை பெற்றும் இணைச்சிட்டுக்களாக மணல் வீடு கட்டி, தாயம் போட்டு, ஆடிப் பாடிக் கொண்டாட்டம் போட்ட நிகழ்ச்சிகள் காலக் கருவூலத்தின் அன்புச் சேம நிதிகள் தாம்!

காலம் ஒரு புள்ளிமான்.

பருவம் திரைகிழித்துத் திரை விரித்த நாட்கள் அவை: பச்சைக்கொத்தமல்லியாக மணம் கூட்டும்.

மதுக்குடம் ஏந்திய மணமலராக அவள் வந்தாள். ‘‘அத்தான், நான், இப்ப முன்னை மாதிரி இல்லை. நாம் சதா கண்டு தண்டிக்கிட இனி வாய்க்காது. நம்ப சாதி சமுதாயக் கட்டுதிட்டம் அப்படி. ஒரு அந்தரங்கத்தை உங்க நெஞ்சுக்கு நீதியாய் ஒப்படைச்சாகணும். எனக்கின்னு ஒரு குடும்ப வாழ்க்கை லவிக்க வேணும்னு விதிச்சிருந்தால், அந்தப் பாக்கியம், நீங்க எனக்கு இடுற அன்புப் பிச்சையினாலேதானுங்க கிட்ட முடியும்! இந்த விதியை எப்பேர்ப்பட்ட சோதனையிலேயும் நான் சத்தியமாய் மறக்க மாட்டேன் அதே கணக்கிலே, நீங்களும் மறந்துபுடாதீங்க, அயித்தை மகனே! . . . ’’ என்று மனம் உருகி வேண்டிக் கொண்டாள் அன்னக்கொடி. பூவும் பொட்டும் புது வெள்ளமாகப் பொலிந்தன!

உள்ளம் தொட்டவளின் பேச்சு அவன் உள்ளத்தைத் தொட்டது. மேனி புல்லரித்தது. பார்வை கூடுவிட்டுக் கூடு பாய்ந்தது. கண்கள் பொடித்தன. ‘‘எனக்கு உயிரே நீ தானே, அம்மான் மகளே? . . . என்னோட உயிருக்கே நீதானே நாத்றங்கால், அன்னம்? . . . உன் சத்திய வாக்குத்தான்

எனக்கு மனச்சாட்சி! இந்த அந்தரங்கம்தான் உன்னோட நெஞ்சுக்கு நீதி! இந்த மண் வாழ்க்கை நம்ம அளவிலே சத்திய சோதனை மாத்திரமில்லே; அக்கினி சோதனையும் கூட! . . . இந்தச் சோதனையிலே தேறி, நாம ரெண்டு பேரும் நம்மோட மன வைராக்கியத்தோடே இந்த ஊர் மண்ணிலே ஜோடியாய் வாழ்ந்து காட்டினால்தானே நம்பளோட பாசத்துக்கும் தேசத்துக்கும் நல்ல அர்த்தம் கிடைக்க வாய்க்கும், அன்னம்? . . .'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான், அவன். அவன் வீரமணி. அவள்—அன்னக்கொடி மெய்ம் மறந்தாள்.

''அன்னம்! . . . அன்னம்!..

அன்னம்தான் சிரித்தாளா?

சிரித்தவள் அன்னமேதானா?

விண்ணைத் துறந்தோ, மறந்தோ, ஆவணத்தாங்கோட்டைக்குச் சொந்தமான தாய் மண்ணை மிதித்தான் வீரமணி. உன் மனத்தில் உள் வட்டமாக விம்மல் வெடித்தது. தலையை உயர்த்தினான். சூன்யம் கொக்கரித்தது. அறுவடையான வயல் வெறிச்சோடிக் கிடக்குமே, அப்படி மனம் தவித்தது. அவன் சுழலை மறந்தான்; சூழலை மறக்கவில்லை. கலக்கமும் நெகிழ்ச்சியும் சிந்த, ஏக்கமும் உருக்கமும் சிதற, மடங்கினான்!—அவன் தற்சமயம் புதிய வீரமணி!

தேநீர் வந்தது.

சூடும் சுவையும் கமழ்ந்தன.

''டீ குடிங்க, வீரமணி அண்ணே!''

''ஆகட்டும், மாணிக்கம்!''

வீரமணி தேநீர்க் கோப்பையை ஏந்தியவாகில், நாலா பக்கமும் கண்ணோக்கம் பதித்தான். சேக்காளிகள் கோப்பையும் கையுமாக, கும்மாளமும் குமிழ் சிரிப்புமாக விளங்கிய காட்சியைக் காணக் காண, அவனுக்கு இதமாக மட்டும் அல்ல; இன்பமாகவும் இருந்தது. ''எல்லாரும் குடிங்க சாயாவை! . . .'' என்றான். பேச்சின் நாணயமான சாதுர்யம் அவனுக்கு நமட்டுச் சிரிப்பை உண்டாக்கியிருக்கலாம்.

தலைவாசலில் — தயங்கித் தயங்கி வந்து நின்ற சாம்பான், ''முதலாளி, கனமாய்த்தான் போட்டு ஒரு 'கோப்பி' குடுங்க'', என்று கேட்டான்; பணிவன்போடு.

தேநீர்க் கடை உரிமையாளருக்கு வாயெல்லாம் பல் ஆயிற்று. ''ஏம்ப்பா மாஸ்டர்! கோப்பின்னு காப்பின்னு அர்த்தம். சாம்பான் அக்கரைச் சீமை ஆசாமி. அதுதான் பழைய மண் வாசனை விகதாக்கும்.'' என்றார்.

வீரமணி தனக்குத்தானே நலியாமல் சிரித்துக் கொண்டான். மறு விநாடி, அந்தச் சிரிப்பு மாறத் தொடங்கியது. பொசுக்கும் வெயிலிலே பொசுங்கி ஒதுங்கி நின்ற அந்த மனிதனை அனுதாபம் பொங்கப் பார்த்த அவன் கண்கள் பொங்கின. இருக்கையினின்றும் மெல்ல எழுந்தான். மனிதாபிமானம் சிறக்க, ''சாம்பான், உள்ளே வந்து பெஞ்சியிலே குந்தி கோப்பி சாப்பிடுங்க. அதோ பாருங்க ; உங்களை வரவேற்க ஒரு மகாத்மா பொக்கை வாய்ச் சிரிப்போடே காத்துக்கிட்டிருக்கார்,'' என்று அவன் கூறினான்.

''ஊம், வாப்பா உள்ளே,'' என்று அனுமதி கொடுத்தார் தேநீர்க் கடைக்கு உடையவரான ஞானசிலன். சாமர்த்தியசாலிதான்! — இப்போதுதான் அவருடைய நெற்றியை ஒற்றி விளங்கிய திருநீற்றுப்பட்டைகளுக்கு யதார்த்தமான மகிமையோ தார்மிகமான அர்த்தமோ கிடைத்தது போலும்!

அமரப் புன்னகையோடு வரவேற்ற மகாத்மாவைச் செய்ந்நன்றியோடு பார்த்துக் கொண்டே உள்ளே பிரவேசித்தான் சாம்பான்.

இருட்டறையிலே வெளிச்சம் பரவினாற் போன்று, ஆரோக்கியமான சூழ்நிலை உருவாயிற்று.

வீரமணி ஆறுதலடைந்தான் புதுப்பிக்கப் பட்ட தெம்போடு காப்பியைச் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்த சாம்பானைப் பார்த்தபோது, அவனுக்கு எவ்வளவோ நிம்மதியாக இருந்தது.

சுவர்க் கடிகாரம் எட்டு முறை குரல் கொடுத்தது.

கோப்பையை எச்சரிக்கையுடன் சிமிட்டித்தட்டில்வைத்துவிட்டு, அவசரம் அவசரமாக தோல் பையைப் பிரித்தான் வீரமணி. ஊதா நிற நாட்குறிப்புப் பிரிந்து விழவே, அதைப் பதட்டத்தோடு எடுத்தான்.

உலைப் பாளையில் மசிழ்ந்து கொட்டுமே சோற்றுப் பருக்கைகள், அந்தப் பாவனையில், அன்பின் தொடர்பு கொண்ட கடிதங்கள் பலவும், நீதி மன்றத்தின் தொடர்பு சேர்ந்த தீர்ப்புத் தாள்கள் சிலவும் சிதறின.

வீரமணி சிந்தனை வசப்பட்டான். இதயம் பந்தயத் திடலாக மாறும்பொழுது, நினைவுகள் பந்தயக் குதிரைகளாக மாறுவது இயல்புதான். கடிதங்களைக் கண்டதும், அவன் அண்ணாமலை நகருக்கும் சென்னைக்குமாகப் பறந்தான். நீதி மன்றத் தீர்ப்புத் தாள்களைப் பார்த்ததும், அவன் ஆவணத் தாங்கோட்டைக்குத் திரும்ப வேண்டியவன் ஆனான்.

அவனுடைய நெஞ்சத்தின் பகைமை மறக்காத நினைவிலே 'மாமன்' வேம்பாகக் கசக்க, நேசம் மறக்காத நினைவிலே 'மாமன் மகள்' செங்கரும்பாக இனிக்க, இப்படிப் பட்டதொரு முரண்பட்ட நிலவரத்தில் மனம் ஊசலாட — சிதறியவை அனைத்தையும் சருக்கடையாக ஒழுங்கு சேர்த்துப் பைக்குள்ளே திணித்த பின், பையின் மறுபக்கத்தைத் திருப்பி, ஐந்து ரூபாய் நோட்டொன்றைத் தேடி எடுத்தான்; கல்லாவை இலக்காக்கி நடந்தான்.

''ஐயா, மொத்தம் ஏழு சாயாவுக்குத் துட்டு எடுத்துக்கிட்டுப் பாக்கியைத் தாங்க,'' என்று வீரமணி கேட்டுக் கொண்டான். அவனது சகாக்கள், ''நான் முந்தி—நீ முந்தி' என்று தலைக்கொரு பத்து ரூபாய்த் தாளை நீட்டி அன்புக்குப் போட்டி போட்டதை உணர்ந்த அவன், அவர்கள் அனைவரையும் அதே அன்பால் வெல்லவும் செய்தான். ''என்னோட வெற்றிக் களிப்பிலே பங்கு கொண்டவங்க நீங்க ; ஒரு சில புல்லுருவிகளைப்போல பண்ண நம்பிக்கை மோசம் பண்ணவே ஒப்பாதவங்க. என் பேரிலே உயிரையே வச்சுகிட்டு இருக்கிறவங்க. அதனாலே, என்னோட அன்பிலேயும் நீங்க பங்கு கொள்ள வேண்டியது தான் நியாயம்! . . அப்பத்தான், வள்ளுவப் பெருமா



னோட 'நன்றி அதிகார'த்துக்கு நம்ப மூலமும் ஒரு நியாயம் கிடைக்க இயலும்,'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினான், வீரமணி. மீதிப் பணத்தைக் கணக்கிட்டுப் போட்டுக் கொண்டான்.

நண்பர்கள் உடல் புல்லரிக்க, உள்ளம் சிலிர்க்க நின்றார்கள்.

''நம்ப வீரமணி அண்ணன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அவர் சொல்லுகிற வழியிலே நடக்க வேண்டியதுதான் நம்ப கடமை,''—என்று குழையப் பேசித் தழையச் சிரித்தான் மாணிக்கம்.

மற்றவர்கள் 'ஊம்' கொட்டினார்கள்.

அன்பும் பாசமும் பேணி, அமைதியோடு வீரமணி புன்னகை ஏந்தினான்.

அவர்கள் இனிமேல் கிளம்பி விடுவார்கள்.

ஆனால் . . .

அப்போது, புதிய வாடை அலைந்து வந்தது. வாடையென்றால் கெட்ட வாடை!

ஒய்யாரக் கொண்டையும் தாழம் பூவுமாக, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, ஒருத்தி உள்ளே நுழைந்தாள். அந்தச் சிங்காரிக்குப் பெயர் இல்லாமல் இருக்கலாமோ? ஊகூம், கூடாது! கூடவே கூடாது! அவள்: செங்கமலம்.

சூடான பரபரப்பு சூடேறியது ; சூடேற்றியது.

கூடியிருந்தவர்கள், அவரவர் மனோபாவனைப் பிரகாரம் உத்தி செய்து, அந்தக் 'கனி'யைக் கள்ளத் தனம் பாய்ச்சிப் பார்வையிடத் தொடங்கினார்கள். கனி எனில், கல்லெறிக்குத் தப்புமா?

வீரமணிக்கோ எரிச்சல் பற்றி எரிந்தது. பையிலிருந்து பத்திரிகையை எடுத்துப் புரட்டினான். அவன் வாய் 'துறுதுறுத்து'க் கொண்டிருந்தது. செங்கமலம் ஆடும் கூத்து எங்கே போய், எப்படி முடியப் போகிறதென்று வேடிக்கை பார்க்க வேண்டாமா? எடுப்பார் கைப் பிள்ளை ஆயிற்று பொறுமை.

செங்கமலம் யாரையும் லட்சியம் செய்தவளாகத் தெரியவில்லை. யாருக்காகவும் வெட்கப்படுபவளாகவும் தென்படவில்லை. ''சுடுதண்ணி வேணும்; நல்லதாய்ப் போட்டுக்கொடுக்க வேணும்!'' என்று அதிகாரமாகச் சொன்னாள், அவள். இரட்டை வடத் தென்னம்பாளைச் சங்கிலி மின்னாமல் இருக்காது.



ஞானசிலன் முகத்தைச் சுளித்தபடி, அந்த ஒய்யாரியை அருவருப்போடு நோக்கினார்; பிறகு பார்வையின் வேண்டா வெறுப்புத் தன்மையை மாற்றிக்கொண்டு, ஓர் அச்ச உணர்வோடு வீரமணியை அளந்தார். வீரமணியின் உருவம் அவருக்கு ரத்த தானம் வழங்கியிருக்குமோ? ஆவேசத்துடன் எழும்பினார். 'எலே செங்கமலம், என் கடையிலே இனி உனக்குச் சுடுதண்ணியும் கிடைக்காது; சுடாத தண்ணியும் கிடைக்காது! . .கைக்கு மெய்யாய் முதலிலே நீ இந்த இடத்தைக் காலி பண்ணிடு!'' என்று ஆணையிட்டார்.

செங்கமலமா மான அவமானத்துக்கு எல்லாம் அஞ்சுபவள்? —மூச்! மறு பேச்சாடவில்லை; 'சுருட்டை நோய்' பீடித்த நெல் வயலுக்கு நேராக தலையை மட்டிலும் தொங்கப் போட்டவளாக, அங்கிருந்து நழுவி விட்டாள். செங்கமலமா இல்லை, கொக்கா?

அவள் தலை மறைந்ததோ இல்லையோ, கடை எடுபிடிப் பயல் தலைதெறிக்க ஓடிவந்து, அந்தப் 'புண்ணியவதி'யின் 'திருப்பாதங்கள்' பட்டிருந்த இடத்திலே வள்ளிசாக ஒரு சருவம் தண்ணீரைச் சாய்த்து முடித்த பிற்பாடுதான், நல்ல மூச்சு விடலானான்.

கரவொலி வெடிக்கக் கேட்பானேன்?

வீரமணி அமைதியடைந்தான் ; நன்றியறிவு துலங்க, ஞானசிலனைப் பார்த்தான். பார்த்தான். 'பரவாயில்லை! —சமூக நீதிக்குப் பிழைக்கத் தெரிஞ்சிட்டுது! பாவி செங்கமலமே சதம்னு மனப்பால் குடிச்சுத் தடம் புரண்டு திரிகிற என் அம்மான் ராமையாத்தேவருக்கு நானும் இந்த ஊர்நாடும் பாடம் படிச்சுக் கொடுக்கிறதுக்கு உண்டான கெடு, கிட்டே நெருங்கிக்கிட்டே இருக்கிறதுப்பை அவர் எப்படி அறிவார், பாவம்!'' நெடுமூச்சுப் புறப்பட, அவன் புறப்பட்டான். எதிர்நீச்சல் போடப் பழகியவனை எதிர் வெய்யில் என்ன செய்ய முடியும்!

ஆடிப் பட்டத்துக்குப் பட்டம் சூட்ட மண்ணும் மண்ணை நம்பின மக்களும் மக்களை நம்பிய மாடுகளும் சுதாரிப்போடும் சுள்ளாப்போடும் தயாராகச் செயற்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது.

தேசப் பாதுகாப்பிலே கடமையாற்றி, பங்கு பற்றிய அனைத்துக் கட்சித் தொண்டர்களை நினைவூட்டும் வகையில் குப்பை வண்டிகள் சாலை தெருவிலும் போய்க் கொண்டிருக்கின்றன.

வீரமணிக்கு வியப்பு மேலோங்கியது. வாய் பேசத் தெரிந்த மனிதர்களின் பசிப் பிணியைத் தீர்ப்பதில் வாய் பேசத் தெரியாத பிராணிகள் தேசியக் கடனேடும் தார்மீகப் பண்போடும் மேற்கொண்டிருந்த அக்கறையை எண்ண எண்ண படைப்பின் இயற்கைக்கு முன் விண்வெளி வெற்றிகள் எல்லாம் கூடத் துச்சமாகவே தோன்றத் தொடங்கின.

மண் சிரித்தது!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைத் துறைக் கல்வி பயின்ற காலை, செய்முறைப் பயிற்சியின் நிமித்தம், திருவேட்களத்தின் தெய்விகப் பின்னணியிலே மயங்கி, இயற்கையின் தாலாட்டு இசையிலே சொக்கி, தோளில் ஏர்குலுங்க, நெஞ்சில் உரம் குலுங்க மெய் வருத்தம் பாராமல் உழைத்து, மண்ணைப் பொன்னுக்கிக் காட்டிய அந்த நாட்களை வீரமணி எங்ஙனம் மறப்பான்?

விடுமுறை ஓய்வுக்காக அவன் பிறந்த மண்ணை நாடி ஓடிவரும் போதெல்லாம், ஓய்வை மறந்து தன்னுடைய நிலம் நீச்சிலும், காடுகரையிலும், தோட்டம் துரவிலும் வேர்வையோடு படிப்பையும் துணைக்கொண்டு, நாளும் பொழுதும் கருமமே கண்ணுகிப் பாடுபட்ட அந்த நாட்களைத் தான் வீரமணியால் மறக்க முடியுமா?

கதை சொல்ல மண் இருக்கிறது.

கதை கேட்க வீடு இருக்கிறது.

வீட்டின் ஞாபகம் அவனுள் நிழலாடத் தொடங்கியதும், தந்தையின் ஞாபகம் அவனை ஆட்டிப் படைத்தது. வீட்டில் அப்பா ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார். திட்டங்களை வரையறுத்துச் செயற்படுத்த வேண்டும்! நடந்தான். கையில் விரிந்த ஏடும் நடந்தது. 'உடன் பிறப்பே!' என்ற பாசத்தின் விளிப்புச் சொல் அவனை ஆனந்தக் கடலாடச் செய்தது. பாசம் ஆயிற்றே அது!

மடக்கத்தில், லேவாதேவி நல்ல தம்பிச் செட்டியார் எதிர்ப்பட்டார். 'தம்பி, உங்க அப்பா உங்களுக்காக மகமாயி கோயில் பஸ் நிறுத்தத்திலே கூட்டு வண்டியோடே காத்துகிட்டு இருக்காகளே!'' என்று வீரமணியிடம் விவரம் தெரிவித்தார்.

''சரிங்க, ஐயா!''

வீரமணிக்கு வியப்பும் அதிர்ச்சியும் உண்டாயின. 'தள்ளாத காலத்திலே அப்பா ஏன் வண்டியை ஓட்டிக்கிட்டு வந்திருக்காங்க?' வண்டிக்கார நாச்சி எங்கிட்டுப் பறிஞ்சிட்டாரும்? அது சரி; ஓடற பாம்பை மிதிக்கிற இந்த விடலைக்குப் பாதை புரிந்து, பாதை பார்த்து நடந்து வீடு வந்து சேரத் தெரியாதா என்ன? உணர்வுகள் குறுகுறுத்தன. நட்பின் அணியை நோக்கினுன். ''நீங்க அந்திக்கு எங்க வீட்டுப் பக்கம் வாங்க. நிறைய பேச வேண்டியிருக்குது'', என்று கூறிவிட்டு விடை பெற்றுன்.

நிழல் நீண்டது.

பாசம் பூவிலங்காக மணத்து அழுத்த, கால்களை எட்டிப் போட்டான் வீரமணி!




ஜப்பானில், பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சிறந்த வசதிகள் செய்திருக்கிருர்கள். பத்து வருடம் கல்வி பயிலும் மாணவனே அல்லது மாணவியோ, தங்கள் பயிற்சி முடிவதற்குள், நாட்டில் பெரும்பாலான இடங்களைப் பார்க்கும் பாக்கியத்தை அடைகின்றனர். ரயில்வேக் கம்பெனியார் கட்டண விஷயத்தில் விசேஷ சலுகை காட்டுகின்றனர். மாணவர்களின் பிரயாணச் செலவில் அரசாங்கம் ஒரு பகுதியையும் பள்ளிக்கூடம் ஒரு பகுதியையும் ஏற்றுக் கொள்கின்றன. மாணவர் கையிலிருந்து செலவாவதுமிகச் சொற்பமான தொகைதான்.

அமெரிக்காவில், ''முதலில் அமெரிக்காவைப் பார்'' என்று ஓர் இயக்கத்தை ஆரம்பித்திருக்கிருர்கள். யாத்திரை செய்வோருக்குத் தனி ரயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ரயில்களில் பிரயாணம் செய்வதானுல் சாதாரணக் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்குதான் கட்டணம். அமெரிக்காவின் இயற்கை வனப்புகளையும், பிரம்மாண்டமான தொழிற்சாலைகளையும் சினிமாப் படமாகத் தயாரித்து அந் நாட்டில் உள்ள பதினுயிரக் கணக்கான சினிமாத் தியேட்டர்களில் காட்டுகின்றனர். இப்படத்தைப் பார்க்கும் மக்களுக்குப் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகிறது.

அயர்லாந்திலும், 'முதலில் அயர்லாந்தைப் பார்'' என்ற இயக்கம் நடைபெறுகிறது. ஹாலந்தில் பள்ளிக்கூட மாணவர்கள், பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை மூட்டை கட்டித் தங்கள் முதுகில் சுமந்துகொண்டு, நடந்தோ அல்லது சைகிளிலோ பிரயாணம் செய்கிருர்கள். இந்த யாத்திரை வாசிகளான மாணவர்கள், குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கும் உண்பதற்கும் பல ஊர்களில் தனி இடங்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். ஜெர்மனியில், மாணவர்களுக்கு விசேஷ வசதிகள் அளிக்கிருர்கள். ஆகாய விமானங்களில் இடம் காலியாயிருப்பதால், அதிலே மாணவர்கள் மூன்ருவது வகுப்பு ரயில் கட்டணமாகிய குறைந்த கட்டணம் கொடுத்துப் பிரயாணம்செய்யலாம்.

திரு. ஏ. கே. செட்டியாரின் ''என் பிரயாண நினைவுகள்'' நூலிலிருந்து.

# அறிவியல் துறையில் ஒரு புதுமை!



'காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது' என்ற வரிகளை உணர்ந்தவர்களாலேதான் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச்செய்ய முடியும் என்பதைக் கண்கூடாகக் கண்டு வருகிருேம்.

சிலர் 'பொழுதே போகவில்லை' என்று சலித்துக்கொள்கிருர்கள்; சிலர் 'பொழுதே போதவில்லை' என்று வருந்துகிருர்கள். பொழுதைப் பயன் உள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வோர்தான் வாழ்க்கையில் நீடிக்கவும், நிமிர்ந்து நிற்கவும் முடிகிறது.

சென்னைப் பவழக்காரத் தெருவிலுள்ள கே. ஆர்.சி. ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி மோனு சண்முகசுந்தரம் அவர்கள், பொழுதைப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக்கொண்டதால், அறிவியல் துறையில் மாணவ மாணவியர்க்குப் பயன்படும் வகையில் ஒரு புதுமையைச் செய்திருக்கிருர்.

சிலர் அஞ்சல் தலைகளைச் சேர்த்து வைப்பதுபோல இவர் பள்ளி நேரம் தவிர, மற்ற நேரங்களில் அழகிய பொம்மைகள், பல்வேறு செடி கொடி மரங்களின் இலைகள், வேர்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டுள்ளார். இதன் விளைவாக இவர் கண்டுபிடித்தது தான், 'இலைப் புகை அச்சு!'

இலைப்புகை அச்சு (Smoke Prints of leaves) என்ருல் என்ன?

பள்ளியில் அறிவியல் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, தாவரவியலின் தன்மைகளை எடுத்துக் கூற வேண்டும். அப்போது அத்தாவர இலைகளையும் மாணவர்களுக்குக் காட்ட வேண்டும். ஒரே சமயத்தில் எல்லா வகைத் தாவர இலைகளையும் கொண்டு வந்து காட்ட இயலுமா? அதற்குத்தான் இவர் ஒரு வழி வகுத்துள்ளார்.

தாவர இலைகளையே புகை மூலம் தாளில் அச்சிடுவதுதான் அது! இதை எப்படிச் செய்வது?

ஒரு மண்ணெண்ணெய் விளக்கு, ஒரு சிறிய உருளை வடிவமான புட்டி, வெள்ளைத் தாள். இவைதான் இதற்குத் தேவையான பொருள்கள்.

## மகளிர் அரங்கம்

உருளை வடிவமான புட்டியில் தண்ணீரை நிரப்பி நன்கு மூடிவிட வேண்டும். பிறகு அந்தப் புட்டியை எரியும் விளக்குத் திரியின் மேல் பிடித்துக் கொண்டு, புகை புட்டியின்மீது படியும் வரை காட்டவேண்டும். புகை படிந்ததும், இலையின் பின் புறத்தில் அதாவது நரம்புகள் தெரியும் பாகத்தில் மையுள்ள புட்டியை உருட்ட வேண்டும். மை இலை நரம்புகளில் படிந்து விடும். பிறகு இலையை வெள்ளைத் தாளில் அழுத்தி எடுத்தால் அந்த இலையின் வடிவம் அப்படியே படிந்துவிடும். அதாவது 'பிளாக்'கைத் தாளில் அச்சிடுவது போல!

இப்படி எந்த வகையான இலை தேவையோ அதைத் தாளில் அச்சிட்டுக் கொள்ளலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட 'ஆல்பங்கள்' இவரிடம் நிறைய உள்ளன.

இந்தப் புதுமையைப் புகட்டவும், இதன் செய்முறையை எடுத்துக் காட்டவும் புதுதில்லியில் நடந்த குழந்தைகளுக்கான தேசிய அறிவியல் கண்காட்சி இவருக்கு ஒரு வாய்ப்பு தந்தது.

நவம்பர்த் திங்கள் 14-லிருந்து 19-ஆம் நாள் வரை

தின் மூர்த்தி இல்லத்தில் நடந்த இந்தக் கண்காட்சியில் 'இலைப் புகை அச்சு'க்கும் ஒரு பிரிவு ஒதுக்கப்பட்டிருந்தது.

கண்காட்சியில் இந்தியா முழுவதிலுமுள்ள பள்ளிகள் கலந்து கொண்டன. தமிழ் நாட்டிலிருந்து ஒன்பது பள்ளிகள் இதில் பங்கு கொண்டன. இதற்குத் தமிழ் நாடு கல்வித் துறை பரிந்துரை செய்தது. இவற்றில் ஆசிரியை என்ற முறையில் சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவர் இவர் ஒருவரே!

நேரு நிதியின் மூலம், தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு நடத்திய மூன்றாவது கண்காட்சி இது. இவ்வாண்டில் ஏறத்தாழ 4,000 திட்ட ஏற்பாடுகள் கண்காட்சிக்காகப் பெறப்பட்டன. இவைகளில் 500 வகைகள் தெரிந்தெடுக்கப்பட்டன. இவை நாடு முழுவதிலுமுள்ள விஞ்ஞான நிலையங்களிலிருந்து வந்தவை.

விஞ்ஞான அறிவை வளர்க்கவும், விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தவும் இக்கண்காட்சி பெரிதும் உதவியது.

புகை இலை அச்சுப் பிரிவில் திருமதி மோனு சண்முகசுந்தரத்திற்கு உதவியாக இருந்தவர் இவரது மகள் ஏ. எஸ். உமா மகேசுவரி. இவரும் இக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்.

49 கூடாரங்களில் அமைந்துள்ள இக் கண்காட்சியைக் குறிப்பாகத் தமிழ் நாட்டுப் பிரிவை பிற மாநிலத்தவரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்த இலை அச்சினைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தாராம்.

இந்த இலை அச்சினால் என்ன நன்மை?

பல்வேறு வகையான இலைகளை ஒரே சமயத்தில் மாணவர்களுக்குக் காட்டிக் கற்பிக்கலாம்; பிளாஸ்டிக் போன்ற இலை 'மாடல்'கள் அதிக விலையிலிருப்பதால் அவைகளையெல்லாம் வாங்கும் செலவை இது குறைக்கிறது; இயற்கை இலையின் வடிவம், நரம்புகள், விளிம்புகள் முதலானவைபற்றி எந்தச் சமயத்திலும்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்; இலைகளைத் தேடிப் பிரித்து வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதற்குள் அந்த இலைகள் வாடி வதங்கிவிடும். அந்தக் குறை இலை, இந்த இலை அச்சினால்!

இவர், தம் பள்ளி மாணவிகளைக் கிண்டிப் பூங்கா போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள பல்வேறு இலைகளைப் பறித்து வருகிறார். அவைகளைப் புகை அச்சு மூலம் தயாரிக்கச் சொல்கிறார்! இதனால் மாணவர்கள் பெரிதும் பயனடைவர் என்பது இவரது கருத்து.

இந்தச் செய்முறைக் காட்சியினை விளக்குகின்ற வகையில் சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியில் டிசம்பர் திங்களில் ஒரு கண்காட்சி நடந்ததையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

அறிவியல் துறையில் மட்டுமல்லாது, பிற துறைகளிலும் ஆடவரைப் போல மகளிரும் புதிய புதிய செய்திகளை உலகுக்கு வழங்கிடும் வகையில் தம் அறிவினைச் செலவிடவேண்டும். அப்போதுதான் நாளையத் தலைமுறைகளை நாம் நல்ல முறையில் வளர்த்தவர்களாவோம். வருங்காலமும் புதுமையும் புத்துணர்வும் பெற்றுத் திகழும்!

—பி. வி. ஜி.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அவைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB



PDSSPB 777TMA


# மூன்று மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகள்

த.பி

சிறிய ஊர்தான் சுவாமிமலை, என்றாலும் அங்கே மக்கள் வெள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது.

''இந்தக் கிராமத்தில் இவ்வளவு கூட்டமா?''— ஒரு நிருபர் கேட்டார்.

''சுவாமிமலை என்றால் என்ன என்று நினைத்துக் கொண்டீரய்யா? ஆறுபடை வீடுகளில் ஒன்றல்லவா?''—என்று ஆர்வம் ததும்பக் கேட்டார் ''முஸல்மான்'' பத்திரிகையின் நிருபரான திரு. ராம அய்யர்.

அவர் சொல்லி முடிப்பதற்கும் உந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. சுவாமிமலை உலோகச் சிலைப் பயிற்சி நிலையத்துக்கு வந்து விட்டோம் என்பதைப் புரிந்து கொண்டு, உந்தை விட்டு இறங்கினோம்.

பொழுது மங்கி விட்டது. என்றாலும் நாங்கள் ஓய்ந்து விடவில்லை; ஆர்வத்துடன் நிலையத்துக்குள் அடி எடுத்து வைத்தோம். ஆனால், நிலையப் பொறுப்பாளர்கள் எங்களை விட ஆர்வம் காட்டி வரவேற்ற காட்சி எங்கள் இதயங்களுக்கு இதமாக இருந்தது.

சுவாமி மலையில் உள்ள உலோகச் சிலைப் பயிற்சி நிலையம் 1956-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

சிற்ப நூல்களில் சொல்லியுள்ளபடி சிற்பங்களை உருவாக்கும் அருங் கலையைப் பயிற்றுவிப்பது—அருகி வரும் இந்த அருங்கலைக்கு நல்லாதரவு தருவது—இவை தாம் இந்த நிலையத்தின் குறிக்கோள்கள்.

பயிற்சிக் காலம் மூன்றாண்டுகளாகும்; பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. சிற்பக்கலை நூலிற் சொல்லியுள்ளபடி — பாடப் பயிற்சியும், செய்முறைப் பயிற்சியும் தரப்படுகின்றன. சிற்பக் கலை குறித்த வடமொழி நூல்கள் எல்லாம் இங்கே மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன.

பயிற்சி முடிந்ததும் — தொழில் வணிகத் துறை இயக்குநரால்—பாடத் தேர்வும்—செய்முறைத் தேர்வும் நடத்தப்படுகின்றன; அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் நாடெங்கும் பரவிக்கிடக்கிறார்கள்.

பெங்களூரிலுள்ள வடிவமைப்பு நிலையங்களில் சிலரும், தனிப் பட்டோரின் நிறுவனங்களில் சிலரும் பணி புரிகிறார்கள். இன்னும் சிலர்—சுவாமிமலையில் இயங்கி வரும் உலோகச்சிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் பணியாற்றுகிறார்கள்.

தஞ்சை மாவட்டக் குடிசைத்தொழில் அலுவலரின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது இந்த நிலையம்.

இங்கே உள்ள உற்பத்தி நிலையத்தில் உருவாகும் வெண்கலச் சிலைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இங்கே உருவாகும் புத்தர் சிலைகள் பூடானுக்கு மிகுந்த அளவில் அனுப்பப்படுகின்றன. வெளிநாட்டாரின் தேவைகளை இந்த உற்பத்தி நிலையம் ஈடு செய்கிறது என்பதை அறியும் போது நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

கூட்டுறவு இல்லாத துறை தமிழ் நாட்டில் கிடையாது என்று எளிதில் கூறிவிடலாம். உலோக உற்பத்தி வகையிலும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. சுவாமிமலை உலோகச் சிலை உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத்தொழிற் சங்கம் என்று சொல்லப்படும் இந்தச் சங்கம் 1958-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. 43 உறுப்பினர்கள் இதில் உள்ளனர். துவக்கத்தில் அரசு கொடுத்த 90 ஆயிரம் ரூபாய் மூலதனக் கடனை 10 தவணைகளில் திருப்பிக் கொடுத்து விட்ட இந்தச் சங்கத்தில் 1967-68-ஆம் ஆண்டில் தமிழக அரசு மேலும் ரூ. 20 ஆயிரம் மூலதனக் கடனாக வழங்கியுள்ளது.

உலோகச் சிலை உற்பத்திச் செய்து வரும் கூட்டுறவுச் சங்கம் இந்தியா முழுவதற்கும் இது ஒன்றுதான் உள்ளது என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். இந்தச் சங்கத்திற்கு

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

| | |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலைபேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

என்.எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குனர்.

கூட்டுறவு சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

TNSC BANK




கிடைக்கும் இலாபம் ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. ''இதன் வளர்ச்சிமேன்மேலும் சிறப்படைக'' என்று மனத்துக்குள் கூறியவாறே, சுவாமிநாதன் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டோம். சில நிமிடங்களில் ஆலயத்தில் 'சுவாமி தரிசனத்தை' முடித்துக்கொண்டு அனைவரும் பிரசாதங்களுடன்—(விபூதி, குங்குமத்துடன் மட்டுமல்ல, முறுக்கு- வடை இத்தியாதிகளுடன்) தஞ்சை நகரத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

இரவு 8 மணியளவில் எங்களது உந்து, தஞ்சை ''அரசர் விடுதி'க்குள் நுழைந்தது.

இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு உறக்கத்தை மேற்கொண்டோம்.

பொழுது புலர்ந்தது; அக்டோபர் 12-ஆம் நாள் வந்தது. இயற்கைக் கடமைகளை எல்லாம் முடித்துக் கொண்டு, சிற்றுண்டி அருந்தி விட்டு உந்துள் ஏறி அமர்ந்தோம்.

''உந்து இப்போது தஞ்சை பெரிய கோவில் என்று சொல்லப்படும் பிரகதீசுவரர் கோவிலுக்குச் செல்கிறது'' அதன் பின்னர் மாவட்ட ஆட்சியினர் சந்திப்பு''—என்றார் வரவேற்பு அலுவலர்.

உந்து பெரிய கோவிலை அடைந்தது; உந்தை விட்டு இறங்கிக் கோவிலினுள் சென்றோம். மிகப் பெரிய நந்தி! மிகப் பெரிய ஆவுடையார்! பல முறை பார்த்திருக்கிறோம். என்றாலும் ஒவ்வொரு முறை காணும் போதும் வியப்பு அலைகள் நம்மைச் சுற்றி எழாமல் இருப்பதில்லை. பொறியியல் பட்டதாரிகளும், பொறியியல் பட்டயதாரிகளும் தோன்றிய காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ராஜராஜன் உருவாக்கிய ஆலயம்—எந்தப் பொறியாளரின் திறமையால் உருவாக்கப்பட்டிருக்கும் என்றே தெரியவில்லை. தமிழகக் கட்டடக் கலைக்குக் கட்டியங்காரம் கூறிக் கொண்டிருக்கும் இந்தக் கோவிலின் மேல் தளத்துக்குச் சென்றோம்.

மேல் தளத்தில் உள்ள பிரகாரத்தின் சுவர்களில் சில ஓவியங்கள் வண்ணங்களினால் தீட்டப்பட்டிருந்தன. வரலாற்று நிகழ்ச்சிகளும் — புராண இதிகாசக் கதைகளும் ஓவியங்களாக இடம் பெற்றிருந்தன.

''நாயக்கர் காலத்து ஓவியங்கள் இவை'' என்றார் அங்கே இருந்த பொறுப்பாளர்.

''ஓவியங்களைப் பார்த்துக் கொண்டு வரும் போதே மற்றோர் அதிசயத்தைக் கண்டோம். ஓர் ஓவியத்தினுள்ளே வேறொரு ஓவியம் தென்பட்டது. அனைவரும் ஏக காலத்தில் வியப்புக்கு ஆட்பட்டோம்.



அண்ணா பண்ணையில் விளைந்துள்ள காய்கறி வகைகள்

''ஓவியத்திற்குக் கீழே ஓர் ஓவியம் தென்படுகிறதே இது எதனால்?''—வினவிடுத்தோம்.

பொறுப்பாளர், உடனே சொன்னார்:

''நீங்கள் கண்டு பிடிக்கிறீர்களா என்றுதான் நான் காத்துக் கொண்டிருந்தேன்! கண்டு பிடித்துவிட்டீர்கள்! அடியில் உள்ள ஓவியம் சோழ மன்னர்கள் காலத்திய ஓவியம். சோழ மன்னர்களுக்குப் பின் தஞ்சையைக்கைப்பற்றி அரசு புரிந்த நாயக்க மன்னர்கள், முந்திய ஓவியங்களைச் சிதைக்காமல்—அவற்றின் மேலேயே புதிய ஓவியங்களை வரையச் செய்திருக்கிறார்கள். பலவித இரசாயன முறைகளின் மூலம் இந்த ஓவியங்களை ஓரளவு தெரியும்படிச் செய்து வருகிறோம்''

அனைவரும் ஓவியங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துவிட்டு, கீழே உள்ள காட்சிச் சாலை ஒன்றினைப் பார்வையிட்டுவிட்டு திரும்பினோம். வெளியிலே நின்றிருந்த ராஜராஜன் சிலை—எங்கள் இதயத்தைக் கவர்ந்தது; அதே நேரத்தில் ஆலயத்தினுள்ளே இடம் பெற முடியாது போயிற்றே என்ற ஏக்கமும் ஏற்பட்டது. அதன்பின், மாவட்ட ஆட்சியாளரின் சந்திப்புக் கிடைத்தது. தஞ்சை மாவட்டத்தில் அரசு ஆற்றி வரும் பணிகளை அவர் மிக மிக விளக்கமாகத் தெரிவித்தார். நிருபர்கள் விடுத்தும் வினாக்களுக்கு—அந்தந்தத் துறை அலுவலர்களைக் கொண்டே பதிலிறுக்க வைத்தார். நிருபர்கள் என்னென்ன கேட்பார்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்ற வகையில் அவர் செயல்பட்டார் என்பதை அவரது நிருவாக அமைப்பு எடுத்துச்சொல்லியது.

மர்வட்ட ஆட்சித் தலைவரின் சந்திப்புக்குப் பின்னர் — கொள்ளிடத்தில் உருவாகியிருக்கும் பாலம் ஒன்றினைப் பார்க்கச் சென்றோம்; ''பஞ்சநதிகள் கலக்கும் திருவையாற்றைத் தாண்டிச் செல்லும் போதும்—குடமுருட்டி ஆற்றைப் பார்க்கும்போதும்—ஆற்றைத் தாண்டிச் செல்வதாகவே தோன்றவில்லை. இந்துப் பெருங் கடலைத் தாண்டிச் செல்வது போன்ற உணர்வே ஏற்பட்டது.

தஞ்சை, திருச்சி இரண்டு மாவட்டங்களையும் இணைக்கும் பாலமாகக், கொள்ளிடத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ள புதிய பாலம் விளங்குகிறது. இந்தப் பாலம் உருவாவதற்கு முன்பு ஒரு முனையிலிருந்து மறு முனை செல்லவேண்டுமென்றால் படகின் உதவியைத்தான் நாட வேண்டியிருந்தது. தற்போது அந்தப் பிரச்சினை சமாளிக்கப் பட்டுவிட்டது. திருச்சி, தஞ்சை மாவட்ட வேளாண் குடியினரும், வணிகர்களும், தங்கள் தொழில்களைச் சிறப்பா



அண்ணா பண்ணையில் விளைந்துள்ள உயர்ரகக் கம்பு

கவும் விரைவாகவும் செய்வதற்கு இந்தப் பாலம் மிகுந்த உதவியாய் அமைந்துள்ளது.

ரூ. 65.70 இலட்ச மதிப்பீட்டில்—20-10-1969 அன்று துவக்கப்பட்ட பாலப் பணி 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறைவேறியுள்ளது. ஏறக்குறைய 3,766 அடி கொண்ட இப் பாலம், 23 மதகுகளை உடையது. நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையினரால் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தில், இரட்டை கர்டர்கள் பயன்படுத்தப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

பாலத்திற்கும்—அதனை உருவாக்கியவர்களுக்கும் —பாலத்தைப் பார்வையிட்ட போது பிஸ்கோத்து—குளிர் பானம் முதலியவற்றை வழங்கிய பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்து விட்டுத், தஞ்சையை நோக்கிப் புறப்பட்டோம்.

மதிய உணவை முடித்துக் கொண்டு திருச்சி மாவட்டத்தை நோக்கி விரைந்தோம்.

புதுக்கோட்டையின் அருகில் உள்ள குடுமியா மலை — அண்ணா பண்ணை எங்களின் அடுத்த காட்சிப் பகுதியாயிற்று. நாடெங்கிலும் வினியோகம் செய்வதற்குரிய விதைப் பொருள்களை உருவாக்கி வரும் இந்தப் பண்ணையில் விளைந்துள்ள கத்தரிக்காய், குடமிளகாய், வெண்டைக்காய், புடலங்காய் இவற்றையெல்லாம் பார்த்தபோது, நாவில் நீர் ஊறியது. பச்சைக் காய்கறிகளையே தின்று விடலாம்போல் தோன்றியது. அப்படிச் செய்தால் 'மாயா பஜாரில்'' காட்சி தந்த 'கடோத்கஜன்' என்று எவரும் எண்ணி விடுவார்களோ என்ற அச்சத்துடன் ஆசையை அடக்கிக் கொண்டேன்.

குடுமியாமலை, வயலோகம், புல்வயல் கிராமங்களிலுள்ள பாதுகாக்கப்பட்ட காட்டைத் திருத்திப் பயன்தரும் விளைநிலமாக மாற்றவேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது திட்டமிட்டார்கள். அவர்களது விருப்பப்படி, 7-9-1967 அன்று காடு இருத்தும் பணி துவக்கப்பட்டது. மொத்தம் 1,017 ஏக்கர்கள் திருத்தப்பட்டன. 806 ஏக்கர்கள் விளைநிலமாகவும், ஏனையவை இணைறு கள், குளம், சாலை, கட்டடங்கள் ஆகிய வகையில் பயன்படுத்தப்பட்டன. ஏக்கருக்கு ரூ. 258 வீதம் மொத்தம் ரூ. 2,62,850 செலவாகியுள்ளது.

இந்தப் பண்ணையை மேலும் வளப்படுத்த ரூ. 52 இலட்சம் கொடுப்பதற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் தெரிவித்திருக்கிறது.

இங்கே நஞ்சைப் பயிர்கள், புஞ்சைப் பயிர்கள், தோட்டப் பயிர்கள், பழவகைகள் அனைத்தும் பயிரிடப் பெறுகின்றன.

புதுக்கோட்டைப் பகுதி வேளாண்மையில் பின் தங்கிய பகுதியாகும். பெரும் பாலும் கண்மாய்ப் பாசனத்தில் நெல் லும், மானாவாரி இடங்களில் வரகும், ஓரளவு வேர்க்கடலையும் பயிரிடப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு நுகர்ச்சி இப் பகுதியின் தட்பவெப்ப நிலை பல்வேறு பயிர்களை இலாபம் தரும் வகையில் பயிரிட முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

இப் பண்ணையில் உயர் ரக விளைச்சல் தரும் நெல் வகைகள், வீரிய ஒட்டுக் கம்பு, சோளம், மக்காச் சோளம், கேழ்வரகு, பல்வேறு பயறு வகைகள், மரவள்ளி, பருத்தி, பல வகைக் காய்கறிகள் பயிரிட முடியுமென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஏறத்தாழ 60 பயிர் வகைகள் இப் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ளன.

குளிர்ந்த சூழ்நிலையில்தான் வளர முடியும் என்று கருதப்படும் முட்டைக் கோசு, கோதுமை, உருளைக் கிழங்கு, பீட்ரூட், கேரட், நூக்கோல், பீன்சு போன்ற காய்கறி வகைகள் இப் பண்ணையில் நல்ல விளைச்சலைப் பெறுகின்றன.

இந்தப் பண்ணை இப் பகுதியிலுள்ள வேளாண் பெருமக்களுக்கு நல்லூதியம் தரும் முறையில் புதிய பயிர்களைப் பயிர் செய்வதற்கு ஊக்குவிக்கும் வகையில் ஒரு மாதிரிப் பண்ணையாக மாபெரும் வளர்ச்சி பெற்று விட்டது. இரண்டாம் ஆண்டிலேயே இலாபம் தரத்தக்க நிலையில் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது உயர் விளைச்சல் தரும் உயர் ரக வீரிய ஒட்டுக் கம்பு, மக்காச் சோளம், கோதுமை, நெல் வகைகள், நிலக்கடலை மற்றும் காய்கறி விதைகள் உற்பத்தி செய்து, தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் வினியோகிக்கின்ற செயல் பாராட்டுவதற்குரியதாகும்.

தமிழ் நாட்டில் பல புதிய பயறு வகைகளை அறிமுகப்படுத்தி அவற்றின் விதைகளைப் பெருமளவில் வழங்கி, பயறு உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு பெறுவதற்கு இப் பண்ணை சீரிய முறையில் தொண்டாற்றி வருகிறது.

சுமார் 140 எக்கர் பரப்பில் மாந்தோப்பு அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய பழத் தோட்டமாக அமையும் என்பது உறுதி.

பண்ணை முழுதும், திட்டமிட்டபடி வளர்ச்சி பெறும் போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 இலட்சம் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழகம் இன்று உணவுத் துறையில் தலைசிறந்து விளங்குகிறது, தன்னிறைவு பெற்றுத் திகழ்வதுடன்—மிகை நிலை மாநிலமாகவும் காட்சி தருகிறது, என்றால்— அந்தப் பெருமைக்கு வழி வகுத்துக் கொடுத்த 'வாயில்களில்' குடுமியாமலை அண்ணா பண்ணையும் ஒன்று!

குடுமியா மலையில் ''கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்'' இயங்கி வருகிறது. 14-4-1971-ல் தொடங்கப் பெற்றுப் புதுக்கோட்டையில் இயங்கி வந்தது இந் நிறுவனம்; குடுமியா மலையில் ரூ. 2.5 இலட்சம் செலவில் தனிக் கட்டடங்கள் கட்டப்பட்ட பின் இந்த ஆராய்ச்சி நிறுவனம் 1-7-1973-ல் இருந்து குடுமியா மலையில் இயங்கி வருகிறது.

களர் நிலங்களை நல்ல கழனிகளாக்க—விளைச்சலை உயர்த்த —வேளாண் பெருமக்கள் மேற்கொள்ள வேண்டிய நவீன பயனுள்ள முறைகள் பற்றி விஞ்ஞான பூர்வமாக ஆய்வு மேற்கொள்வது, சரியான விதைகளைத் தேர்ந்தெடுத்தல், பலவித உரங்களில் பயனுள்ளவற்றைத் தேர்ந்தெடுத்தல் — பயிர்களுக்கிடையே சரியான இடைவெளி விடுதல்—பயிர்களுக்கேற்படும் நோய்களைத் தடுத்தல்—பூச்சி புழுக்களை ஒழித்தல்—பயிர்களுக்குத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்றவற்றை விஞ்ஞான முறையில் ஆய்வதுடன், நடை முறையில் ஆய்வுகளும் செய்தல்; பருப்பு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வழி காணுதல்— வேளாண் பெருமக்களை நேரிற் சந்தித்துக் கருத்துரைகள் திரட்டி, அவற்றைத் தொகுத்தாய்ந்து, அதற்கேற்பத் திட்டங்கள் தீட்டுதல்—பல மட்டத்தில், பல்வேறு பகுதியினருக்கும் பயிற்சி அளித்தல்— செயல் விளக்கங்கள் நடத்துதல்—இவை இந்தப் பண்ணையின் குறிக்கோள்களாகும்.

உழவியல், நீர் நிருவாகம், வேளாண்மைப் பொறியியல், மண்வளப் பாதுகாப்பு, பண்ணை நிருவாகம், வேளாண்மைப் பொருளாதாரயியல், பயிர்ப் பாதுகாப்பு என ஏழு பிரிவுகளுடன் இந் நிறுவனம் இயங்கி வருகிறது.

உழவியல் பிரிவில்—ரகங்கள், உரங்கள், பயிர் இடைவெளி, இலை மூலம் உரச்சத்துக்கள் தெளிப்பு, களைக் கொல்லிகள் முதலியன குறித்து ஆய்வு நடைபெற்று வருகின்றன.

நீர் நிருவாகப் பிரிவில் — எந்தெந்தப் பயிருக்கு எப்படியெப்படிச் சிக்கனமாக நீர் பாய்ச்சி, மிகு விளைச்சல் காண்பது என்று ஆய்வு செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் பிரிவு : அண்ணா பண்ணையில் மண்வளப் பாதுகாப்பு—பாசன நீர் பராமரிப்பு—பருத்தி, வெண்டை முதலிய பயிர்களில் பலவகைப் பாசன முறைகள்,

திருவரங்குளத்தில் உள்ள கோழிப் பண்ணை






ஆராய்ச்சி, உழவு முறைகள், ஆய்வுகள் முதலியவை வேளாண்மைப் பொறியியல் பிரிவில் நடைபெறுகின்றன.

நெல், கரும்பு முதலிய பயிர்களுக்குத் தேவையான சமச்சீர் உரச் சத்துக்கள் இடுவது குறித்த ஆராய்ச்சி, மண் இரசாயனப்பிரிவில் நடைபெற்று வருகின்றது.

பண்ணை நிருவாகப் பிரிவில், ஒரு பகுதி மூலம் திருச்சி மாவட்டத்தில் அனுசரணை ஆராய்ச்சிப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு பகுதியின் மூலம் முக்கியமான பயிர்களின் சாகுபடிச் செலவுகள் கணக்கிடுதல், தற்போதுள்ள பயிர் சுழற்சி முறைகளைக் குறித்து ஆராய்தல், பண்ணை ஏடுகள் வைத்து வருதல், பல பயிர் சாகுபடிப் பரிசோதனைப் பாத்திகள் அமைத்தல் முதலிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

வேளாண்மைப் பொருளாதாரப் பிரிவில்—அடிப்படைப் புள்ளி விவரங்கள் சேகரித்தல்—வாழை, கரும்பு, நெல் முதலிய பயிர்களுக்கு உர உபயோகம் குறித்து ஆராய்தல், சூரிய காந்தி, எச்.பி. 3 கம்பு, ஐ.ஆர் நெல் ரகங்கள் பரவிய அளவு குறித்து ஆராய்தல் முதலியன நடைபெற்று வருகின்றன.

பயிர்ப் பாதுகாப்புப் பிரிவில்—பூச்சிகள், நோய்கள் தாக்குதல் குறித்துக் கவனித்து வருதல்—பலவகைப் பூச்சி கொல்லி மருந்துகளையும், பூசணக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்திச் சோதனை செய்து பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தல் போன்ற பணிகள் நடைபெற்றுவருகின்றன.

கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் அமைந்திருக்கும் சூழல் அருமையானதாகும். எழில் மிகுந்த பின்னணியாகும். விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள், கருத்தரங்கு மண்டபம் ஆகியவை 14 இலட்ச ரூபாய் செலவில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

பலப் பலப் புதுத் திட்டங்களை வகுத்துக் கொண்டு, மேன்மைக்குப் பாடுபட்டு வரும் இந்த நிறுவனம், இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகத்தின் கருத்தை விரைவில் கவரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. "உலகத்து


காவேரி நதியில் புதிய பாலம் உருவாகும் பணி

வேளாண்மைப படத்தில் இந்த நிறுவனமும் நிச்சயம் இடம் பெறும் என்பது உறுதி" —என்பதை எங்கள் உள்ளங்கள் உணர்த்தின. அதனால், உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் திருச்சி நகரத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

இரவு 7 மணியளவில் திருச்சியை அடைந்தோம்.

எழுத்தாளர்களும், நிருபர்களும் மிக உயர்ந்தவர்கள் என்பதை நினைத்துத்தானோ என்னவோ—உயரமான மாடியில் உன்னதமான உணவினை எங்களுக்குக் கொடுத்தார்கள். இந்தச் சாப்பாட்டைச் சாப்பிடும்போதுதான் 'இருநாளுக் கேலென்றால் ஏலாய்'' என்ற ஔவைப் பாட்டியின் வைர வரிகள் நினைவுக்கு வந்தன.

மறுநாள்—அதாவது அக்டோபர் 13-ஆம் நாள் காலை 9 மணி அளவில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருடன் சந்திப்பு நிகழ்ந்தது.

திருச்சி மாவட்டத்தில் தமிழக அரசு செய்திருக்கும் சாதனைகளையும் செய்யவிருக்கும் சாதனைகளையும் மிக விரிவாக எடுத்துரைத்தார் ஆட்சியாளர்.

திருச்சி மாவட்டத்தை மிகச் சிறந்த தொழில் நகரமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருக்கிறது என்பதை அவரது உணர்வு தெரிவித்தது.

அவரது சந்திப்புக்குப் பின்னர்—சிறந்த ஊராட்சி ஒன்றியமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருவரங்குளம் நோக்கிச் சென்றோம். அங்கே சென்று—அங்கு நடைபெற்றுள்ள பணிகளைப் பார்வையிட்ட பின்னர் அந்த ஒன்றியம் சிறப்படைந்துள்ளது நியாயம் தான் என்ற உணர்வு எழுந்தது.

கால் நடை வளர்ப்பு நிலையம், கிராமப் புற தீவிர வேலை வாய்ப்புத் திட்டம், வேளாண்மைத்திட்டத்தின் கீழ் நடைபெறும் சாகுபடித் திட்டம், சீரணியினரின் திருப்பணி, பாலவாடி என்றழைக்கப்படும் சத்துணவுத் திட்டம்—மகளிர் மன்றப் பணிகள்—இப்படி எத்தனையோ திட்டங்களைச் செயற்படுத்திச் சிறப்பெய்தியுள்ளது திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்.

படித்து அலுவல் இல்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்காக, முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள இளைஞரணி—இந்த ஒன்றியத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தை விட்டுப் புறப்பட்டோம். எங்களது மதியச் சாப்பாடு புதுக்கோட்டையில் நடைபெற்றது.

சாப்பாட்டுக்குப் பின்னர்..

மீண்டும் திருச்சியை நோக்கி விரைந்தோம்.

காவிரியாற்றில்—சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில், திருச்சி—திருவரங்கத்தை இணைக்கும் புதிய பாலம் ஒன்று உருவாகிக் கொண்டிருப்பதைக் கண்டோம்.

தற்போது உள்ள பாலம் மிக மிகக் குறுகலானது என்பது உலகறிந்த உண்மை. ஏறக் குறைய 20 ஆண்டுகளாகவே வாகனப் போக்குவரத்தை

# தம்பீ வா!

மாமூலன்



முழு நிலவு நாள்!

தண்ணொளியின் கோல எழிலில் நிலம் நனைந்தது.

‘அப்போலோ’ வான வெளி வீரர்கள் வந்தாலும், செயற்கைக் கோள்களால் என்ன ஆராய்ச்சி செய்தாலும் என்னுடைய நில வொளியில் எந்த மாற்றமும் காண முடியாது என்று செருக்கோடு செப்பிய வண்ணம் திங்கள் காய்ந்தது!

கடல் மணற் பரப்பு முழுதும் உருக்கிவிட்ட வெள்ளி ஓடுவது போன்ற தோற்றம்! மயக்கம்!

கலை வளர்த்த மண்ணின் கரையைத் தொடுவதால் கடலலைகளும் கவனமாகத் தாளத்தோடு ஒலி எழுப்பின.

தமிழ் மண்ணில் தரங்கம் பாடுவதிலும் ஈடில்லா இனிமை —வெண்ணிலவு வழங்கும் மயக்கம் வேறு! நான் என்னை மறந்தேன்!

நீரின் வந்த நிமிர் பரிப்புரவிகளும் மிளகுப் பொதிகளும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் தென்கடல் முத்தும் கீழ்த் திசைக் கடலின் பவளமும் கங்கை வாரியும், காவிரிப் பயனும் ஈழ நாட்டின் நுகர் பொருள்களும் கடாரம், சீனம் முதலியவற்றிலிருந்து வந்த அரும் பெரும் பொருள்களும் வந்து குவிந்ததால் நிறைந்து விளங்கிய — ஆரவாரமான அன்றையப் பூம்புகார் நகரின் அழகிய காட்சிகள் கண்முன்னே தோன்றின.

உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் தொகுத்துக் கூறியவைகளை நினைந்து நினைந்து நெஞ்சத்தின் மகிழ்ந்தேன்.



ஆழத்தில் பதிந்த அந்தக் காட்சிகள் மறைய மறைய—

நான் பெருமூச்சு விட்டேன்.

அன்றையப் பூம்புகார் வேறு; இன்றையத் தோற்றம் வேறு!

அடுத்த நிமிடம் ஓர் ஆறுதல்.

அதோ அங்கே எழுந்துள்ள அந்தச் சிலப்பதிகாரக் கலைக் கூடத்தைக் கண்டது.

தமிழாய்ந்தார் ஆட்சியிலே கிடைத்த பெரும்பேறு.

இந் நல்வாய்ப்பை நினைந்தவாறு கடலோரமாக நடந்தேன்.

‘முழங்கு கடல் ஞாலம் முழுவதும்’ வளந் தேடிச் சென்று

சமாளிப்பதற்குப் பெரிய பாலம் தேவை என்ற சூழ்நிலை இருந்து வந்தும் இது ஏனோ கவனிக்கப்படாமல் இருந்து வந்தது. தற்பொழுது, தமிழக அரசு—பெரிய பாலம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. பழைய பாலத்தின் அருகில்—புதிய பாலம் உருவாகும் வேலைகள் துவக்கப்பட்டு விட்டன. 77 இலட்ச ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் நீளம் 1,775 அடிகளாகும்.

17-3-1972-ல் துவக்கமாகிய இந்தப் பால வேலை 30-9-1974-ல் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜூன் திங்களிலிருந்து பிப்ரவரி திங்கள் வரை காவிரியாற்றில் நீர் பெருகி வருவதால் பாலவேலை ஆண்டு முழுவதற்கும் நான்கு மாதங்கள் தான் நடைபெற முடியும்.



இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு விட்டால், வண்டி, வாகனப் போக்கு வரத்து சிரமமில்லாமல் சமாளிக்கப்படும் என்பது உறுதி.

இந்த உணர்வுடன் உந்துள் ஏறி அமர்ந்தோம். அன்னை காவிரி தன் கரம் விரித்துக் காற்றை அள்ளி வீசினாள். அப்போது . . .

''நாடெங்குமே சிறக்க, நன்மையெல்லாம் கிடைக்க நடந்தாய் வாழி காவேரி'' என்ற திரை இசைப் பாடல் எங்கிருந்தோ வந்து எங்கள் காதுகளைத் தொட்டது. அந்த இசையின் பின்னணியுடன் எங்கள் உந்து சென்னையை நோக்கிப் புறப்படத் தொடங்கியது.

ஐந்து நாள் சுற்றுப்பயணம்—உள்ளத்திற்கு மட்டுமல்ல—அறிவுக்கும் விருந்து படைத்தது என்பதை மறக்க முடியாது.



# இலங்கையின் வெந்நீர் ஊற்று

திருகோணமலைக்குப் பக்கத்தில் உள்ள வெந்நீர் ஊற்றுகளுக்கு என் உள்ளத்தில் என்றும் தனியிடம் உண்டு. இந்த ஊற்றுகள் கண்ணுக்கு இன்பம் அளிக்கவில்லை. புலன்களுக்கெல்லாம் அடிப்படையான ஊற்றின்பத்தை மெலிந்து சோர்ந்த என் உடலுக்கு அளித்து உள்ளக் கிளர்ச்சி தந்தவை இவை.

ஊற்றுகள் ஊற்றுகள் என்று திரும்பத் திரும்பப் பன்மையில் குறிப்பிடுகிறேன். ஒரே இடம் தான்; ஆனால் ஏழு ஊற்றுகள். ஏழு ஊற்றுகளிலும் ஒரே நீர் தான்; ஆனால் ஏழு பதமான வெந்நீர்; ஒன்றில் வெதவெதப்பான நீர்; மற்றொன்றில் சிறிது பதமான வெந்நீர்; இன்னொன்றில் பதமான வெந்நீர்; இன்னொன்றில் சிறிது சூடான வெந்நீர்; இன்னொன்றில் சூடான வெந்நீர்; மற்றொன்றில் மிகச் சூடான வெந்நீர்; வேறொன்றில் ஆறிய வெந்நீர்—இவ்வாறு சொல்லக் கூடிய வகையில் வெவ்வேறு பதமாக ஏழு வகையான வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இதிலும் அதிலுமாக மாறி மாறி நீர் கொண்டு வார்த்துக் கொள்ளக் கூடிய வாறு, ஏழும் ஏழு கிணறுகளில் அடுத்தடுத்து உள்ளன. நில மட்டத்தில் நீர் உள்ளது.

ஆகையால் கிணற்றின் சுவரை அடுத்துநின்று குனிந்து குனிந்து கையில் பிடித்த வாளியால் நீரை மொண்டு மொண்டு வார்த்துக் கொள்ளலாம். இரண்டரை அடி ஆழமுள்ள தொட்டிகள் போல் கிணறுகள் அமைந்துள்ளன. ஒவ்வொன்றிலும் ஊற்றுச்சுரந்துகொண்டு இருக்கிறது. ஒவ்வொன்றும் 'தொட்டனைத்து ஊறும் மணற் கேணி'யாய் உள்ளது. ஆகையால் எவ்வளவு நீர் மொண்டு வார்த்துக் கொண்டாலும், நீர் குறைவதும் இல்லை; வெப்பம் மாறுவதும் இல்லை; உடம்பில் வார்க்கும் நீரெல்லாம் ஓடி வெளியே பாய்வதற்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சுற்றிலும் மதில் சுவரும் உண்டு. ஆகையால் இடம் தூய்மையாகக் காக்கப்பட்டு வருகிறது. நாங்கள் குளிக்கத் தொடங்கிய போது வாடிக் களைத்துச் சோர்ந்திருந்தோம். குளித்து விட்டு வெளியே வந்தபோது நன்றாக உறங்கி எழுந்தவர்களைப் போல் புது வாழ்வு பெற்று வந்தோம். வெந்நீரில் குளிப்பதால் களைப்பும் சோர்வுமே வரும் என்று கண்டிருக்கிறோம். ஆனால் இந்த வெந்நீர் இயற்கை அன்னை அருளுவது. களைப்புக்கும் சோர்வுக்கும் மெலிவுக்கும் மருந்து இந்த வெந்நீர்.

—டாக்டர் மு. வரதராசனாரின் 'யான் கண்ட இலங்கை' என்னும் நூலிலிருந்து.

21

# தமிழகத்துக்கு இரு புதிய பப்பாளி

உண்பதற்கேற்ற 'கோ. 1' பப்பாளி ரகம், 'பப்பெய்ன்' தயாரிப்பதற்கு ஏற்ற 'கோ. 2' பப்பாளி ரகம் ஆகிய புகழ் பெற்ற பப்பாளி ரகங்களை வெளியிட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அண்மைக் காலத்தில் ஹாவாய்த் தீவிலிருந்து கொண்டு வரப்பட்ட பப்பாளி இரகங்களிலிருந்து ''சன்ரைஸ் சோலோ', (Sunrise Solo) ''லைன் 8 சோலோ'' (Line 8 Solo) என்ற இரு புதிய சிறந்த இரகங்களை நமது மாநிலத்தில் பயிரிடுவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளது.

பொதுவாகப் பப்பாளியில் ஆண், பெண் என்ற இரு இரகங்களும் இருந்தால்தான் பலன் கிடைக்கும்! அதாவது ஒவ்வொரு பத்துப் பெண் மரங்களுக்கு, ஒரு ஆண் மரம் என்ற விகிதத்தில் நட்டால்தான் பலன் கிடைக்கும்! ஆனால் இளம் பப்பாளி நாற்றுகளிலிருந்து ஆண், பெண் என இனம் பிரிப்பது எளிதல்ல ! நாற்றுக்களை நடும் போது ஒவ்வொரு குழிக்கு 4 அல்லது 5 நாற்றுக்கள் என்ற விகிதத்தில் நட்டு, அந்தச் செடிகள் பூப்பிடிக்கும் தருணத்தில் ஆண், பெண் செடிகளை இனம் தெரிந்து நமது தேவைக்கேற்ப ஆண் மரங்களை விட்டு விட்டு, அதிகப்படியாக உள்ள ஆண் பப்பாளி மரங்களை வெட்ட வேண்டிய சிரமம் எல்லாப் பப்பாளிகளிலும் உள்ள பொதுவான பிரச்சினையாகும்! மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட நாற்றுக்களை நடுவதால் பூமியிலுள்ள சத்தை எடுத்து விரயம் செய்வதுடன், அவைகளை வெட்டும் போது வீணாகப் போகிறது.

ஆனால் இந்த 'சோலோ' பப்பாளியில் ஆண், பெண் பாகங்கள் ஒரே பூவில் இருப்பதால், நாம் ஆண் செடிகளைத் தனியே வளர்க்கும் சிரமம் தவிர்க்கப்படுகிறது! இது ''சோலோ'' பப்பாளிக்கே உள்ள சிறப்புத் தன்மையாகும்!

''சோலோ'' ரகத்தின் பழங்கள் மற்ற இனத்தைப் போல் மிகப் பெரிய அளவில் இல்லாமல் 200 முதல் 250 கிராம் எடையுள்ளதாக, சிறிய அளவில் இருப்பதால் ஒருவர் அல்லது இருவர் ஒரு பழத்தை மீதம் வைக்காமல் எளிதில் உட்கொள்ளலாம்.

''சோலோ'' பப்பாளி ரகங்களின் பழங்கள் மிகவும் இனிப்பாக இருக்கும். இதில் உள்ள சர்க்கரை போன்ற கரையும் திடப் பொருள்கள் 'சன்ரைஸ் சோலோ'வில் 14.6 சதமும், 'லைன் 8 சோலோ'வில் 16.4 சதமும் உள்ளன. மற்ற ரகங்களில் இது 11.4 சதம் தான் உள்ளது.



ஒவ்வொரு பழமும் 320 முதல் 500 விதைகளைக் கொண்டது.

'சன்ரைஸ் சோலோ' இரகம் கவர்ச்சியான சிவப்புச் சதையைக் கொண்டதாகவும், 'லைன் 8 சோலோ' இரகம் ஆரஞ்சு மஞ்சள் நிற சதையைக் கொண்டதாகவும் உள்ளன.

நமது பப்பாளி இரகங்களைப் போலன்றி, இவ்விரு இரகங்களின் எல்லாச் செடிகளும் பழத்தைத் தர வல்லதாக இருப்பதால், இவ்விரு இரகங்களும் வீட்டுத் தோட்டத்திற்கு ஏற்ற இரகங்களாகும்.

இந்த இரகங்கள் நட்ட 314 நாளில் பலன் கொடுக்க வல்லது. (கோ. 2 இரகம், 290 நாட்களில் பலன் கொடுக்கும்). இவை முதல் ஐந்து மாதத்தில் 11.6 கிலோ எடையுள்ள 53 பழங்களைக் கொடுத்துள்ளன.

''சோலோ'' ரகத்திலுள்ள ஒரு குறை என்ன என்றால், இது 5 அடி உயரம் வளர்ந்த பிறகே பலன் கொடுக்கும். ஆனால் 'கோ. 1', 'கோ. 2' இரகங்கள் 2.6 அடி உயரம் வளர்ந்ததுமே பலன் கொடுக்க வல்லது! சில இடங்களில் குட்டை இரகத்தினால் பழங்கள் திருட்டுப் போவதைத் தடுக்க, இந்த நெட்டை இரகம் ஒரு பாதுகாப்பாக அமையலாம்!

'கோ. 1' இரகத்தின் பெரிய பழத்தையும், குட்டையான தன்மையையும், 'சோலோ' இரகத்தின் ஆண், பெண் இரு பூக்களும் ஒரே மரத்திலுள்ள தன்மையையும் ஒருங்கிணைத்துப் புதுஇரகம் ஒன்று உருவாக்கும் இனக் கலப்பு முயற்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தோட்ட இயல் துறை ஈடுபட்டுள்ளது.

தகவல்:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை—641003.

69685



வாழ்வில் செழிப்பினைக் குவித்த தமிழ் வணிகர் உலவி வந்த கடலோரத்தில் தன்னந்தனியனாக நான் ஒருவனே நடந்தேன். கால்கள் சோர்ந்த பிறகு கடலை நோக்கியவாறு அமர்ந்தேன்.

டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, யாழ்ப்பாணம் கனகசபைப் பிள்ளை, எம். சீனிவாச ஐயங்கார், மேலப் பெரும்பள்ளம் நா. தியாகராசன் ஆகியோர் எழுதிய நூல்களில் படித்தவை எல்லாம் என் நினைவில் நிழலாடின.

* * *

''தம்பீ வா''.

''உன்னைத்தான் தம்பி''

''தம்பீ வா''.

—எங்கோ கேட்ட குரல் போல இருந்தது.

அன்போடு அழைப்பது போலவும் தோன்றியது. அதே நேரத்தில் கட்டளையிடுவது போலவும் அமைந்திருந்தது.

என்னையறியாமல் எழுந்து நின்றேன்.

எதிரிலே கடலில் பெருங்கலம் ஒன்று. அதன் உச்சியிலே புலி பறந்தது! ஆமாம்; எத்திக்கும் புகழ் மணக்க வைத்த புலிக்கொடி பறந்தது! அப்பெருங் கலத்திலிருந்து வந்தவர்கள் சிறு படகுகளில் இருந்து இறங்கி வந்தார்கள். இருபது பேருக்கு மேலிருக்கும் அவர்கள் எண்ணிக்கை.

கண்ணைக் கசக்கிக் கொண்டு கவனித்தேன்.

அத்தனை பேரும்—

மன்னர்கள்!

எல்லாரும் இந் நாட்டு மன்னர்களாக உள்ள இப்போதைய 'வாக்காளர் மன்னர்'கள் அல்லர்.

காடு கொன்று நாடாக்கி, குளந்தொட்டு வளம்பெருக்கிய முடியுடைப் பண்டை மன்னர்கள் அவர்கள்.

மீண்டும் அவர்கள் அழைக்காமலேயே அவர்கள் அருகில் சென்றேன்.

''ஐயா, நீங்கள் எல்லாரும் . . . . . .''—நான் முடிப்பதற்குள் கம்பீரமாகச் சொன்னார்கள்:

''சோழ மன்னர்கள்.''

''இப் பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்களான 'நீராடும் ஒரே துறையில் புலியும் மானும் நீரருந்தச் செய்த கொற்றவன்' இந்திர விமானம் ஊர்ந்த சோழன், முசுகுந்த சோழன், கூற்றுக்கு வழக்குரைத்த செம்பியன், முதுமட்காட்டி வகுத்த தராபதி, தூங்கு எயில் எறிந்த தொடித் தோட் செம்பியன், மேல் கடல் நீர் கீழ்கடற்கு விட்டோன், சிவச் சோழன் காந்தமன், பொன்னிக்கரை கண்ட கரிகாலன், கிள்ளி வளவன், மாவண் கிள்ளி, நலங்கிள்ளி ஆகியோரில் நீங்கள் யார் என்று கேட்டேன்.

வயதான தோற்றத்தோடு இருந்த மன்னர் சொன்னார். ''தம்பி! அந்த மன்னர்கள் எமக்கு முன்னர் இந்தச் சோழ மண்டலத்தை ஆண்டவர்கள். இப்போது உங்கள் வரலாற்றில் பிற்காலச் சோழர்கள் என்று சொல்லுகிறீர்களே அந்தப் பிற்காலச் சோழர்கள் ஆட்சிக்கு வித்திட்ட விசயாலய சோழன் தான் நான். என்னுடன் வந்திருப்பவர்கள் எனக்குப் பின்னால் சோழ மண்டலத்தை மட்டுமல்ல தமிழ் நிலத்தின் பெரும் பகுதியை ஆண்ட சோழ மன்னர்கள்.''

''ஐயா, நான் உங்கள் ஒவ்வொருவரையும் அறிந்துகொள்ளலாமா?'' என்றேன்.

ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

ஆதித்த சோழன், மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி, பராந்தக சோழன் என்று வழங்கப்பட்ட சுந்தர சோழன், உத்தம சோழன், பிற்காலச் சோழர்களின் எழுச்சி வரலாற்றில் பொற்காலத்தைப் படைத்த இராஜராஜ சோழன், அவன் மைந்தன் கங்கை கொண்ட இராசேந்திரன், இராஜாதிராசன், இரண்டாம் இராஜேந்திரன், வீர இராஜேந்திரன், ஆதி இராஜேந்திரன், கலிங்கம் வென்ற குலோத்துங்கன், விக்கிரமன், இரண்டாவது குலோத்துங்



கன், இரண்டாவது இராசராசன், இரண்டாவது இராசாதிராசன், மூன்றாவது குலோத்துங்கன், மூன்றாவது இராசராசன், மூன்றாவது இராஜேந்திரன் ஆகியோரும் இன்னும் சிலரும்...

வயதான ஒருவரைச் சுந்தர சோழரே அறிமுகப்படுத்தினார். ''இவர்தான் எனக்கு அமைச்சராகவிருந்த அன்பில் அநிருத்திரப்பிரமாதிராயர்''—என்று

—அன்பில் அநிருத்திரப் பிரமாதிராயருக்குக் கருணாகரமங்கலத்தை (திருவழுந்தூர் நாடு) இறையிலியாகச் சுந்தர சோழன் கொடுத்த செய்தியை சோழர் காலத்துச் செப்பேடுகளில் மிகவும் பழமையான தான அன்பில் செப்பேடு மூலம் அறிந்தது எனக்கு நினைவுக்கு வந்தது. எனினும் எனக்கு ஏற்பட்ட பெரும் ஐயத்தையே முதலில் கேட்டேன்.

''ஐயா, நீங்கள் அனைவரும் காலத்தால் வேறுபட்டவர்கள். அப்படியிருந்தும் ஒரு சேர இங்கு வந்திருப்பது எனக்கு வியப்பாக உள்ளது!''

எல்லாரும் சிரித்தார்கள். முதிர்ந்தவர் ஒருவர் சொன்னார்: ''தாய்ப்பாலுடன் தமிழ்ப்பாலுண்டவர்களுக்கு அழிவில்லை தம்பி!''

''தமிழை உண்ட—வளர்த்த—மாமன்னர்களே! இதுநாள் வரை இல்லாமல் இன்று இங்கு வரக் காரணம்?''

''பூம்புகாரைக் காண''—எல்லாரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

அவர்களுக்குப் போட்டியாக இப்பொழுது நான் உரக்கச் சிரித்தேன்.

''நகைக்குமளவுக்கு நாங்கள் என்ன சொன்னோம் தம்பி''—



இது ஒரு சோழ மன்னரின் கேள்வி.

''ஐயா, கடைச்சங்க நாளில் பாரெல்லாம் புகழ் மணக்க இருந்த பூம்புகார் பற்றியோ—அதற்குப் புத்துயிர் அளிப்பது பற்றியோ நினைத்தீர்களா நீங்கள் ....? தஞ்சை மாநகரும், திருவாரூரும், பழையாறையும், கங்கை கொண்ட சோழபுரமும் பெற்ற பெருமையைக் கொஞ்சமேனும் பூம்புகார் பெற நினைத்தது உண்டா?''

''உண்மைதான் தம்பி''.

''பட்டினப் பாலை, அகநானூறு, புறநானூறு, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலியவற்றில் இந்தப் பூம்புகார் நகரத்தைப் பற்றிய செய்திகளை அறிகின்றோம். வட நாட்டிலுள்ள பார்ஹூத் கல்வெட்டு, சாயாவனம் கல்வெட்டு முதலியவற்றிலும் பூம்புகார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. ஆனால் உங்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகளில் பூம்புகார் பற்றிய செய்தி ஏதேனும் உண்டா?''

''தம்பி எங்கள் காலத்தில் அந்த உணர்வு இல்லையே . . . நாங்கள் ஆண்ட சூழ்நிலையே வேறு . . . தமிழகத்துக்கு வடக்கே இருந்த மாசுணதேசம், தண்டபுத்தி நாடு, தக்கணலாடம் வங்காளதேசம், உத்திரலாடம் வென்றோம். கடாரம், ஸ்ரீவிஜயநாடு, பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளையபந்தூர், தக்கோலம், தமாலிங்கம் இலாமுரிதேசம், நக்கவாரம் முதலிய நாடுகளைக் கடல் கலந்து வென்றோம். புகழ் குவித்தோம். ஆனாலும் ஏனோ இப் பழம் பெரும்பதியான பூம்புகாருக்குப் புத்துயிர் ஊட்ட மறந்தோம்''—என்றான் கங்கை கொண்ட சோழனான இராசேந்திரன்.

இதன் பின்னர் இராசராச சோழனும் மற்றும் இருவரும் சேர்ந்து சொன்னார்கள்.. ''தம்பி, எங்க காலத்தில் நாங்கள் செய்ய மறந்த பல செயல்களால்தான் தமிழகம் தாழ்வுற்றது. ஆனால் இன்று தலை தூக்கியுள்ளது. கடந்ததை நினைந்து வருந்தியே இன்று புது வாழ்வு பெற்று வரும் புகாரைக் காண நாங்கள் வந்திருக்கின்றோம். எங்களுக்கு இவ்வூரைச் சுற்றிக் காட்ட வேண்டும். உடன் வா.''

கட்டளையிடுவது போன்றே இருந்தது. தமிழ் மன்னர்கள் அல்லவா? நானும் அவர்கள் பணித்தபடியே நடந்தேன்.

'ஐயா, திருவாலங்காட்டுச் செப்பேட்டின் மூலமும் மெய்க்கீர்த்திகள் மூலமும் கோயில் கல்வெட்டுகள் மூலமும் உங்கள் பெருமைகளை அறிகின்றோம். ஆனால் . . .''

''ஆனால்...என்ன தம்பி!''

''புதிதாக ஓர் எண்ணம்.''

''தயக்கமின்றிச் சொல் தம்பீ.''

''நீங்கள் பூம்புகாருக்குப் புத்துயிர் ஊட்டியிருந்தாலும் அதுவும் அப்படியே உங்களால் உருவாக்கப்பட்டபடியே இன்றும் இருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? பழையாறையும், கங்கை கொண்ட சோழபுரமும் இன்று சிற்றூர்களாகக் காட்சி அளிக்கின்றன'

''தம்பி! இன்று பழையாறை நகர் எப்படியுள்ளது?''

''முடிகொண்ட சோழபுரம், இராசராசபுரி, நந்திபுரம் என்று அழைக்கப்பட்ட பழையாறை நகரம் இப்பொழுது கும்பகோணத்துக்கு மேற்கே மூன்று மைல் தொலைவில் சிற்றூராக உள்ளது. ''தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து பாரில் நீடிய பெருமை சேர்பதி பழையாறை'' என்று பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் பாடியதை அறிகிறோம் ....ஆனால் அவ்வூர் இன்று சிற்றூர்.''

''உண்மையாகவா?''

''ஆமாம் ஐயா, பழைய பழையாறை நகர் இன்று பழையாறை, முழையூர், பட்டீச்சரம், திருச்சத்தி முற்றம், இரு மத்தடி, சோழ மாளிகை, ஆரியப்படையூர், பம்பைப் படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சுந்தரப் பெருமாள் கோவில், தாராசுரம், நாதன்கோவில், இராசராசேந்திரப்பேட்டை, அரிச்சந்திரபுரம் கோணப் பெருமான் கோவில், என்று பல சிற்றூர்களாகச் சிதறிக் கிடக்கின்றது.''

''எமக்குப் பின்னர் வந்தவர் எவரும் பழையாறையைக் காப்பாற்றவில்லை, போலும்!''

''நீங்கள் பூம்புகாரைக் கவனியாததுபோலப் பின்னர்வந்தவர்கள் பழையாறையைக் கவனிக்கவில்லை.''

''பூம்புகார் நகரமும் இன்று அப்படிச் சிதறிவிட்டதா?''

''அப்படித்தான் மாறிவிட்டது. காவிரிப்பூம் பட்டினம், வானகிரி, செம்பரம் பாளையம், கீழப்பெரும் பள்ளம், ஏராம் பாளையம், மேலப் பெரும் பள்ளம், தலைச்சங்காடு, கருவேந்தநாதபுரம், இராதாநல்லூர், மேலையூர் சாய்க்காடு, வெள்ளையனிருப்பு, கீழையூர், மணிக்கிராமம், வீரமேட்டிருப்பு, நெய்தவாசல், கடைக்காடு, அன்னப்பன்பேட்டை, பெருந்தோட்டம், வெள்ளக் குளம், திருவெண்காடு என்று பல பகுதிகளாக வழங்குகிறது.

''தம்பி! பூம்புகாரில் நாங்கள் இப்பொழுது பார்க்க வேண்டிய இடங்கள்''.

''எத்தனையோ உண்டு!''

''அழிந்துபட்டன என்று சொன்னார்களே . . !''

''ஆமாம், அழிந்துபட்டது என்று அறிந்தும் அந்த இடங்களைப் பார்க்க வந்திருக்கிறீர்களே; ஏன்?''

''வரலாற்றுச் சின்னங்களைப் பார்க்கலாம் என்ற பேரவா தான் காரணம்''.

அந்தவரலாற்று எச்சங்களைப் பார்க்கலாமே . . . !''

''தம்பி! அதற்கு முன்னர் இளங்கோவடிகளின் காப்பியத்தைச் சிற்பச் சிலம்பாக ஆக்கியுள்ளீர்களே .... அங்கே போகலாமா?''

''வாருங்கள் ஐயா, அதோ தெரிகிறதே எழு நிலை மாடம், அங்கே அமைந்துள்ளது சிலப்பதிகாரக் கலைக்கூடம், ஆனால், இது இரவு நேரம்; வெளியிலிருந்துதான் பார்க்க முடியும்... அதோ தோரண வாயில் அமைக்கப் பட்டுள்ளது''.

''வாயிலிலே தமிழ் நிலத்



துக்கே உரிய கைவண்ணத்தால் கலை வண்ணம் மிகுந்து எழிற் களஞ்சியமாகத் திகழ்கிறதே!''

பகல் வேளை என்றால்உள்ளே சுற்றிப் பார்க்கலாம்.

''அதற்கு முன்னர் பூம்புகார் நகரம் முழுதும் சுற்றிப்பார்க்க வேண்டும். எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டும்.''

''இந்த நேரத்தில் எப்படி முடியும்?''

''ஏன் முடியாது?'' என்றார் ஒரு சோழ மன்னர்.

இன்னொரு சோழ மன்னா கையை வேகமாகத் தட்டினார்.

இராசேந்திர சோழன் வாளை உருவிக் கடலை நோக்கி அசைத்தார்.

அப்பொழுது—

ஓர் அதிசயமே நிகழ்ந்தது!

அந்தப் பெருங்கலத்திலிருந்து அரேபிய நாட்டுக் குதிரைகளை இறக்கி அழைத்து வந்தார்கள் சோழநாட்டு வீரர்கள்.

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவிகள்' என்று பட்டினப் பாலையில் சொல்லப்பட்டதை நேரிலேயே பார்த்தேன்.

குதிரைகள் எங்கள் அருகில் வந்தவுடன் சோழ மன்னர் ஒருவர், ''தம்பி! நீயும் ஒரு குதிரை மீது ஏறிக்கொள்'' என்றார்.

அந்தக் குதிரைகளைப் பார்த்தவுடனே எனக்கு அச்சம் ஏற்பட்டது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் அண்மையில் என் காலில் முறிவு ஏற்பட்டு, குணமானதைச் சொல்லித் தயங்கினேன்.

வயதான மன்னர் விஜயாலய சோழரே குதிரையில் அமர்ந்தவாறு ஒரு கையால் என்னைத் தூக்கி ஒரு குதிரை மீது உட்கார வைத்தார்; இல்லை இல்லை 'போட்டார்'. சமாளித்துக் கொண்டேன்.

எல்லாச் சோழ மன்னர்களும், மற்றவர்களும் ஆளுக்கொரு குதிரை மீது அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் பணித்தபடியே பூம்புகாரைச் சுற்றிக் காண்பிக்க அழைத்துச் சென்றேன்.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் நான்கு காவதம் (ஏறத்தாழ முப்பது சதுர மைல்) பரப்புடையதாக அமைந்திருந்தது. இப்பொழுது கருவேந்தநாதபுரம், கடாரங்கொண்டான், என்று வழங்கும் ஊர்கள் மேற்புரத்து எல்லையாகவும், திருக்கடவூர் தெற்கு எல்லையாகவும், கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை) வடக்கெல்லையாகவும், கடல் கிழக்கெல்லையாகவும் அந்தக் காலத்துப் புகார் நகருக்கு எல்லையாக அமைந்த செய்திகளை விவரித்தவாறு புகார் நகரத்து வரலாற்று எச்சங்களைக் காட்டச் சென்றேன்.

பல்லவனீச்சரம் கோயிலுக்கு வட புறத்தில் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் அகழ்ந்து கண்டுபிடித்துள்ள புத்த விகாரம் இருந்த இடம், வெள்ளையனிருப்பு இலங்கொளிச் சிலாதலம், பேசும்பெருமாள் சாத்தனார் கோயில், ஐயனார் கோயில்—நெடுங்கல் நின்ற மன்றம், இலஞ்சியங்குளம் — இலஞ்சி மன்றம், சம்பாபதி கோயில் முதலிய இடங்களைக் காட்டி, மேலப் பெரும்பள்ளம் மாதவி மன்றத்தினர் வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களை அறிவித்து வந்தேன்.

இப்பொழுது சாயாவனம் என்று வழங்கும் சாய்க்காடு நோக்கிச் சென்றோம். இது வரை நான் சொல்லியவைகளைக் கேட்டு வந்த சோழ மன்னர்களில் ஒருவர் மூன்றாவது குலோத்துங்கன்தான் சிரிப்புடன் என்னை நோக்கி ''தம்பி, நாங்கள் வந்தவுடன் உங்கள் காலக் கல்வெட்டுகளில் புகார் நகரத்தைப் பற்றிய செய்தி ஏதாவது உள்ளதா என்று கேட்டாயே, இந்தச் சாய்க்காட்டில் உள்ள கல்வெட்டுகளில்......''

அவர் பேச்சை முடிப்பதற்குள் நான் கூறினேன். ''தென்னிந்திய கல்வெட்டாராய்ச்சித் துறையினரால் 1911-ஆம் ஆண்டில் சாய்க்காட்டுத் திருக்கோயிலில் பதினேழு கல் வெட்டுக்களும், பல்லவனீச்சரத் திருக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களும் படியெடுக்கப் பெற்றுள்ளன. அதன் மூலம் வழிபாட்டுப்புறமாக ஆலயத்துக்கு நிலமளித்ததையும், 'ராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம் பட்டினம்' என்று குறிப்பிடுவது போன்ற செய்திகளைத் தானே அறிகிறோம். இக் கல்வெட்டுக்களைப் போன்று நற்றிணை, அகநானூறு, தேவாரப் பாடல்களிலிருந்தும் செய்திகளை அறிகின்றோம். நான் சொல்லியதன் நோக்கம்—உங்கள் காலத்தில் இந்தப் பூம்புகார் நகரத்துக்குப் புதுவாழ்வு தரவில்லையே - புதுப்பிக்கவில்லையே-பழையகால நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கவில்லையே என்பதால்தான்.

இன்னொரு சோழமன்னர் சொன்னார்: ''ஏன் தம்பி நீதானே சொன்னாய் பழையாறையும் கங்கைகொண்ட சோழபுரமும் சிற்றூர்களாகத் திகழ்கின்றன என்று. அது போன்று எங்களால் புத்துருவம் பெற்றிருந்தாலும் புகார் நகருக்கும் அந்நிலை ஏற்பட்டிருக்குமல்லவா? கடந்த காலத்தில் நடந்திராதவைகளைப் பற்றி நாம் இப்பொழுது நினைத்து என்ன பயன்?''

நான் பதிலுரைக்கும் முன்னர் இன்னொரு சோழமன்னர் பேச்சை மாற்ற நினைத்துச் சொன்னார்.

''தம்பி! நாம் என்ன பேசி என்ன? பூம்புகார் புகழுடன் விளங்கிய காலத்தில் இங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தை இந்த ஊர் மீண்டும் பார்க்கப் போகிறதா என்ன? —அந்தச் சிறப்பு வருமா?''

''ஐயா கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் சித்திரா பௌர்ணமியன்று நீங்கள் எல்லாரும் இங்கு வந்திருந்தால் தெரிந்திருக்கும்; அன்று சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழாவின்போது கூடிய தமிழ் மக்களின் எழுச்சியையும் தமிழ் உணர்ச்சியையும் கண்டிருக்க வேண்டுமே! இன்று நாள் தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணமுள்ளனர். பழைய நிலையை ஒரேநாளிலா கொண்டு வர முடியும்? ஆனால், மாண்ட புகழை மீண்டும் புகார் பெற்றிட இன்றையத் தமிழக அரசு எடுத்துள்ள முயற்சிகள் ஒன்றல்ல, இரண்டல்ல!''

''தம்பி! நாங்கள் சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கே வந்திருக்க





# தூய பயன் தரும் தொழிலாளர் கல்வி

ஒரு நாடு சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் காண அந்நாட்டில் தொழிற் கூடங்கள் பெருமளவில் அமைந்திருக்க வேண்டும். தொழிற்கூடங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய உழைக்கும் திறனை நல்ல முறையில் பயன்படுத்திடுதலும் நாட்டின் இலட்சியத்தை அடைவதற்கான ஆக்கப் பணிகளில் செலுத்திடுதலும் இன்றியமையாததாகும். உழைக்குந் திறனைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டில் தொழிற்கூடங்களை உருவாக்கிட முடியும்.

ஒரு நாட்டில், தொழில் துறை வளர்ச்சி பெருகும்போது தொழில்திறன் கொண்டோரும் பெரிதும் தேவைப்படுகின்றனர். போதிய அளவில் அத்திறன் கொண்டோர் அங்கு இல்லையெனில் அந்நாட்டினுடைய பொருளாதாரம் நிச்சயமாகச் சீர்குலையும். நாட்டின் முன்னேற்றமும் அதனால் பெரிதும் பாதிக்கப்படக்கூடும்.

எனவேதான், உழைக்கும் தொழிலாளர்கள் ஒரு நாட்டினுடைய நாடித்துடிப்புகளாகக் கருதப்படுகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்குகின்ற தொழிலாளர்களை நல்லமுறையில் பேணுதல் இன்றியமையாத கடமை. தொழிலாளர்கள் தங்களது வாழ்க்கையினை கௌரவமாக நடத்திடப் போதிய வருவாய் கிடைக்கச் செய்ய வேண்டும். நியாயமான அளவிற்கு வேலைப் பளுவும், நிருவாகத் திட்டங்களும் அமைதல் வேண்டும். தொழிலாளர்களின் வாழ்வை வளமாக்கவும் தொழிலகத்தின் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவக்கூடிய கல்விப் பயிற்சியை அளித்திடுதல் வேண்டும். இவைகளை நன்கு உணர்ந்த தமிழ் நாடு அரசு, 'தொழிலாளர் நலத்துறை'யினை ஏற்படுத்தி நன்மை தரும் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தொழிலாளர் நலனில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளைப் போல நமது நாட்டிலும் தொழிலாளர்களுக்குச் சிறப்பான தொரு பயிற்சியை அளித்திட தொழிலாளர் கல்வி மத்தியக் கழகம் (Central Board for Workers Education) எனப்படுகின்ற ஒரு தனி அமைப்பு 16-9-1958-ல் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில், மைய மாநில அரசுகள், தொழிலக நிருவாகம், தொழிற்சங்கங்கள், பல்கலைக் கழகம் முதியோர் கல்விக் கழகம் போன்றவைகள் பங்கு கொண்டுள்ளன.

தொழிற்சங்க இயக்கம், தொழிலாளர் நலன், தொழிலாளர்-நிருவாக நல்லுறவு, உற்பத்திப் பெருக்கம், தொழியியல் பாதுகாப்பு போன்றவைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பெற்றுள்ள இந்தக் கல்வி அமைப்பு நான்கு பெரும் கொள்கைத் திட்டங்களைக் கொண்டுள்ளது. அவையாவன:

1. நன்குபயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களையும், நல்ல தெளிவு பெற்ற உறுப்பினர்களையும் உருவாக்கி, அவர்கள் மூலம் வலிமையும், பயனும் மிக்க தொழிற் சங்கங்களை வளர்க்க உதவுதல்.

2. தொழிலாளர்களுக்கிடையே தலைவர்களை உருவாக்கி, தொழிற்சங்க அமைப்பிலும், நிருவாகத்திலும் ஜனநாயக செயல்முறையையும், மரபையும் வளர்க்க உதவுதல்.

3. ஒன்றுபட்ட தொழிலாளர் சமுதாயம் ஜனநாயக சமூகத்தில் தனக்குரிய இடத்தைப் பெற உதவுவதும், அது தனது சமூக, பொருளாதாரப் பணிகளையும் பொறுப்புக்களையும் செவ்வனே ஆற்றிட உதவுதல்.

4. தொழிலாளர்களிடையே தங்கள் பொருளாதாரப் பின்னணியை நன்கு புரிந்து கொள்ளும் ஆற்றலையும், சங்க உறுப்பினர்கள், அலுவலர்கள், நாட்டுக் குடிமக்கள் என்ற முறையில் தங்கள் உரிமைகளையும் பொறுப்புக்களையும் புரிந்து கொள்ளும் திறனையும் வளர்த்தல்.

* * *

தொழிலாளர் கல்வி மத்தியக் கழகத்தின் தலைமை நிலையம் நாகபுரியில் உள்ளது. இந்நிலைய ஆளுகையின் கீழ் இந்தியா முழுவதிலும் 34 'மண்டலத் தொழிலாளர் கல்வி அலுவலகங்கள்' (Regional Directorate of Workers Education) இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் இந்தக் கல்வி நிலையங்கள் நிறுவப் பெற்றுச் சிறந்த முறையில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்து வருகின்றன.

தொழிலாளர்கள் கல்வித் திட்டம் மூன்று நிலைகளில் செயல்பட்டு வருகின்றது.

முதல்நிலையில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் மொழிவழி மாநிலவாரியாகத் தொழிலாளர் கல்வி அலுவலருக்காக தொழிலாளர் கல்வி மத்தியக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்கள். அவர்கள் பம்பாயிலுள்ள இந்தியத் தொழிலாளர் கல்வி நிலையத்தில் (Indian Institute of Workers' Education) 4 மாத பயிற்சி பெறுகிறார்கள். 1970-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிலையத்தில் கல்வி அதிகாரிகளுக்குத் தேவைப்படும்போது மறுபயிற்சியும் அளிக்கப் பெறுகிறது. பயிற்சி முடிவுற்ற பின்னர் மொழிவழி மாநில அடிப்படையில் அந்தந்த மாநிலங்களிலுள்ள மண்டலத் தொழிலாளர் கல்வி நிலையங்களில் கல்வி அதிகாரிகளாக நியமனம் செய்யப் பெறுகிறார்கள். தொழிலாளர் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல், தொழிலகங்களில் நடைபெறும் தொடக்கநிலை வகுப்புகளை ஆய்வு செய்தல் போன்றவைகள் இவர்களது முக்கியப் பணிகளாகும்.

இரண்டாம் நிலையில் தொழிலகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்கள், தொழிலாளர்கள் ஆசிரியர் பயிற்சி பெற மண்டல நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். 25 பேர் முதல் 40 பேர் ஓர் அணியாகக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு மூன்று மாத காலம் முழுநேரப் பயிற்சியளிக்கப் பெறுகிறது. இவர்களுக்குத் தேவையின் அடிப்படையில் கல்வி அதிகாரிகள் பயிற்சியளிக்கிறார்கள். மேலும் தொழிலாளர் கல்வி, தொழிற்சங்க அமைப்பு, தொழிலாளர் உறவு, தொழிலாளர் நலச்சட்டம் போன்றவைகளும் கற்றுத் தரப் படுகின்றன. செய்முறைப் பயிற்சியும், படக்காட்சிகளின் மூலம் கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. தொழிலாளர் ஆசிரியர்களாகப் பயிற்சி பெறுபவர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் மூன்று மாத காலத்திற்கும் உள்ள ஊதியம், வேலை நேரம், மருத்துவச் சலுகைகள் போன்ற எல்லாவிதச் சலுகைகளையும் தந்துவிடுகின்றன. பயிற்சியின் இறுதியில் 15 நாட்கள் தொழில்மய நகரங்களுக்குக் கல்விச் சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பயிற்சி முடிவில் தேர்வும் நடைபெறுகிறது. தேறியவர்கள் தொழிலாளர் ஆசிரியர்களாக அந்தந்த நிறுவனங்களில் மண்டல அலுவலகத்தினரால் நியமனம் செய்யப் பெறுகிறார்கள்.

மூன்றும் நிலையாக நியமனம் செய்யப்பெற்ற தொழிலாளர் ஆசிரியர் தாங்கள் சார்ந்துள்ள தொழிலகத்திலுள்ள தொழிலாளர்களுக்குப் பகுதி நேர பயிற்சியளிக்கிறார்கள். வகுப்புகள் நடத்த அந்தந்த நிறுவனங்களே ஏற்பாடு செய்யும். வகுப்பு நடத்துவதற்குத் தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் நிருவாகமே ஏற்கும். தொடர்ந்து மூன்று மாதம் நடைபெறும் தொடக்க நிலை வகுப்பின் ஒவ்வொரு அணியிலும் இருபதுக்குக் குறையாத தொழிலாளிகள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். தொடக்க நிலை வகுப்புகளைக் கல்வி அலுவலகர்கள் அவ்வப்போது ஆய்வு செய்வர். வகுப்பு நடத்தும் தொழிலாளர் ஆசிரியர்களுக்கு மண்டலக் கல்வி இயக்கம் ரூபாய் 30 மாத ஊதியமாகத் தருகிறது. மற்ற சலுகைகள் நிறுவனத்தாரால் தரப்படுகின்றன. வகுப்பு நடக்கும் நாட்களில் பயிற்சி பெறும் தொழிலாளர்களுக்கு தேனீர், 50 காசுகள் வரை பிஸ்கட் போன்றவைகள் தரப் படுகின்றன. இந்தியாவிலுள்ள ஆசிரியர்களின் தொழிலாளர் எண்ணிக்கை சுமார் 27,802 ஆகும். பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் சுமார் 13,65,570 பேர்கள். தமிழகத்தில் சுமார் 2,752 தொழிலாளர் ஆசிரியர்களும், 1,28,725 பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் உள்ளனர்.




தமிழ்நாடு அரசு தனது நிருவாகத்தில் உள்ள அரசினர் அச்சகங்கள், மின்வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் போன்ற பொதுத்துறைகளில் வகுப்பு நடத்துகின்ற ஆசிரியர்களுக்குச் சலுகைகளும், வகுப்பு நடத்தத் தேவையான இடம், மேசை, நாற்காலி, பெஞ்சுகள், கரும்பலகை போன்ற சாதனங்களையும் வழங்கி வருகிறது. வகுப்பு நாட்களில் சுற்றுலாச் செல்ல ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 15-ம், தொழிலாளர் ஆசிரியருக்கு ரூ. 40-ம் அளிப்பதோடு மட்டுமின்றி அந்த நாட்களை சிறப்பு விடுப்பாகவும் நடைமுறைப்படுத்தியுள்ளது. வேலை நேரத்தில் பயில வசதியும், வேலை நேரத்திற்குப் பின் பயின்றால் பாதி ஊதியமும் தர வழிவகை செய்துள்ளது. பயிற்சிக்காலம் முடிவுற்றதும் அதனை தொழிலாளர் பணிப்பதிவேட்டில் குறிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் ஆசிரியர் பயிற்சி முதல் அணி முடிவுற்று இரண்டாம் அணி துவங்குவதற்கு இடையிலுள்ள காலத்தில் 6 நாட்கள் தொழிலாளர் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும் குறுகிய காலப் பயிற்சிகளாக, ஒருநாள் வகுப்பு (One day School) மூன்றுநாள் கருத்தரங்கு, (Three days Seminar) வாசகர் வட்டம் (Study Circle) போன்றவைகளையும் நடத்தி வருகிறது.

ஒருநாள் வகுப்பில் 40 தொழிலாளர்களுக்கு விடுமுறை நாட்களில் 5 மணிநேரம் கல்வி அதிகாரிகள் தேவையின் அடிப்படையில் வகுப்பு நடத்துவார்கள். வகுப்புக்கு வரும் தொழிலாளர்களுக்கு ஒரு ரூபாய் பிரயாணச் செலவாகத் தரப்படுகிறது. இதுவரை இந்தியாவில் சுமார் 2,33,841 ஒருநாள் வகுப்புகள் நடைபெற்றுள்ளன. தமிழகத்தில் மட்டும் 31,367 ஒருநாள் வகுப்புகள் நடந்தேறியுள்ளன.



மூன்றுநாள் கருத்தரங்கில் 40 தொழிலாளர்களுக்குப் பல்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள் மூன்றுநாட்கள் தொடர்ந்து ஒரே பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் தகுதிக்கேற்றவாறு பயணச் செலவு, தினப்படியும் வழங்கப்படும். தொழிலாளர்க்கு நாள் ஒன்றுக்கு ஒருரூபாய் விதம் பயணச் செலவும் வழங்கப்பெறும். இதுவரை இந்தியாவில் சுமார் 17,816 மூன்றுநாள் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. தமிழகத்தில் சுமார் 612 மூன்றுநாள் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.



வாசகர் வட்டத்தில் (Study Circle) ஒரே பொருள் பற்றி 4 நாட்கள் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெறும். இதில் 15 பேர் கலந்து கொள்வர். ஒருநாளில் 1½ மணி நேரம் வரை நடைபெறும். இந்தியாவில் இதுவரை நடைபெற்ற வாசகர் வட்டங்கள் சுமார் 22,262. அவற்றுள் தமிழகத்தில் சுமார் 1,518 நடைபெற்றுள்ளன.

இத்தகைய குறுகிய காலப் பயிற்சியைப் பதிவு செய்த தொழிற் சங்கங்களே ஏற்று நடத்த முன்வந்தால் அவற்றிற்கு மத்திய கழகத்திலிருந்து மானிய உதவி பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்காகத் தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்கள் பெரிதும் ஊக்குவிக்கப்படுகின்றன.



உற்பத்தித்திறன் குழு, பாதுகாப்புப் பயிற்சி, குடும்பநலச் செயலகம் போன்ற நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. அண்மையில் வடஆர்க்காடு மாவட்டத்தில் தொழிலாளர் ஆசிரியர்க்கென நடத்திய மக்கள் தொகையியல் கருத்தரங்கில் தொழிலாளர் கல்வி இயக்கம் பங்கேற்று சிறப்புச் செய்தது. இத்தகைய குடும்பநலக் கருத்தரங்கு இந்தியாவிலேயே முதன் முதலில் நடைபெற்றது இதுதான் என்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தொழிலாளர் ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களுக்குத் தொழில் கல்வி சம்பந்தமான பல்வேறு கருத்துக்களைத் திறமைவாய்ந்தவர்கள் மூலம் விளக்கும் வகையில் தொழிலாளர் கல்வி (Workers Education) என்னும் ஆங்கில இதழ் மூன்று மாதத்திற்கொருமுறை மத்தியத் தொழிலாளர் கல்விக் கழகத்தினரால் வெளியிடப்படுகிறது. மண்டல அலுவலகம் மலிவு விலையில் 15 [illegible] பல புத்தகங்களைத் தமிழ் மொழியில் வெளியிட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கி வருகிறது.



மேலும் தொழில் துறை [illegible] பெறவும் [illegible] செய்யும் நோக்கம் அடையச் செய்யும் [illegible] சுமார் 3,000 நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்றும், சென்னை மண்டல அலுவலகத்தில் செயல்படுகிறது. இந்நூலகத்தால் தொழிலாளர், கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், தொழில்துறையில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள், தொழிலக நிருவாகத்தினர், சமூக சேவைப் பயிற்சியாளர் போன்றோர் பயன்பெறுகின்றனர்.



தொழிற்பயிற்சி பெறுவோர்களையும், தொழில் கல்வி வளர்ச்சியடையச் செய்ய உதவுகின்ற நிருவாகத்தினரையும் ஊக்குவிக்கும் வகையில் 1972-ஆம் ஆண்டு முதல் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றினை இம்மண்டல இயக்கம் ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பரிசுகளின் மதிப்பு சுமார் ரூபாய் 3,000 ஆகும்.





தொழிலாளர்களுக்குக் கல்விப் பயிற்சி அளிப்பதில் அயராது உழைத்துவரும் மண்டலத் தொழிலாளர் கல்வி அலுவலகத்திற்குத் தமிழ்நாடு அரசு தேவையான வசதிகளையும் செய்து தருகிறது. [illegible] தொழிலாளர் [illegible] தொழிலாளர் கல்வியை வளர்க்க [illegible] தொழிலாளர் [illegible] தொழிலாளர் [illegible] இத்தகைய [illegible]

நாட்டின் அந்நியச் செலாவணியிலும் முக்கியமானதொரு பங்கேற்றுக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன! இந்தப் பாக்குத் தோப்பின் சொந்தக்காரர்களில் ஒருவரான மேட்டுப்பாளையம் திரு வரதராஜுலு அவர்களின் தோப்பிலுள்ள, 5 முதல் 7 வயதான பாக்கு மரங்கள் மஞ்சள் நிறமாக மாறி, கடைசியில் இலை பூராவும் காய்ந்து போவதைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பண்ணை அறிவுரைக் குழுவிற்குத் தெரியப்படுத்தப்பட்டது. இந்தச் செய்தியைக் கேட்டதும், தலைசிறந்த நோய் இயல் வல்லுநரான துணைவேந்தரே நேரில் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, நோயியல் வல்லுநர்களைக் கொண்டு ஆராய ஆவன செய்தார். இந்த நோயானது மண்ணினுல் பரவும் ஒரு பூஞ்சாளத்தால் ஏற்படுகிறது எனக் கண்டறியப்பட்டது. இதற்காகப் பல்வேறு பூஞ்சாளக் கொல்லிகளைப் பயன்படுத்திச் சோதனை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை ஆராய்ச்சித் திட்டத்துடன் சேர்த்து தீவிர ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது!

இது போன்று, பண்ணை அறிவுரைக் குழுவினரால் தீர்வு காணப்பட்ட பிரச்சினைகள் பலப் பல!

இத்தகைய வியத்தகு சாதனைகளைச் செய்து வரும்பண்ணை அறிவுரைக்குழு, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அடிப்படைத் தத்துவமான கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணி ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல் படுத்தும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமேயாகும்! பண்ணை அறிவுரைக் குழு என்றவுடனேயே, சிலருக்குக் கீழ்க்கண்ட எண்ணம் தோன்றலாம் :

''ஏற்கெனவே மாநில வேளாண்மைத் துறையினரும், வட்டாரத்திற்கு ஒரு துணை வேளாண் அலுவலரும், மற்றும் கிராம மட்டத்தில் களப் பணியாளர்களும் இந்த அறிவுரைப் பணியைச் செய்து கொண்டு வருகிருர்களே, பல்கலைக் கழகமும் இந்த அறிவுரைப்பணியை மேற்கொள்ளுவதால் திரும்பத் திரும்ப ஒரே பணியை இரு பிரிவினர் செய்வதாக இருக்காதா? என்று நினைக்கலாம்!''

உழவர்களுக்கு அன்றுடம் தோன்றும் பிரச்சினைகளை வேளாண்மை அலுவலர்கள் அவ்வப்போது தீர்த்து வைக்கிருர்கள்! அவ்வலுவலர்களால் தீர்க்க இயலாத சில சிக்கலான பிரச்சினைகளுக்கு மட்டும் இந்த அறிவுரைக் குழுவின் மூலம் தீர்வு காணத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் முயற்சி செய்து வருகிறது.

கோவையில் உள்ள பண்ணை அறிவுரைக் குழு 1972-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விரிவாக்க இயக்குநர் அவர்களைத் தலைவராகவும், கோவை உழவர் பயிற்சி நிலையத் துணை வேளாண்மை இயக்குநர் அவர்களைச் செயலாளராகவும், மற்றும் பல்கலைக் கழகத்திலுள்ள பயிரிலுள்ள, நோயியல், பூச்சியியல் போன்ற துறைத் தலைவர்களை உறுப்பினராகவும் கொண்டு செயல்படத்தொடங்கியது. இதே போன்று மதுரையில் உள்ள பண்ணை அறிவுரைக் குழு, மதுரை வேளாண்மைக் கல்லூரி முதல்வர் அவர்களைத் தலைவராகவும், உழவர் பயிற்சி நிலையத் துணை வேளாண்மை இயக்குநர் அவர்களைச் செயலாளராகவும், மற்ற வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு 1973-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் தொடங்கிச் செயல்பட்டு வருகிறது.



இந்த அறிவுரைக் குழு தோன்றி ஓராண்டுக் காலத்திற்குள், உழவர்களிடையே நல்லதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது! சிக்கலான பிரச்சினைகளை விரிவாக்கப்பணியாளர்கள் மூலமாக உழவர் பயிற்சி நிலையத்திற்குத் தெரியப்படுத்தினுல், பண்ணை அறிவுரைக் குழு, வல்லுநர்களுடன் பிரச்சினைக்குரிய இடத்திற்கு விரைந்து சென்று, அதற்குத் தீர்வு காண வகை செய்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் பிரச்சினைகளை நேரில் கண்டு உழவர்களுக்கு மேலான அறிவுரை கொடுப்பதுடன், தீர்க்க இயலாத பிரச்சினைகளைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் கூடங்களுக்குக் கொண்டு வந்து மேலும் ஆராய்ந்தும், உடனடியாகத் தீர்க்க இயலாத பிரச்சினைகளைத் தங்கள் ஆராய்ச்சித் திட்டங்களில் சேர்த்தும், தீர்வு காண வகை செய்கிறது.

பண்ணை அறிவுரைக் குழு உழவர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் இணைக்கும் ஒரு சிறந்த பாலமாக அமைந்துள்ளது எனக் கூறுவது மிகவும் பொருத்தமாகும்!

எனவே, வேளாண் பெருமக்கள் தங்களுடைய சிக்கலான பிரச்சினைகளை வட்டார துணை வேளாண்மை அலுவலர்கள் மூலமாக கோவை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்திற்கு அறிவித்தால், பண்ணை அறிவுரைக் குழுவினர் விரைந்து வந்து தீர்வு காண ஆவன செய்வார்கள்!

இந்த வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்தி உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுடன், நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நல்லதொரு பணியில் ஈடுபட முன் வர வேண்டும் எனத் தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

தகவல் :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை—641003.



# 290 நாட்களில் ஒரு எக்டேரில் 22 டன் நெல் விளைவித்தவர்!

ஓர் ஆண்டில் ஒரு எக்டேர் (2.47 ஏக்கர்) நிலத்தில் 25.65 டன் நெல் (ஏக்கருக்கு 10,365 கிலோ) விளைவிக்க முடியும் என்பதைப் பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையம் (International Ricc Research Institute) 1971-ஆம் ஆண்டில் 2 பரிசோதனைத் தளைகளின் மூலம் மெய்ப்பித்துக் காட்டியது!

அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளுக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழ் நாட்டு வேளாண்மை விஞ்ஞானிகள் கோயம்புத்தூரில் உள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆண்டில் ஒரு எக்டேரில் தொடர்ந்து ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டு 25 டன் (ஏக்கருக்கு 10,121 கிலோ) நெல் விளைவித்துக் காட்டினர்!

ஆராய்ச்சி நிலையங்களும், ஆராய்ச்சியாளர்களும் மட்டுமே அதிக விளைச்சல் எடுக்க முடியும் என்று பொதுவாக உழவர் பெரு மக்கள் கருதுகின்றனர்! ஆர்வமும், முயற்சியும், உழைப்பும் இருக்குமானுல் ஒரு சாதாரண உழவனும், ஆராய்ச்சி நிலையங்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஈடாக அதிக மகசூல் எடுக்க முடியும் என்பதைக் கோவை மாவட்ட உழவர் பெருமகன் ஒருவர் உலகத்திற்கு அறிவித்துள்ளார்! அவர், கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சாவடிப்பாளையம் புதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது தமிழகத்திற்குப் பெருமை தரக் கூடியதாக உள்ளது!

அவர் ஒரு எக்டேர் நிலத்தில் 290 நாட்களில், 3 முறை நெல் பயிரிட்டு 22 டன் (ஏக்கருக்கு 8,945 கிலோ) நெல் விளைவித்துள்ளார். இதை ஒரு உலக சாதனை என்று கூறலாம்! ஏனெனில், தனிப்பட்ட எந்த உழவர் பெருமகனும், இதுவரை ஒரு எக்டேர் நிலத்தில், 290 நாட்களில், 22 டன் நெல் விளைவித்ததற்கு உலக வரலாற்றில் சான்று இல்லை!

உலகச் சாதனை ஏற்படுத்திய அந்த உழவர் பெருமகன் திரு நாச்சி முத்துக் கவுண்டர் ஆவார்.

''இச்சாதனையை ஏற்படுத்துவதற்கு சென்னை உரத் தொழிற்சாலையின் (Madras Festilisers Limited), 1972—73-ஆம் ஆண்டிற்கான தொழில் நுட்ப விரிவினைத் திட்டமே (Tecnical Extension Programme) காரணம்!'' என்று திரு நாச்சி முத்து அவர்கள் குறிப்பிடுகின்ருர்.

திரு நாச்சிமுத்து அவர்கள் தனக்குச் சொந்தமான 13 ஏக்கர் நிலத்தில் வேளாண்மை செய்து வருகிருர். பாசனத்திற்காக அவரது வயலில் பம்பு செட் பொருத்தப்பட்ட ஒரு கிணறும் உள்ளது.

வழக்கமாக இரண்டு போகம் நெல் சாகுபடி செய்து வந்த அவர், தண்ணீர் வசதி தாராளமாகக் கிடைக்கும் ஆண்டுகளில் மூன்ருவது போகமாக எள் சாகுபடி செய்து வந்தார். அவருக்குச் சராசரியாக ஒரு போகம் நெல் பயிரிலிருந்து ஏக்கருக்கு 1,415 கிலோ முதல் 1,620 கிலோ (எக்டேருக்கு 3,500 முதல் 4,000 கிலோ) நெல்லும், எள் பயிரிலிருந்து ஏக்கருக்குச் சுமார் 285 கிலோ (எக்டேருக்குச் சுமார் 700 கிலோ) எள்ளும் கிடைத்து வந்தது.

எம். எப். எல். தொழில் நுட்ப விரிவினைத் திட்டம் திரு நாச்சிமுத்து அவர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது! 1972-ஆம் ஆண்டு மே திங்களில், திரு நாச்சிமுத்து அவர்களை சென்னை இரசாயன உர நிறுவனத்தின் களப் பணி அலுவலர் திரு. மாரப்பன் அவர்கள் சந்தித்து எம். எப். எல். தொழில் நுட்ப விரிவினைத் திட்டம்பற்றி விளக்கமாக எடுத்துக்கூறி, அதில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். இத் திட்டத்தில் பங்கு பெற திரு நாச்சிமுத்து அவர்கள் ஆர்வத்துடன் ஒப்புக் கொண்டார். அவர் ஒப்புக்



11-1-73 அன்று தலைமைச் செயலகத்தில்
நடந்த தொழிலாளர் கல்வி மாநில மாநாட்டில்
அமைச்சர் திரு என்.வி.நடராசன் அவர்கள்
உரையாற்றுதல்

களில் தமிழ்நாடு முன்னணி யில் நிற்பது குறிப்பிடத்தக்க தாகும்.

பாராட்டத்தக்க வகையில் தொழிலாளர்களுக்குக் கல்விப் பயிற்சி அளித்து வருவது தெளி வாக விளங்குகிறது. தமிழகத் தில் தொழிலாளா கல்வயை மேலும் மேலும் வளர்க்கவும் தொழில் துறை முன்னேற்றம் அடையச் செய்யவும் தமிழக அரசு என்றும் தயாராக இருக் கிறது. தமிழகத்தில் தொழி லாளர் கல்வியை நடத்துவதில் தமிழக அரசு அதற்கு உற்ற தோழனுகவும் சிறந்த வழி காட்டியாகவும் விளங்கும் என்று சொன்னுல் அது மிகை யாகாது.

—ஆயிரம

## பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலை!

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திருமங்க லம் மெட்டல் பவுடர் கம்பெனி இவற்றின் கூட்டுத் துறையில் பாண்டியன் கெமிகல்ஸ் லிமிடெட் நிறுவனம் ஏற்பட விருக்கிறது. மதுரை மாவட் டம் மேலூர் வட்டம் நரசிங்கம் பட்டி கிராமத்தில் ரூ. 70 லட்சம் செலவில் இது அமை யும். இங்கு, ஆண்டொன் றுக்கு 1825 டன் பொட்டா சியம் குளோரைட் உற்பத்தி செய்யப்படும்.

இத்தொழிற்சாலை, 1974-ஆம் ஆண்டு இறுதிக்குள் தொடங்கத் திட்டமிடப்பட்டி ருக்கிறது.


## * அதிசய நீர் ஊற்று நிபுணர் *

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிரா்ஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விபரங் களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குப வர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2 : 3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு 20 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**

(Ex. Member of the British Society of Dowers, London.)

நீர் ஊற்று நிபுணர்,

கணபதி அஞ்சல் — கோயமுத்தூர்-6

தொலைபேசி எண் 31912, ADVT


# பண்ணை அறிவுரைக் குழுவின் பணிகள்

தொழில் மேதை திரு ஜி. டி. நாயுடு அவர்கள் தனது தோட்டத்தில் விளையும் சப் போட்டாப் பழங்கள் எளிதில் பழுப்பதில்லை என்ற பிரச்சினை யைத் தமிழ் நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகப் பண்ணை அறிவுரைக் குழுவினர் முன் வைத்தார்! தோட்ட இயல் வல்லுநர்கள் சில பழங்களை 'ஈத்ரைல் கரைசலில்' துவைத்து, அதை 24 மணி நேரத்தில் பழுக்க வைக்கும் விந்தையைத் திரு ஜி. டி. நாயுடு அவர்களுக்கு மெய்ப் பித்துக் காட்டினுர்கள்!

* கோவையிலிருந்து பல் வேறு இடங்களுக்கு விமானம் மூலம் பறந்து செல்லும் மலர் களைப் பயிரிடுவது கோவை மா வட்டம்! இங்கு முல்லை ஒரு முக்கியப் பணப் பயிர்! துடிய லூரைச் சேர்ந்த திரு காளிச் சாமி, வீரபாண்டியைச்சேர்ந்த திரு கொண்டசாமி நாயுடு, சீனிவாசலு நாயுடு ஆகியவர் கள் முல்லை பயிரிடும் உழவர் களாவார்கள். இவர்களுடைய தோட்டத்தில் முல்லைச் செடி களின் இலைகள் மஞ்சள் நிற மாக ஆகி, கருகி, செடியே பட்டுப் போகும் நிலையில் இருந்தன! இந்த நோய் வேறு பல பூந்தோட்டங்களி லும் காணப்பட்டன. இதற்கு அவர்கள் பல தரப்பட்ட மருந் துகளையும், பூசணக் கொல்லி களையும் தெளித்துப் பார்த்த னர். இந்த நோயால் முல்லைச் சாகுபடியே அற்றுப் போய் விடுமோ என்ற அச்சமே இவர் களுக்கு ஏற்பட்டுவிட்டது! இதனைத் தமிழ்நாடு வேளாண் மைப்பல்கலைக் கழகப் பண்ணை அறிவுரைக் குழு வல்லுநர்கள் ஆராய்ந்தனர். இந்த இலை மஞ்சளாவதற்கு மண்ணில் இரும்புச் சத்துக் குறைவுதான் காரணம் எனக் கண்டறிந்த னர். 0.25 சதவீதம் 'அன்ன பேதி' (பெர்ரஸ் ஸல்பேட்) கரைசலைத் தெளித்தவுடன் எல்லாச் செடிகளும் புத்துயிர் பெற்றுப் படத்தில் கண்டவாறு துளிர்க்கத் தொடங்கின.

முன்பு 45 முதல் 75 லிட்டர் பூக்களைக் கொடுத்து வந்த முல்லைச் செடிகள், 'பெர்ரஸ் ஸல்பேட்' கரைசல் தெளிக்கப் பட்ட பிறகு 175 முதல் 250 லிட்டர் பூக்களைக் கொடுக்கத் தொடங்கின!

*கொண்டையாம் பாளையம் திரு கிருஷ்ணன் என்பவரின் தோட்டத்தில் பயிரிடப்பட் டிருந்த நிலக்கடலைச் செடி களின் இலைகளின் மேல் பழுப்பு நிறப் புள்ளிகள் தோன்றிப் பரவ ஆரம்பித்தன. அவர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொடர்பு நிலையத்தாரால் வெளியிடப் பெற்ற 'நிலக் கடலையில் துரு நோய்' என்ற கட்டுரையைப் படித்தறிந்த தன் பேரில், துரு நோயாக இருக்குமோ என ஐயப்பட்டுத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பண்ணை அறி வுரைக் குழுவின் உதவியை நாடினுர். அதனை நோயியல் வல்லுநர்கள் ஆராய்ந்து அதற்கு 'டைதேன் எம். 45' என்ற பூஞ்சாள மருந்தைத் தெளிக்கும்படி அறிவுரைகூறி ஞர்கள். தக்க தருணத்தில் எடுத்துக் கொண்ட முயற்சி யால், இந்த நோய் மற்ற இடங்களுக்குப் பரவாமல் பாது காக்கப்பட்டதோடு, இந்த உழ வரின் நிலக்கடலைப் பயிரும் காப்பாற்றப்பட்டது!

*குளு குளு மாவட்டமாம் நீலகிரியின் நுழைவு வாயிலில் பந்தல் போட்டது போன்று —அஃதாவது நீலகிரிக்கு வருப வர்களை வரவேற்க கமுகு கட்டி யது போல்—மாவட்டத்தின் தொடக்கத்தில் பரந்து விளங் குவது, மேட்டுப்பாளையத்திற் கும், கல்லாருக்கும் இடையி லுள்ள பாக்குத் தோப்புகள்! இந்தப் பாக்கு மரங்கள், பயி ரிடும் உழவர்களுக்குப் பணத் தையள்ளிக் கொடுப்பதுடன்,



கொண்ட நாள் முதல், எம். எப். எல். அலுவலர்கள் அவருக்கு எல்லாவித ஆலோசனைகளையும், உதவிகளையும் அளித்தனர். மண் பரிசோதனைக்காக அவரது நிலத்தில் மண் மாதிரி எடுக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டது. சோதனையில் கண்ட முடிவுகளின்படி, திரு நாச்சிமுத்து அவர்களுக்கு, அவர் மேற்கொள்ள வேண்டிய 3 பயிர் சுழற்சி முறையைப் பற்றியும், இட வேண்டிய இரசாயன உரங்களைப் பற்றியும் பரிந்து உரைக்கப்பட்டது. 1972—73-ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய எல்லா ஒருமித்த சாகுபடி முறைகளையும் (கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள்), அவற்றைச் செயல்படுத்த வேண்டிய வழிகளையும் எம். எப். எல். நிபுணர்கள் திரு நாச்சிமுத்து அவர்களுக்கு விளக்கியதுடன், அவர் தேதிவாரியாக மேற்கொள்ளவேண்டிய சாகுபடி முறைகளையும் ஓர் அட்டவணையாகத் தயாரித்துக் கொடுத்தனர்.

எம். எப். எல். நிபுணர்கள் பரிந்துரைத்தபடி, முதல் பயிராக 'காஞ்சி' நெல் ரகத்தையும், இரண்டாவதாக 'ஐ.ஆர். 20' நெல் ரகத்தையும், மூன்றாவது பயிராக 'காஞ்சி' நெல் ரகத்தையும் பயிரிட திரு. நாச்சிமுத்து அவர்கள் திட்டமிட்டார். களப்பணி அலுவலர் வேலுச்சாமி அவர்கள் திரு நாச்சிமுத்து அவர்களுக்கு அவ்வப்போது உதவி வந்தார்.




முதல் பயிருக்கு 'காஞ்சி' நெல் ரகம் 5—7—1972 அன்று நாற்று விட்டார். 'காஞ்சி' நெல் ரகம் 6—11—1972 அன்று அறுவடையாகியது. அவருக்கு ஏக்கருக்கு 3,780 கிலோ (எக்டேருக்கு 9,337 கிலோ) மகசூல் கிடைத்தது.

இரண்டாவது பயிரான 'ஐ. ஆர். 20' ரகத்தில் ஏக்கருக்கு 2,403 கிலோ (எக்டேருக்கு 5,935 கிலோ) மகசூலும், மூன்றாவது போகமான 'காஞ்சி' ரகத்தில் ஏக்கருக்கு 2,762 கிலோ (எக்டேருக்கு 6,822 கிலோ) மகசூலும் எடுத்துள்ளார். மூன்றாவது பயிரான 'காஞ்சி' ரகத்திற்கு மின்சார வெட்டின் காரணமாகப் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாதிருந்தால், 'காஞ்சி' ரகத்தில் மேலும் அதிக மகசூல் கிடைத்திருக்கும் என்பது திண்ணம்.

இவ்வாறு மூன்று போகம் நெல் சாகுபடி செய்ததன் மூலம் திரு நாச்சிமுத்து அவர்கள் 290 நாட்களில், ஒரு ஏக்கரில், 8,945 கிலோ நெல்—

அதாவது எக்டேருக்கு 22,094 கிலோ நெல் மகசூல் எடுத்துள்ளார்! அவர் செய்த சாகுபடியின் முழு விவரங்களையும் கீழே காணலாம் :

| விவரங்கள் | முதல் பயிர் நெல்—காஞ்சி | இரண்டாவது பயிர் நெல்—ஐ ஆர்-20 | மூன்றாவது பயிர் நெல்—காஞ்சி | மொத்தம் |
|---|---|---|---|---|
| விதைத்த/ நாற்று விட்ட தேதி | 5-7-72 | 20-10-72 | 14-2-73 | |
| அறுவடை தேதி | 6-11-72 | 19-2-73 | 9-6-73 | |
| வயலில் இருந்த காலம் | 90 நாட்கள் | 110 நாட்கள் | 90 நாட்கள் | 290 நாட்கள் |
| எரு/உர சிபாரிசுகள் | என் பி கே 61-13-25 | என் பி கே 61-13-25 | என் பி கே 61-13-25 | |
| உரம் — அடியுரம் — ஏக்கருக்கு | 75 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 25 கிலோ எம்.எப். யூரியா | 75 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 25 கிலோ எம்.எப். யூரியா | 75 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 25 கிலோ எம்.எப். யூரியா | 225 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 75 கிலோ எம்.எப். யூரியா |
| (ஹெக்டேருக்கு) | (185 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 65 கிலோ எம்.எப். யூரியா) | (185 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 65 கிலோ எம்.எப். யூரியா) | (185 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 65 கிலோ எம்.எப். யூரியா) | (555 கிலோ எம்.எப். காம்ப்ளெக்ஸ் 17-17-17 + 195 கிலோ எம்.எப். யூரியா) |
| உரம்— மேலுரம் — ஏக்கருக்கு | 80 கிலோ எம்.எப். யூரியா + 20 கிலோ மூரியேட் பொட்டாஷ் | 80 கிலோ எம்.எப். யூரியா + 20 கிலோ மூரியேட் பொட்டாஷ் | 80 கிலோ எம்.எப். யூரியா + 20 கிலோ மூரியேட் பொட்டாஷ் | 240 கிலோ எம்.எப். யூரியா + 60 கிலோ மூரியேட் பொட்டாஷ் |
| (ஹெக்டேருக்கு) | (200 கிலோ எம்.எப். யூரியா + 50 கிலோ மூரியேட் பொட்டாஷ்) | (200 கிலோ எம்.எப். யூரியா + 50 கிலோ மூரியேட் பொட்டாஷ்) | (200 கிலோ எம்.எப். யூரியா + 50 கிலோ மூரியேட் பொட்டாஷ்) | (600 கிலோ எம்.எப். யூரியா + 150 கிலோ மூரியேட் பொட்டாஷ்) |
| கிடைத்த மகசூல் — ஏக்கருக்கு (ஹெக்டேருக்கு) | 3780 கிலோ (9337 கிலோ) | 2403 கிலோ (5935 கிலோ) | 2762 கிலோ (6822 கிலோ) | 8945 கிலோ (22094 கிலோ) |

அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையம் சிறிய பரப்பளவுள்ள பரிசோதனைத் தளைகளில், 330 நாட்களில், 4 முறை நெல் பயிரிட்டு எக்டேருக்கு 25.65 டன் என்ற அளவில் மகசூல் எடுத்துள்ளது. கோவையிலுள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் 'அதிசய நெல்' என்பபடும் ஐ.ஆர் 8 ரகத்தைத் தொடர்ந்து ஒரு எக்டேரில் மூன்று முறை சாகுபடி செய்து, 330 நாட்களில், 25 டன் மகசூல் எடுத்துள்ளனர்.

ஆனால் திரு நாச்சிமுத்து அவர்களோ, இரண்டு ஏக்கரில் 290 நாட்களில் உயர் விளைச்சல் தரும் மூன்று சன்ன ரகங்களைப் பயிரிட்டு—அதாவது ஐ. ஆர். 8 அளவுக்கு அதிக மகசூல் தராததும், அதே நேரத்தில் சன்ன அரிசி கொடுப்பதுமான 'காஞ்சி', 'ஐ. ஆர். 20' ரகங்களைப் பயிரிட்டு—ஏக்கருக்கு 8,945 கிலோ (எக்டேருக்கு 22 டன்) மகசூல் எடுத்துள்ளார்.



அவர் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து நாளொன்றுக்குச் சராசரியாக 30.8 கிலோ நெல் விளைவித்துள்ளார்! ஆனால் அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையமும், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஒரு ஏக்கரிலிருந்து நாளொன்றுக்குச் சராசரியாக முறையே 31.4 கிலோ, 30.6 கிலோ நெல் விளைவித்துள்ளன! ஆகவே, அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் சாதனையை விட, திரு நாச்சிமுத்து அவர்களின் சாதனை சற்றே குறைவானது எனினும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சாதனையைவிடச் சற்று அதிகமானது என்பது குறிப்பிடத் தக்கதாகும். மூன்றாவது போகத்தில் தண்ணீர்த்தட்டுப்பாடு மட்டும் இல்லாதிருந்தால், அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் சாதனையையும், திரு நாச்சி முத்து அவர்கள் மிஞ்சி இருப்பார் என்பதில் ஐயம் இல்லை! எனவே, அவரது முயற்சி பாராட்டுக்குரியதாகும். அவரை ஊக்கப்படுத்திய சென்னை இரசாயன உர நிறுவனத்தினரும் பாராட்டிற்குரியவர்கள் என்றால் மிகை அல்ல!



அவருடைய வெற்றியைப் பாராட்டச்சென்னை இரசாயன உர நிறுவனத்தினர் 8-6-1973 அன்று சாவடிப்பாளையம் புதாரில் ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். அவ்விழாவில் அவரைப் பலர் பாராட்டிப் பேசியதுடன், அவருக்கு நற்சான்றிதழும் வழங்கப்பட்டது.

திரு நாச்சிமுத்து அவர்களைப் போல், தமிழ்நாட்டின் எல்லா உழவர் பெருமக்களும் ஆர்வத்துடனும் முயற்சியுடனும் நெல் சாகுபடி செய்தால், இந்தியாவின் பல பற்றாக்குறை மாநிலங்களுக்கு மட்டுமல்ல, உலகின் பல பாகங்களில் உள்ள பற்றாக்குறை நாடுகளுக்கும் அரிசி அனுப்பி, பசிப் பிணி போக்கிட தமிழகத்தால் இயலும்! அந்த நாள் விரைந்து வந்திட திரு நாச்சிமுத்து அவர்களைப் போல், தமிழ் நாட்டின் எல்லா உழவர் பெருமக்களும் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளவும், தமிழகத்தின் புகழைத் தரணியெங்கும் பரப்பிடவும் முயற்சி செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

— ஆர். எம்



# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!

தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200 க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.






தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை-600001


# கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:** என்னுடைய நிலங்கள் நன்செய்-புன்செய் பகுதிகளின் நடுவே வடிமுனைக்குழாய் அமைந்துள்ளது. இதைக் கொண்டு மணற்பாங்கான பழைய டெல்டா பகுதியான மேற்சொன்ன நிலங்களில் கோடையில் மிளகாயும், எள்ளும் பயிரிடலாம் என்று நினைக்கிறேன். மிளகாயில் வீரிய ஒட்டு வகை உள்ளதா? வயது என்ன? விதைகள் எங்கு வாங்கலாம்? கட்டுக்கோப்பு, சாகுபடி முறைகள் என்ன? எள் வகையில் வீரிய ஒட்டுவகை உள்ளதா? வயது என்ன? விதைகள் எங்குக் கிடைக்கும்? கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் என்ன?

—எஸ். இராமசாமி பி.எஸ்.சி.,
மானாங்கோரை அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிடும் நிலத்தில் கோடையில் மிளகாய் எள் ஆகியவற்றைப் பயிரிடலாம்.

மிளகாயில் வீரிய ஒட்டுவகை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் தற்பொழுது உள்ள ரகங்களில் 'கே-1' (கோவில்பட்டி—1) என்ற மிளகாய் ரகத்தைப் பயிரிடுவது மிகவும் சிறந்தது. இதன் வயது 8 மாதங்கள். இந்த ரகத்தின் விதைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். அங்கு கிடைக்காவிட்டால் ''பயிர் நிபுணர், மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி (அஞ்சல்), நெல்லை மாவட்டம்'' என்ற முகவரிக்கு எழுதி கே. 1 மிளகாய் விதைகளை வாங்கிக் கொள்ளலாம்.

இந்த ரகத்தைக் கோடையில் பயிரிட மார்ச்சு மாதத்தில் விதைத்து நாற்றுவிடலாம். டிசம்பர்-ஜனவரி மாதத்திலும் நாற்று விடலாம். ஒரு ஏக்கர் மிளகாய் நடவு செய்ய 500 கிராம் விதையை 1 கிராம் 'அக்ரசான்' மருந்துடன் கலந்து ஒரு சென்ட் நாற்றங்காலில் நாற்று விட வேண்டும். நாற்றங்காலில் மேட்டுப்பாங்கான பாத்திகளை அமைத்து அதன் மேல் நாற்றுவிடுதல் சிறந்தது. நாற்றுவிட 40 முதல் 45 நாட்களில் நாற்றைப் பறித்து நடவு செய்ய வேண்டும்.

நடவு வயலை நன்கு உழுது கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டிதொழு எரு, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இட வேண்டும்.

பிறகு வயலை 9 அடி × 9 அடி அளவுள்ள பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது 1 அடி இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ளவேண்டும். பாத்திகள் அமைத்தால் 1 அடி இடைவெளியில் வரிசை பிடித்து, வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியிட்டு நாற்றுகளை நடவேண்டும். பார் பிடித்திருந்தால் பார்களின் ஒரு பக்கச் சரிவில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளிவிட்டு நடவு செய்ய வேண்டும்.

மிளகாய் நாற்று நட்ட 50-வது நாளும், 75-வது நாளும் ஆக 2 முறை மேலுரம் இட வேண்டும். ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டுத் தண்ணீர் விட வேண்டும். அவ்வப்போது பயிர்ப் பாதுகாப்பும் முறைப்படி செய்துவர வேண்டும். இவ்வாறு செய்தால், மிளகாய் நாற்று நட்ட 3-வது மாதத்தில் முதல் தடவை மிளகாய் பறிக்க இயலும்.

ஒரு ஏக்கரிலிருந்து 771 கிலோ மிளகாய் மகசூல் பெற முடியும். இந்த ரகம் நாட்டு ரகத்தை விடக் குறைந்தது 8 மூட்டை அளவுக்கு அதிக மிளகாய் வற்றல் கொடுக்கும். எனவே, இந்த ரகத்தைப் பயிரிட முயற்சி செய்யுங்கள்.

எள் வகையிலும் ஒட்டு வீரிய வகை இல்லை. ஆனால் கோடைப் பட்டத்தில் இறைவையாக எள் பயிரிட 'டி.எம்.வி. 3' என்ற எள் ரகமே மிகவும் சிறந்தது. இதன் வயது 90 நாட்களே. இதன் விதைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

டி.எம்.வி. 3 எள் பயிரிட ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு விட்டு, நிலத்தை நன்கு உழுது கடைசி உழவில் 14 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவில் சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர்பாஸ்பேட், 15 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். ஏக்கருக்கு 2 கிலோ விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த உடன் நீர்பாய்ச்சி, 3-வது நாள் உயிர்த்தண்ணீர் விட வேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் தேவைக்கு ஏற்றவாறு தண்ணீர் பாய்ச்சலாம். பூச்சிகளைத் தடுக்கப் பயிர்ப் பாதுகாப்பு செய்வது அவசியமாகும். இவ்வாறு சாகுபடி செய்தால், ஒரு ஏக்கரிலிருந்து 300 கிலோவுக்குக் குறையாமல் மகசூல் பெறமுடியும்.

எனவே, மேற்கூறிய முறைகளில் கே. 1 மிளகாய் அல்லது டி.எம்.வி. 3 எள் பயிரிட்டு உங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்



விரு: நான் எனது தோட்டத்தில் கோ. 1 தக்காளி ஒரு ஏக்கர் பயிரிடலாம் என்று இருக்கிறேன். கோ. 1 தக்காளி விதைகள் எங்கள் வட்டாரத்தில் கிடைக்கவில்லை. விதை எங்கிருந்து பெறலாம்? இதைப் பயிரிடும் முறைபற்றியும் விரிவாகக் கூறவும்.

—ஜி.வி. பழனிசாமி,
கணபதி பாளையம்,
காடுப்புத்தூர் அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

விடை : கோ. 1 தக்காளி விதையை வரவழைத்துக் கொடுக்கும்படி உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் கேட்டுக் கொள்ளலாம். அல்லது நீங்களே பின்கண்ட முகவரிக்கு எழுதி வரவழைத்துக் கொள்ளலாம்.

''பல்கலைக் கழக விதை விற்பனை நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயமுத்தூர்-3.

கோ. 1 தக்காளியைப் பின்கண்ட 3 பட்டங்களில் பயிரிடலாம்..

(1) ஜூன்-ஜூலை முதல் செப்டம்பர்-அக்டோபர் வரை.

(2) அக்டோபர்-நவம்பர் முதல் ஜனவரி-பிப்ரவரி வரை.

(3) ஜனவரி-பிப்ரவரி முதல் ஏப்ரல்-மே வரை.

ஒரு ஏக்கர் தக்காளி பயிரிட 120 கிராம் விதையை ஒரு செண்ட் நிலத்தில் (54 அடி × 8 அடி) விதை நாற்று விட வேண்டும். நாற்றங்காலில் மேட்டுப் பாங்கான பாத்திகள் அமைப்பது சிறந்தது.

கோ. 1 தக்காளி பயிரிட ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு விட்டு நிலத்தை 4 அல்லது 5 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும்! கடைசியில் உழவில் ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட், 200 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மியூரியேட், ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும்.

இரசாயன உரமிட்ட பிறகு நிலத்தில் 2 அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ள வேண்டும். தக்காளி நாற்றுக்களை நடுவதற்கு முன்பு பார்களின் இடையே தண்ணீர் விட வேண்டும். 25 முதல் 30 நாள் வயதுடைய நாற்றுக்களைப் பிடுங்கி, பார்களின் ஒரு பக்கச் சரிவில் மட்டும் 2 அடிக்கு ஒரு நாற்று வீதம் வைத்து வரிசையாக நடவு செய்ய வேண்டும். நாற்று நட்ட 3-வது அல்லது 4-வது நாளில் உயிர்நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒருமுறை நீர்பாய்ச்சினால் போதுமானது.

தக்காளிக் கன்று நட்ட 15-ஆம் நாள், முதல் களை எடுக்க வேண்டும். நடவு செய்த 4-வது அல்லது 5-வது வாரத்தில் இரண்டாவது முறையாகக் களையெடுத்துக் கொத்திவிட்டு ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

தக்காளிச் செடியில் தோன்றும் பூச்சிகளைத் தடுக்க, நடவு செய்த 15 முதல் 21 நாட்களுக்குள் 100 மில்லி என்ட்ரின் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து அல்லது 200 கிராம் 50 சதக் கரையும் மருந்தை 100 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும். பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் மேலும் இரு தடவை மேற்கூறிய முறையில் மருந்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறு கோ. 1 தக்காளி பயரிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 15,000 கிலோ தக்காளிப் பழம் பெற முடியும்.

விரு: உயர்ந்த இனப் பசு மாடுகள் இரண்டு தேவையாக இருக்கிறது. அரசாங்கத்தின் மூலம் மானிய முறையில் பெற என்ன செய்ய வேண்டும்? யாரை அணுக வேண்டும்? உயர்ந்த இனப் பசுமாடுகளின் வகைகளையும், அவற்றின் விலையையும் தெரிவிக்கவும்.



—எஸ். பன்னீர்ச் செல்வம்
எச்சூர்,
செய்யாறு வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை: உயர்ந்த இனப்பசு மாடுகள் வாங்க அரசாங்கம் மானியம் கொடுப்பதில்லை.

தமிழ்நாட்டு ரகப் பசுமாடுகள் அதிகம் பால் கொடுக்கும் சக்தி கொண்டவை அல்ல. தமிழ்நாட்டுப் பசு சராசரியாக ஓர் ஆண்டுக்கு 274 கிலோ கிராம் பால் மட்டுமே கொடுக்கிறது. ஆனால் பிற மாநிலங்களைச் சேர்ந்த பின்கண்ட பசு இனங்கள் ஓர் ஆண்டிற்குச் சராசரியாக 1,600 முதல் 2,300 கிலோ வரை பால் கொடுக்கும் தன்மையுடையவை.

(1) சாகிவால்.
(2) சிந்தி.
(3) கிர்.
(4) தர்பார்க்கர்

கீழ்க்கண்ட அயல்நாட்டுப் பசு இனங்கள் ஆண்டிற்குச் சராசரியாக 3,000 முதல் 5,000 கிலோகிராம் வரை பால் தரும் ஆற்றல் உள்ளவை.

(1) கோல்ஸ்டீன்.
(2) அயர்ஷயர்.
(3) ஜெர்சி.
(4) பிரெளன்ஸ்விஸ்.
(5) ரெட்டேன்.
(6) கெர்ரி.

மேற்கூறிய வகைகளில் 'சிந்தி' இனமும் 'ஜெர்ஸி' இனமும் வடஆர்க்காடு மாவட்டத்திற்கு ஏற்றதாக இருக்கும். போதிய உயர்ந்த இனப் பசுக்கள். இன்னும் நம்நாட்டில் உற்பத்தி செய்யப்படவில்லையாதலின், இவைகள் எளிதில் விற்பனைக்குக் கிடைக்கவில்லை. விலையும் அதிகமாக உள்ளது. இந்த இனப்பசுக்களின் கிடேரிகள் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓசூர் கால்நடைப் பண்ணையில் ஏலத்தில் விற்கப்படுகின்றன. ஏலத்தில் தங்களுக்குத் தேவையான இனக்கிடேரிக் கன்றுகளை வாங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு உயர்ந்த இனப் பசுக்களின் கன்றுகளை வாங்கி வளர்ப்பதுடன், உங்களிடமுள்ள நாட்டுப் பசுக்களைச் செயற்கை இன விருத்தி முறையில் உயர் இனக் காளைகளின் விந்தைச் செலுத்திக் கருவுறச் செய்யலாம். இதனால் பிறக்கும் கிடேரிக் கன்றுகள் பிறகு நாட்டுப்பசுக்களைவிட அதிகப் பால் கொடுக்கும் தன்மையைப் பெறுகிறது. இவ்வாறு மீண்டும் மீண்டும் செயற்கை முறையில் கருவுறச் செய்து வந்தால் ஆறுவது தலைமுறையில் கிடைக்கும் கலப்பினம் மேல்நாட்டு இனப்பசுக்களைப்போல் உயர்ந்த அளவு பால் கொடுக்கும் பண்பினைப் பெற்றுவிடும். இம்முறைக்குக் காலம் ஆகும். எனினும், நம்நாட்டுப் பசுக்களின் தரத்தினை உயர்த்துவதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

விரு : ''தமிழரசு'' இதழில் தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆரம்ப விழா பற்றிய கட்டுரையைப் படித்தேன். அந்தக் கார்ப்பரேஷன் உதவியுடன் செமி தியேட்டர் அமைக்க என்ன செய்ய வேண்டும்? யாரை அணுகவேண்டும்? உதவி பெறுவதற்கு வேண்டிய குறைந்த பட்சத் தகுதி ஏதாவது தேவையா?

—எம். கோவிந்தராசன்,
நெடுங்குளம் (அஞ்சல்),
நன்னிலம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை: தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 100 திரைப்படங்கள் எடுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. ஆனால் 4 கோடி மக்கள் தொகைகொண்ட தமிழ் நாட்டில் மொத்தம் 1,252 சினிமாக் கொட்டகைகளே (நிரந்தரமானதும், தற்காலிகமானதும் சேர்த்து) உள்ளன. 20,000 மக்கள் தொகைக்கு ஒரு சினிமா தியேட்டர் தேவைப்படுகிறது. இந்த அளவில் கணக்கிட்டால் தமிழ்நாட்டிற்கு 2,021 தியேட்டர்கள் தேவை. குறிப்பாக கிராமப்புறங்களில் தியேட்டர் கட்டுவதற்குத் தனிப்பட்டவர்கள் முன்வருவது இல்லை. கிராமப் புறங்களிலும் குறைந்த அளவு நிதி உதவியுடன் 'செமி பர்மனெட் சினிமா தியேட்டர்' எனப்படும் நடுத்தர சினிமா தியேட்டர் கட்டவும், இத் தியேட்டர்களுக்கு 5 ஆண்டு உரிமம் (லைசென்சு) வழங்கவும் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. தனிப்பட்டவர்கள் செமி பர்மனென்ட் தியேட்டர்கள் கட்டுவதற்கு நிதியுதவி செய்வதற்காகவே 'தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன், என்ற வரையறுக்கப்பட்ட நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

'செமி பர்மனென்ட் தியேட்டர்' அமைக்க விரும்புகின்றவர் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அந்த இடத்தில் தியேட்டர் கட்டுவதற்கு 'ஆட்சேபணை இல்லை என்ற சான்றிதழ்' (No objection Certificate) வேண்டி உரிமம் (லைசென்சு) கொடுக்கும் அதிகாரம் படைத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 'படிவம்'-அ'வில் மனுச் செய்ய வேண்டும். அந்த மனுவின் நக்கல்களை ஊராட்சி மன்றத்திற்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ அல்லது நகராட்சிக்கோ அனுப்ப வேண்டும். அதுபோலவே மாவட்டக் காவல் துறை அலுவலர் அவர்களுக்கும் மனுவின் நகலை அனுப்பி வைக்க வேண்டும்.

' தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' 'செமி பர்மனென்ட் தியேட்டர்' கட்டுவதற்குத்தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 1,00,000 அல்லது தியேட்டரின் மொத்தச் செலவில் (கட்டடம் கட்டும் செலவு கருவிகள், இருக்கைகள் ஆகியவற்றின் செலவு உட்பட) 3-ல் 2 பகுதியில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை கடனாகக் கொடுத்து உதவுகிறது. இக்கடன் தொகை 12 சத வட்டியுடன் 50 மாதத் தவணைக்குள் வசூலிக்கப்படும். திரைப்படம் காட்டத் துவங்கிய 30-வது நாளில் இருந்து தவணைத் தொகையைக் கட்ட வேண்டும். இக்கடன் பெற விரும்புகின்றவர் தியேட்டர் கட்டப்பட்டுள்ள நிலத்தையும், தியேட்டரையும் திரைப்படம் காட்டும் கருவியையும் தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷனுக்கு ஈடுகாட்ட (Mortgage) வேண்டும். இவைகளில் வேறு எந்த ஈடும் காட்டப்பட்டிருக்கக் கூடாது.

இக்கடன் உதவி பெற விரும்புகின்றவர் தியேட்டர் கட்டப்படும் நிலத்தின் சொந்தக்காரராக இருக்க வேண்டும். அதாவது 'ஆட்சேபணை இல்லை' என்ற சான்றிதழ் பெற்ற இடத்தின் சொந்தக்காரராக இருக்க வேண்டும். அல்லது அந்த நிலத்தை 10 ஆண்டுக் காலத்திற்குக் குத்தகை உரிமை பெற்றவராக இருக்க வேண்டும். அத்துடன் கடன் கேட்கும் தொகைக்குச் சம மதிப்புள்ள வேறு ஏதேனும் நிலம், கட்டடங்கள் முதலியவற்றின் (கட்டப்படவிருக்கும் தியேட்டருடன் சேர்த்து) சொந்தக்காரராக இருக்க வேண்டும் ; மேலும் எந்தவித வில்லங்கமும் இல்லாத திரைப்படம் காட்



2. உணவில் இருக்க வேண்டிய சத்துக்கள் குறைந்தால், உதாரணமாக டீ (D) வைட்டமின் குறைந்தால் கணைய நோய் (Rickets), எலும்பு மிருதுவாதல் (Osteomalacia) உண்டாகுதல்.

3. கை எலும்பில் அடி, தசை நரம்புகள் அறுதல்.

4. அடிபட்ட காயத்தால் எலும்பு முறிதல், வளைதல், குறுகுதல், மூட்டுப் பிடிப்பு, உடைந்த எலும்பு சேராமை, சதை அற்று விரல் அசைக்க முடியாமை, சதைக்கு உயிர் தரும் நரம்புகள் அவற்றால் உயிர்ச்சேதம் நேருதல்.

5. பூட்டு விலகல்.

6. சுரத்துடன் விக்கங்கண்டு சீழ் பிடித்தால் குழந்தைகளின் பூட்டின் மேலும், மற்றவர்களின் எலும்பிலும் சீழ் பிடிக்கும். வாத வகைகள் சிலவற்றில் பூட்டுக்களின் அசைவு குறைவுபடும்.

7. காச நோயினால் பூட்டுகளில் ஏற்படும் மாறுதல்கள்.

8. எலும்பு வளருமிடத்துக் கீழோ மேலோ இருக்கும் தட்டுகளில் ஏற்படும் விபத்துக்கள்.

9. இடுப்பு, தோள்பட்டை, மேல்தோள் இவற்றில் வலி ஏற்படுதல் முதலியன.

இவையன்றி மகப்பேறுக் குறைவினாலும் உடல் பாதிக்கப்படுவதுண்டு. எலும்பில் நோய் ஏற்படுவதால் கோணல் பாதம், இளம்பிள்ளை வாதம், கணையநோய், பக்கக் கூன், குமரப்பருவக் கூனல், தட்டைப் பாதம், எலும்புக்கில் அழற்சி ஆகியவை ஏற்படுகின்றன.

பொதுவாக எலும்பு முறிவுகளை இருவகையாகப் பிரிக்கின்றனர். அவை 1. மூடின முறிவு 2. திறந்த முறிவு.

தோல் கிழியாமல் உள்காயமாக இருந்தால் மூடின முறிவு, தோல் கிழிந்து இரத்தக் காயமாக இருந்தால் அது திறந்த முறிவு. இவற்றில் திறந்த முறிவு ஆபத்தானது. இதில் கிருமிகள் புகுந்து சன்னி, இழுப்புப்போன்ற அபாயங்களை உண்டாக்கலாம்.

இந்த அபாயத்தைப் போக்கும் உபாயமாகச் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில்




கால் முட்டிகள் சரியாக இயங்கச் சறுக்கு விளையாட்டு




நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு நடைப் பயிற்சி


இளம்பிள்ளை வாதத்திற்குச் சிகிச்சை

முடநீக்கு இயல் துறை செயல்படுவதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

சென்னை ஸ்டான்லி அரசினர் மருத்துவமனை, நமது நாட்டிலுள்ள முடநீக்கு இயல் துறையில் சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கின்ற மருத்துவமனைகளில் ஒன்றாக விளங்குகிறது. 1940-லிருந்து 49 வரை முடநீக்கு இயல் துறையின் பேராசிரியராக இருந்த காலம் சென்ற டாக்டர் எம்.ஜி.கினி அவர்கள் இம் மருத்துவ மனைக்கு அனைந்திந்தியாவிலிருந்தும் ஏற்கெனவே ஆதரவினைத் தேடித் தந்திருந்தார். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் அறுவைச் சிகிச்சைத்துறைக்கு அவர் பேராசிரியராக இருந்தபோதும் முடநீக்கு இயல், இவருடைய முதல் விருப்பமாக இருந்தது. அவர் அத்துறையில் எந்த இரகசியத்தையும் தன்னிடம் வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் வெளியிட்டார்.

முடநீக்கு இயல் துறை 1951-ல் டாக்டர் எம். நடராசன் அவர்களை விரிவுரையாளராகக் கொண்டு துவக்கப்பட்டது. அவருடைய ஆற்றலின் விளைவாக மேற்கொண்டு 30 படுக்கைகள் இங்கு ஒதுக்கப்பட்டன. 1959-ல் டாக்டர் டி. கே. சண்முகசுந்தரம் அவர்கள் இத்துறையின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் பல்கலைக்கழகச் சிகிச்சைத் துறையின் விரிவுரையாளரானார்.

1954-ஆம் ஆண்டிலிருந்து தாம்பரம் அரசினர் காசநோய் மருத்துவமனைக்காக 30 படுக்கைகள், சென்னை ஸ்டான்லி அரசினர் மருத்துவமனை முடநீக்கு இயல் துறைக்கு ஒதுக்கப்பட்டன. அதிக நாள் தங்குவதற்கு வசதி கொண்ட இந்தப் படுக்கைகள், எலும்புருக்கி நோயாளர் பிரிவு நிருவாகத்தினருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். முதுகெலும்பு மற்றும் மூட்டுகள் போன்றவைகளில் செய்யப்படுகின்ற அறுவைச் சிகிச்சைகள் தாம்பரம் சானடோரியத்திலேயே நடைபெறுகின்றன.

வடசென்னையில் வளர்ந்து வருகின்ற தொழிலகங்களால் ஏராளமான தொழில் விபத்துக்குள்ளானோர் இந்த மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். மேலும் இம் மருத்துவ

டும் கருவியின் (Projector) சொந்தக்காரராகவும் இருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு தியேட்டர் பைனன்ஸ் கார்ப்பரேஷனால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் ஒரு வகைத் திரைப்படம் காட்டும் கருவியை, தியேட்டர் கார்ப்பரேஷன் மூலமாக வாங்க வேண்டும்.

இக்கடன் உதவி பெறுவதற்கான மனு, விதிகள் அடங்கிய புத்தகம் ஆகியவைகளைப் பெற, 10 ரூபாய் மதிப்புள்ள கோடிட்ட அஞ்சல் ஆணையை (Crossed Postal Order) தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன் நிருவாக மேலாளர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரம் வேண்டின் பின்கண்ட முகவரிக்கு எழுதவும்:



"நிருவாக மேலாளர்,
தமிழ் நாடு தியேட்டர் கார்ப்பரேஷன் லிமிடெட்,
திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி,
அடையாறு, சென்னை 600020.

—ஆர். எம்.

ஜெர்மானியர்கள் மிகவும் சுறுசுறுப்பு நிரம்பியவர்கள். காலையில் ஏழரை மணிக்கெல்லாம் ஜெர்மானியக் குழந்தைகள் கையில் புத்தகம் தாங்கிப் பள்ளிக்கூடம் செல்லுவது ஒரு நேர்த்தியான காட்சி. யுத்தத்தின் சிதைவுகளிலிருந்து ஒரு மனித சமூகம் எப்படி மறுபடியும் எழுந்து நடமாடுகிறது என்பதைக் குழந்தை முதல் முதியவர்கள் வரை எல்லாரிடமும் காணப்படுகிற சுறுசுறுப்பு மிக நன்ருக எடுத்துக் காட்டுகிறது. நவீன இயந்திர சாதனைகளைச் செய்து முடிப்பதிலே அவர்களுக்குள்ள திறமை உலகப் பிரசித்தி. ஆனால் அதே சமயம் தத்துவ விசாரணை, இந்திய மொழி ஆராய்ச்சி, ஆன்ம ஞானம் போன்ற துறைகளிலும் ஜெர்மானியர்களுக்கு ஒரு நாட்டம் இருந்து வந்திருக்கிறது. இது காரணமாக இந்தியர்களிடத்தில் அவர்களுக்கு ஒரு தனியான வாஞ்சையும் மதிப்பும் இருப்பதைப் பார்க்கலாம்! அறிஞர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைப்போலவே சாதாரணப் பொது மக்களுக்கும் இந்தியர்கள் என்ருல் ஒரு கவர்ச்சி இருக்கிறது.

தொழிற்சாலைகள், ஆராய்ச்சிக்கூடங்கள் இவற்றையெல்லாம் சென்று பார்த்துத் தெரிந்து கொண்ட விஷயங்கள் ஒருபுறம் இருக்க, ஜெர்மானியர்களிடம் நான் கண்ட இந்த இதயப் பண்பும் வாஞ்சையும் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

—திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்களின் 'அக்கரைச் சீமை' யிலிருந்து.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | 3½% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | 4½% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | 6¾% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |
| நடப்பு கணக்கு ½% — சேமிப்பு கணக்கு | 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர்.
வை. இராமலிங்கம், செயலாளர்.
தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.




# நம்மை முடமாக்கும் நோயை நாம் முடமாக்குவோம்!

சென்னை ஸ்டான்லி மருத்துவ மனை!

முடநீக்கு இயல் துறையை நோக்கிப் போகிருேம். மனித உடலில்தான் எத்தனை வகையான நோய்கள்! கால் எலும்பு முறிந்தவர்கள், கை எலும்பு நசுங்கியவர்கள், நடக்க இயலாத பச்சிளங் குழந்தைகள் முதலானோர் குழுமியிருக்கின்ற அந்தக் காட்சி நம் நெஞ்சையெல்லாம் உருக்குகின்றது.

உடலை முடமாக்கி, நம் செயல்களையெல்லாம் முடங்க வைக்கும் இந்த நோய் எப்படி வருகிறது?

எலும்பு நோய்கள் உண்டாவதற்குக் காரணம் பலவுண்டு. தாக்கும் பாகம், இவற்றால் விளையும் மாறுபாடுகளின் தோற்றம் ஆகியவற்றைக் கொண்டு இவற்றைப் பின்வருமாறு பிரிக்கலாம். (1) பிறவி வேறுபாடுகள், (2) சிதைவுகள் (3) அழற்சி நோய்கள், (4) பிற உயிர்களால் ஏற்படும் நோய்கள், (5) கழலைகள், நீர்க் கட்டிகள் (6) பொதுக் கோளாறுகள்.

எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களைக் குணமாக்க இரு வகைச் சிகிச்சைகள் தரப்படுகின்றன. அவை 1. அவயவச் சீர் இயல் (Orthopaedics) 2. பயிற்சிச் சிகிச்சை (Physiotherapy).

அவயவச் சீர் இயல் என்பது கருவிலோ, பிறக்கும்போதோ, பிறந்த பின்னரோ எலும்பும் தசையும் சேர்ந்த உறுப்புக்களில் உண்டாகும் குறைகளை நீக்கிச் சீர் செய்யும் சிகிச்சை முறையாகும். இதனை முடநீக்கு இயல் என்றும் கூறலாம்.

பிறவிக் குறைகளிலும், பிறந்த பின் ஏற்படும் ஊனங்களிலும் இந்நோய்கள் ஏற்படுகின்றன. குருத்தெலும்பு பிறவிலேயே குறைந்து போகலாம், அல்லது எலும்புக்கூடு கருவில் வளராது இருந்துவிடலாம். இது பிறவிக் குறைகளில் ஒன்று. பிறந்தபின் ஏற்படும் ஊனங்கள் பல. இவை முன்கூட்டித் தடுக்கக் கூடியவை. அவை என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோமா?

1. இளம்பிள்ளை வாதத்தால் தசை சோர்ந்து அங்கமாறுதல் உண்டாகுதல்.

# வாழ்க்கைத்து ஒரு பாடம்!



எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம், இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவக்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு


மனை நகரின் அதிக மக்கள் நெருக்கமுள்ள பகுதியில் அமைந்துள்ளது. அங்குள்ளோர் முக்கியமாகப் பொருளாதாரத்தில் பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால், ஒராண்டில் சேருகின்ற புறநோயாளர்களின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்து வருகின்றது.

மருத்துவ மனையிலுள்ள மிகப் புகழ்பெற்ற துறைகளில் பயிற்சிச் சிகிச்சைத் துறையும் (Physiotherapy Department) ஒன்று. ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 50-க்கு மேற்பட்ட புறநோயாளர்கள் சிகிச்சையளிக்கப் பெறுகிறார்கள். சென்னை அரிமா சங்கமும், தாராள மனங்கொண்ட நோயாளர்களும் இந்தத் துறைக்குத் தேவையான கருவிகளை—உபகரணங்களை நன்கொடையாக அளித்து வருகின்றனர்.

பட்ட வகுப்புகளுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதற்காகப் பொது அறுவைச் சிகிச்சையில் எம்.எஸ். பயிலும் மாணவர்கள், தம் இறுதியாண்டில் ஆறு வாரங்கள் இங்குள்ள புறநோயாளர் துறையில் பயிற்சி பெறுவதற்கு அமர்த்தப்படுகின்றனர்.

புறநோயாளர் துறையில் (Outpatient Department) இரண்டு பிரிவுகள் உள்ளன. அவை, 1. எலும்பு முறிவுச் சிகிச்சை (2) முடநீக்கு இயல் சிகிச்சை. நாள்தோறும் புறநோயாளர்களுக்காகச் சிகிச்சைகள் அளிக்கப் பெறுகின்றன. 1. இளம்பிள்ளைவாதச் சிகிச்சை (வியாழன் மட்டும்) 2. பிறவியில் முடங்கிய கால்கள் சிகிச்சை (வெள்ளி மட்டும் 3. முதுகுவலிச் சிகிச்சை (நாள்தோறும்) 4. கீல்வாதச்சிகிச்சை (நாள்தோறும்).

விபத்துக்களால் மட்டுமல்லாது கிருமிகளாலும்; காசநோயாலும் எலும்பு நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கான சிகிச்சையும், பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகின்றது.

எலும்புருக்கி நோயும் இன்று பெருமளவில் பெருகி வருகிறது. இதற்கான சிகிச்சைக்கு வரும் பெரியவர்கள், குழந்தைகளின் எண்ணிக்கையோ இன்னும் குறைந்தபாடில்லை!

காசநோய்க்கிருமிகள் எலும்பிலோ அல்லது மூட்டுச் சுரப்புச் சவ்விலோ சேர்ந்து கொள்கின்றன. இதனால் தந்துகிகள் அறுந்துவிடுகின்றன. இந்நோயால் உடலில் கொதிப்பும், இரத்தக் குறைவும், பசியின்மையும், நிறைக் குறைவும் உண்டாகிறது. பொதுவாக இந்நோய் தடுக்கக் கூடியது. பெரும்பாலும் முதுகெலும்பைத் தாக்கும் இந்நோய்க்கும் இத்துறையில் தக்க சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

மனித உடலில் புற்றுநோய் வராத இடம் எது? ஆகவே, இந்நோய் எலும்பையும் பற்றுகிறது. இதற்குங்கூட இம்மருத்துவமனையில் சிகிச்சை தரப்படுகின்றது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் காலுக்குச் செயற்கை எலும்பு பொருத்தப்பட்ட செய்தி ஒன்று அண்மையில் பத்திரிகையில் வெளிவந்தது.

டோக்கியோவில் உள்ள 'ஜீகெய்காய்' மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைமை மருத்துவராக இருக்கும் பேராசிரியர் எசுடோ இடாமி இதற்கான அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளாராம்.

கால் எலும்பில் புற்றுநோய் கண்டு அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விவசாயி ஒருவருக்கு இந்த அறுவைச் சிகிச்சை நடந்தது. வலது பக்கத்தில் இடுப்பு இணைப்புக்குக் கீழ், முழங்கால் இணைப்புவரை உள்ள தொடை எலும்பானது புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த எலும்பை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்று செய்யப்பட்ட செயற்கை எலும்பு ஒன்று அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது. இந்தச் செயற்கை எலும்பு, இயற்கையான எலும்பைவிட வலுவுள்ளது என்று கூறப்படுகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு செயற்கைக்



தளர்[illegible] இயங்கிடப் பயிற்சி







கால் எலும்பு பொருத்தும் அறுவைச் சிகிச்சை இதுவே முதலாவதாகும். ஆகவே, இனி எலும்புப் புற்றுநோயைக் குணமாக்க முடியும் என்ற நம்பிக்கை ஒளி மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ளது.

இதோ! பயிற்சிச் சிகிச்சைத் துறைக்குச் செல்கிறோம். அன்று அங்கு பார்த்த பரிதாப நிகழ்ச்சிகள் இன்னும் கண்முன் தெரிகின்றது. பிறவிக் குறையினுலோ, பிற விபத்துக்களினுலோ நோயுற்றவர்கள் அங்குப் பயிற்சி பெறும் காட்சி நம் நெஞ்சை உருக்குகின்றது.

'பயிற்சிச் சிகிச்சை' என்பது மருத்துவத்தின் மூன்றாவது கட்டம் ஆகும். முதல் கட்டம் நோயை முன்னறிதல்; இரண்டாவது கட்டம் நோய்க்குச் சிகிச்சை செய்தல்; மூன்றாவது கட்டம்தான் பயிற்சிச் சிகிச்சையாகும். நோயுற்றோர் முழு குணம் அடைந்து தத்தம் தொழில்களைச் செய்வதற்குத் திடப்படுத்துவதுதான் இத்துறையின் நோக்கமாகும்.

விவசாயி ஒருவருக்கு, வலக்கை மணிக்கட்டில் ஒரு பெரிய கல் விழுந்து அந்த இடம் நசுங்கி விட்டதாம். அறுவைச் சிகிச்சையில் மணிக்கட்டுவரை அப்புறப்படுத்தி விட்டார்கள். பிறகு அந்தக் கையை அவரால் பயன்படுத்த முடியாததை அறிந்த மருத்துவர் ஒரு யுக்தியை அறுவைச் சிகிச்சையின்போது கையாண்டார். முழங்கையை இரு விரல்களைப்போல இரு பிரிவாகப் பிரித்துத் தைத்துவிட்டார்!

இப்போது அதை இரு விரல்களைப்போல இவரால் அசைக்க முடியும்! இந்த இரு விரல்களால் சிறு கரண்டியைப் பிடித்துச் சாப்பிடவும், எழுதவும் இவருக்குப் பயிற்சி கொடுத்தது வீண்போகவில்லை. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அவர் எழுதிக் கொடுத்ததைக் கண்டு நம் மனம் மகிழ்கிறது; அதே சமயத்தில் அவர் நிலை கண்டு இரங்குகிறது.

இந்தப் பகுதியில் நோயாளிகளுக்கு விதவிதமான பயிற்சிகள் அளிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

ஒரு குழந்தை ஒரு தொட்டிக்குள் நின்றுகொண்டிருக்கிறது. அது அழாமல் இருப்பதற்காக அதனருகே வண்ண பொம்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நின்று நடக்க இயலாத குழந்தைக்கான பயிற்சி இது என அறிகிறோம்.

இன்னொரு சிறுமி ஒரு சறுக்கு மரத்தில் 'சறுக்கு விளையாட்டு' ஆடுவதுபோல் ஏறி ஏறிச் சறுக்கி வருகிறான். கால் முட்டிகள் நன்கு தளரச் செய்வதற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒருவர் சக்கரத்தைக் கையால் சுற்றிக்கொண்டிருக்கிறார். தோள்பட்டை இறுகிப்புன்ன நோயாளிக்கு இந்தப் பயிற்சி தரப்படுகிறது. இதனால் இறுகிப்போன தோள்பட்டை இயற்கையான நிலைக்கு வந்துவிடும்.

ஒரு முதிய அம்மையார், இருபுறமும் அமைந்த மரப்படிகளில் ஏறி ஏறி இறங்குகிறார். இது எதற்காக? காலில் அடிபட்டோர் படிகளில் ஏறிப் பழகுவதற்காக இந்தப் பயிற்சி அவர்களுக்கு அவசியமாகிறது.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே போகிறோம். ஒருவர் கயிற்று இராட்டினத்தை இரு கைகளாலும் பற்றி இழுத்துக்கொண்டிருக்கிறார். இதுவும் தோள்பட்டை இறுகிய நோயாளிக்கான பயிற்சியென அறிகிறோம்.

குழந்தை ஒன்று படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறது. செவிலியரில் ஒருவர் அதன் கால் விரல்களை அசைத்துக்கொண்டிருக்கிறார். இளம்பிள்ளைவாதநோயால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தையைப் பார்க்கும்போது நம் நெஞ்சம் நெகிழ்கிறது.

அதோ! அவரென்ன, சைக்கிள் ஓட்டுகிறாரா என்ன? ஆனால் நகரவேயில்லையே! அருகே போய்ப் பார்க்கிறோம். ஆம். அது சைக்கிள் போன்ற அமைப்புதான்! அதில் இரு கால்களையும் வைத்து மேலும் கீழுமாகச் சைக்கிள் ஓட்டுவது போன்றே செய்கிறார். இந்தப் பயிற்சி எதற்காக என்று அருகே இருந்த மருத்துவரைக் கேட்கும்போது, 'கால் முட்டிகள் நன்றாக வளைந்து கொடுப்பதற்காக' என்கிறார்.

'மெழுகைக் கீழே சிந்தாதீர்கள்!' என்ற அறிவிப்பைப் படித்துவிட்டு அங்கே பார்க்கிறோம். ஒரு தொட்டியில் மெழுகுக் குழம்பு பதமான வெப்பத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இருவர் அதனருகே உட்கார்ந்து கொண்டு, மெல்லிய துண்டுத்துணியை மெழுகுக் குழம்பில் நனைத்து எடுத்து, வலியுள்ள கால் முட்டிகளில் இதமாக ஒத்தடம் கொடுத்துக் கொள்கிறார்கள்.

அதைப் பார்த்துவிட்டு அப்பால் நகர்கிறோம். மின்சாரச் சாதனங்கள் அருகே உள்ள ஒரு படுக்கையில் படுத்திருப்பது ஒரு குழந்தை. இளம்பிள்ளைவாதக் குழந்தைக்கும், நரம்பு துண்டிக்கப்பட்டவர்களுக்கும் அளிக்கப்படும் மின் சிகிச்சையாம் இது!

கால்களில் 'பாண்டேஜ்' சுற்றப்பட்ட நான்கு வயதுக் குழந்தை ஒன்று, இரும்புக் கைப்பிடிகளைப்பற்றிக்கொண்டு மெல்ல நடந்து வருவதைப் பார்த்துப்பரிதாபப்படுகிறோம். மூளையில் இரத்த ஓட்டக் குறைவினால் இக்குழந்தையால் நடக்க இயலவில்லை என்று அறியும்போது, நம் இரத்த ஓட்டமே நின்றுவிடுகிறது! இதே பயிற்சிக்கு நான்கு சக்கரமுள்ள நடை வண்டியும் பயன்படுகிறது.

இளம்பிள்ளை வாதத்தால் நடக்க இயலாத குழந்தைகளின் தசைகளைப் பலப்படுத்த 'நீர்ச்சிகிச்சை' என்ற ஒரு புது முறைபயிற்சியும் இங்குத் தரப்படுகிறது. அதற்கான காற்று அழுத்தமுள்ள தண்ணீர்த் தொட்டி ஒன்றும் ஒரு பெட்டி போலக் காட்சியளிக்கிறது.

இப்பயிற்சிப் பிரிவைவிட்டு முடநீக்கு இயல் துறையின் 'வார்டு'க்கு வருகிறோம். அமைதியான சூழ்நிலையும், துப்புரவான தோற்றமும் நம்மைக் கவருகின்றன. மருத்துவரும், செவிலியரும் ஒவ்வொரு நோயாளரிடமும் வந்து நோயின்நிலையை அறிகின்றனர். அதைக் கண்டு நோயாளி மன நிறைவு பெறுகின்ற காட்சியையும் பார்க்கிறோம்.

முடநீக்கு இயல் துறையில் ஓராண்டில் 50,000-க்கு மேற்பட்ட உட்புற, வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். உதாரணமாக 1957-ல் அதாவது அந்த ஒரு ஆண்டில், எலும்பு நோய்கள் சம்பந்தமாக வந்த நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1139. ஆனால் 1973-ல் நவம்பர் மாதம் மட்டும் வந்த நோயாளிகளின் எண்ணிக்கையோ 2244.

இந்த எண்ணிக்கை மேலும் வளரலாமா? வளர்வது நல்லதா? அதைத் தடுப்பதற்கான வழி நம்மிடமே உள்ளது. தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் பணி புரிபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் படபடப்பும், அவசரமும் உள்ளவர்கள்தான் இத்தகைய விபத்துக்களுக்கு ஆளாகிறார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

எலும்பில் நோயுள்ளவர்களோ காலந்தாழ்த்தாமல் உடனே மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது நல்லது. பொதுவாக எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களைக் குணமாக்க முடியுமாதலால், இந்த எண்ணிக்கையை மேலும் வளரவிடாமல் தடுக்கும் வழியில் நாம் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மை முடமாக்கும் இந்த நோயை நாம் முடமாக்க முடியும்!

—பி. வி. ஜி

# தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள்

1973-74-ஆம் ஆண்டிலும், 1974-75-ஆம் ஆண்டிலும் ரூபாய் 182.57 இலட்சம் செலவில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை:—

| | ரூபாய் லட்சத்தில் |
|---|---|
| மாவட்டத் தலைநகரங்களில் பயணிகள் விடுதிகள் கட்டுதல் ... | 24.50 |
| தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் விடுதிகள் கட்ட ... | 7.00 |
| சிதம்பரத்தில் விடுதி கட்ட (35 படுக்கைகள் கொண்டது) ... | 5.00 |
| குற்றாலத்தில் விடுதி கட்ட (100 படுக்கைகள் கொண்டது) ... | 10.00 |
| ஒசூரிலும், பூண்டியிலும் விடுதிகள் கட்ட ... | 7.00 |
| பழனியில் விடுதி கட்ட (35 படுக்கைகள் கொண்டது) ... | 3.50 |
| சென்னை நகரில் விடுதி கட்ட (100 படுக்கைகள் கொண்டது) ... | 10.00 |
| போக்குவரத்திற்காக 6 ஊர்திகளை வாங்கிட ... | 9.00 |

# சோழன் போக்குவரத்துக் கழகம்

## தலைவர் உரை

கழகத்தின் (கம்பெனி) இரண்டாவது ஆண்டு நிறை பொதுக் குழுவினில் உங்கள் அனைவருக்கும் மனமுவந்த வரவேற்பு அளிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இயக்குநர்களின் அறிக்கையும், 1972—73-ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்த கணக்கு அறிக்கைகளும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன; உங்கள் இசைவுடன் அவைகளைப் படித்ததாக நான் கொள்ளுகின்றேன்.

**கழகத்தின் வளர்ச்சி**

2. இயக்குநர்களின் அறிக்கை குறிப்பிட்டது போல, உங்கள் கழகத்தின் வாகனங்களின் எண்ணிக்கை நடப்புக் காலத்தில் 176-இல் இருந்து 263 ஆக உயர்ந்ததன் மூலம் 47 சதவீத வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதியில் வாகனங்களின் எண்ணிக்கை 339 ஆக மேலும் உயர்ந்திருக்கின்றது. நாளொன்றுக்கு 2.25 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று, ரூபாய் 70,000 வருவாய் ஈட்டியதுடன், இந்த நடப்பு ஆண்டில் உங்கள் கழகம் வழிச் செலவுத் தூரத்தையும் இருமடங்காக்கி உள்ளது.

3. காவிரியால் பிரிக்கப்பட்டும், அதன் கிளை ஆறுகளால் மேலும் பிரிக்கப்பட்டும் உள்ள பரந்த கழிமுகத்தைக் கொண்டது தஞ்சை மாவட்டம். இதன் மூலம் பல பாதைத் திருப்பங்களும், குறுகலான கரைகளும் மேலும் பல கிராமங்களும், சுற்றிச் சுற்றிச் செல்ல வேண்டிய பாதைகளும் ஏற்பட்டன. நாட்டுப்புற விவசாய வேலையின் செறிவு ஒரு சதுர மைலுக்கு முறையே 0.50 கிலோ மீட்டர் பாதை, 0.25 கிலோ மீட்டர் பாதை என்று இந்த மாநில நாட்டு சராசரிகளை மீறி, இம்மாவட்டத்தில் அது 0.61 கிலோ மீட்டர் பாதையாக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக, அறுவடைக்கு முற்பட்ட காலங்களில் நாட்டுப்புறங்களில் போக்குவரத்து மிகக்குறைவாகவே இருக்கின்றது. இது போக்குவரத்து எண்ணிக்கையில் ஒரு மாறுபாட்டை உண்டாக்குகின்றது. இந்த மாவட்டத்தின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு முறை உச்ச போக்குவரத்து நேரங்களில், போக்குவரத்துத் துறையைப் பாதிக்கின்றது.

4. உங்கள் கழகம் சுமார் 25 சதவீதம் 50 பேர் உட்காரும் இடத்துக்கும் குறைவான வாகனங்களைக் கொண்டுள்ளது. இது நமது வருமானத்தை ஓரளவு பாதித்துள்ளது. போக்குவரத்து மிகுதியாக உள்ள இடங்களில், அதிக இட வசதியைக் கொண்டுள்ள புதிய பேருந்துகளை உபயோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

5. பழைய பேருந்துகளை மாற்றுவதற்கு உங்களது கழகம் ஒழுங்கு முறையான ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. ஒரே இடத்தைக் கடப்பதற்கு பழைய வாகனங்கள் அதிக டீசலை எடுத்துக் கொள்ளும் என்பது உங்களுக்குத் தெரியும். உலகம் முழுவதும் பெட்ரோலியப் பொருள்கள் பற்றாக் குறையாக உள்ள இத் தருணத்தில், எக்காரணத்தைக்கொண்டும் நாம் இந்த அதிகச் செலவிற்கு இடம் கொடுத்திடக் கூடாது. எனவே, உங்களது கழகம் குறைந்த காலத்தில் இயன்ற அளவு, பழைய வாகனங்களை மாற்றுவதற்குரிய துரிதத் திட்டத்தை இப்பொழுது மேற்கொண்டுள்ளது.

**நிதிச் சாதனை**

6. தமிழ்நாடு அரசு 1972 சனவரித் திங்களில் இந்தக் கம்பெனியை அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியபோது—வாகனங்களை அவ்வப்போது மாற்றுவதற்கு உரிய நிதியை அதனுள் வரும் வருமானத்தைக் கொண்டே தாங்கிக் கொள்வதற்கு உத்திரவாதம் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அந்தக் கம்பெனி உரிய வட்டித் தொகையைச் செலுத்தி, தேய்மானத்திற்குத் தேவையான நிதியையும் ஒதுக்கிய பிறகு, போடப்பட்ட மூலதனத்திற்கு 6 சதம் வருமானம் ஈட்டித் தர வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது. 1972—73-இல் கம்பெனிக்குப் போடப்பட்ட மூலதனம் ரூபாய் 10 இலட்சம் ஆகும். இதனைத் தமிழக அரசு முன்னதாகவே கொடுத்தது. இந்த அடிப்படையில் வரி செலுத்துவதற்கு முன்னதான லாபம் ரூபாய் 3.25 இலட்சத்தில் 12 சதம் லாபப் பங்கினைத் தர இயலும்.

7. தனது பெரும் பகுதியான தேவைகளை, வாங்கும் கடன் மூலம் சமாளிக்க இயலுவதால் உங்கள் கம்பெனியைப் போன்ற அரசு நிறுவனங்களின் நிதிச் செயலுக்கு உரிய சரியான முறை போடப்பட்ட மொத்த மூலதனத்திற்கு வருகின்ற வருமானமே ஆகும். உங்கள் முன்னுள்ள தணிக்கைக் கணக்குக் காட்டுவதுபோல, நடப்பு நிதி ஆண்டில் போடப்பட்ட மூலதனத்தின் அடிப்படையில் வருமானம் 14.5 சதவீதம் வருகிறது.

8. போக்குவரத்து போன்ற பொது நுகர்வு நிறுவனத்திற்கு இந்த நிதிச் சாதனை மிகச் சிறந்த ஒன்றாகும் என்ற என் கருத்தை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். உங்கள் கழகம் சில தனிப்பட்ட பிரச்சினைகளைக் கொண்டிருந்தது. பல்வேறு அமைப்புக் கூறுகளைக்கொண்ட ஏராளமான பழைய பேருந்துகளை, இந்தக் கழகம் ஏற்க வேண்டியிருந்தது. நடப்பு ஆண்டில் இந்த நிறுவனம் 85 வாகனங்கள்—அவைகள் [illegible] ஆண்டுகள் பயன்படுத்தப்பட் [illegible] கொள்ளாமல் [illegible] அளவு [illegible] உள்ள [illegible] நீங்கள் இந்தக் கழகத்தின்

சாதனையை ஆய்வு செய்ய வேண்டியிருக்கும். பெரும்பகுதியான இந்த வாகனங்களின்பேரில் தேய்மானம் முழு ஆண்டிற்கும் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அவை, இரண்டாம் அரையாண்டின் பிற்பகுதியில்தான் உண்மையிலேயே விடப்பட்டன. இந்தப் பெருஞ் சாதனைக்காக உங்கள் நிர்வாக இயக்குநர் பேராசிரியர் திரு வா. அய்யாசாமியையும், உங்கள் ஏனைய எல்லா ஊழியர்களையும் நான் பாராட்டுகிறேன்.

9. வரும் ஆண்டில் உங்கள் செயல் திறனில் நல்ல முன்னேற்றத்திற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதை நான் சொல்லத்தான் வேண்டும்; உங்கள் நிர்வாகம் தனது சக்தியால், வரும் ஆண்டில் நல்ல சாதனைகள் புரிந்திடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**பொதுத்துறை நிறுவனங்களில் முதலீட்டுப் பங்கும், நிர்வாகப் பங்கும்**

10. தமிழ்நாடு அரசு அறிவித்த— அரசுக்குச் சொந்தமான போக்குவரத்து இணையங்களில், முதலீட்டுப் பங்கிலும், நிர்வாகத்திலும் தொழிலாளர் பங்கு பெறும் திட்டம் இவ்வாண்டில் இரண்டு சகோதர இணையங்களில் புகுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டம் உங்கள் கம்பெனியிலும் புகுத்தப்படும் என்று நம்புகிறேன்.

**பணித்துறைக் கொள்கை**

11. நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவின் சில நலிவுகளுக்குக் காரணம் சரியான பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவர்களுக்குப் போதுமான பயிற்சி அளிப்பதிலும் ஏற்பட்ட தவறே என்று நாம் உணருகின்றோம். கல்வி அறிவு இல்லாதவர்களை துப்புரவு ஆளர்களாக தேர்வு செய்து காலப்போக்கில் அவர்களை மெக்கானிக்குகளாக (பொறி நுட்பம் அறிந்தவர்களாக) மாற்றுதலே, தொடர் பேணும் முறையில் உள்ள கோளாறுகளுக்கு ஒரு காரணம் ஆகும். நாம் துப்புரவு ஆளர் பணிப் பிரிவை ஒழித்துவிட்டோம் ; போக்குவரத்து துறையில் கடைசிப் பணிப் பிரிவுக்கு, தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தேர்வு பெற்றவர்களையே தெரிந்தெடுப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். தொழிற் பயிற்சி நிறுவனத் தகுதி பெற்ற (ஐ. டி. ஐ. சான்றிதழ் பெற்ற) இப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர், சில ஆண்டு பட்டறிவிற்குப் பின்னர் மெக்கானிக்காக இருக்கவோ அல்லது ஓட்டுநர் வேலையை ஏற்றுக் கொள்ளவோ முடிவு செய்ய இயலும்.

12. போக்குவரத்துத் துறையில் முதன்மையிடம் வகிப்பவர் ஓட்டுநர் ஆவார். முன்னாளில் ஒரு தொழிலாளி துப்புரவாளராகப் பணியைத் தொடங்கி மெக்கானிக்காக மாறி ஓட்டுநர் தகுதியைப் பெறுவார். அவர் இவ்வாறு ஓட்டுநராக வருங்காலை இயந்திரத்தில் என்ன கோளாறு இருக்கிறது—அதை எவ்வாறு நீக்குவது என்பன பற்றிய பயனுள்ள அறிவினைப் பெற்று விடுகின்றார். இவ்வாறு மிகுந்த சிரமங்களுக்கு இடையே பெற்ற பட்டறிவு, பல சமயங்களில், தொழில் நுட்பப் பள்ளியில் கற்ற கருத்தியலான அறிவை விடப் பயனுள்ளதாக இருந்தது. ஓட்டுநர் வேலைக்கு ஏற்பட்ட மிகுதியான தேவையின் காரணமாக, நமது ஓட்டுநர் தகுதி குறைந்துள்ளது. மிக நீண்ட காலம் மெக்கானிக்காகப் பணிபுரிந்து பேருந்தில் எங்கு கோளாறு ஏற்படுகிறது என்பதைச் சட்டெனக் கண்டுபிடிக்கும் வகையான ஓட்டுநரை இன்று காண்பது அரிதாக இருக்கிறது. நாம் இன்று காணும் ஓட்டுநர்கள் சில சமயங்களில் மட்டும் சரியான தொழில் நுணுக்கத்துடன் வண்டியைச் செலுத்துபவர்களாகவும், அடிக்கடி கவனக்குறைவாக செலுத்துபவர்களாகவும், எவ்வாறு எஞ்ஜின் வேலை செய்கின்றது என்பதையும் தங்களுடைய ஓட்டும் பழக்கம் எவ்வளவு தூரத்திற்கு, இயக்குவதற்கு ஏற்படுகிற செலவினைப் பாதிக்கின்றது என்பதையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

Advt

13. நாட்டுப் புறப் பகுதிகளின் பெருவழித் தடங்களில் எவ்வித மேற்பார்வையும் இன்றி 1 இலட்ச ரூபாய்க்கு மேலுள்ள வாகனத்தைச் செலுத்துகின்ற பொறுப்பினை ஏற்கின்ற மனிதன், உண்மையிலேயே சமுதாயம் அவனுக்கு இது நாள் வரை எந்த மதிப்பினைத் தந்து வந்ததோ அதற்கும் மேலான மதிப்புடையவன் ஆவான். பொறையுடைமை, பொறுமை, மற்றையத் தகுதிகளைத் தவிர கணிசமான திறமை, ஓட்டுநர் பொறுப்பினை மேற்கொள்வோருக்குத் தேவைப்படுகிறது என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது.

எதிர்காலத்து ஓட்டுநர்கள், இயங்கு பொறியியல் துறையில் அடிப்படைத் தகுதி பெற்றவர்களில் இருந்தே தெரிந்தெடுக்கப்படல் வேண்டும். சரியான தகுதி பெற்றவர்களைக் கவர்வதற்கு அவ்வாறு தொழில் நுட்ப முறையில் தேர்ந்தவர்களுக்கு உயரிய ஊதியம் கொடுக்கப்படல் வேண்டும். உயரிய ஒரு துறையின் அங்கமே ஓட்டுநர்கள் என்பதைச் சமுதாயம் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும்.

14. இன்றிருக்கின்ற நிலையில் இருந்து, நாளையிருக்க வேண்டிய நிலைக்கு ஏற்படுகின்ற மாற்றம் மிக மெதுவாக நடக்கக்கூடிய ஒன்று என்பதை நான் அறிவேன். நம்முடையது போன்ற பொதுத் துறை இணையங்கள் தேர்வு பெற்ற தொழில் நுணுக்கம் உடைய ஓட்டுநர்களை உயரிய ஊதியத்தில் தேர்ந்தெடுத்து சமுதாயத்தில் ஓட்டுநர் தொழிலுக்கு ஒரு உயர்ந்த இடத்தினைப் பெற்றுத் தருவதில் ஒரு முன்மாதிரியைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று நான் பெரிதும் ஆசைப்படுகிறேன்.

15. உலகெங்கணும் ஆற்றல் பஞ்சம் (Energy crisis) உள்ள நாளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெட்ரோலியப் பொருள்களுக்கு உலகளாவிய தட்டுப்பாட்டிற்கான, வரலாற்றுக் காரணங்கள் யாதாக இருப்பினும், இந்தியாவில் உள்ள நாம் இன்னும் பல ஆண்டுகளுக்கு எண்ணை இறக்குமதி செய்வதன் வாயிலாகப் பிற நாட்டுச் செலாவணியில் பெரும் பகுதியை நாம் தொடர்ந்து செலவு செய்ய வேண்டியிருக்கிறது. நமது போன்ற எண்ணையைப் பெரும் பகுதி பயன்படுத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்த என்ன செய்ய இயலும்? உங்களுடன் கலந்து பேசுவதன் மூலமாக, இது பற்றிய எனது எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள, இத் தருணத்தில் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

16. ஒரு குறிப்பிட்ட வேகத்தில்தான் உயர்ந்த எரிபொருள் திறனை எய்த இயலுகின்றது என்பது நாம் அறிந்ததாகும். அந்த வேக எல்லைகளைக் கடந்து வாகனங்களை ஓட்டுதல் அதிக எரி பொருள்கள் செலவினில் முடியும்.

வாழ்க்கையின் அளவையும் நாடித் துடிப்பினையும், வேகம் ஒழுங்குபடுத்துகின்ற அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற மேட்டுக்குடி நாடுகளில் கூட, வழித் தடங்களில் வாகனங்களின் வேகத்தைக் குறைத்து எரிபொருள் துய்ப்பினை மிகுதிப் படுத்துவதற்கான செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன. பல் திறப்பட்ட தயாரிப்பிற்குரிய பேருந்துகள், மிக விருப்பத்திற்குரிய எரி பொருள் திறனுடன் இயங்குகின்ற வகையில் உள்ள அதிக வேகத்தினை நிறுவுவதற்கு உரிய ஆய்வுகளைப் பொதுப் போக்குவரத்துத் துறை நிறுவனங்கள் மேற்கொள்ளுதல் அவசியம். அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லையினைத் தாண்டி வேகமாக இயங்கும் வாகனங்களைத் தடை செய்வது பற்றி நிறுவனங்கள் ஆராயப்படல் வேண்டும். தொடங்கப்படும்போது அவ்வகையான திட்டத்திற்கு ஆதரவு இருக்காது என்பதை நான் அறிவேன். ஆனால் அதனுடைய விளைவுகள் மக்களுக்கு விளக்கப்பட்டால் அவ்வகையான முறைகளை மக்கள் மனமுவந்து மேற்கொள்ளுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

17. நமது நாட்டுடைமை ஆக்கப்பட்ட துறையில் எண்ணிறந்த பழைய வாகனங்கள் உள்ளன. ஒரு பழைய வண்டி புதிய வண்டியைவிட 15 முதல் 20 சதவீதம் வரை அதிகமாக டீசல் எண்ணையை உட்கொள்ளுகிறது என்று மதிப்பிடப்படுகிறது. இதனை மாற்றுகின்ற நமது திறமை நமக்குள்ள நிதி நிலையைத் தவிர சந்தையில் புதிய வாகனங்கள் கிடைப்பதையும் பொறுத்திருக்கிறது. பழைய வாகனங்களின் என்ஜினைப் புதுப்பிப்பதற்கு ஒரு விரைவுத் திட்டத்தை மேற்கொள்ளுதல் நல்லது.

18. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் இப்போதுள்ள அளவிலேயே, கால அட்டவணைப்படி வண்டிகளை இயக்கிச் செல்வதையும், இப்போதுள்ள சிறு தொலைப் பயண எண்ணிக்கையைப் பேணுவதையும் தொடர்வதா என்பதனை ஆய்வு செய்தல் நல்லது.

தண்ணீருக்கும், மின்சாரத்துக்கும் அடுத்தபடியாக சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படுவது, திறமை வாய்ந்த பொதுப் போக்குவரத்துதான் என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். அடிக்கடி வண்டிகளை விடுவது நல்லது. ஒரு குடிமகன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுதந்திரமாகவும், வேகமாகவும் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்ற கூற்றிற்கு எவ்வித முகாந்தரமும் இல்லை. அடிக்கடி வண்டிகளை விட்டு இடத்திற்கு இடம் மக்கள் செல்வதற்கான உத்திரவாதம் அளிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது போன்ற போக்குவரத்து இணையங்களைச் சார்ந்தது. முன்பெல்லாம் குறைந்த சுமையுடன் (Marginal Load Factor) அடிக்கடி நடக்கும் போக்குவரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது. அப்படி அடிக்கடி மேற்கொள்ளப்படும் பயணங்கள் விரும்பத்தக்கதா? அல்லது குறைந்த சுமையுடன் கூடிய பயணங்களை நிறுத்தி விடுவதா? நமது நகர்ப்புறங்களில் இது இயலாது. ஆனால் துரிதப் பயணங்களிலும் நாட்டுப்புறப் பயணங்களிலும் குறைந்த சுமையுடன் கூடிய பயணங்களைக் குறைத்தல் இயலும். இந்நாளில் இக் கேள்வி நம் முன் பெரிதாக நிற்கின்றது.

19. நமது நாட்டில் 65 சதவீத பயணிகள் போக்குவரத்து தனிப்பட்ட முதலாளிகளாலும், தனியார் கம்பெனிகளாலும் நடத்தப்படுகின்றது. பல இடங்களில் இவர்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துப் பணிக்குப் போட்டியாக இயங்குகிறார்கள். அதாவது பயணிகள் போக்குவரத்து முழுமையும், நாட்டுடைமை ஆக்கப்படும் முன், எதிர்க்கு எதிராகப் போட்டியிட்டு இயங்கும் இடங்களில், பொதுத் துறையும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட பொதுத் துறையும் சேர்ந்து இயங்குவதற்கான சில வழி வகைகளை நாம் ஏன் எண்ணக்கூடாது? அம்மாதிரியாகச் சேர்ந்து இயங்கும் ஏற்பாடுகள் பல நாடுகளில் விமானக் கம்பெனிகளில் பழக்கத்தில் உள்ளன. அது போன்ற ஏற்பாடுகள் ஒட்டு மொத்த எரி பொருள் செலவினைக் குறைக்கின்ற வரையில் அம்மாதிரியான ஏற்பாடுகளைக் கண்டு அவற்றிற்கு ஒரு நல்ல வெள்ளோட்டம் கொடுப்பதில் எவ்விதத் தயக்கமும் கூடாது.

20. பயணிகளின் தேவைகளையும் நாட்டின் தட்ப வெப்ப நிலையினையும் சுதேசி மாற்றுப் பொருள் கிடைப்பதையும் கருத்திற்கொண்டு நம்முடைய பேருந்துகளின் அமைப்பினை தரத்தில் உயர்த்துவதற்கு என்ன செய்ய இயலும்? ஒரே தூர ஓட்டத்திற்கு கனம் குறைந்த பேருந்துகளாயின், குறைந்த எரி பொருளையே துய்க்கும். சென்ற 10 ஆண்டுகளில் பேருந்துகளின் உருவ அமைப்பில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கனம் குறைந்த பேருந்து உருவங்களைச் சமைப்பதை அடிப்படையாகக் கொண்டு நாம் மேலும் மாற்றங்கள் செய்ய இயலுமா? எரி பொருள் சிக்கனத்தை ஏற்படுத்துகின்ற பேருந்து உருவ அமைப்புகளைக் கண்டுபிடிப்பதை மனதில் கொண்டு இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள், உருவ அமைப்பாளர்களையும், தன்னியங்கிப் பொறியாளர்களையும், பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

21. மிகப் பெரும் அளவில் எரி பொருள்களைப் பயன்படுத்தும், தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் சில எரி பொருள் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவு திரட்ட இவ்வாய்ப்பினை நான் பயன்படுத்திக் கொள்ள நினைக்கின்றேன். நான் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தலைவன் என்ற முறையில் இதைக் கூறுகிறேன். இக்கருத்துக்கள் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

நன்றி.

**எம். எஸ். ராம்,**

கும்பகோணம்,

**தலைவர்.**

# கரும்பு உற்பத்தியைப் பெருக்கிடுவோம்

**ரே.மா**



ஊட்டச் சத்துணவு ஆராய்ச்சியின்படி வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் குறைந்தது 2 அவுன்சு சர்க்கரை தேவைப்படுகிறது! இந்த அளவில் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் சர்க்கரை வழங்கப்பட வேண்டுமெனில், தமிழ்நாட்டிற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1978-79-ல் 9.95 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும், ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான 1983-84-ல் 10.94 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும் தேவைப்படுகிறது!

''70 கோடி மக்களுக்கான வேளாண்மைத் திட்டம்'' என்ற நூலில் திரு பி. சி. பான்சில் என்ற மேதை, சராசரி ஒரு மனிதனுக்கு சமநிலை உணவு அளிக்க நாளொன்றுக்கு 2.5 அவுன்சு சர்க்கரை தேவை என்று பரிந்துரைத்தார். அவரது கருத்தின்படி பார்த்தால், தமிழ்நாட்டிற்கு 1978-79-ஆம் ஆண்டில் 12.44 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும், 1983-84-ஆம் ஆண்டில் 13.67 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும் தேவைப்படுகிறது!

தற்பொழுது தமிழ்நாட்டில் 2.99 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும், 5.92 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லமும், ஆக 8.91 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியாகிறது. நாள் ஒன்றுக்கு வயது வந்த ஒவ்வொருவருக்கும் 2 அவுன்சு சர்க்கரை தேவை என்ற அடிப்படையில் கணக்கிட்டால், தற்பொழுதுள்ள சர்க்கரை மற்றும் வெல்ல உற்பத்தி தமிழ்நாட்டின் தேவைக்குப் போதுமானதாகும்!

ஆனால், தமிழ்நாட்டு மக்கள் 1970-71-ஆம் ஆண்டில் 1.80 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை மட்டுமே பயன்படுத்தியுள்ளனர். சர்க்கரைக்குப் பதிலாக வெல்லத்தையும்பெருமளவில் தமிழக மக்கள் பயன்படுத்தி வருவதால், வெல்லத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்வோமானால், 1970-71-ஆம் ஆண்டில் 3.9 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லம் தமிழக மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.



எனவே, தமிழக மக்களால் பயன்படுத்தப்பட்டது போக உபரியாக உள்ள 1.19 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையும், 2.02 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லமும் 1970-71-ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இன்றைய நிலையில் இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு ஆண்டில் சராசரியாக 5.8 கிலோ சர்க்கரையே (வெல்ல உபயோகத்தையும் சேர்த்து) பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு ஆண்டிற்குச் சராசரியாக 4.4 கிலோ சர்க்கரையை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகி வருவதாலும், வேளாண்மை உற்பத்தி விரைந்து பெருகி வருவதாலும், தமிழ்நாட்டு மக்களின் வாங்கும் சக்தியும் (Purchasing power) அதிகமாகி வருகிறது. இதனால் 1983-84-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஆண்டிற்குச் சராசரியாக 9 கிலோ சர்க்கரையையும், அத்துடன் 6 கிலோ வெல்லத்தையும் பயன்படுத்தும் நிலை ஏற்படும் என்பது திண்ணம்!

சர்க்கரை பயன்படுத்தும் பழக்கம் பெருகி வந்தபோதிலும், 1961-ஆம் ஆண்டிற்கும் 1971-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட பத்து ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் வெல்லம் பயன் படுத்துதல் ஒருவருக்கு ஒரு ஆண்டிற்கு 10 கிலோ என்ற அளவிலேயே இருந்துள்ளது. சர்க்கரை உற்பத்தி பெருகுவதாலும், போதிய அளவுக்குச் சர்க்கரை கிடைக்கவிருப்பதாலும், அதற்கேற்ப வருங்காலத்தில் வெல்லத்தின் உபயோகம் குறையும்! 1983-84-ஆம் ஆண்டில் தனிப்பட்ட ஒருவர் பயன்படுத்தும் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் அளவு முறையே 9 கிலோவாகவும், 6 கிலோவாகவும் இருக்கும். இந்த அடிப்படையில், சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் எதிர்காலத் தேவை அட்டவணை—1-ல் கண்டவாறு இருக்கும்.

### அட்டவணை—1

சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் தேவை.

| ஆண்டு | ஒருவருக்கு ஒரு ஆண்டிற்குத் தேவைப்படும் அளவு (கிலோ) | தேவை (இலட்சம் மெட்ரிக் டன்) உண்பதற்காக | ஏற்றுமதிக்காக | மொத்தம் | தேவைப்படும் கரும்பின் அளவு |
|---|---|---|---|---|---|
| அ. சர்க்கரை: | | | | | |
| 1973—74 | 4.7 | 2.03 | 1.17 | 3.20 | 37.00 |
| 1978—79 | 6.7 | 3.21 | 2.70 | 6.00 | 67.00 |
| 1983—84 | 9.0 | 4.74 | 4.51 | 9.25 | 103.00 |
| ஆ. வெல்லம்: | | | | | |
| 1973—74 | 10.0 | 4.31 | 2.09 | 6.40 | 64.00 |
| 1978—79 | 7.7 | 3.69 | 1.81 | 5.50 | 55.00 |
| 1983—84 | 6.0 | 3.16 | 1.24 | 4.40 | 44.00 |

சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றினை உற்பத்தி செய்வதற்காக கரும்பு உற்பத்தியை மேற்கொள்வதுடன், கரும்பு பயிரிடுவதற்கான விதைக் கரணைகளை உற்பத்தி செய்வதற்காகவும், சாறு பிழிந்து குடித்தல், தின்பது போன்ற இதர காரணங்களுக்காகவும் கரும்பு உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. ஆகவே, தமிழ்நாட்டில் அட்டவணை—2-ல் கண்ட அளவு கரும்பு உற்பத்தி செய்யப்பட வேண்டி உள்ளது.

### அட்டவணை—2

உற்பத்தி செய்யப்பட வேண்டிய கரும்பின் அளவு

(இலட்சம் மெட்ரிக் டன்)

| ஆண்டு | சர்க்கரை உற்பத்திக்காக | வெல்லம் உற்பத்திக்காக | விதைக்கரணை மற்றும் இதர காரணங்களுக்காக | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1973—74 | 37.00 | 64.00 | 11.00 | 112.00 |
| 1978—79 | 67.00 | 55.00 | 14.00 | 136.00 |
| 1983—84 | 103.00 | 44.00 | 16.00 | 163.00 |

மேலே கண்டுள்ளபடி தமிழ்நாட்டில் 1973-74-ஆம் ஆண்டில் 112 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பும், 1978-79-ஆம் ஆண்டில் 136 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பும், 1983-84-ஆம் ஆண்டில் 163 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பும் உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இந்த அளவுக்குக் கரும்பினை உற்பத்தி செய்ய, கரும்பு பயிரிடப்படும் பரப்பினை அதிகப்படுத்துவதுடன், நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டு ஏக்கர் உற்பத்தித் திறனையும் பெருக்க வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் அட்டவணை—3-ல் கண்டவாறு திட்டமிட்டுக் கரும்பு பயிரிட வேண்டியுள்ளது.

## அட்டவணை—3

### கரும்பு பயிரிடப்பட வேண்டிய பரப்பும், உற்பத்தி செய்யப்பட வேண்டிய கரும்பும்.

| ஆண்டு | கரும்பு பயிரிட வேண்டிய பரப்பு | ஏக்கர் மகசூல் (மெட்ரிக் டன்) | மொத்தம் உற்பத்தி செய்யப்படும் கரும்பின் அளவு (இலட்சம் மெட்ரிக் டன் |
|---|---|---|---|
| 1973—74 | 3,20,000 | 35 | 112.00 |
| 1978—79 | 3,63,000 | 37.5 | 136.00 |
| 1983—83 | 4,07,500 | 40 | 163.00 |

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் (1972—73) 2.98 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டது. இந்த ஆண்டில் (1973—74) 3.20 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் அண்மைக் காலத்தில் வெகுவாக முன்னேறியுள்ளதுடன், தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் முக்கிய அங்கம் வகிக்கிறது. 1950-51-ஆம் ஆண்டில் 1.25 இலட்சம் (51,000 எக்டேர்) இருந்த தமிழ்நாட்டின் கரும்புப் பரப்பு, 1972-73-ஆம் ஆண்டில் 2.98 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. 1950-51-ஆம் ஆண்டில் 3.30 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லம் என்ற அளவில் இருந்த கரும்பு உற்பத்தி, 1972-73-ஆம் ஆண்டில் 9.96 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லம் என்ற அளவுக்குப் பெருகியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்பொழுது மொத்தம் 16 சர்க்கரை ஆலைகள் செயல்படுகின்றன. அவைகளில் 7 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவை. மற்ற 9 சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையைச் சேர்ந்தவையாகும். இந்த 16 ஆலைகளின் மொத்த நிறுவப்பட்ட சாறு பிழியும் திறன் நாளொன்றுக்கு 21,840 மெட்ரிக் டன்னாகும். இதில் கூட்டுறவுத் துறை ஆலைகளின் திறன் 8,700 மெட்ரிக் டன் ஆகும். மேலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையும் நிறுவப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 1,250 மெட்ரிக் டன் கரும்பைச் சாறு பிழியும் திறன் படைத்தவை. தற்பொழுது செயல் படாது உள்ள 'பாலார் சுகர்ஸ் லிமிடெட்' ஆலையை மீண்டும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1971-72-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ்நாட்டில் 58 சத அளவு கரும்பு வெல்ல உற்பத்திக்காகவே பயன்படுத்தப் படுகிறது; 32 சத அளவு கரும்பு மட்டுமே சர்க்கரை உற்பத்திக்காகப் பயன்படுத்தப் படுகிறது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் செழிக்கச் செய்ய மொத்த கரும்பு உற்பத்தியில் 60 சத அளவைச் சர்க்கரை உற்பத்திக்காகப் பயன்படுத்த வேண்டும். இந் நோக்குடன் சர்க்கரை உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் சாறு பிழியும் திறனை மேலும் விரிவு படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. அத்துடன், ஐந்தாவது ஆறுவது திட்ட காலத்தில் மேலும் புதிதாக 8 சர்க்கரை ஆலைகளைத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 2,000 டன் கரும்பினைச் சாறு பிழியும் திறன் கொண்டதாக அமைக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. ஆகவே 1983-84-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தத்தில் நாள் ஒன்றுக்கு 57,500 மெட்ரிக் டன் சாறு பிழியும் சக்தி கொண்ட 28 சர்க்கரை ஆலைகள் இயங்கும் என்றும், அந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 9.25 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என்றும், அதில் 4.51 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது!

அது போலவே 1983-84-ஆம் ஆண்டில் 6 இலட்சம் மெட்ரிக் டன் வெல்லம் உற்பத்தி செய்யப்படும் என்றும், அதில் 1.24 இலட்சம் மெட்ரிக் டன்னை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது!

இவைகளின் மூலமாக தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப்படும் உழவர்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதுடன், தமிழ்நாட்டின் பொருளாதாரமும் செழிக்கும் என்பது உறுதி! இந் நிலை ஏற்பட வேண்டுமானால் தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடும் உழவர்கள் கரும்பு பயிரிடும் பரப்பை அதிகரிப்பதுடன், நவீன சாகுபடி முறைகளையும் மேற்கொண்டு கரும்பு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

எனவே, இன்பம் பொங்கிடும் பொங்கல் திருநாளில், தமிழக உழவர் பெருமக்களுக்குக் கீழ்க்கண்ட கரும்பு சாகுபடி குறிப்புக்களைப் பொங்கல் பரிசாகத் "தமிழரசு" சார்பில் வழங்கியுள்ளோம்!

### கரும்பு சாகுபடிக் குறிப்புகள்

#### பருவம்

"பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழிப்படி பருவத்தில் கரும்பு சாகுபடி செய்தால் தான், நிறைந்த மகசூல் பெற முடியும். தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடிக்கு முக்கியமாக 2 பட்டங்கள் ஏற்றதாக உள்ளன.

முக்கிய பட்டம்—டிசம்பர், ஜனவரி முதல் ஏப்ரல், மே வரை.

தனிப் பட்டம் ஜூலை முதல் செப்டம்பர் வரை.

[redacted]

முக்கிய பட்டத்தை முன் பட்டம், இடைப் பட்டம், பின் பட்டம் என்று 3 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை பின் கண்டவாறு அமைந்துள்ளன :

முன் பட்டம்— டிசம்பர், ஜனவரி.

இடைப் பட்டம்—பிப்ரவரி, மார்ச்சு.

பின் பட்டம் — ஏப்ரல்—மே.

மேற்கூறப்பட்ட காலங்களில் கரும்பு நடுவதே அதிக மகசூல் பெறுவதற்குரிய முதல் வழியாகும்.

#### இரகங்கள்

பருவத்திற்கு ஏற்ற இரகங்களைப் பயிரிடுவதே கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்குரிய இரண்டாவது வழியாகும். எனவே, பின்கண்டவாறு பருவத்திற்கு ஏற்ற கரும்பு இரகங்களை நடவு செய்யுங்கள்.

முன்பட்டம் —கோ. 449, கோ. 658, கோ. 997.

இடைப் பட்டம்—கோ. 449, கோ. 740, கோ. 419, கோ. 6304, கோ. 658.

பின் பட்டம் : கோ. 419, கோ. 853, கோ. 449, கோ. 740.

தனிப் பட்டம்—கோ. 658, கோ. 853, கோ. 449, கோ. 740, கோ. 853.

மேற்கூறிய இரகங்களில் கோ. 419, கோ. 740, கோ. 658, கோ. 449, கோ. 853 ஆகிய இரகங்கள் வெல்லம் தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றவைகளாகும். கோ. 419, கோ. 449, கோ. 658, கோ. 853, கோ. 6304 ஆகிய இரகங்கள் சர்க்கரை ஆலைப் பகுதிகளுக்கு ஏற்றவைகளாகும். மேலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோ. 6806, கோ. 62174 ஆகிய இரகங்கள் உழவர் பெருமக்களின் நிலங்களில் பரிசோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்பட்டு வருகின்றன.

#### வயது

| | |
|---|---|
| கோ. 419—12--13 | மாதம் |
| கோ. 449—11.5--12 | மாதம் |
| கோ. 658—11--12 | மாதம் |
| கோ. 740—11.5--12 | மாதம் |
| கோ. 853—12--14 | மாதம் |
| கோ. 997—10.5--12 | மாதம் |
| கோ. 6304—12 | மாதம் |

#### நிலம் தயாரித்தல்

கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்கு நன்கு நிலத்தைத் தயாரிப்பது மூன்றாவது வழியாகும்.

கரும்பு சாகுபடி செய்யவிருக்கும் நிலத்தை 4 முதல் 6 தடவை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக ஆக்க வேண்டும். டிராக்டரால் உழுதால் 2 முறை உழுதால் போதுமானது. பிறகு ஒரு மீட்டர் தூரத்திற்கு ஒரு பார் அல்லது கிடங்கு வீதமும், ஒவ்வொரு பாரும் அல்லது கிடங்கும் நில மட்டத்திலிருந்து 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) ஆழம் உள்ளதாகவும் அமைக்க வேண்டும். பார் அமைக்கப் பார் கலப்பை அல்லது 'விக்டரி' கலப்பையைப் பயன் படுத்தலாம். நிலத்தைச் சுற்றிலும் வரப்பின் ஓரத்தில் 45 முதல் 50 சென்டி மீட்டர் (18 அங்குலம் முதல் 20 அங்குலம்) ஆழம் உள்ள வடிகால் வாய்க்கால்கள் அமைக்க வேண்டும். வடிகால் வசதி குறைந்த நிலங்களில் வடிகால் வாய்க்கால்களை நிலத்தில் 10 மீட்டர் தூரத்திற்கு ஒரு வீதம் அமைப்பது நல்லது. தகுந்த இடைவெளியில் தனியாகப் பாசன வாய்க்கால்களை அமைப்பதும் சிறந்தது.

#### அடி உரம் இடுதல்

அடி உரம் இடுவது கரும்பு மகசூலை அதிகரிப்பதற்குள்ள நான்காவது வழியாகும்.

கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு வீதம் இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) 'பிரஷ் மட்' எனப்படும் ஆலை அழுக்கையும் அடியுரமாக இடலாம்.

பார்கள் அல்லது கிடங்கில் ஏக்கருக்கு 23 கிலோ மணிச்சத்து அளிக்க 144 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' இட்டு மண்ணுடன் கலக்கச் செய்யவும்.

#### விதைக் கரணைகள்

தரமான விதைக் கரணைகளைப் போதிய அளவில் நடுவதே கரும்பில் அதிக மகசூலைப் பெறுவதற்குரிய ஐந்தாவது வழியாகும்.

கரும்பு நடுவதற்கான விதைக் கரணைகளை 6 முதல் 8 மாத வயதுடைய நாற்றங்கால் கரும்புகளிலிருந்து வெட்டி எடுப்பதே சிறந்தது. நாற்றங்கால் கரும்புகளிலிருந்து தயாரிக்கப்படும் விதைக் கரணைகளே வீரியமாக வளரும்! ஒரு ஏக்கர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
[illegible] அரசினர் தோட்டம், சென்னை-[illegible].

பொங்கலோ பொங்கல்!

தமிழ்நாடு பரிசுச் சீட்டு
வாரி வழங்கிடும் பொங்கல் விருந்தினை
அருந்திக் களித்திட
அனைவரும் வாரீர்!

இதுவரை கண்டிராத
ஏராளப் பரிசுகள்.
உயர்வான தொகை பெற
உங்கள் நல்வாய்ப்பு இன்றே!

மொத்தப்
பரிசுத் தொகை ரூ. 31,00,000
(எட்டு வரிசைகளில்)

மொத்தப் பரிசுகள்:
12,450

சிறப்பு பரிசுகள்
முதல் பரிசு ரூ. 5,00,000
இரண்டாவது பரிசு ரூ. 2,00,000
(எல்லா வரிசைகளுக்கும் பொது)
இதைத் தவிர ஒவ்வொரு வரிசைக்கும்
முதல் பரிசு ரூ. 1,00,000

மற்றும் ஆயிரக்கணக்கான கவர்ச்சிப் பரிசுகள்

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்
வரவோ பல லட்ச ரூபாய்

மாபெரும் பொங்கல் சிறப்பு
குலுக்கல் நாள்:
26-2-1974

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



நடுவதற்கு 10 முதல் 12 செண்ட் கரும்பு நாற்றங்கால் தேவைப்படும். நாற்றங்கால் கரும்பிலிருந்து விதைக் கரணை கள் தயாரிக்கமுடியாவிட்டால் பூ பூக்காத 12 மாத வயது உடைய கரும்புகளின் நுனிப் பாகங்களை (கரும்பின் மொத்த நீளத்தில், மேலே உள்ள 3-ல் 1 பகுதியை) மட் டும் வெட்டி எடுத்து விதைக் கரணைகள் தயாரிக்கலாம். தற் பொழுது பலர் கரும்பின் அடிப் பாகத்திலிருக்கும் கரணைகளை வெட்டி நடவு செய்கிறார்கள். இது மிகவும் தவறு! இவ்வாறு செய்வதால், முளைப்பும் குறை கிறது : நோய், பூச்சிகளின் தாக்குதலுக்கும் இலக் காகிறது. எனவே, மேற்கூறிய வாறு கரும்பின் நுனிப் பாகத்தி லிருந்து கரணைகள் தயாரிப் பதே சிறந்தது.

ஒரு ஏக்கரில் 15,000 மூன்று பருவுள்ள விதைக் கரணைகளை அல்லது 22,500 இருபருவுள்ள கரணைகளை நட வேண்டும்.

கரணைகளை நடுதல்

விதைக் கரணைகளை முறை யோடு நடுதல் கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்குரிய ஆறாவது வழியாகும்.

பார்கள் அல்லது கிடங்கு களின் அடிப் பாகத்தை களைக் கொத்தினால் கொத்தி விட்டுப் புழுதியாக்க வேண்டும். பிறகு பார்கள் அல்லது கிடங்குகளின் இடையில் தண்ணீர் விட வேண்டும். பார்களின் இடை யில் தண்ணீர் வற்றி, மண் நன்றாக ஊறிய பிறகு விதைக் கரணைகளை நட வேண்டும்.

விதைக் கரணைகளை நடுவ தற்கு முன்பு, கரணைகளின் வெட்டப்பட்ட நுனிகளை 'அரிட்டான்' அல்லது 'அக லால்' மருந்து கலந்த நீரில் நனைத்து எடுக்க வேண்டும். 112 கிராம் 'அரிட்டான்' அல்லது 224 கிராம் 'அகலால்' மருந்தை 45 லிட்டர் (10 காலன்) தண்ணீரில் கலந்து கொண்டு, அக் கரைசலில் விதைக் கரணைகளின் வெட்டுப் பட்ட நுனிகளை நனைத்து எடுத்துப் பிறகு நட வேண்டும்.

கரையான் தாக்குதல் உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 15 கிலோ வீதம் 'பி.எச்.சி.' 10 சதத் தூளையோ அல்லது 'ஹெப்டோகுளோர் தூளையோ பார்கள் அல்லது கிடங்குகளின் கரணைகளை நடுவதற்கு முன்பு தூவி விட வேண்டும்.

பார்கள் அல்லது கிடங்கு களின் நடுவில் கரணைகளை வரி சையாகவோ அல்லது ஒன்றன் பின் ஒன்றாக ஏற்றி வைத்தோ நடவு செய்ய வேண்டும். நடும் பொழுது கரணைகளின் மேல் அரை அங்குல அளவுக்கு மண் மூடும்படி நடவு செய்ய வேண் டும்.

(அடுத்த இதழில் முடியும்)


## இலவசக் கல்வி யோசனை

வகுப்புகள் ஆரம்பம் : 6—2—1974.

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்—பல்கலைக் கழகத் தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி யளிக்கப்படும்.

1. S.V.B.A., B.Com., B.Sc.—September 1974 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதி யுடையவர்கள்.) 2. B.L., M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதை யுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி:கர்நாடக் B.A., B.Com., B.Sc., (S.S.L.C., (அ) S.S.C., (ஆ) மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபல்-டெல்லி இண்டர் (S.S.L.C./ S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A.C.B.I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. (B.A., C.E.I., (S.S.L.C./ S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்—டெலி கிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை—மதுரை—திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை—மதுரை P.U.C. 10. தமிழ் வித்துவான்—புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட் மேன். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்ட்டன்ஸி. 16. கிராம மணியம்—கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-74.) 18. S.S.L.C. (8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com. INTER, D.Com., B.Com., B.Com. (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்—தவறியவர்களும் 74-செப்டம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம்.) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 13. காம்பாண்டர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்).

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'
(Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi)

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம்—S.O., தென்னார்க்காடு மாவட்டம், தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.







P
R. R. No. 116/74.
1974




## மருத்துவ வசதி அளிப்பதில் தமிழகத்திற்கே முதலிடம்!

"தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா ஆகிய மாநில மக்களே சிறந்த மருத்துவ வசதிகளைத் தங்கள் அரசிடமிருந்து பெற்று வருகின்றனர். பீகார், ஒரிசா ஆகிய மாநில மக்களுக்கு மருத்துவ வசதிகளில் அடிப்படைத் தேவை கூடக் கிடைக்கவில்லை."

—இது, இந்திய மருத்துவச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வேத்பிரகாஷ் அவர்களின் கருத்தாகும். அவர், 'யு.என்.ஐ.' நிருபரிடம், "நமது நாட்டில் மருத்துவ வசதிகளுக்காக ஆண்டு நிதிச்.செலவுத் திட்டத்தில் மிக அதிகமாக நிதி ஒதுக்கிடும் ஒரே மாநிலம் தமிழகமே" என்று குறிப்பிட்டுள்ளார்.

# நலம் தரும் ஆராய்ச்சி நூல்கள் நாட்டுக்குத் தேவை!

பல்கலைக் கழகத்தின் நூல்கள் வெளியீட்டு விழா, குடியரசு தினத்தில் நடைபெறுவது மிக மிகப் பொருத்தமுடைய ஒன்றாகும். 1969-லிருந்து 1972-ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுக் காலத்தில் 42 நூல்கள் வெளியிடப்பட்டன. 1972-லிருந்து இந்த இரண்டாண்டு வளர்ச்சியில் 66 நூல்கள் வெளியிடப்படுவதை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் பல்கலைக் கழகத்தின் பணி மிகத் தீவிரமடைந்திருக்கிறது என்பதை எண்ணியெண்ணி நான் மகிழ்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நூல்களை யாத்துத் தந்த பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் இந்த விழாவில் கூடியிருக்கிற நாம் மாத்திரமல்ல-இந்த நூல்களின் பயனை அனுபவிக்க இருப்போர் அனைவரின் சார்பில் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்கத்தில் நாம் புத்தகத்தில் பலவற்றைப் படிக்கிறோம். அதற்குப் பிறகு உலகத்தையே புத்தகமாகப் படிக்கிற அளவிற்கு வாழ்கிறோம். இந்த இரண்டு நிலைகளுக்கிடையே பாலமாக அமைகிற வகையில் இதுபோன்ற புத்தகங்களும் மிகமிகத் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்று வெளியிடப்படுகின்ற நூல்களை எடுத்துக்கொண்டால் ஆராய்ச்சி நூல்கள், வரலாற்று நூல்கள், இலக்கிய நூல்கள், பிறமொழி நூல்கள், தமிழகத்தின் பெருமையை உணர்த்துகின்ற நூல்கள் என்று பல்வகையான நூல்கள் இன்றைய தினம் வெளியிடப்படுகின்றன.

நம்முடைய துணைவேந்தர் அவர்கள் ஒரு மகிழ்ச்சியான செய்தியை-இந்தநான்காண்டுக் காலத்தில் தமிழ்த்துறையின் சார்பாக மாத்திரம் 24 நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன - என்று கூறினார். 108 நூல்களில் 24 நூல்கள் தமிழ்த் துறையின் சார்பாக வெளியிடப்பட்ட நூல்கள் என்பதை எண்ணியெண்ணி நாமனைவரும் மகிழ்ச்சி அடையலாம்.

இன்று நாம் பெறுகிற மகிழ்ச்சி எதிர்காலத்தில் தமிழ் துறையின் சார்பாக இன்னும் அதிகமான நூல்கள் வெளியிடப்படுவதற்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பொதுவாக இந்த நூல்கள் அவரவர்களுடைய கருத்துச் சுதந்தரத்தோடு வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதை நாமனைவரும் நன்ருக அறிவோம். கருத்துச் சுதந்தரம் நிச்சயமாகத் தேவைதான். ஆனல் சில நேரங்களில் கருத்துச் சுதந்தரம் - நீண்ட நெடுங்காலமாக நாம் போற்றி, அதன் காரணமாகவே இந்த நாட்டிலே ஒரு புதிய நிலையை உருவாக்கியிருக்கிற நேரத்தில் அதைத் தொலைத்துவிடாத அளவிற்கும் அது இருக்கவேண்டுமென்பதும், சில நேரங்களில் உண்மைகள் மறைக்கப்பட்டுவிடாமல் பாதுகாக்கப்படவேண்டுமென்பதும் யாரும் மறக்கக்கூடிய விஷயங்கள் அல்ல.

அந்த வகையில் நான் எதையும் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டா விட்டாலும் பல்வேறு அறக்கட்டளைகளின் சார்பாக நடைபெற்ற சொற்பொழிவுகளில் முகிழ்த்த பெரும் கருத்துக்களெல்லாம் நல்ல வடிவம் பெற்றிருக்கிற நேரத்தில், அவைகள் வெளியிடுவதற்கு முன்பு பார்க்கும் வாய்ப்பைப் பெறுவதும், அதிலே தங்களுக்குத் தெரிகிற குறைபாடுகளை ஆசிரியர்களிடம் எடுத்துரைப்பதும், அதன்மூலமாக நூல்கள் எழுதும் ஆசிரியப் பெருமக்கள் அந்த நூல்களில் திருத்தங்கள் கொண்டு வருவதும் வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வெளியிடப்பட்டுள்ள நூல்களில் - தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் -நான் அதைப் படித்துப் பார்க்கவில்லை, படித்துப் பார்த்த ஒரு நண்பர் சொன்னார், அது சரியோ தவறோ தெரியவில்லை— எழுத்தாளர்களுடைய வரிசையில் அண்ணாவின் பெயர் இடம் பெருமல் போய்விட்டது என்று. அதைப் படித்துப் பார்த்த நண்பர் ஒருவர் சொன்னார். தமிழ்நாட்டின் எழுத்தாளர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவர் என்று போற்றிப் புகழப்பட்டவர், புகழப்படுகிறவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள். அந்த ஆங்கிலப் புத்தகத்தை வெளிநாட்டில் படிக்கிற ஒருவர் தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள் பட்டியல் இவ்வளவுதான் என்று கருதிக் கொள்ளக்கூடும்.

எல்லா எழுத்தாளர்களின் பெயரும் இடம் பெற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. முன்னணியில் உள்ள எழுத்தாளர்களின் பெயர் விடுபட்டுத் தவருன தகவல்கள் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் கூறுகிறேன். மற்றவர்களுடைய எழுத்துச் சுதந்தரத்தில் தலையிட வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதல்ல என்னுடைய எண்ணம். அவர்கள் பிடிவாதமாக நாங்கள் இப்படித்தான் எழுதுவோம் என்று கூடச் சொல்லலாம். விளக்கங்களைச் சொல்லித் தவறு ஏற்பட்டுவிட்டது என்பதைச் சொல்லுகிற முறையில் சொல்லி, அதை ஏற்றுக் கொண்டு திருத்தம் செய்யக் கூடியவர்களும் இருக்கக்கூடும். அதன் காரணமாக உண்மை மறைக்கப் படாமல் இருக்க முடியும். ஆகவே இதுபற்றிப் பல்கலைக்கழகம் யோசிக்க வேண்டும் என்றும் கூறுகிறேன். ஏனென்ருல் பல்கலைக் கழகம் சுயாட்சித்தன்மை பெற்றது. சுயாட்சியில் யாரும் குறுக்கிடக் கூடாது. சுயாட்சியில் குறுக்கிடுவது, கேட்கிற சுயாட்சிக்கே இடையூருக ஆகிவிடும். ஆகவே தான் இதை யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



முதல்வர் கலைஞர்

ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப்படுகிற நேரத்தில் — ஆராய்ச்சியாளர்கள் வரவேற்கப்படக் கூடியவர்கள் தான். ஆராய்ச்சிக்கு எதைத் தேர்ந்தெடுப்பது என்ற ஆராய்ச்சி கூட நல்லது; உதாரணமாக கட்டபொம்மனைத் தமிழ்நாட்டின் சுதந்தரப் போராட்ட வீரர்களின் வரிசையில் நாம் வைத்திருக்கிறோம். குறிப்பாகச் சிலம்புச் செல்வர் ம.,பொ.சி. அவர்கள் கட்டபொம்மனை வெள்ளையனை எதிர்த்த முதல் சுதந்தரப் போராட்ட விடுதலை வீரர் என்று எழுதி அதைத் தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தில் ஆழப்பதிய வைத்திருக்கிருர்கள். அதன் தொடர்பாக நாடகங்களும், திரைப்படங்களும் வந்திருக்கிற நேரத்தில், யாராவது ஒருவர் 'ஆரர்ய்ச்சி செய்கிறேன்' என்று சொல்லி, 'கட்டபொம்மன் ஒரு பாளையக்காரத் தலைவன்; கொள்ளைக் கூட்டத் தலைவன்; அந்நியருக்கு வரி செலுத்தாத காரணத்தால் ஆங்கிலேயருக்கும் இவருக்கும் விரோதம் ஏற்பட்டது; சுதந்தரப் போராட்ட வீரன் அல்ல'' என்று சொல்வதன் காரணமாக-யாருக்கு இலாபம் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அது லாபம் என்பதைவிட எவ்வளவு பெரிய நஷ்டம்? ஆண்டாண்டுக் காலமாக வளர்த்து வருகிற விடுதலை உணர்வை இந்த ஆராய்ச்சியின் மூலமாகச் சுக்கல் சுக்கலாக உடைத்துத் தூளாக்கிப் படுமட்டமாக்கி விடச் செய்துவிடும். அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளில் ஆராய்ச்சியாளர்கள் கை வைக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, நாட்டில், மக்களை நல்வழியில் அழைத்துச் செல்கிற-வீர உணர்வுகளில் நாம் யாரும் ஆராய்ச்சி மூலமாக விளையாடாமல் இருப்பது நல்லது.

அதே நேரத்தில் மக்களை மூடநம்பிக்கைக்கு அடிமை ஆக்கும் விதத்தில் கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் செய்யப்படும் பல்வேறு நிலைமைகளிலிருந்து மக்களை மீட்க ஆராய்ச்சிகள் நிச்சயமாகத் தேவை. அந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

இன்னும் மகிழ்ச்சியோடு சொல்ல வேண்டுமென்ருல் பல்கலைக் கழகத்தின் அறக்கட்டளைகளில் இன்று பெரியாருடைய பெயரால் ஒன்று தொடங்கப் பட்டதாக அறிகிறேன். அந்த அறக்கட்டளையின் மூலம் பகுத்தறிவுக்குத் தேவையான ஆராய்ச்சிகள், அடிப்படையில் தாழ்ந்து கிடக்கிற சமுதாயத்தைச் சாதியின் பெயரால் வீழ்ந்து கிடக்கிற சமுதாயத்தைக் கைதூக்கி விட முடியுமென்ருல் அதற்கு ஆராய்ச்சிகள் நிச்சயமாகப் பயன்பட வேண்டும்.

ஆராய்ச்சி செய்கிறவர்களின் திறமையை நான் குறைகூறவில்லை. [illegible] டைய நோக்[illegible] வேண்டும் [illegible] நான் கோடிட்டுக் கா[illegible]

கிறேனே யல்லாமல் வேறல்ல. அந்த வகையில் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப் படுகிற நூல்கள் வெளிவரத் தக்க வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து, நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய இணை வேந்தர் டாக்டர் நாவலர் அவர்களும், கல்வி வளர வேண்டும் என்ற நோக்கோடு ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள துணை வேந்தர் சுந்தரவடிவேலு அவர்களும் மற்றவர்களும் கூடிப்பேசி அந்த அளவில் தமிழ்நாட்டிலிருந்து நூல்கள் வெளி வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தமிழ் நூல்களில், தமிழ் மொழியில் வெளியிடப்படுகிற நூல்களில் தமிழ்நாட்டில் இலக்கியங்கள், வரலாறுகள் இவைகள் எல்லாம் வெளியிடப் படுகிற அதே நேரத்தில் நாவலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டவாறே, பிறமொழிச் சாத்திரங்கள் தமிழில் வந்தாக வேண்டுமென்று அதை வரவேற்கிற அதே நேரத்தில், நம்முடைய தமிழ்ச் சாத்திரங்கள் தமிழ் இலக்கியங்கள், தமிழர்களின் வரலாறு இவைகள் எல்லாம் பிற மொழிகளில் மற்ற நாடுகளுக்குச் செல்கிற அந்தப் பணியை நாம் மேற் கொண்டாக வேண்டும்.



உலகத்தில் இருக்கிற பல்வேறு கருத்துக்களை நாம் எடுத்துப் படித்து மகிழ்கிற அதே நேரத்தில் நம்மைப்பற்றி உலகம் தெரிந்து கொள்கிற வழிவகைகளைக் கண்டாக வேண்டும். அதற்குப் பல்கலைக் கழகம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நான்காண்டுக் காலத்தில் 108 புத்தகங்களைக் கொண்டு வந்த அவர்களுடைய திறமையை நான் பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்; புகழ்கிறேன். இதே வேகம் தங்குதடை யில்லாமல் நடைபெற்று வர வேண்டும்; துணைவேந்தர் அவர்கள் இந்த அரசு தருகிற மானியத் தொகையை உயர்த்திக்கொடுத்தது என்று தொடக்கத்தில் குறிப்பிட்டார்கள். அதை இன்னும் அதிகமாக்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு நீங்கள் காட்டுகின்ற வேகத்தில்தான் இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி அந்த வேகத்திற்கு ஏற்ற வெற்றியை நீங்கள் நிதியமைச்சரிடம் நிச்சயமாகப் பெறலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**26—1—'74 அன்று பல்கலைக் கழக நூல்கள் வெளியீட்டு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.**


தமிழரசு இந்த இதழுடன் இலவச இணைப்பு

யார் பொறுப்பு?

ஆளுநர் உரைமீது நடை பெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து சட்டமன்றப் பேரவையிலும்—மேலவையிலும் முதல்வர் கலைஞர் ஆற்றிய பதிலுரை




# குடியரசுத் திருநாள்

இந்தநாள், இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்படவேண்டிய நாள். ஆம். ஆகஸ்ட் 15-ல் சுதந்திரம் பெற்ற இந்தியா, குடியாட்சிச் சிறப்புப் பெற்ற நாள் ஜனவரி 26 தானே! இந்தப் பொன்னான நாள், இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒவ்வோராண்டும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தின் தலைநகரான சென்னையில் வழக்கம் போல, தமிழக அரசின் சார்பில் குடியரசு நாள் விழாவையொட்டி ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. விழா நாளில், காலை 6 மணியிலிருந்தே பல லட்சக்கணக்கான மக்கள், பல்கலைக் கழகக் கட்டிடத்திலிருந்து சாந்தோம் வரை, சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்தார்கள்.

எழில்மிகும் மெரினா கடற்கரையில்-இந்தியாவின் சுதந்திரத் தந்தை-அண்ணல் காந்தியடிகளின் உருவச் சிலைக்கு அருகில், விழாவிற்கென அழகிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. முதல்வர் கலைஞர் அவர்கள் காலை 7.45 மணிக்கு மேடைக்கு வந்தார்கள். அதன் பின் 7.50-க்கு தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் திறந்த காரில் வந்தார். இருமருங்கும் அலைகடலென நின்றிருந்த மக்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

முதல்வர் கலைஞர் அவர்களும் அரசின் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் அவர்களும் மேதகு ஆளுநரை வரவேற்று, விழா மேடைக்கு அழைத்து வந்தனர். பிறகு, முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலுள்ள முப்படைத் தலைவர்களையும், தமிழகத்தின் காவல்துறைத் தலைமை அதிகாரி திரு. எஃப்.வி. அருள் அவர்களையும் மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மேடையின் முன்னே, தமிழக மகளிர்காவல் துறையைச் சேர்ந்த மகளிர் அணிவகுத்து நின்றனர். பின்னர் சரியாக 8 மணிக்கு மேதகு ஆளுநர் தேசீயக் கொடியை ஏற்றினார்கள். இதைத் தொடர்ந்து அலங்கார வண்டிகளின் அணி வகுப்பு நடைபெற்றது.

முதலில், முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மூவர், ஒருவர்பின் ஒருவராக அணி வகுத்து வந்தனர். பிறகு வரிசையாகத் தரைப்படை, கடற்படை, விமானப் படை வீரர்கள் துப்பாக்கி ஏந்தி அணி வகுத்து வந்தனர்.

'முப்படையினர் அணிவகுப்பைத் தொடர்ந்து கடலோரப் பாதுகாப்புப் படை முன்னாள் இராணுவ வீரர்கள், குதிரைப் படையினர் சென்னை நகர காவல் துறையினர், தமிழ்நாடு சிறப்புக் காவல். படையினர், ரெயில்வே பாதுகாப்புப் படையினர், தேசீய மாணவர் படை (என்.சி.சி)யினர், மாணவ மாணவியர் அணிவகுத்து வந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து, ஊர்காவல் படையினர், ஆம்புலன்ஸ் படையினர், சீரணிப் படையினர், சாரணர், திருத்தப்பள்ளி மாணவ மாணவியர், தீயணைக்கும் படையினர் ஆகியோர் வந்தனர்.

கடைசியாக, பல்வேறு துறையினரால் தயாரிக்கப் பட்ட அலங்கார வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன.

முதலாவது அலங்கார வண்டி பொதுப்பணித்துறையினர் ஏற்பாடு செய்திருந்த வண்டி, அதில் தமிழகத்தின் புராதன இசைக் கருவியான நாதசுர இசை நிகழ்ச்சியும், நவீனப் படுத்தப்பட்ட சங்கு வாத்திய



இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. திரு. சைதை நடராசன் குழுவினரின் நாதசுர இசையும், திரு. டி.எஸ். மகாலிங்கம் அவர்களின் சங்கிசையும் பழந் தமிழகத்தை நமக்கு நினைவுறுத்தின.



அடுத்து, தமிழ்நாடு காவல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சென்னை தூய ஜோசப் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவியரால் நடத்தப்பட்ட கும்மி.

பிறகு தொழில் வர்த்தகத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, தஞ்சை திரு. சுப்பிரமணியராவ் குழுவினரால் நடத்தப்பட்ட பொய்க்கால் குதிரை ஆட்டம்.





பின்னர், கூட்டுறவுத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுத் தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்தின் மூலமாகத் தனிக் காவற் படையினரால் நடத்தப்பட்ட காவடி ஆட்டம்.

தொடர்ந்து தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுத் திரு ஆலந்தூர் தாமஸ் குழுவினரால் நடத்தப்பட்ட புலியாட்டம்.

அடுத்து, அதே துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் மாதிரி உயர்நிலைப்பள்ளி மாணவியரால் நடத்தப்பட்ட கோலாட்டம்.



இறுதியாக, விவசாயத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நெல்லை, மாவட்ட திரு. அ. கருப்பையா அண்ணாவியின் குழுவினரால் நடத்தப்பட்ட உறுமிமேளம்.

இவ்வாறாகப் பல்வேறு துறையினரின் அணிவகுப்பு மரியாதைகளையும் மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். குடியரசு தினவிழா அணிவகுப்பு இனிது நிறைவேறியது.










## 3. முட்டைத் தோசை ஒரு சிக்கல்!

வெண்ணெய் உருகினல் கமழ்கின்ற நெய் கிடைக்கும்.

மனம் உருகினல் வெடிக்கின்ற நெடு மூச்சும், சுரக்கின்ற நீள் கண்ணீரும்தான் கிடைக்குமோ?

நழுவிக் கழிந்த இந்த ஒரு நாழிப் பொழுதிற்குள்ளாக, முதியவர் ஆதிமூலத் தேவர் மட்டுமல்லாமல், அவரது தவப் புதல்வன் வீரமணியும் எப்படிப்பட்ட பயங்கரச் சோதிப்புக்கு ஆளாகிவிட்டனர்!

அப்படியென்றால், சோதிப்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஐந்தொகைக் கணக்கிற்குக் கிடைக்கக்கூடிய ஆதாயமா? வாழ்க்கை ஒரு விளையாட்டு என்பதெல்லாம் பொய்தானா? கனவுதானா? பழங்கதையே தானா?

சிந்தனையைத் துண்டுதறித்து ஏறிட்டு விழித்தான் வீரமணி. மறுபிறவி எடுத்தவனைப் போன்று, அவன் உள்ளம் புத்துயிர் பெற்ற உணர்வுகளைச் சந்திக்க முயன்றது. மலை போல வந்த ஆபத்து, பனி போல விலகக் கருவியாக இருந்த அந்த விந்தைச் சக்தியை அவன் மனப்பூர்வமாகத் தொழுதான்; போற்றினன்.

ஏறுமுகக் கதிரவன் நிலா முற்றத்தில் காய்ந்து கொண்டிருக்கிறான்.

விதைப்புக்கான நிலக்கடலை அரிசிகள் வெய்யிலில் காய்ந்து கொண்டிருக்கின்றன.

செத்துப் பிழைத்த தேவர் இப்போதுதான் புரண்டு படுத்தார். பட்டு மெத்தை கருவேல முள்ளாகக் குத்தியது போலும்! கலவரமும் கலக்கமும் சுழிக்க, அவர் மல்லாந்து படுக்கலானார். பாதாளக் கேணியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தண்ணீராக அவருடைய கண்ணீர் தென்பட்டது.

வீரமணிக்குத் திகீரென்றது. ''அப்பா!'' என்று விளித்தான். பாசம் நெஞ்சை அடைக்கிற மாதிரி இருந்தது, அவனுக்கு. இதே பாசம்தான் அப்பாவின் நெஞ்சையும் அடைத்துவிட்டிருக்குமோ? அலங்கோலமாகக் கிடந்த தந்தையைக் கண் கொண்டு பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது ; பரிதாபமாக இருந்தது. வாய் விட்டு 'ஓ' வென்று ஒரு பாட்டம் அழுது தீர்த்தால் கூடத் தேவலாம் போலிருந்தது. கதறிப் புலம்பிக் கண்ணீரைக் கரை சேர்த்து விட்டால் மாத்திரம், மனச்சுமை கரை சேர்ந்து விடுமா, என்ன? ஊகூம்; ஒரு காலும் இல்லை! அப்படியென்றால், அந்தச் சுமைகளையெல்லாம் எந்தச் சுமைதாங்கியில் எப்போது எப்படி இறக்கி வைப்பதாம்? கண்ணுக்குத் தெரியாத ஆண்டவன் கண்ணுக்குத் தெரிந்த நல்ல மனிதர்களுக்காக இரங்கி வந்து—இறங்கி வந்து—சுமைதாங்கியாகவும் இருப்பானே! —இக் கூற்று மெய்தானே? அவனது உணர்வுகள் சிலிர்த்தன; சுழித்தன. ''ஆத்தா!'' —இதயத்தின் இதயம் ஓலமிட்டது. ஆத்தாள் வள்ளியம்மை மட்டுமல்லாமல், ஆத்தாள் மகமாயியும் நிழலாடினர். அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பெரியவரை உற்றுப் பார்த்தான்.

ஆதிமூலத் தேவர் இருந்திருந்தாற் போன்று செருமத் தொடங்கினர்.

வீரமணி தடுமாறினன்.

தலைமாட்டில் அமர்ந்து வீசிக் கொண்டிருந்த காசி, நகர்ந்தார்.

''அப்பா, பச்சைப் பாலகனாட்டம் ஏன் இப்படிச் செருமுறீங்க? செருமாதீங்க அப்பா, செருமாதீங்க!.. என் நெஞ்சு பொறுக்காதுங்க; பொறுக்கவே பொறுக்காதுங்க!'' என்று



வேண்டினான் தேவர் மைந்தன். கைப்பிடித் துணியை எடுத்து, அப்பாவின் முகத்தைத் துப்புரவு செய்ய எண்ணித் தாழ்வாரச் சுவரை உராய்ந்தபடி இடுப்பை நகர்த்தியபோது, சுவரின் காரை, நிலை பெயர்ந்து சிதறக் கண்டதும், அவன் அப்பால் நகரலானான். நனைந்த துணியை வீசிவிட்டு எழுந்தான்.

தேவர் படுத்துக் கிடந்த மெத்தையை இழுத்து நறுவிசான இடத்துக்கு மாற்றினர் பண்ணையாட்கள்.

குதிர் குதிராகக்'கோட்டை' கட்டி வைக்கபபட்டிருந்த 'விதை நெல்' காய்ந்தாக வேண்டும், நாளை!

''அப்பா, ஒரு தோசையாச்சும் கிள்ளிப் போட்டுக்கிடுங்க. மல்லித் துவையல் வாய்க்கு உணக்கையாய் இருக்கும். தோசை தின்னிட்டு, துளி காப்பித் தண்ணியை ஊத்திக்குங்க. அப்பத்தான் குடல் காயாமல் இருக்கும்,'' என்றான் வீரமணி.

செல்வக் குமரனை ஏற இறங்க ஒரு பயணம் பார்த்த பின், விரக்தி ஊடாட, இதழ்களை விலக்கினார் பெரிய பண்ணை. ''என் நெஞ்சு காயுது; அப்பாலே குடல் காய்ஞ்சா மோசமாக்கும்? நீ சின்னஞ் சிறுசு. நீதான் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணப்படாதப்பா! உன்னைப் பெற்றவளா இருக்கா, உனக்கு ஆக வேண்டியதைக் கவனிச்சுச் செய்ய?...'' என்று நெடு மூச்செறிந்தார்.

காசி குறுக்குச் சாலிட்டுப் பாய்ந்து ''அப்படிச் சொல்லப்படாதுங்க, பெரியவுகளே! எங்க சின்ன ஐயாவைக் கவனிச்சுப் பணிவிடை செய்ய ஒரு சீதேவி வரமட்டுக்கும், நான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கிட்டு எங்க வீரமணித் தம்பியைப் பார்த்துக்கிட மாட்டேனுங்களா? இந்த நாள் பரியந்தம் பார்த்துக்கிட்டு வரலேங்களா?'' என்று கிலேசம் பிசிறு தட்டக் குறிப்பிட்டார்.

தேவர் நன்றியோடு காசியை நோக்கினார். ''நீ கூறுவது மெத்தச் சரி'' என்கிற பாவனையில் கையை அமர்த்திச் சமிக்ஞை செய்தார்.

மணி : பதினொன்று முப்பது.

வீரமணிக்கு இருப்புக் கொள்ளவில்லை. தகப்பனாரின் முதுகைப் பத்திரமாகப் பற்றிப் பிடித்துத் தாங்கிக்கொண்டே, ''எழுந்திருச்சு உட்கார்ந்துக்கங்கப்பா. நீங்க பசியாறினால் தானே என் பசி ஆறுமுங்க?'' என்று மடக்கினான்.

அன்பெனும் பிடியில் அவர் அகப்பட்டிருக்க வேண்டும். மறுபடி சுடு நீர் மடை திறந்தது. சூம்பிய கன்னங்களில் வழிந்தது. மயிர்க் கால்கள் காளான்களாகக் குத்திட்டு நின்றன.

தொடுத்த விழி எடுக்காமல், பெற்றவரையே பார்த்துக் கொண்டிருந்தான் வீரமணி. அப்பா ஏன் இவ்வாறு எப்போதும் கண் கலங்குகிறார்? கையோடு கூட்டிவந்த சீதேவியைக் கையுடனேயே கூட்டிச்சென்று விட்ட விதியின் நாயகியை நினைத்தா? அல்லது, சூதுமதி விதியாகி, தெய்வத்திற்கும் கூடப் பயப்படாத வகையிலே, தங்கள் குடும்ப கவுரவத்தை அறையினின்றும் அம்பலத்திற்குக் கொண்டு வரக் கங்கணம் கட்டித் திரியும் அம்மான் ராமையாத் தேவரின் பேய்க் குணத்தை எண்ணியா? அப்பாவின் அவல நிலைக்கு என்ன காரணம்? யார் காரணம்?



எதிர்க் குடிசைக்குச் சொந்தமான கோழிக்கு இப்பொழுதுதான் பொழுது விடிந்தது போலும்! அது வெகு சுதந்தரத்தோடு கூவியது. அது துயில் கலையும் நேரம் பார்த்துப் பொழுது விடியும் நாட்டிலே அவதரித்திருக்க வேண்டியதோ,. என்னவோ?

எச்சில் துப்பிக் காயும் நேரம் வரை, பெரியவர் சூன்யத்தைச் சூறையாடினார். பிறகு ஏதோவொரு வைராக்கியம் கொண்டவராக எழுந்தமர்ந்தார். ''தம்பி, வினைப் புரிஞ்சதுக்குப்புறம், மகன் பேச்சை அப்பன் சரின்னு தெரிஞ்சுக்கிட்டுத் தட்டி நடக்கிறது ஞாயம் இல்லே. நாம ரெண்டுபேரும் இங்கிட்டாலே குந்திக்கிட்டே தோசை தின்னப் போறோம்,'' என்று வாஞ்சை துலங்கத் தெரிவித்தார்.

நல்ல மூச்சோடு காசி அகன்றார்.

தஞ்சாவூரில் வாங்கி வந்து வெட்டி வைத்திருந்த ஆப்பிள் துண்டங்களிலே ஒன்றை எடுத்து நீட்டினான் வீரமணி. மணி பன்னிரண்டு அடித்ததும், குழாய் மாத்திரைகளைக் கொடுக்க வேண்டும்!

கடன் பட்ட நெஞ்சின் தத்தளிப்புடன் மகனிடமிருந்து பழத் துண்டைக் கையேந்தினார் தேவர். ''மகனே, இந்தா; இதிலே கொஞ்சம் நீ கடிச்சுக்க,'' என்று நீட்டினார்.

பிள்ளையின் அன்பைத் தந்தை தட்ட முடியாதபோது, தந்தையின் பாசத்தைத் தனயன் மட்டும் தட்ட முடியுமா?

கடன் பட்ட அதே தவிப்போடு, அப்பா நீட்டிய பழத் துண்டில் ஒரு பகுதியைக் கடித்துக் கொள்ள வேண்டியவன் ஆனான் அவன். இப்போது அவன் விதரணை கற்றவிடலை. ஆனால், விவரம் விளங்காதிருந்த பிஞ்சுப் பருவத்திலே இதே போலத்தான் அப்பா தின்பண்டங்களை நீட்டுவார்; மகன் கடித்துக் கொள்வான். மிகுந்த எச்சிலை மிகுந்த பாசத்துடன் சுவைப்பார் தேவர். வாய் கொள்ளாமலும் மனம் கொள்ளாமலும் அன்னை சிரிப்பாள். சிரிப்புக்கும் பாகம் கிட்டும். பாசம் கூட கடன் வகையின் பாற்பட்டதுதானோ? அந்தக் கடனுக்கும் சட்டப் பிரகாரம் வட்டி வாசி எல்லாம் செல்லுமோ?

எச்சிற்பழம் இனித்தது ; இனிமையாக இனித்தது.



''வீரமணி, நீ தின்னப்பா!''

''ஊகூம்; நீங்க சாப்பிடுங்க!

''இல்லே. நீதான் சாப்பிடணும்!''

''மாட்டேன். நீங்க என்னைப் பெற்ற அப்பா. நீங்கதான் முதலிலே சாப்பிடவேணும். அதுதான் மரியாதை.''

''அதுதான் முடியாதாக்கும். எனக்குப் பிறந்த மகன் நீ! ஆனபடியினாலே, நீதான் தலையிலே ருசி பார்க்கவேணும். இதுதான் சுற்று வட்டாரத்திலே வளமை.'' என்று வீம்பு பிடித்தார் பெரியவர்.

பலே! . . .

வீரமணிக்கு ஆனந்தம் பீரிட்டது. நல்ல வேளையாக, காசி இன்னொரு தோசையைக் கொண்டுவரவே, அதைத் தட்டோடு வாங்கினான் அவன். அப்பாவின் முன்னே அந்த எவர்சில்வர் தட்டை அனுசரணையுடன் நகர்த்தி விட்டு அப்பாவின் நிழலில் இருந்த தட்டைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

''ஓகோ! காதும் காதும் வச்சாப்பிலே ஒரு பாகப் பிரிவினையை ரொம்பவும் கச்சிதமாகவும் கெட்டியாகவும் நடத்திக் காட்டிட்டியே, வீரமணி?'' என்று பாராட்டினார் பெரியவர்.

''தோசை விசயத்தைப் பற்றித்தானுங்களே சொல்லு நீங்க, அப்பா?''

''பின்னே?'' என்று பற்களைப் பிரித்தார் அவர்.

ஆமாம்; பாசத்துக்கோ அல்லது அன்புக்கோ பிரிவினை ஏது?

''கொஞ்ச நாழிகைக்கு முன்னே அப்பாவுக்கு நெஞ்சடைப்பு வந்து, பூவை மாநகர் அரசினர் மருத்துவ மனையிலிருந்து உடனடியாக டாக்டரை வரவழைத்துச் சிகிச்சை அளித்திருக்கா விட்டால், அப்பா இருக்கும் இவ்விடத்திலே இந் நேரம் பூண்டு முளைத்திருக்காதா ? அப்பாவோட உயிருக்கு ஏடா கூடமாக ஏதானும் அசம்பாவிதம் நடந்திருந்தால், அப்பாலே என் கதி என்னாவது? இந்தக் குடும்பத்தின் நிலை என்னாகும்?'' சிந்திக்கவே அவனுக்கு அச்சமாக இருந்தது.

''என்னப்பா' மருள் கொண்டு போய் கதி கலங்கிக் குந்திக்கிட்டிருக்கே? நான்தான் எமலோகத்தை எட்டிப் பார்த்துப் பாச்சா காட்டிப்புட்டு கடலே கதின்னு ஓடியாந்து உன் காலடியிலே விழுந்திட்டேனே? அப்புறம் உனக்கென்ன கவலையாம்? எதையும் தாங்குற இதயம் வேணும்னு அடிக்கொரு தக்கம் நீ சொல்லமாட்டியா? சரி, சரி. ஒரே ஞாபகமாய்த் தோசையைத் தின்னப்பா, தம்பி!''

''ஆகட்டுங்க!''

தோசையைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டார் தேவர். என்னவோ விகடத்தை நினைத்துக் கொண்ட நிலையில், தமக்குத் தாமே கமுகமாகச் சிரித்துக் கொண்டார் அவர். பிறகு, மகனை விளித்தார். ''ஒரு சங்கதியை மறந்திட்டியே?'' என்று விடுகதை போட்டார்.

தஞ்சாவூர் விவகாரம் பற்றின விவரம் கேட்கிறாரா அப்பா? ''எந்தச் சங்கதிங்க?'' என்று கேள்விக்கு எதிர்க் கேள்வி போட்டான்.

''நீ உன் ஆத்தா வள்ளியம்மை பெற்ற மகன்!''

''ஆமாங்கப்பா; அட்டி ஏது?''

''நாம ரெண்டு பேரும் கொஞ்ச முந்தி தோசை சாப்பிடுறதுக்காகப்போட்டுக்கிட்ட

# குற்றம் என்பதே அறியாத தீவு

இலட்சத்தீவுகள் எனப்படும் லக்ச த்வீப்' (Lakshadweep) இந்திய யூனியனைச் சார்ந்த பகுதியாகும். இது பத்தொன்பது பவழத் தீவுகள் அடங்கிய பகுதியாகும். இந்தப் பத்தொன்பது தீவுகளில் பத்துத் தீவுகளில் மட்டும் மக்கள் வசிக்கின்றனர். மற்றவைகளில் மக்கள் வசிக்கா விட்டாலும் விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

**பெரிய தீவு:** ஒவ்வொரு தீவிற்கும் இடையே உள்ள தூரம் 30 கிலோ மீட்டரிலிருந்து 180 கிலோ மீட்டர் வரை ஆகும். 'மினிகாய்' எனப்படும் தீவு 4 சதுர கிலோ மீட்டர் உடையது. இலட்சத் தீவுகளில் இதுதான் பெரிய தீவாகும். 'பித்ரா' தீவு 70 ஹெக்டேர் உடைய சிறிய தீவாகும்.

**வரலாறு கூறும் உண்மை:** தமிழகத்திற்கும், இலட்சத் தீவிற்கும் வணிகத் தொடர்பு முதலாம் நூற்றுண்டிலேயே இருந்ததாக வரலாறு கூறுகிறது. ஆமை ஓடுகள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் மலபார் பகுதியிலிருந்து நாயர்களும், நம்பூதிரிகளுமே அதிகமாக, அந்தத் தீவுகளுக்குச் சென்றனர். பதின்மூன்றுவது நூற்றுண்டில் அரபு சுற்றுலாப் பயணி உபெதுல்லாவின் வருகைக்குப் பிறகு 'இலட்சத் தீவு'கள் முஸ்லீம்கள் உள்ள தீவாகமாறி விட்டன.

**பெயர்க்காரணம்:** சிரக்கல் ராஜா கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து, இலட்சத் தீவுகளிலிருந்து கடன்களை வசூலிப்பதற்காக, 'இலட்ச ரூபாய்' பெற்றுக்கொண்டதால் அந்தத் தீவுகள் 'இலட்சத் தீவுகள்' (Lakshadweep –the islands that cost lakh of rupee) என்று பெயர் பெற்றன.

**மக்கள் தொகை:** 1971- ஆம் வருட மக்கட்தொகைக் கணிப்பின்படி இலட்சத் தீவில் 31,810 பேர் வாழ்கின்றனர். அத்தீவில் உள்ள அனைவரும் பிற்பட்ட குடியினர் (Scheduled caste ) என்று அறிவிக்கப்பட்டுள்ளனர். மலையாளம், தமிழ், அரபி, உருது, கன்னடம் கலந்து பேசுகின்றனர்.

**சமூகப் பழக்க வழக்கங்கள்:** இளம் வயதுத் திருமணமும், அடிக்கடி விவாகரத்தும் அவர்களிடம் சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றன. திருட்டு, தற்கொலை, கொலை இவைகள் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. இசை, நடனம் இவற்றில் இவர்களுக்கு விருப்பம் அதிகம்.

## எட்டாம் நூற்றுண்டின் எழில்மிகு ஓவியங்கள்!

பொன்னமராவதிக்கு அருகில் உள்ள மலையடிப்பட்டியில் எட்டாம் நூற்றுண்டு ஓவியங்கள் உள்ளன. இவற்றின் சிறப்பைப் பற்றிக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்து முன்ணுள் நுண்கலைப் பேராசிரியர் நிகர் ரஞ்சன்ரே என்பார் பாரதீய வித்யா பவன் வெளியிட்டுள்ள History and Culture of the Indian People Vol. 3 –என்னும் நூலில் எழுதியிருக்கிறர்.

1958-வரை அங்குக் காவல் நிலையங்கள் (Police Stations) கிடையாது. இப்பொழுது தீவிற்கு ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

**பொருளாதாரம்:** தென்னை, தென்னை சார்ந்த தொழில்கள், மீன் பிடித்தல் ஆகியவை அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவுகின்றன. தென்னை மூலம் அவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 2.05 கோடி கிடைக்கிறது. எட்டுத் தீவுகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கம் நன்முறையில் நடைபெறுகிறது.

**நல்வாழ்வு:** குஷ்ட நோய், மலேரியா போன்றவை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டு சிறிய மருத்துவமனைகளும் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. 3,500 பேருக்கு ஒரு மருத்துவமனை என்ற முறையில் இங்கு மருத்துவமனைகள் உள்ளன.

**கல்வி:** 1875-ஆம் ஆண்டு வரை ஒரு பள்ளிக்கூடம் கூட அமைக்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது ஏராளமான பள்ளிக் கூடங்கள் அமைக்கப்பட்டு விட்டன. இளையோர் கல்லூரி ஒன்றும், தற்போது இந்தத் தீவில் உள்ளது. பள்ளியில் 'மீன் பிடிப்புத் தொழில்' பற்றி எல்லாருக்கும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எல்லா மட்டத்திலும் கல்வி இலவசமாகச் சொல்லித் தரப்படுகிறது. புத்தகங்களும், உடைகளும் கூட இலவசமாகத் தரப்படுகின்றன. பள்ளிக்கூடம் செல்லுவதற்குரிய பள்ளி வயதுடைய அனைவரும் (100 சதவீதம்) பள்ளிக்குச் செல்கின்றனர். மேற்படிப்புப் படிக்கக் கேரளத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்கு உதவிச் சம்பளம் அளிக்கப்படுகிறது. தீவில் உள்ள 45 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர் வரிசையில் இந்தியாவில் இலட்சத் தீவு ஆறுவது இடத்தை வகிக்கிறது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பதில் சிறந்து விளங்கும், இவ் இலட்சத்தீவு மக்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள்.

—என். ரெங்கநாதன்.





# ஒரு தாமரைப்பூ தவிக்கிறது

பல்லவன்

ஒளிமய மான ஓவியப் பொழுது
களிமயக் கோடு கடிது கரைந்தது!
கதிரவன் பிரிவைக் காதல் நெஞ்சம்
எதிர்கொள மறுத்தே எரிமலை யானது!
கருகிய துலகம்! கசந்தது வாழ்வு!
இருண்ட காலம் என்னெதிர்ப் பட்டது!
மருளும் மாலையின் மாயச் செயலால்
இருட்சிறைப் பட்டேன்! என்செய் வேன்யான்?
எங்கும் காரிருள்! எங்கே இருக்கிறேன்?
பொங்கும் துயரில் புதைந்து கிடக்கிறேன்!
பனியில் குளிரில் பாழுஞ் சேற்றில்
தனித்துக் கிடந்து தவியாய்த் தவிக்கிறேன்;
பொல்லா நிலவு பொழியும் நெருப்பில்
மெல்லுடல் வெந்து தீப்புண் பட்டது!
அல்லிப் பூவை ஆணவச் சிரிப்பால்
கொல்லிப் பாவைபோல் கொலைசெய் கின்ருள்!
என்னே இழிநிலை! எப்படிப் பொறுப்பேன்?
இன்னல் இரவை எப்படிக் கழிப்பேன்?
உளமே உருகி ஒழுகிய கண்ணீர்த்
துளிகள் இலைமேல் தூங்கிக் கிடந்தன!
நெஞ்சின் வியர்வையாம் நீர்த்துளி எழுத்தால்
வஞ்சி சகுந்தலை வடித்த மடல்போல்
பட்ட இடரினைப் பகலவ னுக்கே
வட்ட இலைகளில் வரைந்துவைத் திட்டேன்
விடிவை நோக்கி விழித்திருக் கின்றேன்!
அடிவான் சிவக்க அவனே வருவான்!
அடியே அல்லி அதுவரை சிரிப்பாய்!
நொடிப்பொழு திற்குள் நிலவை, உன்னை
வாட்டி வதைப்பேன் வரட்டும் கதிர்மகன்!
ஆற்றி இருப்பேன்; அன்னேன்
தோற்றங் காண்பேன் துயரிழப் பேனே!

அன்புச் சண்டையிலே, 'நீங்க பெற்ற மகன் நான்' அப்படின்னு என்கிட்டே ஒரு பேச்சுச் சொன்னே. அதுக் கோசரம்தான் யாபகப்படுத்தினேன்,'' என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு பேசினுர்.

அவனுக்கும் சிரிப்பைக் கட்டுப்படுத்தக் கூட முடியல்லே. ''எல்லாம் நீங்க சொல்லிக் கொடுத்த பாடம் தானுங்க. காலேயிலே கோயிலடியிலே நான் நல்ல விதமாய்த் தேறின தகவலேப் பற்றிச் சொல்லிக்கிட்டு இருக்கையிலே 'நான் பெற்ற மகன் என் நம்பிக்கையைக் காப்பாற்றத் தவறிப்புடுவாஞ?'' அப்படின்னு சொன்னீங்களே, அந்தச் சங்கதியை நீங்கதான் மறந்திட்டீங்க போலே!'' என்று ஒரு போடு போட்டான் வீரமணி. மீன் பொரியல் மூக்கைத் துளேத்தது.

''ஓகோ! அப்படியா கதையைத் திருப்பிட்டே? போடு சக்கை!'' என்று கூறி, அதிர் வேட்டுச் சிரிப்பொலியை வெளிப்படுத்தினுர் தேவர். ''சரி, சரி. பசி எடுத்தாச்சு; சாப்பிடலாம்,'' என்று உத்தரவு கொடுத்தார். பிறகு, குழந்தைத் தனமான குதூகலத்தோடு தட்டுத் தோசைகளேக் கிள்ளிக் கிள்ளித் தின்ன ஆரம்பித்தார் ஆதிமூலம்.

மண் வாழ்க்கை என்ருல், சிரிப்பும் கண்ணீரும் மாறி மாறி இடம் பெறுவது இயல்பு. இதுவே வாழ்க்கையின் விதி; நியதி; தத்துவம். இவ்வுண்மைக்கு விளக்கம் காண, அல்லது விளக்கம் சொல்ல வாழ்க்கையை வாழ்க்கையாக மதித்து, அங்கீகரித்துப் பிரகடனப்படுத்தும், ஒரு சாமுதாயச் சிந்தனேயோடுதான் அப்பா வாழ்ந்து கொண்டிருப்பாரோ—வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பாரோ என்று கூட எண்ணி வியக்க முனேந்தான், வீரமணி. அவ்வாறெனில், அப்பா ஒரு புதிர் அல்லவரே!

பச்சைக் கொத்துமல்லித் தழைத் துகையலுக்கென்று இப்படியொரு வாசனே போலிருக்கிறது!—உயிராய் மணக்கிறது!

துகையலில் கடுகத்தனே எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் வீரமணி. தொண்டையில் இறங்கிய உறைப்பு உந்திக் கமலத்தைத் தொட்டு நின்றதை அவன் உணர்ந்த பொழுது, அம்மான் மகள் அன்னக்கொடியும் அதே சடுதியிலே நினேவில் உறைத்து நெஞ்சைத் தொட்டு நின்ற அதிசயத்தையும் அவனுல் பூரணமாக உணர முடிந்தது. அன்னக் கொடி பொய் சொல்லுவாளா, என்ன? ஊகூம்! 'அம்மான் மகளே . . . . அன்னம்!''—சாதி மல்லி நெஞ்சிலும் நினேவிலும் மணக்கத் தலேப்பட்டது. பூவின் மணத்தில் பூவையின் பேச்சுக்களும் மணத்தன.

பச்சைக் கொத்துமல்லித் துகையல் ஆராய்ச்சி நடத்துகிறவர் மாதிரி துளித் துளியாகச் சுவைத்து, ருசி பார்த்து, சோதித்துக் கொண்டிருந்த தேவர் வெந்நீரில் ஒரு வாய் அருந்தி விட்டு, 'தம்பி!' என்று குரல் கொடுத்தார்.

வீரமணி கலேந்த சிந்தனேயோடும் கலேயாத கனவோடும் ''என்னுங்க?'' என்ருன்.

''வீரமணி, பச்சைக் கொத்தமல்லித் துகையல் என்ருல் உனக்குரொம்பநாள்தொட்டே ரொம்ப ரொம்பப் பிடிக்குமில்லேயா?'' என்று கேட்டார் பெரியவர்.

இத்தகைய விசாரிப்பை இப்போது அவன் எதிர்பார்த்திருக்கவில்லேதான். இருந்தாலும், அவன் திடமான குரலெடுத்து, ''ஆமாங்க!'' என்று பதில் சொன்னுன். இது சம்பந்தமான கதை, காரணம் எல்லாம்தான் பெரியவருக்கு வெளிச்சமாகத் தெரியுமே?

''உன் அம்மான் மகள் அன்னக்கொடிதான் ஆதியிலே உனக்கு இந்தத் துகையலேப் பழக்கம் செஞ்சு வச்சுது. மெய்தானே, தம்பி?''

''நீங்க பொய் சொல்ல மாட்டிங்களே அப்பா!''

''அது சரி; கொஞ்ச நேரத்திற்கு முன்னுடி இந்தத் துகையலே எடுத்து எடுத்து நாக்கிலே போட்டுப் பார்த்தியே அந்தச் சமயத்திலே, உனக்கு உன்னுேட அம்மான் மகள் அன்னக்கொடியோட ஞாபகம் ஓடோடி வந்திருக்கும், இல்லேயாப்பா?''

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமா?

''மெய்தானுங்க!''

தன் குடும்பமும் தன் தாய் மாமன் குடும்பமும் கற்பிளவாகப் பிளந்து, காடுமேடாகப் பிரிந்து விட்ட இரண்டுங்கெட்ட இந் நேரத்திலே, அப்பா என்னென்னவோ குறுக்கு விசாரணே யெல்லாம் நடத்துகிருரே? வீரமணிக்குக் கிழக்கும் புரியவில்லே; மேற்கும் புரியவில்லே.

''அதுவும் சரிதான். உன் முறைப் பெண் அன்னக்கொடியைப் பத்தி நீ என்ன நினேக்கிறே, தம்பி?''

வீரமணிக்கா விடைகொடுக்கத்தெரியாது! — ''பாரதியாருடைய புதுமைப் பெண் நம்ப அன்னக்கொடி! . . . நம்ப அன்னக்கொடி, பாரதிதாசனுடைய புரட்சித் தமிழச்சி!. ஆமாங்க, அப்பா!''

''ஓ! . . அப்படியா?''

தேவர் வாயைப் பிளந்தார். கேட்காததைக் கேட்ட மாதிரி ஆச்சரியப்பட்டிருக்கலாம்; காணுததைக் கண்ட பாவனேயில் அதிசயப்பட்டிருக்கலாம்! பொட்டுப் பொழுது என்னவோ ஆலோசனே செய்தார். சலனமும் சாந்தியும் இழை பின்னின. விழித் திரை வீசி, மகனேத் துழாவினுர்; ஏதோ சொல்ல, அல்லது, கேட்க வாயெடுத்தார் அவர்.

அதற்குள் :

முட்டைத் தோசையின் வாசனே இனே சேர்ந்து வந்து விட்டது.

குறிப்பறிந்த தேவர், ''நம்ப காசியும் பெரிய கைகாரன் தான். அப்பனுக்கும் பிள்ளேக்கும் ஊடாலே வம்பு தும்பும் மறுதரமும் மூண்டிடப்பிடாதென்னு, ஆளுக்கொரு முட்டைத்தோசையாய்ச் சுட்டுப் போட்டுக் கொண்டாந்திட்டானே, கண்டியாப்பா வீரமணி?'' என்று குறிப்புணர்த்தித் துருவினுர்.

''ஊம்!''

காசி ஆளுக்கொன்ருகப் போடும் வரை 'கம்' மென்றிருந்தார் தேவர். பிறகு, தன் பங்குக்குக் கிடைத்த முட்டைத்தோசையையும் தன் மைந்தனின் தட்டிலேயே போட்டார். ''எனக்குத்தான் மேலுக்கு முடியலேயே? இந்த லட்சணத்தில், முட்டைத் தோசையை வாயைக் கட்டாமல் தின்னுப்பிட்டா, அப்புறம் வயிற்றிலேமப்புவந்துபுடாதா? அளவறிஞ்சு உண்ணவேணும்னு சும்மாவா பாடி வைச்சிருக்காங்க மூத்தவங்க? தம்பி, நீ சும்மா சாப்பிடு. துள்ளித் திரிகிற வயசு; கல்லேத் தின்னுலும் செரிச்சிடுமாக்கும்! ஆனு ஒரு சின்னச் சரத்து! 'தந்தை சொல் மிக்கதொரு மந்திரமில்லே' என்கிற பாட்டை அசை போட்டுகிட்டே, நீ பாட்டுக்குக் கல்லேத் தின்னு வச்சு என்னேச் சோதிக்க மட்டும் துணிஞ்சுடாதே! . .'' என்று எச்சரித்தார். பிறகு, ''ஆவணி, ஒழுங்கை வாசலிலே வந்துக்கிட்டிருக்குது. கண்ணுலம் காட்சிக்குத் தலே கொடுக்க வேண்டிய தங்கம் நீ. வேண்டிய மட்டும் சாப்பிடு!'' என்று முத்தாய்ப்பு வைத்தார் ஆதிமூலம்.

வெட்கம் பற்களேக் காட்ட, மறு பேச்சாடாமல் முட்டைத் தோசையில் சுவை பதித்தான் வீரமணி.

காது செவிடுபட, வாசல் வெளியில் பறந்தது லாரி ஒன்று.

''பெரியவகளுக்கில்ல . . . உங்க மச்சான் ராமையாத் தேவர்தான் லாரியிலே கிழக்கே பறந்துக் கிட்டிருக்காங்க. ஆவணி பிறந்தடியுமே, அவர் கட்டிக்கிட்டிருக்கிற புது மாடி வீட்டுக்கு மேளதாளத்தோட குடி புகுந்திடுவாராம்'' என்று விவரித்தார் காசி.

''அப்படியா?''

அத்தோடு பேச்சை மட்டுப் படுத்திக் கொண்டார் மச்சு வீட்டுக்காரர்.

அச்சமயம் :

சாதி மல்லிப் பூவின் நெடி, கொடி கட்டிப் படர்ந்து வந்தது; அன்னநடை பயின்று வந்தது.

ஆசை, கனவாக நிழலாட, கனவு அன்பாக ஒளியாட, ஏதோ ஒரு திடமான கணிப்புடன் வீரமணி வெளியே எட்டிப் பார்த்தான்; மறுகணம், உதட்டிதழ்களிலே நளினமும், கண்ணிதழ்களிலே பரவசமும் மிதக்க, அப்படியே மெய்ம் மறந்து நின்ருன்; பிறகு சுய உணர்வு கொண்டான். பெற்றவர் பக்கம் திரும்பினுன். ''அப்பா, அப்பா! நம் அன்னம் வந்து நம்ப வீட்டுத் தலேவாசல் நிலேப்படியிலேயே நின்னுக்கிட்டு இருக்குதுங்களே, அப்பா!'' என்று ஆர்வத்தோடு செய்தியை வெளியிட்டான் இளவல்.

ஆதிமூலம் தமக்கே உரித்தான அமைதி கொண்டு தலேயை உயர்த்தினுர். புகையிலேயை எடுத்தார். பிறகு நிதானமாகச் செல்லப்பிள்ளேயை நோக்கினுர். ''அப்படியா? உன் வீடு தேடி வந்த உன் அம்மான் மகளே 'வா' என்று சொல்லி, அத்தை மகனை நீ கையேந்தி வரவேற்க வேண்டியதுதானே ஒழுங்கு, வீரமணி? ஊம், போ!'' என்ருர்.



வீரமணிக்கு நல்ல மூச்சு வந்தது. மென்னகையும் வந்தது. ''ஆகட்டுங்க, அப்பா!'' என்ருன்; புத்துயிர் பெற்றிருப்பான்! எச்சில் கையை வீசிக் கொண்டே நடந்தான். வேகாத வெய்யில் வேகாதோ? — நிலேப்படியை அடைந்தான் அவன்.

அங்கே :

ஒற்றைக்கால் தவம் செய்த வண்ணம், அழகே உயிராகவும் உயிரே அழகாகவும் பொலிந்து பாசமும் நேசமும் சிறந்து நின்று கொண்டேயிருந்தாள் அன்னக்கொடி!

— வளரும்.








நிலம், நீர், காற்று, தீ, வான் என்பன ஐந்து இயற்கைப் பெருநிலைகள். நிலம் பரப்பிற்கும், நீர் தண்மைக்கும், காற்று வலிமைக்கும், தீ வெம்மைக்கும், வான் உயர்ச்சிக்கும் எல்லைகளாவன. ''மண் திணிந்தது நிலம் ; நிலத்தைச் சூழ்ந்தது வான்; வானில் உலவுவது காற்று ; காற்றால் பெருகுவது தீ ; தீயை அவிப்பது நீர்'' என இப் பெருநிலைகளிடையே உள்ள தொடர்பை முரஞ்சியூர் முடிநாகனார் என்ற புலவர் விளக்குகின்றார்.

இப் பெருநிலைகள் ஓர் ஒழுங்குக் குட்பட்டு நிற்கும் போது விளையும் நன்மைகள் எண்ணிறந்தன. எல்லை மீறினாலோ அவற்றைக் கட்டுப்படுத்துவாரில்லை. நிலம் செந்நெல்லையும் கரும்பையும் விளைவித்து மக்களை வாழ வைக்கிறது. அதுவே அதிர்ந்தால் நாடு, நகரங்கள் அழிகின்றன. அளவொடு பெய்யும் போது அமுதமாய் இருக்கும் மழையே, அளவை மீறும் போது அழிவுச் சக்தியாகிவிடுகிறது. இவ்வாறே மற்றவையும்!

மனிதன் நிலத்தில் தோன்றிய போதே நீரிருந்தது ; வானிருந்தது ; வளியுமிருந்தது; அவன் இறுதியாக அறிந்த பெருநிலை தீ. காய்ந்த மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புத் தோன்றுவதைக் கண்ட மனிதன் சக்கி முக்கிக் கற்களை உராய்ந்தும், மரங்களைக் கடைந்தும் தீயை உண்டாக்கக் கற்றுக் கொண்டான். காடுகள் எரிந்த போது கருகிய விலங்குகளின் ஊன் சுவையை அறிந்த அவன், உணவைப் பதப்படுத்திச் சுவையூட்டத் தீயைப் பயன்படுத்த அறிந்தான். உலைத் தீ இனிய உணவைச் சமைப்பது போலத் திருவள்ளுவரின் சொல் தீ, குறள் உலையில் அறிவமுதை ஆக்கியுள்ளது. அவ்வறிவமுதை ஈண்டு நுகர்வோம்!

கட்டுக்கடங்காத நிலையில் நெருப்பு தீமையைச்செய்தாலும் கட்டுக்கடங்கிய நிலையில் பல நன்மைகளைச் செய்யக் காணலாம். நெஞ்சு கதறக் கூரையை எரிக்கும் நெருப்பே, அடுப்பில் அடங்கி எரியும்போது கொதிக்கும் வயிற்றைக் குளிரச் செய்யும் உணவைத் தருகிறது. நெருப்பு, ''இனிய பணியாள் ஆயினும் கொடிய மேலாள்'' என்று குறிப்பிடுவர். (Fire is a good servant but a bad master), தீ கொடியதாயினும் அதனைக் கட்டுப்படுத்தி, நன்மைக்குத் திருப்பலாம். ஆனால் தீய செயல்களால் தீயனவே தோன்றுமன்றி ஒருபோதும் நன்மை விளையாது. ஆதலின் தீய செயல்களைத் தீயைவிடக் கொடியனவாக் கருதி அஞ்ச வேண்டும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202)

''நெருப்பு எந்தக் காலத்தில் எந்த இடத்தில் எந்த உடம்பில் படுமோ அந்தக் காலத்தில் அந்த உடம்பில் மாத்திரம் சுடும். தீவினையோ வேறோர் இடத்தில் வேறோர் உடலிலும் போய் உயிரை வருத்தும்'' என்பதால் தீவினை தீயினும் அஞ்சப்படுவதாயிற்று. உரையாசிரியர் பரிதியார் ''பாவம் பாவத்தையே விளைத்தலால் பாவத்தை நெருப்பினும் பெரிதென்றறிக. அது எப்படி என்றால் நெருப்பு வேரைச் சுடமாட்டாது; பாவம் வேரளவாகச் சுட்டுப் போடும்'' என்று குறிப்பிடுகின்றார். எனவே பிறருக்குக் கேடு தரும் செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது.

உடம்பில் தீச் சுடர் படுவதால் ஏற்படும் புண் ஏற்ற மருந்துகளால் ஆறிவிடும். தீப்பட்ட இடத்தில் அடையாளமிருந்தாலும் புண்ணாறிய பிறகு அதனால் வலியெதுவும் இருப்பதில்லை; ஊறு விளைவதும் இல்லை. தீய சொற்களால் ஒருவனைப் பழித்துரைப்பின் அச்சொற்கள் அவன் உள்ளத்தைத் தீக்கொழுந்து போலச் சென்று சுடும். எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச் சொல், நெஞ்சில் கொள்ளி வைத்தாற் போன்ற கொடுமையைச் செய்யும்.

''காவா தொருவன்தன் வாய்திறந்து
[சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடும்''

என்பார் நாலடிப் புலவர். உடலைச் சுடும் தீப்புண்ணுக்கும் உள்ளத்தைச் சுடும் சொற்புண்ணுக்கும் ஓர் அரிய வேறுபாட்டைக் காட்டுகின்றார் வள்ளுவப் பெருந்தகையார். தீயினால் சுட்ட புண் ஆறிவிடும்; ஆனால் நாவினால் சுட்ட வடுவோ என்றும் ஆறாது.

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு'' (129)

உரையாசிரியர் பரிதியார் இதற்கு, ''தீயினால்



சுட்ட புண் உள்ளே ஆறி மேலே வடுவாகி இருக்கும்; நாவினால் சுட்ட புண் மேலே ஆறி உள்ளே வடுவாகி இருக்கும்'' என்று உரை வகுத்தார். ''தீயும் வெவ்வுரையும் சுடுதல் தொழிலால் ஒக்குமாயினும், ஆறுமையான் தீயினும் வெவ்வுரை கொடிது'' என்பார் பரிமேலழகர்.

தீயினால் ஏற்படும் புண்ணின் வலி சிறிது சிறிதாகக் குறைந்து நாளடைவில் முழுமையாக மறைந்து போகும். நாவினால் சொல்லப் படும் சுடு சொற்களால் ஏற்படும் வலியோ நாளாக ஆகக் கூடிச் சென்று வலியை மிகுவிக்கும். தீக்குச் சுடுவது இயல்பு. நாக்கிற்கு அப்படியல்ல. இனிய சொற்களைப் பேச முடியும். அவ்வாறிருக்க இன்னாச் சொற்கள் ஏனோ? என்பதே திருவள்ளுவரின் கேள்வி.

உலக அறிஞர்கள் அனைவருமே தீச்சொல் கூறு அறத்தை வலியுறுத்தியுள்ளனர். ''நாவினால் ஏற்படும் புண், வாளினால் ஏற்படும் புண்ணை விடக் கொடியது; ஏனெனில் பின்னது உடலுக்கு மட்டுமே ஊறு செய்கிறது; முன்னதோ உள்ளத்துக்கும் ஊறு செய்கிறது'' என்று குறிப்பிடுகின்றார் கிரேக்க அறிஞர் பித்தகோரஸ். நாவில் பிறக்கும் கொடிய, கூரிய சொற்கள் பிறரைத் தாக்கி மடியச் செய்தலும் கூடும். ''நா மூன்றங்குல நீளமேயுடையது; ஆயினும் அஃது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொல்லக்கூடியது'' என்கிறது ஜப்பானியப் பழமொழி. எனவே நாவடக்கம் மிக மிக வேண்டற்பாலது.

நெருப்பு சிறு பொறியேயாயினும் பெரிய வைக்கோற் போரையும் அழிக்கும் தன்மையது. அது போல, குற்றம் சிறிதேயாயினும் அதனால் பெரிய செல்வாக்கும் அழிந்தே விடும்.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
[எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'' (435)

வைக்கோலில் பற்றிய சிறு பொறி மேலும் மேலும் வளர்ந்து படர்வது போல, நெஞ்சில் சிறு குற்றம் படர இடம் விட்டாலும் அது படர்ந்து பெருகிவிடும். குற்றம் வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை அழிந்து கெடும்.

போரில் பெரும்பான்மை வெற்றி தனக்குக் கிடைத்ததும், அவ்வளவில் மன நிறைவு கொண்டு ''இனி நமக்கு ஏது தீங்கு?'' என்ற எண்ணத்தில் ஒரு சிறு பகைவனை விட்டு வைப்பது பகையெச்சம். வெள்ளப் பெருக்கால் கரை உடைப்பெடுப்ப அஃதை அடைத்தவர்கள் ஒரு சிறு கசிவை விட்டு வைப்பது வினையெச்சம். செய்து முடித்துள்ளதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் விட்டு வைக்கப்பட்டுள்ள பகையெச்சமும், வினையெச்சமும் கணக்கில் கொள்ள முடியா அளவுக்குச் சிறிதே! ஆயினும் அவை பின்னால் வளர்ந்து பேரழிவுக்கு இடமாகும். எது போல? நெருப்பின் பெரும் பகுதியை அழித்துவிட்டு ஒரு சிறு பகுதியை விட்டுவிட்டால் அது தானே பெருகி வளர்ந்து அனைத்தையும் எரிப்பது போல!

''வினைபகை என்றிரண்டின் எச்சம்
[நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்'' (674)

அரைகுறையாகச் செய்யப்படும் வேலை அழிவைத் தரும் என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.



பகையெச்சத்திற்குத் திருவள்ளுவர் கூறிய இதே கருத்தை எளிய பகை என ஏமாந்திருந்தல் கூடாது என்று அமைச்சர் அரசனுக்கு அறிவுரை கூறும் முறையில் தோலாமொழித் தேவர் சூளாமணியுள் எடுத்தாண்டிருப்பதை ஒப்புநோக்கி அறியலாம். ''அரசே! நெருப்புக் பொறி எள்ளத்தனையாக இருக்கலாம். அதுவே கனன்று கொழுந்து விடுமேயானால் மலையத்தனை விறகையும் சுட்டழித்துக் கரியாக்கும். அது போன்றே பகைசிறியதாயினும், காலமும் இடமும் வாய்த்து வளருமாயின் பெரிய படையைய்ம் வென்றுவிடும்''

தீக்கொழுந்துகள் கதுவிப் பொசுக்கினும் ஏற்ற மருந்துகளைப் பூசி ஒருவன் உயிர் பிழைத்தல் கூடும். ஆனால் ஆற்றல் மிகுந்த பெரியாரிடத்தில் தவறி நடப்பவர் தப்பிப் பிழைக்க முடியாது.

''எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்
[உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்''(896)

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிதாகலின் பெரியார்ப் பிழைத்தொழுகுவார் உய்யார் எனப்பட்டது.

சுள்ளிகளைக் குவித்து நெருப்பு மூட்டிச் சுற்றிலும் வட்டமாக அமர்ந்து வெப்பம் உடல் மீது படுமாறு சிற்றூர்களில் குளிர் காலத்தில் வைகறையில் மக்கள் குளிர் காய்வதைக் கண்டிருக்கிறோம். குளிர் மிகுதியால் வெப்பத்தை உடனே பெறவேண்டும் என்று தீயைத் தொட்டாலோ சுட்டுவிடும்; சுடும் என்ற அச்சத்தில் அதன் வெம்மைத் தாக்கமுள்ள எல்லையைத் தாண்டி அமர்ந்தாலும் பயன் பெற முடியாது. வெம்மை உடலில் படுமளவுக்கு ஏற்ற தொலைவில் அமர்ந்து தீக்காயும் நிலையைச் சுட்டிக் காட்டித் திருவள்ளுவர் ஓர் அரிய நீதியைக் கூறுகிறார். பெரியவர்களிடம் பழகும்போது 'தெரிந்தவர்தானே' என்று மிக அணுகிச் சென்றால் அவர்களின் வெறுப்புக்கும் ஒறுப்பும்கும் ஆளாக நேரிடலாம்! 'மிகப் பெரியவர்களாயிற்றே!' என்று கருதி அகன்று ஒதுங்கி விட்டாலோ அடைய வேண்டிய நன்மைகளைப் பெறாமற் போய்விடவும் கூடும். தீக் காய்பவர் போல மிக நீங்காமலும் மிக அணுகாமலும் தக்காங்கு தொடர்பு கொண்டு அவரிடமிருந்து அடைய வேண்டிய நன்மைகளை அடைய வேண்டும்.

''அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்''
(691)

மன்னரைச் சேர்ந்தொழுகும் முறையாக வள்ளுவர் எடுத்தோதினும், பெரியார்களை அணுகும் முறைக்கும் இதனைப் பொதுவாகக் கொள்ளலாம். மாணவர்கள் ஆசிரியருடன் பழக வேண்டிய இலக்கணம் கூறுமிடத்து நன்னூலாசிரியரும் ''அழலின் நீங்கான் அணுகான்... வழிபட வேண்டுமென்று'' குறிப்பிடுகின்றார்.

தீச் சுடரேற்றிப் பொருள்களைத் தேடுகின்றோம். ஆனால் நீரினுள் கிடக்கும் பொருளைத் தேடத் தீச் சுடரைக் கொண்டு செல்ல முடியுமா? நெருப்பை எடுத்துச் சென்று நீரினுள் வெளிச்சமுண்டாக்க முடியாது. இதேபோன்று செய்ய இயலாத மற்றொரு செயலைத் திருவள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். கள்ளுண்பவன் கள்ளுண்டு மயங்க மயங்க அக் கள்ளுண்பதையே மேலும் விரும்புவான். இதைக் 'களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்' என்று திருவள்ளுவரும், 'மகிழ்ந்ததன் றலையும் நறவுண்டாங்கு' என்று பரணரும் உவமைகளாக்கிக் காட்டுவர். கள்ளுண்டவன், நாணும் அறிவும் நீங்கி மயங்குகின்றான். 'இப்படி ஆகாதே' என்று காரணம் காட்டி அவனைத் தெளிவிப்பதென்பது நீருள் மூழ்கிய ஒருவனைத் தேடத் தீ விளக்கு எடுத்துச் செல்வதற்கு ஒப்பாகும். இரண்டும் எப்போதும் செய்ய இயலாது என்பது கருத்து.



''களித்தானைக் காரணம் காட்டுதல்
[கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று'' (929)

ஒருவன் தன்னைச் சினம் ஆட்கொள்ளாமல் காத்துக் கொள்ள வேண்டும். சினம் நெருப்பினும் கொடியது. நெருப்பு தன்னுடன் சேர்வதை மட்டுமே சுட்டழிக்கும். சினமோ தன்னைச் சேர்ந்தவரை அழிப்பதோடு இனம் என்னும் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும் தன்மையுடையது. எதிரியைச் சுடுவதற்காக எழுப்பப்படுகின்ற சினத் தீ எதிரியைச் சுடுவதைவிட எழுப்பியவனையே அதிகம் சுடுகிறது. 'சினம் குடிகொண்ட உள்ளம் புயலிற் சிக்கிய மரக்கலம் போல் உருக்குலைந்து அழிவுக்கு ஆளாகும். எனவே பெரு நெருப்புத் தோய்ந்தாலொத்த துன்பத்தை ஒருவன் செய்தானாயினும் அவன்மேற் சினங்கொள்ளாதிருத்தல் நல்லது.

''இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று'' (308)

சினமுற்றவன் வினைவை ஆராயாது செயற்படுவானாதலின் தீய விளைவுகள் தோன்றி அவன் அழிய நேரிடுதலும் கூடும். சினம் கொள்ளாதிருப்பது நல்லது; தவறிச் சினம் கொள்ள நேரிட்டாலோ அவ்வேளையிற் செயற்படாதிருப்பது சிறப்புடையது! சினமுற்றவன் உள்ளம் ஒரு நிலையில் இல்லாமையால் செயல் தவற்றில் தொடங்கி வருத்தத்தில் முடியும். சினம் கொண்ட உள்ளம் ஒரு குளவிக் கூடு; செயல் என்ற அசைவு தோன்றுமானால்

குளவிகளின் கொட்டிலிருந்து தப்ப முடியாது!

'கொடிது கொடிது வறுமை கொடிது' என்றார் ஔவையார். "வறுமையாளனை மனைவி மதியாள்; மக்கள் மதியார்; சுற்றம் சூழாது; நண்பரும் நட்பு நாரற்றுத் தீர்வர். அவன் சொல் அம்பலமேறாது. கீழ் மகனாயினும் பொருளுடையானைப் பழுமரஞ் சூழ்ந்த பறவையொப்ப மக்கள் மொய்த்து நிற்பர். மேன் மகனாயினும் வறியனாயின் அணுகாது விலகிப் போவர். இருளிலே எழுதப்பட்ட மை இருந்தும் தெரியாதது போல வறுமையாளர் எத்துணைச் சிறப்புக்களைக் கொண்டிருப்பினும் அவை இருந்தும் இல்லாதனவேயாம்". இது வறுமையாளனைப் பற்றி வளையாபதியின் படப்பிடிப்பு. வறுமையின் காரணமாக ஏற்படும் பசிப்பிணி "உயர்குடிப் பிறப்பைக் கெடுக்கும்; சிறப்பினை அழிக்கும்; கல்வியாகிய பெரிய பற்றுக் கோட்டினை நீக்கும். ஞானத்தைப்போக்கும்; மானமிழந்து மனைவியொடு பிறர் வாயிலில் நிற்கச் செய்யும்" என்கிறது மணிமேகலை. புகை நுழைய முடியாத இடத்திலும் சென்று வறுமை இரக்கச் செய்யும் என்கிறது நாலடி. இப்படிப் பலரும் வறுமையின் கொடுமையை எடுத்துரைத்துள்ளனர். ஆயினும் திருவள்ளுவரைப் போன்று வறுமைக் கொடுமையை மிகத் துல்லியமாக எடுத்துச் சொன்னார் இல்லையென்றே கூறலாம்.

வறுமையைப் போல் துன்பமானது வறுமை ஒன்றே! வறுமை கொலையைக் காட்டிலும் கொடியது! கொலை உடனே உயிரை மாய்க்கிறது. வறுமையோ அணு அணுவாக உயிரைச் சாகடிக்கிறது. "ஐயோ! நேற்றுக் கொலை செய்ததுபோலத் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ?" என்று வறுமையாளன் ஒருவன் அஞ்சி நிற்பதாக அவர் காட்டுவது நெஞ்சைத் தொடுகிறது.

நெருப்பைத் தொடுதலே அரிது; அதன் மீது படுத்தாலோ? உடலைக் கருக்கி உயிரைக் குடித்துவிடும். ஒருவன் நெருப்பினுள் படுத்துத் தூங்க முடிவதாகவே கொள்வோம்! அவனேகூட வறுமை தாக்கும்போது கண் மூடித் தூங்க முடியாது.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் [நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது" (1049)

வறுமையின் கொடுமையை இதைவிட உருக்கமாக யாரும் விளக்கமுடியாது என்பது திண்ணம்.

தீ தொட்டாற் சுடும்; விட்டாற் சுடுவதில்லை. திருவள்ளுவர் ஒரு புதிய தீயைக் காண்கிறார். இது தொட்டாற் குளிர்கிறது. விட்டாற் சுடுகிறது. காதலர்ப் பிரிவே இப்புது நெருப்பு. நெருப்பு சுடுவதைப் போலப் பிரிவும் சுடக்கூடியது. நெருப்பு உடலைச் சுடும்; பிரிவோ உள்ளத்தைச் சுடும். இதை வள்ளுவர் அழகாகக் கூறுகின்றார்:

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ" (1159)

பிரிவுத் துயரின் வெம்மையை இலக்கியங்கள் பரக்க உரைப்பதைக் காணலாம். இராமன் சீதையைப் பிரிந்து காட்டில் உறையும் காலம்; நிலவு தோன்றுகிறது. தண்ணிய நிலவொளி அவனுக்குத் தணலெனக் காய்கிறது. உள்ளக் கொதிப்பால் உடல் கொதிக்கிறது. விண்ணைப் பார்க்கிறான். மின்னி இமைக்கும் மீன்கள் தோன்றுகின்றன. நிலவொளி தன்னைச் சுட்டது போல் விண்ணையும் சுட்டதோ? சூடு தாங்க முடியாமல் வான உடல் கொதித்து வெளிப்பட்ட கொப்புளங்கள்தான் வெள்ளை மீன்களோ? இவ்வாறு பிரிவு சுடுவதை இராமாயணப் பாடல் அழகுற விளக்குகிறது.

காதலி அருகிருந்தாலோ உடலெல்லாம் குளிர்ந்து போகின்றது! நெருங்கினால் குளிர்வதும் அகன்றால் சுடுவதுமான நெருப்பை இவள் எங்கிருந்துதான் பெற்றாளோ என ஒரு காதலன் ஏங்குகின்றான்.

"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் [தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்" (1104)

'குறுகுங்கால் தண்ணென்னும்' என்ற சொற்களுக்குப் பாரதிதாசனின் 'இசையமுதில்' ஓர் இனிய விளக்கத்தைக் காணலமை. மந்தையின் மாடுகள் திரும்புகின்ற அந்திவேளையில் மாமன் வருவதைக் கண்ட மனைவி கூட இருந்தாரை மறந்து வீடு சென்றாள். அவளிடம் அவன் ஒரு வெல்லக்கட்டியைத் தந்தான்; அதே வேளையில் ஒரு முத்தமும் ஈந்தான். அவள் கட்டி வெல்லத்தைக் கசக்குதென்றாள்; மாமனின் கட்டாணி, முத்தம் இனிக்குதென்றாள். கோடை வெயிலின் கொடுமை நீங்கத் தொட்டியிலிருக்கும் குளிர்ந்த நீரில் குளிக்கச் சொல்லி அவன் தோளை அவள் வந்து தோய்த்த வண்ணம்

"கொட்டிய நீரில் குளிர்ச்சி உண்டோ—
இந்தக்
கோடை படுத்திடும் நாளில்?" என்றாள்!

அவனோ,

"தொட்டியின் தண்ணீர் கொதிக்கு"
தென்றான்—நீ
தொட்ட இடத்தில் சிலிர்க்கு" தென்றான்!

காதலர் இருவர் கருத்தொருமித்து அன்பு பூண்டு களவொழுக்கம் மேற்கொள்கிறார்கள். திருமணத்தின் முன்பு ஊரார் தங்கள் உறவை

அறிந்துகொள்ளக் கூடாதென யாரும் காணாத முறையில் பழகுகின்றனர்; இருப்பினும் அவர்கள் காதல் எப்படியோ வெளிப்பட்டு விடுகிறது. களவொழுக்கம் குறித்து ஊர் மக்கள் வாய்க்குள் பேசிக்கொள்வது 'அம்பல்' என்றும் வெளிப்படையாய்ப் பேசுவது 'அலர்' என்றும் கூறப்படும். ஊரார் அலர் தூற்றுவதைக் கேட்டுப் பெற்றோர் தம் மகளை எங்கும் வெளியே செல்லாதபடித் தடுக்கின்றனர். இடையூறுகள் காதலை வளர்க்குமே தவிரக் குறைக்காது!

மகளிர் சிலரும் பலருமாகக் கடைக்கண்ணால் தன் மகளை நோக்கி மூக்கின் மேல் விரலை வைத்து அம்பலும் அலரும் உரைப்பதைக் கேட்கும் அன்னை வெகுண்டு, கையில் ஒரு சிறு



கோலை ஏந்தி வந்து மகளை அச்சுறுத்துகிறாள்.

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை"
(நற்-149)

இதன் பலன்! "ஊராரின் அலர் தூற்றலை எருவாகவும், தாயின் கடுஞ்சொல்லை நீராகவும் கொண்டு" காதல் நோய் செழித்து வளர்கின்றது.

அலர் தூற்றுவதால் காதலை அடக்கிவிடலாம் என்று எண்ணுதல் நெய்யால் நெருப்பை அவித்துவிடுவோம் என்று எண்ணுவதைப் போன்றது என்கிறார் வள்ளுவர்.

"நெய்யால் எரிநுதுப்போம் என்றற்றால் [கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்" (1148)

"அகையழல் அழுவந் தன்னை நெய்யினால் அவிக்கலாமோ" என இவ்வுவமை குண்டலகேசியிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

காதலன் பிரிந்திருக்கும்போது காதலிக்குச் சோர்வும், ஏக்கமும் மனத்தில் அலைபாய்கின்றன. திரும்பி வருவாரானால் அவரோடு பேசக்கூடாது! அவர் கெஞ்சினாலும் மனம் இளகி இரங்கக்கூடாது என்று எண்ணமிடுகிறாள். அவன் திரும்பிவந்து அன்புமொழி பேசியதும் அவளுடைய மன உறுதி இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றது. ஊடல் கொள்ள எண்ணி இருந்தவள் அவனைக் கண்டதும் கூடித் தழுவினாள். "கொழுப்பைத் தீயில் இட்டாற்போன்று உருகும் நெஞ்சுடைய என்னைப் போன்றவர்க்கு ஊடி நிற்கும் தன்மையும் உண்டோ?" என்று அவளுடைய மனமே அவள் செயலுக்கு அமைதி கூறுகிறது.

"நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு [உண்டோ
புணர்ந்தூடி நிற்போம் எனல்" (1260)

கணவனுடைய அன்புமொழி திண்ணிய பெண்மையை இளகச் செய்து மனத்தை உருக்கிவிடுகிறது.

தீய செயல்களைச் செய்ய அஞ்ச வேண்டும்; பிறர் மனம் புண்படும்படியாகப் பேசக்கூடாது; குறையறக் குற்றங் கடிந்து வாழ்தல் வேண்டும்; பெரியோர் செயல்களை முடிக்க வேண்டும்; அவர்களிடம் அகலாது அணுகாது அளவோடு பழக வேண்டும்; கள்ளுண்ணக் கூடாது; சினத்தை அகற்ற வேண்டும்; வறுமை கொடியது; காதலில் பிரிவு ஆற்ற முடியாதது; புணர்ச்சி மகிழ்ச்சியைத் தரும்; அலர் தூற்றுதல் காதலை வளர்க்கும்; காதலன் அன்பு காதலியின் உள்ளத்தை உருக்கும் என்னும் கருத்துக்களை வள்ளுவர் நெருப்புக் கொண்டு விளக்கியுள்ள திறமறிந்து மகிழ்வோமாக!

## புதுக்கோட்டை அம்மன் காசு



* இருமடங்கு பெரிதாக்கப்பட்ட வடிவம்

புதுக்கோட்டையை ஆண்ட மன்னர்களில் புகழ்மிக்கவர்களில் ஒருவர் விஜய ரகுநாதத் தொண்டைமான் (கி.பி. 1730-1769) என்பவர். அவர் காலத்தில் அந்த சமஸ்தானத்தில் நவராத்திரியும் துர்க்கா பூசையும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அந்த விழாவின்போது பலருக்கு அன்னதானம் அளித்து ஒவ்வொருவருக்கும் நாலு காசுகள் கொடுப்பது வழக்கம்.

இந்தத் தட்சணைக்காகத் தனியாக அச்சடிக்கப்பட்ட நாணயங்கள் தாம் அம்மன்காசு எனப்படும் நாணயங்கள். இது, அளவில் பழைய பைசாவுக்குக் கொஞ்சம் சிறிதாக இருக்கும். இந்த செப்புக்காசின் ஒருபுறம் 'விஜயா' என்ற அரசரின் பெயர் தெலுங்கிலும் மறுபுறம் திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் அம்மனின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன. அம்மனின் உருவத்தைக் கொண்ட இந்தக் காசு 'அம்மன் காசு' என்று பெயர் பெற்றது. அக்காலத்தில் இருபது அம்மன் காசுகள் கொண்டது அப்போதைய ஓர் அணாவாக இருந்தது. நாளடைவில் இதன் மதிப்பு உயர்ந்து அணாவுக்குப் பன்னிரெண்டு அம்மன் காசுகள் என்றாயிற்று. அதாவது பழைய பைசாவுக்குச் சமமாக இந்தக் காசுகள் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வழங்கலாயிற்று.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

என்.எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குனர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

TNSC BANK




'பாட்டா' நகரின் ஒரு தோற்றம்

# கவின்மிகு காலணிகள்

நாகரிகம் வளர வளர நவீன வசதிகள் பெருகிக் கொண்டே வருகின்றன.

'நாகரிகம்' என்ற பெயரில் ஆடைக் குறைப்பு ஒரு பக்கம் இருந்தாலும், ஆடை அணி வகைகள் புதுமைக்கோலம் பெற்று புற்றீசல்கள் போல் வந்துகொண்டிருக்கின்ற பாங்கையும் பார்க்கின்றோம்.

முகத்துக்குப் பவுடர், கண்ணுக்கு மை, உதட்டுக்குச் சாயம் இத்தியாதிகளுடன் நெற்றியிலே நாளுக்கோர் வண்ணப் பொட்டும் வைத்துக் கொள்வதைச் சிலர் நாகரிகமாக, 'ஃபேஷ‌ஞ'க் கருதுகின்றனர். சிலர் அழகிய ஆடை அணிவகைகளோடு விதவிதமான காலணிகள் அணிந்து பவனி வருவதைப் பெரிதும் விரும்புகின்றனர்.

கவின்மிகு காலணிகளைத் தயாரிப்பதில் இன்று உலகப் புகழ்பெற்றது 'பாட்டா' என்பது நமக்குத் தெரியும். கலை வண்ணம் மிளிரும் காலணிகளை உருவாக்குவதில் இந்நிறுவனத்தினர் மிக்கத் திறம்வா[illegible] விளங்குகின்றனர்.

தொழில், வளம் பெற்று வளர்ந்து வருவதற்குத் தொழிலாளர்களும் ஒரு காரணம் என்பதை உணர்ந்த இந்நிறுவனத்தினர், தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து வருவதைப் பாராட்ட வேண்டும்.

'பாட்டா' என்ற பெயரில் கல்கத்தாவில் ஒரு பாட்டா நகரே உருவாகியிருக்கிறது என்றால், இதன் மின்னல் வேகத் தொழில் வளர்ச்சியினை நாம் நன்கு உணரலாம்.

தனியார் நிறுவனமாக விளங்கி வந்த இந்தத் தொழிற்சாலை 1943-ல் பொதுத் தொழிற்சாலையாக மாற்றமடைந்து, பிறகு 1973-ல் 'பாட்டா காலணித் தொழிற்சாலை லிட்' என்பது 'பாட்டா-இந்தியா' வாக இன்று மாற்றமடைந்துள்ளது.

வெளிநாட்டுச் சந்தைகளில் போட்டி போடத்தக்க வகையில் தற்பொழுது ஓராண்டில் ஒரு கோடி இணை காலணிகள் விற்பனை செய்யப்படுகின்றன! அதிகப் பணப்புழக்கம் உள்ள 40 நாடுகளுக்கு இதுவரை 10 கோடி இணைகளுக்கு மேற்பட்ட காலணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இன்று இது இந்தியாவிலேயே காலணிகள் ஏற்றுமதியில் முன்னணியில் நிற்கிறது. 1967-க்கும் 1972-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ரூபாய் 25 கோடிக்கும் மேற்பட்ட பணத்தை அந்நியச் செலாவணியாகப் பெற்றுத் தந்துள்ளது.

முதன் முதலில் இயந்திரத்தால் உருவாக்கப் பெற்ற முதல் தரமான காலணிகளை அறிமுகப்படுத்திய பெருமை இத்தொழிற்சாலையையே சேரும். இன்று இதன் விற்பனை நிலையங்கள் இல்லாத இடமே இல்லை எனலாம்.

காலத்திற்கேற்ற, விழாக்களுக்கு உகந்த வகையில் இந்த விற்பனை நிலையங்கள் ஒளி அமைப்புகளுடன் அழகுபடுத்தப்படுகின்றன.

ஒரு தொழிலுக்கு மூலதனம் மட்டும் முக்கிய காரணமல்ல. உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கையும் தேவை. அப்போதுதான் எண்ணிய செயல் வெற்றி பெறும். இதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது இத் தொழிற்சாலை.

1931-ல் சிறிய அளவில் துவக்கப்பட்ட இது, இன்று முன்னேறிய ஒரு பெரிய தொழிற்சாலையாக விளங்கி வருகிறது. இதன் தலைமைத் தொழிற்சாலை கல்கத்தா அருகிலுள்ள பாட்டா நகரில் உள்ளது. தோல், ரப்பர் தொழிற்சாலைகளுடன், தோல் பதனிடுதல், இரசாயனம், ஆராய்ச்சி போன்ற துணைத் தொழிற் கூடங்களும் உள்ளன.

புது வகைக் காலணிகளையும், தோல் பதனிடும் கருவிகளையும் உருவாக்குகின்ற பொறியியல் நிலையமாகவும் இங்குள்ள தொழிற்கூடம் அமைந்துள்ளது.

இத் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் கூட்டுப் பேரத்தின் வாயிலாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் மூலமாகப் பெறுகின்ற வாய்ப்புக்களைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் வேலைக்குழு, உற்பத்தித்திறன் குழு, நோயாளிகள் நல்வாழ்வுச் சங்கம், கூட்டுறவுச் சங்கம் போன்றவைகளுடன் ஒத்துழைப்பும், பங்கும் பெற்றுள்ளார்கள். நல்ல ஊதியம், சலுகைகள், தாராள விடுப்பு வசதிகள் மற்றும் வாரத்தில் 5 நாட்கள் வேலை போன்றவைகளால் இத் தொழிலாளர்களை திறமை வாய்ந்தவர்களாக விளங்கச் செய்கிறது.

இந்நகரில் பாதிக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்குக் குடியிருப்புப் பகுதிகளும், 60 படுக்கைகளும், ஒரு புறநோயாளர் பிரிவும் கொண்ட மருத்துவமனை ஒன்றும், கூட்டுறவு அங்காடி ஒன்றும், மற்றும் சிறுவர் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர் நிலைப் பள்ளிகளும், விளையாட்டுத் திடல், விளையாட்டு அரங்கம், திரையரங்கம், மனமகிழ் மன்றங்கள் போன்றவைகளும் உள்ளன.

மொத்தம் 22 ஆயிரம் தொழிலாளர்கள் இந்தக் காலணித் தொழிற்சாலைகளில் பணி புரிகிறார்கள். இந்த நிறுவனத்தின் மூலம் தனிப்பட்ட தொழிலாளிகள், விநியோகஸ்தர்களைச் சேர்த்து 3 இலட்சம் பேர் பயனடைகிறார்கள்.

மொத்தம் 1,100 சில்லறைக் கடைகள் உள்ளன. 10 ஆயிரம் விநியோகஸ்தர்களைக் கொண்ட 430 மொத்த வியாபாரிகள் இருக்கிறார்கள்.

40 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் இது, கடந்த 4 ஆண்டுகளாக ஏற்றுமதி சாதனைக்காகத் தொடர்ந்து தேசிய விருது பெற்று வருகிறது.

இத்தொழிற்சாலைக்கு உலகம் முழுவதிலும் 90 நாடுகளில் 96 நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 85 ஆயிரம் பேர் பணி புரிகிறார்கள். மொத்தம் 60 கோடி காலணிகள் (இணை காலணிகள் 30 கோடி) விற்பனையாகின்றன!



காலணி உருவாக்க உதவும் ஒரு வகை இயந்திரம்

முதலில் சிறிய அளவில் துவக்கி, இன்று பெரிய அளவில் வளர்ந்து வரும் இத்தொழிற்சாலை, தொழில் ஆர்வமுள்ளோர்க்கு ஒரு தூண்டுகோலாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல!

—பி.வி ஜி.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

FDSSPB 777TMA




# நன்செய் தரிசுக்கு ஏற்ற நல்ல பருத்தி




தற்பொழுது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் நெல் அறுவடைக்குப் பிறகு பல மாதங்கள் வரை நிலங்கள் சாகுபடியின்றித் தரிசாகவே கிடக்கின்றன. தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நன்செய் தரிசில் குறுகிய காலப் பருத்தி பயிரிட்டால், உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாயும், பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைப்பதுடன், நம் நாட்டில் நிலவும் பருத்திப் பற்றாக் குறையும் ஓரளவு நீங்கி விடும்! மேற்கூறிய 4 மாவட்டங்களிலும் தற்பொழுது ஒரு சில உழவர் பெருமக்கள் நெல் தரிசு நிலங்களில் 'பி. 216. எப்' எனப்படும் பஞ்சாப் பருத்தியைப் பயிரிட்டு வருகின்றார்கள். இந்த இரகப் பருத்தி எதிர் பார்த்த அளவுக்குப் பயன் அளிக்காததால், உழவர் பெருமக்களால் பெரிதும் விரும்பப் படவில்லை. அதனால் இப்பருத்திச் சாகுபடி பரவவில்லை. எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களின் நெல் தரிசு நிலங்களில் இறவையாகப் பயிரிடுவதற்கு ஏற்ற கம்போடியா பருத்தியை 1972-ஆம் ஆண்டில் வெளியிட்டது. இந்த இரகத்தின் பெயர் 'எம்.சி.யு 7' எனப்படுகிறது.

'எம்.சி.யு. 7' என்ற பருத்தி இரகம் அணுக்கதிர் உதவியால் தோற்றுவிக்கப்பட்ட முதல் இந்தியப் பருத்தியாகும்! இதைத் தோற்றுவித்த பெருமை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கே உரியதாகும்! இந்த ரகப் பருத்தியின் இழை நீளம் 1 அங்குலம் உள்ளது. இப்பருத்தியைக் கொண்டு 46-ஆம் எண் நூல் நூற்கலாம். 135 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடிய இந்த இரகம் 'பி. 216. எப்' பருத்தியை விட 10 நாட்கள் குறைந்த வயதுடைதாகும். இந்த ரகம் 'பி. 216. எப்' பருத்தியை விடச் சராசரியாக 34 சதம் அதிக மகசூல் தரக் கூடியதாகும்!

'எம்.சி.யு. 7' பருத்தி பயிரிட்டால் ஏக்கருக்கு சராசரியாக ரூபாய் 1,250 வருவாய் பெறலாம். செலவு ரூபாய் 6[illegible] போக, ஏக்கருக்கு ரூபாய் [illegible] நிகர இலாபம் கிடைக்கக் கூடும்! 'எம்.சி.யு. 7' பருத்தி பயிரிடுவதின் மூலம், தமிழ் நாட்டில் ஏறத்தாழ [illegible],[illegible]00 பேல்கள் நீண்ட இழைப் [illegible] உற்பத்தி செய்ய [illegible] என்றும், அதனால் தமிழ்[illegible] உழவர் பெருமக்களுக்கு [illegible] தம் 50 இலட்சம் ரூபாய் அ[illegible] வருவாய் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, குறைந்த வயதும், நீண்ட இழையும், அதிக மகசூலும், அதிக இலாபமும் தரக் கூடிய 'எம்.சி.யு 7' பருத்தியை நீர்ப்பாசன வசதியுள்ள நெல் தரிசு நிலங்களில் கீழ்க்கண்டவாறு பயிரிட்டுப் பயன் அடையுமாறு செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## 'எம்.சி.யு. 7' சாகுபடி குறிப்புகள்.

பருவம் : பிப்ரவரி மாதத்தில் (மாசிப்பட்டம்) விதைக்க வேண்டும்.

வயது: 1[illegible]5 நாட்கள்.

விதையளவு : 10 கிலோ

விதையுடன் ம[illegible]ந்து கலத்தல் : ஒரு கிலோ [illegible]தைக்கு 2 கிராம் 'அ[illegible]' அல்லது 'செரசான்' [illegible]லது 'டி.எம்.டி.டி.' [illegible]தம் [illegible]லந்து விதைக்க வேண்டும்.

[illegible] தயாரித்தல் : நெல் அறுவடையான பிறகு நிலத்தில் 4 முறை நன்கு உழுது பண்படுத்தவும். பிறகு 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியில் பார்கள் அமைத்துக் கொள்ளவும்.

அடியுரம் இடுதல் : கடைசி உழவில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து (70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா), 7 கிலோ மணிச்சத்து (44 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 7 கிலோ சாம்பல் சத்து (12 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை இட வேண்டும். அல்லது பார்கள் அமைத்த பிறகு, பார்களின் சரிவில் விதைகளை நடும் வரிசைக்குக் கீழே 3 அங்குல தூரத்தில் உரங்களைச் சாலில் இட்டு மண்ணால் மூடலாம்.

விதைத்தல் : பார்களின் ஒரு பக்கச் சரிவில், உரமிட்ட வரிசைக்கு 3 அங்குல உயரத்தில் குழிக்குக் குழி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளி விட்டு குழிக்கு 3 விதை வீதம் ஊன்றவேண்டும்.

நீர்ப்பாசனம் : விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதை ஊன்றிய 4-வது நாளில் முளைநீர் விட வேண்டும். பிறகு 10 நாட்களுக்கு ஒருமுறை வீதம் பூ பூக்கும் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூ பூத்த பிறகு 7 நாட்களுக்கு ஒரு முறை வீதம் விதைத்த 110 நாட்கள் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

களை எடுத்தல் : விதைத்த 15-வது, 30-வது நாட்களில் கொத்தி விட்டுக் களை எடுக்க வேண்டும்.

செடி கலைத்தல் : விதைத்த 30-வது நாளில், ஒவ்வொரு குழியிலும் ஒரு நல்ல செடியை மட்டும் விட்டு விட்டு, அதிகமாக உள்ள செடிகளை அகற்றி விட வேண்டும்.

மேல் உரம் : விதைத்த 30 முதல் 35 நாட்களில் 14 கிலோ தழைச்சத்தை (70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா) மேலுரமாக இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு : விதைத்த 10-வது நாளில் தத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க டி.டி.டீ. 5 சதத் தூளையும், பி.எச்.சி. 10 சதத் தூளையும் 1 : 1 என்ற அளவில் கலந்து, அக்கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவி விட வேண்டும்.

விதைத்த 30-வது நாளில் பாரத்தியான் 0.25 சத மருத்துக் கலவையைத் (100 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து) தெளிக்க வேண்டும். விதைத்த 45-வது நாளில் இருந்து 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் 2 : 1 என்ற விகிதத்தில் கந்தகக் கலவையையும், 'மெட்டாசிட் கோம்பி' மருந்தையும் 'மாற்றி மாற்றி 110 நாட்கள் வரை, தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் காய்ப் புழுக்கள், சிவப்பு உண்ணிகள் ஆகியவற்றின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மகசூல் : ஏக்கருக்குக் குறைந்தது 590 கிலோ பருத்தி கிடைக்கும்.

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு நெல் தரிசு நிலங்களில் 'எம்.சி.யு. 7' பருத்தியை இறவையாகப் பயிரிட்டுப் பயன் பெறுமாறு செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட உழவர் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.



## எரி பொருள்களுக்கு மாற்றுப் பொருள் கண்டுபிடித்தால் ஓர் இலட்சம் ரூபாய் பரிசு!

தற்பொழுது உலகெங்கணும் போக்குவரத்து வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் 'பெட்ரோல்', 'டீசல்' ஆகிய எரி பொருள்களின் பற்ருக்குறை நிலவி வருகிறது. இப்பற்ருக்குறை வருங்காலத்தில் மிகவும் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

"எரிபொருள் பற்ருக்குறை நிலைமையிலிருந்து மீள்வதற்காக, 'பெட்ரோல்', 'டீசல்' ஆகிய எரிபொருள்களுக்கு மாற்றுப் பொருள் (Substitute) கண்டு பிடிப்பவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் பரிசு கொடுக்கத் தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் முடிவு எடுத்துள்ளன" என்று தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறைச் செயலாளரும், மற்றும் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் அலுவலால் தலைவருமான திரு. எம். எஸ். ராம் அவர்கள் தெரிவித்துள்ளார். இது பற்றிய திட்டம் விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## பத்தாயிரம் ரூபாய் பரிசு!



"ஒரு ஏக்கர் நிலத்தில் ஆண்டிற்கு 40 முதல் 45 மெட்ரிக் டன் விறகுக் கட்டை உற்பத்தி செய்யக்கூடிய, விரைந்து வளரும் மரத்தை உருவாக்கக்கூடிய விஞ்ஞானிக்கு ரூபாய் 10,000 பரிசு வழங்கப்படும். இத்தகைய மரம் உருவாக்கப்பட்டால் தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களை வட இந்தியாவிலிருந்து நிலக்கரியை எதிர்பார்க்காமல் இயக்கி, மின்சாரப் பற்ருக்குறைப் பிரச்சினைகளைச் சமாளித்திட இயலும்".

இவ்வாறு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப் பெற்ற அறிவியல் பணியாளர்கள் மாநாட்டின் முடிவு விழா உரையில் வேளாண்மை அமைச்சர் திரு கி. பா. ஆதித்தனார் அவர்கள் அறிவித்துள்ளார்.






# இறைவைக்கு ஏற்ற துவரை

குறைந்த வயதும், நிறைந்த மகசூலும் தரவல்லது 'கோ. 1' துவரை! இந்த இரகம் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இறைவையில் பயிரிடுவதற்கு ஏற்றதாகும். இதன் செடிகள் குட்டையாக இருந்தாலும், அடர்த்தியாகக் காய்க்கும் திறன் வாய்ந்தவை. இதைத் தனிப் பயிராகவோ அல்லது இறைவை நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகவோ சாகுபடி செய்யலாம்.

தமிழ் நாட்டில் பிப்ரவரி—மார்ச்சு மாதங்களில் பெரும் பரப்பில் இறைவை நிலக்கடலை (குத்துக்கடலை) சாகுபடி செய்யப்படுகிறது. இப் பரப்பு முழுவதிலும் நிலக்கடலையுடன் 'கோ. 1' துவரையைப் பயிரிட்டால் தமிழ் நாட்டில் துவரம் பருப்பு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்கிட இயலும்.

பருப்புப் பற்ருக்குறை நிலவும் இந் நேரத்தில் குறுகிய காலத்தில் நிறைந்த மகசூல் அளிக்கக் கூடிய 'கோ. 1' துவரையைப் பயிரிடுதல், நாட்டிற்கும் வீட்டிற்கும் ஒவ்வொரு உழவர் பெருமகனும் செய்யக் கூடிய நல்ல தொண்டாக அமையும். எனவே, 'கோ. 1' துவரையின் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) தமிழக உழவர் பெரு மக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

### ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்.

பட்டம் : பிப்ரவரி—மார்ச் முதல் ஜூன்—ஜூலை வரை.

வயது : 135 நாட்கள்.

விதையளவு : தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 6 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

இடைவெளி : வரிசை வரிசையாக விதைப்பதே சிறந்தது. தனிப் பயிராகச் சாகுபடி செய்ய வரிசைக்கு வரிசை 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியும்; வரிசையில் விதைக்கு விதை 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளியும் விட்டு விதைகளை விதைக்க வேண்டும்.

நிலம் தயாரித்தல் : தனிப் பயிராக 'கோ. 1' துவரை பயிரிட விரும்பினால், நிலத்தை முதலில் இரும்புக் கலப்பையால் 2 முறையும், பிறகு நாட்டுக் கலப்பையால் 2 முறையும் உழுது நன்கு புழுதியாக்க வேண்டும். தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியாக 10 சதுர அடி அளவில் பாத்திகள் அமைத்துக் கொள்ளல் நல்லது.

அடி உரம் : கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரமும், விதைப்பதற்கு முன்னால் ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்தும் (50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியா), 20 கிலோ மணிச் சத்தும் (125 கிலோ சூப்பர் பாஸ்பேட்) அடியுரமாக இட வேண்டும். இரசாயன உரத்தை விதை வரிசைக்குப் பக்கத்து வரிசையில் அதாவது சாலில் இடுதல் சிறந்தது.

கலப்புப் பயிர்: இறைவை நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய 'கோ. 1' துவரைக்கெனத் தனியே நிலம் தயாரிக்கத் தேவையில்லை. நிலக் கடலை விதைக்கும்போது 4.5 அடி இடை வெளியில் சாலில் 'கோ. 1' துவரையை விதைத்தால் போதுமானது. இதற்கென தனி உழைப்பும்

தேவை இல்லை! சாகுபடிச் செலவும் இல்லை! கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய வரிசைக்கு வரிசை 135 சென்டி மீட்டர் (4.5 அடி) இடைவெளியும், விதைக்கு விதை 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளியில் விட்டு விதைக்க வேண்டும். கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 3 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

தகுந்த இடைவெளி விட்டு 'கோ. 1' துவரையை விதைப்பதால், இறைவை நிலக்கடலையின் மகசூல் பாதிக்கப்படாது! இரசாயன உரம் இடுதல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல் ஆகிய வகைகளில் 'கோ. 1' துவரைக்கென தனியே செய்ய வேண்டியதில்லை. இறைவை நிலக்கடலைக்கு இடும் இரசாயன உரமும், களை எடுப்பும், தண்ணீர் பாசனமும் 'கோ. 1' துவரைக்குப் போதுமானது.

நீர்ப் பாசனம் : விதைத்த உடன் முதல் முறையாகவும், நான்காவது நாள் இரண்டாம் முறையாகவும், பிறகு 10 நாட்களுக்கு ஒரு முறை விதமும், தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால் வயலில் தண்ணீர் தேங்கி நிற்பதைத் தவிர்த்திட வேண்டும்.

களை எடுத்தல் : விதைத்த 15-ஆம் நாள் முதல் முறையும், அதன் பிறகு 1 மாதம் கழித்து இரண்டாம் முறையும் களையெடுத்துக் கொத்தி விட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு : 'கோ. 1' துவரையைஅசுவணி, இலைப் புழு, வண்டு போன்ற பூச்சிகள் தாக்கக்கூடும். இவைகளின் தாக்குதலிலிருந்து 'கோ. 1' துவரையைக் காப்பாற்ற பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி. டி. டீ. 5 சதத் தூளையும் 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ விதம் ஒன்று அல்லது இரண்டு முறைச் செடிகளின் மேல் தூவுதல் வேண்டும்.

துவரையின் காய்களைத் துளைக்கும் புழுக்களைக் கட்டுப்படுத்த, துவரைபூத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை விதம் 3 முறை டி.டி.டீ. 5 சதத் தூளையோ அல்லது கார்பரில் 10 சதத் தூளையோ ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

மகசூல்: தனிப் பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 700 கிலோ துவரையும், இறைவை நிலக்கடலையுடன் கலப்புப் பயிராக சாகுபடி செய்தால் ஏக்கருக்குக் குறைந்தது 200 கிலோ மகசூலும் கொடுக்க வல்லது கோ. 1 துவரை.

கலப்புப் பயிராக சாகுபடி செய்யும்போது எந்த விதச் சாகுபடிச் செலவும் இன்றி, உழவர்கள் அதிக வருவாய் பெற வாய்ப்பு உள்ளது! இதனால் உழவர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதுடன், பருப்பு உற்பத்தியும் பெருகிடும்! அதனால் பருப்பு விலையும் கணிசமாகக் குறைந்திடும்!

எனவே, தனிப் பயிராகவோ அல்லது கலப்புப் பயிராகவோ 'கோ. 1' துவரை பயிரிட்டுப் பயன் பெறுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.



கோ.1 துவரை

> மனத்திலே மட்டும் திருப்தி ஏற்பட்டிருந்தால், அவன் வாழ்வு எவ்வளவு வறுமையுற்றிருந்த போதிலும் உண்மையில் அவன் வாழ்வு செல்வம் உடையதாகும்.
>
> —ஷேக்ஸ்பியர்.



# மேலை நாட்டினரைக் கவரும் மேன்மைமிகு பொருட்காட்சி


பூம்புகார் கலைக்கூட அரங்கத்தைப் பார்வையிடக் காத்துக்கொண்டிருக்கும் பொதுமக்கள்.

மேலை நாட்டினரே வியந்து போற்றும் ஒரு பொருட்காட்சி இன்று சென்னை மாநகரில் நடந்து கொண்டிருக்கிறது. அதுதான் பொங்கல் விழா சுற்றுலாப் பொருட்காட்சி! தமிழகத்திலேயே முதன்முறையாக நடக்கும் அருங்காட்சி!

இருபத்திரண்டு ஏக்கர் பரப்பளவில் சென்னைத் தீவுத் திடலில் அமைந்துள்ள இப் பொருட்காட்சி, பயனுள்ளதாகவும், பொழுது போக்குக்கு உதவுவதாகவும், பாங்கான கண்காட்சியாகவும் விளங்கிப் பல்லாயிரவரைக் கவர்ந்து வருகிறது.

அதோ! வெளிநாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் கையில் காமிராவுடன் திரைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறாரே!

அங்கே பாருங்கள், சில மேலை நாட்டு ஆடவரும், மகளிரும் அந்த அரங்குகளிலிருந்து மகிழ்ச்சியுடன் வருவதை!

காட்சி அரங்குகள் அவர்கள் கருத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். தம்முடைய நாட்டில் தமிழகத்தின் பெருமையை எடுத்துக் காட்டத்தான் அவர்கள் படமெடுக்கின்றனர் என்பதை அறிந்து பெருமிதமடைகிறோம்.

வழக்கமாக நடக்கும் கண்காட்சிகளில் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டிருக்கும் பெட்டிக் கடைகள் இங்கே இல்லை; 'கண்காட்சி அப்படி இப்படி' என்ற வெட்டிப் பேச்சுக்கும் இடமில்லை; ஏனென்றால் கட்டிக் கரும்பாய் இனிக்கும் காட்சிகள் இங்கு ஏராளம் உண்டே!

கண்ணைக் கவரும் வண்ண மின் விளக்குகள் கண் சிமிட்ட, பொருட்காட்சி வாயிலின் இருபுறமும் கம்பீரமாய் வீற்றிருக்கும் ஐயனர் உருவங்கள் நம்மை, ''ஐயா! வருக வருக!'' என வரவேற்கின்றன.

உள்ளே நுழைகிறோம்.

சிறுவர் முதல் பெரியோர் வரை திரள் திரளாகக் காட்சி அரங்குகளைக் கண்டு செல்கின்ற அந்தக் காட்சி நம்மையெல்லாம் மகிழ்விக்கின்றது. அதே சமயத்தில் தமிழகத்தின் பண்டைச் சிறப்பை எடுத்துக் காட்டும் இணையற்ற எழில்மிகு காட்சியாகவும் இருப்பது கண்டு நாம் நெஞ்சம் நிமிர்கிறோம்.

**தீவுத் திடலில் பூம்புகார் :**

தஞ்சைத் தரணியில், நெஞ்சை அள்ளும் சிலம்பின் கதையைச் சொல்லும் பூம்புகார்க் கலைக்கூடம் கம்பீரமாய்க் காட்சியளிப்பதைக் கண்டிருக்கிறோம். இந்தவரலாற்றுக் கலைக்கோயிலை அங்கே போய்க் காண வாய்ப்பில்லாதவர்களுக்கு, இந்தப் பொருட்காட்சியிலே ஓர் நல் வாய்ப்புக் காத்திருக்கிறது. அதுதான் பூம்புகார்க் கலைக்கூடத்தின் மாதிரி அமைப்பு!

சிற்ப வேலைப்பாடமைந்த நுழை வாயிலினுள் நுழைகிறோம். எழில் பெற அமைந்துள்ள எழுநிலை மாடத்தினுள்ளேதான் பூம்புகார் சிலப்பதிகாரக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

ஆடவரும் மகளிரும் நிற்கின்ற நீண்ட வரிசை தெரிகிறது. கலைக்கூடத்தின் வாயிலினுள் நுழைந்ததுமே நம் முகமும் தெரிகிறது! ஆம். நுழைவாயிலில் ஒரு 'மினி' டெலிவிஷன், காண வருவோரின் முகத்தைப் படமாய்க் காட்டி மகிழ்விக்கிறது.

உள்ளே—

சிலப்பதிகாரத்தின் கதை கூறும் பெரிய புகைப்படங்கள்,

அட்டை சொல்லும் கட்டுரை—

சிற்ப வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதோடு வண்ண ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் அரங்கமான இது, உலக அரங்கினைக் கவரத்தக்க வகையில் அமைந்துள்ளது என்பதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும்.

சுற்றுலாத் துறையினரால் நடத்தப் பெறும் சிலப்பதிகார ஒலி-ஒளிக் காட்சி நம் உள்ளத்தைத் தொடுகிறது. நடிகர்களே இல்லாமல் இங்கே ஒரு நாடகம் நடைபெறுகிறது. இந்த ஒலி-ஒளிக் காட்சி சென்னைக்கு இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. 50 காசுக் கட்டணத்தில்—அரியதொரு நாடகத்தைப் பார்த்த நிறைவு நமக்கு ஏற்படுகிறது.

## இந்தியாவைக் கண்டு கொள்ளுக

மைய அரசின் செய்தி விளம்பரத் துறை அமைத்திருக்கும் அரங்கில் பல்வேறு செய்தித் தொகுப்புகளைப் படமாகப் பார்க்கிறோம். அதே சமயத்தில் இந்தியாவின் வளர்ச்சிகளையும் பெரிய பெரிய புகைப்படங்களாக அழகுற அமைத்திருக்கின்றனர். இத் துறை வெளியிட்ட பன்மொழி நூல்கள் பல, காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு அடுத்த அரங்குதான் 'இந்தியாவைக் கண்டு கொள்ளுங்கள்!''. இந்த அரங்கில் உள்ளவர்கள் நம்மைக் கண்டு கொள்கிறார்களோ என்னவோ, 'நாம் (அவர்களை அல்ல!) இந்தியாவைக் கண்டு கொள்கிறோம்! இவ்வரங்கின் வெளியே 'மினி' திரைப்படம் காட்டப்படுகிறது. வனவிலங்குகள் போன்ற படங்களைக் குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்கள்கூட குழந்தைகள் போலக் கண்டு மகிழ்கின்றனர். மைய அரசின் சுற்றுலாத்துறை அரங்கமான இதில் இந்தியாவில் சுற்றுலாவுக்கேற்ற இடங்களைப் புகைப்படங்களாக வைத்திருக்கின்றனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனத்தின் அரங்கிலும், தமிழ்நாட்டின் சுற்றுலாவுக்கேற்ற இடங்களைப் புகைப்படங்களாகக் காண்கிறோம். அத்துடன் சில வகை




வனத்துறை அரங்கைக் காணச் செல்லும் மக்கட் கூட்டம்.


பொருட்காட்சியில் உருவாக்கப்பட்டுள்ள (புதுப் பட்டி) மாதிரிக் கிராமத்தில் ஏற்றக் காட்சி.





இசைக் கருவிகளும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

## மின்னொளியும் 'மினி' ரயிலும்!

மின்னொளி வழங்கிடத் தமிழக அரசு ஆற்றும் அரும் பணிகளை விளக்குவது தமிழ்நாடு மின்சார வாரிய அரங்காகும். இந்த எழில் மிகு அரங்கில் காடம்பாறைக் குழாய் நீர் ஏற்று மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம், கொரட்டூர் 230 கிலோ வாட் துணை மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம் ஆகியவற்றின் மாதிரி அமைப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழகக் கிராமங்கள் மின் வசதி பெறுவதை விளக்கும் படமும், மின்சாரத்தினை எவ்வாறெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்பதை விளக்கும் படமும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

## இவை மட்டுமா?

'தமிழ்நாட்டில் மின்சார வளர்ச்சி' என்ற தலைப்பில் புள்ளி விவரங்கள் பேசுகின்றன. 1967-ல் மின் சக்தியைப் பயன்படுத்தியவரின் எண்ணிக்கை 14,82,798. 1973-ல் இந்த எண்ணிக்கை 25,45,000 ஆக உயர்ந்திருக்கிறது. 1967-ல் நபர் ஒருவர் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவு 98 யூனிட். 1973-ல் 133 யூனிட்.

அதோ! அந்த ரயிலைப் பார்ப்போமா?

'பொங்கல் விரைவு வண்டி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட 'மினி' ரயில் வண்டி ஒன்று பொருட்காட்சியினுள் வட்டமிடுகிறது. ஒரு பக்கம் 'குட்டி' ரயில் நிலையம் தெரிகிறது. ரயிலில் ஏற மக்கள் குழந்தை குட்டிகளுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர். ரயில் வந்து நிற்கிறது. பொருட்காட்சியை ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வந்த பயணிகள் புன்னகையுடன் இறங்குகின்றனர். டிக்கட் வாங்கியவர்கள் அதில் ஏறிக் கொள்கின்றனர். ரயில் புறப்படுகிறது. சிலர் அவர்களை வழியனுப்ப வந்தவர்களைப்போலக் கைகளை அசைத்து ஆரவாரிக்கின்றனர், குறும்பாக!

## வீட்டைக் கட்டிப் பார்!

அதோ! அந்தவீட்டிலென்ன ஒரே கூட்டம். ஏதாவது கலாட்டாவா? வீட்டுக்குள் போய் வெளியே வருபவர்களின் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே? 'சரி, போய்த் தான் பார்ப்போமே!' என்று உள்ளே போய்ப் பார்க்கிறோம்.

பார்வையாளர்கள் அறை, படுக்கை அறை, சமையல் அறை, குளியலறை இப்படி எல்லா அறைகளையும் சோதனை போடுவது போல, வந்தவர்கள் அலசி அலசிப் பார்க்கிறார்களே!

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் கட்டப் பெற்ற தக்கைக் கல்லால் ஆன வீடுதான் அது. அழகிய தோற்றத்துடன் எடுப்பாய்க் காட்சி அளிக்கும் இந்த வீட்டு மனையின் அளவு 435 சதுர அடி. ரூ. 12,500 செலவில் கட்டப்பட்ட இது எண்ணற்றவரைத் தம் பக்கம் ஈர்த்திருக்கிறது.

'தக்கைக்கல், வீடுகள் கட்டத் தக்க கல்' என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் வனப்புடன் அமைந்துள்ளதே அந்தப் பெருங்கூட்டத்துக்குக் காரணம் என்பதைப் பின்னால்



உணர முடிந்தது!

புதுப்பட்டி வாரீகளா!

''என்ன அண்ணே! நம்ம ஊருக்கே வந்துவிட்டோமா என்ன? எல்லாம் நம்ம ஊராட்டமே இருக்கே . . .''

''ஆமாம் தம்பி. எனக்குங் கூடச் சந்தேகம் வந்துடுச்சி. நம்ம ஊரு மாரியம்மன் கோயில் இருக்கு . . .'' இப்படித்தானே

இப்படி ஒவ்வொருத்தருக்கும் தத்தம் ஊர் நினைவு வரும்படி அசல் கிராமமாகத் தோற்றம் அளிக்கிறது புதுப்பட்டி.

புதுப்பட்டிக்குள்ளே போகிறோம். சிறு சிறு குடிசைகள். அழகிய தெரு. தெரு ஓரத்திலே நின்றிருக்கும் விளக்குக் கம்பங்கள். நெல் வயல்கள். கரும்புத் தோட்டங்கள். பார்த்துக் கொண்டே போகிறோம். வயலில் ஓர் உழவன் உழுது கொண்டிருக்கிறான். அருகே கிணறும் ஏற்றமும் தெரிகிறது. மேலும் பார்த்துக் கொண்டே போகிறோம். மாட்டுச் செக்கு. ஊராட்சி மன்றம், மரஞ் செடி கொடிகள்—நம் எண்ணத்தையெல்லாம் ஈர்க்கின்றன. ஊருக்கு நடுவே மாரியம்மன் கோயில். கோயிலில் பூசை எல்லாம் நடக்கிறது! கரகம், காவடி, புலி ஆட்டங்களும் அருகே நடக்கின்றன. உடனே நமக்கு மாரியம்மன் கோயில் திருவிழா நினைவுக்கு வருகிறது!

புதுப்பட்டியிலிருந்து நாம் வெளியே வருகிறோம். ஒரு கிராமத்திலிருந்து நகரத்துக்கு வந்த பிரமைதான் ஏற்படுகிறது. 5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இது, வெளிநாட்டினரை வெகுவாகக் கவர்கின்றதாம். இதுவரை எந்தக் காட்சியிலும் இடம் பெறாத ஒரு புதிய படைப்பான இந்தக் கிராமத்துக்குப் புதுப்பட்டி என்று பெயர் வைத்தது பொருத்தம்தானே?





## தாயைப் பழித்தாலும்...

'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பார்கள். அந்தத் தண்ணீர் வழங்குவதற்கும் ஒரு வாரியம் இயங்குகிறது என்பதை எடுத்துக்காட்டி அதன் வளர்ச்சிப் பணிகளைப் புள்ளி விவரங்களாக அள்ளித் தெளிக்கிறது குடி நீர் வடிகால் வாரிய அரங்கு!

உலகிலுள்ள மொத்த நீரின் அளவு என்ன?

இதுபோன்ற பல பொது அறிவு வினாக்களுக்கு விடைகளை இங்கு நாம் தெரிந்து கொள்கிறோம். உலகிலுள்ள நீரின் மொத்த அளவு கடல் நீர் உட்பட, மூன்று கோடி, கோடி காலன்கள்! இதில் நல்ல நீர் மூன்று விழுக்காடே. தமிழ் நாட்டில் நாளொன்றுக்கு 15 கோடி காலன் குடிநீரைப் புழங்குகிறோம்.

திருவாரூர், கோவில்பட்டி குடிநீர்த்திட்டம், கோவை குடிநீர் பெருக்குத் திட்டம், ஊரகக் குடிநீர்த் திட்டம், சிறுவாணி, வீராணம் திட்டங்கள் ஆகியவற்றின் மாதிரி அமைப்புகள் இங்கே இடம் பெற்றுள்ளன. 1971-ல் குடிநீர் வடிகால் வாரியம் துவக்கப்பட்டது முதல் இன்றுவரை அதனால் பயனடையும் மக்கள் தொகை 37 இலட்சம். செலவு ரூ. 3080 இலட்சம் என்ற குறிப்பையும் தெரிந்து கொள்கிறோம். வீராணம் திட்டத்தின் மிகப் பெரிய நீரேற்றுக் குழாய்கள் திடலின் ஒரு பக்கம் வைக்கப் பெற்றுள்ளதைப் பார்க்கும் போது உண்மையில் நமக்கு மலைப்பே ஏற்படுகிறது.!

## கட்டபொம்மன் வணங்கிய விக்கிரகம்!

அறநிலையப் பாதுகாப்புத் துறையின் அரங்கம் ஒரு கோயிலைப்போலக் காட்சியளிக்கிறது. அரங்கத்தின் அருகே யானை, நந்தி, மயில் ஆகிய வாகனங்கள் காட்சிதருகின்றன.



ஒருவர் வாயிலினுள் நுழைய தயங்கித் தயங்கி நிற்கிறார். கோயிலாயிற்றே, காலணியுடன் எப்படி உள்ளே நுழைவது என்ற அவர் தயக்கத்தைப் புரிந்து கொண்ட அவரது நண்பர், "சும்மா உள்ளே வாருங்கள்! இது கோயிலல்ல. அறநிலையத்துறையின் அரங்கு தானப்பா!" என்று சொன்னதும் அவர் தைரியமாக உள்ளே நுழைகிறார்!

உள்ளே, தமிழ்நாட்டின் திருக்கோயில்கள், ஆறுபடை வீட்டின் வண்ண ஓவியங்கள், தந்தத்தாலான சிலைகள் முதலியன மனத்தைக் கவர்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக வீரபாண்டியக்கட்டபொம்மன் வணங்கிய விக்கிரகங்கள் காட்சியில் எல்லாரையும் ஈர்க்கின்றன.

வேடந்தாங்கல் இங்கே வந்ததுவோ?

வேடந்தாங்கல்!

பறவைகள் சரணாலயம்! பலவகையான பன்னிறப் பறவைகள் எல்லாம் கூடும் இடம்! அந்தப் பறவைகளின் பல்வேறு குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தால் எப்படியிருக்கும்? அந்த ஒலிகள் கேட்கின்றன. ஆம். வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தின் மாதிரி அமைப்பு நம்மை வேடந்தாங்கலுக்கே அழைத்துச் செல்கின்றது!

காட்டில் யானையை எப்படிப் பிடிக்கிறார்கள்? அவற்றை வண்ணப் படங்களில் பார்த்து மகிழ்கிறோம்.

வனத்துறையிலிருந்து, மீன் துறைக்குப் போகிறோம். பெரிய தண்ணீர்த் தொட்டிகளில் வகை வகையான மீன்கள் நீந்திக் கொண்டிருக்கின்றன.

"இந்த மீன் சாப்பிடுவதற்கு ரொம்ப ருசியாய் இருக்கும்!" என்கிறார் தன் கணவனிடம் ஓர் அம்மையார்.

"போதும், போதும்! இங்கேயுமா சாப்பாட்டுப் பிரச்சினை..." என்று அவரை அங்கிருந்து அழைத்துச் செல்கிறார் அம்மையாரின் கணவர்.

அதோ! அது என்ன மீனா? அல்லது பாரசூட்டா? விமானத்திலிருந்து கீழே இறங்கும் 'பாரசூட்' போலல்லவா இருக்கிறது அது! அதுவும் ஒரு வகை மீனும். என்ன விந்தை!

**முதல் ரயில் என்ஜினைப் பார்ப்போமா?**

முதல் ரயில் என்ஜினை நாம் பார்த்திருக்கிறோமா?

அதன், மாதிரி அமைப்புடன் துவங்கும் இந்திய ரயில்வே அரங்கு. ரயில் பயணிகளான நம்மை வெகுவாகக் கவர்கின்றது. ரயில் என்ஜின்கள், போகிகள் ஆகியவற்றின் மாதிரிகள், கண்ணைக் கவரும் பல்வேறு புகைப்படங்கள் எல்லாம் அரங்கில் இடம் பெற்றுள்ளன.

டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வதால் இரயில்வே துறைக்கு ஏற்படும் நட்டத்தை மட்டுமா நாம் தெரிந்து கொள்கிறோம்? அந்தக் குற்றம் பரவாமல் தடுக்கவும் நாம் இரயில்வே துறையோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதையும் உணர்கிறோமே!


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண்: 151.

சேலம் - 1. தொலைபேசி எண்: 2402

கிளைகள்: நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

**வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்**

**கால் டெபாசிட்டுகள்:**
ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) .. .. 3¼%
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) .. .. 3½%

**சீசன் டெபாசிட்டுகள்:**
ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும்
31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் .. .. 4 %
.. .. 4½%

**பிக்சட் டெபாசிட்டுகள்:**
ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு:
91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் .. .. 5½%
6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் .. .. 6 %
12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் .. .. 6¼%
24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் .. .. 7¼%
36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் .. .. 7½%
5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் .. .. 7¾%
6 வருடத்திற்கும் அதற்கு மேலும் .. .. 8 %
நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு 4½%

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ.,
தலைவர்.

வை. இராமலிங்கம்,
செயலாளர்.

தி. இராஜமாணிக்கம்,
நிர்வாக அலுவலர்.


# பார்வையாளர் புத்தகத்தில் சில பக்கங்கள்

இந்த மாநிலத்தில் எனது சுற்றுப்பயணம் மிகவும் குறுகிய கால அளவினதாகவும், ஓய்வு ஒழிவின்றியிருந்தும் கூட இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியினை விரைவாகக் கண்ணோட்டமிட்டதன் மூலம் இந்த மாநிலமும், இந்தியாவும், வியக்கத்தக்க அளவு முன்னேறியுள்ளன என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாகிறது.

இந்த முன்னேற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களும், அதற்கு உதவியவர்களும் இதய பூர்வமாகவும், நேர்மையாகவும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

—டபிள்யூ. கே. சகுலா,
பொருளாதார வளர்ச்சித்-
திட்ட அமைச்சர், தன்சானியா.

இந்தப் பொருட்காட்சி உண்மையிலேயே வியக்கத் தக்கது. தங்களது சாதனைகள் மீது மக்கள் கொண்டுள்ள பெருமிதம் மேலும் வியக்கத்தக்கது. மென்மையான குணத்திலும், விருந்தோம்பல் பண்பிலும், இந்த மக்கள், மிகவும் பாராட்டும் வண்ணமுள்ளனர்.

மிக்க நன்றி!
பாராட்டுக்கள்.

—விசாரிடெஸ், எம். பி.,
சைப்ரஸ் பாராளுமன்றம்,
நிக்கோசியா,
சைப்ரஸ்.

**சித்திரமும் கைப்பழக்கம்....**

ஒரு பெரியவர் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

ஒரு சில மாணவர்கள் அவரை உற்று நோக்கிய வண்ணம், வண்ணக் குழம்பால் அவர் உருவத்தை வரைகின்றனர். ஒருவர் களிமண்ணைக்கொண்டு அவரைச் சிலையாக வடித்தெடுக்கிறார். ஒரே சமயத்தில் சிலையும், சித்திரமும் உருவாகின்ற காட்சி வேறெங்கே நடக்கும்?

அரசினர் கலைத் தொழில் கல்லூரியிலன்றோ? அதன் சார்பில் நடக்கும் இந்த அரங்கில் வண்ண ஓவியங்கள், சித்திர வேலைப்பாடமைந்த கலைப் பொருள்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இந்த அரங்கத்தின் அமைப்பே ஒரு 'மாடர்ன் ஆர்ட்'டாக அல்லவா இருக்கிறது!

கலைப் பொருள்கள் என்றதும் அரும்பொருட் காட்சியகத்தின் அரங்கம் நினைவுக்கு வருகிறது.

பண்டைக் காலச் சின்னங்கள், படங்கள் முதலியன கருத்தைக் கவர்கின்றன.

இவையன்றித் தொழில் வணிகத் துறையின் அரங்கில் டான்சி, சிப்காட், டிட்கோ, 'பூம்புகார்' ஆகியவற்றின் பொருள்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன

கதர் வாரியம், காதி கிராப்ட், கோ ஆப் டெக்ஸ் போன்ற கண்ணைக் கவரும் வண்ணத் துணிகள் குவிந்துள்ள அரங்குகள் குறிப்பாகப் பெண்களைத் தம் பக்கம் ஈர்க்கின்றன.

இதேபோல் பொறியியல், பொதுப்பணித் துறைகளும் மக்கள் சிந்தைக்கு விருந்தூட்டுகின்றன.

**கலை நிகழ்ச்சியும் கதம்பக் கடைகளும்**

நாள்தோறும் கலைநிகழ்ச்சிகளைக் கண்ணுறக் கண்டு மகிழத் தக்க வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

நாடகம், நடனம், கரகம், நாதசுரம் போன்ற நிகழ்ச்சிகள் மனத்துக்குத் தெம்பூட்டுகின்றன.

செய்தித் துறையின் செய்திப் படங்களும், பிரபல நடிகர்கள் நடிக்கும் திரைப்படங்களும் நாள்தோறும் இலவசமாகக் காட்டப்படுகின்றன. இவையன்றிப் பண்டைய இசைக் கருவிகள் காட்சி அரங்கும், பொழுது போக்கிட ராட்சச ராட்டினங்களும், இசைக்கேற்ப ஆடும் பொம்மலாட்டங்களும், குதூகலத்தைத் தரும் அழகிய குளமும் நம் நெஞ்சைத் தொடுகின்றன.

கதம்பக் கடைகள்!

பிளாஸ்டிக் பொருள்கள், வானொலிப் பெட்டிகள், இசைத் தட்டுக்கள், சிற்றுண்டிச்சாலைகள், சைக்கிள்கள், உலோக, மரச்சாமான்கள், டெலிவிஷன் காட்சிகள், மின்சாரப் பொருள்கள், வங்கிகள், விளையாட்டுப் பொம்மைகள், புத்தகங்கள் போன்ற எண்ணற்ற கடைகள் எல்லாரையும் ஈர்க்கின்றன.

'பில்கோ' கண்ணாடிகள் அரங்கில் சிறிய பெரிய அழகிய நிலைக்கண்ணாடிகள் அனைவர் முகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. பூ வேலைப்பாடுள்ள கண்ணாடியோடு, கண்ணாடியில் காந்தி, இயேசு போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள கண்ணாடிகளையும் காட்சியில் வைத்திருக்கின்றனர். இந்த வேலைப்பாடு தமிழகத்தில் இதுவே முதல் தடவை எனக் கருதப்படுகிறது.

இப்படி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒருமைப்பாட்டுக்கு உதவுகின்ற ஒப்பற்ற பொருட்காட்சியாகவும் திகழ்கின்ற இது நிரந்தரமாகச் செயல்படும் என்ற கருத்து நமக்கெல்லாம் பெரு மகிழ்வைத் தருகிறது.

# புரதப் பஞ்சத்தை விரட்டிடப் புறப்படுவீர்!




"இந்தியாவில் உள்ள 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் 20 சத அளவினர் புரதச் சத்துப் பற்றாக்குறையினால் தாக்கப்பட்டுள்ளனர்; இதனால் இன்றைய இந்தியக் குழந்தைகள் 5 வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*முதலாவதாக மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளாக உள்ளனர்! அதன் காரணமாக நினைவாற்றல், புத்திக் கூர்மை, கற்பனை வளம் ஆகிய அனைத்தும் குறைந்த மந்தமான குழந்தைகளாகவே உள்ளனர்!

*இரண்டாவதாக, சாதாரண நோய்களைக் கூடத் தாங்கிக் கொள்ளும் சக்தியற்ற குழந்தைகளாக உள்ளனர்!

*மூன்றாவதாக இரைப்பை, இருதயம் ஆகிய உறுப்புகளில் குறைபாடு அல்லது முரண்பாடு கொண்ட குழந்தைகளாக உள்ளனர்!

*நான்காவதாகத் தசைகளின் வளர்ச்சியும், இயக்கமும் குன்றிய குழந்தைகளாக உள்ளனர்!

*ஐந்தாவதாகப் புரதப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளில் 3 சத அளவினர் கடுமையான புரதச் சத்துப் பற்றாக்குறையின் காரணமாக ஆண்டுதோறும் இறந்துவிடுகின்றனர்!

இதே நிலை நீடித்தால், இன்னும் 20 ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் உடல் நலங்குன்றிய, அறிவும் ஆற்றலும் இழந்த மந்தமான ஓர் சமுதாயமே தோன்றிவிடும்!

எனவே, இந்தியாவில் அறிவும், ஆற்றலும், வலிவும், வனப்பும் மிக்க எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், வருங்காலத்தில் விஞ்ஞான வித்தகர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும், மருத்துவ மேதைகளாகவும், பொருளாதார அறிஞர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், நாடு காக்கும் தள்பதிகளாகவும், போர் வீரர்களாகவும், நாட்டின் நல்ல குடிமக்களாகவும் விளங்கவிருக்கின்ற இன்றைய குழந்தைகளுக்குப் புரதச் சத்து மிகுந்த உணவைப் போதிய அளவில் அளிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்."

—இவ்வாறு கூறினார் 'பருப்பு வகைப் பயிர்கள் உற்பத்தி வார விழாவிற்குத் தலைமை தாங்கிய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்.






அப்போது ஓர் உழவர் பெருமகன் எழுந்து, "எனக்கு ஒரு சிறு சந்தேகம்!" என்று கூறினார்.

"கேளுங்கள்" என்றார் ஆணையாளர்.

"ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளாக இருக்கும் பொழுது போதிய புரதச் சத்து அளித்துக் குழந்தைகளை வளர்க்க எங்களால் முடியவில்லை! பிறகு, சத்து மிகுந்த உணவுகளைக் கொடுத்துக் குழந்தைகளை வளர்ப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால், மூளை வளராதா?" என்று கேட்டார் அந்த உழவர் பெருமகன்.

"இரண்டு வயதிற்குள்ளாகவே குழந்தையினுடைய மூளை உறுப்பின் பெரும் பாகம் முழு வளர்ச்சி அடைந்து விடுகிறது. 4 வயதில் குழந்தையின் மூளை 80 முதல் 90 சதவீத வளர்ச்சி அடைந்து விடுகிறது. 7 வயது ஆகும் பொழுது குழந்தையின் மூளை முழு வடிவம் பெற்று, முழு வளர்ச்சி பெற்று விடுகிறது. அதன் பின் மூளை வளருவதில்லை! இது நான் கூறுவதல்ல; உடற் கூற்று இயல் வல்லுநர்களின் ஒருமித்த முடிவாகும்! எனவே, 5 வயதிற்குள் புரதச் சத்து மிகுந்த உணவுகளை அளித்து வளர்க்காமல் இருந்துவிட்டு, பிறகு என்னதான் சத்து மிகுந்த உணவுகளைக்கொடுத்து வளர்த்தாலும் மூளை வளராது என்பது திண்ணம்!" என்று கூறினார் ஆணையாளர்.

"என் பெரிய பையனைப் பொறுத்த வரையில் நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. அவன் சிறுவனாக இருந்தபோது நான் வறுமையில் வாடினேன். அவனுக்கு 'ஆர்லிக்ஸ்', 'காம்ப்ளான்', 'கிளாஸ்கோ' போன்ற சத்துள்ள உணவுகளைக் கொடுக்க முடியவில்லை. மூன்று வேளையும் சரியாக உணவு கூடக் கொடுக்க முடியவில்லை! அதனால் அவன் சுறுசுறுப்பின்றி, அறிவு குறைந்து, மந்தமாகவே இருக்கின்றான்! உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்களைக் கடந்த 5 ஆண்டுகளாகப் பயிரிட்டு வருவதனால், இன்று நான் கொஞ்சம் வசதி படைத்தவனாக உள்ளேன்! என் இரண்டாவது பையனுக்குத் தற்பொழுது 2 வயது ஆகிறது. அவனையாவது நன்கு வளர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்று கருதுகின்றேன். புரதச் சத்து மிகுந்த உணவு எது? அதை எப்படிக் கொடுப்பது என்பதை விளக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்" என்றார் அந்த உழவர்.

"புரதச் சத்து மிகுந்த உணவு என்றால் 'ஆர்லிக்ஸ்', 'காம்ப்ளான்', 'கிளாஸ்கோ' போன்றவைதான் என்று பலர் நினைத்து விடுகின்றார்கள்! அது தவறு! குழந்தைகள் சாப்பிடத் துவங்குவது முதல் பருப்புச் சோறு கொடுத்து வளர்த்தாலே, குழந்தைகளுக்கு தேவையான புரதச் சத்துக் கிடைத்து விடும்! துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பச்சைப் பருப்பு ஆகிய பருப்புக்களில் எல்லாம் புரதச் சத்து நிறைந்துள்ளது. இப் பருப்பு வகைகள் கலந்த உணவைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தாலே, குழந்தைகளின் மூளை நன்கு வளர்ச்சி அடைவதுடன், குழந்தைகளும் நோய் இன்றி வலிவோடும் வனப்போடும் திகழ்வர் ஆகவே, உங்களுடைய குழந்தைகள் எதிர் காலத்தில் அறிவும், ஆற்றலும் நிறைந்தவர்களாக விளங்க வேண்டுமானால், உழவர் பெரு மக்களாகிய நீங்கள் அனைவரும் உடனடியாகப் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், அடுத்து 'பருப்பின் அவசியம்,, பருப்பு உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்' ஆகியவைகளைப் பற்றிப் பேசுமாறு நமது ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று கூறி ஆணையாளர் தன் உரையை முடித்தார்.

ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் பேசுவதற்கு எழுந்த உடனேயே உழவர் பெருமக்கள், நிமிர்ந்து உட்கார்ந்து ஆவலோடு கவனிக்கத் தொடங்கினர்.

"குழந்தைகளுக்கு மட்டும் அல்ல, வாலிபர்களுக்கும், பெரியவர்களுக்கும் கூடப் புரதச் சத்து இன்றியமையாதது! புரதச் சத்து, இறைச்சி, முட்டை, மீன், பருப்பு வகைகள் ஆகியவைகளில் மிகுந்துள்ளது. ஆனால் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்கள். எனவே, புரதச் சத்து மிகுந்த மாமிச உணவுகளை உண்ணாத சைவர்களுக்குப் பருப்பு வகைகளே புரதச் சத்து அளிக்கும் ஆதாரமாக உள்ளது. பருப்பு வகைகளில் புரதச் சத்து மிகுர்துள்ளது. உளுத்தம் பருப்பில் 24 சதமும், பச்சைப் பருப்பில் 24 சதமும், துவரம் பருப்பில் 22.3 சதமும், கடலைப் பருப்பில் 22.5 சதமும், மொச்சைப் பருப்பில் 24.9 சதமும், சோயா மொச்சைப் பருப்பில் 43.2 சதமும் புரதச் சத்து உள்ளது.

"எனவேதான் ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள், 'வயது வந்த ஒவ்வொருவரும் நாள் தோறும் 84 கிராம் அதாவது 3 அவுன்ஸ் அளவில் பருப்பு வகைகளை நமது உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்!" என்று பரிந்துரைக்கிறார்கள்.

"இந்த அளவில் தமிழக மக்களுக்குப் பருப்பு வழங்கப்பட வேண்டுமானால் ஆண்டுதோறும் தமிழ்நாட்டிற்கு 7 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு தேவைப்படுகிறது. ஆனால் 1972—73-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 1.92 இலட்சம் டன் மெட்ரிக் டன் பருப்பு வகைகளே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, தமிழ்நாட்டின் தேவையை ஈடுசெய்து பிற மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வழங்கப்படுகிறது. நமது உற்பத்திக் குறைவும், இறக்குமதி செய்யும் செலவுமே முறையே பருப்புப் பற்றாக் குறைக்கும், பருப்பு விலையின் உயர்வுக்கும் காரணமாக உள்ளன! இக் காரணங்களினாலேயே, தமிழக மக்கள் போதிய அளவில் தங்கள் உணவில் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை! தற்பொழுது தமிழகத்திலுள்ள வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் சராசரியாக 47 கிராம் (1.65 அவுன்சு) பருப்பு மட்டுமே உண்டு வருவதாக மதிப்பிட்டுள்ளார்கள்.

"புரதப் பற்றாக் குறையைப்

போக்கி, நாட்டு மக்களின் நலங் காக்கவும், அறிவு வளர்க்கவும் விரும்பும் தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டில் பருப்பு உற்பத்தியைப் பெருக்க விரைவுத் திட்டத்தை (Crash Programme) மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மூன்று முக்கிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அவற்றில் முதலாவது, பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தரப் படுத்திய விதைகள் உழவர் பெரு மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இரண்டாவதாக, துவரை விதைகளின் தேவையை ஈடு செய்யும் பொருட்டு, திருவரங்குளம் காட்டுப் பகுதியில் விதைப் பெருக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றாவதாக நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டு பருப்பு வகைப் பயிர்களைத் தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் எல்லா மாவட்டங்களிலும் பயிரிடுவது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் 2.5 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் 23.50 இலட்சம் ஏக்கரில் ஊடு பயிராகவும், தனிப் பயிராகவும் பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிடத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முயன்று வருகிறது.

"நமது தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 5.5 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் வழக்கமாக நெல் தரிசு நிலங்களில் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளைப் பலர் பயிரிட்டு வருகிறார்கள். ஆனால் எல்லாரும் இம் முயற்சியில் ஈடுபடுவது இல்லை. இம் முயற்சியில் எல்லா உழவர் பெரு மக்களும் ஈடுபட்டு, பருப்பு உற்பத்தியைப் பெருக்கி, புரதப் பஞ்சத்தை விரட்டிட வேண்டுமென்பதற்காகவே, இது போன்ற விழாக்களை ஊர் தோறும் நடத்தி வருகிறோம். இம் முயற்சி உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் நன்மை பயப்பதாக இருப்பதால் உங்கள் நெல் தரிசு நிலங்களில் எல்லாம் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளை விதைத்திட முன்வர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்." என்றார் துணை வேளாண்மை அலுவலர்.

"நீங்கள் பருப்பின் அவசியத்தைப் பற்றி இவ்வளவு விளக்கமாகக் கூறிய பிறகு, நாங்கள் பேசாமல் இருப்போமா? கண்டிப்பாக நெல் தரிசு நிலங்களிலெல்லாம் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளை விதைத்திடுவோம் என்று எங்கள் ஊர் உழவர் பெரு மக்களின் சார்பாக உறுதி கூறுகின்றேன். நெல் தரிசு நிலத்தில் விதைப்பதற்கு ஏற்ற உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளின் நவீன சாகுபடி முறைகளையும் சற்று விளக்கமாகக் கூறிவிடுங்கள்" என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

"காவிரி டெல்டா பகுதியில் சம்பா, தாளடி அறுவடைக்குப் பிறகு ஏறத்தாழ 12 இலட்சம் ஏக்கர் நிலம் பிப்ரவரி முதல் ஜூன் மாதம் வரை தரிசு நிலமாகவே உள்ளது! இக் காலத்தில் இப் பரப்பு முழுவதிலும் குறுகிய கால வயதுடைய உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளைப் பயிரிட்டுப் பயன் அடையலாம்! தண்ணீர் பாய்ச்ச வசதி இருக்குமானால் குறுகிய கால வயதுடைய துவரை, சோயா மொச்சை ஆகியவைகளைப் பயிரிடலாம்.

"நெல் தரிசு நிலங்களில் பயிரிடுவதற்கு 90 நாட்கள் வயதுடைய 'ஆடுதுறை-1' என்ற உளுந்து இரகத்தையும், 80 நாட்கள் வயதுடைய 'ஆடுதுறை-1' என்ற பச்சைப் பயறு இரகத்தையும், 60 நாட்கள் முதல் 65 நாட்கள் வயதுடைய 'அஞ்சுகம்' என்ற பச்சைப் பயறு இரகத்தையும் விதைப்பதே சிறந்தது! இந்த இரகங்களைச் சம்பா, தாளடி நெல் அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்னதாக—நெற் பயிரிலேயே—ஏக்கருக்கு 10 கிலோ விதையைக் கைத் தெளிப்பாக விதைத்து விட வேண்டும். இவ்வாறு விதைக்கப்பட்ட விதைகள், நெல் வயலில் உள்ள ஈரத்தைக்கொண்டே முளைத்து, வளர்ந்து, அறுவடைக்கு வந்துவிடும்! நெல் பயிருக்குப் போடப்பட்ட உரத்தில் மீதி உள்ள சத்துக்களைக் கொண்டே இந்த இரகப் பருப்பு வகைகள் நன்கு வளர்ந்து பலன் தருமாதலின், இச் சாகுபடிக்கெனத் தனியே இரசாயன உரமிடத் தேவை இல்லை. ஆகவே இம் முறைச் சாகுபடிக்கு உழவு செய்ய வேண்டியதில்லை; தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை; இரசாயன உரமிடத் தேவையில்லை. இதனால் சாகுபடிச் செலவும் குறைந்து விடுகிறது!

"நெல் தரிசு நிலங்களில் விதைப்பதற்கு ஏற்ற 'ஆடுதுறை-1' உளுந்து, 'ஆடுதுறை-1' பச்சைப் பயறு, 'அஞ்சுகம்' பச்சைப் பயறு ஆகியவைகளில் அதிக மகசூல் பெற விதைகளுடன் நுண்ணுயிர் கலந்து விதைத்தல் சிறந்தது! உளுந்திற்கு எனவும், பச்சைப் பயறுகளுக்கு எனவும் தனித் தனியாக உள்ள நுண்ணுயிர்களை (Bacteria) வேளாண்மைக் கிடங்கில் வாங்கி விதைகளுடன் கலந்து விதைக்க வேண்டும்.

நுண்ணுயிர்கள் குடுவைகளில் அடைத்து விற்கப்படுகின்றன. ஒரு குடுவையில் உள்ள நுண்ணுயிருடன் 14 கிலோ விதையைக் கலந்து விதைக்கலாம்! இவ்வாறு செய்வதால் உளுந்து, பச்சைப் பயறுகளின் வேர்களில் முடிச்சுகள் (Root nodules) நிறையத் தோன்றி, அவைகளில் உள்ள நுண்ணுயிர் காற்றில் உள்ள உப்பு வாயுவை (நைட்ரஜன்) இழுத்து, செடிகளுக்குக் கொடுப்பதுடன், நிலத்திற்கும் அளிக்கின்றன. இதனால் உளுந்து, பச்சைப் பயறு செடிகள் நன்கு வளர்ந்து ஏறத்தாழ 25 சத அதிக மகசூல் அளிக்கும்! மேலும், வேர் முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் மூலம் எக்டேருக்கு 50 முதல் 100 கிலோ தழைச் சத்து ஆண்டுதோறும் கிடைக்கிறது. இரசாயன உரப் பற்றாக்குறை நிலவும் இந்நாளிலே, இவ்வாறு நுண்ணுயிர் கலந்து பருப்பு வகைப் பயிர்களை விதைப்பதால், மறைமுகமாக நம் நிலங்களுக்குத் தழைச் சத்து அளித்து வளப் படுத்துகிறோம் என்பதை நீங்கள் அனைவரும் உணர வேண்டும்" என்று துணை வேளாண்மை அலுவலர் வற்புறுத்திக் கூறினார்.

"நுண்ணுயிர் கலப்பது பற்றி விளக்கமாகக் கூறுங்கள்" என்று ஓர் உழவர் கேட்டார்.

"நாளை விதைப்பதாக இருந்தால், இன்று மாலையே நுண்ணுயிர் கலந்து விதைகளை நிழலில் உலர விட வேண்டும். வேளாண்மைக் கிடங்குகளில் விற்கப்படும் நுண்ணுயிர் குடுவையினுள் ஒரு சிறு பொட்டலம் இருக்கும். அப் பொட்டலத்தில் 'மனோ கால்சியம் பாஸ்பேட்' என்ற இரசாயனம் உள்ளது. அந்த இரசாயனத்தை 2 'டம்ப்ளர்' நல்ல தண்ணீரில் கரைக்க வேண்டும். அதை நுண்ணுயிர்க் குடுவைக்குள் ஊற்றி நன்கு கலக்க வேண்டும். விதைகளை ஒரு பெரிய தகர வாளியில் எடுத்துக் கொண்டு, விதைகளின் மேல் நுண்ணுயிர்க் கரைசலை ஊற்றி, எல்லா விதைகளிலும் கரைசல் படும்படியாகக் கைகளினால் நன்கு கலக்கி விட வேண்டும். மாலையில் இவ்வாறு கலக்கிய விதைகளை நிழலில் காய வைத்து, மறுநாள் காலை விதைக்க வேண்டும். நுண்ணுயிர்களைக் கலக்கத் தகர வாளி அல்லது டின்னைத் தவிர வேறு உலோகப் பாத்திரங்களை உபயோகிக்கக் கூடாது! நுண்ணுயிர் கலந்த விதைகளை 48 மணி நேரத்திற்குள் விதைத்து விட வேண்டும்! நுண்ணுயிர்க் குடுவைகளை உங்கள் ஊர் நல ஊழியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று கூறினார்.

"களை எடுக்க வேண்டாமா? மருந்து தெளிக்க வேண்டாமா? அதையும் சொல்லி விடுங்கள்" என்று ஒரு உழவர் அவசரத்துடன் கேட்டார்.

"அவசரப் படாதீர்கள்! உங்களுக்கு எல்லா விளக்கமும் தெரிவிக்கவே இத்தகைய விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று கூறி துணை வேளாண்மை அலுவலர் தொடர்ந்து பேசினார்.

"விதைத்த 15-ஆம் நாள் முதல் முறையும், ஒரு மாதம் கழித்து இரண்டாம் முறையுமாகக் களையெடுத்துக் கொத்தி விட வேண்டும். உளுந்து, பச்சைப் பயறு ஆகிய பயிர்களை அசுவணி, இலைப் புழு, தத்துப் பூச்சி, வண்டு, காய்ப் புழு ஆகிய பூச்சிகள் தாக்கிச் சேதம் விளைவிக்கும். இப் பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க விதை முளைத்த பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 முறை பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் 1 : 1 என்ற அளவில் அதாவது சம அளவில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

"இது வரை கூறிய ஒருமித்த சாகுபடி முறைகள் அனைத்தையும் ஒருங்கே மேற்கொண்டால், 'ஆடுதுறை-1' உளுந்து ஏக்கருக்கு 175 கிலோ மகசூலும், 'ஆடுதுறை-1' பச்சைப் பயறு ஏக்கருக்கு 200 கிலோ மகசூலும், 'அஞ்சுகம்' பச்சைப் பயறு ஏக்கருக்குக் குறைந்தது 250 கிலோ மகசூலும் கொடுக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

"குறைந்த செலவில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய, நெல் தரிசு நிலங்களில் எல்லாம் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளை விதைப்பது சிறந்த வழியாகும். எனவே, உடன் உங்கள் நெல் வயல்களில் 'ஆடுதுறை-1' உளுந்து, 'ஆடுதுறை-1' பச்சைப் பயறு, 'அஞ்சுகம்' பச்சைப் பயறு ஆகியவைகளை உற்பத்தி செய்து 'புரதப் பஞ்சத்தை விரட்டிடப் புறப்படுவீர்!' என்று அன்புடன் வேண்டுகோள் விடுத்து, அரிசிப் பஞ்சத்தை விரட்டிய தமிழக உழவர் பெரு மக்களுக்குப் புரதப் பஞ்சத்தை விரட்டுவது ஒன்றும் முடியாத செயலாக இருக்க முடியாது என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கின்றேன்" என்றார் துணை வேளாண்மை அலுவலர்.

கூட்டத்திற்கு வந்திருந்த உழவர் பெரு மக்கள் "புரதப் பஞ்சத்தை விரட்டிடுவோம்!" என்ற உறுதியுடன், உளுந்து, பச்சைப் பயறு விதைகளையும், நுண்ணுயிர்க் குடுவைகளையும் வாங்க வேளாண்மைக் கிடங்கு நோக்கி விரைந்து சென்றனர்!




## கரும்புக்கு அதிக விலை!

"தமிழ்நாட்டில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள், இப்பருவத்தில் கரும்புக்கு, மைய அரசு நிர்ணயித்துள்ள அடிப்படை விலைக்கு மேல் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூபாய் 7·80 முதல் ரூபாய் 14·40 வரை அதிகமாகக் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளன" என்று தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் அறிவித்துள்ளார். கரும்பு உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகள், தனியார் சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகள் ஆகியவர்களுடன் விவாதித்த பிறகு, இவ்வாறு அதிக விலை கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இம் முடிவின்படி கீழ்க் கண்டவாறு நடப்புப் பருவத்தில் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (பழைய விலை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது).

| சர்க்கரை ஆலையின் பெயர் | | மெட்ரிக் டன் (ரூபாய்) |
|---|---|---|
| ஈ.ஐ.டி. பாரி | ... | 90·00 (88·90) |
| காவேரி சுகர்ஸ் | ... | 92·50 (80·00) |
| சௌத் இந்தியா ஸ்டீல் அண்ட் சுகர்ஸ் | ... | 91·60 (83·80) |
| அருணா சுகர்ஸ் | ... | 95·30 (81·90) |
| சக்தி சுகர்ஸ் | ... | 102·90 (88·50) |
| கோத்தாரி சுகர்ஸ் | ... | 100·00 (85·60) |
| திருஆரூரான் சுகர்ஸ் | ... | 92·50 (80·00) |

'டெக்கான் சுகர்ஸ் அண்ட் அப்காரி லிமிடெட்', 'மதுரை சுகர்ஸ் லிமிடெட்' ஆகிய 2 ஆலைகளுக்கான விலை மேலும் விவாதித்த பிறகு, முடிவு செய்யப் படவிருக்கிறது.

மேற்கூறியவாறு அதிக விலை கொடுப்பதால், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அதிகச் செலவு ஏற்படும்.

இந்த ஆண்டு முதல், நிருவாகத்தினருக்கும் கரும்பு சாகுபடியாளர்களுக்கும் இடையில் இலாபத்தைப் பங்கிடுவதற்கான ஒரு விதியை உருவாக்கிடவும் கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தியாகிகள் நாள்

சனவரித் திங்கள் 30-ஆம் நாள், சென்னைக் கோட்டை அணி வகுப்புத் திடலில், தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

அண்ணல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட சனவரி 30-ஆம் நாள் நாடு முழுவதும் தியாகிகள் நாளாகக் கடைப் பிடிக்கப்படுகிறது.

இந்த அஞ்சலியில் கலந்து கொள்வதற்கு வசதியாக அன்று சட்டமன்றக் கூட்டம் காலை 10-30 மணியிலிருந்து 11-30 மணி வரை ஒத்தி வைக்கப் பட்டது.

தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா, முதல்வர் கலைஞர், சட்ட மன்றத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் கோட்டைத் திடலில், காந்தியடிகள் உருவச் சிலை முன்பு காலை 11 மணியளவில் கூடி நின்றனர்.

காவல் துறைக் காவலர் மூவர் சோக இசை எழுப்ப, 12 இராணுவ வீரர்கள் துப்பாக்கியைத் தலை கீழாகப் பிடித்து மரியாதை செலுத்தினர்கள். அப்போது கூடியிருந்த அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக நின்றார்கள்.

பிறகு, தீண்டாமைப் பழக்கத்தைக் கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி ஒன்றை முதல்வர் கலைஞர் அவர்கள் படிக்க, அனைவரும் அதைத் திருப்பிச் சொல்லி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

முதல்வர் படித்த அந்த உறுதி மொழி.

''இந்திய அரசியல் அமைப் பின்பால் இடைவிடாத உள மார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான் நமது அரசியல் அமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன்.

''தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, காயம் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன்.

''அரசியல் அமைப்பின் அடிப் படைக் கருத்துக்கு இணங்க சமய வேறுபாடற்ற சுதந்தர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதை உணருவேன்.

''இந்திய அரசியல் அமைப் பின்பால் எனக்குள்ள முழுப் பற்றுக்கு என்றென்றும் எடுத்துக் காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமார உறுதி அளிக் கிறேன்''.



107



இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் காவல்துறைத் துப்பறியும் நாய்கள் பிரிவு முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டு, நாடு வியக்கும் அளவில் பல சாதனைகளை அப்பிரிவு செய்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மற்ற மாநிலங்களில், குறிப்பாகக் கேரளம், ஆந்திரம், பீகார், டில்லி, அஸ்லாம் ஆகிய மாநிலங்களில் துப்பறியும் நாய்களுக்குப் பயிற்சி தருவதற்காகச் சென்னைக்கு வந்துதான் இந்தப் பயிற்சி நுட்பங்களை அறிந்து செல்கின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழகத்தின் தலைநகரில் உள்ள துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு பேணப்படும் விதம், துப்பறிவதற்கு நாய்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற செயல் முறைகள் முதலியவற்றை விளக்குகின்றது இந்தக் கட்டுரை :—

# துப்பறியும் நாய்கள்

ப்ரூடஸ், பிளாக்கி, சீஃப், ஜெஸ்டர், டால்ஃப், பாண்டு, காலு, ஓாலு, ஜூலி, கெய்ஸர் —இவையெல்லாம் . ஏதோ வான மண்டலத்தில் இயக்கப் படுகின்ற செயற்கைக் கோள்கள் என்று கருத வேண்டாம். சென்னையில் உள்ள துப்பறியும் நாய்ப் படையில் உள்ள நாய்களின் பெயர்கள் இவை.

இந்தத் துப்பறியும் நாய்களின் பணி, இவை பேணப்படும் முறை, பயிற்சி உத்திகள் முதலியவைகளை அறிந்து கொள்வது அனைவருக்கும் பயன் அளிக்கும்.

கேள்வி : துப்பறியும் நாய்களுக்குப் பயிற்சி அளித்து அவற்றைப் பயன்படுத்தும் முறை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது எப்போது? இப்பயிற்சி அளிப்பவர்களுக்குத் தனிப் பயிற்சி ஏதேனும் அளிக்கப்பட்டது உண்டா?

பதில் : 1952-ஆம் ஆண்டு இம் மாதிரியான பயிற்சி முறையை ஸ்காட்லாந்து யார்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு, அப்போது நகரக்காவல் துறைத் தலைவராயிருந்த திரு. சஞ்சீவ பிள்ளை அவர்கள் கொண்டு வந்தார்கள். நாய்கள் தங்குவதற்கு 12 அறைகள் கட்டி உயர் சாதி நாய்களான 'அல்ஷேஸன்', 'கோம்பை' போன்ற நாய்களுக்குப் பயிற்சி கொடுக்கப் பட்டு வருகின்றது.

கேள்வி: தற்சமயம் சென்னை மத்தியக் குற்றப் பிரிவு காவலர் படையில் எத்தனை விதமான நாய்கள் உள்ளன? எவ்வளவு நாய்கள் உள்ளன? அவற்றுள் எந்த இன நாய் காவல் துறைக்கு அதிகம் பயன் படுத்தப்படுகின்றது?

பதில் : தற்போது ஜெர்மன் ஷெப்பர்ட், டாபர்மென் பின்ஸ்ச்சர், லாபர்டால் ரிட் ரீவர் என்றழைக்கப்படும் உயர்சாதி மோப்ப நாய்கள் இக் காவல் துறையிடம் உள்ளன. மற்ற இன நாய்களை விட டாபர்மென் பின்ஸ்ச்சர் எனப்படும் ஜெர்மன் நாய்தான் காவல் துறைக்கு அதிகம் பயன்படுகிறது. ஏனெனில் இந்த இன நாய் பழகுவதற்குச் சாதுவாகவும் கோபம் ஏற்படின் புலிபோல் பாய்ந்து மனிதனையே கொல்லும் அளவுக்குச் சீற்றம் கொள்வதாகவும் உள்ளது. அத்துடன் மிகுந்த மதி நுட்பமும், மற்ற நாய்களுக்கு அமையப் பெறாத விசேஷ மோப்ப சக்தியும் பெற்றுள்ளதால் இந்த இன நாய்கள் துப்புத் துலக்குவதற்கு அதிகமாகப் பயன் படுத்தப் படுகின்றன. இந்த இன நாய்கள் மணிக்கு சுமார் 40 கி.மீ. வேகத்தில் ஓடும் சக்தி பெற்றவை. சுமார் 30 அல்லது 40 கி.மீ. தூரமாக இருப்பினும் இடைவிடாது தொடர்ந்து ஓடக் கூடிய ஆற்றல் பெற்றவை. சுமார் 30 பேர்கள் கூடி வந்து தாக்கினாலும் தனியாக நின்று ஈடுகொடுக்கும் அளவுக்கு வலிமை பெற்றவை. நமது நாட்டு தட்ப வெப்ப நிலைக்கு ஒத்துப் போகக் கூடிய இயல்புடையது, இந்த இனம். தற்போது சென்னை நகர காவ



கொலை நடந்த இடத்திற்குக் கூட்டிச் சென்று மோப்பம் பிடிக்கச் செய்தல்

கூடிய மருந்துக் குளுகைகளும், முக்கால் கிலோவிலிருந்து 1 கிலோ அளவுக்கு இறைச்சியும், முட்டை, பிஸ்கட் முதலிய சத்துணவும் தினமும் தரப்படுகின்றன. ஒரு நாய்க்கு நாள் ஒன்றுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 15 அளவு மதிப்புள்ள உணவு தரப்படுகின்றது.

கேள்வி : மற்ற மாநிலங்களிலிருந்து துப்பறியும் நாய்களை நமது மாநிலத்திற்குக் கொணர்ந்து பயிற்சி தரச் செய்வதில் சிறப்பு அம்சம் என்ன? தற்போது எந்தெந்த மாநிலங்களிலிருந்து நாய்கள் நமது மாநிலத்தில் பயிற்சி பெறுகின்றன?

பதில் : இந்தியாவிலேயே முதன் முதலில் நம் மாநிலத்தில்தான் நாய்களை வைத்துப் பயிற்சி கொடுக்கும் முறை புகுத்தப்பட்டதாலும், திறமை மிக்கவர்களும் அனுபவம் நிரம்பப் பெற்றவர்களும் இத்துறையில் பணியாற்றுவதாலும், சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றையே மையமாகக் கொண்டு தமிழக அரசு இக் காவல் துறையைப் பேணி வருவதாலுமே இக் காவல் துறை திறம்படச் செயல்பட ஏதுவாய் இருக்கின்றது. அது தவிர நமது மாநில நாய்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுப் பல நூற்றுக்கு அதிகமான குற்றங்களைத் துப்புத் துலக்கி உள்ளன. இத்தோடு நூற்றுக்கும் அதிகமான பரிசுக் கோப்பைகளையும் சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ளதால் நமது மாநிலத்தின் துப்பறியும் நாய்ப் படை மற்ற மாநிலங்களைக் கவர்ந்து இழுக்கக் கூடியதாக அமைகின்றது. தற்சமயம் கேரளம், அஸ்ஸாம், பீகார், டில்லி, வங்காளம் மற்றும் தென்னிந்திய இரயில்வே காவல் துறை நாய்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

கேள்வி : பாதிக்கப்பட்ட பொது மக்கள் எந்தெந்த வகையில் இந்தத் துப்பறியும் நாய்களின் தொண்டினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்?

பதில் : கொலை அல்லது களவு நடந்து அது செவிக்கு எட்டியவுடன் குற்றம் நடந்த இடத்தில் சந்தடி நடமாட்டம் இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் குற்றம் நடந்திட்ட செய்தி காவல் துறையினரை அடைகின்றதோ அவ்வளவுக்கு விரைந்து குற்றம் செய்திட்டவரைப் பிடித்திட ஏதுவாயிருக்கும். இந்த மாதிரி உடனுக்குடன் தகவல் கிடைத்த எந்தப் புலனாய்வும் இதுவரை தோல்வி அடைந்ததே கிடையாது. சென்ற ஆண்டு மட்டும் சுமார் 500-க்கும் அதிகமான குற்றங்களை இப் பிரிவு வெற்றிகரமாகக் கண்டுபிடித்துச் சிறந்த சேவை செய்திருக்கிறது. இம் மாதிரியான சேவைக்காக, பாதிக்கப்பட்டவர் எதுவும் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. உடனடியாகத் தகவல் தெரிவிப்பது முக்கியம். நன்றியுள்ள நாய், ஆபத்துக்கு உதவும் தோழனும் ஆகின்றது.

(குற்றப் பிரிவு உதவி ஆணையாளர் திரு. ஜெயராமனிடம் பேட்டி கண்டவர் சுகுமார்).

## வெண்பாப்போட்டி—72

ஈற்றடி :

**வருந்திடுவார்க்(கு) உண்டே மருந்து**

முடிவு நாள் : 1—3—1974.

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டுமே அனுப்பப் பெறல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



# தமிழகத்தில் மின் வளர்ச்சி

## புள்ளி விவரங்கள் பேசுகின்றன!

| | | |
|---|---|---|
| நிறுவன உற்பத்தித் திறன் | —2,254 | மெகாவாட் |
| உயர் அளவு | —1,326 | மெகாவாட் |
| மின் உற்பத்தியும்-வாங்கப்பட்டதும் | —6,964 | மில்லியன் யூனிட்டுகள் |
| கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகள் | —63,328 | கிலோ மீட்டர்கள் |
| குறைவு அழுத்தக் கம்பிகள் | —1,78,605 | கிலோ மீட்டர்கள் |
| கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள் | —143 | |
| உயர் அழுத்தத் துணை நிலையங்கள் | —119 | |
| மின் பங்கீட்டு மாற்றிகள் | —33,548 | |
| *மின்வசதி அளிக்கப்பட்டுள்ள நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் | —60,920 | |
| *மின்வசதி அளிக்கப்பட்டுள்ள அரிசனக் குடியிருப்புகள் | —23,771 | |
| *மின் இணைப்பு தரப்பட்டுள்ள வேளாண்மை விசையேற்றங்கள் | —6,71,224 | |
| மின்சக்தி பயன்படுத்துவோர் | —25.45 | இலட்சம் |
| தனிநபர் பயன்படுத்தும் மின்சாரம் | —133 | யூனிட்டுகள் |
| மூலதன நிதி | —ரூ. 523.35 | கோடி |
| நிகர வருவாய் | —ரூ. 78.71 | கோடி |

| | |
|---|---|
| தமிழகத்தில் மொத்தம் உள்ள நகரங்கள் கிராமங்கள், சிற்றூர்கள் | —62,500 |
| அரிசனக் குடியிருப்புகள் | —24,500 |
| வேளாண்மைக்கான கிணறுகள் | —12 இலட்சம் |

## தமிழ்நாட்டில் மின் உற்பத்தி நிலையங்கள்

அ. நீர் மின் உற்பத்தி

| | (மெகா வாட்டுகள்) |
|---|---|
| **நீலகிரிப் பிரிவு :** | |
| பைக்காரா ... ... | 70 |
| மோயாறு ... ... | 36 |
| குந்தா 1 ... ... | 60 |
| குந்தா 2 ... ... | 175 |
| குந்தா 3 ... ... | 120 |
| குந்தா 4 ... ... | 50 |
| குந்தா 5 ... ... | 20 |
| **பரம்பிக்குளம்—ஆளியாறு பிரிவு:** | |
| சர்க்கார்பதி ... ... | 30 |
| ஆளியாறு ... ... | 60 |
| சோலையாறு 1 ... | 70 |
| சோலையாறு 2 ... ... | 25 |
| **பாபநாசம்—கோதையாறு பிரிவு:** | |
| பாபநாசம் ... ... | 28 |
| கோதையாறு 1 ... ... | 60 |
| கோதையாறு 2 ... ... | 40 |
| **மேட்டூர் பிரிவு:** | |
| மேட்டூர் அணை ... | 40 |
| மேட்டூர் சுரங்கம் ... | 200 |
| **பெரியாறு பிரிவு:** | |
| பெரியாறு ... ... | 140 |

ஆ. அனல் மின் உற்பத்தி

| | |
|---|---|
| எண்ணூர் ... ... | 340 |
| பேசின் பிரிட்ஜ் ... ... | 90 |
| நெய்வேலி ... ... | 600 |

## அகில இந்தியா—தமிழ்நாடு—ஒரு கண்ணோட்டம்

அ. மின்வசதி அளிக்கப்பட்ட மக்கள் வதியும் சென்ஸஸ் கிராமங்கள்

தமிழ்நாடு (மொத்தக் கிராமங்கள் 14,124)

இந்தியா (மொத்தக் கிராமங்கள் 5,66,878)

| | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|
| முதல் 5 ஆண்டுத் திட்டத் துவக்கத்தில் (1-4-51) | 1,495 | 3,061 |



துப்பறியும் நாய்களும் பழக்குநர்களும்

லர் படையில் 5 டாபர்மென் பின்ஸ்சர், 4 அல்ஷேஸன், 1 லாபர்டால் ரிட்ரீவர் ஆக மொத்தம் 10 நாய்கள் இருந்து வருகின்றன.

கேள்வி: எந்த விதச் சிறப்பு அம்சங்களைக் கொண்டு காவல் துறைக்கு நாய்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? தேர்வின்போது நாய்களுக்கு எத்தனை வயது நிரம்பியிருக்க வேண்டும்? மொத்தப் பயிற்சிக் காலம் எத்தனை ஆண்டுகள்? சராசரியாக எவ்வளவு ஆண்டுக் காலம் இந்த நாய்கள் சேவைக்குப் பயன்படுத்தப்படும்?

பதில் : நாய்க் குட்டிகளின் தோற்றம், தலை அமைப்பு, கண், காது, கழுத்து, பல் மற்றும் உடல் வாகு, தோலின் நிறம் இவைகளையே சிறப்பு அம்சங்களாகக் கருத்தில் கொண்டு காவல் துறைக்கு நாய்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. குறிப்பாக நாய்களுக்கு 6 மாதம் கழிந்த பின்னரே பயிற்சி தொடங்குகின்றது. அதிலிருந்து சுமார் 6 அல்லது 9 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி தொடங்குமுன்னர் வெறிநோய்த் தடுப்பு ஊசி போடப்படும். இந்த நாய்கள் சுமார் 6 அல்லது 7 ஆண்டுக் காலம் துப்பறியும் சேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதன் பின்னர் அந்த நாய்களை ஏலத்தில் விட்டு விடுவது வழக்கம். இந்த இன நாய்கள் 14 ஆண்டுக் காலம் உயிர் வாழும்.

கேள்வி : உயர் சாதி இன நாய்கள் என்று எந்த அடிப்படையில் அழைக்கின்றோம் ?

பதில் : கலப்படமில்லாத ஒரே இனத்தைச் சார்ந்த நாய்களுக்கு குன்னூரில் நிறுவப் பெற்றுள்ள கென்னல் க்ளப் ஆஃப் இந்தியா (Kennel Club of India) என்ற நிறுவனம் நாய்களுடைய இரத்தத்தைப் பரிசோதனை செய்து 'பெடிகிரி' என்கிற சுத்த உயர் சாதி நற்சான்றிதழ் வழங்குகின்றது. ஒரே இனத்தைச் சார்ந்த அதே தருணத்தில் ஒரே குடும்பத்தைச் சார்ந்திராத நாய்களுக்கு மட்டுமே 'பெடிகிரி' சான்று கொடுக்கின்றார்கள்.

கேள்வி : நாய்களைப் பழக்குவதைவிட நாய்களைப் பழக்கும் நபர்களுக்குப் பயிற்சி தருவது மிகவும் சிரமமானது என்று கூறினீர்களே, அதிலுள்ள சிரமங்களை உங்களால் விவரித்துச் சொல்ல முடியுமா? எவ்வித சிறப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டு பழக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்?

பதில் : குறிப்பாகச் சொல்லுமிடத்து எல்லாக் காவலர்களுக்குமே இக் குறிப்பிட்ட துறையில் பயிற்சி அளிக்க இயலாது. மிகுந்த பொறுமையும் மதி நுட்பமும் சமயம் அறிந்து ஏற்ற நேரத்தில் செயலாற்றும் திறமையும் பருமனில்லாத உடல் ஆரோக்கியமும் உடைய இளைஞர்களே பயிற்சிக்குத் தேவைப்படுகிறார்கள். சில சமயங்களில் நாய்கள் செய்யும் குறும்புகள் கோபம் விளைவிக்கக் கூடியதாக இருக்கும். அதுபோழ்து அதன் குணமறிந்து செயலாற்றும் திறம்பெற்றவர்களிடமே நாய்கள் கட்டுப்பட்டு இருக்கும். பயிற்சி அளிப்பவரிடம் எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும் குரலிலே கம்பீரமும் இல்லாது போனால் நாய்கள் அறிவு மழுங்கிப் பயனற்றதாகி விடும். இவற்றையெல்லாம் மனத்தில் நிறுத்தி, பழக்குநர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகின்றது.

கேள்வி : பயிற்சி அளிக்கும் முறை பற்றிச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

பதில் : நாய்களுக்குப் பயிற்சி அளிக்கும் முன்னர் அந்த நாயினுடைய இயல்பை அறிந்து அதற்கேற்ப அதைப் பழக்குநர் (Handler) செயல்பட வேண்டும். எந்தக் காரணம் பற்றியும் நாய்களை அடித்துத் துன்புறுத்துதல் கூடாது. நாய்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் அந்த நாய்களுக்குப் பெயரிட்டு, பின்னர் செய்கை மூலமும், பேச்சு மூலமும் பயிற்சி அளிக்க வேண்டும். நாய்களுக்கு முதலில் மோப்பம் அறியும் உணர்வும் பின்னர் படிப்படியாக சரிவான மரம் ஏறுதல், உயரத் தாண்டுதல், நீளத்தாண்டுதல், குற்றவாளிகளைக் கவ்விப் பிடிக்கும் முறை முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சிகளின் போது நாய்கள் சரியான முறையில் பணியில் ஈடுபாடு கொள்ளவில்லையாயின் அவை பயிற்சிக்குப் பயன்படாதென்று நீக்கிவிடுவார்கள். பயிற்சிக் காலம் 6-லிருந்து 9 மாதங்களாகும். பயந்த சுபாவமும், சோம்பேறித்தனமும் உடைய நாய்கள் துப்புத் துலக்கப் பயனற்றதாகிவிடுகின்றன. எந்த ஒரு நாயும் அது தனக்கு இடப்பட்ட கட்டளையைச் சரிவரச் செய்து முடிக்கும்போது அதனைத் தட்டிக் கொடுத்து அது பிரியப்படுகின்ற தின்பண்டங்களைக் கொடுக்கும்போது தான் மனோதத்துவ நியதிப்படி அதனுடைய அறிவு கூர்மையாகி, திறமையும் வளர்ச்சி அடைகின்றது.



மரம் ஏறித் திருடர்களைப் பிடிக்கும் பயி
அளிக்கப்படுகிறது

கேள்வி : குறிப்பாக மோப்பம் பிடித்துச் செல்லக் கற்றுக் கொடுக்கும் உத்திகளைப் பற்றிச் சொல்ல முடியுமா?

பதில் : மக்கள் நடமாட்டமில்லாத திறந்த வெளியில் ஈரப் பசையுள்ள பூமியில் நாயை ஒரு புறம் அமர்த்திவிட்டு மாட்டு எலும்பினின்று எடுக்கப்பட்ட ஊன் சாற்றை சுமார் 50 கெஜ தூரம் ஊற்றிச் செல்ல வேண்டும். பின்னர் மாட்டு எலும்பினை அந்தச் சாறு பட்ட இடங்களிலெல்லாம் தேய்த்துச் சென்று ஒரு புதருக்குள் மறைத்து வைத்துவிட வேண்டும். பின்னர் ஒன்றரை அடி நீளமுள்ள பிரம்பினைக் கொண்டு 'ஸ்மெல்' (Smell) 'சர்ச்' (Search) என்று ஆணையிட்டுக் கொண்டே சென்றால் நாய் தொடர்ந்து சென்று மறைத்து வைக்கப்பட்டிருக்கும் எலும்பினைக் கண்டுபிடிக்க இயலும். அதைக் கண்டு பிடித்த பின்னர் மறுபடியும் புறப்பட்ட இடத்திற்கே கூட்டி வந்து 'இவ்' (Give) என்று ஆணை பிறப்பித்து அதனிடம் இருந்து எலும்பைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த வேலையை நாய் சரிவரச் செய்தவுடன், அதற்குப் பிடித்த தின்பண்டங்களை—இறைச்சித் துண்டோ, பிஸ்கட்டோ கொடுத்து—அதனை ஊக்குவிக்கும் முறையில் தட்டிக் கொடுப்பார்கள். இம்மாதிரிப் பயிற்சியில் நாய் தேறிய பின்னர் அடுத்த படியாகப் பழக்குநர்கள் நாயை இடையூறில்லாத காட்டுப் பகுதிக்குக் கூட்டிச் சென்று மனித இன வாடையை மோப்பம் பிடிக்கும் முறையினைச் சொல்லித் தருவார்கள். சதுப்பான இடத்தில் நாயை ஒரு புறமாக அமர்த்தி 'ஹேண்ட்லர்' தன் கால் மிதியடியினால் நிலத்தில் தேய்த்துக்கொண்டே சுமார் 50 கெஜத்திலிருந்து 75 கெஜத் தூரத்திற்குள் தனது மிதியடியினை ஒளித்து வைத்துவிட்டுப் பின்னர் திரும்பவும் நாயிடமே வந்து தனது மற்றோர் மிதியடியினுடைய மோப்பத்தை உணரச் செய்து, நாயின் கழுத்தில் கயிறு கட்டி சர்ச் (Search) என்று சொல்லி நாயைத் தொடர்ந்து ஓடுவார். நாய் நுகர்ந்து கொண்டே சென்று ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் மிதியடியினைக் கண்டுபிடிக்கும். மிதியடியை எடுத்தவுடன் பழக்குநர் திரும்பிப் பழைய இடத்திற்கு ஓடி வர, நாயும் அவரைத் தொடர்ந்து ஓடிவரும். பின்னர் நாயினைத் தட்டிக் கொடுத்து 'குட் பாய்' அல்லது 'குட் கேர்ல்' என்று சொல்லி அதற்குப் பிடித்த தின்பண்டங்களைக் கொடுப்பார். பின்னர் இதே போன்ற பயிற்சி முன் பின் அறியாத மூன்றாம் நபருடைய பொருளினை ஒளிய வைத்து அதனைக் கண்டு பிடிக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சியிலும் நாய் செவ்வனே தேறிய பின்னர் குற்றம் நடந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பழக்குநர்களுக்கு எங்கெல்லாம் சந்தேகம் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் நாயை மோப்பம் நுகரச் செய்து துப்பறியும் பணியில் ஈடுபடச் செய்வார். பொதுவாக இம்மாதிரியான நாய்கள் தம்மைப் பழக்கப்படுத்திய ஒருவர் அல்லது இருவரின் ஆணைக்கே கட்டுப்பட்டு நடக்கும். உண்ணும் உணவு கூட அவர்கள் கையால் வைக்கப்பட்டால் தான் உட்கொள்ளும். இல்லாவிடில் பட்டினிதான் கிடக்கும்.

கேள்வி : இந்த மாதிரியான நாய்களுக்கு எந்த விதமான உணவு கொடுக்கப்படுகின்றது?

பதில் : இந்த வித நாய்களுக்கு மிகுந்த சத்துள்ள உணவே கொடுக்கப்படுகின்றது. மூன்று வேளையும் வேளைக்கு முக்கால் லிட்டர் பால் கொடுக்கிறார்கள். இது தவிர பீகோஜல், வைட்டமின் 'சி' போன்ற தெம்பு தரக்

குற்றம் செய்தவர்களைக் கவ்விப் பிடிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது



| | | |
|---|---|---|
| முதல் 5 ஆண்டுத் திட்டக் கால முடிவில் | 2,430 | 7,294 |
| இரண்டாவது திட்டக் கால முடிவில் | 5,919 | 21,750 |
| மூன்றாவது திட்டக்கால முடிவில் | 7,830 | 45,144 |
| நான்காவது திட்டத் துவக்கத்தில் (1-4-69) | 9,472 | 73,722 |
| 1-11-1973-ல் | 13,777 | 1.45.778 |

### ஆ. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்கள்

| | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|
| முதல் திட்டத் துவக்கத்தில் (1-4-51) | 14,373 | 21,008 |
| முதல் திட்டக்கால முடிவில் | 32,440 | 56,053 |
| இரண்டாவது திட்டக் கால முடிவில் | 1,17,695 | 1,98,894 |
| மூன்றாவது திட்டக்கால முடிவில் | 2,56,594 | 5,12,731 |
| நான்காவது திட்டத் துவக்கத்தில் (1-4-69) | 4,10,119 | 10,88,749 |
| 1-11-1973-ல் | 6,67,039 | 23,10,979 |

## பணி நடைபெற்றுவரும் மின் உற்பத்தித் திட்டங்கள்

### அ. நீர் மின் திட்டங்கள்

| | மெகவாட்டு |
|---|---|
| நடுவட்டம் நீர்த்திருப்புத் திட்டம் (பைக்காரா, மோயாறு மின் உற்பத்தி நிலையங்களில் கூடுதலாக 69 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்ய வழிவகை செய்வதற்காக வேண்டி) | |
| குந்தா நீர் மின் திட்டம் 4-வது நிலை | 110 |
| சுருளியாறு நீர் மின் திட்டம் | 35 |
| காடம்பாறை நீரேற்றுத் திட்டம் | 400 |
| பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் | 100 |
| நெல்லித்துறை நீர் மின் திட்டம் | 50 |
| சேர்வலாறு நீர் மின் திட்டம் | 20 |

### ஆ. அனல் மின் திட்டங்கள்

| | |
|---|---|
| எண்ணூர் அனல் மின் திட்டம் 2-வது நிலை | 110 |
| தூத்துக்குடி அனல் மின் திட்டம் | 400 மெக வாட்டுகள் (இறுதியில் 1,000 மெக வாட்டுகள்) |

### இ. அணு மின் திட்டம்

| | |
|---|---|
| கல்பாக்கம் அணு மின் திட்டம் (இந்திய அரசினுடையது) | 470 மெக வாட்டுகள் (தமிழ்நாட்டுக்கு 300 மெகவாட்டுகள்) |

## கருவில் உள்ள மின் திட்டங்கள்

| | (மெகா வாட்டுகள்) |
|---|---|
| சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம் ... | 30 |
| மேல் அமராவதி நீர் மின் திட்டம் ... | 20 |
| பரளையாறு நீர் மின் திட்டம் ... | 35 |
| சண்முகாநதி நீர் மின் திட்டம் ... | 30 |
| மேல் மணிமுத்தாறு நீர் மின் திட்டம் ... | 90 |
| கூனூர்—கல்லாறு நீர் மின் திட்டம் ... | 50 |
| பைக்காரா இறுதி நிலை ... | 100 |
| மேல் கொடுமுந்து லோன் பள்ளத் தாக்கு நீர்த்திருப்புத் திட்டம் | 30 (கூடுதல் உற்பத்தி |
| சோலையாறு நீரேற்றுத் திட்டம் ... | 100 |
| வாலாறு நீரேற்றுத் திட்டம் ... | 100 |
| கீழ்க் காவேரி நீர் மின் திட்டம் ... | 200 |
| மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டம்... | 165 |
| குந்தா இறுதி நிலை ... ... | 205 |
| கீழ் மோயாறு நீர் மின் திட்டம் ... | 30 |
| குக்கலாத் துறை நீர் மின் திட்டம் ... | 40 |

### அனல் மின் திட்டங்கள்

| | |
|---|---|
| மேட்டூர் அணை அனல் மின் திட்டம் ... | 330 |
| நெய்வேலி இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையம் (மைய அரசைச் சார்ந்தது) ... | 1,000 |
| எண்ணூர் இரண்டாவது அனல் மின் உற்பத்தித் திட்டம் ... ... | 1,000 |



### அணு மின் திட்டங்கள்

| | |
|---|---|
| கல்பாக்கம் அணு மின் நிலையத்தை விரிவுபடுத்தல் (மைய அரசினுடையது) (200 மெகாவாட்டுகள் தமிழ் நாட்டுக்கு) ... | 470 |
| தூத்துக்குடியில் இரண்டாவது அணு மின் திட்டம் ... ... | 1,000 |

### கேஸ்டர்பைன்

| | |
|---|---|
| கேஸ்டர் பைன் நிலையங்கள் ... | 300 |

## கடந்த பத்தாண்டுகளில் கண்டுள்ள வளர்ச்சி

| | 1—4—63 | 1—4—67 | 1—4—73 |
|---|---|---|---|
| நிறுவனத் திறன் (மெகாவாட்டுகளில்) | 660 | 1,470 | 2,171 |
| (உயர் அளவு தேவை) (மெகாவாட்டுகளில்) | 532 | 857 | 1,190 |
| உற்பத்தியும்-வாங்குதலும் (மில்லியன் யூனிட்டுகளில்) | 2,836 | 4,103 | 6,964 |
| மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் | 15,060 | 20,250 | 60,325 |
| மின்வசதி அளிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகள் | 1,796 | 4,354 | 23,454 |
| மின்இணைப்பு தரப்பட்டுள்ள வேளாண்மை விசையேற்றங்கள் | 1,65,561 | 2,89,903 | 6,49,241 |
| பயனீட்டாளர்கள் (இலட்சக் கணக்கில்) | 9.88 | 14.83 | 25.45 |
| தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்) | 70 | 98 | 133 |
| மூலதன நிதி(ரூபாய் கோடிக் கணக்கில்) | 170.64 | 281.73 | 523.35 |
| நிகர வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்) | 20.24 | 40.30 | 78.51 |

# திருமயம் கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம் கோட்டை வரலாற்றுப் புகழ் பெற்றது. இக்கோட்டை, சேதுபதிகளில் ஒருவரான விஜயரெகுநாதத் தேவனால் 1687-ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. சேதுபதி முதன்முதலாக இக்கோட்டையில் நுழையும்போது இரண்டு மனித உயிர்களைப் பலியிட்டதாக ஒரு செப்புத் தகடு தெரிவிக்கிறது.

18-ஆம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் திருமயத்தை, புதுக்கோட்டை ரகுநாதராயத் தொண்டைமான் தன்வசப்படுத்திக் கொண்டார். தொண்டைமான் செய்த இராணுவ உதவிக்காக 1723-க்குப் பிறகு இந்த இடம் இராமநாதபுரம் தண்டதேவனால் தொண்டைமானுக்குக் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. புதுக்கோட்டைப் பிராந்தியத்தை திரு அனந்தராவ் கைவசப்படுத்தியபோது, திருமயம் ஒன்றுதான் தொண்டைமானுக்குப் புகலிடமாக இருந்தது. புதுக்கோட்டை அரசர் அனந்தராவ் முற்றுகையிட்டுத் திரும்பிச் செல்லும்வரை ஓராண்டுக் காலம் இங்கேயே தங்கியிருந்தாராம்.

1799-ஆம் ஆண்டில் போலிகார் போரின் போது கட்டபொம்மனும் அவருடைய இளவல் ஊமைத்துரையும் சிலகாலம் இந்தக் கோட்டையில் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இங்குள்ள அழகிய குன்றின் மீது ஒரு பெருமாள் கோயில் உள்ளது. அப்பெருமாளின் பெயர் சத்தியமூர்த்தி. அரசியல் தலைவராகவும், அக்காலத்தில் சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கிய காலஞ்சென்ற சத்தியமூர்த்தி இவ்வூரினரே என்பது குறிப்பிடத்தக்கது.

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200 க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.














தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை—600001




# குழந்தைகள் நலங்காக்கும் காப்பகம்

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பார்கள். குழந்தைகள் உலகைப் பொறுத்த வரை இது முழுக்க முழுக்கப் பொருந்துவதேயாகும். உண்மையிலேயே, வருங்காலத்தில் பல்வேறு துறைகளிலும் வல்லுநர்களாக விளங்கப் போகிறவர்கள் இன்றைய குழந்தைகளே என்பதை, நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துவிட்டால் அவர்கள் நல்வாழ்வில் — நலனில் — வளர்ப்பு முறையில் நாம் காட்டும் அக்கறை தனியானதாகும்.

பொதுவாக, நமது நாட்டைப் பொறுத்த வரையிலே, பலர் பூங்காக்களிலே பூச்செடிகளையும், குரோட்டன்களையும் வளர்ப்பதிலே காட்டுகின்ற ஆர்வத்தினைக் குழந்தைகளை வளர்ப்பதில் காட்டுவதில்லை என்பதையாரும் மறுக்க முடியாது. பலர் குழந்தைகளைப் பெறுவதிலே காட்டுகின்ற அக்கறையை—அவர்களைச் செம்மையாக வளர்ப்பதிலே காட்டுவதில்லை. குழந்தைகள் எப்படியோ வளர்கின்றன—வெட்டி ஒழுங்கு செய்யப்படாத குரோட்டன்களைப் போல.

இப்படி அந்தக் குழந்தைகளை — பெற்ற குழந்தைகளை வளர்ப்பதற்கு வழி தெரியாமல் மட்டுமல்ல — வழியில்லாமல் பல பெற்றோர்கள் குழந்தை வளர்ப்பில் அக்கறை காட்ட முடியாதவர்களாக இருக்கிறார்கள். இவ்வகையில் குழந்தை வளர்ப்பில் — அவர்களுக்கு உரிய கல்வி வசதிகள் கொடுத்துப் பேணி, நல்லவர்களாக — வல்லவர்களாக ஆக்குவதில், மகளிர் நலத் துறை மிக நல்ல முறையில் ஈடுபாடு காட்டி வருவது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். பொதுவாக, குழந்தை வளர்ப்பில் ஆடவர்களை விட மகளிரே அவர்களை வழிப் படுத்திட — வகைப்படுத்தி வாழ்வித்திட — மிகவும் பொருத்தமானவர்கள்; தாய்மைப் பண்பு அவர்களிடம் தானே உள்ளது!

மகளிர் நலத் துறை — மகளிர் நலத்தினை மட்டுமின்றிக் குழந்தைகள் நலனையும் பேணிக் காக்கிறது. சின்னஞ் சிறு குழந்தைகளை ஒன்றாகச் சேர்த்து—அவர்களுக்கு உரிய கல்வியினை அளித்து — அவர்களை நல்வழிப் படுத்திட உருவாக்கப் பெற்றதுதான் ''குழந்தைகள் காப்பகம்!'' சென்னை மாநகரில் 22 குழந்தைகள் காப்பகங்களை மகளிர் நலத்துறை ஏற்படுத்திச் சிறந்த முறையில் பாதுகாத்து வருகிறது. அவற்றுள் ஒன்றுதான் கோட்டூர்புரத்தில் உள்ள காப்பகம்.

**மகளிர் பகுதி**

## சென்னை கோட்டூர்புரம்!

தமிழ்நாடு அரசின் சீரிய திட்டத்தினாலும், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் அயராத உழைப்பினாலும் உருவாக்கப் பெற்ற மாடிக் குடியிருப்புக்களைக் கொண்டு காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எழிலுடன் அமைக்கப்பெற்ற மாடிக் குடியிருப்பில்—எச். 31/7 பகுதியில் சிறந்த முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது, ஒரு 'குழந்தைகள் காப்பகம்'. இது பகல் நேரத்தில் குழந்தைகளைப் பாதுகாக்கிறது.

1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஆரம்பிக்கப் பட்ட இக் காப்பகத்தில் ஒரு பால சேவிகாவும், இரண்டு ஆயாக்களும் பணியாற்றுகின்றனர். 6 மாதங்கள் முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகள் இதில் சேர்த்துக்



வெளி விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகள்

கொள்ளப்படுகிறார்கள். இவர்களில் 6 மாதம் முதல் 2.5 வயது வரையிலுள்ள குழந்தைகளை ஒரு பிரிவாகவும், 2.5 வயது முதல் 5 வயது வரையிலுள்ளவர்களை மற்றொரு பிரிவாகவும் பிரித்துள்ளார்கள்.

அன்றாட வாழ்க்கையினை நடத்தப் பணிக்குச் செல்லுகின்ற பெற்றோரின் குழந்தைகளையும், வீட்டில் வைத்துப் பேண வழியில்லாமல் —வசதியில்லாமல் தவிக்கின்ற பெற்றோரின் குழந்தைகளையும் காப்பதற்காக ஏற்படுத்தப் பெற்ற இக் காப்பகத்தில் ஆரம்பத்தில் சுமார் 40 குழந்தைகள் சேர்க்கப்பட்டிருந்தார்கள். தற்பொழுது, பால சேவிகா, புதுக் குடியிருப்பு நல்வாழ்வு அலுவலர் ஆகியோரின் முயற்சியினால் சுமார் 60 குழந்தைகள் இங்குப் பேணப்பட்டு வருகிறார்கள். இவர்களில் 6 மாதம் முதல் 2.5 வயது வரையிலுள்ளவர்கள் 20 பேர். மற்ற 40 குழந்தைகள் 2.5 வயது முதல் 5 வயது வரையிலுள்ளவர்கள்.

இக் காப்பகம் காலை 9.30 மணிக்குத் தொடங்கி மாலை 3.30 மணி வரையில் செயலாற்றுகிறது. காலையில் குழந்தைகள் வந்தவுடன் முதலில் ஒவ்வொரு குழந்தையுடனும் அதனதன் மனோ நிலைக்கு ஏற்றவாறு பேசி அவர்களைக் கல்வி கற்கும் பணியில் ஈடுபடுத்திட முயற்சி செய்கிறார் பால சேவிகா. பின்னர் முறையாக அவர்களுக்குக் கால அட்டவணைப்படி எழுத்துக்கள் கற்றுத் தருதல், படத்தைக் காட்டிப் பாட்டுச் சொல்லித் தருதல், கதைகள் சொல்லி நீதி முறைகளை அறிவுறுத்தல் மற்றும் செயல் முறைப் பாடல்களும் கற்றுத் தரப்படுகின்றன.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பார்கள். குழந்தைகளைப் பொறுத்த வரையில் பசி வந்துவிட்டால் நிச்சயமாக மற்றக் காரியங்களில் கவனம் செலுத்தமாட்டார்கள். எனவேதான், 2.5 வயது முதல் 5 வயது வரையிலுள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்கிச் சோர்வின்றிக் கல்வி கற்க உதவுகிறார்கள். 6 மாதம் முதல் 2.5 வயது வரையிலுள்ளவர்களுக்கு இருமுறை பால் பவுடர், அரிசி, வெல்லம் ஆகியவற்றாலான கஞ்சியும் கொடுக்கிறார்கள். வாரத்தில் ஒவ்வொரு நாளும் மாறுபட்ட உணவுகளும், சத்துணவுகளும் தரப்படுகின்றன. வாரத்தில் மூன்று நாட்கள் 'கேர்' நிறுவன உணவு தரப்படுகிறது. ஒரு குழந்தைக்கு 20 காசுகள் என்ற அளவில் உணவு தரப்படுகிறது. உணவிற்காகும் செலவுகள் முழுவதையும் மகளிர் நலத் துறையே ஏற்றுக்கொள்கிறது. காப்பகத்தில் ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை மொத்தமாகவே வாங்கி வைத்துக்கொள்கிறார்கள்.

'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு' என்பார்கள். குழந்தைகளைக் கேட்பானேன்! மதிய உணவுக்குப் பின்னர் ஒரு மணி நேரம் வரையில் ஓய்வெடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இதில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி—சிறு குழந்தைகளைத் தொட்டிலில் தூங்க வைப்பதுதான்! ஓய்விற்குப் பின்னர் குழந்தைகளின் முகங்களைக் கழுவி அழகு படுத்தும் பணியில் ஆயாக்கள் ஈடுபடுகிறார்கள்.

நோயற்ற வாழ்வு வாழ்கின்ற வகையில், குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுக்க—இருக்கின்ற நோயினைத் தீர்க்க — மருத்துவச் சோதனைகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தனியே மருத்துவ அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சோதனை முடிந்த பின்னர் அட்டைகளில் அவை குறிக்கப்படுகின்றன. இந்த உயர்ந்த பணியில் புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை உதவி புரிகிறது. அவ்வப்போது மாவட்ட மகளிர் நல அலுவலரும் ஆய்வு செய்கிறார்.



செயல்முறைப் பாடல் (Action Song) கற்றுத் தரப்படுகிறது.



பிற்பகல் 3.30 மணிக்குக் குழந்தைகள் அவரவர் வீட்டிற்கு ஆயாக்களாலும், பெற்றோர்களாலும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 3.30 மணி முதல் 4.30 மணி வரையில் பால சேவிகா, ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பெற்றோர்களிடம் குழந்தை வளர்ப்புப் பற்றி ஆலோசனையும் நடத்துகிறார். வாரத்திற்கொருமுறை பெற்றோர்கள் கலந்து கொள்ளுகின்ற வகையில் மகளிர் நலச் சங்கம் என்ற கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து குழந்தைகள் பாதுகாப்பு, வளர்ப்புப் பற்றியும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.



ஆடிக்களிக்கும் அரும்புகள்



கஞ்சி அருந்தும் பிஞ்சுகள்

குழந்தைகளோடு குழந்தையாகவும், அக் குழந்தைகளின் அன்புத் தாயாகவும் அவர்களுக்கு நல்லாசிரியையாகவும் இப்படிப் பல வகையிலும் அந்தக் குழந்தைகளைப் பேணிக் காக்கும் பெருந் தொண்டினைத் தொழிலாகவே மேற்கொண்டு கடமையாற்றும் பால சேவிகாக்களின் பணி பாராட்டத் தக்கதாகும்! இவ்வகையில் ஆங்காங்கே நடைபெறும் குழந்தைகள் காப்பகங்கள் பகற் பொழுதில் அந்தப் பிஞ்சு மழலைகளின் தாயகமாகவே காட்சியளித்து வருவது குறிப்பிடத்தக்கது!

—ஆயிரம்

தமிழ் நாட்டில்
நம் முன்னேற்றத்திற்காக
நாளுக்கு நாள் புதிய திட்டங்கள்!
உணவு உற்பத்தியில்
தன்னிறைவு எய்தியது போல
ஒவ்வொரு துறையிலும்
நிறைவுபெற உழைக்கின்றோம்.

சிந்தனை
தந்திடும்
பாடம்!



நம் நல்வாழ்வுக்காகத்
தமிழக அரசு
ஆற்றிடும் பணிகள்,
எடுத்திடும் முயற்சிகள்
ஏராளம்! ஏராளம்!!
எனினும்

நிறைவான வாழ்வை— நிம்மதியை— எல்லாரும் பெற

**எதுதடை? ஏன் இடையூறு?**

—எண்ணிப் பார்க்கும்போது விளங்கிடும் உண்மை

**பெருகிடும் மக்கள் தொகையே!**

இதனால் வீட்டுக்கும் வேதனை! நாட்டுக்கும் நலிவு!

எனவே

பிறந்ததைக் காப்போம்—இனி
பிறப்பதைத் தடுப்போம்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

—குடும்பநலத்துறை, தமிழ்நாடு அரசு.


# கேளுங்கள் கொடுக்கப்படும்



வினா: எங்கள் வாலொலி மன்ற உறுப்பினர் ஒருவர் தனது ஓர் ஏக்கர் கிணற்று நீர்ப்பாசன நிலத்திற்கு அருகே உள்ள அரசு தரிசு நிலத்தைச் சீர்திருத்தி (1 ஏக்கர் 75 செண்ட் நிலம்)சாகுபடி செய்து வருகிறார். அந்த நிலத்தைத் தனக்கு சொந்தமாக்கி மேலும் சீர்படுத்தி, தீவிர விவசாயம் செய்ய ஆசைப்படுகிறார். ஆகவே, அரசு அந்த நிலத்தை அவருக்குத் தருமா? அதற்கு ஏதாவது விலை தர வேண்டுமா? யாரை அணுகவேண்டும்? அந்த நிலம் அவருக்குச் சொந்த மாவதினால் மற்றவர்களுக்கோ வேறு வகையிலோ எந்த துன்பமும் இல்லை. முழுவிவரமும் 'தமிழரசு' மூலம் அறிய அவர் ஆசைப்படுகிறார். விவரம் கொடுத்து உதவுங்கள்.

—ஆர். நல்லசாமி
தலைவர்,
எஸ். ராயங்கோயில்
வாலொலி மன்றம்,
கோவை மாவட்டம்.

விடை: தமிழ்நாடு அரசு நிலமற்ற ஏழைகளுக்கு மட்டுமே அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து வருகிறது. அவ்வாறு பட்டா செய்து கொடுப்பதிலும், யார் யாருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்கும் தமிழ்நாடு அரசு விளக்கமான ஆணை பிறப்பித்துள்ளது. தன் நிலத்திற்குப் பக்கத்தில் உள்ள அரசு தரிசு நிலத்தைச் சீர்திருத்தி பயிரிட்டு வருவதால் மட்டும், அத்தரிசு நிலம் ஒருவருக்கு உரிமையுடையதாக ஆகிவிடாது! சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இதுவும் ஒரு வகையில் ஆக்கிரமிப்பேயாகும். அரசுக்கு அத்தரிசு நிலம் தேவைப்படுமானால், ஆக்கிரமிப்பைக் காலி செய்து, வேறு ஏதேனும் பணிக்கோ அல்லது வேறு எவருக்கேனும் பட்டாவாக வழங்கவோ எடுத்துக் கொள்ள முடியும்.

உங்கள் உறுப்பினருக்கு ஒரு ஏக்கர் நிலம் தவிர வேறு ஏதேனும் நிலம் உள்ளதா என்பதைத் தெரியப்படுத்தவில்லை. உண்மையிலேயே அவருக்கு வேறு நிலம் இல்லையெனில், மேற்கூறிய தரிசு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்குமாறு உங்கள் வட்ட ஆட்சியாளருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனு கொடுக்கலாம்.

பட்டா கோரி மனு கொடுக்கும்போது, அந்தத் தரிசு நிலத்தை எவ்வளவு காலமாக அவர் பயிரிட்டு வருகிறார், எவ்வளவு செலவு செய்து நிலத்தைத் திருத்தினார் என்பவைகளைக் குறிப்பிட்டு மனு கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் அவருக்கே பட்டா கிடைக்க வாய்ப்பு ஏற்படலாம். அவ்வாறு பட்டா செய்து கொடுப்பதில், உங்கள் ஊரில் உள்ள எவருக்கும் ஆட்சேபனை இல்லையெனில், உங்கள் வாலொலி மன்ற உறுப்பினருக்கே அந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்படலாம். ஆட்சேபனை இருப்பின் பட்டா மறுக்கப்படலாம்! அல்லது நிலமற்ற வேறு ஒரு ஏழைக்கு கொடுக்கப்படலாம். அந்நிலம் உண்மையிலேயே நல்ல நிலமெனில், ஒரு குறிப்பிட்ட தொகையைப் பட்டா பெறுபவரிடம் இருந்து வசூலித்துக் கொள்ளவும் அரசுக்கு உரிமையுண்டு. அத்தொகையை உங்கள் வாலொலி மன்ற உறுப்பினர் செலுத்திட முன்வந்தால், அவருக்கே பட்டா கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. இது தொடர்பாக உங்கள் கர்ணத்தையும், நிலவரி ஆய்வாளரையும் (ரெவின்யூ இன்ஸ்பெக்டர்), துணை வட்ட ஆட்சியாளர் (டிப்டி தாசில்தார்) ஆகியோரைக் கலந்தாலோசிப்பது நல்லது.

வினா: கருணா, கண்ணகி, கரிகாலன் முதலிய உயர்ரக நெல் இரகங்களைப் பிசானத்தில் பம்செட் உள்ள இடங்களில் நடலாமா? இவைகளைப் பிசானம் பருவத்தில் அதாவது அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடலாமா? அப்படி நட்டால் என்ன ?

—எம். ஆர். முத்துப்பாண்டியன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
அய்யனூர் ஊற்று,
நெல்லை மாவட்டம்.

விடை: 'பிசானம்' என்பது திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இரண்டாவது போகம் நெல்பயிரிடும் பருவத்தைக் குறிப்பதாகும். 'பிசானம்' பட்டச் சாகுபடிக்குப் பொதுவாக செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் நெல் விதைக்கப்பட வேண்டும். தாங்கள் குறிப்பிட்டுள்ள கருணா, கண்ணகி, கரிகாலன் ஆகிய மூன்று ரகங்களும் 'பிசானம்' பட்டத்திற்கு ஏற்றதல்ல!

அம்பாசமுத்திரத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடை பெற்றுள்ள ஆராய்ச்சிகளின்படி 'பிசானம்' பருவத்திற்குப் 'பொன்னி' இரகமே சிறந்ததென்று தெரிய வருகிறது. 'ஜெயா', 'ஐ. ஆர். 8' 'ஐ. ஆர். 5', 'ஐ. ஆர். 20' ஆகிய இரகங்களையும் 'பிசானம்' பருவத்தில் பயிரிடலாம்.



செப்டம்பர் பின்பாதில் (செப்டம்பர் 16 முதல் 30 தேதி வரை) 'பொன்னி', 'ஜெயா', 'ஐ.ஆர். 5' ஆகிய இரகங்களையும், அக்டோபர் முன்பாதியில் (அக்டோபர் 1 முதல் 15 தேதி வரை) 'ஐ.ஆர் 20' இரகத்தையும், அக்டோபர் பின்பாதியில் (அக்டோபர் 16 முதல் 31-ஆம் தேதி வரை) 'ஐ.ஆர். 8' இரகத்தையும் நடுவதே சிறந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பிசானம் பருவத்தில் மேற்கூறிய இரகங்களை மட்டுமே பயிரிடுவது சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**வினா:** சிறு உழவர்கள் நேரத்தோடு பூச்சிகளைக் கட்டுப்படுத்தச் சொந்தமாக ஒரு கைத்தெளிப்பான் வைத்திருப்பது அவசியம் என்பது என்கருத்து. அப்படி சிறு உழவர்களுக்காக பூச்சி மருந்து தெளிக்க கை தெளிப்பான் சகாய விலையில் (சப்சிடி ரேட்) கொடுக்கும் திட்டம் உள்ளதா? அப்படிக் கொடுப்பதானால், யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? இல்லையானால் இத்திட்டத்தை நமது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கோருகிறேன்.

—பி.என். கஜபதி
29-ஏ, சிங்கபெருமாள் கோவில் சன்னதித் தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

**விடை:** சிறு உழவர்கள் மட்டுமல்ல, எல்லா உழவர்களும் தங்கள் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும், நோய்களையும் தடுக்க, தக்க காலத்தில் மருந்து தெளிக்க முன் வர வேண்டும் என்பதற்காகவே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை பல்லாண்டு காலமாகவே கையால் இயக்கும் தெளிப்பான்களை (Hand operated sprayers) சகாய விலையில் (Subsidised rate) வழங்கி வருகிறது. இதைத் தாங்கள் அறியாதிருந்ததற்காக நாங்கள் வருந்துகின்றோம். சகாய விலையில் கையால் இயக்கும் தெளிப்பான்களைப் பெற உங்கள் ஊர் நல ஊழியர் (கிராம சேவகர்) மூலமாக, உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களுக்கு மனு அனுப்பி வைக்கவும். எந்த நிறுவன தெளிப்பான் வேண்டும் என்பதைத் தெரிவித்து, முன்பணமும் கட்டிவிட்டால், கண்டிப்பாக உங்களுக்கு கையால் இயக்கும் தெளிப்பான் விரைவில் கிடைத்துவிடும்! இதுபற்றி உங்கள் ஊர்நல ஊழியரையோ அல்லது துணைவேளாண்மை அலுவலரையோ உடன் கலந்தாலோசியுங்கள்.

**வினா:** வேர்க்கடலை (மானாவாரிப்பயிர்) முளைத்த 20 நாட்களுக்குள் முளைச்செடியின் தண்டில் கறுப்பான் பூஞ்சாளம் ஏற்பட்டு செடிகள் அழிந்து விடுகின்றன. இதனால் இவ்வாண்டு 50 சத வீதம் நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க எம் மருந்தை உபயோகிக்க வேண்டும்?

—ம.கு. அண்ணாமலை,
மடம் (அஞ்சல்),
மழையூர், (வழி),
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிட்டுள்ளது 'வேர் அழுகல் நோய்' என்று கருதுகின்றோம். அந்நோய்த் தாக்கினால், தண்டின் நிறம் மாறி செடிகள் இறந்துவிடும்; வேர்ப்பாகத்தில் கறுப்பான பூஞ்சாள வளர்ச்சிகாணப்படும். எனவே, தாங்கள் குறிப்பிட்டுள்ளது வேர் அழுகல் நோயே என்று நம்புகின்றோம்.

இந்நோயைக் கட்டுப்படுத்த 1 கிலோ விதைப் பயறுகளுக்கு 2.5 கிராம் 'கேப்டான்' அல்லது 'டி.எம்.டி.டீ' மருந்தை நன்கு கலந்து, 6 மணி நேரம் அப்படியே வைத்திருந்து, பிறகு விதைக்க வேண்டும். இவ்வாறு விதைப் பயறுகளை மருந்துடன் கலந்து விதைத்தால், வேர் அழுகல் நோய்த் தாக்காது!

**வினா:** இறைவை நிலக்கடலையில் பருப்பு முற்றும் சமயத்தில் வெட்டுக் கரையான் தாக்கிப் பெரும் அளவு சேதத்தை விளைவிக்கின்றன. இதைத் தடுக்க கடைசி உழவில் பி.எச்.சி. 10 சதம் தூவலாமா? அல்லது வேறு வழி உள்ளதா?

நிலக்கடலைக்கு இரசாயன உரம் (என்.பி.கே.) எந்த விகிதத்தில் இடவேண்டும்?

—வி.என். ராதாகிருஷ்ணன்,
தாத்தையங்கார் பேட்டை,
முசிரி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**விடை:** வேர்க் கரையான்களை ஒழிக்க கடைசி உழவில் ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவுதல் சிறந்தது. 'ஆல்ட்ரின்', 'டையல்டிரின்', 'ஹெப்டோகுளோர்' போன்ற மருந்துத் தூள்களையும் கடைசி உழவில் தூவலாம். இவ்வாறு தூவியும், பருப்பு முற்றும் சமயத்தில் கரையான் தாக்கினால், அப்பொழுது, தாக்கிய இடங்களில் மட்டும் பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவி மண்ணைக் கொத்தி விடலாம். இதனால் மற்ற இடங்களுக்கும் கரையான் பரவாமல் தடுக்க இயலும்.

இறைவை நிலக்கடலைக்கு 9 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 27 கிலோ சாம்பல் சத்து (9 என்: 18 பி: 27 கே) ஆகியவைகளை இட வேண்டும். மானாவாரி நிலக்கடலைக்கு இதில் பாதி அளவு (அதாவது 4·5 என்: 9 பி: 13·5 கே.) இட்டால் போதுமானது.







**வினா:** எங்கள் கொல்லையில் உள்ள அவரை, பாகல் முதலான கொடிகளை நுனியிலும், அடிபாகத்தில் பூமியிலிருந்து ஒரு சாண் உயரத்திலும் ஓணான் வெட்டி விடுகிறது. மேலும் கீரை முதலியனவற்றையும், கொய்யா முதலிய கன்றுகளையும் எலிகள் பூமியோடு துளைத்து நாசம் செய்கின்றன. இதைத் தடுக்க வழி கூறுங்கள்.

—கா. ராமாமிர்தம்,
சு. புரம்,
அறந்தாங்கி வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

**விடை:** அவரை, பாகல் புடல் முதலிய கொடிகளில் ஓணான் வெட்டுவதைத் தடுக்க ஓணான்களைக் கொல்வதே சிறந்த வழியாகும். நீண்ட ஒரு மூங்கில் கழியின் நுனியில் மாடு அல்லது குதிரை வால் மயிரினால் ஆன ஒரு கயிறைச் சுருக்குபோல் கட்டிக் கொள்ள வேண்டும். ஓணான் முன்னால் இச்சுருக்கை நீட்ட வேண்டும். பொதுவாக ஓணான், சுருக்கின் உள்ளே தலையைத் துணிந்து நுழைக்கும் பண்பு உடையது! அப்பொழுது மூங்கில் கழியை சற்று இழுத்தால் ஓணானின் கழுத்தில் சுருக்கு இறுகிவிடும்! உடனே கழியை வேகமாக இழுக்க, ஓணான் சுருக்கில் இறுகிய நிலையில் துள்ளும்! பிறகு ஓணானைப் பிடித்து அடித்துக் கொன்றுவிடலாம். பொதுவாக கிராமங்களில் இம்முறை மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இவ்வாறு செய்யப் பொறுமை வேண்டும். நீங்களும் முயற்சித்துப் பாருங்கள்!

எலிகளை ஒழிக்க எலி மருந்து வைத்துக் கொல்வதே சிறந்த வழி! ஒரு பங்கு 'ஜிங்பாஸ்பைட்' என்ற எலி மருந்துடன் 49 பங்கு சோளப்பொறி அல்லது கருவாட்டுத்தூள் ஆகியவற்றுடன் கலந்து வைத்து, எலியைக் கொல்லலாம். முதலில் 2 அல்லது 3 நாள் வெறும் சோளப்பொறி அல்லது கருவாட்டுத்தூளை மட்டும் வைத்துப் பழக்கப்படுத்திவிட்டு, பிறகு 'ஜிங்பாஸ்பைட்' மருந்தைக் கலந்து வைக்க வேண்டும். பாத்திகளைச் சுற்றிலும் மற்றும் எலிகள் நடமாடும் வழிகளிலும், எலி வளைகளின் முன்னாலும் இம்மருந்துக் கலவையை வைக்க வேண்டும். இவ்வாறு மருந்து வைத்து எலிகளைக் கொல்வதுடன், எலி வளைகளை வெட்டியும் எலிகளை அறவே ஒழிக்க வேண்டும்.

**வினா:** தை மாதக் கடைசியில் அறுவடை செய்யக்கூடிய துவரையில் கம்பளிப் பூச்சி, வண்டு முதலியன விழுகின்றன. என்ன மருந்து தெளிக்கலாம் என்பதைத் 'தமிழரசு' மூலம் அறிய விரும்புகின்றேன். மேலும் கிளிகள் துவரைக்காய்களைக் கிழித்து, உள்ளே இருக்கும் பருப்புகளைத் தின்று விடுகின்றன. என்ன செய்தால் துவரையைக் காப்பாற்றலாம்?

—கு.ச. மோகன்லால்,
குன்றக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

**விடை:** துவரையில் தோன்றியுள்ள கம்பளிப் பூச்சிகளையும், வண்டுகளையும் கட்டுப்படுத்த நீங்கள் உடனடியாக பி.எச்சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் 1:1 என்ற விகிதத்தில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ அளவில் தூவ வேண்டும். தேவைப்பட்டால் 15 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் முறையும் மேற்கூறியவாறே மருந்து தூவவும்.

கிளிகளின் தாக்குதலிலிருந்து துவரையைக் காப்பாற்ற பறவை விரட்டும் கருவியைப் (Bird Scarer) பயன்படுத்தலாம்! ஆனால் அக்கருவி உங்களுக்கு உடனடியாகக் கிடைப்பது சிரமம்! மேலும் அக்கருவியைப் பயன்படுத்துவதற்குரிய மருந்தும் உடன்கிடைப்பது சிரமம்! எனவே, தகரத்தைத் தட்டி அல்லது வெடிகளை வெடித்து, ஒலி எழுப்பிக் கிளிகளை விரட்டுவதே சிக்கனமான வழியாகும்.

10 சதக் கார்பரில் மருந்துத் தூவப்பட்ட செடிகளில் உள்ள காய்களில் ஓரளவிற்கு ஒரு வித நெடி இருக்குமாதலின், கிளிகள் அக்காய்களைத் தின்னாது! எனவே, துவரை பூக்க ஆரம்பித்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 முறை 10 சதக் கார்பரில் தூளைத் தூவுதல் சிறந்தது. இதனால் துவரைக் காய்களைப் பாழ்படுத்தும் காய்ப்புழுக்களும் கட்டுப்படுத்தப்பட்டுவிடும்; கிளிகளின் தொல்லையும் குறையக்கூடும்!



**வினா:** 'நவம்பர்' தமிழரசு இதழில் 'இகபஜ' என்ற கட்டுரையில், சென்னையில் 'ஜப்பான் தொடர்புக் கழகம்' இருப்பதை குறிப்பிட்டீர்கள். ஆனால் அது எங்குள்ளது என்ற முகவரியை வெளியிடாததற்கு வருந்துகிறோம். தயவு செய்து முகவரியைத் தெரிவிக்கவும்.

—கோ. வேணு,
தொரப்பாடி,
செஞ்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

**விடை:** ஜப்பான் தொடர்பு கழகத்தினருடன் தொடர்புக் கொள்ள பின்கண்ட முகவரிக்கு எழுத வேண்டும்.

''இந்தோ நிப்பான் பண்பாட்டுக் கழகம்.
சி.ஐ.டீ. காலனி,
மைலாப்பூர்,
சென்னை-600004.



**வினா:** தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவன அலுவலர், கால்நடை வளர்ப்புத்துறை அலுவலர் ஆகியவர்களுடன் தொடர்பு கொள்வது எப்படி? அவர்களுடைய முழுவிலாசம் என்ன? கோழிப்பண்ணை அமைக்க இடம், பணம் இவை இரண்டும் பெற யாரை நாடுவது?

—ஆர். தனவேலு,
27, கப்பல் போலு செட்டி தெரு,
வண்ணையம்பதி,
சென்னை.

**விடை:** தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவன அலுவலருடன் தொடர்பு கொள்ள பின்கண்ட முகவரிக்கு எழுதவும்:

''நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம்,
98, வாயிட்ஸ் ரோடு,
சென்னை.

காவ்நடை வளர்ப்புத்துறை அலுவலர்கள் சென்னையில் பல இடங்களில் உள்ளனர். உங்கள் அருகாமையில் இருக்கும் கால் நடை மருத்துவமனையில் உள்ள உதவி கால்நடை மருத்துவர், உங்களுக்கு உதவ முன்வரக் கூடும். முயற்சித்துப் பாருங் கள்!

கோழிப்பண்ணை அமைக்க இடமும், பணமும் கேட்டுள் ளீர்கள்! 'சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும்!' என்ற பழ மொழியை மறந்து விட்டீர் களா? இடமே இல்லை என்ருல் உங்களுக்குப் பணம் கொடுக்க எந்த நிறுவனமும் முன்வராது! எனவே, கோழிப்பண்ணை அமைக்க முதலில் தகுந்த இடத்தை வாங்கிக் கொண்டு, பிறகு 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா', 'பாங்க் ஆப் பரோடா' போன்ற வங்கிகளுக்குக் கோழிப்பண்ணை அமைக்கக் கடனாகப் பணம் கேட்டு மனு அனுப்பலாம்.

***

**வினு:** நான் பி.யு.சிவரைப் படித்துள்ளேன். இப்பொழுது பண்ணைத் தொழில் செய்து வருகின்றேன். எனக்கு கோழிப் பண்ணை வைப்பதில் ஆர்வம் உள்ளது. 'தமிழரசு' இதழில் (16-11-73)' படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற பகுதியைப் படித்தேன். அதில் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பிக்க யாரை அணுக வேண்டும்?

—ந. குணசீலன்,
மாணவர் இல்லம்
மத்திகிரி அஞ்சல்,
ஒசூர் வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

**விடை:** ''படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு'' என்ற திட் டத்தின்கீழ் தாங்கள் கோழிப் பண்ணை அமைக்க விரும்பினல் அதுபற்றிய முழு விவரங்களை யும், மனுவையும் பெற பின் கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

''நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழிவளர்ப்பு
நிறுவனம்,
98, லாயிட்ஸ் ரோடு,
சென்னை.





## அண்ணு பண்ணை

## அளித்துள்ள இலாபம்

''அண்ணு பண்ணை'' ஆறு ஆண்டுக்காலத்திலேயே யாவரும் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பண்ணை துவக்கப்பட்ட இரண்டாவது ஆண்டு முதல் தொடர்ந்து இலாபம் தரக்கூடிய நிலையில் இயங்கி வருகிறது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

| ஆண்டு | இலாபம் (ரூபாய்) |
|---|---|
| 1969—70 | 11,187.75 |
| 1970—71 | 65,600.44 |
| 1971—72 | 78,619.25 |
| 1972—73 | 1,39,607.48 |

இந்த ஆண்டில் (1973-74) ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ''அண்ணு பண்ணை'', திட்டமிட்டபடி முழு வளர்ச்சி அடையும்பொழுது ஆண்டுதோறும் ரூபாய் 8 இலட் சத்திற்கும் அதிகமான வருவாய் தரும் வகையில் அமையும் என் பது திண்ணம்.



**வினு:** 'தமிழரசு' இதழில் விவசாயிகளுக்கு பயன்தரும் பல செய்திகளை வெளியிடுவ தற்கு முதலில் என் மகிழ்ச்சி யையும், நன்றியையும் தெரி வித்துக் கொள்கின்றேன். கடந்த வருடம், டிசம்பர் 19-ஆம் நாள், சென்னை ராஜாஜி மண்டபத்தில் தமிழக முதல் வர் தலைமையில் நடைபெற்ற கோடைப்பயிர் உற்பத்திப் பயிற்சி முகாமில் வெளியிடப் பெற்ற 'பார்ம் சயின்ஸ்' மற் றும் 2 வெளியீடுகள் யாவை? அவற்றை எங்கிருந்து பெற முடியும்? கடைசியாக வெளி வந்த 'வேளாண்மைக் குறிப்பு கள்' எனும் வெளியீடு எந்த வருடம் வெளி வந்தது? 'தமிழரசு' இதழின் ஆண்டு சந்தா எவ்வளவு?

—குமரன்,
செகற்பட்டு,
செங்கற்பட்டு மாவட்டம்.

**விடை:** கோடைப் பயிர் உற்பத்திப் பயிற்சி முகாமில் பின்கண்ட 3 நூல்கள் வெளி யிடப் பெற்றன.

(1) பண்ணை விஞ்ஞானம் (The Farm Science)-இது ஒரு ஆங்கில, மாத இதழ்; வேளாண்மைத்துறை அலுவ லர்களுக்காக வெளியிடப்படு கிறது.

(2) பயிர் உற்பத்தி விளக்க நூல் (Crop Production Manual) 1973-74) வேளாண்மைத் துறை அலுவலர்களுக்காக வெளியிடப் பெற்றுள்ளது.

(3) களப்பணியாளர் கையேடு-இது வேளாண்மைத் துறையில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்குத் தகுந்த விளக்கம் தரும் தமிழ் நூலா கும்.

இந்நூல்கள் தற்பொழுது தனிப்பட்டவர்களுக்குக் கிடைக் காது; பிறகு கிடைக்கலாம்!

''வேளாண்மைக் குறிப்பு கள்'' என்ற நூல் கடைசியாக 1970-71-ஆம் ஆண்டில் வெளி வந்தது.

''தமிழரசு'' தமிழ் இதழின் ஆண்டு சந்தா ரூபாய் 10.00; ஆங்கில இதழின் ஆண்டு சந்தா ரூபாய் 5.00.

—ஆர். எம்.



# கலை வளர்க்கும்

# கலைத் தொடர்பு நிலையம்

—குமரன்



கிறித்தவ—கலைத் தொடர்பு நிலையத்தின் ஒரு தோற்றம்.

சென்னை தேனும்பேட்டை எல்டாம்ஸ் சாலையிலுள்ள கிறித்தவக் கலைத் தொடர்பு நிலையத்தினுள் நுழைகிருேம்.

இனிமையான இசையும், அதையொட்டி 'கல் கல்' என சதங்கை ஒலியும் காற்றிலே மிதந்து வருகிறது. நம்மை யறியாமலேயே அந்தத் திசை நோக்கி நம் கால்கள் நடக்கின் றன.

அங்கே—

இசைக் குழுவினரோடு பெண் களும் ஆண்களும் பாடிக்கொண் டிருக்கின்றனர். அவர்களுக் கருகே ஆசிரியர் ஒருவர் பாடிக் காட்டுகிருர்.

பாடல் முடிகிறது. ஆடல் துவங்குகிறது. நான்கைந்து பெண்கள் நடனம் பயில்கின்ற னர்.

இப்படிக் கலையோடு தொடர்புடையவர்கள், இந் நிலையத்தோடும் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

இயல் இசை நாடகம் எனும் முத்தமிழிலும் ஆர்வமிக்கவர் களுக்கு முறையான பயிற்சி தருகிறது இந்நிலையம். இலவசப் பயிற்சியோடு, ஒரு சிலருக்கு உதவித் தொகையும் வழங்கப் படுகிறதென்ருல், இந்த உதவியை - இந்தக் கலைத் தொண்டை மனமாரப் பாராட்ட வேண்டுமல்லவா?



வாஞெலி நாடகம் [illegible]





கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், திறமையுள்ளவர்களுக்கும் வாய்ப்புத் தருவது இந்நிலையத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

கலைகளோடு தொடர்பு கொண்ட இது, மக்களோடு தொடர்பு கொள்ளவும் ஒரு 'குட்டி வானொலி' நிலையமாகத் திகழ்கிறது. எப்படி?

சென்னை வானொலி நிலையம் போல பல்வேறு நிகழ்ச்சிகளை இது தயாரித்து ஒலிப்பதிவு செய்கின்றது. அதற்கான சாதனங்கள் இங்குள்ளன. திறமை மிக்க கலைஞர்களைக் கொண்டு நாடகம், இசை, வில்லுப்பாட்டு, உரையாடல், கதம்ப நிகழ்ச்சிகள் போன்றவை ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன. இவை நாள்தோறும் வானொலியில் 19 மீட்டரில் ஒலிபரப்பப்படுகின்றன. கால அளவு 45 நிமிடங்கள்.

சிந்தைக்கு விருந்தூட்டும் இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள், வேதனையை மறக்கச் செய்யும்; விவேகத்தை வளர்க்கத் தூண்டும். பாரதியார், பாரதிதாசன், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திரு.வி.க., மறைமலையடிகளார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா, நாமக்கல் கவிஞர் போன்ற தமிழக, பிறநாட்டு அறிஞர் பெருமக்களின் வரலாற்றை வில்லுப்பாட்டாக இது ஒலிபரப்பியிருக்கிறது. இதுவரை சுமார் 300-க்கு மேற்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை இது தயாரித்து ஒலிபரப்பு செய்திருக்கிறது. இத்தனை பாடல்களையும் எழுதியவர் கவிஞர் முருகுவண்ணன் என்னும் தமிழார்வமிக்க இளைஞராவர்.

இங்குத் தயாரிக்கப்படும் ஒலிப்பதிவுகள் விமானம் மூலமாக, எதியோப்பியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து நாள் தோறும் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றது.

கலைநிகழ்ச்சிகள் தவிர குடும்ப நலம், மாணவர் பிரச்சினை, வேளாண்மைச் சிறப்பு, மருத்துவ விந்தைகள், தொழிலாளர் நலன் போன்ற நிகழ்ச்சிகளும் அவ்வப்போது சேர்க்கப்படுகின்றன.

'வானமுதம்' என்ற பெயரில் மலையாள மொழியிலும், ஆங்கிலத்திலும் இலங்கை வானொலியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. இந்நிலையத்தாரின் நிகழ்ச்சிகளைக் கேட்டு இந்தியா முழுவதிலுமிருந்து திங்கள்தோறும் சுமார் 1,500 கடிதங்கள் வருகின்றன.

இந்தியாவில் வானொலி போன்ற ஓர் அமைப்பினைத் தனிப்பட்ட முறையில் நடத்துவதில், இந்நிலையமே முதலாவதாகக் கருதப்படுகிறது.



இன்னிசை விருந்து இனிதே நடைபெறுகின்றது

இந்நிலையத்தில் கர்நாடக இசை, வீணை, வாய்ப்பாட்டு, நடனம், இசைக் கருவிகளில் பயிற்சி போன்ற கலைகள் இலவசமாகக் கற்றுத் தரப்படுகின்றன. நடனத்தில் 7 பேரும், வாய்ப்பாட்டில் 16 பேரும், இசைக்கருவிகள் பயிற்சியில் 35 பேரும் இங்குப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட செல்வி ஜாயிஸ் எங்கல்பெர்ட் என்பவர் இங்குக் கர்நாடக இசை, நடனம் ஆகிய கலைகளில் பயிற்சி பெற்று வருகிறார்.

''கர்நாடக இசையும், பரத நாட்டியமும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. அக்கலைகளில் நான் நல்ல தேர்ச்சி பெறுவேன். அவற்றின் பெருமையை மற்றவர்களுக்கும் சொல்லுவேன்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் இவர்.

இந்நிறுவனத்தின் சார்பில் மக்களோடு தொடர்பு கொள்ளும் நோக்கோடு மலையாளத் திரைப்படமொன்றும் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடியிருக்கிறது. படத்தின் பெயர்: 'காற்று விதைச்சவன்'. வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற கருத்தை எடுத்துக்காட்டும் வகையில் இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு படமும் தயாரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளில் 'தொடர்பு' என்னும் திங்கள் இதழையும் இது நடத்தி வருகின்றது. 'நான் பெற்ற இன்பம்' என்ற நாட்டிய நாடகத்தையும் இந்நிலையத்தினர் பன்முறை நடத்திப் பாராட்டுதல்கள் பெற்றுள்ளனர்.

இவையன்றிப் பல்வேறு இடங்களில் 'நற்பணி இயக்கம்' என்ற அமைப்புகள் இந்நிலையத்தின் சார்பில் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் 120 கிளைகளும், கேரளாவில் 50 கிளைகளும் உள்ளன. இந்த இயக்கத்தின் சார்பில் பல்வேறு சமுதாயப்பணிகள் செவ்வனே நடக்கின்றன. நூலகம், இரவுப் பள்ளிகள், கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் முதலியன அவ்வப்போது நடத்தப் பெறுகின்றன.

அண்மையில் சென்னை டாக்டர் அம்பேத்கார் நகர் நற்பணி இயக்கம் சார்பில், தொழு நோயாளர்கள் மறுவாழ்வுக்காக ஒரு இன்னிசை நிகழ்ச்சி நடந்ததை இங்குக் குறிப்பிட வேண்டும். சென்னையிலுள்ள பள்ளிகள், பொது மன்றங்கள், திருச்சபைகள் ஆகிய இடங்களில் கல்வி சம்பந்தமான திரைப்படங்களும் இந்நிலையத்தின் சார்பில் காட்டப்படுகின்றன.

இவ்வாறு கலைப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் கிறித்தவக் கலைத் தொடர்பு நிலையத்தின் பணிகள் மேலும் வளர்ந்திட ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் இதன் இயக்குநர் திரு எஸ். சுவிசேஷமுத்து அவர்கள் பாராட்டுக்குரியவர்.

—பி.வி.ஜி.





வீணை வகுப்பு



பாடல் பயிற்சி

# தமிழக உழவர்களுக்கு ஒரு புதிய பரிசு

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களைக் காட்டிலும், நம் மாநிலத்தில்தான் சராசரி ஏக்கர் அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளது! உயர் விளைச்சல் நெல் ரகங்கள் அதிக பரப்பளவில் தீவிரமாக சாகுபடி செய்யப்பட்டு வருவதாலேயே, தமிழ்நாட்டில் சராசரி ஏக்கர் அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளதுடன், ஆண்டிற்கு ஆண்டு அதிகமாகி வருகிறது! 1965-ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தமிழ்நாட்டில் உயர் விளைச்சல் நெல் ரகங்களைச் சாகுபடி செய்ய தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. முதன் முதலாக சீன நாட்டு 'டெய்ச்சுங் நேட்டிவ்' என்ற இரகம் தருவிக்கப்பட்டது. அதே ஆண்டில், தமிழக ஆராய்ச்சியாளர்களால் 'ஆடுதுறை-27' என்ற நெல் இரகம் கண்டுபிடிக்கப்பட்டு, பெரும் பரப்பில் பயிரிடுவதற்காக வெளியிடப்பெற்றது. பிறகு, பிலிப்பைன்ஸ் தேசத்திலிருந்து 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர் 5', 'ஐ.ஆர். 20', 'ஐ.ஆர். 22' 'ஐ.ஆர். 24' என்ற உயர் விளைச்சல் ரகங்கள் வரவழைக்கப்பட்டுத் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டன. இவற்றுள் விளைச்சலுக்கு ஐ.ஆர். 8 இரகமே மிகவும் சிறந்ததெனக் கருதப்படுகிறது. அத்துடன், கோவை நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியான 'கோ. 33', 'கோ. 34', 'கோ. 35' என்ற புது இரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு முறையே 'கருணை', 'காஞ்சி', 'காவேரி' என்ற சிறப்புப் பெயருடன் வெளியிடப்பட்டன. அவைகளைத் தமிழக உழவர் பெருமக்கள் விரும்பிப் பயிரிட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் புதிதாகப் புகுத்தப்பட்ட நெல் இரகங்களில் 'பொன்னி', 'ஜெயா', 'பத்மா', 'கண்ணகி' 'திருவேணி' ஆகியவை உழவர் பெருமக்களிடையே புகழ் பெற்று விளங்குகின்றன. ஆனால், இந்த இரகங்கள் எல்லாம் எல்லாப் பருவங்களுக்கும், பகுதிகளுக்கும் மற்றும் நீர் வளங்களுக்கும் ஏற்றவை அல்ல. எனவே, பல பருவங்களுக்கும், பல பகுதிகளுக்கும் ஏற்ற நெல் இரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது.

சென்ற ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 'பவானி' என்ற நெல் இரகத்தைப் பொங்கல் பரிசாக




வெளியிட்டது. இது குறைந்த உரத்திலும்கூட அதிக விளைச்சல் தரக்கூடியது! ஆண்டு முழுவதும் எல்லாப் பருவங்களிலும் இதைப் பயிரிடலாம்! ஆகவே உழவர் பெருமக்கள் இதைப் பெரிதும் விரும்பிப் பயிர் செய்கிறார்கள்.

அடுத்து வரும் ஆண்டுகளில் நம் நாட்டில் உரத் தட்டுப்பாடு அதிகரிக்குமாகையால் குறைந்த உரத்துடன் அதிக மகசூல் கொடுக்கும் 'பவானி' நெல் ரகம் மேலும், பெரும் பரப்பில் பரவும் என்பதில் ஐயமில்லை!

'பவானி' இரகத்திற்கு அடுத்து வெளியிடப்பட்ட 'கோ. 36', என்ற புது இரகம், அதிக மகசூல் கொடுக்கும் திறன் பெற்றுள்ளது. ஆனால், இது சம்பாப்பட்டத்தில் மட்டும்தான் பயிரிடப்படுவதற்கு ஏற்றதென கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அண்மையில் தமிழக உழவர் பெருமக்களுக்கு ஒரு புதிய பரிசாக 'வைகை' என்ற புதிய நெல் இரகத்தை வழங்கியுள்ளது.



'வைகை' என்ற பெயருடன் வெளியிடப்பட்டிருக்கும் 'கோ. 37' நெல் ரகம்', 'டெய்ச்சுங் நேட்டிங்-1' என்ற ரகத்தை, 'கோ. 29' நெல்லுடன் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும்.

**வைகையின் சிறப்புகள்**

1. 'காஞ்சி' நெல் இரகத்தைப் போன்று 'வைகை' நெல் இரகம், 115 முதல் 120 நாட்களுக்குள் அறுவடைக்கு வருகிறது.

2. 'வைகை' நெற்பயிர் சுமார் 90 சென்டிமீட்டர் அல்லது சுமார் 3 அடி உயரம் வளரக்கூடியது.

3. அரிசியும் 'காஞ்சி' ரகத்தை விடச் சற்றுச் சன்னமானது.

4. குறைந்த எரு விட்டாலும், நடுத்தர அளவில் எரு விட்டாலும் 'காஞ்சி' நெல் இரகத்தை விடச் சுமார் 15 முதல் 19 சதவிகிதம் அதிக விளைச்சல் கொடுக்கக் கூடியது.

5. 'வைகை' நெல் இரகம் குலை நோய், 'பேக்டீரியல் பிளைட் நோய்', இலைத் தத்துப் பூச்சி ஆகியவைகளால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

6. ஒரு ஏக்கருக்கு 'வைகை' நெல் சுமார் 2.25 டன் விளைச்சல் தருகிறது.



'வைகை' நெல் இரகம் கோவை, சேலம், மதுரை, தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் கார், சொர்ணவாரி, குறுகிய கால சம்பா, நவரை முதலிய பட்டங்களில் பயிரிடுவதற்கு ஏற்றதெனப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ரகம் சூரிய ஒளி வீசும் காலத்திற்கு ஏற்ப மாறுபாடு அடையாததாக இருப்பதால் (Insensitive to photoperiod) முக்கியமாக வைகை ஆற்றுப் பாசன நிலங்களில் ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு, 'வைகை' மிகவும் ஏற்ற இரகமாகும்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இந்த ரகத்தைப் பயிரிட்டுப் பார்த்ததில், இந்த ரகம் பல பருவங்களுக்கும், கால நிலைகளுக்கும் (சீதோஷ்ணங்களுக்கும்), மண், நீர் வளங்களுக்கும் ஏற்றது என்பது தெரிய வந்தது. ஆகையால் தமிழ் நாட்டிலும் இதைப் பரவலாகப் பயிரிடுவதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. குறைந்தது சுமார் 3·5 இலட்சம் ஏக்கரில் இந்த இரகத்தைத் தமிழ்நாட்டில் பயிரிடலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிரிட்டால், இதன் மூலம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் டன் நெல்லை அதிகமாக உற்பத்தி செய்யலாம்.

'காஞ்சி' நெல் இரகத்தை விட 'வைகை' இரகம் ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 250 முதல் ரூபாய் 300 வரை அதிக இலாபம் கொடுக்கக் கூடியது!

வைகை நெல் இரகத்திற்கு நோய், பூச்சித்தடுப்பு மருந்துக்காக அதிகச் செலவு செய்ய வேண்டியதில்லை!

எனவே, பிற மாநிலங்களின் பசிப்பிணி தீர்த்திட அரிசி அனுப்பிடும் நிலைமைக்குத் தமிழகத்தினை உயர்த்திய தமிழக உழவர் பெருமக்களுக்கு ஒரு புதிய பரிசாக 'வைகை' நெல் இரகத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது! இந்த உயர் இரக நெல்லைப் பரிசாக ஏற்றுப் பயிரிடுவதனால் தமிழக, உழவர் பெருமக்கள் பெரும் இலாபமடைவதுடன், நாட்டின் உணவு உற்பத்தியையும் ஓரளவு அதிகரிக்க இயலுமென உறுதி கூறலாம்.

ஆதாரம் :

வேளாண்மைப் பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.

தகவல் :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.

தமிழ்நாடு பல துறைகளில் முன்னணியில் இருந்து வருவதைப் பார்க்கிறோம். இப்போது என். சி. சி. யிலும் இணையற்ற அணியாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி என். சி. சி. அணிக்கு மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து அனைத்திந்திய 'இன்டர்—டைரக்டரேட்' விருது அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான விழா சனவரி 27-ஆம் நாள் புது தில்லியில் நடந்தது.

பதினான்கு போட்டிகளில் தமிழ்நாடு அணிக்கு ஆறில் முதலிடமும், பலவற்றில் இரண்டாவது இடமும் பெற்று, இந்தியாவிலேயே சிறந்த அணி என்ற சிறப்பை அடைந்துள்ளது.

தமிழ்நாடு அணிக்குக் கோயம்புத்தூர் நிர்மலா கல்லூரியைச் சேர்ந்த 'சீனியர் அண்டர் ஆபீசர்' பிரேமா காமத் என்னும் மாணவி தலைமை வகித்தார். இவருக்கு சீனியர் டிவிஷனில் சிறந்த பெண் கேடட் என்ற விருது வழங்கப்பட்டது. ஜூனியர் டிவிஷனில் சிறந்த ஆண் கேடட் என்ற விருது கோயம்புத்தூர் ஸ்டேன்ஸ் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த சார்ஜண்ட் ரமேஷ் நாயக் என்ற மாணவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி அணிக்கு அனைத்திந்திய விருது முதல் முறையாக 1962-ல் அளிக்கப்பட்டது. தொடர்ந்து 1968ல் இந்த விருது தமிழ்நாடு அணிக்கு மீண்டும் அளிக்கப்பட்டது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்!





# பயிருக்கு ஊறுதரும் பறவைகளைக் கண்காணிப்போம்

வண்ணப் பறவைகள் கண்களுக்கு விருந்து. அவற்றின் அழகு மனத்திற்கு, அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. மனித இனத்திற்கும், பறவைகளுக்கும் இடையில் உள்ள உறவு கால வரம்புக்கு அப்பாற் பட்டது. பழங்காலந் தொட்டு அவை நமது வேளாண்மை செழிக்கப் பல வகையிலும் உதவியாக இருந்திருக்கின்றன. பயிர்களில் மகரந்தச் சேர்க்கை உண்டாவதற்கும், விதைகள் பரவுவதற்கும் பெருந் துணையாக உள்ளன. அதே சமயம், வேளாண்மையில் பல பறவைகளால் கேடுகளும் அதிகம் ஏற்பட்டு வருகின்றன. பயிருக்கு நோய்கள், பூச்சிகள், களைகள் ஆகியவற்றால் ஏற்படும் கேடுகளைப் போலவே, பறவைகளாலும் ஏற்படும் போது, நாம் பறவைகள் அழகானவை என்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

அண்மைக் காலமாகப் பழத் தோட்டங்களில் பறவைகளால் ஏற்படும் இழப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது. உலகில் பல பகுதிகளில் இப்பிரச்சினை கட்டுக்கடங்காமல் பெருகியுள்ளது. ஒரு சில பகுதிகளில் பறவைகளைக் கட்டுப் படுத்த வேண்டும் என்றோ, பயிரிடுவதையே நிறுத்தி விட வேண்டும் என்றோ எண்ணுகின்ற சூழ்நிலையை பறவைகள் ஏற்படுத்தி வருகின்றன.

நமது வேளாண்மை முறைகள், பறவைகளின் பழக்க வழக்கங்களையே மாற்றிவிட்டன. காட்டுச் செடி, கொடிகளுக்கிடையே காணக்கூடிய சிறு புழு, பூச்சிகளைத் தின்று வந்த பறவைகள் இன்று நமது பயிர்களையும், பழங்களையும் பெரும்பாலும் உணவாகக் கொள்ள ஆரம்பித்துவிட்டன. மித வெப்ப மண்டலப் பகுதிகளில் கொய்யா, மா, திராட்சை, எலுமிச்சை, நாரத்தை ஆகிய பழங்களுக்குப் பறவைகளால் ஏற்படும் சேதம் கணக்கிலடங்காது. மேற் சொன்ன பயிர்களில் பறவைகள் விளைவித்த சேதம் அண்மைக் காலம் வரை பெரிதாக இல்லாதிருக்கலாம். பறவைகளைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கை தேவையற்றதாகக் கருதப்பட்டது. அண்மையில் இமாசலப் பிரதேசத்தில், தௌலத்குவானில் உள்ள மித வெப்ப மண்டல பழ ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப் பெற்ற கணக்கெடுப்பில், எலுமிச்சை, நாரத்தை வகைகளுக்குப் பறவைகளால் ஏற்படும் சேதம் மிகப் பெரிதாயிருப்பது கண்டறியப்பட்டது.

ஆரஞ்சு, கிச்சிலி பழ வகைகளுக்குப் பறவைகளால், ஏற்படும் நாசத்தை 1968-ஆம் ஆண்டு முதல் இந் நிலையத்தில் கணக்கிட ஆரம்பித்தார்கள். கண்காணிப்பதற்கென உயரமான இடத்தில் நிறுவப்பட்ட ஒரு கண்காணிப்பு நிலையத்திலிருந்து பழத் தோட்டத்திற்கு அடிக்கடி வரும் பறவை இனங்களையும் அவைகள் அதிகமாக வரும் காலத்தையும் பதிவு செய்தனர். அந்தக் கணக்கெடுப்பில்தான், பறவைகளைக் கட்டுப் படுத்தாவிடில் தோட்டங்களுக்கு ஏற்படும் சேதம் நாட்டிற்குப் பேரிழப்பை உண்டாக்குமென்று திட்டவட்டமாகத் தெரிய வந்தது.

## பறவைகளைக் கட்டுப்படுத்தும் முறைகள்

இந்தியாவில் பழங்கள், காய்கறிகள், மற்றும் பல வகைப் பயிர்கள் பெரிய அளவில் பாதிக்கப் பட்டுங்கூட அதைத் தடுப்பதில் முழுக் கவனமும் செலுத்தப்படவில்லை. நமக்கு பறவைகளிடம் உள்ள ஈடுபாட்டின் காரணமாகவும், இரக்கத்தின் காரணமாகவும் பறவைத் தடுப்பு நடவடிக்கைகளில் நாம் பெரிதும் ஈடுபடுவதில்லை. ஆனால் ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் பறவைத் தடுப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு நன்மை அடைந்து வருகிறார்கள்.

பறவைகளைக்கட்டுப்படுத்த பல வழிகள் இருக்கின்றன. இரசாயன மருந்துகள், கொல்லி மருந்துகள், பறவைகளை விரட்ட ஒலி எழுப்பும் கருவிகள், பறவைகளை அஞ்ச வைக்கும் கருவிகள், பறவை எச்சரிக்கைக் கருவிகள், சுடுதல், வலைகள் முதலிய பல வழிகளைக் கையாண்டு பறவைகளைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

## பறவைகளை விரட்டும் கருவிகள்

குறிப்பிட்ட இடைவெளி விட்டு ஒலி எழுப்பிப் பறவைகளை அச்சுறுத்தி விரட்டும் தானியங்கி பீரங்கிகள் உள்ளன. இப் பீரங்கிகளை வயலைச் சுற்றி நிறுவினால் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு முறை அவை தாமே இயங்கிக் கொண்டிருக்கும். இதில் கால்சியம் கார்பைடு அல்லது அசெட்டிலின் வாயுவை மருந்தாகப் பயன் படுத்துகிறார்கள். இம்மாதிரிப் பல வகையான பீரங்கிகள் நமது நாட்டில் தயாரிக்கிறார்கள். இதிலிருந்து வெளியாகும் ஒலியைச் சிறிதாகவும், பெரியதாகவும் தேவைக்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்ள முடியும். பாதுகாக்க வேண்டிய இடத்தின் பரப்பளவுக்குத் தகுந்தாற்போல் கூட்டியோ, குறைத்தோ வைத்துக் கொள்ளலாம்.

பழத்தோட்டங்களில் பறவைகளை வெருட்டி விரட்ட வேறு ஒரு பயனுள்ள வழியும் இருக்கிறது. தகர டப்பாக்களில் உடைந்த கண்ணாடித் துண்டுகளைப் போட்டு மரக் கிளைகளின் மேலே கட்டித் தொங்க விட வேண்டும். மின்சார மோட்டார்களையோ அல்லது வேறு வழிகளைக் கொண்டோ, குறிப்பிட்ட நேரத்திற்கொரு முறை அக் கிளைகளை ஆடுமாறு செய்ய வேண்டும். இதனால் குறிப்பிட்ட இடை வெளிக்கொரு முறை ஒலி எழுந்து கொண்டேயிருக்கும். பறவைகளை விரட்ட இதுவும் ஒரு சிறந்த வழியாகும்.

பறவைகள் கூட்டமாக வரும் போது தகர டின்களைத் தட்டி ஒலியெழுப்பிப் பறவைகளை விரட்டுவதுதான் இந்தியாவில் பழக்கத்தில் இருந்து வருகிற வழியாகும். ஆனால் இதில் பலன் மிகக் குறைவாகத்தான் இருக்கும். நாளடைவில் இந்த ஒலி பறவைகளுக்குப் பழக்கமாகிப் போய்விடுவதால் அதன் பின் அவை பயப்படுவதில்லை.



## இரசாயன மருந்துகள்

அமினோபைரிடைன், பினைல், மித்தேல் கார்பமேட் போன்ற இரசாயன மருந்துகள் பறவைகளை விரட்ட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும்வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம் மருந்துகள் பறவைகளுடைய நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் தன்மையுடையவை. இம் மருந்துகளால் பாதிக்கப்பட்ட பறவைகள் தடுமாறியவாறு பறந்து கொண்டே ஓலக் குரல் எழுப்பி மற்றப் பறவைகளை எச்சரிக்கும். இதனால் மற்றப் பறவைகள் இப் பகுதிகளை நெருங்க மாட்டா. இம் முறை மக்காச் சோளம், தானியப் பயிர்கள் முதலானவற்றில் நல்ல பயனை ஏற்படுத்திய போதிலும் பழத் தோட்டங்களில் இதன் பயனை இனிமேல்தான் ஆய்ந்து பார்க்கவேண்டும்.

பறவைகளை விரட்டுவதற்குப் பதில் அவைகளையே கொன்று விடக் கூடிய சில இரசாயன மருந்துகளும் கையாளப்படுகின்றன.

## வலைகள், கூடுகள், பொறிகள்

கண்ணி வைத்துப் பிடித்தல், வலைகள், கூடுகள் மூலம் பிடித்தல் முதலிய வழி முறைகளும் பறவைகள் விஷயத்தில் கையாளப்படுகின்றன. இதற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பல விதமான சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நமது நாட்டின் தேவைக்கு ஏற்ற வலைகளையும், கூடுகளையும், பொறிகளையும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

## பறவைகளைச் சுடுதலும், அழித்தலும்

சில பறவைகளையே உணவாகக் கொள்ளும் பருந்து, கழுகு, வல்லூறுபோன்றவற்றின் பெருக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் சில பறவைகளின் தொல்லைகளைக் குறைக்க முடியும். ஆனால் இப் பறவைகள் யாருக்கும் தீங்கு செய்யாத சில பறவைகளையும், நன்மை விளைவிக்கும் சிறு பறவைகளையும் கூடக் கொன்று விடக்கூடும். பறவைகளைச் சுடுதல், பறவைக் கூட்டைக் கலைத்தல் போன்றவை ஓரளவு பயன் தரக் கூடிய வழிகளாகும். இருந்த போதிலும் இவை மனிதத்தன்மைக்கும் அற நெறிக்கும் ஒவ்வாத வழிகளாக இந்தியாவில் கருதப்படுகின்றன. இந்த முறையில் செலவும், சிரமமும் அதிகம். இரக்கச் சித்தம் உள்ள மாந்தர்க்கு இது இயலாது.

## ஒலியெழுப்புதல்

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் பறவைகளை ஆராய்ந்து அவை உணர்வுக்கும், அபாயம்நேரும் போதும், இன உறவுகளுக்கும், கூடும் பல்வேறு சமயங்களில் எழுப்பும் சங்கேதஒலிகளைஆராய்ந்து அவற்றை ஒலிப்பதிவு செய்துள்ளார்கள். பறவைகளுக்கு இடையூறு உண்டாகும் சமயத்தில் அவை எழுப்பும் அபாய ஒலிக் குறியைச் செயற்கை முறையில் ஒலிபரப்பியதும், மற்றப் பறவைகள் அங்கிருந்து ஓடிவிடும். ஆனால் பறவைகளின் இனத்திற்கு இனம், இந்த ஒலி மாறுபடுகிறது. மேலும் ஓர் இனப் பறவைகளின் எச்சரிக்கை ஒலிக்கு, மற்ற இனப் பறவைகள் செவி சாய்ப்பது இல்லை.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இம்மாதிரிப் பறவைகளை ஆராய்ந்து அவற்றின் சங்கேத ஒலிகளைப் பதிவு செய்துள்ளார்கள். ஆனால் இந்தியப் பறவைகளைப் பற்றி இவ்வித ஆராய்ச்சிகள் இதுவரை நடத்தப்படவில்லை. தற்பொழுது தௌலத்குவானில் உள்ள மித வெப்பமண்டலப்பழ ஆராய்ச்சி நிலையத்தில் அங்கு அடிக்கடி வரும் பறவைகளை ஆராய்ந்து அவை எழுப்பும் எச்சரிக்கை ஒலிகளையும் பதிவு செய்து வருகின்றார்கள். சங்கேத ஒலிக் குறிப்பின் வாயிலாக இந்தியாவில் பறவைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது ஒரு முன்னோடியாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.





பறவைகள் நம் உணவுப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காமல் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் நாமும் ஈடுபட வேண்டிய அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மேலை நாட்டுப் பறவைகள் கட்டுப்பாட்டு முறைகளில் இந்தியச் சூழ்நிலைகளுக்கும், இந்திய மக்கள் மனப்பாங்குக்கும்ஏற்றவைகளை நாமும் பின்பற்றலாம். நம் நாட்டில் பண்டு தொட்டுக் கடைப்பிடிக்கப் பட்டு வரும் முறைகளில் நவீன முறைகளையும் இணைத்துக் கையாளலாம். பறவைகள் நம் உணவுப் பொருள்களுக்கு விளைவிக்கும் சேதத்தை உணர்ந்து அவைகளைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவது அவசியம் என்பதைப் புறக்கணித்துவிடக் கூடாது.



# செங்கற்பட்டு மாவட்டத்திலேயே சிறந்த ஊர்நல உதவியாளர்

ஊர், வளமும் நலமும் கொழிக்கப் பல்வேறு துறைகளில் பயனுள்ள பணிகளை ஆற்றி வருவது, ஊராட்சி ஒன்றியங்கள் என்று நமக்குத் தெரியும்.

ஊராட்சி ஒன்றியம் என்றதும் நமக்கு நினைவு வருபவர்களில் ஊர் நல உதவியாளரும் (கிராம சேவக்) ஒருவர். கிராம நலத்துக்குத் தொண்டாற்றுவதே இவரது முக்கிய வேலை -கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு நல்வழி காட்டுவது இவரது தலையாய பணியாகும்.

சிறிதும் சளைக்காமல்-சலிப்பில்லாமல் எடுத்த காரியத்தை முடிக்கும் திறனும், உழைத்திட அஞ்சாத பொதுநல ஆர்வமும் இருந்தால் எவரும் ஏற்றம் பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்திட வேண்டும்.

இவ்வாறு திகழும் ஊர் நல உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசுகளை வழங்கி, அவர்கள் பணி மேலும் வளர்ந்திட—சிறந்திட பாராட்டி மகிழ்கிறது தமிழக அரசு.

மாவட்டந்தோறும் சிறந்த கிராமங்களையும், ஊர் நல உதவியாளர்களையும் தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துப் பரிசும் பாராட்டும் வழங்கிச் சிறப்பிக்கின்றது. அந்த வகையில் 1971-72-ல் செங்கற்பட்டு மாவட்டத்திலேயே சிறந்த ஊர் நல உதவியாளராகத் திரு. ஜி. தேவராசன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இவர் வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் ஊர் நல உதவியாளராகக் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துள்ள இவர், முதலில் பேருந்தில் நடத்துனராகப் (கண்டக்டர்) பணிபுரிந்திருக்கிறார். பிறகு உத்திரமேரூரிலும், அச்சரப்பாக்கத்திலும் ஊர் நல உதவியாளராகப் பணி புரிந்தார். இவர் பிறந்த ஊர் காஞ்சிபுரம்.

35 வயது இளைஞரான இவருக்கு விவசாயத்திலும் ஈடுபாடு உண்டு. வாலாசாபாத்திலுள்ள கோவிந்தவாடி தொகுதியில் இவர் பணியாற்றுகிறார். இத்தொகுதி 7 ஊராட்சிகளைக் கொண்டது.

இத்தொகுதி மக்களுக்கு வேளாண்மைக்குத் தேவையான பல்வேறு உதவிகளை இவர் செய்து வருகிறார்; அவ்வப்போது உழவர்களுக்குப் பல ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.

அமோக விளைச்சல் தரக்கூடிய புதிய புதிய விதை நெல்களை அறிமுகப்படுத்துதல்; நவீன முறையில் விவசாயம் செய்து அமோக விளைச்சலுக்கு உதவுதல்; பயிர்ப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள்; இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல்; பயிருக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள், அதாவது தழைச்சத்து, தானியச் சத்து, சாம்பல் சத்து இவைகளை அடி உரமாக உபயோகப் படுத்த அறிவுறுத்தல்; பயறு, பருப்பு வகைகள், சூரியகாந்தி போன்றவை கலப்பு பயிர்களாகச் செய்யப் பரிந்துரை செய்தல் போன்ற பணிகளை இவர் தளராமல் மிக்க ஆர்வமுடன் செய்திருக்கிறார்—செய்து வருகிறார்.

இவையன்றி உயர் விளைச்சல் தரக்கூடிய எச்.பி. 3, 4 கம்பு வகைகளை அறிமுகப்படுத்துதல், அதிக முட்டைகள் இடும் வெள்ளை இனக் கோழிகளை வழங்குதல், அதிகப் பால் தரக்கூடிய பசு இனங்களை விருத்தி செய்தல் போன்ற பணிகளுக்கு இவர் தக்க உதவிகள் செய்து வருகிறார்.

குடும்ப நலம், சிறுசேமிப்பு, கால்நடைகள் நோய்த்தடுப்பு, நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பண்ணைக் கழிவுப் பொருள்களைக் கம்போஸ்ட் உரமாகத் தயாரித்தல் போன்றவற்றுக்கு இவர் உழவர்களின் தோழனாக விளங்குகிறார்.

இப்படிச் சிறிதும் சோம்பலின்றி உழைத்து ஊருக்கு நற்பணியாற்றுவதில் சிறந்து விளங்கிய தன்மைக்காக இவர் ரூ. 100 பரிசும், பாராட்டுதல்களும் பெற்றுள்ளார்.

தன்னம்பிக்கையும், தளரா ஊக்கமும், உழைப்பும் இருந்திட்டால் வாழ்க்கையில் மேலும் மேலும் முன்னேறலாம்; இதற்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்வது நம் ஒவ்வொருவர் கடமையன்றோ?

—பி.வி.ஜி.





பதிவு எண். M. 8676


பொங்கலோ பொங்கல்!

தமிழ்நாடு பரிசுச் சீட்டு
வாரி வழங்கிடும் பொங்கல் விருந்தினை
அருந்திக் களித்திட
அனைவரும் வாரீர்!



இதுவரை கண்டிராத
ஏராளப் பரிசுகள்.
உயர்வான தொகை பெற
உங்கள் நல்வாய்ப்பு இன்றே!

மொத்தப்
பரிசுத் தொகை ரூ. 31,00,000
(எட்டு வரிசைகளில்)

மொத்தப் பரிசுகள்:
12,450

சிறப்பு பரிசுகள்
முதல் பரிசு ரூ. 5,00,000
இரண்டாவது பரிசு ரூ. 2,00,000
இதைத் தவிர ஒவ்வொரு வரிசைக்கும்
முதல் பரிசு ரூ. 1,00,000

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்
வரவோ பல லட்ச ரூபாய்

மாபெரும் பொங்கல் சிறப்பு
குலுக்கல் நாள்:
26-2-1974



கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






## சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்


அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.


# புத்தம் புதிய முறையில் தமிழகத்து முத்து உற்பத்தி

உலகப் பேரழகி 'கிளியோபாட்ரா' தமிழகத்து முத்துக்களைச் சாரயத்தில் போட்டுக் குடித்தாள் என்று வரலாறு கூறுகின்றது. தமிழகத்தின் முத்துக்கள் உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று பழந் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதிலிருந்து தமிழகத்தின் முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை என்பது புலனாகின்றது. எனவே, உலகப் புகழ்பெற்ற தமிழக முத்துக்களின் விலையை அதிகப் படுத்துவதற்கு விஞ்ஞான அடிப்படையில் புதிய தொழில் நுணுக்க முறைகளைக் கண்டறிவதற்கான ஒருங்கிணைப்பு ஆராய்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசும், மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலையமும் கூட்டாகச் சேர்ந்து நடத்தும்.

இந்தியாவில் மன்னார் வளைகுடாவில் தொன்று தொட்டு முத்துக் குளிப்பு நடந்து வருகிறது. ஆனால் சமீப காலமாக இங்கு நல்ல முத்துக்கள் கிடைப்பது நிலையற்றதாக இருந்து வருகிறது. அதனால் நம்பிக்கையோடு முத்துக்குளிப்பு நடத்த முடியவில்லை. எனவே, விஞ்ஞான அடிப்படையில் சில புதிய தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு முததுக்களை விளைவிப்பது பற்றி மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலையம், சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டது.

இதுபோன்ற முயற்சியை மேற்கொண்ட ஜப்பான் நாடு, முத்து விளைவிப்புத் துறையில் இன்று மிக முன்னணியில் நிற்கின்றது!

மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலையம் தூத்துக்குடிக் கடலில் நடத்திய பரிசோதனைகளிலிருந்து இக்கடற் பகுதிகளில் நல்ல பளபளப்புள்ள உருண்டையான உயர்ந்த ரக முத்துக்களை உண்டாக்க முடியும் என்று தெரிய வந்திருக்கிறது. தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் கடல்நீர் வெதுவெதுப்பாக இருப்பதால், மன்னார் வளைகுடாப் பகுதியில் நூதன முறையில் உண்டாக்கப்பெறும் முத்துக்களின் வளர்ச்சி வேகம் - ஜப்பான் நாட்டை ஒப்பிட்டு நோக்க - மிக அதிகமாக இருப்பதாக மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய வல்லுநர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

முத்துச் சிப்பி வளர்ப்பை எப்படி இலாபகரமாக நடத்த முடியும் என்பது பற்றியும், இரத்தினங்களோடு சேர்க்கத் தகுதியற்ற சாதாரண தரமுடைய முத்துக்களையும், முத்துக்குளிப்பில் அடைகின்ற இதர சில துணைப் பொருள்களையும் வேறு எந்தெந்த வகைகளில் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் கண்டறிய முன்னோடித் திட்டம் ஒன்றை நடத்துவதற்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது!

முத்து விளைவிப்புத் தொழிலுக்குப் பல்வேறு துறைகளிலும் எதிர்காலத்தில் தேவைப்படும் தொழில் நுணுக்க நிபுணர்களை உண்டாக்கிக் கொடுப்பதற்கென்று ஒரு பயிற்சித் திட்டத்தையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நடத்த மு வு செய்துள்ளது.

இத்திட்டத்தினால் விரைவில் தமிழகத்தின் முத்துக்கள், தரணியெங்கும் புகழ் பெறும் என்பது திண்ணம்!





மலர் 4 1—3—1974 இதழ் 17


உள்ளே


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | முதல்வர் கலைஞர் உரை | 2 |
| 2 | நீலகிரி மாவட்டச் செய்தி விளம்பர முனைப்பு இயக்க விழா | 9 |
| 3 | பாலை (கவிதை) | 12 |
| 4 | தொண்டும் தொழிலும் (மகளிர் பகுதி) | 15 |
| 5 | ஈடில்லாக் கலை வளர்க்கும் இயலிசை நாடக மன்றம் | 19 |
| 6 | ஒருமைப்பாடு கண்ட உத்தமர் | 25 |
| 7 | தலைநகரில் சிறந்த கலையரங்கம் | 31 |
| 8 | நடுவு நிலைமை | 35 |
| 9 | வெண்பாப் போட்டி | 41 |
| 10 | வாழும் முறைக்கு | 46 |
| 11 | காணிநிலம் வேண்டும் | 49 |
| 12 | கேளுங்கள் கொடுக்கப்படும் | 53 |


மற்றும் பல பகுதிகள்.

# தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுக்குத் தமிழக அரசு ஆற்றிடும் பணிகள்...

தமிழக அரசு இந்த மாநிலத்திலே வாழ்கிற அடித்தளத்து மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, ஏழை எளிய மக்களுக்காக நடைமுறைப்படுத்தி வருகிற பல்வேறு திட்டங்களின் வரிசையில் அரிசன நல வீட்டு வளர்ச்சிக் கழகத் திட்டமும் புதிதாக இடம் பெறுகிறது.

உத்தமர் காந்தியடிகள் எந்தச் சமுதாயம் உயரவேண்டுமென்று சொன்னாரோ, டாக்டர் அம்பேத்கார் எந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபட்டார்களோ அந்தச் சமுதாயத்திற்கான தேவைகளை நறைமுறைப்படுத்துகிற காரியங்களை அவர்கள் வழி நின்று இந்த அரசு இன்றைக்கு நிறைவேற்றி வருகிறது என்பதற்குரிய எடுத்துக்காட்டுகளில் ஒன்றுதான் இந்த நிகழ்ச்சி.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்து வருகிற காரியங்களையொட்டி அவர்களுடைய நீண்ட நாள் தேவையாக இருக்கிற வீட்டு வசதியை அவர்களுக்கு அளிக்கிற காரியத்தைப் பலர் எண்ணினார்கள்; பலர் சொன்னார்கள்; பலர் செய்யத் தொடங்கினார்கள்; என்றாலும் அது தீவிரப்படுத்தப்பட முடியாமல் திணறிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் முழுப் பயனையும் விரிவாக அடைகின்ற நிலையை எய்திடவில்லை.

ஆகவேதான் கழக அரசு அந்தப் பயன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரைவில் கிடைக்க வேண்டுமென்கிற ஆசையின் காரணமாக ஆர்வத்தோடு ஒரு ''வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்'' ஒன்றை நிறுவி அதன் சார்பிலே, தனியாக இந்தப் பணியைச் செய்யலாம் என்று முடிவு எடுத்து அவர்களுடைய பொறுப்பிலே இந்தக் காரியம் விடப்பட்டிருக்கிறது. அரிசன நலத் துறை அமைச்சர் இந்தக்காரியத்தைச் செவ்வனே நடத்துவதற்கான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் இந்தக் கழகத்திற்கு வழங்கி, மிக விரைவில் எதிர்பார்க்கின்றவெற்றியை ஈட்டித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குத் திண்ணமாக உண்டு.

சென்ற ஆண்டு, சட்டப் பேரவையிலே நான் முன் வைத்த வரவு செலவுத் திட்டத்தில் இந்த வீட்டு வசதி வாரியம் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இதை அமைப்பதற்கான தொகையை, வீடு கட்டுவதற்கான பணத்தை, வங்கிகள் மூலம் பெறலாம் என்று யோசிக்கப்பட்டு வங்கிகளை நாடி, கிடைக்கும் என்று எதிர்பார்த்து, இறுதியாக 'அது கிடைக்கிறபோது கிடைக்கட்டும்' என்றும், அதற்குள் அதை நாம் தொடங்கிவிடுவோம் என்ற முடிவை மேற்கொண்டு, இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாயும் அடுத்த ஆண்டுக்கு ஒதுக்குகின்ற பணத்தைப் பற்றிப் பிறகு முடிவு செய்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டு, முதலில் இந்த ஆண்டு இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவது என்கிற இறுதி முடிவை எடுத்து இந்த அமைப்பை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

தரங்கம்பாடிப் பகுதியிலே பொறையார் வட்டத்தில் 43 அரிசன இல்லங்களைக் கட்டுகின்ற தொடக்க விழா இன்று நடைபெறுகிறது. ஏற்கெனவே ஏறத்தாழ அரிசனங்களுக்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டு அவர்கள் தாங்களாகவே கட்டிக் கொண்டது போக மீதம் வீடு கட்டுகிற மனைகள் 80 ஆயிரத்துக்கு மேல் இருக்கின்றன. முதற் கட்டமாக அந்த 80 ஆயிரம் வீடு கட்டுகிற மனைகளிலும் இந்த அரசின் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக வீடுகளைக் கட்டித் தருவது என்று அரசு திட்டமிட்டு இருக்கிறது. இந்த வளர்ச்சிக் கழகம் ஏற்கெனவே அரிசன நலத்துறையின் மூலமாக அரிசன மக்களின் நலன்கள் கவனிக்கப்படுகிறதைத் தவிர அரிசன மக்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டித் தருவதில் தனிக் கவனம் செலுத்தும்.

ஏழை, எளிய மக்களுக்காக நிலப்பட்டா, வீட்டு மனைப் பட்டா ஆகியவைகளை இந்த ஆட்சிக் காலத்தில் பல இலட்சம் பேருக்கு வழங்கி இருக்கிறோம். அப்படி வழங்கப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற வகையில் பலன் பெற்றவர்கள் 2 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் என்று முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இதில், தஞ்சை மாவட்டத்திலே மாத்திரம்—நான் குறிப்பிட்ட பட்டா வழங்குகிற பட்டியலிலே வருகிறவர்கள் போகக் குடியிருப்பு மனைகள் தங்களுக்குச் சொந்தமாகாமல் ஒரு இலட்சத்து 57 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

அவர்களில் 50 அல்லது 55 ஆயிரம் பேர்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். மீதமுள்ள ஒரு இலட்சத்துச் சொச்சம் விவசாயத் தொழிலாளர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் குடியிருப்பு சொந்தமாக வேண்டும். எந்த நேரத்திலும் அவர்களை வெளியேற்றி விடலாம் என்ற இந்த அவலநிலை போக்கப்பட வேண்டும்.

இதற்கு ஒரு சட்டம் தேவை என்று சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு பெரிய போராட்டம் தேவைப்படுவதைப் போலவும் அந்தப் போராட்டத்திற்கு இரத கஜ துரக பதாதிகள் எல்லாம் தேவை என்பது போலவும் அந்தப்போராட்டம் 18 நாள் போராட்டமாக இருக்குமா, 18 மாதப் போராட்டமாக இருக்குமா, 18 ஆண்டுப் போராட்டமாக இருக்குமா, இராம—இராவண யுத்தமா, தேவ—அசுரர் போரா என்று எல்லாம்பலரும் கருதிக் கொண்டிருந்த நேரத்தில் 'இதற்கு வேலும் வாளும் தேவையில்லை; பீரங்கிகள் தேவையில்லை; கப்பற் படையும் தரைப்படையும் தேவையில்லை; ஒரு துளி மையும் ஒரு தாளும் இருந்தால் போதும்



## முதல்வர் கலைஞர்

## அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டும் சாதனைகள்!





அதைச் சட்டமாக்க' என்று, இன்று அதைச் சட்டமாக ஆக்கி, ஒரு இலட்சத்து 55 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற மனை அவர்களுக்கே சொந்தம், அவர்களை வெளியேற்ற முடியாது என்ற நிலைமையை உருவாக்கியிருப்பது தி.மு.க. அரசு.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற காலனிகள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 20 ஆயிரம் காலனிகள் இருக்கின்றன. அதில் அவர்களுடைய தெருக்களுக்கு மின் விளக்குகள் 1933-ஆம் ஆண்டு—தமிழ்நாட்டிற்கு மின்சாரம் வந்த ஆண்டில் இருந்து—1967—காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலம் வரை ஏறத்தாழ 33 ஆண்டுகளில் மொத்தமுள்ள 20 ஆயிரம் அரிசனக் காலனிகளில் மின் விளக்குகள் போடப்பட்ட காலனிகள் 4 ஆயிரந்தான்.

இந்த ஆறாண்டுக்காலக் கழக ஆட்சியில் மீதமுள்ள காலனிகள் அத்தனையும் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் மொத்தம் 20 ஆயிரம் அரிசன காலனிகளுக்கும் விளக்குகள் போடப்பட்டு முடிந்துவிடும் என்ற நிலைமையில் நாம் மின் விளக்கு வசதியை அளித்திருக்கிறோம். அந்த 20 ஆயிரம் காலனிகளில் எரிகிற விளக்குகட்கு ஆகிற மின்சாரக் கட்டணத்தை, அதாவது கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாயை ஆங்காங்கு இருக்கிற பஞ்சாயத்துகள், முனிசிபாலிடிகள் கட்டத் தேவையில்லை என்றும், அரிசனக் காலனிகளில் எரிகிற தெரு விளக்குகளுக்கு ஆகிற மின் கட்டணத்தை அரசாங்கமே அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் தந்து விடும் என்றும் நாம் இன்றைக்குத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு நடைபெறுகிற தேர்வில் நல்ல பயிற்சி பெற்று அரிசன மாணவர்கள் தேர்வு அடைய வேண்டும். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு, பின்தள்ளப்பட்டு இருக்கிற மாணவர்கள் படிப்பிலே அதிகக் கவனத்தைச் செலுத்துவதற்கான நேரம் இல்லாத சமுதாயச் சூழ்நிலையில் உள்ள காரணத்தால் அவர்கள் வேகமாக முன்னேற முடியவில்லை. அவர்களுடைய அறிவு குறைவானதல்ல; அவர்களுடைய மூளை மந்தமானதல்ல; ஆனாலும் அறிவையும், மூளையையும் கூர் ஆக்கிக் கொள்ளச் சமுதாயச் சூழ்நிலை அவர்களுக்கு இடம் தரவில்லை. ஆகவே, அரசு அலுவலர்கள் தேர்வில் நிரம்ப மதிப்பெண்களை அவர்கள் எடுத்து மற்றவர்களையெல்லாம் தாண்டிக் கொண்டு முன் செல்ல முடியாத இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது என்று அரசு கருதி அவர்களுக்கு அதற்கான பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பது என்று தி.மு.க. அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

1971—72-ஆம் ஆண்டு அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்கள் 20 இடங்களில் உருவாக்கப்பட்டன. இன்று அவை 30 இடங்களாக விரிவடைந்திருக்கின்றன. அந்த 30 இடங்களிலும் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு 45 ரூபாய் வீதம் உதவிப் பணம் வழங்குகிறோம். இந்தப் பயிற்சி நிலையங்களின் மூலம் பயன் பெறுகிறவர்களுடைய தொகை 1,500.

சாதி ஒழிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது; அதற்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்க வேண்டுமென்று அண்ணா சொன்னார். அதற்கு ஒரு திட்டத்தையும் அறிமுகப்படுத்தினார். அதாவது கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகிற தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும்; அவர்களுக்குத் தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வழங்கப்படும் என்ற திட்டத்தை அரிசன நலத்துறை அமைச்சர் அம்மையார் அவர்களையும் கலந்துகொண்டு அறிமுகப்படுத்தினார். அப்படிப்பட்ட திட்டத்தின்படி இதுவரையிலே 168 மணமக்களுக்கு அந்தத் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது.





நான் தொடக்கத்தில் கூறியதைப்போல் அவர்களுக்கான கல்விச் சலுகை, உத்தியோகச் சலுகை, பொருளாதார உயர்வு ஆகியவைகளை மாத்திரம் கவனித்தால் போதாது; சமுதாயச் சூழ்நிலையிலும் அவர்கள் "நாமும் மனிதர்! மண் அன்று!" என்கிற அந்த உணர்வு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாக வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயங்களில் அறங்காவலர்களாக இருக்கலாம், இல்லாமலும் போகலாம் என்றிருந்த முறையை மாற்றிக் கழக அரசு அந்த ஆலயத்திலே அறங்காவலர்களில் ஒருவர் கட்டாயமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டுமென்று சட்டம் செய்திருக்கிறது.

சென்னையிலே இருக்கிற உயர்நீதி மன்றம் உருவாகி 100 ஆண்டுகள் ஆகிறது. இந்த நூற்றாண்டுக் காலத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இதுவரையிலும் உட்காரவில்லை. கழக அரசு நடக்கிற இந்தக் காலத்திலேதான் ஒரு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் சென்னை உயர்நீதி மன்றத்திலே ஐகோர்ட் ஜட்ஜ் ஆக உட்காருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆலயங்களில்கூட அருகதை உள்ளவர்கள் எல்லாம், தகுதி படைத்தவர்கள் எல்லாம், அர்ச்சனை மந்திரங்களைக்கற்றுத் தேர்ந்தோர்கள் எல்லாம் ஆண்டவனைப் பூசிக்கத் தகுதி படைத்தவர்கள்தான் என்று இந்தியாவிலே எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டுகிற வகையில் தமிழ்நாடு அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அது சுப்ரீம் கோர்ட்டால் முடமாக்கப்பட்டுள்ளது.

செயலற்ற நிலையில் அந்தச் சட்டம் இன்று தவித்துக்கொண்டிருக்கிறது. ஆகமங்கள், விதிகள் என்று எல்லாம் ஆராயப்பட்டு அந்தச் சட்டத்தை எழுந்து நடமாட முடியாமல் செய்து விட்டிருக்கிறார்கள். நான் நீதிபதிகளைக் குறை கூறவில்லை. அரசியல் அமைப்பு அப்படியிருக்கிற காரணத்தால் அந்த அடிப்படையில் வழங்கிய தீர்ப்பு அது. அதனால்தான் நான் அலகாபாத்திற்குச் சென்றபோது ஒரு வேண்டுகோளை மத்திய அமைச்சரிடம் விடுத்தேன். இப்படி ஒரு சட்டம் முடமாகிக் கிடக்கிறதே, அதற்குக் காரணம் தனிப்பட்ட யாருமல்ல, அரசியல் சட்டத்தில் அதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறதே ஆகவே தாழ்த்தப்பட்டோர் நலனில் அக்கறையுள்ள மத்திய அரசு உடனடியாக அரசியல் சட்டத்தைத் திருத்த, இந்தச் சட்டம் உயிர் பெற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

நான் கேட்டுக் கொண்ட பிறகு அலகாபாத்திலே இப்போது தேர்தல் நடைபெறுவதாகக் கேள்வி. அதற்காகத்தான் பெரிய காரியங்கள் எல்லாம் நடைபெறுவதாகப் பத்திரிகைச் செய்தி; அதற்காகத்தான் சுற்றுலாக்கள் எல்லாம் நடைபெறுவதாகப் பத்திரிகைகளில் விளம்பரம். ஆனால் நாம் எழுப்பிய பிரச்சினை—எழுப்பியவன் சாதாரணமானவன்; எழுப்பிய பிரச்சினை - சாமானிய மக்களுக்கான பிரச்சினை, சாமானியப்பட்டவர்களுக்காக எழுப்பப்பட்ட பிரச்சினை. இன்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏழை சொல்



137

அம்பலம் ஏருது என்பார்கள். ஆனால் ஏழைகள் அம்பலம் ஏறியிருக்கிற காலம் இது. ஆகவே என்றைக்காவது ஒருநாள் அந்தச் சொல், செயலாகும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் உண்டு.

முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதைப்போல் தாழ்த்தப்பட்ட மக்களை வெறும் வாய்ச் சொல்லால் மகிழ வைக்க முடியாது. உங்களைப்போல் உண்டா' உங்களால் அல்லவா இந்த உலகம்? உங்களுடைய உழைப்பு அல்லவா? உங்களுடைய வியர்வை அல்லவா? என்றெல்லாம் கூறித் தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. அவர்கள், சொல்வது இருக்கட்டும்; என்ன செய்தாய்? என்று கேட்கத் தலைப்பட்டு விட்ட காலம் இது- அதை மறந்துவிடக் கூடாது. சொல்கிறவர்கள் செய்து காட்ட வேண்டும். அதற்கு மன வளம் வேண்டும். அந்த மன வளத்தைப் பெறுகிற விளைவு வேண்டும். நான் இறுமாப்போடு சொல்வதாகக் கருதக்கூடாது. சொன்னதைச் செய்தும் காட்ட வேண்டும் என்பதற்காகதான்-சாதி ஒழிய வேண்டுமென்று சொன்னால் போதாது என்று-உண்மையில் செய்ய வேண்டும் என்பதற்காக என்னுடைய மகனுக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பெண் எடுத்தேன். அந்த அடிப்படையிலேதான் சொல்லுகிறேன். இதையெல்லாம் சொல்லக் காரணம் வெறும் வார்த்தை அலங்காரங்கள், தாழ்த்தப்பட்ட மக்களை ஈடேற்றி விடாது என்பதற்காகத்தான்! இப்படிச் சொல்லுகிற நேரத்தில் இதற்காகக் கிடைக்கிற எதிர்ப்புகள் எவ்வளவு என்பது எனக்குத் தெரியும்! அந்த எதிர்ப்புகள் எங்கெங்கே இருந்து வருகின்றன என்பதும் எனக்குப் புரியும். ஆனால் நானே அல்லது இந்த அமைச்சரவையோ அவைகளைப் பற்றி நிச்சயமாகக் கவலைப்படவில்லை. நாம் சொன்ன பல புரட்சிகரமான கருத்துக்களை வானொலி ஒலிபெருக்கி இங்கே எடுத்துக் கொண்டாலும் அது மாலையிலே ஒலிபரப்பாது. அதுவும் எனக்குத் தெரியும்.

**இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வரும் இளைஞர்களின் எண்ணிக்கை 1970-ல் 82,328லிருந்து 1973-ல் 1,29,000 ஆக உயர்ந்துள்ளது.**
**இது மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 31.5 சதவீதம். இது 1972-ஆம் ஆண்டைவிட 18.2 சதவீதம் அதிகமாகும்.**

அதைப்பற்றி நான் கவலைப்படாதவன். நாங்கள் பத்திரிகைகளை நம்பியோ அல்லது அகில இந்தியச் செய்திகளை மாத்திரம் பரப்புவதாகத் தமிழ்நாட்டைத் தவிர மற்றச் செய்திகளைப் பரப்புகிற வானொலியை நம்பியோ இந்த அரசாங்கம் இல்லை. நாம் 5000 ரூபாய் கொடுத்தால் 500 ரூபாய் கொடுத்தோம் என்று போடுகிற பத்திரிகைக்காரர்கள் இருக்கிருர்கள். மற்றவர்கள் 50 ரூபாய் கொடுத்தால் 500 ரூபாய் கொடுத்தார் என்று போடுகிற பத்திரிகைக்காரர்களும் இருக்கிருர்கள். ஒரு செய்தியை மறுத்த பிறகும் அப்படித்தான் நடந்தது என்று மறுநாளும் திட்டமிட்டு முதல் பக்கத்திலேயே புளுகுகிற பத்திரிகைக்காரர்களும் இருக்கிருர்கள். நாங்கள் அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. இந்த நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு ஒன்றுதான் எங்கள் குறிக்கோள். அதற்காக நாங்கள் பாடுபடுகிற நேரத்தில் எங்களை அழிக்க வந்தாலும் தாக்கினாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இந்த அழிவு இன்றைக்கு இருக்கும், ஆனால் இதனால் எழுகின்ற புகை இருக்கிறதே அதை எவராலும் அழிக்க முடியாது என்ற அந்த உணர்வோடுதான் நாங்கள் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகளில் ஒரு கூறுதான் இந்த வாரியம்.

[18—2—1974-ல் பொறையாரில் தமிழ்நாடு அரிசன நல வீட்டு வளர்ச்சிக் கழகத்தைத் துவக்கி வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]






# புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

**பரம்பிக்குளம் - ஆழியாறு நீர் மின் திட்டம்.**

கேரள அரசின் உடன்பாட்டோடும் ஒத்துழைப்போடும் உருவாக்கப்பட்ட திட்டமே, பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டமாகும். இது ஒரு பலநோக்கு (Multi - purpose) திட்டமாகும். ஆனைமலையில் உள்ள நீராறு, சோலையாறு பரம்பிக்குளம், துன்னக்கடவு, பெருவாரிப்பள்ளம், தேக்கடி என்ற ஆறு, ஆறுகளையும் கீழே உள்ள ஆழியாறு, பாலாறு என்ற இரண்டு ஆறுகளின் நீரினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். நீர்த்தேக்கங்களை அமைத்து, சுரங்கக் குழாய்கள் மூலம் அவற்றை ஒன்றோடொன்று இணைத்து மின் உற்பத்தி செய்யவும், நீர்பாசனத்திற்கும் நீரினைப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் உள்ள நான்கு மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவனத்திறன். 185 மெகாவாட்டுகளாகும்.

சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்—1×30 மெகாவாட்

சோலையாறு மின் உற்பத்தி நிலையம்—2×35 மெகாவாட்

சோலையாறு மின் உற்பத்தி நிலையம்—1×25 மெகாவாட்

ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்—1×60 மெகாவாட்

1961-ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1966-ல் சர்க்கார்பதியும், 1970-ல் ஆழியாறும் 1971-ல் சோலையாறு I, சோலையாறு II-ம் செயல்படத் தொடங்கின. இந்த மின் உற்பத்தித் திட்டத்தினால் தமிழ்நாடு மின் இணைப்புக்கு நிலையாக 79,000 கிலோ வோல்ட் மின்சாரம் கிடைக்கிறது. பரம்பிக்குளம்-ஆழியாறு மின் உற்பத்தித் திட்டத்திற்கான செலவு ரூ. 27 கோடியாகும்.

**குந்தா மின் உற்பத்தித் திட்டம் (மின் உற்பத்தி நிலையங்கள் III, IV)**

**குந்தா மின் உற்பத்தி நிலையம்.**

பவானி ஆற்றின் வடிகாலாக உள்ள புலிக்கரைப் பள்ளம் பள்ளத்தாக்கில் குந்தா மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 86,000 குதிரைத் திறன் கொண்ட இரண்டு டர்பைன்கள் மின் உற்பத்திக் கருவியுடன் சேர்க்கப்பட்டு, 60,000 கிலோ வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற வகையில் அமைந்துள்ளது. குந்தா நான்காவது நிலை விரிவாக்கப் பணியின் கீழ் இதே போன்ற மூன்றுவது யூனிட் ஒன்றினை நிறுவ முன்பே வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. நான்காவது நிலை விரிவாக்கப் பணிகள் நிறைவு பெறும்பொழுது, இந்த மின் உற்பத்தி நிலையமானது 180 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்டதாக இருக்கும். 486·3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கிறது. இப்பொழுதுள்ள இரண்டு யூனிட்கள் (மின் நிலையம் I, II)-1965-ல் செயல்படத் தொடங்கினவாகும். மூன்றுவது யூனிட் 1976-ல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**குந்தா மின் உற்பத்தி நிலையம் IV.**

பில்லூருக்கு அருகில் பவானி ஆற்றின் இடது கரையில் பில்லூர் அணையின் அடிவாரத்தில்



ஆளுநர் அவர்கள், மத்திய மாநில அரசுகளின் செய்தித் துறைகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இத் தீவிர இயக்கத்தைப் பெரிதும் பாராட்டினார். குறிப்பாக படக்காட்சிகள், வானொலி, டெலிவிஷன், நாடகம் போன்றவைகளின் மூலமாகப் பாமர மக்களுக்கு அரசாங்கம் செய்துள்ள நன்மைகளையும் மற்றும் நாட்டில் நிலவிவரும் நிலைமைகளையும் விளக்க வழி வகை செய்யும் என்று குறிப்பிட்டார்.

ஒரு மாத காலம் நடைபெறவிருக்கும் இத் தீவிர இயக்க விழாவையும், இதையொட்டி உதகை ஊராட்சி ஒன்றிய அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கண்காட்சியையும் ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை ஏற்றார்கள். மத்திய அரசின் சார்பில் சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு. கோபால் அவர்களும் மாநில அரசின் சார்பில் செய்தித் துறையின் துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன் அவர்களும் விழாவில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்கள்.

எல்லா மாநிலங்களிலும் மத்திய மாநில விளம்பர



இணைப்புக் குழுவின் தலைவர்களாக அந்தந்த மாநிலத்தின் செய்தித் துறையின் அமைச்சர்களும், துணைத் தலைவர்களாக அந்தந்த அரசுகளின் தலைமைச் செயலாளர்களும் பணியாற்றி வருகின்றார்கள். இக் குழுவில் மத்திய அரசின் விளம்பரப் பிரிவுகளின் பல்வேறு தலைவர்களும் மாநில அரசின் முக்கியத் துறை செயலாளர்களும் உறுப்பினர்களாகவும், மாநிலத்தில் செய்தித்துறை இயக்குநர் அமைப்பாளராகவும் பொறுப் பேற்றுள்ளனர். இக் குழுவின் சார்பில் நீலகிரி மாவட்ட செய்தி விளம்பரத் தீவிர இயக்க விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வியக்கம் நடைபெறும் ஒரு மாத காலத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் திரைப்படக் காட்சிகளும், நாடகம், இசை நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள் ஆகியவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் திரைப்பட அரங்குகள் குறிப்பிட்ட இடங்களில்தான் இருப்பதால் அந்த மாவட்டத்தில் பெருவாரியாக உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், நீலகிரி மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களும் படக்காட்சியைக் காணும் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அண்மையில் குன்னூரில் உள்ள உப்பாஸி நிறுவனத்தார் எடுத்த கணக்கெடுப்பின்படி தோட்டத் தொழிலாளிகளில் 20 சதவீதம் பெண் தொழிலாளிகள் இதுவரையில் திரைப்படமே பார்த்ததில்லை என்பதைக் காட்டுகிறது. ஆகவே, இக் குறையை நீக்குவதற்காக 16 மி.மீ. திரைப்படக்கருவிகளின் மூலம் எல்லாக் கிராமங்களிலும் படக்காட்சியை நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீவிர இயக்கம், கூடலூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சனவரி 24 முதல் 30-ஆம் நாள் வரையிலும், குன்னூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சனவரி 30 முதல் பிப்ரவரி 6-ஆம் நாள் வரையிலும், குன்னூர் நகராட்சி எல்லையில் பிப்ரவரி 6 முதல் 8-ஆம் நாள் வரையிலும், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பிப்ரவரி 9 முதல் 15-ஆம் நாள் வரையிலும், உதகை ஊராட்சி ஒன்றிய எல்லைப் பகுதிகளில் பிப்ரவரி 16 முதல் 23-ஆம் நாள் வரையிலும் உதகை நகராட்சி எல்லையில் பிப்ரவரி 24, 25-ஆம் தேதிகளிலும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையின்கீழ் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் நகராட்சி மன்ற ஆணையாளர்களும் இத் தீவிர இயக்கத்தை நடத்தி வருகிறார்கள்.

இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் பத்திரிகைகள், வானொலி ஆகிய சாதனங்கள் சென்று மக்களுக்குப் பயனளிக்காத கிராமங்களிலும், நாட்டு மக்களுக்கு நாம் விடுதலை பெற்ற 25 ஆண்டுகளில் அரசாங்கம் செய்துள்ள நன்மைகளையும், குறிப்பாக பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை எவ்வாறு மக்கள் பயன்படுத்த வேண்டுமென்ற தீவிரமான பிரச்சாரங்கள் மூலமும், படக்காட்சிகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, இசை நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலமாக மக்களுக்குப் புரியவைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே தமிழகத்தில் நீலகிரி மாவட்டம் தீவிர இயக்கத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.



இவ்வியக்கம்வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்புத்தந்த சென்னை வானொலி நிலைய இயக்குநர், மத்திய கண்காட்சி அலுவலர், மத்திய அரசின் வட்டார கள விளம்பர அலுவலர், மாநில குடும்ப நலத் துறை இயக்குநர், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். நீலகிரி மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, பிற்படுத்தப்பட்ட தருமபுரி மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.





குந்தா மின் உற்பத்தி நிலையம் IV அமைக்கப்பட்டுள்ளது. இம் மின் நிலையம் அமைந்துள்ள இடம் கோவை மாவட்டம் காரமடையிலிருந்து 28 மைல் தொலைவில் உள்ளது.

மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியே தள்ளப்படும் நீரானது பவானி ஆற்றின் குறுக்கே 288 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள பில்லூர் அணையில் தடுத்து தேக்கப்படுகிறது. நீராலிப்பள்ளம் கால்வாயுடன் கலக்கப்பட்டு, 18 அடி விட்டம் உள்ள அணையில் பொருத்தப்பட்டு இரண்டு பென்ஸ்டாக் குழாய்கள் மூலமாக நீரானது எடுத்துச் செல்லப்படுகிறது. இதில் ஒரு பென்ஸ்டாக் குழாயானது செங்குத்தான பிரான்ஸில் டைப் மின் உற்பத்திக் கருவியாகப் பயன்படுகிறது. இந்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியில் தள்ளப்படும் நீரானது பவானி ஆற்றோடு நேரடியாகச் சென்று விழுகிறது. குந்தா நான்காவது நிலைத் திட்டத்தின் கீழ், இந்த மின் நிலையத்தில் இதே மாதிரியிலான இன்னுமொரு யூனிட் ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. நான்காவது நிலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது செயல்பட்டுவரும் யூனிட்டானது 1966-ல் செயல்படத் தொடங்கியது. நான்காவது நிலை விரிவாக்கப் பணியின் கீழ் உருவாக்கப்படும் கூடுதல் மின் உற்பத்தி யூனிட்டானது 1976-ல் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது செயலில் உள்ள மின் உற்பத்தி யூனிட்டிலிருந்து ஓராண்டுக்கு 157.86 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கிறது.

**நெல்லித்துறை நீர் மின் திட்டம் :**

குந்தா, பவானி ஆறுகள் அவற்றை ஒட்டிய கல்லுமைத்துரைப் பள்ளம் வாய்க்காலிலிருந்து கிடைக்கும் 54,050 மில்லியன் கியூபிக் அடி நீரினைப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதாவது: கல்லுமுடைப்பள்ளம் வாய்க்கால் நீருடன், பில்லூர் அணையில் உள்ள குந்தா மின் உற்பத்தி நிலையம் IV-ல் ஓடி விழும் நீரினை (Tail race water) பயன்படுத்தி மின்சாரம் தயாரித்தலாகும். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்டத்தில் நெல்லித்துறையில் இம் மின் உற்பத்தி நிலையம் அமைய உள்ளது.

சிறப்பாக, பாசனமில்லாத காலத்தில் இம்மின் நிலையமானது ஒரு மின் சேமிப்பு நிலையமாக இயக்கப்படும். குந்தா மின் நிலையம் என்ன அமைப்பில் இயங்குமோ, அதே மாதிரியான முறையில் இந்த நிலையமும் இயங்கும். 50 மெகவாட் நிறுவனத் திறன் கொண்டதாக இம்மின் நிலையம் அமையும். ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்திய அரசிடமிருந்து இதற்கான 'பச்சைக் கொடி' எதிர்பார்க்கப்படுகிறது. 1978-ல் செயல்படும் வகையில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.



நாட்டில் தற்போது 29 ராணுவப் பண்ணைகள் உள்ளன.

இப் பண்ணைகளில் மொத்தம் 16 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன.

முதலாவது ராணுவப் பால்பண்ணை 1890-ஆம் ஆண்டில் அலகாபாதில் ஏற்படுத்தப்பட்டது.

1972–73 ஆம் ஆண்டில் இப்பண்ணைகள் மொத்தம் சுமார் 1 கோடியே 80 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, 1 கோடியே –72 லட்சம் ரூபாய் லாபம் அடைந்தன.

1973–74 ஆம் ஆண்டில், ராணுவப் பண்ணைகள் 2 கோடி லிட்டருக்கும் அதிகமான அளவுக்கு பால் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.



232 காரட் (46.4 கிராம்) எடையுள்ள வைரக் கல் ஒன்று அண்மையில் சோவியத் நாட்டிலுள்ள யாகுதியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுத்தமான படிகமாக உள்ள இது சோவியத் ஒன்றியத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைரக் கற்களிலேயே மிகப் பெரியதாகும்.

**காடம்பாறை நீரேற்று மின் சேமிப்பு-உற்பத்தித் திட்டம்**
**(Kadamparai Pumped Storage Scheme)**

கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தில் ஆனைமலை பகுதியில் இந்த மின் நிலையம் அமையும். இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 22.7 கோடி. திட்டத்தின் மொத்த நிறுவன திறனளவு 400 மெகாவாட்டுகள். ஒவ்வொன்றும் 100 மெகாவாட்டுகள் திறனளவு கொண்ட நான்கு யூனிட்டுகள் அமையும்.

மின் நிலையம் நிலத்திற்கடியில் அமையும். மேலே உள்ள காடம்பாறை நீர்த்தேக்கம் கீழே உள்ள ஆழியாறு நீர்த்தேக்கம் ஆகிய இரண்டு நீர்த்தேக்கங்களுக்கிடையே மின் உற்பத்தி நிலையம் அமையும்.

மேலே உள்ள காடம்பாறை நீர்த்தேக்கத்திலுள்ள நீரினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இரவு நேரங்களில் பாசனத் தொடர்புடைய மின் நிலையங்களிலிருந்து உபரியாகக் கிடைக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தி, கீழே உள்ள ஆழியாறு நீர்த்தேக்கத்திலிருந்து மேலே உள்ள காடம்பாறை நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏற்றப்படுகிறது. அதே டர்பைன் கருவியே குழாயாகப் பயன்படுத்தப்படும். மாநிலம் பூராவும் பாசனத் தொடர்புடைய நிலையங்களிலிருந்து உபரியாகக் கிடைக்கும் மின்சாரத்தினை சேமித்து வைக்கும் இடமாக (Power Bank) இந்நிலையம் இருக்கும். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய மின்சாரம் ஆண்டொன்றுக்கு 3512 மிலியன் யூனிட்டுகள்! 100 மெகாவாட் திறனுள்ள முதல் பிரிவு '77-78-ல் செயல்படத் தொடங்கும்.

இந்தியாவிலேயே இந்த வகையில் இதுதான் முதலாவதாக அமைய இருக்கும் திட்டமாகும்.

—வ. ச.



# நீலகிரி மாவட்ட செய்தி விளம்பர முனைப்பு இயக்க விழா



வெ. நாமதேவன்

இந்தியாவிலேயே முதன் முதலாக நம் மாநிலத்திலுள்ள நீலகிரி மாவட்டத்தில் செய்தி விளம்பர தீவிர இயக்கம் மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத் துறையின் கீழ் தமிழகத்தில் இயங்கி வரும் பல்வேறு விளம்பரப் பிரிவுகளின் ஒத்துழைப்புடன் தமிழக அரசின் செய்தி மக்கள்-தொடர்புத் துறையின் மேற்பார்வையின்கீழ் இத்தீவிர இயக்க விழா கடந்த சனவரித் திங்கள் 23-ஆம் நாள் உதகையில் உள்ள அண்ணா கலை அரங்கத்தில் நம் மாநில ஆளுநர் கே. கே. ஷா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



இவ் விழாவினைத் தொடங்கி வைத்து உரையாற்றிய நமது

# பாலை





சுனையிருக்கும் நீரில்லா நிலையில்; அந்தோ
    சுட்டெரிக்கும் பாலைவெயில் சுழல வைக்கும்!
'பிணை'யிருக்கும் ஆண்மானின் நிழலில்; பாவம்
    'பிடி'யிருக்கும்; ஆண்யானை அருகி ருக்கும்!
மனையிருக்கும் காதலியை எண்ணி ஏங்கி
    மனங்கலங்கும் காதலரின் நடையி ருக்கும்!
முனையிருக்கும் வழிகிடக்கும் பருக்கைக் கல்லில்
    முயற்கொம்பாய்ச் செழிப்பிருக்கும் பாலை அம்மா!

பரிவோடே இலக்கியத்தில் புலவ ரெல்லாம்
    பாடியது பெரும்பாலும் பாலை யைத்தான்!
பிரிவென்றால் இழிவென்றே எண்ண வேண்டாம்
    பெருங்கடுங்கோ பாடியதே பிரிவி னைத்தான்!
பிரிவென்ற வானத்தில் ஏக்கம் என்னும்
    பிறைதோன்றிக் காதலியின் நுதலைக் காட்டும்!
அறிவோடு சிந்தித்தால் தெரியும்; அன்பின்
    ஆழத்தைப் பிரிவொன்றே துலங்கக் காட்டும்!

அணியிருந்தும் என்னபயன் அழகில் லாமல்
    அகமிருந்தும் என்னபயன் புறமில் லாமல்
மணியிருந்தும் என்னபயன் ஒலியில் லாமல்.
    மங்கையிருந்(து) என்னபயன் கற்பில் லாமல்
துணிவிருந்தும் என்னபயன் தெளிவில் லாமல
    துடுப்பிருந்தும் என்னபயன் படகில் லாமல்
பணிவிருந்தும் என்னபயன் பண்பில் லாமல்
    'பாலை'யிருந்(து) என்னபயன் பிரிவில் லாமல்!

ஓதலென்று சொல்லுகின்ற பிரிவும் ஒன்றும்;
    உடல்வலிமை அடல்மறவர் முழங்கிச் சென்று
சாதலுக்கும் அஞ்சாது களத்தைக் கண்டு
    சமர்செய்யப் பிரிகின்ற பிரிவும் உண்டாம்;
ஈதலுக்குப் பொருள்தேடச் செல்வான் காளை
    இணைப்பறவை இதயத்தில் பாய்ச்சும் வாளை!
காதலியைப் பிரிவதனால் கடமை ஓங்கும்
    காட்சியினைக் காட்டுவதே 'பாலை' யாகும்!

சோலையில்லை; இசைபாடக் குயிலும் இல்லை;
    'சுகம்'இல்லை; யாழ்மீட்ட வண்டும் இல்லை;
சாலையில்லை; இருமருங்கும் நிழலும் இல்லை
    சாய்ந்தாடும் மலரில்லை; மணமும் இல்லை
காலையிலே கூவுகின்ற சேவல் இல்லை
    கவலைஇல்லை; கண்ணுக்குக் குளுமை இல்லை
பாலையெனும் பசுமையிலாப் பாழ்நி லத்தைப்
    பாட்டினிலே யான்வடிக்கப் பயமும் இல்லை!

நஞ்சனைய காமுகனின் கையிற் சிக்கி
    நடுங்குகின்ற இளம்பெண்ணின் இதயம் போல
வஞ்சிக்கும் முதலாளி செயலைக் கண்டு
    வருந்துகின்ற பாட்டாளி நெஞ்சம் போலக்
கஞ்சிக்கும் வழியில்லா நிலையை எண்ணிக்
    கலங்குகின்ற ஏழைமனங் கொதித்தல் போல
எஞ்சாது கொதிக்கின்ற பாலை; நாளும்
    எரிநெருப்புக் கனல்கின்ற கொல்லன் சாலை!

படிக்காத அறிவிலியின் கூர்மை போலப்
    பருக்கைக்கல் பரப்பெல்லாம் கூர்மை தோன்றும்
அடியெடுத்து வைப்பாரின் காலைக் குத்தும்
    அறிவில்லாக் கூர்மையினால் பயன்தான் என்ன?
துடிக்கின்ற தமிழ்இளைஞர் தூய நெஞ்சம்
    துரோகியரின் சதிச்செயலைக் கண்டு நாணி
வெடிப்பதைப் போல் பாலைநிலம் வெடித்தி ருக்கும்!
    வெடிப்பிற்குள் வெங்கதிரோன் துடிப்பி ருக்கும்!!

பொடிமணலைப் பொன்னாக்கி மகிழும் வெய்யோன்
    பொழுதெல்லாம் காய்வதனால் மரங்கள் எல்லாம்
அடியிருந்து முடிவரைக்கும் தசையே இல்லா
    அசல் எலும்புக் கூடாகத் தோற்றம் நல்கும்!
மடியேந்திச் சென்றாலும் செல்லாக் காசும்
    மானமில்லான் கொடுங்கரமும் கொடுக்கா தன்றோ?
அடிநோவ 'நிழல்' பிச்சைக்(கு) அலைந்திட் டாலும்
    அக்கஞ்சன் நிலை, பாலை நிலையே யாகும்!

கவிஞர் மணிவேந்தன்



உங்களுக்கென
ஒரு சொந்த
# வீடு

"வீடு பெற நில்!" என்ற பழமொழி மோட்சம் பெறுவதற்கான நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். லோகாயத வாழ்விலும், உணவு, உடை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக முக்கிய இடம் பெறுவது 'உறையுள்'—அதாவது வீடு—ஆகும்.

வீடு கட்டுவது என்பது விளையாட்டு விவகாரமல்ல. அதற்குப் பணம் தேவை. தேவையான பணத்தை எந்தக் காலத்தில் சேமிப்பது என மலைக்க வேண்டாம். "சொந்தத்தில் ஒரு வீடு" என்ற கனவை நனவாக்க, அநேக பாலிசிதாரர்களுக்கு ஆயுள் இன்சூரன்சு உதவியிருக்கிறது. எல்.ஐ.சி யின் "உங்களுக்கென ஒரு சொந்த வீடு" **(OWN YOUR HOME)** திட்டம் பற்றிய விவரங்களறிய இன்றே உங்களருகிலுள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தை நாடுங்கள்.

**ஆயுள் இன்சூரன்சு போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை.**

EP LIC-10.73


# தொண்டும் தொழிலும்



பூவையர்க்கேற்ற பூவேலை கற்பிக்கிறார்

**பொ**துவாக ஒரு நாடோ, ஓர் ஊரோ, ஒரு பகுதியோ செழுமையும் செழிப்பும் அடைவது அங்கு வளரும் தொழில்களைப் பொறுத்தே யாகும். தொழில் வளர்ச்சி இல்லையென்றால், அப்பகுதி என்றென்றும் பின்தங்கிய பகுதியாகவே விளங்கும். அதுமட்டுமல்ல- தொழில்களில் ஈடுபட்டோர் பிறருக்குப் பாரமில்லாமல் - தலைநிமிர்ந்த வாழ்வு வாழமுடியும். சமுதாயத்தில் ஒரு நல்ல தகுதியையும் பெறமுடியும். இதையுணர்ந்தே ஆங்காங்கு தொழிற்சாலைகளும், தொழிற்பேட்டைகளும் உருவாக்கப்படுகின்றன. இவ்வகையில், தொழில் வளர் பேட்டைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக அம்பத்தூர் விளங்குகிறது.

தொழில் வளம் பெருகிய-பெருகுகின்ற பகுதிகளில் தொழிலாளர்கள் பெருவாரியாகக் காணப்படுவது இயல்பானதாகும். பெருகி வருகின்ற தொழிலாளர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண-அவர் தம் வீட்டில் ஒளியேற்ற-தொழிலாளர் நலம் பேணுகின்ற தமிழ்நாடு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவ்வகையில் தொழிலாளர் குடும்பத்திற்கு உதவத் 'தொழிலாளர் நல நிலையம்' ஒன்று சென்னை அம்பத்தூரில் அமைக்கப்பெற்றுள்ளது. அது தொழிலாளர் நலனில் முழு அக்கறையும் நல்லார்வமும் காட்டி வருகின்றது.

தொழிலாளர் நலத்துறை அளிக்கின்ற நிதி உதவியினைப் பெற்றுக் கொண்டு மகளிர் நலத்துறை, தொழிலாளர் நல நிலையங்களை அமைத்துச் சிறந்த முறையில் நடத்திக் கொண்டு வருகிறது. முதலில் சென்னை, அம்பத்தூர், மதுரை, கோவை ஆகிய இடங்களில் இந்நிலையங்கள் அமைக்கப்பெற்றுச் செயலாற்றத் தொடங்கின. பின்னர் 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் சென்னை நகரை அடுத்துள்ள செம்பியத்தில் ஒரு நிலையம் ஏற்படுத்தப்பெற்றது. தற்பொழுது தமிழகத்தில் மொத்தம் நான்கு நிலையங்கள் செயல்படுகின்றன. பொதுவாக இந்த நிலையங்கள் தொழில் வளம் மிகுந்துள்ள பகுதிகளில்தான் அமைக்கப் பெற்றுள்ளன.

அம்பத்தூரில் அமைந்துள்ள தொழிலாளர் நல நிலையம் 1972-ஆம் ஆண்டு சூன் திங்களில் துவக்கப் பெற்றது. மகளிர் நலத் துறையின் நிருவாகத்தின்கீழ் இயங்கிவரும் இந்நிலையம் பகல்நேரக் குழந்தைகள் காப்பகமாகவும், மகளிர்க்குத் தையற்கலைப் பயிற்சியளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகின்றது. பயிற்சியளிப்பவர், அமைப்பாளர் ஆகிய இரு பொறுப்புக்களையும் ஒருவரே ஏற்கின்ற வகையில், மகளிர் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் (Women's Polytechnic) 'டிப்ளமோ' பெற்றவரை மகளிர் நலத்துறை நியமனம் செய்துள்ளது. இவருக்கு உதவியாக ஓர் ஆயாவும் நியமிக்கப் பெற்றுள்ளார். குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்சியளித்தல், மகளிர்க்குத் தையல், பூவேலை முதலியவைகளைக் கற்றுத் தருதல் அமைப்பாளரின் பணிகளாகும்.

மகளிர் பகுதி

தையற்கலைப் பயிற்சி வகுப்பில் தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த மகளிரே சேர்த்துக் கொள்ளப்படுவர். முதலில் பயிற்சி வகுப்புகளில் சேருவதற்கான விண்ணப்பங்களை மகளிர் நலத்துறை கோருகின்றது. பின்னர் மாவட்ட மகளிர் நல அலுவலர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் ஆகியோரால் பேட்டித் தேர்வு நடத்தப் பெற்று சுமார் 20 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். வகுப்பில் சேரக் குறைந்த பட்சக் கல்வித் தகுதியாக 8-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். வயது வரம்பில் 18 முதல் 30 வரையிலுள்ளவர்களாகவும், மேலும் தொழிலாளர் [illegible] பத்தைச் [illegible] தற்கான சான்றிதழ்களும் கோரப்படுகின்றன.

தையற்கலையில் கீழ்நிலைத் தொழில்நுட்பத் தேர்வுக்குள்ள (Lower Grade Technical Examination) பாடத்திட்டங்கள் இங்குக் கற்றுத்தரப்படுகின்றன. 20 பேர்களைக் கொண்டுள்ள ஓர் அணிக்கு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை இரண்டு அணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது தேர்ந்தெடுக்கின்ற அணியிலிருந்து ஓராண்டுக் காலம் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முடிவுற்ற பின்னர் விருப்பமுள்ளவர்கள் தேர்வுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனர். வீட்டிலிருந்து கொண்டு தையல் தொழிலில் ஈடுபட விரும்புபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவுகின்ற வகையில் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய சிறுவர், சிறுமியர்க்கு இலவசமாகச் சீருடைகளைப் பொங்கல், தீபாவளி போன்ற திருநாட்களில் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற சீருடைகளின் எண்ணிக்கை சுமார் 9,000 முதல் 10,000 வரை



தையலர்க்குத் தையல் தொழில்

யாகும். இச்சீருடைகளை உருவாக்குகின்ற பொறுப்பினை மகளிர்நலத்துறை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துறையின் நிருவாகத்திலுள்ள தையல் நிலையங்களில் பயிற்சி பெறுகின்ற மகளிர், இச்சீருடைகளை உருவாக்குகின்றார்கள். சிறுவர் சீருடைக்கு ரூபாய் 2-ம், சிறுமியர் சீருடைக்கு ரூபாய் 1.50-ம் கூலியாகப் பெறப்படுகிறது. அவரவர் திறமைக்கும், தயாரித்த சீருடைகளின் எண்ணிக்



ஆடிக் களிக்கும் அழகு மழலைகள்

கைக்கும் ஏற்ப ஊதியம் வழங்கப்பெறுகிறது.

ஏனைய கல்வி நிலையங்கள் போலவே இந்நிலையத்தில் பயிற்சி பெறுகின்றவர்களும் ஆண்டுக்கொரு முறை கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

நாளையத் தலைமுறைகளான குழந்தைகளைக் காக்கக் குழந்தைகள் காப்பகத்தையும் இது நடத்தி வருகிறது. மற்றக் காப்பகங்களில் அனைத்துக் குழந்தைகளும் சேர்த்துக் கொள்ளப்படு

கின்றனர். இங்குத் தொழிலாளர் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜூன் திங்களில் துவக்கி நடத்தப்படுகிற இந்தக் காப்பகத்தில் 2 வயது முதல் 5 வரையிலுள்ள சுமார் 40 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்

படுகிறார்கள். இக்காப்பகம் காலை 9.00 மணிமுதல் 3.30 மணிவரை செயல்படுகிறது. குழந்தைகள், தங்கள் பெற்றோர் எந்தத் தொழிலகத்தில் பணியாற்றுகின்றார்களோ அந்தத் தொழிலகத்திலிருந்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுத் தரவேண்டும். மற்றக் காப்பகங்கள் போலவே கல்விப் பயிற்சியும், விளையாட்டுக்களும், செயல்முறைப் பாடல்களும் கற்றுத் தரப்படுகின்றன. ஒரு குழந்தைக்கு 15 காசுகள் என்ற அளவில் மதிய உணவும் வழங்கப்படுகிறது. கல்விப் பயிற்சிக்குத் தேவையான கரும்பலகை, எழுதுபொருட்கள், மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் போன்றவைகளையும் மகளிர் நலத்துறையே வழங்கி வருகிறது. குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற ஓய்வு நேரத்தில் அமைப்பாளர் 12.00 மணி முதல் 1.00 மணி வரை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பெற்றோர்களுக்குக் குழந்தைகள் வளர்ப்புப்பற்றிய ஆலோசனைகளை வழங்குகிறார்.

தொழிலாளர் நலத்துறையும் மகளிர் நலத்துறையும் சேர்ந்து இயங்கி வரும் இத்தொழிலாளர் நல நிலையம், மகளிர்க்கு வேலை வாய்ப்பளித்துக் காக்கும் வகையில் தையற்கலைப் பயிற்சி அளிப்பதோடு, குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்கும் ஓர் ஒப்பற்ற காப்பகமாகத் திகழ்வது பாராட்டத் தக்கதாகும்.

—ஆயிரம்





# சேலம் நகரில்

# புதிய விளையாட்டரங்கம்

மேகக் கூட்டத்தின் நடுவே மிளிரும் முழு நிலா போன்று மலைத் தொடர்களின் நடுவே அழகுற அமைந்துள்ளது சேலம் மாநகரம். இந்த எழில் மிகு நகரம் பல சிறப்புக்களை தன்னிடத்தே பெற்றுத் திகழ்கிறது. சேலத்தின் மாங்கனிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இம் மாவட்டத் திலுற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் தனித் தன்மை வாய்ந்தவை. இவை மட்டுமின்றிப் பலவிதத் தொழிற்சாலைகளையும் பெற்றுச் சிறப்படைகிறது. சேலம் இரும்பாலைத் திட்டமும் இந்நகருக்குப் பெருமை சேர்க்கிறது. இத்துணைச் சிறப்புக்களைக் கொண்டுள்ள சேலம் நகரில் விளையாட்டரங்கம் ஒன்று இல்லாதிருந்தது பெருங் குறையாகவே இருந்து வந்தது. இக்குறையினைப் போக்கும் வண்ணம் மாவட்ட விளையாட்டுக் குழுவினரால் சேலம் நகரில் விளையாட்டரங்கம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தமாவட்ட விளையாட்டுக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி. செல்லப்பன், அவர்களை தலைவராகவும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. இராசசேகரன் நாயர் அவர்களை உதவித் தலைவராகவும், முதன்மைக் கல்வி அலுவலர் திரு. எம். சாம்பசிவம், அவர்களைச் செயலாளராகவும் கொண்டுள்ளது. இக் குழுவில் சேலம் நாடாளு மன்ற உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர், சேலம் நகராட்சித் தலைவர், நகராட்சி ஆணையாளர், மற்றும் திரு. ஜெயசிலன் திரு. ஆர். டி. பார்த்தசாரதி, பாதிரியார் திரு. புஷ்பநாதன் டாக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். 18-12-1966 அன்று இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த விளையாட்டரங்கிற்கு நாட்டுத் தந்தை நினைவாக அண்ணல் 'காந்தியடிகள் விளையாட்டு அரங்கம்' எனப் பெயரிடப்பட்டது. 'சக்கிலி ஏரி' என்னும் பகுதியில் 15.06 ஏக்கர் நிலத்தில் விளையாட்டு அரங்கக் கட்டட வேலை நடைபெற்றது. 1974-ல் காந்தியடிகள் விளையாட்டரங்கக் கட்டடப்பணிகள் சிறப்புற முடிவுற்றன.

காந்தியடிகள் விளையாட்டரங்கம் 11-1-'74 அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா உரையின்போது இவ்வரங்கிற்கென தமிழக அரசு ரூ. 5 இலட்சம் வழங்கும் என்றும் இதில் முதல் தவணையாக ரூ. 1 இலட்சம் உடனடியாக வழங்கப்படும் என்றும் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

இவ்வரங்கம் சுமார் ரூ. 9 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இது கால் பந்து, கூடைப் பந்து, கைப் பந்து போன்ற விளையாட்டுகள் விளையாடுவதற்கும், மேஜைப் பந்து, கேரம், செஸ் போன்ற அறையினுள் விளையாடும் விளையாட்டுகளுக்கும் ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ் விளையாட்டரங்கக் கட்டடத்தில் விளையாட்டு வீரர்களுக்கு என ஓர் அறையும், பயிற்சியாளருக்கென ஓர் அறையும், கேரம், செஸ் போன்ற விளையாட்டுகளுக்கென்று பெரிய அறையும் விளையாட்டுக் குழு அலுவலக அறையும் தனித் தனியே வசதியுடன் கட்டப்பட்டுள்ளன. அவை மட்டும் இன்றிவிளையாட்டு வீரர்களுக்கு குளியல் அறைகளும் கட்டப்பட்டுள்ளன. இவ்வரங்கின் முதல் தளம் விளையாட்டுக் குழுமால் ஆக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கில் சுமார் 3,000 பேர் வசதியாக அமர்ந்து விளையாட்டுக்களைக் கண்டு களிக்கலாம்.

மலைகளால் சூழப்பட்ட சேலம் நகரில் இவ்வளவு வசதிகளுடனும், அழகுடனும், சிறப்புடனும் அமைந்துள்ள காந்தியடிகள் விளையாட்டரங்கம் சேலம் மாநகருக்குப் பெருமை சேர்ப்பது மட்டுமின்றி மிகவும் பயனளிக்கும் வகையில் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை..

வளர்க்கும்

# இயலிசை நாடக மன்றம்

வெறும் புற அழகு மட்டும் வாழ்க்கையாகுமா? அக அழகும் அதற்கு அவசியமன்றோ? ஆய கலைகள் அறுபத்து நான்கும் அகத்துக்கு அழகைத் தருவன என்று கருதியே ஆன்றோர் அருங் கலைகள் பலவற்றைத் தோற்றுவித்தனர். சீரும் சிறப்புமிக்க அக் கலையினை அழியாவண்ணம் போற்றிப் பாதுகாப்பது நந்தமிழர் கடமையல்லவா? அந்தக் கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்து, கலை யென்னும் திருவிளக்கை அணையாமல் காக்கும் அமைப்பாக இயங்கி வருகிறது, 'தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்.'

எங்களுக்கு அவர் விளங்கினர். அப்படிப்பட்ட நூற்றுண்டு விழா நடைபெறும் இந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்க விரும்புகிறேன். 'தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்' என்பதன் பெயர் இனிமேல் 'தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்' என்று அழைக்கப்படும்.''

## பெயர் மாற்றம் ஏன்?

1956-ல் 'தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம்' என்ற பெயரில் நிறுவப்பட்ட இதற்கு, 1973 அக்டோபர் திங்களில் நடந்த நாடகாசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் நூற்றுண்டு நினைவு விழாவில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என்று பெயரிட்டார்.

சங்கீத நாடக சங்கம், இயல் இசை நாடக மன்றமானதேன்? இதற்கு முதல்வர் அவர்கள் தரும் விளக்கம் :

''சூரியநாராயண சாஸ்திரி என்ற தன் பெயரைத் தூய தமிழில் மாற்றிக் கொண்டவர் பரிதிமாற் கலைஞர். பெயர் மாற்றத்தால் என்ன இருக்கிறது என்று சிலர் கேட்கிறூர்கள். நாராயணசாமி நெடுஞ்செழியன் ஆனதற்கும், ராமையா அன்பழகன் ஆனதற்கும் பரிதிமாற் கலைஞரே காரணம். அதாவது நல்ல தமிழில் பெயர் மாற்ற வழிகாட்டியாக

## கலைத்துறை வளர்ந்திட கலைமாமணி விருது

இன்னிசை, நடனம், நாடகம், கிராமியக் கலை, திரைப்படம் ஆகிய கலைகளைக் கூடியவரை பராமரித்துப் போற்றிக் பாதுகாத்து, அதன் மூலம் நம் நாட்டின் கலாச்சார ஒருமைப்பாட்டைப் பேணி வளர்க்கும் நோக்கோடு தொடங்கப் பெற்ற இம் மன்றம், கடந்த 18 ஆண்டுகளாகச் சீரும் சிறப்புமாகச் செயலாற்றி வருகின்றது. இந்த அரிய பணிக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் நிதி உதவி வருகின்றது. மேலை நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வருகை புரியும் கலைக் குழுக்களின் நிகழ்ச்சிகளுக்கும், பல்வேறு கலை நூல்களைக் கூட்டாக வெளியிட ஆகும் செலவுகளையும் மைய அரசு அவ்வப்போது ஏற்றுக் கொள்கின்றது.







கலைத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றியுள்ள கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் பாராட்டு விழாக்கள் நடத்துகின்றது இம் மன்றம். 1959-ம் ஆண்டிலிருந்து இச் சிறப்பு விழா தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

கிராமியக் கலைத் துறையில் உள்ள கலைஞர்களுக்கும் இம் மன்றம் விருது வழங்கிச் சிறப்பித்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும். இசை, நடனம், காலட்சேபம், நாடகம், திரைப்படம், கிராமியக் கலைத் துறைகளைச் சேர்ந்த சுமார் 261 கலைஞர்கள் இம் மன்றத்தின் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

1973-ஆம் ஆண்டில் 26 கலைஞர்கள் 'கலைமாமணி' விருதினைப் பெற்றுள்ளனர். இவ்வாண்டில் நடந்த நாடக விழாவில் ''மனோகரா'' திரைப் படத்திற்குச் சிறந்த முறையில் வசனம் எழுதியதற்காக முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தமிழக ஆளுநரால் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

## மறைந்த கலைஞர்களுக்கு மரியாதை

பல்வேறு கலைத் துறைகளைச் சேர்ந்த மறைந்த கலைஞர்களையும் மறக்கவில்லை, இம் மன்றம். முதல்வர் கலைஞர் அவர்களின் யோசனைப்படி மறைந்துவிட்ட கலை மாமேதைகளை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்து அவர்கள் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் விழா நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. 1973-ஆம் ஆண்டில், இசை, நாடகம் ஆகிய இரு துறைகளிலும் முடிசூடா மன்னர்களாக விளங்கிய மேதைகளான அகில உலக நாதசுர சக்ராதிபதி—இசை உலக ஜோதி திருவாவடுதுறை டி. என். ராஜரத்தினம் பிள்ளை, கந்தர்வ கான செங்கோட்டை எஸ். ஜி. கிட்டப்பா, ஏழிசை மன்னர்—கந்தர்வ கான ரத்தின திருச்சி எம். கே. தியாகராஜ பாகவதர், விண்ணிசை நாதமணி—நடிக நட்சத்திரம் வாசுதேவநல்லூர் வி. ஏ. செல்லப்பா, புகழிசைத் திலகம்—நடிக மாமணி—திரையுலகத் தாரகை பி. யு. சின்னப்பா ஆகிய மாமேதைகளின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தி, அக் கலை மாமணிகளின் நினைவாக அவர்களுடைய வாரிசுகளுக்கு இம் மன்றம் தங்கப் பதக்கங்களை வழங்கிப் பெருமைப் படுத்தியிருக்கிறது என்பதை நாம் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

## வெள்ளி வீணை சுழற் பரிசு!

திறமை மிக்க கலைஞர்களுக்கு ஆதரவு தரும் வகையில் ஒரு சிறந்த திட்டத்தையும் இயல் இசை நாடக மன்றம் தீட்டி நன் முறையில் செயலாற்றி வருகின்றது.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம், நாதசுரம், வீணை, புல்லாங்குழல், காலட்சேபம் ஆகிய துறைகளில் திறமை மிக்க கலைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், இம் மன்றம் நிதி உதவி அளித்து வருகிறது. 1963-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 350-க்கு மேற்பட்ட கலைஞர்கள் ரசிகர்களுக்கு அறிமுகமாகியுள்ளனர். சுமார் நூறு கலைஞர்கள் முன்னணிக்கு வந்துள்ளனர். சுமார் 30 கலை மன்றங்கள் இதன் மூலம் பயன் அடைகின்றன. இதற்காக ஆண்டுதோறும் செலவாகும் தொகை சுமார் ரூ. 25,000. இவை மட்டுமா?

முன்னாள் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்கள் அன்புடன் வழங்கிய வெள்ளி வீணை சுழற் பரிசுக்காக, ஆண்டு தோறும் வீணை இசைப்போட்டி ஒன்றை இம் மன்றம் நடத்தி வருகின்றது. போட்டியில் வெற்றி பெறும் குழுவிற்கு வெள்ளி வீணைச் சுழற் பரிசை அளித்து உற்சாகமூட்டுகிறது. பல வீணைக் கலைஞர்கள் இதன் விளைவாக உயர்நிலை அடைந்து வருகிறார்கள்.





## நாடகக் கலை வளர்ந்திட..!

காலத்துக்கேற்ற, சமுதாய வளர்ச்சிக்கு உதவுகின்ற நாடகங்கள் இன்று நமக்குத் தேவை. நலிந்த சமுதாயத்துக்கு வலிவை ஊட்டும் நாடகங்களே மக்கள் மன்றத்தில் மதிப்பைப் பெறும் என்பதை நாம் கண் கூடாகக் கண்டு வருகிரேம்.

சிறந்த முறையில் எழுதப் பெற்றுள்ள நாடகங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைஅரங்கேற்றுவதற்குக் கணிசமான உதவித் தொகைகளை இம் மன்றம் வழங்கி நாடகக் கலை வளர வழி வகுக்கின்றது. பாரதியாரின் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, ஜீவனும்சம், கைவிளக்கு, சித்தர்மகள், பலாப்பழம், அப்பாவின்ஆசை, குன்றுடையான், சேவகன், தாயுமானவர், குடிசையில் கோமகன் போன்ற பல சிறந்த நாடகங்களைத் தயாரிக்க, சிறந்த நாடகக் குழுக்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறந்த நாட்டிய நாடகங்களை நடத்தவும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. கபிலை நாடகம், திருவிளையாடல் புராணம், தியாகராசர், அழகர் குறவஞ்சி போன்ற சிறந்த நாட்டிய நாடகங்கள் மன்றத்தின் நிதி உதவியுடன் தமிழகத்தின் தலை சிறந்த கலைஞர்களால் நடத்தப்பட்டுள்ளன.

## ஒலிப்பதிவு செய்யும் ஒப்பற்ற பணி!

கலை வளர்க்கும் நோக்கோடு இன்று பல நிறுவனங்கள் சிறந்த கலைஞர்களை உருவாக்கி வருகின்றது.

இசை, நடனம் முதலான வகுப்புகளை நடத்திப் பல்லாண்டுகளாகப் பயிற்சி அளித்துவரும் இது போன்ற கலை நிறுவனங்களுக்குப் புத்தகங்கள், இசைக் கருவிகள் வாங்க இந்த நாடக மன்றம் நிதி உதவி அளித்து வருகின்றது. இவையன்றி இப் பயிற்சி நிறுவனங்களின் பராமரிப்புக்காகவும், கிராமியக் கலைப் பயிற்சிக்கும் நிதி வழங்கப்பட்டு வருகிறது.



'மனோகரா'வுக்கு வசனம் எழுதியதற்காக முதல்வர் கலைஞர் அவர்களுக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கின்றார் ஆளுநர் கே. கே. ஷா



இந்தோனேசிய ஆளுநர் திரு. மக்கு ஆலம் பரத நாட்டியம் கண்டு மகிழ்கிறார்



ஜப்பான் கலைஞர் ஒருவருக்கு நாவலர் பரிசு வழங்குகிறார்

போலந்து நாட்டுக் கலைஞருக்கு மலர் வழங்கி மகிழ்கிறார் மன்றச் செயலாளர் 'கலைமாமணி' கவிஞர் எஸ். டி. சுந்தரம்



அன்னைத் தமிழுக்கு அரும் பணியாற்றி வரும் இந்த இயல் இசை நாடக மன்றம் ஓர் அரிய செயலையும் செய்திருக்கின்றது. தமிழக இசைக் கலையின் சிறந்த அம்சங்களை எதிர்காலச் சந்ததிகள் அறிந்து போற்றவும், மேலை நாட்டிலிருந்து வரும் கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கேட்டுப் பயன் பெறத் தக்க வகையில் சிறந்த இசை, நாடக மேதைகள் ஆகியோரின் நிகழ்ச்சிகளை ஒலிப் பதிவு செய்தலே அது.

இதுவரை இம் மன்றம் திரு சித்தூர் சுப்ரமணியப் பிள்ளை, திரு. செம்பை வைத்தியநாத பாகவதர், திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், மதுரை மணி அய்யர், செம்மங்குடி, மகாராஜபுரம் போன்ற வித்துவான்களின் வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளையும், செம்பனார் கோவில் திரு. தட்சிணாமூர்த்தி பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை ஆகியோரின் நாதசுரப் பதிவுகளையும், திரு மகாலிங்கம் அவர்களின் புல்லாங்குழல், திரு. பூதலூர் கிருட்டிணமூர்த்தி சாஸ்திரியின் கோட்டு வாத்தியம், மதுரை திரு. சீனிவாச அய்யங்காரின் ஜலதரங்கம், திரு. அண்ணுசாமி பாகவதர் அவர்களின் அரிகதை ஆகிய பல இசை நிகழ்ச்சிகளை மன்றம் ஒலிப்பதிவு செய்துள்ளது. இவையன்றி, பாஞ்சாலி சபதம், இராசராச சோழன் ஆகிய நாடகங்களையும் ஒலிப் பதிவு செய்துள்ளது.

இவ்வாண்டு சனவரித் திங்கள் 29-ஆம் நாள் 'சம்பூர்ண இராமாயண' இன்னிசை நாடகத்துக்கான ஒலிப்பதிவு வெளியீட்டு விழா ஒன்றும் மிகச் சிறப்பாக நடந்தது.



ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு சார்பில் தமிழகம் வந்த கலைஞர்கள்

தமிழ்நாட்டின்

பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

என்.எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குனர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

TNSC BANK






இறைவன் ஒருவரே.

அவர் அருட்பெருஞ் சோதியர்.

சிறுதெய்வ வழிபாடு கூடாது.

சிறுதெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி, வீண் ஆரம்பரம் கூடாது.

புலால் உண்ணக்கூடாது.

சாதி, சமயம் முதலிய எவ்வித வேறுபாடும் கூடாது.

பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.

எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ண வேண்டும்.

ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையைக் கைக் கொள்ளவேண்டும்.

எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

புராணம், சரித்திரம் முதலியவை முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டா.

இறந்தவரைப் புதைத்தல் வேண்டும் ; எரித்தல் கூடாது.

கருமாதி, திதி முதலிய பொருளற்ற சடங்குகள் வேண்டா.

—இந்தக் கட்டளைகள் எல்லாம் பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வே. ரா. அவர்கள் தெரிவித்தவையல்ல ; சமரச சன்மார்க்கத்தை இந்தத் தரணிக்கு எடுத்துரைத்து வள்ளலார் என்று பெயர் பெற்ற இராமலிங்க அடிகளார் அறிவித்தவை.

இந்து மதத்தவர்கள் சைவம் பெரிதா—வைணவம் பெரிதா—த்வைதம் பெரிதா —அத்வைதம் பெரிதா என்றெல்லாம் ஓயாது சண்டையிட்டுக் கொண்டு ஒருமைப்பாட்டை மறந்திருந்தபோதுதான் வள்ளலார் சமரச சன்மார்க்கத்தை—எல்லா மதமும் ஒன்றே—எல்லா மனிதர்களும் சமமானவர்களே — என்னும் ஒருமைப் பாட்டுத் தத்துவத்தை எடுத்துரைக்கத் தொடங்கினார். சொல்லப் போனால், மனிதனது பகுத்தறிவுக்கு அவர் வேலை கொடுத்தார் ; மூட நம்பிக்கைகளுக்கு வழியனுப்பு விழா நடத்தி வைத்தார். ''அய்யோ, அப்பா!'' என்று கண்டதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அஞ்சி அலைந்த தமிழ் மக்களுக்கு அகக் கண்ணைத் திறந்துவிட்டார்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றும் ''மக்கள் குரலே மகேசன் குரல்'' என்றும் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவரால் அமைக்கப் பெற்ற தமிழக அரசும் கருதிவருவதற்குக் காரணம் வள்ளலாரின் திருவருட்பாதான் என்றால் அது மிகையாகா[illegible]

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவ ரவர்உளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
[illegible]
[illegible]
சிந்தை மிகவிழை[illegible]ந்ததாலோ!

என்று வள்ளலார் கூறுவதன் பொருள்.

# ஒருமைப்பாடு கண்ட உத்தமர்

என்றைக்கும் பயன்படத் தக்க வகையில் இதுபோன்று பல இலக்கியங்களை ஒலிப்பதிவு செய்வது நாளைய உலகுக்கு நன்மை பயக்குமல்லவா?

## இசை நூல்கள் பெருகிட..

கலைத் துறை நூல்களை வெளியிட உதவுவதும் மன்றத்தின் தலையாய பணிகளில் ஒன்று. இதற்காக இது நிதி தந்தும் உதவி வருகிறது. இசை, நாட்டியத் துறைகளில் சாத்தனுர் எழுதிய 'கூத்த நூல்', 'பல்லவி ஸ்வர கல்பவல்லி', திரு. முத்தையா பாகவதர் கீர்த்தனைகளின் மூன்று பகுதிகள், அவர் எழுதிய தமிழ்க் கீர்த்தனைகள், கோபாலகிருட்டிண பாரதியாரின் 'நந்தனுர் சரித்திரக் கீர்த்தனைகள்', பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தனைகள், அண்ணுமலை ரெட்டியார் காவடிச் சிந்து, திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் வெளியிட்டுள்ள 'இசைத்தமிழ்ப் பாமாலை', திரு. பெரியசாமித் தூரன் அவர்களின் 'இசைமணி மஞ்சரி', நாடகத் துறையில் பேரறிஞர் அண்ணு அவர்களின் நாடகத் தொகுதி வெளியீட்டுக்கும், சங்கரதாஸ் சுவாமிகள் அவர்கள் நாடக வெளியீட்டிற்கும், திரு. நாரண துரைக்கண்ணன், கு. சா. கிருட்டிணமூர்த்தி, பி.எஸ். ராமையா ஆகிய ஆசிரியர்கட்கும், 50-க்கு மேற்பட்ட நூல் வெளியீட்டு நிதி உதவி வழங்கியுள்ளது.

மேலை நாட்டு இசைக் கலைஞர்கள் தமிழ் நாட்டு இசையை எளிதில் உணர்ந்து பாடுகின்ற வகையில் சுரப்படுத்தி 1893-ல் சின்னசாமி முதலியார் பதிப்பித்த சில பாடல்களையும், அதன் ஆங்கில முன்னுரையையும் பதிப்பிக்க இம்மன்றம் திட்டமிட்டுள்ளது.

19—20-ஆம் நூற்றுண்டுகளில் நுண்கலைத் துறைகளில் சிறந்துவிளங்கிய கலை மேதைகளின் வாழ்க்கைக் குறிப்புகளைப் படங்களுடன் தொகுத்து வெளியிடவும் மன்றம் தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## ரயில் பயணச் சலுகைகள்!

நுண் கலைகளில் கலை நுணுக்கங்களைப் பற்றிய பல்வேறு கலை நிருபணங்களை அதாவது



மெய்ப்பித்துக் காட்டும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது இம் மன்றம் சிறந்த கலைஞர்களைக் கொண்டு நடத்தி வருகிறது.

இசை, நடனம், நாடகம் ஆகிய கலைத் துறைகளில் நினைவுக்கு தோன்றல்களின் அஞ்சலி செலுத்திக் கொண்டாடப்பெறும் விழாக்களுக்கும் இது நிதி உதவி அளித்து வருகிறது.

இத்தகைய பணிகளோடு கலை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதற்காகப் பல நுண் கலை விழாக்களையும், கருத்தரங்குகளையும் இம் மன்றம் சிறப்பாக நடத்தி வருகிறது.





தமிழ் நாட்டுக் கலைப் பெருமையைப் பிற மாநிலத்தவரும் உணர்ந்திட-கண்டு களித்திடத் தமிழகக் கலைஞர்கள் தம் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக வெளியூர்களுக்கும் பிறமாநிலங்களுக்கும் செல்ல ரயில்வே சலுகைக்குரிய சான்றிதழ்களை இம் மன்றம் வழங்குகிறது. ஆண்டுதோறும் சுமார் 500 கலைக் குழுக்களும், சுமார் ஐயாயிரம் கலைஞர்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிருர்கள்.

"இப்போது இருநூறு மைல்களுக்கு மேற்பட்ட ஊர்களுக்குத்தான் ரயில்வே கட்டணச் சலுகை உண்டு. அதை நூறு மைல்களுக்கு மேல் என்று மாற்றினுல் கலைஞர்களுக்கு மேலும் வசதியாக இருக்கும். விருது பெறும் கலைஞர்களுக்கு மட்டுமாவது இந்தியா முழுவதும் அவர்கள் நிகழ்ச்சிக்குப் போய் வர இலவச அனுமதிச் சீட்டு வழங்கலாம். இது நிரந்தரமான பயனுள்ள சலுகையாக இருக்கும்" என்பது இம் மன்றத்தின் கருத்து.

## நட்புறவு கொள்ள நல்வாய்ப்பு!

கலைத் துறையில் தொண்டு ஆற்றி இன்று வறுமைப் பிடியில் வாடும் கலைஞர்களுக்கு 1961-ஆம் ஆண்டிலிருந்து மைய-மாநில அரசு இணைந்து நிதி உதவி வழங்கி வருகிறது. இப்போது இத் திட்டத்தின் கீழ் 500 கலைஞர்கள் அரசு நிதி உதவியைப் பெற்று வருகிருர்கள்.



லாவோஸ் கலைஞர்களுக்கு முதல்வர் பரிசு வழங்குகிருர்

மேலை நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வருகை தரும் கலைக் குழுக்களை தமிழ் நாடு அரசின் சார்பாக வரவேற்பதும், அவர்களுடைய கலை நிகழ்ச்சிகளை நடத்துவதும் மன்றப் பணிகளில் முக்கியமானதொன்ருகும். மேலை நாட்டுக் கலைச் சிறப்பைத் தமிழகம் கண்டு களிக்கவும், மேலை நாட்டுக் கலைஞர்கள் தமிழ் நாட்டின் பழம் பெரும் கலைகளை உணர்ந்து போற்றவும் அவர்களது வருகை உதவுகிறது. இதனுல் அனைத்து நாட்டுக் கலையுறவும், நட்பும் பெற்றிட நல்வாய்ப்பு ஏற்படுகிறது.

## ஏற்றமுள்ள எதிர்காலப் பணிகள்!

இந்த மன்றம் மேலும் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும், அதன் மூலம் தமிழுக்குத் தொண்டாற்றவும் விரும்புகின்றது.

துவக்கப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள் இவற்றில் நாள் ஒன்றுக்கு ஒரு நேரமாவது (Period) இசைப் பயிற்சியை அறிமுகப் படுத்துதல், சில கல்லூரிகளிலாவது பட்ட மேல்நிலை (Post Graduate) வரை இசைக் கலையைச் சிறப்புப் பாடமாக வைத்தல், பல்கலைக் கழகத்தில் இப்போது இயங்கும் இசைத் துறை எல்லாருக்கும் தெரியும் வண்ணம் மேலும் செயல் புரியச் செய்தல், இசைக்கு என ஒரு துறை இருப்பதுபோல், நாட்டிய, நாடக, கிராமியக் கலை ஆகியவற்றுக்கும் தனி ஆய்வுப் பிரிவுகள் நமது பல்கலைக் கழகங்களில் இருத்தல் ஆகியவற்ருேடு, கீழ்க்காணும் சில திட்டங்களையும் நிறைவேற்ற இம் மன்றம் பெரிதும் விரும்புகின்றது. அவை :

(1) பல நாடுகளுக்கும், நம் தமிழகத்திலிருந்து கலைக் குழுக்களை பல முறையும் மைய அரசு கலாச்சாரத் துறையின் மூலமாக அனுப்பியுள்ளது. இக் குழுக்களைத் தமிழகம் நேரடியாகவே அனுப்பி வைக்கும் ஒரு திட்டத்தைச் செயல் புரிதல் நல்லது. சிறப்பாகத் தமிழ் பேசும மக்கள் அதிகமாக உள்ள கிழக்காசியா, ஆப்பிரிக்கா, மலேயா, பர்மா, இலங்கை, பிஜி, மரீஷஸ், தென் ஞப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும்—தமிழ்க் கலையைப் பற்றி அதிகம் அறிய ஆர்வம் உள்ள நாடுகளுக்கும் தகுந்த தமிழ்க் கலைக் குழுக்களை அடிக்கடி அனுப்பும் ஏற்பாட்டுக்குரிய திட்டத்தை விரிவுபடுத்துதல்.

(2) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நாடகத்திற்கென ஒரு நாடக மன்றம் அதிகச் செலவின்றி அமைத்திட வேண்டும். இந்த மன்றங்களை ஒரே மாதிரியாகக் கட்டினுல் நடிக்கும் கலைஞர்களுக்கு வசதியாக அமையும்.

(3) வயதான காலத்தில் கலைஞர்கள் நிரந்தரமாகத் தங்கி ஆய்வுப் பணியாற்ற ஒரு நிறுவனத்தை மேல் நாடுகளில் உள்ளதுபோல் (House of Veterans) நிறுவலாம்.

(4) கோயில்களின் நிதியிலிருந்து இசைக் கருவிகளைச் செய்யும் தொழிலுக்கு ஆதரவு தரலாம்.

இவ்வாறு கலைத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு நாளும், நற்பணியாற்றி வரும் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்', வளர்ந்த கலைஞர்களுக்கு ஆதரவு தந்து அதன் மூலம் வளரும் இளங் கலைஞர்களுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்து வருகிறது. இதனுல் நாளைய இசை உலகம் நன் முறையில் வளருவதற்கும், அதன் பெருமையினை நாடும் ஏடும் புகழ்வதற்கும் இம் மன்றம் வழி கோலுகிறது என்பதைப் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.



"சாதி, சமயபேதமற்று, எவ்வுயிரும் சமம் என்று எவர் எண்ணுகின்றாரோ, அவரின் உள்ளம் தான் இறைவன் நடமிடும் ஆலயம்; அத்தகைய அன்பர்களுக்குத் தொண்டு புரியவே என் சிந்தை விழைகிறது" என்று வள்ளலார் குறிப்பிடும்போது, அவரது இறைவணக்கம் எது என்று தெளிவாகத் தெரிகிறதல்லவா?

அந்த உத்தமர் இந்த நாட்டு மக்களுக்குப் பலகாலம் அறிவுரைகளை அள்ளி வழங்கிவிட்டுத் தன்னைத் தானே மறைத்துக் கொண்டார். அவர் 'சித்தி'யடைந்து இந்த ஆண்டு சனவரி 30-ஆம் நாளோடு நூறாண்டு முடிவுறுகிறது. இந்த ஆண்டு முழுதும் 'சித்தி' ஆண்டாகக் கொண்டாட நாடெங்கிலும் உள்ள சமரச சன்மார்க்க சங்கத்தினர் முடிவெடுத்துள்ளனர்—அவ்வாறே கொண்டாடியும் வருகின்றனர்.

நாடெங்கும் கொண்டாடும் அளவுக்குப் பெருமை பெற்ற வள்ளலாரின் வாழ்க்கை ஏட்டில் சில பகுதிகளை நாம் இங்கே பார்ப்போம்!

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தின் அருகில் உள்ள மருதூரில் 5—10—1823 அன்று பிறந்தார் வள்ளலார். பிறந்த ஆறாவது திங்களில் தந்தையார் மடியவே, தாயார், குழந்தை இராமலிங்கத்தை எடுத்துக் கொண்டு பொன்னேரி சென்று வசித்துப் பின்னர் சென்னைக்குக் குடியேறினார். சென்னையில் சகோதரரின் வீட்டில் வசித்து வந்தார் இராமலிங்கம். 3-வது வயது முதல் 35 வயது வரை சென்னையில் ஏழு கிணறுப் பகுதியில் வாழ்ந்து வந்தார். (வள்ளலார் இந்தப் பகுதியில் நீண்ட காலமாக வாழ்ந்தார் என்பதை எண்ணித்தான் இந்தப் பகுதியில் 'தங்கச் சாலை' என்று வழங்கப்பட்ட இடத்தை 'வள்ளலார் நகர்' என்று தமிழ் நாடு அரசு மாற்றியிருக்கிறது).

சென்னையை விட்டுப் புறப்பட்ட அடிகள் பல தலங்களுக்கும் சென்று பின்னர் தில்லையை அடைந்தார். சிறிது காலம் தில்லையின் அருகிலுள்ள கருங்குழி என்னும் ஊரில் வாழ்ந்தார். அப்போதுதான் (1865-ஆம் ஆண்டில்) சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். 1872-ல் இந்தச் சங்கத்தின் பெயரை 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்று மாற்றியமைத்தார். 1867-ல் வடலூர் சென்று அங்கு 1870 வரை தங்கியிருந்தார்.

வடலூரில் வாழ்ந்த நாட்களில் சமரச சன்மார்க்க சங்கத்திற்குப் பெருந் தொண்டுகள் புரிந்தார். எந்த நேரத்திற் சென்றாலும் பசித்த வயிற்றுக்கு உணவு கிடைக்கும் நிலையை வடலூரில் உருவாக்கினார்.

அவர் 106 ஆண்டுகளுக்கு முன்பு அமைத்த சத்திய தருமச்சாலையில் இன்றும், எந்த வேளையும் பசித்தவர்களுக்குக் கூழ் உணவு தட்டுப்பாடின்றிக் கிடைத்து வருகிறது. அவர் 106 ஆண்டுகளுக்கு முன்பு மூட்டிய அடுப்பு, இன்னும் அவிக்கப்படாமல் தொடர்ந்து பயன்பட்டு வருகிறது.


சத்திய தருமச்சாலையில் வழிபாட்டில் இருந்துவரும் வள்ளலார் திரு உருவம் (வெள்ளியால் ஆனது).



இந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள், தங்கள் வயல்களில் அறுவடை நடக்கின்ற காலங்களில் நெல், கேழ்வரகு போன்றவற்றில் தாங்கள் விரும்பிய அளவுக்கு இந்தச் சத்திய தருமச்சாலைக்குக் கொண்டு வந்து அன்பளிப்பாகக் கொடுத்து வருகிறார்கள். சில சமயங்களில் அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்று ஏக்கம் உறுகின்ற வகையில் தானியங்கள் தீர்ந்திருக்கும் நிலைமை ஏற்படுவதுண்டு. சில மணி நேரங்களில் யாரோ ஓர் அன்பர் 2 மூட்டை அல்லது 3 மூட்டை கேழ்வரகு கொண்டு வந்து தருமச்சாலைக்கு அன்பளிப்பாகத் தந்து செல்வாராம். அதன் பின், பசி என்று அங்கு வருபவர்களைப் பற்றிய கவலை, நிருவாகிகளுக்கு மறைந்துவிடும். இவ்வாறு அநேக முறைகள் நடைபெற்றிருக்கின்றனவாம்.

வள்ளலார், ஏழைகளின் பசி தீர்த்தலைப் பெருந் தொண்டாக—சீவகாருண்ய ஒழுக்கமாகக் கருதி வந்தார். அவர் அந் நாளில் உலவி வந்த தருமச்சாலையில் இன்று அவரது உள்ளம் உலவி வந்து கொண்டிருக்கிறது போலும்! அதனால்தான் அவரது எண்ணப் படியே—அவரது விருப்பப் படியே—பசித்தவர்க்கு அன்னமிடும் பணி, சத்திய தருமச்சாலையில் தவறாது, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இறைவனை ஒளி வடிவில் வழிபட்டவர் வள்ளலார். அதற்காகவே சத்திய ஞான சபை என்ற ஓர் அமைப்பை 1872-ஆம் ஆண்டில் வடலூரில் நிறுவினார். 80 ஏக்கர் பரப்பளவு கொண்டது இந்த இடம். இதனை,


அண்மையில் புதுப்பிக்கப் பெற்ற வழிபாட்டு (தியான) மண்டபம்.

இந்தப் பகுதியில் வாழ்ந்த பல மக்கள் ஒன்று சேர்ந்து, வள்ளலார் அவர்களுக்குத் 'தான சாசனமாக' எழுதி வைத்தார்கள். ஞான சபையின் அருகே ஒளித் திருக்கோயிலைக் காண விரும்பினார் அடிகளார்.

தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்.

—என்று வள்ளலாரின் அருட்பா வாக்கினால் அவரது உள்ளம் நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

வள்ளலார் உருவாக்கிய சத்திய ஞான சபையின் அமைப்பே வியப்பானது. இந்தக் கட்டடம் எண்கோண வடிவானது. இறைவன் எட்டு வகைக் குணம் கொண்டவன் என்று வள்ளுவர் கூறியுள்ள தத்துவத்தை — வள்ளலார் பின்பற்றியுள்ளார் என்று எண்ணிடத் தோன்றுகிறது.

சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறம் பொற் சபையும், மேற்புறம் சிற்சபையும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயிலையுடைய சிற்சபை, தெற்கு நோக்கிய வாயிலையுடைய ஞானசபை, மேற்கு நோக்கிய வாயிலையுடைய பொற்சபை ஆகிய மூன்றும் ஆயுத எழுத்தைப் போன்று அமைந்துள்ளன.

பொற்சபையும் சிற்சபையும் சிதம்பரத்தில், முன்னரே உள்ளவை. வள்ளலார் புதிதாக உருவாக்கியது ஞான சபை! எண்கோண வடிவான ஞான சபைக்குள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும், நாற்கால் மண்டபம் ஒன்றும் ஒன்றனுள் ஒன்றாக உள்ளன. நாற்கால் மண்டபத்தில் நடுவே ஏழு திரைகளுக்குப் பின்னே 'ஒளி'' காட்சி தருகிறது.

இதன் தத்துவம் உலகியல் தத்துவமே! அஞ்ஞானமாகிய திரைகள் மனித வாழ்வில், ஒவ்வொன்றாக வந்து எதிர்ப்படுகின்றன. அவை நீக்கப் பெற்றால் ஆன்ம ஒளியாகிய அருட்பெருஞ்சோதியைக் காணலாம் என்பது தான் வள்ளலார் நமக்கு எடுத்துரைத்திருக்கும் மாபெரும் தத்துவம்.

வள்ளலார் புதுமை எண்ணம் கொண்டவர் ; புரட்சிச் சிந்தை உடையவர். தாம் நிறுவிய நிலையங்களுக்குப் பெயரிடுவதில் ஒரு தனித் தன்மையைக் கையாண்டு வந்தார்.

அக்காலத்தில் சமயப் பெரியார்கள் சமயத் தொண்டு புரியும் அமைப்பை மடம் என்று சொல்வதுண்டு; ஆனால் வள்ளலார் தாம் உருவாக்கிய அமைப்புக்குச் 'சங்கம்' என்று பெயரிட்டார். மடம் சமயத் தொண்டு புரியும் இடம். ஆனால் சங்கம் சமூகத் தொண்டு புரியும் இடமுமாகும். உணவும் உறையுளும் கிடைக்கும் இடம், 'சத்திரம்' என்று வழங்கப்பட்டு வந்தது. வள்ளலார் அப்படிப்பட்ட அமைப்புக்குத் 'தருமச்சாலை' என்று பெயர் சூட்டினார். ஆலயத்துக்கு 'ஞான சபை' என்று பெயரிட்டார்.

பள்ளி வாசல் மகம்மதியர்க்கே உரியது. மாதா கோவில் கிறித்தவர்க்கே உரியது ; சிவாலயம் சைவர்க்கே உரியது. விஷ்ணு ஆலயம் வைணவர்க்கே உரியது. ஆனால் ஞான சபை அப்படியல்ல—ஞானம் எவ்வாறு எல்லாருக்கும் உரியதோ, அதுபோன்று ஞான சபை எல்லா மதத்தினருக்கும், எல்லாச் சமயத்தவருக்கும் உரியது ; பொதுவானது. இந்த அடிப்படையில்தான் ஆலயத்துக்கு 'சபை' என்ற பெயரை வள்ளலார் சூட்டியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் அவரது உள்ளம் புதுமையை அரங்கேற்றியிருக்கிறது.

அடிகளாரின் தத்துவங்கள் சிலவற்றைத் தவருகப் புரிந்து கொண்ட ஒரு சிலர், இறந்து போனவர்களின் உடல்களைக் கொண்டு வந்து போட்டு, அவர்களை எழுப்பித் தரும்படி வள்ளலாரிடம் வேண்டினுர்களாம். மக்களின் அறியாமையை எண்ணிய வள்ளலார் மனம் வருந்திஞர். உள்ளம் நொந்து புலம்பினுர். மேலும், அவரது உள்ளம் அமைதியையும் தனிமையையும் நாடியது. அதனுல் வடலூரின் தெற்கே 2 மைல் தொலைவில் உள்ள மேட்டுக்குப்பத்திற்கு 1870-ல், சென்று அங்கே வசிக்கத் தொடங்கினுர். அவர் தங்கியிருந்த இடத்திற்குச் 'சித்திவிளாகம்' என்று அவரே பெயரிட்டார். அங்கிருந்தபடி பல தத்துவப் பேருரைகளை நிகழ்த்தியிருக்கிறுர். 1536 வரிகள் கொண்ட ''அருட்பெருஞ்சோதி அகவல்'' என்னும் நூலை, அங்கே தங்கியிருந்த காலத்தில் வள்ளலார் யாத்திருக்கிறுர்.

1873-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் காலை எட்டு மணியளவில், சித்திவிளாகத் திருமாளிகையில் முதன் முதலாகச் சன்மார்க்கக் கொடியை ஏற்றி வைத்து நீண்ட பேருரை ஆற்றினுர். அதனை 'மகோபதேசம்' என்றும் 'பேருபதேசம்' என்றும் சன்மார்க்கத் தொண்டர்கள் குறிப்பிட்டு வருகிறுர்கள். 'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை' என்னும் தத்துவ மொழியையும் இந்த உரையில்தான் அடிகளார் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்குச் சில கிழமைகளுக்குப் பின்னர் அடிகளார் தமது அறையிலிருந்த அகல் விளக்கை வெளியே எடுத்து வைத்து, ''இதனை வழிபடுங்கள்'' என்று கூறித் திருவிளக்கு வழிபாட்டை ஏற்படுத்தினுர். அதன் பின்னர், பெரும்பாலும் கதவை மூடிக் கொண்டு பல நாட்கள் அறையின் உள்ளே இருப்பதும், சில நாள் வெளியே வருவதுமாக இருந்தார்.



புதுப்பிக்கப் பெற்றுவரும் சத்தியஞான சபைக் கட்டடம்.

1874-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 30-ஆம் நாளன்று முன்னிரவு நேரத்தில் தமது அன்பர்களை எல்லாம் அழைத்தார்.

''நான் அறையினுள்ளே பத்துப் பதினைந்து தினமிருக்கப் போகிறேன்; பார்த்து அவநம்பிக்கை யடையாதீர்கள்! ஒருக்கால் பார்க்க நேர்ந்து, பார்த்தால், யாருக்கும் தோன்ருது. வெறும் வீடாகத்தான் இருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்''—என்று சொல்லிவிட்டு, அறையின் உள்ளே நுழைந்து, கதவைத் திருக்காப்பிடச் செய்தாராம்.

சிலகாலம் கழித்து அறையைத் திறந்து பார்த்தபோது அது வெறும் அறையாகக் காட்சி தந்தது. அடிக்ளார் 'சித்தி' அடைந்து விட்டார்.

அந்நாளில் வழிபாட்டுக்கு அவரளித்த விளக்கு, இன்றும் அணையா விளக்காய், வழிபாட்டில் இருந்து வருகிறது—உலகுக்கு ஒளியளித்து வருகிறது.

அறிவைச் சுடருக்கு ஒப்பிடுவார்கள். சுடர் ஒளி பட்டதும் இருள் அகல்வதுபோல, அறிவுச் சுடர் வீசியதும் அறியாமை இருள் அகன்றுவிடும் என்பதுதான் வள்ளலாரின் தத்துவம்.

வள்ளலார் சமயவாதி போல் தோன்றலாம். ஆனுல் அவரது தொண்டு, சமூக நலத் தொண்டேயாகும்.

சபாபதி பரமாச்சாரியர் என்னும் தீட்சிதர் மரபினரும், அமாவாசை என்னும் அரிசன வகுப்பினரும் அடிகளாரின் தொண்டர்களாக இருந்திருக்கிறுர்கள்; தொழுதூர் வேலாயுத முதலியார் என்பவரும், பரங்கிப்பேட்டை காதர் சாகிப் என்பவரும் அடிகளாரின் சமரச சன்மார்க்க சங்கத்தில் அங்கம் வகித்திருக்கிறுர்கள் என்ருல் பொருள் என்ன? எம்மதமும் சம்மதமே—சமரச சன்மார்க்க நெறியே தேவை என்பதுதானே!

மார்க்கம்எலாம் ஒன்ருகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே—ஏக்கம்
[விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்
நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள்.

—என்று வள்ளலார் அழைத்ததன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அவரை நாடிவந்த தொண்டர்கள் ஏராளம், ஏராளம்!

தமிழகத்தில் பொது மக்களுக்கு முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் வள்ளலார்தான்!

தமிழகத்தில் முதியோர் கல்வியை முதன் முதலில் ஏற்படுத்தியவரும் வள்ளலார்தான்.

அவரது பாடல்கள் அருட்பா என்றும் திருவருட்பா என்றும் வழங்கப்பெற்றன. தேவாரம், திருவாசகம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு மதிக்கப் பெறுகிறது வள்ளலாரின் திருவருட்பா.

வாடியபயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினுல் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியரு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் ருேர்என்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் !

—என்னும் பாடலில் வள்ளலாரின் அன்புள்ளம்—அருளுள்ளம் காட்சி தருகிறது.





மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி உருவாகி வருகிறது.

''காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்''
—என்று பாரதியின் கவியுள்ளம் கூறியதே, அதைப் போன்றதொரு உயர்ந்த உள்ளம் இராமலிங்கரின் உள்ளம். பயிர் வாடிக்கிடப்பதைப் பார்த்துத் தமது உள்ளம் வாடுகிறது என்று சொல்லும் அருளுள்ளம் கொண்டவர் இராமலிங்கர். அதனுல்தான் அவரது பாடல் ''அருட்பா'' என்று அகிலத்தவரால் அழைக்கப்பெறுகிறது. அருளுள்ளம் கொண்ட அவர், வள்ளல் உள்ளம் கொண்டவர் என்ற கருத்தில் வள்ளலார் என்று வழங்கப்படுகிறுர்.

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே !
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே!

—என்று சன்மார்க்க நிலையின் பெருமை குறித்துப் பாடுகின்ருர் வள்ளலார்.

வள்ளலாரின் சன்மார்க்க சங்க நெறி முறைகளைப் பரப்புதற்கு, இராமலிங்கர் பணி மன்றம் தொண்டாற்றி வருகிறது.

திரு. என். மகாலிங்கம் அவர்களின் தலைமையில் அமைக்கப் பெற்றுள்ள சத்திய ஞான சபைத் திருப்பணிக் குழு, ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணியைச் செய்து வருகிறது. பல அன்பர்களின் துணையினுலும், தொண்டினுலும் திருப்பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. 1974-ஆம் ஆண்டுக்குள் திருப்பணிகள் முடிவுறும் என்று தெரிகிறது.

சத்திய தருமச்சாலையின் அருகில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. சென்னையிலுள்ள ராஜஸ்தானியர் சங்கத்தினர் இதற்கு 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளனர். அந்தத் தொகையும் திருப்பணியார் திரட்டிய தொகையிலிருந்து ஓர் இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 1.5 இலட்சம், இதற்குச் செலவிடப்படுகிறது. விழாக் காலங்களில் இங்கு வருகை புரியும் மக்கள் குளிப்பதற்கும் வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.

வடலூரில் முன்ஞள் முதல்வர் திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அவர்களால் நிறுவப் பெற்ற சுத்த சன்மார்க்க நிலையத்தின் வழிபாட்டு மண்டபம், (தியான மண்டபம்) ஏறக்குறைய 50,000 ரூபாய் செலவில் பொள்ளாச்சி நாச்சிமுத்துக் கவுண்டர் அறநிலையத்தாரால் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. அதன் திறப்பு விழாவும், வள்ளலார் 'சித்தி' நூற்ருண்டு விழாவும் 'வள்ளலார் கண்ட ஒருமை வாழ்வு' 'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' என்னும் நூல்களின் வெளியீட்டு விழாவும் 30-1-1974-ல் நடைபெற்றன.

வழிபாட்டு மண்டபம் நல்ல முறையில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. பளிங்குத் தரை, பால் நிலா போன்ற சுண்ணம்புப் பூச்சு, உறுதியான கட்டட அமைப்பு, இப்படிப் பல்வேறு வகையிலும் சிறப்பாக அமைந்துள்ளது.

வள்ளலாரின் புகழ்பெற்ற பாடலான,

''வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மரபினுள் யானொருவ னன்ருே''

—என்ற அருட்பாவுக்கு விளக்கம் கூறும் வகையில் இந்த மண்டபம் அமைக்கப் பெற்றுள்ளது.



சித்தி விளாகத் திருமாளிகையைச் சுற்றி எழுப்பப் பட்டுள்ள சுற்றுலைச் சுவர்.

வழிபாட்டுக் கூடத்தின் உட்புறத்தில் மூன்று பக்கச் சுவர்களிலும் இறைநெறியில் ஈடுபட்ட பெரியவர்களின் ஓவியங்களும், வேற்று மதத்து அருளாளர்களின் ஓவியங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

திருவள்ளுவர், திருஞான சம்பந்தர், மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி, திருமூலர், இராமானுசர், மெய்கண்ட தேவர், சங்கராச்சாரியார், அருணகிரியார், தாயுமானவர், மற்றும் புத்தர், ஏசு, பரமஹம்சர், குரு நானக் ஆகியோரின் ஓவியங்களும், திருக்குரானின் தெளிவுரையும் இடம் பெற்றிருக்கின்றன. வாழையடி வாழையென வந்த இந்தத் தத்துவ வித்தகர்களின் மரபிலே வந்தவர்தான் வள்ளலார் என்னும் கருத்துக்கு உருவகமாக அமைந்துள்ள ஓவியத் தொகுதி, பாராட்டுக்குரியதாகும்.

இந்த வழிபாட்டு மண்டபத்தில் ஒரு பீடத்தில் ஒளி விளக்கு வைக்கப்பெற்றுள்ளது. அதன் வெளிப் பகுதியின் முன்புறத்தில் சுவரிலே வாழை மரங்களும் வாழைக் கன்றுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பும் வள்ளலாரின் 'வாழையடி வாழை' தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

வள்ளலார் 'சித்தி'யடைந்த சித்திவிளாகத் திருமாளிகைக்குச் சுற்றுலைச் சுவர் இல்லாது இருந்தது. வடலூரில் உள்ள சமரச வேத பாடசாலையைச் சேர்ந்த திரு. டி. பெருமாள் செட்டியார் அவர்களின் பொருளுதவியினால் சுவர் எழுப்பப்பட்டு, அதன் நிறைவு விழாவும் 30-1-1974 அன்று மேட்டுக்குப்பத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிலே உரையாற்றிய திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,

''உலகம் போற்றும் ஒரு ஞானி இங்கு வந்து அமர்ந்தார். எதிர் காலத்தில் உலக அறிஞர் பலர் இங்குத் தேடி வருவார்கள். சுற்றுலாப் பயணிகள் நாடிவரும் இடமாக இது அமையப் போகிறது.

''தமிழ் மக்கள் முதன் முதலில் ஒளி வணக்கத்தைத்தான் கைக்கொண்டிருந்தார்கள். சூரியனை நோக்கி ஒளி வணக்கம் செய்தார்கள். தமிழகத்தில் விளக்குத் திருவிழா என்றே ஒரு விழா உண்டு. எனவேதான் வள்ளலார் சிலை வணக்கத்தை வலியுறுத்தாது ''ஒளி வழிபாட்டை'' ஏற்படுத்தினர்.

''வள்ளலாரின் அருட்பா, பொருள் பொதிந்தது; ஊன்றிப் படிக்க வேண்டும்; மேற்போக்காகப் படித்துப் பயனில்லை''

—இவ்வாறு குறிப்பிட்டார்.

வள்ளலார் தமது அருட்பாவின் வாயிலாக மருத்துவத்தையும் தெரிவித்திருக்கிறார். மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களை எழுதியுள்ளார். ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை என்னும் நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். 'சன்மார்க்க விவேக விருத்தி' என்னும் திங்களிதழ் ஒன்றினை, ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தியிருக்கிறார். (அந்த இதழ் இன்னும் வந்து கொண்டிருக்கிறது.)

இவ்வாறு கவிஞராக, சித்த மருத்துவராக, நூலாசிரியராக, பதிப்பாசிரியராக, இதழாசிரியராக, சீர்திருத்த வாதியாக, இறையன்பு கொண்டவராக, அருட்சித்தராக வள்ளலார் விளங்கியிருந்தார் என்பதை அறியும்போது, தமிழகம் தனிப் பெருமை படைத்தது என்னும் செய்தி தெளிவாகிறது.

உலகமெல்லாம் ஒரே சமயமாகத் திகழ வேண்டும் என்று விரும்பிய வள்ளலாருக்குத் தமிழ் உலகமும், தமிழ்ப் பெருமக்களும், எந்நாளும் நன்றி செலுத்த வேண்டும். வள்ளலாரின் அருட்பாவை அகிலமே வியந்து போற்றுகிறது. வெளிநாட்டினர் பலரும் போற்றும் காலம் வெகு விரைவில் வந்து கொண்டிருக்கிறது. அந்த நாள்தான் ஒரு தமிழ்த் துறவியின் அருளுள்ளத்தை— ஒரு சீர்திருத்தத் துறவியின் நற்சிந்தையை இந்த உலகம் புரிந்துகொண்ட நாள் என்று நாம் கருதலாம்!



# தலைநகரில் சிறந்த கலையரங்கம்

அட்டை சொல்லும் கட்டுரை

தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரில் சிறந்ததொரு கலையரங்கமாக, புதுப்பிக்கப்பட்டுள்ள கலைவாணர் அரங்கம் திகழ்கிறது.

எல்லா நவீன வசதிகளும் அமையப்பெற்ற இந்தக் கலையரங்கத்தை கடந்த 29-1-'74 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சட்டப் பேரவைக்கென 1955-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டடத்தில் 1958 முதல் சிறுவர்க்கென ஓர் அரங்கம் இயங்கி வந்தது. ஏறத்தாழ 700 இருக்கைகளும்,



சிறிய அளவிலான மேடையும், 35 எம்எம். படக்காட்சி நடத்த வசதிகளுடனிருந்த இவ்வரங்கில் ஒலி அமைப்பு போதுமானதாக இருக்கவில்லை. பெரிய அளவிலான நாடகங்கள் நடத்தும் வசதிகளையும் பெருக்க வேண்டியிருந்தது.

1971-ஆம் ஆண்டு கலைவாணர் பெயரினை இவ்வரங்கிற்குச் சூட்டிய தமிழக முதல்வர் இவ்வரங்கினைச் சிறந்ததோர் கலையரங்கமாக்குவதில் பேரார்வம் கொண்டார். 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் புதுப்பிக்கப்படும் பணிகள் தொடங்கி, மிகச் சிறந்த முறையில் முடிவு பெற்றுள்ளன.

எழில் முகப்புடன் அமையப் பெற்றிருக்கும் இவ்வரங்கில் தற்போது 1,040 வசதி மிக்க இருக்கைகள் அடுக்குப்படிகள் மீது பொருத்தப்பட்டுள்ளன. இதனால் எவ்வித இடையூறும் இன்றி அனைவரும் காட்சிகளைக் காண முடிகிறது. அரங்கம் முழுவதும் குளிர்பதன வசதி (Air conditioned) செய்யப்பட்டுள்ளது. 70' × 40' அளவில் அமைந்துள்ள மேடையில் நாடக நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடத்த வசதிகள் உள்ளன. 70 எம். எம். திரைப்படங்கள் நடத்துதற்கான அகலத்திரையும் அதற்கான திரைப்படக் கருவிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த அரங்கம் 70 எம்.எம். 35 எம்.எம். படங்களைத் திரையிடமட்டுமல்ல, இசை, நடன, நாடகக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கும் ஏற்றவாறு எல்லா வசதிகளும் நிரம்பியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வரங்கின் திரைப்படக் காட்சிகள் மிதப்பது போன்ற தோற்றம் அளிக்கும் வகையில் திரை அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி அமைப்பு சென்னை நகரிலேயே முதன் முதல் இங்குதான் அமைக்கப்பட்டுள்ளது.

எழில் முகப்புடன் அமையப் பெற்றிருக்கும் இவ்வரங்கு 112 அடி நீளமும், முன்பகுதியில் 112 அடி அகலமும், அரங்கு அருகே 79 அடி அகலமும் கொண்டுள்ளது. சிற்றுண்டி விடுதி, நுழைவுச் சீட்டு கொடுக்கும் அறைகள், முதலியன முன் தாழ்வாரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தாழ்வாரத்தை தமிழ்நாட்டு கைவினைப் பொருள்கள் (Handi Crafts) அழகு படுத்துகின்றன. தமிழ்நாட்டு எழிற் காட்சிகள் வண்ண ஓவியங்களாக மாடிப்படிகளின் வழியில் அழகுற வைக்கப்பட்டுள்ளன.

இவ்வரங்கின்மேற் கூரையும் பக்கச் சுவர்களும் கண்ணாடி இழைக் கம்பளங்களாலும் (Glass wool) பாரிஸ் பிளாஸ்டராலும் (Plaster Paris) அழகுற வேயப்பட்டு மிகச் சிறந்த ஒலி அமைப்புக் கொண்டதாக அமைப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலேயே இந்த அரங்கு ஒன்றில்தான் 79 அடி அகலமும், 40 அடி உள்ளடக்கமும் கொண்ட நாடக மேடை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நாடகத் திரைச் சீலைகள் (Screen Fittings) எளிதில் தனியே எடுக்கப்படும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. நாடக மேடையினை ஒட்டி அகன்ற ஒப்பனை அறைகளும் (Green Rooms) நாடக மேடையின் முற்பகுதியில் இசைக்குழுவினர்க்கான தாழ்பகுதியும் (Orchestra Pit) உள்ளன.

## ஒளி அமைப்பு

இந்த அரங்கிற்குத் தேவையான மொத்த 11 கே.வி. (K.V.) மின் சக்தியை மின்வாரியத்திடமிருந்து உயர்மின் அழுத்தமாக (H.T. Supply) பெற்று 250 கே.வி.ஏ. திறனுள்ள இரண்டு மின் அழுத்த மாற்றிகள் (Transformers) மூலமாக சாதாரண மின் அழுத்தமாக மாற்றப்பட்டுள்ளது. அரங்கத்தின் முற்பகுதியில் கவர்ச்சியான அலங்கார மின் விளக்குகள் உள்ளன. அரங்கத்தின் உட்புறம் விளக்குகள் 20 நொடியில் தானாக படிப்படியாகக் குறைந்து அணையுமாறு டிம்மர் ஸ்டார்ட்டர் (Dimmerstarter) என்ற மின் பொறியுடன் அமைப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் தொடங்கிய பிறகு அரங்கத்தின் உள்ளே வருபவர்கள் தங்களது இருக்கைகளை எளிதாகக் கண்டு கொள்வதற்கு இருக்கைகளுக்கிடையே சிறு மின் விளக்குகள் உள்ளன. இந்த அரங்கில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்து வதற்கு ஏற்றவாறு தேவையான மின் ஒளி வசதிகள் நிரந்தரமாகச் செய்யப்பட்டுள்ளன.





## ஒலி அமைப்பு

இந்த அரங்கில் நவீன டிரான்சிஸ்டர்கள் பொருத்தப்பட்ட பல கோண (Steriophonic) ஒலி சாதனங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அரங்கம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திலும் தேவையான சிற்றலை (Short wave) பேரலைகளுக்கு (Long wave) ஏற்ற ஒலி பெருக்கிகள் உள்ளன. இப்படி பல வேறு அலைகளில் இயங்கக்கூடிய ஒலி பெருக்கிகள் அமைக்கப்பட்டுள்ளதால், ஒலித் தன்மை





செவிக்கு இனிமையாகவும், இயற்கையாகவும் இருக்கும். அரங்கத்தினுள்ளே நடைபெறும் நிகழ்ச்சிகளை, வெளியே உள்ளவர்களும் கேட்க அரங்கத்தினைச் சுற்றிலும் வெளியில் நிரந்தரமாக பொறுத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தலாம்.

குளிர்சாதன அமைப்பு

பொதுவாக இம்மாதிரியான அரங்கிற்கு ஒவ்வொரு நபருக்கும் ஒரு நிமிடத்திற்கு 7 கன அடி தூய காற்று தேவை; இந்த அளவுகளின்படி 1,040 பேர்கள் அமரக்கூடிய இந்த அரங்கிற்கு 120 டன் திறனுள்ள குளிர் சாதன இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரங்கத்தினுள்ளே 75 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலையும் 60 சதம் ஈரப்பதமும் (Humidity) இருக்கும்.

சென்னை நகரத்திலுள்ள மற்ற அரங்கங்களைப் போல் அல்லாமல் இந்த அரங்கத்தின் அகலம் அதிகமாக உள்ளது. ஆகவே குளிர்ந்த காற்றை உள்ளே அனுப்பும் சாதனங்கள் அரங்கத்தின் மேல் புறத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குளிர்ந்த காற்று மென்மையாகப் பரவி அரங்கத்தில் இருப்பவர்களுக்கு வசதியான முறையில் எல்லா இடங்களுக்கும் படர்ந்து செல்லும். பயன் படுத்தப்பட்டபின், அந்தக்காற்று, அரங்கத்தின் கீழே பக்க வாட்டில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையின் வழியாக வெளியேற்றப்பட்டு திறந்த வெளிக்காற்றைவிட குளுமையாக உள்ள அதே காற்று மீண்டும் குளிர் சாதன இயந்திரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இது போன்று புதிய பல வசதிகளும் அமைந்துள்ளன.

சென்னை அரசினர் தோட்டத்தில் வாலாசா சாலையில் அமைந்துள்ள இக்கலையரங்கம் நகரில் சிறந்த கலையரங்கமாகவும் திகழ்கிறது. இதற்கான வாடகையும் மிகவும் குறைவானதாகவும் உள்ளது.

காலையிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை நிகழ்ச்சி நடத்த ரூ. 500 கட்டணமும், பிற்பகல் தொடங்கி இரவு வரை இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளோ பொதுக்கூட்டங்களோ நடத்த ரூ. 750 கட்டணமும், நாள் முழுமைக்கும் நிகழ்ச்சி நடத்த ரூ. 1,000 கட்டணமும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாவிதமான நவீன வசதிகளுடன் சென்னை நகரில் மிகக் குறைவான கட்டணத்துடன் கிடைக்கும் கலையரங்கம் கலைவாணர் அரங்கமே ஆகும்.

—மா



# நடுவுநிலைமை

சிங்கப்பூர் பா. கேசவன்

எப்பொருளையும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறுத்துக் கூறுவது மட்டுமல்ல; அதன் பண்பையும் பயனையும் கற்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் தர்க்கரீதியாகவும் சுவையுடனும் எடுத்தியம்பும் ஆற்றல் மிக்க நூல் திருக்குறள்.

நடுவுநிலைமையும் அவ்வாறே திருக்குறளில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. குறள் கூறும் நடுவுநிலைமையை ஆராயும் முன்னர், நடுவுநிலைமை என்னும் சொல் இன்று பெரும்பான்மையும், தெரிந்தோ தெரியாமலோ, தவறான பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

எதிலும் பட்டுக்கொள்ளாமல் இருப்பது, சிக்கல்களிலிருந்து நழுவப்பார்ப்பது, தன்னல நோக்குடன் "எது எப்படியானால் நமக்கென்ன?" என்றிருப்பது முதலியன இன்று நடுவுநிலைமை என்று கூறப்படுகின்றன. ஆனால் மேற்கூறப்பட்ட தன்மைகள் நடுவுநிலைமைகள் ஆகா; நடுவுநிலைமைக்கு முரணான பண்புகளே அவை.

அவ்வாறாயின், நடுவுநிலைமை என்பது யாது? நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் மூவகையினரிடத்தும் ஒரே தன்மையுடன் நடந்துகொள்வதாகும். அதாவது, நண்பரோ பகைவரோ அல்லாத நொதுமலர் (நம்மோடு எவ்விதத் தொடர்புமில்லாத அயலார்) சம்பந்தப்பட்ட காரியத்தை எவ்வாறு விருப்பு வெறுப்பற்ற தன்மையுடன் அணுகுகின்றோமோ, அவ்வாறே நண்பர் சம்பந்தப்பட்ட காரியத்தில் நட்புக் காரணமாக நம் உள்ளத்தில் தோன்றும் விருப்புணர்ச்சிக்கும், பகைவர் தொடர்புடைய காரியத்தில் பகை காரணமாகத் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கும் இடம் தரலாகாது. நாம் எடுத்துக் கொண்ட காரியம் மேற்கூறிய மூவரில் யாரைப் பற்றியதாயினும் சம்பந்தப்பட்டவர் யாரென்பதைப் பற்றிக் கவலைப்படாமல், அந்தச் செயலின் இயல்பு, அது மேற்கொள்ளப்படும் முறை, அதன் விளைவு ஆகியவற்றை மட்டுமே கருத்திற் கொண்டு அறவழி நின்று ஆராய்ந்து முடிவு காணலே முறையானதாகும். இதுவே நடுவு நிலைமை எனப்படுவது.

அறவழி நின்று ஆராய வேண்டும் என்று கூறியதிலிருந்தே நடுவுநிலைமையாளர் அறத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. நீதிக்கும் அநீதிக்கும்—அறத்திற்கும் மறத்திற்கும்—போராட்டம் நடைபெறும் போது நீதியின் பக்கம்—அறத்தின் பக்கம்—நின்று, அநீதியை—மறத்தை—அழித்தொழிக்க வேண்டியது நடுநிலையாளரின் கடனாகும். நடுவுநிலைமை என்பதன் பண்பும் பயனும் அதுவே.

மேற்கூறிய இரண்டில் ஏதேனும் ஒன்றின் பக்கம் சார்ந்து நிற்க வேண்டிய நிலை ஏற்படும் போது அதை நடுவுநிலைமை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என்னும் கேள்வி எழக்கூடும். இவ்வினாவிற்கு விடை காணும் முறையில்தான் நடுவுநிலைமை என்பதன் அடிப்படையே அமைந்துள்ளது. ஒரு பொருளை ஆராய்ந்து முடிவு காணும் வரையில்தான் ஒருவர் நடுவுநிலைமை வகிக்க முடியுமே தவிர முடிவு கண்ட பின் நடுவுநிலைமை வகித்தல் இயலாது; அதில் பொருளும் இல்லை. நாம் ஒரு பொருளை எடுத்துக்கொண்டு, அதை ஆராயும்போது அதன் நிறையையும் குறையையும் துல்லியமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமாயின், நம் உள்ளத்தில் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடாமல் இருக்க வேண்டும் என்பதே நடுவு நிலைமை என்பதற்குச் சரியான பொருளாகும். அப்பொருளினிடத்தே நமக்கு விருப்போ வெறுப்போ தோன்றுமாயின், நாம் நடுநிலை நின்று ஆராய முடியாமற் போய்விடும். விருப்புள்ள இடத்தில் குணமே காண்பதும் வெறுப்புள்ள இடத்தில் குற்றமே காண்பதும் மாந்தர் இயல்பு.

நடுவுநிலைமை என்பது என்ன என்று வரையறுத்துக் கூறுகின்றது பின்வரும் குறள்:

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"

இங்கே கோல் என்பது தராசு. சமன்செய்து சீர்தூக்கும் கோல் என்பதற்குத் தான் முன்பு இருபுறமும் சம்மாக இருந்து, பொருள்களை நிறுக்கும் தராசு என்பது பொருள். இதிலிருந்து இரண்டு உண்மைகள் புலனாகின்றன. ஒன்று, தராசில் பொருள் எதுவும் இல்லாத போது அது இருபுறமும் சமமாக இருக்க வேண்டும் என்பது. இன்னொன்று, ஒரு பக்கம் எடைக் கல்லையும் மறுபக்கம் பொருளையும் வைத்து நிறுக்கும்போது சரியான எடையைக் காட்ட வேண்டும் என்பது. கல்லின் எடையும் பொருளின் எடையும் சமமாக இல்லாத போது எந்தப் பக்கம் எடை அதிகமாக உள்ளதோ அந்தப் பக்கம் தராசின் முள் சாய்ந்து காட்டும் என்பதும் இதிலிருந்து குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. முன்னர் எப்பக்கமும் சாயாமல் இருந்த தராசின் முள் பொருளை வைத்து நிறுக்கும்போது பொருளின் எடையைப் பொறுத்து மாறுபடுவது இயல்பு. தராசில் பொருளை வைத்து நிறுக்கும்போதும் முன்னர் இருந்தது போலவே முள் அசையாமல் இருக்குமாயின் அதைக் கொண்டு சரியான எடையைக் காண்பது இயலாது.

நடுவுநிலைமையாளரும் தராசின் முள் போன்றே இயங்க வேண்டும். முன்பு இப்பக்கமோ அப்பக்கமோ ஒரு சிறிதும் சாயாமல் நடுவில் நின்ற தராசின் முள், பின்பு எவ்வாறு நிறுக்கப்படும் பொருளின் எடை ஒன்றினால் மட்டுமே இயங்குகின்றதோ, அவ்வாறே நடுநிலையாளரும் முன்னர் தம் உள்ளத்தில் விருப்பு, வெறுப்பு முதலிய எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் அமைந்து தாம் எடுத்துக்கொண்ட பொருளின் தன்மைக்கு ஏற்ப மட்டுமே ஒரு முடிவுக்கு வரல் வேண்டும்.

தராசின் முள் தராசில் வைத்து நிறுக்கப்படும் பொருளின் எடை கூடினாலும் குறைந்தாலும், அதற்கு ஏற்பச் சாய்ந்து, அதைச் சரிக்கட்ட உதவுவது போல நடுநிலையாளரும் தாம் எடுத்துக் கொண்ட பொருள்பற்றி நடுநிலை நின்று முடிவு கண்ட பின்னர், அது நன்மை பயக்கக் கூடியதாயின் அதைக் காக்கவும், தீமை பயக்கக் கூடியதாயின் அதைப் போக்கவும் முயல வேண்டும். இத்தகைய முடிவு காணுங்கால் குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்— என்னும் குறட்பாவை நினைவிற் கொள்ளுதல் சாலச் சிறந்தது. ஏனெனில், குணம் குற்றம் இரண்டினுள் ஏதேனும் ஒன்றை மட்டுமே உடைய மனிதரையோ, பொருளையோ காண்பது அரிதினும் அரிது.






ஒழுக்கம் என்னும் சொல் நல்லொழுக்கம் தீயொழுக்கம் இரண்டையும் பொதுவாகக் குறிக்கும் தன்மையுடையது எனினும், சிறப்பாக நல்லொழுக்கத்தையே குறிக்கின்றது. அதேபோல், அறிவு, குணம் முதலிய சொற்களும் முறையே நல்லறிவு, நற்குணம் என்னும் பொருளிலேயே வழங்கி வருகின்றன. அவ்வாறே நடுவுநிலைமை என்னும் சொல்லும் நன்மை பயக்கும் நடுவு நிலைமையைத்தான் குறிக்கின்றது என்பது வெள்ளிடைமலை. இந்த



நன்மை பயக்கும் பண்பே, அதாவது, அறங்காக்கும் பண்பே வள்ளுவர் குறளின் அடிப்படையாக விளங்குகின்றது என்பதைத் திருக்குறளை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள் கூட நன்கு உணர முடியும்.

நடுவுநிலைமை ஏனைய உயர்பண்புகள் அனைத்தின் மொத்த உருவம் என்பது மட்டுமல்ல; அவற்றுக்கெல்லாம் மகுடமாக விளங்கும் தகுதி பெற்ற தனி உயர் பண்பும் அதுவேயாகும். அன்பு, அடக்கம், இன்சொல், பணிவு அறிவு, ஊக்கம் இவற்றுள் ஏதேனும் ஒன்றையோ, சிலவற்றையோ உடையவராய் அமைதல் யார்க்கும் எளிது. ஆயின், நடுவுநிலைமை உடையவ்ராய் இருத்தல் உயர்பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றுக் குணமென்னும் குன்றேறி நிற்கும் சான்றோரால்தான் இயலும். நடுவுநிலைமை என்பது கூரிய வாள்மீது நடப்பதைப் போன்றது. நன்றி செய்தார் மாட்டு, அந்நன்றியை நினைங்குங்கால், நடுவுநிலைமை தவறக்கூடுமாதலின், அந்நிலையினும் தவறக்கூடாது என்னும் பொருள்படச் செய்ந்நன்றி அறிதலை அடுத்து, நடுவுநிலைமை என்னும் அதிகாரம் வைக்கப்பட்டது, என்று உரையாசிரியர் பரிமேலழகர் கூறுவதையும், 'ஐம்புலன்களையும் அடக்கியாளும் சான்றோரே நடுவுநிலைமை உடையவராக இருத்தல் இயலுமாதலின் அடக்கமுடைமையை அடுத்து நடுவுநிலைமை வைக்கப்பட்டதென்று, புலவர் குழந்தை கூறுவதையும் ஆழ்ந்து சிந்தித்தால் இவ்வுண்மை புலனாகும்.

''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'' என்பதும்,
''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்பதும்,
''ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்'' என்பதும்,
''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்பதும்
''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' என்பதும்,
''பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'' என்பதும்,
''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு'' என்பதும்,
''பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு'' என்பதும்,

இவை போன்ற இன்ன பிறவும் நடுவுநிலைமையின் பண்புக்கூறுகளாய் விளங்குகின்றன. எனவே, நடுவுநிலைமை என்னும் பண்பானது நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில், குன்றின் மேலிட்ட விளக்காகக் காட்சியளிக்கின்றதெனினும் இதன் ஒளிக்கதிர் ஏனைய அதிகாரங்களிலும் ஊடுருவிச் சென்று, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குகின்றது என்பது மிகையன்று.

எனவே, நடுவுநிலைமை என்பது ஏனைய உயர்பண்புகள் அனைத்தையும் தன்னுள்கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல; அறத்திற்கு அடிப்படையானதும் அறம் நிலைக்கத் துணை புரிவதும் இப்பண்பேயாகும்.

# உயிர்ச் சத்தும் அளவுக்கு மீறினல்....

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வைட்டமின்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ரிக்கெட்ஸ், ஸ்கர்வி, பெலாக்ரா, பெரி பெரி, சோகை போன்ற பல்வேறு நோய்களையும், அதன் காரணமாக ஒழிப்பது சாத்தியமாயிற்று. வைட்டமின்களின் பயனுள்ள விளைவுகள் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், வைட்டமின் தயாரிப்புக்கள் குறித்து பெரும் ஈடுபாடும் உலகம் முழுவதிலும் காட்டப்பட்டது. 'ஆரோக்கியத்துக்கு வைட்டமின்கள்' என்ற கூற்று அனைவரிடமும் பரவிற்று. ஆனல் இன்று, பலவகை வைட்டமின் மாத்திரைகளும் மலிந்து காணப்படும் போது, அதிகப்படியான வைட்டமின் ஆரோக்கியத்தைத் தீவிரமாகப் பாதிக்கவும் கூடும் என்று வைட்டமின் குறித்த ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஓர் உதாரணம்: ரிக்கெட்ஸ் நோய் வராமல் தடுப்பதற்காகவோ அல்லது நோய் கண்ட பின்னர் சிகிச்சைக்காகவோ உலகம் முழுவதிலும், குழந்தைகளுக்கு வைட்டமின் 'டி' கொடுக்கப்படுகிறது. எனினும், ரிக்கெட்ஸினால் அவதியுறும் குழந்தைகளுக்குப் பெரும் அளவில் வைட்டமின் 'டி' கொடுத்தால், நோய் குணமாவதில்லை; பல நாடுகளிலும் ரிக்கெட்ஸ் நோய் முன்னைவிட அதிகமாகவும் பரவிற்று. சோதனை ஆராய்ச்சியின் மூலம் இந்தப் புதிர் விடுவிக்கப்பட்டது. உரிய காலத்தில் வைட்டமின் 'டி' உட்கொள்வது நிறுத்தப்படாவிட்டால் எலும்புகளில் மாற்றப்பட முடியாத அழற்சி ஏற்பட்டு விடுகிறதென்றும் எலும்புகளில் கால்சியம் சத்து குறைந்து, உள்ளுறுப்புக்களும், திசுக்களும் கடினமாகி விடுகின்றன என்றும் தெரிய வந்தது.

சற்று நிதானத்துடன் உட்கொள்ள வேண்டிய மற்ருெரு வைட்டமின், வைட்டமின் 'ஏ' ஆகும். அதிகப்படியான வைட்டமின் ஏ, உடலில் நச்சுத் தன்மையை ஏற்படுத்திவிடும். ஆர்க்டிக் பகுதிகளில் உள்ளவர்கள், பெருமளவு கரடியின் கல்லீரலை உண்ணுகின்றனர். 'காட்' மீனினது கல்லீரலில் இருப்பதைப் போன்று, கரடியின் கல்லீரலிலும் வைட்டமின் ஏ அதிகமாகக் காணப்படுவதால், அவர்களில் சிலருக்கு அதனுல் உடல் நச்சுப்பட்டுள்ளது. எனினும் வைட்டமின் டியைப் போல, வைட்டமின் ஏ, பொதுவாக அதிக அளவில் உட்கொள்ளப்படுவதில்லை. சாதாரணமாக ஒரு மனிதனுக்குத் தேவையான வைட்டமின் ஏயின் அளவு 1·5 மில்லி கிராம் தான்; இது அவனது வாடிக்கையான உணவிலிருந்தே அவனுக்குக் கிடைக்கக் கூடும்.

மிகவும் பிரபலமாக விளங்கும் வைட்டமின், வைட்டமின் 'சி' ஆகும். வைட்டமின்களைப் பற்றி நன்கறிந்துள்ளவர்களில் வைட்டமின் சியைப் பற்றி அஞ்சுபவர்கள் எவருமே இருக்க முடியாது. வைட்டமின் சி என்பது அஸ்கார்பிக் அமிலம்; இதனை குளுகோஸுடன் சேர்த்துக் குழந்தைகளுக்குப் பெருவாரியாகக் கொடுக்கின்றனர். குழந்தைகளும் இதனை பெரிதும் விரும்பி உட்கொள்கின்றனர். ஒரு குழந்தையின் உடலுக்கு எவ்வளவு வைட்டமின் சி தேவையோ, அதைக் காட்டிலும் பல டஜன் மடங்கு அதிகமாக இந்த வைட்டமின் சில வேளைகளில் உட்கொள்ளப்படுகிறது. எனினும் குழந்தைகளும் பெற்ருேர்களும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் உள்ளனர். ஏனெனில் வைட்டமின் சி தயாரிப்புகளும் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்று அவர்களுக்கு எந்தவித சந்தேகமும் இடையாது. எல்லா வயதினராலும் கட்டுப்பாடற்ற ரீதியில் பரவலாக உபயோகிக்கப்படும் வைட்டமின், வைட்டமின் சி தான் என்று கூறுவது மிகையாகாது.

வைட்டமின் ஏ, வைட்டமின் டி ஆகியவற்றைப் போன்று, அதிகப்படியான வைட்டமின் சி, தெளிவாகத் தெரியும் வண்ணம் நோய்க் குறிகள் எதையும் ஏற்படுத்துவதில்லை. எனவே, நீண்ட நெடுங்காலத்திற்கு, அதிகப்படியான வைட்டமின் சியினால் ஏற்படும் விளைவுகள் எவரது கவனத்தையும் கவரவில்லை. ஆனல், அதிகப்படியான வைட்டமின் 'சி' யும், உடலில் சேகரமானல் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதை ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. ஓர் உண்மையை நாம் இங்குக் கூற முடியும். ஓர் உடலில் எவ்வளவு அதிகமாக வைட்டமின் 'சி' யைச் செலுத்தினாலும் திசுக்களில் காணப்படும் வைட்டமின் சியின் அளவு அதிகரிப்பதில்லை. இது ஏன்? ஏனெனில், தேவைக்கு அதிகமான வைட்டமின் சி, அழிக்கப்பட்டு, உடலிலிருந்து வெளியேற்றப்பட்டு விடுகின்றது. இத்தகைய தற்காப்புக் கிரியையே, அதிகப்படியான வைட்டமின் சியினால் தீய விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதை நிரூபிக்கப் போதுமானது.

அதிகப்படியான வைட்டமின் 'சி' உட்கொள்வதால், தூக்கமின்மை, எரிச்சல், ஒரு வித நிலை கொள்ளாத் தன்மை, ஆகியவை ஏற்படக்கூடும்.

இதையெல்லாம் கூறியதிலிருந்து, வைட்டமின் தயாரிப்புக்கள் தேவையற்றவை என்ருே, அவை தீங்கு பயப்பவைதான் என்ருே முடிவுக்கு வந்துவிடக் கூடாது. கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், அனுவசியமாக அவற்றை உட்கொள்ள வேண்டியது இல்லை என்பதுதான். தினந்தோறும் 50 மில்லிகிராம் வைட்டமின் சி உட்கொண்டாலே, ஒருவரது உடலுக்கு அது போதுமானது. பழங்களிலும், பச்சைக் காய்களிலும், வைட்டமின் சி நிரம்ப உள்ளது. நமது உணவில் போதுமான அளவு இறைச்சி, மீன், ரொட்டி, பால், பால்ப் பொருட்கள், முட்டை, காய், கனிகள் ஆகியவை இருந்தால், நாம் வைட்டமின் தயாரிப்புகளை அறவே நீக்கி விடலாம் என்றும் சொல்லப்படுகிறது.

# நெல்லை மாவட்டத்தில் மீன்வளப் பெருக்கமும் மீனவர் நல்வாழ்வும்

திருநெல்வேலி மாவட்டம் தமிழகத்தில் மீன் வளத்திற்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் கடற்கரை 176·14 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இங்கு 22 மீனவர் வசிக்கும் கிராமங்களும் எண்ணற்ற தற்காலிக மீனவர் கிராமங்களும் உள்ளன.

1959-ஆம் ஆண்டு வரை கட்டு மரத்தாலும் வளத்தாலும், காற்றின் வேகத்தைக் கொண்டு செலுத்தும் படகுகளாலும் மீனவர்கள் மீன் பிடித் தொழில் நடத்தி வந்தனர். அப்பொழுது மீன் பிடிப்பும் 18,000 டன்களாக இருந்தது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் 41 விசைப்படகுகளை மீனவர் குழுக்களுக்கும் மீனவர் கூட்டுறவுப் பேரவைக்கும் அரசு வழங்கியுள்ளது. இதன் காரணமாக 1966-67—ஆம் ஆண்டு இறுதியில் மீன் பிடிப்பு 22,500 டன்களாக உயர்ந்துள்ளது. இந்தக் கட்டுமரங்களைக்கொண்டும், தோணிகளைக் கொண்டும், விசைப்படகுகளைக் கொண்டும் மீனவர்கள் 1,400 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள மீன்பிடித் தளங்களில் மட்டுமே மீன் பிடிக்க இயலுகிறது. மீன் வளத்தைப் பெருக்க மேலும் 4,500 கிலோ மீட்டர் பரப்பளவுள்ள மீன் பிடித்தளங்களை அதிக குதிரைச் சக்தி வாய்ந்த விசைப்படகுகளைக் கொண்டு மீன் பிடிக்க முயல வேண்டும்.

நெல்லை மாவட்டக் கடலில் மீன் பிடிக்க நல்ல வாய்ப்புள்ள தளங்கள் ஏராளமாக உள்ளபடியாலும் அவைகளை மேற்கொண்டும் நல்ல முறையில் மீன்பிடிப்பு நடத்த ஒரு கூட்டுறவுத் திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டம் திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுப் பேரவை வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வேளாண்மை மறு நிதிக் கழகத் திட்டம். இதன் தலைமை இடம் தூத்துக்குடியாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

(1) விசைப்படகுகள் கட்டும் தளம் ஒன்று நிறுவுவது. அதற்காக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவது.

(2) விசைப்படகுகளைத் தயாரித்தல்.

(3) நவீன மீன்பிடிப்பு முறைப்படி மீன் பிடிப்பை அதிகரித்தல்.

(4) பிடிக்கப்பட்ட மீனை பனிக்கட்டி நிலையத்தில் குளிர வைத்துப் பாதுகாத்தல், பதப்படுத்தல், விற்பனை செய்தல்.

(5) மீன்துறைக்குச் சொந்தமான பனிக்கட்டி நிலையங்கள், குளிர் பதன அறைகள், மீனை டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலை இவைகளைக் குத்தகைக்கு எடுத்து நடத்துதல்.

(6) மீன் பிடிப்பைத் தீவிரப் படுத்துதல்.

(7) விசைப்படகுகளைப் பழுது பார்ப்பதற்காக வசதிகள் செய்தல், அவைகளுக்கு உதிரி உறுப்புகள் வழங்குதல்.

(8) கூட்டுறவு தத்துவத்தின் அடித்தளத்தைப் பலப்படுத்தி மேற்கூறிய பணிகளை வகுத்துச் செயல்படச் செய்தல்.



இத்திட்டத்தின் கீழ் முதல் ஆண்டு 30 படகுகளும் இரண்டாவது ஆண்டு 30 படகுகளும், மூன்றுவது ஆண்டு 15 படகுகளும் ஆக 75 படகுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 174-ல் முதல் 30 படகுகள் கடலில் மிதக்க விடப்படும். இவைகள் ஏற்கெனவே குலுக்கல் முறைப்படி தேர்தெடுக்கப்பட்ட மீனவர் குழுக்களுக்கு வழங்கப்படும். ஒவ்வொரு படகிற்கும் ரூ. 5,000 மதிப்புள்ள நைலான் வலைகளும் வழங்கப்படும். ஒவ்வொரு குழுவிற்கும் படகுகளைக் கொண்டு மீன் பிடித்து, கொண்டுவரும் மீன்களில் 1/3 பங்கு மீனவர் குழுவிற்கும், 2/3 பங்கு மீனவர் கூட்டுறவு பேரவைக்கும் சேரும். இப்படகுகள் கொண்டு வரும் மீன்கள் ஒரே இடத்தில் இறக்க ஏற்பாடு செய்யப்படும். கடலில் மீன் பிடிப்பதை திடீர் சோதனை செய்ய வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும். ஒவ்வொரு படகும் ஆண்டுக்கு 50 டன் மீன் பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே மொத்தம் 3750 டன் மீன்களை ஆண்டொன்றுக்குப் பிடிக்கலாம் என்று இத்திட்டத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீன்களில் 60 சதவிகிதம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, மேலப்பாளையம் முதலிய இடங்களில் உடனேயே விற்கப்படும். எஞ்சியுள்ள 40 சதவிகிதம் தூத்துக்குடியில் ஏற்கெனவே இயங்கி வரும் பனிக்கட்டி நிலையத்திலும் குளிர் பதன அறையிலும், உறைய வைக்கும் குளிர் பதன அறைகளிலும் வைத்து பாதுகாக்கப்படும். இறால் மீன்களையும், குடை மீன்களையும் டின்களில் அடைத்து விற்க ஏற்கெனவே இயங்கி வரும் தொழிற்சாலையில் ஏற்பாடு செய்யப்படும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 5,000 டின்களில் மீன்களை அடைக்கும் சக்தி வாய்ந்தது.

சில்லறை விற்பனைக்கு மேற்கூறிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்படவில்லை. தேவைப்பட்டால முதல் ஆண்டு ஏற்படும் செலவினங்களில் ஏற்படும் மிச்சத்தைக் கொண்டு மேற்கூறிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு ரூ. 78.70 இலட்சம் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையை மூன்று தவணைகளாக விவசாய மறுநிதிக் கழகம் கூட்டுறவு வங்கி மூலம் பேரவைக்கு வழங்கப்படும். பேரவை மூன்றுவது ஆண்டிலிருந்து குத்தகையை தவணை முறையில் விவசாய மறு நிதிக் கழகத்திற்குச் செலுத்தும். முழுத் தொகையும் ஒன்பது ஆண்டுகளில் அடைத்து முடிக்க வேண்டும். இத்திட்டத்தின் வெள்ளோட்ட விழா 24—1—1974 அன்று தமிழ்நாடு அரசு வனத்துறை மற்றும் மீன்துறை தனிச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்திய அரசு வேளாண்மை அமைச்சகச் செயலாளர் திரு. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், அவர்கள் படகு வெள்ளோட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். விழாவில் மீன்துறை இயக்குநர் திரு. டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.எஸ். சிவசாமி அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



ஆறுவது கண்டம் என்று சொல்லப்படும் அண்டார்டிக்கின் காலநிலை விண்வெளிக் கால நிலையைப் போன்று கடுமையானதாகும். இப்பகுதியின் ஆண்டு சராசரி வெப்ப நிலை, பூஜ்யத்திற்குக் கீழ் 55.5 டிகிரி செண்டிகிரேட். இதுவரை இங்கு அளவிடப்பட்டுள்ள வெப்பமான நாளின் மிக அதிகமான வெப்ப நிலை 20.9 டிகிரி செண்டிகிரேட். மிகக் குறைவான வெப்ப நிலை பூஜ்யத்திற்குக் கீழ் 83.3 டிகிரி செண்டிகிரேட்.

இப்பகுதியில் இரவு 125 நாட்கள் நீடிக்கிறது. ஏறத்தாழ 118 நாட்கள் பகலாகவே உள்ளன.




# வெண்பாப் போட்டி 71

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
● மு. கோமதி,
தனித்தமிழ் இல்லம்,
பேரூராட்சி மன்ற வீதி,
கூகலூர் அஞ்சல்,
(வழி) ஈரோடு.

ஈற்றடி: திருப்பணிகள் செய்வோம் தெரிந்து

● மெய்ப்பிணிகள் போக்கி, மெலிந்தோர் தமைஉயர்த்தித்
துய்ப்பதற் கேற்றஇன்பந் தோற்றுவித்துப்—பொய்யாப்
பெரும்பணியால் பூந்தமிழர் பேறுறத் தக்க
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மு. கோமதி, கூகலூர்.

மக்கட் பெருக்கத்தை மட்டுப் படுத்தியே,
சிக்கனம் கைக்கொண்டு சீர்பெற்று—மக்கள்
அறிவுபெறத் தூண்டி அவர்வளம் காணத்
திருப்பணிக்ள் செய்வோம் தெரிந்து.
—வி. ராஜேந்திரன், போடிநாயக்கனூர்.

தற்றமிழைக் காத்தவர்க்கும், நாடாண்ட நல்லவர்க்கும்,
கற்றடங்கித் தொண்டாற்றும் கண்ணியர்க்கும்—மற்றும்
அருட்பணிகள் செய்வார்க்கும் ஆலயங்கள் கட்டித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து!
—சண்முக தாயுமானவன், பொன்மலை.

பெருமுழைப்பை நல்கிப் பெரும்பயனைக் காண
இருள்மனத்தைக் கொண்டார் இதயம்—விரும்பும்
மருள்கொண்டு வாடுகின்ற மக்களின் வாழ்வுயரத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் சோ. பாலுச்சாமி, விருதை.

அல்லவை தீய்த்தும்; அறஞ்செய்தும்; ஓங்குபுகழ்
கல்வி வளர்த்தும் கடனூற்றி;—இல்லில்
வருத்தும் பசியோட்டி வாழ்விலொளி சேர்க்கும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

தாக்குமொழி தாங்கித் தகாதபழி தாம்பொறுத்தே
ஊக்குமொழி இன்றெனினும் ஓயாமல்—நோக்கில்
விருப்புவெறுப் பின்றிவீ ருர்கலைஞர் போல்நாம்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பா. வேங்கடவேள், நத்தம்.

பெற்ற சுதந்தரத்தைப் பேணி வளர்ப்பதுடன்
உற்ற தொழில்வளங்கள் ஓங்கிடவே—முற்றும்
பொறுப்புணர்ந்து நம்நாடும் பொன்னாடாய் ஆகத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

எண்ணம் செயலிரண்டும் ஏற்றமுடன் கொண்டுமனம்
திண்ணமுறப் பண்பு திகழ்ந்திடவே—இன்னும்
பொறுப்புடனே நாமென்றும் பூதலத்தோர் வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—அ. காந்தி, பி.எஸ்.சி.,பி.டி., தேவத்தூர்.

ஏழை சிரிப்பில் இறைவனைக் காணுநிலை
வாழும்நன் னாட்டின் வளநிலையம்:—தோழ!
கருப்பொருளின் கோயிலாய் நாட்டினை நாம் காத்துத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

**வெண்பாப்போட்டி—73**

ஈற்றடி:

புத்துணர்வு சேர்க்கும் புகழ்

முடிவு நாள்—16—3—1974

நேரிசை வெண்பாக்கள் மட்டுமே அனுப்பப் பெற வேண்டும்.

# வெண்பாப்போட்டி

நாட்டில் நலம்பெருக வாட்டும் துயர்கருக
ஆட்டும் பசிவிலக ஆர்வத்தைக்—கூட்டி
ஒருநாளும் வற்றா உயர்வான அன்பால்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பண்ணை மதிவாணன், கோம்பை.

மக்கள் பணியே மகேசன் பணியென்று
முக்கண்ணன் செல்வம் மொண்டெடுத்து—தக்க
வறிஞர்க்கே இல்அமைத்து வாழ்வளிப்போம் மற்றும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—என். சண்முகம், அனக்காவூர்.

மக்களுக்குச் செய்தொண்டே மாதேவர்த் தொண்டென்றால்
புக்கிலின்றி நோயுற்றோர், போக்கற்றோர்,—தொக்க
மருந்தோ டுணவளிக்கும் வாழ்வில்லம் காணும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

குறைசொல்லும் கூட்டம் குமையட்டும்! நாம்நம்
நெறிசெல்வோம்! நன்றே நினைப்போம்!—முறையே
விருப்புடனே நாட்டுமக்கள் மேலுயர்ந்து வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—கலாவதி சீனிவாசன், பி.ஏ.,பி.டி., மேல்கொடுங்காளூர்.

மூடப் பழக்கம் 'முடைநாற்ற'க் கொள்கைகளைச்
சாடி விரட்டிடுவோம் செந்தமிழீர்!—சுடில்
பெரும்பணியாய்த் தந்தை பெரியார்தாம் செய்த
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

தன்மானம் என்னும் தகைமையினை எம்மிடையே
பன்முறையில் சேர்த்த பகலவனே! என்றும்
உருப்படியாய் யாம்வாழ ஓர்ந்துழைத்தாய் உன்றன்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் நா. தண்டபாணி, பூங்குடி.

வாய்மையே வெல்லுமெனும் வண்டமிழர் கோட்பாட்டைச்
சேய்மை யுளநாடும் சிந்திக்கத்—தூய்மைத்
திருப்புகழை யீட்டுதற்குத் தேயமெங்கும் சுற்றித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பூங்குழலி, பொருளூர்.

பள்ளத்தில் வீழ்ந்தோர்க்கே பாடுபட்டு நாட்டோரின்
உள்ளத்தில் வாழ்கின்றார் நம்பெரியார்—கிள்ளையே!
விருப்புடனே தன்னலத்தை வேரோடு நீக்கித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பா. பக்தவத்சலம், மன்னார்குடி.

ஏழ்மை அறியாமை இன்னநோய் பற்பலவாம்
தாழ்மை உயர்வற்றுத் தாய்நாட்டின்—வாழ்வு
உருப்பெறவே நாமெல்லாம் ஒற்றுமையாய் நின்று
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ச. மீனாட்சிசுந்தரம், ஆவுடையார்கோவில்.

கற்றோரும் அறிவியற் கல்விகள் ஆயிரம்
பெற்ற அறிவைப் பெருக்கிநாம்—சுற்றே
உருப்படியாய் இந்த உலகினர் வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பகவதி அப்பன், சென்னை-5.

நாட்டின் நலம்பெருக நன்மை வளம்பெருக
வீட்டின் குறைகள் வெருண்டோட—நாட்டில்
அரும்பணிகள் ஆக்கமுற அன்புடனே நல்ல
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மா. குணசேகரன், தேவகோட்டை.

இருமை வகையறிந்தே இன்பமுடன் வாழ்ந்து
பெருமையுடன் பார்புகழப் பண்பால்—அருமை
பெரும்பணிகள் செய்தநம் முன்னவர்போல் நாமும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கஸ்தூரி, நான்குனேரி.

மக்கள் விருப்பறிந்து மாட்சியுடைக் கோலோச்சி,
திக்கெட்டு மீர்க்கும் செயலோடு,—மிக்க
உருப்பெற்ற சாதிமதம் ஓலமிட்டே ஓடும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பொன்னியின் செல்வன், திருவேதிக்குடி.

நல்ல குடியிருப்பு நல்லுணவு நல்லாடை
எல்லா எளியவர்க்கும் ஈந்திடவே—எல்லாம்
ஒருங்கிணைந்து பாடுபட உள்ளமுளோர் வாரீர்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ரஹீம், சின்னக்கற்பூரம்பட்டி.

மறுவாழ்வு; கண்ணொளி; மாந்தர்க்குக் கல்வி;
வறுமைதீர் நிலப்பட்டா, நலத்திட்டம்:—சிறுதொழில்
பெருகிடவே சட்டங்கள்; நாட்டுடைமை; அரசின்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் நா. கோவிந்தச் செட்டி, வெங்கட்டம்பட்டி.

கண்ணைத் திறந்திட்டோம்; கைவண்டி மாற்றினோம்;
எண்ணித் தொழுநோயர்க் கில்லீந்தோம்—மண்ணில்
உருப்படியாய் ஏழைகள் உய்வடைய இன்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—முரு. இராசாங்கம், பி.எஸ்சி., பி.டி., குடவாயில்.

தூரெடுப்போம்! மண்சுமப்போம்! துப்புரவுச் சேவைதனை
ஊரூராய்ச் செய்திடுவோம்! ஓய்வறியோம்!—சீராய்
அரும்பாதை, பாலம், அணையாவுங் கட்டித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

ஆரூர் திருத்தேர் அழகு வலங்கண்டோம்!
சீருறாம் பூம்புகாரைச் செய்தமைத்தோம்!—ஊரில்
திருத்தமிழ்ப் பூசை செவியுற்றோம்! இன்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் புனிதா மணாளன், ஓலைப்பாடி.

# வெண்பாப்போட்டி

உள்ள உணர்வாலே ஒன்றுவோம்; பள்ளமுறும்
வெள்ளமெனப் பாய்ந்தெழுந்து வென்றுயர்ந்தோம்—வெல் ஊம்
பெருமையுடன் நாம்வாழப் பேரறிஞர் தேர்ந்த
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—தவமுத்து. அண்ணாமலை, பி.ஏ.பி.டி. தவசி.

சாதிக் கொடுமை தகர்த்தெறிந்தோம்! யாவர்க்கும்
நீதி முறையாய் நிலைசெய்தோம்!—மீதிப்
பொறுப்பும் உணர்ந்திதுவே பொற்காலம் ஆகத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

தஞ்சையுங் கல்லணையுந் தார்சூடு தில்லையுங்
கொஞ்சமொரு காஞ்சியுங் கூடலுந்தான்—துஞ்ச
உருப்படியாய் நாமும் உழைப்பாளி வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—து. உருக்குமணி, கரட்டூர்.

கலைக்கோயில் ஓவியங்கள் காண்பரிய சிற்பம்
மலைக்கோயில் செய்ய மலையோம்—நிலைத்த
அருமைசால் நம்மரசு ஆணையிட்டாற் போதும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் க.சு. தமிழ்ப்பிரியன், ஆலாம்பாளையம்.

எண்ணமெனும் கோயிலுக்கு ஏற்றுகின்ற தீபந்தான்
எண்ணரிய நற்கருமம் ஏற்றிடுதல்—எண்ணி
அரும்பணிகள் ஆற்றிட்ட ஆன்றோர்கள் போன்று
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, ஆதமங்கலம், (வ.ஆ.).

கல்லில் கலைவழியும் கன்னித் தமிழகம்போல்
இல்லை இகமெங்கும் எண்ணியதைப்—பல்லோர்
விருப்புடனே காண விரைந்திடவே இங்கு
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—நா. சுந்தரேசன், செங்காடு.

அன்பின் திருவுருவாய் அண்ணல் பிறந்திட்ட
பொன்விளையும் பூமியிலே அண்ணாவும்;—பொன்று
அரும்பணிகள் ஆற்றிட்டார் அன்னார்போல் நாமும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—வெ. கோதண்டன், அனப்பத்தூர், (வ.ஆ.)

கோயில்கள் தோறும், குலவுந் தமிழிசைக்கும்;
தோய்ந்தோர்க்கும் சித்தரது நுண்கலைக்கும்;—ஆயும்
உருப்பொருள் காண்பதற்கும்; உள்ளம் மகிழ்ந்தே
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

கலைச்சின்னம் காண்போர் கரையிலவாய்க் கோயிற்
சிலைச்சிற்பம் காக்கின் சிறப்பே!—மலை! ஆம்!
திருவாரூர்த் தேரோட்டிச் செய்தபணி போலே
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—தி. பார்த்தசாரதி, மதுரை-1.

நாட்டுக் குழைப்போர் நடுகல்லாய் நின்றுயர்வர்!
பாட்டுப் பொருளாவர்! பால்மொழியே!—நாட்டில்
பெருவளங்கள் ஓங்கிப் பிணிவறுமை நீங்கத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

சாதிநிலை போக்கிச் சமத்துவ மாக்கவும்;
நாதியற்றோர் மண்ணில் நலம்பெறவும்;—நீதியான
பேருழைப்பால் நாடு பெரிதும் உயரத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கா.நா. இலக்குவன், சின்கோனா.

நாடு மொழியினம் நன்மைகள் பெற்றிடவே
வாடும் செயல்நீக்கி வையத்தில்—கூடும்
அருங்குணத்தார் குன்றாமல் ஆர்ந்திடவே, ஒப்பில்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—த. இராமலிங்கன், சின்னமணல்மேடு.

ஆலயங்கள் உண்டாக்கி, ஆண்டவனைக் கொண்டாடிக்
காலத்தை வீணே கழிக்காமல்—ஞாலம்
உருப்படவே நாமெல்லாம் ஓய்வின்றிக் கல்வித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் சு. இராமானுசன்,ஆ. தெற்கூர்.

ஆலயங்கள் கட்டி அருகில் குளந்தொட்டு
கோலக் குடமுழுக்குச் செய்தலினும்—காலம்
உருக்குலைத்த ஏழை உயர்வாழ்வு காணும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—சு. தங்கப்பன், பி.எஸ்சி., பி.டி., சிங்கோனா.

புதுக்கோட்டை மாவட்டம் பூத்ததுகாண் நாட்டில்!
இதுபோல் எழுமினும் ஏற்போம்!—அதனால்
உருவாகும் கல்வளத்தை உய்யநா மின்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—இரா. ஈகவேந்தன், கத்தரிப்புலம்.

பெற்றோரை ஆதரித்துப் பேணல்; திருத்தாலி
பெற்றாளை யும்மதித்தல்; பிள்ளைகளுக்—குற்ற
அருக்கல்வி ஊட்டி அவையேற்றல் ஆன
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—நோடுதீர மதமாடிசிதானு, காளனூறு.

தாய்க்கொரு கேடென்றால் தாய்மொழிக்குத் தீதென்றால்
தாய்நாட்டை மாற்றான் தனதென்றால்—ஓய்வே
கருதாமல் தீமையைக் கல்லி எறியும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—விநோதலீலன், இரா. வெள்ளோடு.

ஊழ்வினையென் றேங்கா துழைக்குங்கால், வாட்டுகின்ற
ஏழ்மைப் பிணியகலும்; யாமுயர்வோம்—தாழ்ந்து
தரங்குன்றி வீழாது தாரணியில் உய்யத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ப. திருவேங்கடம், திருச்சி-4.

17

# இலக்கியப்பணி இரண்டாவது நூற்றாண்டாகத் தொடருகிறது!



1865 ஆம் ஆண்டிலேயே, ''அச்சேறிய தமிழ் நூல்கள்'' என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூலை முதன் முதலாக வெளியிட்டது ஒரு சங்கம். டாக்டர் ஜான் மர்டாக் என்பவர் எழுதிய இவ்வரிய நூலினை, 1968-ஆம் ஆண்டில் தமிழ் நாடு அரசு மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது என்றால் அத்தகைய பெருமையினையுடைய சங்கம் எதுவாக இருக்கும்?

அதுதான் சென்னைப் பூங்கா நகரில் நூற்றாண்டுகளுக்கு மேல் புத்தகப் பணியாற்றி வரும் கிறித்தவ இலக்கியச் சங்கம் (Christian Literature Society).

அன்னைத் தமிழுக்கு அரும் பணியாற்றிய கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் பலரை நாமறிவோம். வீரமாமுனிவர், கால்டுவெல், போப், மாயூரம் வேதநாயகம் பிள்ளை போன்ற அறிஞர்கள் தமிழுக்குப் பெரும் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்தச் சங்கமும் தொன்று தொட்டு பல நல்ல பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது.

1858-ஆம் ஆண்டில் 'கிறித்தவ சுதேச மொழிக் கல்விச் சங்கம்' என்ற பெயரில் தொடங்கப்பெற்ற இது, பதினைந்து ஆண்டுக்காலத்திற்குள் இந்தியாவிலேயே மிகப்பெரிய ஒரு புத்தக வெளியீட்டுச் சங்கமாக விளங்கிற்று. 1891-ஆம் ஆண்டில்தான் இச்சங்கத்தின் பெயர் 'கிறித்தவ இலக்கியச் சங்கம்' என மாறியது.

கல்விப் பணியும் சமயப்பணியும் குறிக்கோள்களாக இருப்பினும் மொழிப் பணியும் இவற்றுடன் சேர்ந்து கொண்டது. ஏறத்தாழ முக்கிய இந்திய மொழிகள் அனைத்திலும் நூல்களையும் பத்திரிகைகளையும் முதன் முதல் அச்சிட்டு வெளியிட்டு நாட்டின் கல்வி, சமய மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு இது வித்திட்டது. இனிய எளிய நடையில் நூல்களையும், வெளியீடுகளையும் வெளியிட்டு, அவை மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வழி செய்தது. அத்துடன் ஆசிரியர்களுக்கான பாடத்திட்டங்களை வகுத்து அதற்கேற்பப் பாட நூல்களை எழுதியும் வெளியிட்டது. பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக் கழகங்கள் தோன்றிய காலத்தில் இச்சங்கமும் தோன்றியதால், உயர் கல்வித் தொடக்க முயற்சியில் பங்குபெறும் நல்வாய்ப்பும் இச்சங்கத்திற்குக் கிட்டியது.

1914-ஆம் ஆண்டு வெளியான ஓர் அறிவிப்பின்படி இச்சங்கம் ஐம்பத்தைந்து ஆண்டுகளில் 500-க்கும் மேற்பட்ட வெளியீடுகளை, 22 மொழிகளில் வெளியிட்டது என்றால் இதன் அயராப் பணி நன்கு விளங்கும். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, வங்காளம், உருது, மராத்தி, குசராத்தி, ஒரியா, சிங்களம், பர்மீயம் ஆகிய மொழிகள் முக்கிய இடம் பெற்றிருந்தன.

இத்தகைய சிறப்பினையுடைய இச்சங்கத்தை உருவாக்கி வளர்த்த பெருமை ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜான் மர்டாக் என்பவரையே சாரும். இவரே இச்சங்கத்தின் முதல் பொதுச் செயலாளராக நாற்பது ஆண்டுகள் நற்பணியாற்றி வந்திருக்கிறார். இவரால் அமைக்கப்பட்ட துண்டு வெளியீட்டுச் சங்கங்கள் இன்று இந்தியாவெங்கும் பரவியுள்ளன.

இந்தியாவைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய தொகுப்பு நூலை (Indian Year Book) முதன் முதலாக வெளியிட்டவர் டாக்டர் ஜான் மர்டாக்.

இந்த இலக்கியச் சங்கத்தின் ஒரு அங்கமாக இருப்பது இப்போதுள்ள டயோசிசன் அச்சகம். இது முதலில் எஸ்.பி.சி.கே. அச்சகம் என்ற பெயரில் இருந்தது. இந்த அச்சகம் வரலாற்றுப் பெருமையுடையது.

1760-ஆம் ஆண்டில் வேப்பேரியில் உருவாகி இந்திய அச்சுத் தொழில் வரலாற்றில் இது முக்கிய இடம் வகித்து வருகிறது. இதில் பணியாற்றியவர்கள் இன்று இந்தியாவெங்கிலும் உள்ளனர்.

அனைத்திந்திய மொழிகளிலும் மட்டுமின்றி பாரசீகம், ஐரோப்பிய மொழிகளிலும் அச்சுக்கள் உள்ள இந்த அச்சகம் 114 ஆண்டுகளாகப் பணி செய்துவரும் ஒரு பழம்பெரும் அச்சகமாக விளங்கி வருகிறது.

கேரள மாநிலத்தில் இதன் கிளையாக ஒரு புத்தகாலயம் இருக்கிறது. அது மலையாள மொழியில் நூல்களை வெளியிட்டு வருகின்றது. கோவை, கொடைக்கானல், திருச்சி, மதுரையிலும் இதன் கிளைகள் செயல்படுகின்றன. ஐதராபாத்தில் தெலுங்கு மொழி நூல்களை வெளியிடுகிறது, ஒரு புத்தகாலயம்.

எல்லாவற்றிற்கும் தாயாக இருந்து சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்தச் சங்கம்தான், முதன் முதலில் குழந்தை நூல்களையும் வெளியிட்டுள்ளது. ராபின்சன் குருசோ போன்ற சிறுவர் நூல்களோடு சிறுவர் சிங்காரவனம், பூர்வீக கிரேக்கரின் சித்திரப் படச் சரிதைகள், இயேசுவின் இளமை, முத்து சிற்றுயிர் முதலிய அற்புத ஐந்துகள் போன்ற சிறுவர் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

எந்தப் பதிப்பகமும் வெளியிடாத அளவுக்கு ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ள இதுவே திரு. எச்.வி. கிருஷ்ணப்பிள்ளையின் 'இரட்சண்ய யாத்திரிகம்' என்னும் நூலை முதன் முதலாக வெளியிட்டது.

புத்தகவெளியீட்டில் ஒரு புரட்சியை உண்டாக்கிய இது 'நண்பர் வட்டம்' என்ற அமைப்பின் மூலம் இலக்கியப் பணியையும் ஆற்றி வருகின்றது. 1969-ல் தொடங்கப்பெற்ற இது, ஆண்டுதோறும் தமிழர் திருநாளின்போது இரு நாட்கள் எழுத்தாளர்-வாசகர் கருத்தரங்கினை சிறப்பாக நடத்தி வருகின்றது. இது வரை ஐந்து கருத்தரங்குகளை நடத்தி, கருத்தரங்குகளில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை நூலாகவும் வெளியிட்டிருக்கின்றது. தமிழ் நாவல்கள் சிறு கதைகள், கதை பிறந்த கதை, இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன், விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்களின் கருப்பொருள்களும்— போங்கும், தமிழ் நாவல்களில் மனித விமோசனம் போன்ற தலைப்புகளில் நடத்தப்பட்ட கருத்தரங்குகள் சிறுகதை, நாவல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கின்றன. கருத்தரங்குகள் தவிர அவ்வப்போது இலக்கியக் கூட்டங்களையும் இது நடத்தி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் ஒரு தூண்டுகோலாய் விளங்கி வருகின்றது.

இவ்வாறு புத்தகப் பணியோடு, தமிழ் இலக்கியப் பணியையும் செவ்வனே ஆற்றி வருகிறது இச்சங்கம்.

—பி.வி.ஜி.



புத்தகமண்டபத்தின் ஒரு தோற்றம்



கருத்தரங்கில் ஒரு காட்சி

# வாழும் முறைக்கு....!

**இல. பழனியப்பன்.**

பண்பாடு பற்றி அறியாதவர்களை இன்றைய நாட்களில் காண்பதரிது. பண்பாடுபற்றிப் பேசாத நாளில்லை. பேசாத நாடில்லை. உலகெங்கும் ஒரே பண்பாட்டைக் காண்பதரிது. ஏன், ஒரே நாட்டிலே கூடப் பண்பாடு பல்வேறுபட்டவைகளாகத் திகழ்கிறது. இதுகாறும் பண்பாடு பற்றிப் பேசியோர், எழுதியோர் அனைவரும் தனிப்பண்பாட்டைப் பற்றியே எடுத்து மொழிந்துள்ளனர். பண்பாடு பல்வேருக இருப்பினும் அனைத்திற்கும் பொதுவாகச் சில அடிப்படைக் கோட்பாடுகள் பொதுத்தன்மைகள் உண்டு என்று உலகுக்கு உணர்த்தியவர்கள் சமூகவியல் அறிஞர்களே (Socialogists) ஆவர்.

மனிதன் விலங்குகளைப் படித்தான்; வானிலே வட்டமிடும் வண்ண நிலாவிலே உலா வந்தான். பறவைகளின் பான்மையினைப் படித்தான். அனைத்துத் துறையையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாகத் தன்னைச் சுற்றிய உலகைப்பற்றி எண்ணத் தொடங்கினுன். இந்த விழிப்புணர்வே சமூக அறிவியற் கலைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாகும். சமூக அறிவியற் கலைகளுக்குச் சிகரம் வைத்தாற் போலுள்ள கூறு பண்பாடு. எந்த இனமும், மொழியும், நாடும் பண்பட்டாலொழிய நாகரிக வளர்ச்சி ஏற்படாது. நாகரிகத்தின் அச்சாணியே பண்பாடு. தனி மனிதனையும் அவனது கூட்டு வாழ்வையும் அறிய அடிப்படைக் கருவியாக அமைந்துள்ளது பண்பாடு ஒன்றே எனில் மிகையாகாது.

பண்பாடு என்றால் என்ன? என்று ஆராய்கின்றபோது பல திறப்பட்ட விளக்கங்கள் நம்முன் படைக்கப்படுகின்றன. பொதுவாகச் சொல்லப்படுகின்ற பண்பாட்டு விளக்கங்கள் குழப்பந் தருபவையாகவே அமைந்துள்ளன. காட்டாக நாம் ஒரு குறிப்பிட்ட மனிதரைப் பண்பாடுற்றோர் என்றும், மற்றொருவரைப் பண்பாடற்றோர் என்றும் கூறுகிறோம். நற்செயல்களும், நற்பண்புகளும் அமைந்தவரைப் பண்பாடுற்றோர் என்றும், தீச்செயல்களும் தீய பண்புகளும் கொண்டவர்களைப் பண்பாடற்றோர் என்றும் பாகுபாடு செய்கிறோம். ஆனால் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டைப் பெற்றிருந்த போதிலும்கூட, எல்லா மனிதர்களும் குழுக்களும் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டைப் பெற்றிருந்த போதிலும்கூட, எல்லா மனிதர்களும் பண்பாடுடையோர்

என்பதே சமூகவியல் அறிஞர்களின் கருத்து. ஆகவே ஈண்டு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் சில வழி முறைகளே பண்பாடாகிறது. அந்தச் சமுதாயம் அதன் உறுப்பாகிய ஒவ்வொரு தனி மனிதனிடமும் சில குறிப்பிட்ட சூழல்களில் சில குறிப்பிட்ட பண்புகளையும் செயலுணர்வுகளையும் எதிர்பார்க்கிறது. அந்தக் குறிப்பிட்ட செயல்கள் அச்சமுதாயத்தின் பொதுச் சொத்தாகிய பண்பாடாகக் கருதப்படுகிறது. நம் சமுதாயத்தில் சில சமூகப் பழக்க வழக்கங்கள் நடைமுறையில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. காட்டாக உணவுமுறைகள், திருமண முறைகள், உடை அமைப்புக்கள் இன்ன பிறவற்றைக் கூறலாம். இவ்வாறு வாழ்வின் இன்றியமையாக் கூறுகளில் பின்பற்றப்படும் பழக்கங்களின் ஒருமைப்பாடே பண்பாட்டின் அடித்தளமாகும்.

''பண்பாடு (Culture) என்ற கருத்துச் சொல்லில் அடங்கும் முக்கிய பான்மைகளும் அம்சங்களும் எவை? 'மனித ஆளுமை' (Human Personality) என்பது ஓர் ஆளின் முழுஇயல்பு, பான்மை, திறமை முதலியவற்றைக் குறிப்பது போலப் பண்பாடு என்பதும் மக்களுடைய சிந்தனை, சொல், செயல், கருவிகள் ஆகிய அனைத்தின் முழுமையாகும். இயற்கையாக-பிறவியில் பெறுவதல்ல. எண்ணித் துணிந்து ஏற்றுக் கொள்ளுவது மீண்டும் மீண்டும் செய்து பதமாகியது. அவை கற்றுப் பயின்றமைந்த செயல்முறைகள்; வாழ்க்கையில் அது தொடர்ந்து மாறுதல் அடையும் போக்குடையது. ஒரு மக்கட் தொகுதியின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பொதுவாக அனுசரிப்பதும், தங்களை வழிப்படுத்திக் கொள்ளும் 'ஆற்றுப்படை' யாகக் கொண்டதுமாகும். பின் சந்ததிகளுக்குப் பாரம்பரியங்களுமாகும்.

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கருவிகளின் உதவிகளைத் தேடிய நாள் முதலே பண்பாடு தோன்றியதாகக் கொள்ளலாம். பண்பாடு என்பது தொடர்ந்து மாறும் தன்மைத்து என்பதும், நம்மால் கற்றுக் கொள்ளப்படும் செயல் என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. இவ்வாறு அறியும் ஒழுக்கங்களின் (Learned behaviour) மூலமாகத் தோன்றும் நோக்கங்கள் (Attitudes) மதிப்பீடுகள் (Values) அறிவு (Knowledge) காட்சிப் பொருள்கள் (Material objects) ஆகியவையும் பண்பாட்டின் கூறுகளேயாகும். இவைகள் யாவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள மனிதர்களிடையே மாற்றிக் கொள்ளப்பட்டும், பங்கிடப்பட்டும் வருகின்றன. எனவே இச்செயல்களும் பண்பாட்டினுள் அடங்கும். ஆக, வாழ்வின் பொதுப்படைக் கூறுகளில் உள்ள ஒருமைப்பாடு, பண்பாட்டின் பொது அடித்தளமாக உள்ளது என்பது ஐயந்திரிபற்ற உண்மை.

தனிப்பண்பாடும் பொதுப் பண்பாடும் வேறுபட்டவையாகும். தனிப்பண்பாடே (Specific Culture) பொதுப் பண்பாட்டிற்கு (General Culture) அடிப்படை; ஏனெனில் தனிப்பண்பாட்டை வைத்தே பொதுப்பண்பாட்டை நிறுவ வேண்டும். மக்களை அறிந்து கொள்ள இருவகைப் பண்பாட்டை அறிதல் அவசியம்.

சில நேரங்களில் பண்பாடும் சமுதாயமும் ஒன்றாகப் பேசப்படுகின்றன. இந்த இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாட்டைபற்றி உணராவிடில், பண்பாட்டுப் பாகுபாட்டில் குழப்பமே மிகுதியாகும். ஆனால் பண்பாடும், சமுதாயமும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புள்ளன என்பதையும் மறப்பதற்கில்லை. சமுதாயமில்லாமல் பண்பாடில்லை. பண்பாடில்லாத சமுதாயமில்லை. பண்பாடு மக்கள் சமுதாயத்திலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. பல்வேறு தனிப்பட்ட மனிதர்களே ஒரு குழுவாகி, சமுதாயத்தை அமைக்கிறார்கள். அக்குழுவின் பொது நடத்தையே பண்பாட்டைப் படைக்கிறது.

எல்லாப் பண்பாடுகளும் பல்வேறுபாடுகளும், சில ஒருமைப்பாடுகளும் கொண்டவையே. இன்றைய நாட்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் எல்லாப் பண்பாடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற அறிவியல் ஆர்வம் வளர்ந்துள்ளது. பல்வேறு பண்பாட்டிற்கு இடையேயுள்ள இந்த வேறுபாடு எவ்வளவு தூரத்திற்குச் செல்லும்? ஏன் இந்த வேறுபாடுகள் ஏற்படுகின்றன? பல்வேறு பண்பாட்டிற்கிடையே ஒருமைப்பாடுகள் எவையேனும் உளவா? என்பன போன்ற அறிவியல் ஆர்வக் கேள்விகளே, பண்பாட்டு ஒருமைப்பாட்டையும், வேறுபாட்டையும் அறிய ஏதுவாய் அமைகின்றன.

பொதுவாக பண்பாட்டு வேறுபாடு, கீழ்க்காணும் நான்கு துறைகளில் இருப்பதாகச் சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

(1) பால், திருமண, குடும்ப அமைப்புக்களிலுள்ள வேறுபாடுகள் (Variabilities in Sex-marriage family structure).

(2) சமயங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் (Variabilities among religions).

(3) அரசாங்க அமைப்புக்களிலுள்ள வேறுபாடுகள் (Variabilities in Governmental Systems).

(4) பொருளியல் தன்னிறைவுகளிலும், எண்ணங்களிலும் உள்ள வேறுபாடுகள் (Variabilities in economic persuits and ideas).

குடும்ப அமைப்பிலும் திருமண முறைகளிலும் உள்ள வேறுபாடுகள் பலதிறத்தன. மணமகளைத் தேர்ந்தெடுப்பதிலேகூட வேறுபாடுகள் உள்ளன. குடும்ப நிருவாகங்களில் கூட சில சமுதாயங்களில் தகப்பனைத் தலைமையாகக் கொண்ட குடும்பமும் (Patriarchal family) வேறு சிலவற்றில் தாயைத் தலைமையாகக் கொண்ட குடும்பமும் (Matriarchal family) உள்ளன. இவ்வாறு குடும்ப அமைப்பு, மணமுறை, பால் உறவு, ஆகியவற்றில் ஒவ்வொரு பண்பாடும் மிக்க மாறுபாடு கொண்டு திகழ்கிறது.

அடுத்த நிலையில் சமயங்களுக்கிடையேயுள்ள மாறுபாட்டினை நோக்கின் அவை எண்ணிறந்தனவாம். ஒவ்வொரு பண்பாடும் தனக்கென ஒரு சமயத்தைக் கொண்டிருப்பதோடு, சமயநெறிகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிலும் வேறுபாடு கொண்டு திகழ்கிறது.

உலகெங்கும் அரசாங்க அமைப்பு முறைகளில் உள்ள வேறுபாடுகள் நாம் நன்கறிந்த ஒன்றாகும்.

அவ்வாறே பொருளியல் கொள்கைகளிலும் அதை அடையும் வழி முறைகளிலும் ஒவ்வொரு சமுதாயமும் வேறுபடுகிறது இவ்வாறு பண்பாடு, பல்லாற்றானும் வேறுபாடு கொண்டு திகழ்கிறது.

பண்பாடு வேறுபாட்டிற்குரிய காரணங்களை ஆய்கின்றபொழுது பல காரணங்களைக் காண முடிகிறது. பூகோளச் சூழ்நிலை (Geographical environment) என்ற காரணம் ஓரளவிற்கு உண்மையெனினும் இதுமட்டுமே போதுமான காரணமாகாது. ஏனெனில் மனிதன் எல்லாவித தட்பவெப்பநிலையிலும் வாழ,மாற்று முறைகளைப் (Alternatives) பெற்றிருக்கிறன். அவ்வாறே இனப்பாகுபாடும் சரியான காரணமாகப் படவில்லை. ஏனெனில் இனவளர்ச்சி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் மாறுபடுகிறது. இது நாம் உலக வாழ்வில் காண்கின்ற பேருண்மை.

பின் ஏன் பண்பாட்டில் வேறுபாடு ஏற்படுகிறது? மனிதனின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள் இவற்றை நிறைவேற்றப் பல்வேறு வழிகள் மனிதனால் உலகெங்கும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தன் சிக்கல்களைத் தீர்க்க மனிதன் காலத்துக்காலம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் புதிய புதிய வழிமுறைகளே பண்பாட்டு மாறுபாட்டிற்குக் காரணம்

## இதோ இன்னொரு சமதர்ம நல்வாழ்வுத் திட்டம்.

கண்ணொளி வழங்குதல், கைரிக்ஷாக்களுக்குப் பதில் இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குதல், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தல், குடிசைகளை மாற்றி குறைத்த வாடகையில் நல்ல வீடுகள் அளித்தல், அரிசனங்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைத்தல், போன்ற ஏழை மக்களுக்கான சமதர்ம நல்வாழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்ற நமது தமிழக அரசு இன்னொரு சமதர்ம நல்வாழ்வுத் திட்டத்தை இப்பொழுது அறிவித்துள்ளது.

கைகால் ஊனமுற்றோர், கண்கள் பழுதடைந்தோர், ஊமையர்களாக இருப்போர் ஆகிய அங்கஹீனர்களில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பும், அவர்களில் படிக்காதவர்களுக்கு அரசின் சார்பில் நிவாரண உதவியும் அளிப்பது பற்றித் திட்டம் தயாரிப்பதற்காக தமிழ் நாட்டில் இத்தகைய உடல் ஊனமுற்றோர் தொகையை உடனடியாக கணக்கு எடுக்கும்படி அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.





ளாற ஒண்ணுன நம்பஞக்குள்ளே இம்மாதிரியான வளமை வாடிக்கையெல்லாம் தேவையில்லேதான். ஆனாலும் உங்களையும் என்னையும் அந்நியம் அசலாட்டம் ஆக்கி வச்சு, கண்ணாமூச்சி ஆடிக்கிட்டு இருக்கிற நம்பளோட குடும்ப விவகாரத்துக்கு ஊடாலே, உங்க வீட்டுக்கு நானே வலிய வந்திருக்கிற இந்த நிலவரத்திலே, வந்த பொண்ணை 'வா'ன்னு ஒரு பேச்சுக் கூப்பிடாட்டி, ரோசம் தாங்குதுங்களா?'' என்று விநயமும் குறும்பும் கூட்டிச் சொன்னாள். மஞ்சள் பூசிய வதனம் பெருமையோடு விளங்கியது. நாணம் பூசிய நயனங்கள் சுருவத்தோடு பொலிந்தன. சாதி மல்லி கமழ்ந்தது.

ஓவியத்தை ரசிக்கத் தெரிந்தவனுக்கு உயிரோவியத்தை ரசிக்கத் தெரியாதா? ''என் அன்னத்தைப் பத்தி நான் படிக்காததா? உன்னைக் கண்ட படியும்தான் அப்பாகிட்டே சொல்லிட்டு வந்திட்டேனே?'' என்று கூறினான். பயந்த சுபாவம் படைத்தவன் மாதிரி 'பாவலா' காட்டிவிட்டு, நகைத்தான். அப்புறம், "காய்ந்த எச்சில் கையைக் காட்டி உன் அத்தான் உன்கிட்டே பொய் பேசுவேனா? தோசை சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். காசி பச்சைக்கொத்தமல்லித் துவையல் வச்சிருந்தார். அதைக் கண்டதிலேயிருந்து உன்னைப் பற்றின நினைப்பிலேயே போராடிக்கிட்டிருந்தேன். அப்பத்தான் நீ வந்திருக்கே!'' என்று விளக்கினான்.

''ஆத்தாடியோ! இப்பத்தானா பலகாரம் சாப்பிட்டீங்க! உச்சிக்கு வந்திடுச்சே சூரியன்?' என்று பதறினாள் அன்னம்.

''நான் என்ன செய்யட்டும்? என்னைப் பெற்ற ஆத்தாளோ கண்ணை மூடிக்கிட்டாங்க. எனக்காகக் காத்துகிட்டு இருக்கிற உற்றவளோ கண்ணை மூடிக்கிட்டு இருக்கா!'' என்றான்; ஆற்றாமையோடும் ஆறாத் துயரத்தோடும் வார்த்தைகள் வெளி வந்தன.

அவன் வேதனை அவள் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டும். ''என்னை என்ன செய்யச் சொல்லுறீங்க, அத்தான்? வேளை கூடிவந்தா, நான் ஓடி வந்து உங்க காலடி நிழலிலேயே மண்டிபோட்டு ஒண்டியிருந்துக்கிட்டே, மம்மலிலேயே உங்களுக்குச் சுடச்சுட தோசையும், உறைக்க உறைக்க பச்சைக் கொத்தமல்லித் துவையலும், இனிக்க இனிக்கக் காப்பித் தண்ணியும் தந்துப்பிட மாட்டேனுங்களா?'' என்று உருக்கமாகப் பேசினாள், அன்னம்.

இப்போதைக்கு மூச்சை நெட்டித் தள்ளுவது ஒன்றுதான் அவனுக்கு நேர்பாதையெனத் தோன்றியது. ''சரி, வா உள்ளே! அப்பன்காரருக்கு மேலுக்கு முடியல்லே!'' என்றான்.

அன்னக் கொடி பதறிப் போனாள். ''அயித்தை புருசனுக்கு மேலுக்கு என்னாங்க வந்திச்சு, அத்தான்? இம்மாம் பொழுதுக்குச் சொல்லவே இல்லீங்களே?'' என்று வருந்தினாள்.

''அப்பாருக்கு உடம்பு சரியில்லேன்னு கேள்விப்பட்டுத்தான் விசாரிக்க வந்திருக்கியோன்னு நான் நினைச்சேன்!''

''அந்தத் துப்பே காதுக்கு எட்டலீங்க. நீங்க உங்க படிப்பிலேயும் பரீட்சையிலேயும் நல்லதனமாய்த் தேறிவிட்டதாக ஆரியப்பூ தான் காதிலே ஓதுச்சுங்க. இங்கே கமுக்கமாய் வந்து குதிக்கிறதுக்கு காலம் பறவே பிடிச்சுத் துடிச்சேனுங்க. அகிலாண்டத்தையும் அமிர்தத்தையும் கேட்டுக்கிடுங்க! செத்த முன்னாடிதான் எங்க அப்பன்காரப் புண்ணியவானோட தலை மறைஞ்சுது. ஊம், நடங்க அத்தான்!'' என்று துருசுப்படுத்தினாள் சிங்கப்பூர்க்காரர் மகள். ''உதயத்திலே நான் தண்ணி இறைச்சுத் திரும்பையிலே சாலையோரத்திலே உங்களை எட்டத்திலே வச்சுக் கண்டப்போ, எனக்கு ஒரு விசயமும் தெரியாதுங்களே!'' என்று குறிப்பிடவும் தப்பவில்லை வீரமணியின் முறைப்பெண்.

ஆதிமூலத்தேவருக்கு காப்பியில் சூடு பறக்க வேண்டும். இல்லையேல் அவரது பொறுமை பறந்துவிடும். காசி, சாயத்துண்டை எட்டாக மடித்து, அதில் காப்பிக் குவளையை வைத்துக் கையில் ஏந்தி வந்து நீட்டிய சடுதியிலேயே அதை வாங்கி 'மட மட' வென்று குடிக்க ஆரம்பித்த அவர், 'நைலக்ஸ்' புடவையின் சலசலப்பும் சரிகை வேட்டியின் படபடப்பும் முடங்கிக் களித்திட்ட ஓசை கேட்டுப் பின்புறம் திரும்பிப் பார்த்து விட்டு, மீண்டும் தம் கருமத்தில் கண் ஆனார். சொட்டு மிச்சம் வைக்காமல் பருகித் தீர்த்த பின்னர்தான், அவர் ஏப்பம் விட்டார்; பார்வையை நிமிர்த்தினார். காப்பியின் சூடு அடிவயிற்றில் இன்னமும் சுட்டுக்கொண்டிருந்தது. சூடு என்றால் அதில் அவருக்கு ஓர் அலாதி ருசி தான்!

''அம்மான் மகளும் அயித்தை மகனும் இம்மாம் பொழுதுக்கா ரகசியம் பேசிக்கிட்டு இருக்கோணும்?''

கேள்வியில் சூட்டைக் காண்பிக்காமல், ஆனால், கேள்விக்கு சூடுகாட்டிக்கேட்டார் தேவர். அன்னக்கொடியையும் வீரமணியையும் தமக்கே உரித்தான புதிர்நோக்குடன் ஊடுருவித் துழாவினார் அவர்.

தந்தைக்குத் தந்தையாக மட்டுமல்லாமல், தாய்க்குத் தாயாகவும் விளங்கித் தன்னை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தைக்கு இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடவா உரிமை இல்லை? எனவே, உரிமைப் பிரச்சினை எதையும் கிளப்பத் தயாராக இல்லை அவன்—வீரமணி.

ஆனால், அன்னம், தன் அத்தையைக் கொண்டவரின் வினாவை அவ்வளவு லேசாக எடுத்துக் கொள்ள ஒப்பமாட்டாள். மகிழ்ச்சியின் ரேகைகள் மறையத் தொடங்கின. ''ஊர் உலகத்துக்கோ, இல்லாட்டி, உங்களுக்கோ தெரியாத எந்த ரகசியத்தை நானும் என்னோட அத்தானும் பேசிக்கிடப்போறோமுங்க?'' அப்படியே புது ரகசியத்தைப் பேசிக்கிட்டாலும், அதிலே தப்பு கிப்பு கிடையாதுங்களே? அயித்தை மகனும் அம்மான் மகளும் தானுங்களே பேசிக்கிட்டோம் மாமா?'' என்று தர்க்கரீதியான பேச்சால் மடக்கினாள். நேர்கொண்ட பார்வையால் தன் அத்தையின் கணவரை அளந்தாள் கன்னிப்பூ.

அன்னத்தின் துணிச்சல் வீரமணிக்குப் பிடிக்கவே செய்யும். பரிசுத்தமான நேர்மையின் பலத்தோடு ஊக்கமாகப் பேசுகிறாள் அம்மான் மகள். நியாயம்தான்! ஆனால், அப்படியே உள்ளது உள்ளபடி, அன்னத்தின் பேச்சை நியாயத்தின் அடிப்படையில் அப்பா எடுத்துக்கொள்வார் என்பது என்ன நிச்சயம்?

அப்பாவுக்கு முகம் சுண்டிவிட்டது. தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டவராக அவர் காணப்பட்டார். கறுமை படிந்த கனத்த உதடுகளில் ஒரு நெளிவு தோன்றி மறைந்தது. அன்னம், மெய்யாகவே நீ ஒரு புதுமைப்பொண்ணுதான்! '' என்று புகழ்ந்து பெருமூச்செறிந்தார்.

அந்தப் பாராட்டை அவள் அங்கீகரித்தாளோ, என்னவோ?'' அது கிடக்கட்டும். உங்களுக்கு உடம்பு



இப்போ சரிப்பட்டிடுச்சுங்களா? அயித்தை மகன் சொல்லக் கேட்டதும் எனக்கு மூச்சே நின்னுப்பிடும் போல இருந்திச்சுங்க,'' என்று கவலை தெரிவித்தாள் அன்னம்.

''அன்னம், உன்னோட மூச்சு பத்திரம்!..என் மூச்சு இன்னம் கொஞ்ச நாளைக்கு நிற்கவே நிற்காது. இந்தக் குடியிருப்பு மண்ணிலே நான் செஞ்சுமுடிச்சாக வேண்டிய கடமைகள் எம்புட்டோ நிலுவை நிற்குது. தர்மராசா, ரெண்டொருத்தர் மாதிரி தட்டுக்கெட்ட புள்ளி இல்லை. அவன் நல்லவன். பேரிலேயே தர்மத்தையும் ராசா

என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

அவ்வாறே பல்வேறு பண்பாடுகளுக்கிடையே உள்ள ஒருமைப்பாடும் (Uniformity) மறைக்கவோ, மறுக்கவோ முடியாத ஒன்றாகும். குடும்ப அமைப்பு முறைகளில் வேறுபாடு இருந்தாலும் பொதுவாக திருமணம், 'குடும்பம் என்ற வகையில் எல்லாம் பண்பாடுகளும் ஒருமைப்பாடு கொண்டு திகழ்கின்றன. அவ்வாறே அரசியல் அலுவல்கள், அறிவுத்துறைகள், பொருளியல் அமைப்பு, பொழுதுபோக்கு, கலை ஆகியவற்றின் பொது அமைப்பிலே எல்லாப் பண்பாடுகளும் ஒருமைப்பாடு கொண்டிருப்பது உண்மையே.

இவ்வாறு பண்பாட்டைப் பல்வேறு கோணங்களில் பகுத்துணர்வதால் பல்வேறு நன்மைகள் உள்ளன. இதன் மூலமே நாம் எல்லாப் பண்பாட்டையும் புரிந்து கொள்ள (Cultural understanding) முடியும். பண்பாட்டு வேறுபாடுகளையும் ஒருமைப்பாடுகளையும் உணர்வதன் மூலமே அவரவர் பண்பாட்டின் உயர்வு தெரியவரும் பல்வேறு தனிப்பட்ட பண்பாடுகளே ஓர் உலகப் பண்பாட்டை (Universal Culture) ஏற்படுத்த வல்லது. பண்பாட்டைச் சட்டத்தினால் ஒரு சமுதாயத்தில் உருவாக்க முடியாது. அது இயற்கையாக வாழ்க்கை முறையில் மட்டும் உருவாகும் தன்மை வாய்ந்தது. ஆகவே பண்பாடு, உலக வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு, [illegible] வாழும் வாழ்க்கையை மதிப்பதற்கு, பிறருடைய கருத்துகளுக்கும், வாழும் முறைகளுக்கும் மதிப்புக் கொடுப்பதற்கு வழி கோலுகிறது.

## தொழிற்பயிற்சியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு.

கடந்த டிசம்பரில் நடைபெற்ற தொழிற் பயிற்சிக் கழகங்களுக்கான 10-வது அனைத்திந்திய தொழில் திறன் போட்டியில் 'தொழிற் பயிற்சியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடே' என முடிவு செய்யப்பட்டுள்ளது. போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். எனவே, இதற்குரிய குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## சிறு சேமிப்பில் முன்னணி மாநிலம்

சிறு சேமிப்பில் இந்தியாவில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இதுவரை 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் சிறு சேமிப்பு நிதி மூலம் கிடைத்துள்ளது.




## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1828. படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம்-கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !

## 4. ஆடிவந்த பொற்பாவை

ஆடிவந்த பொற்பாவையாக -தேடி வந்த பூந்தென்றலாக- பாடிவந்த பூஞ்சிட்டாகத் தோன்றினாள் அன்னக்கொடி!

அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்தான் வீரமணி; பார்த்துக் கொண்டேயிருந்தான். கண்ணுக்குக் கண்ணைக் காணும் இக்காட்சி சொப்பனம் அல்லவே? சுந்தரக் கனவிலே சுந்தரி அன்னக்கொடியைக் கண்டு ரசித்து, பின்னர், கனவு கலைந்ததும் அன்னத்தைக் காணாமல் ஏங்கிப் புழுங்கித் தவித்த நாட்கள் அவன் வரை எத்தனை எத்தனையோ இருந்தது உண்டு. ஆனால், இப்போது அவன் கனாக் காணவில்லை. ஆனாலும், அவனுடைய கனவுக் கிளி பொற்களவாகிக் கண் சிமிட்டிக் கொண்டேயிருக்கின்றாள்! பிரத்தியட்சமான இவ்வுண்மை அவனுக்கு உயிரளித்திருக்கும்; உயிர்ப்பளித்திருக்கும்.




ஆம்.

அவள் அவனைப் பார்த்தாள்; பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவன் அவளைப் பார்த்தான்; பார்த்துக் கொண்டேயிருந்தான்.

கண்களும் கண்களும் கலந்தன; பேசின.

கண்கள் இணைசேர்ந்து, இணை சேர்த்துப் பேசிவிட்டால் மட்டும் போதுமா? வாய்ச் சொற்கள் பயன்பெற வேண்டாமா?

''அன்னம், வந்த காலோட இங்கிட்டே தவம் செஞ்சுக்கிட்டு இருக்கியே? உள்ளே வா,'' என்று அழைத்தான் வீரமணி.

''வர்றேனுங்க, அத்தான்!''

''தேடி வந்தவளை ஓடிவந்து 'வா'ன்னு கூப்பிடலையே அத்தான்காரன் என்கிற சடைவிலேதான் நீ இவ்வளவு நேரமாய்க் காத்திருந்தியாக்கும்?''

அவள் விநயமாக இளநகை சிந்தினாள். ''ஒண்ணுக்குன்

வையும் கோத்து வச்சிருக்கிற புண்ணியவான் அவன், என் மனசு அவனுக்கு விளங்காது. ஆகச்சே இப்போதைக்கு அவன் என் பக்கம் தலைவச்சுக்கூடப் படுக்க மாட்டான்!'' —பெரியவரின் குரல் சிலும்பல் தட்டியது.

வீரமணியின் மன உணர்வுகள் நெகிழ்ந்தன.

அன்னம் சிரம் தாழ்த்தி மௌனமாகச் சமைந்தாள்.

''தம்பி, இன்னமுமா சாப்பிடலே?'' என்று சமையல்காரர் நினைவுபடுத்தினார்.

''அடேடே!. சாப்பிடப்பா!'' என்றார் தேவர்.

முட்டைத் தோசையையும் மல்லித் துகையலையும் பார்த்தான் வீரமணி. பிறகு அன்னக்கொடியையும் தகப்பனாரையும் நோக்கினான். தோசை சாப்பிடும்படி அன்னக்கொடியை உபசரிக்க மாட்டாரா அப்பா? சில விநாடிகளைச் சோதனைக்கு உள்ளாக்கியபின் ''சும்மா குந்து தோசை கொண்டாரச் சொல்லுறேன். சாப்பிடு அன்னம்'' என்று கோரினான் முறை மச்சான்காரச்சிங்கம்.

அவள் தயங்கினாள்.

வாசற்பக்கம் மேற்கு நோக்கித் திரும்பிய லாரியை நோட்டம் பார்த்த காசி, ''தங்கச்சி, உன் அப்பன்காரர் கண்மண் தெரியாது வீட்டுக்குப் பறந்துக்கிட்டிருக்கார்,'' என்று தாக்கீது கொடுத்தார்.

இனி, நிற்க, நிலைக்க, நாழி ஏது? அன்னம் பரபரப்புடன் நகர்ந்தாள். உரிமையின் உறவு நெகிழ, வீரமணியின் தட்டிலிருந்த எச்சில் முட்டைத் தோசையைக் கிள்ளி, அதை மல்லித் துகையலில் தொட்டுத் துவைத்தெடுத்து, வாயில் போட்டுக்கொண்டாள். ''நான் போயிட்டுவாரேனுங்க மாமா!'' என்று நாணம் பூத்த மரியாதை தூவி விடை கோரினாள் அன்னக்கொடி.

''நல்லது. புறப்படு அன்னக்கொடி!'' என்று தேவர் அமரிக்கையாக விடை கொடுத்தார்.

''போயிட்டு வர்றேனுங்க, அத்தான்!'' என்று 'அத்தானிடம் பயணம் சொல்லிக் கொண்டாள் ராமையாத் தேவரின் செல்வி.

''போயிட்டு வா, அன்னம்!''



ஒற்றைக்கல் மூக்குத்தி ஒற்றைத் தனி விண்மீனாக ஒளி காட்ட, விடைபெற்றாள் அன்னம்.

வீரமணியின் உள்ளம் விம்மிப் புடைத்தது. ''அன்னம்! அம்மான் மகளே அன்னம்!''

நாட்டிற்குச் சரித்திரம் படைக்கச் சரித்திரமாகிவிட்ட செம்மல்களும் நாட்டின் சரித்திரம், காக்க, சரித்திரத்தை உருவாக்கிக்கொண்டிருக்கும் நல்லவர்களும், அதோ, சிரித்துக்கொண்டிருக்கிறார்கள்!

கை ஈரத்தைத் துவாலையில் துடைத்துக் கொண்டான்; சன்னல் ஓரமாகக் குறிச்சியை வசம் கணித்து இழுத்துப் போட்டான்; பதமாக உட்கார்ந்தான்; விசுப்பலகையில் இருந்த தோல் பையை எடுத்தான். லேசாக இருந்தது. தீர்ப்புத் தாள்களின் சுமை மிக மிகக் குறைச்சல்தான். ஆனால், அவை இக்குடும்பத்தை அழுத்திச் சோதிக்கக் காத்திருக்கும் சுமையின் பயங்கரம் அற்ப சொற்பமல்ல. சுமை தாளாமல் மண்டை வலித்தது. பொட்டு நரம்புகள் விட்டுப் போகிறமாதிரித் தெறித்தன. அம்மான் சம்பந்தப்பட்ட சட்டத்தின் தீர்ப்புப் பற்றித் தன் தந்தை அலட்டிக் கொள்ளாமல் 'சிவனே' என்று இருக்கும் போக்கு அவனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. வீங்கின புண் வெடிக்காமல் தப்ப முடியாது. அப்பாவிடம் தீர்ப்பு சம்பந்தமாகச் சுணங்காமல் பேசியாக வேண்டும். இந்தக் கண்டத்தைவிட்டு, எப்படித் தப்பிப் பிழைக்கப் போகின்றோம் என்பதற்கும் விளக்கம் வேண்டும். வழி புரிந்துவிட்டால், அப்பால் வழியைக் கடப்பது ஒன்றும் கம்ப சித்திரமல்ல. அவன் முதுகை வாய்ப்பாகச் சாய்த்துச் சாய்ந்து கொண்டான்.

அது அவனது தனி அறை.

தெற்குப் பார்த்த வீடு. இதமான காற்றுக்கு மட்டும் பஞ்சம் இருக்காது.

மின் விசிறி நின்றது.

தூக்கம் சொக்கியது. ஏப்பம் பறிந்தது. தான் எச்சில்படுத்தியிருந்த முட்டைத் தோசையை அன்னம் தொட்டுப் பிட்டுத் தின்று செல்ல, அவள் தீண்டிய மிச்சத்தைச் சொச்சம் வைக்காமல் அவன் ஒரு விசித்திரமான சிருங்கார ரசிகத் தன்மையோடு சாப்பிட்டுத் தீர்த்தானே, அப்பொழுது அது அமிர்தமாகச் சுவைத்திட்ட அருமை பெருமை அவன் அந்த ரங்கத்துக்குத்தான் அத்துப்படியோ? மறுக்க முடியாது; மறுக்கவும் கூடாது. மனம் கொண்டதே மாளிகை! அம்மான் மகள் நெஞ்சில் விளையாட, அவளோடு அவன் நினைவில் விளையாட ஊரை மறந்து உலகத்தை மறந்து, மெய்ம் மறந்த சித்திர விசித்திரமும் அவனுடைய அந்தரங்கத்துக்குதான் வெளிச்சமோ? ஆனால் அவனுடைய அம்மான் ராமையாத் தேவர் நினைவில் குறித்து, நெஞ்சில் பாய்ந்தபோது அவன் தன்னையும் அறியாமல் தன்னையும் மீறிய விதத்தில் பற்களை ''நற நற'' வென்று கடித்துக் கொண்டான்!



குலச்சுடரைப் பெயர் சொல்லிப் பாசம் சொல்லி அழைக்கின்றார் முதியவர்.

மடியிலிருந்த மண் ரசாயனம் நழுவுகிறது; பேனா மடியிலிருந்து நழுவவில்லை.

''அப்பா'' என்று விளித்தவாறு, வீரமணி தன் தந்தையின் காலடியில் வந்தமர்ந்தான். தேங்காய்ப்பூத் துண்டைத் தோளில் வாகாகப் போட்டிருந்தான்; 'முண்டா பனிய'னை இழுத்துவிட்டான்; சுருள் முடிகளை ஒதுக்கிக் கொண்டான்.

பெரியவர் ஆதிமூலம் மெள்ள எழுந்தார்; ஊசி குத்தின இடத்தைத் தடவிக் கொடுத்தவராக, திண்டை நகர்த்திச் சுவரோடு சுவராகச் சாய்ந்தார் அவர். புகையிலைச் சிதறல்கள் உணக்கை கூட்டியது. பெற்றெடுத்த அன்புப் புதல்வனை அருமையாகவும் பெருமையாகவும் என்னவோ ஒரு புதிய நம்பிக்கையோடு ஊடுருவிப் பார்வையிட்டார். பின்னர் இருதயப் பகுதியைப் பிசைந்து கொண்டார். ''வீரமணி'', என்று கூப்பிட்டார்.

''சொல்லுங்க, அப்பா!'' என்றான் வீரமணி. சோதனைக்குத் தயாராகும் மாணவனைப்போல, என்னவோ ஓர் இலட்சியக் குறிப்புடன் அவனும் தன் பங்கிற்கு அப்பாவை ஊடுருவத் தொடங்கினான்; தஞ்சை மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பை வெளியிலே எடுக்கலானான் அவன்.

உறை கிழிக்கப்பட்ட உறைக் கடிதம் ஒன்றை வீரமணி வசம் ஒப்படைத்தார்தேவர். ''சிதம்பரத்தைச் சேர்ந்த லட்சாதிபதி மகள் தமிழரசியைப் பத்தி நீ ரொம்பப் பெருமையாய்ச் சொல்லிக்கிட்டிருப்பியே, அந்தப் பொண்ணு உனக்கு என்னென்னமோ எழுதி அனுப்பியிருக்குது, தம்பி. அதை மறுகா தனியே படிச்சுக்கலாம்'' என்று குறிப்பிட்டார். பின்பு சற்று நேரம் பேச்சு மூச்சு காட்டவில்லை. வீரமணியை மேலோட்டமாகக் கவனித்தார். கிழிக்கப்பட்டிருந்த கடிதத்தின் வாயைச் சலனத்தோடு தடவிக் கொடுத்தபடி சிந்தனைக்கு ஆளாகி 'கம்'மென்றிருந்த தனயனைக் கண்டதும், அவர் கனைப்புச் சத்தம் எழுப்பினார். ''வீரமணி, நீ கையிலே அடக்கி வச்சிருக்கியே அதுதானேப்பா கச்சேரித் தீர்ப்பு நகல்?'' என்று அமைதியைக் கலைத்துக் கேட்டார். கேள்வி அமைதியாகவே ஒலித்தது. ஆனால், கேள்வியில் அமைதி இருக்க 'கடவு' இல்லை

''ஆமாங்க,'' என்று 'சடங்கை' யை உணர்ந்தும் உணர்த்தியும் சொன்னான் அவன்.

''தீர்ப்பைப் படிச்சிட்டியா?'

''தீர்ப்பை நான் படிக்கிறதாவது? தஞ்சாவூரிலே இதுக்கு எட்டாம் நாள் நீதிபதி தீர்ப்பைப் படிச்சிட்டாருங்களே, அப்பா?'' என்றான் வீரமணி; குறும்புத்தனம் வாய்க்குள்ளாகவே சுழித்தது.

தேவருக்குத் தம் மைந்தனின் பொடி தெளித்த பேச்சு விளங்காமல் இல்லை. ''இப்பைக்குத் கைக்கு மெய்யாய் வச்சுக்கிட்டிருக்கியே தீர்ப்பு நகல், அதைப் படிச்சிட்டியான்னுதான் நான் உன்னைக் கேட்டேன்,'' என்றார். மடங்கவும் மடக்கவும் தமிழுக்கும் தெரியும்; அவருக்கும் தெரியும்

''தீர்ப்பைத்தான் தஞ்சாவூரிலேயே படிச்சுப் பார்த்திட்டேனுங்களே!'' மண்வளம் படித்தவன் வீரமணி, மனவளமும் பழகியவன். வீசிக்கொண்டிருக்கும் புயலுக்கு நடுவிலே, அகல் வைராக்கியத்தோடும் ரோசத்தோடும் எரிந்துகொண்டிருக்கிறது! வியப்பு ஆட்கொண்டது.

''என்ன சொல்லுது தீர்ப்பு?'' கைகளில் தாங்கிய கன்னத்தைச் சாய்த்தார் அவர்.

''புதுசா என்ன சொல்லப் போகுதுங்க, அப்பா?'' என்று கூறி நிறுத்தினான் வீரமணி. முதுகைச் சொறிந்து கொண்டான். ஏறிட்டான். ''எல்லாம் ஏற்கெனவே நம்பளுக்குத் தெரிஞ்ச ரகசியம்தானுங்க. நீங்களும் அம்மான் ராமையாத் தேவரும் அடியிலே ராசியாகப் பேசிப் புழங்கிட்டுச் சுமுகமாய் இருந்த காலத்திலே, நீங்க அம்மான்கிட்டே வாங்கின கடன் தொகை பதினெட்டாயிரம் ரூபாய்தான்! ஆனா, நீங்க எழுதிக் கொடுத்ததோ ரூபாய் இருபதாயிரத்துக்கு! அம்மானுக்கு நீங்க புரோநோட்டு வரைஞ்சு, கையொப்பம் போட்டுக் கொடுத்த அந்தத் தொகை-பிராமிசரி நோட்டுத் தொகை ரூபாய் இருபதாயிரத்தையும், சட்டப்படி அதுக்கு உண்டான ஆறே கால் சதவீத வட்டியையும் உடனடியாய் நீங்க வாதிக்குக் கட்டியாக வேணும்னு தீர்ப்பிலே எழுதியிருக்குதுங்க, அப்பா!'' என்று விவரித்தான் இளைஞன்.



ஆதிமூலம் நிதானம் காக்க எத்தனம் செய்தார்! வீண்! கண்கள் ரத்தம் கட்டிச் சிவந்தன. ''ராமையா அடுத்துக் கெடுத்தவன்!..நயவஞ்சகன்!'' சொற்களில் சோளம் பொறிந்தது. நெடுமூச்சை நெட்டித் தள்ளியபின் பேச ஆரம்பம் பண்ணினார்.

''தம்பி, உலகத்திலே என்னென்னமோ இடுசாலமெல்லாம் தலைகீழாய் நடக்குது. உன் தாய்மாமனை நினைச்சுப் பார்த்தாக்க, உன்னைச் சோறு உடம்பிலேஒட்டவே ஒட்டலே! ஆனா, அந்தப் படுபாவிக்கு எல்லாம் ஒட்டுது! உப்புப்போட்டுச் சாப்பிடுறானா அவன்? ராமையா அண்ணைக்குக் கடுத்தத்திலே சொன்ன சொல்லை நம்பினேன் நான். நினைச்சுப் பார்த்தால், பயாஸ்கோப் பார்க்கிறதாட்டமே இருக்குது! நான் அவன்கிட்டே உதிரி உதிரியாய் வாங்கியிருந்த கடன் தொகை சாடாவையும் எங்க ரெண்டு பேர் பேரேட்டுப் பிரகாரம் ஒத்துப் பார்த்துக் கூட்டுப் புள்ளி போட்டோம். கடன் பதினெட்டாயிரத்துக்கு ஓடிடுச்சு. புரோநோட்டுப் பூரிச்சுக்கிட்டால் தேவலாம்னு பல்லைக் காட்டினான் அவன். தாயும் மகளும் என்றாலும், வாயும் வயிறும் வேறேதானே? நான் அட்டி சொல்லல்லே! அப்பத்தான் ஒரு புதுச்சூதை இடவிட்டான் அந்த அயோக்கியத் துரோகி!''

பெரியவர் சற்றே ஓய்ந்தார்; அலைக்கு ஓய்வு கிடையாது.

''வீரமணி, கேட்டுக்க கதையை இப்பவும். ''அயித்தான், விடிஞ்சதும் நாள் சுகமில்லே. ராவோடு ராவோ புரோநோட்டு எழுதித் தந்திடுங்க. நீங்க எனக்குத் தர வேண்டிய பதினெட்டாயிரத்துக்கு இப்ப நோட்டு எழுதப் போறீங்க. உங்களுக்கு என்னமோ அவசரமான முடை உறுத்துதின்னு சொன்னீங்களே? நாளை அந்திக்குள்ளே ரூபாய் ரெண்டாயிரத்தை ரொக்கமாய் உங்க கையிலே கொண்டாந்து தந்துப்புட்றேன் கட்டாயம். ஆனபடியினாலே, தொகை ரவுண்டா வருறப்பிலே நீங்க இருபதாயிரத்துக்கே எழுதித் தந்திட்டால் சிலாக்கியம். ஒரு சல்லிக்கூட பிசகு பண்ண மாட்டேன். நம்புங்க! அப்படின்னு செப்பினான். சொந்த மச்சான் பேச்சை. அதிலேயும் பணத்திலே படுத்துப்புரளுற மச்சான் பேச்சை நம்பாமல் என்ன செய்ய? ஒப்புக்கிட்டு, அவன் சொல்லை நம்பி, இருபதாயிரத்துக்கே அவன் இஷ்டப் பிரகாரம் நோட்டு எழுதிக் கொடுத்திட்டேன். ஆனா, விடிஞ்சதும் கதை திசை மாறிப் பூடுச்சு. முதல் காளாஞ்சி தவகல் மூண்டிச்சு. ஆத்தாளுக்குப் பயப்படுற ஆத்மா இது. நியாயத்துக்குத் துணை நின்னேன். அவனோ தன்னோட அநியாயத்துக்கு நான் துணை நிற்கலேன்னு கடுப்புகொண்டு சொன்ன சொல்லையும் காற்றிலே தூற்றிவிட்டுப் புட்டான். கடைசி மட்டுக்கும் அவன் அந்தப், பணம் ரெண்டாயிரத்தை என் கையிலே கொடுக்கவே கிடையாது!

இருமல் சிணுங்கிற்று.

பேச்சு முடிந்துவிடும்.

''தம்பி, தெய்வம் கண்ணுக்குத் தெரியாது. ஆனாலும் நாம பயப்படுறோம். ஆனால் உன் மாமன் ராமையாத் தேவனோ கண்ணுக்குத் தெரிகிற பணத்துக்குத்தான் பயப்பட்டுப் பழக்கம். ஊர்க்கட்சித் தகராறிலே அந்தப் பயலோட மானத்தைக் காத்தவன் நான். அந்த நன்றியை மறந்திட்டான். போகுடிச் சென்மம்!... தெய்வம் வெறும் கல்தானேன்னு நம்பி, என்கிட்டே கொடுக்காத ரூபாய் ரெண்டாயிரத்தையும் சேர்த்து எழுதப்பட்டிருந்த என் புரோநோட்டின் பேரிலே எம் மேலே அவன் பிராது போட்டு தாவா தொடுத்தான். ராமையாகிட்டே கைநீட்டி வாங்கினது பதினெட்டாயிரமேதான்னு வக்கீல் அய்யர் மூலம் சொல்லி எதிர் தாவா போட்டேன் நான். என் பேச்சு செல்லலே! தெய்வத்துக்குத் தெரிஞ்ச உண்மைச் சங்கதி நீதிக்கு விளங்காமலே போயிடுச்சுதே? இம்...சட்டம் ஒரு இருட்டறை என்கிறது மெய்தான் போலே! ஊம்....காலம் கெட்ட இந்த கலியுகத்திலே சத்தியத்துக்கும் தருமத்துக்கும் பணியாம அடாவடி அடிச்சு அக்கிரமம் செய்கிற ராமையாத் தேவன் மாதிரியான நயவஞ்சகத் துரோகிப் பயல்களுக்குத்தான் காலம் போலே!

ஆத்திரமும் சோகமும் எரிமலையாக வெடிக்கப் பேச்சை முடித்தார் பெரியவர். விழி முனைகள் கசிந்தன.

வீரமணி நெடுமூச்செறிந்தான். ''நீதிக்குச் சட்டப்படியேதான் பேசத் தெரியும். ஆனால் அந்தச் சட்டம் எப்பவுமே தருமநியாயப்படியே பேசிடும்னு நாம எதிர்பார்க்கிறதுக்கில்லை!.. இந்த விதி விசித்திரமானதுதான்! இந்த விசித்திரத்துக்கு இப்ப நாமே உதாரணமாக நின்னுக்கிட்டு இருக்கோமுங்களே? ஊம்!.... நீங்க அம்மான்கிட்டே வாங்கின கடன் பணம் ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்தான்! பேச்சுப்படி, அனுமெத்திலே நின்ன ரூபாய் ரெண்டாயிரத்தை அந்த மனுசன் தரவே கிடையாது. ஆனா, ரெண்டாயிரத்தையும் மறுநாளே தந்திடுறேன்னு சொல்லி, நையம்பாடி உங்ககிட்டேயிருந்து இருபதாயிரம் ரூபாய்க்கு பிராமிச்சரி நோட்டு எழுதி வாங்கிட்டார் அவர். கேடுகெட்டவர்! திட்டமிட்டே நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டார்! உண்மை கசக்கத்தான் செய்யுது. அம்மான் ராமையாத் தேவர் வேணும்னே மோசடி செஞ்சிட்டார். அந்த எமகாதக மனுசன் இரண்டாயிரத்தை உங்க கையிலே ஏற்கெனவே கொடுத்திட்டுத்தான் உங்ககிட்டேயிருந்து நோட்டெழுதி வாங்கினேன்னு கோர்ட்டிலே அடிச்சுப் பேசுறதுக்குச் சாட்சி சொல்ல உங்க பிராமிசரி நோட்டு அவர் கையிலே இருந்திச்சு! ஆனா, நீங்க அந்தத் தொடுசுப் பணம் ரெண்டாயிரத்தை அவர்கிட்டேயிருந்து வாங்கல்லே என்கிறதுக்கு சட்டபூர்வமான சாட்சி எதுவுமே உங்க வசம் இல்லாமல் போயிடுச்சுங்களே? இல்லீங்களா...அப்பா!''

''அது உண்மைதான் தம்பி!''

''அந்த உண்மைக்குப் பேர்தான் தருமம். அந்தத் தருமம்தான் கடவுள். 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்' என்கிறது மூத்தவங்க வாக்கு. அதைச் சோதிச்சுக் காட்டவேண்டியது, காலத்தோட பொறுப்பு. ஆனா நம்பளைச் சோதிக்க நேரம் காலம் பார்த்துக்கிட்டுப் பிணந் தின்னும் கழுகாய்க் காத்துக்கிட்டு இருக்கார் ராமையா, அம்மான்! அதைச் சமாளிக்கக் கைக்கு மெய்யாய் இப்பவே ஒரு வழியைத் திட்டமிட்டு முடிவு செஞ்சாக வேணுமுங்க, அப்பா!''

''சுத்தமான பேச்சு, வீரமணி. உன் அம்மான் கடனை உளவடைக்க ஒருதோது பண்ணியிருக்கேன். அது கிடக்கட்டும், இப்போ அதைப்பத்திப் பேசிக் கலந்து நாம ஒரு நல்ல முடிவுக்கு வந்தாக வேணும். ரொம்ப ரொம்ப அவசரமான காரியம் இது; அவசியமுமான காரியமும்தான்!'' தேவரின் உதடுகளில் இதயம் துடித்திருக்க வேண்டும்.

''என்ன காரியமுங்க அது?''

''நல்ல காரியம்தான், தம்பி! மங்களகரமான சேதிதான், மகனே! நம்ப வீட்டு வாசற்படியை மிதிக்க ஓட்டமும் நடையுமாய் வந்துக்கிட்டிருக்குதே ஆவணி? இனிமேலும் அந்த நல்ல சங்கதியைப்பத்தி உன்கிட்டே சொல்லாமல் மெத்தனமாய் இருப்பேனா நான்? ''இந்தாலே சொல்லிப்பிடுறேன், வீரமணி!''

ஆதிமூலம் பேச்சை நிறுத்தினார்.

அவரா நிறுத்தினார்?

அவருள் வெடித்திட்ட புகைச்சல் இருமல் அல்லவா நிறுத்தித் தொலைத்தது!

வீரமணி வாய் பிளந்து நின்றான்; அவனுடைய நெஞ்சம் அவனிடமா தஞ்சம் அடைந்திருந்தது?

அந்தச் சத்தியம் அன்னக்கொடிக்குத்தான் தெரியுமோ?

பெரியவர் வாய் திறந்தார்.

அப்பா விடுகதை எதுவும் போடாமல் இருக்க வேண்டும்!

(வளரும்)





# கண்ணடியில் உருவாகும் கலை வடிவங்கள்









வானளாவிய உயர்ந்த கட்டடங்கள்; வனப்புள்ள சிற்ப வேலைப்பாடுகள்; எண்ணத்தை ஈர்க்கும் எழில் ஓவியங்கள்; கண்ணைக் கவரும் கலை நுணுக்கங்கள் எல்லாம் இந்தச் சின்னஞ் சிறு விரல்களிலே அன்றோ பிறக்கின்றன!

மண்ணாலும், மரத்தாலும், உலோகத்தாலும் செய்யப்படும் பொருள்கள் தவிர இன்று பிளாஸ்டிக்காலும், கண்ணாடியாலும் செய்யப்படும் பொருள்கள் — பொம்மைகள் பெருமளவில் தயாராகின்றன.

கண்ணாடிக் குச்சிகளைக் (Rod) கொண்டு வெப்பத்தின் மூலமாக வகை வகையான பொம்மைகள் உருவாக்கப்படும் விதத்தைப் பார்க்கும்போது நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை.

தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறையின் ஓர் அங்கமாகச் சென்னை நுங்கம்பாக்கத்தில் செயல்படுகிறது, 'அரசினர் கண்ணாடிப் பொருள்கள் பயிற்சி நிலையம்'. இம்மாதிரியான பயிற்சி நிலையம் தமிழகத்தில் இதுவே முதலாவதாகும் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

வாயு (Gas) மூலமாகக் கண்ணாடிக் குச்சிகளைத் தேவையான அளவுக்கு வளைத்து வளைத்துக் கப்பல், காளைமாடுகள், மான், மனிதன் என்று உருவங்களை உருவாக்குகிறார்கள். இதற்கான பயிற்சி இங்கே அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில் சேருவதற்குக் குறைந்தது எட்டாவது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். 18 வயதுக்குமேல் 25 வயதுக்குள்ளான ஆண், பெண் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

பயிற்சி பெறும் காலம் 2 ஆண்டுகளாகும். முதலாண்டில் 10 பேருக்கும், இரண்டாம் ஆண்டில் 10 பேருக்கும் பயிற்சி தரப்படுகிறது. முதலாண்டில் பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 30 உதவித் தொகையும், இரண்டாம் ஆண்டில் பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 40 உதவித் தொகையும் வழங்கப்படுகிறது இந்நிலையத்தில், பயிற்சி தருவோர் இருவர் பணியாற்றுகின்றனர். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இங்குப் பயிற்சி பெற்றவர்கள் பிற தொழிற் கூடங்களில் சேர்ந்தோ அலலது தனிப்பட்ட முறையிலோ பயன்பெறலாம்; பொருளீட்டலாம்.

இந்தத் தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்துவதற்குத் தொழில் வணிகத் துறை கடன் தந்து உதவி செய்வதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே பொம்மையைச் செய்ய முடியுமா? அதற்கு அடிப்படைப் பயிற்சி வேண்டாமா? அதற்காக இங்கு முதலில் சித்திரம் எழுதுவதற்குப் பயிற்சி தரப்படுகிறது. இதற்கு அடுத்த நிலைதான் பொம்மைகள் உருவாக்குவது. ஏற்கெனவே சித்திரத்தில் கொஞ்சம் பயிற்சி உள்ளவர்களுக்கு இந்தப் பொம்மைப் பயிற்சி சற்று எளிதாக இருக்கும்.

1961-ல் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையத்தின் பல்வேறு கண்ணாடிப் பொம்மைகள் பூம்புகார் மற்றும் தொழில் வணிகத்துறையின் விற்பனைக் கூடங்களில் விற்கப்படுகின்றன. நாகரிகம் வேகமாக வளர்ந்து வரும் இந்நாளில் இதுபோன்ற நவீனப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

பல்வேறு கண்காட்சிகளில் இந்நிலையத்தினர் பங்கு கொண்டு பாராட்டுதல்கள் பெற்றுள்ளனர். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாக்கிற்கிணங்க, ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் தேவைப்படுகிறது. அதுவே கவலையற்ற வாழ்க்கைக்கு வழியும் வகுக்கிறது.

இன்றைய மாணவ மணிகள் இதனை நன்குணர்ந்து, 'எத்தொழில் எதுவும் தெரியாமல் இருப்பதை விடுத்து, கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கு ஆர்வமுடன் முன்வர வேண்டும். அதுவே முன்னேறுவதற்கான சிறந்த வழி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—பி.வி.ஜி.

# ஏன் இப்படி வீண் செய்கிறீர்கள் உணவை

பலருக்கு அது மிகவும் தேவைப் படுகிறதே

வீட்டிலும், விருந்துகளிலும், ஹோட்டல்களிலும், கிளப்புகளிலும் உங்களுக்குத் தேவையானதையே போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள்.
இதனால் உங்களுடைய பணமும் மிச்சமாகும்; நாட்டின் வசதியும் விருத்தியாகும்.

உணவு அத்தியாவசிய மானது

வீண் செய்யாதீர்கள்



davp 73/329




191

# கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:** 1-2-74 இதழில் 19-ஆம் பக்கத்தில் கரும்பைப் பற்றி வெளிவந்துள்ள செய்தியில், தென்னார்க்காடு மாவட்டத்திற்கு தழைச்சத்து 112 கிலோ தேவை என்று கூறியுள்ளீர்கள். 20-ஆம் பக்கத்தில் 23 கிலோ தழைச்சத்துப் பெறுவதற்கு 50 கிலோ யூரியா தேவை என்று குறிப்பிட்டு உள்ளீர்கள். அப்படியானால் 112 கிலோ தழைச்சத்து பெறுவதற்குச் சுமார் 250 கிலோ யூரியா அதாவது 5 மூட்டை தேவைப்படுகிறது. அவ்வளவு யூரியா தற்பொழுது வைக்க முடியுமா? அதற்கு என்ன செய்யலாம்? இதற்கு வேறு வழியே இல்லையா? மேலும் 90-ஆம் நாளும், 110-ஆம் நாளும் தோகையின் மேல் யூரியா கரைசலை அடிக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். 90-ஆம் நாள் கரும்பு சுமார் 9 அடி உயரம் வளர்ந்து இருக்கும். அப்போது எப்படி அடிக்க முடியும்? பண்ணையில் எல்லாம எப்படி அடிக்கிறார்கள் என்பதை விளக்கமாகப் பதில் அளிக்காவிட்டாலும் தனியாக ஒரு கடிதத்திலாவது பல விவசாயிகளின் நன்மை கருதி அவசியம் பதில் அளிக்கவும். இதற்கு முன் 3 முறை கேள்வி கேட்டு எழுதியிருந்தேன். பதில் இல்லை புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து ஏமாந்து போய்விட்டேன். இம்முறையாவது பதில் கிடைக்கும் என மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இளம் விவசாயி.

—இரா. குணசேகரன்,
மேலப்பாலையூர்,
சி. கீரனூர் அஞ்சல்,
விருத்தாச்சலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

**விடை:** ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதிக்குத் தற்பொழுது ஏராளமான கடிதங்கள் வருகின்றன. அவை எல்லாவற்றிற்கும் பதில் எழுதி வெளியிட 'தமிழரசு' இதழில் போதிய பக்கம் இல்லை. உச்ச அளவாக 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதிக்கு 4 பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. சில நேர நேரங்களில் சில முக்கியச் செய்திகளை வெளியிட வேண்டி இப்பகுதியை நிறுத்தி வைத்து அடுத்த இதழில் வெளியிட நேரிட்டு விடுகிறது. தவிர்க்க முடியாத காரணத்தினால்தான் இவ்வாறு நேரிடுகிறது. தாங்கள் முன்பே 3 கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்டு உள்ளீர்கள். அக்கடிதங்கள் இவ்வலுவலகத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. கேள்வி கேட்பவர்கள் கடிதத்தை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் நல்லது.

ஆசிரியர் (கேளுங்கள்
கொடுக்கப்படும்),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின்படி, தென்னார்க்காடு மாவட்டத்தில் கரும்பு பயிரிடுவதற்கு ஏக்கருக்கு 112 கிலோ தழைச்சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தையும் கரும்பு நட்ட 45-வது நாள், 90-வது நாள் ஆக இருதடவைகளில் மேலுரமாக இடவேண்டும் என்று 1-2-74 தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 19-ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 23 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இடவேண்டுமென்று 16-1-74 தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 63-ல் பரிந்துரைத்துள்ளதையும் இத்தருணத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

தழைச்சத்தை யூரியா மூலமாக அளிப்பதாக இருந்தால் 45-வயது நாளில் 124 கிலோ யூரியாவையும், 90-வது நாளில் 124 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடுமாறு அதே பக்கத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதைத் தாங்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். தாங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் 5 மூட்டை யூரியா உரம் அளித்தால்தான் கரும்பு நல்ல மகசூல் தரும். ஆனால் அதை 2 பாகமாகப் பிரித்து ஒவ்வொரு முறையும் 2.5 மூட்டை வீதம் இடவேண்டும். தற்பொழுது யூரியா, அமோனியம் சல்பேட் முதலியன கிடைப்பது அரிதாக உள்ளது உண்மை எனினும், பரிந்துரைக்கும் அளவிலும், காலத்திலும் கரும்புக்கு உரமிடுவதே பயனுடையதாக இருக்கும்!

யூரியாவோ அல்லது அமோனியம் சல்பேட்டோ தங்களுக்குக் கிடைப்பது அரிதாக இருப்பின் 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தைப் பயன்படுத்தி உரமிடலாம்! 'காம்ப்ளெக்ஸ்' உரமிடுவதென்றால், அடியுரமாக மணிச்சத்து இடுவதற்குத் தனியே சூப்பர் பாஸ்பேட் போட வேண்டியதில்லை. கரும்பு நடவு செய்த 45-வது நாளில் 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தில் 132 கிலோவையும், 74 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட்டு, 90-வது நாளில் மீண்டும் 132 கிலோ 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையும், 74 கிலோ யூரியாவையும் இட வேண்டும். இந்த அளவில் உரமிடும்போது, மணிச்சத்து ஏக்கருக்கு 45 கிலோ அளவிற்குக் கிடைக்கிறது. மணிச்சத்து 23 கிலோவே போதுமெனினும், 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரமிடும்போது இதைத் தவிர்க்க வழியில்லை. மேலும், சர்க்கரை ஆலைப்பகுதிகளில் 45 கிலோ மணிச்சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தும் இடுமாறு பரிந்துரைக்கப்படுவதால், மேற்கூறிய அளவில் உரமிடுவதே சிறந்தது.

17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரமும் கிடைக்கவில்லை எனில் 16:4:4 என்ற கலப்பு உரத்தில் 45-வது நாளில் 350 கிலோவும், 90-வது நாளில் 350 கிலோவும் மேலுரமாக இடப்பட வேண்டும். இவ்வாறு இடுவதால் ஏக்கருக்கு 112:28:28 என்ற அளவில் சத்து கிடைக்கும். இது தென்னார்க்காடு மாவட்டத்திற்கான பொதுவான உர அளவாகும். யூரியா உரமில்லாமல் உரமிட இது சிறந்த வழியாகும்!

90-வது நாளில் கரும்பு சுமார் 9 அடி உயரம் வளர்ந்து இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இது தவறு. பொதுவாக 3 மாதத்தில் கரும்பு 3 அல்லது 4 அடி உயரத்தில் தான் இருக்கும். அதில் யூரியா கரைசலைத் தெளிப்பது கடினமான செயலல்ல!

(97)

**வினா:** நான் பணியாற்றிவரும் கிராமத்தில் ஒருவிவசாயியினுடைய மாமரம் ஒன்று வருடாவருடம் நிறைய பூ பூக்கின்றது. ஆனால் காய்ப்பதற்கு முன் பூக்கள் அனைத்தும் கருகி உதிர்ந்து விடுகின்றன. இக்கிராமத்தில் வேறு எந்த மரத்திலும் இம்மாதிரியாகப் பூப்பதில்லை. எதன் காரணமாக பூக்கள் கருகி உதிர்ந்து விடுகின்றன? அதைத் தடுத்து மரத்தைக் காய்ப்புக்குக் கொண்டு வர வழி என்ன? மேலும் ஒரு விவசாயியின் தென்னை நாற்று நட்டு மூன்று மாதங்கள்தான் ஆகின்றது. இலைகள் வாடி அதில் புள்ளி போன்று காணப்படுகிறது, குருத்தும் முளைப்பதில்லை. இது எதனால்?

—ரெ. சீனிவாசராமானுஜம்,
இளைஞர் அணி தொண்டர்,
மேல்பட்டை விண்ணமங்கலம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிடும் மாமரத்தின் வயது என்ன என்பதைக் குறிப்பிடவில்லை. வயது தெரிந்தால் நல்லது. மாமரத்தின் பூக்கள் கீழ்க்கண்ட காரணங்களால் உதிரக்கூடும்.

(1) மாமரத்துத் தத்துப்பூச்சி (Mango hopper) எனப்படும் பூச்சிகள் மாம்பூக்களில் உள்ள சாற்றை உறிஞ்சி விடுவதால், பூக்கள் வாடி உதிரக்கூடும்!

(2) சாம்பல் நோய் (Powdery mildew) தாக்குவதாலும் பூக்கள் வாடி, காய்ந்து, உதிர்ந்து விடக்கூடும்!

(3) பூ பூத்த பிறகு, மாமரத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி நின்றாலோ அல்லது ஈரம் காயாமல் மண் ஈரக்கசிவாகவோ இருந்தாலும் பூக்கள் உதிர்ந்து விடக்கூடும்!

(4) போதிய சத்து கிடைக்காததாலும் பூக்கள் உதிரக்கூடும்!

எனவே, அந்த மாமரத்தின் பூக்கள் எதனால் உதிர்கின்றன என்பதை நேரில் பார்த்தால் அன்றி சரியாகக் கூறமுடியாது! உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அழைத்து வந்து, அவரிடம் அந்த மாமரத்தைக் காட்டி பூ உதிர்ந்து விடுவதின் காரணத்தை அறிந்து, அவர் பரிந்துரைக்கும் முறையிலும், அளவிலும் மருந்து தெளிப்பது நல்லது.



இளைஞர் அணி தொண்டரான தாங்களும் இதுபற்றித் தெரிந்து கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும் என்பதற்காக, கீழ்க்கண்ட விளக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

மாமரத்துத் தத்துப்பூச்சி என்பது பழுப்பு நிறமாகவும், கருப்பும் சிவப்பும் கலந்த புள்ளிகளுடனும் காணப்படும். இப்பூச்சிகள் பூக்களில் தங்கி சாற்றை உறிஞ்சி விடுவதால், பூக்கள் உதிர்ந்துவிடும்! இப்பூச்சிகளை ஒழிக்க, பூச்சிகள் தோன்றிய உடன் டி.டி.டீ 50 சத மருந்தைத் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். சராசரியாக ஒரு பெரிய மரத்திற்கு 45 கிராம் மருந்தை 22.5 லிட்டர் (5 காலன்) தண்ணீரில் கலந்து (அதாவது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து வீதம்), 'கை-டிரீ' (Hi-tree) தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.



சாம்பல் நோய் தாக்கிய பூக்களில் மென்மையான வெண்மைப்பொடி தூவியதைப் போன்று காணப்படும். இந்நோயினால் பூக்கள் மட்டுமல்ல, கொழுந்துகள், பிஞ்சுகள், காய்களும் வாடி காய்ந்து உதிர்ந்துவிடும்! பனிக்காலங்களில் இந்நோய் கடுமையாகக் காணப்படும். இந்நோயைத் தடுக்கக் கொழுந்துவிடும் சமயம் ஒரு முறையும், பூக்கள் தோன்றும் சமயம் ஒருமுறையும் ஆக 2 முறை, ஒரு மரத்திற்கு 1 முதல் 1.5 கிலோ கந்தகத்தூளைத் தூவ வேண்டும் அல்லது 56 கிராம் நனையும் கந்தகத்தூளை 22.5 லிட்டர் தண்ணீரில் கலந்து 'கை-டிரீ' தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மாமரம் பூத்த பிறகு, மாமரத்தைச் சுற்றித் தண்ணீர் நின்றாலும் அல்லது மண் ஈரக்கசிவாகவோ இருந்தாலும் பூக்கள் உதிர்ந்துவிடும். இதைத் தவிர்க்க மாமரத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி நிற்காமல் பாதுகாக்க வேண்டும். மண்ணையும் காயவிட வேண்டும். இவ்வாறு பூக்கள் உதிர்வதைத் தடுக்க, மாமரத்தைச் சுற்றிலும் உள்ள மேல் மண்ணை அகற்றி, வேர்கள் ஓரளவிற்கு வெளியில் தெரியுமாறு சில நாட்கள் காய வைக்கும் பழக்கம் சில தனியார் மாந்தோப்புகளில் உள்ளது. வேறு சில இடங்களில் மேற்கூறியவாறு மண்ணை அகற்றிவிட்டு இலைசாகச் சருகுகளைப் போட்டு நெருப்பிட்டுக் கொளுத்தும் முறையும் பிற மாநிலங்களில் வழக்கத்தில் உள்ளது. ஆனால் இவ்வாறு செய்ய நல்ல அனுபவம் தேவை. அனுபவம் இன்றி செய்தால், மாமரத்திற்கு தீங்கு ஏற்பட்டு விடும்!

மண்ணில் இருந்து போதிய சத்து கிடைக்காததால் பூக்கள் உதிர்வதைத் தடுக்க இரசாயன உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். தாங்கள் குறிப்பிடும் மரத்தின் வயதைத் தெரிவிக்காததால், சரியான உர அளவைக் கூற இயலவில்லை. எனவே, நன்கு வளர்ந்த பெரிய மரம் என்று கருதி அம்மரத்திற்கு ஆண்டுதோறும் 50 கிலோ மக்கிய தொழு எரு, 5 கிலோ அமோனியம் சல்பேட், 5 கிலோ எலும்புத் தூள், 2·5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 3 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம். இவ்வுரங்களை ஜூலை மாதத்தில் வைப்பது சிறந்தது.

எனவே மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு மாமரத்தின் பூக்கள் உதிர்வதைத் தடுத்துப் பயன்பெறலாம்.

தாங்கள்குறிப்பிடும் தென்னை குருத்து அழுகல் நோயால் தாக்கப்பட்டிருக்கும்! இதைத் தடுக்க புள்ளிகள் உள்ள மட்டைகளை வெட்டி எரித்துவிட்டு ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 கிராம் தாமிர பூசணக்கொல்லி மருந்தைக் கலந்து தெளிப்பது சிறந்த வழியாகும்.

**வினா:** எங்கள் வீட்டில் இருக்கும் ஒட்டு சப்போட்டா மரம் நான்கு ஆண்டுகளாகியும் கனி அளிக்கவில்லை. சில நேரத்தில் பூ பூத்து உதிர்ந்துவிடுகின்றது. மிதமான வெப்பம் மேல் விழுகின்றது. மரம் போதிய உயரத்தில் இருக்கின்றது. மரம் கனி அளிக்க என்ன இடவேண்டும்?

—சு. பன்னீர் செல்வம்,
96, மெயின் ரோடு,
நாகூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:** பொதுவாக சப்போட்டா ஒட்டுச் செடிகள் 5 ஆண்டில்தான் பலன் கொடுக்கத் துவங்கும். தங்கள் சப்போட்டா மரத்திற்கு மிதமான வெப்பம் கிடைப்பதுடன், போதிய உயரமும் வளர்ந்துள்ளதால், உரமிடாதது ஒரு பெருங்குறையாக உள்ளது. தங்கள் சப்போட்டா மரத்திற்கு தற்பொழுது 5-வது வயது நடப்பதால், பின்கண்டவாறு உரமிடுதல் வேண்டும்.

மக்கிய தொழு எரு—40 கிலோ

ஆமணக்குப் பிண்ணாக்கு—6 கிலோ

எலும்புத்தூள்—2.5 கிலோ

மேற்கூறிய உரங்களை இரண்டாகப் பிரித்து வருகிற ஜூன் மாதத்தில் ஒரு பாதியையும், நவம்பர் மாதத்தில் மறுபாதியையும் வைத்து, தண்ணீர்விட வேண்டும். இவ்வாறு உரமிட்டால் அடுத்த ஆண்டில் உங்கள் சப்போட்டா மரம், காய்க்கத் தொடங்கும்!

**வினா:** நான் ஒரு ஏக்கரில் 'ரொபஸ்டா' வாழை பயிரிடப் போகிறேன். அதற்கான சாகுபடி குறிப்புகள், உரம், முதலியவற்றை விரிவாகத் தெரிவிக்கவும்.

—கே. நடராசன்,
மூப்பன்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை:** 'ரொபஸ்டா' வாழை நடுவதற்கு ஏற்ற சிறந்த பருவம் கார்த்திகை முதல் மாசி மாதம் வரையான காலமாகும். வியாபார நோக்குடன் 'ரொபஸ்டா' வாழையை மழை பெய்யும் மாதங்கள் தவிர்த்த மற்ற எல்லா மாதங்களிலும் பயிரிடலாம்!

நல்ல வடிகால் வசதியுடைய செழிப்பான நிலம் 'ரொபஸ்டா' வாழைக்கு மிகவும் ஏற்றது. நிலத்தை நன்கு உழ வேண்டும் அல்லது மண்வெட்டியால் கொத்தி விடவேண்டும். பிறகு 6 அடி × 6 அடி இடைவெளியில் 45 சென்டி மீட்டர் (1.5 அடி) கன அளவில் குழிகள் தோண்டி, சுமார் 20 நாட்கள் வரை அக்குழிகளை ஆறப்போட வேண்டும். அதன் பின்னர் குழிகளில் செம்மண், மணல், மாட்டு எரு, குழியின் மேல் மட்ட மண் ஆகியவைகளைக் கலந்து நிரப்ப வேண்டும். மூக்கு வண்டு தாக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு குழியிலும் 50 கிராம் 'பி.எச்.சி.' 10 சதத் தூளைப் போட வேண்டும்.

ஒரு ஏக்கர் 'ரொபஸ்டா' பயிரிட 1,210 வாழைக்கன்றுகள் தேவைப்படும். மூன்று அல்லது நான்கு மாதத்திய கத்திக் குருத்துக் கன்றுகளே நடுவதற்குச் சிறந்தது! வாழைக் கன்றுகளை 0.1 சதவிகித 'செரசான்' கரைசலில் (ஒரு லிட்டர் தண்ணீரில் 1 கிராம் கரையும் செரசான் வீதம் கலந்து) ஐந்து நிமிடங்கள்வரை வைத்திருந்து, பிறகு எடுத்து நடுவதே, வாடல் நோயைத் தடுப்பதற்குரிய வழியாகும்! கன்றுகளைக் குழிகளின் நடுவில் நட்டு பிறகு கன்றைச் சுற்றி மண்ணை நன்றாக அழுத்தி அணைக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சினால் போதுமானது.

'ரொபஸ்டா'—வாழைக்கு கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒருமுறையும், 5-வது மாதத்தில் ஒருமுறையும் ஆக 2 முறை உரமிடுதல் வேண்டும். மூன்றாவது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் பின்கண்டவாறு உரமிட வேண்டும்.

தொழு எரு—12 கிலோ
அமோனியம் சல்பேட்—300 கிராம்
சூப்பர்பாஸ்பேட்—250 கிராம்
மியூரியேட் ஆப் பொட்டாஷ்—330 கிராம்.
கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறியவாறு உரமிட, தனி உரங்கள் கிடைக்கவில்லை எனில், 8-ஆம் எண் கலப்பு உரத்தில் (6:6:18) ஒவ்வொரு வாழைக்கும் 496 கிராம் வீதம் வைக்கலாம். இவ்வாறு உரமிட ஏக்கருக்கு 600 கிலோ கலப்பு உரம் தேவைப்படும்.

ஐந்தாவது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் பின்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

தொழு எரு—12 கிலோ
அமோனியம் சல்பட்—150 கிராம்
மியூரியேட் ஆப் பொட்டாஷ்—330 கிராம்.
கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

இவ்வாறு உரமிட தனி உரங்கள் கிடைக்கவில்லை எனில், 9-ஆம் எண் கலப்பு உரத்தில் (10 : 0 : 30) ஒவ்வொரு கன்றுக்கும் 620 கிராம் வீதம் வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 750 கிலோ கலப்பு உரம் தேவைப்படும்.

'ரொபஸ்டா' வாழை பயிரிட்ட நிலத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கொத்தி விட்டுக் களை எடுத்தல் வேண்டும். பூச்சிகள், நோய்கள் தாக்குமானால் உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் கூறும் முறையில் மருந்து தெளியுங்கள்.

'ரொபஸ்டா' வாழை 12 அல்லது 13 மாதத்தில் அறுவடைக்கு வரும். ஒரு ஏக்கர் பயிரிட எல்லாச் செலவுகளும் உட்பட ஏறத்தாழ ரூபாய் 2,500 செலவாகும். ஒரு ஏக்கரில் இருந்து ரூபாய் 9,000 முதல் 10,000 வரை மொத்த வருவாய் கிடைக்கும். எனவே, செலவு போக ஒரு ஏக்கர் 'ரொபஸ்டா' வாழையிலிருந்து ரூபாய் 6,500 முதல் 7,500 வரை நிகர இலாபம் பெறலாம்!

**வினா:** நான் அரசினர் பள்ளியில் விவசாய ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். நான் ''தமிழரசு'' புத்தக வாசகன். இதில் விவசாய முறை சம்பந்தமான செய்திகள் வெளிவருவதால், இப் புத்தகம் எனக்குப் பெரிதும் பயன்படுகிறது. இதன் ஆண்டுச் சந்தா விவரத்தைத் தெரிவிக்கவும். நான் தபால் மூலம் பெற விரும்புகின்றேன். எனவே அதன் விவரங்களைத் தெரிவிக்கவும்.

—எஸ். தனராசு,
உழவியல் ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
விளாம்பட்டி அஞ்சல்,
மதுரை மாவட்டம்.

**விடை:** ''தமிழரசு'' தமிழ்ப் பதிப்பின் ஆண்டு சந்தா, ரூபாய் 10.00. இத்தொகையைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால், தபால் மூலம் தங்களுக்குத் 'தமிழரசு' வந்து சேரும்.

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!

தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200 க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.
















தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்

குறளகம்
சென்னை-600001




திருவாக மேலாளர்,

''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600002.

**வினா :** தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிடுகின்ற ''செய்திக் கதிர்'' என்னும் திங்களிதழுக்கு மாதச் சந்தா எவ்வளவு? யாருக்கு அனுப்ப வேண்டும்?

—நா. நடராசன்,
106, தெற்கு வாசல்,
திருவரங்கம்,
திருச்சி—6.

**விடை :** தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''News Letter'' என்ற ஆங்கில மாத இதழை வெளியிட்டு வருகின்றது. தமிழில் வெளியிடவில்லை! இவ்விதழ் அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே இலவசமாக அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு எனச் சந்தா செலுத்த வேண்டியதில்லை. தனிப்பட்டவர்களுக்கு அனுப்புவார்களா என்பதும் தெரியவில்லை. எனவே, இது பற்றிய விவரம் அறிய பின்கண்ட முகவரிக்கு நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள் :

'தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—641003''.

**வினா :** இளம் கடலைப் பயிர் மிகுந்த குளிரினால் பாதிக்கப்படுமா? கடலைப் பயிருக்கு மிகச் சிறந்த பட்டம் எது? மார்க்கழிப் பட்டமா? தைப் பட்டமா?

—கி. வே. ராமதாசு,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
சாம்பவர் வடகரை,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை :** இளம் கடலைப் பயிரின் வளர்ச்சி, மிகுந்த குளிரினால் தடைபடும். குளிர் காலம் மாறிய பின் பிறகு சரியாகப் போய்விடும். இறைவை கடலையை டிசம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை விதைக்கலாம். ஆனால் தண்ணீர் வசதி இருக்குமானால் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அதாவது மாசிப் பட்டத்தில் விதைப்பதே மிகவும் சிறந்ததாகும்.

**வினா :** பெட்ரோல் இல்லாமல் இயங்கக்கூடிய மோட்டார் கார் ஓடுவதற்கு வேறு ஒரு புதிய பொருள் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று வெளியிட்டு இருந்ததைப் படித்தேன். அதற்குப் புதிய முறைப்படி இயங்க வைக்க எனக்குச் சில உபகரணங்கள் தேவைப்படுகிறது. நான் உங்கள் முன்னிலையிலேயே செய்து இயங்க வைத்து காண்பிக்கிறேன். உடனடியாக எனக்கு விவரத்தைத் தெரியப் படுத்தவும்.

—ஆர். மறுமலர்ச்சி,
ஏனாதி அஞ்சல்,
பட்டுக்கோட்டை வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை :** ''பெட்ரோல்'' அல்லது ''டீசல்'' போன்ற எரிபொருள்கள் (Fuel) பற்றாக்குறை நம் நாட்டில் மட்டும் அல்ல, உலகெங்கிலும் மிகவும் கடுமையாக உள்ளது. வளர்ந்து வரும் நாடான நம் இந்தியா இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. தமிழ் நாட்டில் நாட்டுடைமையாக்கப் பட்ட பேருந்துகளை இயக்க 6 போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப் பட்டுள்ளன. இக் கழகங்களில் ஒன்றான சேரன்போக்குவரத்து கழகத்தின் விழா ஒன்றில், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு எம். எஸ். ராம், ஐ. ஏ. எஸ் அவர்கள் 'பெட்ரோல்', 'டீசல்' ஆகிய எரிபொருள்களுக்கான மாற்றுப் பொருள் கண்டுபிடிப்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்றும், அது பற்றிய விரிவான திட்டம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளதையே நாளேடுகள் வெளியிட்டிருந்தன. இது பற்றி 16-2-74-ஆம் தேதிய ''தமிழரசு'' இதழில் பக்கம் 26-லும் குறிப்பிடப் பெற்றுள்ளது. தாங்கள் அத்தகைய மாற்றுப் பொருளைக் கண்டுபிடிக்க முடியுமெனின், அதன் விவரங்களைக் குறிப்பிட்டு, அதற்கான உபகரணங்களையும் தெரிவித்து பின்கண்ட முகவரிக்கு விவரமாகக் கடிதம் எழுதலாம்.

திரு எம்.எஸ். ராம், ஐ.ஏ.எஸ்.,
போக்குவரத்துத் துறைச்
செயலாளர்,
தமிழ் நாடு அரசு,
செயிண்ட் ஜார்ஜ்கோட்டை,
சென்னை—600009.

தாங்கள் கூறுவது நடைமுறைக்கு ஏற்றதாக இருப்பின் தங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத்தர அவர் ஆவன செய்யக் கூடும். எனவே, முயற்சி செய்யுங்கள்!

**வினா :** தமிழ் நாடு அரசு இரண்டாவது சம்பளக் கமிஷன் உத்திரப்படி 1-9-1972 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 'வெயிட்டேஜ்' கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. ஊழிய காலத்தைக் கணக்கிடும் பொழுது 2-10-70-க்கு முன்பிலிருந்து தொடர்ந்து நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே ஊராட்சி ஒன்றியத்தில் 'வெயிட்டேஜ்' கொடுத்துள்ளார்கள். நான் தமிழக அரசின் உத்தரவுப்படி ஊழிய கால அடிப்படையில் பதவி



உயர்வு பெற்று 1-6-71 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். 2-10-70-ல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றவில்லை என்பதால், எங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் வெயிட்டேஜ் கொடுக்கமறுத்து விட்டார்கள். என் போன்றவர்களுக்கு வெயிட்டேஜ் கொடுப்பதற்கு அரசு ஆணையின்படி தகுதி உண்டா? இல்லையா என்பதை விளக்கமாக பதில் கூறவும். ''இந்த பதிலைத் தமிழகமே காத்திருக்கிறது!''

—பி. கே. கணபதி,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்
பள்ளி,
கன்னியாகுரிச்சி அஞ்சல்,
மதுக்கூர் வட்டாரம்.

**விடை :** இது போன்ற கேள்விகள் நூற்றுக் கணக்கில் ''தமிழரசு'' அலுவலகத்திற்கு வந்துள்ளன. எனவே, இதற்குக் கூடுமான வரை தெளிவு ஏற்படுத்த, கீழ்க் கண்ட விளக்கத்தை அளித்துள்ளோம். தமிழ் நாடு இரண்டாவது சம்பளக் கமி



உங்கள் உயர்வுக்கு வசதியான வாய்ப்பினை
உருவாக்கிக் கொள்ளுங்கள்
இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
முதல் பரிசு:
ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)
64-வது குலுக்கல் நாள்:
28-3-1974
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்




வண்ணத்துப் பூச்சியின்
வண்ணமிகு கோலங்கள்!
அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும்
கும்பகோணம் பட்டுப் புடவைகள்
பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி
வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட்
சட்டைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்
கைத்தறியே
வண்ணத்துப்-
பூச்சி!

## தமிழ்நாட்டில் ஊராட்சி

தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாகம், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்களையும், ஊராட்சி ஒன்றிய நிலையில் ஊராட்சி ஒன்றியக் குழுவையும், கிராம நிலையில் ஊராட்சிகளையும் கொண்டுள்ள மூன்று நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாவட்ட வளர்ச்சித் தனிக் குழுக்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல் படுகின்றன.

(1) தருமபுரி, (2) கன்னியாகுமரி, (3) நீலகிரி.

பின்வரும் 10 மாவட்டங்களில், இரண்டு மாவட்ட மேம்பாட்டுக் குழுக்களும் உள்ளன: (1) வட ஆர்க்காடு, (2) தென் ஆர்க்காடு, (3) கோயம்புத்தூர், (4) செங்கற்பட்டு, (5) மதுரை, (6) இராமநாதபுரம், (7) சேலம், (8) திருச்சி, (9) தஞ்சாவூர், (10) திருநெல்வேலி.

தமிழகத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவற்றில் 57 பேரூராட்சிகளும், 12,289 ஊராட்சிகளும் அடங்கியுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியப் பணிகளில் தொடக்கக் கல்வி குறித்த பணியும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட 27,000-க்கும் அதிகமான பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் பள்ளிகள் ஏறக்குறைய 1,16,500 பேருக்கும் அதிகமான ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. இப் பள்ளிகளில் 40,40,700 மாணவர்கள் படிக்கின்றனர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்த ஆண்டில் நான்காவது அகில இந்திய கிராமிய விளையாட்டுப் போட்டிகள் சேலத்தில் 13.2.74 முதல் 16.2.74 வரை சிறப்புடன் நடைபெற்றன.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாக 1,200 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

பல விளையாட்டுகளிலும் போட்டிகளிலும் தமிழ்நாடு அணிகள் பல பரிசுகள் பெற்றன. கால்பந்துப் போட்டியிலும், சடுகுடு போட்டியிலும் தமிழ்நாடு முதற்பரிசு பெற்றது.




பழ வளம் குறைந்துபோவதைத் தணித்து, மா, மிளகாய்ப் பயிர்களின் மகசூல் பெருகிட, உபயோகிப்பீர்

# ப்ளேனோ:பிக்ஸ்



**மா**

மாமரப் பயிர்கள் மீது ப்ளேனோ:பிக்ஸ் தெளிப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. முன் பழுப்புப் பருவத்திலே, 4.5 லிட்டர் நீரிலே 1 மிலி வீதம் ப்ளேனோ:பிக்ஸ் தெளிக்கும் போது, நீர் மட்டுமே தெளிக்கப்படும் கட்டுப்பாட்டுப் பயிர்களை விட 34 சத விகிதம் அதிகப் பழங்கள் கண்டுமுதல் தேறுவதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

**மிளகாய்**

4.5 லிட்டர் நீரிலே 1 மிலி ப்ளேனோ:பிக்ஸ் வீதம், பழுக்கும் பருவத்திலே முதல் தெளிப்பும், 3-4 வாரங்கள் கழித்து இரண்டாம் தெளிப்புமாக, இரு முறை ப்ளேனோ:பிக்ஸ் தெளித்து வந்ததன் பயனாக மகசூல் பெருகியதாகத் தெரிய வந்துள்ளது.



கோரிக்கையின் பேரில் விவரங்கள் தரப்படும்.

'ப்ளேனோ:பிக்ஸ்' என்பது மே & பேக்கர் லிட். கம்பெனியின் டிரேடு மார்க்

M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய் • கல்கத்தா • கவுஹாத்தி • இந்தோர் • லக்னோ • மதராஸ் • நியூ டெல்லி • பாட்னா

உஷார், போலிகளை ஏற்காதீர்—உங்கள் பயிர் ஒப்பிலாச் செல்வம்


ஷன் பரிந்துரையின்படி புதிய சம்பள விகிதங்களை 2-10-70 முதல் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தது. (ஆணை எண் : 222, நிதித் துறை, நாள் 8-2-71). இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளில் இருந்த குறைபாட்டை நீக்கவே தனி நபர் குழு (One man Committee) அமைக்கப்பட்டது. ஆணை எண். 1363, நிதி (சிறப்பு) துறை, நாள் 7-10-72-ல் தனி நபர் குழுவின் பரிந்துரைகள் அடங்கியுள்ளன. இந்த ஆணைப்படி முன்பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' 2-10-1970 முதல் கணக்கிடப்பட்டாலும், சம்பள உயர்வின் பயன் (Monetary effect) 1-9-1972 முதல் தான் கிடைக்கும்! இதை மனதில் கொண்டு, 'வெயிட்டேஜ்' கிடைக்கவில்லை என்று கூறும் நடுநிலைப் பள்ளி ஆசிரியப் பெரு மக்கள் தங்கள் பிரச்னையை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

2-10-1970-க்கு முன்பு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு மட்டுமே மேற்கூறிய ஆணைகளின்படி முன் பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' (கால அளவிற்கேற்ப) கிடைக்கும்! 2-10-1970-க்குப் பிறகு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 'வெயிட்டேஜ்' கிடைக்காது. ஏனெனில் 2-10-1970-ல் எந்த பதவியில் இருந்தார்களோ, அந்த பதவியில் அவர்கள் ஆற்றியுள்ள பணிக் காலத்திற்கு 'வெயிட்டேஜ்' கொடுத்துதான், புதிய சம்பள விகிதங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும் (Fixation of pay). எனவே, 2-10-70-க்குப் பிறகு ஏதேனும் ஒரு தேதியில் பதவி உயர்வு பெற்று நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக ஆகி இருந்தால், அந்த தேதியில் அவர்கள் வாங்கும் சம்பள விகிதத்தை, நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சம்பள விகிதத்தில் பொருத்தமான நிலையில் (Proper stage) வைத்து சம்பளம் வரையறுக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்பொழுது 'வெயிட்டேஜ்' கொடுக்கப்பட மாட்டாது!

உதாரணத்திற்கு திரு பி. கே. கணபதி அவர்கள் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் 1-6-71 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். அதற்கு முன் அவர் ஆசிரியராகவே இருந்திருப்பார். ஆசிரியராக இருந்த அவருக்கு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி 2-10-70 முதல் புதிய சம்பள விகிதம் (முன் பணிக் காலத்திற்கு ஏற்ப 'வெயிட்டேஜ்' கொடுத்து) வரையறுக்கப்பட்டிருக்கும்.

அவர் 1-6-71-ல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றதும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்குள்ள சம்பள விகிதத்தில் பொருத்தமான நிலையில் அவரது சம்பளம் வரையறுக்கப்படும். முன்பே, அவருக்கு முன்பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' வழங்கப்பட்டுள்ளதால், மீண்டும் 'வெயிட்டேஜ்' கிடைக்காது.

2-10-70-க்கு முன்பே நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி இருந்து, தனி நபர்குழுவின் பரிந்துரைப்படி சம்பள விகிதம் மாற்றப்பட்டிருக்குமானால் (Revised) மட்டுமே, 2-10-70 முதல் மாற்றப்பட்ட சம்பள விகிதம் (முன் பணிக் கால 'வெயிட்டேஜ்') உட்பட வரையறுக்கப்படும். ஆனால் மாற்றப்பட்ட சம்பள விகிதம் (Revised scale of pay) காரணமாக கிடைக்கும் பொருளாதாரப் பயன் (monetary benefit) 1-9-72 முதல் மட்டுமே கிடைக்க மேற்கூறிய ஆணை எண். 1363 வழி செய்கிறது.

இவைகளை மனதிற்கொண்டு உங்கள் பிரச்னைகளை அலசிப் பாருங்கள். அப்படியும் விளங்கவில்லை எனின், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ, அல்லது மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திலோ அல்லது தங்கள்மாவட்ட என். ஜி. ஓ. சங்க அலுவலகத்திலோ இதுபற்றி விவரமாகக் கேட்டு அறிவதே மேல்!

**வினா :** 'கராத்தே' கலையில் நான் சேர்ந்து பயில விரும்புகின்றேன். எனவே அதற்கு விண்ணப்பிக்கும் வழி முறைகள் அனைத்தையும், கராத்தே ஆசிரியர் திரு மணி அவர்களின் விலாசத்தையும், கட்டணம் போன்றவைகளையும் தெரிவிக்கவும். இதை கற்பவருக்கு மானியம், சிறப்புக் கட்டணம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? நான் சென்னையில் கிராமப் பகுதியில் இருப்பதால், வந்து கற்க வசதி உள்ளதா?



—ஜி. ராஜசேகரன்,
1[516, கந்தசாமி கோயில் காலனி,
எருக்கஞ்சேரி,
சென்னை—600051.

**விடை :** 'கராத்தே' கற்க விரும்பினால் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பயிற்சியில் சேர்ந்து கொள்ளவேண்டும். இது பற்றிய முழு விவரமும் அறிய கராத்தே ஆசிரியருக்கு எழுதிக் கேட்பதே நல்லது. அவரது முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரு மாஸ்டர் தமிழ்மணி,
தென்னிந்திய கராத்தே கழகம்,
கார்ப்பரேஷன் ஸ்டேடியம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை-600034.

'கராத்தே' பயிற்சி பெற மானியம் ஏதும் கிடையாது. நீங்கள் கட்டணம் செலுத்தியே பயிற்சி பெற வேண்டும்.

—ஆர். எம்.

பதிவு எண். M. 8676




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அச்சிடப்பட்டது.





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.

சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.


கடினமான உழைப்பே, நம் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும்; பொறுப்புணர்ந்து உண்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைக்கும் நம் மன உறுதிப்பாட்டினால் தான் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் காண முடியும்!

—அண்ணல் காந்தியடிகள்

உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன்! வாழ்த்துக்குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

—பேரறிஞர் அண்ணா

கடினமான நிலத்தில் ஏர் கட்டி உழுவோரிடமும் சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்போரிடமும் அவன் இருக்கின்றான். அவர்களுடன் அவன் மழையில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான். அவனைப்போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டுகொள்ளுங்கள்!

—கீதாஞ்சலியில் தாகூர்

உழைக்கும்போது நீங்கள் உலகின் பண்டைய நெடுங்கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றியவராவீர்கள். அக்கனவு என்று பிறந்ததோ அன்றே உங்களுக்குரிய பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது.

எனவே, உழைப்போடு ஒத்திசைந்து நடக்கையிலேதான் உண்மையில் நீங்கள் வாழ்வைக் காதலிக்கின்றீர்கள். இவ்வாறு உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் அந்தரங்க இரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்வதாகும்.

—கலீல் இப்ரான்

# தமிழரசு




மலர் 4 [இதழ் 21



9-MAY 1974


## இந்த இதழில்


கைம்மாறு கருதார்க்குக் காணிக்கை
நலவாழ்வுக்கு நல்லுணவு
சேது சமுத்திரத் திட்டம் - நிலை என்ன?
நில நீர் இயக்ககப் பணிகளும் சாதனைகளும்
மேலான மேநாள் (கவிதை)
கேளுங்கள் - கொடுக்கப்படும்
எழில் கொழிக்கும் மலர்க்காட்சி!
அந்த நினைவுகள் இந்த நாளில்...' (கதை)
மின்னியல் உலகில் முன்னோடி!
பலாச்சுளை
முதன் முதலில்......!
காணி நிலம் வேண்டும்
செய்தியே! சித்திரமே!




# கைம்மாறு கருதார்க்குக் காணிக்கை

மத்திய அரசில் உள்ளவர்கள், முன்னேறிவிட்ட மாநிலங்கள் என்ற பட்டியலில் நம்முடைய தமிழகத்தைச் சேர்த்து இருக்கிறார்கள். முன்னேறிவிட்ட மாநிலங்கள் என்று இருந்தாலும், ஆங்காங்கே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. பின் தங்கிய பிரச்சினைகள் பல்வேறு சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை நாம் வலியுறுத்தி வலியுறுத்தி எடுத்துச் சொன்னாலும் அதனைக் கவனிக்காத பாணியில் நடந்து கொள்வது தான் நிதிக் குழுவின் செயலாக இருக்கிறது என்பதை நான் பல முறை எடுத்து விளக்கியிருக்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டம்கூட இன்னும் ஒழுங்காக அமைவு பெறவில்லை என்பதில் நம்முடைய குற்றம் இல்லை, குறை இல்லை. ஐந்தாண்டுத்திட்டம், வரைவு இன்னும் நிறைவு பெறாத சூழ்நிலையில் இருக்கிறது. 5-வது ஐந்தாண்டுத் திட்டம் 25 கோடி ரூபாய் திட்டம் என்று இருந்தது 50 கோடி திட்டம் என்று கம்பீரமான கோஷத்தைப்—பிரகடனத்தை மத்திய திட்டக்குழு இன்றைக்கு வெளியிட்டு இருக்கிறது என்றாலும் ஆண்டு திட்டத்திற்குக்கூட, நம் திட்டத்தின் வளர்ச்சி வேகத்தைப் பொறுத்து ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யுங்கள் — மத்திய சர்க்காரின் உதவி தாருங்கள் என்று கேட்டும்கூட அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள் என்றால், அவர்களே திட்டத்தில் திட்டவட்டமான ஒரு முடிவை இன்னும் எடுக்காமல் இருக்கின்றார்கள் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்வேன்.

நம்முடைய ஐந்தாண்டுத் திட்டம் என்ன என்று கேட்கப்பட்டது. அதுவும் ஏற்சனவே தெளிவாக்கப் பட்டிருக்கிறது. 1500 கோடி ரூபாய்க்கு 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வரைவை நாம் மத்திய திட்ட குழுவிற்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். இந்த ஆண்டுத் திட்டமாக—முதல் ஆண்டுத் திட்டமாக 150 கோடி ரூபாய்க்கு நாம் திட்டம் வகுத்து இருக்கிறோம். அதை நம்முடைய வரவு செலவுத் திட்டத்தின்போதே குறிப்பிடப் பட்டு இருக்கிறோம். சென்ற ஆண்டு 46 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டது. ஆனால் 41 கோடிதான் தரப் பட்டது. தேசீய வளர்ச்சிக் குழுவில்—எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, மேற்கு வங்கத்தின் முதல்வரும், தமிழ் நாட்டைச் சேர்ந்த நானும், கருநாடக முதல்வரும்—ஒரு பிரச்சினை எழுப்பினோம். நான், எங்களுக்கெல்லாம் தந்து இருக்கின்ற ஒரு தந்தியில் சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும நிதி ஒதுக்கப் படும் என்பது போல அதிலே ஜாடை காணப்படுகிறது அது சரிதானா என்று கேட்டபோது, திட்டக்குழு அமைச்சர் அவர்கள் உடனடியாக பதில் சொன்னார்கள், அதை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம். வளர்ச்சி வேகத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு அதிகத் தொகை அளிக்கப் படும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனால் நிலைமை என்ன? இப்பொழுது சென்ற ஆண்டு 46 கோடி ரூபாய் என்று சொல்லி 41 கோடி ரூபாய் உதவி வழங்கிய மத்திய அரசு திட்டக்குழு, இந்த ஆண்டுக்கும் 41 கோடி ரூபாய்தான் என்று சொல்வதிலிருந்து நாம் ஒன்றைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 25 ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டம் 50 ஆயிரம் கோடி ரூபாயாக இரட்டிப்பாக ஆகியும், முதல் ஆண்டுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய்தான், சென்ற ஆண்டும். இந்த ஆண்டும் அதே 41 கோடி ரூபாய்தான் முதல் ஆண்டுக்கு தரப்படுகிறது என்றால், இந்தத் திட்டம் எந்த அளவில் போய் முடியும்? எங்கே போய் நிற்கும் என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு நிலையான முடிவைத் திட்டம் பற்றி, குறிப்பாக முதல் ஆண்டைப் பற்றியே எடுக்காமல் இருக்கிற காரணத்தினால் எதையும் இங்கே தெளிவாக எடுத்துக் கூற முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் போன்ற திட்டங்கள் மத்திய அரசினுடைய நேரிடைத் திட்டங்களாகும். ஆகவே இதுவும் அதுவும் சேராது. என்றாலும் 41 கோடி ரூபாய் என்று அவர்கள் சொன்னாலும் கூட, பத்திரிகையில் வந்திருக்கிறது. நாம் தொடர்ந்து வாதாடத்தான் போகிறோம். வாதாடிக்கொண்டுதான் இருப்போம். ஆனால் என்ன முடிவுகளை எடுக்க வேண்டும் ஜனநாயக ரீதியிலே இயங்குகின்ற ஒரு அரசு, இந்த மாமன்றம், அல்லது இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கிற கட்சிகள் நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்காக எந்த வகையிலே வாதாட வேண்டும், போராட வேண்டும் என்பதையெல்லாம் நிதானித்துத்தான் நாம் சிந்தித்துச் செயல்படவேண்டுமே அல்லாமல், என்ன செய்யப் போகிறீர்கள் என்று திரு. ஹண்டே அவர்கள் திடீரென்று கேட்டுவிடுவதும், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கு நீங்கள் வாதாட வருகிறீர்களா என்று கேட்டதும், அவர்கள் அவர்களுடைய தலைவரைக் கூடக் கலந்துகொள்ளாமல், நான் தயார் என்று கூறிவிடுவதும், இப்படிப்பட்ட—அவசரப்பட்டு எடுக்கப்படுகின்ற முடிவுகள், உறுதிமொழிகள் எல்லாம் கடைசி வரையில் நிற்குமா என்று யோசித்துப் பார்த்துத்தான் முடிவுகளை எடுக்க வேண்டும்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்ற வாய்மொழிக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். ஆகவே, இப்பொழுது திடீர் திடீரென்று என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் திடீரென்று எதுவும் சொல்லிவிட முடியாது. பொறுத்து இருந்து பாருங்கள் என்றுதான் சொல்ல முடியும்.

நிதி நிலை அறிக்கை இனங்களை சமர்ப்பிப்பது போன்ற காலத்தைக் கூட மாற்ற வேண்டும் என்கின்ற ஒரு கருத்தை நம்முடைய ஆளும் காங்கிரஸ் சார்பாக நண்பர் மாரிமுத்து அவர்கள் இங்கே வெளியிட்டார்கள். அது பற்றி நிதித் துறை செயலாளர் தன்னுடைய தனிப்பட்ட கருத்தாக ஒரு கருத்தரங்கினில் எடுத்துச் சொன்ன வார்த்தைகளையும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கருத்தும், திரு மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தும் உள்ளபடியே வரவேற்கத்தக்க கருத்துத்தான். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் நாம் நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதியைப் பெற்று, அவைகளைச் செலவழிப்பதற்கு மிகப் பரபரப்பான காரியங்கள் நடைபெறக்கூடிய மாதங்கள், நம்முடைய கால நிலை இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்துப் பார்த்தால் ஏப்ரல், மே மாதங்களில் அந்த வேலைகளின் டெம்போ என்று கூறப்படுகின்ற அந்த வேகம் நல்ல முறையில் இருக்கும். ஆனால் அப்பொழுதுதான் சாங்ஷன் ஆகி, அடுத்த அடுத்த கட்டத்திற்குச் சென்று வேலைகள் தொடங்கி நாம் அடுத்த பட்ஜெட் சமர்ப்பிக்கின்ற நேரத்தில் வேலைகள் தவக்கமாகின்றன என்ற அந்த உண்மையை நாம் மறுத்து விட இயலாது. பட்ஜெட் முறையில் பெரிய மாற்றத்தை நாம் செய்தாக வேண்டும். அதை மாநில அளவில் செய்ய முடியுமா? அகில இந்திய அடிப்படையில் அந்த மாற்றம் இருந்திட வேண்டுமா என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்த்துத்தான் ஒரு முடிவு எடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், நண்பர் மாரிமுத்து அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், பெரியவர் மணலி அவர்களும், மற்றவர்களும் பேசும்பொழுது இன்றைக்கு இருக்கிற உணவுப் பிரச்சினையில் அரசு போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய பாரதி அவர்கள் உரம் கிடைக்காத காரணத்தினால் உணவுப் பிரச்சினையில் ஏற்படக் கூடிய தட்டுப்பாட்டை எடுத்துரைத்தார்கள் உலகத்திலேயே உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு பத்திரிகை தலையங்கம்




எழுதியிருப்பதை நண்பர் ராஜா அவர்கள் கூட்டிக்காட்டினார்கள். அப்படியிருக்கும் உலக நிலையில் இன்றைக்கு இந்தியாவும் அந்த உரப் பற்றாக்குறையில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் உணவில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்றாலும்கூட, எதிர் காலம் அச்சமூட்டத் தக்க வகையில் ஆகிவிடக் கூடாது என்று எச்சரிக்கையோடு நல்ல பல முடிவுகளை உடனுக்குடன் நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும் அந்தத் துறை அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து எடுத்து வருகிறார்கள். நேற்றைய தினம்கூட நானும், உணவு அமைச்சரும், அந்தத் துறையினுடைய அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து தொடர்ந்து இந்த விலைவாசி, அரிசியைப் பொறுத்தமட்டிலாவது ஏறாமல் தடுப்பதற்கு என்ன வழி வகைகளைச் செய்யலாம் என்பதைப்பற்றியெல்லாம் யோசித்திருக்கிறோம். இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் மனத்தில் பதிய வைத்துக் கொண்டு மேலும் அந்த மாநாடுகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளை நாம் நிச்சயமாகச் சிந்தித்து எடுப்போம் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்பற்றி கணக்கு ஆய்வுக் குழு எப்படி எல்லாம் விமர்சிக்கிறது என்ற கருத்தை பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் எடுத்து சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற பட்ஜெட் அமைப்பில் ஒரு பெரிய மாறுதலைச் செய்யாமல் இருக்கிற வரையில் ஒதுக்கப்படுகின்ற பணம் வேறு பல காரணங்களுக்காகச் செலவழிக்கப்படாமல் சரெண்டர் செய்யப்படுகின்ற சூழ்நிலை ஏற்படலாம். சில நேரங்களில் சில குறைபாடுகள் இருக்கலாம் ஏதோ இன்றைக்குத் தான் கணக்குக் குழுவில் அப்படிப் பட்ட ஒரு விமர்சனம் எழுதப் பட்டிருக்கிறது என்பது அல்ல. இந்த பட்ஜெட் தொடங்கிய காலத்திலிருந்து கணக்குக் குழு இது போன்ற பல்வேறு அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்லி வருகிறது. அந்த அபிப்பிராயங்களைப் பெற்றுக் கூடுமான வரையில் அவ்வப்பொழுது பட்ஜெட் தயாரிக்கின்ற நிதித் துறைச் செயலாளர், நிதித் துறையினர், அரசினர், அவைகளுக்கான திருத்தங்களைச் செய்து கொண்டு வருவதோடு அல்லாமல், ஏதோ இதைப் பெரிதுபடுத்தி, பட்ஜெட் தவறானது என்று வாதிப்பது. சரியானது ஆகாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் தங்களுடைய தொகுதி நிலவரங்களைப்பற்றி எல்லாம் எடுத்துக் கூறினார்கள். முஸ்லீம் லீக்கினுடைய தலைவர் திரு. மொய்தீன் அவர்கள் அவர்களுடைய தொகுதியைப் பற்றிய பிரச்சினையை எடுத்துச் சொல்லி, பர்மா அகதிகளுக்காக இந்த அரசு, மாநகராட்சி இவைகளெல்லாம் செய்ய வேண்டிய பணிகளைக்குறித்துச்

கப்படும் என்று சொன்னோம். பரிசீலிக்கப்படும் என்று சொன்னது அஷ்யூரன்ஸ் ஆகிவிடும் என்பதை-அஷ்யூரன்ஸ் கமிட்டி உறுப்பினர்கள் அறிவார்கள். அதுவே ஒரு உறுதிமொழியாகி விட்டது - உள்ளாட்சித்துறைப் பொறுப்பை அமைச்சர் — அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொண்டவுடன் - நாங்களே சொல்லி விட்டதை வைத்து அவர்களும் அழுத்தந்திருத்தமாக அவர்களுடைய மாநாடுகளில் அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கிறார்கள்.

முதலில் நாங்கள் யோசித்தோம் - வருவாய்த்துறை - வளர்ச்சித்துறை ஆகிய இரண்டையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற நோக்கமே— வளர்ச்சித் துறையின் மூலமாக நிறையப் பணிகளைச் செய்ய வேண்டும் என்பதுதானே. அது தான் உண்மையான நோக்கம் என்கிறபோது - இரண்டையும் ஒன்றாக்கி வளர்ச்சித்துறை என்றே பெயரிட்டு - இதனை இன்னும் நல்ல முறையில் விரிவுபடுத்தக் கூடாதா என்கிற ஒரு சிந்தனையை நாங்கள் செய்து - ஐந்தாறு நாட்கள் - இங்கே விவாதம் நடந்துகொண்டிருக்கும்போதே அதிகாரிகளுடன் கலந்து பேசினோம். அதிலே வருவாய்த்துறை அலுவலர்கள் அதை முழுமனத்தோடு ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. அதற்குப் பிறகுதான் இப்போது நாங்கள் எடுத்திருக்கிற முடிவினை உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

தற்போது மாவட்ட அளவிலே வருவாய்த்துறையையும் வளர்ச்சித் துறையையும் (Revenue and Development) மாவட்ட ஆட்சியாளர் கவனித்து வருகிறார்.

ரெவின்யூ டிவிஷன் அளவிலே டிவிஷனல் அதிகாரிகளாக (ஆர்டி.ஓ. வாக) இருப்பவர்கள் வருவாய்த்துறை வேலைகளையும் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளையும் கவனித்து வருகின்றனர்.

பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளுக்கு உதவி செய்வதற்காக ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி (D. P. O.) பணி புரிந்து வருகிறார்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 16—2—74 முதல் 22—3—74 வரை சிறுசேமிப்பு வசூல் தீவிர இயக்கம் நடைபெற்றது. அந்தீவிர இயக்க காலத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 72,65,000 வசூல் செய்யப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு இலக்கு நிர்ணயித்தது. அந்த இலக்கிற்கு ரூபாய் 75,03,611 வசூல் செய்து இராமநாதபுரம் மாவட்டம், சிறுசேமிப்புத் திட்டத்தில் வெற்றி வாகை சூடியுள்ளது!

இந்த டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் வருவாய்த் துறையிலிருந்து பிரிந்து தனியாகப் பஞ்சாயத்து வேலைகளைக் கவனிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே பஞ்சாயத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் கோரி வருகின்றனர். இந்த கோரிக்கையை அரசு பரிசிலனை செய்து டிவிஷன் அளவிலே ஆர்.டி.ஓ. வுக்குக் கீழ் இயங்கியும் இந்த டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்ட வேலைகளைக் கவனிப்பதற்கென்று தனியாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் கொண்டு வருவது என்ற முடிவை அரசு கொள்கை அளவிலே ஏற்றுக் கொள்கின்றது.

இந்தத் திட்டத்தை இந்த நடப்பாண்டிலேயே நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய பல அறிவிப்புகள் இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்று நான் கருதுகிறேன். நீண்ட நெடு நாட்களாக எங்கள் நெஞ்சத்தில் ஆழப் பதிந்து கிடக்கிற-தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற எங்கள் கருத்தை-அந்தக் கருத்துக்கள் மேலும் செயல்படுகிற வகையில்-இந்த அறிவிப்புகளை நிதி ஒதுக்கீடு மசோதாவில்— இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறேன்.

இதில் பங்கு கொண்ட பல கட்சித் தலைவர்களும் இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் என்னென்ன பேச வேண்டுமென்று ஆய்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒருசில இடங்களில் இருக்கிற குறைபாடுகளை வைத்தே இது எல்லாமே இப்படித்தான் இருக்கும் என்ற கருத்தை திரு கே.டி.கே. சொன்னார்கள். அது ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தல்ல.

ஒன்றிரண்டு இடங்களில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்றால்-தவறுகள் சுட்டிக் காட்டப்படுகிற நேரத்தில் நிச்சயமாக அந்தத் தவறுகள் கண்டு பிடிக்கப்படவும், திருத்தப்படவும் - அதன் பொறுப்பாளிகள் தண்டிக்கப்படவும் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதில் என்றைக்கும் நாங்கள் தயக்கம் காட்டியது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் ஹண்டே அவர்கள் கதர் இலாகாவில் பஞ்சு வாங்கியதில் ஊழல் என்று குறிப்பிட்டார்கள்.

1973-74 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் 1.4.73 முதல் 25.6.73 வரை ரூ. 15.5 இலட்சம் மதிப்புள்ள பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. வாங்கின அளவு சுமார் 2.75 இலட்சம் கிலோ ஆகும். குவிண்டால் ரூ. 464 முதல் ரூ. 541 வரை வாங்கப்பட்டது.

நமது மாநிலத்தில் கருங்கண்ணிப் பஞ்சு மாத்திரம் கிடைக்கும். அவைகளுக்கும் ஏகப்பட்ட கிராக்கி இருந்தாலும் இந்தக் கருங்கண்ணி பஞ்சைக் கொண்டு பெட்சீட் நெய்ய இயலாததாலும் ஆந்திர மாநிலத்திலிருந்து சிவப்பு பஞ்சு (ரெட் காட்டன்) வாங்க வேண்டியிருந்தது. உயர்ரக நூலுக்குத் தேவையான பஞ்சு வகைகளும் ஆந்திர மாநிலத்தில் வாங்கப்பட்டது. இதனால் எந்த விதமான நஷ்டமும் இந்த இலாக்காவுக்கு ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். தேவையான பஞ்சுதான் வாங்கப்பட்டிருக்கிறது.

தனியார் யாரும் வாங்கவில்லை. பஞ்சு - கொள்முதல் குழு மூலம்தான் இந்தப்பஞ்சு நேரிடையாக வாங்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.



இன்னும் பெங்களூர் பொருட்காட்சியைப் பற்றிச் சொன்னார்கள். கதர் கமிஷன் விடுத்த அழைப்பின் பேரில்தான் நமது கதர் வாரியம் இந்தப் பொருட்காட்சியில் பங்கு கொண்டிருக்கிறார்கள். பங்கு பெற்றதால் இந்த வாரியத்தில் பலதரப்பட்ட உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு நல்ல விளம்பரமும் அவைகளை இன்னும் விற்பனை செய்வதற்கு ஏற்ற வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. சுமார் 1.16 இலட்சத்திற்குப் பொருள்களை விற்பனை செய்திருக்கிறார்கள். நமக்குச் செலவு ரூ. 25 ஆயிரம்தான். அகில இந்திய கதர் கமிஷன் இந்தச் செலவிற்காக ரூ. 20 ஆயிரம் மானியமாக தற்போது நமக்கு அளித்திருக்கிறார்கள் என்கிற விவரத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் எடுத்துச்சொன்ன அறிவிப்புகளை இந்த மாமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

வழக்கமாகப் போகின்ற முறைப்படி - முத்தாய்ப்பு வைத்தாற்போல அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லாவிட்டால் பொருத்தமாக இருக்காது என்ற உணர்வோடு நண்பர் ஹண்டே அவர்கள் ஒரு அரிய ஆலோசனையை வழங்கினார்கள்.

அண்ணாவுக்கு உரிமை படைத்தவர்கள் யார் என்பதை உலகம் புரிந்து கொண்டுவிட்டது. இங்கே உட்கார்ந்திருக்கிற தாங்கள் அல்ல என்று சொன்னார்கள். உலகத்திற்குத் தெரியும் - அண்ணாவுக்கு சொந்தமும், பந்தமும் உள்ளவர்கள் -கருணாநிதியா, ஹண்டேயா என்பது. புதிய வாதத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் உலகத்திற்குத் தெரிந்த அந்த விஷயத்தில் நான் நேரத்தை வீணாகக் கழிக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னார்கள். உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை உலகம் தீர்மானிக்க வேண்டும்.

இன்னொன்றும் சொன்னார்கள். முதலமைச்சர் கருணாநிதி ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். நல்ல அறிவுரை-என் மனைவிகூட அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறாள் - வீட்டில் கூட பல பேர்கள் ஓய்வு பெறுங்கள், ஓய்வு பெறுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல அறிவுரைதான் - ஆனால் ஓய்வு பெறுங்கள் என்று அவர் சுட்டிக்காட்டுவது முதலமைச்சர் பதவியில் இருந்து ஓய்வு - அரசுப் பொறுப்பில் இருந்து ஓய்வு என்று சொல்கிறார்கள்.

இந்த அரசுப் பொறுப்பு என்பது - நண்பர் ஹண்டே போன்றவர்கள் எல்லாம் அரசியலுக்கு வராத காலத்தில் இருந்து -திராவிடக் கழகம் - சுயமரியாதை இயக்கம் -இவைகள் நாட்டில் வேரூன்றிய அந்தக் காலத்தில் இருந்தே நாங்கள் எல்லாம் இந்த இயக்கத்திலே எங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் - ஆகவே இந்த அரசுப் பொறுப்புக்காக இந்த இயக்கத்திற்கு வந்தோம் என்று இன்றைக்கு அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற - திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்து வந்திருக்கிற அவர்களது தோழர்களேகூட நிச்சயமாகச் சொல்லமாட்டார்கள். ஹண்டே அவர்களுக்கு வேண்டுமானால் அவர்கள் புதியதாக வந்திருக்கலாம் - ஆனால் இங்கிருந்து சென்றிருக்கிற அவரது தோழர்களுக்கு எங்களைப் பற்றித் தெரியும். அந்த உள்உணர்வுகளை அவர்கள் அடியோடு கிள்ளி எறிந்து விட்டார்கள் என்று நான் நினைக்கவில்லை.

ஓய்வு என்பது பதவிப் பொறுப்பில் இருந்து போவது தான் என்றால் நான் அதை ஓய்வாகக் கருதவில்லை. -நாங்கள் உழைக்கவே பிறந்தவர்கள் - உழைத்துக்கொண்டே இருப்போம். அமைச்சரவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களுக்காக உழைத்துக் கொண்டிருப்போம்.

என்றைக்காவது நான் மறைந்துபோய் - யாராவது எனக்கு ஒரு சிறிய கல்லறையை எழுப்பினால், ''உழைத்தவன் இங்கே ஓய்வு கொள்கிறான்'' என்று எழுதுவார்களே தவிர- அப்போதுதான் ஓய்வு என்கின்ற வார்த்தை - என் உடல் மீது அல்ல - என் கல்லறை மீது எழுதப்படுமே தவிர - அது வரை நான் இந்த நாட்டுக்கு தீய காரியங்களை எதிர்த்து - துரோகத்தை எதிர்த்து நிச்சயமாக உழைத்துக் கொண்டிருப்பேன் என்பதைத் தெரிவித்து -அதுவரை எனக்கு ஓய்வு கிடையாது என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிதி ஒதுக்கீடு மசோதா மீதான விவாதத்திற்கு அளித்த பதிலுரையின் சில பகுதிகள்]



## உலகில் வழங்கும் ஒரு சில மொழிகள்!

மனிதனிடத்தில் இல்லாதது ஒன்றைத் தவிர வேறெதுவும் அவனைத் திருப்திப்படுத்த முடியாது.

* * *

தேவையானதை வாங்காதே; தவிர்க்க முடியாததை வாங்கு.

* * *

உழைப்புத்தான் ஒரு மனிதனை எதிலும் முந்தச் செய்கிறது.

* * *

நோயின் தந்தை யாரோ; தவறான உணவுதான் அதன் தாய்.

* * *

நாம் வீணாக்கிய நாட்களில் மிகவும் வீணான நாள், நாம் சிரிக்காத நாள்.

சொன்னார். சுதந்திராக்கட்சித் தலைவர் வெங்கடசாமி அவர்களும் தேன்கனிக்கோட்டையில் நடைபெறுவது வகுப்புக் கலவரமாக ஆகிவிடக்கூடாது, அந்த ஒரு நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இன்று காலையில் நண்பர் லத்தீப் அவர்கள் கூட என்னிடம் அதைப்பற்றிப் பேசினார்கள். உடனே அங்குள்ள போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அங்கு இதற்கு மேல் எந்தக் கிளர்ச்சியும் எழாத அளவுக்கு அமைதி காப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு மாவட்ட அதிகாரிகள் அனைவரும் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மானிய விவாதங்களிலும், வரவு செலவுத்திட்டப் பொது விவாதத்திலும் கட்சிகளினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பல கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் பல திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஓய்வு ஊதியத் திட்டம், பரிசுச் சீட்டுத் திட்டம் மூலம் நாம் உருவாக்குகின்ற புதிய நிலை, அரிசனங்களுக்கு வீட்டு வசதி வாரியம், ஏழை எளியவர்களுக்கு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டுள்ள காரியங்கள் இவைகளையெல்லாம் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசு, அடித்தளத்து மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள் அவர்களுடைய நல் வாழ்வை மையமாக வைத்துத் தொடர்ந்து செயலாற்றி வருகிறது—சாதனைகளைப் புரிந்து வருகிறது என்பதை இந்த அவையும், நாடும் நன்கு அறியும், அந்த வகையிலே நம்முடைய தமிழகத்தில் அரசன குடியிருப்புகள் 24,583 இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளில் இன்றைக்கு 23,832 குடியிருப்புகளுக்கு, மின் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றும் ஆயிரத்திற்கும் குறைவான குடியிருப்புக்களுக்குத்தான் மின் வசதி செய்யப்பட வேண்டியதிருக்கிறது. இதனைப் பாராட்டி, 'Report of the Commissioner of scheduled castes and Scheduled Tribes' என்கிற மத்திய அரசு வெளியிட்டிருக்கிற பெரிய நூலிலேகூட மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். The electrification schemes undertaken by the Government of Tamil Nadu in Harijan Colonies, is really commendable என்ற அளவுக்கு எழுதியிருக்கிறார்கள்; தொடர்ந்து அந்தக் காலனிகளுக்கு குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் 24,583 அரிசன குடியிருப்புகளில் இது வரையில் 21,268 குடியிருப்புக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை நாம் செய்து கொடுத்திருக்கிறோம். இன்னும் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டிய அரிசன குடியிருப்புக்கள் 3,315 இருக்கின்றன. நான் இந்த அவையிலே புதிதாக அறிவிக்கிறேன். 1975-ஆம் ஆண்டுக்குள் இந்த 3,315 அரிசன குடியிருப்புக்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொடுத்து தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரிசன காலனிகளுக்கும் குடிநீர் அளிக்கும் திட்டம் பூர்த்தியாகும் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 1966-67-ம் நிதியாண்டு வரை அரிசன நலத் துறையும், பிற்பட்டோர் நலத் துறையும் இரண்டும் ஒன்றாக இருந்தபோது, அரிசன நலத் துறை, பிற்பட்டோர், நலத் துறை-இந்த இரண்டு துறைக்கும் சேர்த்துச் செலவழிக்கப்பட்ட தொகை 6 கோடியே 17 இலட்சம் ரூபாய். 1969-70-ஆம் நிதியாண்டில் இதை நாம் பிரித்து விட்டோம். பிரித்த பிறகு இன்றைக்கு 1974-75 ஆம் ஆண்டில் அரிசன நலத் துறைக்கு மாத்திரம் 10 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 1966-67 நிதியாண்டில் பிற்பட்டோர் நலத்துறை, அரிசன நலத் துறை இரண்டும் இணைந்து இருந்தபோது மொத்தம் 6 கோடியே 17 இலட்சம் ரூபாய். இப்போது 1974-75-ஆம் நிதியாண்டில் இந்த இரண்டு துறைகளும் தனித் தனியாகப் பிரிந்த பிறகு அரிசன நலத் துறைக்கு 10 கோடியே 16 இலட்ச ரூபாயும் பிற்பட்டோர் நலத் துறைக்கு சுமார் 6 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.




இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நல அதிகாரி பணி புரிந்து வருகிறார். இவர் அரிசன நலத் துறைத் திட்டங்களையும், பிற்பட்டோர் நலத் துறைத் திட்டங்களையும் மாவட்ட அளவில் நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நல அதிகாரி அரிசன நலம், பிற்பட்டோர் நலம் இரண்டையும் கவனித்துப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர் மாவட்ட அளவில் செய்ய வேண்டிய பணி அதிகமாக இருப்பதால் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை எங்கெங்கே அதிகமாக உள்ளதோ அந்த மாவட்டங்களில், வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய 7 மாவட்டங்களின் முதல் கட்டமாக மேலும் ஒரு மாவட்ட நல அதிகாரியை நியமித்து இந்தப் பணிகளை விரைவில் செயலாற்றும்படி இன்று அரசு உத்தரவிடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளியில் படிக்கும் அரிசன மாணவர்கள், 75 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும், 20 சதவிகிதம் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் 5 சதவிகிதம் மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்கள் விடுதிகளில் ஒன்றாகச் சேர்ந்து படிக்கிறார்கள்.



இப்போது அதிகமாக அரிசனங்கள் இருக்கிற 7 மாவட்டங்களில் கூடுதலாக ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அது செயல்படுவதைப் பார்த்து, அதற்குப் பிறகு எல்லா மாவட்டங்களிலும் தனித்தனியாகப் பிற்பட்டோர் நலத்திற்கு ஒரு அதிகாரியும், அரிசனங்களுக்கு ஒரு அதிகாரியும் போடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கென்று உள்ள விடுதிகளில் தங்கிப்படிக்கும் அரிசனப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 20,000. இவர்களில் 4-வது, 5-வது வகுப்புப் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு செட் உடை இது வரை வழங்கப்பட்டு வருகிறது. மற்ற வகுப்பு மாணவர்களுக்கு தற்போது நடைமுறைப்படி ஆடை எதுவும் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையை அரசு பரிசீலித்து அரிசனப் பள்ளி மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு செட்வீதம் ஆடை வழங்குவது என்று அரசு உத்தரவிடுகிறது. இதனால் 20,000 அரிசன மாணவர்கள் பயனடைவார்கள்.

அரிசன மாணவர்களுக்கு என்று 100 விடுதிகளைக் கட்ட வேண்டுமென்று அமைச்சரவையிலுள்ள நிதி ஆலோசனைக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்ட போது நிதிநிலைக்கேற்ப 4 அல்லது 5 இடங்களில்தான் புதிய அரிசன மாணவர் விடுதிகளைக் கட்ட முடியும் என்று அதிகாரிகள் யோசனை தெரிவித்தார்கள். நான் அப்போதே சொன்னேன் வங்கிகளிடம் கடன் பெற்று இந்த 100 விடுதிகளைக் கட்ட முடியுமா என்று கேட்டேன். அப்படி அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக கனரா பாங்கும், இந்தியன் பாங்கும் அவர்களுக்குச் சாதகமான பதிலை 4-4-1974-லும், 2-4-1974-லும் அரிசன வீட்டு வசதி வாரியத் துறைத் தலைவருக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் உதவி பெற்று அரிசன மாணவர்களுக்கு 100 விடுதிகளை-ஆஸ்டல்களை கட்ட முடிவு செய்திருக்கிறோம். இதனால் 10,000 மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் 1965-ஆம் ஆண்டு உயிரிழந்த 53 பேர்களுடைய குடும்பங்களுக்குச் சென்ற ஆண்டு இந்த அரசு குடும்பம் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூபாய் 2,000 வழங்கியுள்ளது. அத்துடன் தீக் குளித்த 9 மொழிப்போர் வீரர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 சென்ற ஆண்டு முதல் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இது போலவே, கன்னியாகுமரி பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராடி, உயிரிழந்த 12 பேருடைய குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 2,000 வீதம் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதை இன்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அந்தப் போராட்டத்தில் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவைகளால் உடல் ஊனமுற்றவர்கள் ஏறத்தாழ 37 பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிருக்கிறது. அவர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 500 வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்குகின்ற தகுதிகள் அடிப்படையில் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கும் கன்னியாகுமரி தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராடிய வீரர்களுக்கும், திருத்தணி எல்லை மீட்புப் போராட்ட வீரர்களுக்கும் உதவி மானியம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக விவரமான ஆணையை அரசு உடனடியாகப் பிறப்பிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் சத்திரத்தில் பணிபுரிந்து ஓய்வுற்ற அலுவலர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டுமென்று மணலி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே அறிவித்திருப்பது போல, கை, கால் ஊனமுற்றோர், கண்கள் குருடானோர், ஊமையர்களாக இருப்போர் ஆகிய அங்கஹீனர்களின் தொகையைத் தமிழகத்தில் கணக்கெடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்காக இத்தகைய அங்கஹீனர்களின் தொகையை உடனடியாகக் கணக்கிடும்படி அரசு இரண்டு மாதங்களுக்கு முன் ஆணையிட்டது. அதன்படி கணக்கு எடுக்கப்பட்டு, விவரங்கள் அரசுக்கு வந்துள்ளன. அதில் ஆண்கள் 1,35,000, பேர்கள், பெண்கள் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர்கள் என்று கணக்கு வந்திருக்கிறது. அவர்களில் படிக்காதவர்கள் 1,62,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றும் கணக்கு வந்திருக்கிறது. மொத்தம் 2,35,000 அங்கஹீனர்கள் இருக்கிறார்கள். இந்த மொத்தக் கணக்கு வந்திருக்கிறது. இவர்களில் யார் யார் வசதி உள்ளவர்கள், யார் யார் தொழில் இல்லாதவர்கள் என்று ஆராய்ந்து, எப்படி உதவி செய்வது என்று பரிசீலிக்குமாறு — முதல்கட்ட வேலை முடிந்திருக்கிறது — அடுத்த கட்ட வேலை ஆரம்பமாகும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் துறையிலே பணியாற்றுகிறவர்கள்- அவர்களுடைய கோரிக்கையை — நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் உள்ளாட்சித்துறை பொறுப்பை வைத்துக் கொண்டிருந்த போது -நானும், அவரும் கலந்துகொண்ட ஒரு மாநாட்டில் - வருவாய்த்துறையில் இருந்து எங்களைப் பிரித்துவிட வேண்டுமென்று - ஒரு கோரிக்கையை முன்வைத்த நேரத்தில் - நாங்கள் அது பரிசீலிக்

தமிழ்நாட்டில்

# திருக்கோயில் திருப்பணிகள்

தமிழ்நாட்டில், 1967-ஆம் ஆண்டு தொடங்கி 1973-ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 12½ கோடி ரூபாய் செலவில் 3,095 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

1957-ஆம் ஆண்டில் திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசு மானியம் ரூ. 3 லட்சமாக இருந்தது. தற்பொழுது 1974–75-ஆம் ஆண்டில் அரசு மானியம் ரூ. 15 லட்சமாக உயர்ந்துள்ளது.

இப்பொழுது குறிப்பிடத்தக்க வகையில் பெருந்தொகைச் செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறிவரும் திருப்பணிகள் விவரம் வருமாறு:

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், இராமேசு
வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஆவுடையார்
கோயில் ஆத்மநாதசுவாமி திருக்கோயில், திருக்கழுக்குன்றம்
அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில், திருவாரூர் அருள்மிகு
தியாகராசசுவாமி திருக்கோயில், தரங்கை அருள்மிகு மாசிலா
ஈசர் திருக்கோயில், வடதிருமுல்லைவாயில் அருள்மிகு மாசிலாமணி
ஈசர் திருக்கோயில், கோவை அருள்மிகு கோணியம்மன் திருக்கோயில்,
கோவை கோட்டை அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், அவிநாசி அருள்மிகு அவிநாசி
லிங்கேசுவரர் திருக்கோயில், திருவில்லிப்புத்தூர் அருள்மிகு வடபத்ர
சுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம் சேக்கிழார் பெருமை சேர்த்த
அருள்மிகு நாகேசுவரசுவாமி திருக்கோயில், திருப்புங்கூர் நந்தன் புகழ்
சேர்த்த அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயில், மதுரை அருள்மிகு
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், குடியாத்தம் அருள்மிகு கருப்புலீசுவரர்
திருக்கோயில் இராசகோபுரத் திருப்பணி, திருவண்ணாமலை அருள்மிகு
அருணாசலீசுவரர் திருக்கோயில்.

இவை தவிர இவ்வாண்டு சிறியனவும் பெரியனவுமாகிய திருக்கோயில்கள் பல
நூற்றுக்கணக்கானவை திருப்பணி வேலைகளை மேற்கொண்டு நிறைவுறும் தறு
வாயில் உள்ளன. வரும் ஆண்டில் திருக்கோயில்களின் நிதி உதவியுடனும் அரசு
நிதி உதவியுடனும் 4 கோடி ரூபாய்க்கு அதிகமான செலவில் 1,500 திருக்கோயில்களில்
திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.





# நலவாழ்வுக்கு நல்லுணவு

பல்வகை வளமும் பல்கி நல வாழ்வுக்கு இடமாக இருப்பதே இவ்வுலகம். எனினும் கைக்கு எட்டும் வகையில் எளிதில் கிடைப்பவற்றை அறிந்து அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் பக்குவத்தைத் தான் மக்கள் பெறவில்லை. பசி—பட்டினி—ஊட்டச்சத்துக் குறைவு ஆகியவற்றின் பிடியில் சிக்கியே கோடிக் கணக்கான மக்கள் வாடுகின்றனர் இன்றைய உலகில். மாறாக அதே நேரத்தில் பெருந் தீனியைப் பொருந்தா வகையில் உண்டு மருந்துகளைத் தேடி அலைவோரையும் கண்டு வருகிறோம்.

முரண்பட்ட இந்தச் சூழ்நிலைகளுக்கு மாற்றமொன்று காண வேண்டும் என்ற அடிப்படையில் உலக நல்வாழ்வு நிறுவனம் இவ் வாண்டு 'நல வாழ்வுக்கு நல்லுணவு' என்னும் தலைப்பினை குறிக்கோளாகக் கொண்டு, உலகினரனைவர்க்கும் கருத்து விளக்கம் தர ஏற்பாடு செய்துள்ளது. 'நோயற்ற நிலைமட்டுமல்ல நலவாழ்வு என்பது; நோயற்ற உடல் நலத்துடன் உள்ளநிலை—சுற்றுச் சார்பு சமுதாயச் சூழ்நிலை ஆகியவற்றின் தரமான நிலையே உண்மையான நல வாழ்விற்கு அடிப்படை' என்னும் குறிக்கோளை விளக்கி உலக மக்களுக்குப் பணி செய்தலையே கடனாகக் கொண்டது உலக நல வாழ்வு நிறுவனம். உலகமே பற்றாக்குறையை நோக்கி விரைந்து பயணம் செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில் 'நல வாழ்வுக்கு நல்லுணவு' என்ற தலைப்பு மிகவும் தேவைப்பட்டதாகும்.

மனித உடலில் இயற்கையில் அமைந்த நோய்த் தடுப்பு ஆற்றலை, ஊட்டச் சத்தற்ற உணவு பெரிதும் குறைத்து விடுகிறது. பெரும்பாலும் இதனால் பாதிக்கப்படுவோர் சிறுவர் சிறுமிகளும், பச்சிளஞ் சிறாருமேயாவர். பழக்கத்திலேயே ஊட்டச் சத்துணவில் சிறப்பான கவனம் செலுத்தித் தலைமுறை தலைமுறையாக வலிவும் பொலிவும் பெற்ற குடும்பங்களைச் செல்வமாகக் கொண்ட நாடுகளே இன்றைய உலகில் வல்லரசுகளாகவும், வழி காட்டும் சமுதாயங்களாகவும் திகழ்கின்றன.

உடல் வளரவும், உடலுக்குச் சக்தி அளிக்கவும், உடலின் தேய்வுகளை ஈடு செய்யவும், தேவைப்படும் சத்துப்பொருள்களை உடலில் சேர்த்துக் கொள்வதைத்தான் ஊட்டச் சத்து என்கிறோம். உணவைப் பற்றியும் மனித உடலின் நலனுக்கு அவை ஊட்டந் தரும் தன்மையைப் பற்றியும் ஆராய்ந்து

அறிவதே 'ஊட்டச்சத்து இயல்' ஆகும். ஊட்டச்சத்து ஆய்வில், பல்வேறு வயதினருக்கும் பல்வேறு நிலைகளில் தேவைப்படும் உணவு வகையும், உணவுப் பொருள்களின் ஊட்டச் சத்து மதிப்பும், பலவகைப் பொருளாதார நிலைகளிலும் ஏற்ற உணவைத் தேர்ந்தெடுத்தலும் அடங்கும்.



நல்வாழ்வுத்துறை அமைச்சர்

## பேராசிரியர் க. அன்பழகன்

வேலை செய்யச் சக்தியளிப்பது உணவின் முக்கியமான பயன். உடலில் உணவு செரிக்கும் போது வெப்பம் பிறக்கிறது. எல்லா உணவுகளும் உடலின் இயல்புக்கேற்ப வெப்பத்தை உண்டாக்கும். இந்த உடல் வெப்பம் 'கலோரி' என்ற அளவையினால் குறிக்கப்படுகிறது. சராசரியாக ஒரு உழைப்பாளிக்கு நாளொன்றுக்கு 2,800 கலோரிகள் வெப்ப சக்தி தேவைப்படுகின்றது.

குழந்தைப் பருவத்தில் முதல் சில ஆண்டுகளில் போதுமான அளவு புரதமும், கலோரிகளும் உணவில் கிடைக்கவில்லையென்றால், அந்தக் குழந்தை நோய்களுக்கு ஆளாக நேரிடும். இவற்றின் சத்துக் குறைபாடு மனித இனத்துக்குப் பேரிழப்பையும் துன்பத்தையும் உண்டாக்குகிறது. இளங் குழந்தைகளின் இறப்புக்கும் இதுவே பெரிதும் காரணமாகிறது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உணவுப் பற்றாக் குறையும், சத்துக் குறையும், இளங்குழந்தைகளின் சத்துணவுத் தேவைகளைப் பற்றிய அறிவு தாய்மார்களிடம் ஏற்படாததும், தாய்ப்பாலை நிறுத்தி, தவறான உணவு ஊட்டும் பழக்கங்களைத் தாய்மார்கள் மேற்கொள்ளுதலும் குழந்தைகளிடம் புரத கலோரி ஊட்டச் சத்து ஆகிய

வற்றின் குறைபாட்டை உண டாக்குகிறது.



புரதம் நிறைந்த உணவுகள் கட்டுடல் வளர்ச்சிக்கான உணவாகும். ஏனெனில், புரதம் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய அவசியமான பொருள்களை அளிக்கிறது. தசைகள், இரத்தம் இவற்றின் முக்கியப் பகுதியாக புரதம் விளங்குகிறது. மேலும் உணவு செரிப்பதற்குத் தேவைப்படும் 'என்ஸைம்ஸ்' எனப்படும் பொருளையும், நோய்களைத் தடுக்கும் ஆற்றல் தரும் பொருள்களையும் உருவக்குவது புரதமேயாகும்.

இறைச்சி, மீன், முட்டை முதலியவற்றில் புரதம் மிகுதியாக உள்ளது. பாலிலும், பருப்பு, கொட்டை வகைகளிலும் இது மிகுதியாக உள்ளது. மனிதனுடைய வளர்ச்சிப் பருவத்தில் புரதம் அதிகம் தேவைப்படுகிறது. வைட்டமின்கள் என்ற இயைபியல் பொருள்கள், விளைந்த பசுமையான, இயற்கை உணவுப் பொருள்களில் மிகுதியாக உள்ளன. இவ்வுயிர்ச் சத்துக்கள் நம்மை நோயிலிருந்து பாதுகாக்கின்றன. உடலுக்கு மிகச் சிறிதளவே வைட்டமின்கள் தேவைப்படுகின்றன என்ற போதிலும் உயிர் வாழ அவை மிகவும் அவசியமாகின்றது.

அரிசியிலும்கோதுமையிலும் மாவுச் சத்தும் புரதச் சத்தும், பி-வைட்டமின்கள் முதலான சில தாதுப் பொருள்கள் ஆகியவையும் நிறைந்துள்ளன. சீரான கலப்புள்ள ஊட்டச் சத்துக்கள்கிடைக்கத் தானியங்களுடன் — பருப்பு வகைகளையும் பாலையும் உட்கொள்ள வேண்டும். பருப்புகள், பயறுகள், பட்டாணி, கொட்டைகள் ஆகியவை ஏழைகளின் இறைச்சி உணவு எனப்படும். இவற்றில் புரதங்கள் மிகுதியாக உள்ளன. மேலும் பி-1, பி-2, வைட்டமின்சத்துக்களும் உள்ளன. கலப்பு உணவிலுள்ள புரதங்கள் உடலை வளமுறச் செய்கின்றன. வளரும் குழந்தைகள், கர்ப்பிணிகள், பால் ஊட்டும் தாய்மார்கள் ஆகியோருக்குப்புரதம்மிகுதியாகத் தேவை.

உடல் வலிமைக்கும், உறுதிக்கும் காய்கறிகளைச் சாப்பிடுவது மிகவும் ஏற்றது. அவை உணவுக்குச் சுவை சேர்ப்பதுடன் — உடல் நலனுக்கு உகந்தவை — நோயிலிருந்து இயற்கை முறையில் பாதுகாப்பு அளிப்பவை. இவற்றை வீட்டுத் தோட்டங்களிலேயே பயிரிடலாம். பச்சைக் கீரைகளும் காய்கறிகளும் ஆரோக்கியமான கண்கள், பற்கள், இரத்தம், எலும்புகள்—இவற்றுக்குப் பெரிதும் தேவை.



இளைஞருக்கும், முதியவருக்கும், எல்லாருக்கும் பால் ஒரு முழு உணவு. புரதம், தாதுப் பொருள்கள், வைட்டமின்கள் பாலில் உள்ளன. சுண்ணும்புச் சத்தும் பாலில் மிகுதி. பிறந்த குழந்தைக்கு இயற்கை அளிக்கும் ஈடில்லா ஊட்டம் 'சீம்பால்'. சீம்பாலில் வைட்டமின்-ஏ மிகுதியாக உள்ளது. சிறு குழந்தை வளர்ச்சிக்கு மிகவும் ஏற்ற ஊட்ட உணவாகும் இது. குழந்தையின் கண்களின் நலனுக்கும் இது மிக நல்லது.

இன்றைக்கு நம்முடைய குழந்தைகள் வளர வேண்டிய வளர்ச்சியை பெற்றிருக்கிறார்களா என்று கேட்டால், நம்முடைய குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய வளர்ச்சி கிடைக்கவில்லை. நம்முடைய நாட்டில் 100-க்கு 80 பெற்றோர்கள், தாங்கள் பெற்று எடுத்த பிள்ளைகளை முறையாக வளர்க்கத் தெரியாத காரணத்தால்—ஊட்டச்சத்து உணவை அந்தக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய கடமையை அவர்கள் அறியாத காரணத்தால், சில பேர் அறிந்தாலும் அதனை நிறைவேற்ற வாய்ப்பு இல்லாத காரணத்தால், தங்களுக்குள்ள வசதியில் எத்தனை குழந்தைகளைத் தாமே நன்றாக வளர்க்க முடியும் என்று எண்ணிப் பார்க்காதகாரணத்தால், அளவு கடந்த பிள்ளைகளைப் பெற்று அந்தக் குழந்தைகளை நலிய வைக்கிறார்கள்; சீரழிக்கிறார்கள். இன்னுஞ் சொல்லப்போனால்அவர்களுடைய எதிர்கால வளர்ச்சியை மங்க வைக்கிறார்கள்; நாளடைவில் உடல் நலன் இழந்து விடும் நோயாளியாகவே உருவாக்குகிறார்கள்.



ஒரு குழந்தை பிறந்து நல்ல உடல் நலத்தோடு வாழ்ந்து, சிற்சில வேளைகளில் காய்ச்சல் நோய் நொடிக்கு ஆளானாலும் கடுமையான நோய்கள் எதற்கும் ஆட்படாமல் 50, 60 வயது வரை வாழ வேண்டும் என்று விரும்பினால், அந்தக் குழந்தை தாய் வயிற்றில் இருக்கும் போதே முழுக்கவனம் செலுத்தப்பட வேண்டும். கரு உண்டாகி, ஏறத்தாழ 5 மாதத்திலிருந்து எட்டு மாதம் வரை, அந்தக் கரு வயிற்றில் இருக்கிற போது எந்த அளவுக்குத் தாய்க்கு ஊட்டச் சத்து கிடைக்கிறதோ எந்த அளவுக்கு இரும்புச் சத்து கிடைக்கிறதோ, எந்த அளவுக்குப் பால், பழம், சத்துணவு கிடைக்கிறதோ அதைப் பொறுத்து, அந்தக் குழந்தை கருவிலேயே திருவுடையதாக வளர்கிறது. 'கருவிலே திருவுடைய குழந்தை' என்று நல்ல செல்வச் செழிப்புள்ள பெரிய குடும்பத்தில் பிறந்த குழந்தையைப் பிறந்தவுடன் பாராட்டுவார்கள். ஆனால், உண்மையில் 'கருவிலேயே திருவுடையராதல்' என்பது, தாய் வயிற்றில் இருக்கிறபோது, தாயும் நல்ல உடல் நலத்தோடு இருந்து, கருவில் வளரும் குழந்தைக்குத் தேவைப்படுகிற அதிகச் சத்து அந்தத் தாயின் உணவிலே பெறப்பட்டு அந்தச் சத்து அந்தக் குழந்தை உடம்பிலே ஊறியிருக்குமானால் அந்த ஊட்டமே 'கருவிலே பெறப்பட்ட சிறந்த திருவான ஊட்டமாகும்'. ஆகவே, அந்த மூன்று, நான்கு மாத காலத்தில் பெற வேண்டிய வளர்ச்சியைப் பக்குவமாகப் பெற்று, அது பிறக்குமானால், 5 வயது வரை அந்தக் குழந்தை பெற வேண்டிய வளர்ச்சிக்கு அதுவே அடிப்படையாகிறது.

ஒரு குழந்தை பிறந்த 5 வயது வரை, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டால் அந்தக் கால கட்டத்தில் ஏற்படும் வளர்ச்சி, 20 வயது வரை நன்கு வாழ்வதற்கான அடிப்படையை உருவாக்கும். சமுதாயத்திலே ஒரு பழக்கமாகி, தாயினுடைய வயிற்றிலே இருக்கிற அந்தக் கருவின் வளர்ச்சிக்குரியவற்றைக் கவனிக்கிற இடத்திலிருந்து தொடங்கி, 5 வயது வரை நன்கு பராமரிக்கப்பட்டு, 20 வயது வரை நல்ல உடற்பயிற்சி தரப்பட்டு, கவனத்துடன் வளர்க்கப்பட்டால் 50 வயதுவரையில் ஒரு சமுதாயத்தில், சமுதாயத்திற்கு உறுதுணையாக இருக்கக் கூடிய தகுதி வாய்ந்த ஆற்றல் படைத்தவர்களை உருவாக்கலாம்.

நம்முடைய பெற்றோர்கள் குழந்தைகளைக் கவனித்து, தேவையான சத்துணவு தராத காரணத்தால், தமிழ்நாட்டில் இயற்கையில் கண் பார்வையுடன் பிறந்த குழந்தைகள், கண் பார்வை மங்கிப்போகும் அவல நிலை ஏற்படுகிறது. 5-6, 7 வயது குழந்தைகள், இன்றைக்கு 26,000 பேர் கண் பார்வை இழந்து குருடாகியுள்ளனர் என்று மதிப்பிடப்படுகிறது. கண்பார்வை இழந்த பின்னர் நல்ல சத்துணவு கொடுத்தாலும் கண்பார்வை வராது. இன்னும் சொல்லப்போனால், அந்தக் குழந்தைகள் பிறவிக் குருடர்களைப்போல் திரும்பவும் குருடர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் பெற்றோர்கள். அந்த குழந்தைகளுக்குத் தர வேண்டிய வைட்டமின் வழங்கும் காய் கனியோ, கீரையோ, கிழங்கோ அல்லது பருப்போ கலந்த உணவைத் தருகிற பக்குவம் பெருததுதான். அவரவர்கள் உண்ணுகிற உணவில் ஒரு கூறு பிள்ளைகளுக்கும் போட்டு, எப்படியோ பட்டினியைப் போக்கி, அந்தப் பிள்ளைகளுடைய வயிற்றை அடைத்து ஒப்புக்கு வளர்த்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட வியாதியே இது. இரண்டு கண்ணும் தெரியாத சிறுவர் சிறுமிகளே 26,000 பேர் என்பது, நமது அவலநிலையையே காட்டும்.

எத்தனை பிள்ளைகள் போதுமான மூளை வளர்ச்சி இல்லாமல் வளர்ந்திருக்கின்றன? 5 வயது முதல் 15 வயது வரையிலுள்ள பள்ளியில் படிக்கிற பிள்ளைகளைச் சோதித்துப் பார்த்தால் 100-க்கு 4, 5 பிள்ளைகள் உடல் வலிவிழந்த நிலையில் உள்ளனர். அவர்களுடைய மூளையின் இயற்கை அறிவு, உரமுடன் இருக்குமானால், ஆசிரியர்கள் பாடம் சொல்கிறபோதே அவர்கட்கும் புரியும். நடைமுறையில் நாம் காணும் அறிவுத் திறன் குறைவுக்கு என்ன காரணம்? அந்தக் குழந்தைகளுக்கு 5 வயது வரை பெற்றோர்கள் நல்ல ஊட்ட உணவு தராததுதான். பயிர்களுக்கு உரம் போடுகிறோம். நாத்தங்கால் பயிர் மிகுந்த உரம் பெறுகிறது. ஆனால் நாம் பெற்ற குழந்தைகளையே பட்டுப்போக விட்டு விடுகிறோம்.

அப்படிப் பட்டுப் போக வைப்பதற்கு இரண்டுகாரணம் —ஒன்று பெற்றோர்களுக்குப் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதுபற்றிப் பக்குவமான கருத்து ஊட்டப்படவில்லை; மற்றொன்று, இரண்டு பிள்ளைகளை வளர்க்கக் கூடிய தாய்மார்கள், 5 பிள்ளை 6 பிள்ளைகளைப் பெற்று, எல்லாப் பிள்ளைகளையும் சீரழிய விடுகிறார்கள். ஒரு வயதுக் குழந்தை ஒன்றுக்கும்-நான்கு-ஐந்து வயதில் மற்றொரு குழந்தைக்கும் செலுத்த வேண்டிய கவனத்தை மட்டுமே செலுத்தக்கூடிய ஒரு குடும்பத்தில், ஒரு வயதில் ஒரு பிள்ளை, இரண்டரை வயதில் ஒரு பிள்ளை, 4·5 வயதில் பிள்ளை, 6·5 வயதில் ஒரு பிள்ளை, 8 அல்லது 9 வயதில் ஒரு பிள்ளை என்று 5 பிள்ளைகள் இருக்குமானால், அந்தத் தாயும் கவனம் செலுத்த முடியாது; அவர்களுக்கு ஏற்ற உணவையும் அளிக்க முடியாது. கிடைக்கிற ஒரு குவளைப் பாலை எந்தக் குழந்தைக்குஎன்று பங்கிடுவது? கிடைக்கிற ஒரு முட்டையை எந்தக் குழந்தைக்கு என்று பங்கிடுவது? அந்த முட்டையையும் விற்றுவிட்டு, அரிசி வாங்கி காய்ச்ச வேண்டிய நிலைமைக்குப் பெற்றோர்கள் ஆளாகி, தம்முடைய குழந்தைகளையே பலியிட்டுக் கொண்டுள்ளனர். 'பாவம்' என்று எது எதையோ குறிப்பிடுகிற நாம் இதைவிடக் கொடிய பாவம் வேறில்லை என்பதை உணர வேண்டும்.



இன்றைய தினம், இந்த நாட்டு மக்களைவிட மிகக்குறைவான சத்துள்ள உணவை உட்கொள்கிற சமுதாய மக்கள் உலகத்தில்வேறெங்கும் இல்லை. நமது மக்கள் உண்ணுகிற மீன் அளவுகூட மிகக் குறைவு என்றுதான் புள்ளி விவரம் சொல்லுகிறது. இந்தப் புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது நாம் உண்பது குறைவாக இருந்து, நம்முடைய உழைக்கும் சக்தி மிக அதிக அளவில் கட்டாயமாகச் செலவழிக்கப் படுவது புலனாகும். பழம் தின்ன வேண்டுமென்று சொன்னால்,



'நோயாளியோ' என்று எண்ணுகிறார்கள். உங்களுக்கு என்ன காய்ச்சலா? என்று நம்முடைய வீட்டிலேயே கேட்கிறார்கள். இப்படிப்பட்ட மனப்பான்மை-பழம் உண்பதற்குக் காய்ச்சல், பால் குடிப்பதற்கு வயிற்று வலி, முட்டை சாப்பிடுவதற்கு விருந்து, இந்த நேரத்திலேதான் இவை என்று கருதும் நிலை இருக்குமானால், நம்முடைய தலைமுறை எவ்வளவு தாழ்ந்து கொண்டு போகிறது என்பதற்கு வேறு விளக்கம் தேவையில்லை. தேவையான அளவு உண்ண முடியாததுடன் ஊட்டச் சத்துள்ள தகுதியான உணவு உண்ணாத காரணத்தினலேயே, மிகப் பெரும்பாலான மக்கள் இயற்கை ஊக்கம் தோன்றாத காரணத்தால்—இயற்கை வலிவைப் பயன்படுத்துகிற ஒரு ஆர்வம் மங்கிச் சோம்பேறிகளாக மாறுவதற்குக்கூட நம்முடைய உணவுத்தரக் குறைவே காரணமாகிறது.

நம்முடைய நாட்டு நிலைமை என்ன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருக்கிற அந்த நிலைமையை எடுத்து சொல்லுவதற்கு — அறிவூட்டுவதற்குப் பலர் முன்வர வேண்டும். நமது நாட்டிலே இருக்கிற மிகப் பெரிய குறைபாடு நமக்குத் தெரியும். ஆனால் நாம் உணராததும், சிந்திக்காததும் பல. பிறர் சொல்லுகிறபோது ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறோம். ஆனால் பின்பற்றாதது பல. எனவே இனியேனும் நமது உணவுப் பழக்கத்தைச் சிந்தித்து நாம் உருவாக்க வேண்டும். முயற்சிப்போமாக!



**7-4-74ல் வானொலியில் ஆற்றிய உரை**





# சேது சமுத்திரத் திட்டம் — நிலை என்ன?

இந்தியாவின் மேற்குக் கரையையும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையின் நீளத்தைக் குறைக்கும் பொருட்டும் மேம்படுத்தும் நோக்கத்திலும் மன்னார் வளைகுடாவை பாக் விரிகுடாவில் இணைப்பதே சேது சமுத்திரத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இதனால் 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள கப்பல்கள் இலங்கையைச் சுற்றியும், அதன் தென் முனையைச் சுற்றியும் வளைந்து போவதைத் தவிர்ப்பதுடன் சுற்றிவளைத்துக் கொண்டு போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும், புயலும் வீசுவதால் இக் கடற்பாதையை அபாயமின்றிப் பயன்படுத்தவும் முடியும்.

இத்திட்டத்தில் வளம் பெறக் கூடிய தன்மை பற்றி இறுதி ஆய்வுகள், இந்தப் பணிக்காக 1965-ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் திரு. சி. வி. வெங்கடேஸ்வரன் அவர்களால் நடத்தப்பட்டன. அவர் சிறப்புப் பொறியியல் சரகம் ஒன்றுடன் ஆய்வுகள் முடித்து 1968-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்கு அவரது அறிக்கையைப் பணிந்து அனுப்பினார். இத்துடன், இத்திட்டத்தின் பொருளாதார ஒப்பேறு நிலை குறித்து தனியான அறிக்கை ஒன்றும் சேது சமுத்திரத் திட்ட, திட்ட அலுவலர் திரு. ஆர். நடராசன் அவர்களது அறிக்கையும் அனுப்பப்பட்டது.

அந்த அறிக்கையில், சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார வகையில் ஏற்புடையதெனவும் தொழில் நுட்ப வகையில் சாத்தியமானதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கால்வாயின் பல்வேறு இணைப்புக்கள் குறித்துக் கருதப்பட்டன. இரண்டு இணைப்புக்கள் அதாவது (1) மண்டபம் இணைப்பு, (2) இராமேசுவரம் இணைப்பு ஆகிய இரண்டும் சாத்தியமாகுமெனக் கண்டறியப்பட்டது. இந்த இரண்டு இணைப்புக்களில் இராமேசுவரம் இணைப்பு மண்டபம் இணைப்பைக் காட்டிலும் குறைந்த தொலைவு உடையதும் குறைந்த செலவுடையதும் ஆகும். (மண்டபம் அமைப்பின் நீளம் 1,44,400 அடி. இராமேசுவரம் அமைப்பின் நீளம் 43,700 அடியாகும்) இவற்றிற்கு மதிப்பீட்டுச் செலவு முறையே ரூ. 55.60 கோடியும் ரூ. 37.50 கோடியுமாகும். எனவே, இராமேசுவரம் இணைப்புத் திட்டமே இந்த அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கால்வாய் திறக்கப்பட்ட பின்னர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் ரூ. 162 இலட்சம் நிகர வருவாய் பெரும்பாலும் அன்னியச் செலாவணியில் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலோசகரால் அளிக்கப்பட்ட புலன் ஆய்வுகள், கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வழி கோலுகின்றன :

(1) இந்தத்திட்டம்தொழில் நுட்ப முறையில் ஏற்புடைய ஒன்றாகும்.

(2) மண்டபத்தில் ஒன்றும், இராமேசுவரத்தில் ஒன்றுமாக இரண்டு மாற்று இடங்கள் குறுக்கு வழிகளுக்காக ஆலோசனையில் இருந்தன. இவை இரண்டு பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் கீழ்க்கண்டவாறு அறியப்பட்டது :—

(அ) கடல் நீரடிப் பாறைப் பகுதியில் கடல் கொந்தளிப்புக் காரணமாக மண்டபம் வழியை அமைப்பது கடினமானதாகும். ஆனால் இராமேசுவரம் வழியில் இந்தகைய இடர்பாடுகள் ஏதும் இல்லை.

(ஆ) இராமேசுவரம் வழியைப் பொறுத்த வரையில் அமிழ் ஆழம் 30 அடி அளவு உள்ள கப்பல் செல்வதற்கு வகை செய்யும் ஒரு திட்டத்திற்கு மதிப்பீட்டுச் செலவு ரூ. 37.50 கோடி, மண்டபம் வழியைப் பொறுத்த வரையில் ரூ. 55.60 கோடியாகும். இராமேசுவரம் வழிக்கு வகை செய்தால் ரூ. 18.10 கோடி மிச்சப்படும்.

(இ) இந்த அமிழ் ஆழம் 32 அடி, 35 அடி உள்ள கப்பல்களுக்கு வகைசெய்யப்பட்டால் இராமேசுவரம் வழியைக் காட்டிலும் மண்டபம் வழிக்காகும் அதிகப்படியான செலவு இன்னும் அதிகமாயிருக்கும்.

செலவு தொழில், நுட்பக் கோணங்களில் இருந்து நோக்கினால் இராமேசுவரம் வழியே ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும் என்பது தெரிய வரும்.

(3) மேற்கிலிருந்து வரும் எல்லாப் போக்குவரத்திற்கும் பொது மையமாக அமைந்து உள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா ஆகிய இடங்களுக்கு முறையே 353, 295, 259 கடல் மைல்களைக் குறைக்கிறது. தூத்துக்குடி துறைமுகம் வழியாகச் செல்லும் கப்பல்களுக்குக் கூடுதலாக 18 மைல் தொலைவு குறையும்.

(4) தற்போது 30 அடி அமிழ் ஆழம் அமைக்கப்பட்டால் போதுமானதென்று தெரிகிறது. பின்னர் இது 32 அடிக்கு அதிகப்படுத்தப்படலாம். நாளா வட்டத்தில் அனுபவத்தின் மூலம் அமிழ் ஆழத்தை அதிகப்படுத்தப்படுவது பற்றித் தீர்மானிக்கலாம்.

(5) நிகர ஆதாயம் படிப்படியாக உயரும். காலம் செல்லச் செல்ல ஆதாயம் பெருகும்.

சேது சமுத்திரத் திட்டத்தின் ஆலோசகராலும், திட்ட அலுவலராலும் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை 1968-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அது முதல் அந்த அறிக்கை மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.



மத்திய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் 1971-ஆம் ஆண்டு நவம்பரில் சில விளக்கங்களைக் கேட்டது. அவ் விளக்கங்களுக்குத் தமிழ் நாடு அரசு இப்பொழுது தெளிவாகப் பதில் எழுதியுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இன்னும் ஒப்பளிப்பு வழங்கவில்லை.

புதிய திட்ட அமைச்சர் திரு. டி. பி. தார் அவர்கள் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் அன்று சென்னைக்கு வந்திருந்தபோது இத் திட்டங் குறித்து முதல்வர் கலைஞரும், முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. ஆதித்தனும் அவருடன் விவாதித்தனர். ஐந்தாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தைச் சேர்க்க முன்னுரிமை அளிக்கும்படி மத்திய அமைச்சரிடம் அவ் விவாதத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத்தை மேற்கொள்வதில் இனியும் கால தாமதம் ஏற்பட்டால், இப் பணியை அனைத்து நாடுகள் தூர்வாரி நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டி வரும் என்றும் அப்போது அந்த நிறுவனங்கள் கேட்கிற வீதங்களையொட்டி மதிப்பீட்டுச் செலவு அதிகமாகும் என்றும், மத்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சருக்கு 1973-ஆம்ஆண்டு நவம்பர்த் திங்கள் 12-ஆம் நாளில் முதல்வர் கலைஞர் கடிதம் எழுதியுள்ளார். இத் திட்டத்திற்கான தேவை, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதை விரைவில் நிறைவேற்றுவதன் தேவை குறித்தும், இத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதில் ஏற்படும் கால தாமதம் குறித்து அரசு கொண்டுள்ள அச்சம் குறித்தும் மத்திய அமைச்சருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பொது நலன் கருதி இத் திட்டத்தை நேரடியாக ஐந்தாவது திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்குத் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இந்திய அரசிடமிருந்து முடிவான பதிலை நமது அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.



# செய்திகள்! செய்திகள்!

செங்கற்பட்டு மாவட்டம் கோவளத்தில் கடல் அரிப்புத் தடுப்புத்திட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அரபிக் கடல் ஓரமாகத் தமிழ் நாட்டின் பகுதிகளில் தொடர்ந்து கடல் அரிப்பு ஏற்பட்டுக் கொண்டு இருப்பதால் ரூ. 351 இலட்சம் செலவில் 14.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு நிரந்தரமான பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்கான திட்டம் மத்திய அரசு அனுமதி கிடைத்தவுடன் தொடங்கப்படும்.

* * * * *

முன்பெல்லாம் தமிழ் நாட்டுக்கு மாதந்தோறும் 34,000 டன் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும். இப்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமை 9,000 டன் தான்.

* * * * *

தமிழ் நாட்டில் கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்கள் வேளாண்மைக் கடன்களாக 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் முதல் 1973-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் முடிய ரூ. 60.78 கோடிக்குக் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களையும் ரூ. 9.67 கோடிக்கு நீண்ட காலக் கடன்களையும் வழங்கியுள்ளன.

* * * *

தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI) 1973-74-ஆம் ஆண்டில் டிசம்பர்த் திங்கள் முடிய உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூ. 642 இலட்சமாகும். 1974—75-ஆம் ஆண்டில் 'டான்சி' பொருள்களின் உற்பத்தி மதிப்பு 967 இலட்சம் ரூபாயாக உயரும்.

* * * *

கிளிஞ்சலிலிருந்து இரசாயனச் சுண்ணாம்பு தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்று தென்னார்க்காடு மாவட்டம் மரக்காணத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

* * * *

தற்பொழுது தமிழ் நாட்டிலுள்ள ரப்பர்த் தோட்டங்களின் பரப்பளவு 2,544.60 ஹெக்டேர்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக 800 ஹெக்டேர்கள் பரப்பளவுக்கு ரப்பர் தோட்டங்கள் உருவாக்கப்படும்.

* * * *

மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் சென்னையில் மூன்றும், மொத்தம் எட்டு மருத்துவக் கல்லூரிகள் தமிழ் நாட்டில், மருத்துவக் கல்வி இயக்குநர் மேற்பார்வையில் உள்ளன.

தமிழ் நாட்டில் மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் 1,015 பேர் பயில்கிறார்கள்.

மருத்துவப் பட்டப்படிப்புத் தவிர, பல்வேறு மருத்துவப் பிரிவுகளில் பட்ட மேற்படிப்புப் பாட முறைகளும் தகுதிப் பட்டயப் பாட முறைகளும் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகின்றன.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு மேலும் சில வசதிகள் அளித்து அக் கல்லூரியைப் பட்ட மேற்படிப்பு நிலையமாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது.

* * * *

தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) 1974 சனவரி முடிய 1,009 தொழிற்சாலைகளுக்கு ரூபாய் 421 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களை வழங்கியுள்ளது.

சிட்கோவின் புதிய கடன் உதவித் திட்டத்தின் மூலம் இது வரை 386 தொழிலதிபர்கள் ரூபாய் 35 இலட்சம் கடன் உதவி பெற்றிருக்கிறார்கள்.

* * * *



[தமிழுக்கும் தமிழினத்திற்கும் புத்துயிர்தந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 10-வது நினைவு நாள் 21—4—74. அவரது 83 வது பிறந்த நாள் 29—4—74. அவரை நினைவு கூரும் வகையில், அன்னாரின் புதல்வர் எழுதியுள்ள இந்தக் கட்டுரை வெளியிடப் பெறுகிறது.



# பலாச் சுளை

மன்னர் மன்னன்

பலா-பருத்த உருவும் பிசின் தோய்ந்த உள்ளீடுகளும் நம் பொறுமையைச் சோதிக்கும்! ஆனால், உள்ளே பொதிந்திருக்கும் தேன்பிலிற்றும் சுளை நினைக்கும்போது? — அப்பப்பா! நாவெல்லாம் தித்திக்கும், முத்தமிழின் சுவை போல!

நாம் இப்படித்தான் நினைக்கிறோம். இதே பலாப்பழம் ஒரு துயரக் காட்சியைச் சுட்டிக் காட்டுகின்றது புரட்சிக் கவிஞருக்கு!

பாடுகின்றார் பாவேந்தர் ;

''கோரிக்கை அற்றுக் கிடக்கு
தண்ணே-அந்த
வேரிற் பழுத்த பலா!''

தமிழ்ச் சமுதாயம் கற்பித்துள்ள 'கைம்பெண்' கொடுமையை இந்தப் பலா இடித்துரைக்கின்றது.

இயற்கையின் எழிலும் படைப்புக்களும் இந்த வையத்து மாந்தர்க்கெல்லாம் எப்படித் தோன்றினாலும், அதைப்பற்றிக் கவிஞன் கவலைப்படுவதில்லை. அதிலும் புரட்சிக் கவிஞர், மக்கள் கவிஞர் ஆயிற்றே! இயற்கையின் மிக நுண்ணிய கூறுபாட்டிலும் தன் புதுமைக் கருத்தினை இழைக்காமல் விடுவாரா?

ஆனால், இந்த மக்கள் கவிஞருக்கும் எத்துணை இடர்கள் வந்துற்றன. அவர் நடந்து சென்ற பாதையில் எத்தனை முட்புதர்கள்! தடைக்கற்கள்! அன்புச் சுமைகள்! பகைமைப் பள்ளத் தாக்குகள்!

* * * * * * *

சென்னையிலிருந்த பாவேந்தரைத் திண்டிவனத்து நண்பர் ஒருவர் சந்தித்துத் தமது சிற்றூரில் நடைபெறும் சீர்திருத்தத் திருமணத்திற்குத் தலைமை தாங்க வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

''சிற்றூரில் சீர்திருத்தத் திருமணமா? அதுவும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடையே இப்படி ஒரு விழிப்புணர்ச்சியா?

பாவேந்தருக்கு இந்த அழைப்பு, தேனில் துவைத்தெடுத்த பலாச்சுளையாய் இனிக்கிறது. அருகிலிருந்த எனக்குச் சிறுகசப்பு! கடுகடுப்பு! தாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பான அலுவலையும் ஒத்திவைத்துக் கொண்டு புறப்படுகிறாரே. இது தேவைதானா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது.

வந்த நண்பர் பத்து ரூபாயை வழிச் செலவுக்கு அளித்து விட்டுப்போய் விடுகிறார்.

குறிப்பிட்ட நாள், விடியற் காலையில் பாவேந்தரிடம் இருந்த கார், வழியவழியப் பெட்ரோல் போட்டுக்கொண்டு கிளம்புகிறது.

நானும் உடன் செல்கிறேன். திண்டிவனத்துக்கு ஐந்து கல் இருக்கிறது; அடை மழை! மெல்லச் செல்கிறது வண்டி; முன்னே சென்று கொண்டிருந்த கார் ஒன்று எதிர்பாராமல் நிற்கிறது. தார் மெழுகியிருந்த நெடுஞ்சாலை வழுக்கி விட்டதால் எங்கள் வண்டி நிற்க முடியாமல் முன் வண்டியோடு மோதி 'முகம்' நசுங்கி நிற்கிறது. ஓட்டுநர் எப்படியோ முயன்று அரை மணிக்கு நூறடியாய் வண்டியைச் செலுத்துகிறார். திண்டிவனம் அடைந்து. நாங்கள் போக வேண்டிய சிற்றூரைப் பற்றி வினவுகிறோம்.

''பலாப்பட்டு!— அங்கே நீங்கள் போகனும்னு, அலதிங்க. மூணு நாளா பெய்த மழையிலே வழியெல்லாம் ஆள் உயரச் சேறு. வண்டி போகாதுங்க!'' என்கிறார் உள்ளூர்க்காரர் ஒருவர்.

''திரும்பிவிடுவோமே'' என்று என் முகம் கோணலாகிறது. ''நம்மை நம்பியிருப்பாங்களே. கல்யாணம் நடக்கனுமில்ல'-எப்படியாவது போய்ச் சேரணும்'' என்று கூறி வண்டியினுள்ளே அமர்கிறார் புரட்சிக் கவிஞர்.

வண்டி நகர்கின்றது; முன் உருளைகள் புதைந்து கொள்கின்றன. பின் உருளைகள் தம்மில்தாமே சுற்றிச்சுற்றி வண்டிக்குள்ளே மழைச் சேற்றை வாரி அடிக்கின்றன. வண்டியை விட்டு இறங்கினாலோ, நாம் சேற்றினுள் புதைந்து செல்வதைத் தவிர வேறு ஒன்றும் ஆகப்போவதில்லை.

எதிரில் வந்த இரண்டொருவர் இரக்கப்பட்டு நொச்சிச் செடிகளை ஒடித்துப் போடுகிறார்கள். ஓரப் பகுதியில் கிடக்கும் கற்களைத் தூக்கிச் சேற்றில் இட்டு வண்டியை மேலே கொண்டு வந்து, பள்ளமான மணற்பரப்பில் இறங்கி, ஏரிக்கரை மீது போய்ச் சேர அறிவுரை கூறுகிறார்கள்.

வண்டியிலிருந்து, ஒரே தாவில் மணற்பரப்பில் குதித்து. நடக்கிறார் பாரதிதாசனார்.

ஏரிக்கரையின் ஒற்றையடிப் பாதையில் நடந்து, இடைப்பட்ட மார்பளவு நீரையும் கடந்து மணவீட்டைத் தேடிப் பிடிக்கிறோம்.

காலை 8.30 மணிக்கு நடைபெறவேண்டிய திருமணம்! நாங்கள் போய்ச் சேரும்போது 9 மணி. இருபது பேர் இருக்கிறார்கள். பாவேந்தர் பேசிவிட்டு உடனே கிளம்பி விடுகிறார். வண்டியைத் திண்டிவனத்துக்கு இழுத்து வந்து இருநூறு ரூபா கொடுத்து



பழுது பார்த்து 'இனிதே' வந்து சேருகிறோம் சென்னைக்கு.

எத்துணைத் துன்பம் இந்தப் பலாப்பாட்டு அளித்தது! ''தேவைதானா இத்துணைத் தொல்லைகள் என்றுதானே நாம் கூறுவோம்?''

''பலாச்சுளையைத் தின்று விட்டு மகிழ நினைத்தால் அதனைப் பெறுகின்றவரையில் ஏற்படும் தொல்லைகளைக் கண்டு அஞ்சலாகாது என்பார் பாவேந்தர்.

மழைச் சேற்றில் புதைவதும், வழியில் பழுதுற்ற வண்டிக்குத் தாம் செலவு செய்வதும் சமுதாயத்துக்கு ஆற்றும் தொண்டு என எத்தனை பேர் எண்ணுவார்கள்?

* * * *

கவிதைப் பணியில் தோய்ந்து போயிருக்கும் கவிஞரிடம் வரும் அன்பர்கள் பலவகைப்படுவார்கள். வந்தவரை யார் என்று நேருக்கு நேராய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சில சமயங்களில் கவிஞருக்குத் தோன்றாது.

''யாரோ எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறது' என்று தமக்குத்தாமே நினைத்துக் கொண்டு விடுவார், தவிப்பார்; மற்றவர் யாராவது தலையிட்டு நிலையைச் சமாளித்தால்தான் சிக்கல் அவிழும்.

யாருமில்லாவிட்டால் எப்படி? ''நீங்க எங்கேயிருந்து வரிங்க?''-துணிந்து கேட்பார் பாவேந்தர்.

வந்தவர் உடனே விடை கூறுவார் இப்படி. ''நேரா வந்ததும் பஸ் ஸ்டாண்டுலேயிருந்து தானுங் வரேன்!''

பாவேந்தர் 'மீளும் வழி' அறியாமல் தவிப்பார். வினாக எதற்கு இதெல்லாம்! வந்தவரின் தேவை என்ன! கேட்பார் பாவேந்தர். கோரிக்கை மற்றொரு சிக்கலை உண்டாக்கும். அப்படி ஒரு காட்சி இது.

பாரதியாரின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பாவேந்தர், அதற்கான கதையைப் பகுத்து எழுதிக்கொண்டிருந்தார் இரவு பகலாக! மிகச் சோர்ந்த நாட்கள்! அன்று காலையில் வந்து நின்றார் தமிழாசிரியர் ஒருவர். அவரின் கோரிக்கை சிறியதுதான்— ஆனால் சிக்கல் மிகுந்தது!



தென் பாண்டி நாட்டிலே அரசுப் பள்ளி ஒன்றில் வேலை பார்க்கும் இவர் தமது சொந்த ஊர்ப் பக்கத்தில் மாற்றிக் கொள்ளப் பல ஆண்டுகளாய் முயன்றும் வெற்றி பெறவில்லை தம் பெற்றோர்க்கு உதவியாக இருக்க இவர் விரும்புகிறார். ஆனால் வட்டார அதிகாரிகளுக்கு இவர்மீது கருணை பிறக்கவில்லை.

''நீங்கள் மனம் வைத்தால் உடனே முடியும்' என்று கூறி விட்டார் பாரதிதாசனாரிடம்!-

-பறந்தது சோர்வு பாவேந்தருக்கு;

பிறந்தது புதிய தெம்பு!

பறந்தது கார் கோட்டையை நோக்கி. சிவப்புச் சால்வையும், சிங்க நோக்குமாய் வந்தார் பாவேந்தர்! வரவேற்றார் அதிகாரி; செய்தியைச் சொன்னார். 'செய்து விடுகிறேன்' என்று கையமர்த்தினார்.

''இப்பவே என் கையில் உத்தரவை எழுதிக் கொடுத்தால் தான் போவேன்' என்றார் ; அதிகாரி திணறினார்; தென் பாண்டித் தமிழாசிரியரிடம், தமது நிலைமையை விளக்கி ஏழு நாட்களில் உத்தரவை போடுவதாய் உறுதிகூறி அவரே பாவேந்தரைத் தேற்றி அழைத்துச் சென்றார் வீட்டுக்கு!

போய் வந்த வாடகை வண்டிக்கும் தாமே செலவு கொடுத்து அனுப்பினார் பாவேந்தர்.

தமிழாசிரியர்க்கு நேர்ந்த துயரம், பாவேந்தருக்குத் தாங்கொணாதது.

ஆனால் கையிழப்பு? ஆம்! அதுவுந்தான்!

தமிழ்த்தொண்டு, பொது நலம் என்பதெல்லாம் மாம்பழம் அன்று! பலாப்பழம்!

முள் அடர்ந்த பலாப்பழத் தோலின் மீது கை வைத்தவர், பலாச் சுளையின் தேன் சுவையைப்பற்றி நினைக்க முடியாமற் போகலாம்! அது அவரின் அறியாமை!

பாவேந்தர், முள்ளினால் நேர்ந்த இன்னலைப்பற்றி வருந்துவதில்லை. இனிக்கும் சுவையைப்பற்றி அவர் நன்கு அறிவார்! சுளைகளை எடுத்து எடுத்து மக்களுக்கு வழங்கி அவர்கள் உண்டு மகிழ்வதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து கூத்தாடுவார்!

பாவேந்தரே ஒரு பலாப்பழம்!

நறுக்குத் தெறிக்கும் சொற்கள்-சிங்கப் பார்வை-வணங்காத போக்கு.

இந்த முரட்டுப் பழத்தினுள்ளே நாவினிக்கும் நல்ல சுளைகள் நிரம்பியிருக்கும்.

இதனை அறியாதோர் பலர் உண்டு. இனிமேலாவது அந்த நறுஞ்சுவையை அறிந்து கொள்ளட்டுமே பாவேந்தரின் பாடல் கனிலே!

# மகளிர் பகுதி



# அழகு வேண்டுமோ?

அழகு வேண்டுமா? என்று கேட்டால் யார்தான் வேண்டாம் என்பார்கள், அதுவும் பெண்கள் அழகு வேண்டாம் என்று சொல்வார்களா? நீங்கள் பெண்ணாக இருந்தால் அழகுக்கு அழகூட்ட இதோ ஓர் அழகுக் குறிப்பு.

பெண்கள், சாதாரணமாகத் தங்கள் அன்றாட வேலைகளைத் தையும் முடித்துக்கொண்ட பிறகு இந்தப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். உங்கள் முகத்தை, வெந்நீரில் நன்றாகக் கழுவித் துடைத்த பின்னர் கண்ணாடியின் முன்னர் வசதியாக அமர்ந்து கொள்ளுங்கள். இந்தப் பயிற்சிகளைச் செய்து முடித்த பின்னர், முகத்தை குளிர்ந்த நீரில் கழுவி, அதன் பின்னர் ஏதேனும் 'கிரீம்' தடவிக் கொள்ளுங்கள். முதல் சில நாட்களுக்கு இரண்டு அல்லது மூன்று முறை இப்பயிற்சியைச் செய்யுங்கள்; படிப்படியாக அதைப் பத்து முறையாக உயர்த்துங்கள். மிக எளிய ஆனால் பயனுள்ள சில பயிற்சிகளைக் கீழே தருகிறோம்.

### கண்களுக்கு



1. கண்களை இறுக மூடிக் கொண்டு, மூன்று எண்ணும் வரை அப்படியே இருந்து, பின்னர் அவற்றை அகலத் திறவுங்கள்.

2. கண்களை இறுக மூடிக் கொண்டு, கண்களின் வெளி ஓரங்களை, உங்கள் இரு விரல்களால் பிடித்துக் கொண்டு, அதன் பின்னர் கண்களைத் திறவுங்கள்

3. நேராக அமர்ந்து கொண்டு, தலையை அசைக்காமல், கண்ணின் கருவிழிகளை மட்டும் இடதுபுறமும், வலது புறமுமாக நகர்த்துங்கள்.

### தாடைகளுக்கு

1. மேஜையின் மீது முழங்கைகளை ஊன்றிக் கொண்டு, உள்ளங் கைகளில் முகத்தைத் தாங்கிக் கொள்ளுங்கள். பின்னர் உங்கள் தலையின் எடையனைத்தையும், உங்கள் கைகளின் மீது அழுத்தவும்.

2. உங்கள் வாயில் ஒரு பென்சிலைப் பிடித்துக் கொள்ளுங்கள்; கழுத்தை முன்புறமாக நீட்டிக் கொண்டு, பென்சிலால் காற்றில் கற்பனை வட்டங்கள் வரையவும்; இதை முதலில் வலது புறமிருந்து இடது புறமாகவும், பின்னர் இடது புறமிருந்து வலதுபுறமாகவும் செய்யவும்.

3. கழுத்தை முன்புறமாக நீட்டிக்கொண்டு, உங்கள் தலையால் ஒரு தோளிலிருந்து, மற்றொரு தோளுக்கு அரைவட்ட இயக்கத்தைச் செய்யவும், (தோள்களை உயர்த்தக்கூடாது)

### கழுத்திற்கு

1. வலப்புறமிருந்து இடது புறமாகவும், பின்னர் இடப் புறமிருந்து வலது புறமாகவும் திருப்பவும்.

2. வாயை நன்றாக மூடிக் கொண்டு, நாக்கினால் வாயின் மேற்புறம் நன்றாக அழுத்துங்கள்; பின்னர் பழைய நிலைக்கு நாக்கைக் கொண்டு வரவும்.

3. நேராக உட்கார்ந்து கொண்டு, முகத்தை மட்டும் நேராக எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வலதுபுறமாகத் திருப்பவும்; இப் பயிற்சியை இடப்புறமாகவும் செய்யவும்.

கடைசியாக மிக முக்கியமான குறிப்பு.

இந்தப் பயிற்சிகளைச் செய்து வர உங்களுக்கு நாற்பது வயதாகியிருக்க வேண்டும்.

உங்கள் முகத்திலுள்ள தசைகளைத் தெம்புடன் வைத்திருக்கவும் அத்தசைகளுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து முகப்பொலிவைச் சீராக்கிடவும் உதவும் பயிற்சி இது.



ஏனெனில் பெண்கள் வயது ஏற ஏறத் தங்கள் சருமத்தையும் முகப்பொலிவையும் பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

வயதானவர்கள் இந்த அழகுக் குறிப்புகளைக் கடைப்பிடித்து பயிற்சி செய்து காலங் கடந்தது ஆகாதா என்று கேட்கலாம்.

இந்த ஐயப்பாட்டை அகற்றும் வகையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அழகுக்குறிப்புகளை வெளியிட்ட சோவியத் செய்தி நிறுவனம் தந்துள்ள பதில் இதுதான்.

எதுவுமே, குறிப்பாக உடற் பயிற்சிக்கு இந்த வயதில்தான் தொடங்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. முதுமையின் சாயல்களைத் தடுத்து முகத்தின் வசீகரத் தன்மையையும் பொலிவையும் மட்டுமன்றி உடற்கட்டையும் பாதுகாத்துக் கொள்வது நம்மை பொறுத்ததே என்பதை மறந்து விட வேண்டாம்.









# தமிழ்நாடு நிலநீர் இயக்ககத்தின் பணிகளும் சாதனைகளும்

அனைத்து நாடுகள் வளர்ச்சித் திட்டம், இந்தியாவில் முதல் தடவையாக, தெரிந்தெடுக்கப் பட்ட வண்டல் பகுதிகளில் வடிநில வாரியாக விரிவான அறிவியல் சார்ந்த நில-நீர் ஆய்வை 1966-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாள் முதல் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ஆம் நாள் வரை மேற் கொண்டது.

முதல் கட்டத்தில் (1966 மார்ச் முதல் 1966 ஜூன் வரை) சென்னை, அதைச் சுற்றியுள்ள பகுதிகள், பாலாறு வடிநிலம், நெய்வேலி பகுதி ஆகிய இடங்களில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் (1969 ஜூன் முதல் 1972 பிப்ரவரி வரை) காவிரி கயவாய்ப் பகுதியில் விரிவான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நில-நீர் வளத்தை மதிப்பிடுவதற்காக, எஞ்சியுள்ள பகுதிகள் எல்லாவற்றிலுமே முறையான நீர்-புவியியல் ஆய்வு ஒன்றை மோற்கொள்ள நமது தமிழ்நாடு அரசு 1970-ஆம் ஆண்டு நவம்பரில் தனியாக ஒரு நில நீர்த் துறையை ஏற்படுத்தியது. முதலில், இரண்டு கோட்டங்களுடன் தொடங்கப்பட்ட இந்த நிலநீர் இயக்ககம் படிப்படியாக வளர்ச்சி பெற்று 1972-ஆம் ஆண்டு நவம்பர் அளவில் ஒன்பது கோட்டங்களாக விரிவடைந்தது.

தமிழ் நாட்டில் நான்கு மண்டல நிலப் பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, புலன் ஆய்வுப் பகுதிகளின் நீர்-புவியியல் எல்லைகள் வகுக்கப்பட்டன. அந்த விவரம் வருமாறு;

(1) சென்னை மாநகரும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளும்.

(2) பாலாறு வண்டல்பகுதி.

(3) நெய்வேலிப்பகுதி.

(4) காவிரி கயவாய்ப்பகுதி.

இந்த நீர்-புவியியல் ஆய்வின்



பள்ளி, தென்னார்க்காடு மாவட்டங்களிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட வட்டங்களில், அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழக ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளவாறு எல்லாப் பிரிவுகளுக்கும் நிலநீர் குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிலநீர் குறித்த அனுமதியை அடிப்படையாகக் கொண்டு, தஞ்சாவூரிலுள்ள நிலநீர்க் கோட்டம் வங்கிகளிடமிருந்து மதிப்பீட்டு வரை படங்களைப் பெற்றுக் கொண்டு மறுப்பு ஏதும் இல்லை என்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1-3-1974 வரை 934 மதிப்பீட்டு வரைபடங்கள் பெறப்பட்டு, 923 மதிப்பீட்டு வரைபடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடின பாறைகளையுடைய செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள 18 வட்டங்களில் கிணறு வெட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதிகளில் விரைவாக நில அளவை எடுக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைச் சாரும். நிலநீர் குறித்து அனுமதிக்காகப் பரிந்துரைகளை இயக்ககத்திற்கு அவர் அனுப்புவார். 1972, ஜனவரியிலிருந்து பரிந்துரைகள் தொகுதி தொகுதியாகப் பெறப்பட்டன. பதிவாளரிடமிருந்து வரப்பெற்ற எல்லாப் பரிந்துரைகளும் 22 தொகுதிகளில் முடிவு செய்யப்பட்டுள்ளன. அனைத்து நாடுகள் வளர்ச்சி சங்கத் திட்டத்தில் அடங்கியுள்ள இந்த நான்கு மாவட்டங்களில் இது வரை 2,873 புதிய கிணறுகளுக்கும், விசையேற்றங்களுக்கும், 951 விசையேற்றங்களுக்கும் மட்டும், 829 ஆழப்படுத்தும் கருவிகளுக்கும், விசையேற்றங்களுக்கும் 586 ஆழப்படுத்தப்பட்ட கிணறுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து நாடுகள் வளர்ச்சி சங்கப் பகுதியல்லாத பிற இடங்களில் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தால் நிதியுதவி அளிக்கப்படுகின்ற சிறு பாசனத் திட்டங்கள் அப்பகுதியின் ஆய்விற்காக நிலநீர் இயக்ககத்திற்கு அனுப்பப்படுகிறது; வாய்ப்புக்கூறு அறிக்கையை அளித்து வருகிறது. அவை அனுமதிக்காக வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்திற்கு அனுப்பப்புட்டு வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு முறையான நீர்ப் புவியியல் ஆய்வு செய்வதற்கு நான்கு ஆண்டுகள் ஆனாலும் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தால் நிதியுதவி பெறும் சிறு திட்டங்களை வகுப்பதற்காக, நிலநீர் இயக்ககத்திற்கு அனுப்பப்படும் பகுதிகளில் விரைவான நிலநீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் வாய்ப்புக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுவரையில் 270 அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் கீழும், அனைத்து நாடுகள் வளர்ச்சித் திட்டங்களின் கீழும், 50,000 கிணறுகளுக்கும், நீரேற்றுப் பொறிகளுக்கும் மேலாக இதுவரை அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

## 36,000 கிலோ மீட்டர்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் தமிழ் நாட்டில் எல்லாக் காலநிலைக்கும் ஏற்ற நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளின் நீளம் 36,000 கிலோ மீட்டராக அமையும்.

நிலவள வங்கிகள் உதவி பெறும் சிறு பாசனத் திட்டங்களுக்காக இயல்பான கடன் வழங்கும் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இதற்கெனத் தனி அனுமதி வழங்க நிலநீர் இயக்ககத்திற்கு 56 வட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் வளர்ச்சி பெறுவதற்கான பெரும் வாய்ப்புகள் சுட்டிக்காட்டியுள்ள இடங்களிளெல்லாம் மேலும் பல திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. புள்ளிவிவரங்கள் போதியவாறு கிடைக்காத இடங்களில் வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு 50 கிணறுகள் என்கிற குறைந்த அளவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடன் உதவியோடு செயல்படுத்தக் கிணறுகளுக்கு மின் வசதி அளிப்பதற்காக கோயம்புத்தூரில் கிராம... ...வசதிக் கழகம் சில திட்டங்களுக்கு அனுமதியளித்து உள்ளது. கடன் வழங்குவதற்கு முன், நீர் கிடைப்பது குறித்து நிலநீர் இயக்ககத்திலிருந்து சான்றிதழ் ஒன்றை மின்வாரியம் பெற்றுத் தர வேண்டும் என்று கழகம் கூறுகிறது.

30,000 நீரேற்றுப் பொறிகளுக்கு மேல் சம்பந்தப்பட்டுள்ள மாநில மின்வாரியத்தைச் சேர்ந்த 40 திட்டங்களுக்கும் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளன.

நீர்வழங்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக உள்ளூர் ஆய்வுகளை மேற்கொள்ள ஏனைய அரசுகளிடமிருந்தும், அரசு போன்ற நிறுவனங்களிடமிருந்தும் பெறப்படுகிற சில முக்கியமான வேண்டுகோள்கள் ஏற்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளன. இவை யாவும் பெரும்பாலும் அகதிகளுக்கான நிலக்குடியேற்றத் திட்டங்களும், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களும் ஆகும்.

நீர்ப் புவியியல், நீர் அளவையியல் துறைகளில் உணவு-வேளாண்மை நிறுவன (F.A.O.) வல்லுநர்கள் இயக்ககத்துடன் செயல்பட்டு அந்தந்தத்துறைகளில் நிலநீர் ஆய்வுகளில் உதவி செய்து வருகின்றனர். நீர்புவியியல் வல்லுநர் ஒருவரால் பொன்னியாறு, பள்ளத்தாக்கில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிழற்படப் புவியியல் ஆய்வுகள், நில பௌதிக ஆய்வுகளின் அடிப்படையில் துளையிடுதல், பொறி சோதனையிடுதல் முதலிய பணிகளை மேற்கொண்டும் எடுத்துக் கொள்வதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது. நிலத்திற்கடியில் நீர் வளச் சோதனைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நிலநீர் ஆய்வுக்கான பெருந்திட்டம் ஒன்று ரூ. 11.77 கோடி செலவில் தயாரிக்கப்பட்டு அனுமதி வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிலநீர் ஆய்வுத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 612.88 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டுக்காக ரூ. 70.63 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



# காணமற் போன காய்ச்சீர்!



**மருதங்குடி வெங்கடேசன்**

ஔவையார் இயற்றிய நூல்களுள் மூதுரையும் ஒன்றாகும். முப்பது பாடல்களைக் கொண்டு விளங்கும் அந் நூல் இக் காலத்தில் 'வாக்குண்டாம்' என்றும் வழங்கப்படுகிறது. 'அட்டாலும் பால் சுவையில்' என்னும் பாடல் மூதுரையில் நான்காவது பாடலாகத் திகழ்கின்றது. 'சவலை வெண்பா' என்னும் குறிப்போடு இப் பாடல் மூன்றாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில் சேர்க்கப் பெற்றிருக்கிறது. சீர்குலைந்து போன இந்த ஒரு பாடலுக்காக வெண்பா வகையுள் 'சவலை வெண்பா' என்பதையும் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது.

ஔவைப் பெருமாட்டி பாடிய மூதுரையில் இந்த ஒரு பாடலைத் தவிர மற்றப் பாடல்கள் எல்லாம் செப்பலோசை குன்றாத நேரிசை வெண்பாக்களாகத் திகழ்கின்றன. இந்த ஒரு பாடல் மட்டும் 'சவலை'யாக ஆனது ஏன்? இருபத்தொன்பது பாடல்களையும் நேரிசை வெண்பாக்களாகப் பாடிய தமிழ் மூதாட்டிக்கு இந்த ஒரு பாடலைப் பாடும்போது மட்டும் சொற் பஞ்சம், ஏற்பட்டுவிட்டதா? ஒரு போதும் ஏற்பட்டிருக்க முடியாது. இந்தப் பாடலும் நேரிசை வெண்பாவாகத்தான் பாடப்பட்டிருக்கும். பின்னால் எப்படியோ அதிலிருந்த ஒரு காய்ச்சீர் சிதைந்து மறைந்து போனது போலும். தமிழ்த் தாய் 'பனையோலை' வாழ்க்கை நடத்திய காலத்திலே இவ்வித இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன.

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்னும் ஆறு வெண்பா வகையோடு 'சவலை வெண்பா' என்பதையும் இந்த ஒரு பாடலால் சேர்க்க வேண்டியதாகிறது. வெண்பாவின் பொதுவிலக்கணத்தை இங்குக் காண்போம்.

ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் அமைதல் வேண்டும், ஈற்றடியின் ஈற்றுச்சீர், நாள், மலர் காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றனைக்கொண்டு முடிதல் வேண்டும். இரண்டடிகளுக்குக் குறையாமலும், பன்னிரண்டு அடிகளுக்கு மிகாமலும் அமைதல் வேண்டும். செப்பலோசை பொருந்தியிருத்தல் வேண்டும். இயற்சீர் வெண்டளைகளும், வெண்சீர் வெண்டளைகளுமே அமைந்திருத்தல் வேண்டும். மேற்கூறிய ஆறு வெண்பாக்களுக்கும் இதுவே பொது இலக்கணமாகும். இந்த இலக்கணத்தினை வைத்துக்கொண்டு, 'அட்டாலும்' எனத் தொடங்கும் பாடலைப் பார்க்கும்போது, இப் பாடல் ஒரு சிதைந்த பாடலாகவே காணப்படுகிறது. இப் போதுள்ள பாடலின் வரி வடிவம் இதுவாகும்.

'அட்டாலும் பால்சுவையில் குன்று தளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'.

பாடலில் செப்பலோசை குன்றுகிறது. பாடலின் இரண்டாமடி முச்சீராகவே அமைந்திருக்கிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள், வெண்பாவின் நடுவில் முச்சீரடி வரும் என்பதற்கு இப்பாடலை எடுத்துக் காட்டியுள்ளார்கள். நெடுங்காலமாகவே இப் பாடல் சிதைந்த வடிவிலேயே சீரிழந்த பாடலாகத் திகழ்ந்து வருகின்றது. நேரிசை வெண்பாவில் சிறிது மாறுபடுவதை இன்னிசை வெண்பர்வாகவும், வெண்டுறையாகவும் இலக்கணம் கூறுகின்றது. இந்தப் பாடல் எந்த வகையிலும் சேர்க்க முடியாத பாடலாக இருக்கிறது.

குறள் வெண்பாக்கள் இரண்டு இணைந்து நடுவிலே தனிச் சொல்லாகிய சீரில்லாமல் இருப்பது 'சவலை வெண்பா' என்று இக் காலத்தில் இலக்கணம் கூறப்படுகிறது. இதனைக் கொண்டு பார்த்தாலும் பாடலிலுள்ள இரண்டாமடி குறள் வெண்பாவுக்குரிய அமைப்பை —இலக்கணத்தைப் பெறவில்லை. நட்டாலும் நண்பல்லர் நண்பல்லர்' என்னும் இரண்டாமடியிலேயே மூன்றாவது சீராகிய 'நண்பல்லர்' என்னும் சீர் காய்ச்சீராக இருக்கிறது. இரண்டாம் சீரோடு சேர்த்து 'அசை' பிரித்து அலகிடவும் இயலவில்லை. ஆதலால் காய்ச்சீரில் முடிவது வெண்பாவாக முடியாது—இலக்கணமும் இடம் தாராது. எப்படி நோக்கினாலும் இந்தப் பாடல் ஒரு சிதைந்த பாடலாகவே தெரிகிறது.

இனி நேரிசை வெண்பாவை எழுதும் வரி வடிவிலே இப் பாடலை எழுதிப் பார்த்தால் சீர் சிதைந்த இடம் தெளிவாக விளங்குகிறது.

அட்டாலும் பால்சு வையிற் குன்று தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் — கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்களேசங்குசுட்டாலும்
. . . . வெண்மை தரும்.

போது, (1) மொத்தம் 1,22,000 அடி ஆழத்திற்கு 400 துளைகள் போடப்பட்டு, நிலத்திற்கு அடியில் நீர் புவியியல் நிலைமைகள் கணிக்கப்பட்டன.

அடி நிலத்தின் தன்மைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக, 1,280 நிலமேற் பரப்பு எதிர்ப்புத் தன்மை பற்றிய ஆய்வுகளும் நடத்தப்பட்டன. நீர்வள இயல்புகளைக் கண்டறிய 2700 மணி நேரங்களில் நீரேற்றி 270 நீர்வளச் சோதனைகள் நடத்தப்பட்டன. ஆழமற்ற சோதனைக் கிணறுகளிலிருந்து 5,529 நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டும், ஆழ் கிணறுகளிலிருந்தும் மாதிரிகள் எடுக்கப்பட்டு, குடிநீர், தொழில்



வேளாண்மைத் தேவைகளுக்கு அவை ஏற்றவையா, என்பது பகுப்பாய்வு செய்யப்பட்டது.

பல்வேறு கால நிலைகளில் நிலநீர் ஊற்று ஏற்ற இறக்கங்களை அறிய, தானே இயங்கும் 40 நில-நீர் அளவைப் பொறிகள் நிறுவப்பட்டன. 33 பொங்கு ஊற்றுக் கிணறுகளும் உற்பத்திக் கிணறுகளும் வெட்டப்பட்டன.

காவிரி கயவாய்ப் பகுதி பற்றி நாளது வரையிலான புவியியல் வரை படம் ஒன்றைத் தயாரிக்கவும், நீரியல் ஆய்வுகள் பற்றித் திட்டமிடவும் சுமார் 8,460 சதுர மைல் பரப்பு, விமானம் மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

பம்பாயில் உள்ள டாட்டா, அடிப்படை ஆராய்ச்சி நிலையத்தில் நில-நீர் ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கான வெவ்வேறு நீர் வளங்களிலிருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. காவிரி கயவாய்ப் பகுதியில் குறுக்கீடுகளைத் தவிர்ப்பதற்காகவும், கிணறுகளுக்கு இடையே இருக்க வேண்டிய தூரத்தைக் கணக்கிடுவதற்காகவும், நீர் இறைப்பதனால் ஏற்படும் விளைவுகள் ஆய்வு செய்யவும் சென்னை, இந்தியத் தொழில் நுட்பநிறுவனத்தினால் மின்சார ஆய்வுகள் (Electrical Analogy Studies) மேற் கொள்ளப்பட்டன.

நீர்-புவியியல் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நில வளங்கள் வகுக்கப்பட்டு, அவ்வாறு, வகுக்கப்பட்ட பகுதிகளில் நில நீர் வளம் மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலும், பாலாறு வடி நிலப்பகுதியிலும் கிடைக்கும் நீர் வளம் கண்டறியப்பட்டு, இந்த நீர் வளம் சென்னைக்கருகில் மணலியில் உள்ள தொழிற்சாலைப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்காகவும் கல்பாக்கத்திலுள்ள சென்னை அணு மின் நிலையத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. பஞ்செட்டி, மீஞ்சூர் பகுதிகளில் கிடைக்கும் நீர் வளத்தின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு, பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளின் தேவைகள் அதிகரிக்கும்போது நீர் கிடைக்கும் முழுத் திறனளவிற்கும் அவற்றிற்கு நீர் வழங்கப்படும் 1-3-1974 முதற் கொண்டு நில நீர் இயக்ககம், பஞ்செட்டி, தாமரைப்பாக்கம் பகுதிகளிலிருந்து சென்னை மாநகரின் நீர் வழங்கல் தேவைக்கு நாள் ஒன்றுக்கு 1 கோடியே 40 இலட்சம் காலன் நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

பல்வேறு தொழிற்சாலைகளுக்குத் தாமரைப்பாக்கம் பகுதியிலிருந்து நாள் ஒன்றுக்கு 1 கோடியே 10 இலட்சம் காலன் தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள பொய்கைநல்லூரில் கிடைக்கும் நில நீர், சென்னை அணு மின் நிலையத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் நாளொன்றுக்கு கிடைக்கும் 62 இலட்சம் காலன் நீரில், தற்போது இத் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு சுமார் 40 இலட்சம் காலன் நீர் வழங்கப்பட்டு வருகிறது. தேவை அதிகரிக்கும் பொழுது கிடைக்கும் நீரின் முழு அளவும் அதிகரிக்கப்படும்.

தமிழ் நாட்டின் நில நீர் வளத்தை முறையாக ஆய்வு செய்யும் பணிகள் பற்றிய விவரம் வருமாறு :—

கடந்த 50 ஆண்டுகளுக்கான மழை அளவு பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தமிழ் நாட்டிலுள்ள நீரின் மொத்த அளவு கணக்கிட சராசரி மழை அளவு கணக்கிடப்பட்டு வருகிறது. ஆவியாகப் போவதால், ஏற்படக் கூடிய நீரின் இழப்பு கணக்கிடுவதற்காக வெப்ப தட்ப நிலை, ஈரம், காற்றின் வேகம், வெயிலடிக்கும் நேரம் போன்ற வானிலைத் தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் 14 தொடக்க நீர் கோள் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தகவல்களைச் சேகரிப்பதற்குத் தேவையான கருவிகள நிறுவப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதிலும் 1,660 ஆழமற்ற பரிசோதனைக் கிணறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. சோதனை மேற் கொள்ளப்பட்ட கிணறுகள் அனைத்திலும் தண்ணீர் கிடைக்கும் அளவு குறித்து எழுதப்படும் நில நீர் வரை படங்கள் தயாரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. குடிநீர், வேளாண்மை, தொழில் தேவைகளுக்காக நீரின் தகுதியினைப் பற்றி முடிவு செய்ய ஆறு மாதத்திற்கு ஒரு முறை நீரின் தரம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நில நீர் அளவு பற்றிய ஆய்வு முக்கியமான தகவல் ஆகும். அதன் அடிப்படையில் நீர் மட்ட விளக்கப் படங்களும், இப் பகுதி முழுவதற்குமான விளக்கப் படங்களும் தயாரிக்க முடியும். பல்வேறு வடி நிலங்களில் நில நீர் அற்றுப்போனது, மீண்டும் ஏற்படும் நீர் ஊற்று ஆகியவை குறித்து விரிவான தகவல்களைச் சேகரிப்பதே இதன் நோக்கமாகும். தமிழ் நாட்டின் நீர் மட்ட விளக்கப் படம் நீரின் தன்மை பற்றிய விளக்கப் படம் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அரக்கோணம் தொழில் வளர்ச்சிப் பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் உற்பத்தி செய்யும் மென்னிரும்புத் தொழிற்சாலை (Sponge Iron Project) ஒன்று அமைக்கத் தொடக்கப் பணிகள்நடந்தேறி வருகின்றன. இதற்கு ரூபாய் 8 கோடி செலவாகும்.



நீர் வளங்கள், புவியியல் வளம், குறிப்பாக நிலநீர் வளத்தை மதிப்பிடுவதற்கு நிலவியல் வரைபடம் மிக முக்கியமான அடிப்படைத் தேவையாகும். தற்போது சென்னையிலுள்ள இந்திய அரசின் இந்திய நிலவியல் ஆய்வு, தமிழ்நாடு வட்டாரத்தில் உள்ள நிலவியல் விளக்கப்படங்களுக்கு ஏற்கெனவே நகல்கள் எடுக்கப்பட்டுள்ளன. அடிப்படை விளக்கப் படங்கள் 1 அங்குலம்=4 மைல் என்னும் அளவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள நிலவியல் விளக்கப் படங்களை மேம்படுத்தல் குறித்து நேரடி விளக்கப்படங்கள் தயாரிக்கும் பணியை நிலநீர் இயக்ககக் கோட்டங்கள் ஏற்கெனவே மேற் கொண்டுள்ளன. நில நீருக்குத் தனி முக்கியத்துவம் அளித்து 10,000 சதுர கிலோ மீட்டர் (4,000 சதுர மைல்) பகுதிக்கான விளக்கப் படங்களை நிலநீர் இயக்ககம் தயாரித்துள்ளது.

பொன்னையாறு வடிநிலத்தில் சுமார் 8,000 சதுர கிலோ மீட்டர் பகுதி வரை மேலும், தொடக்க நில இயல் நிழற்பட விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் நில மேற்பரப்பு ஆய்வும், நில அடி மட்ட ஆய்வும் அடங்கிய பௌதிகப் புவி இயல் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலநீர் எடுப்பதற்குச் சாதகமான பகுதிகளைக் கண்டறிய ஒவ்வொரு மாவட்டத்திலும் நில நீர் இணைப்புகள் முறையில் தடை ஆய்வுகள் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிலும் சுமார் ஏழில் ஒரு பகுதியில் இதுவரை ஆழம் பார்க்கும் பணிகள் 1,800 நடத்தப்பட்டுள்ளன.

வெட்டி எடுக்கப்பட்ட பகுதிகளில் தடைகள், நிலைத்தடுப்புகள் காணப்பட்டால் அந்த இடங்களில் நிலத்திற்கடியில் ஆய்வுகள் துளையிறக்கி ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் இதுவரை 330 துளைகளில் மின்சார விசை மூலம் மண்வெட்டும் வேலைகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதிலும் நில நீருக்காகத் துளையிடும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பாறையின் தன்மையையும் நீர்வளங்களைக் கண்டறியவும் சுமார் 360 சோதனைத்துளைகள் இறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வுக்காகப் போடப்பட்ட 160 துளைகள் நீங்கலாக இதுவரை 129 துளைகள் இறக்கி முடிக்கப்பட்டுள்ளன. 79 உற்பத்திக் கிணறுகள் தொழிற்சாலை நீர் வழங்கல் திட்டத்திற்காகக் கட்டப்பட்டுள்ளன. 62 சோதனைக் கிணறுகள் உற்பத்திக் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன. மேற்கொண்டும் வேலை நடைபெற்று வருகிறது.

தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வடிமுனைக் கிணறுகள் தோண்டுதல், குழாய்க் கிணறுகள், தோண்டு கிணறுகள், இறக்குதல் விசையேற்றங்களை அமைத்தல் ஆகியவற்றின் மூலம் நில நீரைப்பயன் படுத்தி சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த உலக வங்கியின் அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகம் 35 மில்லின் டாலர் கடனுக வழங்க முன் வந்துள்ளது. தண்ணீர் கிடைத்தல், கிடைக்கும் இடங்கள் இவற்றைப் பொறுத்தி நில நீர் இயக்ககம் அளித்துள்ள தொழில் நுட்ப கருத்துரையை அடிப்படையாகக் கொண்டு இத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டத்தில் அடங்கியுள்ள தஞ்சாவூர், திருச்சிராப்

இவ்விதமாகப் பாடலை எழுதிப் பார்க்கும் போது நான்காம் அடியாகிய ஈற்றடியின் முதற்சீர் சிதைந்துவிட்டிருப்பது கருத்துக்குத் தெளிவாகின்றது. நான்காமடியின் முதற்சீர் காணுமற்போகவே, ஏடு பெயர்த்து எழுதிய வர்கள், இரண்டாமடியின் தனிச் சீரான 'கெட்டாலும்' என்ற சொல்லை மூன்ருமடியின் முதலிலே எழுதியதால் பாடலின் அமைப்பே முற்றிலும் மாறிவிட்டது. முதற் சீருக்கு எது கைச் சொல்லாகவே, எவ்விதமோ இயல்பாக அமைந்துவிட்ட 'சுட்டாலும்' என்ற சொல், காணுமற்போன காய்ச்சீரின் இடத்தைக் கைப் பற்றியது. அட்டாலும், நட்டாலும், கெட்டாலும், சுட்டாலும் என்பவை அடிதோறும் முதலில் அமைந்து ஒரே விகற்பமாகத் திகழ்ந் தாலும், இரண்டாமடியிலே தனிச் சீர் இல்லாமையால் பாடல் பாங்கு இழக்கிறது ; குறையுள்ள பாடலாகவும் தெரிகிறது. மூதுரையில் ஒரே விகற்பத்தால் அமைந்த பாடல்கள் வேறு எதுவும் இல்லை.

இனி, காணுமற்போன அந்தக் காய்ச்சீர் என்னவென்று பார்ப்போம். பாடலின் நான்காமடியில் முதற்சீராக இருக்க வேண்டிய சீர் 'வான்மிக்க' என்பதாகும். இச்சீரைப் பாட லோடு சேர்த்துப் படித்தால் சிந்தை மகிழ் கின்றது.

அட்டாலும் பால்சுவையிற் குன்ருதளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.

இதுவே பாடலின் முழு வடிவம். முன்னர்த் தமிழ் மூதாட்டி, என்று பாடினுரோ அன்று இருந்த பாடலின் வரிவடிவம் இதுவேயாகும்.

பொழிப்பு மோனையோடு பாடல் அமைவதே சிறப்பு ஆகும். ஒவ்வொரு அடியிலேயும், முதற்சீரிலே உள்ள முதலெழுத்தும், மூன்ரும் சீரிலேயுள்ள முதலெழுத்தும் ஓசையிலே ஒத்து இருப்பது பொழிப்பு மோனையாகும். இப் பாடலில் 'தான் மிக்க' என்னும் காய்ச்சீர் சேரும்போது, பொழிப்பு மோனையோடு எது கையும், வெண்சீர் வெண்டளையும் அமைந்து செப்பலோசை பொருந்திப் பாடல் நிறைவான நேரிசை வெண்பாவாகவே நெஞ்சைக் கவருகின்றது.

காணுமற் போன காய்ச்சீரைக் கண்டுபிடித் தது எவ்வாறு? கண்டு பிடிக்கவில்லை நான்! கற்றதை—கருத்திலே நின்றதை வெளியிடுகின்றேன். ஏறக்குறைய முப்பது ஆண்டு களுக்கு முன் ஒரு திண்ணைப் பள்ளியில் நான் தமிழ் பயின்றேன். என் தந்தைக்கு ஆசாஞக இருந்த ஒருவர். அவரது தொண்ணூரும் வயதிலே எனக்கும் ஆசாஞக அமைந்து எழுத் தறிவித்தார். எனக்கு அவர் ஆத்திசூடி, நல்வழி, மூதுரை, விவேகசிந்தாமணி போன்ற நூல்களை நினைவிலிருந்தே கற்பித்து வந்தார். அப்போதுதான் இந்தப் பாடலை முழு வடிவத் தோடு கற்றேன். பின்னர் இந்தக் கருத்தை வெளியிட வேண்டுமென்று பலமுறை முயன் றேன். இயலவில்லை. பிற்காலத்தில் எனக்கு இலக்கணம் இலக்கியம் கற்பித்தவரும், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், விபுலானந்த அடிகள் போன்ருரிடம் தமிழ் பயின்றவருமான ஆசிரியர் பெருந்தகை த. சுந்தரேசஞரிடம் இப் பாடல் பற்றிய கருத்தைக் கூறினேன். அவரும் பாடலின் முழு வடிவங் கண்டு உவந்து பாராட்டினுர். தமிழ் மக்கள் முன்னே இப் பாடலைப் படைக்கின்றேன்; யான் பெற்ற இன்பம் பெறுக இத் தமிழகம்.


# காலக் கண்ணுடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணுடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. கடந்த மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB
உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்




# தஞ்சை மாவட்டத்தின் சிறந்த ஊர் நல உதவியாளர்



தஞ்சை மாவட்டத்தின் சிறந்த ஊர்நல உதவியாளர் என்னும் சிறப்பைப் பெற்று, தஞ்சை மாவட்டத்திற்குத் தனிச் சிறப்பைத் தேடித்தந்துள்ளார், ஊர்நல உதவியாளர் திரு. என். ரெங்கராஜன்.

முப்பத்து ஐந்து வயது நிரம்பிய இவர், 12 ஆண்டுகள் பணி செய்து, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் தத்துவத்தைக்கடைப் பிடித்து, தன்னுடைய பணியில் புதிய சகாப்தத்தை உண்டாக்கியுள்ளார்.

தஞ்சை மாவட்டம் திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் இவர், தன்னுடைய தொகுதியான புதூர் கிராமத்தில் சிறப்பான பணியாற்றியுள்ளார். 1,675 ஏக்கரில் வீரிய விதைகளைவிதைக்கச் செய்து மேம்படுத்தியுள்ளார். திருத்தப்பட்ட முறையில் 50 புதிய கம்போஸ்ட் குழிகளை வெட்டச் செய்திருக்கிருர். 3,572 குவிண்டால்கள் இரசாயன உர விநியோகம் செய்து இரசாயன உரத்தின் அவசியத்தை மக்களுக்கு இனிது எடுத்தியம்பியிருக்கிருர். விசைத் தெளிப்பான், தூவான்கள், 'பர்மீஸ் செட்டுன்' போன்ற திருந்திய வேளாண்மைக் கருவிகள் உழவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிருர். 586 குடியானவர்களை நன்கு பயன்படுத்தி, உயர் விளைச்சல் தரும் ரகங்களை உபயோகித்து, சிறந்த சாகுபடி முறைகளை மேற்கொண்டு வெற்றியடையச் செய்திருக்கிருர். இதைத் தவிர 2,000 பழச் செடிகளையும் விநியோகம் செய்திருக்கிருர்.

இவர் 10 இலட்சம் மீன் குஞ்சுகளை வழங்க ஏற்பாடு செய்ததால், இவரது தொகுதியில் மீன் உற்பத்தி 20 டன்களாக உயர்ந்தன. மீன் வளர்ப்புக்காக 12 குளங்களும், 5 கிணறுகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவருடைய பெரும் முயற்சியினுல், 22 தனிப்பட்டோர் கோழிப் பண்ணைகள் துவக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

இவரது முயற்சியினுல் ஏற்பட்ட வேளாண்மைஉற்பத்திப் பெருக்கம் உணவுப் பயிர்களில் 97 சதவீதமாக உள்ளது. சிறு சேமிப்புத் திட்டத்தின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக் கூறி, அநேகரை இத் திட்டத்தில் ஈடுபடுத்திப் பயன் அடையச் செய்துள்ளார்.

குடும்ப நலத் திட்டத்திலும் நற்பணி ஆற்றி, அவருடைய கிராமத்தில் தகுதி வாய்ந்த தந்தையர்களில் 65 சதவிகிதத்தினருக்குச் சிகிச்சை செய்வித்து அவர்களின் குடும்பங்களைச் சீர்மிகு குடும்பங்களாக மாற்றியுள்ளார்.

இப்படிப்பட்ட பல தீர்ப்பட்ட பணிகளிலும் சிறந்த பணியாற்றி, தஞ்சை மாவட்டத்தின் சிறந்த ஊர்நல உதவியாளராக விளங்கும் திரு. என். ரெங்கராஜன் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவர் என்ருல் மிகையல்ல!

## மருதா நதித் திட்டம்

மதுரை மாவட்டம், அய்யம்பாளையம் கிராமத்தில் மருதா நதிக்குக் குறுக்கே 15 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த் தேக்கம் ஒன்றை அமைப்பதே மருதா நதித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஏறத்தாழ 2,283 ஏக்கர் பரப்பளவிற்கு இடையருத பாசனம் அளித்தல், ஆயக்கட்டுப் பகுதியிலிருந்தும் பாசனம் பெருத 73 ஏக்கருக்குப் பாசன வசதி அளித்தல் ஆகியவற்றுடன் 2,250 ஏக்கர் புதிய பரப்பளவிற்குப் பயனளிக்கும். மருதா நதித் திட்டச் செலவு ரூ. 108·90 லட்சமாகும். இப்பொழுது தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு நடைபெற்று வருகின்றன.

மருதா நதித் திட்டச் செலவுக்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 50·70 லட்சம் ஒதுக்கியுள்ளது நமது அரசு.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1966-67ல் | 2100.87 |
| 1972-73ல் | 5618.15 |



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

ஆர். கனகசபை
தலைவர்

சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

என். எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குநர்



# மேலான மே நாள்!

உழைப்புத்தான் நல்லுயிராம்; தொழிலா ளர்தம்
உழைப்பாலே இவ்வுலகம் நடப்ப தாலே
உழைப்பவரே இவ்வுலகின் சொந்தக் காரர்:
உலகின்பக் கேணியெனில் அவரே ஊற்றும்;
சுழல்கின்ற உலகத்து மக்கள் தம்மைத்
துவளாமல் காப்பவரும் அவரே யன்றோ ?
உழைக்கின்ற தொழிலாளர் கைம்ம டங்கின்
உலகமதே ஒருநொடியில் மூச்ச டங்கும் !

உழைப்பின்றி, உழைப்பாளர் உழைப்பை நாளும்
உறிஞ்சியே சுகவாழ்வு நடத்து வோர்கள்,
உழைக்கின்ற தொழிலாளர் தம்மை இங்கே
உரிமையிலாத் தொழும்பர்களாய்க் கருதி வாழ்ந்த
இழிநிலைக்கே இடுகாடு வழங்கி, வையம்
ஏற்றமுறத் தொழிலாளர் உரிமை பேணத்
தொழிலாளர் நலங்காண வந்து தித்த
தூயதொரு திருநாளே மேநாள் ஆகும் !

உழைப்பிற்கு மதிப்பீய - தொழிலா ளர்தம்
உரிமைநலம் தனைப்பேணத் திட்ட மிட்டே
உழைப்பாளர் திருநாளை - மேதி னத்தை
உரியதொரு விடுமுறைநாள் ஆக்கி - மற்றுத்
தொழிலாளர் தமக்கிங்கே நிருவா கத்தில்
தூய்பொறுப்பும் முதலீட்டில் உரிய பங்கும்
வழங்கிவரும் தமிழரசைத் தொழிலா ளர்தம்
வாழ்வுநலம் காக்குநரை வாழ்த்து வோமே !

சாமி பழனியப்பன்




விஞ : நான் எனது நிலத்தில் பச்சை வாழை பயிர் செய்ய விரும்புகின்றேன். இடம் நல்ல வண்டல் மண் உள்ள மேட்டுப் பாங்கான பகுதியாகும். அந்த இடம் பச்சை வாழைக் கன்று நடத் தகுதி உடையதா? பச்சை வாழைக் கன்றுகளை அரசாங்கம் கொடுக்கின்றதா? அதற்கு எங்கே, யாரை அணுக வேண்டும்? அதனுடைய வயது எத்தனை மாதம்? செய்முறை எப்படி? அறுவடையின்போது பழங்களை அரசாங்கம் வாங்கிக் கொள்ளுமா? அல்லது வேறு வகை வாழைக் கன்றுகள் நட அரசாங்கம் உதவுகிறதா? விவரமாகத் தெரிவிக்கவும்.

—வே. குபேந்திரன்.
ஆர்ப்பாக்கம் கிராமம்,
திருவண்ணமலை வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்

விடை : தங்கள் நிலம் பச்சை வாழை பயிரிடுவதற்கு தகுதியானதே. வட ஆர்க்காடு மாவட்டத்தில்பச்சை வாழை பெரு மளவில் பயிர் செய்யப் படுவதால், தாங்களும் பச்சை வாழை பயிரிட்டுப் பயன் பெறலாம். அண்மைக் காலத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'ரொபஸ்டா' எனப்படும் 'எட்டடி வாழை' மிகவும் பிரபலமடைந்து வருகிறது. 'ரொபஸ்டா' வாழையின் தார் எடை அதிகமாகவும், காய்கள் பருமனகவும், ஏற்றுமதி செய்வதற்கு மிகவும் ஏற்றதாகவும் உள்ளதால், தாங்கள் பச்சை வாழையைவிட, 'ரொபஸ்டா' வாழையைப் பயிரிடுவதே மிகவும் இலாபகரமானதாக இருக்கும். எனவே, தாங்கள் 'ரொபஸ்டா' வாழையைப் பயிரிட முயற்சி செய்வதே சிறந்தது.




தங்களுக்குத் தேவையான பச்சை வாழைக் கன்றுகளையோ அல்லது 'ரொபஸ்டா' வாழைக் கன்றுகளையோ பெறுவதற்கு, வேலூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (வாழை) அவர்களை அணுகலாம். பச்சை வாழையின் வயது 11 முதல் 12 மாதங்கள். 'ரொபஸ்டா' வாழையின் வயது 12 முதல் 13 மாதங்கள்.

ஒரு ஏக்கரில் பச்சை வாழை பயிரிட. 1,440 வாழைக் கன்றுகள் தேவைப்படும். 'ரொபஸ்டா' வாழை பயிரிட ஏக்கருக்கு 1,210 கன்றுகளே போதுமானது. நிலத்தை நன்கு ஆழமாக உழுத பிறகு, பச்சை வாழைக்கு 1.7 மீட்டர் × 1.7 மீட்டர் (5.5 அடி × 5.5 அடி) இடைவெளியும், 'ரொபஸ்டா' வாழைக்கு 1.8 மீட்டர் × 1.8 மீட்டர் (6 அடி × 6 அடி) இடைவெளியும் விட்டு. குழிகள் தோண்ட வேண்டும். ஒவ்வொரு குழியும் 45 செண்டிமீட்டர் (1.5 அடி) கன அளவில் தோண்ட வேண்டும். குழிகளை ஏறத்தாழ 20 நாட்கள் ஆறப் போடுதல் சிறந்தது. பிறகு குழிகளில் இருந்து தோண்டிய மேல் மட்ட மண், மாட்டு எரு, செம்மண் ஆகியவைகளைக் கலந்து நிரப்பவேண்டும். வாழைக் கன்றுகளை மூக்கு வண்டு தாக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு குழியிலும் 50 கிராம் பி.எச். சி. சதத் தூளைப் போடவேண்டும்.

மூன்று அல்லது நான்கு மாத வயதுடைய கத்தி போன்ற குறுகலான இலையுடைய கன்றுகளைத் (Sword suckers) தேர்ந்தெடுத்து நடுவதே சிறந்தது. வாடல் நோய் தாக்காமல் இருப்பதற்காக வாழைக் கன்றுகளை 0.1 சத செரசான் கரைசலில் (ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் கரையும் செரசான் மருந்தைக் கலந்து) 5 நிமிட நேரம் அமிழ்த்தி வைத்திருந்து எடுக்கவேண்டும். பிறகு வாழைக் கன்றுகளை குழிகளின் நடுவில் வைத்து மண்ணை நன்ருக அழுத்தி அணைக்க வேண்டும். வாழைக் கன்றுகளை நட்ட பிறகு நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை வீதம் தண்ணீர் விடவேண்டும்.

இந்த ரகங்களை ஜனவரி முதல் மார்ச்சு வரையான பருவத்திலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையான பருவத்திலும் நடுவது சிறந்தது. வாழைக் கன்று நட்ட மூன்ருவது மாதத்தில் ஒவ்வொரு கன்றுக்கும் பின் கண்டவாறு உரமிட வேண்டும்.

தொழு எரு — 12 கிலோ;

அமோனியம் சல்பேட் — 300 கிராம்.

சூப்பர் பாஸ்பேட் — 250 கிராம்.

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் — 330 கிராம்.

கடலைப் பிண்ணுக்கு — 140 கிராம்.

மேற்கூறியவாறு தனி உரங்களை இட முடியவில்லை எனில், பச்சை வாழை ரகக் கன்று ஒவ்வொன்றுக்கும் 415 கிராம் 8-ஆம் எண் கலப்பு உரம் (6:6:18) இட வேண்டும். 'ரொபஸ்டா' வாழைக் கன்று ஒவ்வொன்றுக்கும் 495 கிராம் 8-ஆம் எண் கலப்பு உரத்தை இட வேண்டும்.

அடுத்து. வாழைக் கன்று நட்ட ஐந்தாவது மாதத்தில் ஒவ்வொரு கன்றுக்கும் இரண்டாவது முறையாகப் பின்கண்டவாறு உரமிட வேண்டும் :

தொழு எரு — 12 கிலோ.

அமோனியம் சல்பேட் — 150 கிராம்.

மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்—330 கிராம்.

கடலைப் பிண்ணுக்கு —410 கிராம்.

இந்த முறையில் உரம் இட தனி உரங்கள் கிடைக்கவில்லையெனில், 9-ஆம் எண் கலப்பு உரத்தில் (10:0:30) பச்சை வாழைக் கன்று ஒவ்வொன்றுக்கும் 520 கிராமும், 'ரொபஸ்டா' வாழைக்கன்றுஒவ்வொன்றுக்கும் 620 கிராம் இட வேண்டும். ஒவ்வொரு முறையும் உரமிட்டவுடன் தண்ணீர் விட வேண்டும்.

வாழைப் பழங்களை அரசாங்கம் வாங்கி விற்காது. 'வாழை ஏற்றுமதிக் கழகம்' தரமான பழங்களை வாங்க முயன்று வருகிறது.தனிப்பட்ட வியாபாரிகள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழைத் தார்களை வாங்கிக் கொள்கிருர்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், தீவிர வாழைசாகுபடி திட்டம் செயல்படுத்தப்படுவதால், இத் திட்டத்தின் கீழ் வாழை பயிரிடும் உழவர்களுக்கு தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன், பண்ணைத் திட்டம்



தயாரித்து, கூட்டுறவு சங்கங்கள், நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றின் மூலம் கடன் வசதியும் செய்யப்படுகிறது. இது பற்றி மேலும் விவரம் அறிய விரும்பின் உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடலாம்.

விஞ : 1-3-74 இதழில் என் கேள்விக்குப்பதில்அளித்ததற்கு மிகவும் நன்றி. இக் கேள்விக்கும் விளக்கமாக பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். யூரியா இல்லாமலேயே கரும்புக்கு கலப்பு உரம் மட்டும் வைக்கலாம் என்பது மிகவும் மகிழ்ச்சிகரமாக உள்ளது. ஆனல் இப் பகுதியில் இவ் வுரம் கிடைக்க வில்லை. என்ன செய்வது?

குதிரை மசால் (பசுந்தீவனம்) பயிரிட ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விதை தேவை? அது விதைப்பது, நீர், உரம் முதலியவைகள் பற்றியும், எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை அறுத்தல் பற்றியும், அது எவ்வளவு நாள் வரை இருக்கும் என்பது பற்றியும், எத்தனையாவது நாளிலிருந்து அறுத்தல், எத்தனை நாளுக்கு ஒரு முறை அறுத்தல் என்பன பற்றியும் விளக்கமாக பதில் அளிக்கவும்.

—இரா. குணசேகரன்,
மேலப்பாலையூர்,
சி. கீரனூர் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

விடை : கரும்புக்கு உரமிடுவதற்குத் தேவையான கலப்பு உரம் உங்கள் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்க உரக் கிடங்குகளில் அல்லது 'ஷாவாலஸ்', 'ராலி', 'பாரி' போன்ற தனியார் உரக் கடைகளில் கிடைக்கும். குறிப்பாகத் தனியார் உரக் கிடங்குகளில் கிடைக்குமாதலின், இராசயன உர ஆய்வாளராகவும் பணியாற்றும் உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் இக் கலப்பு உரம் கிடைக்குமிடம் பற்றி விசாரித்து அறியலாம். தாங்கள், தங்கள் பகுதியில் உள்ள 'அருணு' சர்க்கரை ஆலையில் பதிவு செய்து இருப்பின், உங்கள் பகுதி கரும்பு ஆய்வாளர் (Cane Inspector) மூலமாகவும் இவ் வுரம் கிடைக்குமிடத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

தண்ணீர் வசதி இருக்குமானல், அடை மழை மாதங்களான அக்டோபர், நவம்பர் மாதம் தவிர்த்த மற்ற எல்லா மாதங்களிலும் 'குதிரை மசால்' பயிரிடலாம். குதிரை மசால் பயிரிட நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கிக் கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். பிறகு நிலத்தை 20 அடி நீளமும், 8 அடி அகலமும் கொண்ட பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாத்திகளில் கூரிய குச்சியினல் 9 அங்குல இடைவெளிக்கு ஒரு கோடு வீதம் இழுத்து. அக் கோடுகளின்பள்ளத்தில்குதிரை மசால் விதைகளைக் கோலம் போடுவது போல் விதைத்து மண்ணல் மூட வேண்டும். ஒரு ஏக்கர் விதைக்க 4 கிலோ விதை தேவைப்படும். விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 4-வது நாள் உயிர் நீர் விடவேடுண்ம். பிறகு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். களைகளை அகற்றி, பாத்திகளைத்

துப்புறவாக வைத்திருக்க வேண்டும்.

விதைத்த 6 அல்லது 7-வது வாரத்தில் 'குதிரை மசால்' அறுப்பதற்கு ஏற்ற அளவில் வளர்ந்துவிடும். செடிகளை அறுத்த பிறகு வயலில் நிற்கும் அடித் தண்டுகளில், மீண்டும் துளிர் கிளைக்கும். இவ்வாறு வளர்ந்தச் செடிகளை 5 அல்லது 6 வாரத்தில் மீண்டும் அறுக்கலாம். ஒரு ஆண்டில் 8 அல்லது 10 முறை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் ஒரு ஆண்டில் 30,000 கிலோ பச்சைத் தீவனம் அல்லது 12,000 கிலோ காய்ந்த தீவனம் கிடைக்கக் கூடும்.

ஒரு தடவை விதைத்து முளைத்த குதிரை மசால் செடிகள், தொடர்ந்து 4 ஆண்டுகள் வரை பலன் தரும். பிறகு, இப் பயிரை அழித்து விட்டு வேறு பயிரிடலாம். இரண்டாவது ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் ஏக்கர் ஒன்றுக்கு 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிட வேண்டும். இப்பயிருக்குத் தழை உரம் போட தேவையில்லை.

குதிரை மசால் செடிகளை அறுத்துப் பச்சையாகவோ அல்லது உலர்த்திப் போராகப் போட்டு வைத்துக்கொண்டோ தேவையானபோது, மாடுகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து வரலாம். மாடுகளுக்கு நாளொன்றுக்கு 4 கிலோ பச்சை குதிரை மசால் அல்லது 2 கிலோ உலர்ந்த குதிரை மசால் வீதம் கொடுத்து வரலாம்.

குதிரை மசால் செடிகளில் 20 சதப் புரதச் சத்து இருப்பதால், மாடுகளுக்கு இது ஒரு சிறந்த தீவனமாக விளங்குகிறது. மாடுகள் இத் தீவனத்தை விரும்பித் தின்கின்றன. இதன் விதைகளை, கால் நடை மருத்துவ மனைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் உள்ள கடைகளில் இருந்தும் நேரடியாகக் குதிரை மசால் விதைகளை வாங்கிக் கொள்ளலாம்.

**வினா :** மலைப் பிரதேசத்தில் விளையக்கூடிய உயர் விளைச்சல் ரக நெல் எது? கார்த்திகைச் சம்பா, பேராவூரணி இவ்விரண்டில் எது சிறந்தது? தயவு செய்து கூறவும்.

—பி. சுப்பரமணியன்,
சேக்கல்முடி எஸ்டேட்,
முருகாளி பஜார் அஞ்சல்,
பொள்ளாச்சி வட்டம்,
கோவை மாவட்டம்.

**விடை :** நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மலைப் பிரதேசங்களில் ஐ. ஆர். 20 நெல் ரகத்தைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, தாங்களும் ஐ. ஆர். 20 நெல் ரகத்தை பயிரிடலாம்.

கார்த்திகைச் சம்பா (ஏ. எஸ். டி. 5) என்பது 'தாளடி' அல்லது 'பிசானம்' பருவத்தில் (அக்டோபர், நவம்பர் மாதங்கள்) விதைப்பதற்கு ஏற்ற நெல் ரகமாகும். இதன் வயது 135 நாட்களாகும். இது சன்ன அரிசி கொடுக்கவல்லது.

பேராவூருணி-1 என்ற ரகம் களர் நிலங்களில் ஜுலை — ஆகஸ்ட் மாதங்களில் விதைப்பதற்கு ஏற்றது. இதன் வயது 145 நாட்களாகும். இதன் அரிசி கார்த்திகைச் சம்பா அரிசியைவிட முரடானது.

கார்த்திகைச் சம்பா, பேராவூருணி-1 ஆகிய இரு ரகங்களில் கார்த்திகைச் சம்பாவே சிறந்தது. ஆனால் மலைப் பிரதேசத்திற்கு ஏற்றது அல்ல! தாங்கள் ஐ. ஆர். 20 நெல் ரகத்தை மலைப் பிரதேசத்தில் பயிரிடுவதே பயனுள்ளதாக இருக்க முடியும்.

**வினா:** மிளகாய்ச் செடி நிலத்திலிருந்து எவ்விதச் சத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறது? அதை எவ்வாறு ஈடு செய்யலாம்?

—பி. தங்கவேலு,
ஆசிரியர்,
சத்தியநாயக்கன் பாளையம்,
திருச்செங்கோடு வட்டம்,
சேலம் மாவட்டம்.

**விடை :** மிளகாய்ச் செடி நிலத்திலிருந்து தழைச்சத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறது. அதை ஈடு செய்யவே ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவை அடியுரமாக இடுமாறும், 9 கிலோ தழைச் சத்தை (45 கிலோ அமோனியம் சல்பேட்) நடவு செய்த 30-வது நாளிலும், 10 கிலோ தழைச்சத்தை (50 கிலோ அமோனியம் சல்பேட்) நடவு செய்த 60-வது நாளிலும், 9 கிலோ தழைச்சத்தை (45 கிலோ அமோனியம் சல்பேட்) நடவு செய்த 90-வது நாளிலும் ஆக 3 முறை மேலுரமாக இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**வினா :** எனக்கு 4 ஏக்கர் 'வானம் பார்த்த பூமி' உள்ளது. அதில் கிணறு வெட்ட அரசு உதவி தருமா? அல்லது வேறு இடங்களிலிருந்து உதவி கிடைக்குமா?

—பா. சு. மணியம்,
கண்ணிம்பாளையம்.

**விடை :** கிணறு வெட்டுவதற்குத் தங்கள் அருகாமையில் உள்ள நிலவள வங்கியில் கடன் பெற இயலும். தங்கள் பகுதியில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் இருந்தும் கிணறு வெட்டுவதற்குக் கடன் பெறலாம்.

**வினா :** எங்கள் வீட்டில் இருக்கும் கோழிப்பண்ணையில் உள்ள கோழிகள் ஒன்றையொன்று அடிக்கடி கொத்திக்கொண்டு செத்துவிடுகின்றன. இதனால் எங்களுக்குக் கோழி வளர்ப்பில் உள்ள ஆர்வம் குறைந்து போய் இருக்கின்றது. எந்த காரணத்தினால் கோழிகள் கொத்திக் கொள்கின்றன? வாலின் அடிப்பகுதியில்தான் கொத்திக் கொள்கின்றன. இவ்வாறு செய்வதை எப்படித் தடுக்கலாம்? மூக்கு வெட்டியும் பார்த்தாகி விட்டது. மாற்று வழி ஏதேனும் உண்டா? அப்படியானால் தயவுசெய்து தெரிவியுங்கள்.

—ப. சுலைமான்,
வாழைக்கொல்லை தெரு,
ஆவணியாபுரம் (அஞ்சல்),
ஆடுதுறை வழி,
தஞ்சை மாவட்டம்.

**விடை :** பொதுவாகக் கோழிகள் தங்களுக்குள் ஒன்றை ஒன்று கொத்திக் காயப்படுத்திக் கொள்ளும் ஒரு தீய பழக்கத்தைக் கொண்டுள்ளன. இப்படி ஒன்றை ஒன்று கொத்தும் பழக்கத்தினால் பல கோழிகளுக்குத் தலை, முதுகு, வயிற்றின் அடிப்புறம், வால் பின்பக்கம், கழிவு வழிகளின் ஓரம் ஆகிய இடங்களில் புண் ஏற்படும். அதனால் ஊறு விளையவும் நேரிடுகிறது. இந்தப் பழக்கம் கோழிகளின் தோற்றத்தை விகாரப்படுத்தி, இறைச்சியின் தரத்தினைக்



குறைத்து, அதன் விற்பனையையும் குறைத்து, முட்டை உற்பத்தித் திறனையும் குன்றிவிடச் செய்கின்றது. மேலும் கோழிகள் கணிசமான அளவில் இறந்து விடுவதும் உண்டு. இம் முறை கெட்ட பழக்கத்திற்கு பின்கண்டவைகளே காரணமாகும்:

1. மாறுபட்ட இனங்களும், வயதும் கொண்ட பெட்டையையும், சேவலையும் சேர்ந்திருக்கச் செய்தல்.

2. பண்ணை அமைப்பு முறைகளில் உள்ள சிறு தவறுகள்: இடநெருக்கடி, தீவன தட்டுகள், தண்ணீர் குவளைகள் பற்றாக்குறைகள், முட்டை வைக்கும் பெட்டி பற்றாக்குறைகள் முதலியன.

3. தட்ப-வெப்ப நிலையின் காரணமாக ஏற்படும் எதிர்பாராத மாறுதல்கள், காற்றோட்டமில்லாத - சுத்தமில்லாத கோழி வீடுகளின் சூழ்நிலை; வெய்யில் காலமும் இதை அதிகப்படுத்தும்.

4. அம்மை, ஒட்டுண்ணிகள் போன்றவைகளின் பின்விளைவு.

5. 'மாங்கனீஸ்', 'சோடியம் குளோரைடு', 'வைட்டமின் 'ஏ', 'டி', 'ஈ', 'ரைபோபிளோவின்' போன்றவை அனைத்தும் சரியானபடி தீனியில் இல்லாதிருப்பது.

6. நார்ச்சத்துப் புரதசத்து (அமினோ ஆசிட்) போன்றவை குறைவாகவே அல்லது அதிகமாகவோ இருத்தல்.

கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்வதைத் தவிர்க்கப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. வயது வித்தியாசமுள்ள கோழிகளை ஒரே வீட்டில் வைத்து வளர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

2. சேவலையும், பெட்டைக் கோழிகளையும் சேர்த்து வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3. குடிநீரில் அல்லது தீவனத்தில் 2.3 சத உப்பினைச் சுமார் 3 அல்லது 4 நாட்களுக்குச் சேர்க்கலாம்.

4. தீனியில் வைட்டமின் அளவு குறையுமானால் தேவையான அளவிற்கு 'ஏ', 'டி', 'ஈ' போன்ற வைட்டமின்களைச் சேர்க்கவும்.

5. இடநெருக்கடி, தீனி உட்கொள்வதற்குரிய அல்லது குடிநீர் பருகுவதற்குரிய இடமின்மை ஆகியவைகளைச் சரி செய்வதின் மூலம் இப்பழக்கத்தைத் தவிர்க்கலாம்.

6. நார்ச்சத்தைச் சரிசெய்வதுடன், புரதச்சத்துக் குறைந்திருக்குமானால், தீனியில் தேவையான அளவு சேர்க்கலாம். முக்கியமாக 'லூசர்ன்' 'பர்சீம்', போன்ற பசுங்கீரைகளை சேர்க்கலாம்.

7. புண்பட்ட கோழிகளை உடன் அப்புறப்படுத்திச் சிகிச்சை அளித்து சிறிது நாட்கள் தனியாக வைப்பது நலம்.



8. அதிக வெப்பத்தையும், வெளிச்சத்தையும் தவிர்க்க வேண்டும். வீட்டினுள் நேரிடையான சூரிய ஒளிபடுவதைத் தவிர்க்க வேண்டும். கடும் கோடையில் மிகுந்த வெப்பத்தைத் தடுக்க கூரையின் மீது தண்ணீர் தெளிக்கலாம்.

9. முட்டையிடுவதற்குரிய பெட்டியைத் தேவையான அளவில் அமைக்க வேண்டும்.

10. கோழியின் மேலுள்ள ஒட்டுண்ணி போன்றவைகளை முறையாகப் பரிசோதனை செய்து, அவற்றினை நீக்க மருந்து கலந்த நீரில் நனைத்து எடுக்கலாம்.

11. கோழிகளின் மேல் அல்லது கீழ் அலகு அல்லது இரண்டையும் சிறிதளவு வெட்டுதல் போன்றவற்றால் இப்படிப்பட்ட பழக்கத்தை தவிர்க்கலாம்.

**வினா :** வானொலியில் விவசாய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அதில் ஏற்படும் சந்தேகங்களை தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். அதுபற்றி யாருக்கு கடிதம் எழுத வேண்டும்?

—ஏ. பொன்வேல்மணி,
கரிசல்குளம் (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை :** உங்கள் ஊரில் கிராம வானொலி மன்றம் அல்லது உழவர் விவாதக் குழு இருக்கும் என்று நம்புகின்றோம். அப்படி இருந்தால், அக்குழுவின் அமைப்பாளரிடம் தங்கள் ஐயத்தைத் தெரிவித்தால், அவர் அதைக் கடிதமாக எழுதி திருநெல்வேலி வானொலி நிலைய 'பண்ணை வானொலி அலுவலர்'(Farm Radio Officer) அவர்களுக்கு அனுப்புவார். அவர், தொடர்புடைய அலுவலர்களுடன் தொடர்புகொண்டு விவரம் பெற்று, கேள்வி-பதில் நிகழ்ச்சியில் ஒலிபரப்பச் செய்வார். இவ்வாறே வானொலியில் வேளாண்மை சம்பந்தமான கேள்வி-பதில் நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகிறது. எனவே, தாங்கள், தங்கள் ஊரில் உள்ள கிராம வானொலி மன்ற அமைப்பாளர் அல்லது உழவர் விவாதக் குழு அமைப்பாளர் மூலமாக பின்கண்ட முகவரிக்கு தங்கள் ஐயங்களை எழுதி, விவரம் அறியலாம்.

''பண்ணை வானொலி அலுவலர்,
வானொலி நிலையம்,
திருநெல்வேலி.''

மேற்கூறிய அமைப்புகள் தங்கள் ஊரில் இல்லை எனில், தாங்களே நேரடியாக மேற்கூறிய அலுவலருக்கு மடல் எழுதி கேட்கலாம். அல்லது பின்கண்ட முகவரிக்கு எழுதியும் விவரம் தெரிந்து கொள்ளலாம்.

''மாவட்ட வேளாண்மை அலுவலர் (வானொலி),
வேளாண்மைத்துறை இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை-600005.''

**வினா:** நான் இந்து பிராமண வகுப்பைச் சேர்ந்தவன். இந்து அரிசனப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்ய உறுதி பூண்டுள்ளேன். அரசு அவர்கள் எனக்கு உடனே உத்திரவுக்குக் கட்டளையிடுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

—ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி,
தபால்காரர்,
கல்லாத்தூர் கிராமம்,
தண்டலை அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

**விடை:** தங்கள் ஆர்வத்தையும், உறுதியையும் பாராட்டுகின்றோம்; ஆனால் ஒருசில அறிவுரையையும் கூறிட கடமைப்பட்டுள்ளோம். தாங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் அரிசன பெண், தங்களை மணந்து கொள்ள விரும்புகின்றார்களா என்பது தெரியவில்லை. அப்பெண்ணின் விருப்பம் இல்லாமல் தாங்கள் திருமணம் செய்து கொள்ள அரசும் கட்டளை இடமுடியாது. அப்பெண் உண்மையிலேயே தங்களை மணந்து கொள்ள விரும்பினும், அப்பெண்ணிற்கு 18 வயதிற்கு மேல் ஆகியிருந்தால் மட்டுமே, பெற்றோர் விருப்பம் இன்றி தாங்கள் மணந்து கொள்ளமுடியும். அதுபோலவே தங்களுக்கும் 21 வயது முடிந்திருந்தால்தான் பெற்றோர் விருப்பம் இன்றி திருமணம் செய்து கொள்ளலாம். இவ்விதிகளை மீறி தாங்கள் திருமணம் செய்தால் காவல் நிலையத்திற்கும், வழக்கு மன்றத்திற்கும் செல்ல நேரிடலாம்!

முறைப்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே தமிழ்நாடு அரசு தங்கப்பதக்கம் பரிசு வழங்குவதுடன், சலுகைகளையும் வழங்கும்.

எனவே, தாங்கள் குறிப்பிடும் அரிசனப்பெண் உங்களை மணக்க சம்மதம் தெரிவித்தால், அப்பெண்ணின் பெற்றோர் உங்கள் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டால், உங்களுக்கு 21 வயது முடிந்திருந்தால், பதிவுத் திருமணம் செய்து கொள்வதே சட்டப்படி சிறந்த முறையாகும். அப்பெண்ணின் பெற்றோர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் 18 வயது முடிந்திருந்தால் (தகுந்த அத்தாட்சி இருக்க வேண்டும்) பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். தங்கள் முயற்சி வென்றிட வாழ்த்துகின்றோம்.

—ஆர். எம்.




இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதி விவசாயிகள் ஒரு நூதனமான முறையில் அடுப்புக் கரி உற்பத்தி செய்து வருகின்றனர். காட்டுக் கருவேல மரத்திலிருந்து இந்தக் கரி தயாரிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பிலுள்ள மரங்களிலிருந்து 180 மூட்டை கரியை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். மரங்களை வெட்டும் பணியில் 13 பேர் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் அந்த மரங்களை முப்பட்டையாகக் கூம்பு வடிவில் ஒழுங்காக அடுக்கிவிட்டு, அதற்குத் தீ வைத்து விடுகின்றனர், மூன்று நாட்கள் வரை அது எரியவிடப்படுகிறது. ஐந்தாவது நாள், அவர்கள் அதன்மீது தண்ணீர் ஊற்றி நெருப்பை அணைத்து, கரியைச் சேகரிக்கின்றனர். இந்தக்கரியை மூட்டை ஒன்றுக்கு எட்டு ரூபாய் வீதம் அவர்கள் விற்கிறார்கள். இதன் மூலம் அவர்களுக்கு மூட்டைக்கு ஒரு ரூபாய்க்கும் கொஞ்சம் கூடுதலாக நிகர இலாபம் கிடைக்கிறது.

## பிளவுக்கல் திட்டம்



இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், கோவிலாற்றுக்குக் குறுக்கே ஒன்றும், பெரியாற்றுக்குக் குறுக்கே மற்றொன்றுமாக முறையே 13·3 கோடி கன அடி, 19·2 கோடி கன அடி கொள்ளளவுள்ள இரண்டு நீர்த் தேக்கங்கள் அமைக்கும் பணியே பிளவுக்கல் திட்டமாகும்.

கோவிலாறும், பெரியாறும் பல ஏரிகளுக்கு நீர் வழங்கிய பிறகு வத்திராயிருப்புப் பெரிய ஏரியில் சேர்கின்றன. பிளவுக்கல் திட்டத்தால் 7,890 ஏக்கர் பரப்புள்ள தற்போதைய ஆயக்கட்டிற்கும், மேலும் 2,648 ஏக்கர் பரப்பளவிற்கும் பாசன வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆற்றுப் படுகையின் இடது கரையில் மண் அணைக் கட்டும் பணியும் சேண வடிவ அணை கட்டும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன. ஆற்றுப் படுகையில் உள்ள மற்றப் பணிகளும் வடிகட்டிகள் அமைதல் பணியும் நடந்தேறி வருகின்றன.

இந்தத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 186·22 லட்சமாகும். பிளவுக்கல் திட்டத்திற்குக் கடந்த ஆண்டுகளில் செலவு செய்தது போக, இந்த ஆண்டு மட்டும் 45·50 லட்சம் ரூபாய் செலவிட அரசு திட்டமிட்டுள்ளது.

## செய்தியே! சித்திரமே!!










கோவை மாவட்டத்தில்
ஒன்றும், தென்னார்க்காடு
மாவட்டத்தில் ஒன்றுமாக
இரண்டு சூரியகாந்தி
எண்ணெய் ஆலைகள்
அமைக்கப்படும்.
திருவண்ணாமலைக்கு
அருகே கவுதி மலை,
வேடியப்பன் மலைப்
பகுதிகளில் இரும்புக்
கனிகள் கண்டு
பிடிக்கப்பட்டுள்ளன.
தமிழ்நாட்டில் ஐந்தாவது
திட்டகாலத்தில் 500 ஹெக்டேரில்
சந்தன மரம் வளர்க்கப்படும்.
தமிழ்நாடு
வளர்ப்புத்
திட்டம்
500 ஹெக்டேர்
பரப்பு
சாமி...
திருநெல்வேலி
அருள்மிகு நெல்லையப்பர்
திருக்கோவில் ஆயிரங்
கால் மண்டபத்தில்
கலைக்கூடம்
அமைக்கப்படும்.


குடிசைமாற்று வாரியம்
சென்னையில் 12¾ கோடி
ரூபாய் செலவில் 75 குடிசைப்
பகுதிகளை மாற்றி 15400
குடியிருப்புக்களைக் கட்டியுள்ளது.
மின்விசை தயாரிக்கப் பயன்
படுத்திய நீரை மீண்டும்
மேலேற்றி மின்விசை
உற்பத்தி செய்யும் திட்டம்
இந்தியாவிலேயே முதலில்
காடம்பாறை மின் திட்டத்
தில்தான் செயல்படுத்தப்
படுகிறது.
காடம்பாறை
தமிழ்நாடு முழுவதும்
இளைஞர் அணியில்
4,014 ஆண் தொண்
டர்களும் 517 பெண்
தொண்டர்களும்
பணியாற்றுகின்றனர்.
அ ஆ
தமிழ்நாட்டில் ஊராட்சி
வளர்ச்சிப் பணிகளுக்காக
1966-67-ல் செலவிட்ட
தொகை 47 கோடியே
47 லட்சம் ரூபாய் 1974-
75-ல் செலவிடப்படும் தொகை
104 கோடி 22 லட்சம் ரூபாய்.
மருத்துவமனை
சாமி...

# அரசு அச்சகம் பெற்ற பரிசுகள்

"காணார் கேளார்
கால் முடம் பட்டோர்
பேணுநர் இல்லோர்
பிணி நடுக் குற்றோர்
யாவரும் வருக"

—தான் பிச்சை எடுத்துச் சேகரித்த உணவை உடல் ஊனமுற்ற ஏனையோருக்கும் கொடுப்பதற்காக ஆபுத்திரன் என்பான் இவ்வாறு அழைத்தான் என்று 'மணிமேகலை' கூறுகிறது. அவன் எடுப்பதே பிச்சை! அதைக் கொண்டே அடுத்தவர்களுக்கு - குறிப்பாக உடல் ஊனமுற்றவர்களுக்கு அவன் அன்போடு 'அன்ன தானம்' வழங்கினுன் என்ருல்-சமூகத்தில் உடல் ஊனமுற்றவர்கள் மிகமிகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பதைத் தமிழ்ச் சமுதாயம் நன்கு உணர்ந்திருந்தது என்பது தெளிவாகிறது.

ஏழைகளின் துன்பத்தைப் போக்குவதற்குத் தொண்டாற்றி வரும் தமிழ்நாடு அரசு -உடல் ஊனமுற்றவர்களுக்கு அலுவல் தருவதிலும் சாதனை புரிந்து வருகிறது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம் இதுவரை உடல் ஊனமுற்றவர்கள் 1606 பேருக்கு அரசுத்துறையிலும் தனியார் துறைகளிலுமாக அலுவலல் தேடித் தந்திருக்கிறது.

அரசுத் துறையில் பல அலுவலகங்களில் உடல் ஊனமுற்ருேருக்கு அலுவல் கொடுத்திருக்கிறது. குறிப்பாக, அச்சக எழுதுபொருள் துறையில் உடல் ஊனமுற்ருேர்க்கு அதிக அளவிலே வேலை வாய்ப்பைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. தங்கச்சாலை அரசு அச்சகம், அண்ணுசாலைக் கிளை அச்சகம், திருச்சி, சேலம், விருத்தாசலம் ஆகிய ஊர்களிலுள்ள பிராந்திய அச்சகங்கள் எல்லாம் சேர்த்து உடல் ஊனமுற்ருேர் 57 பேருக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. அச்சக எழுதுபொருள் துறையில் அலுவல் செய்யும் மொத்த ஊழியர்கள் 5,000 பேர். அதிலே 57 பேர் உடல் ஊனமுற்றவர்கள் என்ருல், 1 சதவீதத்திற்கு மேல் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது என்று பொருள். ஒரு துறையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு 1 சதவீதம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவது என்பது சாதாரண நிகழ்ச்சியல்ல-சாதனைக்குரிய நிகழ்ச்சி. அதனுல்தான், மாநில அளவில் உடல் ஊனமுற்றவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புத் தந்ததற்காக இந்திய அரசின் சமூக நலத்துறை, தமிழ்நாடு அச்சக எழுது பொருள் துறைக்குத் "தேசியப் பரிசு" (National Award) கொடுத்திருக்கிறது.

மார்ச் 17 ஆம் நாளன்று இந்தியத் தலைநகர் டெல்லியில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு விழாவில் அச்சக எழுது பொருள் துறையின். சார்பில் கலந்து கொண்டு பரிசைப் பெற்றவர் அரசினர் அச்சகத்தின் துணைப் பணி மேலாளர் திரு. பாலகிருஷ்ணன் ஆவார்கள்.



மைய அரசின் பரிசைக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களிடமிருந்து திரு. பாலகிருஷ்ணன் (துணைப் பணி மேலாளர்-III) பெறுகிருர்.



தமிழ்நாடு அரசின் பரிசைத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களிடமிருந்து திரு. கிருஷ்ணசாமி (துணைப் பணி மேலாளர்-I) பெறுகிருர்.

பரிசு வழங்கிய குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், "தமிழ்நாடு இந்தத் தேசியப் பரிசைப் பெறுவதைக் கண்டு நான் மிகமிக மகிழ்வு கொள்ளுகிறேன்" என்று சொல்லிப் பாராட்டியுள்ளார்கள்.

பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட துணைப்பணி மேலாளர் தில்லி சென்று திரும்பிட, போக்குவரத்துச் செலவுக்கும், அங்குத் தங்கியிருந்த நாட்களில் உணவு, உறையுள் ஆகியவற்றிற்கும் இந்திய அரசே செலவு செய்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் ஊனமுற்றவர்களை அதிக அளவில் பணியில் அமர்த்திக் கொண்டதற்காக, அச்சக எழுதுபொருள் துறைக்குத் தமிழ்நாட்டு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம் ஒரு பரிசு வழங்கியுள்ளது. டில்லியில் பரிசளிப்பு விழா நடைபெற்ற அதே மார்ச் 17-ஆம் நாளில்சென்னையில், மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களால் பரிசு வழங்கப்பட்டது. அச்சக எழுதுபொருள் துறையின் சார்பில் துணைப் பணி மேலாளர் திரு. கிருஷ்ணசாமி இந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

தேசியப் பரிசு பெற்ற அச்சக எழுதுபொருள் துறையின் அச்சகத்தில், புத்தகம் கட்டும் பிரிவில், பார்வையிழந்தோர் 7 பேரும், ஊமை ஒருவரும், கரம் குறைபாடுள்ளோர் 10 பேரும் ஆக மொத்தம் 18 பேர் பணி புரிகின்றனர். பிழை திருத்தும் பிரிவில், கரம் குறைபாடுள்ளோர் 15 பேர் பணிபுரிகின்றனர். அச்சுக் கோக்கும் பிரிவில் காது கேளாதோர் 3 பேரும் ஊமைகள் 4 பேரும், கரம் குறைபாடுள்ளோர் 2 பேரும் ஆக மொத்தம் 9 பேர் பணிபுரிகின்றனர். அமைச்சகப் பிரிவில் கரம் குறைபாடுள்ளவர்கள் 12 பேரும், அனுப்புகைப் பிரிவில் ஊமை ஒருவரும் கரம் குறைபாடுள்ளோர் 2 பேரும் மொத்தம் 3 பேரும் ஆக மொத்தம் 57 பேர் பணி புரிகின்றனர்.

உடல் ஊனமுற்றவர்கள் செய்யும் வேலையில் 50 சதவிகிதம் செய்தால் போதும் என்ற சலுகை பார்வையிழந்தோருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ருலும், அவர்கள் பார்வை தெரிந்தவர்களைவிட அதிக அளவிலே வேலைசெய்யும் திறமை பெற்றிருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலை வாய்ப்புப் பெறுகின்ற உடல் ஊனமுற்ருேர் விஷயத்தில் அரசு வயது வரம்புகளைத் தளர்த்தித் தருகிறது.

உடலால் நலிவுற்ருலும் உள்ளத்தால் அவர்கள் நலிவுருமலிருக்க வேண்டும்—வலிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த கருத்திலே தான் அரசு அவர்களுக்கு இத்

தச் சலுகையைச் செய்து தருகிறது. தமிழக அரசின் இந்த உயர் நோக்கத்திற்குப் பாராட்டுத்தரும் வகையிலேதான் மத்திய அரசின் சமூக நலத்துறை அளித்துள்ள தேசிய விருதும் தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம் வழங்கியுள்ள பரிசும் அமைந்திருக்கின்றன.

பரிசு பெற்ற அரசினர் அச்சகம் சென்ற ஆண்டு 1973 நவம்பர் மாதத்தில் தேசியப் பாதுகாப்புப் பரிசையும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

1971-ஆம் ஆண்டில் மிகவும் குறைந்த விபத்து நிகழ்வினைத்திற்காக எடுத்துக் கொண்ட சீரிய பணியைப் பாராட்டியும், விபத்தில்லா நீண்டகாலப் பகுதிக்காக எடுத்துக்கொண்ட சீரிய பணியைப் பாராட்டியும் மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை, அரசினர் அச்சகத்துக்குப் பரிசுகள் வழங்கியுள்ளது. சான்றிதழும் ரொக்கப் பரிசு 2,500 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

மாநில அரசின் தொழிலாளர் நலத்துறையின் மாநிலப் பாதுகாப்புப் பரிசுத் திட்டத்தின் கீழும், 1971-ஆம் ஆண்டுக்கு முதல் பரிசும், இரண்டாம் பரிசும் இந்த அச்சகத்திற்குக் கிடைத்துள்ளன. சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசைப் போலவே மாநில அரசும் ரொக்கப் பரிசு ரூ. 2,500 வழங்கியுள்ளது.

விபத்தில்லா நீண்டகாலப் பகுதிக்காக எடுத்துக் கொண்ட சீரிய பணிக்குரிய சுழற்கேடயத்தை அரசினர் அச்சகம் 1970, 1971 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் பெற்றுவிட்டது. 1972-ஆம் ஆண்டுக்கும் அரசு அச்சகமே அந்த வாய்ப்பைப் பெற்றுக் கேடயத்தைத் தன்னிடம் தக்க வைத்துக் கொண்டால் அது வியப்புக்குரிய சேதி அல்ல!

— த.பி.



அடுத்த ஐந்தாவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் ''குழந்தைகள் காப்பகம்'' எண்ணிக்கையை 'கேர்' நிறுவனம் 9000 ஆக அதிகரிக்கத் தீர்மானித்திருக்கிறது.

செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் 97 சமையல் கூடங்களை அமைக்கும் பணி முடிந்துவிட்டது. இதற்கு ரூ. 1·88 கோடி செலவாகியுள்ளது. மதிய உணவுத் திட்டத்துக்காகக் கேர் நிறுவனம் ரூ. 6 கோடி பெறுமான பண்டங்களை வழங்கி வருகிறது. 17 இலட்சம் துவக்கப் பள்ளிக் குழந்தைகள் இந்தத் திட்டத்தினால் பயனடைகின்றனர்.



## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், பெ. ஜி-1628.

### படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!

## பொன்னணியாறு திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், முகவனூர் கிராமத்திற்கருகில் பொன்னணியாற்றுக்குக் குறுக்கே சிறுமலை, பெருமான் மலை ஆகிய இரண்டு குன்றுகளுக்கும் இடையில் 175 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைப்பது பொன்னணியாறு திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதின் மூலம் 1,830 ஏக்கர் புதிய ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசனம் அளிக்கவும், 271 ஏக்கர்களுக்கு இடையறாத பாசனம் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொன்னணியாறு திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ. 100 லட்சம் ஆகும். பணிகள் அனைத்தும் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 4·93 லட்ச ரூபாய் செலவிடப்படும்.

## தண்டரை அணைக்கட்டுத் திட்டம்

வடஆர்க்காடு மாவட்டம் தண்டரை கிராமத்திற்கருகில் செய்யாற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுவதும், 21 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால் ஒன்று வெட்டுவதும் தண்டரை அணைக்கட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் தூசி-மாமண்டூர் ஏரிகளிலிருந்து நீர் பெறும் தற்போதுள்ள ஆயக்கட்டு நிலங்களில் 6,135 ஏக்கருக்கு இடையறாத பாசன வசதி கிடைக்கும். மேலும் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், பாசனம் பெறாத 1,400 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைப்பதுடன், மேலும் 15 ஏரிகள் இடையறா நீர் வசதி பெறும். இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 87·86 லட்சமாகும். அணைக்கட்டும், மதகுப் பணிகளும் நடந்தேறி வருகின்றன. வாய்க்கால் வெட்டும் பணியும் நடந்தேறி வருகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்காக நமது அரசு 15 லட்சம் ரூபாய் செலவிடும்.

## பாலாறு-பொரந்தலாறு திட்டம்

மதுரை மாவட்டம், சண்முக நதியின் துணைக் கிளை நதிகளாகிய பாலாறு—பொரந்தலாறு ஆகியவற்றின் குறுக்கே 7,910 அடி நீளமுள்ள இணைப்பு அணை ஒன்றைக் கட்டும் திட்டமே பாலாறு—பொரந்தலாறு திட்டம். பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக அணையின் இடது பக்கத்தில் 15 மைல் நீளமுள்ள தலைக் கால்வாய் ஒன்று வெட்டப்படும். 4,500 ஏக்கர் கொண்ட புதிய பகுதியைப் பாசனத்தின்கீழ்க் கொண்டு வருவதற்குத் தக்கபடி இந்த நீர்த்தேக்கம் 125·4 கோடி கன அடி நீர் கொள்அளவு உடையதாக இருக்கும். மேலும், தற்போது ஆயக்கட்டிலிருக்கும் பாசனம் பெறாத 481 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கவும் இத்திட்டம் பயன்படும். தவிர, தற்போதுள்ள 10,000 ஏக்கர் நிலத்திற்கு இடையறாத பாசன வசதியை அளிக்கும் ரூபாய் 500 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வரும் பாலாறு—பொரந்தலாறுத் திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு இத்திட்டத்திற்காக 85·79 லட்ச ரூபாய் செலவிடப்படும்.

## சின்னாறு திட்டம்

தருமபுரி மாவட்டம், சின்னாற்றுக்குக் குறுக்கே பஞ்சப்பள்ளிக் கிராமத்திற்கருகில் 50 கோடி கன அளவு கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதும், 11·2 கிலோமீட்டர் நீளத்திற்கு வலது பக்கத்தில் வாய்க்கால் ஒன்று வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத் திட்டத்திற்கான செலவு 147·13 லட்சமாகும். புதிதாக 1,874 ஏக்கர், 2626 ஏக்கர் பரப்பளவுள்ள பழைய ஆயக்கட்டுப் பகுதி ஆகியவை இத்திட்டத்தால் பாசன வசதி அடையும். மண் அணைக்கட்டும் பணியும், உச்சித் தலை மதகு கட்டும் பணியும் நடந்தேறி வருகின்றன. ரூபாய் 147 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வரும் இத்திட்டத்தின் இவ்வாண்டுப் பணிகளுக்காக ரூபாய் 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# முதன் முதலில்....

அரசு அலுவலகங்களில் பணி புரியும் பணியாளர்கள் தங்களின் பணிக்காலத்திற்குப் பின்னர் வாழ்வில் ஒரு பாதுகாப்பைப் பெற்றிடவும், நிரந்தரமான - நிம்மதியான - ஏற்றமுள்ள வாழ்வினை அமைத்திடவும் தமிழ்நாடு அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செம்மையான முறையில் செயலாற்றி வருகிறது. இவ்வகையில் தமிழக அரசு, அரசுப் பணியாளர்க்கென 'குடும்ப நல நிதித் திட்டம்' என்னும் சீரிய திட்டத்தினை இந்தியாவிலேயே முதன் முதலில்—1974 சனவரித் திங்கள் முதல்நாளில் கொண்டு வந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது யாவரும் அறிந்ததே!

குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப் பணியாளர்களும் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 10 செலுத்த வேண்டும். ஒவ்வொருவரும் ஓய்வு பெறுகின்றபொழுது, தமக்குச் சேர வேண்டிய தொகையை வட்டியுடன் சேர்த்து இத் திட்டத்தின்கீழ் பெறுவர். பணியாளர் தமது பணிக்காலத்திலேயே மரணம் அடைந்தால் அவரது குடும்பத்தின் எதிர்காலச் செலவுக்கென -அவருக்கு உரிய வாரிசுதாரிடம் ரூபாய் 10,000 அரசு



தலைமைச செயலகததைச் சார்ந்த பதிவு ஏட்டு எழுத்தர் திரு. மாணிக்கத்தின் துணைவிக்கு 10,000 ரூபாய்க்கான காசோலையை முதல்வர் கலைஞர் வழங்குகிறார்

வழங்குவது குறிப்பிடத் தகுந்த ஒரு நிகழ்ச்சியாகும். இத்தகைய திட்டத்தின் கீழ் இவ்வளவு பெருந்தொகையினை வேறு எந்த அரசும் இதுகாறும் வழங்கியது கிடையாது.



தலைமைக் காவலர் திரு. முனுசாமியின் துணைவி



காவலர் திரு. கேசவலுவின் துணைவி

இத்திட்டம் அமலுக்கு வந்ததும் (7-1-74) முதன் முதலாக மரணமடைந்தவர் தலைமைச் செயலகத்தில் வருவாய்த் துறையில் பதிவு ஏட்டு எழுத்தராகப் பணியாற்றி வந்த திரு. மு. மாணிக்கம் என்பவர். இவர் துணைவியார் உள்பட 8 பேர்கள் கொண்ட குடும்பத்தைக் காக்கும் வகையில் இத் திட்டத்தின்கீழ் 10,000 ரூபாய்க்கான காசோலையைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பணியாளரின் துணைவியார் மா. வேம்புலி அம்மாளிடம் வழங்கினார்கள்.

இத்திட்டம் அமலுக்கு வந்த பின்னர், தமிழகக் காவல் துறையினைச் சார்ந்த மூன்று பேர்கள் தங்களது பணிக் காலத்திலேயே மரணம் அடைந்தனர். அந்த மூவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் - தங்களின் எதிர்கால வாழ்வினை நல்ல முறையில் நடத்திட - தங்கள் குழந்தைச் செல்வங்களை வளர்த்து ஆளாக்கிட இத்திட்டத்தின்கீழ் அவர்களுக்கு ரூ. 10,000ஐ தமிழகக் காவல்துறைத் தலைமை அலுவலர் (I. G. of Police) 6-4-74-ஆம் நாள் சென்னை நகரக் காவல்துறை அலுவலகத்தில் வழங்கினார்.

மரணம் அடைந்த மூவரில் ஒருவர் தலைமைக் காவலர்; இருவர் காவலர்கள். மேலும் சென்னை நகரக் காவல்துறை அலுவலகத்தில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய ஒருவரும் மரணம் அடைந்தார். அவரது குடும்பத்திற்கும் ரூபாய் 10,000 வழங்கப்பட்டது.

சென்னை நகரக் காவல்படையில், கண்ட்ரோல் அறையில் தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்தவர் திரு. எ. முனுசாமி. இவர் 18-2-1974 -ல் மரணம் அடைந்தார். 21-3-1949-ல் பணிக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட இவர் பணிக்காலத்தில் 16 விருதுகளைப் பெற்றுள்ளார். இவருக்குக் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் ரூ. 10,000-க்கான காசோலையை இவரின் உரிய வாரிசான-அவரது மனைவி திருமதி. சரோஜினியினிடம் காவல்துறைத் தலைமை அலுவலர் வழங்கினார்.

வண்ணாரப்பேட்டைக்காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வந்த திரு. இராமலிங்கம் காவல்படைப் பிரிவில் தம்முடைய பணிக்காலத்தில் 10 விருதுகள் பெற்றுள்ளார். இவரும் தன்னுடைய பணிக்காலத்தில்-21-1-1974-ல் உயிர் நீத்தார். தமிழக அரசின் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் இவரின் மனைவி திருமதி. சாமளா, ரூபாய் 10,000-க்கான காசோலையைக் காவல் துறைத் தலைமை அலுவலரிடமிருந்து பெற்றார்.

பணிக்காலத்தில் மரணமடைந்த மற்றொரு காவலர் திரு. கேசவலு. சென்னை எழும்பூர் காவல் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றியவர். 1951-ல் காவல்துறையில் பணிக்கு அமர்ந்த இவரும் தம்முடைய பணிக்காலத்தில் 10 விருதுகளைப் பெற்றவராவர். எதிர்பாராத வகையில் இவர் 23-2-74-ல் இறந்தார். குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் இவர் மனைவி திருமதி ஜெயலட்சுமிக்கு ரூபாய்10,000 வழங்கப்பட்டது.

சென்னை நகர்க்காவல்துறை அலுவலகத்தில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய திரு. குருவையாவும் தம்முடைய பணிக்காலத்தில் இவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் ஏழாம் நாள் உயிர் துறந்தார். 1948-ல் சென்னை நகரக் காவல் துறை அலுவலகத்தில் பணிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட இவருக்கு மனைவியோ புதல்வர்களோ இல்லாததால் இவரின் மணமான இரு புதல்விகள் ஒவ்வொருவரும் ரூ. 5,000 பெற்றார்கள்.

குடும்பநலத் நிதித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வழங்கப்பட்ட பணம் பாதுகாப்பாக இருக்கவும்-பிறரால் ஏமாற்றப் படாமல் இருக்கவும்-அதே நேரத்தில் திட்டமில்லாமல் செலவழித்து விடாமல் இருக்கும் வகையிலும்-அவர்களது நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு, சேமிப்புத் திட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு, பணத்தை வழங்கும்போது காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. எ.ப்.வி. அருள், சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. கே. ஆர். செனாய் ஆகியோர் எடுத்துரைத்தனர். இவர்களின் வேண்டுகோளை முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டு சேமிப்புத் திட்டத்தில் சேரப் பணத்தைப் பெற்றவர்கள் சம்மதித்தனர்.

வெற்றிலையில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி, புரோட்டின், இரும்பு-தாதுப்பொருள், கொழுப்பு, கால்சியம், எரிபொருள் ஆகிய பல சத்துக்கள் உள்ளன.

வயிற்று நோய், சீதக்கடுப்பு, அஜீரணம், ஜன்னி ஆகியவற்றை நீக்க வெற்றிலைச் சாறு மருந்தாகப் பயன்படும்.

காசம், இருமல், சளி ஆகியவற்றிற்கும், நுரையீரல் சம்பந்தமான நோய்களுக்கும் வெற்றிலை நல்ல மருந்து. இதனாலேயே பிரசவித்த பெண்கள் வெற்றிலையை அதிகம் போடவேண்டும் என்னும் பழக்கம் நம்நாட்டில் இருந்து வருகிறது. தாய்ப் பால் சுரக்கவும் வெற்றிலை உதவும்.

காவலர் திரு. இராமலிங்கத்தின் துணைவி திருமதி. சாமளாவுக்குக் குடும்ப நல நிதியைக் காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. எஃப். வி. அருள் வழங்குகிறார்



# காணி நிலம் வேண்டும்

— பூவை எஸ். ஆறுமுகம் —

எதிர் பார்ப்பவை, எதிர் பார்க்கின்ற மாதிரியே, எதிர் பார்க்கும் நேரங்களிலே நிகழ்ந்தால், கதை இலக்கியம் உப்புச் சப்பில்லாமல் போய்விடுவது இயல்பு. இந்த நிலையில், வாழ்க்கை இலக்கியம் மாத்திரம் சுவை கொண்டு சுவையளிக்க முடியுமா, என்ன? ஒருக்காலும் இல்லை. ஆகவே தான், வாழ்க்கையில் எதிர் பாராதவை, எதிர் பாராத வகையில், எதிர் பாராத வேளைகளில் விளையாடுகின்றன போலும்!

வீரமணியின் தனித்த பார்வைக்கு மட்டுமே உரிமை உடையதான அந்த ஊதாநிற நாட்குறிப்பு, இப்போது அவனது தந்தை ஆதிமூலத் தேவரின் புதிய பார்வைக்கும் உடந்தையாகக் காத்திருக்கிறது.

ஊதா என்றால், அதற்கொரு மாயக் கவர்ச்சிதான்!

கையிலிருந்த நாட்குறிப்பை முன்னும் பின்னுமாகத் திருப்பினார் தேவர். என்னவோ தைத்த மாதிரி இருந்தது. நெஞ்சைத் தடவி விட்டார். நெஞ்சில் தான் நெருஞ்சி முள் வைத்து இருக்க வேண்டும். டைரி முன்னைக் காட்டிலும் கூடுதலாகக் கனப்பதை உணர்ந்தார்; கைச் சுமையை மனம் தாங்காது என்ற ரகசியம் அவருக்குப் புரிந்திருக்கும். சலனமற்றுக் கிடந்த நாட்குறிப்பையும் சலனமின்றிக் காணப்பட்ட புதல்வனையும் மாறி மாறி— மாற்றி மாற்றிப் பார்வையிட்டார்; பிறகு, மென்மையாக நகைக் கிறுக்கலோடு ஏறிட்டார். ''தம்பி வீரமணி, உன்னோட சொந்த அந்தரங்கத்துக்குக் காணியாட்சிப் பாத்தியம் கொண்டது இந்த டைரி. ஆகச்சே, நான் அந்நியத் தன்மையோட இதைப்பார்க்கிறது விவேகமாகாது; நாகரிகமாகாது. அப்படிப் பார்த்தால், அது அசிங்கம். இந்தா, வாங்கிக்க,'' என்று தன்மையாகக் குறிப்பிட்டு, நாட்குறிப்பைச் சேர வேண்டிய இடத்தில் ஒப்படைத்தார் பெரியவர். இப்பொழுது கைச் சுமையும் மனச் சுமையும் எங்கே போய்விட்டதாம்?




சோதனையாளரே சோதனைக்கு ஆளாக நேர்ந்தது. வாழ்க்கைக் கதைக்கு 'மறைவுக் கவர்ச்சி' வேண்டுமே!

வீரமணி நிதானமாகப் புன்னகை கூட்டினன். முகவிலாசம் துப்புரவாகவே இருந்தது. ஆரோக்கியமான மாறுதலை உத்தேசித்து, வானொலியை நாடினன். இசைக் கருவிகளின் தொடக்கமே அவனுக்கு இதமாக இருந்தது.

பாடல் ஒலித்தது.

அப்பா எங்கே கிளம்புகிறார்?

எட்டிப் பார்த்தான் அவன்.

போன மச்சான் திரும்பி வந்தானும் பூமணத்தோடே!— அது மாதிரியாக, தேவர் மீண்டார். 'ஆகாயப் பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுதின்னு' ரேடியோப் பொட்டி பாடிச்சுது. அதான் லபக்கின்னு ஓடிப் போய் ஆகாசத்தைப் பார்த்தேன். நாம இப்போ இருக்கிற சோதனைக் கட்டத்துக்கு அந்தப் பொன்னூஞ்சல் கிடைச்சா, எம்புட்டோ செளகரியப்படுமேன்னு ஒரு நப்பாசை. மேலேமானத்திலே முழுசான 'லாவு' தான் சிரிக்குது!' என்று வாய் திறந்துநகைத்தார்; என்னவோ ஒரு போலித்தனமும் ஊடாடாமல் இல்லை.

இடம், பொருள், ஏவல் எல்லாம் விளங்கும்; எனவே, வீரமணிக்குச் சிரிக்கவும் தெரியும்!

இராச் சாப்பாடு முடித்தானதும், யாடு தீர நிலா முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கலாமென்று குறிப்புணர்த்திய பிற்பாடு, நடையைக் கடந்து நடை தொடர்ந்தார் மூத்தவர்.

'ஒட்டுவாரொட்டி'த் தன்மை கொண்ட சிக்குகள் சிலவற்றை நிர்ணயப்படுத்தி ஒதுக்கி வைக்கிறது உடற்கூறு.

இவ் விதிக்கு உள்ளக் கூறும் விலக்கல்ல.

வீரமணி தனியாய்த்தவித்து, தண்ணீராய் உருகிக் கொண்டிருந்தான். 'நெஞ்சு களம் கண்ட நோய்' வாட்டியது ; வதக்கியது. மாலையில் மட்டுமே மலரும் இந் நோய் என்பதன்று. தாபமும் தாகமும் சுழியாகச் சுழித்தன. 'அம்மான் மகளே அன்னம்!' — உதடுகள் துடித்தன. வாடிக்கை மாருமல், வாடிக்கையை மாற்றுமல் புன்சிரிப்பும் பெருமூச்சும் விளைபலன் காட்டின. அன்னக்கொடியும் சாதி மல்லிகைப் பூவாக மலர்ந்து, தழலாக நெடுமூச்செறிகின்றாளோ? முறைமைப் பெண் அன்னத்தின் நினைவே அவனுக்கு உரமாகவும், அவளது கன்னி மனமே அவனுக்கு உயிராகவும் அவள் உயிரே அவனுக்கு மனச் சான்றாகவும், அவள் இயங்கியும் இயக்கியும் விளங்குகின்ற அதிசயத்துக்கு ஆதார சுருதி யார்? அவனா? அவளா? இல்லை அவனும் அவளுமா?—ரோமப் புல்லரிப்போடு அவன் தலையை நிமிர்த்தினான். புதிதாய்ப் பிறந்த பக்குவம் கிளர்ந்தெழுந்தது. இரவு, அப்பா விடுகதை போடப் போகிறாரா? இல்லை, எதிர்பார்ப்பது போலவே நல்ல தீர்ப்பு வழங்கப் போகிறாரா? அன்னம் கால் பாவினால் தான்—வலது காலை எடுத்து வைத்து இந்த வீட்டின் திட்டி வாசலை அம்மான் மகள் அன்னம் மிதித்தால்தான், இந்த மச்சு வீட்டின் தாய் வீட்டிலே நல்ல விளக்கு எரிய முடியும்! அப்பாவுக்கு இந்த உண்மை — யதார்த்தமான உண்மை பிடிபடாமலா இருந்து விடப் போகிறது? ஒரு வேளை, அப்பா புதிர் போட்டுப் புதிராகி விட்டால். . .?' அட்டகாசமாகவும் நிர்த்தாட்சண்யமாகவும் ஆவேசமாகவும் சிரிப்பு வெடிக்கத் தலைப்பட்டது— உள்ளத்தின் உள்ளத்திலே!

'சொக்க வெள்ளிப் பாற்குடம்' ஆகாயக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது.

அன்னத்தின் முக தரிசனமும் கிடைத்திருக்கும்!

மகமாயி கோயில் மணியோசையை மண்டையில் அடித்து விட்டு, கொஞ்சும் சலங்கைகள் கொஞ்சின — திட்டி வாசலிலே.

வீரமணி வெளி வாசலுக்கு விரைந்தான்.

தேவரும் வந்து நின்றார்.

பூவரசுத் தூரடியில் மொட்டை வண்டியை நிறுத்தி விட்டுக் குதித்தான் நாச்சி. அவன் தலைமையின் கீழ் ஏழு எட்டு பேர் குப்பைப் புழுதியும் வேர்வைப் பிசிறும் தேங்க நின்றார்கள்.

'அல்லாமகச்சிதமாய் முடிச்சாச்சுதா, நாச்சி?''

## 8. வீரமணிக்கு வெட்கம் வந்து விட்டது!

சுருள் முடிகளை ஒரு தட்டுத் தட்டிக் கோதிவிட்டான் வீரமணி. இனிமேல் ஈரம் உலர்ந்து விடும். அணி சேர்ந்த தீவட்டிகளென நிலவில் ஒளிர்ந்த தீப்பூக்களை அலாதியான திடத்தோடு அனுபவித்த வாக்கில் உள்ளே வந்தான். ஆடியில் அவன் முகம் ஆடியது. அவன் முகம் மட்டிலுந்தான் ஆடியதா?

கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, தோழர்கள் வந்து சேரக் காணோம். மாணிக்கம் கூட முகம் காட்டவில்லை. வந்திருந்தால், ஊர்த் தாக்கல் தெரியும், அந்திக் கட்டிலேயே மேலைக் கோடிக் கம்மாயில் விழுந்து குளித்திருக்கலாம்.

''ஆமாமுங்க, பெரியவுகளே''.

''அது சரி. கிழக்கிட்டு தாராடி நஞ்சைத் தாக்கிலே நீதான் குப்பை அடிச்சியாக்கும்? படிச்சுப் படிச்சுச் சொன்னுப்பிலே, எட்டு வண்டிக்கு வள்ளிசாய் தேறியிருச்சா?''

''நீங்களா தப்புக் கணக்குப் போடுவீங்க? எட்டு வண்டிக்கு ஒரு தட்டு கூடத் தட்டுப்பாடு வல்லேங்க, முதலாளி!''

''ஊம், வடக்காலே நாதியத்துக் கிடக்கிற கூந்தல் பனை வயல் காட்டுக்கு வார வியாழச் சந்தைக் கெடுவுக்குள்ளார இன்னம் முப்பது நாற்பது



சென்னை எழும்பூர் ஸ்டேட் வங்கியின் மேலாளரும், பணம் பெறும் கணக்கரும் பணம் வழங்கிய இடத்திற்கே வந்து சேமிப்பு நிதியாகப் பணத்தைப் பெறுகின்றனர்



குடும்ப நல நிதி பெறும் துப்புரவுப் பணியாளர் குருவையாவின் இரு புதல்விகள்

வங்கிகளின் விடுமுறை நாளில் பணம் வழங்கப்பட்டது என்றாலும் சென்னை ஸ்டேட் வங்கியின் மேலாளரும், பணம் பெறும் கணக்கரும் நேரில் வந்து பணத்தைச் சேமிப்புக் கெனப் பெற்றுக் கொண்டனர் - பணம் வழங்கப்பட்ட நாள் விடுமுறை எனினும் அன்றைக்கே கணக்கில் போடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர்களது பணம் இரண்டு ஆண்டுகள் வைப்புநிதியாகப் (Fixed Deposit) போடப்பட்டுள்ளது.

தவிர, விழுப்புரத்தில் காவல் துறையில் காவலராகப் பணியாற்றி வந்த திரு. நூர்ஷெரிப் என்பவரும் சனவரித் திங்கள் 15-ஆம் நாள் தம்முடைய பணிக் காலத்திலேயே மறைவு எய்தினர். குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ், அவருடைய மனைவி திருமதி.பாத்திமாவுக்கு ரூ. 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் இது வரை தமிழகத்தில் சுமார் 75 பேர் குடும்ப நல நிதியாக தலா 10,000 ரூபாய் பெற்றுள்ளனர். இவ்வளவு தொகையை உடனடியாகச் சிறிதும் காலம் தாழ்த்தாமல், வழங்கியுள்ளது பெரிதும் பாராட்டத் தக்கதாகும், இந்தத் திட்டம் அரசுப் பணியாளர்களுக்கு - முக்கியமாக கடைநிலைப் பணியாளர்களுக்கு வாராது வந்த மாமணி போன்றதாகும்.

— ஆயிரம்





# இரத்தச் சோகை



நமது உடலில் உள்ள இலட்சக்கணக்கான அணுக்கள், சிதைந்து, புதிய அணுக்கள் உண்டாகின்றன. இந்த நடவடிக்கை எத்தகைய இடையூறும் இன்றித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதைப் போல், இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களும் (Red Corpuscles) அழிந்து, புதிதாகத் தோன்றுகின்றன. சிவப்பு அணுக்கள் 120 நாட்கள் மட்டுமே உயிரோடு இருக்கின்றன. அதாவது, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை புதிய சிவப்பு அணுக்கள் உண்டாகின்றன. முன்பு இருந்த சிவப்பு அணுக்கள் அழிந்து விடுகின்றன. புதிய சிவப்பு அணுக்கள் ஏற்படுவதற்குச் சில ஊட்டப் பொருட்கள் தேவைப்படுகின்றன. இந்த ஊட்டப் பொருட்கள், குறைவாக இருந்தால், இரத்தச் சோகை ஏற்படுகின்றது.

நம் நாட்டில் பலர் இரத்தச் சோகையினுல் அவதியுறுகின்றனர். சத்துக் குறைவான உணவு உண்பதால் மட்டுமல்லாமல், மலேரியா, கொக்கிப்புழு ஆகியவற்றாலும் இரத்தச் சோகை ஏற்படுகின்றது. நம் நாட்டில் பலர் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருவதால் சத்து மிக்க உணவு உட்கொள்ள முடிவதில்லை. இதனுல்தான் அவர்கள் இரத்தச் சோகையால் பீடிக்கப்பட்டுள்ளனர். சிலர் ஊட்டம் கொடுக்கக் கூடிய உணவு வகைகளைப் பற்றி அறியாத காரணத்தாலும் அவர்களுக்கும் இரத்தச் சோகை ஏற்படுகிறது. விபத்து நேர்ந்ததில், இரத்தம் அதிகமாக வெளிப்பட்டால் கூட இரத்தச் சோகை ஏற்படும். அடிக்கடி கருவுறுவோரும், நீண்ட நாட்கள் தாய்ப்பால் கொடுப்பவர்களும் இரத்தச் சோகையால் அவதிப்படுவார்கள்.

நமது உடலில் ஓடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு 100 மி. லி. இரத்தத்திலும், சாதாரணமாக, 14 முதல் 15 கிராம் ஹிமோகுளோபின் இருக்கும். சிவப்பு அணுக்களிலுள்ளஹிமோகுளோபின், நம் உடலுக்கு உயிர்வளியைத் தருகிறது.

ஒரு பெண்ணின் உடலில் ஓடும் ஒவ்வொரு 100 மி.கி. இரத்தத்திலும் 12 கிராம் ஹிமோகுளோபினுக்குக் குறைவாக இருந்தால், அவளுக்கு இரத்தச் சோகை ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும். சாதாரணமாக, கருவுறும் பெண்களுக்கு இரத்தச் சோகை ஏற்படும்.

தளர்ச்சியை உணர்வது, தூக்கமின்மை, பசியின்மை, நகங்களில் நிறமாற்றம், பொதுவாகச் சோர்வு போன்றவை தாம் இரத்தச் சோகைக்கான அறிகுறிகளாகும். இவை யாவும் உயிருக்கு எந்த விதத் தீங்கையும் ஏற்படுத்தாவிட்டாலும், மனிதனின் உழைக்கும் திறனை உறுதியாகக் குறைந்துவிடுகின்றன.

கருவுற்ற மகளிர் அதிக அளவுக்குச் சத்து உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும். அவர்களுக்குப் போதிய இரத்தம் இல்லையென்ருல், உடல் அணுக்களுக்குத் தேவையான உயிர்வளி கிடைக்காது. இதனுல் குறைப் பிரசவம் ஏற்படும். இந்தக் குறைப் பிரசவத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளின் உயிர் எப்போதும் ஆபத்துக்கு உள்ளாகலாம். மேலும் குறைப் பிரசவத்துக்குள்ளான தாய்க்கு அதிகச் சோர்வு ஏற்படும். அதுவே அவள் உயிருக்கு இறுதியாகவும் முடியலாம்.

கருவுற்ற ஒரு பெண், இரத்தச்சோகையால் பீடிக்கப்பட்டிருந்தால், அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்குச் சரியாக இரத்தம் கிடைக்காது. பிறந்த குழந்தைகளுக்கு 6 மாதம் வரை தாய்ப்பால்தான் ஒரே உணவு ; ஒப்பற்ற உணவு. தாய்ப் பாலில் இரும்புச் சத்து மிகக் குறைவு, ஆகையால் தாய்ப் பால் மட்டுமே உட்கொள்ளும் சிறுகுழந்தைகளின் உடலில் இரும்புச் சத்து வெகு குறைவாக இருக்கிறது. இதனுல் இத்தகைய குழந்தைகளுக்கு இரத்தச் சோகை ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு.

இரத்தச் சோகையைத் தடுக்க—நமது உடலில் இரத்தம் சுரக்க, புரதச் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின்-பி, வைட்டமின்-சி ஆகியவை முக்கியமாகத் தேவைப்படுகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்று குறைவாக இருந்தாலும் இரத்தச் சோகை ஏற்படும்.

பால், பருப்பு வகைகள், ஈரல், முட்டை ஆகியவற்றில் புரதச் சத்து அதிகமாகக் காணப்படுகிறது. பருப்பு வகைகள், இறைச்சி வகைகள் ஆகியவற்றின் மூலம் நம் உடலுக்குச் சிறந்த தரமான புரதச்சத்துக் கிடைக்கிறது; புரதச் சத்துக்கு அடுத்ததாக இரும்புச் சத்து இன்றியமையாதது. இந்த இரும்புச் சத்து, கீரை வகைகளிலும், ஈரலிலும் அதிகமாக உள்ளது.

உணவிலிருந்து இரும்புச் சத்தைச் சரியான அளவு சேகரித்துக் கொள்ள நம் உடலுக்கு வைட்டமின் சத்துக்கள் தேவைப்படுகின்றன. பொதுவாக, எல்லாப் பழவகைகளிலும் வைட்டமின்-சி சத்து உள்ளது. இச் சத்து, கீரை வகைகளிலும் அடங்கியுள்ளது.

நல்ல இரத்தம் நம் உடலில் ஓட வேண்டுமென்ருல் வைட்டமின்-பி சத்து இன்றியமையாததாகும். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், ஈரல், பால் ஆகியவை நமக்குத் தேவையான வைட்டமின் சத்துக்களை அளிக்கின்றன.

நம் நாட்டில் கருவுறும் மகளிரில் பாதிப் பேர், இரத்தச் சோகையால் அவதியுறுகின்றனர். பிள்ளைப் பேற்றின்போது இறக்கும் நாலு தாய்மார்களில் ஒருவர் இரத்தச் சோகை காரணமாக இறக்கின்ருர்.

இரத்தச் சோகை ஏற்படாமல் இருக்க வேண்டுமென்ருல் நாம் நமது அன்ருட உணவில், பால், அரிசி, கோதுமை, கீரை வகைகள், ஈரல் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சைவ உணவு உண்பவர்கள் கீரை வகைகளை அன்ருட உணவில் சேர்த்துக் கொள்வது இன்றியமையாதது.

வண்டிக்குக் காணும்படியாய்க் குப்பை வாங்கி அடிச்சிடலாம்'

''நொடியிலே முடிச்சிப்பிடுறேமுங்க, ஐயாவே!''

''பாதையிலே நொடி ஏதாச்சும் வஞ்சனை பண்ணி, வண்டியைக் குடம் சாய்ச்சிடப் போவுது; பத்திரம்!''

''உத்தரவுங்க,'' என்று வணக்கமாக இணக்கம் சொன்னான் நாச்சி. அடி மடியில் சுருக்கு முடிச்சுப் போட்டுச் செருகி வைத்திருந்த பொட்டணத்தை எடுத்தான். ''கருக்கலிலே எம்பத்தேழு ரூபாய்க் காசு தந்தீங்க. குப்பைவண்டிக் கணக்குப் புள்ளியும் சொச்சக் காசும் இருக்குங்க. இந்தாங்க,' என்று விவரம் கூறி நீட்டினான்.

''சரி; கணக்கு வழக்கை சாவகாசமாய்ச் சரி பார்த்து விடுகிறேன், நாச்சி. முதல்லே நீங்க எல்லாரும் ஓடி காக்கா குளியல் போட்டுபுட்டு ஓடியாங்க. எல்லாரும் ஒரே பந்தியிலே குந்திச் சாப்பிடுவோம்,'' என்று ஆதரவோடு குறிப்பிட்டார் பெரிய பண்ணை. கணக்குக் குறிப்பைப் பிரித்தார். ''கண்டியாப்பா நாச்சி? உனக்கு நான் 'அரிநமோத்துச் சிந்தம்' —'ஆனா— ஆவன்னா' வெல்லாம் படிச்சுக் கொடுத்தது இப்ப எம்புட்டுச் சகாயமாய்ப் பூடுச்சு?'' என்றார். நாச்சியின் நன்றியை வரவு வைத்துக் கொண்டார்.

நாச்சி திடுதிப்பென்று ''ஆ!'' என்றான்.

பதறித் திரும்பினார் தேவர்.

''ஐயா, இப்பத்தான் சோணிப் பயல் சொல்றான். ஒங்களுக்கு மறு திருப்பும் நெஞ்சடைப்பு வந்திடுச்சாமுங்களே? தீரத் தெளிய, கைக்கு ஒசந்த வைத்தியம் பண்ணிக்கிட்டால் தானுங்க தேவலாம். இனிமே ஒங்களுக்கு கைக்குக் கோலாட்டம் சின்னவர் கை வாகனமாய் இருந்திடுவாங்களே! அப்பாலே, நீங்க பாட்டுக்கு ஆத்தா மூத்தவளைச் சேவிச்சிட்டு, அக்கடான்னு ஒட்டுத் திண்ணையிலே ஒட்டிக் குந்தி, கார்வார் பண்ணி ராசாங்கம் நடத்தவேண்டியது தானுங்களே? பெத்து வளர்த்தவங்க பேச்சைத் துச்சமாய் மதிச்சு, எடுத்தெறிஞ்சு பேசி, தன்னடைச்ச மூப்பிலே தலைகெட்ட தனமாய்த் திரியுதுங்களே நாலுமூணு தறுதலைங்க, அதுகளாட்டமா இருக்கும் நம்ம சின்ன ஐயா? சின்னவருக்கு ஒங்க வாக்குத்தான் வேத வாக்கு; நீங்க கிழிக்கிற கோடுதான் அவுகளுக்கு லட்சுமணன் கோடு! நீங்கதான் எங்களுக்கு ஆலமரம். ஒங்க நிழலிலே ஒண்டி உழைச்சி, உங்க உப்பை நாங்க நாளெல்லாம் நன்னியோடே திங்கிறதுக்கு உண்டான பொசிப்பை நீங்கதான் எங்களுக்குப் பெரிய மனசு பண்ணி வாரிக் கொடுக்கோணுமுங்க, பெரியவுகளே!''

இந்தியாவிலேயே மக்கள் நல்வாழ்வுக்கான மருத்துவ உதவிகளை அளிப்பதில் முன்னணியில் திகழும் தமிழ் நாட்டில், 1974-75-ஆம் ஆண்டுக்காக மருத்துவக் கல்வி மருத்துவப் பணிகளுக்காக ரூபாய் 28 கோடியே 75 இலட்சத்து 68 ஆயிரத்துக்கு அதிகமாக நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இந்திய மருத்துவத்துக்காக ரூபாய் 38 இலட்சத்துக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக ரூபாய் 15 கோடியே 76 இலட்சத்து 63 ஆயிரத்துக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

வண்டிக்கார நாச்சியின் ஏழைமைக் கண்ணீர் நிற்கவில்லை.

வீரமணியின் கண்கள் மட்டுமல்ல; பெரியவரின் கண்களும் தான் தளும்புகின்றன.

நிலா முற்றம், அந்தரங்க ஆலோசனை மண்டபமாக மாறியிருந்தது.

வெண்ணிலவுக்கும் பூங்காற்றுக்கும் மாத்திரமே பார்வையாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஊர் நாட்டாண்மைத் தலைமையாளர் ஆதிமூலத்தேவரும் தேவரின் மகன் வீரமணியும் என்னவோ ஒரு நூதனமான உட் குறிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

குண்டூசி விழுந்தால் சப்தம் கேட்கும்.

ஆனால் 'சத்தம்' கொடுத்துக் குண்டூசியைக் கொள்முதல் பண்ணி, அதை வீசிச் சோதித்துப் பார்க்க தந்தைக்கும், தனயனுக்கும் பொழுது இல்லை. அவர்களுக்குத்தான், தலைக்கு மேல என்னென்னவோ சோதனைகள் கண்ணுமூச்சி ஆடகாத்துத் தவம் கிடக்கின்றனவே!

ஏப்பம் பரிந்தது. இன்னொரு மிடறு தண்ணீர் பருகிவிட்டு, கும்பகோணம் தளிர் வெற்றிலைகளில் ஓர் அடுக்கை எடுத்து இடது கைப்புறத்தில் அடக்கிக் காம்பு கிள்ளி நரம்பு உரித்தார்; கொத்துச் சீவலை, கருடன் தவளையைக் கொத்துமே அப்படிக் கொத்திக் கடைவாய்க்குள் திணித்தார்; வாசனைச் சுண்ணாம்பு கூடியது தான் சமயம்; அரக்குச் சிவப்பு கைகூடியது. மஞ்சள் கடுதாசித் தாளில் பளபளத்த புகையிலையில் முனுங்கலைச் சலித்துத் தட்டி வீசிவிட்டு, மிகுந்ததை மிகுந்த ரசனையோடு வாயில் அடக்கிக் கொண்டார்; பிறகு, முதல் எச்சிலைப் பணிக்கத்தில் துப்பி விட்டு, தொண்டையைக் கனைத்தபடி அட்டணைக்கால் போட்ட வண்ணம், என்னவோ யோகாசனம் பயில்பவர் மாதிரி உட்கார்ந்தார் தேவர். அப்புறம் ஒரு மாத்திரைப் பொழுது இடையீடு கொடுத்த பின், அடுத்த தடவையாகவும் தொண்டையைக் கனைத்துக் கொள்ளத் தவறினார் இல்லை. தொண்டையை அடைத்து விடாமல் இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையில், அதாவது வருமுன் காப்பதில் — காத்துக் கொள்ளுவதில் அவர் முடிந்த அளவுக்குக் கண்காணிப்புடன் இருப்பார்!

நட்சத்திரத்தோடு நட்சத்திரமாகக் கலந்து சிவப்பு விளக்கைப் புள்ளியாக்கிக் கொண்டே பறந்தோடிய ஆகாயக் கப்பலை அந்த நாளையிலே ரசித்தது போலவே இப்போதும் ரசித்தான் வீரமணி.

எங்கேயோ ஆந்தை கத்தியது.

''வீரமணி,'' என்றார் தேவர்.

''சொல்லுங்க, அப்பா!'' என்றான் தேவரின் கறிவேப்பிலைக் கொழுந்து.

தேவர் பேசத் தொடங்கிவிட்டார்.

''தம்பி என்னோட ஆஸ்திக்கு ஒரு பிள்ளை என்கிறதிலே சட்டம்தான் வாய் பேசலாம். ஆனா, நீ என்னோட ஆசைக்கும் ஒரு பிள்ளையாக்கும். இந்த உண்மையானது அன்னைக்கும் பொய்யாகல்லே; இன்னைக்கும் பொய்யாகல்லே! நான் பொய் பேசத் தேவை கிடையாதுதான்! கண்ணிலே வச்சு இமையினாலே மூடி அந்தக் காலத்திலே நானும் உன் ஆத்தாளும் உன்னை வளர்த்தோம். இந்தக் காலத்திலே நான் ஒண்டியாய் உன்னை வளர்த்திருக்கேன், ஆனதாலே, இம்மாங்கொத்த அருமைக்கும் பெருமைக்கும் உரிமை கொண்ட உன்கிட்டே — என்னோட குலத்தை வீடும் விளக்குமாய் விளங்க வைக்க வேண்டிய கடமை கொண்ட உன்கிட்டே ஒரு நல்ல சேதியை — ஒரு மங்களகரமான சேதியைச் சொல்லிப்புடவேணும்னு நான் தவிச்சுக்கிட்டிருக்கேன்!...''

''மெய்தானுங்க, அப்பா!''

தேவர் தொடர்ந்தார்.

''வீரமணி, இந்த நாட்டாண்மைக்கார ஆதிமூலத் தேவன் வூட்டிலே எப்பவுமே விளக்குக்குப் பஞ்சப்பாடு இருக்காது. அங்கிட்டு நடையிலே காமாட்சியம்மன் விளக்கு எரியுது; இங்கிட்டாலே, போனசங்கராந்திக் கெடுவுக்குப் போட்ட 'எலெக்கட்டரி' விளக்குங்க ரெண்டு கை வீச்சுக்கு எட்டி எரிஞ்சுகிட்டு இருக்கு. ஆனா, அந்தாலே அந்தத் தாய்வூட்டிலே பதினைஞ்சு பதினாறு வருஷத்துக்கு முந்தி அல்லும் பகலும் மங்களகரமான சுபீட்சத்தோடே எரிஞ்சுகிட்டு இருந்திச்சே ஒரு 'நல்ல விளக்கு', அந்த விளக்கு மட்டும் எரியாமல் இம்புட்டுக் காலமாய் அணைஞ்சே தரிசாய்க் கிடக்குது! அந்த நல்ல விளக்கை ஏற்றி வச்ச திருவிளக்கே அணைஞ்சதுக்கப்பாலே, அது மாத்திரம் எப்படி எரியுமாம்? ..என்னோட ஆசை வள்ளியம்மை உன்னோட ஆத்தா வள்ளியம்மை கண்ணை மூடினா; எல்லாமே அத்தமிச்சுப் பூடுச்சு! ஊம்! இப்பைக்கு வெளிச்சம் மடைத் தண்ணியாய் வழிஞ்சோடிக்கிட்டுத்தான் இருக்கு; ஆனாலும், நான் பாளத்த இருட்டிலே தவிச்சு உருகிக் கரைஞ்சுகிட்டே இருக்கேன். இப்படிப் பட்ட நரக வேதனையைத் தாங்கிக்கிடுறதுக்கு இனிமே என் நெஞ்சுக்கு ஊட்டம் இல்லே; என்னோட மேனிக்குச் செகலும் கிடையாது! உன்னைப் பெற்ற மகராசி கண்ணை மூடிக்கிட்ட அந்தப் பொழுதிலேயே நானும் கண்ணை மூடிக்கிட்டிருப்பேன். ஆனா, சொக்கப் பச்சையான உன் நிமித்தம்தான் நான் உயிர் தறிச்சேன். நான் செஞ்சு முடிச்சுத் தீர வேண்டிய கடமைகளுக்காகத்தான் ஊசலாடிக்கிட்டிருக்கிற என்னோட உசிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு, நடைப்பிணமாய் இந்த மண்ணிலே இப்பவும் ஊடாடிக்கினு இருக்கேன்!''

''தம்பி, பசிச்சவன் பழங் கணக்கைப் பார்க்கிறதாட்டம் நான் என்னென்னமோ பேசிக்கிட்டே இருக்கேனேன்னு ரோசிக்காதே. புதுக் கணக்குக்கு வந்தாச்சு. இம்மாங்காலமாய் எரியாமல் அணைஞ்சு கிடக்குதே நல்ல விளக்கு, அந்த நல்ல விளக்கை மறுபடியும் ஏற்றி எரியவச்சு, இந்தப் பழைய வூட்டை முன்னை மாதிரி வீடும் விளக்குமாய் விளங்கச் செய்ய வேணுமா? நல்லாவேணும்; மேள தாளத்தோட வேணும். ஆனதாலேதான், அந்த நல்ல பொறுப்பை உங்கிட்டே ஒப்படைக்கத் தவிச்சுகிட்டிருக்கேன்! புண்ணியவானாச்சே நீ! உன் புண்ணியத்திலேதான் இந்த வீட்டிலே சீதேவி மறுபடியும் காலடி எடுத்து வைக்க முடியும்! ஆகச்சே, உன் அப்பனோட இந்த ஆசைச் சொப்பனத்தை நீ ரோசத்தோடவும் வைராக்கியத்தையும் நிறைவேற்றி வச்சு, இந்த வீட்டோடே மானத்தையும் மரியாதையையும் கட்டிக் காக்க வேண்டியது உன்னோட உசிருக்கு உசிரான கடமை என்கிற சத்தியத்தையும் நீ மறக்கவே மறக்கப் புடாதாக்கும், மகனே!''

ஐதராபாத்திலுள்ள பிராணியியல் பூங்காவை (மிருகக் காட்சிச் சாலையை) ஒத்திருக்கும் வகையில் வண்டலூர் ஒதுக்கக் காட்டுப் பகுதியில் பிராணியியல் பூங்காவைத் தமிழ்நாடு அரசு அமைக்கும்.

மிராசுதார் ஆதிமூலம் பேச்சை முடித்துவிட்டு, எதிரே ஊடுருவினார்.

''ஆகட்டுங்க, அப்பா!'' என்றார் வீரமணி.

தந்தை ஆறுதலோடு இதழ்களை விலக்கினார்.

தனயன் அமைதியோடு இதழ்களைக் கூட்டினான்.

''வீரமணி, ஆவணி தொடங்கி, உன் பாக்கியத்தினாலே இந்த வீட்டிலே நல்ல விளக்கு எரியத் தொடங்கட்டும்; அப்புறம் பாரேன் இந்த வீட்டோட மகிமையை! சீதேவி மீண்டும் வந்து கால் பாவிட்டா, அப்பாலே, சீதேவி பூத்துக் குலுங்கக் கேட்கவா வேணும்? அந்தடியும், நம்மோட சங்கடங்கள் சாடாவும் பொழுது விடியறதாட்டம் விடிஞ்சிடாதா?

கண்ணை மூடிக் கொண்டு தன் தந்தை பேசியதைக் கேட்டதும், வீரமணிக்குச் சிரிக்கத்தான் தோன்றியது. ''அப்பா, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்கிற அடிப்படையிலேதான் நீங்க இப்படிச் சொல்றீங்கன்னு நான் நினைக்கிறேன். அந்த நம்பிக்கையை மறுக்க மாட்டேன் நான். ஆனால்...? என்று கூறிவிட்டுப் பேச்சை அந்தரத்தில் நிறுத்தினான் அவன்.

ஆதிமூலம் திகைத்தார். ''ஏன் நிறுத்திப்புட்டே? பேசு வீரமணி, பேசு!'' என்று தூண்டிவிட்டார்.

வீரமணி விநயமான முறுவலுடன், ''நம்ப வீட்டுக்குச் சீதேவி ஒருத்தி என் மூலமாக வந்து சேர்ந்திட்டால் மட்டும், நம்ப வீட்டிலே உடனேயே சீதேவி பூத்துக் குலுங்கிட முடியுங்களா?'' என்று கேட்டான்.

சீண்டிவிட்டால், நல்ல பாம்பு படமெடுக்கும்.

''ஏன் பூத்துக் குலுங்க மாட்டாளாம் சீதேவி? நல்ல நேரம் கூடி வந்தா நல்ல நம்பிக்கையும் கைகூடி வராதா? நீயும் உழைப்பாய்; நானும் உழைப்பேன். நம்மோட வீடு தேடி வரப்போற சீதேவியும் நம்மளோடே சேர்ந்து உழைப்பாள். தொட்டது துலங்கும். மண்ணைத் தொட்டால் பொன் ஆகும். உன்னோட விவசாயப் படிப்பு துணை இருக்கும்; அர

"சாங்கத்தோட உதவி ஒத்தாசை கைகொடுக்கும். உன் ஆத்தா வள்ளியம்மையும் கட்டாயம் வாழ்த்துவா. பின்னே, நம்ப தொல்லைகளெல்லாம் விடிஞ்சு, விடி வெள்ளி முளைக்கிறதுக்கு எந்நேரமாகுமாம்? இந்தக் குறுவைப் பட்டமும் தாளடி விளைச்சலும் அமோக மகசூல் கொடுத்தாச்சுன்னு, அப்புறம், நம்ப தலைமேலே பயங்கரச் சுமையாய் குந்தி, கொடுமையாகக் 'கிட்டி கட்டி' அழுத்தி நசுக்கிக் கிட்டிருக்கிற கடன் கப்பி சாடாவையும் ஒரே மூச்சில் அடைச்சுப்புட மாட்டோமா? செல்லேன், தம்பி!..''

மேல் மூச்சும் கீழ் மூச்சும் கால் இடறின. பெரியவர் நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

வீரமணி ஐம்பது சதவிகித அளவிற்கு ஆறுதல் கொள்ள முயற்சி செய்தான்.

அப்பா! என்னுடை திட்டப் பிரகாரம், நீங்களும் நம்மோட வெள்ளாமை விளைச்சல் சம்பந்தமான சீரமைப்பு, சீர்திருத்தத்திலே ஒரே மாதிரியான கருத்து வச்சிருக்கீங்க. அந்த அளவிலே நான் ஓரளவுக்கு மனச் சாமாதானம் கொள்ளுறதுக்கு வழி உண்டு. ஆனு, இப்போதுள்ள சோதனையான சந்தர்ப்பச் சூழ்நிலையிலே, மண் பிரச்சினையைக் காட்டிலும் நம்ம குடும்பத்தோட மானப் பிரச்சினைதானுங்களே உச்சமாய் அச்சுறுத்திக்கிட்டு இருக்குது? கடன் கழிஞ்சா, காற்றுப் போலே! நாம தலை மேலே சுமக்க மாட்டாமல் சுமந்து கிட்டு இருக்கிற கடன் சுமையை வழி தேடி, வழி கண்டு பிடிச்சு அடைச்சால்தானுங்களே, நம்ம குடும்பத்தோட மானம் மரியாதை பிழைச்சு, நாமளும் ஊர் நாட்டிலே தலை நிமிர்ந்து நடக்க ஏலும்? அப்பத்தானுங்களே, என் மனச் சுமையையும் இறங்கி, உங்க மனக் கனவுப்படி, நானும் தன்மானத்தோடே தலை நிமிர்ந்து மணவறையிலே குந்தவும் என் மனசும் இடங் கொடுக்கும்? அப்பத்தானுங்களே, என்னுடை கடமைக்கு நீங்க சுட்டிக் காட்டின சத்தியமும் தருமமும் ஒரு முழுவடிவம் காண வாய்க்கும்? உங்களுக்குள்ள ரோசம், வைராக்கியம் எல்லாம் எனக்கும் இருக்காதுங்களா, அப்பா?

உணர்ச்சிகளுக்கு மனம் விட்டு, வாய்விட்டுப் பேசத்





தெரியும்.

தேவர் சிரித்தார்.

அப்பா புதிர் போடப் போகிறுரா, என்ன?

அழகான விழிகள் அழகாக ஊடுருவின.

''அடிச் சக்கை! போடு பகடை பன்னெண்டு அப்படின்னு சொன்னுனும். அப்படியே கச்சிதமாய் விழுந்திடுச்சாம். சொக்கட்டான் ஆட்டம்

### மழை நீர் வடிகால்

ரூபாய் 16·45 கோடி செலவில் சென்னை மாநகரம் முழுதிலும் மழைநீர் வடிகால் கட்டுவதற்கான பெருந் திட்டம் ஒன்றை சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

வெற்றி முகம் காட்டக் கேட்கவேணுமா? தம்பி, வீரமணி இப்பத்தான் எனக்கு நல்ல மூச்சு வருதாக்கும்! உன் ரோசமும் வைராக்கியமும் எனக்குத் தலைகீழ்ப் பாடம்தான். அட்டியில்லே! உன்னுடை லட்சியப்படி, நாம பட்டிருக்கிற கடன் கப்பி சகலத்தையும் ஆவணி பிறக்கிறதுக்குள்ளாற எப்பாடு பட்டாச்சும் நான் அடைச்சுபிடுவேன்! இனிமே அந்தக் கவலை உனக்கு வேண்டியதில்லே! அப்பாலே, ஆவணி பிறந்தடியும் நீ மாப்பிள்ளை முறுக்கோடே மணவறையிலே தலை நிமிர்ந்து குந்துறதுக்கு அட்டி ஏதும் கிடையாதே?''

இதயத்தைத் தடவிக் கொடுத்த வாக்கில் விளுச்சரம் தொடுத்தார் மச்சு வீட்டுக்காரர்.

''ஊகூம்!. . ''

வீரமணிக்கு வெட்கம் வந்து விட்டது, வெட்கம்! சாண் பிள்ளையானுலும் ஆண் பிள்ளைதான். அதற்காக, வெட்கம் வரக் கூடாதென்று சட்டமா, விதியா?—'அன்னக்கொடி! . . அம்மான் மகளே, அன்னம்!'' பெரியவருக்கு வெட்கம் எதுவும் வந்துவிடவில்லை. ஆனுலும் அவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

''என் தங்கக் கம்பிக்கு வெட்கம் வந்து தொலைச்சிருச்சாங் காட்டி! ஊம்... வீரமணி, நான் இப்ப சொல்லப் போற நல்ல சேதியைக் காதிலே வாங்கிக் கிட்டு, பின்னுடி தனியே ஓடிப்போய் குந்திக் கிட்டு, அந்த நல்ல சேதியை நினைச்சு நினைச்சு வட்டியும் முதலுமாய் வெட்கப்பட்டுக் கிட்டு இரு! நான் உன்கிட்டே சொல்லிப்புடத் துடிச்சுத் தவிச்சுக்கிட்டு இருந்த அந்த நல்ல சேதி—மங்களகரமான சேதி இதுதான்: மகனே வீரமணி! அக்கம் பக்கம் பதினுறு தலைக்கட்டுக் கிராமங்களுக்குத் தலைமை கொண்ட சிலட்டூர்க் கங்காணியார் பெரிய கறுப்பத் தேவரோட ஒரே மகளான பவளக் கொடியை உனக்காகப் பெண் பார்த்துப் பேசி முடிச்சிருக்கேன், தம்பி!''

ஆதிமூலத் தேவரின் புதிர்ப் பேச்சு சிரிப்பிற்கு நிகராக அவரது அருமந்தப் பிள்ளை வீரமணிக்கும் சிரிக்கத் தெரிந்தது அப்படியொன்றும் பேரதிசயச் செய்தி அல்ல!

—வளரும்.

# தமிழ்நாட்டிலுள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் எத்தனை?

தமிழக மக்களின் உடல் நலனை மேம்படுத்துவதே நமது அரசின் நாட்டமாக என்றும் இருந்து வந்துள்ளது. மக்கள் நல்வாழ்வு என்பது நோயற்ற வாழ்க்கை என்பது மட்டுமல்ல, உடற்கட்டும் உள வன்மையும் சமூக நல்வாழ்வும் அமைந்த வாழ்க்கையே ஆகும். ஒவ்வொருவரும் தமது ஆக்கப் பணிகள் மூலம் சமுதாயத்திற்குப் பணியாற்றுவதற்கு ஏற்றவகையில் அவரது உடல் நலனை நன்கு பேணி வருவதற்கு நியாயமான வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதையே நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு சமுதாய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நமது தமிழ்நாடு, 1,30,069 சதுர கிலோ மீட்டர் பரப்பு உடையது. 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 4,11,99,168. இதில் 2,87,34,334 மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். 1,24,64,834 மக்கள் நகர்ப் புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். கிராமப் புறப் பகுதி, நகர்ப் புறப் பகுதி மக்களுக்கு இடையே உள்ள விகிதாச்சாரம் 70 : 30 ஆகும். கிராம மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் பணிகளைச் செய்ய அமைக்கப்பட்ட நிறுவனம் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஆகும்.

இந்தத் தொடக்க நல்வாழ்வு நிலையம் (Primary Health Centre) ஊராட்சி ஒன்றியமாக உள்ள தனது பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைச் செய்து வருகிறது. நமது மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

சேலம் மாவட்டத்தில் இளைச்சிப் பாளையம், ராசிபுரம் ஆகிய இரண்டு ஒன்றியங்கள் நீங்கலாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் 7 ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன ; துரிஞ்சாபுரம், கீழ் பெண்ணுத்தூர், மொடக்குறிச்சி, கொடுமுடி, வெள்ளக்கோயில், தூக்க நாயக்கன் பாளையம், ஆத்தூர்.

ஆக, நமது மாநிலத்தில் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. நமது மாநிலத்தில் உள்ள கிராமங்களுக்குத் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் மூலம் நலப்பணி நிறைவேற்றப்படுகிறது.

தொடக்க நல்வாழ்வு நிலையம் ஆற்றிவரும் பணிகளில் பின்வருவன அடங்கும்: பொது மருத்துவப் பராமரிப்பு, தாய்-சேய் உடல் நல முன்னேற்றம், குடும்ப நலத் திட்டம், மக்கள் கழிவுகளைச் சுகாதாரமான முறைகளில் அப்புறப்படுத்துதல், குடிநீர்ப் பாதுகாப்பு, தகுந்த ஊசி மருந்துகள் மூலம் தொற்று நோய்க் கட்டுப்பாடு, அம்மை நோய், காலரா, மலேரியா போன்ற தொற்று நோய்கள் உண்டாவதைக் கண்டு பிடித்துக் கண்காணித்தல் ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்துதல், சத்து உணவு அவசியம் பற்றிக் கல்வி அளித்தல் ஆகியவை.

மருத்துவப் பராமரிப்புக்காக ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் புற நிலை நோயாளிப் பிரிவும், 6 படுக்கைகள் கொண்ட அகநிலை நோயாளிப் பிரிவும் உள்ளன. புறநிலை நோயாளிப் பிரிவில் நோயாளி பரிசோதனை செய்யப்பட்டு தக்க மருத்துவம் அளிக்கப்படுகிருர். வழக்கமான மருந்தகங்களிலும் மருத்துவ மனைகளிலும் மருந்து கொடுப்பதோடு பணி நின்று விடுகிறது. தொடக்க நல்வாழ்வு நிலையத்திலே நோயாளிகளுக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் நோய் சிகிச்சை அளிப்பதோடு தடுப்பு மருத்துவமும் அளிக்கப்படுகிறது. நோயின் தன்மை பற்றியும், நோய் பரவுதல், நோய் தொற்றக்கூடிய பொருள்களை நோய் நீக்கம் செய்யும் முறைகள் பற்றியும் நோயாளிக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் நாள்தோறும் வருகைதரும் புறநிலை நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை-70 புதிய நோயாளிகளும், 40 பழைய நோயாளிகளும் ஆகும். தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திலும் நாள்தோறும் வருகைதருவோரின் சராசரி எண்ணிக்கை 42,000 ஆகும். ஆண்டுதோறும் வருகை தரும் சராசரி எண்ணிக்கை ஏறத்தாழ 150 இலட்சமாகும.

இப்பொழுது செயல்பட்டு வரும் 379 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் 167 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. 21 தொடக்க நல்வாழ்வு நிலையத் தொகுதிக்கு, அதாவது, மருந்தகமும், பணியாளர்க் குடியிருப்புகளும் நேர்ந்த கட்டடத் தொகுதிக்கு வேண்டிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கட்டப்படவிருக்கின்றன.

42 தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கான மருந்தகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் ஐந்தாவது திட்டத்தின் முதலாவது ஆண்டில் அதாவது 1974-75-ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் மருந்துகள் செலவுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,500 கொடுக்கப்பட்டது. இத் தொகை 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1974-74-ஆம் ஆண்டில், இத்தொகை தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12,000 அளவு வரை உயர்த்தப்படும். இதைப் போலவே, துணை நிலையங்களுக்கென வரையறுக்கப்பட்ட தொகையாகிய ரூ. 600 ஆண்டு ஒன்றுக்கு ரூ. 800 அளவு வரை உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், 131 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கட்தொகை உடையவை. இந்த 131 ஊராட்சி ஒன்றியங்களில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஏற்கனவே இரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டாவது தொடக்க நல்வாழ்வு நிலையங்களைப் படிப்படியாக ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பற்றி நமது அரசு ஆராய்ந்து வருகிறது.

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.














**தமிழ்நாடு கதர்—**
**கிராமத் தொழில் வாரியம்**
குறளகம்
சென்னை-600001




# தூத்துக்குடித் துறைமுகம்

## சில விவரங்கள்



தற்போதுள்ள தூத்துக்குடி துறைமுகத்தின் தென்கிழக்கில் ''முயல் தீவிற்கு'' அப்பால் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை ரூ. 24.40 கோடி செலவில் கட்டுவதற்கு இந்திய அரசின் கப்பல்-போக்குவரத்து அமைச்சகம் 1968 ஜூன் திங்களில் நிர்வாக ஏற்பளிப்பு வழங்கியது. தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகத்தின் தென்கிழக்கில் அடைப்பாயுள்ள துறைமுகப் பகுதி ஒன்றை அமைக்கும் பணியும் இதில் அடங்கும்.

தெற்கிலும், வடக்கிலும் ஒவ்வொன்றும் சுமார் 4,000 மீட்டர் நீளமுள்ளதும், ஒன்றுக்கொன்று 1,275 மீட்டர் இடைவெளியுடன் கடலை நோக்கி நீண்டிருப்பதும், 122 மீட்டர் அகல நுழைவாயிலை உடையதுமான இணையான அலைதடுப்புச் சுவர்கள் இரண்டிற்குமிடையில் துறைமுகப் பகுதி அமைந்திருக்கும்.

இத் திட்டத்தின் முதற்கட்டத்தில் உயர்ந்த அளவு 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள ஆறு கப்பல்கள் தங்குமிடங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. எனினும், முதற்கண் நான்கு கப்பல் தங்குமிடங்கள் கட்டுவதற்கும் துணை வசதிகளைச் செய்வதற்கும் மட்டும் ரூ. 21.76 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

முதல் கட்டக் கட்டுமானப் பணியில், அலைதடுப்புச் சுவர் அமைத்தல் கப்பல் துறை சுவர் கட்டுதல் தெற்கு அலை தடுப்புச் சுவரின் கிழக்குப் பக்கம் நெடுக 4 கப்பல் தங்குமிடம் (உப்பு, கரி, சிமிட்டி, பொதுச் சரக்கு ஆகியவற்றிற்கு) அமைப்பதற்கு கப்பல் துறை பகுதியில், மண் நிரப்புதல், சாலை அமைக்க அணுகு பாதையைப் பண்படுத்தல், கரையிலிருந்து சரக்குகளை எடுத்துச் செல்ல ரயில் பாதை போடுதல், அணுகுக்கால்வாயையும் கப்பல்கள் நிற்குமிடத்தில் உள்ள நீர் பகுதியையும் தூர் எடுத்து ஆழப்படுத்தல் ஆகியவை அடங்கும்.

இரண்டாவது கட்டப் பணியில், உரம் இறக்கப்படுவதற்கு ஒன்றும், பொதுக், கப்பற் சரக்கு இறக்கப்படுவதற்கு ஒன்றுமாக இரண்டு கப்பல் தளங்களுடன் முதல் ஒற்றைப் பாலம் (இரேவு) கட்டும் பணி அடங்கும். தூத்துக்குடியில் உள்ள உரத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் நாப்தா, எரிஎண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்குக் கரையிலிருந்து சுமார் 3,000 மீட்டர் தொலைவில் வடக்கு அலைதடுப்புச் சுவருக்குப் பக்கத்தில் எண்ணெய் இறக்கப்படுவதற்கு தளம் ஒன்றும் அமைக்கப்படும்.

கடற்கரைப் பகுதியில் நிலம் கையகப்படுத்துதல், சாலைகள் அமைத்தல், பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல், கள அலுவலகங்கள், துறைமுக எஸ்டேட்டில் நீர் வழங்கும் வசதிகள், கழிவு நீர் அகற்றும் வசதிகள், மின்சக்தி வழங்கல்,

## பரப்பலாறு திட்டம்

நங்காஞ்சி ஆறு எனப்படும் பரப்பலாறு அமராவதி ஆற்றின் கிளை நதியாகும். அணைக்கட்டு, வாய்க்கால்கள் மூலமாக இந்த ஆறு 1,422 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கிறது. அந்தப் பகுதிக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், மேலும் 890 ஏக்கர்கள் இந்த ஆற்றினால் புதிதாகப் பாசன வசதி பெறச்செய்யவும் வேண்டி, தாழையூத்து அருவிக்குச் சுமார் 6 பர்லாங்கு மேற்பகுதியில் 16·7 கோடி கன அடி நீரைத் தேக்க 266 அடி நீளமுள்ள கல் கட்டட அணை ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அணைக்கட்டுகள், அவசியமான இடங்களில சீரமைக்கப்படும். தற்போதுள்ள வாய்க்கால்கள் பாசனம் அளிக்கும் தரமான நிலைக்குக் கொண்டுவரப்படும். இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 88 லட்சமாகும். திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு பரப்பலாறுத் திட்டத்திற்காக 11·8 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.

துறைமுகத்திற்கும் பாறை வெட்டும் பகுதிக்கும் ரயில் பாதை அமைத்தல் போன்ற தொடக்கப் பணிகள் அனைத்தும் முடிவு பெற்றுள்ளன.

ஆழ்கடல் வேலைகள் பற்றிய விவரம் வருமாறு:

**வடக்கு அலை தடுப்புச் சுவர் :** கரையிலிருந்து 1,775 மீட்டர் தொலைவுவரை வடக்கு அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி எல்லா வகையிலும் முடிக்கப்பட்டுள்ளது. ''பெரிய ஒப்பந்தபடி'', 1,775 மீட்டரிலிருந்து முடிவுவரை அதாவது 4,142 மீட்டர் வரை உள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன. (1973 டிசம்பர் 31 ஆம் நாள் கணக்குப்படி) உள்ளீட்டுப் பகுதி, 3,026 மீட்டர் வரை முடிக்கப்பட்டிருக்கிறது. உள்ளீட்டுப் பகுதி சிறிய கற்களால் கட்டப்பட்டு, கவசக் கற்கள் அதே தொலைவு வரை அரணாய் வைக்கப்பட்டுள்ளன.

**தெற்கு அலை தடுப்புச் சுவர் :** கரையிலிருந்து 1,830 மீட்டர் தொலைவு வரை தெற்கு அலை தடுப்புச் சுவர் கட்டும்பணி எல்லா வகையிலும் முடிக்கப்பட்டிருக்கிறது. 1,830 மீட்டர் தொலைவுக்குப் பின்பு முடிவு வரை (3,797 மீட்டர்) உள்ள வேலைகள் ''பெரிய ஒப்பந்தப்படி'' நடந்தேறி வருகின்றன. 1973 டிசம்பர் 31-ம் நாளில் உள்ளபடி உள்ளீட்டுப் பகுதி 3,733 மீட்டர் வரை முடிக்கப்பட்டுள்ளது. உள்ளீட்டுப் பகுதி மட்டும் சிறிய கற்களால் கட்டப்பட்டு அதே தூரத்துக்குக் கவசக் கற்களும் இரு ஓரங்களிலும் போடப்பட்டு இருக்கின்றன.

**அணுகு பகுதியில் பண்படுத்தும் பணி :** கப்பல் துறையை நோக்கிச் சாலைகளும், ரயில் பாதைகளும் அமைப்பதற்காகத் தெற்குச் சுவரின் உள்ளமைந்த பகுதியில் 2,608 மீட்டர் வரை பண்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. உள்ளமைந்த பகுதியில் 1,327 மீட்டரிலிருந்து 1,427 மீட்டர் வரை பண்படுத்தும் பணிகள் விரைவில் துவங்கும்.

**கப்பல் துறை சுவர் கட்டுதல் :-** கப்பல் துறை சுவர் கட்டுவதற்குத் தேவைப்படும் கான்கிரீட் பாளங்களை வார்த்துப் பொருத்தும் பணி தொடங்கப்பட்டு நடந்தேறி வருகிறது. 1973 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் வரையில் 2,262 பாளங்கள் வார்க்கப்பட்டு 843 பாளங்கள் உரிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான கடற்பாலத் தலைப்புகள் கட்டுதல், கப்பல் துறைப் பகுதியைப் பண்படுத்துதல் மற்றும் கடலடியை வெடி வைத்துத் தகர்த்தி ஆழப்படுத்துதல் ஆகிய பணிகள் இதுவரை தொடங்கப்படவில்லை.

துறைமுகம் கட்டத் தேவையான ஆய்வுப் படகு (Survey Launch) கண்காணிப்புப் படகு (Inspection Launch) இழு படகு ஆகியவை வாங்கப்பட்டுவிட்டன. துறைமுகத்தில் பயன்படுத்தத் தேவையான மரக்கலங்கள், கருவிகள் ஆகியவை அதாவது, துறைமுக இழு படகுகள்-2, வழிகாட்டிப் படகு-1 (Pilot Launch) நங்கூரம் முதலியவை கொண்ட படகு-2 (Mooning Boats) கப்பல்தள பளு தூக்கிகள்-40. சரக்குகளை அடுக்கி வைப்பதற்காக நீராவிக் கப்பல்களில் உள்ள யந்திரம் ஆகியவை வாங்கும் பணி முடிவுபெறும் நிலையிலுள்ளது. கடல்துறை போக்குவரத்து வழிகாட்டிச் சாதனங்களுக்குத் தேவைப்படும் சில பொருள்களை இறக்குமதி செய்யத் தொழில் நுட்ப வளர்ச்சித் துறைத் தலைமை இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மேற்படி வழிகாட்டிச் சாதனங்களும் வாங்கப்படும்.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1973 டிசம்பர் முடிய ரூ. 27.2699 கோடி மொத்தமாகவும் ரூ. 17.0201 கோடி நிகரச் செலவாகவும் செலவிடப்பட்டுள்ளது.

இந்திய அரசின் கப்பல்-போக்குவரத்து அமைச்சகம் தயாரித்த கால வரையறை விளக்கப் படத்தின்படியும், ஒப்பந்தக்காரர்கள் ஒப்புக்கொண்டபடியும், துறைமுகம் 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கருப்பா நதித் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சொக்கம்பட்டி கிராம எல்லையில் கருப்பா நதிக்குக் குறுக்கே 18·50 கோடி கனஅடி கொள்ளளவுள்ள நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டமே கருப்பா நதித் திட்டமாகும். கருப்பா நதியின ஆறு அணைக்கட்டுப் பாசன ஏற்பாடுகளின்கீழ் தற்போது பாசனம் பெற்று வரும் 7,867 ஏக்கர் பரப்பளவில் நீண்ட காலப் பயிர்களுக்கும் 796 ஏக்கர் குறுவைப் பயிர்களுக்கும் பாசன வசதி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்துடன் இதுவரை பாசனம் பெருத 1,647 ஏக்கர் பரப்பளவில் நீண்டகாலப் பயிர்களுக்கும் குறுவைப் பயிர் விளைவிக்கப்படும் 1,228 ஏக்கர் நிலத்திற்கும் பாசனம் அளிப்பதும் இதன் குறிக்கோளாகும். மண் அணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

ஆற்று மதகுப் பகுதியிலும் உபரி நீர்க்கால் பகுதிகளிலும், கடைக்கால் போடும் பணிகள் நடந்தேறி வருகின்றன. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 220 லட்சமாகும். இவ்வாண்டு கருப்பா நதித் திட்டத்திற்காக நமது அரசு ரூ. 61·70 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



# எழில் கொழிக்கும் மலர்க்காட்சி!

கண்ணைக் கவரும் வண்ணங்களுடனும், மனத்தைக் கிளறும் மணத்துடனுமுள்ள மலர்களைக் கண்டால், காண்பவரின் மனோநிலை எப்படி மாறும்?

ஒரு பக்தன் கண்டால், அவைகளைப் பறித்து 'ஆண்டவன் வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாமே' என்று பரவசப்படுகிறான்.

ஒரு தாய் கண்டால், அவைகளைப் பறித்துத் தன் குழந்தைக்குச் சூட்டி அழகு பார்க்க விரும்புகிறாள்.



ஒரு கணவன் கண்டால், அவைகளைப் பறித்துத் தன் மனைவியின் தலையில் வைத்து மகிழ விரும்புகிறான்.

ஒரு காதலன் கண்டால், அம்மலர்களைத் தன் காதலியின் கூந்தலிலே சூட்டினால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து மகிழ்கிறான்.

ஓர் அத்தர் வியாபாரி கண்டால், அம்மலர்களில் உள்ள நறுமணப் பொருள்களைப் பிரித்து, 'அத்தர்', 'சென்டு' முதலிய மண எண்ணெய் எடுத்துப் பெரும் செல்வம் சேர்க்கலாமே என்று பேராசைப்படுவான்.

ஒரு விஞ்ஞானி கண்டால், அம்மலர்களில் 'எத்தனை புல்லி வட்டம் உள்ளது? எத்தனை அல்லி வட்டம் உள்ளது? மகரந்தச் சேர்க்கை எப்படி நடைபெறுகிறது?' என்று ஆராய்வதுடன், மலர்களில் உள்ள மணத்தைப் பெருக்கவும், வண்ணங் கூட்டவும் ஆராய்ச்சி செய்ய விரும்புகின்றான்.

இவர்கள் அத்தனை பேர்களுமே ஒரு வகையில் சுயநலக்காரர்கள்தாம்! ஆனால் நீலகிரி வேளாண்மை-தோட்டக்கலைத்

கழகத்தினர் (Agri-Horticultural Society) ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பரந்த விரிந்த மனப்பான்மையுடனும், பொதுநல நோக்குடனும் பலவகைப்பட்ட பூக்களைக் கொண்டு வந்து அழகு மிளிர அமைத்து மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கவும், கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கவும் மலர்க்காட்சியை ஆண்டுதோறும் கடந்த 79 ஆண்டுகளாகத் தொடர்ந்து உதகையிலுள்ள அரசினர் தாவரப் பூங்காவில் நடத்தி வருகின்றனர். இது, பாராட்டப்பட வேண்டிய செயலாகும்!

ஆண்டுதோறும் மே திங்களில் உதகையில் நடைபெறும் மலர்க் கண்காட்சி நம் நாட்டு மக்களையும், வெளிநாட்டு மக்களையும் பெரிதும் கவர்ந்து வருகின்றது. எனவேதான், இம் மலர்க் கண்காட்சிக்கு ஆண்டுதோறும் மக்கள் பெருமளவில் திரண்டு வருகின்றனர்.

இம்மலர்க் கண்காட்சியின் நோக்கம் என்னவென்றால், மலர்ச்செடிகளை வளர்ப்பதில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதும், புத்தம் புதிய மலர் வகைகளையும், ஏற்றுமதிக்கு ஏற்ற மலர்வகைகளையும் புகுத்துவதுமேயாகும்.

மிகக் குளிர்ந்த நாட்டு மலர்கள், சம தட்ப-வெப்பநிலையில் அமைந்துள்ள நாட்டு மலர்கள் வெப்ப நாட்டு மலர்கள் ஆகிய அனைத்தும் நீலமலையில் பயிரிடப்படுகின்றன. நீலமலை, பல வகைத் தட்ப-வெப்ப நிலைகளைக் கொண்டுள்ளதால், உலகின் பல நாடுகளில் பயிராகும் மலர்களெல்லாம் நீலமலையில் பயிரிடுவதற்குரிய பொருத்தமான இயற்கைச் சூழ்நிலை அமைந்துள்ளது. இது நீலமலைக்கே உள்ள சிறப்பாகும்!

புத்தம் புதிய மலர்வகைகளையும், அவைகளை வளர்ப்பது பற்றிய தொழில் நுட்பங்களையும், மலர்கள் பற்றிய அறிவியல் அடிப்படைகளையும் தெரிந்து கொள்ள உதகையில் நடைபெறும் மலர்க்காட்சி வழி செய்வதோடு, ஏற்றுமதிக்கு ஏற்ற புத்தம் புதிய மலர் வகைகளைத் தமிழ் நாட்டில் பயிரிட வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, உதகை மலர்க்காட்சி, மனத்திற்கு மகிழ்ச்சியும், கண்ணிற்குக் குளிர்ச்சியும் கொடுப்பதுடன், நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் உதவுகிறது.

மலர், மக்களுடைய் வாழ்க்கையை ஒட்டியது என்று சொல்லலாம்! 'மலர்க் கண்காட்சி' தமிழகத்திற்குப் புதிதல்ல! பழந்தமிழ் இலக்கியங்களில் மலர்க் கண்காட்சி பற்றிப் பேசப்பட்டுள்ளது. மலர்கள், அதுவும் சிறப்பாக மணமுள்ள மலர்கள், தமிழர்கள் வாழ்வில் பெரிதும் இடம் பெற்றுள்ளன. நல்ல நிகழ்ச்சிகளுக்கும், துக்க நிகழ்ச்சிகளுக்கும் மலர்களைப் பயன்படுத்துவது தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்கமாகும்!

தமிழ்ப் புலவர்கள் பெண்ணை வர்ணிக்கும்போது 'பூங்கொடி' என்றும், கண்களைக் 'குவளைக் கண்கள்' என்றும், பற்களை 'முல்லைப் பற்கள்' என்றும் வர்ணித்துள்ளனர். பெண்ணைப் 'பூவை' என்று குறிப்பிட்டனர் தமிழ்ப் புலவர்கள், பெண்களின் மெல்லிய விரல்களைக் 'காந்தள் மலர்'களுக்கு ஒப்பிட்டனர்! பெண்களின் பாதங்களைக் குறிப்பிடும்போது 'அனிச்சம் மலர்களைவிட மென்மையானது' என்று வர்ணித்தனர்! தொன்றுதொட்டே தமிழகத்தில் கல்விக்கு வெண்தாமரையையும், செல்வத்திற்குச் செந்தாமரையையும், வெற்றிக்கு வாகை மலரையும் அடையாளமாகக் குறிப்பிடும் பழக்கம் இருந்து வந்துள்ளது. பழந்தமிழ் நாட்டில், போர்க்களங்களில் வீரர்களும், அரசர்களும், 'வெட்சி', 'தும்பி', 'வாகை!', முதலிய பூக்களைச் சூடியே போரிட்டனராம்! இதனால் தமிழ் நாட்டில் மிகப் பழங்காலத்திலிருந்தே மலர்களிடம் மிகுந்த ஈடுபாடும், மதிப்பும் இருந்து வந்தது என்பது புலனாகிறது.

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் 'தேசிய மலர்' (National Flower) உள்ளது. நம்நாட்டின் தேசிய மலராகத் தாமரை விளங்குகிறது!



பழங்காலத்திலேயே தமிழகத்தில் செடிகளும், கொடிகளும் மரங்களும் பூத்துக் குலுங்கும் வசந்த காலத்திலேதான், அரசர்கள் ''வசந்த விழா'' நடத்தினர். அவ்விழாவிலே, எண்ணற்ற வண்ண நறுமண மலர்கள் பெரிதும் இடம் பெற்றன என்றெல்லாம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே மலர்க்கண்காட்சி தமிழகத்திற்குப் புதியதல்ல! மலர்கள், தமிழர் வாழ்வில் பெரிதும் இடம் பெற்றதனாலேயே தமிழ்நாட்டு கோவில்களிலும், அரண்மனைகளிலும் ''நந்தவனங்கள்'' அதாவது ''பூத்தோட்டங்கள்'' ஏற்படுத்தப்பட்டுள்ளன. அறிவியல் வளர்ந்துள்ள இன்று நாம் பூத்தோட்டங்களையும், மலர்க் கண்காட்சிகளையும் அமைப்பதில் விந்தையில்லை. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நந்தவனங்கள் அதாவது பூத்தோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்றால் தமிழர்கள் எவ்வளவுதூரம் மலர்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

பலவகைச் சாகுபடி வேலைகளும் முடிந்தபின், வசந்த காலத்தில் ஏற்படுத்தப்படும் இத்தகைய மலர்க் கண்காட்சி காணவரும் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும், புதிய பொலிவையும் ஏற்படுத்துகிறது. மலர்க்காட்சி காண வருவோர் தங்கள் இன்னல்களையெல்லாம் மறந்து இன்ப நினைவிலே திளைக்கிறார்கள். எனவே, மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும் 'மலர்க்கண்காட்சி மிகவும் முக்கியமானதொன்றாக விளங்குவதில் வியப்பில்லை!

ரோஜாவிலிருந்து அத்தரும், மல்லிகை, முல்லை போன்றவைகளிலிருந்து மணமிகு எண்ணெய்யும் எடுக்கப்படுவதைப் பலர் அறிந்திருக்கக்கூடும்; ஆனால் மலர்களிலிருந்து எடுக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்பட்ட 1 பவுண்டு எண்ணெய் 15,000 ரூபாய் வரை விற்கிறது என்பது பலருக்குத் தெரியாது! வாசனை எண்ணெய் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் பிரான்சு நாடு செல்வச் செழிப்புடன் இருக்கிறது!



சின்னஞ்சிறு நாடான இஸ்ரேல் மலர்களின் மூலம் நல்ல வருவாய் பெற்று வருகிறது. எனவே, நாமும் மணமுள்ள மலர்களை அதிகம் பயிரிட்டு மண எண்ணெய் உற்பத்தி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டித்தர வேண்டியது நாம் ஒவ்வொருவரும் நாட்டிற்குச் செய்யும் கடமையாகும்!

மலர்கள் அதிகமாக உற்பத்தியானால்தேன்உற்பத்தியும்பெருகும். இதனால் சிறுகைத் தொழிலான 'தேனீவளர்ப்பு'ம்பெருகும். தேனீக்கள் பெருகினால், இனியதேன்கிடைப்பதோடல்லாமல், குறிப்பாகப் பழமரங்களில்அயல்மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டுப் பழ உற்பத்தியும் பெருகும்! எனவே, மலர்கள் உற்பத்தியைப்பெருக்கித்தேன் உற்பத்தியைப் பெருக்க நாம் அனைவரும்முயற்சி செய்திடல் வேண்டும்.

ஜப்பான் போன்ற நாடுகளில் பூச்செடிகள்இல்லாதவீடுகளைப் பார்க்க முடியாது! ஏழையோ, பணக்காரரோ,தொழிலாளியோ முதலாளியோ அனைவரும் ஓய்வு நேரத்தில் பூத்தோட்டங்களில் அமர்ந்துமணமிக்கபூங்காற்றை அருந்தி, வண்ண மலர்களைக் கண்டுகளிப் பெய்துகின்றனர். இதனால் அவர்கள் புத்துணர்ச்சியும்புதியபொலிவும்பெறுகிறார்கள். ஆகவே, நாமும் கூடுமானவரை உணவு உற்பத்திக்கு இடையூறு இல்லாத வகையில், மலர்கள் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

பலவகை மலர்கள் மருத்துவ துறையிலும் பயன்படுகின்றன. எடுத்துக் காட்டாக, ரோஜாப்





பூவை எடுதுதுக் கொள்ளுங்கள். இது மிகப் பழங்காலந் தொட்டே மருந்துப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ரோஜாப் பூவிலிருந்து அத்தர் (Rose Water) தயாரிக்கலாம் என்பதை முகலாயப் பேரரசர் ஜகாங்கீர் மனைவி நூர்ஜகான் கண்டு பிடித்ததாகக் கூறப்படுகிறது. அத்தர், கண்ணின் வெப்பத்தை தணிக்கப் பயன்படுகிறது. ரோஜாப் பூவிதழ்களிலிருந்து தயாரிக்கப்படும் 'குல்கந்து' வயிற்றுக் கடுப்பினைத் தடுக்க உதவுகிறது. ரோஜாத் தேன், தொண்டைப் புண்ணிற்கும், ஈற்றுப் புண்ணிற்கும் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. 'ரோஜா வினிகார்' தலைவலியையும், நரம்பு வலியையும் குணப்படுத்துகிறது. 'நந்தியாவட்டை''ப் பூவை எடுத்துக் கொள்ளுங்கள். வெள்ளை வெளேறென்று அழகாக இருக்கும்! இப் பூவைக் கண்ணில் ஏற்படும் புள்ளிகளைப்போக்கப் பயன்படுத்துகிறார்கள். அது போல் தலை வெட்டிப் பூ (Tridax) என்பது சாதாரணக் களைச் செடியின் பூவாகும். வெட்டுக் காயங்களுக்கு இப் பூவைக் கசக்கி வைத்துக் கட்டினால் காயம் விரைவில் ஆறி விடும். இப்படிப் பல பூக்கள் நல்ல மருந்துகளாகப் பயன் படுகிறது.

எனவே, இப்படிப்பட்ட பல் வேறு பயன் தரும் மலர்களைக் காட்சிகளில் அமைத்து, மக்கள் மகிழ்ச்சியடைய நீலகிரி வேளாண்மை-தோட்டக் கலைக் கழகத்தினர் ஆவன செய்து வருகின்றனர். இக் கழகத்தினர் ''டுலீப்'', ''ஆர்கிட்ஸ்'' ''செரிபிளாசம்'' போன்ற வெளி நாட்டு மலர்களை இக் கண்காட்சியில் இடம் பெறச் செய்தால், நம் நாட்டினரும் வெளி நாட்டினரும் மலர்களைக் காணும் வாய்ப்பு ஏற்படும்!

துப்புரவு, நல்வாழ்வு (சுத்தம், சுகாதாரம்) ஆகியவற்றோடு மலர்கள் இணைந்துள்ளன! வீடுகளை அழகுபடுத்துவதற்கும், மன மகிழ்ச்சி யூட்டுவதற்கும், மலர்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். மன நிறைவை—மனமகிழ்ச்சியை ஏற்படுத்துவது என்பது எளிதான செயலல்ல! ஆனால் இவ்வரிய செயலை மலர்கள் எளிதில் செய்கின்றன! மன நிலைக் கோளாறுகளைச் சரிப்படுத்த மலர்கள் அருமருந்தாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது!

நம் நலன் கருதி, நாட்டின் வளம் கருதி, வீடுதோறும் மலர் பயிரிட்டு மனமகிழும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளத் தூண்டுகிறது உதகை மலர்க்காட்சி. ஆகவே, உதகையில் மே திங்களில் உதகை அரசினர் தாவரப் பூங்காவில் நடைபெறவிருக்கும் மலர்க் காட்சியையும், அடுத்த நாள் குன்னூரில் நடக்கும் பழக் காட்சியையும் கண்டு களிக்க வாரீர்! என அன்புடன் அழைக்கின்றோம்.

—ஆர். எம்.



255

# மின்னியல் உலகில் முன்னணி



வானொலிப் பெட்டிக்கான ஒரு உபகரணப் பகுதி

**கீ**ண்டித் தொழிற்பேட்டை!

வகை வகையான வளரும் சிறு தொழில்கள் ஒருங்கே இணைந்த மையம்!

உழைக்கும் கரங்களை நம்பியே இந்த உலகம் வாழ்கிறது என்பதனை உணர்த்தும் ஓர் உன்னதமான இடம்!

எல்லாத் திறத்தாரும் ஒன்று பட்டு உழைத்திடும் ஒருமைப் பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு!

உழைப்பாளர் உலகமான இந்தத் தொழிற்பேட்டைக் குள் செல்கிறோம். எங் கிருந்தோ இன்னிசை காற்றிலே மெல்ல மிதந்து வருகிறது. இசை வரும் திசை நோக்கி நம் கால்கள் நடக்கின்றன.

அந்தக் கட்டடத்தினுள்ளே ஆடவரும் மகளிரும் கருமமே கண்ணுயக் காட்சியளிக்கின்ற னர். அவர்கள் கரங்கள் நுண்ணிய கருவிகளை இணைப் பதிலே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. நம் கண்கள உழைக்கும் கரங்களை உற்று நோக்குகின்றன.

அங்கே வானொலிப் பெட்டி கள் வடிவம் பெற்றுக் காட்சி அளிப்பதைப் பார்க்கிறோம்.

நாம் அன்ருடம் எத்தனையோ பொருள்களை உபயோகிக்கி ரோம். ஆனல், அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள நமக்கு நேரம் இருப்பதில்லை என்கிரோம்.

பென்சிலால் — பேனவால் எழுதுகிரோம். இது யாரால், எப்போது கண்டுபிடிக்கப்பட் டது என்பது நமக்குத் தெரி யாது. ரயிலில் வருகிரோம் போகிரோம். இதன் கதை நமக்குத் தெரிவதில்லை. எல் லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வந்தாலொழிய, நமக் குப் 'பொது அறிவு' என்பது வெறும் புதிராகவேதான் இருக் கும்!

இன்று வானொலி இல்லாத இடமோ இல்லமோ இல்லை எனலாம். ஏனென்றல் அது உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் அரிய சாதனம்.

கையில் கைப்பை இருக்கிற தோ இல்லையோ இன்று கைக் குள் அடங்கும் 'மினி' ரேடியோ கட்டாயம் காட்சி யளிக்கும். சில இசைப் பிரியர் கள் பஸ்சில், ரயிலில் ஏன் சாலையில் நடந்து செல்லும் போது கூடக் கையில் டிரான் சிஸ்டரை எடுத்துச் செல்லத் தவறுவதில்லை.

இப்படி வீட்டிலும் வெளியி லும் காட்சி தரும் இந்த வானொலிப் பெட்டிகளில்தான் எத்தனை வகைகள்! சிறு சேமிப்பு மாதிரி சிறுகச் சிறுக நுண்ணிய உபகரணங்களை ஒன்று சேர்த்து, இறுதியில் இன்னிசை எழுப்பும் அழகிய வானொலிப் பெட்டிகள் உருவா கும் விந்தையை ரீசா (Resa) என்னும் வானொலிப் பெட்டித் தொழிற்சாலையில் பார்க்க முடி கிறது.

'ரீசா' என்பது எவருடைய பெயரையும் குறிக்கவில்லை என்பது. இந்த நான்கு எழுத் துக்களில் அடங்கியிருக்கும் பொருளை அறியும் போதுதான் உணர முடிகிறது. அதுதான் : Radio Electrical Sound Appliances.

முதலில் 12 பேரைக் கொண்டு தொடங்கப் பெற்ற இந்த சிறு தொழில் இன்று 135 பேர்கள் பணியாற்றும் அளவுக்கு நன்கு வளர்ந்திருக் கிறது. இத் தொழிலில் பெண் களுக்கும் வாய்ப்பு தந்திருப் பதைப் பாராட்ட வேண்டும். சுமார் 40 பெண்கள் இங்குப் பணி புரிகின்றனர்.

1948-ல் நிறுவப் பெற்ற இந்தச் நிறுவனம் மின்னியக்க உலகில் புகழ் பெற்ற ஒன்ருக விளங்குகிறது. முதலில் ஆண் டொன்றிற்கு சில நூறு எண் ணிக்கைகள்தான் தயாரிக்கப் பெற்றன. ஆனல், இன்று ஆண்டொன்றிற்கு 10,000-க் கும் மேற்பட்ட எண்ணிக்கை கள் தயாரிக்கப்பட்டு வருகின் றன. பெரிய, சிறிய அளவு வானொலிப் பெட்டிகள் தவிர, திரைப்படக் கருவிக்குரிய ஒலி பெருக்கிகள் (Amplifiers for Cinema Projector) மின் பகுப்பு மின்விசையேற்றிகள் (Electrolytic Condensers) போன்ற வைகளும் தயாரிக்கப்படுகின் றன. தரத்திலும், வளர்ச்சி யிலும் இங்கு மிகவும் கவனம் செலுத்தப்படுகின்றது. இங்குத் தயாரிப்பு வகைகளிலும், கலை நுணுக்கங்களிலும் மேம்பாடு காணுகின்ற வகையில் 'தொழில் நுட்பப் பிரிவு' நவீன வளர்ச்சிக்கு இணையாகச் செயல்படுவதை நாம் குறிப் பிட வேண்டும்.

வானொலிப் பெட்டிகளுக்கு வடிவமைப்பது, அதற்குத் தேவையான உபகரணங்களைச் செய்தல் போன்ற பிரிவுகள் இங்குள்ளன. இவை தவிர மின் இயக்கக் கம்பிச் சுருள் (Coil), மின்னுற்றல் பயன்படுத் தும் கம்பியில்லாத் தந்திக்குரிய கருவி வகை (Eliminator) மின்விசையேற்றி (Condenser) ஆகியவையும் இங்குத் தயாரிக் கப்படுகின்றன.

இவையன்றி,. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்சுக்குத் தேவை யான மின்னியல் விசை மாற் றமைவு (Transformer)களையும், மின் இயக்கத்துக்குரிய மின் விசையேற்றி (Electronic Condenser) களைப் பெங்களூர் தொலைபேசித் தொழிற்கூடத்



▲ டேப்ரிக்கார்டுகள் உருவாகின்றன

► தொழிற்கூடத்தின் ஒரு பிரிவு

▼ வானொலிப் பெட்டிகள் தரம் பரிசோதிக்கப்படுகிறது



துக்கும் இங்கிருந்து தயாரித்து அனுப்பப்படுகிறது. மின்விசை யேற்றிகளைத் தயாரிப்பதில் இங்குள்ள பிரிவு, தென்னிந்தியாவிலேயே இரண்டாவதாகத் திகழ்கிறது—சென்னை மாவட்டத்திலேயே முதலாவதாக விளங்குகிறது. வானொலிப் பெட்டிக்கு முக்கியமாகத் தேவைப்படும் ஒரு உபகரணப் பிரிவாகும் இது. ஒரே சமயத்தில் ஆறு மின் இயக்கக் கம்பிச் சுருளைத் தயாரிக்கும்இயந்திரம் ஒன்று இங்குள்ளது. இது இந்தியாவிலேயே அமைக்கப்பட்டிருக்கும் மூன்ருவது இயந்திரமாகும்.

இன்றைய மின்னியல் வளர்ச்சி உலகில் இந் நிறுவனம் ஸ்டைரோபிளக்ஸ் மின் விசையேற்றி (Styroflex Condenser), மின்னழுத்த ஆற்றல்மானி (Potentiometers) போன்ற புதிய கருவிகளையும், மற்றும் தொலைக் காட்சி (Telivision), தொழிலியல் மின்னியல் கருவிகளையும் இந் நிறுவனம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இங்கு உருவாக்கப்படும் வானொலிப்பெட்டிகள் சென்னை மாநகராட்சிப் பூங்காக்களிலும் தமிழ் நாட்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மாநகராட்சி பூங்காக்களுக்கு 41 வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களுக்காக ஆண்டுக்கு 2,000 வானொலிப் பெட்டிகள் தயார் செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டில் ஊராட்சிகளுக்கு அதிக அளவில் வானொலிப்பெட்டிகளை வழங்கியதில் இந் நிறுவனமே முதலாவதாகத் திகழ்கிறது.



▲ 'டிரான்ஸ்பார்மர் வைண்டிங்' பிரிவு

இங்கு உருவாகின்ற வானொலிப் பெட்டிகள் ஆப்பிரிக்கா, நைஜீரியா போன்ற மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. 1973-ல் 1,500 வானொலிப் பெட்டிகள் இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் ஆந்திரம், கேரளம், கர்நாடகம், உத்தரப்பிரதேசம், குசராத், நாகாலாந்து, திரிபுரா முதலிய மாநில அரசுகளுக்கும் இந்த வானொலிப் பெட்டிகள் அனுப்பப்படுகின்றன.

இந்தியாவிலேயே சிறு தொழிலில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்தத்தொழிற் கூடத்தில் நாடாப் பதிவுக் கருவிகளும் (Tape Recorder) தயாரிக்கப்படுகின்றன. நூதன இணைப்புகளுடன் கூடியது இந்த 'டேப் ரிகார்டர்'.

வானொலிப் பெட்டி இணைப்புப் பிரிவு ▼



ஒவ்வொரு பிரிவிலும் தரம் பரிசோதிக்கப்பட்டு உருவாக்கப்படுவதால், இங்குத் தயாராகும் பொருள்களுக்குக் குறிப்பாக வானொலிப் பெட்டிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இவ்வாண்டு 4,000 ரேடியோக்களும், 4,000 டேப் ரிகார்டர்களும் தயாரிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் அதாவது ரூ. 60-க்கு ஒரு 'மினி' ரேடியோவை—'பாக்கெட் ரேடியோ'வைத் தயாரிக்கவும் இந் நிறுவனம் திட்டமிட்டு மாதிரிக்காக ஒன்றைச் செய்திருக்கிறது. அடுத்த மாதத்திலிருந்து இவை தயாரிக்கப்படுமாம். ஒரு டிரான்சிஸ்டர் குறைந்த விலை ரூ. 165லிருந்து அதிக விலை ரூ. 800 வரை உள்ளது.

அன்ருடச் செய்திகளையும்—நாட்டு நடப்புகளையும்—உலகப் போக்குகளையும் நமக்குச் சொல்லும் நண்பனாக வானொலிப்பெட்டிகள் இருந்து வருவதை நாமறிவோம்.

சிறுகதை, நாடகம், கவிதை, இலக்கியம் போன்ற நிகழ்ச்சிகளும், மாணவர், தொழிலாளர், மகளிர், சிறுவர் ஆகியோருக்கான ஒலிபரப்புகளும், சொற்பொழிவுகள், பேட்டிகள், இன்னிசைகள், அறிவிப்புகள், செய்திகள் முதலானவைகளும் நமக்கு நாள்தோறும் வானொலி படைக்கும் விருந்து ஆகும். இந்த விருந்தை, இருந்து சுவைக்க நம் வீட்டிலும் ஒரு வானொலிப் பெட்டி ஒலிக்கட்டும்!

—பி.வி.ஜி.



# தெரிந்து கொள்ளுங்கள் மே நாள்

**மே** முதல் நாள்!

தொழிலாளர் இனத்துக்கு உவகை தரும் நாள்.

உலகம் முழுதும் உள்ள தொழிலாளர்கள் இந்த நாளைக் கொண்டாடுகிருர்கள். ஒரு நாட்டின் விடுதலைநாள் விழா, குடியரசு நாள் விழா போன்ற தேசிய நாட்கள் எவ்வளவு சிறப்புப் பெற்றிருக்கின்றனவோ அதுபோல மே நாளும் உலகச் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இந்த விழாவின் பொருள் என்ன? ஏன் இது கொண்டாடப்படுகிறது?

நாள்தோறும் 12 மணிநேரம் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் தங்கள் அலுவல் நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று போராட்டம் செய்து, வெற்றி பெற்றது இந்த மே நாளில்தான்! ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பு! அமெரிக்க நாட்டில் தொழிலாளர்கள் நாள்தோறும் 16 மணிநேரம் அலுவல் பார்த்து வந்தார்கள். உழைக்கும் இனத்தின் உள்ளத்தில் குமுறல் ஏற்படத் தொடங்கியது. அலுவல் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறத் தொடங்கினர்.

1837ல் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த வான்ப்யூரன், அரசு அலுவலங்களில் வேலை செய்வோர் 10 மணிநேரம் வேலை செய்தால் போதும் என்ற சட்டத்தை அறிமுகப் படுத்தினர். அவரது சட்டத்தைப் பின்பற்றிச் சில தொழிற்சாலைகள் 10 மணி நேர வேலைத் திட்டத்தை அமல் நடத்தின.

''பத்து மணி நேர அலுவல் கூட அதிகம் எட்டு மணி நேர அலுவலே நிர்ணயிக்கப்பட வேண்டும்''– என்று தொழிலாளர்கள் போராட்டம் செய்தார்கள்.

போராட்டம் மாபெரும் ஆர்ப்பாட்டமாக மாறியது. முதலாளிகள் அதனை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். துப்பாக்கிகள் பயன் படுத்தப்பட்டன. 6 தொழிலாளர்கள் இறந்தனர். எண்ணற்ற தொழிலாளர் காயமுற்றனர். இந்த அடக்கு முறையைக் கண்டிப்பதற்காக 'ஹேய் மார்க்கெட்' என்ற இடத்தில் முப்பதாயிரம் தொழிலாளர்கள் ஒன்று கூடினர். அவர்கள் மீதும் அடக்குமுறை பயன்படுத்தப்பட்டது. மிகப் பலர் கைதாகினர். அவர்களில் பலரது தலைகள் கொய்யப்பட்டன.

அதன்பின்னர் 1888ல் அமெரிக்காவில் தொழில்கூட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாடு, எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தியது. பாரிஸ், பிரஸ்ஸேல்ஸ் ஆகிய இடங்களில் கூடிய தொழிலாளர் மாநாடுகளும் அமெரிக்க மாநாட்டின் கருத்தை ஏற்றுக் கொண்டன. அந்தப் போராட்டங்கள் யாவும் மே திங்களில் நடைபெற்றதால் மே நாள் போராட்டம் என்று பெயர் பெற்றன. மிகுந்த இன்னல்களுக்குப் பின்னர் இந்தப் போராட்டத்தில் வெற்றி கிட்டியது.

1904-ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாமில் கூடிய தொழிலாளர் மாநாட்டில் ''இனிமேல் ஒவ்வொரு மே மாதம் முதல் நாளன்றும் இவ் விழாவைக் கொண்டாட வேண்டும்'' என்று முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவில், சிறிது காலம் வரை மே முதல்நாள், 'குழந்தைகள் நலன் நாளாக'க் கொண்டாடப்பட்டது. சிலர், ''முதலாளி ஒழிப்பு நாள்'' என்றும் கொண்டாடி வந்தார்கள். அன்று அமெரிக்காவில் மட்டும் கொண்டாடப்பட்ட இந்த நாள் இன்று உலகப் பெரும் நாளாகத் திகழ்கிறது.

தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்கும் நாளாக மே நாள் விளங்குகிறது. எந்த ஓர் அரசியல் கட்சிக்கும், சொந்தமானதல்ல இந்த நாள்! சாதி, சமயம், நாடு, மொழி என்ற வேற்றுமையின்றி அனைத்து நாட்டவராலும் கொண்டாடப்படும் இந்த மே நாள் அனைத்துலக விழா நாள் என்பதில் ஐயமில்லை.

தொழிலாளர்களைப் பெருமைப் படுத்தும் வகையில், மே நாளை, சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாளாக்கியுள்ளது தமிழ் நாடு அரசு.

— த. பி.

# எரிமலை தரும் எண்ணற்ற செல்வம்!

எரிமலைகள் பயங்கரமானவைதாம்; ஆனால் அன்னை பூமியின் அடி வயிற்றில் நடைபெற்றுவரும் பல்வேறு செயல்கள் பற்றிய அளப்பரிய செய்திகளை நமக்கு அறிவிக்கும் ஆசிரியர்களும் அவைதானே!

1950-ஆம் ஆண்டுகளின் தொடக்கம் வரை, போதுமான விஞ்ஞான, தொழில் நுட்பச்சாதனங்கள் இல்லாததால், எரிமலைகளின் புற அம்சங்களைக் குறித்தே—எரிமலைக் குழம்பு, கற்கள், பாறைகள், சாம்பல் ஆகியவற்றைப் பற்றி மட்டுமே நாம் ஆராய்ந்து வந்தோம். ஆனால், இன்றோ, மிகத் துல்லியமான நில நடுக்கப் பதிவுக் கருவிகள், புவி—பௌதிக முறைகள் ஆகியவற்றின் உதவியால், 100 கிலோ மீட்டர் ஆழத்திற்கும் அதிகமான பாதாளத்திலிருந்து கிளம்பும், உருகிய 'மாக்மா' எனப்படும் குழம்புகளையும், அவற்றின் இருப்பிடத்தையும், நடத்தைகளையும் நாம் ஆராய முடிகிறது.

நவீன மதிப்பீடுகளின்படி, நமது பூமிக்கு 600 கோடி ஆண்டுகள் வயதாகிறது. இந்த 600 கோடி காலத்திலும், எரிமலைக் கொந்தளிப்புகள் குறைந்து தான் வந்துள்ளனவேயன்றி அதிகரிக்கவில்லை. எனினும், அவற்றின் தீவிரத் தன்மையில் சில ஏற்றத் தாழ்வுகள் இருந்துள்ளன. ஆனால் இதன் பொருள், நமது பூமி மெல்ல மெல்லச் 'செத்துக்' கொண்டு வருகிறது என்பதல்ல; பூமியில் மனித வாழ்வுக்கான சூழ்நிலைகள் மேன்மேலும் சாதகமாக ஆகி வருகின்றன என்பதே இதன் பொருளாகும்.

எரிமலைக் கொந்தளிப்புகள் ஏற்படும்போதெல்லாம், கடந்த காலத்தைப் போன்றே, தற்காலத்திலும் அவை பூமியின் பல்வேறு போக்குகளில் பெரும் செல்வாக்கையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன என்று ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டியுள்ளன.

வாயு மண்டல இயைபிலும், கடலிலுள்ள நீரின் இயைபிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகக் கடல் நீரிலுள்ள குளோரின் அயனிகள் எரிமலைகளின் மூலம் வந்தவையே. கடல் மட்டத்திற்கடியில் ஏற்படும் எரிமலை வெடிப்புகளின்போது அந்த வாயுக்கள், நீரில் சேகரமாகின்றன. எனவே, உப்புப் பாறைகளில் தேங்கியுள்ள குளோரைடு—வேறுவிதமாகக் கூறப்போனால் நாம் உட்கொள்ளும் சாதாரண உப்பு, (சோடியம் குளோரைடு) எரிமலைகளிலிருந்து தோன்றியவையே!

மேலும், தாமிர பைரட்டுகள் சில சந்தர்ப்பங்களில் மாங்கனீஸ் தாதுக்கள், பாஸ்போரைட்டுக்கள், பாக்லைடுகள் மற்றும் இதர சில உலோகங்களின் தோற்றத்திற்கும், எரிமலைக் கொந்தளிப்புகளுக்கும் தொடர்புண்டு என்று ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகின்றன.

பூமியின் பாறைப்படிவ உறையில் நடைபெறும் எரிமலை நடவடிக்கைகளின் பயனாகத் தோன்றும் கொதி நீர் ஊற்றுக்களின் விளைவால், அரிய பல தாதுக்கள்—தங்கம், வெள்ளி, தாமிரம், காரீயம், பாதரசம் ஆகியவை உருவாகியுள்ளன!

இவ்வாறு கூறுகிறது ஒரு சோவியத் ஆராய்ச்சிக் கட்டுரை.


## விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1513TMA


# அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரி



சென்னையில் வியாசர்பாடியில் ரூ. 16 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள அம்பேத்கார் கலைக்கல்லூரிக் கட்டடத் திறப்பு விழா 14-4-74 அன்று சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் சை. வே. சிட்டிபாபு அவர்கள் வரவேற்புரையாற்றினார். மின்சாரத் துறை அமைச்சர் ஓ.பி. இராமன் அவர்கள் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டார். அதனுடைய முதல் படியினை முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

டாக்டர் அம்பேத்கார் சிலையினை அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்திய வாணிமுத்து அவர்கள் திறந்து வைத்தார். தமிழ்நாடு கல்வி. சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரிக் கட்டடத்தினைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவில் திரு. ஏ.எல். சீனிவாசன், திரு. ஜீ. குசேலர், திரு பி. சிவசங்கரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையின் சில பகுதிகள் வருமாறு:

இன்று நம்முடைய அகமெல்லாம் மகிழ்ச்சியால் பூத்துக் குலுங்குகின்ற அளவுக்கு பெரியதொரு விழாவில் கலந்துகொண்டிருக்கிறோம். மாமேதை அம்பேத்கார் அவர்களுடைய பெயரால் தமிழக அரசின் சார்பில் கலைக்கல்லூரி ஒன்றினை இந்த இடத்திலே நிறுவி, எழில் வாய்ந்த கட்டடத்தை அமைத்து அதைத் திறந்து வைக்கின்ற இனிய திருவிழா இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விழாவில் உணர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் இந்த வட்டாரத்து





கைந்து ஊர்களுக்குச் சேர்ந்து ஓர் ஆரம்பப்பள்ளி; ஆறுமைல் தொலைவில் போனால் உயர் நிலைப்பள்ளி உண்டு; ரயிலையும் பார்க்கலாம்; மின்சார விளக்கு வெளிச்சத்தைப் பார்க்கவும் அங்கேதான் போக வேண்டும். பஸ் ஓடுவதும் அந்த ஊரில்தான்!

பெருங்குடியிலிருந்து ஆறு மைல் நடந்துபோய் உயர்நிலைப் பள்ளியில் படித்தவர்கள்தான் தங்கவேலுவும், அருச்சுனனும்.

பள்ளிக்கூடம் போகுபொழுதும் திரும்பி வரும்பொழுதும் தங்கள் ஊரை எப்படி மேம்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியே கனவுகண்டு வருவார்கள்.

அந்த நினைவுகள்தான் எவ்வளவு சுவையானவை.

தங்கவேலுவுக்குப் பெற்றோர்கள் கிடையாது. அவன் அப்பா கண்ணை மூடும்பொழுது முக்கால் ஏக்கர் நிலத்துடன் தன் பிள்ளையைத் தம்பியிடம் ஒப்படைத்துச் சென்றார்.

தங்கவேலுவின் சித்தப்பா அடைக்கலம், தன் பெயருக்கேற்ப மனைவி அங்கம்மாளிடம் அடைக்கலமானவர். இருவருக்கும் குழந்தை கிடையாது. தங்கள் சொத்துக்கும் சேர்ந்து தங்கவேலு வாரிசாக வந்திடுவானோ என்று அங்கம்மாளுக்கு அச்சம். ஆகவே தன் தம்பியின் பிள்ளை ரத்தினத்தைத் தத்து எடுத்துக் கொண்டாள். படிப்பு முடிந்ததும் தங்கவேலு வேலை தேடி வெளியூர் போய் விடுவான் என்று அங்கம்மாள் ஆசைப்பட்டாள். அந்த முக்கால் ஏக்கருக்கும் தத்துப் பிள்ளை ரத்தினமே வாரிசாக வேண்டுமென்பது அவள் ஆசை.

ஆனால், படிப்பு முடிந்தும் தங்கவேலு ஊரைவிட்டுக் கிளம்பவில்லை. அந்த ஊரை எப்படி மாற்றுவது; வளர்ப்பது என்று கனவு, கண்டு கொண்டிருப்பவன் ஊரை விட்டுப் போவானா?

அர்ச்சுனனுக்கு எந்த விதக் குறையுமில்லை. அவன் தந்தை சுப்பையாவுக்கு ஒரே பிள்ளை. மாடுகள், தோட்டம், வயல் எல்லாம் உண்டு. சுப்பையாவும் அவன் விருப்பப்படியே நடப்பவர்தான். தங்கவேலுவும் அர்ச்சுனனும் சேர்ந்து ஊரைச் சுற்றுவது அவருக்குப் பிடிப்பதில்லை. பரம்பரையாக வளர்த்து வைத்திருக்கும் சாதி வித்தியாசத்தை வளர்ப்பதே புண்ணியம் என்று நினைக்கும் புத்திசாலி அவர்.

அருச்சுனனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார், சுப்பையா. எந்த நேரமும் இரண்டு பேர்களாகத் திரிவது அவருக்குப் பிடிக்கவில்லை. படித்தபோது சரி படிப்பு முடிந்து மூணு வருஷமாகியும் இப்படித் திரிவது அவருக்குப் பிடிக்கவேயில்லை. இந்தச் சின்ன விஷயத்தில் சுப்பையா பிடிவாதமாக இருப்பது அவர் நண்பர் பெரியசாமிக்கும் பிடிக்கவில்லை. ஆனால் சுப்பையா தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ள மறுத்தார்.

தங்கவேலுவோ, அருச்சுனனோ இதையெல்லாம் சட்டை செய்யவில்லை. சுப்பையா, நண்பர்களைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்தார்.

அருச்சுனன் அவன் மாமா வீட்டுக்குப் போயிருந்தபொழுது அங்கம்மாள் உதவியுடன் ஒரு சதித்திட்டம் வகுத்தார். அங்கம்மாளோ தங்கவேலுவை ஊரை விட்டுப் விரட்ட எந்தக் காரியத்தையும் செய்யத் தயாராக இருந்தாள்.

சுப்பையா, அங்கம்மாள் தங்கள் சதித்திட்டத்தின்படி தங்கவேலுவைத் திருடனாக்கி அவமானப்படுத்தினார்கள்.

சுப்பையா வீட்டு நெல்லுக் கோட்டையைத் தங்கவேலு திருடிவிட்டான். சாட்சி அங்கம்மாள் மட்டுமல்ல, அவ



விடம் அடைக்கலமாகி விட்ட அவன் சித்தப்பா அடைக்கலம் கூட. இத்தனை நாள் நல்ல பிள்ளை என்று தங்கவேலுவைக் கொண்டாடிய ஊர்க்காரர்கள் எல்லாருமே ஒரு மாதிரி பேசினார்கள். மறு நாள் ஊரிலே பஞ்சாயத்துப் பேச முடிவு.

அவனை அவமானப்படுத்திய அந்த ஊரின் மீதே வெறுப்பு. அதனால் உண்மையாகவே வீட்டிலே இப்பொழுது திருடிக்கொண்டு இரவோடு இரவாகப் புறப்பட்டு விட்டான். பள்ளி நண்பன் ஒருவன் உதவி மூலம் பம்பாய்க்குச் சென்றான். அரும்பாடுபட்டு அங்கே ஒரு வேலையும் தேடிக் கொண்டான்.

சம்பாதிக்கத் தொடங்கிய பிறகு திருடிய பணத்தைத் தன் வீட்டிலே கொண்டு போய்க் கொடுக்கும்படிச் சொல்லி அருச்சுனனுக்குப் பணம் அனுப்பிக் கடிதமும் எழுதியிருந்தான். அப்பொழுதுதான் அருச்சுனனுக்குத் தங்கவேலுவின் முகவரி தெரியும்.

தன் தந்தையும், அவன் சின்னம்மாவும் சேர்ந்து செய்த சதி தனக்குச் சமீபத்தில்தான் தெரியும் என்றும், தன் அப்பாவின் கொடிய செயலுக்காக மன்னிப்புக் கேட்டும் எழுதியிருந்தான். பெருங்குடி மீது இருந்த வெறுப்பால் மீண்டும் தங்கவேலு பதில் எழுதவில்லை.

அந்தக் கடிதம் எழுதி இரண்டு மாதம் கழித்து ஒரு நாள், பம்பாயில் தங்கவேலு எதிரில் வந்து நின்றான் அருச்சுனன்.

பெருங்குடியின் எதிர்காலத்தைப் பற்றிப் பெருங்கனவு கண்டு கொண்டிருந்த இரண்டு நண்பர்களும் அந்த ஊரை இப்பொழுது அடியோடு வெறுத்தார்கள். தங்கவேலுவை விட அருச்சுனனுக்கு இருந்த வெறுப்பு அளவிட முடியாது.

காரணம்?

அருச்சுனன் அல்லியைக் காதலித்தான். பழைய கதை அல்ல இது.

பெருங்குடி அருச்சுனன் பக்கத்துச் சிறு குடியிலுள்ள அல்லியைக் கண்டான்; கண்டாள்; கட்டுண்டனர்! கல்யாணத்துக்குக் காத்திருந்தனர்!

அருச்சுனன் காதலாயிற்றே, ..இரகசியமாக இருக்குமா? எப்படியோ பரவி விட்டது.

காதல் விவகாரம் என்பதால் கண்ணும் காதும் வைத்துப் பெருங்குடி மக்கள் பேசத் தொடங்கி விட்டனர்.

'அல்லி அன்னையாகப் போகிறாள்' என்று அவதூறு பேசினார்கள். அவள் தந்தையைத் தூண்டி விட்டார்கள். சுப்பையாவுக்கும் தூபம் போட்டார்கள்.

அறியாமை நிறைந்த மண்ணில் அளவுக்கு மீறி விளையும் சாதி வேற்றுமைக்கு நிறைய உரம் போட்டார்கள்.

சுப்பையா குதித்தார். கூச்சல் போட்டார். அருச்சுனனுக்கு அதிர்ச்சியில்லை. அவன் எதிர் பார்த்ததுதான். பதிவுத் திருமணத்துக்கு வயது நிறைய வேண்டுமே என்று காரியம் முடியக் காலத்துக்காகக் காத்திருந்தான்.

எதிலும் ஆக்கப் பொறுக்காத அங்கம்மா, கீழே இறக்கப் பொறுப்பாளா? அவசர அவசரமாகக் கல்யாணப் பேச்சைத் துவக்கி விட்டாள்.

''ஊரிலே நாலுவிதமாப் பேசினா என்ன? சீர்வரிசையை அதிகமாக கொடுத்தாப் போதும், என் தத்துப்பிள்ளை ரத்தினத்துக்கு அல்லியைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்''-என்று அல்லியின் தந்தையிடம் கூறினாள்.

எப்படியாவது அல்லித் திருமணம் நடந்தால்போதும் என்று எண்ணிய அவள் தந்தை உடனே இசைந்து விட்டார். நிச்சயதாம்பூலத்தன்று வயலில் தெளிப்பதற்காக வாங்கி வைத்திருந்த எலிப் பாஷாணத்தைத் தின்று அல்லி தற்கொலை செய்து கொண்டாள்.

தன் காதலில் இப்படியொரு பேரிடியை விழச் செய்தவர்கள் தன் தந்தையும் பெருங்குடியிலுள்ள மற்றவர்களும் என்ற வெறுப்பில் ஊரைவிட்டு ஒருவருக்கும் சொல்லாமல் கிளம்பி விட்டான் அருச்சுனன்.

நேராக பம்பாய்க்குத் தங்கவேலுவைத் தேடி வந்துவிட்டான்.

அருச்சுனன் மனநிலையை மாற்ற முயன்றான், தங்கவேலு. அருச்சுனனும் தங்கவேலுவின் முயற்சியால் ஒரு வேலை தேடிக் கொண்டான்.

கிராமத்தை வளர்க்கக் கனவு கண்ட நண்பர்கள் அதை மறந்துவிட்டனர். பரபரப்பான நகரத்துக்குரிய இயந்திர வாழ்க்கையில் ஐக்கியமாகி விட்டனர்.

ஆனாலும், அதிலும் ஓர் அமைதி, மனநிறைவு. அருச்சுனன் புதிய வாழ்க்கையால் புதிய மனிதனாகவே மாறிவிட்டான்.

பெயர் அருச்சுனன் ஆயிற்றே, அடிக்கடி குறுக்கிட வேண்டுமே காதல்!.

அருச்சுனனுடன் பணியாற்றிய மராத்திப் பெண் சந்தியா அவனைக் காதலித்தாள். அவனும் ஆசைப்படாமல் இருப்பானா?

அவர்கள் திருமணத்தைத் தங்கவேலுவே முன்னின்று நடத்தி வைத்தான். எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள் இடையிடையே வந்தாலும் எப்படியோ எட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

தங்கவேலுவும் சரி அருச்சுனனும் சரி ஊர்ப்பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான் அருச்சுனன்.

திடீரென்று......

எங்கும் கலவரம், குழப்பங்கள், தெற்கத்திக்காரர்கள் மீது தாக்குதல்கள் அடிக்கடி!

இந்த அபாயத்துக்கு ஒரு நாள் ஆளாகிவிட்டான் அருச்சுனன். அடிபட்ட இடத்திலேயே உயிரிழந்து விட்டான்.

ஒருமைப்பாட்டை மறந்த வெறிச் செயலால் ஒரு மராத்திப் பெண்ணையும் விதவையாக்கி விட்டனர் அந்தப் புண்ணியவான்கள்.

நண்பனை இழந்து வேதனையில் துடித்தான். தங்கவேலு. அவன் மனைவி சந்தியாவோ படுத்த படுக்கையாகி விட்டாள்.

263

மக்கள் அனைவரும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அம்பேத்கார் அவர்களுடைய பெயரால் ஒரு கல்லூரி நிறுவிட வேண்டும் என்கின்ற தணியாத ஆர்வத்தை என்னிடத்திலும் நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலரிடத்திலும் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சரவையிலே பங்கு பெற்றிருக்கும் அம்மையார் அவர்களும் எடுத்துச் சொல்லி அதனைப் படிப்படியாக எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் என்கின்ற சிறப்பை நம்முடைய கல்வியமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர் பெருமக்களும், நண்பர்களும் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அமைச்சர் இராமன் அவர்கள் பேசும்போது எந்த மாநிலத்திலும் ஒரு சர்க்கார் அம்பேத்காருடைய பெயரால் கல்லூரி அமைத்ததில்லை என்று கூறினார். இந்த மாநிலங்களிலே-சுதந்திரம் பெற்ற இந்த 25, 26 ஆண்டுகளில் அம்மையார் குறிப்பிட்டதைபோல், காந்தியடிகள் எந்தக் கோஷத்தைச் சொன்னாரோ, எந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைக்கிறேன் என்று அவர் தன்னுடைய இலட்சியப் பயணத்தை நிறைவேற்றுகிற அளவுக்குக் கூடுமான வரையில்-முழுவதும் என்று சொல்ல நான் தயாராக இல்லை-இன்றைக்கு மற்ற எல்லா மாநிலங்களைவிட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பணி செய்கின்ற, சாதனை புரிகின்ற அரசு ஒன்று இருக்கிறது என்றால் அது தமிழ்நாடு அரசு ஒன்றைத்தவிர வேறு எந்த மாநில அரசும் இல்லை.

1965-66-ஆம் ஆண்டில் அரிசனநலத் துறைக்காக, பிற்பட்டோர் நலத்துறையும் சேர்த்து காங்கிரஸ் அரசு செலவழித்தத் தொகை 5 கோடியே 38 இலட்சம் ரூபாய்தான். ஆனால் இன்றைக்கு அரிசன நலத் துறைக்காக மாத்திரம் திராவிட முன்னேற்றக் கழக அரசு 1974-75-ஆம் ஆண்டு செலவழிக்க ஒதுக்கியிருக்கிற தொகை 10 கோடியே 16 இலட்ச ரூபாய் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன். இது மாத்திரமல்ல, 1966-67-ல் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 10,41,238. 1972-73-ல் தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 14,21,786.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக 1967 ஆம் ஆண்டு இருந்த மொத்த விடுதிகள் 388. இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் தமிழக அரசின் சார்பில், இன்றைக்கு இருக்கிற விடுதிகளின் எண்ணிக்கை 529. உதவித் தொகை பெறுகின்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 1966-67 இல் 2 இலட்சத்து 70 ஆயிரம். 1972-73 இல் 4 இலட்சத்து 82 ஆயிரம். கேரளத்தில் அரிசன மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைக்கு மாநில அரசு செய்த செலவு எவ்வளவு தெரியுமா? நான் தருகிற கணக்கல்ல—நாவலர் தருகிற கணக்கல்ல, அம்மையார் தருகின்ற கணக்கல்ல. இந்தக் கணக்கைத் தருபவர்கள் யார் தெரியுமா? கமிஷனர் அப் ஷெட்யூல் கேஸ்ட்ஸ் ஆண்ட் டிரைப்ஸ் என்கின்ற மத்திய சர்க்கார் உயர் அதிகாரி வெளியிட்டிருக்கின்ற ஒரு புத்தகம். இதுவரையில் 20 அறிக்கைகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இது 1971-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கை. அடுத்த அறிக்கை விரைவிலே வரத் தயாராக இருக்கிறது. நமக்குக் கிடைத்திருக்கிற அறிக்கையிலிருந்து எடுத்த தகவலின்படி கேரளத்தில் 1969-70 இல் அரிசன மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைக்காக மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 74 ஆயிரம். 1970-71-ஆம் ஆண்டு 55 ஆயிரம். மைசூரில் ரூ. 3 இலட்சத்து 81 ஆயிரம், 1969-70-ல்; 1970-71-ல் 2 இலட்சத்து 32 ஆயிரம். ஒரிசாவில் 1969-70-ல் 30 ஆயிரம்; 1970-71-ல் 25 ஆயிரம். பாண்டிச்சேரியில் 1969-70-ல் 46 ஆயிரம், 1970-71-ல் ரூ. 2 இலட்சத்து 72 ஆயிரம்; தமிழ்நாட்டில் 1969-70-ல் 17 இலட்சத்து 72 ஆயிரம்; 1970-71-ல் 31 இலட்சத்து 8 ஆயிரம்.

கேரளத்தில் பயிற்சி பெற்ற அரிசன மாணவர்களின் எண்ணிக்கை மொத்தம் 5,345 பேரில் பயிற்சி பெற்றவர்கள் 539 பேர். அதைப்போலவே ஆந்திரத்தில் மொத்தம் 8,038 பேரில் பயிற்சி பெற்றவர்கள் 1,214 பேர். மைசூரில் 4,996 பேரில் 826 பேர். தமிழ்நாட்டில் மொத்தம் 11,746 பேரில் 3,131 பேர் பயிற்சி பெற்றவர் ஆவர்.

## நந்தன் கால்வாயைப் புதுப்பித்தல்

விழுப்புரம் வட்டம், பனைமலை ஏரிக்கும், ஏனைய 12 ஏரிகளுக்கும் தண்ணீர் விடுவதற்காக வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், செம்மந்தனூர் கிராமத்திற்கருகில் துரிஞ்சலாற்றுக் குறுக்கேயுள்ள கீரனூர் அணைக்கட்டிலிருந்து வரவுகால் வெட்டுவதுதான் நந்தன் கால்வாயைப் புதுப்பித்தல் திட்டத்தின் நோக்கமாகும். இதைத் தவிர பனைமலை ஆயக்கட்டுப் பகுதியிலிருந்து வெளியேறும் வடிகால் நீரினால் மேலும் 11 ஏரிகள் பயனடையும். இந்த வாய்க்காலின் மொத்த நீளம் ஏறத்தாழ 30·28 கிலோ மீட்டராகும். இத்திட்டம் முடிவு பெற்றதும் ஆயக்கட்டிலிருந்தும் பாசனம் பெருத 281 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்திற்குப் பாசனம் அளிக்கும்; மேலும், தற்போது 24 ஏரிகளின்கீழ் உள்ள 4,974 ஏக்கர்களுக்கு இடையுருத பாசன வசதி அளிக்கும். நந்தன் கால்வாயைப் புதுப்பிக்கும் திட்டத்திற்காகும் செலவு 72·11 லட்சமாகும். கீரனூர் அணைக்கட்டில் கல்கட்டடப் பணி நடந்தேறி வருகிறது. தலைமதகு கட்டும் பணி முடியும் தறுவாயில் உள்ளது. குறுக்கு வடிகால் கட்டும் பணிகள், பல்வேறு கட்டங்களில் நடந்தேறி வருகின்றன. கால்வாயில் மண் வேலையும் நடந்து வருகிறது.

இத்திட்டத்திற்காகச் செலவிட இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 22·27 லட்சம் ஒதுக்கியுள்ளது நமது அரசு.

# அந்த நினைவுகள் இந்த நாளிலே



'நினைத்தவை எல்லாம் நடக்காது' என்று சொல்லக்கூடிய தன்னம்பிக்கை இல்லாதவன் யாராவது இப்பொழுது தங்கவேலு முன் வந்து நின்றால்—

அங்கம் அங்கமாக உலுக்கியிருப்பான். அந்த நினைவுகள் நனவாகியிருந்ததால் அப்படியொரு வேகம், பெருமிதம் எல்லாம் அவன் மனத்தை நிரப்பிக் கொண்டிருந்தன. அவன் இங்கே வரும்பொழுது இருந்த மனநிலை வேறு. இப்பொழுது அவனுள் விவரிக்க முடியாத ஒரு பெருமை. அது நியாயம் என்று காணும்காட்சிகள் எல்லாம் 'ஆமாம்' போட்டன.

ஊருக்குள் போக இன்னும் நாலு பர்லாங்கு தூரமிருக்கும். அதோ தெரியும் சின்னாற்றின் மீது புதிதாகப் பாலம் கட்டியிருக்கிறார்கள். அதைக் கவனித்தவாறு, கையில் பையுடன் நடந்த தங்கவேலுவை, வரப்பிலே நடந்து வந்து சாலையில் ஏறிய பெரியசாமி அருகில் வந்து கவனித்தார். இப்போது பெரியசாமி மூக்குக் கண்ணாடி போட்டிருந்தார்.

''தங்கவேலுத் தம்பியா? ஏழெட்டு வருசமிருக்குமே ஊரைவிட்டுப் போய்..எங்களையெல்லாம் மறந்துட்டுப் போய் இவ்வளவு நாளா இருந்திட்டு இப்பதான் ஊரிலேயிருந்து வர்றீங்களா?''

''ஆமாம் அண்ணே, பிறந்து வளர்ந்த மண்ணை மறந்திட்டு இருக்க முடியுமா?'' என்றவன் ஆவலை அடக்க முடியாமல் சொன்னான்: ''நம்ப ஊரே ரொம்ப மாறியிருக்குதே!''

பெரியசாமி மகிழ்ச்சியுடன் தலையாட்டினார்.

உடனே, வந்த வேலை நினைவுக்கு வந்தவனாக ''உங்க சிநேகிதர் சுப்பையா எப்படி இருக்கிறார்''? என்றான்.

பெரியசாமி உடனே பதில் சொல்லவில்லை. எங்கேயோ பார்வையைச் செலுத்தியவராக உணர்ச்சியில்லாமல் சொன்னார். ''அவன் போய் இரண்டு வருசமாகுது.''

தங்கவேலுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சிறிது நேரத்துக்கு முன்னால் ஊரைப் பார்த்த பொழுது, நினைத்தவை எல்லாம் நடக்கும் என்ற பெருமையில் இருந்தவன், தான் நினைத்து வந்தது இவ்வளவு விரைவாக நிலைகுலையும் என்று எதிர்பார்க்கவில்லை; அவனால் பேச முடியவில்லை!

பெரியசாமிதான் தொடர்ந்தார். ''சுப்பையாவோட மகன் உங்க சிநேகிதன் அருச்சுனன் ஊரை விட்டுப் போனவன்தான் வரவேயில்லை. அவன் போனதும் ஒரு கதை..சரி சரி; அப்புறம் பேசிக்குவோம்'' என்று அதைத் தொடர விரும்பாதவர் மாதிரி நிறுத்திப் பிறகு கேட்டார்—''தம்பி சௌகரியம் எல்லாம் எப்படி''

தங்கவேலு பதில் சொல்லாமல் திருப்பிக் கேட்டான். ''உங்க சௌகரியமெல்லாம் எப்படி?''

பெரியசாமியும் நேரடியாக பதில் சொல்லவில்லை'' ஊரைப் பார்த்தா எப்படித் தெரியுது?

''அந்தப் பெருமையோடத்தான் நடந்து வந்தேன். அந்த நினைவுகள் இந்த நாளில் நனவாகியிருக்கிற மகிழ்ச்சியிலே மிதந்தேன். உங்க சிநேகிதர் சுப்பையா இறந்துட்டார்னு கேள்விப்பட்டதும்தான்.....''

தங்கவேலு முடிப்பதற்கு முன்னாலேயே பெரியசாமிதான் பேசினார்.

''சொத்தையெல்லாம் பள்ளிக்கூடத்துக்கு எழுதி வச்சுட்டு அப்பன் போயிட்டான். அவன் மகன் அருச்சுனன் இங்கே இருக்கக் கூடாதா? ஒரேயடியா ஊரை வெறுத்துட்டுப் போயிட்டானே இப்ப எங்கே இருக்கானோ?''

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடியவன் பதில் தெரிந்த தங்கவேலுதான். ஆனால், அவன் பதில் சொல்ல முடியாமல் தவித்தான்.

பெரிய ஆலமரத்தடிக்கு வந்து விட்டார்கள். நடந்து வந்த களைப்பை ஆற்றிக்கொள்வது போலத் தங்கவேலு நின்றான். பெரியசாமி ஊரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஆனால், தங்கவேலு மனத்திலோ அந்த நினைவுகள்.

*

பெயர்தான் பெருங்குடி; ஊர் சிறியதுதான்! பாசன வசதிகளால் செழிப்பான கழனிகளும், தோட்டம் துரவுகளும் அங்கேயும் மனிதர்களை வசிக்க வைத்தன.

மண்ணும், புழுதியும் நிரம்பிய சாலைகள்தான்; பெரியவர் வாய்க்கால் மீது சாய்ந்து நிற்கும் மூங்கில் பாலம்; சிற்றாற்றுக்குப் பாலம் கிடையாது; குறுக்கே நீந்தியோ, நீரில் இறங்கியோ தாண்ட வேண்டும்; ஒரு பகுதி இடிந்துள்ள சிவன்கோயில்; மொத்தம் முப்பது வீடுகள்தான் இருக்கும் ஒரு மைல் தொலைவில் நான்

ஏ.பி. நடராசன்.

பதிவு எண். M




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
...ரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



இந்த நிலையில் அருச்சுனனுடைய இரண்டு குழந்தைகளின் எதிர்காலத்துக்கு யார் பொறுப்பு ஏற்பது? தங்கவேலுவே அந்தச் சுமையைத் தாங்குவதைத் தன் கடமையாக நினைத்தான். அந்தச் சமயத்தில்தான் அவனை விடத் தாங்கும் சக்தி படைத்த அருச்சுனனின் தந்தை சுப்பையாவின் நினைவு வந்தது. இன்னுமா மனிதன் மாறாமல் இருப்பார்? பெருங்குடிக்குப் போய்ப் பார்ப்போமே? அருச்சுனன் குழந்தைகள் நன்கு வசதியுடன் வாழ வாய்ப்பு இருப்பதை நாம் தடுப்பானேன் ? முயற்சி செய்தால் என்ன?' என்ற முடிவுக்கு வந்தான்.

தன் நண்பர்களிடம் அருச்சுனனின் குடும்பத்தாரைக் கவனித்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் பெருங்குடிக்குப் புறப்பட்டான்.

* * * * *

**பே**ருந்தைவிட்டு இறங்கி ஊருக்கு நடந்து வரும் வழியில் தான், 'அந்த நினைவுகள் தங்கவேலுவின் மனத்தில் விரிந்தன.

உண்மையில் அருச்சுனனும் தங்கவேலுவும் அந்த நாட்களில் நினைத்தவையெல்லாம் நடந்திருந்தன. நண்பனை இழந்த துயரத்தோடு, அவன் குழந்தைகளின் எதிர்காலத்தைத் தேடி வந்தவன் 'அந்த நினைவுகள்' இந்த நேரத்தில் நனவாகியிருப்பதைக் கண்டு ஒருவிதமான வேகத்துக்கும் பெருமிதத்துக்கும் ஆளானான். 'நினைத்தவை யெல்லாம் நடக்காது என்பது தன்னம்பிக்கையில்லாதவன் எண்ணம்' என்று எண்ணியபடி வந்தான்.

அப்பொழுதுதான் பெரியசாமி வந்து சேர்ந்தார்.

பெரிய ஆலமரத்தடியில் நின்று கொண்டு தங்கவேலுவிடம் பெரியசாமி பேசிக் கொண்டிருந்தார்.

''தம்பி, நம்ப ஊர் எப்படி மாறிப்போச்சு தெரியுமா ? ஊர் பூராவும் கரண்ட் வந்திடுச்சு. தெருவெல்லாம் விளக்குகள். சின்னாற்றின் மீது பாலம். சாலைகள் எல்லாம் கப்பிரோடு ... பக்கத்து ஊரிலேயே ஹைஸ்கூல் இருக்கு... ஆஸ்பத்திரியும் வந்திடுச்சு.. நம்ப ஊர்லே கூட்டுறவு முறையிலே பால் பண்ணை நடக்குது.. பால் வெளியூர் போகுது.. எல்லோருமே கோழிப்பண்ணை வச்சிருக்காகங்க.''

இவ்வளவு நேரமாகப் பெரியசாமி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த தங்கவேலு இப்பொழுதுதான் பதில் சொன்னான். ''நம்ப ஊரின் மாற்றம் நினைச்சுப் பார்க்கவே பெருமையா இருக்குங்க.''

''நிலமில்லாத ஏழைகளுக்கு விவசாயம் பண்றதுக்கு இலவசமாப் பட்டா கொடுத்திருக்காங்க. குடியிருப்பு மனைகள் இல்லாதவங்களுக்கும் வீட்டுமனைகள் கொடுத்திருக்காங்க. வயலெல்லாம் எப்படியிருக்குப் பாருங்க. புதுரக நெல்லுங்க.. நல்ல விளைச்சல்..'' பெரியசாமி அடுக்கிக் கொண்டே போனார். தங்கவேலு குறுக்கிட்டான்.

''ஊர் மாறியிருக்கு. ஊரிலே உள்ளவுங்க எப்படியிருங்காங்க?

ஓரளவு மாறியிருக்காங்க. தம்பி, அந்தப் பழைய விஷயங்களை மறந்திடுங்க.... உம்.. இப்ப எவ்வளவோ, எல்லாம் மாறிப் போச்சு. இப்ப நம்ப ஊர் செழிப்பைப் பார்த்த பிறகும் பழையபடி வெளியூருக்குப் போக உங்களுக்கு விருப்பமா?''

''அண்ணே, நானும் அருச்சுனனும் அன்றைக்கு ஊர் இப்படி வளர வேணும்னு நினைச்சோம்; அது நடந்திருக்கு. அதை அனுபவிக்க, இங்கே இருக்க எங்களுக்குக் கொடுத்து வைக்கல்லே. ஆனால் அந்த நினைவுகள் இந்த நேரத்தில் நனவாகியிருப்பதாலே எங்களுக்கு ஏற்படுகிற பெருமை யாருக்கும் ஏற்பட முடியாது. ஒரு கவிஞர் பாடினார் — ''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான். அவன் காணத் தகுந்தது வறுமையாம் — பூணத் தகுந்தது பொறுமையாம்'' என்று! அதையே நானும் அருச்சுனனும் பேசிப் பேசி மனம் வருந்தியதுண்டு. ஆனால், இன்றைக்குக் 'காண்பதெல்லாம் செய்த தொழிலாளிக்குப் புது வாழ்வு பிறந்திடுச்சு. அதை நினைக்கும் போதே மகிழ்ச்சியாயிருக்கு'' திரும்பத் திரும்ப சொன்னான் தங்கவேலு.

இப்பொழுது அவனைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தார் பெரியசாமி. ''கல்யாணம் எல்லாம் நடந்திடுச்சா?''

''எனக்குக் கல்யாணமாகலே, ஆனாலும் இரண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் வந்திடுச்சு''

புரியாமல் பெரியசாமி அவனைப் பார்த்தார். அதைப் புரிந்து கொண்ட தங்கவேலு வேறு ஒரு கேள்வியைக் கேட்டான், ''என்னுடைய சித்தப்பா, சின்னம்மா எப்படி இருக்காங்க?''

''அவுங்க சுவீகாரப் பிள்ளை ரத்தினம் படாதபாடு படுத்துறான். பெருங்குடிப் பேரே அவன்கிட்டேதான் இருக்கு..''

தங்கவேலுவுக்குப் புரியவில்லை. பெரியசாமியே விளக்கினார்.'' பெருங்குடியனாக இருக்கிறான் தம்பி, அங்கம்மாவுக்கு இப்பதான் உன் அருமை தெரியுது.''

தங்கவேலு சிறிது நேரம் எதையோ யோசிப்பதுபோல் இருந்தான். பிறகு ''அண்ணே நம்ப ஊரிலே அருச்சுனனுக்கு நெருங்கிய சொந்தத்திலே யாராவது இருக்காங்களா?

''இங்கே ஒருத்தருமேயில்லையே...'' என்று கையை விரித்தார்.

''அப்ப..என் வேலை முடிஞ்சிடுச்சு. அண்ணே நான் திரும்புறேன். ஊருக்குள் நுழையாமல் பெரிய ஆலமரத்தடியிலிருந்து தங்கவேலு திரும்பினான்.

''என்ன தம்பி..நீங்க சொல்றதும் செய்றதும் எனக்குப் புரியவில்லையே?''

''புரிய வேண்டாம் அண்ணே! ..என் கடமையைச் செய்ய நான் போகணும். இங்கே வந்து பார்த்ததிலே எனக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி. அந்த நினைவுகள் இந்த நாளில் நனவாகியிருக்கின்றன.; அதனாலேதான்..'' என்று சொன்னவன் பெரியசாமியிடம் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் கிளம்பினான்.

பெரியசாமி ஒன்றும் புரியாமல் அவன் செல்லும் திசையைப் பார்த்துக் கொண்டே நின்றார்.







# தமிழனின் பெருமிதம்



**3 வரிசைகளில்**

இன்றே வாங்குங்கள்

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

மொத்தப் பரிசுகள்: **7902**

மொத்தப் பரிசுத் தொகை:

**ரூ. 10,47,000**

முதல் பரிசுகள்

**ரூ. 1,00,000** ஒவ்வொன்றும்

வது குலுக்கல் நாள்: **12-6-1974**

சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)

-600002

வெளியீடு: இயக்குநர், செய்தி,

தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009





# தமிழரசு

மலர் 4 1—6—74 இதழ் 23



10 JUN 19




# மனிதாபிமானத் திருநாட்கள்

முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளன்று (3—6—1971) பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் தொடங்கப்பட்டது.

49-வது பிறந்த நாளன்று (3—6—1972) கண்ணொளி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

50-வது பிறந்த நாளன்று (3—6—1973) மனிதனை மனிதன் வைத்து இழுக்கும் கொடுமையை அகற்றிடும் வகையில் இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த ஆண்டு (3—6—1974) 51-வது பிறந்த நாளன்று உடல் ஊன முற்றோர் மறுவாழ்வுக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் பதின்மூன்று திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.







தீக்குச்சி தயாரித்தல், பீடி சுற்றுதல், பனியன்கள் தயாரித்தல் போன்ற தொழில் களில் அவர்களுக்குப் பயிற்சியும், வேலை வாய்ப்பும் தருகின்ற வகையில் மேற்கண்ட தொழில்கள் நடக்கும் முக்கிய ஊர்களைச் சுற்றி ஐம்பது பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டு — 5,000க்கு மேற்பட்டவர்களுக்குப் பயிற்சி வாய்ப்பு அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு மாதம் 30 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படும்.
எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி பெற்ற செவிடர், ஊமையர், ஆகியோர் தட்டச்சர்க ளாகவும், சுருக்கெழுத்துத் தட்டச்சர்களாகவும் ஆவதற்குப் பயிற்சியளிக்க 20 நிலையங்கள் அமைக்கப்படும். இதில் முதல் கட்டமாக, சுமார் 400 பேர் பயன் பெறுவார்கள். இவர் களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 பயிற்சிக் கால உதவித் தொகையாக வழங்கப்படும்.
தையல் பயிற்சி நிலையங்கள் 25 இடங்களில் அமைக்கப்பட்டு 500 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்கு மாதம் உதவித் தொகையாக ரூபாய் 30 அளிக்கப்படும். தையல் பயிற்சி பெற்றதும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.
கணக்கிடும் இயந்திரங்களில் (கம்ப்யூட்டர்) துளை அட்டைகளைச் சரி பார்த்து அடுக்கி வைக்கும் பயிற்சி சென்னையில் எஸ்.எஸ். எல்.சி. பயிற்சித் தகுதி பெற்றவர்கள் 100 பேர்களுக்கு அளிக்கப்படும். பயிற்சி பெறுப வர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூபாய் 50 அளிக்கப்படும்.
இப்போது செவிடர், ஊமையர் ஆகியவர் களுக்கான சிறப்புப் பள்ளிகள் 13 இருக் கின்றன. இந்த நடப்பாண்டில் செவிடர், ஊமையர்களுக்காக ஐந்து பள்ளிகளும், குருடர்களுக்கான ஐந்து பள்ளிகளும் புதிதாகத் தொடங்கப்படும். இன்னும் மேலும் இப்படிப் பட்ட பள்ளிகள் அதிகமாகத் திறக்க முடியாமைக்கான காரணம்—இத்தகைய பள்ளி களில் பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதுதான். ஆகவே, அத்தகைய ஆசிரியர்களை உருவாக்க ஊனம் உற்றோருக்கான ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்கப்படும்.


ஏழை எளிய நிலையில் உள்ள செவிட்டுக் குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவி ஒன்றின் விலை 300 ரூபாய் வீதம் ஆயிரம் கருவிகள் வாங்கி, ஆயிரம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும்.
இப்போது முதியோர் உதவித் தொகை சுமார் 44,000 பேர்களுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த நடப் பாண்டில் மேலும் 20,000 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படும். இந்த 20,000 பேரில், 10,000 பேர் அங்க கீனர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தத் தொகையைப் பெற ஏற்கெனவே உள்ள விதியான 60 வயதுக்கு மேல் இருக்க வேண்டும் என்ற விதியைத் தளத்தி, 55 வயதுக்குமேல் இருந்தாலும் அங்ககீனர்கள் இந்த உதவியைப் பெறலாம் என்று தளர்த்தப் படுகிறது.
மின்சார ஏணி களில் (லிப்ட்) உடல் ஊனம் உற்றவர்களையே நியமிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வருவது பற்றி யோசிக்கப்படும்.
கால் ஊனமுற்ற ஏழை எளியவர்களுக்கு ரூபாய் 750 மதிப்புள்ள சக்கர நாற்காலிகள் 2000 பேர்களுக்கு வழங்கப்படும்.
உடல் ஊனமுற்றோர்க்கான வேலைவாய்ப்பு நிலையம்
உடல் ஊனமுற்றவர்களுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு நிலையம் (எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச்) இப்போது சென்னையில் மாத்திரம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையங்கள் படிப் படியாக மற்ற மாவட்டங்களிலும் விரிவு படுத்தப்படும்.
மருத்துவ மனை
பள்ளி
மருத்துவ மனைகளில் இளம் பிள்ளை வாதம் போன்ற நோய்களால் தாக்குண்டு மாதக் கணக்கிலும், ஆண்டுக் கணக்கிலும் சிகிச்சை பெற்று வருகிற இளம்சிறார்க்குக் கல்வி வசதி கிட்டாமல் போகிற நிலைமையை மாற்ற அந்தச் சிறார்கள் சிகிச்சை பெறுகிற மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் அந்த மருத்துவ மனை வட்டத்துக் குள்ளேயே ஒரு பள்ளி வீதம் மொத்தம் 15 பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படும்.

# இலட்சியப் பயணத்தில் ஒரு கட்டம்

சாமி

"ஓர் இந்துக்கு தேவாலயத்தைக்காணுகிற நேரத்தில் ஏற்படுகிற ஓர் உணர்ச்சி-ஒரு முஸ்லீமுக்கு மசூதியைக்காண்கிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி-ஒரு கிருத்துவருக்கு ஒரு 'சர்ச்சைப்' பார்க்கிறநேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி-ஒரு ரசிகனுக்கு தாஜ்மகாலைக்காணுகிற நேரத்தில் ஏற்படுகிற உணர்ச்சி-எனக்கு இந்த அரிசன மாணவர் இல்லத்தைக் காணும் நேரத்தில் ஏற்படுகிறது.

இதுபோன்ற காரியங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற்கு நம்முடைய தொண்டு பயன்பட வேண்டும் என்று விரும்புகிற அரசை நீங்கள் எல்லாம் சேர்ந்து உருவாக்கியிருக்கிறீர்கள். அது தன்னுடைய கடமையைச் செய்கிற இலட்சியப் பயணத்தில் ஒரு கட்டம்தான் இன்று நடைபெறுகின்ற—தமிழக அரசின் அரிசனவீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் நீலகிரி மாவட்ட கிளை தொடக்க விழாவும்—அரிசன மாணவர் இல்லத் திறப்பு விழாவும், நடுவட்டம், கூடலூர் பந்தநல்லூர் ஆகிய இடங்களில் கட்டப்படவிருக்கும் அரசினர் அரிசன மாணவர் விடுதி கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவும், உதகை அரசினர் மாணவியர் விடுதி, மற்றும் கோத்தகிரி கிராமம், தவிட்டுமேடு அரிசன காலனியில் கட்டவிருக்கும் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் ஆகிய நிகழ்ச்சிகள்.

மாவட்ட ஆட்சித் தலைவருடைய முயற்சியோடும் அரசின் ஒத்துழைப்போடும் இங்கு நமக்குப் பண உதவி செய்யும் வங்கியின் உறுதுணையோடும் இன்று நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்ற கட்டத்தைக் காண்கிறோம். ரூ. 8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரிசன மாணவர் விடுதியின் தொடக்க விழாவிலே-சிறப்பு விழாவிலே அரிசன மாணவியர்களுடைய விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றிருக்கிறது.

அரிசன வீட்டு வசதி வாரியம் மேம்பாட்டுத் திட்டத்திற்கான அந்த கழகத்திற்கான மாவட்டக் கிளையும் ஒரு சிறப்பு அம்சமாக இன்று தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த மாவட்டத்திலே உள்ள தவிட்டு மேடு என்ற கிராமத்தினை அரிசனங்களுக்கான மாதிரி கிராமமாக-சிறப்புச் சிற்றூராக ஆக்குகின்ற அந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த மலைப்பகுதியில் பழங்குடி மக்களுக்கான, மலைவாசிகளுக்கான தோடர் சமுதாயத்திற்கு அவர்களுடைய நல்வாழ்விற்கான திட்டங்களைத் தொடங்கி முதற் கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் இங்கே வழங்கப்பட்டு இருக்கிறது. இவைகள் எல்லாம் சமுதாய நலத் திட்டங்கள், தாழ்த்தப்பட்டிருக்கிற, பிற்படுத்தப்பட்டிருக்கிற மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசு மேற்கொண்டிருக்கிற திட்டங்கள். இந்தத்திட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் தொகை 5 இலட்சம் பேர் என்றும், அதில் ஏறத்தாழ 75 சதவீகிதம் பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே அரிசன மக்களுக்காக மலைவாசிகளுக்காக சிறப்புத் திட்டங்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றன என்பதை நாம் காண்கிறோம்.

இந்த மாவட்டத்திலும் இன்றைக்கு அமைக்கப்படவிருக்கிற இந்த அரிசன மாணவர் விடுதியைச் சேர்த்து மொத்தம் 12 இருக்கின்றன. பின்தங்கிய மாணவர்களுக்கான விடுதிகள் இரண்டு இருக்கின்றன.

கருணாநிதி பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே அரிசனங்களை விட அவர் பின்தங்கிய மக்களுக்குத்தான் அதிகம் செய்கிறார் என்பதற்கு ஆதாரம் இல்லை என்பதற்கு இது ஒரு நல்ல சாட்சியமாகும்! அதற்காக, பின்தங்கிய மக்களுக்கு எதுவும் செய்யக்கூடாது என்பது அரிசன நல அமைச்சருடைய வாதமல்ல-நான் இன்றைக்கு இருக்கிற அரிசன நல அமைச்சரைக் கூறுகிறேன்! அந்த வகையில் இன்று அந்த மக்களுக்காக பாடுபட முன்வந்திருக்கிறோம்.

இந்தியாவில் நம் மாநிலத்தில் அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டக் கழகம் ஒன்றை அமைத்து செயல்படுத்தி வருகிறோம். வேறு மாநிலங்களில் இதுபோல் ஒருவேளை இருக்கக்கூடும். ஆனால் இங்கே 'செயல்படுகின்ற கழகமாக' அது இருந்து வருகிறது.

இதற்கு யாரைத் தலைவராகப் போடலாமென்று நான் எண்ணிய நேரத்தில்-யாரை நம்பிப் போடலாமென்று எதிர்பார்த்து-நம்பி யாரைப் போடலாமென்று முடிவு செய்தோம்? அந்த முடிவு வீண் போகவில்லை என்பதற்கு அடையாளமாக அவர் தன்னுடைய திறமையெல்லாம் பயன்படுத்தி வங்கிகளிடமிருந்து பணம் கடனாகப் பெற்றிருக்கிறார். யுனைடெட் கமர்ஷியல் வங்கியின் சார்பில் இங்கே பேசிய நண்பர் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற திட்டத்திற்கு நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கிற அந்த வங்கி எப்படியெல்லாம் உதவி செய்யும் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஒரு அரசு மக்களிடம் வாங்குகிற வரிகளின் மூலம் மக்களுக்குப் பல காரியங்களைச் செய்கிறது. வரவு-செலவுத் திட்டம் போடுகிற நேரத்தில் வழக்கமாக மக்களுக்குச் செய்யப்படுகிற காரியங்களைச் செய்கிறோம். இப்படி வழக்கமாகச் செய்யப்படுகிற காரியங்களை ஒரு அரசு வரிப் பணத்தின் மூலம் செய்யலாம். ஆனால் அந்த வருமானம் போதாமல், சில சிறப்புத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் -நீ கொடுக்கிற வரி அவ்வளவுதான் உங்களுக்கு இவ்வளவு செய்தால் போதுமென்று இந்த அரசு கேட்டால், அந்தக் கேள்வியில் நியாயங்கூட இருக்கலாம்.

ஆகவே வருமானத்தை வேறு வகையில் பெருக்கலாமென்று ஒரு அரசு யோசித்து, அந்த அடிப்படையில் வருமானத்தைப் பெருக்கி பல சிறப்புத் திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம். அந்த வகையில் தான் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகளானாலும், கண்ணொளித் திட்டமானாலும், கை ரிக்ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷா வழங்குகிற திட்டமானாலும் நாம் செய்து வருகிறோம். அடுத்த கட்டமாக அங்கினவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டமும் செய்ய இருக்கிறோம். காரணம் அவர்களும் சமுதாயத்தில் ஓர் அங்கம் என்ற காரணத்தால்தான். அதைப் போலவே இங்கே வாழ்கிற தோடர்கள் தொகையில் குறைவாக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு நலத் திட்டத்தை அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு, இன்றைக்குப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அந்த முயற்சி வெற்றி பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.



## முதல்வர் கலைஞர்

அதே நேரத்தில் தோடர் பெருங்குடி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்; வெளிநாட்டிலிருந்து வருகிற பயணிகளைக் கவர்கின்ற வகையில் உங்களுடைய பழமையான தோற்றத்துடன் இருப்பதும் நல்லதாகும். நீங்கள் அணிகிற உடையில் கொஞ்சம் மாற்றம் செய்தால் கூட இப்படிப்பட்டதொரு உடைதான் அவர்களுக்கு இருந்ததென்று அவர்கள் நினைக்கத்தக்க அளவுக்கு இருக்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட பழைய பண்பாடுகளைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும். இந்த நிலையில் அந்தப் பண்பாடுகள் காப்பாற்றப்படுகிற நேரத்தில் சில பழக்க வழக்கங்களும் இப்படியே கட்டிக் காப்பாற்றப்பட வேண்டுமா என்றால்-சமுதாயத்தின் பெயரால், ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட சமுதாயமாக இருக்கின்ற அந்த பழக்கமும் ஆதிகாலத்துப் பழக்கம் என்பதால் அதையும் ஆதரிக்கவேண்டுமா என்றால் கூடாது. அந்தப் பழக்க வழக்கங்களை சம்மட்டி அடி கொடுத்து நொறுக்க வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம்.

ஆதிகாலத்துப் பழக்க வழக்கப்படி நந்தனாரேகூட சிதம்பரம் கோவிலுள் நுழைய முடியவில்லை. நந்தனை உள்ளே வா என்று அழைக்கின்ற துணிவு ஆண்டவனுக்குக் கூட ஏற்படவில்லை. நந்தன் போய் நின்றான். நடராசனைக் காண வேண்டுமென்று விரும்பினான். இடையே நந்தி மறைத்துக் கொண்டிருந்தது. நந்தன் ஆண்டவனைப் பார்த்துக் கேட்டான். 'கொஞ்சம் நந்தியை விலகச் சொல்' என்று. ஆண்டவன் துணிவு உடையவனாக இருந்தால் நந்தி அப்படியே இருக்கட்டும்; நீ உள்ளே வா கோவிலுக்குள் என்று அழைத்திருப்பான். ஆனால் ஆண்டன் அப்படிச் செய்யாமல் நந்தியை சற்றே விலகி இரும்பிள்ளாய் என்று நந்திக்குகூறி, நந்தனுக்குக் காட்சி கொடுத்தாரே அல்லாமல், கோவிலுக்குள்ளே வா என்று கூறவில்லை. ஆண்டவனே சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு ஆள்கிறவர்கள் சொல்கிறோம். இன்று தாழ்த்தப்பட்ட பின்தங்கிய சமுதாயம் முன்னேற நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தச் சமுதாயம் பெறுகிற முன்னேற்றம் இது போன்ற பொருளாதார ஏற்றம் தருகிற சமுதாயமாக ஆக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்."

**(—முதல்வர் கலைஞர் உதகையில் 22—5—74 அன்று ஆற்றிய உரை)**

# நலிந்தோர் வாழ்வில் ஒளியேற்றும் திருப் பணிகள்



டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு மாநிலத்தில் முதல்வர் மட்டுமல்ல; நலிந்தோர் வாழ்வில் நலம் பெருக நாடும் ஏடும் போற்றத்தக்க அளவில் நல்ல பல நல்வாழ்வுத் திட்டங்களை நாட்டிற்கு அளிப்பதிலும், செயல்படுத்துவதிலும் எல்லோருக்கும் முதல்வராகத் திகழ்கிறார். இரந்து வாழ்வோரின் நலன் கருதி பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டம்; பிணியோடு அறியாமையும், அத்தோடு வாய்ப்பு வசதி இன்மையும் சேர்ந்து கண் பார்வை இழந்து தவிக்கும் திக்கற்றோருக்கு திசை காட்டும் பணியாக இலவசக் கண்ணொளித் திட்டம் மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நிலை மாற கை வண்டி இழுப்போருக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா அளித்தல் ஆகிய நல்வாழ்வுத் திட்டங்கள் இதற்கு முந்தைய ஆண்டுகளில் அவரின் பிறந்த நாள் பரிசுகளாக நாட்டிற்கு அளித்தார். அதைத் தொடர்ந்து இவ்வாண்டு ஒரு கோடி ரூபாய் தொடக்க செலவில் ஊனமுற்றோரின் உயர் வாழ்விற்காக முதல்வர் அறிவித்துள்ள திட்டம் எல்லோரின் கவனத்தையும் கருத்தையும் ஈர்த்துள்ளது. இத்திட்டம் வரையப் பட்ட முறையினையும், இன்றைய சூழ்நிலையில் இந்தத் திட்டத்தின் மாட்சியினையும் குறித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு தனது 20.5.74 வெளியீட்டில் தலையங்கம் தீட்டியுள்ளது. "ஒரு உயர் நோக்குடைய உணர்ச்சிக் குறிப்பு" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள அந்தத் தலையங்கம் கீழே தரப்பட்டுள்ளது.

"ஏழ்மை நிறைந்த நாட்டில் குறிப்பாக உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைச் சுமை துயர் நிறைந்தது. பணி செய்ய வாய்ப்பின்மையால் நல்ல வலுவான உடற்கட்டுடையோரில் பெரும் பகுதியினரே நிறைவான வாழ்க்கை நடத்த இயலாத சூழ்நிலையில், ஊனமுற்றோர் மனக்கசப்பை உண்டாக்கும் தங்களின் வாழ்வின் நிலையை தாங்களே உணர்கின்றனர். பணி செய்ய வாய்ப்பினை தேடிச் செல்லும்போது அவர்கள் பொறுமை, பொச்சரிப்புக் கண்கொண்டு கருதப்படுகிறார்கள். பெரும்பாலான பணி செய்யும் துறைகளுக்கு பெற்ற பயில்திறனால் அவர்கள் மற்றவர்களுக்கு இணையாக பொருத்தம் உடையவர்களாக இருப்பினும் வேலை தருவோர் ஊனமுற்றோர்களின் பணியினை பயன்படுத்திக் கொள்ளத் தயங்குகின்றனர்.







"அவர்களின் நிலை உயர்வதற்கு சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் பயனற்றவைகளாக நிலைத்து நிற்கின்றன. முதல்வரின் ஐம்பதாவது ஆண்டு பிறந்த நாளையொட்டி வரையப்பட்டுள்ள நல்வாழ்வுத் திட்டம் மிகச் சீரான முறையில் வகுக்கப்பட்டுள்ளது; சரியான முறையில் செயல்படுத்தப்பட்டால் இத்திட்டம் இம்மாநிலத்தில் வதியும் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் ஊனமுற்றோர் வாழ்வில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும்.

"அண்மை ஆண்டுகளில் தன் பிறந்த நாளை ஏழை எளியோர் பயன் பெறும் திட்டங்களோடு இணைத்து காண்பது திரு. கருணாநிதியின் இனிமையான எண்ணமாகும். இதற்கு முந்தைய நல்வாழ்வுத் திட்டங்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு, இலவச கண்ணொளி முகாம்கள், கை ரிக்ஷா இழுப்போருக்கு சைக்கிள் ரிக்ஷா அளித்தல் ஆகியவைகளை உள்ளடக்கி இருக்கின்றன.

## எல்லா மாநிலங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டு

"ஒரு மனிதரின் வாழ்வில் 50 ஆண்டு என்பது ஒரு குறிப்பிடத்தக்க காலக்குறியாகும். இந்த ஆண்டு பிறந்த நாள் திட்டம் ஒரு முறையான பேராவலுடையதாக விளங்குகிறது. ஒரு கோடி ரூபாயைத் தொடக்கச் செலவாகக் கொண்ட இந்தத் திட்டம் ஊனமுற்றோருக்கு பலவகைகளிலும் ஆறுதலளிக்கக் கூடியதாக இருக்கும். குருடர்கள், செவிடர்கள், நொண்டி மற்றும் பல வகைகளில் உடல் ஊனமுற்றோர்கள் அனைவரும் தங்களுக்கென்று ஒரு திட்டத்தைக் கொண்டவர்களாக இதன் மூலம் விளங்குகிறார்கள். செவிடர்களுக்கென்று ஐந்து பள்ளிகள், குருடர்களுக்கென்று ஐந்து பள்ளிகள் என்று தனித்தனியாக போடப்பட்டுள்ள திட்டம் இவைகளில் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவையாகும். பல திட்டங்களிலும் ஊனமுற்றோர் தங்களுக்கு தாங்களே உதவிக்கொள்வது என்பதற்கு அழுத்தமான ஆழம் தரப்பட்டிருக்கிறது. 150 ஊனமுற்றோருக்கு பல துறையில் பயில் திறன் அளிப்பதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவில் பொறியியல் தொழிலகம் ஒன்றும் நிறுவப்பட இருக்கிறது.

"இந்தத் திட்டங்கள் ஆழ்ந்த அகன்ற முன்னோக்கு. முதிர் சிந்தனைக்குப் பின் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான நிதியில் ஒரு பகுதி சிறப்புப் பரிசுச் சீட்டுத் திட்டம் ஒன்றின் மூலம் திரட்டப்பட இருக்கிறது. பொது மக்களின் நன்கொடையும் ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்களின் ஆதரவு இத்திட்டங்களுக்கு தாராள மனப்பான்மை அளவில் இருக்கும் என்று நம்பப்படுகிறது.

"இந்திய நாட்டின் தெருக்களில் வயிற்றுச் சோற்றிற்காக கையேந்தித் திரியும் தொழு நோயாளிகள், குருடர்கள், நொண்டிகள் இவர்களைப் பார்ப்பதை விட துயரமான நிகழ்ச்சி வேறு எதுவும் இருக்க முடியாது. சேமநல அரசின் பலவாறான உறுதி மொழிகளுக்குப் பின்னும் அப்படிப் பட்டவர்களை அனாதைத் தன்மையிலிருந்து விடுவிக்க முடியவில்லை என்பது நல்வாழ்வு அரசின் மீது கூறப்படும் கடுமையான முறையான குற்றச்சாட்டிற்கு ஒப்பாகும்.

"தமிழ்நாட்டில் அரசு தன்னுடைய பொறுப்புகளை பெருமளவில் நிறைவேற்றி வருகிறது. இப்போதைய திட்டமும் இந்த முனைப் பார்வத்தின் ஒரு கூறேயாகும். இந்நாட்டின் பிற பகுதிகள் தமிழ் நாட்டின் சீரிய முன் உதாரணத்தைப் பின்பற்றுவதைக் காட்டிலும் சிறப்பாகச் செய்யக்கூடியது வேறொன்றும் இல்லை".

இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் இம்முன்னோடித் திட்டத்திற்கு சீரும் சிறப்பும், எழிலும் வலிவும் கூட்டுவது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும்.

—இரா. நல்லுசாமி.

# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி



தமிழ்நாடு அரசு தமிழன்னைக்குச் சூட்டிடும் மணிமகுடமாகச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாகிறது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் ''அகர முதலி''த் திட்ட இயக்குநராக மொழி நூலறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தேவநேயப் பாவாணரவர்கள் 7—2—1902ல் சங்கரநயினார் கோவிலிற் பிறந்தார். வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆம்பூரில் நடுநிலைப் பள்ளியொன்றில் கல்வி கற்கத் தொடங்கிப் பாளையங் கோட்டையில் பள்ளியிறுதிப் படிப்பை முடித்துப், பின்னர்த் தமிழணங்கை வணங்கித் தாமே இலக்கண-இலக்கியங்கள் பயின்று 24-ஆம் அகவையில் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் தேறி, தமிழாசிரியர் பணி மேற்கொண்டு 23 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியிலும், 12 ஆண்டுகள் சேலம் நகராண்மைக் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுப் பேராசிரியராகத் திகழ்ந்த இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொண்டாற்றி ஓய்வு பெற்றவர். இவர், தமிழே உலகத்தின் முதல் தாய்மொழி என்ற கருத்தை முதன் முதல் நூல் வடிவில் நாட்டிய பேரறிஞர். தனித்தமிழ் ஆட்சிபெற 'உலகத் தமிழ்க் கழகத்தை' நிலை நாட்டியவர். 'வடமொழி வரலாறு', 'தென்மொழி வரலாறு', 'Primary Classical Language of the World', 'திருக்குறள் மரபுரை' போன்ற அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். இவரைப் பின்பற்றும் அன்பர்கள் தமிழகத்திலும் மலேயாவிலும் கணக்கற்று உள்ளனர்.

தமிழ்மொழி ஆய்விலே நாற்பது ஆண்டுகள் மூழ்கித் திளைத்தவரான ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்து மூன்று.

# பிற்பட்ட வகுப்பினர் நலமும் தேசிய ஒருமைப்பாடும்

மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர்

## என். வி. நடராசன்



''இன்றைய தினம் சமுதாயத் துறையில் ஒரு பெரும் மறுமலர்ச்சியை நாம் எதிர்பார்க்கிறோம். இந்த மறுமலர்ச்சி உருவாக வேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே நாம் முன்னுரை எழுதி வைத்திருக்கிறோம். சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி இவையெல்லாம் வழங்கப்பட வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரை கூறுகிறது. சமத்துவம், தோழமை, சம வாய்ப்பு இவையெல்லாம் தேவை என்று அரசியல் சட்டத்தின் முன்னுரை எடுத்துச் சொல்கிறது. ஆனால் அந்த முன்னுரையில் நாம் பொருளாதார நீதிக்கும், அரசியல் நீதிக்கும் முயற்சித்தது போல் சமுதாய நீதிக்கு முயற்சிக்கவில்லை''. இவ்வாறு சென்ற ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற அரிசன-பிற்பட்டோர் மாநாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சமுதாய நீதி என்று கூறும்போது இந்தியநாட்டு மண்ணில் பிறந்துள்ள அனைத்து மக்களும் அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெற்று வாழ வேண்டும் என்ற கருத்தை அனைவரும் கொண்டவர்களாக இருக்கிறோம். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நாம் கண்டு வருவதற்கு மக்களிடையே, மேம்பட்டவர்களும், வசதிகள் புறக்கணிக்கப்பட்ட கீழ்ப்பட்ட மக்களும் வாழ்ந்து வருவதும் தான் , காரணம். விடுதலை பெற்ற இந்திய நாட்டில், இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக மக்களிடையே காணப்பட்ட சரிசமமற்ற நிலை ஓரளவு குறைந்திருந்தாலும் முழு வெற்றியை அடைந்து விட்டோம் என்று நாம் கூற முடியாது. தேசிய ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையும் தேவையும் வலியுறுத்தப்பட்டு வருகிற இந்நாளில், மக்களின் சமவாழ்வுப் பிரச்சினை முதலாவதாகத் தீர்க்கப்பட வேண்டியிருக்கிறது. பல்வேறு பிரிவினர், இனத்தவர் வாழுகின்ற இந்தப் பரந்த நாட்டில், ஒற்றுமைக் குரல் எழுப்புகின்ற அதே நேரத்தில் பின்னிலை மக்களாக வாழுகின்ற பலகோடி மக்களின் வாழ்வும் உயர்ந்து, ஒலிக்கின்ற குரலில் செல்வமும் ஏழ்மையும், அறிவும், அறியாமையும் கலந்த பேதங்கள் அகற்றப்பட வேண்டும். இதை எண்ணியே நமது புனிதப் பயணத்தை தொடங்கிட வேண்டும்.

பன்னெடுங்காலமாகச் சமுதாயத்தில் ஒரு கணிசமான பிரிவினர் வாழ்க்கையில் இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்து விட்டனர். இந்தத் தேக்கம், சமுதாய அமைப்பினாலும், அவர்கள் பரம்பரையாக செய்து வந்த தொழில்களினாலும் ஏற்பட்டதென்று கூறலாம். அதன்பயனாக பின் தங்கிய மக்கள், விவசாயம் முதலான இன்றியமையாத தொழில்களில் ஈடுபட்டு சலியா உழைப்பினை மேற்கொண்டிருந்தும்கூட, அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவில்லை.

தேசிய ஒருமைப்பாடு என்று நாம் கூறும்போது மக்களிடையே ஒன்றிய உணர்ச்சியும், கட்டுப்பாடும் நாட்டுப் பற்றும் மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. மக்களின் வாழ்க்கை நிலை, சமுதாய நீதியிலும் ஒருமைப்பாட்டினை நாம் பெற்றுத் தந்திட வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த நல்லுணர்வை மக்களிடையே தோற்றுவிக்க எண்ணி தமது அரசியல் பயணத்தைத் தொடங்கி ஆட்சிப்பொறுப்பை ஏற்று நம்மை விட்டு மறையும் வரை தமிழகப் பேரொளி பேரறிஞர் அண்ணா அவர்கள் உழைத்தார்கள். அவரது எண்ணங்களைச் செயல் வடிவாக்கி பிற்பட்ட மக்களாக மிகப்பலர் வாழுகின்ற இம்மாநிலத்தில் அவர்களுக்காகவே பாடுபட ஒரு தனி இலாகா துவங்கப்பட்டு அதற்கெனத் தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். சமுதாயத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமைகள், சலுகைகள் வழங்குவது, அப்படிப்பட்ட சலுகைகளை வழங்கி சமநீதியை உருவாக்குவது தமிழக அரசின் நோக்கமாக உள்ளது. இந்த தூய பணியில் முழுமை கண்டிட முழு முயற்சியுடன் வேக நடைபோட்டு வருகிறோம்.

தமிழக அரசு பிற்பட்டோர் நலங்காக்க கொண்டுள்ள திட்டங்களால் இத்தகைய மக்கள் மத்தியில் பெரிய விழிப்புணர்ச்சியும், தன்னம்பிக்கையும் தோன்றியுள்ளன. இவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளினால் கல்வி, தொழில் போன்ற பல மட்டங்களிலும், உயர்ந்து முன்னேற வேண்டும்

என்ற ஆர்வம் துளிர்த்துள்ளது. இது இம்மக்களிடையே ஏற்பட்ட ஒரு வரவேற்கத்தக்க மாறுதல்.

1971-ஆம் ஆண்டு மக்கள் கணக்குத் தொகைப்படி தமிழகத்தின் மக்கள் எண்ணிக்கை 411 இலட்சம். இதில் பிற்பட்டோரின் தொகை மட்டும் 206 இலட்சமாகும். பாதிக்கு மேற்பட்ட இம்மக்களில், உழவர் பெருமக்கள், பாட்டாளி மக்கள், நெசவாளர், தச்சர், அணிகலத் தொழிலாளர்கள் போன்ற உழைப்பாளர்கள்-ஏழை எளிய மக்கள்தான் பிற்பட்டவர்களாக திகழ்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் இவர்களை வரலாற்றின் அடிப்படையிலும், சமூக அமைப்பின் அடிப்படையிலும் அவரவர்கள் சாதியின் பெயரைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இவர்களுடைய நல் வாழ்வைப் பொறுத்துத்தான் நாட்டின் முன்னேற்றம் உள்ளது என்றால் அது மிகையாகாது.

சாதிகளினால் மட்டுமல்லாமல் தாங்கள் வாழும் வசதியற்ற பிரதேசங்கள் அதிக ஊதியமும், வாய்ப்புக்களும் இல்லாத தொழில்களை மேற்கொண்டிருத்தல் முதலான காரணங்களால் பிற்பட்டவர்கள் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். மிகப்பல ஆண்டுகளாக கல்வியில் பெரும்பாலான மக்கள் கருந்த அக்கறை காட்டாததினால், கல்விச்செல்வத்தையும் தேவையான அளவு பெற்றிராதவர்களாக இருக்கின்றனர். பிற்பட்ட சமூகத்தினர் கல்வி கற்றிட போதுமான வாய்ப்புக்களும் வசதிகளும் பல ஆண்டுகளாக இல்லை. இதை முக்கியமாகக் கவனத்தில் கொண்டு, இம்மக்கள் கல்வியறிவில் முன்னேறிட அவசியமாகக் கருதப்படுகின்ற உபகாரச் சம்பளம், உணவு, உள்ளுறை வசதிகள் தருவதிலும் படித்து முன்னேறியவர்களுக்கு ஓரளவு அரசின் ஆதரவில் வேலை வாய்ப்புகளும் கிடைக்கும் வகையில் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல் வடிவம் பெற்று வருகின்றன. கல்வி உதவித் தொகையைப் பொறுத்தவரையில் 1948-49-ல் ரூபாய் ஒரு இலட்சம் எனத் துவங்கி, 1949-50-ல் ரூபாய் 5 இலட்சமாகப் பெருகி தற்போது ரூ. 356 இலட்சமாக வளர்ந்திருப்பது, இம்மக்களின் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையினைக் காட்டுகிறதல்லவா? அதோடு 1948-49-ஆம் ஆண்டில் 609 பேர்களே பயன் பெற்றனர். பின்னர் 1960-61-ல் 19,856 பேர்கள் உதவித் தொகை பெற்றனர். ஆனால் 1972-73-ஆம் ஆண்டிலோ 1,92,138 பேர்கள் உதவித் தொகையினைப் பெற்று கல்வித் தகுதியில் ஏற்றம் பெற்று வருகின்றனர். சரிபாதி வகுப்பைச் சார்ந்த இப்பிற்பட்ட மக்கள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும். ஆதலின் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணத்தில் கொண்டு அரசு அளித்து வரும் சலுகைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் அரசின் விருப்பமாகும்.

1969-ஆம் ஆண்டில் பிற்பட்டோர் நலத்துறை துவக்கப்பட்டபோது 16 மாணவரில்லங்கள்தான் பிற்பட்டோருக்காக செயல்பட்டு வந்தன. ஆனால் இன்றோ 144 இல்லங்களாக பெருகியுள்ளன. இம்மாணவர்களுக்குப் போதுமான வசதியில்லாமல் இருக்கும் குறைகளைப் படிப்படியாகப் போக்க, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ரூபாய் ஒரு கோடி கடன் பெற்று மேலும் 100 விடுதிகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அறிவார்ந்த சமுதாயத்தினராக பிற்பட்டோரை மாற்றியமைக்க திட்டமிட்டு வருகின்ற அதே நேரத்தில் அவர்கள் பொருளாதார வளர்ச்சியும் பெற்று விளங்கிடுவதற்கு திட்டங்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறுதொழில்கள், வணிகம் போன்றன துவக்குவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற உதவும் பொருட்டு வங்கிகளுடன் கலந்து பேசி ஒரு நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. இவ்வித கடனுதவி தேவைப்படும் பிற்பட்ட மக்கள், ஆங்காங்குள்ள மாவட்ட நல அதிகாரிகள் மூலம் வங்கிகளிலிருந்து ரூபாய் 57 லட்சம் வரை 5,717 பேர்கள் கடன் தொகை பெற்றுள்ளனர்.

மிகப் பிற்பட்டோராகிய சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், குற்றபரம்பரை பட்டியலிருந்து நீக்கப்பட்டோர் போன்றவர்களுக்குத் தொழில் கருவிகள் வாங்கித் தருதல், சலவைத் துறைகள் அமைத்தல் முதலான உதவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. சலவையாளர்கள் மட்டும் இம்மாநிலத்தின் 4·61 இலட்சம் பேர் இருக்கின்றனர். இவர்களது தொழிலுக்கு போதுமான வசதிகள் செய்து வரும் வகையில் அரசு வசதி மிக்க சலவைத்துறைகளை கட்டித் தருவதற்கு முடிவு செய்தது. இதுவரை மாநிலத்தில் 21 இடங்களில் இத்துறைகள் அமைக்க கடனுதவி தரப்பட்டுள்ளது. இத்துறைகள் கட்டுவதற்காகும் மொத்தச் செலவில் பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் அரசு வழங்குகிறது. இதற்காக ஆண்டு தோறும் பிற்பட்டோர் துறை நிதியில் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சவரத் தொழிலாளர், சலவை தொழிலாளரில் 1,440 பேர் 1966-67-ஆம் ஆண்டில் பயனடைந்துள்ளனர். 1973-74-ல், 4,081 பேர்கள் அவர்கள் தொழிலுக்குத் தேவையான கருவிகள் பெற்று பயன் பெற்றுள்ளனர். நடப்பாண்டில் 8,000 பேர்களுக்கு இவ்வுதவியினைத் தந்திட அரசு மதிப்பிட்டுள்ளது.

குற்றப்பரம்பரை பட்டியலிருந்து நீக்கப்பட்ட வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு கிணறுகள் வெட்ட ரூ. 2,000 வரை மானியமாக அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டமும் அமுலாக்கப்பட்டு மானியமும் கடனும் கலந்த வகையில் தரப்படுகின்றது.

பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்யவும், அவர்கள் நிலைமையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனை மதிப்பிடவும், குறிப்பாகக் கல்வித் திட்டங்கள் குறித்தும் அரசுப் பணிகளில் அவர்களின் விகிதாசாரத்தைப் பற்றி மதிப்பிடவும் 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பின் தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்றினை அரசு அமைத்தது. இவ்வாணைக்குழு, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் பல்வகை இனங்கள் பற்றி 100 பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியுள்ளது. நிதி மற்றும் சில பரிந்துரைகள், ஏற்கப்படாவிடினும், மற்ற பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

சாதி ஒழிய, சமத்துவம் நிலை பெற, இத்துணைக் கண்டத்தில் பல பெரியவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். காந்தியண்ணலின் நற்பணியும், டாக்டர் அம்பேத்காரின் சேவையும், தந்தை பெரியாரவர்களின் அருந்தொண்டும், பேரறிஞர் அண்ணாவின் சலியா உழைப்பும் சமுதாய அடித்தள, பின் தங்கிய மக்களின் நல்வாழ்விற்காகப் பயன்பட்டன என்பதை மக்களனைவரும் அறிவார்கள்.

பிற்பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படும் இவ்வரசு, கோடிக்கணக்கில் பணத்தினை செலவிட்டுபல்வேறு பயனுறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனை இச் சமூகத்தினர் உரிய வகையில் பயன்படுத்தி உயர்ந்து வாழ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையை மனதிற் கொண்டு, ஒருமைப்பாடு இலட்சியத்தை சலியா உழைப்பில் ஈடுபடுத்திக் கொண்டு, பிற்பட்ட மக்கள் வாழ வேண்டும். ஒருமைப்பாடு உதட்டளவில் இல்லாது, ஓயாத செயல் திறன் நல்கி, பிற்பட்ட மக்கள் என்னும் சொல்லினை அகற்றி இம்மண்ணில் பிறந்த அனைவருமே இன்புற வாழும் அளவுக்கு, அரசின் இப்பணிகள் துணைக்கரமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**(5—5—1974 அன்று வானொலியில் ஆற்றிய உரை)**

---

# ஏரிகள் ஆழமாகும்!

தமிழகத்தில் 37 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. இந்த 37
ஆயிரம் ஏரிகள் தூர் வாரப்படாததால் 50,000 ஏக்கரா என்ற
அளவில் இருக்கிற ஆயக்கட்டுதாரர்கள் மழையை நம்பி
வாழ்வைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 37 ஆயிரம் ஏரிகளில் தூர் வாரினால் 200 ஏக்கரா
பாசனம் பெறக் கூடிய ஏரிகள் 7 ஆயிரம்.

100-லிருந்து 200 ஏக்கரா வரை பாசனம் பெறக்கூடிய
5 ஆயிரம் ஏரிகள்!

100 ஏக்கராவுக்குக் குறைவான பாசனம் பெறக்கூடிய
ஏரிகள் 25 ஆயிரம் ஏரிகள்!

இவற்றை மூன்று கட்டமாக எடுத்துக் கொண்டு, முதலில்
7 ஆயிரம் ஏரிகள்—பிறகு 5 ஆயிரம் ஏரிகள்—முடிவாக 25
ஆயிரம் ஏரிகள் என்று எடுத்துக்கொண்டு ஏரிகளைத் தூர் எடுப்பது
பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

முதற்கட்டமாக 7 ஆயிரம் ஏரிகள் தூர் வாரப்பட்டு, ஒவ்
வொரு ஏரியின் மூலமாக 200 ஏக்கர் பாசனத்தை நிரந்தரமாக்க
இந்த 7 ஆயிரம் ஏரியும், ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 25 கோடி
செலவில் தூர் எடுத்து பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலைக்கு
வரும்.

ஆகவே முதற்கட்டமாக 7 ஆயிரம் ஏரிக்கான தூர்
எடுக்கின்ற வேலைக்கு 5 கோடி ரூபாய் 74–75, 75–76 வரவு
செலவுத் திட்டத்தில் ஒதுக்கி அந்தக் காரியங்களைச் செய்ய
அரசு கருதியிருக்கிறது. அதற்கான அடுத்த தொடர் திட்டங்களை
பொதுப்பணி அமைச்சரும் அதிகாரிகளும் பொறியாளர்களும்
ஏனைய துறையினரும் எடுத்துக் கொள்வார்கள்.

**முதல்வர் கலைஞர்**

காவேரி மேலணை சீரமைப்புத் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தபொழுது குறிப்பிட்டது.

# 'சேமிப்பு'
## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


# தமிழ்நாடு பஞ்சாலை இணையம் என்றால் என்ன?

தமிழ்நாடு பஞ்சாலை இணையம் (Tamil Nadu Textile Corporation) மாநில அரசுக்கு முழுதும் சொந்தமான ஒரு நிறுமமாகும் (Company). இது 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. இயங்க இயலாது நொடித்து மூடப்பட்ட பஞ்சாலைகளை எடுத்து, அவற்றின் இயந்திரங்களையும், கருவிகளையும் நவீனப்படுத்தல், இயந்திரங்களை வாங்குவதற்கும் நடைமுறை மூலதனத்திற்கும் வேண்டிய நிதி உதவி அளித்தல், சிறந்த நிர்வாக முறைகளைப் புகுத்தல் போன்ற நல் நோக்கங்களைக் கொண்டது இந்த இணையம்.

மூடப்பட்ட, அன்றி, நொடித்த பஞ்சாலைகளினால் வேலையிழந்த தொழிலாளப் பெருமக்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளித்தல், இம்மாநிலத்தில் பரந்து கிடக்கும் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல தரமான நூல்களை நியாய விலையில் வழங்கல் போன்ற தலையாய சமூக நோக்கங்களுக்காகவும் இந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வேறு நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும். அவற்றுள், செய்முறைப்படுத்தும் வசதிகளை (Processing facilities) அளித்தல், மாதிரி நிறுவனங்களாக அமையும் புதிய பஞ்சாலைகளை நிறுவல், நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளல், தொழிலாளர் நலம் பேணல் போன்றன அடங்கும்.

*1951 - ஆம் ஆண்டின் தொழில் (வளர்ச்சி-முறைப் படுத்தல்) சட்டத்தின் கீழ் 7 ஆலைகளின் நிர்வாகமும், 1972-ஆம் ஆண்டின் நொடித்த பஞ்சாலை நிறுவனங்கள் நெருக்கடி நிலைச் சட்டத்தின் (பின் நாடாளுமன்றச் சட்டமாக்கப் பட்டது) கீழ் மேலும் 7 ஆலைகளின் நிர்வாகமும் இவ் இணையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதில் 13 ஆலைகளை இணையம் கைவசம் எடுத்துள்ளது. நீதி மன்றம் விதித்த தடுப்பு ஆணையால் (Stay Order) காளீஸ்வரர் மில்ஸ் 'பி' யூனிட் ஆலையை கைவசம் எடுக்க இயலாது போயிற்று. இந்த இணையத்தின் நிர்வாகத்தில் ஓம் பராசக்தி மில்ஸ் லிமிடெட், கம்போடியா மில்ஸ் லிமிடெட், கிருஷ்ண வேணி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், ஸ்ரீரங்க விலாஸ் ஜின்னிங் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி லிமிடெட், சோமசுந்தரம் மில்ஸ் 'ஏ' யூனிட், பலராமவர்ம டெக்ஸ்டைல்ஸ், ஸ்ரீசாரதா மில்ஸ், காளீஸ்வரர் மில்ஸ் 'ஏ' யூனிட், பங்கஜா மில்ஸ், பயனியர் ஸ்பின்னர்ஸ், கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ் முதலிய ஆலைகள் உள்ளன.*

*தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தின் அதிகாரப்பூர்வமான பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். இதில் இவ்வாண்டு இறுதிக்குள் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 90 இலட்சமாகும். 1973-ஆம் ஆண்டுவரை தமிழக அரசு இந்த இணையத்திற்கு ரூ. 133·90 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. அந்தத் தொகை இணையத்திற்கு நிர்வாகத்திற்குட்பட்ட ஆலைகளை நவீனப்படுத்தவும் அவற்றிற்கான நடைமுறை மூலதனத்தை அளிக்கவும் இணையத்தால் ஆலைகளுக்குக்கடனாக வழங்கப்படும். இணையத்தின் நிர்வாகச் செலவைச் சரிகட்ட தாம் வழங்கும் கடன்கள் மீது குறைந்த அளவு வட்டியாக ½ சதவீதம் விதிப்பதோடு, ஆலைகள், வங்கிகளில் கடன் பெற இணையத்தால் அளிக்கப்படும் பொறுப்புறுதி (Guarantee) மீதும் ½ சதவீதம் தரகு பெறுகிறது. இணையத்தின் 1973-ம் ஆண்டின் நிகர ஆதாயம் ரூ. 4·95 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. இந்த இணையம் இலாபம் கருதாது இயங்கும் ஒரு நிறுவனம் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்லாது இணையம் தாம் செய்த பணிகளுக்குக் கட்டணம் விதிப்பதையோ, ஆலைகளிடமிருந்து நிர்வாக ஊதியம் பெறுவதையோ இந்தியப் பேரரசு அனுமதிப்பதில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தகுந்தது.*

### ஆலைகளின் எண்ணிக்கை

*இணையத்தால் எடுக்கப்பட்ட 13 ஆலைகளின் எண்ணிக்கையில் இவ்வாண்டு மாற்றம் எதுவுமில்லை. இவ்வாண்டில் 3 ஆலைகள் மீண்டும் இயக்கப்பட்டு ஓட்டப்படுகிறது. ஏற்கெனவே ஓட்டப்பட்ட 9 ஆலைகளுடன் இந்த 3 ஆலைகளையும் சேர்த்து மொத்தம் 12 ஆலைகள் இவ்வாண்டில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எடுக்கப்பட்ட ஆலைகளில் மதுரையில் உள்ள 'ஸ்ரீ கோதண்டராம் மில்ஸ்' மட்டும் இன்னும் மூடிக்கிடக்கிறது. இந்த ஆலையின் இயந்திரங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ள காரணத்தால் இதனை ஓட்டும் முயற்சி கைவிடப்பட்டிருக்கிறது. காளையார் கோவிலில் உள்ள 'காளீஸ்வரர் மில்ஸ் 'பி' யூனிட்' நீதி மன்றத்தின் தடுப்பு ஆணை காரணமாக கைவசம் எடுக்க முடியவில்லை.*

## புதிய திட்டங்கள்

செய்முறைப்படுத்தும் ஆலை: தமிழ்நாடு பஞ்சாலை இணையம் நிர்வகிக்கும் ஆலைகளுக்குள் 5 ஆலைகள் நூல் நூற்பதோடு துணியும் நெய்கிறது. இந்த 5 ஆலைகளில் உற்பத்தியாகும் துணியைப் பதனிட்டு செய்முறைப்படுத்த வேண்டிய வசதிகள் இப்போது இல்லை. எனவே நவீன வகையில் செய்முறைப்படுத்தும் ஆலை ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது. துணிக்கு சாயமிடல், சுருக்கம் நீக்கல், துணிக்கு மெருகேற்றி ஒளியூட்டல், திரை அச்சடித்தல் போன்ற வசதிகளை இவ்வாலையில் பெறலாம். இவ்வாலையில் தொடக்கத்திறன் ஒரு நாளைக்கு 1,00,000 மீட்டராகும். இது படிப்படியாக 2,00,000 மீட்டருக்கு உயர்த்தப்படும். இதில் திட்டத்தின் தொடக்க மதிப்பீடு ரூ. 200 இலட்சமாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 100 இலட்சமாகும். இதற்கான தொடக்கத்திட்ட அறிக்கை பெறப்பெற்றுள்ளது. இந்த ஆலைக்குப் பொருத்தமான இடம், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பவானி சாகரில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

மாதிரி நூற்பு ஆலை: 25,000 கதிர்களைக் கொண்ட மாதிரி நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் ஒன்று இன்னும் மாநில அரசு பரிசீலனையில் உள்ளது.

தேசியப் பஞ்சாலை இணையம் மாநில பஞ்சாலை இணையங்கள் ஆகியவற்றால் நிர்வாகிக்கப்படும் நொடித்த பஞ்சாலைகளை அரசுடைமை ஆக்கவேண்டும் என்ற தமது கொள்கையை இந்தியப் பேரரசு வெளியிட்டுள்ளது. அரசுடைமை ஆக்குவதற்கு முன், எடுக்கப்பட்ட ஆலைகளின் இருப்பையும் பொறுப்பையும் கணக்கிட இந்தியப் பேரரசால் ஒரு மையக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆலைகளை அரசுடைமை ஆக்கும் முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும். அரசுடைமை ஆக்குவதன் மூலம் ஆலைகள் பொதுத்துறை நிறுவனங்களுடன் முழுதும் ஒருங்கிணைவதோடு, தாம் எடுக்கப்படுவதற்கு முன்பட்ட கடன் பொறுப்புச் சுமையிலிருந்து விடுபட்டு, முன்னேற ஏதுவாகிறது. அரசுடைமை ஆக்கப்பட்ட பஞ்சாலைகளைப் பற்றிய எதிர்கால நிர்வாக அமைப்பு இந்தியப் பேரரசின் பரிசீலனையில் உள்ளது.



## வேண்டுகோள்!

காகித விலை உயர்வின் காரணமாக 1—7—'74 முதல், 'தமிழரசு' இதழின் விலை 40 காசிலிருந்து 50 காசாக உயர்த்தப்படுகிறது. எனவே, 1—7—'74 லிருந்து சந்தா விகிதம் கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**'தமிழரசு' தமிழ்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 12.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 25.00 |
| அரையாண்டு | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

**'தமிழரசு' ஆங்கிலம்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

முகவர்களும், சந்தாதாரர்களும், வாசகர்களும் இந்த மாற்றத்தை நினைவிற் கொள்ள வேண்டுகிறோம். பழைய சந்தாதாரர்களுக்கு 1—7—'74 முதல் புதிய விகிதப்படி மாற்றம் செய்து அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாக மேலாளர்,
'தமிழரசு',
அரசினர் தோட்டம், சென்னை-600002.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களில் ஒன்று கிராமப்புற வீட்டு வசதித் திட்டம். இத்திட்டத்தின்படி கோவை மாவட்டம் காரமடை ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்த அய்யூநகரில் ஆசிரியர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இப்பொழுது 35 வீடுகள் நிறைவு பெற்றுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வரவேற்பு அறை, ஒரு படுக்கை அறை, ஒரு கூடம், ஒரு சமையற்கட்டு அமைந்துள்ளது.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்படி ஒவ்வொரு வீட்டுக்கும் நாலாயிரம் ரூபாய் கடனுதவி அளிக்கப்படுகிறது.

# ஊனமிலா உலகமைப்போம்



நடப்பதற்காம் இருகாலில் ஒருகாலாம் நம்பிக்கை
கொடுக்கின்ற கோலாவேன்; ஊன்றுங்கோல் நானாவேன்!
கையின்றிக் காலின்றிக் கமழ்உறுப்பில் சிலஇன்றேல்
மெய்யினிலே குறையென்பார்! மெய்யில்லை, குறைமொழியே!
முகமொளிரும் விழியிரண்டு முறையாக முகிழ்த்தாலும்
திகழுகிற அறிவொளியால் சேல்விழிகள் பிறங்காமல்
கல்லாத காரணத்தால் அல்லாகக் கண்ணிருள
தொல்லைதரும் புண்ணாக உள்ளதுவும், மாந்தர்கள்
உறுப்பிழந்த குருடரென உரைத்திடுதல் வேண்டுமன்றோ?
பொறுப்பேற்றுத் தோள்கொடுத்துப் பணிசெயவே பொலியும்கை!
சோம்பிமிகத் திரிபவராய்ச் சோறுண்போர் உள்ளநிலை
சூம்பிவிட்ட கையுடையார் துயர்நிலைக்கே இணையன்றோ?
எண்சாணின் உடம்பிலே இலங்குகிற உறுப்பெல்லாம்
திண்ணமுறப் பயன்படுத்தல் திகழ்நிலையில் உயர்நிலையாம்!
அனைத்துறுப்பும் அழகாக அமைந்தாலும் அவனியிலே
தினைத்துணையே பயன்படுத்தி ஆலைகளின் திறன்முழுதும்
உய்க்காத பாங்கினிலே உயிர்வாழ்தல் காண்கின்றோம்!
பொய்க்காத வாழ்வினிலே புரையோடின் ஓர்உறுப்பே
ஊன்றுகோல் எனைப்போல உதவுவன உண்டன்றோ?
தோன்றுவிழி துலங்கேனும் நாற்காலி பின்னுவதும்
காலற்றோர் எழுதுவதும் கண்ணற்றோர் தனிமுறையில்
நூலொற்றிப் பயில்வனவும் நுவன்றிடுதல் வேண்டுவதோ?
உடலினிலே ஒருபகுதி திடனின்றிப் போனாலும்
கடனாற்றத் தக்கபணி காட்டிவிடில் புரியாரோ?
தன்காலில் தான்நிற்கப் பணிபுரியும் வாய்ப்பளித்தால்
பொன்னானோர் உளம்எழுவார்; பிறருக்குப் பொதியாகார்!
அவரவர்க்கும் தக்கபணி அளித்திட்டால் தனியொருவர்
அவலநிலை அகன்றுவிடும்; அவன்சக்தி உருவாவான்!
எல்லாரும் பணிபுரியும் ஏற்றத்தைக் காணுங்கள்!
நல்லுணவு கிட்டாதேல் பார்வையதும் நலிவதுபோல்
பிறவிமுதல் கவனித்துப் பிழைபலவும் தடுத்திடுவோம்!
திறமான வாய்ப்பளித்தால் ஊனமுற்றோம் எனயாரும்
கவலுவதும் இல்லாத கண்ணியத்தைக் காத்திடுவோம்!
உவகையுடன் உதவுகிற ஊன்றுங்கோல் என்னைப்போல்
இளங்கொடிக்குக் கொழுகொம்பாய் எல்லார்க்கும் தக்கபடி
உளங்கொண்டே உதவிடுமின்! ஊனமிலா உலகமைப்போம்!

மனசை ப. கீரன்

### நிறுவனத்திறன் (Installed Capacity)

இரண்டு ஆலைகளில் மேற்கொள்ளப்பட்ட விரிவுப் பணியால், நிறுவனத்திறன் 3·59 இலட்சம் கதிர்களிலிருந்து 3·63 இலட்சம் கதிர்களாக உயர்ந்துள்ளன. நிறுவனத் தறிகள் முன்பிருந்ததைப் போலவே இவ்வாண்டிலும் 1,416 ஆக உள்ளன.

### உற்பத்தித்திறன் (Commissioned Capacity)

1972-ஆம் ஆண்டில் 2·65 இலட்சமாக இருந்த, இயக்கப்பட்ட கதிர்களின் எண்ணிக்கை 1973-ஆம் ஆண்டில் 3·33 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது இயங்கிவரும் ஆலைகளின் நிறுவனத்திறன் கதிர்களில் 94 சதவீதமாகும். இவ்வாலைகளில் இயக்காது மிஞ்சியிருக்கும் கதிர்கள் அனைத்தும், ஏற்கனவே வாங்க ஏற்பாடு செய்யப்பட்ட புதிய இயந்திரங்கள் வந்ததும் 1974-ல் இயக்கப்படும். 1972-ஆம் ஆண்டில் 446 ஆக இருந்த, இயக்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை 1973-ஆம் ஆண்டில் 772 ஆக உயர்ந்துள்ளது. இது இயங்கிவரும் ஆலைகளின் நிறுவனத்திறன் தறிகளில் 54·5 சதவீதமாகும். எஞ்சியுள்ள தறிகளை இயக்கும் ஏற்பாடு தள்ளிப் போட வேண்டியதாயிற்று. இவ்வாறு தள்ளிப் போடுவதற்குக் காரணம் இவ்வாண்டில் ஏற்பட்ட கடுமையான மின்வெட்டும், இருக்கும் நிதி உதவியைக் கொண்டு தறிகளை இயக்குவதைக் காட்டிலும் கதிர்களை இயக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்ததுமேயாகும். இப்பொழுது நிறுவனத்திறன் கதிர்கள் அனைத்தும் ஏறத்தாழ இயக்கப்பட்டுவிட்டன. அதோடு மின்சார விநியோக நிலையில் முன்னேற்றம் இருக்கிறது. எனவே, எஞ்சியிருக்கும் தறிகளை விரைவில் இயக்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

### ஆலைகளுக்கு நிதி உதவி

ஆலைகளின் இயந்திரத் தளவாடங்களை நவீனப்படுத்தவும் நடைமுறை மூலதனத்திற்காகவும் ஆகும் தொகையைக் கடனாக தேசிய பஞ்சாலை இணையமும், மாநில பஞ்சாலை இணையங்களும் முறையே 51:49



என்ற விகிதப்படி வழங்கும். ஒவ்வொரு ஆலைக்கும் நவீனமாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, தேசிய மாநில பஞ்சாலை இணையங்களால் அங்கீகரிக்கப்பட்டதின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாநில அரசு அல்லது மாநில பஞ்சாலை இணையங்கள் கொடுத்த பொறுப்புறுதியின் பேரில், தள்ளிச் செலுத்தும் முறையில் (deferred payment) இயந்திரங்கள் வாங்குவதற்கான கடன்கள், நடைமுறை மூலதனம் ஆகியன வங்கிகளிடமிருந்தும் பெறப்படுகின்றன. 1973-ஆம் ஆண்டு வரை அனைத்து வகையிலும் ஆலைகளுக்கு கிடைக்கப் பெற்ற மொத்த நிதி உதவி ரூ. 890·37 இலட்சமாகும்.

நிதி உதவி அளிக்கும் முறையில் ஆகும் செலவை, தேசிய மாநில பஞ்சாலை இணையங்கள் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்ற நியதி இருந்தாலும்கூட, நவீனப்படுத்தவில் ஏற்பட்ட செலவின் பெரும் பகுதியை மாநில அரசும், தமிழ்நாடு பஞ்சாலை இணையமும் ஏற்றிருப்பது முக்கியமான செய்தியாகும். 31-12-73 வரை தேசிய பஞ்சாலை இணையத்தால் வழங்கப்பட்ட முன் பணத் தொகை ரூ. 1·72 கோடியாகும். ஆனால் தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தால் வழங்கப்பட்ட தொகை ரூ. 2·46 கோடியாகும். இது தவிர, எடுக்கப்பட்ட ஆலைகளுக்காக மாநில அரசுக்கு விற்பனை வரி செலுத்திய வகையிலும், முன்னுள் பொறுப்புறுதிக்காக வங்கிகளுக்கு செலுத்திய வகையிலும் ரூ. 1·05 கோடி தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தால் செலவிடப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நடைமுறை மூலதனத்திற்காகவும் வாங்கியுள்ள ரூபாய் 7·32 கோடிக்கு மாநில அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது.

### நவீனப்படுத்தல்

தமிழ்நாடு பஞ்சாலை இணையம் நிர்வகிக்கும் 12 ஆலைகளுக்கான ஒரு தெளிவான நவீனமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 584 இலட்சமாகும். 'கம்போடியா மில்ஸ்', 'சோமசுந்தரம் மில்ஸ் 'ஏ' யூனிட்' ஆகிய இரு ஆலைகளிலும் நவீனமாக்கும் வேலைகள் ஏறத்தாழ முடிவடைந்து விட்டன. எஞ்சியுள்ள ஆலைகளில் மேற்படி வேலைகள் வெவ்வேறு கட்டங்களில் நிற்கின்றன. இந்த ஆண்டு இறுதிவரை நவீனமாக்கும் வேலைக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 235·42 இலட்சமாகும். இது வகுக்கப்பட்ட திட்டத்தில் 40 சதவீதமாகும். நவீனமாக்கும் நிறைவேற்றுப் பணி பாதி அளவைக்கூட எட்டவில்லை என்றாலும், இதுவரை நவீனமாக்கப்பட்டதின் விளைவால் மிகுந்த நன்மை கிடைத்துள்ளது. 1973-இல் மின்வெட்டு இருந்தும், கட்டுப்பாட்டின் காரணமாக நூல்களுக்குக் குறைந்த விலையே கிடைத்தும்கூட, நவீனமாக்கப்பட்ட காரணத்தால் ஆலைகளில் உற்பத்திபெருகியுள்ளது ஆதாயமும் அடைந்துள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட நூலையோ, துணியையோ விற்பனை செய்வதில்எந்தச்சிரமமும் ஏற்படவில்லை. தமிழக அரசின் கொள்கைப்படி, நூல் கட்டுப்பாடு ஆணை அமலில் இருந்த காலத்தே, உற்பத்தி செய்யப்பட்ட நூல் முழுதும், கைத்தறி இயக்குநரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்பட்ட நியாய விலைக்கு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்கப்பட்டது.

1973-ஆம் ஆண்டில் 10 இலட்சம் மதிப்புள்ள நூலையும் 45 இலட்சம் மதிப்புள்ள துணிகளையும் ஆலைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளன. இவ்வாண்டின் ஏற்றுமதிக் குறைவுக்கு இவ்வாண்டில் ஏற்பட்ட மின்வெட்டும், நூல் கட்டுப்பாடும் காரணமாகும்.

இந்த இணையம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழிலாளப் பெருமக்கள் மலிந்துள்ள இடங்களில் ஏழைப் பெருமக்களுக்குப் பயன்படும் வகையில் மூன்று நியாயவிலை துணிக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கின்றது. இக்கடைகள் மூலம் இவ்வாண்டில் விற்கப்பட்ட துணிகளின் மதிப்பு ரூ. 2·34 இலட்சமாகும்.

நேரடியாக ஏற்றுமதிசெய்யவும், விற்பனை பற்றிய ஆய்வு நடத்தவும், விளம்பரம் செய்யவும், காலப்போக்கில் நூல் விற்பனையை மையப்படுத்தவும் ஆன பணிகளை செய்வதற்காக ஏற்றுமதி விற்பனைப் பகுதி (Export and Marketing Division) ஒன்றை இணையம் அமைத்துக் கொண்டிருக்கிறது.

### வேலை வாய்ப்பும் தொழிலாளர் உறவும்

தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தால் நிர்வாகிக்கப்பட்ட 9 ஆலைகளில் 1972-ஆம் ஆண்டில் 8,000 ஆக இருந்த தொழிலாளர் பெருமக்களின் எண்ணிக்கை 1973-ஆம் ஆண்டில் 12 ஆலைகளில் 10,400 ஆக உயர்ந்துள்ளது. தொழிலாளர் நியமனத்தில், ஆலைகள் மூடப்பட்ட காலத்தே வேலை செய்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை நல்குவதில் முன்னுரிமை அளிப்பது என்ற தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தின் கொள்கை இன்னும் நடைமுறையில் உள்ளது. இயந்திரங்கள் நவீனமாக்கப்பட்டதாலும் வேலைப்பளு சிக்கன முறையில் சீரமைக்கப்பட்டதாலும் வேலையிழக்க நேரிட்ட தொழிலாளர்களுக்குக்கூட சுழற்சி முறையில் (Rotation) வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இம்முறை மூலம் வேலை வாய்ப்புப் பெருகவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆய்வு ஆண்டில் ஆலைத் தொழிலாளர்கள் உறவு பொதுவாக இணக்கமாகவே இருந்தது. 'கம்போடியா மில்ஸ் லிமிடெட்', 'கோயம்புத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட்' ஆகிய ஆலைகளில் கொஞ்சகாலத்திற்கு வேலை நிறுத்தங்கள் இருந்தன. அவை சுமுகமாகத் தீர்க்கப்பட்டன. 1972-ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) 1973 ஆம் ஆண்டில் 6 ஆலைகளில் 11·33 சதவீதத்திலும் 'கம்போடியா மில்ஸ் லிமிடெட்' ஆலையில் 22 சதவீதத்திலும் கொடுக்கப்பட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மிகை ஊதியம் பெற இயலாத ஏனைய 5 ஆலைகளுக்கும் தலா ரூ. 100-லிருந்து 150 வரை இலவசமாக (Exgratia) கொடுக்கப்பட்டது.

1965-68 ஆண்டுகளில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக பஞ்சாலைத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக இம்மாநிலத்தில் ஆதாயமில்லாமல் இயங்கி வந்த 25 ஆலைகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதாயம் தரும் நிலையில் (Viability) இயங்கி வந்த ஆலைகள் பலவும் கூட பாதிக்கப்பட்டன. மத்திய, மாநில அரசுகளினால் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுக்கள் பரிந்துரைக்கேற்ப, 12 ஆலைகளுக்கு வங்கிகளிலிருந்து மொத்தம் ரூ. 109·41 இலட்சம் கடன் பெறும் வகையில் மாநில அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது. இவ்வாறு அளிக்கப்பட்ட தொகையை ஆலைகளால் திருப்பிக் கட்ட இயலவில்லை. அந்த வகையில் அசலும் முதலுமாக 1973-ஆம் ஆண்டு இறுதி வரை ரூ. 40·73 இலட்சம் ஆலைகளால் கட்டப்படவில்லை. இவ்வாறு ஆலைகளால் கட்டத் தவறியதால் ஏற்பட்ட பொறுப்புக்களை (Liabilities) மாநில அரசு பொறுக்களை ஏற்க வேண்டியதாயிற்று. இவற்றில் நான்கு ஆலைகளை இணையம் எடுத்துள்ளது. அவை வங்கிகளுக்கோ அல்லது அரசுக்கோ செலுத்தப்பட வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்த திருத்தி அமைக்கப்பட்ட தவணை முறை மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓர் ஆலை கலைக்கப்பட்டு விட்டது. இதிலிருந்து பெற வேண்டிய தொகைக்கு கலைப்பு அதிகாரியிடம் (Liquidator) கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. மற்ற ஆலைகளைப் பொறுத்த வரையில் அரசு நலத்தைப் பேணும் வகையில் அந்த ஆலைகளின் நிர்வாகக் குழுக்களில் நியமிக்கப்பட்ட அரசு இயக்குநர்கள் மூலமாக அந்த ஆலைகள் செயல்படும் முறையை இந்த இணையம் கவனித்து வருகிறது.



### ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக ரூ. 1,500 இலட்சச் செலவில் ஒரு திட்டத்தை இணையம் தீட்டியிருக்கிறது. இதில் தமிழக அரசின் பங்கு ரூ. 500 இலட்சமாகும். இத்திட்டம், திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரங்கள் வருமாறு.

**நவீனமாக்கல்:** நான்காவது திட்ட காலத்தில் விடுபட்டு இப்போது அமல் படுத்தவிருக்கும் திட்டங்களுக்காக ரூ 295 இலட்சம் செலவாகும். 2 ஆலைகளை நவீனப்படுத்த ரூ. 55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் மாநில அரசின் பங்கு ரூ. 75 இலட்சமாகும். எஞ்சியுள்ள தொகையை வங்கிகள் மூலமாகவும், மத்திய அரசு மூலமாகவும் பெறப்பட வேண்டும்.

**விரிவுபடுத்தல்:** அளவில் சிறிதாக இருக்கும் 7 ஆலைகளை தானே இயங்கும் வழி செய்யும் பொருட்டு ஒவ்வொன்றிலும், அவற்றின் கதிர்களை 25,000-க்கு உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதன் மூலம் ரூ. 573 இலட்சம் செலவில் 8,800 கதிர்கள் ஆலைகளில் அதிகரிக்கும். மேலும் ரூ. 267 இலட்சம் செலவில் 1,000 தறிகள் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களுக்காக மாநில அரசு அளிக்கும் பங்கு ரூ. 280 இலட்சமாகும்.

**நடைமுறை மூலதனத்திற்கான ஓரத்தொகை:** தமிழ்நாடு பஞ்சாலை இணையத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆலைகளில் பெரும்பாலானவை (வங்கிளிலிருந்து தாம்) பெறப்படும் கடன்களுக்கான ஓரத் தொகையை (Margin money) போதுமான அளவுக்குப் பெருக்கியுள்ளன. மற்ற சிறிய ஆலைகள் தன்னிறைவு பெறும் பொருட்டு நடைமுறை மூலதனத்திற்காக ரூ. 110 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ. 45 இலட்சமாகும்.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்
1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல் 2100.87
1972-73ல் 5618.15



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

ஆர். கனகசபை
தலைவர்

குடவாசல்
சி. கிருட்டிணமூர்த்தி
உபதலைவர்

என். எல். ஹெப்லிகர்
நிர்வாக இயக்குநர்



# தமிழக அரசும் தொழிலாளர் நலனும்



தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டும்; தொழில் செழித்து வளரவும், தொழிலாளர்கள் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அச்சாணியாக விளங்குகிறது.

தொழிலதிபர், தொழிலாளர் ஆகிய இருதரப்பினரும் பேச்சு வார்த்தை நடத்த முழு வாய்ப்பு அளிக்கப்படுகின்ற அதே சமயத்தில், தொழில் துறை அமைதி குலையும்போது அல்லது உற்பத்தி தடைப்படும் போது அந்நிலையில் அரசு தலையிட்டு அமைதி மீண்டும் நிலை பெறச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். ஏனெனில், தொழிலாளர் நலன், தொழில்துறையின் நலன் மட்டுமின்றிச் சமுதாய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. அத்தகைய சூழ்நிலையில், இம்மூவகையினரின் நலனுக்கும் தீங்கு விளையக் கூடுமென்றிருக்கையில் அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தொழிலாளர் பாதுகாப்பிற்கும், அவர்தம் சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கும் பொருட்டும், தனியார்துறை, பொதுத்துறை இவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துமாறு செய்தலும் அரசின் பொறுப்பாகும்.

தொழிலாளர் நலத் திட்டத்தை உருவாக்கியதன் மூலம் தொழிலாளர் சமுதாயத்தினரின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கான நமது திட்டத்தின் வாயிலாக நமது தொழிலாளர் நலக் கொள்கைக்கு நாம் புதியதொரு பரிமாணம் அளித்துள்ளோம்; தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் செயல் வரம்பிற்குள் வராத துறைகளில் தொழிலாளருக்கு வசதிகளைச் செய்து தர விழைவது நமது தொழிலாளர் நலத் திட்டம் ஆகும். வருங்காலத்தில், இத்திட்டம், தொழிலாளர்களுக்கு எல்லாவித நன்மைகளையும் அளிக்கின்ற வரப்பிரசாதமாக அமையும்; வாழ்வில் மகிழ்ச்சியும் நலமும் நிறைந்திருக்க, சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் அவர்களுக்கு பல்வகை வாய்ப்புகளை ஏராளமாக அளிக்கும்.

அரசு தனது தொழிலாளர் நலக் கொள்கைகளை உருவாக்குவதிலும், திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், பெயர்பெற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரது ஆலோசனையையும் அனுபவ மொழிகளையும் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் மூலமாகப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்கிறது. மாநில அளவில் தொழிலாளர் நலன் தொடர்பான கொள்கைப் பிரச்சினைகள் அனைத்திலும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவே தலைமை ஆலோசனைக் குழுவாகும்.

1973-ஆம் ஆண்டின் முதற் பகுதியிலே செயலில் இருந்த மின்விசை வெட்டின் விளைவாக தொழில் நிறுவனங்கள் யாவும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தன. அந்த நிலைமையிலும், 1973-ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தில் தொழிலாளர் நிலைமை சீரடைந்தது என்பது தெளிவாகப் புலப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளின் நிர்வாகத்தினர், அவர்தம் தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரிடையே 9-3-1972-ஆம் நாளில் ஏற்பட்ட உடன்படிக்கையை ஒட்டித் தொழிலாளர் நீதி மன்றத்தின் தலைமை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற திரு. வி.பி. அருணகிரி அவர்களின் தலைமையில் பஞ்சாலை இணைக்கக் குழுவொன்றை அரசு அமைத்தது. குழு உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இல்லாததால், குழு தனது அறிக்கையை அளித்தபொழுது அதுபற்றிக் குழுத் தலைவரே தனது பரிவுரைகளை அளிக்க வேண்டியிருந்தது. அதன்மேல், அவரது பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளாதவையான பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்கள், ஊதியமும், படிகளும் உயர்ந்த வீதத்தில் அளிக்கப்பட வேண்டுமென்று கோரி, வேலை நிறுத்தம் செய்வதாக அறிவிப்புகள் கொடுத்தன. தொழிலாளர் நல ஆணையாளர் சமரச நடவடிக்கைகளைத் தொடங்கினார். ஆனால் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட முடியாமற் போனதால், அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படிகளைத் திருத்தியமைப்பது குறித்த தகராறுகளை அரசு 31-1-1974 அன்று தொழில் தகராறு குறித்த தனி நடுவர் மன்றம் ஒன்றுக்கு அனுப்பி வைத்தது. உயர்நீதிமன்ற நீதிபதியாகவிருந்து ஓய்வு பெற்ற திரு. ஆர். சதாசிவம், தொழில் தகராறு குறித்த தனி நடுவர் மன்றத்தின் நடுவராக மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டார். இருந்தபோதிலும், தொழிலாளர்கள் தாங்கள் விடுத்திருந்த வேலைநிறுத்த அறிவிப்பின்படியே, 1-2-1974 முதல் வேலை நிறுத்தம் செய்தனர்.

இருந்த போதிலும், இருதரப்பு உடன்பாடு ஏற்படுவதற்குரிய சாத்தியக் கூறுகளைக் குறித்து ஆராய்ந்து பேச்சு வார்த்தை நடைபெறுவதற்கு

## பஞ்சாலை இணைக்கக் குழு



ஏற்பாடு செய்யப்பட்டது. பேச்சு வார்த்தைகளின் விளைவாக, இரு தரப்பினருக்கும் இடையே இசைவான ஒப்பந்தம் ஒன்று 28-2-1974 அன்று கையெழுத்தாயிற்று. 1-3-74-முதல், வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம், தொழிலாளர் ஒவ்வொருவரும் 1-1-1974 முதற்கொண்டு தமது மாத ஊதியத்தில் 30 ரூபாய் கூடுதலாகப் பெறுவர். பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலையும் வேறு சில ஆலைகளும் இந்த இருதரப்புப் பேச்சு வார்த்தைகளில் பங்கு கொள்ளவில்லை; அவற்றின் தொடர்பாக பேனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலை குறித்து 8-3-1974-ல் உடன்படிக்கை ஏற்பட்டது; 11-3-1974-ல் இருந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

1973-ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட பெரிய தொழில் தகராறுகளில் முக்கியமானவை வருமாறு :—

1972-73-ஆம் ஆண்டுக்குரிய பணிக்கொடை பற்றி சோயம்புத்தூர் வட்டாரத்திலுள்ள பஞ்சாலைகளில் ஏற்பட்ட தகராறு இவ்வாண்டில் எழுந்த பெரிய தொழில் தகராறுகளில் ஒன்றாகும். தொழிலாளர் நல ஆணையாளர் இதுபற்றி இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-வது பிரிவின்கீழ், 1973 அக்டோபர் திங்களில் இத்தகராறு குறித்து உடன்பாடு ஏற்படச் செய்தார்.

சென்னை, திருவொற்றியூரில் உள்ள ''விம்கோ'' தீக்குச்சித் தொழிற்சாலையின் தொழிலாளர்கள், தங்களது ஊதியம், அகவிலைப்படி, பணிக்கொடை முதலியன திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக 4-10-1972 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். அவ்வாறு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,700 ஆகும். வேலை நிறுத்தம் நெடுநாட்கள் நீடித்தது; ஆனால், இறுதியில் தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் 10-6-1973-ஆம் நாளன்று, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-வது பிரிவின்கீழ்






ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியது. அதன்படி 11-6-73 முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. அங்கு இப்போது நிலைமை இயல்பாக உள்ளது.

சிம்சன் தொகுதி நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகள் முதல்வர் கலைஞரவர்களின் பெரு முயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டன. 1972 செப்டம்பரில் அதுபற்றி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அவ்வொப்பந்தத்தின்படி, தற்காலிய வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் நடைபெறும் என்றும், ஆனல், அக்கால அளவில் அவர்களுக்கு முழு ஊதியமும் அகவிலைப்படியும் வழங்கப்படும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், விசாரணை அதிகாரி தெரிவித்தவை பற்றி நிர்வாகத்தினர் செய்யும் முடிவு தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும், ஆனல், அம்முடிவுகளைச் செயற்படுத்து முன்னர், அவர்களது நேர்வுகளை முதல்வர் ஆய்வு செய்வார் என்றும் அவ்வொப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. நிர்வாகத்தினர் தமது விசாரணைகளை நடத்தி முடித்துள்ளனர். அம் முடிவுகள் முதல்வரால் ஆய்வு செய்யப்பட்டன. வேலையிலிருந்து நீக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

புதுடில்லியில், 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சரால் கூட்டப்பட்ட மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவிற்கிணங்க, பீடி தயாரிப்பு உட்பட புகையிலைத் தொழில்களில், தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு திருத்தியமைத்துள்ளது. மீண்டும் இவ்வாண்டில் பீடித் தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கக் கருதப்பட்டுள்ளது. வருவாய்த் துறை வாரிய உறுப்பினரான திரு. வி. கார்த்திகேயன், அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உழவுத் தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதியம் குறித்த ஆலோசனைக் குழுவின் பரிவுரைகளை ஏற்றுக் கொண்டு, 23-11-73-லிருந்து, உழவுத் தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களையும் திருத்தியமைத்து, அரசு அறிவிப்புச் செய்துள்ளது.

கீழ்க்காணும் தொழில்களில் உள்ள தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கும் பொருட்டு அரசு ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது:

1. பொடி தயாரிப்புத் தொழில்.

2. வாசனைப் புகையிலை தாம்பூலப் புகையிலை தயாரிப்புத்தொழில்.

3. உள்ளாட்சி மன்றங்களில் உள்ள வேலை நியமனங்கள்.

4. சாலை போடுவதிலும் கட்டடங்கள் கட்டுவதிலும், கல் பொடியாக்குவதிலும் கல்லுடைத்தலிலும், சாலைப் பராமரிப்புகளிலுமுள்ள வேலை நியமனங்களும் கல் தோண்டி எடுக்குமிடங்களில் கல் உடைப்பதிலும், கல் பொடியாக்குவதிலும் உள்ள வேலை நியமனங்களும்.

உணவகங்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுப்பது குறித்து அரசுக்கு ஆலோசனையளிப்பதற்காக ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. (1) அச்சகங்கள், (2) கடைகள், வாணிக நிறுவனங்கள், (3) திரைப்பட அரங்குகள் ஆகியவற்றில் வேலை நியமனங்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுக்க இயலும் பொருட்டு இந்த வேலைகளையும் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துக் கொள்வது என்ற தமது கருத்தைத் தெரிவித்து வரைவு அறிவிப்புகளை அரசு வெளியிட்டுள்ளது.

1973 நவம்பர் திங்களில் புதுடெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் வேலையின்மையால் செய்யப்படும் தற்காலிக வேலை நீக்கத்துக்குத் தாராளமாக இழப்பீடு வழங்குதல், பணிக்கொடை நிதியொன்றை நிறுவது பற்றிப் பரிசீலிப்பதற்கான குழுவை நியமித்தல் தொழில் துறையில் இயந்திர முறையைக் கொண்டு வரும் பிரச்சினை ஆகியவை தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. வேலையின்மை காரணமாகச் செய்யப்படும் தற்காலிக வேலை நீக்கத்துக்கு இழப்பீடு கொடுப்பதற்கான விதி முறையைத் தாராளமாக்குவதற்காக எடுக்கப்பட்ட முடிவைத் தொழிலாளர் வரவேற்பார்கள்.

தொழிலாளருக்குச் சட்ட உதவி அளிப்பது குறித்துப் பரிசிலனை செய்வதற்கான ஒரு நபர் குழுவின் முடிவிற்கிணங்க சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில், அரசு, தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் மூன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது. இக்குழுக்கள் தொழிலாளருக்கும் சிறு தொழிற்சங்கங்களுக்கும் தங்களது குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றியும், இடர் தணிப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவர்கள் அணுக வேண்டிய மன்றம் பற்றியும், அவை தொடர்பான விஷயங்கள் பற்றியும் அவர்களுக்கு ஆலோசனை அளித்து அவசியமான உதவிகள் அனைத்தையும் செய்யும்.

இக்குழுக்கள் தொழிலாளர் பிரதிநிதிகளின் முறையீடுகளைக் கருணையோடும் பரிவு உணர்ச்சியோடும் கேட்டு அவர்தம் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அவர்களுக்கு எடுத்துரைக்கும். ஒவ்வொரு குழுவுக்கும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவர் இருப்பார். அவர் நடுவர் மன்றத் தீர்ப்புகளுக்கு விடப்பட்ட தொழில் தகராறுகளை முடிவு செய்வதில் அனுபவம் வாய்ந்தவராயிருப்பார்; மேலும் அக்குழுவில் ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரி ஒருவரும் இருப்பார். அவர் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்திய



அனுபவம் வாய்ந்தவராயிருப்பார். இவ்விருவரைத் தவிர, அக்குழுவிற்கு அவசியமான சார்நிலைப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர்.

புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டமான புதுக்கோட்டையில் தொழிலாளர் நல அதிகாரி ஒருவர், தொழிலாளர் நல ஆய்வாளர் ஒருவர், தொழிற்சாலைகள் ஆய்வாளர் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்படுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. புதுக்கோட்டையில் மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்டங்களையும் எடைகள் - அளவைகள் குறித்த சட்டங்களையும் செயற்படுத்துவதற்கான பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்கவும் 1972-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளது ஆண்டு மாநாட்டில் செய்த முடிவிற்கிணங்கவும், உதவித் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் பதவிகள் 50-க்கு அரசு அனுமதியளித்துள்ளது. இந்தத் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களின் அதிகார வரம்பானது அவர்களிடையே உள்ள பணிச்சுமை, நியாய அளவில் பகிர்ந்தளிக்கப்படும் வண்ணம் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டும் உள்ளது.

தொழிற்சங்கத் தலைவர்களை உருவாக்கவும், தொழிலாளர் நல அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், தொழில் துறையில் உள்ள தொழிலாளர் நிருவாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், துறையின் அதிகாரிகளுக்கு நினைவுகூர் பயிற்சிகள் நடத்தவும் ஆகிய இந்த முக்கிய குறிக்கோள்களுடன் சென்னையில் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ''தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம்'' ஒன்றை அரசு அமைத்தது. இந்த நிறுவனம் நடத்திய தொழிற்சங்கத் தலைவர்களுக்குரிய முதலாவது பயிற்சி வகுப்பு 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாளன்று தொடங்கி 1973-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாளன்று முடிவுற்றது. இத்தகைய அடுத்த பயிற்சி வகுப்பு 2-1-74 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

''தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம்'' என்னும் பெயருள்ள தொழிலாளர் நலச் சிறப்புச் சட்டமொன்றும் இயற்றப்பட்டதையும், மாநில நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயுடன் தொழிலாளர் நல நிதி ஒன்று அமைக்கப்பட்டதையும் அனைவரும் அறிவர். தொழிலாளர் நல நிதிக்குத் தொழில் அதிபர்களிடமிருந்தும், தொழிலாளர்களிடமிருந்தும் பங்குத் தொகைகள் வசூலிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கு சட்டபூர்வமான இடத்தையும் அளிக்கிறது. இச்சட்டம் 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ், தொழிற்சாலைகள் ஆய்வாளர்களும் மலைத் தோட்டங்கள் ஆய்வாளர்களும் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இச்சட்டப்படிக்கான ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிதிக்கு அரசு, 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. இதைத் தவிர, இந்நிதிக்கு, இதுவரை, 14 இலட்சம் ரூபாய் வரப் பெற்றுள்ளது. இந்நிதியை நிர்வகிப்பதற்காக, தொழிலாளர் நல வாரியம் ஒன்றைச் சட்டப்படி அரசு விரைவில் அமைக்கும்.

நமது மாநிலத்தில் தமிழ்நாடு தொழிற்சாலைத் தொழி



லாளர் ஊட்டச் சத்துணவுத் திட்டம் 1973-ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடைய குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சரிவிகிதச் சிருணவு வழங்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம், தற்போது 92 தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 23,781 பேர் இத்திட்டத்தினுல் பயனடைகின்றனர்.

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு-உற்பத்தித் திறன் குறித்த கருத்தை,, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் தொடர்ந்து பரப்பி வருகிறது. ''ஆசியாவின் உற்பத்தித் திறன் ஆண்டு ''நம்புறுதியான தரப் பொருள்'' குறித்துச் செய்தித் திரைப்படம் ஒன்று, தமிழ் நாடு அரசு செய்தித் திரைப்படப் பிரிவில் 20,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் தொகைக்கு அரசு வகை செய்துள்ளது.

அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 39 பெரிய தொழில் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் இத் திட்டத்தினுல் பயனடைகின்றன. தற்போது, அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் 3, நிலையியல் மருந்தகங்கள் 94, இயல் ஊர்தி மருந்தகங்கள் 8, பகுதி நேர மருந்தகங்கள் 3, தொழிலதிபர் பயன்பாட்டு மருந்தகங்கள் 3 ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம், இம்மாநிலத்திலே, 4,03,000 குடும்பங்களில், 15,65,600 பேர் பயனடைகின்றனர். சென்னை மாநகர், அதன்புறநகர்ப்பகுதிகள், கோயம்புத்தூர் நகர், அதன் புறநகர்ப் பகுதிகள், மதுரை மாநகர், அதன் புறநகர்ப் பகுதிகள், கோவில்பட்டி ஆகியவற்றிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள், அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள எஞ்சிய பகுதிகள் அனைத்திலும், காப்புறுதி செய்து கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனுல் அவர்களது குடும்பத்தினர் மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது தவிர ஏனைய மருத்துவவசதிகள் அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ், ஆண்டொன்றுக்கு, தொழிலாளர் ஒருவர் பெறும் மருத்துவ வசதிக்கான செலவு ரூ. 50 என்ற உச்ச வரம்பினை 1-4-70-ஆம் நாளிலிருந்து அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் வரையறுத்தது. இந்த உச்சவரம்பிற்கு மேல் ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. இந்த அரசு, மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்பச் செய்து கொண்ட முறையீடுகளுக்குப் பிறகு, தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், உச்ச வரம்பு வீதங்களை மூன்று முறை உயர்த்தியது. 1-4-73-ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்படும் மருத்துவச் செலவு குறித்த உச்சவரம்பு வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வரையறுத்த மருத்துவ வசதி தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 63 ரூபாய்.

விரிவான மருத்துவ வசதி தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 67 ரூபாய்.




முழு மருத்துவ வசதி தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 80 ரூபாய். மருந்து, மருந்துப் பொருட்கள், கட்டுக்கட்டும் பொருள்கள் குறித்துத் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு அதிகமாக ஆனுல் 45 ரூபாய்க்குக் குறைவாக மாநில அரசுக்கு ஏற்படும் எந்தவொரு செலவும், உச்ச வரம்புக்கு அப்பால் சாதாரண விகிதாச்சாரத்தில் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் பகிர்ந்து கொள்ளப்படும். உச்ச வரம்புக்கும் அதிகமாக 1972-73-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவான 111 இலட்சம் ரூபாய் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது1973-74-ஆம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு தொழிலாளர்நலக் காப்புறுதிக் கழகத்தின் நீண்டகாலத் திட்டம் குறித்த குழுவின் அறிக்கை குறித்துக் கருத்துரை வழங்கும் போது, தொழிலாளர் மருத்துவ வசதிக்கான உச்ச வரம்பு வீதத்தை நீக்க வேண்டும் ; உச்ச வரம்பு இருக்க வேண்டுமாயின் தற்போதுள்ள விலைவாசி அளவில் குடும்பம் ஒன்றுக்கு 103 ரூபாய் என்று வரையறுக்கப்பட வேண்டும்; இந்த வரையறையானது விலைவாசி ஏற்றத்துக்குத் தகுந்தவாறு ஒவ்வோர் ஆண்டும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டமானது, 1974-75-ஆம் ஆண்டில், கீழ்க் காணும் ஆறு புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்படும்.

1. சென்னை புறநகர்ப் பகுதிகள் (அடையாறு, நந்தம்பாக்கம்).

2. மேலூர், மதுரை மாவட்டம்.

3. கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4. ஆத்தூர், சேலம் மாவட்டம்.

5. ஆம்பூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

6. காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம்.



# காசநோய் ஒழிப்பில் மும்முனைப் பணிகள்

காசநோய் என்ருலே மக்கள் அஞ்சித் திகைத்து அல்லற்பட்ட காலம் மாய்ந்து விட்டது. செல்வச் செழுமையுள்ளவர்கள்தான் இந்த நோயிலிருந்து குணமடைந்து மீள முடியும் என்றிருந்த நிலையும் மாறிவிட்டது.

இப்போதெல்லாம் காசநோய் வராமலேயே காத்துக் கொள்ள பயன் மிகுந்த தடுப்பு ஊசி மருந்துகள் வந்துவிட்டன. நோய் வந்து விட்டாலும் கூட, மருத்துவமனை சென்று தங்கியிருந்துதான் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்பது இல்லை. ஏழை எளியவர்களும் கூட, வீட்டிலிருந்தபடியே சிகிச்சை முறைகளை மேற்கொண்டு, நல்ல முறையில் குணமடைய முடியும். இத்துடன் காச நோய்த் தொல்லையை ஒழித்திட, தமிழக அரசினர் மாவட்டந்தோறும் முறையாக முனைப்பான சிகிச்சை வசதிகளைச் செய்து மக்களுக்கு உதவி வருகின்றனர் என்பதும் குறிப்பிட்டத்தக்கதாகும்.

காச நோய் பழங்காலம் தொட்டே இருந்து வரும் நோய். தீராத பயங்கர நோயாகச் சித்திரிக்கப்பட்டு, குடும்பங்களையே குலைத்து வந்த நோய் இது. இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள் யாருக்கும் இது வரக்கூடும். மனித உறுப்புக்கள் எதில் வேண்டுமானுலும் இந்த நோய் வரலாம். ஆனுல், நம் நாட்டில் பெரும்பாலோர்க்குக் காசம் நுரையீரலைத்தான் பாதிக்கின்றது. இக் காரணம் பற்றியே இது இருமல் நோய் என்றும் வழங்கப்படுகின்றது.

பெரும்பாலும் ஏழை எளியவர்களையே இந்த நோய் பீடிக்கிறது. என்ருலும் செல்வந்தர்களையும் இது விடுவதில்லை. இந்த நோய் நகரங்களிலும் கிராமங்களிலும் பரவலாக இருக்கிறது. மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள இடங்களில் சற்று அதிகமாக இந் நோய் தொற்றும் நிலை இருக்கலாம். தமிழ் நாட்டில் மட்டும் இன்றுள்ள நிலையில் சுமார் ஏழு, எட்டு இலட்சம் பேர்கள் காச நோயால் பீடிக்கப்பட்டவர்களாக இருக்கிருர்கள். இந்தியாவில் இந்த நோயினுல் ஆண்டுக்கு 5 இலட்சம் பேர் மடிகின்ற நிலை உள்ளது. தனிப்பட்ட மக்களும், சமூகமும், நாடும் நலம் பெற இந்த நோயை அறவே ஒழித்தாக வேண்டியது முக்கியமாகும்.

இவ் வகையில் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயன்கள், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் பொது மக்களும் பொறுப்புணர்ந்து செயல்பட்டால் இம் மும்முனைப் பணியின் மூலம் மிக விரைவில் முழுப் பயன் கிட்டும் என்பது உறுதி.

## தவருன கருத்துக்கள்

தொன்று தொட்டுப் பலர் காச நோயினைப் பரம்பரை நோய் என்று கருதி காச நோயாளிகளின் குடும்பத்தை ஒதுக்கி வந்தார்கள். இதனுல் பலர் காச நோய் கண்டால், வெளியே சொல்லப் பயந்து மறைத்து வந்தனர். இதனுல் நோய் வளர்ந்து, மற்றவர்களுக்கும் தொற்று ஏற்பட இடமளித்தார்கள். ஆனுல் அறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவாக, காச நோயோடு யாரும் பிறப்பதில்லை என்பது உறுதியாகிவிட்டது. ஒருவகை நுண்ணிய கிருமி மூலம்தான் இது ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. அதிகமாக நெருங்கிப் பழகும் நிலையில் சில குடும்பங்களில் அதிகமாகத் தொற்று ஏற்பட்டு விடுகிறது.

காலரா, வைசூரி போன்று காசம் வேகமாகப் பரவுவது இல்லை. பலரை உடனடியாகப் பாதிப்பதில்லை. ஏழ்மை, அறியாமை, தவருன கருத்துக்கள் ஆகியவை சேர்ந்த நிலையில் தான் தொற்று நோயாக மாறி, அதுவும் தொற்று ஏற்பட்ட



நோயாளிக்குக் காசநோய் உள்ளதா என்பதை அறிய 'எக்ஸ்ரே' எடுத்தல்.

பலஆண்டுகள் கழித்துவெளியே தெரிகிறது. டைபாய்டு, காய்ச்சல் வந்தால் அதனை யாரும் இழிவாகக் கூறுவது இல்லை; கருதுவதில்லை. அதே போல் காச நோய் கண்டால் மட்டும் ஏன் பயப்பட வேண்டும்? ஏன் இழிவாகக் கருத வேண்டும்? காச நோய் தொற்று ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நோய் ஏற்பட்டு விட்டால், அதற்காக வெட்கப்படக் கூடாது. சிகிச்சைக்கு முன் வர வேண்டும்.

## குறைந்த செலவில் மருந்து

முன்பெல்லாம் காச நோய்க்கு வகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட வில்லை. ஆகவே காச நோய் கண்டால் மக்கள் அச்சமுற்றுர்கள். சிகிச்சைக்கு வழி தெரியாது அவதியுற்றுர்கள். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலமே காச நோயினைப் பரவாமல் தடுக்கலாம் என்று எண்ணிஞர்கள். ஆனல், இன்று காச நோயைக் குறைந்த செலவில் குணப்படுத்தக் கூடிய, சிறந்த மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முறையான சிகிச்சை மேற்கொண்டால் நிச்சயமாக விரைவில் குணம் பெறலாம். ஆகவே மக்கள் இனி காச நோய் வந்தால் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

## பி.சி.ஜி. தடுப்பு

நோயாளியிடமிருந்து காச நோய்க் கிருமிகள் பரவுவதைத் தடுக்கவும் வழி கண்டுவிட்டார்கள். தொற்றும் கிருமிகள் பரவாமல் இருக்க இன்று வகை செய்ய முடியும். காச நோய் ஒருவரைத் தொற்றிக் கொள்ளாமல் தடுக்க பி.சி.ஜி. மருந்து அளிக்கலாம். மேளுடுகளில் இந் நோய் மறைந்து கொண்டிருக்கிறது.

காச நோயைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும் பொது மக்கள் நான்கு வழிகளில் ஒத்துழைக்க முடியும் :

1. சிறுவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடச் செய்வதன் மூலமும், ஆரோக்கியப் பழக்க வழக்கங்கள் மூலமும் காச நோயினின்றும் பாதுகாப்பு அளிக்கலாம்.

2. காச நோய் கண்டவர்கள் உடனடியாகச் சிகிச்சை பெறுவதற்கு உதவலாம்.

3. தொடக்கத்திலேயே இந் நோயினைக் கண்டறிய உதவலாம்.




நோயாளியின் சளி பரிசோதிக்கப்படுகிறது.

4. நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கு வகை செய்யலாம்.

இன்று காச நோயினைப் பரவாமல் தடுக்கக் கூடிய பி.சி.ஜி. மருந்து அபாயமற்றது, தீங்கற்றது; முறையானது. ஆகவே 20 வயதிற்கு உட்பட்டோரும், குழந்தைகளும் பி.சி.ஜி. பெற்றுக் கொள்ள வழி செய்ய வேண்டும். மாவட்டக் காச நோய் சிகிச்சை நிலையங்களிலும் மற்றும் இதர அரசு மருத்துவ மனைகளிலும், பள்ளிகளிலும் பி.சி. ஜி. அளிக்க ஏற்பாடாகியுள்ளது. சிறு வயதிலேயே பி.சி.ஜி. அளிப்பது மிகச் சிறந்தது.

மற்றும் சுற்றுப்புறத் தூய்மையுடன் கூடிய நல்வாழ்வுக்கான வழி வகைகள் செய்வதன் மூலமும் காச நோய் பரவாமல் தடுக்க முடியும். காச நோயாளி ஒவ்வொரு தடவை இருமும் போதும், தும்மும் போதும் காச நோய்க் கிருமிகள் ஈரத் துளிகளுடன் கோடிக் கணக்கில் வெளி வந்து பரவுகின்றன. ஆகவே, இருமும் போதும், தும்மும் போதும் வாயினையும் மூக்கையும் துணி கொண்டு மூடிக் கொள்வது அவசியம்.

## ஒன்றரையாண்டு சிகிச்சை

காச நோய் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்தாலும் 15 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தகுந்த சிகிச்சை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. சிகிச்சை முறையும் மாறியது. இன்று காச நோய் சிகிச்சை குறைந்த செலவில் விரைவாகவும், எளிதாகவும் செய்ய முடியும். ஆபத்து இல்லாததும் உடல் உறுப்புக்களுக்குப் பாதகம் இல்லாததுமான முறையான சிகிச்சை இன்று அளிக்க முடியும். மேலும் படுக்கையில் தங்கி இருக்கக் கூடிய மருத்துவ விடுதிகளான சானடோரியங்களில்தான் சிகிச்சை பெற வேண்டும் என்ற அவசியமும் இல்லை. நோயாளி வீட்டிலேயே தங்கித் தானே மருந்துகள் அருந்தலாம். ஒன்றரை ஆண்டுச் சிகிச்சையே போதுமானது. மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெறுவதும் இதுவும் பலனில் ஒன்றே. நோயாளிகள் ஒழுங்காக மருந்துகள் அருந்திஞல், மருந்துகள் காச் நோய்க் கிருமிகளை முறியடிப்பதுடன் நோயாளியைக் குணமாக்கி, நோய் மற்றவர்களுக்குப் பரவாமலும் தடுக்கிறது. மற்றும் இத்தகைய சிகிச்சைக்கு வழக்கமான உயர்ந்த வகை உணவு வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை.


சென்னை எழும்பூர் மருத்துவ மனையில் பிறந்த தழந்தைக்கு பி, ஸி. ஜி. அளிக்கப்படுகிறது.

வீட்டு சிகிச்சை முறையை நாம் எல்லா நோயாளிகளுக்கும் வழங்க முடியும். உற்றுர் உறவினர் இல்லாத நிலையில் நோய் கடுமையாக இருக்குமாஞல் அறுவை சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ள நோயாளிகளை மட்டும், மருத்துவ விடுதிகளில் சேர்த்து சிகிச்சை வழங்கலாம்.

இவ்வகை சிகிச்சை முறையில் சிகிச்சை தொடங்கிய, ஐந்து, ஆறு வாரங்களுக்குள் நோயின் அறிகுறிகளான இருமல், காய்ச்சல் ஆகியவை மறைந்து விடுகின்றது. இதனை கொண்டு, நோய் குணமாகி விட்டது என்று எண்ணிவிடக் கூடாது. நோய் வேருடன் மறையக் குறைந்தது 18 மாத கால சிகிச்சை தேவை. சிற்சில குறிகள் அறிகுறிகள் மறைந்துவிட்டால் நோய் தீர்ந்துவிட்டது என்று சிலர் தவருகக் கருதி மருந்துகளை தொடர்ந்து உட்கொள்வதைக் கைவிட்டு விடுகின்றனர். இவ்வாறு சிகிச்சையை நிறுத்திஞல் ஏற்படும் விளைவுகள் மிகவும் தொல்லையானவை. ஆகவே காச நோயாளிகள் தொடர்ந்து ஒழுங்காக மருந்துகள் அருந்துகின்றுர்களா என்று கவனித்து கொள்வதை அண்டை அயலார் தம் சமூகக் கடமையாகக் கருத வேண்டும். நோயாளிகளின் உறவினர்கள் நண்பர்கள், ஆகியோர் இவ்விதத் தவறு ஏற்படாது, நோயாளி இடைவிடாது சிகிச்சை பெறுகின்றுரா என்று கவனித்துக் கொண்டால், அந்தச் சிறிய தொண்டிஞல் ஒரு பெரும் தொல்லையைத் தவிர்ப்பதுடன் நோயாளி முழு நலன் பெறும் வாய்ப்பையும் ஏற்படுத்தியவர்களாவர்.

## ஆரம்ப அறிகுறிகள்

காச நோய்க் குறிகள் திடீரென்று வெளிப்படும். அதன் அறிகுறிகளாக இருமல், பசி தவிர பி.சி.ஜி.க்கென தனிக் குழு அமைத்து ஒவ்வொரு கிராமத்திலும் வீடுவீடாகச்சென்று 20 வயதுக்கு உட்பட்டோருக்கு பி.சி.ஜி. அளிக்கிறுர்கள். மகப்பேறு நிலையங்களில் குழந்தை பிறந்த இரண்டாம் நாள் பி.சி.ஜி. அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காச நோய் ஒரே குடும்பத்தினருடைய அதிகமாகப் பரவ நிறைய வாய்ப்பு உள்ளது. ஆகவே ஒருவருக்கு நோயுள்ளது எனக் கண்டுபிடித்தவுடன் நோயாளியின் குடும்பத்தினர் அனைவரையும் சோதனை செய்வது நல்லது.

## சமூகப் பொருளாதார உதவி

காச நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து நோயைத் தடுக்க அரசு திட்டமிட்டுச் செயலாற்றிவந்தாலும் பொது மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால்தான் எளிதில் முழு வெற்றி காண இயலும். இத்தகைய ஆதரவைத் தரவும் மற்றும் நோயாளிகளுக்கு அவசியமாகும் செலவுகட்கு உதவிகள் செய்யவும், நோயாளிகள் மறுவாழ்விற்கு வழி செய்யவும் காச நோய்த் தடுப்புக் கழகங்கள் நமது தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளன. இக் கழகங்களில் உயர் அதிகாரிகளும், பொது நலப் பணியாளர்களும் உயர் நோக்குடைய செல்வர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இக் கழகங்கள் காச நோயாளிகளுக்கென மருத்துவச் சாலைகள் அமைத்தல், மருந்துகள் அளித்தல், பண உதவி செய்தல் ஆகியவைகளை முறையாகச் செய்து வருகின்றன.

சூழ்நிலை காரணமாகப் பெரும்பாலும் ஏழைகளுக்கே காச நோய் அதிகமாகத் தொற்றுகிறது. உழைத்து ஊதியம் பெறும் குடும்பத் தலைவனை இந் நோய் பாதித்தால், வறுமையால் குடும்பம் வாட நேரிடுகிறது. பொது மக்கள் அத்தகைய நிலைகளைத் தவிர்க்க, தங்களால் ஆன பொருள் உதவியும் சமூக உதவியும் செய்வது சிறந்த மக்கள் தொண்டாகும்.

ஒவ்வொரு ஆண்டும் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதி முதல் அடுத்த ஆண்டுக் குடியரசு நாளான சனவரி இருபத்தாறும் தேதிவரை காச நோய் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்கும் நற்பணி நடைபெறு



ஒரு நோயாளி, மருந்துகள் பெறுதல்; மருந்து சாப்பிடும் முறையைச் சுகாதாரப் பார்வையாளர் விளக்குகிறார்.

வதற்காகக் காசநோய் முத்திரைச் சின்னங்களை விற்கிறார்கள். ஒரு முத்திரைச் சின்னத்தின் விலை பத்துக் காசாக இருந்தாலும், அதன் மூலம் கிடைக்கும் தொகை ஒரு மாபெரும் பணிக்கு உதவுகிறது.

யின்மை, எடை குறைதல், ஆகியவை முதலில் குறைவாகவே இருக்கும். பலர் இத்தகைய அறிகுறிகளைக் கண்டு, முதலில் அலட்சியமாகவே இருந்து விடுவார்கள். காசநோயினை எவ்வளவு விரைவாகக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. காலதாமதம் செய்தால், குணப்படுத்துவதும் கடினமாகும். மற்றும், நோய் மற்றவர்களுக்குப் பரவவும் இடம் ஏற்படும். இருமலும், காய்ச்சலும் தொடர்ந்து ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் இருந்தாலும் மார்பில் வலியும் சளியில் இரத்தமும் இருந்தாலும் உடனே அருகில் உள்ள அரசு மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில் காச நோயினைக் கண்டு பிடிக்கவும் சிகிச்சையளிக்கவும், அந் நோயினைப் பரவாமல் தடுக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டக் காச நோய் சிகிச்சை நிலையம் உள்ளது. அந் நிலையத்தின் தலைவரான காச நோய் நிபுணர், மாவட்டத்திலுள்ள வட்ட மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள், தனியார் மருத்துவ மனைகள் ஆகியவற்றில் காச நோயினைக் கண்டுபிடித்துச் சிகிச்சை தர வசதிகள் செய்து தருவதுடன், தேவையான மருந்துகளையும் வழங்கி வருகின்றார். ஆகவே காச நோய் சிகிச்சைக்கான எந்த நோயாளியும் அதிக தூரம் போகத் தேவையில்லை. இன்று தமிழ் நாட்டில் 13 மாவட்ட மருத்துவமனைகள், 8 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 81 தாலூகா மருத்துவ மனைகள், 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 73 மருந்தகங்கள் உள்ளன. எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் காச நோயினைக் கண்டு பிடிக்கவும் சிகிச்சையளிக்கவும் வசதி இருப்பதால், நோயின் அறிகுறி கண்டவுடன் நோயாளி தன் இடத்திற்கு அருகாமையிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சை பெறலாம். பொது மக்களும், யாருக்கேனும் மேற் கூறிய அறிகுறிகள் இருந்தால், உடனே அவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெற வழி செய்ய வேண்டும்.

# தமிழ்நாட்டில் வளர்ந்துவரும் சர்க்கரைத் தொழில்



தமிழ்நாடு, சர்க்கரைத் தொழில் துறையில் புதிதாக அநுபவம் பெறும் நாடாகும். ஆயினும் இத்துறையில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு 28,000 டன் சர்க்கரை மட்டுமே தமிழ்நாடு உற்பத்தி செய்து வந்தது. (1953-54) அப்பொழுது அனைத்திந்திய உற்பத்தி 10.17 லட்சம் டன்னில் இது 2.69 சதவீதமாகும். இப்பொழுது சர்க்கரை உற்பத்தி 3.31 லட்சம் டன்னாகும். அதாவது ஏறத்தாழ 12 மடங்கு உற்பத்தி உயர்ந்துள்ளது.








# அன்புக்கு ஆதரவுக்கு அவ்வை இல்லம்!

இரவு மணி பத்து இருக்கும்.

யாரோ கதவைத் 'தடதட' வெனத் தட்டும் சத்தம் கேட்கிறது.

வளைக்கரம் ஒன்று உள்ளே இருந்து வந்து கதவைத் திறக்கிறது.

வெளியே—

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்! அவருடன் நிற்பது பதினாறு வயதுப் பெண்!

''உள்ளே வாருங்கள்!'' கனிவுடன் அழைக்கிறது அந்த அம்மையாரின் குரல். இன்ஸ்பெக்டர் தம்முடன் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைகிறார்.

''இந்தப் பெண்ணுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும்!'' இன்ஸ்பெக்டரின் குரலில் கனிவு இழைகிறது.

''குற்றம் செய்த பிள்ளைகளை நாங்கள் சேர்த்துக் கொள்வதில்லை....'' அம்மையாரின் குரலில் கண்டிப்பு அல்ல வருத்தம் தெரிகிறது.

''இந்தப் பெண் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஒரிசாவிலிருந்து வந்துவிட்டாளாம். இரவு நேரம்....இளம் பெண்.. நீங்கள்தான் இவளுக்கு ஆதரவு தர வேண்டும்....'' இன்ஸ்பெக்டர் நிலைமையை விளக்கி வற்புறுத்துகிறார்.

''அப்படியானால் கண்டிப்பாக எங்கள் இல்லத்தில் இவளைச் சேர்த்துக் கொள்கிறேன். உங்களுக்குக் கவலை வேண்டாம்!'' அம்மையாரின் பதில் கேட்டு இன்ஸ்பெக்டரின் முகம் மலர்கிறது.

ஒரிசாவில் தன் தாயோடு வாழ்ந்து வந்த இந்தப் பெண்ணுக்குத் தந்தை இல்லை. வறுமையின் கொடுமை ஒரு பக்கம் வாட்ட, மற்ற குழந்தைகளைப் போல நம்மால் பள்ளியில் சேர்ந்து படிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் உந்தித் தள்ள, ஒருநாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவந்து விட்டாள்-அல்ல ரயிலேறி வந்து விட்டாள் சிங்காரச் சென்னைக்கு!

அவள் அடைக்கலம் புகுந்த இடமோ ஆதரவற்றவர்களுக்கு—அனாதைகளுக்கு இரு கரம் நீட்டி அரவணைக்கும் அன்பு இல்லம். அதுதான் அவ்வை இல்லம்!

பிஞ்சு உள்ளங்களில் நன்கு பதியும் வண்ணம் - பிற்காலத்தில் நெஞ்சம் நிமிர்ந்து வாழும் வண்ணம் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற நீதி முறைகளைக் கூறிய அந்தப் பெண்பாற் புலவர் பெயரிலே தான் இந்த இல்லம் இனிதாய் காட்சியளிக்கின்றது.

1930-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இது, அடையாற்றில் ஆல்போல் தழைத்து வளர்ந்து வருகிறது. கடந்த 44 ஆண்டுகளாக அனாதைச் சிறுமிகளுக்கும், திக்கற்ற பெண்களுக்கும், அடைக்கலம் தேடிவரும் கன்னிப் பெண்களுக்கும் ஆதரவு தருகிறது இந்த இல்லம்.

உள்ளத்தில் தன்னம்பிக்கை ஒளியூட்டி, உழைக்கும் கரங்களை உருவாக்கும் இந்த இல்லத்தை நிறுவியவர் திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்.

இருபதே குழந்தைகளுடன் தொடங்கப்பெற்ற இந்த இல்லம், இன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுமிகளையும், பெண்களையும் கொண்டு பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது.

பெற்றோர் இல்லாத அனாதைக் குழந்தைகளை, சிறுமிகளை, பெண்களை நம்பிக்கையானவர் அழைத்து வந்து இவ்வில்லத்தில் சேர்க்கலாம். குற்றம் புரிந்தவர்களுக்கு இந்த இடத்தில் இடமில்லை. அதுமட்டுமல்ல, பெண்களுக்கு மட்டுமே இங்கே புகலிடமுண்டு. திருமணமாகி கணவன் சரியில்லாத அபலைப் பெண்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் கூட தஞ்சம் அளித்து அவர்கள் வாழ்க்கையிலே ஒரு பிடிப்பை இவ்வில்லம் ஏற்படுத்துகிறது.

மற்ற பள்ளிகளுக்கு வழங்கப்படுவதுபோல, இங்குள்ள பள்ளிகளுக்கும் தமிழக அரசு உதவிகள் செய்து வருகின்றது. இங்குப்பள்ளியில் படிக்கும் 140 குழந்தைகளின் உணவுக்காக, ஒவ்வொருவருக்கும் ரூ. 12 விதம் அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது.

200 ஏழைச் சிறுமிகளுக்குத் தகுந்த கல்வி வசதி முதலியன அளிப்பதுடன் பிற்காலத்தில் அவர்கள் உபயோகமுள்ளவர்களாகவும், கௌரவமான குடிமக்களாகவும், வாழ வழி செய்து வருகிறது, இந்த இல்லம்.



அறுசுவை உணவு தருவதில் பயிற்சி

நல்ல நடத்தை, நற்பண்புகள் வளர வழிகோலும் வகையில், நீதி, நெறி ஒழுக்கப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. தேசிய விழாக்களும், பெரியோர்களின் திருநாட்களும் முறையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆன்ேறோர்களின் அரிய சொற்பொழிவுகளும் அவ்வப்போது அறிவுக்கு விருந்து படைக்கின்றன. இவையன்றித் திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், அவ்வையின் அறநெறி நூல்கள் முதலியன கற்பிக்கப்பட்டும் வருகின்றன.

இங்கே தூய்மையான உணவு விடுதி ஒன்று காட்சி தருகிறது. உணவு விடுதிக்குத் தேவையான காய்கறிகளைப் பயிரிடுவதும், பயிர்த்தொழில் மூலம் மாணவிகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பதுமே தோட்ட வேலைப் பிரிவின் நோக்கமாகும். நிலத்தைக் கொத்துதல், எருவிடுதல், நீர்ப்பாய்ச்சல், விதை விதைத்தல், களை எடுத்தல் போன்ற பல்வேறு பயிர்த்தொழில் பணியையும் பாங்குறச் செய்வதால் உடற்பயிற்சியும் ஒழுங்கு முறையும் இங்கே ஒருங்கே பெறுகின்றனர்; உழைப்பின் உயர்வினையும், ஒற்றுமையின் சிறப்பினையும், நன்கு உணர்கின்றனர்.

காய்கறி உற்பத்திப் பெருக்கும் போட்டியில் கலந்து கொண்ட இந்த இல்லம் 1963-இல் மூன்றாவது பரிசும், 1964-இல் இரண்டாவது பரிசும், 1965-இல் முதற்பரிசும் பெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இந்த இல்லத்தில் சிறப்பாக இயங்கி வரும் 'விளைவுப் பெருக்க இயக்கம்' (Grow more food Gardening) சுமார் ஒரு ஏக்கர் நிலத்தை விளைபுலமாக்கி இல்லத் தேவையின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்பட்ட காய்கறி வகைகளைப் பயிரிட்டுப் பயன் பெற்று வருகிறது.

உடல் நலத்துக்கு உடற்பயிற்சி முக்கியமன்றோ?



தையலர்!

எனவே, இங்கு விளையாட்டுக்களும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. விடுமுறைக் காலங்களில் மனத்துக்கு இன்பந்தரும் வகையில் சுற்றுலாவும் மேற்கொள்கின்றனர்.

சிறந்த முறையில் பொழுதுபோக்கிட அவ்வை நாடக அரங்கின் சார்பில் அவ்வப்போது நாடகங்களும், வேடிக்கை விளையாட்டுகளும் நடைபெறுகின்றன. குழந்தைகள், நடிப்பிலும், நாடகக்கலையிலும் அறிவு பெறுகின்றனர். 1963-ஆம் ஆண்டு நடைபெற்ற கதர் உடை நாடகப் போட்டியில் கலந்து கொண்ட இவ்வில்லத்துக்கு முதற் பரிசு கிடைத்தது.

சமையற்கலை!

அதுவும் இங்குக் கற்றுத்தரப் படுகிறது. இல்லப் பெண்கள் அந்தந்த வேளைக்குச் சாப்பாடு முதலியன தயார் செய்யும் பொறுப்பைத் தாங்களே ஏற்றுள்ளனர். தங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு, முறை வைத்துச் சமைக்கிறார்கள். அதோடு சுத்தம் செய்தல், பாத்திரங்கள் கழுவுதல் முதலியனவும் அவர்கள் பொறுப்பே. இவை மட்டுமா?

தையல்வேலை, பூவேலை, படங்கள் வரைதல் முதலியவற்றிலும் அவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்குக் கற்ற பிறகு அதற்கான தேர்வும், எழுதித் தேர்வு பெறுகிறார்கள். இங்குள்ள பெண்களுக்கு 'ரங்கோலி'யும் கற்றுக் கொடுக்கப் படுகிறது. 1962-ஆம் ஆண்டு ஆறு பெண்கள் படங்கள் வரைதல் தேர்வில் வெற்றி பெற்றார்கள். அதில் ஐவர் இந்த இல்லத்தைச் சேர்ந்தவர்கள்.

காகித உறைகள் செய்யும் பகுதிக்குப் போவோமா?

அலுவலகங்களுக்கு வேண்டிய பல அளவு உறைகளை இங்குத் தயாரிக்கிறார்கள். இந்தப் பிரிவில் வேலை செய்பவர்கள் அனைவரும் பெண்களே. தவிர வீடுகளிலிருந்து குடும்பப் பெண்களும் பலர் இங்குவந்து ஓய்வு நேரங்களில் காகித உறைகள் செய்கிறார்கள். இவர்கள் மட்டுமின்றி இந்த இல்லத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவரவர் செய்த வேலைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப் படுகிறது.



அச்சுக் கலையில் ஆரணங்கு



கருத்தைக் கவரும் காவடி ஆட்டம்



அச்சுக்கலையிலும் இங்குள்ள ஆரணங்குகளுக்குப் பயிற்சி தரப்படுகிறது. இல்லத்துக்குத் தேவையான எழுது பொருள்கள் தவிர, தனிப்பட்டவர்களுக்கும் பல்வேறு அழகிய அச்சு வேலைகளை இவர்கள் செய்து தருகின்றனர். இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. அச்சுக்கோத்தலில் மட்டுமின்றி, அச்சடிக்கும் இயந்திரத்தில் பணிபுரிவதும் இப்பாவையரே!

அரிவையரின் அரிய 'கண்காட்சி மண்டபம்' ஒன்றும் நம் கண்களைக் கவர்கின்றது. இது கன்னியரின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

நாளையத் தலைமுறையினரை உருவாக்குவது ஆசிரியர்கள் தானே? அந்த ஆசிரியர்களை உருவாக்கும் பள்ளி ஒன்றும் இங்கே செம்மையாகச் செயல் படுகிறது. இங்கே ஆசிரியையாகப் பயிற்சி பெற்றவர்கள் தமிழகத்தின் பல்வேறு பள்ளிகளில் ஆசிரியைகளாகப் பணியாற்றி வருகின்றனர்.

அறிவை வளர்க்கும் நூலகம், புதுமுறைக் கணிதம், விஞ்ஞானம் பற்றிய குழந்தைகளின் பொருட்காட்சி, உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கான பரிசோதனைக்கூடம், கலையறிவை ஊட்டும் கலை அரங்கம் போன்றவை காணத்தக்கன.

இவ்வாறு ஆதரவுக்கு, அரவணைப்புக்கு ஓர் அன்பு இல்லமாகத் திகழும் அவ்வை இல்லம், அனாதைப் பெண்களின் உள்ளத்தில் அணையா விளக்காய்த் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல!

—பி.வி.ஜி.

இங்குள்ள சிறு குழந்தைகளின் பராமரிப்பு நிலையத்தில் இரண்டரை வயதிலிருந்து ஆறு வயது வரையுள்ள சுமார் 40 குழந்தைகள் உள்ளனர். இவர்கள் அனைவரும் தொழிலாளர்களின் குழந்தைகள். இக்குழந்தைகள் ஒருநாள் முழுவதும், விளையாட்டுகளிலும் பிற நிகழ்ச்சிகளிலும் கழிக்கின்றனர். இவர்களுக்கு இவ்விடத்தில் உணவு அளிக்கப்பட்டுப் பயிற்சி வாய்ந்த மேற்பார்வையாளர்களின் மூலம் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்பள்ளி 1951-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

1939-இல் துவக்கப்பட்ட 'ஆதாரப் பள்ளி' ஒன்று இல்லம் ஆரம்பமானதிலிருந்தே உள்ளத்தையும், உடலையும், ஒழுக்கத்தையும் ஒருங்கே வளர்த்துப் பண்பும் பயனும் தரத்தக்க கல்விப் பயிற்சியை அளித்து வருகிறது. உழைப்பின் உயர்வு, பிறர் நலம் பேணல் போன்ற நற்பண்புகளை வளர்த்து நல்வாழ்வுக்கு நலமளிக்கும் வகையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியோடு குடும்பக் கலையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தப் பள்ளி இப்போது உயர்நிலை ஆதாரக் கல்விக் கழகமாக விளங்குகிறது. இல்லத்தினர் மட்டுமின்றி அடையாற்றின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குழந்தைகளும் இங்குப் பயின்று வருகிறார்கள். இங்குப் பயிலும் குழந்தைகளுக்கு அவ்வப்போது மருத்துவர்களால் உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. சுற்றுப்புறங்களிலிருந்து படிக்க வரும் குழந்தைகளில் பெரும்பாலோர் ஏழைகளாக இருப்பதால் தற்போது 160 குழந்தைகளுக்குப் பகல் உணவளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1950-லிருந்து செயல்படுகிறது. இவையன்றி, எல்லாக் குழந்தைகளுக்கும் பாலும் வழங்கப்படுகிறது.

இங்குள்ள ஆசிரியைகள் அவ்வப்போது பெற்றோர்களின் இல்லங்களுக்குச் சென்று, குழந்தைகளின் கல்வி நலம் பற்றிக் கலந்து பேசி ஆவன செய்து உதவி வருகிறார்கள்.

இந்த இல்லத்திலுள்ள டி.வி இராமமூர்த்தி உயர்நிலைப் பள்ளி, மேற்படிப்பு படிக்க விரும்பும் மாணவிகளுக்கு உயர்நிலைக் கல்வியைப் போதிக்கிறது. இது அவ்வை இல்லத்தில் இருக்கும் மாணவிகளின் நன்மைக்காக நடத்தப்படுகிறது என்றாலும், வெளியிலிருந்து வரும் மாணவிகளும் இப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இங்குப் பயிலும் மாணவிகள் இலக்கியச் சங்கம், விவாத அரங்குகள், பாட்டு, நாடக மன்றம் போன்றவைகளைத் தாமே ஏற்று நடத்துகின்றனர்.



தோட்ட வேலையில் தோகையர்



நெஞ்சம் மகிழ்ந்திடும் பிஞ்சு மழலைகள்

இப்போது ஆறுவது வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை பள்ளியில் உள்ளோரின் தொகை 540 ஆகும்.

இங்கு ஆதாரப் பயிற்சி நிலையம் ஒன்று 1955-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. சுயமுயற்சி, தன்னுடைய தேவையைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளல், தன்னம்பிக்கை வளர்த்தல் போன்ற பயிற்சி இங்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிப் பிரிவில் 80 மாணவிகள் பயில்கின்றனர்.

முதியோருக்கான பிரிவு ஒன்றும் இங்கு நற்பணியாற்றி வருகிறது. இப்பிரிவுடன் கைத்தொழில் நிலையமும் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் தொழில் புரிய விரும்பும் அல்லது தொழில் மூலம் கல்வி கற்க விரும்பும் தகுதி வாய்ந்த பெண்களுக்கே இடமுண்டு.

திக்கற்ற பெண்கள், அவர்கள் குழந்தைகளுடன் இங்குச் சேர விரும்பினால் அவர்களிருவரையும் இவ்வில்லம் சேர்த்துக் கொள்கிறது. இதனால் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு கிடைக்கிறது. மேலும், தாய் இந்த இல்லத்தில் ஓர் ஊழியராகவும் இருந்துகொண்டு தன்னுடைய குழந்தைகளுக்குத் தக்க பராமரிப்பு அளிப்பதுடன் அதற்குத் தக்க கல்வி வசதியும் அளிக்க முடிகிறது. இப்பிரிவில் தற்பொழுது ஏறக்குறைய 50 திக்கற்ற பெண்கள் உள்ளனர். மேற்கொண்டு படிக்க விரும்புகிறவர்களுக்குக் குறுகிய காலப் பாடத் திட்டத்தின் கீழ் இ.எஸ்.எல்.சி., எஸ்.எஸ்.எல்.சி. படிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

'கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாக்கிற்கிணங்க இங்குக் கைத்தொழில் பிரிவு ஒன்று இயங்குகிறது. இல்லத்திற்கு வரும் பெண்களில் ஒரு சிலரே மேற்படிப்பில் நாட்டமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். மற்றவர்களுக்கு ஏதாவது தொழிற்பயிற்சி தர வேண்டும். ஆதலால் எண்ணும், எழுத்தும் கற்பிப்பதோடு, அவர்களுக்குச் சிறப்பாக நூல் நூற்றல், நெசவு, பாய்முடைதல், புத்தகம் கட்டுதல், காகித உறை தயாரித்தல் முதலான சிறு தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பள்ளியில் படித்து தேர்ச்சி பெறும் பெண்கள் ஆசிரியைகளாகவும், மருத்துவத் தாதிமார்களாகவும், பேறுகாலப் பணிப்பெண்களாகவும் பயிற்சி பெறுகிறார்கள். இப்பிரிவில் பெருவாரியான பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

'வேலை தேடித் தரும் பகுதி' யும் இங்கே உண்டு. பிற்காலப் பாதுகாப்பு நிலையத்துடன் இது இணைக்கப்பட்டுள்ளது. வேலையற்றோர்க்குத் தகுந்த வேலை தேடித் தருவது இதன் வேலை. இவ்வில்லத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு இது வேலை வாய்ப்பு தந்து உதவுகிறது.



அறிவியல் வளர்க்கும் பரிசோதனைக் கூடம்



நேரிழையர் !

# ஆனைமலைக் காப்பகம்



காட்டெருமை, அப்போது ஈன்ற தன் கன்றுடன்.

தமிழகத்தில் கிட்டத் தட்ட ஒன்றரையாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட ஆனை மலை வனவிலங்குக் காப்பகம், தென்னகத்தின் முக்கியமான வன விலங்கினங்கள் அனைத்தையுமே தன்னுள் கொண்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் கோவை மாவட்டப் பகுதிகளை யும், ஓரளவு மதுரை மாவட் டப் பகுதியையும் கொண்ட 900 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ள இவ் வனம், மாநிலத்தின் மிகப் பெரிய வனவிலங்குக் காப்பகம் ஆகும்.

கச்சா முன் காடுகள், மூங் கில் காடுகள், எப்போதும் பசுமை படர்ந்த அடர்ந்த காடுகள், பெரு மரங்கள் நிறைந்த மலைக் காடுகள் சூழ்ந்த இந்தக் காப்பகத்தில் யானைகள், புலிகள், சிறுத்தை கள், கரடிகள், காட்டு எருமை கள், மலையாடுகள், செந் நாய், நரிகள், மலை அணில், பறக்கும் அணில், குலைக்கும் மான், புள்ளி மான், கட மான், இதர மான் வகைகள், முள்ளம் பன்றி கள், சிங்க வால் குரங்கு, பேச்சு வழக்கில் மந்தி என்று சொல்லப்படும் கருங்குரங்கு, வெள்ளைச் சாம்பல் நிறக் குரங்கு முதலியவை குறிப்பிடத் தக்க வனவிலங்குகளாகும். மலைப் பாம்பு, ராஜ நாகம் உள்ளிட்ட பல்வேறு வகை யான பாம்புகளும் உள்ளன. இக் காப்பகத்தைச் சேர்ந்த தேக்கங்களில் வானவில் மீன் உள்பட பல்வேறு வகையான மீன் வகைகளும் குறிப்பிடத் தக்கவை.



ஆனைமலைக் காப்பகத்தில் சிறுத்

டாப்சிலிப்—சுங்கம் மலைச் சாலை, டாப்சிலிப்—உலண்டி படுகைச் சாலை, சின்னாறு விரிவினைச் சாலை, சீச்சாலை, பண்டாரவரை, பெருங்குன்று, ஆனைக்குந்தி சாலை ஆகியவை சுற்றுலாச் செல்வோர் போக வரவும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவும் வசதி அளிக் கின்றன. சுற்றுப் பகுதியில் கரியன் சோலை, புல் மலை, 1872-ல் தோன்றி ஒரு நூற் றுண்டைக் கடந்துள்ள தேக்கு மரக்காடு, பஞ்சலிங்கம், மற்றும் தேக்கங்கள், அருவிகள் பலவும் எழில் கொழிக்கும் இடங்களாகும். சாலை வசதி கள், தங்குமிட வசதிகளும் இந்தக் காப்பகத்திலும் சுற்றுப் பகுதிகளிலும் உள்ளன. சென்னை யிலுள்ள மாநில வனவிலங்கு அலுவலரும், பொள்ளாச்சியில் தலைமையிடம் கொண்ட கோவை தெற்கு மாவட்ட வன அலுவலரும் இக்காப்பகம் பேணும் அலுவலர்களாவர்.



கடமான் - மவுண்ட் ஸ்டூவர்ட் மலைப் பகுதியில்



வரகழியாறு யானை முகாம் : யானை கள் உணவுக்குக் காத்திருக்கின்றன. இத்தகைய யானைகள் இந்த முகாமில் மொத்தம் 16 உள்ளன.



## எல்லை இல்லை

தன்னிச்சையாகத் திரியும் வன விலங்குகளுக்கு வாழிட வகையில் எந்த எல்லையும் கிடையாது. நாடு முழுதிலும் தத்தமக்கு வசதியான இடம் எங்கெங்கு உண்டோ அங்கெல் லாம் சென்று அவை வாழ்கின் றன. காடுகள், மலைப் பகுதி களில் மக்கள் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரிப்பதற் கேற்ப அந்த வன வாழ் உயிர் களுக்கு அபாயமும் அதிகமா கின்றது. இயற்கையின் இந்த அரிய படைப்புகளை, பெரிய செல்வத்தை, நாம் காப்பாற்றி யாக வேண்டும். இதன் தொடர்பாக, இயற்கையை ஆராய்வோரும் சுற்றுலாச் செல் வோரும் கண்டு களிக்க வசதி யாக தேசிய வனங்கள், காப்ப




கங்கள் முதலியன அமைக்கப் படுவது அவசியமாகின்றது.

நமது வனப் பரப்பில் 2·3 சதவிகிதம் தான் தேசிய வனங் கள், காப்பகங்கள் என்ற நிலை யில் உள்ளன. மொத்த வனப் பரப்பில் 4 சதவிகிதமாவது இவ்வகையில் வன விலங்குப் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுவது முக்கியமாகும். நாடு முழுவதி லும் சம சீரான முறையில் இந்த ஏற்பாடு அமைவதற்கு வழி வகை காண வேண்டும்.

குறைந்து வரும் காடுகள்

தமிழகத்தின் மொத்த நிலப் பரப்பு 1,30,357 சதுர கிலோ மீட்டர்கள். இதில் காடுகள் 21,033 சதுர கிலோ மீட்டர் கள். மொத்த நிலப் பரப்பில் இது சுமார் 16 சதவிகிதமே ஆகின்றது. பாசன வசதிக் காக தேக்கங்களும், பல் நோக்குத் திட்டங்களும் சேர்ந்து காடுகள் பெருமளவில் குறைவதற்கு வழி வகுத்துவிட் டன. மண் தன்மையும் கூட மாறி விட்டது. வனங்கள் குறைந்து, தாவரங்கள் மடிவ தால், வன விலங்குகளும் அருகி வரும் நிலை ஏற்படுகிறது. எனவே காடுகள், தாவரச் செல்வங்கள், வன விலங்குகள், இவற்றைக் காக்க முனைப்பான முயற்சிகள் மேற்கொண்டாக வேண்டியுள்ளது.

தமிழகத்தில் காடுகளின் பரப்பு பெருமளவில் குறைந் துங்கூட, வகை வகையான பல அரிய வன விலங்குகள் இன்னும் மாநிலத்தில் தொடர்ந்து இருந்து வருவ தென்பது அரிய வாய்ப்பாகும், வன விலங்குகளின் உயிர்க் காப்புக்கு வகை செய்வதின் முக்கியத்துவத்தை உணர்ந்த தின் விளைவாக தமிழக அரசு காப்பகங்களின் பரப்பைப் பெருக்கிக் கொண்டு வரு கின்றது. தேசிய வனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ள முற்பட்டிருப்பதோடு புதிய வன விலங்குக் காப்பகங் களை அமைத்தும் வருகின்றது. வனப் பரப்பை விரிவாக்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

சிற்பி வடித்த சிலைபோல நிற்கும் இந்த யானை, நீண்டகாலம் உழைத்து விட்டு, இப்போது ஓய்வு பெற்று வருகின்றது. இதன் பெயர் ஐ. ஜி. முன்பு ஒரு சமயம் வனத்துறை ஐ.ஜி. வந்தபோது பிடிபட்ட யானை யாதலால் இப்பெயர் பெற்றது.







காட்டுப்பூனை - சின்னாறு அருகில்

தூணக்கடவு வனச் சரகத் தில் எதையும் சுடக் கூடாது என்ற தடை 1957-லிருந்து இருந்து வருகின்றது. அரசினர் இதனுடன் நில்லாமல் கோயம் புத்தூர் தென் வன மாவட்டம் எங்கிலும் வன விலங்குகளைச் சுடக் கூடாது என்று 1963-ல் உத்தரவிட்டனர். அதன் தொடர்பாக ஆனைமலை வன விலங்குக் காப்பகம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு, 1973 ஜனவரி 21-ல் இக் காப்பகம் அமைக்கப் பெற்றது.

வனவிலங்குக் காப்பகங்கள்

மாநிலத்தில் தற்சமயம் ஆறு வன விலங்குக் காப்பகங்கள் உள்ளன. அவற்றன் விவரமும் தொடங்கப்பட்ட ஆண்டும் வருமாறு :

1. வேடந்தாங்கல் நீர்ப் பறவைகள் காப்பகம்—(1798)

2. முதுமலை வனவிலங்குக் காப்பகம்—(1939).

3. கிண்டி மான் காப்பகம் —(1958).

4. முண்டந்துறை புலிகள் காப்பகம் — (1962).

5. கோடிக்கரை வன விலங்குக் காப்பகம் —(1968).

6. ஆனைமலை வன விலங்குக் காப்பகம் — (1973).

இவை தவிர மாநிலத்தில் 19 நீர்ப் பறவைக் காப்பகங் கள் உள்ளன. ஆறுவது வன விலங்குக் காப்பகமான ஆனை மலை வன விலங்குக் காப்பகம், இவ்வகையில் மாநிலத்திலேயே மிகப் பெரிய காப்பகமாகும். மிக உயரமான மரங்கள் செறிந்த மலைக் காடுகள், மலை முகடுகள், ஆழமான படு கைகள், அருவிகள், ஆறுகள், ஓடைகள், சதுப்பு நிலங்கள், உப்பு மண் பகுதிகள் முதலி யன நிறைந்த காப்பகம் இது. இயற்கைத் தாவரங்கள், இதர விலங்குகள், உயிர் வாழ் இனங் கள் அனைத்தும் கண்ணுக்கும் கருத்துக்கும் அரிய விருந்தாக உள்ளன.

ஆனைமலை—பெயர்க் காரணம்

இந்த வனவிலங்குக் காப்ப கத்தின் தலைமை அலுவலகம், கோயம்புத்தூரிலிருந்து 40 கிலோ மீட்டர் தெற்கில்உள்ள பொள்ளாச்சியில் அமைந்துள் ளது. கோவை மாவட்டத்தின் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை வட்டப் பகுதிகள்; மதுரை மாவட்டத்தின் கோடைக்கானல் வட்டப்பகுதி ஆகியவற்றில் இக் காப்பகம் படர்ந்துள்ளது. காக்கப் பெற்ற காடுகள் மொத்தம் 7 சேர்ந்து இந்தக் காப்பகமாக அமைந்துள்ளது. இதில் ஆனை மலை காக்கப் பெற்ற காடு மட்டும் 70 சதவிகிதப் பரப் பாக உள்ளது. யானைகள் மிகுந்த மலை இது. எனவே தான் ஆனைமலை என்ற பெய ரினைப் பெற்றது என்பர் சிலர். காடம்பாரைக்கு அருகில் பெரிய ஆனைமலை (2,151 மீட் டர் உயரம்), சின்ன ஆனைமலை (1,888 மீட்டர் உயரம்) என்று இரண்டு குன்றுகள் உள்ளன. இரண்டு யானைகள் அடுத் தடுத்துப் படுத்திருப்பதுபோல இவை காட்சி அளிக்கின்றன. இந்தக் குன்றுகளின் தோற்றம் காரணமாக இப்பெயர் வந்தது என்பாரும் உளர். இம் மலைகள் பொதுவாக 900 மீட்டரி லிருந்து 2,500 மீட்டர் வரை உயரம் வாய்ந்தவை. இக் காப்பகத்தில் அக்கா மலைச் சிகரம் தான் மிக உயரமான குன்று ஆகும்.

அமராவதி ஆறு, தொரக் கடவு, ஆளியாறு, சோலை யாறு, கல்லாறு, இடாலியாறு, தூணக்கடவு ஆகியவைகளும் பெரியாறு, சின்னாறு, மற்றும் பல ஓடைகளும் சூழ இருப்பது இந்த வன விலங்குக் காப்பகம்.

மழைக்காலம்

டிசம்பர், ஜனவரி மாதங் களில் இங்கு குளிர் அதிகம். அப்போது பனி மேக மூட்டம் நிறைந்து இருக்கும். பிப்ரவரி யிலிருந்து மே வரை இப் பகுதி யில் வெய்யில் நிறைந்த கோடைக் காலம். மே இறுதி



வரகழியாறு யானைகள் முகாமில் வேலைக்குப் புறப்படும் யானைகளின் அணி. ஒவ்வொரு யானைக்கும் மாவுத்தன், காவாடி என்று இரண்டு ஆட்கள் உண்டு.

யில் தென் மேற்குப் பருவக் காற்று மழை தொடங்கும். ஆகஸ்ட் வரை அந்த மழை நீடிக்கும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை பெய்கிறது.

உடுமலைப் பேட்டையில் அமராவதி தேக்கத் திட்டம் தவிர்த்து பரம்பிக் குளம் — ஆளியாறு பல் நோக்குத் திட்டத்தில் சோலையாறு, மேல் ஆளியாறு, ஆளியாறு, திருமூர்த்தி ஆகிய அணைகளும், கேரள மாநிலப் பகுதியில் பரம்பிக் குளம் அணையும் இப்பகுதியில் குறிப்பிடத் தக்கவை. தற்சமயம் நீராறு தேக்க அமைப்புக்கும் காடம்பாரை ஆற்றில் அணை கட்டுவதற்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த அணைத் திட்டங்கள், வன விலங்குக் காப்பகத்தின் வனப் பகுதிகள் பலவற்றை அழித்து விட்ட போதிலும் வனவிலங்குகளுக்கு இவை நிரந்தரமான குடி நீர் வசதியைத் தந்துள்ளன. சுற்றுலா வருவோருக்கு இந்தத் திட்டங்கள் நல்ல சாலை வசதிகளையும் தருகின்றன.

**வண்ணக் களஞ்சியம்**

இயற்கையமைப்பு, தட்பவெப்ப நிலை, மழை நிலவரம், ஆகியவை இங்கு பலதிறப்பட்டவையாக இருக்கின்றன. மலை அடிவாரம் 350 மீட்டர் உயரம் என்ற அளவிலிருந்து, பூஞ்சி (அக்காமலை) மலைச் சிகரம் 2,400 மீட்டர் உயரம் வரை, பல்வேறு உயர் மட்டங்களில் மலைகளும் சில பகுதிகளில் 50 சென்டிமீட்டர் அளவிலிருந்து சில இடங்களில் 750 சென்டி மீட்டர் வரை பல தரப்பட்ட மழை அளவும், வெப்ப அளவு 40 சி.யிலிருந்து சில பகுதிகளில் இரவில் பூஜ்யத்துக்கும் கீழே என்ற தட்ப நிலைமை வரையிலும் மற்றும் மண் வளத்தில் மாறுபாடுகளும் இருப்பதன் விளைவாக தாவர வகைகள் வண்ணக் களஞ்சியமாக விளங்குகின்றன. இங்கு தாவர வகைகளைப் பின் வருமாறு பாகுபடுத்தலாம்:—

1. தென்பகுதி கச்சா முள் காடுகள்.




2. சாதாரண கானப் பகுதிகள், தேக்கு மரக்காடுகள்.

3. புல்வெளிகள்.

4. சதுப்பு நிலக்காடுகள்.

5. சதுப்பு மூங்கில் காடுகள்.

6. அடர்ந்த பசுமை நிறக் காடுகள்.

7. ஓங்கி வளர்ந்த செழித்த மலைக்காடுகள்.

**வெள்ளைக் காட்டெருமை**

இந்தக் காடுகளில் கட்டுரைத் தொடக்கத்தில் குறிப்பிட்டபடி தென்னகத்தின் முக்கியமான வனவிலங்கு வகைகள் அனைத்துமே உள்ளன. உடுமலைப் பேட்டை வனச் சரகத்தைச் சேர்ந்த மஞ்சம்பட்டி பள்ளத்தாக்கில் மிக அரிய வனவிலங்கு என்று சொல்லத்தக்க வெள்ளைக் காட்டெருமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வெள்ளைக் காட்டெருமையைக் கண்டதாக சில வனத்துறை அலுவலர்கள் வியந்து கூறியிருக்கிறார்கள். சிங்கவால் குரங்கு, உலகிலேயே ஒரு அரிய வனவிலங்கு இனம். இந்த இனம் இப்போது அருகி வருகிறது. இந்த அரிய குரங்கின் வாழ்க்கைக் குறித்து அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் ஆராய்ந்து வருகிறார்.

இந்தக் காப்பகத்தில் காணப் பெறும் பாம்பு வகைகளில் மலைப்பாம்பு, நல்லபாம்பு,





ஆனைமலையில் 6 வகைப் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் ஒருவகையினர் காடர். இவர்கள் இப்போது படிப்படியாக நாகரிகம் பெற்று வருகின்றனர்.

ராஜநாகம், சாரைப்பாம்பு, கண்ணாடிவிரியன், கட்டுவிரியன், சுருட்டைப்பாம்பு முதலியன குறிப்பிடத்தக்கவை. பாம்பு வகைகளில் ராஜநாகம் மிக நீளமான பாம்பு. 18 அடி வரை நீளமுள்ளது. வறண்ட பகுதிகளில் மலைப்பாம்புகள் ஏராளமான அளவில் காணப்படுகின்றன. விஷமில்லாத பாம்பு வகைகளும் உள்ளன. மற்ற ஊர்வனவற்றுள் கருப்பு, மஞ்சள் ஆமைகள் குறிப்பிடத்தக்கவை. அமராவதி, சின்னாறு ஆறுகளில் பெருமளவில் முதலைகள் உள்ளன.

இந்தக் காப்பகத்தில் வண்ணப் பறவை வகைகள் ஏராளம். புல்புல் பறவைகள், மரங்கொத்தி, கொசுத்தின்னி, மணிப்புறா, பச்சைப்புறா, மலைமைனா, பூக்கொத்தி, குயில், மயில், காடை, மைனா, பருந்து வல்லூறு, மலைமைனா முதலியன அதில் குறிப்பிடத்தக்கவை.

**வானவில் மீன்**

அமராவதி, திருமூர்த்தி, ஆளியாறு ஆகிய மூன்று தேக்கங்களும் இந்தக் காப்பகத்தில் உள்ள பாசனத் தேக்கங்களாகும். இந்தத் தேக்கங்களில் பல வகையான நீர்ப் பறவைகள் உள்ளன.

தவிர இத் தேக்கங்களில் மீன் வகைகளும் கருத்தைக் கவர்பவை. மாநில மீன்துறை இதனைப் பேணி வருகிறது. ட்லா முதலிய மீன் வகைகள் தேக்கங்களில் வளர்க்கப்படுகின்றன. புல்மலைப் பகுதியில் ஓடும் கோணலாறு ஆற்றில் மீன் வளர்ப்பினை, கோணலாறு மீன்சங்கத்தினர் கவனிக்கிறார்கள். வானவில் டிரவுட் மீன், இதில் குறிப்பிடத்தக்கதாகும்.

புள்ளிமான்களுக்கு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மேய்ச்சல் தரையாகவும் இயற்கையான பட்டியாகவும் விளங்குகிறது, வுட் அவுஸ் புல்வெளி. இங்கு புள்ளிமான் மந்தை ஆண்டு முழுவதும் அதிகம் பெருகி விடாமலும், அதிகம் குறைந்து விடாமலும் ஒரே அளவில் இருக்கிறது. மான் மந்தை அதிகம் பெருகி விடாமல் ''கட்டுப்பாடு'' வேலை செய்பவை, செந்நாய்கள் ஆகும்.

**யானை மந்தைகள்**

இந்தக் காப்பகப் பகுதியின் சாலைகள் வழியாக காரில் சென்றால் யானைகளும், காட்டெருமைகளும் கூட்டம் கூட்டமாகத் திரியும் கண்கொள்ளாக் காட்சியைக் காணலாம்.

தூணக் கடவு சரகத்தைச் சேர்ந்த பண்டாரவாடை, கொளம்புமலை, உமையமலை, பெருங்குன்று, பூஞ்சி சரகத்தைச் சேர்ந்த வரியாட்டுத் திட்டு, புல்மலை ஆகியவை வரையாடுகளுக்குத் தாயகம் போன்ற பகுதிகள் ஆகும். இந்த மலைச் சரிவுகளில் 10-15 கிலோ மீட்டர் தூரம் சென்றால் நீலகிரி காட்டாடுகள் அமைதியாக தன்னிச்சையாக வாழ்வதையும் பட்டியாடுகள் மாதிரி கூட்டமாக இருப்பதையும் காணலாம். பசுமை போர்த்த அழகான மேய்ச்சல் நிலங்கள் பல உண்டு. சுற்றிலும் மரங்கள் சூழ்ந்த நிலத்திடல்கள் ''சோலைகள்'' என வழங்கப் பெறுகின்றன.

ஆனைகுந்தி சோலை, காட்டெருமைப் பெயர் பெற்றது.

தேக்கு மரக்காடுகளில் மலை அணில்கள், மந்திகள் இதர பிராணிகள் தனி அழகோடு விளங்குகின்றன.

புள்ளிமான், காட்டெருமை, கடமான் ஆகியவை விரும்பும் உப்பு மண் படிவங்கள் இக்காப்பகத்தில் சில இடங்களில் இயற்கையாக அமைந்துள்ளன. மற்ற இடங்களில் இவற்றை வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டாப்சிலிப்பிலிருந்து வரகளியாற்றுக்குச் சென்று யானை



எருமைப் பாறை அருகே - மலைப் பாம்பு

முகாமைப் பார்ப்பதென்பது, வாழ்நாளிலேயே மறக்க முடியாத அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் தரும். தீனி போடப்படும் நேரத்தில் யானைகள் பாகன் சொற்கேட்டு நடப்பதும், யானைக்குட்டிகளின் குறும்புகளும் உள்ளத்தைப் பரவசப்படுத்த வல்லவை. இந்த முகாம்களின் பகுதியில் காட்டெருமைகள், மான்கள், மலை அணில்கள், பலவகையான வண்ணப் பறவைகளும் நிறைந்திருக்கின்றன.

**பழங்குடி மக்கள்**

இந்தக் காப்பகம் மற்றும் இதனைச் சேர்ந்த பகுதிகளில் காடர், மலசர், மலை மலசர், புலையர், முடவர், எரவல்லார் ஆகிய ஆறுவகைப் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களில் எரவல்லார் மிகச் சிறுபான்மையினர். மலை அடிவாரப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். மற்ற ஐந்து வகுப்பினரும் ''பதி'' என்ற பகுதிகளில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு பதியிலும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட குடிசைகள் இருக்கும். இவை பெரும்பாலும் ஓடைகளின் கரைகளில், அல்லது காடுகளில் இருக்கும். குடிசைகள் பொதுவாக மூங்கிலால் அமைக்கப்பட்டவை. குடிசைச் சுவர்கள் மூங்கில், புல் தட்டியால் அமைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகள் சிலவற்றில் தமிழக அரசின் சமூகநலத்துறை, நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது.

**தூவானம்**

ஆனைமலை வனவிலங்குக் காப்பகத்தில், கரியன்சோலை-பசுமை மரக்காடுகளின் காட்சியும், பூஞ்சி, ஆளியாறு, காடம்பாரை, பகுதிகளில் உள்ள அருவிகளும், திருமூர்த்தி கோயில், அமராவதி நீர்த்தேக்கம் அருகே உள்ள ''தூவானம்'' அருவி ஆகியனவும் காணத் தவறக்கூடாத பகுதிகளாகும்.

வுட்ஸ் கல்லறைச் சோலை என்பது மவுண்ட் ஸ்டுவர்ட் மலைக்குக் கீழே அமைந்துள்ளது. காலம் சென்ற ஹூகோ வுட் என்பவர் அமைத்த இந்த தேக்குமரச் சோலை, அவருடைய கல்லறையையும் பெற்று, அவருக்கு அழியாத நினைவுச் சின்னமாக உள்ளது. 80 மீட்டர் 60 மீட்டர் பரப்புள்ளது இந்தச் சோலை.

1856-ல் மாநிலத்திலேயே மிகப் பழமையான இந்த தேக்குமரச் சோலையை திரு. வுட் உருவாக்கினார். இது 2·43 ஹெக்டேர் பரப்புள்ளது. தமிழகத்தில் முதன்முதலாக மனிதன் உருவாக்கிய தேக்குக் காடு இதுவேயாகும்.

ஆனைமலை வனவிலங்குக் காப்பகத்துக்குத் தெற்கு, தென்மேற்குப் புறங்களில் மரகதமலை போல விரிந்த தேயிலைத் தோட்டங்களும், நடுநடுவே ஏலம், காபி தோட்டங்களும் ஆனைமலைக்குத் தனிச் சிறப்பைத் தேடித் தருபவையாகும்.



**செல்லும் வழி**

ஆனைமலை வனவிலங்குக் காப்பகத்துச் செல்ல, கோவை சென்று, அங்கிருந்து அடிக்கடி செல்லும் பேருந்துகள் மூலம் பொள்ளாச்சி செல்ல வேண்டும். பொள்ளாச்சியில் ரெயில்வே ஸ்டேஷனும் உண்டு. பொள்ளாச்சியிலிருந்து பொள்ளாச்சி-பரம்பிக்குளம் சாலை, பொள்ளாச்சி - வால்பாறை சாலை, உடுமலைப் பேட்டை, மூணாறு சாலை ஆகியவை ஆனைமலை வனவிலங்குக் காப்பகம் வழியாகச் செல்கின்றன. இந்தக் காப்பகத்தைப் பார்வையிடுவதற்கு மே-யிலிருந்து டிசம்பர் வரை மிக ஏற்ற காலம் ஆகும். வனத்துறை மூலமாக கீழ்க்கண்ட தங்குமிட வசதியும் பெறலாம்:—

டாப்சிலிப்பில் உள்ள வுட் ஹவுஸ், மற்றும் பைசன் லாட்ஜ், வரகலையாறு வனத்துறை ஓய்வு விடுதி, சேதுமடையில் உள்ள வனத்துறை ஓய்வு விடுதி, அமராவதி வனத்துறை ஓய்வுவிடுதி.

இவை தவிர, பொதுப் பணித்துறை, மின்சாரவாரியம் ஆகியவைகளின் கீழ் பல ஓய்வு விடுதிகள் உள்ளன. பொள்ளாச்சியில் தனியார் ஏற்பாடுகளின் கீழ் தங்குமிட வசதிகள் நிறைய உள்ளன. —சி. க. ரா.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!

## 1. கோ. 2-ஒரு குறுகிய கால உளுந்து!

உளுந்து பழங்காலம் தொட்டு இந்தியாவில் பயிர் செய்யப்படுகிறது. தென்னிந்திய காலை உணவு வகைகளில், இது முக்கிய பங்கு பெறுகிறது. தமிழ்நாட்டில் 44,000 எக்டேர் நிலப்பரப்பில் உளுந்து பயிர் செய்யப்படுகிறது. இது, தஞ்சை, நெல்லை மாவட்டங்களில் பெருமளவில் நெல் அறுவடைக்குப் பிறகு பயிர் செய்யப்படுகிறது. சாதாரணமாக செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் உளுந்து மானாவாரிப் பயிராகப் பயிர் செய்யப்படுகிறது. நாட்டு உளுந்து இரகங்கள் எக்டேருக்கு 300 கிலோ தானியத்தை, 110 முதல் 120 நாட்களில் கொடுக்கின்றது. தற்பொழுது புழக்கத்தில் இருக்கும் 'கோ. 1' உளுந்து இரகம் மானாவாரியில் எக்டேருக்கு 500 கிலோ தானியத்தை 100 நாட்களில்கொடுக்கின்றது.



கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உளுந்து இரகங்களை ஆய்வு செய்து, சிறந்த இரகங்களிலிருந்து செடிகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை 1972-ஆம் ஆண்டில் சோதனைச் செய்யப்பட்டது. இந்தச் சோதனையில் 65 முதல் 70 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடிய இரகங்கள் இடம் பெற்றன. அவைகள் பின்வருமாறு மகசூல் அளித்துள்ளன.

| ரகத்தின் பெயர் | ஜூலை — செப்டம்பர் | | ஆகஸ்ட் — அக்டோபர் | | நவம்பர் — ஜனவரி | | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| | வயது (நாட்கள்) | எக்டேர் மகசூல் (கிலோ) | வயது (நாட்கள்) | எக்டேர் மகசூல் (கிலோ) | வயது (நாட்கள்) | எக்டேர் | எக்டேர் மகசூல் ((கிலோ) |
| பி. 160 | 65 | 679 | 70 | 1360 | 70 | 1718 | 1252 |
| டி. 9 | 65 | 499 | 70 | 1242 | 70 | 1396 | 1047 |
| எச். 10 | 65 | 526 | 70 | 1226 | 65 | 1656 | 1136 |
| எச். 21 | 65 | 519 | 70 | 1186 | 70 | 1521 | 1076 |
| எல். 35-5 | 65 | 519 | 70 | 1163 | 65 | 1448 | 1043 |

65 முதல் 70 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடிய இரகங்களிலிருந்து 'பி.160' என்ற சிறந்த இரகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது 'டி. 9' என்ற இரகத்தைவிட, தோட்டக்காலில் எக்டேருக்கு 200 கிலோ தானியம் அதிகம் கொடுக்கிறது.

மானாவாரிப் பயிராக 'பி. 160' இரகத்தைச் சோதனை செய்ததில், 'கோ.1' உளுந்தை விட, எக்டேருக்கு 200 கிலோ அதிக தானியத்தை 60 நாட்களில் கொடுத்தது. 'கோ. 1' உளுந்து 100 நாட்களில் 468 கிலோ தானியத்தைக் கொடுத்தது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த 'பி. 160' என்ற பொறுக்கு வித்தை 'கோ. 2' உளுந்து என்று பெயரிட்டு தமிழ்நாட்டில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற இரகமென பரிந்துரைத்துள்ளது.

'கோ. 2' என்ற குறுகிய கால உளுந்து சுமார் 20 முதல் 25 சென்டிமீட்டர் உயரம் வளரக் கூடியது. இதன் தண்டு கருநீல நிறமுடையது. ஒவ்வொரு செயிலும் 8 முதல் 10 கொத்து தோன்றக்கூடும். ஒவ்வொரு கொத்தும் 3-4 காய்களையும், ஒவ்வொரு காயும் 4-5 மணிகளையும் கொண்டது. காய்கள் மிருதுவானவை. இதைப் பருத்தி, மக்காச் சோளம், கரும்பு, சிறுதானியங்கள் ஆகிய பயிர்களுடன் ஊடுபயிராகப் பயிர் செய்யலாம். இதன் மூலம் எக்டேருக்கு சுமார் 150 முதல் 200 கிலோ தானியம் எடுக்கலாம்.

### கோ, 2 உளுந்தின் சிறப்புத் தன்மைகள்

1. இது 65-70 நாட்களில் அறுவடைக்கு வரும்.

2. இது எக்டேருக்கு 1,000 -1200 கிலோ தானியத்தைக் கொடுக்கிறது.

3. ஆண்டு முழுவதும் தோட்டக்காலில் பயிர் செய்யலாம்.

மார்ச்சு-ஏப்ரல், ஜுலை ஆகஸ்ட், செம்டம்பர்-அக்டோபர் மாதங்களில் சாகுபடி செய்வது மிகவும் நன்று.

4. மானாவாரிப் பயிராகவும் சாகுபடி செய்யலாம்.

5. தமிழ்நாடு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்றது.

ஆகவே, குறுகிய காலத்தில் நிறைந்த மகசூல் தரும் 'கோ. 2' உளுந்தைப் பயிரிட்டுப் பயன்பெறுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## 2. சர்க்கரை வள்ளிக் கிழங்கின் மூக்கு வண்டைத் தடுக்கும் முறைகள் !

தமிழ்நாட்டில் பரவலாகப் பயிராகும் கிழங்குகளில் முக்கியமானது சர்க்கரை வள்ளிக் கிழங்காகும். இதை உணவாகவும், காய்கறிகாளகவும் பயன்படுத்துகின்றனர். இந்தக் கிழங்கைத் தாக்கும் பூச்சிகளில் செந்நீல நிறமான 'சைலாஸ் பார்மிக்கேரியஸ்' என்ற மூக்கு வண்டு முக்கியமானதாகும். இந்த வண்டின் புழு, கொடிகளையும், கிழங்குகளையும் துளைத்து அதிக நாசத்தை ஏற்படுத்துகிறது. மிக மோசமான தாக்குதலினால் கிழங்குகளில் 60 முதல் 70 சதவீதம் உண்பதற்கு உபயோகமாகாமல் போகின்றன.





சர்க்கரை வள்ளிக் கிழங்கைத் தாக்கும் மூக்கு வண்டைத் தடுக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறையால் ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 5 பூச்சிக் கொல்லிகள் இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டன. இந்த மருந்துகள், கொடி நட்ட 45-வது நாளில் தொடங்கி 20 நாள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கப்பட்டன. பின் கண்ட அட்டவணையில் இருந்து பென்தியான் 0.1 சதவீதமும், கார்பரில் 0.1 சதவீதமும் மூக்கு வண்டுகளைக் கட்டுப்படுத்தி நல்ல மகசூல் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.



அட்டவணை

| | பூச்சிக் கொல்லிகள் | சராசரி சேதம் (சவீதம்) | எக்டேர் மகசூல் (நல்ல கிழங்குகள் (கிலோவில்) |
|---|---|---|---|
| 1. | பென்தியான் 0.1 சதம் ... | 34.2 | 18,867 |
| 2. | பெனிட்ரோத்தியான் 0.1 சதம் ... | 50.5 | 12,853 |
| 3. | கார்பரில் 0.1 சதம் ... | 31.1 | 16,492 |
| 4. | என்டோசல்பான் 0.1 சதம் ... | 76.7 | 7,110 |
| 5. | கார்போபினிதியான் 0.06 சதம் ... | 76.3 | 5,809 |
| 6. | மருந்தடிக்காத பாத்தி ... | 74.1 | 6,697 |

மருந்துச் செலவு, எக்டேருக்கு, பென்தியானுக்கு 192 ரூபாயும், கார்பரிலுக்கு 105 ரூபாயும் ஆகியது. மருந்து தெளிக்காதப் பாத்தியை விட நிகரலாபம் எக்டேருக்கு பென்தியான் தெளித்த பாத்தியிலிருந்து 4,676 ரூபாயும், கார்பரில் தெளித்த பாத்தியிலிருந்து 3,813 ரூபாயும் கிடைத்துள்ளது.

ஆகவே, சர்க்கரை வள்ளிக் கிழங்குச் செடிகளையும், கிழங்குகளையும் தாக்கிச் சேதப்படுத்தும் மூக்கு வண்டுகளைக் கட்டுப்படுத்த பென்தியான் 0.1 சதம் அல்லது கார்பரில் 0.1 சதம் மருந்தை மேற்கூறியவாறு தெளித்து, சர்க்கரை வள்ளிக் கிழங்கு மகசூலைப் பெருக்கிப் பயன் அடையுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.



## 3. தென்னைச் சிவப்புக் கூன் வண்டைக் கட்டுப்படுத்தும் புதிய முறை !

தென்னை மரத்தைத் தாக்கும் பலவித பூச்சிகளில் ஒன்றான சிவப்பு நிறக் கூன்வண்டு மிகுந்த சேதத்தை விளைவிக்கின்றது. இந்த வண்டு சிவப்பு கலந்த பழுப்பு நிறம் கொண்டது. சுமார் 35 மில்லி மீட்டர் நீளம் உடையது. மேலும் அதன் வாய்ப்பக்கம் நீண்டு காணப்படும். தாய் வண்டானது தனது நீண்ட வாயினால் மரத்தின் மேல் சிறு துவாரங்கள் செய்து, அதில் முட்டைகளை இடுகின்றன. அவற்றினின்று வெளிவரும் வெள்ளை நிற புழுக்கள் மரத்தினுள் குடைந்து சென்று அங்கேயுள்ள மிருதுவான, சத்துள்ள பாகங்களைச் சாப்பிட்டு வளருகின்றன. உள்ளேயே மரச் சக்கைகளைக் கொண்டு கூடு கட்டி, அதனுள் கூட்டுப்புழுவாக மாறி பின் வண்டாக மாறுகின்றன. முட்டைகளினின்று, முழு வண்டு உருவமடைய சுமார் 50 முதல் 100 நாட்களாகும். இவ்வண்டின் எல்லாவித வளர்ச்சிப் பருவங்களும் தென்னை மரத்தினுள்ளேயே கழிக்கப்படுகின்றன.

தாக்கப்பட்ட மரங்களின் மீது சிறிய துவாரங்கள் வழியாக பழுப்பு நிற சாறு வடிவதை காணலாம். பொரும்பாலும் இவ்வண்டு இளந் தென்னை மரங்களை தாக்குகின்றன. இதன் விளைவாக அவைகள் காய்ந்து இறந்து விடுகின்றன.

இப்பூச்சியைக் கட்டுப்படுத்த இதுவரை, 'பைரக்கோன்' என்ற மருந்தை மரத்திற்கு ஒரு லிட்டர் விதம் மரத்தில் துளை செய்து புனல் மூலம் உட்செலுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டு வந்தது. தற்சமயம் இம்மருந்தின் விலை அதிகமானதாலும், வேண்டிய அளவில் கிடைக்கப் பெறாததாலும், இதற்குப் பதிலாக வேறு நல்ல எளிதில் கிடைக்கக்கூடிய, குறைந்த விலையுள்ள நவீன மருந்துகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் முயற்சி தமிழ்நாடு வேளாண்மைப் ப கலைக் கழகத்தின் பூச்சிய பிரிவு, ஆராய்ச்சி செய்து தது. இதன் விளைவாக 'கா பரில்', 'ஃபென்தியான' 'ஃபாஸ்டாக்ஸின்' ஆகிய மருந்துகள் சிறந்த எயன கண்டுபிடிக்கப்பட் ளன.

'ஃபென்தியான்' 0.1 ச கலவையும், 'கார்பரில்' சதக்கலவையும் மரத்துக்கு விட்டர் கலவை விதம் கப்பட்ட மரங்களில் செய்து புனல் மூலம் செலுத்தப்பட்டது. 'ஃபா டாக்ஸின்' வில்லையை ஒரு மர திற்கு அரைவில்லை விதம் தா கப்பட்ட துவாரங்கள் மூல செலுத்தப்பட்டது. பின்பு காற்று வெளியே போகாவ ணம் சிமெண்ட் அல்லது க மண் பூசி விடப்பட்டது. நான் நாட்களுக்குப் பிறகு, மே கூறிய பூச்சி கொல்லிகளை செலுத்திய மரங்களின் தா கப்பட்ட பாகத்தை வெட்டிப் பார்த்ததில் இப்பூச்சியின் எல்லா வளர்ச்சி பருவங்களும் கொல்லப்பட்டு இருந்தன. மேலும் மருந்து செலுத்தப் பட்ட மரங்கள் ஒரு மாதத்தில் மீண்டும் நன்கு வளர்ச்சி யடைந்து விட்டன. எனவே, தென்னை மர சிவப்புக் கூன் வண்டைக் கட்டுப்படுத்த 'கார்பரில்' ஒருசத கலவை அல்லது 'ஃபென்தியான்' 0.1 சத கலவை அல்லது 'ஃபாஸ் டாக்ஸின்' அரை வில்லை விதம்



உபயோகிக்கலாம். ஒரு மரத்திற்கு வேண்டிய மருந்தின் விலை முறையே 20,25,30 பை ஆகின்றது.

எனவே, இப்புதிய முறையை மேற்கொண்டு தென்னையைத் தாக்கும் சிவப்புக் கூன் வண்டைக் கட்டுப்படுத்தி தென்னை மகசூலைப் பெருக்கலாம்.

தகவல் : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.




# காணி நிலம் வேண்டும்

## பூவை எஸ். ஆறுமுகம்

மண்ணின் வாழ்க்கையும் மனத்தின் வாழ்க்கையும் ஒரே கட்சி!

மண் வளம் பேணி, செய்நேர்த்தி பண்ணி, முறையாக விதை நெல் தூவி, நீர் பாய்ச்சி உரமிட்டு, நோய் தடுத்து, களை பிடுங்கி, கண்ணுக்குக் கண்ணாகக் கண்காணித்தால், மண்ணில் நெல்மணிகள் மட்டுமல்லாமல், பொன்மணிகளும் நாடிக்கூடிக் கொழிக்கும்.

வேளாண்மை விஞ்ஞானத்தின் உயிராதாரமான அடிப்படை விதி இது.

இதே விதி, இந்த மனத்திற்கும் விதித்திருக்க வேண்டும்.

மனத்தின் மனிதத் தன்மையை-மனிதாபிமானத்தைப் பண்படுத்தி, அன்பு எனும் விதை தூவி, பிறவிக்கடன் கொண்ட இரக்கம், கருணை, தயை-தாட்சண்யம், ஒழுக்கம் தொண்டு, பக்தி, நன்றியவு, பொறுமை, ஈகை, நேர்மை போன்ற மனிதப் பண்பின் உணர்வுகளை உரமாக்கி, சத்தியத்தையும் தருமத்தையும் நீர் பாய்ச்சி, தீவினை, சூது, துரோகம், களவு பொய்ம்மை, கோபம், கயமை போன்ற வாழ்வழிக்கும் மிருகத்தனமான நோய்களைத் தடுத்தும் களை பிடுங்கியும் மனத்தை மானத்தோடும் மனச்சாட்சியோடும்

# 10. மண்ணும் மனமும் ஒரே கட்சி

தமிழ் அறம் பேணிக் கட்டிக் காக்கும்போது, மனம் புடமிட்ட சொக்கத் தங்கமாக ஒளிகட்டுகிறது, ஒளி காட்டுகிறது!

மெய்.

சோதனைகள் இல்லையேல், மண்ணுக்கு வாழ்க்கை இல்லை; மனத்துக்கும் வாழ்வு, கிடையாது.

அப்படியென்றால், சோதனைகளை வெற்றி கொண்ட பிறகுதான், மண்ணும் மனமும் வெற்றி கொள்ளுமா?

ஆம்.

அதனால்தான், வாழ்க்கையைச் சோதனையாகவும், சோதனையையே வாழ்க்கையாகவும் கொண்டும் கண்டும் பேசுகிறார்கள்; பேசுகிறோம்.

வேடிக்கையான சோதனை!

விந்தையான வாழ்க்கை!

இவ்வாறு, அவனுக்குச் சொந்தமான மண்ணில் கால் பாவி நின்றவண்ணம் சிந்திக்கலானான் வீரமணி. மண்ணும் மனமும் விருந்து படைக்கக் கேட்க வேண்டியதில்லைதான். உருமப் பொழுதுக்கு வந்தவன் அவன்; இப்போது இரணிய வேளையும் அண்டிவிட்டது. வெட்டிச் செய் நிலப்பரப்பில் நின்று எலுமிச்சையம்மன் கோயில் உள்வாய் திடலை நோக்கினான்; ஆர்வம் மேலிட, பாசம் தாளிட நோக்கினான். அவனது குடும்பத்திற்குக் காணியாட்சி உரிமையும் உறவும் கொண்ட குறுந்தடி, மணியக்காரன்வெளி முதலாலான வயல் தாக்குகளைக் காணக் காண, அவன் தன்னையே மறக்கலானான். அந்த வயல் வெளிகளிலே தழைக்கலவைகளும் சாணக் குப்பைகளும் மட்டுந்தானா அவன் பார்வையில் சிக்கின? இல்லை; அறுவடைப் பருவத்தில் உருவம் காட்டித் தோன்றும் பொன் மணி நெற்கதிர்க் கொத்துக்கள் அல்லவா அவன் மனத்திரையில் படம் காட்டின! அவன் அறுவடைச் சமயங்களிலே ஆனந்தம் கொண்டாடுவானே, அந்த ஆனந்தம் இப்போதும் கொண்டாட்டம் போட்டது. இன்று வெறும் வயல்களாகத் தோன்றும் இந்த நிலங்களேல்லாம் நாளைக்குத் தழைத்துச் செழித்துச் சிரிக்கத் தலைப்பட்டு விடும். மண்ணின் மகிமையை உணர்ந்து, மண்ணின் அவசியத்தை அறிந்து, மண்ணுக்கும் மனத்துக்கும் ஊடாக ஓர் ஒருமைப்பட்டுப் பாலம் அமைக்க வேண்டித்தான் அன்றே பராசக்தியிடம் காணி நிலம் கேட்டிருப்பானோ பாரதி

நிழல் நீள்கிறது.

நடை தொடர்கிறது.



ஒற்றைக் கடைப் பாலத்தடி எருக்கலக் கோட்டைக் கண்மாய், சோளக்கொல்லைச் சதுக்கம், சந்தைப்பேட்டை, கீழ்க்குடியிருப்புக்கடை வீதி, மேலக்குடியிருப்பு ஒற்றையடித் தடம்-இப்படியாக, காலத்தையும் தூரத்தையும் கடந்தான் அவன்.

அந்திப்பொழுது வந்தது.

மச்சு வீடும் வந்தது.

அவன்-வீரமணி நீள்மூச்சை நீளமாக வெளியேற்றினான். திட்டிவாசல் உறுத்தியது. இந் நெஞ்சத்துச் சுமையை நேரம் மறந்திருந்தான் அவன். உண்ட சோறு போன மாயம் தெரியவில்லை. அவனுடைய மண் அவனுடைய மனத்திலே ஊட்டி அனுப்பிய மகிழ்ச்சி, அமைதி, நிறைவு எல்லாவற்றையும் உண்ட வீடு அபகரித்துக் கொள்ளுவதா? வேடிக்கைதான்! பிறந்த மனையே சோதனைக் கூடமாக உருமாறத் தொடங்கிவிட்ட விசித்திரம் இப்போதுதான் அவனது நெஞ்சிலும் நினைவிலும் மீண்டும் பொறிதட்டத் தொடங்கியது போலும்!






அப்பா விடுகதை போட்டாரா? இல்லை.

அப்பாதான் சிலட்டூர்ச் சம்பந்தத்தைப் பற்றிய தம்முடைய திட்டத்தை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டாரே! ஆனால், அன்றைக்குத் தஞ்சாவூரிலே நீதிபதி, அம்மானுக்குச் சாதகமாகத் தீர்ப்பைப் படித்துவிட்டு அதே சூட்டோடு ஆசனத்தைவிட்டு எழுந்து சென்ற மாதிரி, அப்பாவும் தம் முடிவைத் தெரிவித்தகூடு ஆறுவதற்குள் எழும்பிப் போய்விட்டார். போனதோடு நிற்கவில்லை; புதிர்ச்சிரிப்பை விடுகதையாக வீசிச் சென்ற விநயம்தான் பொருள் பிடிபடாத கவியாகத் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது!

அப்பாவுக்குப் பிள்ளையான வீரமணி மட்டும் சோடை போய்விடுவானா, என்ன? பெரியவர் வெளிப்படுத்திய புதிர்ச் சிரிப்புக்குச் சவால் விடுகிற மாதிரி, அவனும்தான் சிரிப்பை விடுகதையாக்கி விட்டான்! பின்னே என்னவாம்? எட்டுக்கண் விட்டெரிய, கொடிகட்டி வாழ்ந்துகொண்டிருக்கும் சிலட்டூர்ப் பெருந்தனக்காரரான பெரிய கறுப்பத்தேவரின் செல்வப் புதல்வியான பவளக்கொடியை வீரமணிக்கு நிச்சயம் செய்திருக்கும் முடிவை அதிகார பூர்வமாக அம்பலப்படுத்திய பெரியவர், தம் மைந்தன் வீரமணியின் முடிவைப்பற்றியும் கருத்தறிந்து கொள்ள வேண்டியது தானே நாகரிகம், நியாயம், தருமம்?—அவ்வாறு செய்தாரா? ஊகூம்! ஜனநாயகப் பண்பாடு குடும்பத்திலும் செல்லுபடியாக வேண்டியது தானே மரபு! அல்லவா?

ஒரு நடப்பைத் திரும்பவும் எண்ணிப் பார்த்தான் வீரமணி. கழிந்த மே மாதத்தின் மூன்றும் வார இறுதியில் சஞ்சலம் கண்ட உள்ளத்தோடு அவன் பட்டணத்திற்குப் பயணப்பட்ட நேரத்தில், அன்பின் ஆதுவர்போல, 'அம்பாசிடர்' காரில் வந்திறங்கிய சீமான் பெரிய கறுப்பத்தேவர் தன் பேரில் அன்பு மாரி பொழிந்த காரணத்தின் கருத்துரை, தன்னுடைய தந்தையின் முடிவுக்கு அன்றைக்குத் தன் காதைக் கொடுத்த போதே அவனுக்குப் புரிந்து விட்டது. சோழியன் குடுமி இருதரப்பிலும் காரியத்தில் கண் வைத்துத்தான் ஆடியிருக்கிறது! பாலை வெடித்ததை நினைவுபடுத்தும் சிரிப்பு, பெருமூச்சை வென்று வெளியேறியது. எதையும் தாங்கும் சிரிப்பா? அன்றி, எதையும் சாடும் நகைப்பா அது?

முன்கட்டு அறைக்குள் நுழைந்தான் அவன்.

நாளேடு ஒன்று ஏடு விரிந்து கிடந்தது.

முடங்கல்கள் சில முடங்கிக் கிடந்தன.

படிப்புச் சோதனையில் நல்ல சாதனையுடன் வெற்றிபெற்றதற்குப் பாராட்டுக்கள் கிடைத்திருந்தன.

திருப்பூந்துருத்தியில் அம்பாள் சிலையொன்று காணமற் போய்விட்ட செய்தியைக் கேள்விப்பட்டான் அவன். அது இப்போது செய்தியில் அடைபட்டிருந்தது. தெய்வத்தின் தலையில் கை வைத்த சமுதாயக் குற்றவாளி இதற்குள் சட்டத்தின் விலங்குக்குக் கட்டுப்பட்டு தலைமேல் கை வைத்துக்கொண்டிருப்பான்!

இடைச் செருகல் பாடல் மாதிரி, தந்தியொன்று நாளேட்டில் செருகி வைக்கப்பட்டிருந்தது.

அன்புத் தமிழரசி வாழ்த்தியிருக்கிருள்.

அவன் மறுபடி சலனத்தின் கைதி ஆனன். தமிழரசிக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை தன் அன்புத் தந்தையின் புதிர் பார்வைக்கு வைத்துவிட்டு, அதில் நன்றிக் குறிப்பையும் சேர்த்துத் ''தபால் கட்டில்' சேர்த்து விடவும் கருதினன் வீரமணி.

மன உளைச்சலுக்கு மருந்து தேவை.

புத்தக அலமாரி சுழன்றது.

'வெள்ளிக்கிழமை', 'சக்கரவர்த்தித் திருமகன்', 'ஆரிய மாயை', 'பாரதியார் பாடல்கள், ஒதெல்லோ, பயிர்ப்பாதுகாப்பு' 'சமுதாயம் ஒரு சைனு பஜார்', 'குடியரசு!, 'உயர்ந்த எண்ணங்கள்', 'அலை ஓசை'—இப்படி நூல்கள் ஊரும் பாவுமாக ஓடின.

'சுள்ளான்' கடிக்கவே தடவி விட்டுக் கொண்டான் அவன். தலை இருக்க வால் ஆடிய போக்கில் இருந்த தஞ்சைத் தீர்ப்பு நகல் அவன் கைபட்டுக் காலடியில் வீழ்ந்தது. தமிழாக்கிக் கொடுக்க வேண்டுமென்று தந்தை தீர்ப்புத்தாள்களைக் கொடுத்திருக்கிருர். பொந்து இருந்தால் பூச்சி பொட்டு முடங்கும். மேல் நடவடிக்கை எடுத்து 'அப்பீல்' செய்ய அந்தத் தீர்ப்பிலே சந்து பொந்து இருப்பதாகத் தோன்றவில்லை. காலைச் சுற்றின பாம்பாக அவனது மனத்தைச் சுற்றிக் கொண்டார் அன்னக்கொடியின் தந்தை ராமையாத் தேவர்.

பழி பாவத்துக்கு அஞ்சாமல் அப்பாவைப் பிராது பண்ணிட்டார் அம்மான். விசயம் மான பிரச்சினைக்கு வந்திடுச்சு. இல்லாட்டி, எங்க குடும்பத்துக்கும் அம்மான் குடும்பத்துக்கும் நடுவிலே ஏற்பட்ட பிளவு பொற்பிளவாட்டமே ஆகியிருக்கும்; பிணக்கும் தீர்ந்திருக்கலாம்! ஆனல் இப்போது பிரச்சினை கற்பிளவாக நேர்ந்திடுச்சுது! நான் கண்டுக்கிட்டிருக்கிற ஆசைக் கனவை அவசரச் சட்டம் போட்டுக் கணக்குத் தீர்க்கவும் நினைச்சிட்டார் அப்பா! அதாலேதான், நான் அன்னத்தை உசிருக்கும் மேலாக நேசிக்கிறேன் என்கிற துப்பைப் புரிஞ்சிக்கிட்டும், என்னேட சுயமரியாதைக்குச் சவால் விடுறப்பிலே, எனக்குச் சிலட்டூர்ப் பெண்ணைப் பேசி முடிச்சிருக்கார்!... விதி கண்ணுக்குத் தெரியாது அப்படின்னு அப்பா சகட்டுமேனிக்குச் சொல்லுவாங்க. அப்படின்னு, விதின்னு ஒண்ணு இருக்கத்தான் இருக்குதா?..... அது எப்படி இருக்கத்தான் இருக்குதா?...அது எப்படி இருக்கின்னு சோதிச்சுப் பார்க்காமலா இனி நான் நல்ல தூக்கம் தூங்கப் போறேன்?'

நினைவுகள் சிலிர்த்தன!

தேவர் திரும்பவில்லை!

வீரமணி திரும்பினன்.

'சத்திய சோதனை' பளிச்சிட்டது.

புன்னகையில் வைராக்கியல் சுடர் விட்டது.

திருப்பினன்.

'எதிர்பாராத முத்தம்'

உயிரோவியம் அன்னம் 'புனையா ஓவிய'மென ஆடி ஓடி வந்தாள்.

317

சொக்கினன்.

சொக்குப் பொடி தூவியவள் அன்னமெனச் சிரிக்கின்றாள்!

புரட்டினன்.

'விழுமின்! எழுமின்!' என்ற மனச்சாட்சியின் கட்டளை ஒலித்தது; எதிரொலித்தது:

வீரமணி சிலிர்ப்பெய்தினன்

அப்பா. முதல் அலுவலாய் அம்மான் கடனை நியாயப்படி தீர்த்தாக வேணும். அடுத்த காரியமாக, அப்பாகிட்டே என்னோட நெஞ்சைக் கிழிச்சுக் காட்டியாக வேணும்!....' அந்தி மயக்கத்தில் வேர்வை மயங்கியிருக்கக்கூடும்.

அப்போது:

வெளியே சத்தம் கேட்டது.

''டோய் பயலே!... வெரசா ஓடியாலே!'' என்று கட்டளையிட்டார் ஆதிமூலத் தேவர்.

வீரமணிதான் ஓட வேண்டியவன் ஆனன்.

எருமை வாகனமும் பாசக் கயிறுமாக வேடம் கட்டும் 'தர்மப்பிரபு' மாதிரி, வெள்ளைக் காளையும் சின வெடிச் சிரிப்புமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தார் நாட்டாண்மைத் தேவர்.

தேவர் திருமகனுக்கு இனம் விளங்கியது.

அது அம்மான் வீட்டு வெள்ளைக்காளை; ரேக்ளாக் காளை!

வீரமணி விநயமாக நகைத்த வண்ணம் அப்பாவை ஏறிட்டு நோக்கியபின், அதே பார்வையில் அம்மான் ராமையாத் தேவரின் அருமை மிக்க வெள்ளைக் காளையையும் அளந்தான். வெள்ளையென்றால், அந்த நிறத்திற்கென்று ஒரு புனிதம் இருக்கும்; அழகு இருக்கும். ஆனல், இந்த வெள்ளேயோ திருடனுக்குத் தேள் கொட்டின பாவனையில் பேந்தப் பேந்தப் விழித்துக் கொண்டிருந்தது. வைக்கோல் சிதறல்கள் அதன் கொம்புகளிலே சிதறியதோடு சரி. ''அப்பா, விடுங்க கயித்தை. வெள்ளையை மடக்கிப்போட்டு நான் கட்டிக்கிடுறேன் வாசல் பந்தல்காலிலே! ... உழைசுகக் கொண்டாந்து போட்டிருக்கிற நம்மோட வைக்கலைத் திருடித் தின்னிட்டு ஓடுறதுக்குக் கள்ளத் தனமாய் வந்திருக்கும் போலே! அம்மான் புத்தி பாவம், வாயில்லாச் சீவனுக்கும் ஒட்டிக்கிடுச்சு!..'' என்று ஆத்திரமும் ஆவேசமுமாகச் சீறிக் கொண்டே 'பசு' வாக வேடம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்த அந்த வெள்ளைக் காளையை ஒரே பாய்ச்சலில் மடக்கிப் பிடித்து, பிடி கயிற்றைப் பரபரவென்று இழுத்துக் கொண்டே போய் அந்தக் காளையைப் பந்தல் காலில்—வெள்ளைக் காலில் கட்டி வசமாகச் சுருக்கும் போட்டு விட்டான் அவன். அவன், வீரமணி.

பெரியவர் ஆதிமூலத் தேவர் அப்போது விடலையாக உருமாறிவிட்ட மாதிரி ஓங்காரமிட்டு நகைக்கத் தொடங்கினர். ''பாவம் தேடியாந்து காலிலே தண்டனிட்டுச் சரணுகதி அடையுமாம். அந்தக் கணக்கிலே இப்ப உன் அம்மான் ராமையாத் தேவன் வீட்டுக் காளை நம்ப வீட்டு வாசலிலே தஞ்சமடைஞ்சிட்டுது!....அந்தச் சனியனை மாட்டுத் தொழுவத்திலே கட்டிப் போடுறதை விட்டுப்புட்டு, இங்கிட்டாலே கட்டிப்புட்டியே தம்பி?..சனியனோட கெட்ட காற்று இங்கிட்டும் வீசிப்புடப் போகுது!'' என்று எச்சரிக்கை செய்தார் பெரியவர்.

''எந்தச் சனியும் இனிமே நம்பளை ஒண்ணுமே செஞ்சிப்புட வாய்க்காதுங்க, அப்பா!.. அம்மான் காளைக்கு நம்மோட மாட்டுத் தொழுவத்திலே இடம் கொடுக்கலாமுங்களா? அப்பாலே, மாட்டுத்தொழுவத்துக்கு ஊர் உலகத்திலே இருக்கக்கூடிய மதிப்பும் மரியாதையும் என்ன ஆகிறதாம்?'' என்றான் வீரமணி. அவன் நெஞ்சில் சிலுவைக் குறி பளிச்சிட்ட விந்தை அவனுக்குத் தான் புரியும்!

நாட்டாண்மைக்காரர் அட்டகாசமாகவும் நிர்த்தாட்சண்யமாகவும் இப்போதும் ஆவேசச் சிரிப்பைக் கொட்டி முழக்கத் தொடங்கினர்: ''இப்ப உன்னோட அம்மான் என்ன செய்வாணும்?..நம்ப வீட்டு வைக்கோலை களவாணித்தனமாய் அவனோட வெள்ளை தின்ன அநியாயத்துக்கு.. இனி அவன் என்ன ஈடு கட்டுவாணும்? எப்படி ஈடு கட்டப் போறாணும்?.. பார்க்கிறேன் ஒரு கை!'' என்று சொற்களிலே நெருப்புத் துண்டங்களை வீசியெறிந்தவாறு, கொக்கரித்தார்.

அப்பாவோடு கூடி வீரமணியும் கொக்கரிக்கத் தலைப்பட்டான். ''அம்மானைப் பழிக்குப் பழிவாங்கக் கை கூடியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தைக் கைக்கு மேலே போட்டுக் கெட்டியமாய்ப் பிடிச்சிருக்கவேணுமிங்க அப்பா! அப்பத்தான், அம்மான்காரரோட மானம் மரியாதையெல்லாம் ஊர் முச்சந்திப்புமுதியிலே சிரிப்பாய்ச் சிரிக்க எறுமுங்க!...ஆமங்க அப்பா!.. ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி, அம்மானோட இந்த வெள்ளைக் காளையை பாவிமனுசன் அம்மான்கிட்டே திருப்பி விட்டுப்புடவே கூடாதுங்க, அப்பா!'' என்று சிவப்பு விளக்கையும் ஏந்திக் காண்பிக்கத் தவறிவிடவில்லை இளஞ்சிங்கம்.

''நல்லாச் சொன்னே, போ! ...ஆறுகரை ஆதிமூலத்தேவனை இல்லே கொக்கான்னு உன் அம்மான் ராமையாத்தேவன் இப்பவாச்சும் புரிஞ்சுக்கிட வேணுமா?..பாவம், ராமையாத் தேவன் அவனோட அருமைப் பொண்ணு அன்னக்கொடியை இனிமேல் எந்த மூஞ்சியை வச்சுக்கிட்டுப் பார்க்கப் போறானே?..ஊம்!'' என்று சொல்லி விட்டு முடிந்திருந்த தலைமுடியை அவிழ்த்து மறுபடியும் முடிச்சிட்டுமுடிந்து கொண்டார் பெரியவர்.

அப்போது:

ராமையாத் தேவர், தொங்கிய முக விவாசத்திலே தொங்கிய தேள் கொடுக்கு மீசையோடு பேயைக் கண்ட கணக்கிலே ஓடி வந்து நின்றார் அப்புறம்தான் அவர் மூச்சை வாங்கி வாங்கி வெளியேற்ற முனைந்தார். அவருடைய பயங்கரமான கழுகுக் கண்கள் அந்தத் திட்டி வாசலை எடைகட்டித் தேடின. மறுகணம், அவருடைய பார்வையிலே ஒரு நொடிப்பு பளிச்சிட்டது. தன்னுடைய உடைமையான 'வெள்ளை'யைப் பரிதாபமும் அனுதாபமும் சுழிக்க நோக்கிவிட்டுப் பிறகு, அவர் ஆதிமூலத் தேவரை ஏறிட்டுப் பார்த்தார். மேலே உயர முடியாமல் இறங்கிக் கொண்ட பார்வையை இப்போது வீரமணி நின்ற திசைக்குத் திசை திருப்பத் தொடங்கினர் அவர் ''வீரமணி, என்னோட வெள்ளையை நீங்க அநியாயமாய் ஏன் உங்க வீட்டுக் கல்லுக் காலிலே கட்டிப் போட்டிருக்கீங்களாம்?'' என்று 'வக்கணை' படிக்க ஆரம்பித்தார் ராமையா.

வீரமணி தன் தாய்மாமனை ஓர் அலட்சியப் போக்கோடு முறைத்துப் பார்த்து விட்டு, ''நாங்க உங்க காளையை அநியாயமாகவா கட்டிப்போட்டிருக்கோம்?..உங்க வாய்க்குக் கூட நியாயம் படிக்கத் தெரியுதே? பாவம், வாயில்லாச் சீவனச்சேன்னு இந்த மாட்டுக்கும் மாப்பு விட்டுப்புட்டு அதைக் காலிலே கட்டிப் போட்டதோட நிறுத்திக்கிட்டோம்! ஆமா!'' என்று முழக்கம் செய்தான் அவன். சுருள் முடிகள், மயங்கிக் கொண்டிருந்த அந்திக்கதிரொளியில் அந்தம் சேர்த்துக் கொண்டிருந்தன.

ராமையாத் தேவரின் தேள் கொடுக்கு மீசை தொங்கியது தொங்கியதுதான் போலும்! ஒரு நாட்டு நடப்புக்காகிலும் ஒரு தரம்-ஒரேயொரு தரம் முறுக்கேறித் துடித்துக் காட்டித் தொலைக்கக் கூடாதோ?—ஊம்!—மூச்.. ''என்னோட காளையை உங்க வீட்டுக்கல்லுக் காலிலே கட்டிப் போட்டதோட நிற்காட்டி, அந்த வாயில்லாச் சீவனை என்னு செஞ்சிருப்பீங்களாம்?......'' என்று சூதுமதி தழலாகக் கொதிக்க வினவினர் புதுப் பணக்காரர் ராமையாத் தேவர். இடுப்பு வேட்டியை வசம்கணித்துக் கட்டிக்கொண்டிருந்தார்.

''எங்க வீட்டு வைக்கலை அநியாயமாய் உங்க காளை தின்ன குற்றத்துக்கு உண்டான தண்டனையை அது அனுபவிக்கும்படி செஞ்சிருப்போம். பாவம், வாயில்லாப் பிராணியாச்சேன்னு பொறுத்துக்கிட்டோம். வாய் பேசத் தெரியாத அந்தச் சீவன் செஞ்ச தப்புக்கு பதில் சொல்லாமல் நீங்க தப்பிக்க-எங்ககிட்டேயிருந்து தப்பிக்க இனி உங்களாலே ஏலவே ஏலாதாக்கும். நெஞ்சிலே முடிச்சுப் போட்டுக் கிடுங்க!'' எச்சரிக்கை சிவப்புக் கொடியாக ஆடியது. தலையை நிமிர்த்தினன் வீரமணி.

''அப்பனுக்கும் மகனுக்கும் வாய்ச் சவடாலுக்கு மட்டும் குறைச்சல் கிடையாது! சரி, சரி. உங்ககிட்டே எனக்கு என்னு பேச்சு வேண்டிக் கிடக்குது?...என்னோட தலையை இத்தனை நாளும் வாங்கிறதுக்கு உங்களுக்குத்துப்பு இல்லையாம். இப்ப கொக்கரிக்கிறீயே, வீரமணி?...ஆமா, என் வெள்ளைக் காளை உங்களோட வைக்கோலைத் தின்னது என்கிறதுக்குச் சாட்சி என்னவாம்? ஊம், பட்டுன்னு சொல்லு!''

இப்போதுதான் ராமையாத் தேவருக்குத் தன்னுடைய அருமை பெருமையான தேள் கொடுக்கு மீசையின் நினைவு சிலிர்த்தெழுந்திருக்க வேண்டும்!....

''டே ராமையா! நீ இப்பிடிச் சாட்சி சாடிக்கை கேட்பாய்னு எனக்குத் தெரியாதாடா? சாட்சி சம்பந்தமெல்லாம் பொழுது விடிஞ்சடியும் தெரியும் உன் புத்திக்கு!...நீ நல்ல படியாய் உயிர் பிழைக்கோணும்னு, இப்பவே இந்த மினிட்டிலேயே என் மண்ணை-என்னோட சொந்த மண்ணை விட்டுப்புட்டு அப்பாலே நகர்ந்துக்கிட்டு ஓடுடாலே!....உனக்குத் தெரியாத தாணுவா? ஓடி விழுந்து, புகார் பண்ணுவேடா? ஊம், ஓடுடாலே!....''

வினையறுக்கும் சொற்களாகவே வெடித்துச் சிதறின சொற்கள். பெரியவரின் ஆறுத கோபம் இன்னமும் அடங்கின பாடில்லை.

''அட கிழட்டுச் சிங்கமே! உமக்கு இம்மாம் கொழுப்பு ஏன் வந்திச்சு—எப்படி வந்திச்சு அப்படின்னு நானும் ஒரு கை பார்த்துக்கிடுறேன்!....... ஊம்...! வார விதி ராத் தங்கவா போகுது?...கருநாகத்தைச் சீண்டி விட்டிருக்கீங்க மச்சானே! இந்த நடப்பை மட்டும் நீங்களும் நெஞ்சிலே முடிச்சுப் போட்டுக்கிடுங்க. நீயும் மறந்திடாமல் முடிச்சுப் போட்டு வச்சுக்கிடு, மாப்பிள்ளே!...''

சவாலுக்கு எதிர்ச் சவால் வீசிய கையோடு, தன் அருமை வெள்ளைக் காளையை இரக்கத்தோடும் வெட்கத்தோடும் ஒரு முறை பார்த்துவிட்டு, கால் தூசியைத் தட்டி உதறிவிட்டு அங்கிருந்து நகரத் தொடங்கினர் ராமையாத் தேவர்.

''சரிதான் போடாலே!..... அடிபட்ட நாய்குரைக்கிறது வளமை தானேடா!''

அந்த வாயில்லாச் சீவனுக்கு வெள்ளைத்தனமாக வாய் விட்டுக் கத்தக்கூட வாயில்லாமல் போய்விட்டது!



வீரமணி எக்காளத்தோடு விழிகளை மீட்டுக் கொண்ட நேரத்தில், திட்டி வாசலின் மேற்புறத் தொங்கலில் ரத்தப் பூக்களின் காலடியில் என்னவோ பளிச்சிட்டுக் கண்ணைப் பறிப்பதை உணர்ந்து விழி வலையை வீசினன்.

அங்கே:

கண்கள் இரண்டையும் பறித்துக் கொண்டிருந்த வைரச் சிமிக்கிகள் இரண்டு, அவனுடைய நெஞ்சைப் பறிப்பது போலே புன்னகை செய்து கொண்டிருந்தன- வீரமணியின் இதயத்தின் இதயம் விம்மி வெடிக்கத் தொடங்கியது. அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் அப்பொழுது அவனது செவிகளிலே ''அன்னம்! ..... அன்னம்!'' என்று கூப்பாடு போட்டுக் கொண்டேயிருந்தன. ஏக்கமும் தவிப்பும் மூண்டெழ அவன் கால்களை எட்டிப்போட்டான்; சோள முறுக்குகளைக் கண்ட மாத்திரத்தில் 'லாவி' எடுக்கும் பாலகனைப் போன்று அவன் அவ்விரு வைரச் சிமிக்கிகளையும் அள்ளியெடுத்து அடிமடியில் விசையோடு செருகிக் கொண்டான். அவன் நெஞ்சம் ஏனே தறிகெட்டுச் சுழல ஆரம்பித்தது.

மறுகணம்:

''தம்பி வீரமணி!'' என்று மிடுக்கான குரலெடுத்துக் கடுமையான குரலில் அலட்டிக் கொண்டே அவனுக்குப் பக்கத்திலே அவனுடைய அருமை அப்பா ஆதிமூலத்தேவர் வந்து நின்றார்!

வளரும்

## விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



## அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA



இலக்கியங்களுக்கு

இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோருவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

# சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்


# கேளுங்கள் கொடுக்கப்படும்

ஆர். எம்.

**வினா :** அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 3,000 குடும்பங்களை குடியேற்ற மைய அரசு திட்டமிட்டிருப்பதாகவும், அத்திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிலிருந்து சில குடும்பங்கள் செல்ல விருப்பதாகவும் செய்தி தாளின் வாயிலாக அறிந்தேன் மேற்கூறிய திட்டத்தின் மூலம் நானும் என் மனைவியும் அந்தமான் செல்ல விழைகின்றோம். இதற்கு யாரை அணுக வேண்டும்? எவ்வாறு யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? அந்தமான் செல்வோருக்கு அளிக்கப்படும் சலுகைகள் யாவை? இருக்க வேண்டிய தகுதிகள் யாவை? நான் இடைநிலை ஆசிரியர்ப் பயிற்சி பெற்றவன். என் மனைவி பயிற்சி பெற்ற செவிலியர் (staff nurse) எங்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு எப்படி?

—ம. செபஸ்டின்,

உடையாளிப்பட்டி அஞ்சல்,
(வழி) பெருங்களூர்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**விடை :** இது போன்ற கேள்வி பலரிடம் இருந்து வந்துள்ளது. அனைவருக்கும் பொதுவாக விடை அளிக்கப்பட்டுள்ளது. நிக்கோபார் தீவுகளில் முன்னாள் இராணுவ வீரர்கள் (Ex. service men) 3,000 பேர்களையும், அவரவர்களது குடும்பத்தினரையும் குடியேற்றி, காடாகக் கிடக்கும் பகுதிகளைச் சீர்திருத்திச் சாகுபடிக்குக் கொண்டு வர இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. அத் திட்டத்தின்படி, 1973—74-ஆம் ஆண்டில் பல்வேறு மாநிலங்களிலிருந்து 100 முன்னாள் இராணுவ வீரர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் நிக்கோபார் தீவுகளுக்கு அனுப்ப ஆவன செய்யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிலிருந்து 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாள் 36 முன்னாள் ராணுவத்தினரின் குடும்பங்களும், பிறகு 9 முன்னாள் இராணுவக் குடும்பங்களும் நிக்கோபார் தீவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவை பற்றிய செய்திகளையே தாங்கள் செய்தித் தாள்களில் பார்த்துள்ளீர்கள். ஆனால், அச் செய்திகளை நன்கு கவனித்துப் பார்த்துப் படிக்க தவறியுள்ளீர்கள்! இத்திட்டம் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு மட்டுமே என்பதைக் கவனிக்கத் தவறி உள்ளீர்கள்! எனவே, இத் திட்டத்தின் கீழ் முன்னாள் இராணுவ வீரர்கள் மட்டுமே குடும்பத்தினருடன் நிக்கோபார் தீவில் குடியேற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிக்கோபார் தீவில் குடியேற விரும்பும் முன்னாள் இராணுவ வீரர்கள், அவரவர்களுடைய மாவட்டத் தலைநகரில் உள்ள மாவட்ட முப்படை வீரர் கழகத்தில் (District Soldier's Sailor's and Airmen's Board) மனுவைப் பெற்று, பூர்த்தி செய்து அக் கழகத்தின் மூலமாக தமிழ் நாடு மாநில முப்படை வீரர் வாரியத்திற்கு (Tamil Nadu Soldier's Sailor's and Airmen's Board) அனுப்ப வேண்டும்.

நிக்கோபார் தீவில் குடியேறும் முன்னாள் இராணுவ வீரர் ஒவ்வொருவருக்கும் வீடு கட்டிக் கொள்ள ஒரு ஏக்கர் நிலமும், நெல் சாகுபடிக்காக 5 ஏக்கர் நிலமும், தோட்டப் பயிருக்காக 5 ஏக்கர் நிலமும் வழங்கப்படும்.

நிக்கோபார் தீவில் குடியேறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்குப் பின்கண்ட நிதியுதவி கிடைக்கும் :

(1) தற்பொழுது குடியிருக்கும் இடத்திலிருந்து நிக்கோபார் தீவுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

2. முதலாண்டு முழுவதற்கும் அரசு நிர்ணயித்துள்ள அளவில் உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் இரண்டாம் ஆண்டில் 75 சதமும், மூன்றாம் ஆண்டில் 50 சதமும் இலவசமாக அளிக்கப்படும். மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான வீட்டுச் சாமான்களையும், பாத்திரங்களையும் வாங்க உச்ச அளவாக ரூபாய் 2,500—பொருளாகவோ, பணமாகவோ—வழங்கப்படும்.

(3) வேளாண்மைக் கருவிகள், உரம், விதை முதலியன வாங்க ரூபாய் 3,000 அளிக்கப்படும்.

(4) வீடு கட்டிக் கொள்ள ரூபாய் 5,000 வழங்கப்படும். அல்லது ஒரு அறையுள்ள குடியிருப்பு இலவசமாக அளிக்கப்படும்.

நிக்கோபார் தீவுகளில் குடியேறும் முன்னாள் இராணுவ வீரர்களுக்குத் தேவையான வீட்டுச் சாமான்கள், வேளாண்மைக் கருவிகள் முதலியவைகளை வாங்குவதற்கு தமிழ் நாடு மாநில முப்படை வீரர் வாரியம் ஆவன செய்துள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் குடும்பத்தினர் கப்பலில் புறப்படுவதற்கு முன்பாகத் தங்குவதற்கு தேவையான இடம் முதலிய வசதிகளை செய்து கொடுக்கும் பொறுப்பையும் இவ் வாரியம் ஏற்றுள்ளது. இது பற்றி மேலும் விவரம் அறிய விரும்பும் முன்னாள் இராணுவ வீரர்கள், தங்கள் தங்கள் மாவட்ட முப்படை வீரர் கழகத்தில் விசாரிப்பதே சிறந்தது.

**வினா:** என் நிலக்கடலைப் பயிரில் சின்னச் சின்ன வெள்ளை நிறம் உள்ள பேன் அதிகம் இருக்கிறது. அவைகள் இளம் இலைகளின் மேல் உள்ள பளபளப்பான சவ்வைத் தின்று விடுகின்றன. ஆகையால் இளம் இலைகள் நுனியில் கருகி விடுகின்றன. இன்னும் சில இலைகளின் ஓரங்கள் மடங்கி விடுகின்றன. இதற்கு நான் 'ரோகார்' 100 மில்லி லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து அடித்திருக்கிறேன். இது சரியா? இந்த வியாதியின் பெயர் என்ன? உங்களின் தடுப்புவிதம் என்ன? தாமிரக் கலவை என்பதின் பெயர் என்ன? எங்கள் பகுதியில், ஜூன்-ஜூலை மாதங்களில் பயிரிட எந்த வகை நெல் சிறந்தது? செய்நேர்த்தி முறைகள்யாவை?

—எம். வி. ஹரி,
தாத்தையங்கார் பேட்டை,
முசிரி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**உயர்தர வட்டி சம்பாதியுங்கள்!**

# BOBL-லில் உங்கள் சேமிப்பு மூலம்

1—4—74 முதல் வைப்புத் தொகைகளுக்கு வட்டி விகிதம் :

| வைப்புத் தொகை பிரிவுகள் | | ஆண்டுக்கு வட்டி விகிதம் |
|---|---|---|
| சேமிப்புக் கணக்கு | | 5½% |
| டெபாசிட் 15 முதல் 45 நாட்கள் வரை | ... | 3% |
| டெபாசிட் 46 முதல் 90 நாட்கள் வரை | ... | 3½% |
| டெபாசிட் 91 முதல் 6 மாதங்கள் வரை | ... | 5½% |
| டெபாசிட் 6 மாதம் முதல் 9 மாதங்கள் வரை | ... | 6% |
| டெபாசிட் 9 மாதம் முதல் 1 ஆண்டு வரை | ... | 6¾% |
| டெபாசிட் 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரை | ... | 7¼% |
| டெபாசிட் 2 ஆண்டுகள் முதல் 3 ஆண்டுகள் வரை | ... | 8% |
| டெபாசிட் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை | ... | 8¼% |
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட டெபாசிட்டர்களுக்கு | ... | 8½% |

அங்கீகரிக்கப்பட்ட மத, அறநிலைய, கல்வி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ½ சதவிகிதம் வட்டி கூடுதலாக அளிக்கப்படும்.

## ஸ்ரீ பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : ஆக்ஸ்போர்டு ஹவுஸ், (சபையர் எதிரில்)
மவுண்ட் ரோடு, சென்னை-600006.
தொலைபேசி எண் : 812983



ESTD: 213-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

# இலவசக் கல்வி போதனை

"D" குருப் வகுப்புகள் ஆரம்பம் : 14—6—74

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்-பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.
1. S. V. B.A., B. Com., B. Sc.,– March 1975 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L., M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா–டில்லி–கர்நாடக் B.A., B.Com., B.Sc., (S. S. L. C. (அ). S. S. C. ஆ). மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்) 4. போபால்-ஆந்திரா-கர்னாடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 5. A.C.B.I.( London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. (I.M.C. S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்) 7. டெலிபோன் ஆப்ரேட்டர் • டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10. தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம் 12. போஸ்ட்மென் 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-74) 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER, D.Com., B.Com., B.Com (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-பிப்ரவரி தேர்வில் கலந்து கொள்ளலாம்) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாண்டர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் தபால்கல்வி ஸ்தாபனம்

Affiliated by I. A. & A. I. S. Educations & Com. University, New Delhi.

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் S. O., தென்னாற்காடு மாவட்டம் — தமிழ்நாடு.

கிளைகள்: சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.




கிலோ சூப்பர் பாஸ்பேட், 7.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு, மண்ணில் கலக்கும்படி உழுது விடவும். பிறகு நிலத்தைப் பாத்திகளாக அமைத்துக் கொள்ளவும்.

பாத்திகளில் 6 அங்குல இடைவெளியில் கூரிய குச்சியால் 1.5 அங்குல ஆழத்தில் கோடுகள் போட்டுக்கொண்டு அக்கோடுகளில் விதைகளைத் தொடர்ந்து 1.5 அங்குல ஆழத்தில் சமமாக விதைத்து மண்ணால் மூட வேண்டும். விதைத்த உடனும், பிறகு 4 நாட்கள் கழித்தும், பிறகு 7 முதல் 10 நாட்கள் இடைவெளியிலும் தண்ணீர்ப் பாய்ச்சி வரவேண்டும். விதைத்த 22-வது நாளிலும், 35-வது நாளிலும் களை எடுக்க வேண்டும். கோதுமைப் பயிரில் பயிர்க் கலப்பு செய்யக் கூடாது!

பொதுவாகக் கோதுமையைப் பூச்சிகள் அதிகம் தாக்குவதில்லை! எனினும் முன் தடுப்பாக விதைத்த 20-வது நாள் 30 மில்லி லிட்டர் 'ரோகர்' அல்லது 10 மில்லி லிட்டர் 'டைமெக்ரான்' மருந்தை 67.5 லிட்டர் தண்ணீரில் கலந்து 50 செண்ட் கோமைப் பயிரில் தெளிக்க வேண்டும். சொறி நோய் தோன்றினால் 'டைத்தேன்' அல்லது 'சினெப்' அல்லது 'குமான்' மருந்தில் 275 கிராமை 112.5 லிட்டர் தண்ணீரில் கலந்துத் தெளிக்கவும்.

கோதுமை 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்கு வரும். கதிர்களை மட்டும் அறுத்து எடுத்து, மாடுகட்டிப் பிணை அடித்துத் தானியத்தைப் பிரித்தெடுக்க வேண்டும் கோதுமை வைக்கோல், மாடுகளுக்குச் சிறந்த தீவனமாகும்.

வினா: மரவள்ளிக் கிழங்கைத் தாக்கும் ''மொசைக்'' நோய் பற்றிய விவரத்தையும், புகைப் படத்தையும் வெளியிட்டு உதவும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—எஸ். முத்துசாமி,
செவ்வாய் பேட்டை,
சேலம்.

விடை: 'மொசைக்' நோய் பற்றிய முழுவிவரமும் 16-5-74 'தேதிய தமிழரசு' இதழில் ''கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தயவு செய்து படித்து அறிந்து கொள்ளுங்கள்



மொஸாய்க் நோய் தாக்கப்படாதது.

மொஸாய்க் நோய் தாக்கப்பட்டது.

மொசைக் நோயினால் தாக்கப்பட்டச் செடிகளின் இலைகளும், கிழங்குகளும் மேலே படத்தில் கண்டவாறு இருக்கும்.

வினா: நான் உடல் ஊனமுற்றவன் (செவிடன்). பள்ளி இறுதியாண்டுத் தேர்வு எழுதியுள்ளேன். இண்டியில் ஊனமுற்றோர் தொழிற்கல்வி நிலையம் இருக்கும் இடம் எங்கு உள்ளது என்பதைத் தெரியப்படுத்தவும் (பின் குறிப்பு: தங்களுக்கு எழுதியுள்ளது போலவே, பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் கேள்வி அனுப்பினேன். யாதொரு பதிலும் வரவில்லை. 'தமிழரசு பத்திரிகை அரசாங்க ஏடு என்பதாலும், மக்களுக்கு நன்மை செய்யும் என்பதாலும் இவ்வினாவை அனுப்பியுள்ளேன். எந்த இதழில் முடியுமோ அந்த இதழில் வெளியிடவும்)

—என். மோகன்,
33, திருவள்ளுவர் தெரு,
கிழக்குத் தாம்பரம்,
சென்னை-600059.

விடை: குருடர்களுக்கும், கை,கால் போன்ற உறுப்புகள் குறைவுபட்ட ஊனமுற்றவர்களுக்கும் மட்டுமே இண்டியில் 2 தொழிற் கல்விக் கூடங்கள் உள்ளன.

(1) Light Engineering Project,
C-22, Industrial Estate,
Madras—600032.

(2) Book Binding unit,
Industrial Training
Institute Compound,
Guindy, Madras-600032.

ஆனால் தங்களுக்குக் காது கேட்காது (செவிடு) என்று குறிப்பிட்டுள்ளீர்கள். காது கேட்காதவர்களுக்குத் (Deaf) தொழிற் கற்றுக் கொடுக்க பின்கண்ட 2 தனியார் நிறுவனங்களே உள்ளன.

(1) Training Centre for the
Adult Deaf,
37, Santhome High Road,
Madras—600004.

(2) Society for aiding the
handicapped,
35/A, Chamiers Road,
Madras—600028.

மேற்கூறிய நிறுவனத்தில் 14 முதல் 28 வயதுடைய, காது கேட்காதவர்களுக்கு 2 ஆண்டு காலத்திற்குத் தையற் கலைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் 10 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். பயிற்சி முடிந்ததும், சான்றிதழ் அளிக்கப்படும். இரண்டாவது நிறுவனத்தில் எந்த வயதினரும் சேர்த்துக் கொள்ளப்படுவர். அதில் பிரம்பு வேலை, தையல் வேலை, 'எம்ப்ராய்டரி' போன்றவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. மாதம் 30 ரூபாய் பயிற்சி ஊக்கத் தொகை (ஸ்டைபண்ட்) வழங்கப்படும்.

மேற்கூறிய இரண்டு நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து பயிற்சி பெற்று, பிறகு தாங்களே தனியாகத் தொழில் துவங்கி வருவாய் ஈட்டலாம்! விரைவில் உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க

விடை: தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, தங்கள் நிலக்கடலையைச் சுருள் பூச்சிகளும், அசுவினிப் பூச்சிகளும் தாக்கியுள்ளன என்று கருத இடமிருக்கிறது.

சுருள்பூச்சிகள் இலைகளை ஒன்று சேர்த்துச்சுருட்டி அவைகளுக்குள் வாழ்ந்து கொண்டே இலைகளில் உள்ள பச்சையத்தைச் சுரண்டி தின்று நாசப்படுத்தும். பச்சையம் சுரண்டப்பட்ட இலைகள் வெளுத்து இருக்கும். மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்ட செடிகள் தீக்கிரையான பயிர்கள்போல் காணப்படும். வளர்ச்சியடைந்த சுருள் பூச்சிகள் அதாவது புழுக்கள் கருமையான தலையுடன் இளம்பச்சை நிறமுடையதாக இருக்கும்.

தாங்கள் பேன் என்று குறிப்பிட்டுள்ளது அசுவினிப் பூச்சிகளாகவே இருக்கும் என்று கருதுகின்றோம். ஆனால் இவை நுண்ணியதாகவும், கருப்பாகவும் இருக்கும்; கூட்டமாக வாழும். இப்பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சி செடிகளை வாட வைக்கும்.

நிலக்கடலைச் செடிகளில் தோன்றும் சுருள்பூச்சிகளையும், அசுவினிப் பூச்சிகளையும் ஒழிக்க தாங்கள் 'ரோகார்' தெளித்தது சரியே! 100 மில்லி லிட்டர் ரோகார் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து நிலக்கடலை விதைத்த 20 முதல் 25 நாட்களில் ஒரு தடவையும், பிறகு 21 நாட்கள் இடைவெளியில் 2 முறையும் தெளிப்பது சிறந்தது.

என்டிரின் 200 மில்லி லிட்டர் அல்லது பாரத்தியான் 100 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மேற்கூறியவாறு 3 முறை தெளித்தும் சுருள்பூச்சிகளையும், அசுவினிப் பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

தாங்கள் நிலக்கடலையைப் பூச்சிகளே தாக்கியுள்ளன; நோய் அல்ல!

தாமிரக்கலவை மருந்து என்பது 'காப்பர் ஆக்ஸி குளோரைடு' அல்லது 'குப்ரஸ் ஆக்ஸைடு' மருந்து வகைகளைக் குறிப்பதாகும்.

'பைட்டலான்', 'குப்ராமர்' 'காப்பிசான்', 'பிளைட்டாக்ஸ்' 'பேரிகாப்', 'ஸெல் காப்பர்', 'மைக்காப்' ஆகிய மருந்துகள் 'காப்பர் ஆக்ஸி குளோரைடு' வகையைச் சேர்ந்த தாமிரக் கலவை மருந்துகளாகும்.

'காப்பர் சாண்டாஸ்', 'பெரிணுக்ஸ்', 'கிரிட்டிகாப்பர்', "பங்கிமார்' ஆகியவை 'குப்ரஸ் ஆக்ஸைடு' வகையைச் சேர்ந்த தாமிரக் கலவை மருந்துகளாகும். இவைகளில் ஏதேனும் ஒன்று, உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் நிச்சயம் கிடைக்கக்கூடும்.

தங்கள் பகுதியில் ஜுன்-ஜுலை மாதங்களில் 'கரிகாலன்', கண்ணகி', 'கருணை' ஆகிய குறுகிய கால ரகங்களைப் பயிரிடலாம். இதன் சாகுபடி விவரங்கள் அனைத்தையும் 1-7-1974 தேதி வெளிவரவிருக்கும் 'தமிரசு' குறுவை, மானாவாரி சிறப்பிதழில் வெகு விளக்கமாக வெளியிடப்படும். அவ்விதழைத் தயவு செய்து தவறாமல் படித்தறியும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

வினா: எங்கள் ஊர் எம். கல்லுப்பட்டியைச் சுற்றியிக்கும் பகுதியில் கோடை கால இறவைக் கடலைப் பயிரில் புது விதமான நோய் உருவாகியுள்ளது. விதைத்த 20 நாட்களில் இருந்து கடலை எடுக்கும் பருவத்தில் உள்ள பயிர் வரை இந்த நோய் உள்ளது. முதலில் இலை பழுப்பு நிறமாக மாறுகிறது. பின்புச் செடி முழுக்க பரவுகிறது. பிறகு குருத்தும், தண்டும் மேலிருந்து கீழ் நோக்கிக் கருகிவிடுகிறது. செடி செத்து விடுகிறது. 70-90 நாட்களுள்ள செடியில் இந்த நோயினால் கடலை முற்றாமல் அப்படியே சோடையாக நின்று விடுகிறது.

1. 20-25 நாட்களில் ஏக்கருக்கு 200 மில்லி பாரத்தால் தெளித்தோம்.

2. 35-40 நாட்களில் ஏக்கருக்கு 300 மில்லி எண்டிரினுடன், 1 கிலோ தாமிரப் பூசண மருந்து கலந்துத் தெளித்தோம்.

3. 60-65 நாட்களில் ஏக்கருக்கு 250 மில்லி லிட்டர் ரோகரும், 1 கிலோ தாமிரப் பூசண மருந்தும் கலந்துத் தெளித்தோம்.

மேற்கூறிய மருந்துகள் தெளித்தும் நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, இதற்கு உடனடியாக உங்களுடைய ஆலோசனையைக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—டீ. கணேசன், பி.ஏ.,
எம். கல்லுப்பட்டி,
உசிலம்பட்டி வட்டம்,
மதுரை மாவட்டம்.

விடை: தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து தங்கள் நிலக்கடலையில் 'துரு' (Rust) என்னும் புதிய நோய் தோன்றியுள்ளது என்பது தெளிவாகிறது. இந்த நோய் 1969-ஆம் ஆண்டில் தான், முதன் முதலாக இந்தியாவில்தோன்றியது. தமிழ்நாட்டில் முதன் முதலாக 1971-ஆம் ஆண்டு நவம்பரில் கோவை மாவட்டத்தில் இந்நோய், சிறிய அளவில் தோன்றியது. இது வெகு வேகமாகப் பரவக்கூடிய நோயாகும். இதனால் பெரும் சேதம் ஏற்படக்கூடும்.

இந்த நோய், நிலக்கடலை விதைத்த ஒரு மாதத்தில் தோன்றக்கூடும். இந்நோய்த் தோன்றினால், முதலில் பெரும்பாலும் இலைகளின் அடியில் பழுப்பு நிறப்புள்ளிகள் போன்று சின்னஞ்சிறு கருஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறக் கொப்புளங்கள் தோன்றும். இந்தக் கொப்புளங்கள் இலைத் தோலிலிருந்து உயர்ந்திருப்பதால், சொரசொரப்பாக இருக்கும். இக்கொப்புளங்களி



லிருந்து சிவப்பு நிற பூசண வித்துகள் வெளிப்படும்.

"துரு" நோய் அதிகம் தோன்றிய இலைகள் கருகிவிடும். அதன்பின் இலைகள் உதிர்ந்து நிலக்கடலைச் செடியே வாடிப் போகும்.

"துரு" நோயைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட தடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

(1) நிலக்கடலை விதைக்கும் முன்பு, விதைப்பயறுகளுடன் ஒரு கிலோ விதைக்கு 3 கிராம் விதம் 'காப்டான்' அல்லது 'திராம்' (T. M. T. D. or Thiram) போன்ற மருந்துகளைக் கலந்து வைத்திருந்து பிறகு விதைக்க வேண்டும்.

(2) நோய் தோன்றிய உடனே, 'சினெப்' போன்ற 'டைதயோ கார்பமேட்' மருந்துகளை 15 நாட்கள் இடைவெளிக்கு ஒருமுறை விதம் 0.2 சத அளவில் (ஏக்கருக்கு 300 முதல் 400 கிராம்) இரண்டு முறைத் தெளிக்க வேண்டும்.

கடந்த ஆண்டில் இந்நோய் பழனி, திண்டுக்கல், ஒட்டன் சத்திரம் ஆகிய பகுதிகளில் பரவியதாகத் தெரிகிறது. எனவே, மேற்கூறியவாறு "துரு" நோய் அறிகுறிகள் தங்கள் பகுதியிலும் பெரும் பரப்பில் காணப்பட்டிருப்பின் பின்கண்ட முகவரிக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

"தலைவர்,
தாவர நோய் இயல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

வினா: எங்கள் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களில் அனேகர் கோழிப்பண்ணை வைக்க விரும்புகின்றார்கள். அவர்களுக்கு அரசு கடன் வழங்குமா?

—த. பாலசுப்பிரமணியம் பி.எஸ்ஸி.,
தணிக்கையாளர்,
உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் சங்கம்,
குத்தாலம் (அஞ்சல்),
தஞ்சை மாவட்டம்.

விடை: கோழிப்பண்ணை வைப்பதற்குத் தமிழ்நாடு அரசு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா', மற்றும் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவை கோழிப்பண்ணை அமைக்க பெருமளவில் கடன் கொடுத்து உதவுகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் தீவிர கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பவர்களுக்கு 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' கடன்கொடுத்து உதவுகிறது. இதுபற்றிமேலும் விவரம் அறிய தஞ்சாவூரிலுள்ள கால்நடை வளர்ப்புத் துறை துணை இயக்குநர் அவர்களை நேரில் சந்தித்துக் கேட்டறியலாம்.

வினா: நான் பூண்டு பயிர் செய்யலாம் என்று எண்ணுகிறேன். வெள்ளைப் பூண்டு அதிக விலை விற்பதால் அதை நாமே உற்பத்தி செய்யலாம் என எண்ணி, 'வேளாண்மைக் குறிப்புகள்' என்ற புத்தகத்தில் தேடியும் அதன் குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆகவே, தாங்கள் அதைப்பற்றியகுறிப்புகளையும், பட்டத்தையும் கிடைக்கக்கூடிய வருவாய் எவ்வளவு என்பதையும் தெரிவிக்கவும். மேலும் இதன் புது இனத்தை பற்றியும், இதற்கு ஆராய்ச்சி நிலையம் உள்ளதா என்பதையும் கூறவும். இதைப் பற்றி விரிவாகக் கூறினால் என் போன்ற இளம் உழவர்களுக்கு பெரும் நன்மையாக இருக்கும்.

—கோ.சி. செயபாலன்,
கரைமேடு,
பாகூர்,
தென்னார்க்காடு மாவட்டம்,

விடை: பூண்டு சாகுபடி செய்யும் முறைகளைப் பற்றி 16-3-74 தேதிய 'தமிழரசு' இதழில், பக்கம் 25-ல் விளக்கப்பட்டுள்ளது. அதைப்படித்து அறிந்து கொள்ளுங்கள். உங்கள் ஊரில் பூண்டு பயிரிட்டால் இலாபகரமாக இருக்காது. எனவே, இம்முயற்சியில் ஈடுபட வேண்டாம்! எனினும் தாங்கள் விரும்பின் ஒரு சிறு தளையில் பயிரிட்டுப் பார்க்கலாம்.

பூண்டில் மலைப்பூண்டு இரகமே பெரும்பயன் தருவதாக உள்ளது. பூண்டிற்கெனத் தனி ஆராய்ச்சி நிலையம் இல்லை எனினும், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களில் பூண்டு பற்றிய ஆராய்ச்சிகள் இடம் பெறுகின்றன.

வினா: வடஆர்க்காடு மாவட்டத்தில் கோதுமை பயிரிடப் படுகிறது. எனவே, நானும் எங்கள் நிலத்தில் சுமார் 50 சென்ட் அளவில் கோதுமைப் பயிரிட விழைகின்றேன். எனவே, கோதுமைப் பயிரினை அறியாத எனக்கு எவ்வாறு கோதுமை பயிரிடுவது என்பதை விளக்கவும். கோதுமை புன்செய் பயிரா? அல்லது நன்செய்ப் பயிரா? கோதுமை பயிரிடுவதற்குரிய காலத்தையும் தெரிவிக்கவும். கோதுமைத் தட்டுப்பாடாக உள்ளதாலும், கோதுமைப் பண்டங்களை அதிகமாக விரும்புவதாலும் தங்களை இக்கேள்விக்குப் பதில் தருமாறு கேட்கின்றேன்.

—மோகன் பி.எஸ்சி.,
மோரூர்.

விடை: வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஐப்பசி மாதத்தில் 'சர்பதி சொனோரா' 'சபேத் லர்மா', 'கல்யாண் சோனா' போன்ற சமவெளிக்



கேற்ற இரகங்களைப் பயிரிடலாம்.

கோதுமையைப் புன்செய்ப் பயிராகவும், நன்செய்ப் பயிராகவும் சாகுபடி செய்யலாம். ஆனால் வட ஆர்க்காடு மாவட்டத்தில் கோதுமையைப் பாசனப்பயிராகவே சாகுபடி செய்ய வேண்டும்.

தாங்கள் 50 சென்ட் பரப்பில் கோதுமை பயிரிட மேற்கண்ட கோதுமை இரகங்களில் ஏதேனும் ஒன்றில் 30 கிலோ விதைகளை வாங்கி விதைக்க வேண்டும். விதைகளை "தேசிய விதைக் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்-9" என்ற முகவரியில் இருந்துப் பெற்றுக் கொள்ளலாம். விதைப்பதற்கு நவம்பர் முதல் 2 வாரங்கள் (ஐப்பசி பின் இருவாரங்கள்) மிகவும் சிறந்த காலமாகும்.

நிலத்தை நன்கு புழுதியாக உழுதுவிடவும். கடைசி உழவில் 50 சென்ட் நிலத்திற்கு 10 வண்டி தொழு எரு, 50 கிலோ 15:15:15 அல்லது 55 கிலோ 14:14:14 கூட்டு உரம், 27·5

தமிழ்நாடு அரசு பல திட்டங்களை நிறைவேற்ற விருக்கிறது. அத்திட்டங்களையும் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வினா :** அங்கஹீனமானவர்களுக்கு வாழ்வளிக்க அரசு உதவுவதாய் சென்ற 'தமிழரசு' இதழில் படித்தேன். எனக்குப் பத்துவருடமாய் காது கேட்பதில்லை. இரண்டு வருடமாய்க் கண் பார்வையும் சரியில்லை. கடந்த 14—11—'73 தேதி கோவையில் கலைஞர் கருணாநிதி இலவசக்கண் சிகிச்சை முகாமில் கண் ஆப்பரேஷன் செய்து, சிறிது கண் பார்வை கிட்டியுள்ளது. எனக்குச் சுமார் 4,000 ரூபாய் மதிப்புள்ள 1,500 ச. அடி காலி நிலமும், அதில் 32×14 அடி அளவுள்ள ஒரு மேய்ந்த டாப் செட்டும் (குடோன்) உள்ளது. அதில் நான் ஏதாவது சைக்கிள் கடை, காப்பிக் கடை அல்லது விவசாயிகளுக்கு தேவையான சிமெண்டு தொட்டிகள், பைப் குழாய்கள் செய்தோ ஜீவனம் செய்ய எனக்கு அரசு கடன் உதவி கிடைக்குமா என்ற விவரம் தெரிவித்தால் மிக உதவியாய் இருக்கும்.

கிடைக்குமென்றால் யாருக்கு மனு செய்ய வேண்டும். சொத்து ஜாமீன் தேவையான அளவு கொடுக்க முடியும்.

—ஆர். சுப்ரமணியம்,
அவிநாசி,
கோவை மாவட்டம்.

**விடை :** சிறு தொழில்கள் துவங்கத் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) கடன் கொடுத்து உதவுகிறது. இது பற்றிய விவரம் அறிய கோவையில் உள்ள தொழில் வணிகத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் சென்று விசாரிக்கவும்.

மேலும் சிறு தொழில்கள் துவங்க 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா'வும் மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் கடன் கொடுத்து வருகின்றன. எனவே, தங்கள் அருகாமையில் உள்ள ஏதேனும் ஒரு மேற்கூறிய வங்கிக்குச் சென்று விவரம் கூறி உதவி கோரலாம்.

**வினா:** நான் இந்தியாவிலிருந்து அகதியாகச் சென்ற அய்யப்ப ரெட்டியார் என்பவரின் புதல்வனாகும். என் தகப்பனார் தற்பொழுது காலமாகி விட்டார். தாயாரையும் பிரிந்து இப்போது தனிமையாக வாழ்கிறேன். நான் பிறந்ததோ இலங்கையில்! ஆனால் நான் இந்திய பிரஜை என்றே பதியப்பட்டு வந்துள்ளேன். ஆகையால் நான் இந்தியாவுக்கு வர முயற்சி செய்துள்ளேன். இங்கு நான் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) வகுப்பு படிக்கிறேன். அத்துடன் சிறிய வேலைகளும் செய்து கொண்டு என் வாழ்க்கையை நடத்துகிறேன். நான் இந்தியாவிற்கு வர இருப்பதால், அங்கு நான் படிப்பதற்கோ அல்லது வேலை செய்வதற்கு வேலையோ — எனது படிப்புக்கேற்றபடி — உங்கள் அரசு பெற்றுத் தருமா?

—அ. சிவபெருமாள்,
465, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீலங்கா.

**விடை :** 1964-ஆம்ஆண்டின் இந்திய—இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையில் இருந்துத் திரும்பி வருகின்றவர்களின் மறு வாழ்விற்காக நிலம் வாங்கவும், பயிர் செய்து பிழைக்கவும், தொழில் செய்து வாழ்வும், வீடு கட்டிக் கொள்ளவும்




தமிழ்நாடு அரசு மூலமாக கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. நிலப்பட்டாவும், வீட்டு மனைப் பட்டாவும் கொடுக்கப்பட்டு வருகிறது. படித்தவர்களெனில், அவர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பும் தேடித் தரப்படுகிறது. எனவே, தாங்கள் மேற்கூறிய ஒப்பந்தப்படி, இலங்கையில் இருந்து முறையாகத் திரும்பி வருவீர்களானால், உங்களின் மறுவாழ்வுக்கு தமிழ் நாடு அரசு உதவி செய்யும்.

தமிழ் நாட்டில் புகுமுக வகுப்பு (Pre-University Course) வரை, இலவசக் கல்வி எல்லாருக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, தாங்கள் முறையாகத் திரும்பி வந்தால், தமிழ் நாட்டில் புகுமுக வகுப்பு வரை இலவசமாகக் கல்வி பயில முடியும். அதன் பிறகு தங்களுக்குப் பிடித்தமான ஒரு தொழிலில் ஈடுபட்டுக்கொண்டு மாலை நேர வகுப்புகளில் (Evening Classes) படித்துப் பட்டதாரியாகவும் ஆக முடியும். அவ்வாறு பட்டதாரியான பின் நிலையான ஒரு வேலையில் அமர்ந்து கொள்ள இயலும்.

தமிழ் நாடு அரசின் அகதிகள் மறுவாழ்வுத் துறை, 1964-ஆம் ஆண்டின் இந்திய—இலங்கை ஒப்பந்தப்படி, இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளை ஆதரித்து—மறுவாழ்வு அளித்து—மகிழ வைக்கும் என்று நீங்கள் நம்பலாம்.

**வினா:** நான் புகுமுகத் தேர்வு முடித்து இருக்கிறேன். இந்திய விமானப் படையில் சேர வேண்டுமென்பது எனது தணியாத ஆசை. இதற்குத் தேவையான தகுதிகள் என்ன என்ன என்பதைத் தெரியப்படுத்தவும். தாம்பரம் விமானப்படை அலுவலகத்திற்கு நேரிடையாகச் சென்றால் பலன் உண்டா?

—குணசேகரன்,
பொம்மன்பட்டி,
கவுந்தப்பாடி அஞ்சல்,
கோவை மாவட்டம்.

**விடை :** இந்திய விமானப் படையில் சேருவதற்கு எஸ். எஸ். எல். சி. அல்லது விஞ்ஞானத்துடன் அதற்குச் சமமான படிப்பு படித்திருக்க வேண்டும். உயரம் 152.40 செண்டிமீட்டரும் (5 அடி), எடை 47.57 கிலோவும் (105 பவுண்டு), மார்பளவு விரிவடையாத பொழுது 72.26 செண்டி மீட்டரும் (30 அங்குலம்), 5.08 செண்டிமீட்டர் விரிவடையும் சக்தியும் கொண்டிருக்க வேண்டும். வயது வரம்பு கல்வித் தகுதிககு ஏற்ப மாறுபடும். விமானப் படைக்கு ஆள் எடுக்கப்படும் தேதி, இடம், தகுதி ஆகியவை பற்றி அவ்வப்பொழுது நாளேடுகளில் அறிவிக்கப்படுகின்றன. அதைப் பார்த்துப் படித்தறிந்து விமானப்படையில் சேர முயற்சியுங்கள்.

நாளேடுகளில் இது பற்றிக் குறிப்பிடப்படுகின்ற நாட்களில் மட்டுமே தாம்பரம் விமானப் படை அலுவலகத்திற்குத் தகுந்த கல்விச் சான்றிதழ்களுடன் நேரிடையாகச் செல்வது பலன் தரும்! எனினும், பின்கண்ட முகவரிக்கு தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து எழுதி, எப்பொழுது விமானப் படைக்கு ஆள்சேர்க்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

விமானப் படை ஆள் சேர்ப்பு அலுவலர்,
விமானப் படை ஆள் சேர்ப்பு அலுவலகம்,
விமானப் படை நிலையம்,
தாம்பரம், சென்னை-600046

## மக்கள் தொகை - ஒரு வெடிகுண்டு!

இந்தியாவில் பத்தாண்டுக்காலத்தில் (1961-71) 11 கோடி மக்கள் பெருகியிருக்கிறார்கள். அடுத்த பத்தாண்டுக்காலத்தில் 13½ கோடி மக்கள் கூடுதலாகலாம். The Population is mounting in India என்ற நிலைமை இருந்து வருகிறது. முன்பு 'மக்கள் தொகை வளர்ச்சி' (Population growth) என்றார்கள். பின் 'மக்கள் தொகை வெடிப்பு' (Population explosion) என்றார்கள். இப்போது 'மக்கள் தொகை வெடிகுண்டு' (Population Bomb) என்றே சொல்லுகிறார்கள். மக்கள் தொகை என்பதே ஒரு வெடிகுண்டாயிருக்கிறது. எந்த நேரத்திலும் அது வெடிக்கும்!

**வினா :** நான் 1969—70-இல் பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளேன். மேலும், என் வலது கால் இளம் வயதில் ஊனம் அடைந்து விட்டது. எனவே, என்னால் மேற்கொண்டு கல்லூரியில் சேர்ந்து பயில இயலவில்லை. நான் சில வருடங்கள் ஒரு தொழிலகத்தில் தற்காலிகமாக வேலை செய்து வந்தேன். அந்தத் தொழிற்சாலையும் வேலை நிறுத்தத்தின் காரணமாக இயங்கவில்லை! அதனால் நான் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் மேற்கொண்டு வீட்டிலிருந்தபடியே புகுமுக வகுப்பு படிக்க முடியுமா என்பதைத் "தமிழரசு" இதழில் விளக்க வேண்டுகிறேன். அதற்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியையும் குறிப்பிட வேண்டுகிறேன்.

—நா. சுப்ரமணியன்,
ஆர்ப்பாக்கம் (அஞ்சல்),
திருவண்ணாமலை வட்டம்,
வட ஆற்காடு மாவட்டம்.

(இது போன்ற கேள்வியை செங்கை மாவட்டம், படாளம் ஊரைச் சேர்ந்த திரு நா. முனுசாமி என்பவரும் கேட்டுள்ளார்).

**விடை :** தாங்கள் வீட்டில் இருந்தபடியே, அஞ்சல் வழியாகப் புகுமுக வகுப்பு பாடங்களைப் படிக்கலாம். அதே முறையில் 'பி.ஏ.,' 'பிகாம்'. முதலிய பட்டப் படிப்புப் பாடங்களையும் படித்துத் தேர்வு எழுதி வெற்றி பெறலாம். இவ்வாறு அஞ்சல் வழியாகப் படிப்பதற்குரிய வாய்ப்பினை மதுரைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. இது பற்றிய விவரம் அறிய 35 பைசா அஞ்சல் தலை ஒட்டிய, உங்கள் முகவரி எழுதிய 22 செ.மீ. × 13 செ.மீ. அளவுள்ள உறை ஒன்றையும், உங்கள் வேண்டுகோளையும் வைத்துப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

இயக்குநர்,
அஞ்சல் வழிக் கல்வித் துறை,
மதுரைப் பல்கலைக் கழகம்,
மதுரை—625021.

**வினா:** தமிழ் நாடு அரசு, பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ள எல்லா 'செகண்டரி கிரேடு' ஆசிரியர்களுக்கும், 'செலக்ஷன் கிரேடு' ஊதியம் வழங்க வகை செய்துள்ளதாக கல்வி மானியக் கோரிக்கையைச் சட்ட சபையில் சமர்ப்பித்து மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் அறிவித்திருக்கின்றார்கள். இச் சலுகை உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஓவிய ஆசிரியர்களுக்கும், தொழிலாசிரியர்களுக்கும், உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும், பொருந்துமா? இந்த ஐயப்பாட்டினை 'தமிழரசு'' இதழில் விளக்கியருள வேண்டுகின்றேன்.

—வை. இரத்தினசாமி,
ஓவிய ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
வெள்ளப்பள்ளம்.

**விடை :** ''இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கும் அதே தேர்வு நிலை, உடற் கல்வி, ஓவியம், கைத்தொழில் போன்ற சிறப்பாசிரியர்களுக்கும் உண்டு'' என்று மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வினா :** நான் ஒரு தாழ்த்தப்பட்ட அரிஜன வகுப்பைச் சார்ந்த ஏழை. நான் எஸ். எஸ். எல். சி. (வேளாண்மை) தேர்வில் தேர்ச்சி பெற்று 2 ஆண்டுகளாகியும் வேலைகிடைக்கவில்லை. மேற்கொண்டு விவசாயச் சம்பந்தப்பட்ட வேலை கிடைக்க நான் என்ன செய்ய வேண்டும்?

—கே. தேவசகாயம்,
ஆண்டித்தோப்பு (புதூர்),
பூதப்பாண்டி அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

**விடை :** தாங்கள், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளீர்களா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை. இது வரைப் பதிவு செய்யவில்லை எனில், நாகர்கோவிலில் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில், உடன் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள். ஏற்கெனவே, பதிவு செய்திருந்தால், தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே வாருங்கள். தங்களைப் போல் பல்லாயிரக் கணக்கானோர் வேலை தேடிப் பதிவு செய்து கொண்டுள்ளதால், வேலை கிடைப்பது கடினமே. எனவே, பொறுத்திருந்து தான் வேலை பெற முடியும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் குரூப்-4 (Group-IV) தேர்வுக்கு மனு செய்து, நன்கு படித்துத் தேர்வு எழுதி, வெற்றி பெற்றால் உங்களுக்குத் தானாகவே வேலை கிடைப்பது உறுதி. எனவே, அத் தேர்வு எழுத முயற்சி செய்யுங்கள்.

தாங்கள் அரிசன வகுப்பைச் சார்ந்தவர் என்பதால், தங்கள் மாவட்ட நல அலுவலர் (District Welfare Officer) அவர்களைச் சந்தித்து தங்கள் நிலை கூறி, கடன் பெற்று தொழில் செய்து முன்னேறவும் முயற்சியுங்கள். ''முயற்சி திருவினையாக்கும்'' என்பதை மறந்து விடாதீர்கள்.

# புகளூர் நீரேற்றுப் பாசனத் திட்டம்

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம் வேலாயுதம்பாளையத்தின் அருகில் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாகிக் கொண்டிருப்பது புகளூர் நதி நீரேற்றுப்பாசனத் திட்டமாகும். இந்தப் பகுதியிலுள்ள விவசாய நிலங்களுக்கு நீர்பாசன வசதி ஏற்பட்டு விவசாயக் குடிமக்கள் இத்திட்டத்தால் மிகுந்த பயன் அடைவர்.

இதுநாள் வரை இந்தப் பகுதியிலுள்ள ஒருசில விவசாயிகள் மட்டும் நதித்துறையில் மின்சார மோட்டார் பம்புசெட் மூலம் பூமிக்கு அடியிலிருந்து நீரைக் கொண்டு வந்து விவசாயம் செய்து வந்தார்கள். இந்த நீரேற்றுப் பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இப்பகுதியிலுள்ள எல்லா விவசாயக் குடிமக்களும் பயன்பெறுவார்கள்.

புகளூர் நதி பம்பிங் மற்றும் நீரேற்றுப் பாசனத் திட்டச் சங்கம் இத்திட்டத்தை நிறைவேற்றிட அரும்பணியாற்றிக் கொண்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறிய பின்னர் இப்பகுதிவாழ் விவசாயிகளின் தலையாய பிரச்சினை தீர்ந்துவிடும்.

பாசன வசதியில்லாத 2,200 ஏக்கர் நிலம், இத்திட்டத்தால் புதிதாகப் பாசன வசதிபெற வாய்ப்பு ஏற்படுகிறது. முதல் கட்டமாக 86 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

பாசனத்திற்கு நதியிலிருந்து நீர் எடுத்துச் செல்வதற்கு சிமெண்ட் குழாய்களைப் பயன்படுத்துகின்றனர். செராமிக் தொழிற்சாலையிலிருந்து ஆர். சி.சி. சிமெண்ட் குழாய்களை முதல் கட்டமாக 8·5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீரேற்று வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த முதல் கட்ட வேலை முடிந்த பின்னர் சுமார் ஆயிரம் விவசாயிகள் பாசன வசதி பெறுவார்கள்.

இந்த நீரேற்றுப் பாசனத் திட்டம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த பாசன வசதியை முதன் முறையாகப் பெரிய அளவில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இத்திட்டம் நிறைவேறிய பின்னர் இப்பகுதியில் பல்வேறு கிராமங்களிலுள்ள விவசாயிகள் பெருமளவில் பயன் பெறுவார்கள். உணவுப் பொருட்கள் உற்பத்தி பெருகும்! பசுமைப் புரட்சி தொடர்ந்து எங்கெங்கும் பரவும்.

## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.

### படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட கடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்றும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!

| வரிசை எண் | மாவட்டம் | அங்க ஊனமுற்றோர் | | | | செவிடு, ஊமை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இளம் பிள்ளை வாதத்தால் ஊனமுற்றோர் | பிறவிக் கூருன ஊனமுற்றோர் | உடல் உறுப்புத் துண்டிக்கப்பட்டதால் ஊனமுற்றோர் | மொத்தம் (3) + (4) + (5) | செவிட்டுமை | செவிடு | ஊமை | மொத்தம் | குருடு (7) + (8) + (9) | வகைப்படுத்தாதது | மொத்தம் (6) + (10) + (11) + (12) | விழுக்காடு (சதம்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 | சென்னை | 2,228 | 513 | 1,045 | 3,786 | 617 | 899 | 575 | 2,091 | 1,265 | — | 7,142 | 3·05 |
| 2 | செங்கற்பட்டு... | 3,628 | 1,860 | 3,076 | 8,564 | 6,090 | 2,417 | 1,544 | 5,651 | 3,698 | 20 | 17,993 | 7·65 |
| 3 | வட ஆர்க்காடு | 5,430 | 2,639 | 4,031 | 12,100 | 3,231 | 2,966 | 2,619 | 8,816 | 6,255 | — | 27,171 | 11·60 |
| 4 | தென் ஆர்க்காடு | 6,951 | 2,520 | 3,459 | 12,930 | 3,023 | 1,710 | 1,619 | 6,352 | 4,171 | 50 | 23,503 | 10·03 |
| 5 | தருமபுரி ... | 1,601 | 1,118 | 1,572 | 4,291 | 1,186 | 1,073 | 867 | 3,126 | 2,217 | — | 9,634 | 4·12 |
| 6 | சேலம் ... | 3,298 | 1,564 | 2,035 | 6,897 | 1,739 | 1,067 | 1,223 | 4,029 | 1,923 | — | 12,849 | 5·48 |
| 7 | கோயம்புத்தூர் | 3,499 | 1,731 | 2,805 | 8,035 | 2,238 | 1,682 | 1,658 | 5,578 | 3,711 | 111 | 17,435 | 7·44 |
| 8 | நீலகிரி ... | 314 | 349 | 387 | 1,050 | 257 | 273 | 156 | 686 | 347 | — | 2,083 | 0·89 |
| 9 | மதுரை ... | 3,083 | 1,839 | 2,505 | 7,427 | 2,335 | 1,656 | 1,086 | 5,077 | 3,531 | — | 16,035 | 6·84 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 4,711 | 1,967 | 4,157 | 10,835 | 2,255 | 2,737 | 1,940 | 6,932 | 4,198 | — | 21,965 | 9·37 |
| 11 | தஞ்சாவூர் ... | 6,865 | 2,576 | 2,932 | 12,373 | 2,749 | 3,165 | 1,791 | 7,705 | 3,133 | 42 | 23,253 | 9·93 |
| 12 | புதுக்கோட்டை | 1,486 | 589 | 566 | 2,641 | 882 | 573 | 368 | 1,823 | 1,235 | — | 5,699 | 2·43 |
| 13 | இராமநாதபுரம் | 3,208 | 1,986 | 2,570 | 7,764 | 2,159 | 1,928 | 1,345 | 5,432 | 3,767 | — | 16,963 | 7·24 |
| 14 | திருநெல்வேலி | 4,524 | 3,202 | 3,573 | 11,299 | 3,215 | 2,526 | 1,705 | 7,446 | 5,554 | — | 24,299 | 10·37 |
| 15 | கன்னியாகுமரி | 2,474 | 1,021 | 1,741 | 5,236 | 891 | 615 | 491 | 1,997 | 1,116 | — | 8,349 | 3·56 |
| | மொத்தம் ... | 53,300 | 25,474 | 36,454 | 1,15,228 | 28,467 | 25,287 | 18,987 | 72,741 | 46,121 | 223 | 2,34,313 | 100·00 |
| | விழுக்காடு ... | (22·75) | (10·87) | (15·56) | (49·18) | (12·15) | (10·79) | (8·10) | (31·04) | (19·68) | (0·10) | (100) | |

# ஊனமுற்றோருக்கு ஒளிமிக்க எதிர்காலம்

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்ற இலட்சியத்துடன் பணியாற்றி வரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஐந்தாவது ஆண்டு நிறைவு நாளிலே, "ஏன் எடுத்தோம் இந்த ஜென்மம்?" என்று ஏங்கி, வாழ வழியின்றித் தவித்துக் கொண்டிருந்த ஊனமுற்றவர்களுக்குப் (Physically handicapped persons) புது வாழ்வு அளிப்பதற்காக ஒரு புதிய திட்டத்தைத் துவக்க வேண்டும் என்று எண்ணி, தமிழகத்திலுள்ள ஊனமுற்றவர்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கும்படி ஆணையிட்டார். அவருடைய ஆணைக்கேற்ப, ஊனமுற்றவர்கள் பற்றிய ஆய்வு (Survey), குடிமதிப்புப் புள்ளி விவரத் தொகுதி அடிப்படையில் 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி-மார்ச்சுத் திங்கள்களில் தமிழகமெங்கும் நடைபெற்றது.

இவ்வாய்வு, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மேற்பார்வையில் நகராட்சி ஆணையர்களாலும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்களாலும், மேற்கொள்ளப் பெற்றது. இந்த ஆய்வினை நடத்துவதற்குரிய வரையறைகளை வகுத்துக் கொடுத்த, நிதித் துறையின் பொருளாதார பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (Economic Analysis and Research Division of Finance Department) ஊனமுற்றவர்கள், பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து, அறிக்கை தயாரிப்பதற்காக மேற்கூறிய ஆய்வு அறிக்கைகளைப் பெற்றன.

1931-ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஊனமுற்றவர்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ள, முறையான முயற்சி நடைபெறவில்லை. 1931-ஆம் ஆண்டுவரை இந்திய குடிமதிப்புப் புள்ளி விவரத் தொகுதியில் குருடர்கள், செவிட்டூமையர்கள், பைத்தியக்காரர்கள், தொழு நோயாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டாலும், உடல் உறுப்பு ஊனமுற்றவர்கள் பற்றிய விவரங்கள் எடுக்கப்படவில்லை. 30 ஆண்டுகளுக்குப் பிறகு, 1961-ஆம் ஆண்டின் குடிமதிப்புப் புள்ளி விவரத் தொகுப்பு வேலை நடைபெற்ற பொழுது உடல் ஊனமுற்றவர்கள் பற்றிய ஆய்வு, மாதிரி அடிப்படையில், சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப் பெற்றது. எனவே, ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்குத் தகுந்த கொள்கை முறைகளை வகுப்பதற்கு உதவும் நோக்குடன் தமிழக மெங்கும் உள்ள ஊனமுற்ேறார் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசு ஆணைப் பிறப்பித்தது. அந்த ஆணைக்கேற்ப, ஊனமுற்ேறார் பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பெற்ற ஆய்விலிருந்து பின்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன.

தமிழகத்தில் 2,34,313 ஊனமுற்றவர்கள் (Physically handicapped persons) உள்ளனர் என்பது தெரிய வருகிறது. அதாவது தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு 10,000 பேர்களிலும், ஏறத்தாழ 57 பேர்கள் ஊனமுற்றவர்களாகவே உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது!



ஊனமுற்றவர்களில் 1,33,073 பேர்கள் ஆண்கள், 99,240 பேர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஒவ்வொரு 10,000 ஆண்களிலும் 65 பேர் ஊனமுற்றவர்களாகவும், ஒவ்வொரு 10,000 பெண்களிலும் 49 பேர் ஊனமுற்றவர்களாகவும் உள்ளனர்.

பெரும்பாலும் கிராமப் புறங்களில்தான் ஊனமுற்றவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். தமிழகத்தில் உள்ள ஊனமுற்றவர்களில் 1,66,210 பேர் கிராமப் புறங்களிலும், 68,103 பேர்கள் நகரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

ஒவ்வொரு 10,000 பேர்களிலும் ஊனமுற்றவர்களாக உள்ளவர்களின் விகிதம் மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| மாவட்டத்தின் பெயர் | | | 10,000 பேர்களில் ஊனமுற்றவர்களாக உள்ளவர்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| சென்னை | ... | ... | 29 |
| செங்கற்பட்டு | ... | ... | 62 |
| வட ஆர்க்காடு | ... | ... | 72 |
| தென் ஆர்க்காடு | ... | ... | 65 |
| தருமபுரி | ... | ... | 57 |
| சேலம் | ... | ... | 43 |
| கோயம்புத்தூர் | ... | ... | 40 |
| நீலகிரி | ... | ... | 42 |
| மதுரை | ... | ... | 41 |
| திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை | ... | ... | 66 |
| இராமநாதபுரம் | ... | ... | 59 |
| திருநெல்வேலி | ... | ... | 76 |
| கன்னியாகுமரி | ... | ... | 68 |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து, ஊனமுற்றவர்கள் சென்னை மாவட்டத்தில் தான் மிகவும் குறைவாகவும், திருநெல்வேலி மாவட்டத்தின் தான் மிகவும் அதிகமாகவும் உள்ளனர் என்பது புலனாகியுள்ளது.

## ஊனத்தின் வகை

ஊனமுற்றவர்களில் பெரும்பாலானவர்கள் இளம்பிள்ளை வாதம், பிறவிக் கூறு, உடல் உறுப்பு துண்டிக்கப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக உடலின் ஒரு பகுதியை இழந்தவர்களாகவே (Orthopaedically handicapped) உள்ளனர். இப்படிப்பட்டவர்கள் 1.15 இலட்சம் பேர்கள் தமிழ் நாட்டில் உள்ளனர். இவர்களின் தொகை, ஊனமுற்றவர்களின் தொகையில் பாதியாக உள்ளது. செவிடு, ஊமை ஆகியவற்றால் ஊனமுற்றவர்கள், ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியாக உள்ளனர். ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 31 சதவிகிதத்தினர் அதாவது 72,741 பேர்கள் செவிடு, ஊமை ஆகிய ஊனமுற்றவர்களாக இருக்கின்றனர். குருடு காரணமாக ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை, ஊனமுற்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 20 சதவிகிதமாக உள்ளது.

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு 10,000 பேர்களிலும், 57 பேர் ஊனமுற்றவர்களாக உள்ளனர். அவர்களில் 28 பேர் உடல் ஊனமானவர்களாகவும், 18 பேர் செவிடு அல்லது ஊமையாகவும், 11 பேர் குருடாகவும் உள்ளனர்.

ஊனமுற்றவர்கள் எவ்வகையில் ஊனமுற்றவர்களாக உள்ளனர் என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம் :

| ஊனத்தின் வகை (1) | | | எண்ணிக்கை (2) | விழுக்காடு (சதவிகிதம்) (3) | மாநில மக்கள் தொகையில் 10,000 பேர்களுக்கு எத்தனை பேர் என்ற விவரம் (4) |
|---|---|---|---|---|---|
| இளம்பிள்ளை வாதம் | ... | ... | 53,300 | 22.7 | 13 |
| பிறவிக் கூறான ஊனம் | ... | ... | 25,474 | 10.9 | 6 |
| உடல் உறுப்புத் துண்டிக்கப்பட்டமை | ... | | 36,454 | 15.6 | 9 |
| செவிட்டூமையர் | ... | ... | 28,467 | 12.1 | 7 |
| செவிடு | ... | ... | 25,287 | 10.8 | 6 |
| ஊமை | ... | ... | 18,987 | 8.7 | 5 |
| குருடு | ... | ... | 46,121 | 19.7 | 11 |
| வகைப்படுத்தப்படாதது | | ... | 223 | 0.1 | ... |
| மொத்தம் | ... | ... | 2,34,313 | 100.00 | 57 |

## வயது

ஊனமுற்றவர்களில் 45.3 சதவிகிதத்தினர், 16 முதல் 50 வயதிற்குட்பட்டவர்களாகவும் 23.2 சதவிகிதத்தினர் 6 முதல் 16 வயதிற்குட்பட்டவர்களாகவும், 23.1 சதவிகிதத்தினர் 50-ம் அதற்குமேற்பட்ட வயதினராகவும், 8.4 சதவிகிதத்தினர் 6 வயதிற்குட்பட்டவர்களாகவும் உள்ளனர். இதைப் பின்கண்ட அட்டவணை விளக்குகிறது :



வயது வாரியாகப் பார்க்கும் பொழுது, ஊனமுற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் 50 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடையவர்களாகவே உள்ளனர். இப்படிப்பட்டவர்கள், ஒவ்வொரு 10,000 மக்களுக்கும் 100 பேர்கள் என்ற அளவில் உள்ளனர்.

ஊனமுற்றவர்களின் வயதுவாரியான பட்டியல்

| வ. எண். (1) | வயது தொகுதி (2) | | எண்ணிக்கை (3) | சதவீதம் (4) |
|---|---|---|---|---|
| 1. | 6 வயதிற்குக் கீழ்ப் பட்டவர்கள் | ... | 19,637 | 8.4 |
| 2. | 6—12 | ... | 32,885 | 14.0 |
| 3. | 12—16 | ... | 21,608 | 9.2 |
| 4. | 16—30 | ... | 51,992 | 22.2 |
| 5. | 30—50 | ... | 54,122 | 23.1 |
| 6. | 50-ம் அதற்கு மேற் பட்ட வயதும் உடையவர்கள் | ... | 54,062 | 23.1 |
| | மொத்தம் | ... | 2,34,313 | 100.00 |

## கல்வி

ஊனமுற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே உள்ளனர். தமிழகத்தில் உள்ள ஊனமுற்றவர்களில் 30 சத விகிதத்தினரே கல்வி கற்றவர்களாக விளங்குகின்றனர். அவ்வாறு கல்வி கற்றவர்களாக விளங்குகிறவர்களிலும், பெரும்பான்மையானவர்கள் துவக்கக் கல்வி நிலையைத் தாண்டவில்லை! அவர்களில் ஏறத்தாழ 6 சதவிகிதத்தினரே உயர் துவக்கப்பள்ளி நிலைக் கல்வியும், 3 சதவிகிதத்தினர் இடைநிலைக் கல்வியும், 1 சத விகிதத்தினர் உயர் கல்வியும் பெற்றுள்ளனர். பின்கண்ட அட்டவணை தமிழகத்திலுள்ள ஊனமுற்றவர்களில் கல்வியறிவை விளக்குகின்றன :

ஊனமுற்றவர்களின் கல்வி நிலைமை

| வ. எண். (1) | கல்வி நிலைமை (2) | எண்ணிக்கை (3) | விழுக்காடு (சதவிகிதம்) (4) |
|---|---|---|---|
| 1. | எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ... ... | 1,62,315 | 69.3 |
| 2. | முறையாகப் பள்ளிக்கூடம் செல்லாமலேயே, சொந்த முயற்சியினால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ... | 13,709 | 5.8 |
| 3. | பள்ளிக்கூடக் கல்வி பெற்றவர்கள் : | | |
| | (1) 1 முதல் 5 வகுப்பு வரை ... ... | 35,312 | 15.1 |
| | (2) 6 முதல் 8 வகுப்பு வரை ... ... | 13,313 | 5.7 |
| | (3) 9 முதல் 11 வகுப்பு வரை ... ... | 7,237 | 3.1 |
| 4. | பள்ளி இறுதித் தேர்வு நிலைக்கு மேல் படித்தவர்கள் ... | 2,387 | 1.0 |
| 5. | மொத்தத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ... | 71,998 | 30.7 |

## வேலை வாய்ப்பு

ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு, பொதுவாக மாநில மக்களுக்குள்ள சராசரி வேலை வாய்ப்பைவிட மிகவும் குறைவு! ஊனமுற்றவர்களில் ஏறத்தாழ 1.8 சத விகிதத்தினர் மட்டுமே நிலையான அடிப்படையிலும், 13.9 சதவிகிதத்தினர் நாட் கூலி அடிப்படையிலும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். மீதமுள்ள 84.3 சத விகிதத்தினர் வேலை வாய்ப்பு இல்லாமலேயே உள்ளனர் என்பதைப் பின்கண்ட அட்டவணை விளக்குகிறது.



| வ.எண். (1) | வேலைவாய்ப்புத் தன்மை (2) | எண்ணிக்கை (3) | விழுக்காடு (சதவிகிதம்) (4) |
|---|---|---|---|
| 1. | வேலை வாய்ப்பு அற்றவர்கள் ... ... | 1,97,722 | 84.3 |
| 2. | நிலையான அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் | 3,987 | 1.8 |
| 3. | நாட்கூலி அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் | 32,604 | 13.9 |
| | மொத்தம் ... ... ... | 2,34,313 | 100.00 |



வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்கள் 16 முதல் 50 வயதிற்குட்பட்டவர்களே என்பது குறிப்பிடத் தக்கது.

## பொருளாதார நிலைமை

ஊனமுற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவும், வேலை வாய்ப்பு இல்லாதவர்களாகவும் இருப்பதால், ஊனமுற்றவர்களின் பொருளாதார நிலைமை மிகவும் குறைந்ததாகவே உள்ளது!

நிலையான அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளவர்கள் கூட, பெருந் தொகையை ஊதியமாக ஈட்டவில்லை! அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் திங்கள்தோறும் 100 ரூபாய்க்குக் குறைவாகவே வருவாய் பெறுகின்றனர். ஐந்தில் ஒரு பங்கினர் திங்கள் தோறும் 100 ரூபாய்க்கு மேலும் 200 ரூபாய்க்குக் கீழும் உள்ள நிலையில் சம்பாதிக்கின்றனர்.

தமிழகத்திலுள்ள ஊனமுற்றவர்களில் நிலையான அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளவர்களின் வருவாய் நிலைமையைப் பின்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம் :

| வ. எண். (1) | திங்கள் வருவாய் (2) | எண்ணிக்கை (3) | விழுக்காடு (4) |
|---|---|---|---|
| 1. | 100 ரூபாய்க்குக் குறைவு | 2,490 | 62.5 |
| 2. | 100 முதல் 200 ... | 863 | 21.6 |
| 3. | 200 முதல் 300 ... | 422 | 10.6 |
| 4. | 300 முதல் 500 ... | 159 | 4.0 |
| 5. | 500 மற்றும் அதற்குமேல் | 53 | 1.3 |
| | மொத்தம் ... | 3,987 | 100.00 |

## குடும்பத் தலைவர்களின் தொழில்

ஊனமுற்றவர்களுக்குத்தான் வருவாய் ஈட்டும் வாய்ப்புக் குறைவென்றாலும், அவர்கள் வாழும் குடும்பத்தின் தலைவர்களுக்காவது நல்ல வருவாய் தேடும் வாய்ப்பு இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை!

ஊனமுற்றவர்களுடைய குடும்பத் தலைவர்களில் பாதி பேர் நாட்கூலிகளாகவே உள்ளனர். மிகக் குறைந்த வருவாய்த் தொகுதியினரிடையேயும், சமுதாயத்தின் அடி மட்டத்தில் உள்ள மக்களிடையேயும்தான் ஊனம் ஏற்படும் விழுக்காடு மிகவும் அதிகமாக உள்ளது! இந் நிலைமைக்குக் காரணம் பொதுவாக மிகக் குறைந்த வருவாய்த் தொகுதியைச் சார்ந்த மக்கள் தொகையே மற்ற வகையைச் சார்ந்த மக்கள் தொகையைக் காட்டிலும் மிக மிக அதிகமாக இருப்பதும், மிக மிகக் குறைந்த வருவாய் பெறுபவர்கள் போதிய மருத்துவ வசதிகளைப் பெற முடியாமல் இருப்பதுமே என்று கூறலாம்.

ஊனமுற்றவர்களுடைய குடும்பத் தலைவர்களின் தொழில் வகை பின்கண்டவாறு உள்ளது :

| வ. எண். (1) | தொழில் வகை (2) | எண்ணிக்கை (3) | விழுக்காடு (4) |
|---|---|---|---|
| 1. | நிலமற்ற தொழிலாளிகள் | 27,586 | 11.7 |
| 2. | குத்தகைச் சாகுபடியாளர்கள் | 8,097 | 3.5 |
| 3. | பயிர்த் தொழில் செய்பவர்கள் ... | 48,122 | 20.5 |
| 4. | வியாபாரிகள் ... | 6,823 | 2.9 |
| 5. | நிலையான அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளவர்கள் ... | 14,700 | 6.3 |
| 6. | நாட்கூலி அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளவர்கள் ... | 76,912 | 32.8 |
| 7. | இதர வகையினர் ... | 40,325 | 17.2 |
| 8. | வகைப்படுத்தப்படாதவர்கள் ... | 11,748 | 5.1 |
| | மொத்தம் ... | 2,34,313 | 100.00 |

மேற்கண்டவாறு பல்வேறு வகைகளில் தொழில் புரியும் ஊனமுற்றவர்களது குடும்பத் தலைவர்களில் ஏறத்தாழ 90 சத விகிதத்தினர் திங்கள் தோறும் 200 ரூபாய்க்குக் குறைவாகவே சம்பாதிக்கின்றார்கள். அவ்வாறு சம்பாதிக்கின்றவர்களில் ஏறத்தாழ 75 சத விகிதத்தினர் திங்கள் தோறும் 100 ரூபாய்க்குக் குறைவாகவே சம்பாதிக்கின்றார்கள் என்பதைப் பின்கண்ட அட்டவணை விளக்குகிறது :

ஊனமுற்றவர்களுடைய குடும்பத் தலைவர்களின் வருவாய் நிலைமை

| வ. எண். (1) | திங்கள் வருவாய்த் தொகுதி (2) | எண்ணிக்கை (3) | விழுக்காடு (4) |
|---|---|---|---|
| 1. | 100 ரூபாய்க்குக் குறைவு | 1,18,002 | 76.0 |
| 2. | 100 முதல் 200 ரூபாய் வரை ... | 30,957 | 13.2 |
| 3. | 200 முதல் 300 ரூபாய் வரை ... | 9,724 | 4.1 |
| 4. | 300 முதல் 500 ரூபாய் வரை ... | 3,188 | 1.4 |
| 5. | 500 ரூபாய்க்கு மேல் ... | 1,476 | 0.6 |
| 6. | வகைப்படுத்தாதது ... | 10,968 | 4.7 |
| | மொத்தம் ... | 2,34,313 | 100.00 |

இப்படிப்பட்ட நிலையில் வாழும் ஊனமுற்றவா களுக்கு, மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டத்தைத் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாளான 3—6—1974 அன்று துவக்கிடவிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுத் திட்டம் துவக்கப்படவிருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் ஏறத்தாழ 25,000 ஊனமுற்றவர்கள் புதுவாழ்வு பெறுவார்கள்!

ஊனமுற்றவர்கள் மறுவாழ்வு நிதிக்காக விரைவில் ஒரு சிறப்புப் பரிசுச் சீட்டு குலுக்கல் (Special Raffle) நடைபெறவிருக்கிறது. மேலும் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படும்!

தமிழகத்தில் 4 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆளுக்கு 25 காசு வீதம், தவறாமல் நிதி அளித்தால்கூட வெகு எளிதில் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக ஒரு கோடி ரூபாய் சேர்ந்துவிடும்!

எனவே, ''ஏன் எடுத்தோம் இந்த ஜென்மம்?'' என்று எண்ணி ஏங்கித் தவிக்கும் ''காணார், கேளார், கால் முடப்பட்டோர், பேணுநர் இல்லோர்'' ஆகிய ஊனமுற்றவர்களுக்குப் புது வாழ்வு தருவதற்காக மனமுவந்து தாராளமாக நிதி உதவி செய்வது பொது மக்களின் கடமை மட்டுமல்ல, தமிழ்நாடு அரசின் மனிதாபிமானத் திட்டத்திற்கு உதவும் தொண்டும் ஆகும்!

—ஆர். எம்.


*** அதிசய நீர் ஊற்று நிபுணர் ***

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும்; அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விபரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2 : 3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு 20 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**
(Ex. Member of the British Society of Dowers, London.)
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் — கோயமுத்தூர்-6
தொலைபேசி எண் 31912.
ADVT




# வீராணம் திட்டம்—அடுத்த கட்டம்

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவை நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலனுக்கு உயர்த்தும் நோக்கமுடைய வீராணம் திட்டம் பெரியதோர் திட்டமாகும்.

வீராணம திட்டத்தின் முதற்கட்டப் பணி, நிறைவேற்றப்படுவதற்காக 4-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இப் பணி, 5-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் முதற் கட்டப் பணியை நிறைவேற்றுவதன் மூலம், மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் கூடுதலாகும். 1981-ல் மக்கள் தொகை 26 இலட்சமாக இருக்கும் என்ற கணக்கின் அடிப்படையில் பார்த்தால் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 40 காலன் நீர் வீட்டுப் பயனுக்குத் தேவைப்படுமென்ற கணக்கில் மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் காலன் நீர் தேவைப்படுமென்று மதிப்பிடப்படுகிறது. வீராணம் திட்டத்தின் முதற்கட்டப் பணி முடிக்கப்பட்ட பிறகுங்கூட மாநகருக்கு நாள் ஒன்றுக்கு கிடைக்கும் என மதிப்பிடப்படும் நீரின் அளவு 100 மில்லியன் காலனேயாகும். எனவே, நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் காலன் நீர் மேலும் தேவைப்படும். ஆதலால் வீராணம் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இப் பணியை மேற்கொள்வதன் மூலம் மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் கூடுதலாகும். வீராணம் திட்டத்தின் முதற்கட்டப் பணிக்கு ஒப்புதல் அளிக்கையில், திட்ட ஆணைக்குழு, இத் திட்டத்தின் இரண்டாவதுகட்டப் பணி பின்னர் ஒரு நாள் குறித்து மேற்கொள்ளப்படலாமென்று கருத்துத் தெரிவித்துள்ளது.






# அறிஞர் அண்ணா நகர்

ஏழை எளிய மக்கள்-நடுத்தரக் குடும்பத்தினர்-அரசு அலுவலகங்களில் பணியாற்றுபவர் முதலானோர்க்குக் குறைந்த வாடகையில் வீடுகள்-மாடிக் குடியிருப்புக்கள் கட்டித் தருதல், வீட்டுமனைகள் ஒதுக்கிடுதல், தவணை முறையில் வீடுகள், மாடிக்குடியிருப்புகளை உருவாக்கித் தருதல் போன்ற பணிகளைச் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது வீட்டு வசதி வாரியம்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளோடு இணைந்த குடிநீர் வசதி, மின்வசதி போன்றவைகளைக் கிடைத்திடச் செய்வதில் தீவிரக் கவனம் காட்டி வருகின்ற தமிழக அரசு, வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாகப் பல குடியிருப்புப் பகுதிகளை அமைத்தும் புதிய நகர்ப்புறங்களை உருவாக்கியும், உருவாக்கிக் கொண்டும், வருகின்றது.

இவ்வாறு உருவாக்கியுள்ள பல்வேறு நகர்களைப் பற்றி இந்தப் பகுதி விளக்குகிறது. முதலாவதாக, அறிஞர் அண்ணா நகர் பற்றியும்-அதன் அமைப்புப் பற்றியும் அறிந்து கொள்வோமா?

அறிஞர் அண்ணா நகர்-தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டுள்ள நகரமைப்புத் திட்டங்களுள் மிகப் பெரிய திட்டமாக அமைந்துகொண்டிருக்கும் நகர். இந்நகர் 1,330 ஏக்கர் நிலப் பரப்புக்களை உள்ளடக்கியதாகும். இங்கே-மக்களின் தேவை-விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் வீட்டுமனைகள் ஒதுக்கப்படுகின்றன. பொதுவாக வீட்டுமனைகள் அரை கிரவுண்டு முதல் 2 கிரவுண்டுகள் வரையில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு ஏக்கர் பரப்பில் சுமார் 10 முதல் 12 குடும்பங்கள் வரை வாழ்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறைந்த வருமானமுள்ளவர்கள் (L.I.G.) நடுத்தர வருமானம் உள்ளவர்கள் (M.I.G.) போன்றவர்களுக்கென 5,254 குடியிருப்புகளும், கைவினைஞர்களுக்கென (Artisian Plots) 1,663 வீட்டு மனைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நகரமைப்புத் திட்டத்திற்கு 1972-73-ஆம் ஆண்டில் ரூபாய் 51.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நகரமைப்புத் திட்டம் தீட்டும்பொழுதே வருங்காலத்தின் சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு தான் தீட்டப்பட்டது. 60 மைல்கள் நீளத்தில் சுற்றுப்புறச் சாலைகள் இருப்பதெனக் கணக்கிடப்பட்டு, இதுவரை இவ்வகைக்கெனச் சுமார் 250 ஏக்கர் நிலங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. குடியிருப்புப் பகுதிகளுக்கென 740 ஏக்கர் நிலப்பரப்பும் ஏனைய இன்றியமையாத் தேவைகளுக்கென மீதமுள்ளவையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

குடிநீர்-மனிதனின் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்றாக விளங்குகிறது. ஒரு பகுதியில் குடிநீர் போதிய அளவில் கிடைக்காவிட்டால், பெரும்பாலும் அப்பகுதியில் வாழ யாரும் விரும்புவதில்லை. எனவே இப்பகுதிக்குக் குடிநீர் வசதியை அளித்திடுவதில் வீட்டுவசதி வாரியம் முனைந்து செயலாற்றுகிறது. மேலும் மக்கள் சுகாதாரத்துடன் வாழ்வதற்கு ஏற்றவகையில் கழிவு நீர்களை அகற்றிடுவதிலும் மிகுந்த அக்கறை காட்டிவருகிறது.

சென்னை மாநகராட்சி எல்லைப் பகுதிக்குள் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பும், வெளிப்பகுதியில் மீதியும் உள்ளன. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குத் தற்பொழுது சென்னை மாநகராட்சி, குடிநீர் வசதியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. VIII-A பகுதியின் வளர்ச்சி வேலைகள் முடிவுற்றவுடனும், வடிநீர் குழாய் அமைப்பு வேலைகள் நிறைவு பெற்றவுடனும் நகரின் எல்லாப் பகுதிக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படும். அதேநேரத்தில் இடைக்கால அளவாகத் தற்பொழுது நாளொன்றுக்கு 2 மணி என்ற அளவில் சென்னை மாநகராட்சி, நகரின் அனைத்துப் பகுதிக்கும் குடிநீர் அளித்து வருகிறது.

நகரின் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு வீட்டு

வசதி வாரியமே குடிநீர் அளித்திடும் பொறுப்பினை ஏற்றுள்ளது. இந்நகருக்கு வழங்கப்படுகின்ற குடிநீர் இங்குள்ள அடிநிலத்திலிருந்து எடுக்கப்படுகின்ற நீரேயாகும். நாளொன்றுக்குச் சுமார் 8 இலட்சம் காலன் தண்ணீர் இந்நகருக்குத் தேவைப்படுவதால் ஏராளமான கிணறுகள் தோண்டப்பெற்று வருகின்றன. இப்பணிகள் 1974-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களுக்குள் முழுமைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று நீர்வாங்கு நிலையங்களில் (Pumping Station) 6 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை அளவுகளுள்ள மாறுபட்ட வடிநீர்க் குழாய் அமைப்பு வேலைகள் முடிவுற்றதும், இந்நகரைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் வடிகால் வசதிகளின் பணி அனேகமாக முடிவு பெறும். கழிவுநீர், நீர்வாங்கு நிலையங்களிலிருந்து 18 அங்குலம் மற்றும் 27 அங்குலம் விட்டமுள்ள குழாய்களின் வாயிலாகக் கோயம்பேட்டிலுள்ள மாநகராட்சி வடிகால் இடத்திற்கு வெளியேற்றப்படும். தற்பொழுது அவசரத் தேவைக்கென, இடைக்கால அளவாக சென்னை நகர் கூவம் நதிக்கரையில் சிறுசிறு குளங்களில் தேக்குவதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கவனித்து வருகின்றது. இப்பணியின் வளர்ச்சி நிலை, குழாய்களின் பற்றுக் குறையால் பெரிதும் தடைப்படுகிறது. எனவே இதனுடைய முழுப்பணி முடிவு பெறுவது விருத்தாசலம் டான்சி நிறுவனத்திலிருந்து குழாய்கள் வினியோகிப்பதைப் பொறுத்துள்ளது.

இப்பகுதிவாழ்மக்கள் நோய் நொடியின்றி நலமான வாழ்வினை நடத்திடும் வகையில், பல தனியார் மருத்துவ நிலையங்கள் அமைத்திடுவதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவைகளுக்குப் புற எல்லையாக அறிஞர் அண்ணா மருத்துவமனை அமைந்துள்ளது. இப்பகுதியிலிருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவமனை 3 கி.மீ. தூரத்திலும், அரசினர் பொதுமருத்துவமனை 8.5 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளன.

எல்லாத் தரப்பினரும் மகிழத்தக்க வகையில் அழகிய பூங்காக்கள் அமைத்திட-சிறுவர்-இளைஞர்களுக்குப் பயனளிக்கின்ற விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்திட-அனைவரும் பயன்படுத்தக்கூடிய சமூகநலக் கூடங்களை உருவாக்கிட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விஸ்வரேஸ்வரய்யா கோபுரத்தைச் சுற்றியுள்ள இடங்களை விளையாட்டரங்கம், நீச்சல்குளம் போன்ற மனமகிழ் மையமாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. காவல்நிலையம், அஞ்சல் நிலையம், பெட்ரோல் பங்க், கடைகள் போன்றவைகளுக்கான இடங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பெற்று, அவைகள் தேவையான காலத்தில் செயல்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்காலப் போக்குவரத்துக்களை மனத்திற் கொண்டு சாலை அமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பகுதியில் சுமார் 30' முதல் 120' அகலத்தில் சாலைகள் அமைக்கப்படுகின்றன. குடிநீர் வசதி, வடிகால் வசதி போன்றவைகள் முடிவுற்ற உடனேயே நல்ல போக்குவரத்துக்கு ஏற்ற அகலச் சாலைகள் அமைப்பதில் தீவிரக் கவனம் காட்டப்படுகின்றது. அநேகமாக சாலை அமைப்புப் பணிகள் முழுதும் 1975-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிவுற்றுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 60 மைல் நீளத்தில் மாறுபட்ட போக்குவரத்துச் சாலைகள் அமைத்திட திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்நகரில் மின்வசதியைப் பெருக்கி, ஒளிவெள்ளம் மிகுந்த ஒரு நகராக மாற்றிட சென்னை மாநகராட்சி, திட்டப் பகுதிகளிலுள்ள I, II பிரிவுகளுக்குத் தெரு விளக்குகளை அமைத்திடும் பணியினை மேற்கொண்டுள்ளது. நகர் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் மின் விளக்குகள் பொறுப்பினைத் தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்றுக்கொண்டு சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றது.

இந்தியாவிலேயே சிறந்த சிறப்பங்காடியாக விளங்கிடும் சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடியின் கிளை ஒன்று இந்நகரில் 23—3—1974-ல் துவக்கப்பெற்று இந்நகர் மக்களுக்குத் தேவையான தரமான பொருட்களை வழங்குவதில் மிகுந்த அக்கறை காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நகரின் அழகுக்கு அழகூட்டுவது நிழல்தரும் மரங்கள் நிறைந்த சாலைகளாகும். எனவேதான் முக்கிய சாலைகளின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்கள் நடப்பெற்று, அவை சிறந்த முறையில் பேணி வளர்க்கப்படுகின்றன. தற்பொழுது சாலை ஓரங்களில் உருவாக்கப் பெற்றுள்ள மரங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 6,550 ஆகும். முக்கிய சாலைகள் தவிர சிறிய சாலைகளிலும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவுற்ற பின்னர் இங்கே ஏறத்தாழ 8,000 மரங்கள்வரை இருக்கும்.

இவ்வாறு மக்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளில் ஒன்றான வீட்டு வசதியை அளித்திட எல்லா மாநிலத்தாரும் போற்றும் வண்ணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நாளும் நற்பணியாற்றி வருவதைப் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

—ஆயிரம்.


தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை—'கேர்'

தமிழ்நாடு நிறுவனம் புதுக்குடியிருப்பு மக்களுக்கான

**சத்துணவுக் கல்வித் திட்டம்**

**நமது குறிக்கோள்**




1. நமது குழந்தைகள் நல்ல உடல் நலத்துடன் நூறாண்டுக் காலம் வாழும் வகையில் அவர்களை வளர்க்க வேண்டும்.

2. அதற்காகக் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், கைக்குழந்தைகள் ஆகியோர்களுடைய நலத்தைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும்.

3. குறிப்பாக, கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், கைக்குழந்தை ஆகியவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவை அளிக்க வேண்டும்.

4. அவர்களுக்குச் சத்துணவை அளிப்பதுடன் அவர்களுடைய மருத்துவத் தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டும்.

5. இந்த நோக்கங்களுடன் உருவாக்கியிருக்கும் சத்துணவுக் கல்வித் திட்டத்துக்கு நமது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டும்.








ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



கள்-அவர்கள் ஆற்றியிருக்கும் பணிகள்-உரைகள் இவைகள் பற்றிய தொகுப்புக்களையெல்லாம் என்னிடம் எடுத்துக் காட்டினார்கள். அவைகளை ஊன்றிக் கவனித்தேன். ஒன்றிரண்டை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டேன்.

தமிழ்ச் சங்கத்தினுடைய பண்பு எவை எவை என்று சங்கத் தலைவர் அவர்கள் மிக அழகாகக் கோடிட்டுக் காட்டினார்கள். இன்று புதிய கட்டடத்துக்கால் அடிக்கல் நாட்டு விழா இங்கு நடந்தது. அடிக்கல் நாட்டாமலே கட்டடம் எழும்பியிருந்தும் என் பெயரும் இருக்க வேண்டும் என்று தமிழர்களாகிய நீங்கள் இந்தத் தமிழ்ச் சங்கத்தின் கட்டடத்துக்கு ஒரு தமிழன்தான் அடிக்கல் நாட்ட வேண்டும் என்று எண்ணி, அது ஒரு சம்பிரதாயமாக இருந்தாலும் பரவாயில்லை என்று என்னை அழைத்து, அடிக்கல் நாட்ட வைத்திருக்கிறீர்கள். ஒரு வேளை இது எந்தக் கோரிக்கைக்கு அடிக்கல்லோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இந்த அடிக்கல் நாட்டு விழா மூலம் எழும்ப இருக்கின்ற கட்டடத்தில் நூலகம், படிப்பகம் போன்ற மிக இன்றியமையாத இடங்கள் அமைவதைக் கண்டு மெத்த மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்ச் சங்கம் ஆற்றுகிற தலையாய தொண்டு, அது தமிழ் மொழியை வளர்க்கிறதோ, இல்லையோ, தமிழ் நூல்களைப் பரப்புகிறதோ இல்லையோ - அது வெளி மாநிலங்களிலே இருக்கின்ற தமிழர்களை ஒன்றுபடுத்துகிறது என்பது மிக மிகப் பெருமையான காரியமாகும்.

ஏன் தமிழர்கள் நிறைவாக இருக்கும் போது ஒற்றுமையாக இல்லையா என்றால், ஒருவேளை குறைவாக இருக்கும்போது தான் தமிழர்கள் ஒற்றுமை பலப்படுவதைக் காணும்போது தான் பேருவகை அடைந்தேன்.

தமிழை வளர்க்கின்ற பணி இன்றைக்குத் தமிழகத்திலும் நடக்கிறது. தமிழை வளர்ப்பதா? அது வளர்ந்த மொழியல்லவா? என்ற கேள்வியும் இன்று எழாமல் இல்லை. எந்த மொழியையும் வளர்ந்துவிட்ட மொழி என்று விட்டுவிட இயலாது. காலத்திற்கேற்ப விஞ்ஞானப் புதுமைகள் உருவாக உருவாக, அவைகளுக்கேற்பச் சொற்கள் படைக்கப்பட வேண்டும். அப்படிச் சொற்களைப் படைக்காமலேயே, 'தமிழ், வளர்ந்த மொழி' என்று கூறிக்கொண்டு இருப்பதில் பயனில்லை.

''தினமணி கதிர்'' ஆசிரியர் நண்பர் சாவி இங்கு வந்திருக்கிறார்கள். அவர் எனது பிறந்த நாளையொட்டி 50 கேள்விகள் அனுப்பி அதற்குப் பதிலைக் கேட்டு அனுப்பியிருந்தார்கள். 'தமிழில் எல்லாம் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே அது பற்றி உங்கள் கருத்தென்ன?' என்று அவர்கள் கேட்டிருந்த கேள்விக்கு நான் எழுதி அனுப்பிய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்; 'தமிழில் எல்லாம் இருக்கிறது என்று சொல்வது ஏனென்றால், சிலபேர் நமது தமிழில் எதுவுமே இல்லை என்று சொல்கிறார்கள். இது அதைவிட ஆயிரம் மடங்கு மேலானது.

இன்றைக்கு விஞ்ஞானச் சொல்லாக உலகெங்கும் விரிவடைந்திருக்கிற 'ஆட்டம்' என்பதற்கு அணு என்ற சொல் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழிலே வழங்கப்பட்டிருக்கிறது.

திருக்குறளைப் பற்றிப் பாடிய ஒரு புலவர் 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று பாடியிருந்தார். அதற்கு மாறாகப் பாடிய ஔவை-கடுகைத் துளைத்து அல்ல -அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று பாடியதிலிருந்தே அணுவைப் பற்றிய அறிவு - பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்திலே இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆனால், தமிழர்களுக்குள்ள குறைபாடு ஏதாவது ஒன்று நடந்தால் ஏற்கெனவே இது இங்கே இருந்தது என்று மன நிம்மதி அடைவதைத் தவிர நாமே ஒன்றைக் கண்டுபிடித்தோம்-உருவாக்கினோம் உலகத்திற்கு அறிமுகப்படுத்தினோம் என்று அறிவிப்பதற்கேற்ப ஆர்வத்தைக் காட்டுவதில்லை.

அதற்குப் பதிலாக, விமானம் பறக்கிறதா, அது இராமாயண காலத்திலேயே பறந்தது-இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு பறந்தபோது விமானத்திலே தான் பறந்தான். சீவக சிந்தாமணியிலே மயில் பொறி பறக்கவில்லையா, என்கிறார்கள்.

பயங்கரமான குண்டுகளைக் கண்டுபிடித்தால்,உடனே இவையெல்லாம் நமது தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள சமஸ்கிருத ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டு செய்யப்பட்டவை. வெள்ளைக்காரன் அவற்றைத திருடிக் கொண்டு போய்த் தான் கண்டு பிடித்தான்' என்கிறார்கள்.

திருக்குறளுக்கும் மற்ற தமிழ் இலக்கியங்களுக்கும் ஒரு துறை தனியாக உள்ளது போல இசுலாமிய தமிழ் ஆராய்ச்சிக்குத் தனித்துறை அமையத் தமிழகப் பல்கலைக் கழகங்களில் ஒன்றுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும். அரசு, முதலிலே அடையாள மானியமாகப் பத்தாயிரம் ரூபாயை அதற்காக ஒதுக்கும்.

—முதல்வர் கலைஞர்

(இசுலாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில்)



திருடிக்கொண்டு போகும் வரை சும்மா இருந்ததும் ஏமாளித்தனம்; மற்றவர்கள் கவனிப்பதற்கு முன்பு நாம் அதுபற்றிக் கவனிக்காமல் இருந்தது அதைவிட ஏமாளித்தனம்-அக்கறையற்ற தன்மை-இவைகளையெல்லாம் தமிழர்கள் உணர்ந்தாக வேண்டும்.

தமிழிலே இருக்கிற இலக்கியச் சிறப்பு வேறு மொழிகளிலே இருக்கிறதா என்கிற சந்தேகம் எனக்குண்டு! மற்ற மொழிகளை எல்லாம் அந்த அளவுக்குப் படிக்காதவன் என்றாலும் படித்தறிந்த பாரதி சொல்கிறான்! 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதி சொல்கிறான்.



அந்த இனிதான மொழி-இலக்கியமொழி-காவிய நயம் மிகுந்த மொழி தொன்மைச் சிறப்பு வாய்ந்த மொழி, தமிழ் மொழியாகும்.

தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் கன்னட மொழியைப் பற்றிக் கூறிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கண்டு நிகர் கன்னடம்-என்று 'கற்கண்டுக்கு நிகராகக் கன்னட மொழி' என்று குறிப்பிடுகிறார்

ஆகவே ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு வகையிலே சிறப்புடைய மொழிதான். ஒவ்வொரு மொழியின் வளமும் அந்த மொழியைக் கையாளுகின்ற சிறப்பும் அதிலிருக்கின்ற நயங்களைப் பற்றியும் கூறுகின்றோம். மொழி வளர்ந்துவிட்ட காலத்திலே இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நிலவில் மனிதன் உலவும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எங்கோ யாரோ பாடுகிறார்கள், இசைக்கருவியை மீட்டுகிறார்கள் என்றால் நம்முடைய கையிலே இருக்கின்ற சிறிய வானொலிப் பெட்டியில் ஒரு நூல் இழை அசைத்தால் இலண்டனிலிருந்தும், இன்னொரு நூலிழை அசைத்தால் இலங்கையிலிருந்தும் கேட்கிறோம்; அப்படிப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் வளர்ந்திருக்கின்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ் மொழியிலுள்ள சொற்களை வைத்துக் கொண்டு விளையாடுகிறோம் - சொல்லாடல் நடத்துகிறோம். சொல்நயமும் கவிநயமும் கூறுகிறோம்.

இவைகளெல்லாம் மொழி வளர்ந்து வளர்ந்து நாகரிகம் கலாச்சாரம் பண்பாடுகளெல்லாம் வளர்ந்துவிட்ட நிலையில் இப்படியெல்லாம் நயம்பட உரைப்பது எளிதாக இருக்கின்றது. ஆனால் ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு -பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கவிதை புனைந்த நம்முடைய புலவர்கள் எவ்வளவு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

'குறுந்தொகை' என்ற நூலை அண்மையில் உதகைக்குச் சென்றபோதும் படித்தேன்.

அதிலே படித்த ஒரு பாடலைப் பற்றிக் கோவைக் கூட்டத்தில் நான் அரசியலுக்காகப் பயன்படுத்திப் பேசி இருக்கிறேன்.

இன்று இந்தியாவிலுள்ள மாநில முதல்வர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள்?

குறுந்தொகையிலே இருக்கிற ஓர் உதாரணத்தை வைத்துச் சொன்னேன்.

கையில்லா ஊமையன் ; பாறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட வெண்ணெய் வெய்யிலில் உருகும்போது அந்தக் கையில்லா ஊமையன் வெண்ணெய் வழிந்தோடுவதைத் தடுக்கவும் முடியாமல் அது பற்றி எடுத்துச் சொல்ல வழியுமில்லாமல் எப்படித் தவிக்கிறானோ அப்படி மாநில மக்கள் கஷ்டப்படுகிற நேரத்தில் முதலமைச்சர்கள் அதிகாரமில்லாமல் கையில்லா ஊமையன் நிலையில் இருப்பதற்குக் குறுந்தொகைப் பாடலை உதாரணமாகக் கூறினேன்.

அதே குறுந்தொகையில் எவ்வளவு அழகான உவமைகள் கூறப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால்........!

ஒரு காதலி, காதலன் தன்னைப் பிரிந்துவிட்ட காரணத்தால் தூண்டிலிலிருந்து கரையில் வீழ்த்தப்பட்டுத் துடிக்கின்ற மீனைப்போல் துடிப்பதாக ஒரே வரியில் சொல்லி இருக்கலாம்.

ஆனால் புலவன் அந்த மீன் கரையில் துடிப்பதைப் பற்றி எவ்வளவு அழகான உவமையோடு பொருத்துகிறான் என்று பார்க்க வேண்டும்.

காட்டு யானையொன்று உயர்ந்து நிற்கின்ற மூங்கில் காட்டில் இளம் மூங்கிலைப் பிடித்து அசைத்துத் தன்னுடைய துதிக்கையால் சுழற்றுகிறதாம். அப்போது அந்தக் கானகத்து வேடர், யானையை விரட்ட கவண் கல்லெறிகின்றனர். அந்தக் கவண் கல்,யானையின் மீது பட்டதும் யானை தன்னுடைய துதிக்கையில் பிடித்த இளம் மூங்கில் நுனியை விட்டுவிடுகிறது. அந்த மூங்கில் நுனி எப்படி வளைகிறது என்றால் தூண்டிலில் மீன் அகப்பட்டதும் அதை வேகமாக இழுக்கும்போது அது எப்படித் தரையில் போகிறதோ அதுபோல், அந்த மூங்கில்தரையில் வேகமாக விழுந்தது என்கிறான். எவ்வளவு அழகான உவமை!

'கலித்தொகை'யில் ஒரு பாடல்; அதை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும் உங்களுக்கு?!

''சாகுந்தலத்தி'லே காளிதாசன் கோடையின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடுகிறான்.

கோடை வெய்யில்-வயல்களெல்லாம் வெடித்துக் கிடக்கின்றன. ஒரே பொட்டல் காடாக இருக்கிறது. எங்கும் ஊர்ந்து செல்ல முடியாமல் தன்னுடைய வால் நுனியை மாத்திரம் பூமியிலே ஊன்றிக்

தமிழ்க்காவலர்' என்னும் பட்டத்தைப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்திடமிருந்து முதல்வர் பெறுகிறார்



அரசு-மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது



தமிழ்நாடு சிமெண்ட்ஸ்



மலர்-4. தமிழரசு இதழ்-24.

16 - 6 -1974

# இலக்கியத் தமிழில் எளிமை வேண்டும்!

**முதல்வர் கலைஞர்**

கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூர் நகரத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் இந்தத் தமிழ்ச்சங்கம் என்னை அழைத்து வரவழைத்துப் பாராட்டிப் பட்டமும் சூட்டிப் போற்றியமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வரலாறு எத்தகைய எல்லைகளைக் கொண்டது என்கின்ற ஆராய்ச்சிக்கு இப்போது போகத் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு உரிய மாநிலத்தினுடைய எல்லைக்கு ஒரு வரையறை .குறிக்கப்பட்டிருந்தாலும் தமிழ்மொழிக்கு அந்த வரையறை இல்லை என்பதை எடுத்துக் காட்டத்தான் பெங்களூரில் - பம்பாயில் - கல்கத்தாவில்-லண்டன் மாநகரில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன. பாரீஸ் மாநகரத்திலும் தமிழ்மாநாடு நடைபெறுகிறது —இலங்கையிலும் தமிழ் மாநாடு நடைபெறுகிறது, என்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் இன்றைக்குக் காணுகின்றோம்.

ஆகவே, தமிழர்கள் கடல் கடந்து சென்றாலும், மாநிலம் விட்டு மாநிலம் சென்றாலும், தங்களுடைய மொழியை அவர்கள் மறக்காமல் இருக்கிறார்கள் என்று அறியும்போது நாம் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் அவர்கள் சென்றிருக்கிற மாநிலத்தின் மொழிக்கு மரியாதை தருவதிலும் அந்த மாநில மக்களோடு நட்புறவு கொள்வதிலும் தமிழர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

தமிழனுக்கு உரிய தனிப் பண்புகளில் அடக்கமாக நடந்து கொள்வது என்பதும்

இங்கு என்னை அதிகமாகப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறீர்கள். இது எதைக் காட்டுகிறது? இந்தப் பாராட்டுகள் எல்லாம் -என்னை 'அதற்குத் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்' என்று ஊக்கப்படுத்துவதற்காகத்தான் வழங்கியிருக்கிறீர்கள் என்று தான் நான் எடுத்துக் கொள்கிறேனே அல்லாமல், 'ஆகா! இவ்வளவு சிறப்புக்கு உரியவனாக இருக்கின்றேனா' என்கின்ற அகந்தையும் ஆணவமும் என்னை ஆட்கொள்ளவில்லை, இதுவரையிலும் என்னை ஆட்கொண்டதும் இல்லை; இனி ஆட்கொள்ளப் போவதுமில்லை என்பதை மிகுந்த அடக்க உணர்ச்சியோடு அண்ணாவின் வழியில் நின்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மொழியை வளர்த்திடவும் அதனுடைய வல்லமையை உலகெங்கிலும் உணர்த்திடவும் ஆன பணிகளில் அந்த மொழி பேசுகின்ற மக்கள் ஈடுபடுவது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாக நம்முடைய நாட்டில் நடைபெற்று வருகின்ற வரலாறாகும்.

ஒன்றாகும். அடக்கம் என்பது கோழைத்தனத்தின் அறிகுறியல்ல, வீரத்தினுடைய உச்சக்கட்டம் அடக்கம். புகழின் விரிவாக்கம் அடக்கம்!

அந்த வகையிலே தமிழ் வழங்கியிருக்கின்ற அடக்க உணர்வினை நம்மவர் பெற்று, நாட்டின் எந்தப் பகுதியில் எந்த மூலையிலே அவர்கள் இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் மறக்காமல் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

அந்த வகையில் கர்நாடக நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் மக்கள் தமிழ் வளர இந்த மாநில மக்களோடு ஒன்றாயிருந்து நட்புறவு கொண்டு மாநில நலன்களுக்குத் தாங்களும் பாடுபட இதுபோன்ற தமிழ்ச் சங்கங்கள் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

காலையிலே என்னை இந்தச் சங்கத்தவர்கள் சந்தித்தபோது இந்தச் சங்கத்தின் பல்லாண்டுக் கால நிகழ்ச்சிகள்—நடைமுறை

கொண்டு தாங்க முடியாத ஆயாசத்தோடு தன் தலையை மாத்திரம் தூக்கிக்கொண்டு படமெடுத்து நிற்கிறதாம் ஒரு பாம்பு! அந்த அளவுக்கு வெய்யிலின் கொடுமை! நிழலே கிடைக்காமல் தவித்த ஒரு தவளை-அது பாம்பின் நிழலென்று கூடப் பாராது பாம்பின் தலை நிழலில் அந்தத் தவளை உட்கார்ந்திருக்கிறதாம்.

வெய்யிலின் கொடுமையால் தவளைக்கும் பாம்பின் ஆபத்துத் தெரியவில்லை; அந்தப் பாம்புக்கும் தன் இரை கீழே இருக்கிறது என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு வெய்யிலின் கொடுமை!

அதற்கு ஈடாக—அதைவிட ஒருபடி மேலாகக் கலித்தொகையில் ஒருபுலவன் பாடுகின்றான்:

''இன்னிழல் இன்மையால்
வருந்திய மடப்பிணைக்கு
தன்னிழல் கொடுத்ததே கலை'

—பாலைவனத்தில் இனிய நிழலில்லாத காரணத்தால் பெண்மான் வருந்தும்போது ஆண்மான் என்ன செய்கிறதாம்? தன்னிழல் கொடுத்ததாம்! வெய்யிலில் தான் வருந்தும் போதும் தன் மனைவியான பெண்மான் படுத்துறங்கத் தன்னுடைய நிழலைக் கொடுத்தது என்று பாடுகிறான்-இது கலித்தொகையிலே வருகின்ற கோடைக்காலக் காட்சி!

தமிழ்ச் சங்கத்தின் மாடியிலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவப்படம் மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன். திருவள்ளுவரின் திருவுருவப் படத்தையும் பார்த்தேன். இந்த இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது திருக்குறளுக்குக் கடைசியாக எழுதிய பாரதிதாசன் உரை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது! 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற குறளுக்கு அருமையான உரை எழுதுகிறார்.

''தெய்வத்தைக் கூடத் தொழாமல் தன்னுடைய கணவனையே தொழுகின்ற பெண் இருக்கிறாளே அவள் பெய் என்று சொன்னால் உடனே மழை பெய்யும்.'' —இதுதான் இதுவரை திருக்குறளுக்கு உரை எழுதிய எல்லா ஆசிரியர்களும் தந்திருக்கின்ற விளக்கமாகும்.

அந்தக் கருத்து சரி என்றால் திருவள்ளுவர் குற்றவாளியாகிறார்—அல்லது திருவள்ளுவர் குறைக்கு ஆளாகிறார் அல்லது பெண்களால் எதிர்க்கப்படுவார்.

அதைத்தான் பாரதிதாசன் அழகாகச் சொன்னார்.

'பெய்யென்று சொல்லுகிற நேரத்தில் பெய்கின்ற மழையைப் போன்றவள்-தேவையான நேரத்தில் மழை பெய்ய வேண்டும் என்று கருதுகிற நேரத்தில் மழை பொழிந்தால் அந்த மழை எவ்வளவு சிலாக்கியமானதோ அப்படிப்பட்டவள் கணவனைத் தொழுது வணங்கும் பெண்' என்று பாரதிதாசன் கூறினார்.

குறளுக்கு இதுவரை உரை எழுதிய பலரும் எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கிறார்கள்.

திருவள்ளுவரின் சரியான கருத்துக்கு அவர் ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கு வேறு ஒரு குறளால் மறுக்கப்படும் கருத்துக்களை உரையாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆட்சி சரியாக நடைபெறாவிட்டால் பசுமாடே பால் கொடுக்காது-இப்படி ஓர் உரை!

ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

—காவலன் சரியாக ஆட்சி நடத்தாவிட்டால் பசுமாடு பால்கறக்காது — ஆலைகளிலே தொழில்கள் செய்வோர் அந்தத் தொழிலை மறந்து விடுவார்கள் என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன், இட்லர் ஆண்டு கொண்டிருந்தபோது ஜெர்மனியிலிருந்து பசுக்களெல்லாம் பால் கொடுக்கவில்லையா? தவறான ஆட்சி நடக்கிற இடங்களிலெல்லாம் பசுமாடு பால் கறப்பதில்லையா?

'ஆபயன்' என்றால் பசுமாட்டினால் விளையும் பயன் என்று பொருளல்ல! அப்படியானால், 'ஆப்பயன்' என்ற சொல் வந்திருக்க வேண்டும். ஆபயன் என்றால் ஆகவேண்டிய காரியங்கள் என்றுதான் பொருள். ஆகவே, ஆக வேண்டிய காரியங்கள் ஆகாது என்பது தான் சரியான உரை விளக்கம்! இதைப் பாரதிதாசன் விளக்கியிருக்கிறார்.

அப்படி குறட்சிறப்பையும் மற்ற இலக்கியங்களின் சிறப்பையும் கொண்டது தமிழ்மொழி. அப்படிப்பட்ட தமிழ்மொழி எளியோரிடத்திலும் பாமரர்களிடத்திலும் பரவாமலிருப்பதற்கு என்ன காரணம்?

அன்றைக்கு இருந்த தமிழ் இன்று அகராதி வைத்துப் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறது.

புறநானூற்றுப் பாடல்களைப் படித்து அப்படியே புரிந்து கொள்ள முடியுமா? முடியவில்லை. ஏன்? பாமர மக்கள் புரிந்து கொள்ளும் எளிய நடையில் புறநானூற்றுப் பாடல்களைக் கவிதையாக வடித்துத் தந்திருக்கிறேன். இப்படி இலக்கியங்கள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். அந்த முயற்சியில் தமிழின்பால் ஆர்வம் கொண்ட அனைவரும் ஈடுபட்டாக வேண்டும்.

அப்படி எளிமைப்படுத்தப்பட்டால்தான் தமிழன் பழங்காலப் பெருமை – தமிழர்களின் வரலாற்றுப் பெருமை இவைகளெல்லாம் உலகுக்கு அறிவிக்கப்பட முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடத்திலே அமர வேண்டும் என்று விரும்பியதற்குக் காரணமே தமிழ் மரபு காத்திட-பண்பாடு செழித்திட, தமிழ்-மரபு மங்காமல், மறையாமல், ஒளிக்கப்படாமல் மீண்டும் உருவாக்கிட!

அந்தக் கருத்தைச் செயல்படுத்தும் விதத்திலேதான் காவிரிப்பூம்பட்டினத்தில் புதிய பூம்புகாரைத் தமிழக அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சென்னைப் பெருநகரில் செந்நாப்போதார் திருவள்ளுவருக்குப் பல இலட்சம் ரூபாய் செலவில் ஆலயமொன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

இப்படியெல்லாம் தமிழுக்காகப் பாடுபட்டு வரும் தமிழக அரசின் பொறுப்பேற்றுள்ள எளியவனை இந்தத் தமிழ்ச் சங்கத்தினர் அழைத்து தூக்க முடியாத சுமையாகத் 'தமிழ்க் காவலர்' என்ற பட்டத்தை வழங்கி என்னைக் கவுரவித்துள்ள அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(30—5—74 அன்று பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.)








# உளமுற்றோர் உயர்வாழ்வு விழா!

''புயலுக்கிடையே கலம் செலுத்துவதில் மாலுமி ஒருவன் காணுகின்ற பரபரப்பையும் உற்சாகத்தையும் ஒவ்வொரு நாளும் நான் என் பொது வாழ்வில் காணுகிறேன்.

''தமிழ்நாட்டு மக்களுக்காக, அவர் தம் ஒளிமிகு நல்வாழ்வுக்காக எதிர்நீச்சல் போடுவது தான் என் நெஞ்சுக்குச்சுகமாக இருக்கிறது. இந்த உணர்வுடனேயே நான் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் தாயுள்ளம் எனக்குத் துணை நிற்கும் என்று நம்புகிறேன்.''

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாளையொட்டித் தென்னகமெங்கும் 'பொன்விழா' ஜூன் 3-ஆம் நாள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

தமிழகமெங்கும் பல்வேறு இடங்களில் ஏழைகளுக்கு உணவும், இனிப்புகளும் வழங்கப்பட்டன. தமிழக மக்களுக்கு விடுத்த இனிப்பான தமது பிறந்த நாள் செய்தியில் முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினார்கள்:

''என் வாழ்க்கையில் ஐம்பதாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த ஐம்பதில் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டு மக்களோடும் அவர்களுக்காகப் பணியாற்றும் கழக உடன்பிறப்புக்களோடும் அந்தக் கழகத்தின் தலைவர் ஆருயிர் அண்ணா அவர்களோடும் அந்தத் தலைவர்க்குத் தலைவர் அருமைத் தந்தை பெரியார் அவர்களோடும் என்னைப் பிணைத்துக் கொண்டு பயணத்தை நடத்திவிட்டேன். இலட்சியப் பயணம் தொடர்கிறது.


பார்வையற்றோர் சிலர் முதல்வருக்கு மலர்மாலை அணிவித்தார்கள்.

முதல்வர் அவர்களின் இல்லத்தில் அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசை வரிசையாக நின்றிருந்த காட்சியும், மாலைகள் மலைபோல் குவிந்ததையும், ஊனமுற்றோர்களுக்காக உதவ வந்த உள்ளங்களையும் பார்த்தபோது நம் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி நிறைந்தது.

முதல்வர் கலைஞர் பிறந்த நாள் பொன் விழாவையொட்டிச் சென்னையைச் சேர்ந்த செய்தியாளர்கள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

செய்தியாளர்களிடம் முதல்வர் கலைஞர் தெரிவித்ததாவது:

“இன்று காலையில் என் தாய்-தந்தையர் படத்திற்கு மாலையிட்டபோதும், அண்ணா, பெரியார் கல்லறைகளில் மலர் வளையம் வைத்து வணங்கிய போதும் என்னையறியாமல் அழுதுவிட்டேன்.

“எனக்கு ஆறுதல் கூறி, ‘தொடர்ந்து அயராமல் பணியாற்று’ என்பதுபோல் என் தாயும் தந்தையும் அண்ணாவும் பெரியாரும் பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டு மக்களின் உருவத்திலே வந்து இன்று எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன்.

தாயின் பாசத்தை—

தந்தையின் அரவணைப்பை--

அண்ணனின் அன்பை—

ஆசிரியர் ஐயாவின் கண்டிப்பை—

என் பொது வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிப்பேன்.

காலக்கண்ணாடியாக இருக்கின்ற பத்திரிகைகளின் தூதுவர்களாகிய உங்களின் அன்பும் இன்று போல் என்றும் நிலைத்திட வேண்டும் என்றும் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு பிறந்தநாளில் உடல் ஊனமுற்றவர்கள் ஏராளமானவர்கள் நேரில் வந்து என்னை வாழ்த்தியது மிகவும் உருக்கமாகவும்- அவர்களுக்குப் பணியாற்ற ஊக்கமளிப்பதாகவும் அமைந்தது.

இந்தப்பிறந்தநாள் விழாவையொட்டித் துவக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு நிதிக்கு ஜூன் 3-ஆம் நாள்—ஒரே நாளில் ரூ. 15 இலட்சம் வசூலாகியது.

முதல்வருக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், திரைப்படத்துறைப் பிரமுகர்கள், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிகாலையிலிருந்தே முதல்வரின் இல்லத்திற்கு வந்து கூடியிருந்தனர்.

நடக்க இயலாத நிலையில் உள்ள உடல் ஊனமுற்றோர் பலர் மூன்று சக்கர வண்டிகளில் வந்து முதல்வரை வணங்கி வாழ்த்துக் கூறினர். அடையாறு கிளார்க் அங்கனர் பள்ளி, தேனாம்பேட்டை லிட்டில் பிளவர் கான்வென்ட், ஆந்திர மகிள சபா ஆகிய இடங்களிலிருந்து உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியர் வந்திருந்து முதல்வருக்கு மாலை அணிவித்தனர்.

ஆண்கள் குழந்தைகளை தோளிலும், பெண்கள் குழந்தைகளை இடுப்பிலும் ஏந்திக் கொண்டு பொறுமையாகக் காத்திருந்த நரிக் குறவர்கள், முதல்வரை வாழ்த்தி வணங்கினர். நரிக்குறவர் வகுப்பில் எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவன் ஒருவன் முதல்வருக்கு மாலை அணிவித்தான். பின்னர் முதியவர் ஒருவர், ‘பிச்சைக்காரவங்களுக்கு, வாழ்வளித்த முதலமைச்சருக்கு குருவிக்காரங்க வணக்கம்’ என்று கொச்சைத் தமிழில் கூறி மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து நரிக்குறவர்கள் ஒருவர்பின் ஒருவராகச் சென்று முதல்வரின் கையை முத்தமிட்டுச் சென்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்குத் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஆலயங்களின் சார்பில் ரூ. 5 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் ஒவ்வொரு இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் ரூபாய் 50,000-ம், திரு. பி. நாகிரெட்டி ரூ. 25,000-ம் கொடுத்துள்ளனர்.

சென்னை நாராயணப்பா ரோடு பழ வியாபாரிகள் முன்னேற்றச் சங்கத்தினர் ஊர்வலமாக வந்து 51 வகையான பழங்களையும், உடல் ஊனமுற்றோர் உதவி நிதிக்கு ரூ. 1,000-ம் அளித்துத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்காகத் தமது பிறந்தநாளையொட்டி முதல்வர் ரூ. 50,000 நன்கொடையளித்துள்ளார். அக்கட்டடத்தின் முதல் மாடி கட்டுமானச் செலவுக்கு இத்தொகை பயன்படும்.



தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞரின் உருவப்படத்தை



## தலைமைச் செயலகத்தில்

“தொழுநோயால் அவதியுற்ற பிச்சைக்காரர்களுக்குத் தனி இல்லங்கள், கண்ணொளி முகாம்கள், கைரிக்ஷா இழுத்தவர்களுக்குச் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குதல், ஊனமுற்றோர் மறுவாழ்வு-இப்படி ஆண்டுக்கு ஆண்டு கூடுதல் நன்மைகளை ஏழை எளியோருக்குச் செய்து வருவதன் மூலம் முதல்வர் அவர்களது பிறந்தநாள் மேலும் புனிதமடைகிறது.

“இந்தியாவின் சாபக்கேடு, சாதி வேற்றுமை ஆகும். இந்த சாதிக் கொடுமையை எதிர்த்து முதல்வர் நடத்திவரும் போராட்டத்தை இந்தியா முழுவதும் ஏற்றிப்போற்றும்” என்று தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகச் சங்கத்தில் முதல்வர் கலைஞர் அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

கோட்டை வெளியில் நடைபெற்ற இவ்விழாவிற்குக் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மேயருமான திரு டி. செங்கல்வராயன் தலைமை வகித்தார்.

தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் திரு.கோ. ராமகிருட்டினன் அனைவரையும் வரவேற்று கலைஞராட்சி, அரசு ஊழியர்களுக்கு அளித்துவரும் நன்மைகளை விவரித்துக் கூறினார்.

திரு. டி. செங்கல்வராயன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

“என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அண்ணா எங்கள் கல்லூரி நாட்களிலேயே மாலை நேரங்களில் நாங்கள் உலவிய போதும் உரையாடியபோதும் அரசியலில் எத்தனை தான் மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்களாக இருந்தாலும் நட்பு மாறுவது கூடாது என்று எனக்குக் கூறியிருக்கிறார். அவர்களது பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வந்திருக்கிறோம் என்பதில் நாம் மகிழ்ச்சியடையலாம்.

“முதல்வர் கருணாநிதி அவர்களோடு ஒவ்வொரு விஷயத்திலும் நான் ஒன்றிப்போக இயலாமல் இருக்கலாம். அவரும் நான் ஏற்றுக் கொண்ட கொள்கையினிடத்துப் பற்றில்லாதவராக இருக்கலாம். அரசியலில் எனது நிலைபற்றி அவர் பரிதாபப்படவும் கூடும். ஆனால் முதல்வருடைய சாதனைகளை-ஆற்றல்களை-திறன்களை நான் பார்க்க மறுப்பது முறையாகுமா?

“தமிழகத்தின் முதல் அமைச்சராகவும் ஒரு மகத்தான கட்சியின் தலைவராகவும் விளங்கும் அவர், சிறந்த நாவன்மை மிக்கவர். அவரது இந்த நாவன்மை அவரைப் படிப்படியாக இந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.



மேதகு ஆளுநர் கே. கே. ஷா திறந்து வைக்கிறார்

“அரிய தலைமைத் தத்துவம் திரு. கருணாநிதியிடம் மிளிருவதாலேயே அவரால் இந்நிலையை எய்த முடிந்துள்ளது.”

தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“இந்த நிகழ்ச்சி ஓர் அரிய நிகழ்ச்சியாகும். பொது மேடையின் தரத்தை மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தியிருக்கிறார் இன்றைய விழாவின் தலைவர். தமிழ்நாட்டில்தான் இத்தகைய அரிய காட்சிகளைக் காணுகின்றேன்.

“அரசியல் கட்சி வேற்றுமைகள் எத்தனையிருந்தாலும் பிறந்தநாள் போன்ற நல்ல நாட்களில் அந்த வேற்றுமைகளை மறந்து ஒருவரை ஒருவர் வாழ்த்திடும் நல்ல காட்சியை இங்கு நான் காணுகிறேன்.

“கட்சிகள் ஒரு ஜனநாயக அமைப்புக்கு அவசியமென்றால் அதை வழிநடத்திச் செல்லக் கூடிய தலைமையும் ஜனநாயகம் தழைத்தோங்க இருந்தாக வேண்டியது கட்டாயமாகும்.

“ஜனநாயகம் செயல்படுகிற பாங்கினைக் காண விரும்பினால் இங்கே தமிழ்நாட்டுக்கு வந்து காணுங்கள் என்பேன். இந்த மாநிலத்தின் ஆளுநராக உள்ள நான் இதனைப் பெருமையோடு கூறுவேன்.

“இன்று இந்த விழாவைப் பார்க்கிறோம். அரசு ஊழியர்கள் ஒரு மனதோடு என்னை இங்கு வந்து முதல்வர் அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைக்க அழைத்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களிடையே மக்கள் தொண்டாற்ற வேண்டும் என்ற உள்ளப் பாங்கை-உறுதியை ஏற்படுத்தியதில் முதல்வர் அவர்கள் பெருமை கொள்ளலாம். இது ஒரு பெரும் சாதனையாகும்.

“மக்கள் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆர்வம் படைத்த அரசு ஊழியர்களிடையே, ‘மக்கள் தொண்டாற்றவேண்டும்’ என்ற உள்ளப்பாங்கை - உறுதியை ஏற்படுத்தியதில் முதல்வர் அவர்கள் பெருமை கொள்ளலாம். இது ஒரு பெரும் சாதனையாகும்.

மக்கள் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆர்வம் படைத்த அரசு ஊழியர் சமூகம் உருவாவதே

ஜனநாயகம் தழைக்கத் தேவையான சிறந்த அடித்தளமாகும்.

"ஆட்சியில் உள்ள ஒரு அரசியல் தலைவர் எவ்வாறு தன் பிறந்தநாளை ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் கொண்டாட வேண்டும் என்பதற்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழா ஓர் எடுத்துக் காட்டாகும். ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் இது ஒரு நல்ல பாடமாகும்!"

இவ்வாறு திரு. கே. கே. ஷா அவர்கள் கூறினார்.

"இன்று இவ்விழாவில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து அரசு ஊழியரெல்லாம் கலைஞர் அவர்களது ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தந்து நல்வாழ்வு பெற வேண்டுமென்று' தமது விழைவைப் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு என்.வி. நடராசன் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

**'தமிழரசு' அலுவலகத்தில்....**

'தமிழரசு' அலுவலகத்தின் சார்பில் முதல்வர் கலைஞர் அவர்களின் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 1,000 ஏழைகளுக்குப் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் உணவு வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. எம் பரமசிவம் அவர்கள் தலைமையில் நடந்த இந்த விழாவில், தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் கலைஞர் பிறந்தநாள் சிறப்பினை எடுத்துக் கூறினார். இந்த விழாவில் செய்தித்துறை துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன், உதவி இயக்குநர் திரு. கிருஷ்ணபாரதி, உதவி இயக்குநர் திரு. எஸ். கருணானந்தம் ஆகியோரும், 'தமிழரசு' அலுவலக, அச்சக ஊழியர்களும் செய்தித்துறை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

**ராஜாஜி மண்டபத்தில்**

இளந்தமிழர் பேரவை சார்பாக, சென்னை ராஜாஜி மண்டபத்தில் முதல்வர் கலைஞரின் பொன்விழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்டு ஒரிசாவின் முன்னாள் முதல்வரும், தற்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சித்


முதல்வருக்கு மாலையணிவித்து மகிழும் நரிக்குறவர்கள்

(பிரகதி கட்சி) தலைவருமான திரு. பட்நாயக் அவர்கள் பேசினார். அவர் கூறியதாவது:

"முதலமைச்சர் கருணாநிதி இந்தியாவின் இளமைத் துடிப்பு உள்ள சிறந்த அரசியல் தலைவராக விளங்குகிறார்.

"அவர் இந்த நாட்டுக்கு அறிவித்துள்ள மாநில சுயாட்சிக் கொள்கை, வரும் காலத்தில் இந்த நாட்டில் மூலை முடுக்குகளில் எல்லாம் எதிரொலிக்கும்.



"வெளிநாட்டு உறவு, தகவல் தொடர்பு, ரூபாய் நோட்டு அச்சடிப்பது ஆகியவை மத்திய அரசிடம் இருப்பதை, எந்த மாநிலமும் ஆட்சேபிக்கவில்லை. மற்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள்.

"நான் நல்ல தமிழனாகவும் இருப்பேன். அதே நேரத்தில் இந்தியனாகவும் இருப்பேன் என்று கூறுவதில் என்ன தவறு?"

விழாவில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் திரு. பிரமானந்தரெட்டி அவர்கள் பேசியதாவது:

"மறைந்த அறிஞர் அண்ணாவின் மூலமாக நான் கருணாநிதியை அறிவேன். எனது நெருங்கிய நண்பர்களில் கருணாநிதியும் ஒருவர். அவர் சிறந்த அறிவும் ஆற்றலும் - திறமையும் உள்ள முதல்-அமைச்சராகத் திகழ்கிறார்.

"தனது ஒவ்வொரு பிறந்த தின விழாவின்போதும், வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக ஒரு திட்டத்தை நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது. அவர் மேலும் 50 ஆண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

விழாவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும், மற்றும் மாரிசாமி எம்.பி. அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்.டி. சுந்தரவடிவேலு அவர்களும் முதல்வரின் தொண்டுகளுக்குப் புகழ்மாலை சூட்டினார்கள்.

முதல்வர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாள் விழா—ஊனமுற்றோருக்கு உயர் வாழ்வு நல்கும் விழாவாக அமைந்து, வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது!



# ஊனத்துக்கு ஊன்றுகோல்!



"அதோ வருகிறாரே அந்த நடுத்தர வயதுப் பெண்மணி. அவருக்கு வலதுகையே இல்லை. இது பிறவியிலேயே வந்ததல்ல. கவனமின்மையால் ஏற்பட்ட பேரிழப்பு..." என்று சொல்லிவிட்டு மருத்துவர் அந்தச் சம்பவத்தை விளக்குகிறார்:

"இந்தப் பெண்மணி பேருந்தில் பயணம் செய்யும்போது, சன்னல் பக்கமாகக் கையை வைத்துக் கொண்டு வந்திருக்கிறார். அப்போது பக்கத்தில் வந்த ஓர் ஊர்தி இவர் கையை பலத்த சேதத்துக்குள்ளாக்கியது. அதன் விளைவு? அவரது வலக்கையையே எடுத்துவிடும் அவலநிலை வந்தது...."

வெளியே கையை நீட்டாதீர்-படிகளில் நின்று பயணம் செய்யாதீர்-பஸ் நின்றதும் இறங்கவும்-இப்படிப் பல எச்சரிக்கைகளைப் படித்திருந்தும்கூட அதை அலட்சியப்படுத்துவதன் விளைவாகப் பலர் ஆபத்தையே சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

அதோ ஓர் அம்மையார், தம் ஒரே ஓர் ஆண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருகிறார். குழந்தையின் இரு கால்களும் சூம்பிக் கிடக்கின்றன.

"பிறக்கும்போது நன்றாகத்தான் பிறந்தான். 'டைபாயிட்' காய்ச்சல் கண்டு இவன் கால்கள் நடக்க முடியாமல் போய்விட்டன.." என்று அந்தத் தாய் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொல்கிறார். நம் நெஞ்சம் வேதனையால் விம்முகிறது.

சென்னை அரசினர் பொது மருத்துவமனை!

முடநீக்கு இயல் துறைக்குள்ளே நுழைகிறோம்.

அங்கே நாம் கண்டறிவது மேற்சொன்ன இரண்டு சம்பவங்கள் மட்டுமல்ல, எத்தனை எத்தனை வாழ்க்கைப் பிரச்சினைகள், நிகழ்ச்சிகள், சோகக் கதைகள்! கை, கால் இழந்தவர்கள் கூறும் உண்மைக் கதைகள் நம் உள்ளத்தையல்லவா உருக்குகின்றன!

அங்கே நாம் காணும் அவலக் காட்சிகள் நம் அகக் கண்களைத் திறந்து விடுகின்றன. ஊனமுற்றோரின் பரிதாப நிலைக்கு இரங்குகின்றன; அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு நம்மை உந்தித் தள்ளுகிறது.

**இந்தியாவிலேயே**
**முதல்**
**செயற்கை**
**உறுப்புக்கள்**
**நிலையம்**

1964-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது இந்தத் துறை. இதன் ஓர் அங்கமாக இயங்கி வருகிறது, 'செயற்கை அவயவங்கள் நிலையம்-முடநீக்கு இயல் சாதனங்கள்' (Artificial Limb Centre-Prosthetic forthotic Lab).

**ஊனம் எப்படி ஏற்படுகிறது?**

பிறவிக் குறைகளினாலும், பிறந்த பின் வரும் நோய்களாலும், விபத்துக்களாலும் ஏற்படுகின்றது.

பிறவிலேயே குருத்தெலும்பு குறைதல், அல்லது எலும்புக்கூடு கருவில் வளராது இருத்தல் போன்றவை பிறவிக் குறைகளில் ஒன்று. பிறந்தபின் ஏற்படும் ஊனங்கள் பல. இவைகளை முன்கூட்டியே தடுத்துக் கொள்ளலாம்.

இளம்பிள்ளைவாதம்! இதனால் தசை சோர்ந்து அங்கமாறுதல் உண்டாகிறது. உணவில் 'டி' (D) வைட்டமின் குறைந்து போனால் கணையநோய், எலும்பு மிருதுவாதல் ஆகியவை உண்டாகின்றன. கை எலும்பில் அடி, தசை நரம்புகள் அறுதலாலும், அடிபட்ட காயத்தால் எலும்பு முறிதல், வளைதல், குறுகுதல், மூட்டுப் பிடிப்பு, உடைந்த எலும்பு சேராமை, சதை அற்று விரல் அசைக்க முடியாமை, பூட்டு விலகல் போன்றவைகளாலும் ஊனங்கள் ஏற்படுகின்றன.

ஊனங்கள், மனித வாழ்க்கையையே ஊனமாக்கி விடுகின்றன என்று சொல்லலாம். ஊனமுற்றவனும் சமுதாயத்தில் ஒரு மனிதனாகப் புதுத்தெம்பு பெற்று மீண்டும்வாழ்க்கையைத் தொடங்க அவனுக்கு ஊன்றுகோலாய் இருந்து உதவி வருகிறது, சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள முடநீக்கு இயல் துறை.

வெறும் சிகிச்சை மட்டும் வழங்குவது இதன் பணியல்ல.



நோயாளி ஒருவரை சமூகப் பணியாளர் விசாரணை செய்கிறார்.

சிகிச்சைக்குப் பின்னும் இதன் பணி தொடர்கிறது. எப்படி?

ஓர் ஏழை முதியவர். இவர் ஒரு புத்தக வியாபாரி. தெருத் தெருவாகச் சுற்றிப் புத்தகங்களை விற்று வந்தவர். ஒரு விபத்தால் இவரது இடது முழங்காலுக்குக் கீழே காலை எடுத்துவிட நேர்ந்தது. ஊர் சுற்றி வந்தவருக்கு ஊனம் ஏற்பட்டது — வாழ்க்கையிலும் கூடத்தான்!

பிழைப்புக்கு என்ன செய்வதென்றே புரியாத நிலை; குடும்ப வண்டி எப்படி ஓடும் என்ற குழப்ப நிலை!

சிகிச்சைதான் முடிந்ததே, செயற்கைக் கால்தான் பொருத்தப்பட்டதே, வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டியதுதானே? என்று இந்தத்துறை பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொள்கிறதா? இல்லவே இல்லை. இனிமேல்தானே இதன் வேலை!

இந்தத் துறையில் 4 சமூகப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். முடநீக்கு இயல் துறையில் சமூகப்பணியாளரா? ஆமாம். முதலில் ஒரு நோயாளி இங்கே வந்தால் அவரது நோயின் தன்மையை அறிவது மட்டும் இவர்கள் வேலையல்ல; அவரது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இவர்கள் அறிந்து கொள்கின்றனர்.



முதியவர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார். ''அவர் மீண்டும் தொழில் செய்துவாழ்க்கை நடத்த என்ன செய்யலாம்?'' என்று அக்கறையுடன் யோசிக்கிறது இந்தத்துறை. ஏற்கெனவே, அந்த முதியவரை விசாரித்ததில், புத்தக விற்பனைத் தொழில் தவிர, இரும்புச் சாமான்களைப் பற்ற வைக்கும் தொழிலும் தெரியும் என்று சொன்னது நினைவுக்கு வருகிறது. ஆகவே, அவருக்கு அந்தத் தொழில் சம்பந்தமான சாமான்களை வாங்கித் தர வேண்டும். அதற்குப் பணத்துக்கு எங்கே போவது?

அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நன்கொடை பெற்று இந்தத்துறை இது போன்றவர்களுக்கு உதவி வருகின்றது.

இப்போது முதியவர் இரும்புச் சாமான்களைப் பற்ற வைக்கும் தொழிலை நடத்தி அதில் வரும் வருவாயைக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்.

இதேபோன்று ஒரு தொழிலாளி, வேலை செய்து கொண்டிருந்தபோது கீழே விழுந்து விட்டார். அதனால் அவரது முதுகுத்தண்டு அறுந்து இரு கால்களும் செயலிழந்து விட்டன. இதனால் வாழ்க்கையே இருள் அடைந்து விட்டது போன்று அதிர்ச்சியுற்றார். ''இனி நம்மால் எந்த வேலையும் செய்ய இயலாது. நம் வாழ்க்கையே முடிந்து விட்டது'' என்ற ஏக்கம், பெருமூச்சாய் வெளிவந்தது.

முடநீக்கு இயல்துறை அவருக்குச் சிகிச்சையோடு சீரான வாழ்க்கைக்கும் வழி தேடித் தந்தது. ரூ. 550 மதிப்புள்ள மூன்று சக்கர வண்டி ஒன்றை அவருக்குத் தனியார் நன்கொடை மூலம் வழங்கியது. சிறிது தூரம்கூட நடக்க முடியாதவர் இன்று மூன்று சக்கர வண்டி மூலம் தொழில் நடத்துகிறார்—கடைகளுக்குச் சென்று எலுமிச்சம்பழம் விற்கும் வேலைதான் அது.



மெய்யனில் பொருத்திடப் பொய்க் கை உருவாகிறது.



கால்கள் தயாராகின்றன.

இப்படி எத்தனையோ பேர்களை இந்தத்துறை கைதூக்கி விட்டிருக்கிறது. இரண்டு கால்களும் இழந்த ஒருவரும், ஒரு கால் இழந்த, முழுப் பார்வை இல்லாத இளைஞர் ஒருவரும் செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு தனித் தனியே ஒரு கம்பெனியில் பணியாற்றிக் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு நல்ல வருவாயும் கிடைக்கிறது. இந்தத் 'திருப்பணி'யும் இத்துறையின் 'கைங்கரியம்'தான்!

கடந்த நான்கைந்து ஆண்டுகளில், இங்குச் செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்ட 50 பேர்களுக்குப் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாங்கித் தந்துள்ளது இந்தத்துறை.

இந்தத்துறை மூன்று முக்கியப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை. 1. மருத்துவப் பிரிவு 2. பொறியியல் பிரிவு. 3. சமூக, வாழ்க்கைத்தொழில் புனரமைப்புப் பிரிவு.

கை, கால் போன்ற செயற்கை உறுப்புக்கள் தயாரிக்கும் பணிமனைப் பகுதியில் கீழ்க்காணும் 9 பிரிவுகள் செம்மையாக இயங்கி வருகின்றன.

1. உலோக வேலைப் பிரிவு (Metal work section) 2. மர வேலைப் பிரிவு (Wood work section) 3. தோல் வேலைப் பிரிவு (Leather work section) 4. பிளாஸ்டிக் பிரிவு (Plastic section) 5. பற்ற வைப்புப் பிரிவு (Welding section) 6. மெருகேற்றும் பிரிவு (Polishing section) 7. வண்ணந்தீட்டும் பிரிவு (Painting section) 8. செயற்கை அவயவங்கள் இணைத்துப் பொருத்தும் பிரிவு (Assembly and fitting section for limbs and braces) 9. திட்ட ஆராய்ச்சிப் பிரிவு (Research and Planning section).

மறு சீரமைப்புப் பகுதியில் (Rehabilitation wing):

1. மருத்துவ, முடநீக்கு இயல் பிரிவு, (Medical and Physiotheropy section) 2. சமூகப் பணிப் பிரிவு (Social work section) 3. வாழ்க்கைத் தொழில் சார்ந்த மறு சீரமைப்புப் பிரிவு (Vocational Rehabilitation section) ஆகியவை உள்ளன. நவீன இயந்திரச் சாதனங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பணிமனையில் கைதேர்ந்த 40 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கை, கால்போன்ற செயற்கை உறுப்புகள் மரம், உலோகம், தோல், பிளாஸ்டிக் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கை, கால்கள் செய்வதற்கு வில்வமரம் ஏற்றதாய் இருக்கிறது. ஏனென்றால் செயற்கை உறுப்புகள் இயற்கை உறுப்பைவிடக் கனமாக இருந்தால் அதை வேறு சுமக்க வேண்டும் அல்லவா? அதனால் மரங்கள் லேசானதாக இருக்க வேண்டுமாம். இந்த வில்வ மரம் காஷ்மீரிலிருந்து தருவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள ஒரு வகை மரமும் இதற்குப் பயன்படுகிறது. இதன் பெயர் சிட்டிகா மரம்.

ஒருவருக்குக் காலோ, கையோ செய்ய வேண்டுமென்றால், முதலில் அவரது கால் அல்லது கையின் அளவை எடுத்துக் கொண்டு அந்தக் கால் அல்லது கையின் பருமனுக்கு ஏற்ப 'மோல்டு' (Mould) செய்து கொள்ளப்படுகிறது. பிறகு மரம், பிளாஸ்டிக் முதலான



சைக்கிள் நன்கொடை பெற்றவர்.



சொந்தக் கால் இல்லாத ஒரு முதியவர் சொந்தமாகத் தொழில் நடத்த உதவி பெற்றிருக்கிறார்.

பொருள்களைக் கொண்டு உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. கால் இழந்தவர் எந்த நிறமோ அந்த நிறத்துக்குப் பொருந்தும் படியாகச் செயற்கைக் கால்கள் உருவாகின்றன. கால் பாதம், அதன் விரல்கள், நகங்கள் எல்லாம் இயற்கையாகவே இருக்கின்றன! செயற்கைக் கால் பொருத்தப்பட்ட ஒருவரை உற்று நோக்கினுலொழிய செயற்கைக்காலைக் கண்டு கொள்ள முடியாது. அந்த அளவுக்குத் திறம் வாய்ந்த தொழிலாளர்கள் இங்கே உள்ளனர்.

செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பவர், மருத்துவம் பற்றியும் தெரிந்திருக்கவேண்டுமாதலால் இதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்றும் (School of prorthetics of Orthetics) இங்கே செம்மையாக நடந்து வருகின்றது.

செயற்கை உறுப்புக்கள், முடநீக்கியல் சாதனங்கள் நிலையம் மற்றும் முடநீக்கியல் அறுவைச் சிகிச்சைத் துறை போன்றவைகள் தென்னிந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப் பெற்றது சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (Govt. General Hospital) தான். மேலும், இந்தியாவிலேயே முதன் முதலில் செயற்கை உறுபபுகளையும், முடநீக்கு இயல் சாதனங்களையும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் பணியினை மேற்கொண்டதும் இம் மருத்துவமனையில்தான்! இராணுவத்தினருக்காக மட்டும் பூனவில் ஒரு செயற்கை உறுப்புக்கள் செய்யும் நிலையம் உள்ளது; கான்பூரிலும் இதுபோன்ற நிலையம் ஒன்று விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டிலேயே முதன்மையாகவும் தலைமையாகவும் திகழும் செயற்கை உறுப்புக்கள் நிலையம் (Artificial Limb centre) மூன்று கிளைகளைக் கொண்டிருக்கிறது. அவை: 1. மதுரை, 2. கோவை, 3. தஞ்சை, நெல்லையிலும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலும் கிளைகள் துவக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. மேற்கண்ட மூன்று கிளைகளில் முடநீக்குச் சாதனங்கள் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன. அரசினர் பொது மருத்துவமனையில்தான் செயற்கைக் கை, கால் உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.

முன்பெல்லாம் செயற்கை உறுப்புக்கள் வெளிநாட்டிலிருந்தே தருவிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, அங்கிருந்து வரும் செயற்கைக் காலில் காலணி (ஷூ)யும் இணைந்திருக்கும். கை உறுப்பில் விரல்களை அசைக்க முடியாது. ஆனுல், நம் நாட்டில் செய்யப்படும் கால் உறுப்பு காலணி ஏதுமின்றி, இயற்கையாக—வெறுங் காலாக இருப்பது போன்றே செய்யப்படுகின்றது. இந்தக் காலில் நகம், நரம்பு எல்லாம் தத்ரூபமாக அமைந்து இருக்கும். இதற்குச் 'சென்னைப் பாதம்' (Madras Foot) என்று பெயரிட்டிருக்கிறார்கள்! செயற்கைக் கை உறுப்பில் விரல்களைக்கூட அசைக்கலாம். எழுதலாம். சாப்பிடலாம்.

இங்குத் தயாராகும் கை, கால்போன்ற உறுப்புகளுக்கு விலை ஏதேனும் உண்டா?

உண்டு. ஒரு முழுக்காலின் விலை ரூ. 500. மாத வருமானம் ரூ. 750-க்கு மேல் இருப்பவர் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வருமான அடிப்படையில் இவற்றுக்கு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாதம் ரூ. 200 வருமானமுள்ளவர் ரூ. 25 கட்டினுல் போதும். அவருக்குச் செயற்கை உறுப்பு கிடைக்கும். வருமானமில்லாத ஏழை எளியவர்கள் இதனை எப்படி வாங்க முடியும்? அதற்கும் வசதி செய்திருக்கிறது இந்தத்துறை. தனியார் நன்கொடை மூலம் இந்த



கால் இழந்தவர் பணியாற்றும் காட்சி.

உறுப்புக்களை அவர்கள் பெற முடியும்.

இந்த உறுப்புக்கள் அணிந்தவர்களால் பிறகு நன்கு நடக்கவும், எழுதவும், சாப்பிடவும் முடிகிறது.

இந்தத் துறையில் ஒரு நாளைக்கு 15 நோயாளிகள் வருகிறார்கள். ஓர் ஆண்டில் சுமார் 980 பேர்களுக்கு முடநீக்குச் சாதனங்கள் பொருத்தப்படுகின்றன. சுமார் 325 பேர்களுக்குச் செயற்கைக் கால்கள் பொருத்தப்படுகின்றன. செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டபின் அவர்களுக்குப் பயிற்சிச் சிகிச்சைகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

ஓடாத பேருந்தில்பாதி இங்கே காட்சி தருகிறதே அது எதற்காக? இதன் படிகளில் ஏறி இறங்கும் பயிற்சிக்காக அது இங்கே பொருத்தி வைக்கப்பட்டுள்ளது.



கால் இழந்தும் கலகலப்பு மாறவில்லை!

முடநீக்கு இயல் துறையின் இயக்குநர் திரு. எம். நடராசன் அவர்கள் தலைமையில் 'புனரமைப்புக்குழு' ஒன்று வாரத்திற்கு ஒருநாள் இங்கே கூடுகின்றது. இந்தக் குழுவில் இயக்குநரோடு, ஒரு மருத்துவர், ஒரு தசைப் பயிற்சியாளர், ஒரு மருத்துவப் பொறியாளர், ஒரு சமூகப்பணியாளர், ஒரு வாழ்க்கைத் தொழில் ஆலோசகர் ஆகியோர் உள்ளனர். இக்குழு நோயாளியைப் பல கோணங்களில் விசாரித்து அவரது நோயின் தன்மை, வாழ்க்கைப் பிரச்சினை, வாழும் வழி போன்ற பல தகவல்களை அறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கின்றது.

இத்துறையினர் மேற்கொண்டுள்ள இன்னொரு நடவடிக்கையையும் இங்கே குறிப்பிட வேண்டும். வெளியூர்களிலிருந்து - கிராமங்களிலிருந்து வரும் ஏழை எளியவர்கள் சென்னைக்கு வந்து, தங்கி இருந்து சிகிச்சை பெறப் போதிய வசதி இல்லாதவர்களாக-உறவினர் யாரும் இல்லாதவர்களாக இருப்பார்கள். அவர்களைப் புறக்கணிக்காமல் அவர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற, மூர் அங்காடி எதிரிலுள்ள ஒரு சத்திரத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. தங்கியிருக்கும்போது அவர்களுக்கு உணவும் வழங்கப்படுகிறது.

கை, கால், உறுப்புக்கள் உள்ளவர்களே, சமுதாயத்தில் பல சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். கை, கால் இல்லையென்றுல் கேட்கவே வேண்டாமே! ஒரு குடும்பத்தில் நன்ருக இருந்தவன், ஏதோ ஒரு விபத்தில் ஊனமுற்ருல் அவனை ஒதுக்கிவிடும் குடும்பங்களும் இருக்கின்றனவாம். அத்தகைய அவலநிலை போக்கி, ஊனமுற்றவரைக் குடும்பத்தோடு ஒன்று சேர்க்கும் ஓர் ஒருமைப்பாட்டு நிலையமாகவும் இந்தத் துறை திகழ்கிறது.

உலகநாடுகளால் பாராட்டப் பெற்ற இந்தத்துறை, அரைகுறை மனிதனை முழுமனிதனாக ஆக்கும் மகத்தான பணியினை ஆற்றி வருவதை, மனிதகுலம் என்றென்றைக்கும் மறக்காது என்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

— பி. வி. ஜி.

# மயக்கம் வேண்டாம்

தூய தமிழ்ச் சொற்கள் பல மேல் நோக்காகப் பார்ப்போரைப் பிறமொழிச் சொற்களோ என ஐயம் கொள்ளச் செய்கின்றன. புணர்ச்சியால் விளைந்த மாறுபாடுகளும் காலத்தால் அமைந்த வேறுபாடுகளும் புலவர் பெருமக்களையே மயங்க வைக்கின்றன. இன்றும் அருந்தமிழ்ச் சொற்கள் பல அயல்மொழிச் சொற்களாகவே ஆன்றோர்களாலும் எண்ணவும் பேசவும் படுகின்றன. அவற்றை நுணுகி ஆய்ந்து பார்த்தால் அவை யாவும் தனித் தமிழ்ச் சொற்களே என்பது இனிது வெளிப்படும்.

இன்றைய பூம்புகாரினின்று சில கல்தொலைவில் வாணகிரி என்று ஒரு சிற்றூர் உள்ளது. இது பண்டைய காவிரிப்பூம் பட்டினத்துள் சோழமன்னர் வாழ்ந்த நகர்ப்பகுதியாகும். வாழ்நகரி என்பதே மருவி வாணகிரியாயிற்று. சோழநாடு என்பது சோணாடு ஆனதை இங்கு ஒப்பு நோக்குக. இப்பகுதியில் திருநகரி என்றொரு சிற்றூரும் உள்ளது. இதுவே சோழர் காலத்தில் கருவூலம் அமைந்திருந்த பகுதியாகும். திரு இருந்த நகர் திருநகரியாயிற்று. இவ்வூர்ப் பெருமாள் கோவிலில்-பெருமாளின் செல்வத்தைத் திருமங்கையாழ்வார் கொள்ளையடித்ததாக ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் விழா எடுக்கப் பெறுவதும் இங்குக் கருதத்தக்கதாம். ஒரு நகர்க்குச் செல்வமிருந்துவிட்டால் புகழ் கிட்டுமோ? செல்வத்தின் பயனே ஈதல் அன்றோ? புகழ் மிக்க தமிழ் வள்ளல்களில் ஒருவரது நகர் ஈகையால், அருளால், சிறந்து விளங்கியது. அதனால் அதன் பெயர் அருள் நகரியாயிற்று. அதுவே புணர்ச்சியால் அருணகிரியாகி இன்று அருணகிரி என்று மயங்கி வடமொழி போல் கருதப்படுகின்றது.

அவ்வாறே உலக உயிர்களுக்கு ஒளியும் வெப்பமும் ஏன் மழையும்கூட அருளுகின்ற கதிரவன் அருள்நன் எனப்பட்டான். அது அருணன் ஆகிவிட்டது. விண்ணில் பொலியும் ஓரியன் கூட்டத்தை ஒட்டி அதன் தென்புறத்தில் ஓர் ஒளி மிக்க விண்மீனைக் காணலாம். வெறுங்கண்களால் காணக்கூடிய விண்மீன்களில் ஒளி மிக்கது இதுவேயாகும். மேலை நாட்டினர் இதனை சிரியஸ் என்பர். நம் நாட்டினர் அருணன் என்பர்.

வாள் ஏந்திப் போர் புரியும் வீரரைக் கொண்ட சேனை வாள்தானை எனப்பட்டது. இது புணர்ச்சியால் வாடானை ஆகி அடைமொழியோடு திருவாடானை என ஊர்ப் பெயராக விளங்குகின்றது.



சில மரங்களின் அடிப்பகுதியில் சிறுசிறு முட்டுகள் காணப்படும். மக்கள் இவற்றை முண்டு என வழங்குவர். 'முண்டும் முடிச்சுமாய்' எனப் பேச்சு வழக்கில் பலரும் குறிப்பிடுகின்றோம். தாமரை மலரின் நடுவில் ஒரு முண்டு உள்ளது. முண்டு அகத்தில் கொண்டு விளங்குவதால் தாமரை முண்டகம் என்றும் ஒரு பெயர் பெற்றது. இச்சொல்லை வடசொல் என்றே பெரும் புலவர்கள் எண்ணுகின்றனர். இம்முண்டுகள் நீர்முள்ளிச் செடியிலும் உண்டு. எனவே முண்டகம் என்ற பெயர் அதனையும் குறிக்கும்.

தாமரைக்கு முளரி என்றும் ஒரு பெயர் உண்டு. அரி என்ற சொல் அரிய பல பொருள்களைக் கொண்ட சொல். மூங்கில், வைக்கோல் போன்ற உள்துளை உள்ள பொருள்களையும் குறிக்கும். தாமரைத் தண்டில் உள்ளே துளையும் வெளியே முள்ளும் காணப் பெறும். முள்ளும் அரியும் இணைந்து இடைக்குறையாகி முளரி தோன்றிற்று.

பெண்களின் கண்களில் காணப்பெறும் மெல்லிய கோடுகளும் அரி எனப்பெறும். அவை அவற்றின் தன்மைக்கேற்ப செவ்வரி என்றும் வெள்ளரி என்றும் சிறப்பிக்கப் பெறும். திருவள்ளுவரும் இச்சொல்லை ஆண்டுள்ளார். கலைகளில் வல்லவனாகிய ஓர் அரசனின் துணைவியும் அவனைப் போலவே கல்வியிற் சிறந்தவள். ஓதத் தகுந்த உயர்தமிழ் நூல்களை ஓதி ஓதி அவள் கண்களில் அரி மண்டிவிட்டது. அவள்தான் இராவணன் துணைவியான மண்டு ஓது அரி-மண்டோதரி ஆவாள்.

**காழி.சி.கந்தையன்**

மாது என்றால் அழகு என்பது பொருள். அழகிய அரி அமையப் பெற்றவள் மாதரி எனப்பட்டாள். கண்ணகிக்கும் கோவலனிற்கும் அடைக்கலம் தந்த அவள் பெயரை அறியார் யார்?

இருல் செம்மீனாகும். இராவணன் செந்நிறமுடையவன். இராமன் கருநிறமுடையவன். இருல் போன்ற நிறமுடையவன் என்ற பொருளில் இருல் வண்ணன் என்ற பெயரே வடமொழிக்குப் போய் மீண்டும் தமிழுக்குத் திரும்புகையில் ராவணன் ஆயிற்று. இன்றும் சிலர் ருவணன் என்றே எழுதக் காண்கின்றோம்.

தாமே ஓதி உணர்ந்த அரன் என்ற புலவர் பெருமகனார் 'தாமோதரனார்' எனப்பட்டார். வடமவண்ணக்கன் என்பது பிற்காலத்தில் வழங்கப் பெற்ற ஏனாதி போன்று ஒரு சிறப்புப் பெயராதல் வேண்டும். பரிதிமாற் கலைஞர் கூறியது போன்று, ஆரியர்கள் தமிழரது அனைத்தையும் தாம் மேற்கொண்ட செயலின் பயனாய் இவரையும் பலர் ஆரியர் என்றே மயங்கிக் கூறுகின்றனர்.

பெண்டிர்க்குக் கால்கள் சிறியனவாக அமைவதை அக்காலத்தில் போற்றினர். சீனர்களிடத்து இவ்வெண்ணம் அண்மைக்காலம் வரை நிலவி வந்தது. தாள் தக அமைந்தவளே தாள்தகை-தாடகை. அங்காள் அம்மை என்ற தெய்வத்தின் பெயரையும் ஒப்பு நோக்குக.

சூர் என்ற சொல்லிற்கு ஒளி என்பது ஒரு பொருள். ஒளியோடு இயங்குவோன் அல்லது ஒளிரும் இயல்புடையோன் சூரியன் எனப்பட்டான். அவ்வாறே ஒளிவீசுகின்ற பற்கள் விளங்க நகைசெய்யும் இயல்புடையாள் சூர்ப்பல்நகை-சூர்ப்பனகை எனப்பட்டாள். இதனை அறியாது சூர்ப்பணகை என 'டண்ணகரம்' பெய்து எழுதுவது பிழையே என்க.

முக்கூறாக அமைந்த சடையினை உடையவள் அல்லது திரிந்த சடையினை உடையவள் திரிசடை எனப்பட்டாள். திரிநூல் என இக்காலத்தும் வழங்குவது காண்க.

குடமூக்கு என்பது வடமொழியில் கும்பகோணம் ஆயிற்று. குடம் போன்ற வடிவக் கன்னம் அமையப் பெற்றவன் குடக்கன்னன். வடமொழியில் கும்பகர்ணன் எனப்பட்டான். இரும்பிடர்த்தலையார் என்ற பெயரையும் இங்கு எண்ணிப் பார்க்க.

வாலி என்பது தூய தமிழ்ப் பெயரே! வால் அறிவன் என்ற தொடரில் அமைந்தது போல் தூய பண்புகளால் வாலிக்கு இப்பெயர் அமைந்திருக்கலாம்.

தமிழிலும் வடமொழியிலும் ஒருங்கே புலமை அமையப் பெற்ற சான்றோர் ஆய்ந்து விபீஷணன், சுக்கிரீவன் போன்ற வடமொழி வடிவங்களின் தமிழ் மூலங்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

இதுகாறும் இராமாயணப் பாத்திரப் பெயர்கள் சில, தமிழே எனக் கண்டோம். பெரும்பாலோர் இக்கருத்துக்களைத் தள்ளார். தயக்கத்தோடாயினும் கொள்வார்.



இனி, இராமாயணத்தை வடமொழியில் யாத்த வான்மீகியே தமிழர்தான் என்ற என் துணிபினைக் கூறுகின்றேன். ஆய்வாளர்கள் எளிதில் 'துடைத்தெறிந்து விடாது ஆழ்ந்து எடை போட்டுப் பார்க்கவேண்டுகிறேன்.

இமயமலைச் சரிவில் ஒரு மலர் உண்டு. அம்மலர் மணப்பொருளாயும் மருத்துவப் பொருளாயும் பயன்தரும் செம்மலர். தமிழர் அதனைப் பண்டைக் காலத்திலேயே அறிந்திருந்தனர். அம்மலரில் 'வால்' போன்ற நரம்புகள் மேலே வந்திருக்கும். பழந்தமிழில் மீ என்ற சொல் மேற்புறம், மேலிடம் என்ற பொருள்களைத் தரும். மேகம் என்பதே மீகம் என்பதன் திரிபு என்பர். கப்பலின் மேலிருந்து செலுத்தும் மாலுமி மீகாமர் எனப்பட்டார். எனவே வால் போன்ற நரம்புகள் நடுப்பகுதியினின்றும் மேல் வந்து விளங்கும் குங்குமப் பூவை மீகம், வான்மீகம் என வழங்கியதில் வியப்பில்லை. வால்மீகம் நிறமுடைய புலவர் வால்மீகி எனும் பெயர் பெற்றார். இராமாயணம் இயற்றியவரும் புறநானூற்றின் 358-ஆம் பாடலை இயற்றியவரும் ஒருவரே ஆதலும் கூடும். இப்பாடலின் கருத்தும் குறிப்பால் இராமயணக் கதையை உணர்த்துவதாகவும் சிலர் கருதுகின்றனர். ஔவையார் பாடிய 'நாடா கொன்றோ' (புறம் 187) என்று தொடங்கும் பாடலின் மொழிபெயர்ப்புப்போல் 'தம்மபதத்துள்' ஒரு பாடல் அமைந்துள்ளதும், வடக்கிற்கும் தெற்கிற்கும் இருந்த இலக்கியத் தொடர்பை வலியுறுத்தும்.

வடவர்க்குத் தமிழ் கற்பிக்கச் சென்ற தமிழர் வான்மீகி, தமிழகத்திக்கு வழங்கிய இராமாயணக் கதையை வடமொழியில் இயற்றிருத்தல் கூடும்.

நடுநிலையாளர்கள் மேலும் ஆய்ந்து தமிழ்ச் சொற்களின் வேர் அறிந்து வெளிப்படுத்தித் தமிழின் தொன்மையையும் வன்மையையும், உண்மையையும் எளியோர்க்கும் விளங்க வகை செய்ய வேண்டும். தமிழ்ப் புலவர்கள் இதில் மயக்கமோ தயக்கமோ கொள்ள வேண்டா!






# காணி நிலம் வேண்டும்

பூவை எல். ஆறுமுகம்

## 11. வசந்தக் கனவுகள்

அந்தி மயங்கிய வேளை அது.

அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டையும் அடி மடியில் செருகிக் கொண்ட வேளையில், வீரமணியின் மனமும்தான் மயங்கிப் போயிருந்தது. அம் மயக்கத்தில், இனம் புரியாத பதட்டமும், இனம் புரிந்த துயரமும் தறிகெட்டுச் சுழன்ருலும் கூட, அவ்வுணர்வுகளின் விசித்திரக் கலவையினூடே ஆத்மார்த்தமானதோர் ஆறுதல் எப்படியோ நிழலாடிய அதிசயத்தையும் அவனது மன அந்தரங்கம் வெகு சல்லாபமாக உணரவே செய்தது. 'நல்ல வேளை; இந்த இரண்டு வைரச் சிமிக்கிகளும் அப்பாவோட கழுகுக் கண்களுக்குத் தப்பிடுச்சு. இல்லாங்காட்டி, இதுக ரெண்டும் இந்தச் சென்மத்துக்கு எங்க அம்மாள் மகள் அன்னத்தோட கைக்குச் சேரவே வாய்க்காதாக்கும்!' என்று அமைதியைக் கற்பித்துக் கொண்டிருந்த நேரத்தில், தன் தந்தையின் விளிப்புக் கேட்டதும், அவனுடைய தார்மீக மனமும் விழிப்புப் பெறத் தவறிவிட வில்லை.

''அப்பா, கூப்பிட்டீங்களா?'

நிதானமாகவே வீரமணி திரும்பினுன்.

''ஊம்'', கொட்டினுர் பெரியவர் ஆதிமூலத் தேவர்.

தன்னுடைய தந்தை 'ஊம்' என்று குறிப்பிட்டுச் சத்தம் கொடுத்த அந்தப் பாவனை வீரமணிக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லைதான்; அவரது கூர்மையான பார்வையையுங் கூட அவன் அவ்வளவு தொலைவுக்கு விரும்பவும் இல்லை. 'நான் அன்னத்தின் வைரச் சிமிக்கிகளை நலியாமல் எடுத்து மறைத்துக்கொண்ட துப்பு ஒரு வேளை அப்பாவுக்குத் தெரிந்திருக்குமோ? அப்பாவுக்குத்தான் வெள்ளெழுத்தும் வரவில்லை! —கறுப்பெழுத்தும் வர வில்லையே!' என்று மறுகினுன். ''ஏதாலும் விசேஷம் உண்டுங்களா, அப்பா?'' என்று வினவினுன் அவன்.

ஊர் அம்பலக் காரரர் விநயமாகப் புன்னகை செய்தார். ஓடுற பாம்பை மிதிக்கிற வயசுக்காரப் பிள்ளை நீ. விசேஷம் எதுவாயிருந்தாலும், அது உன் கிட்டேயிருந்து வர வேண்டியதுதான் நியாயம். நான் கிழவன். ஆனுலும், பல்லுப் போகாதவன்; ஆனதாலே, சொல்லும் போகாது. அது சரி. கொஞ்ச முந்தி என்னத்தையோ குனிஞ்சு எடுத்தியே தம்பி? பணம் காசை அலட்சியமாகத் தொலைச்சிட்டுத் தேடி எடுத்தியா?'' என்று துருவலானுர் தேவர்.

இனிமேல், விடலை வீரமணி சுதாரித்துக் கொள்ளக் கேட்க வேண்டியதில்லை. ''ஊம்'', என்று குரல் கொடுத்தான், ஓர் அமர்த்தலோடு. என்ருலும், அவனுக்குத் தன் அருமைத் தந்தையை முகம் கொடுத்துப் பார்க்கத் தைரியம் ஊற மறுத்தது.

மறுபடி சிரித்தார் முதியவர். தலைமுடிகளைக் கோதி விட்டுக் கொண்டே, ''காசு பணத்தை இன்னிக்கு நாம காப்பாத்திஞல்தான் நாளைக்கு



பணம் காசு நம்பளைக் காப்பாத்தும், தம்பி!'' என்று புத்தி படித்துக் கொடுத்தார் அவர்.

''நிசம்தானுங்க, அப்பா, கை நழுவின காசுகளைக் கை கழுவி விடுவேனுங்களா? அதுகளையெல்லாம் சமர்த்தாகப் பொறுக்கி எடுத்துக்கிட்டேன். காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங்களா?'' என்று ஒரு போடு போட்டான் வீரமணி. சற்று முன் அப்பா சிரித்த சிரிப்பின் படம் அவனுடைய நெஞ்சில் படமெடுத்தது, மீண்டும். ஆகவே, அதே அச்சில் அவனும் அப்பா மாதிரி ஒரு சிரிப்பைச் சிரித்து வைத்தான். பற்கள் முப்பத்திரண்டையும் மறைத்துக் கொண்டு சிரித்த சிரிப்பு அது. போலித் தனமான சிரிப்பாகவே அமைய வேண்டுமென்று பாடுபட்டுச் சிரித்த சிரிப்பு அது. அப்படிச் சிரித்ததில் இயற்கையாகவே அவனுக்கு ஏனோ ஓர் ஆறுதல் கூட கவிந்திடவே செய்தது. இவ்வுணர்வின் சுழிப்பு அவனுள் படர்ந்தபோது, அவனுடைய மன அந்தரங்கம் அவனைக் கண்டு கை கொட்டிச் சிரிக்கவும் தவறவில்லை. 'அப்பா மட்டும் என்னோட மனசைப் படிச்சுக்கிட்டு இருந்தும், என் அம்மான் மகள் அன்னத்திடமிருந்து என்னை மடை மாற்றத் துணியலாமா, என்ன?' என்ற கேள்வியின் நியாயத்தை அவனது மனச் சான்று எங்ஙனம் புறக்கணிக்க முடியும்?

பெரியவர் சில கணப்பொழுது வரை செயலற்று நின்று விட்டார். வீரமணியின் பொடி தூவிய பேச்சின் உள்அர்த்தம் அவருக்குப் பிடிபடாமல் இருந்திருக்காது! 'காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங்களா?'' என்று வீரமணி வாழைப்பழத்தில் ஏற்றிய ஊசியாகச் சொற்களைக் கொட்டிக் குத்திக்காட்டிய அந்தப் பேச்சு தேவரைச் சிந்திக்க வைத்ததோ? இல்லை, வேக வைத்ததோ?



சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டதும், ''ஆமா, ஆமா!... என்னோட அருமை மகனுக்கு என்னை மாதிரியே காசு பணத்தோட அருமை பெருமையெல்லாம் எப்படிப் புரியாமல் தப்ப ஏறும்?'' என்று கூறினார்.

அம்மன் சந்நிதியில் முளை அடித்துக் கட்டிப் போடப்பட்டிருக்கும் பலி ஆடு, தன் நிலை புரியாமல் தலையை உலுக்குமாம்! — அந்தப் பாவனையில் வீரமணி தலையை உலுக்கினான். நிலவின் உதயத்தில் கண்கள் மின்னின.

மகனுடைய தலையாட்டத்தைக்கண்டுதான் ஆதி மூலம் அவ்வாறு 'நின்றது நிலைக்க'க் கண் கலங்கி யிருக்கவேண்டும்! —அப்படியென்றால், மெய்யாகவே வீரமணியைப் 'பலி ஆடு' என்றுதான் நிர்ணயம் செய்து விட்டாரா பெரியவர்? ''தம்பி பொழுது பட்டு, நிலாவும் பறிஞ்சாச்சு. நீ போய் உன் சோலியைக் கவனி. உடம்பையும் அலட்டிக்கிடாதே; உள்ளத்தையும் அலட்டிக்கிடாதே. ஆவணி பிறந்தாச்சின்னா, நீ மாப்பிள்ளையாடுவியே? அதுவும், சிலட்டூர்க் கங்காணி வீட்டு அருமை மாப்பிள்ளையாக ஆகப் போற அதிர்ஷ்டசாலிப் பிள்ளையாச்சே?'' என்று கூறினார்.

அவன் அப்பாவை விநயம் கூட்டி ஊடுருவினான்; வேதனை கூடியது. ''கல்யாணம் திகைஞ்சு, நாள் நட்சத்திரம் பார்த்துப் பரிசம் போட்டு, அந்தப் பணக்காரக் கங்காணியோட அன்பு மகளுக்கு நான் திருப்பூட்டினதுக்கு அப்பாலே தானே, நான் சிலட்டூர் மாப்பிள்ளையாக ஆக முடியும்? அது மட்டுக்கும், நான் இந்த ஆவணத்தாங்கோட்டையைச் சேர்ந்த சர்வ சாதாரணமான பிள்ளையாண்டான் தானுங்களே, அப்பா?'' என்று கேட்டான் வீரமணி.

''ஓகோ அப்படிப் பிடிச்சிட்டியா நூலை?... அதுவும் சரிதான். இந்த ஆதிமூலத்தேவர் போட்டு வச்ச புள்ளி எப்பத்தான் தடம் மாறிச்சு? சரி, சரி. நீ போ. உன்னோட அருமை அம்மான் வீட்டுக் காளைக்கு நான் காவல் இருப்பேனுக்கும். அதைப் பற்றி லவலேசமும் கிலேசப்படாமல் நீ நட. அன்னம்தான் ரோசம் தாங்காமல் இந் நேரம் தவிச்சுக்கிட்டுக் கிடக்கும்? இல்லையா, தம்பி?'' என்றார் அவர். சுருதி ஓங்கிய குரல்தான்!

''அதையெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன், அப்பா?'' — வீரமணியின் பேச்சு, சுருதி இறங்கி ஒலித்தது.

''அதுவும் சரிதான்!''

பெரியவரின் பார்வை அந்த வெள்ளையின் மீது திரும்பியது.

சமையல் காசியின் புண்ணியத்தினால், வீடு ஒளி ஏற்றித் திகழத் தொடங்கியது.

வீரமணி திரும்பிப் பார்த்தான். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து விட்டதாகவே அவன் மகிழ்ந்தான். ஆனால், வீட்டின் வெளியழகுக்குத் திருட்டி கழிப்பது போன்று வீட்டின் உள் அழகு அசடு கட்டி வழிந்ததைக் கண்டதும், அவனது மகிழ்ச்சி, சொல்லாமல் கொள்ளாமல் 'தேசாந்திரம்' புறப்பட்டுப் போயிற்று. ''அப்பா!'' என்று கொடூரக் குரலெடுத்துக் கூவினான் வீரமணி.

திடுக்கிட்டுத் திரும்பலானார் ஆதிமூலத் தேவர். தவப் புதல்வன், தவம் கலைந்த மாதிரி கூப்பிட்ட அந்தக் குரலின் துடிப்பை எப்படி மனத்தில் வாங்கிக் கொண்டாரோ, தெரியவில்லை. அவரையும் மீறின அச்சத்தோடு திசை திரும்பலானார் அவர். ''என்னடா ராஜா?'' என்று விசாரித்தார்.

''நானாவது, ராஜாவாவது? ராஜாக்கள் பரிபாலனம் செஞ்ச காலமெல்லாம்தான் அப்பவே மலையேறிப் போயிட்டுதே, அப்பா?.. நான் ராஜா இல்லீங்க; வீரமணி நான்!...'' என்று சொல்லிக் கொண்டு, தன் தந்தையின் முகத்தைப் பார்க்க வசதியாக அவர் முன்னே வந்து நின்றான் வீரமணி. உண்டாக்கிக் கொண்ட வாய்ப்புக்கு ஓர் உத்வேகத்தை உண்டாக்க அவன் தன் தந்தையைக் கொடுமையான ஆத்திரத்தோடு பார்த்தான்; சீரழிந்த துன்பத்தோடு பார்வையிட்டான்!

**தமிழ்நாடு அரசின் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஒரு தனியார் நிறுவனமும் கூட்டாகத் தொடங்கியுள்ள 'தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்' என்ற நிறுவனம் டயர்களையும், குழாய்களையும் தயாரிக்கும் ஓர் ஆலையை — ரூ.25.5 கோடி செலவில் அமைக்கின்றது. அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜெனரல் டயர்ஸ்' என்ற நிறுவனத்தின் தொழில் கூட்டுறவுடன் இது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்படுகிறது.**

பெற்ற மகனின் வசந்தக் கனவுகளையெல்லாம் மண்ணோடு மண்ணாக அழித்து மிதிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அப்பா அவர்; பெற்ற தந்தை அவர். தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் அமைந்தும் அமர்ந்தும் கறிவேப்பிலைக் கொழுந்து போன்ற தன் குலக் கொழுந்தை வளர்த்து ஆளாக்கியவர் அவர். அவருக்குத் தன் அருமைத் திரு மகனின் ஆத்திரத்தைச் சந்தித்தபோது, கண்ணீர் மடை திறந்த வெள்ளமாகப் பெருகத் தொடங்கியது. தன்னுடைய கண்ணீரைத் தன் மைந்தன் கண்டு விடக் கூடாதே என்ற பதட்டத்தில், அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார் முதியவர்.

இக் காட்சியை வீரமணி கண்டான்; ரசித்தான்; சிரித்தான். ''அப்பா'' என்று என்னவோ சொல்ல வாயெடுத்தான். அப்போது, திட்டி வாசலினின்றும் பரிதாபமாக எதிரொலிக்கத் தொடங்கிய ராமையாத்தேவரின் வெள்ளைக் காளை எழுப்பிய சோகக் குரல் அவனுடைய உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் கூட ஏதோவொரு புதிய மாற்றத்தை உண்டு பண்ணிய விசித்திரத்தை அவனால் தட்டிக் கழித்திட முடியவில்லை. வாயில்லாச் சீவனின் தாபக் குரல் அவனை அவனது அம்மான் மகளிடம் இட்டுச் சென்றிருக்கலாம். இதயத்தின் அந்தரங்கத்தில் நிலைப்பாக ஊற்றெடுத்துக் கொண்டிருந்த ஆன்ம நேயத்தின் புதுமைப் பெண்ணாக — புரட்சித் தமிழச்சியாக அப்போது அவனுக்குரிய அம்மான் மகள் அன்னக்கொடி அழகு காட்டியிருக்கலாம்!

நாட்டாண்மைக் காரர் ஆவணத்தான் கோட்டைக் குடியிருப்பைப் பொறுத்த மட்டில், மட்டில்லாப் பெருமையைச் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார் என்பது பொய்யல்ல. ஆனாலும், வெறும் பெருமை மாத்திரம் ஒரு சமுதாயத்தில் தலை உயர்த்தி நடக்கப் பற்றுவதில்லை. மனிதப் பிண்டத்துக்கு யதார்த்தமான பெருமை ஏற்பட வேண்டுமேயானால், பணம் காசுதான் முதல்படியாக வேண்டும். பணம் இருந்துவிட்டால், பெருமை தன்னால் வரும். வீரமணியின் இத்தகைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதிமூலத் தேவரால் ஈடுகொடுக்க இயலாமற் போய்விட்டது. தென்புறத் தாழ்வாரத்தில் இருந்த குதிர்களிலே நெல்லையும், உட்புறத்தாய் வீட்டில் இருந்த ''மாந்தலை' தேக்குப் பெட்டகத்தில் பணங்களையும் கொட்டி அளந்து குவித்து வைத்திருந்தவர்தான் பெரியவர். ஆனால், தற்போது காலம் மாறி விட்டது. எல்லாம் 'ஆண்டுமாறி' விட்டது. புதுப் பணக்காரர்களுக்கு மத்தியிலே, பழைய பணக்காரர்களால் தலைநிமிர்ந்து கால் ஊன்றி நிற்க முடியவில்லை. ஆகவே, இந்நிலைக்கு தேவர் மட்டிலும் எங்ஙனம் விதிவிலக்கு ஆகக் கூடும்?

செயற்கைஒளி சரம் கட்டிப் பரவியது.

''தம்பி'', என்று பரிவுடன் கூப்பிட்டார் ஆதிமூலம். சோகத்தின் பயங்கரமான மெல்லிய இழைகள் இப்போது அவரது முகத்தில் தடம் காட்டவில்லை. ''வீரமணி, என்னமோ சொல்ல வாயை எடுத்தாய். சொல்ல வந்ததை — அல்லது சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் அப்படியே மருள் கொண்டாப்பிலே நின்னிட்டியேப்பா?'' என்று வினவினார் அவர்.

வீரமணி பெருமூச்சு விட்டான். அவன் செவிகளிலே மறுபடியும் அந்த வெள்ளைக் காளை மாட்டின் அபய ஒலம் கேட்க ஆரம்பித்துவிட்டது. அவனுடைய ''மானாபிமானம்'' சிலிர்ப்படைந்தது. அத்தோடு

அவனுக்கு உண்டான "மான அவமான" உணர்ச்சியும் விழித்துக் கொண்டது. அப்பாவின் கேள்விக்கு விடை சொல்லாமல், தென் பக்கம் மடங்கி நடந்தான்.

வீரமணியைத் தொடரலானார் ஆதிமூலம்.

"எங்கே தம்பி போறே?"

"அம்மான் வீட்டு வெள்ளைக் காளை பசியினாலே கத்திக்கிட்டு இருக்குது, பாவம். அதுக்குப் பரணியிலேயிருந்து வைக்கோல் பிடுங்கிப் போடப்போறேன்," என்று சொல்லிக்கொண்டே, கொட்டகை விட்டத்தில் ஒட்டிக் கிடந்த வாங்கரிவாளை எடுத்துப் பிடித்து 'வாகு' கணித்துத் திருப்பினான் வீரமணி. பிறகு, வைக்கோல் போரை நோக்கிக் குறி வைத்து வாங்கரிவாளைச் செலுத்திய நேரத்தில், அந்த வாங்கரிவாள் தட்டிப் பறித்து வீசப்பட்டதைத்தான் அப்போது அவனால் உணர முடிந்தது. "அப்பா!" என்று கோபாவேசத்தோடு கத்திவிட்டான் வீரமணி.

"வீரமணி!" என்று பெரியவர் பதிலுக்குக் கூச்சலிட்டுக் குரல் கொடுக்க மறக்கவில்லை. "உன்னைக் கொஞ்ச நாளாய் நான் கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். உன்னோட பொடி தூவின பேச்சு வார்த்தைங்களையும், உன்னை யாரோ சொக்குப்பொடி தூவி மயக்கிட்டது கணக்கிலே நீ கணக்கு வழக்கு மட்டுப்படாமல் மயங்கிக் கிறங்கித் தடுமாறித் தவிச்சுக்கிட்டுத் திரிகிற போக்குங்களையும் நான் குறி வச்சுப் படிச்சுக்கிடத் தப்பல்லே என்கிறதுப்பை மட்டுக்கும் நீ லவலேசமும் மறந்துபுடாதே!" என்றார். ரவை நாழிக்கு முன்னர் அருமைப் புதல்வனை அதட்டி

செங்கை மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கலிலுள்ள அஞ்சலகத்தில் ஜுன் 3-ந் தேதியிலிருந்து பதிக்கப்பட்டு வரும் சிறப்பு அஞ்சல் முத்திரையில் இரு நாரைகளின் உருவம் இடம் பெறுகிறது. வேடந்தாங்கல் புகழ்மிக்க பறவைச் சரணாலயமாதலால் இதனைக் குறிக்கும் வகையில் இந்த முத்திரை பதிக்கப்படுகிறது.



அலட்டின குரலிலே இழையோடியிருந்த அந்தச் சூடு இப்போது தடம் காட்டவில்லைதான்!

ஆனால், வீரமணியோ தன் அருமைத் தந்தையாரின் அதிகாரத் தொனியைச் சட்டை செய்தவனாகத் தோன்றக் காணோம். சட்டையை இழுத்து விட்டவாறு, பரணடியிலே சிந்திக் கிடந்த வைக்கோல் சிதறல்களைக் கூட்டிப் பெருக்கி ஒரு 'குடங்கை' பொறுக்கி அள்ளிக் கொண்டு தன் போக்கில்—தன் தடத்தில் திரும்பி, மாட்டுக்கொட்டடியை நோக்கி நடந்தான்.

"ஏ, வீரமணி! உன் புத்தி பிசகிப் போச்சுதா! இல்லை, தட்டுக் கெட்டுப் போச்சா? இல்லை, தடம் கெட்டுப் போயிடுச்சா? உனக்கு ரோசம் மானம் துளியாச்சும் இருந்திருந்தால், நீ இம்மாம் பெரிய தப்பை செய்யத் துணிவியா? ஊருக்கு ஓசந்த குடியாய், 'மசமேராய்' வாழ்ந்து வந்த நம்ப குடும்பத்தை சொந்தத்துக்குள்ளே சொந்தம்கொண்ட உன் அம்மான் இத்தி கூட ரோசிக்காமல் கச்சேரிப்படிக்கு இழுத்துப் புட்டான்! அத்தோடே மனசு அடங்காமல், இப்ப நம்பளை ஊர்ச் சமுதாயத்து முச்சந்தியிலே வேறே சந்தி சிரிக்க வைக்கப் போறதாய்ச் சவால் விட்டுக்கிட்டும் இருக்கான்! இந்த இடு சாம வேளையிலே, நன்னி கெட்ட அந்தப் புறக்குடிப் பயல் ராமையத் தேவனோட வெள்ளைக் காளை பாவத்துக்கு உண்டான கூலியை அனுபவிக்கிறதாட்டம் நம்ப கிட்டே வந்து சரண் அடைஞ்சிருக்குது. வலியத் தேடி வந்திருக்கிற இந்த அயனான ஒண்ணும் நம்பர் சந்தர்ப்பத்தை எப்படி எப்படியெல்லாமோ உபயோகப்படுத்திக்கிட்டு இந்த வெள்ளைக் காளையின் மூலமாக உன் அருமை அம்மான் ராமையாவுக்குப் புத்தி படிச்சுக் கொடுக்க வேணும்னு ரோசனை பண்ணி வச்சிருக்கேன். நீ என்னடான்னா, வெண்ணெய் திரண்டு வாரப்ப தாழியைப் போட்டு உடைச்சு நொறுக்கிற மாதிரி, இருந்திருந்து ஒரு வாயில்லாச் சீவனுக்காகப் பரிஞ்சுக்கிட்டு இரக்கப்பட்டு அதுக்குத் தீனி வீசுறதுக்குத் துடிச்சுக்கிட்டு இருக்கியேப்பா? . . ."

பயம் ஊட்டும் ரீதியிலே நயம் சொட்டச் சொற்களை வாரி வழங்கிய வண்ணம், ஆதிமூலத் தேவர் தொழுவத்தை நெருங்குவதற்கும், கையிலிருந்த வைக்கோலை அந்த வெள்ளைக் காளைக்கு முன்னே வீரமணி இதமும் பதமுமாக வீசுவதற்கும் கன கச்சிதமாகத்தான் இருந்தது.

ஆனால் . . . ?

காய்ந்த மாடு கம்பிலே விழுந்தது என்பார்கள் அல்லவா? — அந்தப் பாவனையில் வைக்கோல் பிசிறுகளைக் கண்டதும் வெள்ளைக் காளை ஒரே தாவாகத் தாவி, கொம்புகளைச் சிலுப்பி, வாலை உலுக்கியபடி நாக்கை நீட்டியது. ஆனால் பாவம், ஒரு பிரி மட்டும்தான் அதன் வாய்க்கு எட்டியது. காலுக்கு எட்டிய மிச்சம் மீதி வைக்கோல் எல்லாம் அதன் வாய்க்கு எட்ட முடியாமல் போயிற்று. வெள்ளைக் காலில் முடிச்சுப் போட்டுப் பிணைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காளை அவ்வளவு லகுவில் பிடிக்கயிற்றை அறுத்துக்கொண்டு விடுதலை பெற்று விட முடியுமா? இல்லை, அவ்வாறு விடுதலை அளிக்கத்தான் ஊர் நாட்டாண்மைக்காரர் அவ்வளவு லேசில் இளகி விடுவாரா? — ஒரே எட்டில் பாய்ந்தார் பெரியவர். பசி தூண்டப் பெற்ற நிலையிலே, வாய்க்கு எட்டிய வைக்கோற்பிரியை மென்று அசை போட்டதோடு பசுவாகக் காட்சி யளித்த வெள்ளைக் காளையின் காலடியில் கிடந்த வைக்கோல் 'சாடா'வையும் அப்படியே குண்டுக் கட்டாகக் கூட்டிக் குவித்து அள்ளிக் கொண்டு அதே பாய்ச்சலோடு மறுகி தம்முடைய பசுக்களுக்கும் காளைகளுக்கும் தூவிவிட்டு கையைத் துடைத்துக்கொண்டு பிறகு தமது கருக்கரிவாள் மீசையையும் முறுக்கி விட்டுக் கொள்ளலானார்.

வீரமணிக்கு அப்பாவின் செயல் அவமானத்தை மட்டும் தூண்டவில்லை; ஆத்திரத்தையும் தூண்டவே செய்தது. "அப்பா, நம்மளோட கோப தாபத்தையெல்லாம் ஒரு பாவமும் அறியாத இந்த வாயில்லாச் சீவன் கிட்டவா காட்டுவீங்க? உங்க சடைக்கும் ஆத்திரத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் நீங்க அடிக்கடி குத்திக் காட்டுற மாதிரி என்னோட அருமை அம்மான்தான்; அதொப்ப, அம்மானோட சங்கடத்துக்கும் சவாலுக்கும் பதில் சொல்லித் தீர வேண்

# வேண்டுகோள்!

காகித விலை உயர்வின் காரணமாக 1—7—'74 முதல், 'தமிழரசு' இதழின் விலை 40 காசிலிருந்து 50 காசாக உயர்த்தப்படுகிறது. எனவே, 1—7—'74 லிருந்து சந்தா விகிதம் கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**'தமிழரசு' தமிழ்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 12.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 25.00 |
| அரையாண்டு | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

**'தமிழரசு' ஆங்கிலம்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

முகவர்களும், சந்தாதாரர்களும், வாசகர்களும் இந்த மாற்றத்தை நினைவிற் கொள்ள வேண்டுகிறோம். பழைய சந்தாதாரர்களுக்கு 1—7—'74 முதல் புதிய விகிதப்படி மாற்றம் செய்து அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாக மேலாளர்,
'தமிழரசு',
அரசினர் தோட்டம், சென்னை-600002.

டிய விதி உங்களுக்கு உண்டு. உங்க ரெண்டு பேருக்கும் ஊடாலே நீறு பூத்த நெருப்பாக பரஸ்பரம் ஒரு வன்ம உணர்ச்சி—பகை உணர்ச்சி முட்டி மோதி வெடிக்க வேளை பார்த்துக்கிட்டு இருக்கையிலே உங்க ரெண்டு பேருக்குமே அப்பாற்பட்ட ஒரு காளையின் விசாரத்தை ஏதுக்கு நாம விலை கொடுத்து வாங்க முனைய வேணும்!" என்று வேகம் வடிந்த குரலெடுத்துக் கேட்கலானான் இளவட்டம்!

"தம்பி, நீ சொல்லாமலேயே நியாயம் எது, அநியாயம் எது என்கிற சங்கதியெல்லாம் எனக்குத் தீரத் தெளியப் புரியும். சீட்டாட்டத்தைப் பற்றிஉனக்கு ஒண்ணும் தெரியாதிண்ணு தான் நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன். ஒரு வேளை, தெரிஞ்சிருந்தாலும் தெரிஞ்சிருக்கலாம். சீட்டு ஆட்டம் போடுறப்ப, துருப்புச் சீட்டு கைக்குக் கிடைச்சிட்டா, அதை யாரும் வெளியே விட்டுப்புடமாட்டாங்க. எதிரி தோற்றுப் பூடுவானே அப்படின்னு தர்மம் பார்த்தால், அப்பாலே, அந்த துருப்புச் சீட்டை வச்சிருக்கக் கூடிய பேர்வழியே மண்ணைத்தான் கவ்வ வேண்டி வரும். அதை ஒத்துத்தான் இந்தக் காளைக் கதையும்! . . . ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி; குழி பறிச்சுத் தான் குழி முயலைப் பிடிப்பாங்களாம். நானும் உன் அருமை அம்மானை அவனுக்குச் சொந்தமான இந்த வெள்ளையைப் பகடையாக வச்சுத்தான் ஒரு கை பார்க்கப் போறேன்! . . . குன்னக்குடிக்குக் காவடி எடுத்தாலும், ராமையா இனி அவனோட காளையை என்கிட்டேயிருந்து மீட்டுக்கிடலே ஏலாதாக்கும்! ராத்திரி முச்சூடும் மாட்டுக்காரப் பயலோடே சேர்ந்து நான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கிட்டுத் தான் விடிய விடிய கண் விழிச்சிருக்கப்போறேன்!.. தலைமுறை தத்துவமாய் ஊர் நாட்டாண்மைக்கு அதிகாரம் கொண்ட இந்த ஆதிமூலத்தை சந்திக்கு இழுக்கிறதுக்கு மனப்பால் குடிச்சுக்கிட்டு இருக்கிற உன் அம்மான் ராமையாவுக்கு ஈரலிலே பித்தா, இல்லை எலும்பிலே பித்தான்னு சோதிச்சுப் பிட வேணாமா? . . ஊம், சொல்லு தம்பி, சொல்லு!"

பெரியவருக்கு மூப்பு வந்து விட்டது. ஆகவே, மூச்சு வாங்கியதில் வியப்பு ஏதுமில்லை.

"நான் சொல்றது இருக்கட்டும் ஒரு முடுக்கிலே. இப்ப நீங்க சொல்லுங்கப்பா! . . . உங்களுக்கு உண்டான மான ரோசம் இம்மாம் தொலைவுக்கு விழிச்சுக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தால், நாளைக்குப் பொழுது விடிஞ்சதும் விடியாததுமாய் அம்மான் கிட்டே போய், நீங்க அம்மானுக்குப் பட்டிருக்கிற கடன் பூராத்தையும் கட்டிப்பிடுவீங்கன்னு தோணுதுங்களே? என் யூகம் சரிதானுங்களா? அப்படி நீங்க கடனைத் தீர்த்தால்தான், அம்மானோட இந்தக்காளையைப் பகடையாக்கி நீங்க சொக்கட்டான் விளையாடுறதுக்கு ஒரு நியாயமான அர்த்தம் இருக்க வாய்க்கும்! இல்லிங்களா, அப்பா? — சொல்லுங்கப்பா, சொல்லுங்க! . . ."

வீரமணியின் தர்க்க வாதம் நல்ல பாம்பைச் சீண்டி விட்ட கதையாகவே ஆயிற்று. பெரியவரின் இடுக்கு விழுந்திருந்த கண்கள் இரண்டுமே மிளகாய்ப் பழங்களாகச் சிவந்துவிட்டன. அந்தச் சிவப்பை மேலும் பயங்கரமாக விளக்கிக் காட்டியது வெள்ளி நிலா. அவர் கோபாவேசத்தோடு வீரமணியை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தார்; பார்த்ததோடு சரி! — விழுங்கி விடவில்லை. மீசையில் இடம் தெரியாமல் வந்து குந்திய ஈயை ஆத்திரம் சூடு பறக்க விரட்டிவிட்டு, 'தாழ்வாயை'த் தடவியபடியோ அல்லது தடவிக் கொடுத்தபடியோ வாயைத் திறக்கலானார்.

அதற்குள்

ராமையாத் தேவர் பொறுமை இழந்தவராக, தட்டி மறைவினின்றும் வெளிப்பட்டார். தன்னுடைய தேள் கொடுக்கு மீசையை நீவி விட்டவாறு, "நாட்டாமைக்கார ஐயாவே! உங்க அன்புப் பிள்ளை — என் அருமை மாப்பிள்ளை கேட்ட கேள்விக்குச் 'சவாப்' சொல்லுங்களேன்!" என்று நையாண்டிக் குரலிலே பேசினார்.

வீரமணி மலைத்தான். அடிமடியில் ஒளிந்திருந்த அந்த வைரச் சிமிக்கிகளைக் 'கமுக்கமாக'த் தடவிப் பார்த்துக் கொண்டான். அவன் சிந்தனை எங்கெல்லாமோ, எப்படியெல்லாமோ சுழல ஆரம்பித்தது. !

பெரியவர் ஆதிமூலம் எரித்து விடுகிற உத்தேசத்தோடு ராமையாவை விழி பிதுங்க விழித்துப் பார்த்தார்; கட்டுக்குடுமி நிலவுக் காற்றில் ஊசலாட, "டேய், ராமையா !" என்று ஓங்காரமாகச் சிம்மக் குரலெடுத்துக் கூவினார் ஊர் அம்பலக்காரர்! . . .

(வளரும்)

# ஜப்பானில் பெண் போலீஸ்



இந்தியாவின் பிற மாநிலங்களிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் பெண் போலீஸ் துறை தொடங்கப்பட்டிருப்பதையும் அவர்கள் ஆற்றவிருக்கின்ற பணிகளைப் பற்றியும் நாமறிவோம்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் பெண் போலீஸ் துறை உண்டு. ஜப்பானில் உள்ள பெண் போலீசார் எந்தெந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வோமா?

டோகியோ நகரில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு ஜப்பானியப் பெண் போலீசாரிடம் விடப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் அதிக நேரம் நிறுத்தப்படும் கார்களைக் கண்டுபிடிக்க 'ரோந்து' வருவது இப்போலீசாரின் பணிகளில் ஒன்று. அத்தகைய கார்களின் டயர்களிலும், தெருவின் அப்பகுதியிலும் சாக்கட்டியினால் இவர்கள் குறிப்பிடுவதுண்டு. இப் பெண் போலீசார் அங்கு வரும்போது அக்குறியிட்ட கார் இன்னும் எடுக்கப்படவில்லை என்றால், அதன் சொந்தக்காரர் அல்லது டிரைவர் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.





காலையில் பள்ளி செல்லும் சிறுவர் சிறுமியர் குழந்தைகள் இவர்களின் பாதுகாவலராகவும் பணி புரிகின்றனர். இவர்களைப் பாதுகாப்புடன் சாலையைக் கடக்கச் செய்கின்றனர். சாலை விதிகளையும் பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுக்குப் போதிக்கின்றனர்.



டோக்கியோவில் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பிரிவில் (Traffic) 850 போலீஸ்காரர்கள் இருக்கின்றனர். இவர்களில் பாதிப் பேர்கள் பெண்கள், சென்ற மூன்றாண்டில் வேலைக்குச் சேர்ந்த இவர்கள் 20 வயதுள்ள மங்கையர்கள்.

இங்கு அவசர உதவிக்கு 110 எண்ணுக்கு டயல் செய்ய வேண்டும். இங்குள்ள கண்ட்ரோல் அறையில் 24 அதிகாரிகள் வேலை பார்க்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பெண்களே! இவர்கள் குரல் டெலிபோனில் எடுப்பாக இருப்பதினாலேயே இவ்வேலைக்கு இவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். ஜேப்படிக்காரர்களைக் கண்டுபிடிப்பது, துப்பறியும் வேலை செய்வது முதலிய வேலைகளிலும் பெண் போலீசார் ஈடுபடுகிறார்கள். 1950ல் தான் முதன் முதலாகத் துப்பறியும் வேலைக்குப் பெண்கள் நியமிக்கப்படலாயினர்.

காஸுகோ டாகிமா என்ற பெண் போலீஸ் அதிகாரியைக் கண்டாலே ஜேப்படிக்காரர்களுக்கு மிக நடுக்கமாம்! இவருக்கு 17 ஆண்டு சர்வீஸ். சூப்பரிண்டெண்ட் ஜெனரல் பரிசை இவர் 100 தடவைக்கு மேல் பெற்றிருக்கிறார்!

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல் 2100.87

1972-73ல் 5618.15



தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்

சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்

என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குநர்

TNSC BANK


**வினா :** டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் (Director General I.C.A.R.) அவர்கள் சென்னையில் சமீபத்தில் ஒரு விழாவில் பேசும் போது, பிரியாணி அரிசி ரகங்களான 'புது சபர்மதி', 'பூசா—33' ஆகிய இரண்டு உயர் விளைச்சல் ரகங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தயவு கூர்ந்து தமிழ்நாட்டில் அல்லது வெளி மாநிலத்தில் அவை கிடைக்கும் விலாசத்தையும், அதைப் பயிரிடும் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளையும் விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஒய். அந்தோனி, பி.ஏ., பி.எல்.,
'எவர்கிரீன் பார்ம்',
மொகல்வாடி,
செங்கை மாவட்டம்.

**விடை :** தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1968 முதல் 1973 வரையான ஆண்டுகளில் குறுவைப் பட்டத்தில் நடத்தப்பட்ட சோதனைகளில் இருந்து பி.சி. 5—55 (சபர்மதி), பி.சி. 11—6——3 (சபர்மதி தேர்வு) ஆகிய மணமுள்ள சன்ன அரிசி கொண்ட—பிரியாணி செய்வதற்கு ஏற்ற—இரகங்கள் எக்டேருக்கு முறையே 4.4 டன், 4.0 டன் மகசூல் கொடுத்துள்ளன என்பது தெரிய வருகிறது. ஆனால் அதே காலத்தில் 'ரத்னு' என்ற சன்ன அரிசி தரும் இரகம் எக்டேருக்கு 6.5 டன் மகசூல் கொடுத்துள்ளது. தாளடிப் பருவத்தில் பி.சி. 11—6—3 என்ற இரகம் 125 நாட்களில் எக்டேருக்கு 4.5 டன் மகசூல் அளித்துள்ளது. இந்த சோதனைகளிலிருந்து பிரியாணி செய்வதற்கு ஏற்ற 'சபர்மதி', 'சபர்மதி தேர்வு' 'ரத்னு' ஆகிய இரகங்கள் தமிழ் நாட்டிற்கு ஏற்றவை என்று தெரிய வருகிறது. தாங்கள் 'சபர்மதி தேர்வு' என்ற ரகத்தைத்தான் 'புது சபர்மதி' என்று குறிப்பிடுகின்றீர்கள் எனக் கருதுகிறோம்.

'புது சபர்மதி', 'பூசா—33' ஆகிய இரகங்களின் விதைகள் அதிகமாக தமிழ்நாட்டில் உங்களுக்குக் கிடைப்பது ஐயத்திற்கு உரியதே! இவ்விரு இரக விதைகளும் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சிப் பிரிவிலும், ஆடுதுறையில் உள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்திலும் ஓரளவிற்குக் கிடைக்கக் கூடும். முயற்சி செய்து பார்க்கவும்! ஆனால் இவ்விரு இரகங்களும் வட மாநிலங்களில் புகழ் பெற்று விளங்குவதால், அவைகளின் விதைகள் கிடைக்குமிடத்தையும், கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளையும் அறிந்திட பின்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்பதே நல்லது.

The Director,
Farm Information Unit,
Directorate of Extension,
Ministry of Agriculture,
Shastri Bhavan,
New Delhi.



**வினா :** நான் கம்பு (கோடைப் பயிர்) பயிரிட விரும்புகின்றேன். தற்போது உள்ள சூழ்நிலைக்கு என்ன வகையான கம்பு ஏற்றது? அல்லது வேறு ஏதேனும் பயிரிட இந்தப் பருவம் உகந்ததா? அப்படி உகந்தது என்றால் என்ன வகைப் பயிர் செய்யலாம். கம்பை விட இலாபகரமானதாக இருக்குமா? என் நிலம் மணல் கலந்த செம்மண் பூமி.

—எம். ராஜு, பி. காம்.,
சாத்தமங்கலம்,
திருமானூர் (வழி),
திருச்சி மாவட்டம்.

**விடை :** தாங்கள் ஜுலை—ஆகஸ்ட் மாதங்களில். இறைவையில் எச். பி. 1 அல்லது எச். பி. 3 ரகக் கம்பு பயிரிடலாம். கம்பு பயிரிடுவதற்குத் தங்கள் நிலம் ஏற்றதே. குறைந்த செலவில் நிறைந்த இலாபம் பெற எச். பி. கம்பு இரகங்கள் மிகவும் ஏற்றவை. இவைகளைப் பயிரிட அதிகம் பாடுபட வேண்டியதில்லை. ஆனால் மற்றப் பயிர்களுக்கு அதிகம் செலவு செய்வதுடன், அதிக அளவு பாடுபட்டாக வேண்டும். கம்பு சாகுபடி முறைகள் அனைத்தும் விளக்கமாக 1—4—74 தேதிய 'தமிழரசு' இதழில் 47, 48 பக்கங்களில் வெளியிடப்பட்டு உள்ளன. அவைகளைத் தயவு செய்து படித்து அறிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் விரும்பினால் ஜுன்—ஜுலை மாதங்களில் கொஞ்சம் நிலத்தில் இறைவையாகச் சூரிய காந்தி பயிரிட்டுப் பார்க்கலாம். இதுவும் அதிகப்பாடு இல்லாமல், நிறைந்த இலாபம் தரக்கூடிய பயிராக உள்ளது. சூரியகாந்தி பற்றிய முழுவிவரமும் அறிய தயவு செய்து 16—6—73 தேதிய 'தமிழரசு' இதழைப் படியுங்கள்.



**வினா:** மம்சாபுரம் கிராமத்தைச் சேர்ந்த நான் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கிறேன். விவசாயத்தையும் நடத்துகிறேன். எனது நிலத்தில் களைகள் அதிகம் முளைக்கின்றன. இதைப் போக்க என்ன செய்ய வேண்டும்? மேலும் கிணற்றில் பாசிகள் கொடி போல் படர்ந்து பம்புக் குழாயை அடைத்து விடுகிறது. இப் பாசிகளை எடுத்தாலும் மறுபடி சில நாட்களுக்குள் அதிக அளவில் வளர்ந்து விடுகிறது. இதைப் போக்குவது எப்படி என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—பெ. ஜெயராம்,
மம்சாபுரம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



## சேலத்தில் கிராமிய விளையாட்டுப்போட்டி.

கடந்த பிப்ரவரி மாதம் சேலத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்து இந்திய கிராமிய விளையாட்டுப் போட்டிகளில் 361 பெண்கள் உட்பட மொத்தம் சுமார் ஆயிரத்து 350 கிராமிய விளையாட்டுக்காரர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். முந்தைய கிராமிய விளையாட்டுப் போட்டிகள் பாட்டியாலா, ஜெய்பூர், புது தில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றன. தென் இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

சேலம் வட்டாரத்து கிராமிய மக்கள், கால்பந்து, வாலிபால், மல்யுத்தம், ஈட்டி எரிதல், கபடி, கொக்கோ முதலிய பல்வகையான ஆட்டப் போட்டிகளைக் கண்டு களிக்கும் ஓர் அரிய வாய்ப்பைப் பெற்றனர்.

சிறந்த ஆட்டக்காரர்களுக்கான பரிசை டில்லி அணியும், கவர்ச்சி மிக்க சிறப்பான அணிவகுப்புக்கான பரிசை அஸ்ஸாம் அணியும் பெற்றது.

## கல் மரப் பூங்கா

நீங்கள் படத்தில் காண்பது
ல்மரம் ஒன்றின் வெட்டு முகத்
தாற்றம். இது தென் ஆர்க்காடு
ாவட்டத்தைச் சேர்ந்த திருவக்
ரையில் உள்ளது. இலட்சக்
ணக்கான ஆண்டுகளாக
யற்கை அன்னையினால் பாது
ாக்கப்பட்டு வந்துள்ள மிகப்
ழங்கால மரங்களின் ஒரு
குதியே இது.

கல்லுருவாகியுள்ள இந்த
ரங்கள் இரண்டு கோடி ஆண்டு
ட்கு முற்பட்டவை எனப் புவி
யலாளர்கள் மதிப்பிட்டிருக்
றார்கள். பத்துக் கோடி
ண்டுகட்கு முற்பட்டவை எனக்
ருதப்படுகிற மணல் பாறை
ில் இந்தக் கல்மரம் புதைந்து
க்கிறது. அங்கே காணப்படும்
ந்த மணல் பாறை அமைப்பு
யும் மிகப் பெரிய கல் மரங்
யும் இணைத்துப் பார்க்கும்
ாது, ஒரு காலத்தில் இந்தப்
ரிய அடிமரங்கள் உயர்ந்த
ைப்பகுதிகளிலிருந்து நதிகள்
ாகவும் காட்டாறுகள் மூல
ாகவும் நீரில் அடித்துக்
ாண்டு வரப்பட்டு, கடலில்
ணலுடன் புதைந்து கிடந்
ிருக்க வேண்டும் என்ற முடி
ுக்கு வரவேண்டியிருக்கிறது.

இந்தக் கல்மரங்களில் வேர்
ளோ, இலைகளோ காணப்படா

தது, இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பச்சை மரங்கள் பலகோடி ஆண்டுகளாக மணலில் புதைந்திருக்கும் போது, மரங்களில் சிலிக்கா என்னும் மணல் பொருள் ஏறி, மரத்தின் தன்மை முற்றிலும் மாறுபட்டு, இந்தக் கல்மரங்களாகக் காணப்படுகின்றன.

இவை சுமார் 800 மீட்டருக்கு மேல் உயரமுள்ள பகுதிகளில் வளரும் மர வகையைச் சேர்ந்தவை எனக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. எனவே, கடந்த காலத்தில் கிழக்குக் கடற்கரை நெடுகிலும் மரங்களடர்ந்த மிக உயரமான மலைகள் இருந்திருக்கக்கூடும்.

இயற்கை அன்னை வழங்கியுள்ள இந்த அரிய கருவூலத்தை இந்தியப் புவி இயல் ஆராய்ச்சித் துறையினர் நமது வருங்காலச் சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் திருவக்கரையிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள சாத்தனூரிலும் கல்மரப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



## கேளுங்கள் கொடுக்கப்படும்

ஆர்.எம்

வினா : எனது நிலம் மணற்பாங்கான நிலம். ஒரு ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் போடும்படிக் கூறியுள்ளீர்கள். இந்த இரண்டும் இல்லாவிட்டால் பின்னைக்காய் பிண்ணுக்கு மாத்திரம் நன்செய் வயலுக்குப் போடலாமா? பின்னைக்காய் பிண்ணுக்கில் என்.பி.கே. எவ்வளவு இருக்கிறது? ஏக்கருக்கு எத்தனை கிலோ பிண்ணுக்கு தேவை? இந்தப் பிண்ணுக்கைத் தொடர்ந்து போடுவது நல்லதா?

டாடா பைசன் ராலீஸ் வழங்கும் புதிய ஃப்யூராடன் 3 ஜி குருணைகள் என்ற பூச்சி மருந்து நல்லதுதானா? இந்த மருந்தை வயலுக்குப் போடலாமா? விவசாய ஆராய்ச்சியாளர் இந்த மருந்தை உபயோகித்துப் பரிசோதனை பார்த்தது உண்டா?

நன்செய் நிலத்தில் நிலக்கடலை போட்டால் மண் வளத்தைப் பூராவையும் எடுத்து விடாதா? நிலத்தில் இருந்து எவ்விதச் சத்தை எடுத்துக் கொள்கிறது? அதை எவ்வாறு ஈடுசெய்யலாம்?

''தமிழரசு'' மார்ச் 16, 1974 இதழில் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் மதுரை மாவட்ட அன்பர் ஒருவரின் கேள்விக்கு அளித்துள்ள பதிலில் நிலக்கடலைக்கு 'போராக்ஸ்' என்ற வெண்காரம் போடும்படி கூறியுள்ளீர்கள். இதை நன்செய் வயலில் போடலாமா? மண்ணின் குணத்தை மாற்றாதா? நெற்பயிர் யாதொரு கேடும் அடையாதா? அப்படி அடைந்தால் என்ன செய்ய வேண்டும்?

1—6—1974 இதழில் என்னுடைய கேள்விகளுக்குத் தாங்கள் கட்டாயம் பதில் தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

—எஸ். வெங்கடாசலமய்யர்
பெருமாள் கோயில் சந்து,
பூதபாண்டி கிராமம்
(அஞ்சல்),
கன்னியாகுமரி மாவட்டம்.

விடை : தாங்கள் 22—5—1974 அன்று இக் கேள்விகளை எழுதியுள்ளீர்கள். தங்கள் கடிதம் ''தமிழரசு'' அலுவலகத்திற்கு 25—5—74 அன்றுதான் வந்து சேர்ந்துள்ளது. பல கேள்விகளைக் கேட்டுவிட்டு 1—6—1974 தேதிய 'தமிழரசு' இதழில் கட்டாயம் பதில் அளிக்கும்படி கேட்டுள்ளீர்கள். (இப்படிப் பலர் கேள்வி கடைசி நேரத்தில் அனுப்பி விட்டு, உடன் பதில் அளிக்கும்படி கேட்டுள்ளார்கள்).

''கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற பகுதிக்கான விடைகள் ஒரு திங்களுக்கு முன்பாகவே எழுதப்பட்டு, ஏறத்தாழ 25 நாட்களுக்கு முன்பாகவே அச்சகத்திற்கு அனுப்பப்பட்டு விடுகின்றன என்று முன்பே குறிப்பிட்டு எழுதியிருந்தோம். அப்படி இருந்தும் 22—5—74-ல் பல கேள்விகளைக் கேட்டு விட்டு, 1—6—1974 இதழிலேயே பதில் அளிக்கும்படி கேட்டுள்ளீர்கள். எனவே, உங்கள் வேண்டுகோளை 1—6—74 தேதிய இதழில் நிறைவேற்ற முடியாமைக்குவருந்துவதுடன், அடுத்த இதழில் வெளியிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

பின்னைப் பிண்ணுக்கை நன்செய் வயலுக்கு அடியுரமாகப் போடலாம். இதில் 2.7 சத தழைச் சத்தும், 1.1 சத அளவு மணிச் சத்தும் உள்ளது. அதாவது 100 கிலோ பின்னைப் பிண்ணுக்கில் 2.7 கிலோ தழைச் சத்தும், 1.1 கிலோ மணிச் சத்தும் உள்ளன. இவை முறையே 13.5 கிலோ அமோனியம் சல்பேட், 6.8 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவற்றிற்குச் சமமானதாகும். இதில் சாம்பல் சத்து இல்லை. ஆகவே தாங்கள் என்ன நெல் பயிரிட விரும்புகின்றீர்களோ அதற்குப் பரிந்துரைக்கப்படும் அடியுர அளவுக்கு ஏற்ப கணக்கிட்டுக் கொண்டு, தேவைப்படும் சூப்பர் பாஸ்பேட்டையும், மியூரியேட் ஆஃப் பொட்டாஷையும் சேர்த்துப் பின்னைப் பிண்ணுக்கை அடியுரமாக இடலாம். பின்னைப் பிண்ணுக்கைத் தொடர்ந்து அடியுரமாக இடலாம்.

டாடா பைசன் நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வரும் 'ஃப்யூரடான்' (Furadan) நல்ல மருந்துதான். 3ஜி என்பது 3 சத குருணைகளைக் (Granules) குறிக்கும். இந்த மருந்தை வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்துப் பார்த்த பின்புதான், நெல் குருத்துப் பூச்சி, ஆனைக் கொம்பன் ஈ, நெல் இலைச் சுருட்டும் புழு, சோளக் குருத்து ஈ ஆகியவைகளைக் கட்டுப்படுத்த 'ஃப்யூரடான்' உபயோகிக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளனர்.

நன்செய் நிலத்தில் நிலக்கடலை போட்டால், அது மண் வளத்தை முழு அளவில் குறைத்து விடும் என்று நினைப்பது தவறு. பொதுவாக எந்தப் பயிரிட்டாலும், நிலத்திலிருந்து சத்துக்களை எடுத்துக் கொள்ளும். நிலக்கடலை இதற்கு விதிவிலக்கல்ல! எனவேதான் நில வளம் குன்றுதிருக்க, தொழு எரு, இராசயன உரம் ஆகியவைகளை இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. ஏக்கருக்கு 7 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 21 கிலோ சாம்பல் சத்து கொடுக்க வல்ல இராசயன உரங்களை இட்டு நன்செய் நிலத்தில் இறைவை நிலக்கடலை பயிரிடலாம்.

நன்செய் வயலில் நிலக்கடலை பயிரிட்டால் 'போராக்ஸ்' என்னும் வெண் காரம் போடலாம். இதனால், அடுத்துப் பயிரிடப்படும் நெற் பயிருக்கு எந்த விதக் கேடும் ஏற்படாது!

விடை: நெல், கரும்பு ஆகிய பயிர்களில் தோன்றும் களைகளை ஒழிக்க முறையே 'ஸ்டாம்ப் எப். 34', 'அன்சார்-529' போன்ற மருந்துகள் வேளாண்மைத்துறையால் பரிந்துரைக்கப்படுகின்றன. என்ன வகையான களை என்பதனைத் தெரிவித்தால்தான் அதற்குரிய களைக்கொல்லியையும், அதன் அளவையும் உங்களுக்குத் தெரிவிக்க இயலும். எனவே, உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைச் சந்தித்து, உங்கள் வயலில் உள்ள களைகளைக் காட்டி, அவைகளைப் போக்குவதற்குரிய களைக்கொல்லியையும், அதைப் பயன்படுத்தும் முறையையும் தெரிந்து கொள்வதே நலம்.

தங்கள் கிணற்றில் உள்ள பாசிகளை அகற்ற முதலில் தங்கள் கிணற்றின் சுவர்களைத் தேய்த்து (முடிந்த அளவுக்குத்) தூய்மைப்படுத்த வேண்டும். பிறகு தங்கள் கிணற்றில் உள்ள நீரின் அளவைக் கணக்கிட்டுக் கொண்டு 10 இலட்சம் பங்கு தண்ணீருக்கு அரை பங்கு மயில்துத்தம் (Copper Sulphate) என்ற அளவில் மயில்துத்தம் கலக்க வேண்டும். மயில் துத்தத்தைச் சிறுசிறு மூட்டைகளாகத் துணியில் கட்டி கிணற்றில் போடவேண்டும். ஒரு வாரத்தில் பாசிகள் மறையாவிட்டால், மீண்டும் ஒருமுறை மேற்கூறிய அளவில் மயில் துத்தம் போடவும். இதனால் பாசிகள் அறவே ஒழியும். இந்த அளவுக்கு மேல் மயில்துத்தம் போட்டால், தண்ணீரின் சுவை மாறிவிடும்! அத்தண்ணீர் கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கும்! அத்துடன், கிணற்றில் வாழும் மீன்களுக்கும் கெடுதல் ஏற்படுத்தும். எனவே கிணற்றில் உள்ள தண்ணீரின் அளவைச் சரியாகக் கணித்துக் கொண்டு 10 இலட்சம் பங்கு தண்ணீருக்கு, அரைபங்கு மயில்துத்தம் என்ற அளவில் மயில்துத்தத்தை இட்டுக் கிணை கிணற்றில் உள்ள பாசிகளை அழிக்கலாம்.





வினா: கரும்பில் அஞ்சுகம் பாசிப்பயறு, ஊடுபயிராகச் சாகுபடி செய்ததில் ஏக்கர் ஒன்றுக்கு 3 குவிண்டால் மகசூல் கிடைத்துள்ளது. மறுபடியும் அதே இடத்தில், செடிகளைப் பிடுங்கிக் கரும்புப் பயிர்களுக்கு மண் அணைத்துவிட்டு, அந்த இடைச்சாலில் அஞ்சுகம் பாசிப்பயறு விதைத்தால் பலன் தருமா? அதனால் கரும்பிற்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமா?

—அ. பொன்வேல்மணி,
கரிசல்குளம் (அஞ்சல்),
விளாத்திக்குளம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

விடை: தாங்கள் கரும்பில் 'அஞ்சுகம்' பாசிப்பயறு பயிரிட்டு ஒருமுறை அறுவடை செய்துள்ளதிலிருந்து, தங்கள் கரும்பின் வயது தற்பொழுது 9 மாதம் அல்லது அதற்குமேல் இருக்கும் என்று எண்ணுகின்றோம். பொதுவாகக்கரும்பிற்கு உரமிடுவதை 120 நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. கரும்பிற்கு உரமிட்ட பிறகு, கரும்பில் மீண்டும் ஊடுபயிர் செய்தல் இலாபகரமானதாக இருக்காது. கரும்பிற்குக் கிடைக்கவேண்டிய சத்துக்களை ஊடுபயிர் எடுத்துக் கொள்ளக்கூடும்! எனவே, தாங்கள் மீண்டும் ஒருமுறை அஞ்சுகம்பயிரிடுவது பயனுடையதல்ல!



வினா: எங்கள் பகுதியில் விவசாயத்திற்கு தண்ணீர் இறைக்க என்ஜின்களுக்கு டீசல் தேவைப்படுகிறது. இந்த டீசல் எங்கள் பகுதியில் குறிப்பாக சிதம்பரம் பகுதியில் கிடைப்பதில்லை. பெட்ரோல் பங்கில் கேட்டால் எண்ணெய் இருப்பு இல்லை என போர்டு போட்டுவிட்டு, லிட்டர் ரூபாய் 1.50 என அதிக விலைவைத்து விற்கின்றனர். இதனால் எங்கள் பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், விவசாயிகளும் பீதி அடைகின்றனர். லிட்டர் 1.50-க்கு அப்படி விவசாயிக்குத் தேவையில்லாத கார் உதிரி உறுப்புக்களை 5 அல்லது 10 ரூபாய்க்கு வாங்கினால் எண்ணெய் உண்டு என்கின்றனர். இதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், விவசாயிகளுக்கு எண்ணெய் நியாய விலையில் கிடைக்கச் செய்யுமா?

எங்கள் உழவர் விவாதக் குழு மூலம் பல விவசாயிகளுக்கு திண்டிவனம் 10 மணிலா விதை விஸ்தரிக்கப்பட்டு, பலர் பயிரிட்டுள்ளனர். இந்த மணிலாவிற்குக் காய்த்துளைப்பானைத் தடுக்க கடைசிசாலில் அல்லது களை எடுக்கும் போதாவது பி.எச்.சி. 10 சதத்தூள் தூவ வேண்டும். இந்தத்தூள் எங்கள் குமராட்சி ஊராட்சி ஒன்றிய விவசாய கிடங்கில் கிடைப்பதில்லை. ஒருமுறை கிடங்கில் இருந்து கேட்டதற்கு, இந்த மருந்தை வைத்துக் கொண்டே இல்லை என்று கூறிவிட்டனர். இதற்கு பதில் வேறு ஏதாவது மருந்தை இந்தக் காய் துளைப்பானுக்கு இடலாமா? தயவுசெய்து அடுத்த 'தமிழரசு' இதழிலேயே பதில் கூறவும்.

—கோ. சக்கரபாணி,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
வல்லம்படுகை,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை: 'டீசல்' எண்ணெய் முறையாகக் கிடைக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்கிறது. ஆனால் ஒருசில வியாபாரிகள் முறை தவறி அதிக விலைக்கு விற்கக்கூடும்! அப்படிப்பட்டவர்களைப் பற்றி தகுந்த ஆதாரத்துடன், புகார் செய்யலாம். புகார் மனுவை உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்தால், அவர் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கூடும்.

நிலக்கடலை பயிரிடும் நிலங்களில் கறையான் தாக்கும் இடங்களில் மட்டுமே, கடைசி சாலில் அல்லது களை எடுக்கும் போது 'பி.எச்.சி.' 10 சதத்தூள் தூவும்படி பரிந்துரைக்கப்படுகிறது. தாங்கள் கூறியுள்ளபடி காய்த்துளைப்பானைத் தடுப்பதற்கல்ல! நிலக்கடலையில் தோன்றும் இளம் சிவப்புக் கம்பளிப்புழு, அசுவணி ஆகியவைகளைக் கட்டுப்படுத்தவும் 'பி.எச்.சி.' 10 சதம் தூளைச் செடிகளின் மேல் தூவலாம்.

36

கறையான்களை ஒழிக்க பி.எச்.சி. 10 சதத் தூள் கிடைக்காவிட்டால் 'ஆல்டிரின்', 'டையல்டிரின்', 'ஹெப்டோகுளோர்' போன்ற மருந்துகளை உழவில் போடலாம்.

'பி.எச்.சி.' 10 சத மருந்து உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கவில்லை என்றால், உங்கள் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் சொல்லி, அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து வரவழைத்துக்கொடுக்கச் சொலலலாம், அல்லது உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்குத் தெரிவித்தால், உடன் அவர் 'பி.எச்.சி.' 10 சத மருந்து கிடைக்க ஆவன செய்வார். எனவே, இதுபற்றி அவருக்குத் தெரிவிப்பதே சிறந்தது.

வினா: நான் பள்ளி இறுதி வகுப்பு (1967 மார்ச்) வரை படித்து மேலும் தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றிருக்கிறேன். எனக்குத் தற்சமயம் சுமார் 24 வயது ஆகிறது. இந்த வயதுக்கு ஏற்ப நான் வளர்ந்து இராமல், வளர்ச்சி குன்றி, குள்ளமாக 4 அடி 4 அங்குல உயரத்திலேயே சின்னப் பையன் போல் இருக்கிறேன். எனவே, அங்கஹீனர்கள் என்ற வரிசையில் என்னைச் சேர்த்து, வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எனக்கு எந்தவித அங்கஹீனங்களும் கிடையாது. இரு ஊராட்சி ஒன்றியங்களில் இது பற்றி விசாரித்ததில், 'இந்த வளர்ச்சி குன்றியது அங்கஹீனமல்ல' என்று கூறியதின் காரணமாக இதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு கோழிப்பண்ணை வைத்தல் அல்லது வீரிய பன்றி வளர்த்தல் போன்றவைகளுக்கு அரசு வங்கியில் பண உதவியோ அல்லது வேறு வங்கிகளில் உதவியோ கிடைக்க ஆவன செய்யுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—அ. மணிவண்ணன்,
கிருஷ்ணபுரம்,
துறையூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை: உண்மையிலேயே தாங்கள் ஊனமுற்றவராக இருந்தால்தான், ஊனமுற்றவர்களுக்குரிய சலுகைகளைப் பெற முடியும். தாங்கள் வளர்ச்சி இல்லாததன் காரணமாகக் குட்டையாக இருப்பதனால், ஊனமுற்றவர்களுக்குரிய சலுகைகளைப் பெறமுடியாது. இதுபற்றி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் குறிப்பிட்டது சரியே!

கோழிப்பண்ணை அல்லது பன்றிப் பண்ணை அமைப்பதற்குரிய பண உதவி பெற உங்கள் அருகாமையில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்குச் சென்று தங்கள் திட்டத்தைக்கூறி, கடன் பெற முயற்சி செய்யுங்கள். தாங்கள் கேட்கும் கடன் தொகைக்கு ஏற்றவாறு தங்களுக்குச் சொத்து மதிப்பு இருந்தால், அல்லது தங்களுக்கு ஜாமீன் கொடுக்க யாராவது முன்வந்தால் உங்களுக்கு கடன் கிடைக்கக்கூடும். தங்களுக்குக் கடன் கிடைக்க நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வினா: எனக்கு வயது 18. நான் சுமார் 3 நிமிடம் 40 வினாடி மூச்சை அடக்க முடியும். ஆகையால் நான் சங்கு குளிக்க விரும்புகின்றேன். தமிழ்நாட்டில் எங்கு சங்கு அதிகமாகக் கிடைக்கின்றது? ஆண்டு முழுவதும் குளிக்க முடியுமா?

—ஆர். பி. கோபால்,
பழனி,
மதுரை மாவட்டம்.

விடை: தமிழ்நாட்டில் இராமேஸ்வரம், தூத்துக்குடி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் சங்குகள் அதிகம் கிடைக்கின்றன. சங்கு குளிப்பது ஆண்டு முழுவதும் நடைபெறக்கூடிய தொழில் அல்ல! இராமேஸ்வரத்தில் சங்கு மற்றும் கிளிஞ்சல் பொருள் உற்பத்தித் தொழிலாளர் சங்கம் உள்ளது. அங்கு சென்று, அனுபவம் உள்ள சங்கு குளிப்பவர்களைக் கலந்தாலோசித்து, இத்தொழிலில் ஈடுபடுவதே சிறந்தது.

# போக்குவரத்து வளர்ச்சிக்குப் புது வாரியம் !

தமிழ்நாடு அரசு, போக்குவரத்து வளர்ச்சி வாரியம் ஒன்றினை உருவாக்க முடிவு செய்துள்ளது. பத்து ரூபாய் வீதம் 20 இலட்சம் பங்குகள் கொண்டு, ரூ. 2 கோடி மூலதனத்துடன் இது இயங்கும். தமிழ்நாடு அரசு, ரூ. 1·60 கோடிக்கு 16 இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும்.

அரசைச் சேர்ந்த பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன், பல்லவன், சேரன், சோழன், கட்டபொம்மன், அண்ணா போக்குவரத்து ஆகிய 6 பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களும் 40 இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும். இதிலே பூம்புகார்க் கப்பல் போக்குவரத்துக் கழகம் மட்டும் ஓர் இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும்.

பத்து இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் சென்னை - மாமல்லபுரம் பாதையில் உடல் ஊனமுற்றோருக்கு ஒரு பயிற்சி நிலையத்தை விரைவில் தமிழ்நாடு அரசு உருவாக்க இருக்கிறது.

* * *

சித்த மருத்துவத்திற்கு ஊக்கம் கொடுத்து வரும் தமிழ்நாடு அரசு, ஒவ்வொரு நகராட்சியிலும் இந்தச் சித்த மருத்துவமனையை நிறுவிட முனைந்துள்ளது. அண்மையில் ஆலந்தூர் - தலைக்கனஞ் சேரியில் சித்தமருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.




# உங்கள் அந்தரங்கக் காரியதரிசி இருளில் அவதிப்படுகிருரா?

சீரான ஒளி உங்கள் ஊழியர்களின், பார்வை, வேலைத்திறன் மற்றும் பரஸ்பர பழகும் தன்மை இவற்றை மேம்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. அலுவலகங்களுக்கேற்ற கம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்கான்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.





பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்



# எளிமையின் எழில் வடிவம் ஏலகிரி

அமைதியும் தூய்மையும் தவழும் அழகிய சோலைவனம், ஏலகிரி! வட ஆர்க்காடு மாவட்டத்தின் சிறப்புக்களில் ஒன்ருக, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள இந்த எளிய மலைக்குச் சென்று வருவது மறக்க முடியாத அனுபவம். கோடைக் காலத்தை இனிமையாகக் கழிப்பதற்கு ஏற்ற குளிர் மலை என்று நாடறிய இது ஓங்கு புகழ் பெற்றுவிடவில்லை எனினும் ஏழை மக்களுக்கு, நடுத்தர வகுப்பினருக்கு கோடைக் கால ஓய்வைக் கழிக்க மிக ஏற்ற இடமாகத் தோன்றுகிறது. பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் போன்றவைகளை நடத்துவதற்குத் தகுந்த இடமாக விளங்குவதற்குரிய கூறுகள் இதில் நிறைய இருக்கின்றன.

கோடை ஓய்வைக் கழிப்பதற்குரிய மலை வனம் என்றவுடன் உதகை, கோடைக்கானல் போன்ற மலை நகர்களை நினைத்துக் கொண்டோ, காஷ்மீர், சிம்லா என்று கற்பனை செய்து கொண்டோ ஏலகிரியை அணுகக் கூடாது. மற்ற மலை வன நகரங்களுக்கு உரிய செழிப்புகள், ஒப்பனைகள், சந்தடிகள், வேடிக்கைகள், விளையாட்டுக்கள் ஏலகிரியில் இல்லை. ஆனால் இந்த எளிய ஏலகிரி கிராமங்களில் உள்ள அமைதி, தூய்மை, ஏகாந்தம் மற்ற மலை நகரங்களில் இல்லை. இருக்கவும் முடியாது.

ஏலகிரியில் சித்திரை, வைகாசி கோடை இரவுக் காலம் குளுமையாக, இதமாக இருக்கின்றது. ஆனால் நடுக்கும் குளிர் இல்லை. கம்பளி, கம்பளி உடைகள், அதனைச் சார்ந்த செலவுகள் தேவைப்படாத, அளவான தட்பம். பகலில் சமவெளி நிலம் போல வெய்யில் அடிக்கிறது. ஆனால் அந்த வெய்யிலில் சூடு இல்லை. வசதிகள் இல்லை; ஆனால் அமைதி இருக்கிறது. தனிமையைக் கண்டிராதவர்கள் அங்கே சென்ருல் அதனைக் காணலாம். அதன் சாரத்தை உணரலாம்.

## மலைமுகட்டுக்கு அப்பால்

திருப்பத்தூர்—வாணியம்பாடி சாலை வழியில் செல்லும் போதும், ஜோலார்பேட்டைப் பகுதியில் ரயில் பயணத்தின் போதும் ஏலகிரி மலைச்சரிவுகளும் மலை ஏறுவதற்கு உள்ள மலைச் சாலையும் தெரியும். காய்ந்து போய், வெள்ளைப் பாருங்கற்கள் துருத்திக் கொண்டு நிற்கின்ற அடிவாரக் காட்சியைப் பார்க்கும்போது அங்கே என்ன இருக்கப்போகிறது என்றுதான் தோன்றும். ஆனால் மலைப்பாதையில் மொத்தம் பதினைந்து கொண்டைஊசி வளைவுகளில் பத்தாவது வளைவைக் கடந்ததுமே பசுஞ்செழுமைக்குடி... தெரியத் தொட...



ஏலகிரிப் பழங்குடி மக்கள் உரையாடும் காட்சி

மலை முகட்டை அடைய அடைய, காட்சி முழுதுமாக மாறிவிடுகிறது; உருட்டுக் கட்டையாக உயர வளர்ந்த வாட்டில் வகை மரங்கள்; மலையின் கிழக்குப் புறத்தில் இனிய பசுமை வெளி; வகை வகையான கனி மரங்கள், எழில் கோலம் காட்டும் மலைச் சரிவுகள், கழனிகள், சாலைகள், காட்டுத் தடங்கள் வழியே சென்றால் அமைதியில் துயிலும் கிராமங்கள், சூது வாதற்ற மலை வாழ் மக்கள், இம் மலையகத்துக்குப் புதிய எழில் வடிவம் தருவதற்குச் செயலாக்கப்பட்டு வரும் ஆக்கப் பணிகள் —இவை அனைத்தையும் காண முடிகின்றது.

ஏலகிரி மலை உச்சி உயரம் 4,628 அடி. தட்ப வெப்ப நிலை, கோடைக் காலத்தில் 80 டிகிரி; குளிர் காலத்தில் 70 டிகிரி. ஆண்டுச் சராசரி மழை அளவு 35 அங்குலம் முதல் 45 அங்குலம் வரை. மொத்தம் 13 கிராமங்கள் இந்த மலையில் உள்ளன. இவை அனைத்தும் சேர்ந்தது ஏலகிரி ஊராட்சி மன்றம். இந்த மலை நிலத்தின் பரப்பளவு 18.25 சதுர மைல்கள்.

ஊராட்சிக்கு உட்பட்ட அத்தனாவூர், நிலாவூர், மங்கலம், கொட்டையூர், தாயலூர், புங்கனூர், புத்தூர், பாடுகனூர், ராயநரி, மேட்டுக்கணியூர், பள்ளக்கணியூர், கோட்டூர், முத்தனூர் ஆகிய பதின்மூன்று குக்கிராமங்களில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட நான்கு கிராமங்கள் பெரியவை. மற்றவை சில சில வீடுகளைக் கொண்டவை. மொத்த மக்கள் தொகை சுமார் 4,000.

## பழமுதிர் சோலை

இந்த மலை நிலத்தின் மண் வளத்தைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். பழ மரங்கள் நன்கு வளரக்கூடிய செம்மண் நிலம் இது. அடிக்கடி உரம் தேவைப் படாத சாரமுள்ள மண். நிலத்தில் பெருங் கற்கள் மிகுதி. ஒரு ஏக்கர் நிலத்தில் மூன்றில் ஒரு பாகம் அல்லது சரி பாதிப் பாகம் கூட கல்லாக இருக்கும். ஆனால் அந்தக் கல் கலந்த நிலத்தில்தான் கனி மரங்கள் செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்ந்து பயன் தருகின்றன. ஆங்காங்கே பரவலாக சிவந்த செம்மாதுளை காய்த்துத் தொங்குவது அழகான காட்சி. இந்த நிலத்தில் பலா மரங்களும் மிகுதி; பலன்களும் மிகுதி. கொய்யா, மா, வாழை, எலுமிச்சை, ஆரஞ்சு விளைகின்றது.

கவனிப்பற்ற இடங்களில் கூட இந்த மரங்கள் வளர்ந்துள்ளன. சந்தன மரங்கள், ஆங்காங்கே காணப்படுகின்றன. தனியார் தோட்டங்களில் காபி பயிரிட்டதில் வெற்றி கிடைத்துள்ளது. மிளகுக் கொடி வைத்துப் பார்த்ததில் மிளகு சடை சடையாகக் காய்த்துத் தொங்கும் காட்சியைக் காண முடிந்தது. கடுகு, வெங்காயம் ஆகியனவும் குறிப்பிடத் தக்க விளைபொருட்கள்.



அமைதி தவழும்



ஏலகிரி வாழ் மக்கள்

இயற்கைச் செல்வர்களாக இங்கு வாழும் பழங்குடிமக்கள், விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். கேழ்வரகு என்று சொல்லப்படும் ராகி தான் இவர்கள் உணவுக்காகப் பயிரிடும் தானியங்களில் முக்கியமானது. சாமை, வெள்ளைச் சாமை, கருஞ் சாமை, தினை, கொள்ளு, துவரை, உளுந்து, எள், பேய் எள் முதலியனவும் பயிரிடுகின்றார்கள். அனைத்தும் வானம் பார்த்த பூமிப் பயிர்களே. சில இடங்களில் கிணற்றுப் பாசனத்துடன் சிறு அளவில் நெல், கரும்பு சாகுபடி நடக்கிறது.

## ஆசைகளற்ற மக்கள்

இந்த மண்ணில் தக்காளி, தழைத்துக் கிளைத்துச்செழித்து வளர்கிறது. வானம் பார்த்த பயிராகவே இது வளர்கிறது. நீர் பாய்ச்சுவதும் உண்டு. கீழே இருந்து சென்று தக்காளி வாங்கி வியாபாரத்துக்கு அனுப்புகிறார்கள். மக்களின் நெரிசல் இல்லாத நிலம், இந்த மலை நிலம். அசுத்தங்கள் குறைவு. தூய காற்று; துப்புரவான சூழல்; சுருக்கமாக ஒரு தூய நிலம் என்று சொல்லலாம்.

ஏலகிரி வாழ் பழங்குடி மக்கள் ஓரளவு ''ஞானிகள்'' என்று குறிப்பிடத் தக்கவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு, இவர்களுடன் பேசிப் பார்த்த வரை, வாழ்க்கையில் மிக மீறிய பற்றும் இல்லை; வெறுப்பும் இல்லை. ஆசைகள் குறைவு; தேவைகள் குறைவு. எதிலும் அக்கறையற்ற தன்மை!

இவர்கள் உழைக்காமலும் இல்லை. மழை பெய்ததும் கழனி சென்று உழுகின்றார்கள். விதைக்கிறார்கள். அறுவடைக் காலத்தில் அறுக்கப் போகிறார்கள். வேலை கிடைத்தால் செய்கிறார்கள். ஆனால் வேலை இல்லையே என்று அலட்டிக் கொள்வது கிடையாது. குழந்தைச் செல்வம் உண்டு. ஆனால் அதுவும் அளவுக்கு மீறி இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததில் மாநில அரசினர் பரிசு, மத்திய அரசினர் பரிசு இரண்டையும் பெற்றது, ஏலகிரி ஊராட்சி!

''உங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறீர்களா?'' என்று கேட்டால் ''படிக்கிறவர்கள் படிக்கிறார்கள். படிக்கச் செல்லாதவர்கள் படிக்காமல் இருக்கிறார்கள்'' என்று விருப்போ வெறுப்போ இல்லாமல் பதில் அளிக்கிறார்கள் மூத்த தாய்மார்கள்.

மிகப் பெரும்பாலான குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் சிறு சிறு துண்டு நிலங்களே சொந்தம். வருமானம் மிகக் குறைவு. அவர்களுடைய குடும்ப நிலை, வாழ்க்கை நிலையை அறிய இரண்டொரு குடிசைக்குள் சென்று பார்த்த போது, ஏறக்குறைய 'வெறுமையே' நிலவி நின்றது. பண்டமில்லையே தவிர, கள்ளமற்ற சிரிப்புக்குக் குறைவில்லை. சூது வாதற்றவர்களாகவே தோன்றுகின்றனர், இந்த மக்கள்.

தமிழ்தான் பேசுகிறார்கள். சற்று இழுத்தாற் போல் பேசுகின்றனர். மூத்த வயதினரிடையே மலைச் சாயல், பழங்குடிச் சாயல் அதிகம். மற்றபடி இளைஞர் சமூகத்தினர் ஏறக்குறைய, சம வெளியில் உள்ள கிராம மக்களைப் போலத்தான் இருக்கின்றனர். நாச்சி, காவி என்ற பெயர்கள் அதிகம். இளம் தலைமுறையினர் பெயர், மற்ற கீழ் நிலங்களில் உள்ள பெயர்களாகவே இருக்கின்றன.



அழகின் வடிவம் ஏலகிரி

இம் மலை முழுவதிலுமாக இரண்டொரு திண்ணைக் கடைகள், இரண்டு மூன்று டீக்கடைகள் தான் உண்டு. இவையும் கீழே இருந்து சென்றவர்களால் தான் நடத்தப்படுகின்றன. பொருட்களை லாரிகளில் கொண்டு செல்வதென்றால், ஏகப்பட்ட வண்டிச் சத்தம் ஆகின்றது. மலை மேலே கொண்டு போய்க் கொடுப்பது என்றால், ஒரு லாரி மணல் ரூ. 150 ஆகின்றது.

**கழுதை வாகனம்**

பாரம் சுமக்க இவர்கள், இயற்கை வாகனமாகக் கழுதைகளைப் பயன்படுத்துகின்றனர். கீழே இருந்து அரிசி, சிமிட்டி, மணல், மளிகைச் சாமான்கள், சுண்ணாம்பு முதலியவைகளை மேலே கொண்டு போவதற்கும் அங்கிருந்து உளுந்து, துவரை, பலாப் பழம், மாங்காய் முதலியவைகளைக் கீழே கொண்டு வருவதற்கும் ஈடுபடுத்தப்படும் கழுதை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4 வருமானம் கிடைக்கிறது. மலையில் புல் இருக்கிறது. பராமரிப்புச் செலவு குறைவு. 10 கழுதைகள் வைத்துப் பேணினால் ரூ. 40 ஒரு நாள் வருமானமாகக் கிடைக்கிறது.

ஏலகிரியின் இந்தப் பொது தோற்றம் பொதுத் தன்மைகள் தவிர்த்து, அங்கு உருவாகியுள்ள புதுமைப் படைப்புகள், இந்த எழில் நிலத்துக்கு ஏற்றம் தருவனவாக அமைந்துள்ளன. வசதிகளையும் மக்கள் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்த புதுப் புதுப் பணிகள் செயல் வடிவம் பெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறைப் பயணிகள் இல்லம் 1970-ல் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு சிறப்பு அறைகள், இரண்டு சிறு அறைகளுடன் பயணிகளுக்கு உற்ற தங்குமிடமாக உதவி வருகின்றது. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ரூ. 1,20,000 செலவில் இப்போது கட்டி முடித்துள்ள திருமண மண்டபம் என்று சொல்லப்படும் அழகிய சமுதாயக் கூடம், விரைவில் பயன்படுத்தத் தக்க நிலையில் இருக்கின்றது. ரூபாய் 20,000 செலவில் இங்கு மேல் மட்டத் தண்ணீர்த் தொட்டி கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.



ஏலேலோ ஏலகிரி!

* * *

ஏலகிரியில் காக்கை, பருந்துகள் கிடையாது இந்தத் தட்ப வெப்ப நிலை ·ெக்காமல்தான் அவை போய் விட்டனவாம்.

பாம்புகள் அதிகம் இருக்கின்றன. ஆனால் விஷ பாம்புகள் குறைவு. பாம்பு தீண்டி மரணம் என்பது மிகமிகக் குறைவு.

தேள் கடித்தால் இங்கு வலிப்பதில்லை.



ஏலகிரியின் எழிலார்ந்த தோற்றம்

ஒய். எம். சி. ஏ. தங்கும் விடுதி, மிஷனரி விடுதி, ரயில்வே அமைச்சகத்தின் ஒலி அலை நிலயம், மாதா கோயில், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் செல்வந்தர்கள் கட்டிக் கொண்டுள்ள ஒரு சில நவீன இல்லங்கள் இவை எல்லாம் ஏலகிரியின் புதிய எழில் வடிவத்துக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. சமுதாயக் கூடத்தை அடுத்த மேட்டில் எழிலார்ந்த இடத்தில் புதிதாக அமைந்து உள்ள முருகன் கோயிலுக்கு வருவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

**தாவர இயல் பூங்கா**

மாநிலத்தின் இயற்கை வளங்களை எல்லாம் பயன்படுத்தியும் மேம்படுத்தியும் வரும் தமிழக அரசினர், ஏலகிரி மலையை, தமிழ்நாட்டின் நாலாவது மலை வன நகராக ஆக்க எண்ணி இருக்கின்றனர். இவ்வகையில் முறையாகத் திட்டமிட்டு, செயல்படுத்தியும் வருகின்றனர். கோடையைக் கழிக்க உதவும் மலைவன நகரம் என்றால், அதற்கென சில நியதிகளை மைய அரசினர் குறிப்பிட்டுள்ளனர். அதாவது தாவர இயல் பூங்கா (Botanical garden) மற்றும் ஏரி அவசியம் இருக்க வேண்டும் என்பது நியதி. இப்போது உருவாக்கப்பட்டுவரும் புதிய தாவர இயல் தோட்டமும், மீன்துறையினர் பேணுதலுக்கு விடப்பட்டுள்ள பழைய ஏரி ஒன்றும் இந்தத் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும்.

தாவர இயல் பூங்கா அமைப்பதில் தொடக்கக் கட்ட வேலை முற்றுப் பெற்று விட்டது. வசதியான இடத்தில் சாலையை

வேளாண்மைப் பயிர்களுக்கு இரவில் காட்டுப் பன்றிகள் மூலம் சேதம் அதிகம்.

ஏலகிரியின் சிறப்பைப் போற்றிட வெளி மக்களின் கவனத்தை இதன்பால் திருப்ப, சென்ற ஆண்டு கோடை விழா ஏலகிரியில் சிறு அளவில் கொண்டாடப் பட்டது.

இந்த ஆண்டு கோடை விழாவினைச் சிறந்த முறையில் கொண்டாட வேலைகள் முனைப்பாக நடை பெற்று வருகின்றன.

பெற்றவை. மேலமட்ட குடி நீர் வசதியும் ஓரிடத்தில் செய்யப்பட்டுள்ளது.

மலைக்குச் செல்லவும் அங்கிருந்து வரவும் தனியார் பஸ் ஒன்று மட்டும் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை சென்று வருகின்றது. வரும் போது பஸ் மேல் கூரை ஒரே பலாப்பழம் மயம். பஸ்சில் கூட்டம் மிக மிகுதி.



பாரம் சுமந்திடப் பெரிதும் பயன்படும் கழுதைகள்.

அடுத்து எட்டு ஏக்கர் நிலம் கம்பி வேலியிடப்பட்டு, சமன்படுத்தப்பட்டு பண்படுத்தப்பட்டுள்ளது. கிணறு வெட்டப்பட்டு, நீர் இறைக்கும் பம்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பழச் செடிகள் மற்றும், இந்த மலை நிலத்தில் நன்கு வளரக்கூடிய அரிய கன்றுகள் முதலியவைகளைக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பருவ மழை தொடங்கியதும் செடிகள் கொண்டு வந்து வைக்கப்பட்டு இந்தத் தோட்டமும் பசுமை ஒளி வீசத் தொடங்கிவிடும். இந்தத் தோட்டம் அமைப்பதில் மொத்தச் செலவு மதிப்பு ஒன்றரை இலட்சம் ரூபாய். இதில், இது வரை 80 ஆயிரம் செலவிடப்பட்டிருக்கிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கு அரசு மானியம்.

ஊராட்சி ஒன்றியம் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தாவர இயல் தோட்டத்தை அமைப்பதில் அரசினர் தோட்டக்கலை வல்லுநரின் சேவை கோரிப் பெறப்பட்டுள்ளது.

மீன் துறையிடம் விடப்பட்டுள்ள சிறிய ஏரி, மிகவும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றது. இந்தக் குளத்தில் ஏராளமாக மீன் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மலைவாழ் மக்கள் இறைச்சி உண்பவர்கள் ஆயினும் மீன் உண்பதில்லை.

**இதர வசதிகள்**

மலைநிலத்தில் சாலை வசதிகளை மேம்படுத்த, தார் போட்ட சாலைகளை அமைக்க ரூ. 2 இலட்சம் செலவில் திட்டம் அரசினரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. இந்த மலைக் கிராமங்கள் மின்சார வசதி

ஏலகிரி மலைக்குப் போய்வருவோர், அலுவல் காரணமாக இருப்போர் தவிர்த்து, மற்ற மக்கள் அனைவரும் பழங்குடியினரே! எனவே வளர்ச்சிப் பணியின் பயன்கள் பெருமளவு அவர்களையே சேருகின்றன. இந்த மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஒன்றும், இரண்டு தொடக்கப்பள்ளிகளும் இருக்கின்றன. உணவு, உறைவிட வசதி உள்ள அரசினர் மலைசாதி மாணவர் விடுதி 1963-லிருந்து இயங்கி வருகின்றது. 1970-ல் இவ்விடுதி, சொந்தமான புதுக்கட்டட வசதியைப் பெற்றுள்ளது. 45 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவர்களில் 30 பேர்கள் மலைவாழ் வகுப்பினர். 15 பேர்கள் பிற்பட்ட வகுப்பினர். படிப்பிலே ஆர்வம் பெற்றோர்களுக்கும் குறைவு; பொது




# புத்தக உலகின் நண்பன்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைவராக இருந்து வரும் இந்தப் புத்தக டிரஸ்ட், பல அரிய தமிழ்ப்பணிகளை ஆற்றி வருகின்றது.

1955-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாள் பண்டித நேரு அவர்களால் துவக்கி வைக்கப்பெற்ற இப் புத்தக டிரஸ்ட், தென்னகப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களாலும், பிற அறிஞர் பெருமக்களாலும் நடத்தப் பெறுகிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் அந்தந்தத் துறை வல்லுநர்களால் எழுதப்பெற்ற சிறந்த நூல்களை வெளியிட உதவுகிறது. இது வரை 605 நூல்களை வெளியிட்டுள்ள டிரஸ்ட் தமிழில் 196 நூல்களையும், தெலுங்கில் 196 நூல்களையும், கன்னடத்தில் 111 நூல்களையும், மலையாளத்தில் 140 நூல்களையும் குறைந்த விலையில் வெளிவர உதவியுள்ளது.

சிறுகதை, புதினம், நாடகம் கவிதை, விஞ்ஞானம், வரலாறு தத்துவம், சிறுவர் இலக்கியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நூல்களை வெளியிட்டு ஆண்கள் பெண்கள், குழந்தைகள் எல்லாருக்கும் இன்பமூட்டி வருகிறது.

தமிழில் 'புத்தக நண்பன்' என்னும் மாத இதழையும் மற்ற மூன்று மொழிகளில் முத்திங்கள் இதழ்களையும் வெளியிட்டு வந்த டிரஸ்ட், தற்போது உலகைக் காட்டும் பல

"காலகாலத்துக்கும் பயன் படத்தக்க இலக்கியங்களை வாங்கிப் படிப்போர் குறைவாகவே உள்ளனர்'' என்று புத்தக விற்பனையாளர் குறைபட்டுக் கொள்கிறார்.

''இன்றைய வாசகர்கள் வெறும் பொழுதுபோக்கு நாவல்களையே விரும்பிப் படிக்கின்றனர். அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அவர்கள் தொடுவது கூட இல்லை...'' என்று சலித்துக் கொள்கிறார் ஒரு நூலகர்.

''கண்ட புத்தகங்களைப் படிக்கிறானே தவிர, பாடப்புத்தகங்களைப் படித்து நான் பார்த்ததில்லை!'' என்று வருத்தப்படுகிறார் ஒரு தந்தை.

இப்படி எல்லாத் திறத்தாரையும் ஏங்க வைக்கும் இந்த அவல நிலையை இன்றே போக்கிட வேண்டும். படிக்கும் பழக்கத்தை-படிக்கும் ஆர்வத்தை வளர்க்க படித்தறிந்தோர் முன் வர வேண்டும். படிக்கும் ஆர்வம் வளர என்ன செய்ய வேண்டும்?

இந்த வினாவுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பதில் தருகிறார்:

''படிக்கும் பழக்கத்தைத் தொடக்கப் பள்ளியிலிருந்தே தொடங்க வேண்டும். பள்ளிகளில் ஒரு வாரத்தில், ஒரு 'பீரியட்' இதற்காக ஒதுக்க வேண்டும். அறிவு வளரத் தூண்டுகோலாயிருக்கும் பல்வேறு நூல்களைப் படிக்க வைப்பதன் மூலம் இந்தப் பழக்கத்தை நாம் வளர்க்கலாம்..''

நல்ல நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்ற வகையில் சென்னையில் ஓர் அமைப்பு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அதுதான் 'தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்' (Southern Languages Book Trust).




டிரஸ்டின் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில்...

கணியான 'யுனெஸ்கோ கூரியர்' என்னும் இதழைத் தமிழில் வெளியிட்டு வருகிறது.

'கூரியர்' இதழ் வெளியீட்டிற்கெனத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ. 24,500 உதவித் தொகையாக அளித்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

புத்தக விற்பனைத் துறையில் புதிய புதிய முயற்சிகளைச் செயல்படுத்தி வரும் டிரஸ்ட் தனியாகவும் யுனெஸ்கோ, ஃபோர்டு ஃபௌண்டேஷன், மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்போடும் மொத்தம் சுமார் 20-க்கு மேற்பட்ட புத்தகத் தயாரிப்பு, மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் தயாரித்தல் பற்றிய பயிற்சி வகுப்புகளையும், கருத்தரங்குகளையும், வெளியீடு, பங்கீடு பற்றிய ஆய்வுகளையும், குழந்தை இலக்கியப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

படிக்கும் பழக்கத்தை வளர்க்கவும், நல்ல புத்தகங்களை அறிமுகப்படுத்தவும், அறிவுப் பசியை அகற்றவும் கேரள, கர்நாடக மாநிலங்களில் பெருவாரிப் புத்தக விற்பனைத் திட்டத்தையும், தமிழ்நாட்டில் வீட்டு நூலகத் திட்டத்தையும் சோதனை முறையில் செயல்படுத்தியுள்ளது. நான்கு மொழி மாநிலத் தலைநகர்களிலும் அவ்வவ் மொழிப் புத்தகக் காட்சி அரங்குகளையும் இது நடத்தியுள்ளது.'

இலாப நோக்கம் சிறிதுமின்றி, தென் மொழிகளில் ஏதாவதொன்றை மட்டுமே அறிந்தவர்களுக்கு அறிவுச் செல்வங்களை வாரி வழங்குவதைத் தலையாய கடமையாகக் கொண்டு இயங்கிவரும் இது, ஐ.நா. வின் அங்கமான உலகக் கல்வி, விஞ்ஞான கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறாது பாடுபட்டு வரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடான 'கூரியர்' மூலம் பல துறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய' பதினாறு உலக மொழிகளில் வெளியிட்டு நற்பணியாற்றி வருகிறது. அனைத்துலகப் பிரச்சினைகளை ஒரு நிலைமையில் அணு அணுவாக அறிந்து கொள்ள உதவும் ஒரே சர்வதேச இதழ் இதுவேயாகும்.

இந்த இதழ் ஒவ்வொன்றும் ஒரு பொருளைக் குறித்த சிறப்பு மலராகவே வெளிவருகின்றது. ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ப நல்ல புதிய தமிழ்ச் சொற்களை இதில் வெளிவரும் கட்டுரைகளில் படித்து இன்புறலாம். இந்த இதழின் பொறுப்பாசிரியராக இருப்பவர் தமிழார்வம் மிகுந்த திரு. மணவை. முஸ்தபா. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழோடு சமஸ்கிருதத்தையும் கற்றவர். இவர் நெஞ்சுயர்த்திச் சொல்கிறார்: 'தமிழில் முடியும்!' என்று.

டிரஸ்டின் ஆதரவு வெளியீட்டு நூல்களில் புதினம், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், சமயம், விஞ்ஞானம், தத்துவம், மருத்துவம், வரலாறு, அரசியல், பயண நூல்கள், துணிகரச் செயல்கள், சட்டம், நுண்கலைகள், சிறுவர் இலக்கியங்கள் உண்டு. இவற்றுள் விஞ்ஞான நூல்கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மொத்த எண்ணிக்கையில் இவை 20 சதவிகிதம் ஆகும். சிறுவர் இலக்கியங்கள் 10 சதவிகிதமாகும்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் பொருட்டு இருமுறை தென்னக மொழிகளில் குழந்தை இலக்கியப் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்துள்ளது. இங்குக்குறிப்பிடத்தக்கதாகும். டிரஸ்ட் ஆதரவில் வெளிவந்

வாகவே குறைவு. மலைவாழ் சிறுவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, தச்சு-கருமான் வேலைத் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றையும் அரசினர் நடத்தி வருகின்றனர்.

நீண்டு, அகன்ற முற்றம், அதன் மூன்று பக்கங்களிலும் குடிசைகள் என்ற முறையில் இந்த மலைக் கிராமங்கள் அமைந்துள்ளன. குடிசைகளின் சுவர், மண் சுவர். தட்டிகளில் மண் பூசப்பட்டவையும் உண்டு. சுவர்களில் கோலம் போல சித்திரங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். கூரைகள் கணம் புல்லால் வேயப்பட்டவை. தீ விபத்து, பயம் இவைகளைத் தவிர்க்கக் கண்காணிப்புக்கு ஊரார் அனைவருமாகப் பொது ஊழியர் ஒருவரை அமர்த்திக் கொள்ளுகின்றனர். இதற்காக ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பருவ விளைச்சலுக்கு இவ்வளவு என்று அறுவடைக் காலத்தில் தானியம் தருகின்றனர். இந்த மக்களுக்கு, அபாயத்துக்கு இரையாகாத கல் வீடுகள் கட்டிக் கொடுக்கும் அரசினர் திட்டம் படிப்படியாகச் செயலாக்கப்பட்டு வருகின்றது. அத்தனூரில் 20 வீடுகளும் மங்கலத்தில் 10 வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன. பாடுவானூரில் 10 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 5 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. நிலாவூரில் கட்டியிருப்பது 10 வீடுகள். கட்ட இருப்பவை 3 வீடுகள்.

கிராமிய வீட்டு வசதித் திட்டம் மூலம் 45 வீடுகள் கட்டும் திட்டம் ஏற்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு வீட்டுக்கு ரூ. 4,000 வீதம் வீட்டு வசதிக் கடன் தரப்படும். ஏலகிரி மக்கள், தங்களை மலைசாதியினர் என்றும் வேளாளர்-கவுண்டர் என்றும் கூறிக்கொள்கின்றனர். ஏலகிரி பெயர்க் காரணம் பற்றி ஆதாரப் பூர்வமான தகவல்கள் ஏதும் தெரியவில்லை. இம்மக்களின் சமூகப் பழக்கவழக்கங்கள் வாழும் நிலத்துக்கு ஏற்பவும் வாழ்க்கை நிலைக்கு ஒப்பவுமே உள்ளன. ஏலகிரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. கோவிந்தராச கவுண்டர், இச்சமூகத்தின் பழக்க வழக்கங்கள் குறித்து விவரித்துச் சொன்னார்.

**திருமண முறை**

இங்கு திருமணங்கள் எல்லாம் கோஷ்டித் திருமணங்கள் தாம். ஒரு ஆண்டில் பெரும்பாலும் ஒருநாள் தான் திருமணம் நடைபெறும். 15-20 அல்லது 30-40 திருமணங்கள் கூட நடந்துவிடும். திருமணம் மொத்தம் நான்கு நாட்கள். முதலில் நாள் குறிப்பிடுவது, இரண்டாம் நாள், பந்தல் போடுவது; மூன்றும் நாள் விருந்து; நான்காம் நாள் தாலி கட்டுதல்.

எல்லோருடைய அரிசியையும் சேகரித்து, ஒரே இடத்தில் சமைத்து ஊர் முழுதுக்குமாகப் பரிமாறுவார்கள். விருந்துக்கு ஆடு வெட்டுவதும் உண்டு. சாமைச்சோறு - கறிக்குழம்பு; அதாவது ஒரு துண்டுகறி-குழம்பு. இவ்வளவுதான் விருந்து. விருந்து முடிந்த பின்பு நான்காம் நாள் தாலி கட்டும்போது கூட்டம் எதுவும் இருக்காது. இரண்டு மூன்று பெரியவர்கள் இருந்து நடத்தி வைப்பார்கள்.

திருமணத்துக்காக மணமகள் வீட்டார் ரூ. 125-ம் பெண் வீட்டார் ரூ. 60-ம் ஊர் முக்கியஸ்தர்களிடம் கொடுத்துவிட வேண்டும். இப்படித் தரப்படும் பணத்தைக்கொண்டு தான் பந்தல், சாப்பாடு, மேளம், ஒலிபெருக்கி எல்லாம் வைத்து நடத்துவார்கள். ஒரே சமயத்தில் பல திருமணங்கள் நடப்பதால் செலவு குறைகிறது.

பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார், தானியமும், ரூ. 500 அல்லது வசதிக்கு ஏற்ப ரூ. 200-க்குக் குறையாமல் பணமும் தர வேண்டும். இந்த ஆண்டில் மே 4-ந் தேதி நிலாவூரில் 26 தம்பதிகளுக்குத் திருமணம் நடந்தது. எங்கும் நடப்பது போல வயது வந்தவர்கள் திருமணம்தான்.



வெளிநாட்டு உதவி நிறுவனங்களால் அனுப்பப்படும் கம்பளிக்கோட்டு அணிந்தபடி உரையாடும் பெரியவர்

**ஏலகிரி, இதர மலையூர்கள் வெப்ப தட்ப நிலை**

| இடத்தின் பெயர் | உயரம் | மழை அளவு | கோடை வெப்பம் | குளிர் கால தட்பம் |
|---|---|---|---|---|
| கோடைக்கானல் | 7,688 அடி<br>2,343 மீட்டர் | 65 அங்குலம்<br>165 செ. மீ. | 19·8 செ. | 8·3 செ. |
| உதகை | 7,500 அடி<br>2,285 மீட்டர் | 48 அங்குலம்<br>123 செ. மீ. | 25 செ. | 8·3 செ. |
| ஏலகிரி | 4,628 அடி | 35லிருந்து<br>45 அங்குலம் வரை. | 29·5 செ. | 22 செ. |





ஏலகிரியில 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் ஆங்கிலோ இந்தியர் நியூமன்

**குன்றுகள், குகைகள்**

ஏலகிரி மலைகளில் வடபுறத்தில் அடர்ந்த காட்டுப் பகுதியில் 'மகாதேவன் குகை' என்ற இடம் அறுபது அடி நீளமும் 10 அடி உயரமும் உள்ள குகையினைக் கொண்டது. இதுவும் சுவாமி மலைக் குன்று, புளிச்சிக்குட்டை ஆகிய இடங்களும் எழிலார்ந்த இடங்கள். இயற்கை எழில் காட்சி இடங்களாக மேம்படுத்துவதற்குரிய கூறுகள் நிரம்பப் பெற்றவை இவை.



ஏலகிரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. கோவிந்தராஜ்

ஊரில் மாரியம்மன், பிள்ளையார் கோயில் உண்டு. பொங்கல்தான் இவர்கள் கொண்டாடும் பெரிய விழா. அப்போது மாரியம்மன் பண்டிகை கொண்டாடுகிறார்கள். ஊரில் தகராறுகள், குற்றங்கள் முதலியவைகளை விசாரிக்க ஊரின் முதியவர்கள் கூட்டுகின்ற இடம் உண்டு. அந்தப் பொது இடத்தில் குளிர் இரவுகளில் நெருப்பு கனன்று கொண்டே இருக்கும்.

துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான் என்று மகான் புத்தர் கூறினார். இந்த மக்களுக்கு ஆசைகள் குறைவு. அதுதான் போலும், துன்பங்களும் குறைவாகவே இருப்பதாகத் தோன்றியது.

நீண்ட நாள் வாழ்ந்தவர்கள் நிறைவாழ்வு கண்டவர்கள் மரணமடைந்தால் அவர்களைப் புதைக்கிறார்கள். மற்ற வகையில் இறந்தால் பிணங்களை எரிக்கிறார்கள்.

பழங்குடி மக்களுக்காக வெளிநாடு உதவி நிறுவனங்கள் வழங்கிய போர்வைகள், நல்ல கம்பளிக் கோட்டுகள் முதலியன அண்மையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப் பெற்றன. அந்த வகையில் 200 கோட்டுகளும் 200 போர்வைகளும் தரப்பட்டுள்ளன. இங்கு நிலையான மருந்தகம் இல்லை. வாரம் இரண்டு முறை இயங்கும் மருத்துவமனை வந்து பணியாற்றுகின்றது.

அந்த நாளின் மழைமாரி, இந்த நாளின் வறட்சி பற்றி அந்த மலையிலும் பேச்சு இருக்கிறது. ஆங்கிலோ இந்தியரான திரு. நியூமன், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கு குடியேறியவர். அப்போது சுமார் 14 ஆங்கிலோ இந்தியக் குடும்பங்கள் இங்கு இருந்தனவாம். ''குடியேறியோர் சங்கம்'' என்று ஒரு சங்கத்தையும் அவர்கள் அமைத்திருந்தனர். போக்குவரத்து, மருத்துவ வசதி இன்மை காரணமாக அவர்களில் பலர் குடிபெயர்ந்து விட்டனர். அப்பொழுதெல்லாம் 66 அங்குலம் வரை மழை பெய்தது.

**வளர்ச்சி வாய்ப்புகள்**

மலைகள் சூழ, அழகிய ஓர் இயற்கை வனம்போல விளங்கும் ஏலகிரிக்குப் போக்குவரத்துக்குப் பேருந்து வசதிகள் போதுமான அளவில் இல்லையே என்பதுதான், அங்குக் குடியமர்ந்தோர், போவோர், வருவோரின் பெரிய ஏக்கமாக இருக்கிறது. போக்குவரத்துக்குப் பேருந்து வசதி, தார்சாலை வசதி, மேலே உறைவிட வசதி, உணவுக்கு கான்டீன் அல்லது ஹோட்டல் போன்ற வசதிகள் அமையும் நாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். மருத்துவமனை வசதி, தொழிற்பயிற்சி வசதி அமையப் பெற்றால் வசதிகள் நிறைவு பெற்றுவிடும். பழமரங்கள் செழித்து வளர்ந்து சிறப்பான பலனும் தருவதாலும் நடுத்தரகர்களால், இப்போது விவசாயிகளுக்கு இழப்பே நேரிடுவதாலும், பழ விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் அவசியம் இங்கு வெகுவாக உணரப்படுகின்றது. பழப்பதன நிலையம் ஒன்றைத் தொடங்கவும் சாத்தியக் கூறுகள் உள்ளன. சிறுசிறு பழத்தோட்டங்கள் பல அமைக்கப்பட்டால் இந்த அழகிய நிலத்தின் எழிலும் பெருகும்; மக்களுக்குப் பயனும் பெருகும். தரமான கால்நடைகளை இங்கு பெருக்குவதற்கும் பேணுவதற்கும் வாய்ப்புகளும் நிறைந்துள்ளன.

பயிர்த்தொழில் செழித்திட உதவும் வகையில் மேலும் பாசனக் கிணறுகள், அட்டலாறு, அம்பலாறு பகுதிகளில் ஓடைகளுக்குத் தேக்கங்கள், விவசாயிகளுக்குக் கடன் உதவி, இலவசமாக உழவு மாடுகள், பழச் செடிகள் வழங்கல் முதலிய பணிகள் ஏலகிரியின் மேம்பாட்டுக்கு வழி வகுத்திடக் கூடியவை.

பஸ் வசதி, ஹோட்டல், தங்குமிடவசதி, தொழிற் பயிற்சி, மருத்துவ மனை என்று இவை எல்லாம் ஏற்பட்டால் இந்த எழிலார்ந்த நிலப்பரப்பின் தனிமை, தூய்மை, எழில், ஏகாந்தம் ஆகிய அனைத்துமே சற்றுக் குறையத்தான் செய்யும்.

என்ன செய்வது? ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுவது தானே இயற்கை நியதியாக இருக்கின்றது!

—சி. க. ரா.

...குழந்தை நூல்களில் ஐந்திற்கு மத்திய அரசுப் பரிசுகளும், இரண்டு தெலுங்கு நூல்களுக்கு ஆந்திர மாநில அரசின் பரிசுகளும், தமிழில் வெளிவந்துள்ள ஒன்றிற்கு 'யுனெஸ்கோ' பரிசும் கிடைத்துள்ளன. அண்மையில் குழந்தைகள் புத்தக டிரஸ்டின் சார்பில் தில்லியில் நடைபெற்ற சர்வதேசக் குழந்தைப் புத்தகக் கண்காட்சியில் இரண்டு டிரஸ்ட் நூல்களுக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன. இந்நூல்கள் அனைத்தும் டிரஸ்ட் ஆதரவு வெளியீடுகளாகும்.

வெளியிடுவதற்கான நூல்களை தேர்ந்தெடுக்க, அவ்வப்போது நிபுணர் குழுக்களை அழைத்து வெளியிடுவதற்கேற்ற தலைப்புக்களை இது தேர்ந்தெடுக்கின்றது.

நூல் வெளியீட்டிற்கென ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கடனுதவி செய்து, வெளியிடும் புத்தகத்தில் 25 சதவிகிதத்தை 33⅓ சதவிகிதம் கழிவு செய்து பிரதிகளை வாங்கித் தனது விற்பனையாளர்களின் மூலம் விற்றுக் கொள்கிறது. இவ்வாறு வெளியீட்டுத் துறையில் பதிப்பகத்தாருக்கு உதவத் தக்க ஒரு புதிய முறையைப் பின்பற்றிப் புதியபுதிய நூல்களை வெளியிட ஊக்கம் அளித்து வருகிறது.

டிரஸ்டின் இவ்வெளியீட்டுத் திட்டத்தின் வெற்றியைக் கண்ணுற்ற யுனெஸ்கோ நிறுவனம் தனக்காகத் தமிழ் நூல்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, டிரஸ்ட் பொறுப்பேற்று, உலக மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும் நூல்களையும், விஞ்ஞானம், பொதுவான சில கலாச்சாரம் சம்பந்தப்பட்ட நூல்களையும் யுனெஸ்கோ உதவியுடன் டிரஸ்டின் ஆதரவு வெளியீடுகளாக அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளது. இது வரை யுனெஸ்கோவிற்காக டிரஸ்ட் ஆதரவு வெளியீடுகளாக வந்துள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும். அதேபோன்று ஆந்திர அரசிற்காக 12 விஞ்ஞான நூல்களையும், தமிழ்நாடு அரசுக்காக 18 நூல்களையும் தனது ஆதரவு வெளியீடுகளாக டிரஸ்ட் வெளியிட்டுள்ளது.

கடைசல் பொறி, அச்சுவேலை, இழைப்புப் பொறி, பற்றவைப்புப் பொறி, உருவமைக்கும் பொறி பற்றிய நூல்களைத் தமிழக அரசுக்காக இது வெளியிட்டுள்ளது.



புத்தக விமர்சனப் போட்டியையும், வீட்டு நூலகத் திட்டத்தையும் செயல்படுத்துவதற்காக ஆந்திர நாட்டுப் புத்தகப் பங்கீட்டாளருக்குப் பெருமளவில் உதவியது. புத்தக நிலையங்களில் விற்பனைக்கான நூல்களை கவர்ச்சிகரமாக அடுக்கி வைப்பதற்கான 'கம்பிஸ்டாண்டு'களைத் தயாரித்து மிகவும் மலிவான விலைக்குக் கொடுத்து உதவியது.

ஆசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயும் புதிய புதிய நூல்களை அறிமுகப்படுத்தி, அவர்கட்குப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டு, கல்வி நிலையங்கள் தோறும் புத்தகக் கண்காட்சிகளை நடத்தி நூற்றுக்கணக்கான புதிய நூல்களை அறிமுகம் செய்துள்ளது. கேரள நாடெங்கிலும் புத்தக வாரம் (Book Week), புத்தக மாதம் (Book Month) என விழாக்களை நடத்திப் புத்தக விற்பனைத் துறையில் புது விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் தொடங்கப்பட்ட புரட்சிகரமான விற்பனைத் திட்டமே 'பெருவாரிப் புத்தக விற்பனைத் திட்டம்' (Mass Marketting). இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் செய்தித்தாள் முகவர்கள் மூலம் புத்தகங்களை விற்க ஏற்பாடு செய்வதாகும்.

இத்திட்டம் முதன் முதலாக கேரள மாநிலத்தில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஆறு மாதங்களில் 76 தலைப்புக்களில் முகவர்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட 70,000 பிரதிகளில் ரூ. 50,000 மதிப்புள்ள 31,259 நூல்கள் விற்பனையாயின. இதே போன்றதொரு திட்டம் 1965-ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் தொடங்கிச் செயல்படுத்தப்பட்டது. இதுவரை இத்தகைய பல்வேறு விற்பனைத் திட்டங்களின் வாயிலாகப் பல இலட்சம் புத்தகங்களை வாசகர்களுக்கிடையே விற்பனை செய்துள்ளது டிரஸ்ட்.

அண்மையில் தமிழில் வெளிவந்துள்ள-வரவிருக்கிற எல்லாத் தமிழ் நூல்களையும் புத்தகம் வாங்க விரும்புவோர் ஒரே இடத்தில் காணவும், நூல்களைப் பெற 'ஆர்டர்' தரவும் வசதியாகப் பதிப்பாளர்களின் ஒத்துழைப்போடு புத்தகக் காட்சியரங்குகளையும், காட்சியரங்குகளில் இடம்பெறும் நூல்களைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் தரக்கூடிய புத்தக விவரத் தொகுப்பு நூலை (Bibliography) அந்தந்த மொழிகளில் தயாரித்து அதனை எல்லாக் கல்வி நிலையங்களுக்கும், நூலகங்களுக்கும் இலவசமாக அனுப்ப ஏற்பாடு செய்துள்ளது.

தென்னகத்தின் இன்றைய நிலையைத் துல்லியமாக மதிப்பிட்டறிய பல ஆராய்ச்சிகளை யுனெஸ்கோ அமைப்பின் உறுதுணையோடு தக்க நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து அவற்றை நூல் வடிவில் வெளியிட்டு உதவியுள்ளது. அவற்றுள் 1. தென்னகத்தில் படிக்கும் பழக்கம். 2. இளைஞர்களிடையே படிக்கும் பழக்கம். 3. பெண்களிடையே படிக்கும் பழக்கம். 4. சிறுவர் இலக்கியம் முதலிய ஆராய்ச்சிகள் மிகமிக முக்கியமானவைகளாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக முத்திங்கள் மொழி பெயர்ப்புப் பயிற்சி வகுப்பினை நான்கு மொழிகளில் நடத்தியதோடு புத்தகத் தயாரிப்பு, விற்பனைத்துறை, குழந்தை இலக்கியம் பற்றிய கருத்தரங்குகள் பலவற்றையும், பயிற்சி முகாம்களையும் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.

இவையன்றிப் பாடப்புத்தகங்களையும் அச்சிட்டுத் தமிழ் நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. தமிழக அரசின் 'தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம்' தமிழில் மட்டுமே பாடநூல்களை அச்சிட்டு வருகிறது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பள்ளிக்களுக்கான பாடப் புத்தகங்களை இந்தப் புத்தக டிரஸ்ட் அச்சிட்டுத் தருகிறது.

மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிடுவதற்கென சிறு அமைப்பாகத் தொடங்கப் பெற்ற இந்தப் புத்தக டிரஸ்ட் இன்று பெரிய அமைப்பாக வளர்ந்து, திராவிட மொழிகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் விளங்கிவருகின்றது.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச்செல்வம் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற பாட்டுக்கொரு புலவன் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில், பிறமொழிச் செல்வங்களைத் தமிழில் தரும் அமுத நிலையமாகத் திகழும் புத்தக டிரஸ்ட், புத்தக உலகின் நண்பன் என்று சொன்னால் அது மிகையாகாது.

—பி.வி.ஜி.



# எருமை மாடு அல்ல அருமை மாடு!

பசுவின் பால, பாடல் பெற்ற பால். ''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ?'' என்று ஆன்றோர் பாடியிருக்கிறார்கள். எருமையின் பால் அப்படி அல்ல. ஆயினும் நாட்டின் பால் வளப் பெருக்கத்துக்கு முக்கிய ஊற்றாக இருப்பது எருமைகளும் எருமைப்பாலுமேயாகும். கட்டித் தயிர், கெட்டி வெண்ணெய் வேண்டுமளவு பெருக்கிக் கொள்ளக் கூடிய மோர் என்ற அளவில் தாய்மார்கள் பலரும் எருமைப் பாலைத்தான் விரும்பி வாங்குகிறார்கள்.

நல்ல முறையில் பேணப்பட்டு வரும் சிறந்த பசுவின் பாலைக் காட்டிலும் இரண்டு மடங்கு வெண்ணெய்ச் சத்துச் செறிந்ததாக எருமைப்பால் இருக்கின்றது. புரதம், லாக்டோஸ் ஆகியவை பசும்பாலைக் காட்டிலும் எருமைப்பாலில் அதிகம். வெண்ணெய், நெய் ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்கவும் எருமைப்பால் தான் மிக ஏற்றதாக உள்ளது.

ஓர் எருமை ஒரு நாளில் கறக்கும்சராசரிப்பாலின் அளவு 7.82 பவுண்டு. ஆனால் பசு மாடு கறப்பது ஏறக்குறைய அதில் பாதி அளவுதான். இந்தியாவில் கறவைப் பசுக்களில் 94 சதவிகிதம், நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ பாலுக்குக் குறைவாகத்தான் கறக்கின்றன. 0.4 சதவிகிதம் பசுக்கள்தான் 2 கிலோவுக்கு மேல் கறக்கின்றன. எருமைகளை எடுத்துக் கொண்டால் 19 சதவிகிதம் எருமைகள் நாள் ஒன்றுக்கு 2 கிலோவுக்கு மேல் கறக்கின்றன. இது சராசரிக் கணக்கு. குறிப்பிட்டுச் சொல்லுவதென்றால், பால் உற்பத்தி இங்கு ஒரு படிமான அளவில் இல்லை. ஓர் ஈற்றுக் கறவையில் 200 கிலோ கிராம் என்ற அளவுக்கு மிகக் குறைவான கறவையும் உண்டு. ஓர் ஈற்றுக்கு 4,000 கிலோ பால் கறப்பவையும் உண்டு. எப்படியும் பாற் பண்ணைத் தொழிலிலும் பால் உற்பத்தியிலும் முக்கிய இடம் வகிப்பவை எருமைகளே என்பது தெளிவு.

கழிதட்டை, கழுநீர் ஆகியவைகளை உட்கொண்டும்கூட, அவற்றை நல்ல முறையில் செரித்து, நிறைந்த அளவு பாலாக மாற்றிக் கொள்ளக் கூடிய சீரணத் திறன் எருமைகளுக்குத்தான் உண்டு. ஏழை மக்களும் பேணக்கூடிய அளவில் பராமரிப்புச் செலவு குறைவு. கிடைக்கும் பலன் அதிகம். எருமைக் கடாக்கள் ஏர் உழ, பாரம் சுமக்க, வண்டி இழுக்கப் பயன்படுகின்றன.

**வளர்ப்பு எருமைக்கு உரிய இலட்சணங்கள்**

வளர்ப்புக்காகத் தெரிந்தெடுக்கப்படும் எருமை மாடு, பார்ப்பதற்கு இலட்சணமாக, பெண் எருமைக்குரிய பொலிவுடன் மென்மையான நடை உடையதாக இருத்தல் வேண்டும். மேல் தோல் பளபளப்பாகவும், கண்கள் பிரகாசமாகவும் இருத்தல் அவசியம். தலை சிறியதாகவும், நெற்றி அகன்றும், கொம்புகள் சிறியதாகவும் இருத்தல் நலம்.

நல்ல பால் தரும் எருமை, ஏறக்குறைய முக்கோண வடிவமான மூன்று ஆப்புகள் அமைந்தது போல வடிவம் பெற்றிருக்கும். நன்கு வளர்ச்சியடைந்த தெளிவாகத் தெரிகிற மென்மையான பால்மடி இருக்க வேண்டும். ரொம்பவும் தொங்கலான மடி கூடாது.

பால் கணக்கு

சமச்சீரான சத்துணவு என்ற கண்ணோட்டத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 285 கிராம் பால் தேவை என்று ஊட்டச்சத்து உணவு வல்லுநர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பால் சராசரி அளவு 135 கிராம்தான். எனவே தான் பால் உற்பத்தியைப் பெருக்குவதில் முனைப்பான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் தமிழகத்தில் பால் பண்ணை மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டிருப்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

மழைக்குறைவு, தீவன வசதிக்குறைவு, செழிப்பான வளர்ச்சி இல்லாத கச்சா வகைக் கால்நடைகள், முறையான பேணுதல் இல்லாமை ஆகியவைதான் நமது நாட்டில் பால் வளம் குறைந்திருப்பதற்கான காரணங்கள். இந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் நல்ல வளமான இனக் கால் நடைகளையும் நாட்டு இனக் கால் நடைகளையும் இணைத்து இனச் சேர்க்கை மூலம் கால்நடைகள் தர மேம்பாட்டுக்கான பணிகள் சீராக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் நாட்டு எருமைகள், குறிப்பாக உயர்தர முர்ரா எருமைக்கடாக்களு...

டன் சேர்க்கப்பட்டு, இன மேம்பாட்டுக்கு வழிகோலப் பட்டுள்ளது. முர்ரா எருமைகள் நமது நாட்டின் பல்வேறு இடங்களுக்கும், பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கும் ஏற்றதாக—பல்வேறு நிலைமைகளுக்கும் தன்னைப் பழக்கப் படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. உலகில் உள்ள மொத்த எருமைகளில் சரிபாதி இந்தியாவில் இருக்கிறது. இந்தியாவில் உள்ள மொத்த எருமைகள் 108 இலட்சம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள எருமைகள் சுமார் 27 இலட்சம் ஆகும்.

## முர்ரா எருமைகள்

முர்ரா எருமை இனத்தின் தாயகம் கங்கை-பிரம்மபுத்திரா படுகைப் பகுதிகளாகும். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மற்றும் பாகிஸ்தான் பர்மா, சீனு, தாய்வாந்து பிலிப்பைன்ஸ், மலேயா, எகிப்து ஆகிய நாடுகளிலும் முர்ரா எருமைகள் இப்போது பரவியுள்ளன. தமிழ்நாட்டில் எருமைகளின் தர மேம்பாட்டுக்காக மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும் கால் நடை மருத்துவ நிலையங்களிலும் முர்ரா பொலி கடாக்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செயற்கை முறைக் கரு நிலையங்களில் உயர் இன முர்ரா எருமைக் கடாக்கள் வைத்துப் பேணப் பட்டு வருகின்றன. இனப் பெருக்கத்துக்காகக் கிளை நிலையங்களுக்கு இவற்றின் விந்து சேகரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. மற்றும் சில நிலையங்களில் இயற்கை முறை இனப் பெருக்கத்துக்காக முர்ரா எருமைக்கடாக்கள் வைக்கப் பட்டுள்ளன. ஓரத்த நாடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கடந்த பத்து ஆண்டுக் காலப் பணிகளின் காரணமாக விவசாயிகளிடையே அதிகமான அளவில் முர்ரா எருமைகள் உள்ளன.

முனைப்பான கால் நடை மேம்பாட்டுதிட்டப்பகுதிகளில் எருமைகளின் கருக் கூறுத் தன்மைகள், முறையாக ஆய்வு செய்யப்பட்டு, செழுமையான இனப் பெருக்கத்துக்கு இடையூறாக உள்ள தடங்கல்கள் களையப்படுகின்றன. கவனமான முறையில் பேணுதல், ஊட்டமுள்ள தீவனம், நோய்த் தடுப்புச் சிகிச்சை, ஆரோக்கிய முறையில் இனச் சேர்க்கை, சிறந்த நிருவாக ஏற்பாடு ஆகியவை முக்கிய அம்சமாகக் கொண்டது முனைப்பான கால் நடை மேம்பாட்டுத் திட்டமாகும். இப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## அலமாதி பண்ணை

தமிழ்நாட்டில் முர்ரா இனக் கடாக்களின் பணிப் பலன்களை மேம்படுத்த இந்திய அரசாங்கம் செங்கற்பட்டு மாவட்டம் அலமாதியில் கால் நடை இன மேம்பாட்டுப் பண்ணை ஒன்றை நடத்தி வருகின்றது. அரசு கால்நடை வளர்ப்பு நிலையங்களுக்கு இன்னும் அதிகமான அளவில் முர்ரா எருமைக்கடாக்களை வாங்கவும் திட்டமிடப் பட்டிருக்கிறது. 1974—75-ல் ஆண்டுக்கு முர்ரா எருமைக் கடாக்களை வாங்குவதற்கு ரூ. 83,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

முர்ரா எருமைகள் சாதாரணமாக 4 ஆண்டுகளில் (இன்னும் அளவாகச் சொல்வது என்றால் 49 மாதத்தில்) ஈனும். ஓர் ஈற்றில் கறவைக் காலம் சுமார் 300 நாட்கள். பால் உற்பத்தி அளவு 1,400 கிலோவிலிருந்து 1,800 கிலோ வரை. இந்த இனம், பால் வற்றி இருக்கும் காலம் 199 நாட்கள். நன்கு முறையோடு பேணினால், உழைப்புக்கு மிகச் சிறந்த ஊதியம் தருவது முர்ரா எருமை வளர்ப்புத் தொழில்.



எருமைப் பண்ணையில் மிக இன்றியமையாத தேவைகள் நிழலும், தண்ணீரும் ஆகும். எருமையை ஓரளவுக்கு நீர் வாழ் பிராணி என்றே சொல்லலாம். வெய்யிலைத் தாங்காது. கடும் வெய்யிலில் சூட்டுக்கு உள்ளானால் பாதிக்கப்படும். தண்ணீர் இதற்கு நிறைய வேண்டும். இதே சமயத்தில் கடுங் குளிர் இருக்குமானால் அப்போதும் இதற்குப் பாதுகாப்பு வேண்டும். இதன் உடம்பில் வியர்வை வடிப்புச் சுரப்பிகள் மிகக் குறைவு. கோடை காலத்தில் நீர்த் தடாகத்தில் படுக்கவோ, அதல்லது இதன் மீது நீர் இறைக்கவோ வசதி செய்வது அவசியம்.

## தாக்கும் நோய்கள்

அடைப்பான், சப்பை நோய் கோமாரி நோய் ஆகியவைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள எருமைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுவது முக்கியம். மற்றும் கழிச்சல், காசநோய், வெக்கை நோய், வயிற்று உப்பிலும், வெள்ளை உண்ணி, அடைப்பு, அசீரணம், குடற் புழு, முதலிய நோய்களுக்கு இடம் தராமலும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மே... வேண்டும். நல்ல சுத்தமான சுற்றுச் சூழலில் வைக்கப்பட்ட கால் நடைகள் கூடுதலான பாலும் ஆரோக்கியமான பாலும் அளிக்கின்றன. அழுக்குப்படிந்த தீவனங்களைத் தரலாகாது. கறக்கும் எருமைகளுக்கு அப்படிப்பட்ட தீவனம் அறவே தரப்படலாகாது.

நல்ல வளமான தீவனம் தரப் படும் கால் நடைகள் தான் விரைவில் ''பலன்படும்'' பருவத்தை அடைகின்றன. போதுமான அளவு உடல் பருமனும், உடல் திண்மையும் அடையப் பெறாத கிடாரிகள், கருத் தரிப்பதற்குத் தகுதி உடையவை ஆகா. நல்ல வளர்ச்சி பெற்ற பின்னரே அவை பலன்படுவதற்கு விடப் பட வேண்டும்.

எருமை எம தரும ராசன் வாகனம் என்று புராணங்கள் கூறும். மந்த புத்தி உள்ளவர்களைத் திட்டுவோருக்கு எருமை தன் பெயரைத் தந்து பழியைத் தான் ஏற்றுக் கொள்ளும். பாலும் தந்து, பழியையும் ஏற்றுக் கொள்ளும் இதனை ''எருமை மாடு'' என்றல்ல ''அருமை மாடு'' என்றே சொல்லலாமே! — சி. க. ரா.

தன்னிச்சையாகத் திரியும் வன விலங்குகளைக் காண யாருக்குத்தான் ஆவல் இருக்காது?

பேருந்தில் சென்றுகொண்டே அவைகளைக் கண்டு களிக்கலாம். இதற்கு 'அடைக்கல வனம்' வழி வகுக்கிறது.

இந்த அடைக்கல வனத்தில், குசராத்திலுள்ள கிர் காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து சிங்கங்கள் இருக்கின்றன. இவை கூண்டுகளில் அடைக்கப் படவில்லை. பன்னிரண்டு எக்டேர் சூழ் பரப்புள்ள இயற்கைச் சூழ்நிலையில் அவை தன்னிச்சையாகத் திரிய விடப்பட்டுள்ளன. ஆனால், அவற்றைப் பார்க்கச் செல்கிறவர்கள்தாம் தங்கள் விருப்பம்போல் சுற்றி வர முடியாது. கம்பி வலைகள் போடப்பட்ட மோட்டார் வண்டிகள் அல்லது சிறிய பஸ்களில் ஏறிக்கொண்டு, வனத்தின் உள்ளே சுற்றி வந்து, சிங்கங்களை மிக அருகாமையில் அவர்கள் கண்டு களிக்கலாம்.

ஐதராபாத்தில் உள்ள நேரு விலங்குக் காட்சிப் பூங்காவில் இந்த 'அடைக்கல வனம்' அமைக்கப்பட்டுள்ளது. தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த வகையில் இதுதான் முதலாவது எனக் கருதப்படுகிறது.







# முட்டை இருந்தால் ஓவியம் தீட்டலாம்!

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். தேங்காய் ஓடுகளிலும், கயிற்றுப் பொருள்களிலும் கண்ணைக் கவரும் கவின்மிகு பொருள்கள் உருவாவதைப் பார்த்திருக்கிறோம். ஏன், அரிசியில்கூட திருவள்ளுவர் உருவத்தை உருவாக்கும் திறமையைக் கண்டு வியந்திருக்கிறோமல்லவா?

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஜருகூ என்னும் கிராமத்திலுள்ள ஓர் ஓவியர் முட்டையில் ஓவியம் வரைகிறார்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாமா என்ன? முட்டை இருந்தாலும் சித்திரம் வரையலாமே!

முட்டையில் ஓவியம் தீட்டி மூக்கின்மேல் விரல் வைக்க வைக்கும் இந்த ஓவிய இளைஞரின் பெயர் திரு. சிவசண்முகம். இவர் மானிதஹள்ளி என்ற ஊரிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்த முட்டை ஓவியம் எப்படி உருவாகிறது?

முட்டையை எடுத்து ஒரு துவாரம் செய்து அதன் வழியாக அதிலுள்ள பொருட்களை வெளியேற்றிவிட்டுக் கூர்மையான ஒரு பென்சில் மூலம் முட்டை ஓட்டின் உள்பகுதியில், தான் விரும்பும் ஓவியத்தைத் தீட்டுகிறார். பிறகு அதற்கு வண்ணங்கள் பூசப்படுகிறது. முட்டைத் துவாரத்தின் வழியாக அதிக சக்தியுள்ள ஒளியைப் பாய்ச்சும்போது முட்டை ஓட்டின் வெளிப்பகுதியில் ஓவியரின் கைவண்ணம் ஒளிவிடுகிறது.

இதுவரை இவர் அறிஞர் அண்ணா, இயேசு, தாஜ்மகால், இந்தியாவின் நுழைவாயில், நடராசர் போன்ற உருவங்களை மிக அழகாக வரைந்துள்ளார். ஓவியம் ஒன்றை வரைவதற்கு ஆகும் நேரம் 8 மணி.

இவரது ஓவியத்தை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேல் நாட்டினர் பாராட்டியுள்ளனர். இது சம்பந்தமாக இவரை அழைத்து இவருடைய ஓவியம் அடங்கிய கண்காட்சி ஒன்றை வெளிநாட்டில் நடத்தவும் ஏற்பாடு நடைபெறுகின்றதாம்.

— ஆர். வீராச்சாமி.

## பயண இசைவுச் சீட்டுக்குரிய விண்ணப்பங்கள் பெற புதிய வழிமுறை

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகியவற்றில் உள்ளோரின் பயண இசைவுச் சீட்டு (பாஸ்போர்ட்) விண்ணப்பங்கள் விஷயத்தில் வட்டார பயண இசைவுச் சீட்டு அலுவலகம் புதிய வழிமுறைகளை வகுத்துள்ளது. இப்புதிய வழிமுறைகள் மே மாதம் 27-ஆம் தேதியிலிருந்து அமலில் உள்ளது. விண்ணப்பதாரர்கள் பயண இசைவுக் கட்டணமாக 25 ரூபாயும், பயண இசைவுச் சீட்டு அனுப்புவதற்கான அஞ்சல் செலவுகளுக்காக 2½ ரூபாயும் மொத்தம் 27.50 ரூபாய் 'மணி ஆர்டர்' செய்ய வேண்டும். இதை நேரடியாக 'வட்டார பயண இசைவுச் சீட்டு அதிகாரி, சாஸ்திரி பவன், சென்னை-600006' என்ற முகவரிக்கு அனுப்பிவிடலாம். 'மணி ஆர்டர்' ரசீதை விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். விண்ணப்பத்தின் நகல், பயண இசைவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அளவு புகைப்பட பிரதிகள் நான்கு, நிதிவசதி சம்பந்தமான சான்றிதழ் அல்லது நிதிவசதி உறுதிமொழி ஆகியவற்றுடன் 20க்கு 14 சென்டிமீட்டர் அளவுள்ள சுயமுகவரி எழுதிய உறை ஒன்றையும் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். இவற்றை முதலில் மாவட்ட அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அதைத் தம் அறிக்கைகளுடன் வட்டாரப் பயண இசைவுச் சீட்டு அலுவலகத்துக்கு அனுப்புவர்.



# நாடெல்லாம் வரவேற்கும் நறுமணப் பொருட்கள்

அன்றாட வாழ்க்கையில் நறுமணப் பொருள்களும் தக்க இடத்தைப் பெற்று வருகின்றன. கொய்னா, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்க சிறப்பான வகையில் பணியாற்றி வருகிறது சின்கோனாத் துறை. இத்துறை ஆற்றும் பல்வேறு பணிகள் பற்றிய தகவல்களைக் கூறுகிறது இக்கட்டுரை.

தமிழ்நாடு அரசின் வணிக நிறுவனமான சின்கோனாத் துறையில் தயாரிக்கப்படும் கொய்னாப் பொருட்களுக்கு அவற்றின் தரம் காரணமாக அந்நியச் சந்தைகளில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனி, சோவியத் யூனியன், இங்கிலாந்து போன்று வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இப்பொருட்களை ஏற்றுமதி செய்வதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது உற்சாகம் நிறைந்ததொரு கால கட்டத்தையும், நம் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் இப்பொருட்கள் மென்மேலும் ஈடுபட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது.

1972-73-ஆம் ஆண்டில் இத்துறை ஈட்டிய அந்நியச் செலாவணி ரூ. 61,97,790 ஆகும். 1973-74, 1974-75 ஆகிய இரண்டாண்டுகளுக்கு மாகச் சேர்த்து ரூ. 95.00 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் (1969-73) இத்துறை ஈட்டிய மொத்த அந்நியச் செலாவணி ரூ. 1,29.62 இலட்சமாகும்.

பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இத்துறை பாராட்டத்தக்க வளர்ச்சியினை எட்டியுள்ளது.

வால்பாறைக்கு அருகில் ஆனைமலையிலிருக்கும் சின்கோனாவில் உள்ள அரசினர் கொய்னாத் தொழிற்சாலையானது இத்துறையைச் சேர்ந்த தோட்டங்களில் சேகரிக்கப்படும் சின்கோனாப் பட்டையைப் பதப்படுத்திக் கொய்னாப் பொருட்களைத் தயாரிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கொய்னாப் பொருள்களாவன:

1. குனைன் சல்பேட் தூள், 2. சின்கோனா ஃபெப்ரி ஃப்யூஜ் தூள், 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு தூள் (உற்பத்தி செய்யப்பட்ட குனைன் சல்பேட்டிலிருந்து தயாரிக்கப்படுவது) 4. குனிடின் சல்பேட் தூள் 5. சின்கோனா ஃபெப்ரி ஃப்யூஜ் மாத்திரைகள்.

நீலகிரியில் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை, பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைப் பரிசோதித்துத் தூய்மையாக்கி, தரம் பிரித்து சிப்பம் செய்து விற்பனைக்கனுப்புவதில் வழக்கம்போல் ஈடுபட்டுள்ளது. இது தவிர, நறுமணத் தைலங்களின் உற்பத்தி அவற்றின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தொழிற்சாலையால் தூய்மைப்படுத்தப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, சிப்பம் செய்து விற்பனைக்கனுக்கப்பட்ட தைலங்களின் மதிப்பு:

1971-72-ல் ரூ. 5,03,500; 1972-73-ல் ரூ. 7,64,600; 1973-74-ல் ரூ. 13,29,000 ஆகும்.

1964-ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டுச் சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்கான தேவை சீராக அதிகரித்துக் கொண்டே வருகிறது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை மூலம் 1971-72-ல் கிடைத்த வருமானம் ரூ. 5.58 இலட்சம். 1973-74-ல் 11.00 இலட்சம்.

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிட்டு அவற்றைப் பதப்படுத்துவது தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பயிரிடும் முறைகளை மேம்படுத்துதல், உயர்விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடிவகைகளை வளர்த்தல், அவற்றைப் பதப்படுத்துதல் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றித் தெரிந்து கொள்வோமா?

1. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களை விற்பனைக்காகப் பெருமளவில் பயிர் செய்வதை விரிவுபடுத்துதல்.

2. மருந்தும் மற்றும் நறுமணச் செடிப் பொருட்களைப்

பதப்படுத்தும் முன்னேடித்திட்டம்.

3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய முனைப்பாக ஆராய்ச்சியும் வளர்ச்சியும்.

4. அதிக அளவில் கொய்னேவையும் குனிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனேச் செடிவகைகளை கிளை நடு முறைகள் மூலம் வளர்த்தல்.

5. இத்துறையின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்குக் கட்டட வசதிகள், சாலை வசதிகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல்.

6. இத்துறையின் இரு தொழிற்சாலைகளுக்குத் தேவையான சாதனங்களை வாங்குதல்.

7. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களுக்குப் பாசனமளிப்பதை மும்முரமாக்கும் திட்டம்.

1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளன்று உள்ளவாறு சின்கோனுத் துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூ. 3,01,04,200 ஆகும்.

அனைத்து நாட்டுச் சந்தைகளில் இப்போது நிலவி வரும் போக்குகள் இம்மாநிலத்தின் கொய்னேப் பொருட்களுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்கின்றன. சின்கோனு பயிரிடப்படும் பரப்பளவு 2,630 எக்டேராக இருக்க வேண்டும் என்பது திட்டம். 30-9-73 ஆம் நாளன்றுள்ளபடி சின்கோனு பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு 2,379.19 எக்டேராகும். இதைத் தேவையான அளவுக்குக் கொண்டு வருவதற்காகப் புதிய பரப்புகளில் சின்கோனு பயிரிடப்பட்டு வருகிறது.

1973-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் வரை இத்துறைத் தோட்டங்களில் சின்கோனு மற்றும் இதர பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ள பரப்பளவுகளின் விவரம் வருமாறு.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைக் கொடுக்கும் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் இத்துறையின் வருவாய் கூடுதலாகிறது. இப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு சீராக அதிகரித்து வருகிறது. உற்பத்தி முறைகளை மேம்படுத்திச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிர்கள் மீதான மும்முர ஆராய்ச்சித் திட்டம் இந்நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இத்துறை எய்திய குறிப்பிடத்தக்க சாதனைகள் பல. அவை:

1. சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜிலிருந்து குவினைன் சல்பேட்டையும் குனிடின் சல்பேட்டையும் தயாரித்தல்.

2. சின்கோனைன், சின்கோனிடின் அல்கலாய்டுகளை முன்னேடி அளவில் பிரித்தெடுத்தல்.

3. மேலும் சிறந்த முறையில் (BP), (IP) வகை யூகலிப்டஸ் தைலங்களைத் தயாரித்தல்.

4. மூடுபனியை எதிர்த்து நிற்கவல்ல ஜெரேனியம் பயிர் வகையைப் பிரித்தெடுத்து அவற்றின் பெருக்கத்திற்காகப் பயிர் செய்தல்.

1973-74-ஆம் ஆண்டில் நிறைவேற்றப் படவிருக்கும் பணிகள் பல:

(1) 84.5 எக்டேரில் மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் புதிதாகப் பயிரிடுதலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள 333.75 எக்டேரில் நிலைப்படுத்தலும்.

(2) 31 எக்டேரில் சின்கோனுப் பயிரைப் புதிதாகப் பயிரிடுதலும், அது ஏற்கெனவே பயிரிடப்பட்டு வெட்டப்பட்ட 128.10 எக்டேரில் நிலைப்படுத்துதலும்.

(3) கிளை நடுமுறையில் ஆறு இலட்சம் சின்கோனுச் செடிகளை உற்பத்தி செய்தல்.

(4) ரூ. 13.29 இலட்சம் மதிப்புடைய 5,500 கிலோ யூகலிப்டஸ் தைலம், 1,230 கிலோ ஜெரேனியம் தைலம், 2,520 கிலோ யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம் 4,440 கிலோ ஜாவா சிட்ரனல் தைலம், 50 கிலோ கற்பூரத் தைலம் 190 கிலோ லெமன் கிராஸ் தைலம், 28 கிலோ விண்டர் கிரின் தைலம், 5 கிலோ பச்சௌலி தைலம், 3,00,000 கற்பூர வில்லைகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(5) ஏறத்தாழ ரூ. 55 இலட்சம் மதிப்புள்ள 9,000 கிலோ குவினைன் சல்பேட், 7,200 கிலோ சின்கோனு ஃபெப்ரி ஃப்யூஜ் 180 கிலோ குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(6) ஏறத்தாழ 500 கிலோ இஞ்சிச் சாறு தயாரித்தல்.

யூகலிப்டஸ் தைலம் காய்ச்சியெடுக்கப்பட்ட பின் படியும் மீதிப் பொருள்களிலிருந்து 'சின்ஃப்ரெஷ்' என்னும் நாற்றம் போக்கி இவ்வாண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், மாநில அரசும் சரிபாதிச் செலவை மேற்கொண்டுள்ள கூட்டுத் திட்டமான யூகலிப்டஸ் சிட்ரியோடோரா, மீதான ஆராய்ச்சித் திட்டம் நீலகிரித் தோட்டங்களில் இத்துறையினால் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்த ஆனைமலை, அரசினர் சின்கோனுத் தோட்டங்களை விரிவுபடுத்தவும் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு வருவாய்த் துறையினால் 1973 ஏப்ரல் திங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசு ரூ. 5 இலட்சம் நேரடியான கடனை வழங்கியுள்ளது. 125 அகதிக் குடும்பங்களிலிருந்து 250 அகதிகளை வேலைக்கமர்த்துவது என்ற இலக்கின் கீழ் இதுவரை 55 குடும்பங்களிலிருந்து 157 அகதிகளுக்கு ஆனைமலை, அரசினர் சின்கோனுத் தோட்டங்களில் வேலை தரப்பட்டுள்ளது.

| பயிரின் பெயர் | நீலகிரியில் உள்ள பரப்பளவு | ஆனைமலையில் உள்ள பரப்பளவு | மொத்தம் |
|---|---|---|---|
| | (............ | ஹெக்டேர்களில்...... | ) |
| சின்கோனு | 409.93 | 1,969.26 | 2,379,19 |
| மருந்து மற்றும் நறுமணச் செடிகள் | 675.32 | 301.72 | 97047. |





# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.



ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.
ஆரோக்யம் தரும் சுத்தமான தேன்,
கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட்
ஆடைகள், சுத்தமான எண்ணெய்,
கலையழகு கொஞ்சும் கைவண்ணப்
பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப்
பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல
பொருட்களையும் வாங்கலாம்.
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி
மாநிலங்களில் 200க்கும் மேலான
காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை
பூர்த்தி செய்கின்றன.



தொலைபேசி சென்னை 29684 81954 திருச்சி 3814 கோவை 35051




# சுவையுணர்வும் மண உணர்வும்



"ஆகா! உள்ளே என்ன சமையல் நடைபெறுகிறது? வாசனை மூக்கைத் துளைக்கிறதே!''-இப்படி ஒருவர் கேட்கிறார்.

''முருங்கைக்காய் சாம்பார் தயாராகிறதா?'' - இப்படிக் கேட்கிறார் இன்னொருவர்.

வீட்டிலே சமையல் நடப்பதும், முருங்கைக்காய் சாம்பார் தயாராவதும் வீட்டிலுள்ள குடும்பத் தலைவிக்கு மட்டுமே தெரியும். ஆனால் வெளியிலிருந்து வீட்டின் உள்ளே வருபவர்களுக்கு முருங்கைக்காய் சாம்பார் தயாராகிறது என்பது எப்படித் தெரியும்?

அதுதான் இயற்கை, மனிதனுக்கு அளித்திருக்கும் மண உணர்வு என்னும் பெரும்பேறு!

அடுத்து வேறொரு கட்டம்! சமையல் முடிந்து அதன் பின் விநியோகம் ஆகும் கட்டம்!

''அடாடா! பாசந்தி என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்! அதிக இனிப்பும் இல்லை-குறைவான இனிப்பும் இல்லை! தேவைக்கு ஏற்றபடி கச்சிதமாக அமைந்திருக்கிறதே''-பாசந்தியைச் சாப்பிட்டவர் தரும் பாராட்டுரை.

இந்தப் பாராட்டுரைக்குக் காரணம் என்ன?

'பாசந்தி இனிப்பாக இருக்கிறது-பஜ்ஜி காரமாக இருக்கிறது - பக்கோடாவில் உப்பு அதிகமாகிவிட்டது' - என்றெல்லாம் நம்மைச் சொல்ல வைப்பது எது? நமது நாவுக்குக் கிடைத்துள்ள சுவையுணர்வு!

சுவையும் மணமும் இரசாயன உணர்வுகளாகும். இது வரை இவற்றிற்கு எவரும் அறிவியல் வாயிலாக விளக்கம் தரவில்லை. இவற்றைப் பற்றி நமக்கு ஓரளவு விளக்கங்கள் கிடைக்கலாம் என்றாலும், ஆப்பிள் பழத்தைச் சுவைத்துப் பார்க்காமல்-அதன் சுவையைச் சொல்ல முடியுமா? அழகு முல்லையை முகர்ந்து பார்க்காமல் அதன் மணத்தை எடுத்துரைக்க முடியுமா? முடியாது!

ஒளி, ஒலி ஆகியவற்றை ஒளி அலைகளாக - ஒலி அலைகளாக மாற்றிப் பதிவு செய்து கொண்டு அளவெடுக்கலாம். நாம் ஒரு குரலைக் கேட்டால்-நமது குரல்வளை-நாக்கு, உதடுகள் ஆகியவற்றின் உதவியால் அதே குரலை நம்மால் எழுப்ப முடியும்! ஒரு பொருளைப் பார்த்தால் - அப்பொருளைப் போன்ற மாதிரியை நம்மால் உருவாக்க முடியும்! அந்தப் பொருளைப் போன்று ஓவியமும் தீட்ட முடியும்! ஆனால், வலி, உடல் அரிப்பு போன்ற தொட்டு உணரக் கூடிய உணர்வுகளைப்போலப் பொருள்களைத் தொட்டுப் பார்ப்பதன் வாயிலாகச் சுவையையும் மணத்தையும் நாம் உணர்கிறோம்.

பொருளைச் சுவைத்த பின்புதான் அதன் சுவையை விளக்கிச் சொல்ல முடிகிறது. நுகர்ந்த பின்னர்தான் அதன் மணத்தை விளக்கிக் கூற முடிகிறது.

நமது சுவையுணர்வுகளும் மண உணர்வுகளும் மிகமிகக் கூர்மையானவை. எவ்வளவு சிறிய பொருளென்றாலும் நாம் மிக எளிதில் அவற்றின் சுவையையும், மணத்தையும் சொல்லிவிடுகின்றோம். இருப்புச் சட்டியிலே கடுகு பொரிக்கப் பட்டாலும், சீரகம் தாளிக்கப் பட்டாலும், அவற்றை நமது மூக்கு, எளிதில் கண்டு பிடித்து விடுகிறது.

உண்ணப்படும் பொருள் ஒரு தேக்கரண்டி அளவுதான் நமக்கு விநியோகிக்கப்பட்டாலும்-அந்தப் பொருளில் என்னென்ன மூலப் பொருள்கள் கலந்திருக்கின்றன என்பதையும் அவற்றின் மணங்களையும் நாம் எளிதில் தெரிவிக்க முடிகிறது.

பொருள்களின் சுவையை நமது நாக்கில் உள்ள சுவை அரும்புகள் தெரிவிக்கின்றன. நாக்கு, உணவுப் பொருட்களை அளிக்கும் நடுநிலைச் சாதனமாகத் திகழ்கிறது. உடலின் மற்றப் பகுதிகளிலுள்ள தோல் திசுக்களைப்போன்று, நாக்கு, தொடு உணர்ச்சியை அறிந்து கொள்கிறது. குரல் வளையிலிருந்து வெளி வரும் குரலைக் கட்டுப்படுத்திப் பேச்சாக மாற்ற உதவுகிறது. நாக்கு ஒவ்வொரு முறை அசையும்போதும் அதன் உரு மாறுபடுகிறது. உணவுப் பொருள்களை நன்கு கடித்து விழுங்குவதற்கும் நாக்கு பயன்படுகிறது.

மனிதனுக்கு நாக்கில் மட்டும் தான் சுவையரும்புகள் உள்ளன. ஆனால் விலங்குகளுக்கு அப்படியில்லை. அவற்றின் வாய் முழுதும் சுவை அரும்புகள் நிறைந்திருக்கின்றன. உலகத்தில் முதன் முதலாகத் தோன்றியதாகச் சொல்லப்படும் நீர்வாழ் உயிரினங்களின் உடல்களின் பெரும்பகுதிகளில் சுவை அறியும் உறுப்புகள் உள்ளன. சான்று, மீன்; மீனின் செவுள் பகுதிக்கு அருகில் சுவை அறியும் உறுப்பு உள்ளது.

இனிப்பு
துவர்ப்பு
கசப்பு
உவர்ப்பு-ஆகிய சுவை உணர்வுகளை அறிந்து கொள்வதற்குத் தனித்தனிச் சுவையரும்புகள் உள்ளன. இவை




யாவும் உருவத்தில் ஒன்றைப் போலவே மற்றொன்று இருக்கும் என்றாலும் இவற்றிலுள்ள இரசாயனப் பொருள்கள் வெவ்வேறாகக் காணப்படும். அந்த வேறுபாட்டினால்தான்

நாம் பல்வேறு சுவைகளை உணர முடிகிறது.

அணிலுக்கு 6 ஆயிரம் சுவையரும்புகள் - ஆட்டிற்கு 10 ஆயிரம் சுவையரும்புகள்-பன்றி, செம்மறியாடு ஆகியவற்றிற்கு 15 ஆயிரம் சுவையரும்புகள்- குழி முயலுக்கு 17 ஆயிரம் சுவையரும்புகள்-எருதுக்கு 35 ஆயிரம் சுவையரும்புகள், வெளவாலுக்கு 800 சுவையரும்புகள் உண்டு என்று ஆய்வாளர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு பொருளின் மணத்தை உணர்வதற்கு நாம் சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறோம் அல்லவா? அதைப் போல ஒரு பொருளின் சுவையை அறியவும் நமக்குச் சிறிது நேரம் தேவைப்படுகிறது.

நாக்கின் நடுப்பகுதியில் எந்தவிதச் சுவையரும்பையும் காணமுடியாது. இனிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு போன்ற சுவையுணர்வுகளைத் தெரிவிக்கக் கூடிய சுவையரும்புகள் நாக்கில் பல இடங்களில் உள்ளன.

நாக்கு நுனியின் வாயிலாக நாம் இனிப்புச் சுவையை உணருகிறோம்.

உணவுப் பொருள் கசப்பாக உள்ளது என்பதை நாக்கின் உட்பகுதியில் உள்ள சுவையரும்புகளின் உதவியால் அறிந்து கொள்கிறோம்.

துவர்ப்புச் சுவையை, நாக்கின் இரு ஓரங்களிலுமுள்ள சுவை யரும்புகள் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.

உப்புச் சுவையை நமக்கு உணர்த்துபவை-நுனி நாக்கிலும் நாக்கின் இரு ஓரங்களிலும் உள்ள சுவையரும்புகள் தாம்.

வயதுக்கு ஏற்றாற்போல் சுவையுணர்வும் மாறுபடுகிறது. குழந்தைகளின் நாக்கில்-குறிப்பாக நுனி நாக்கில் சுவையரும்புகள் அதிகம் உள்ளன. இரு தாடைகளின் உட்புறத்திலும் சுவையரும்புகள் உள்ளன. அதன் காரணமாகத்தான் குழந்தைகள் இனிப்புப்பொருட்களை மிகமிக விருப்பத்துடன் சாப்பிடுகிறார்கள்.

சுவையுணர்வு குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இருந்து வருகின்றன. மக்கள் சமுதா



யத்தில் ஒரு குறிப்பிட்ட அளவினர், பொருள்களின் சுவைகளை முற்றிலும் உணர்வதில்லை. ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் சுவையில் காணப்படும் வேறுபாடுகளைக் கூடச் சிலர் அறிந்து கொள்வதில்லை-உணர்ந்து கொள்வதில்லை.

இது குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பெற்றது.

ஃபினைல்-தயோ கார்பமைடு என்னும் இரசாயனப் பொருள் சிலருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களில் பலருக்குப் பல்வேறு விதமான சுவையுணர்ச்சியை அந்தப் பொருள் ஏற்படுத்தியுள்ளது என்பது ஆய்வின் வாயிலாகத் தெரிய வந்தது. இந்தச் சுவை வேறுபாடு பரம்பரையில் காணப்படும் வேற்றுமைகளின் அடிப்படையில் ஏற்படுகிறது என்று விளக்கிக் கூறப்பட்டது.

மற்றொரு ஆராய்ச்சி நடைபெற்றது! அது என்ன தெரியுமா?

ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு விருந்து நடைபெற்றது. காலை உணவுக்குப் பின்னர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரை கிராம் சோடியம் பென்ஸோனேட் என்னும் இரசாயனப் பொருள் கொடுக்கப்பட்டது. அதைச் சுவைத்துப் பார்க்கும்படி கூறப்பட்டது. விருந்தினர் சுவைத்தனர். அதன் பின்னர் அவர்களது சுவையுணர்வுக் கருத்துக்கள் தொகுக்கப்பட்டன.

''இதற்குச் சுவையே இல்லை'' -30 சதவீதத்தினர் இவ்வாறு தெரிவித்தார்கள்.

''கசப்பாக உள்ளது''-10 சதவீதத்தினர் இப்படிக் கூறினர்.

''இனிப்பாக இருக்கிறது''-15 சதவீதத்தினர் இவ்வாறு சொன்னார்கள்.

''உவர்ப்பாக உள்ளது''-17 சதவீதத்தினரின் கருத்து இது.

''இனிப்பும் உவர்ப்பும் கலந்ததாக இது உள்ளது''-9 சதவீதத்தினர் இவ்வாறு மொழிந்தனர்.

''துவர்ப்புத் தாங்கமுடியவில்லை''-இப்படியும் 9 சதவீதத்தினர்.

''காரமாக உள்ளது''-4 சதவீதத்தினர் நவின்ற கருத்து இது.

எதையோ நினைக்கிறார்கள். ஆனால் எதையும் கூற முடியாமல் திணறுகிறார்கள்-இப்படி 4 சதவீதத்தினர்.

எதுவுமே கூறாதவர்கள் - கூறுகின்ற எண்ணமே இல்லாதவர்கள் 2 சதவீதத்தினர்.

ஆக, அந்தப் பொருளின் உண்மையான சுவையை அதாவது 'சுவையே இல்லை' என்பதைத் தெளிவாகத் தெரிவித்தவர்கள் 30 சதவிகிதத்தினர் தான்!

இப்படி, ஒரே பொருளைப் பற்றிப் பலர் பல்வேறு சுவையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பது ஆய்வின் வாயிலாகத் தெளிவாகியுள்ளது.

நாக்கின் சுவையரும்புகளில் -நமக்குப் புலப்படாது உள்ள இரசாயனப் பொருள்கள்தான் சுவையுணர்வுகளை நமக்கு அறிவிப்பதில் முதன்மையாக உள்ளன. புரதச் சத்தின் தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ள இந்த இரசாயனப்பொருள்கள் ஒவ்வொரு பொருளின் சுவைக்கேற்ற வண்ணம், தமது தன்மைகளை மாற்றிக் கொள்கின்றன. சுவைத் தூண்டுதலுக்கு ஏற்றாற்போல், இந்த இரசாயனப் பொருள்கள் தனிக் கூறுகளாகப் பிரிந்து ஊக்குவிக்கும் பொருட்களாக உருப்பெறுகின்றன.

குறிப்பாக-இனிப்பு, கசப்பு ஆகிய சுவையுணர்வுகள் இரசாயனப் பொருட்களின் அடிப்படையில்தான் ஏற்படுகின்றன. பசு, பன்றி போன்றவற்றின் நாக்குகளில் உள்ள சுவையரும்புகளிலிருந்து வெளியாகும் புரதம், இனிப்பு, கசப்புப் பொருட்களுடன் சேர்ந்து கூட்டுப் பொருளாக உருவாகிறது. ஆனால் மனிதனின் சுவைத் தன்மையைப் பொறுத்தவரையில் அவற்றின் இனிப்பு, கசப்புத் தன்மைகள் நிலைத்திருக்கின்றன. கசப்புப் பொருட்களுடன் சேரும் புரதப் பொருட்களின் இரசாயனத் தன்மை இனிப்புப் பொருள்களுடன் சேரும் புரதப் பொருளின் இரசாயனத் தன்மையிலிருந்து அதிக அளவு வேறுபட்டிருக்கிறது.

சுவையும் மணமும் ஒன்றாகி விட முடியாது. ஒருபொருளின் மணம், அது ஆவியாகும் தன்மையைப் பொறுத்துள்ளது.

பொதுவாக, அணுக்களை விரைவாகத் தொடர்ந்து வெளிப்படுத்தும் பொருட்கள் தாம், மிகவும் மணம் கொண்டு விளங்கும்.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்த இளம் உயிரினங்கள் அனைத்துக்கும் பொருளின் மணத்தை நுகரக்கூடிய ஆற்றல் கிடையாது. இவற்றின் உணவு தாய்ப்பால்தான்.

மனித வாழ்க்கையில் ஒருவன் இளமைப் பருவத்திலிருக்கும் போது-பொருளின் மணத்தை நன்கு உணரமுடிகிறது. ஆனால் போகப் போக-வயது ஏற ஏற-சுவையுணர்வு குறைகிறது. குறிப்பாக 45 வயதுக்கு மேல் இந்தச் சுவையுணர்வு குறைந்து கொண்டே வருகிறது.

மூக்கில், மணம் அறியும் உறுப்புகள் எப்போதும் ஏதாவது ஒரு வண்ணத்தில் காணப்படுகின்றன. மனித மூக்கில் இந்தப் பகுதி மஞ்சள் வண்ணத்தில் உள்ளது. விலங்குகளின் மூக்குகளில் இந்தப் பகுதி, கரும் பழுப்பு நிறத்தில் உள்ளது. இந்த 'பிக்மெண்ட்' தான் மணத்தை அறிந்து கொள்ளத் துணைபுரிகிறது.

நிறத்துக்குக் காரணமான 'பிக்மெண்ட்' இல்லாததால் வெளிறிய நிறத்துடன் பிறக்கும் விலங்குகளுக்கு 'ஆல்பினோ' என்று பெயர். இத்தகைய விலங்குகளின் மூக்கில் 'பிக்மெண்ட்' இல்லாததனால் அவை மணம் அறி உணர்வில் வேறுபாடு கண்டுகொள்வதில்லை. அதன் காரணமாக அவை நச்சுத் தன்மை வாய்ந்த செடி கொடிகளை அடையாளம் கண்டுகொள்ளாமல் அவற்றைத் தின்று இறந்துவிடுகின்றன. இக்காரணத்துக்காகவே சில வேளாண் குடியினர் வெள்ளைப் பன்றிகளை வளர்ப்பதில்லை. சாதாரண கருப்புப் பன்றிகளை வளர்க்கவே விரும்புகின்றனர்.

மூக்கில் உள்ள இலட்சக் கணக்கான மணமறி செல்களும் ஆயிரக்கணக்கான சுவையரும்புகளும் செய்திகளை மூளைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. மணம், சுவை ஆகியவற்றைப் பகுத்து அறியும் பிரிவுகள் இந்தச் செய்திகளை எல்லாம் பெற்றுக் கொண்டு நொடியில் சரியான சுவையையும் மணத்தையும் அறிவிக்கின்றன. எனவே சுவையுணர்வும் மண உணர்வும் வாழ்வின் இரு பெரும் பேறுகளாகும்.



## தஞ்சைப் பெரிய கோயில் திருப்பணி

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீசுவரர் கோயிலைப் பழுது பார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் 5-வது திட்ட காலத்தில் மைய அரசு தொல்பொருள் துறை ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. அதேபோல திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரம் கோயிலைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரு கோயில்களையும் பழுது பார்க்க ஆண்டு தோறும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம் வீதம் செலவிடப்படும்.

கும்பகோணம் அருகே தாராசுரத்தில் உள்ள கோயிலுக்காக ரூ. 2·5 இலட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

1969-ம் ஆண்டிலிருந்து அருள்மிகு பிரகதீசுவரர் கோயில் திருப்பணிக்காக ரூ. 4 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாகத் தொல்பொருள் துறை தெரிவித்துள்ளது. தென் வட்டாரத்தில் உள்ள கோயில்களுக்காக இந்த ஆண்டு மொத்தம் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் அன்னைத் தமிழ்!




''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''

என்பதற்கிணங்க கடந்த, 25 ஆண்டுகளாக அமெரிக்க நாட்டு மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளும், இலக்கியமும் படித்து வருகின்றனர். இவர்களது தொகை அண்மை ஆண்டுகளில் பெருகியுள்ளது. தென்னிந்திய வரலாறு, தத்துவங்கள், சமயங்கள், சமுதாய வாழ்க்கை முறைகள் குறித்துப் பல மாணவர்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

இன்று பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் தமது கல்வித் திட்டங்களில் தென்னிந்திய மொழிகள், இலக்கியப் படிப்புக்குச் சிறப்பிடம் வழங்குகின்றன. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களோடு தமிழ்நாட்டிலுள்ள ஒரு மொழி ஆராய்ச்சி நிலையம் ஒத்துழைத்து வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள மொழியியல் மேல்படிப்பு நிலையம் இவ்வகை ஒத்துழைப்பு வழங்குவதில் முன்னணியில் நிற்கிறது. மிக்சிகன், கலிஃபோர்னியா, பென்ஸில்வானியா, ஆகிய அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு அண்ணாமலை நிலையம் தோள் கொடுத்து உதவுகிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, வங்காளி, உருது ஆகிய மொழிகளும், தோடா, குடகு, இருளம், நீலகிரி போன்ற பழங்குடி மக்களின் மொழிகளும் பயில அண்ணாமலை மொழியியல் நிலையம் வாய்ப்புகள் வழங்குகின்றது.

மேற்சொன்ன மொழிகளில் புலமை மிக்க அண்ணாமலை அறிஞர்கள் ஆண்டு தோறும் யு. எஸ். பல்கலைக் கழகங்களுக்குச் சென்று, விரிவுரைகள் ஆற்றித் தமது அறிவை அங்குள்ளோருடன் பகிர்ந்து கொள்கின்றனர்; பல்வேறு நிலைப் படிப்புகளுக்கும் உரிய பாடத் திட்டங்கள் வகுப்பதில் அங்குள்ள ஆசிரியப் பெருமக்களுக்குத் துணை செய்கின்றனர்.

மிக்சிகன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பாடத் திட்டங்கள் வகுக்கும் துறையில் அறிவுரையாளராக ஓராண்டு பணியாற்றியுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் நிலைய இயக்குநர் டாக்டர் அகஸ்தியலிங்கம் கூறுகிறார்;

''1970-ல் மிக்சிகனில் ஒரு மொழியியல் மாநாடு நடைபெற்றது. 5000 பேர் வந்திருந்தனர். நான் பங்கு கொண்டு தமிழ் மொழி பற்றி உரையாற்றினேன். இடைவேளையின்போது, அமெரிக்க வல்லுநர்கள் பலர் நேரே என்னிடம் வந்து, படித்த பின்புதான் தமிழ் எவ்வளவு வளமான மொழி என்று அறிய முடிந்ததென வியந்து பாராட்டினர்.''

அண்ணாமலை மொழியியல் நிலையத்தின் மற்றொரு திட்டத்திலும் மிச்சிகன் பங்கு கொண்டுள்ளது. சோழ மன்னர்களின் வரலாற்றுச் சிறப்புள்ள கல்வெட்டுகள் பற்றிய ஆராய்ச்சியே இந்தக் கூட்டு முயற்சி.

திருவாசகம், குறுந்தொகை ஆகிய சிறந்த தமிழ் நூல்களும் அமெரிக்காவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆவணப் பதிவுத் துறை ஆற்றிடும் பணிகள்

ஆவணப் பதிவுத் துறை, சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளதுடன், இயங்காச் சொத்துக்களின்மீது உரிமை கோருபவர்களது உரிமைகளை, நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை வைத்துவரும் பொறுப்பையும் ஏற்றுச் செவ்வனே நடத்தி வருகிறது. இத்துறை, இந்தியப் பங்குதாரர் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு விகித பதிவுச் சட்டம், சிறப்புத் திருமணங்கள் சட்டம், இந்துத் திருமணச் சட்டம் போன்ற முக்கியமான திருமணப் பதிவுச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது. 1969, டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் இத்துறை நிர்வகிக்கிறது.

**வழிமுறைக் குறிப்புகள் :**

1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (திருத்தச்) சட்டத்தின் மூலம், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவில் புதிய விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி, 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ஆம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத் தாள் தீர்வை,அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் அங்காடி மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுறது.

சொத்துக்களின் அங்காடி மதிப்பினை மதிப்பிடத் துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு வருவாய்த் துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியது. கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளைத் துல்லியமாக நிர்ணயிக்க வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு, சிறப்புப் பணியாளர்களைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ்ப் பணியாற்ற ஒப்பளிப்பு வழங்கியது.

வழிமுறைக் குறிப்புகளை மாற்றியமைக்கும் பணி முடிவடைந்துவிட்ட போதிலும், பதிவு மாவட்டங்கள் சிலவற்றின் புள்ளி விவரங்கள் மிகப் பழையனவாக இருக்கின்றன. நடப்பு விகிதங்களுக்கேற்ப அவை மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. அந்த வழிமுறைக் குறிப்புகளைப் பரிசீலிக்கத் தனிப்பட்ட வருவாய் ஆவணப் பணியாளர்களை நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்தல் :**

துணைப்பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில் தணிக்கை செய்யும் முறை 1969-ல் தொடங்கி 1970-இல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டது. இம்முறை, வருவாய் இழப்பையும், இத்துறையில் கணக்குகளைப் பராமரிக்கும் முறையில் ஏற்படக் கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பலன் அளித்துள்ளது. இம்முறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**முத்திரைத் தாள்கள் பற்றுக் குறையும், பற்றுக் குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளும் :**

முத்திரைத்தாள் பற்றுக் குறையினால் சில காலத்திற்கு முன்பு எழுந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று, விற்பனை, அடைமானம், கொடை ஆவணங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், ரூ. 500 வரையுள்ள முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க வெளியூர்களிலுள்ள துணைப் பதிவாளர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளதே ஆகும். 1967-ல் முதன் முறையாக முகவுரைக்கப்பட்ட இத் திட்டம் 1971, சனவரி முதல் நாளிலிருந்து நிரந்தரமாக்கப்பட்டது. இவ்வசதி, 1-9-1973 முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள அலுவலகங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. பரிமாற்றப் பத்திரங்கள் (Deeds of Exchange) துணைப் பதிவாளரால் 41 ஆவது பிரிவின் கீழ் அவ்வாறு சான்று கூறப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சொத்து மதிப்பீடு காரணமாகக் குறைவாகக் கொடுக்கப்படும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரும்பினால் அவ்வாறும், அதற்கென்று குறிப்பிட்டுள்ள தடை முறையின்படியும் முத்திரைத் தாள்கள் சட்டத்தின் 42-வது பிரிவின் கீழ், ஆவணங்கள் துணைப்பதிவாளர்களால் சான் றளிக்கப்படலாம் என்று வருவாய்த் துறையின் 15.3.71 நாளிட்ட 725-ஆம் எண் (திருத்தப்பட்டவாறுள்ள) அரசாணையில் ஆணை பிறப்பித்தது. முதலில் இது, சென்னை மாநகர் நீங்கலான இடங்களிலுள்ள

துணைப் பதிவாளர்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டது; பின்னர் இவ்விதித்துறைகள் 1973, டிசம்பர் முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

**புதிய துணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களைத் தொடங்குதல்:**

பத்திரப் பதிவுக்காக வரும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு



அவசியமான இடங்களில் எல்லாம் புதிய துணைப் பதிவு அலுவலகங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பின்னர் புதிதாக 39 அலுவலகங்கள் (1968-69-ல் 10 அலுவலகங்கள், 1969-70-ல் 6 அலுவலகங்கள், 1970-71-ல் 6 அலுவலகங்கள், 1971-72-ல் 11 அலுவலகங்கள், 1972-73-ல் 3 அலுவலகங்கள், 1973-74-ல் 3 அலுவலகங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. 1974-75-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 7 துணைப் பதிவு அலுவலகங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகத் தனிப் பணியாளர்:**

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பேணி வரப்படும் பதிவேடுகளில் மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகப் பிரிவு எழுத்தர்களைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1972-73-ஆம் ஆண்டில் சோதனை நடவடிக்கையாக மதுரை பத்திரப் பதிவு மாவட்டத்தில் 10 பிரிவு எழுத்தர்களையும், தருமபுரி மாவட்டத்தில் 4 பிரிவு எழுத்தர்களையும் வேலைக்கமர்த்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-74-ஆம் ஆண்டில் இத் திட்டப் பணி ஜேமம் நான்கு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. 1974-75-ஆம் ஆண்டில் இந்தப் பணிக்காக 22 பிரிவு எழுத்தர்களை பணிக்கமர்த்துவதற்கு ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**பதிவு மாவட்டங்களைச் சீர் அமைத்தல்:**

பணிச்சுமை மிகுந்த, நிர்வாக அளவுக்கு மீறிய சில பத்திரப்பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்பைக் குறைக்கும் பொருட்டும், மாவட்டங்களுக்கு இடையில் ஒரே மாதிரியான அளவில் துணைப் பதிவு அலுவலகங்களைப் பிரித்து அமைக்க வகை செய்யும் பொருட்டும், பதிவு அலுவலக ஆய்வாளர்களுக்கு அடக்கமான ஆட்சிப் பகுதி எல்லையை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்களது பணிகளைத் திறம்படவும் செம்மையாகவும் ஆற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டும் பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஆய்வு செய்து வந்துள்ளது.

இக்காரியத்திற்காகத் துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1973-74-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அரியலூர், விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், தென்காசி ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு 1.8.'73-லிருந்து ஐந்து புதிய பதிவு மாவட்டங்கள் அமைக்கப்பட்டன. தேவையான துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும் பத்திரப் பதிவு ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1974-75-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு மாவட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை அதன் பிறகு 31 ஆகிவிடும். ஆய்வாளர்களின் எண்ணிக்கை 6 ஆகிவிடும்.

**கடந்த காலத்தில் அனுமதி வழங்கப்பட்டு 1973-74ஆம் ஆண்டில் தொடர்ந்து இருந்த பதிவுக் கட்டணத் தள்ளுபடி:**

முந்திய காலத்தில் வழங்கப்பட்ட பதிவுக் கட்டணத் தள்ளுபடியை 1973-74-ஆம் ஆண்டிலும் அனுபவிக்க உரிமையுடைய ஆவணங்களாவன:

* செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ. 5,000-க்கு மேற்படாத கடன்களை வழங்குவதற்காக அடைமானம் வைக்கப்பட வேண்டிய நிலங்களுக்குரிய வில்லங்கச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரை;

* பிணையத் தொகை செலுத்த வேண்டிய வணிகக் கடன்களுக்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் அரசுச் சார்பில் எழுதிக் கொடுத்த இயங்காச் சொத்தில் அடைமானப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* அரசு அளித்த கடன்களில் இருந்து வணிகக் கடைகளை வாங்கியதன்மூலம் வாணிகம் நடத்துவதற்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் சார்பிலும் தங்களுக்குள்ளே ஒரு கூட்டுறவு அமைப்பாக அல்லது சங்கமாக ஏற்படுத்திக் கொண்டுள்ள அகதிகள் கூட்டத்தின்



சார்பாக எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய விற்பனைப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களினால் அல்லது அச்சங்கங்களின் சார்பாகப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க பத்திரப் பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரை;

* தமிழ்நாடு அரசின் சார்பில் நிலத்தின் வடிவிலும் அல்லது நிலச் சொத்தின் வடிவிலும் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாளர்களால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய நன்கொடைப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடன் பெற்ற சிலர் ஈட்டுப் பத்திரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்திற்கு மறு ஒப்படை செய்வதற்காக எழுதிக் கொடுக்கும் பத்திரங்கள்;

> **அண்மையில் வெளியான எஸ். எஸ். எல். சி. தேர்வு முடிவுகளில் சென்னை நகரில் புதுப்பாக்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளிலேயே முதன்மையாக வந்துள்ளது.**
>
> **இப்பள்ளியின் நன்முயற்சியைப் பாராட்டும் வகையில், அதன் ஆசிரியர்களுக்கு ரூ. 300 பரிசு வழங்கப்படவிருக்கிறது.**
>
> **மாநகராட்சிப் பள்ளிகளிலேயே முதன்மையாகத் தேறிய மாணவருக்கும், மாணவிக்கும் மேற்படிப்புக்குத் தேவையான புத்தகங்கள் வாங்க முழுத் தொகையையும் மாநகராட்சி இலவசமாக வழங்கும்.**

* பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்காகவென்றே அமைக்கப்பட்ட அகதிகளுக்குப் புது வாழ்வளிக்கும் நோக்கத்தோடு, வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற அரசின் சார்பாக எழுதிக் கொடுக்கும் அடைமானப் பத்திரங்கள்;

* (அ) வருவாய்த் துறையின் 23-10-1971-ஆம் நாளிட்ட 3135-ஆம் எண் அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தின்கீழ் பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் கடன் பெற்று அதன் மூலம் வாங்கிய வேளாண்மை நிலங்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அரசின் சார்பாக எழுதிக் கொடுக்க வேண்டிய விற்பனைப் பத்திரம்;

* (ஆ) மேற்கூறியவாறு வாங்கப்பட்ட நிலங்களை அடைமானம் வைப்பதற்கு அரசுக்கு பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய அடைமானப் பத்திரங்கள்;

* (இ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைக் குறித்துப் பெறப்பட்ட தேடுதல் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்தது.

* (ஈ) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1974 ஜூன் 30-ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது.

* (உ) வணிக வங்கிகளிலிருந்து உழவர்கள் கடன்கள் பெறுவது தொடர்பான பத்திரங்களுக்கும், வில்லங்கச் சான்றிதழ்களுக்கும் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1973 ஜூன் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**1973-74-ல் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட புதிய நேர்வுகள்:**

கீழ்க்கண்ட நேர்வுகளில் 1973-74-ல் பத்திரப் பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:

1. வருவாய்த்துறையின் 17-12-1969-ஆம் நாளிட்ட 3025-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் வேளாண்மைக் கடன்கள் பெறுவதற்காக அரசுச் சார்பில் ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்கள்;




2. கால்நடை மருத்துவ நிலையங்கள் அடங்கியுள்ள நிலங்கள், கட்டடங்கள் குறித்துக் கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட நன்கொடைப் பத்திரங்கள்;

3. தொடக்க நில வள வங்கிகளிடமிருந்து கடன்கள் பெறுவதற்காக, இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களில் தொகுதி ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்கள் குறித்து வில்லங்கச் சான்றிதழ் கேட்கும் விண்ணப்பங்களின் நேர்வில், ஒரே பத்திரப் பதிவுத் துணை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களில் நிலங்கள் ஒரே சொத்தாகக் கருதப்படுகின்றன;

4. 1973-74-ஆம் குத்தகை ஆண்டில் சாராயக் கடை உரிமைதாரர்களால், அவர்களிடம் கேட்கப்பட்ட கூடுதல் பிணையத் தொகையை வைப்பீடு செய்து அரசுச் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

**படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குதல்:**

படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான விதிகள் இறுதியாக வகுக்கப்பட்டு, வருவாய்த் துறையின் 20-9-73-ஆம் நாளிட்ட 5903-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டன. இதற்கு உரிமம் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட தேர்வினை விரைவில் நடத்தக் கருதப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலகங்களில் கொடுக்கப்பட வேண்டிய பத்திரங்களைப் பொதுமக்கள் தெளிவாக எழுதப் பெறுவதற்கு இது உதவும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் இப்பத்திரங்களை எழுதுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைப் பொதுமக்கள் கொடுத்தால் போதும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் பத்திரப் பதிவுத்துறையின் அதிகாரத்தின் கீழ் செயல்படுவர்.

**பத்திரப்பதிவுத்துறை அலுவலகங்களுக்கு மேம்பாடு:**

(அ) கட்டடங்கள்: 1972-73-ஆம் ஆண்டு தொடங்கி படிப்படியான நிலையில் 16 இடங்களில் ரூ. 8 இலட்சம் செலவில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்தது. 6 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு, 1972-73-இல் ரூ. 3,05,000 அனுமதிக்கப்பட்டது. 1973-74-ல் 7 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 4,49,200 அனு

> **அறிவின் முதல் துவக்கம் செல்வத்தை வெறுப்பதாகும். அன்பின் முதல் துவக்கம் செல்வத்தை அனைவருக்கும் ஆகச் செய்வதாகும்.**
>
> **—ரஸ்கின்.**

சென்னை நகரில் நடைபாதைகளிலோ பொது இடங்களிலோ குப்பை கூளங்களைக் கொட்டுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவுப் பொருட்களை நடைபாதைகளிலும், பொது இடங்களிலும் கொட்டுகிறவர்மீது சென்னை மாநகர் முனிசிபல் நகராட்சிச் சட்டம் 222 (1) பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தின்படி எந்த வீட்டின் முன் குப்பை கூளங்கள் கொட்டி வைக்கப்படுகிறதோ அந்த வீட்டுக்காரருக்கு மூன்று நாட்களில் அவைகள் அகற்றப்பட வேண்டும் என்று முன்னறிவிப்பு கொடுக்கப்படும். அப்படியும் அகற்றுவிட்டால் அவைகளை மாநகராட்சி சட்டம் 380 (2) ன் கீழ் மாநகராட்சியினரே அப்புறப்படுத்துவர். ஆனால், அகற்றியதற்கான செலவுத் தொகையும், அபராதத் தொகையும் வீட்டுக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும். புதிதாக வீடு கட்டுபவர்களுக்கும், பழுது பார்ப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

மதிக்கப்பட்டது. இவ்வாறுக ஒதுக்கப்பட்ட ரூ. 8 இலட்சம் தொகையில் 13 கட்டடங்கள் மட்டுமே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும். 1974-75-ல் ரூ. 4 இலட்சம் செலவில் துணைப்பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேசை நாற்காலி முதலிய பொருட்கள்: பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களில் நிலையான பதிவேடுகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு 120 உருக்கு அலமாரிகளை வாங்குவதற்காகும் செலவுத் தொகை ரூ. 1,20,000-க்கு அரசு அனுமதியளிக்க முடிவு செய்துள்ளது.

(இ) பணியாளர்களுக்கு வசதி அளித்தல்: 1973-74-ல் பணியாளர் வசதிகள் செய்து தருவதற்காகச் செய்யப்பட்ட மேம்பாடுகள் வருமாறு:

(1) துணைப் பதிவாளர்கள் அவர்களின் பணியாளர்கள் தேவைக்காக, எல்லாப் பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களிலும் மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(2) உலர்கழிப்பிடங்களை, நச்சுத் தடைத் தொட்டிக் கழிப்பிடங்களாக (Septic tank latrines) மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 55 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 32 பணிகள் நிறைவேறி வருகின்றன.

(3) கோடை காலங்களில் ,பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் குடிநீர் வசதியளிக்க, குடிநீர் வசதி இல்லாத ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 5-க்கு மேற்படாமல் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(4) தனியார் வீட்டில் அல்லது சிறைச்சாலையில் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பொறுத்த வரையில், விண்ணப்பதாரர்களிடமிருந்து வரையறுத்த நாட்படி வசூலிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பதிவு அதிகாரியாலும், அவருடன் வருகின்ற கடைநிலை ஊழியராலும் இத்தொகை பயன்படுத்திக் கொள்ளப்படலாம்.

**தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் :**

இம்மாநிலம் முழுவதும் 1-12-69-லிருந்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. பொய்யான, போலியான பதிவு செய்யப்படாத சீட்டு நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில், ஆய்வு அதிகாரி பதவி ஒன்றுக்கும், கடைநிலை ஊழியர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதி வழங்கியது. இவர் சென்னை மாநகரத்தில் உள்ள அனுமதி பெற்ற சீட்டுக் கம்பெனிகள், மோசடி வியாபாரத்தில் இறங்கினுல் அவற்றைக் குறித்துத் துப்புத் துலக்குவார். அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்குகள் உட்பட சிறு சேமிப்புச் சான்றுகள் அனைத்தையும் ஈடுகளாகச் சீட்டு நடத்துபவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. 1973 டிசம்பர் 31 வரை பதிவாகியுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 23,736 ஆகும்.

1967-68-லிருந்து 1973-74வரை இத்துறையின் வரவு-செலவுகள் பின்வருமாறு:—

| | | வரவு (ரூபாய் | செலவு இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1967-68 | ... | 229.67 | 70.93 |
| 1968-69 | ... | 259.70 | 82.60 |
| 1969-70 | ... | 270.62 | 90.05 |
| 1970-71 | ... | 319.99 | 100.23 |
| 1971-72 | ... | 344.28 | 121.45 |
| 1972-73 | ... | 345.71 | 125.05 |
| 1973-74 | ... | 253.11 | 95.12 |
| | | (1973 நவம்பர் வரை) | (1973 நவம்பர் வரை) |

இவ்வாறு ஆவணப் பதிவுத்துறை நாட்டிற்கு அரும்பெரும் பணிகளை ஆற்றி வருகிறது என்றால் அது மிகையாகாது.






பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களும் பங்கேற்று ஏழைகளுக்கு உணவு வழங்கிய காட்சி.

உங்களுடைய
தந்திச் செய்திகள் விரைவில்
போய்ச்சேர உதவுங்கள்



தந்தி என்றாலே அவசரம்தான். உங்களுடைய தந்திச் செய்திகளை விரைவில் பட்டுவாடா செய்ய நாங்கள் எங்களால் முடிந்தது அனைத்தையும் செய்கிறோம்.

தந்தியில் விலாசம் முழுமையாக இருந்தால், விரைவாகப் பட்டுவாடா செய்ய அது எங்களுக்கு உதவும். ஆகவே தயவுசெய்து விலாசத்தை முழுமையாக எழுதுங்கள். தவிர, செய்தி போய்ச் சேரவேண்டிய நகரத்தை எழுதியவுடன், விலாசத்தினுடைய பின்கோட் எண்ணின் கடைசி மூன்று எண்களையும் குறிப்பிடுங்கள். ஏனெனில் சில நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தந்தி பட்டுவாடா நிலையங்கள் உண்டு. பின்கோடின் அந்த மூன்று எண்கள் தந்தியை உரிய விலாசத்திற்கு விரைவில் அனுப்ப உதவியாக இருக்கும்.

**தபால் தந்திப் பிரிவு**

davp 73/665




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்

## 1. தேனீக்களும், சூரிய காந்தியும்!

சூரியகாந்தி ஓர் அழகான, சிக்கனமான, பயிரிட எளிதான, இலாபகரமான எண்ணெய் வித்துப் பயிர்! ஒன்று இரண்டு ஆண்டுகளாகச் சூரியகாந்தியைப் பயிரிடுவதில் வேளாண் பெரு மக்கள் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். சூரியகாந்தியின் விளைச்சலை அதிகரிப்பதில் தேனீக்களுக்கும் முக்கிய பங்குண்டு! பூக்க ஆரம்பித்தவுடன், சூரியகாந்தி சுரக்கும் மதுவை நாடி, தேனீக்கள் பூக்களில் மொய்க்கின்றன. அவ்வமயம் பூவில் விதை உண்டாவதற்கான மகரந்தச் சேர்க்கையிலும் தேனீக்கள் பெரிதும் உதவுகின்றன. சூரியகாந்தி பயிரிடும் உழவர் பெருமக்கள் இதுபற்றி அறிந்தோ, அறியாமலோ இருக்கலாம்! நல்ல மகசூலைப் பெறவேண்டுமானால் சூரியகாந்தி பயிரிடும் காலத்தில் தேனீக்களை வளர்க்க வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

சூரியகாந்திப் பயிருக்கு அநேக சிறப்பியல்புகள் உண்டு. இது குறைந்த வயதுடைய பயிர். இதனை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். பல்வகை நிலத்திற்கும் ஏற்றது. மானாவாரியாகவும், இறைவையாகவும் பயிரிடலாம். நிலக்கடலைக்குச் சமமான மகசூல் தரக் கூடியது. ஆனால் சாகுபடிச் செலவு குறைவு. பூச்சிகளும் மற்றும் நோய்களும் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆகவே, பல உழவர் பெருமக்களுக்குச் சூரியகாந்திப் பயிரில் தனி விருப்பம் ஏற்பட்டுள்ளது!

சூரியகாந்தி பயிரிட விரும்பிய உழவர் பெரு மக்கள் நல்ல விதையைத் தேர்ந்து எடுத்து, விதைத்து, காலத்தில் தேவைக்கேற்ப உரமிட்டு, மற்ற செய் நேர்த்தி முறைகளையெல்லாம் தவறாது மேற்கொள்கின்றார்கள். செடிகள் திடமாக வளர்ந்து பெரிய பூக்களைத் தாங்கி நிற்கின்றன. தூரத்திலிருந்து பயிரைக் காணும் பொழுது மங்களகரமான மஞ்சள் நிறம்; கண்களுக்கு குளிர்ச்சி! அதைப் பார்க்கும் அனைவர் மனதிலும் ஒரு மகிழ்ச்சி! நல்ல மகசூலை ஆவலுடனும், நம்பிக்கையுடனும் உழவர் பெருமக்கள் எதிர் பார்க்கிறார்கள்!

ஆனால், ஏனோ ஒரு சில சமயங்களில் இம் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கடைசி வரை நீடிக்காமல் போய்விடுகின்றன! பூக்கள் முதிர்ந்து விதைப் பிடிக்கும் காலத்தில், உழவர் பெரு மக்களுக்கு அதிர்ச்சி ஏற்படும் வகையில் பல பூக்களில் விதைகள் சரிவர உண்டாகாமல் போய்விடுகின்றன. இந்நிலையில் சூரியகாந்திப் பயிரைப் பற்றி எடுத்துச் சொல்லி, சூரியகாந்தி பயிரிட வைத்த விரிவாக்கப் பணியாளர்கள் மேல் பழி போடவும் எண்ணி விடுகிறார்கள். இங்குதான் உழவர் பெரு மக்கள் சிறிது சிந்திக்க வேண்டும்!

சரிவர மணி பிடிக்காமல் போனது பூக்களில் மகரந்தச் சேர்க்கை சரிவர ஏற்படாமல் போனதன் காரணமாக இருக்கலாம்! சூரியகாந்தியில் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையை அயல் மகரந்தச் சேர்க்கை என்கிறோம். ஒரு பூவில் உள்ள மகரந்தத் தூள் மற்றொரு பூவின் சூல் முடியை அடைய வேண்டும். இந்த அயல் மகரந்த சேர்க்கை நிகழ்வதற்கு இயற்கையில் உதவுவது பூச்சியினங்கள். அவ்வித பூச்சியினங்களில், சூரியகாந்திப் பயிரைப் பொறுத்த வரையில், தேனீக்கள் முக்கியமானவைகளாகும். தேனீக்கள், சூரியகாந்திப் பூக்களில் மதுவை விரும்பி மொய்க்கும் பொழுது, ஒரு பூவில் உள்ள மகரந்தத் தூள், தேனீக்களின் கால்களிலும், இறக்கைகளிலும் ஒட்டிக் கொண்டு சென்று, அடுத்த பூவின் சூல் முடியை அடைந்துவிடுகின்றன. விதை உண்டாகும் முன்பு இந்த அயல்மகரந்தச் சேர்க்கை ஏற்படவேண்டும். சூரியகாந்தி பூவில் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறு விட்டால் விதைகளும் நிச்சயம் உண்டாகாது. எவ்வளவுக் கெவ்வளவு





தேனீக்கள் விரைந்து செயல் படுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு விதைப் பிடிக்கும்!

சூரிய காந்தி பூத்துக் குலுங்கி, முதிர்ந்து வரும் காலத்தில் அதிகக் காற்றும், மழையும் இருக்கக் கூடாது! மழையாலும், காற்றாலும் தேனீக்களின் இயக்கம் பெரியும் பாதிக்கப்படும். ஆகவே பருவநிலையும் முக்கியமாக சூரியகாந்திக்குச் சாதகமாக இருக்க வேண்டும். பருவநிலை நமது ஆதிக்கத்தில் இல்லை! ஆனால் நாம் நினைத்தால் தேனீப் பெட்டிகளை அதிக எண்ணிக்கையில் சூரியகாந்தி வயலில் வைத்துப் பராமரிக்கலாம். சூரியகாந்திப் பயிரிடும் ஒவ்வொரு உழவர் பெருமகனும் தேனீ வளர்ப்பதை-உரமிடுவது பயிர்ப் பாதுகாப்புச் செய்வது போன்ற-ஒரு சாகுபடி முறையாகக் கருத வேண்டும்.

சாதாரணமாக ஒரு ஏக்கர் சூரியகாந்திப் பயிரில் ஒரு தேனீப் பெட்டி வைக்கலாம். அதன் மூலம் நமக்கு 10 முதல் 15 கிலோ தேன் கிடைக்கும். அதன் மூலம் ரூபாய் 120 முதல் 180 வரை இலாபம் கிடைக்கும். தேனீயை நம்பி வளரும் சூரியகாந்தியும் ஏக்கருக்கு ரூபாய் 900 இலாபம் தரும்!

ரஷ்ய நாட்டிற்குச் சூரிய காந்தி ஒரு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர். அந் நாட்டு உழவர் பெருமக்கள் எல்லாம் சூரிய காந்திப் பயிருடன் இணைத்து தேனீக்கள் வளர்ப்பதையும் தொழிலாகக் கொண்டிருப்பதாக நாம் கேள்விப்படுகிறோம். ஆகவே நாமும் தேனீக்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டிய நிலையிலிருக்கிறோம். தேனீக்கள் சூரியகாந்தி மகசூலை அதிகரிப்பதுடன், தேன் மூலம் உபரி இலாபத்தையும் தருகிறது.

தேனீக்கள் சூரியகாந்தியை நாடுகின்றன! தேனீயை நம்பி சூரியகாந்தி இருக்கிறது! நாம் தேனீயையும், சூரியகாந்தியையும் ஒரு சேர நாடி பயன் மிகுதி அடைவோமாக!

## 2. நெற்பயிரில் நூற்புழு!

தமிழகத்தில் நெற்பயிருக்குச் சேதம் விளைவிக்கவல்ல நூற்புழு ஒன்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு நெல் வெண்நுனி இலைப்புழு,



(நெல் நுனி இலைப் புழு) என்று பெயர். இந் நூற் புழு விதைகளின் மூலமாகப் பரவும் தன்மை கொண்டது. நெல் மணிகளில் உமியின் உட்புறத்தில் இந் நூற் புழு தங்கியிருந்து, விதைத்த பின் வெளி வந்து பயிரைத் தாக்குகிறது.

நெல் மணியிலுள்ள நூற் புழு சுமார் இரண்டாண்டு காலம் உயிருடன் வாழும் சக்தி வாய்ந்தது. ஒரு நெல் மணியில் சுமார் 10—15 நூற் புழுக்களைக் காணலாம். இத்தகைய நெல் மணிகளை விதைத்தவுடன், இப் புழு ஓரிரண்டு நாட்களில் வெளி வந்து புதிதாகத் தோன்றும் பயிர்களின் மேல் ஊர்ந்து சென்று சேதம் விளைவிக்கிறது. நூற் புழுவின் தாக்குதலினால், நாற்று நடப்பட்ட வயல்களில் இளம் பயிர்களினுடைய இலைகளின் நுனி வெளுத்தும், மஞ்சள் நிறம் அடைந்தும், சுருண்டும் காணப்படும். இத்தகைய பயிர் வளர வளர நூற் புழுவும் மேல் பாகங்களுக்கு ஊர்ந்து சென்று கதிர் தோன்றும் சமயத்தில் நெல், பூக்களில் நுழைந்து, சூலகத்தின் அடிப்பகுதியைப் (அண்ட 'கோசம்) பாதிக்கின்றது. அவ்வாறு பாதிக்கப்பட்ட நெற் பூக்கள் பதராக மாறி விடுகின்றன!

கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இந் நூற் புழுவைப் பற்றிச் சில விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப் புழு, கதிர்களில் தோன்றுவதால் விளைச்சல் ஓரளவு பாதிக்கப்படுகிறதெனத் தெரிய வருகிறது. தமிழகத்தில் நெற் பயிர் சாகுபடி செய்யப்படும் எல்லா இடங்களிலும், இப்புழு பரவியுள்ளது. 'காவேரி', 'கருணை', 'ஐ. ஆர். 22', 'ஜெயா', 'கோ. 29', 'டி.கே.எம். 6', 'ஏ.டி.டி. 27', போன்ற நெல் ரகங்களில் இதனால் கணிசமான அளவிற்கு மகசூல் குறைந்து விடுகின்றது. நூற் புழுக்களால் இந்த ரகங்களில் எக்டேருக்கு 140 முதல் 768 கிலோ வரை நெல் விளைச்சல் பாதிக்கப்படுகின்றது எனத் தெரிய வருகிறது.

விதைகளை 50 முதல் 55 டிகிரி சென்டிகிரேடு வெப்பம் உள்ள நீரில் 10 முதல் 15 நிமிடம் வரை வைத்திருந்தால் இந் நூற் புழு இறந்துவிடும். எனினும் வயல்களில் அறுவடைக்கு முன்பு, கதிர்களில் இருந்து நிலத்தில் விழுந்த பதர்களிலிருந்தும், அறுவடைக்குப் பின்பு கட்டைப் பயிர்களை மறுபடியும் நிலத்தில் உழுதுவிடுவதாலும், வயல்களில் காணப்படும் ஒரு வகைப் புல்லில் இந் நூற் புழு காணப்படுவதாலும், அதனால் ஏற்படும் சேதத்தை ஓரளவு தவிர்க்க நெற் பயிரில் 'பாலிடால்' மருந்தை நாற்று நட்ட பின்பு, நான்கு முறை, 15 நாட்களுக்கு ஒரு தரம் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளித்து நூற் புழுவினால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்கலாம்.

* * *

## 3. வெண்டையின் பூச்சிகளைத் தடுக்கப் புதிய பூச்சிக் கொல்லிகள்!

முக்கிய காய்கறிப் பயிரான வெண்டையைத் தத்துப் பூச்சிகள், அசுவணி, காய்ப் புழு ஆகியவை தாக்குகின்றன. இந்தப் பூச்சிகளைத் தடுக்க இது வரை 'என்டிரின்' 0.02 சதம் அல்லது 'ரோகார்', 'செவின்' 0.1 சதம் முதலிய பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

வெண்டையை அழிக்கும் பூச்சிகளைத் தடுக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சியியல் துறையில் ஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஆறு பூச்சிக் கொல்லிகள் இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டன. இந்த மருந்துகள் விதைத்த 21-ஆம் நாள் முதல், 15 நாட்களுக்கொருமுறை விதம், மொத்தம் மூன்று முறைகள் சிறு பாத்திகளில் தெளிக்கப்பட்டன. மருந்து தெளிப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பும், மருந்து தெளித்து 72 மணி நேரத்திற்கு பின்பும் அசுவணி,

# 'சேமிப்பு'
## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறுசேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.




தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டன. ஒவ்வொரு அறுவடையின் போதும் ஒவ்வொரு பாத்தியிலும் மொத்தம் காய்த்த காய்கள், காய்ப்புழுவால் தாக்கப்பட்ட காய்கள், மொத்த மகசூல் ஆகியவைகளை ஆராயப்பட்டது. விதைத்த நாற்பத்தைந்தாவது நாள், செடியின் உயரம், ஒவ்வொரு செடியிலும் உள்ள இலைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கணக்கிட்டதில் 'செவிமால்' 0.1 சதம் தெளித்த செடிகளில் அசுவணி, தத்துப்பூச்சி ஆகியவைகளின் எண்ணிக்கை, மருந்து அடித்த 72 மணி நேரத்தில் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. செவிமாலை அடுத்து 'தயோடான்' (எண்டோசல்பான்) 0.07 சதம் மேற்கூறிய பூச்சிகளின் எண்ணிக்கையை வெகுவாகக் கட்டுப்படுத்தியுள்ளது. 'செவிமால்' 0.1 சதம் மற்றும் எண்டோசல்பான் 0.07 சதம் ஆகியவை தெளிக்கப்பட்ட செடிகளில் காய்ப்புழுவால் தாக்கப்பட்ட காய்கள் மிகவும் குறைவாக இருந்தது. மேற்கூறிய மருந்துகளைத் தெளித்துள்ளசெடிகளில் இருந்து மகசூலும் அதிகமாகக் கிடைத்தது. அதோடு மட்டுமல்லாமல், மேற்கண்ட இரு பூச்சிக் கொல்லிகளும் செடியின் வளர்ச்சியையும் அதிகரித்துள்ளது.

எனவே, வெண்டையைத் தாக்கும் முக்கிய பூச்சிகளைத் தடுக்க 'செவிமால்' 0.1 சதம் அல்லது 'எண்டோசல்பான்' 0.07 சதம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு பூச்சிக் கொல்லியை, விதைத்த 21-ம் நாளில் இருந்து பதினைந்து நாட்களுக்கொருமுறை வீதம் மொத்தம் மூன்றுமுறை தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன்னால் செடியிலுள்ள காய்களை அவசியம் அறுவடை செய்துவிட வேண்டும்.



வெண்டையைத் தாக்கும் பூச்சிகளைத் தடுப்பதிலும், செடியின் வளர்ச்சியிலும் பல்வேறு பூச்சிக் கொல்லிகளின் சக்தி.

| பூச்சிக்கொல்லிகள் | சராசரி காய்ப்புழு (சதவீதம்) | சராசரி மகசூல் பாத்திக்கு (கிலோவில்) | ஒரு செடிக்கு சராசரி இலைகள் | சராசரி உயரம் (செமீ.) |
|---|---|---|---|---|
| பென்தியான் 0.05 சதம் | 10.0 | 8.74 | 11.3 | 54.22 |
| எண்டோசல்பான் 0.07 சதம் | 2.9 | 10.89 | 11.6 | 55.68 |
| எக்காலக்ஸ் 0.025 சதம் | 7.5 | 7.80 | 9.9 | 42.40 |
| செவிமால் 0.1 சதம் | 3.6 | 12.17 | 12.0 | 59.97 |
| மாலதியான் 0.1 சதம் | 7.9 | 9.71 | 11.1 | 55.04 |
| கார்பரில் 0.1 சதம் | 5.0 | 8.11 | 8.9 | 47.10 |
| மருந்து தெளிக்காத பாத்தி | 12.8 | 5.81 | 8.7 | 36.55 |



## 4. பூச்சிக் கொல்லி மருந்துகளும் மண்வாழ் நுண்ணுயிர்களும் !

பயிர்கள் அதன் ஆரம்ப வளர்ச்சியின் முதற்கொண்டே பல்வேறு வகையானப் பூச்சிகளால் சுலபமாகத் தாக்கப்படுகின்றன. அதைத் தடுக்க சமீப காலங்களில் மருந்துகளைக் குருணை வடிவில் மண்வழி இடுதல் சிறந்ததொரு முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இடப்பட்ட மருந்துகள் மண்ணில் வெகுநாட்கள் தங்கி, பயிர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கின்றன. இருப்பினும், நிலவழி இட்ட பூச்சிக்கொல்லிகளின் நச்சுத்தன்மை அந்நிலத்தில் வாழும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களையும், மற்ற பல்வேறு வகையான நுண்ணுயிர்களையும் எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்று அறியப்பட வேண்டியது அவசியமாகும். மேற்படி கருத்தினை மனதிற்கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் பூச்சி இயல் பிரிவில் சில ஆராய்ச்சிகள் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

'ஆல்டிகார்ப்', 'டைசிஸ்டான்' குருணைகளை வெண்டை செடிகளுக்கு எக்டேருக்கு 0.5 கிலோ உள்ளீட்டுச் செயல்படு பொருள் அளவில் (Active ingredient) இட்டுப் பரிசோதனை நடத்தியதில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால், மருந்தின் அளவை 1 கிலோவாக உயர்த்தியதில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டாலும், மருந்து போட்ட 60 நாட்களுக்குப் பிறகு எண்ணிக்கையில் அதிக வேறுபாடு இல்லை. பூஞ்சாளங்களின் வளர்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. உதாரணமாக 'ஆல்டிகார்ப்' 0.5, 1.0 கிலோ அளவு, பூஞ்சாளங்களை 45 நாள் வரை பெருக்கியது. ஆனால் 'டைசிஸ்டான்' 1 கிலோ அளவு 45-வது நாள் வரை எண்ணிக்கையைக் குறைத்தது. எனினும், அதன் பிறகு எண்ணிக்கையில் அவ்வளவாக வேறுபாடு இல்லை. ஆய்வகத்தில் நடந்தச்சோதனைகளிலும் பல்வேறு பூஞ்சாளங்கள் பலவிதமான வளர்ச்சியை காட்டின. மேற்கூறிய இரண்டு வகைப் பூச்சிக்கொல்லி மருந்து போட்ட வெண்டைச் செடிகளிலும், ஆக்டினோமைசிட்கள் பொதுவாக அதிகமாக காணப்பட்டன. ஆக்டினோமைசிட்டுகள் பூஞ்சாளங்களைவிட, 'டைசிஸ்டான்' குருணைகள்

னின்றும் அதிககரிமப்பொருளை யும், பாஸ்பரஸ் சத்தையும் உட்கொண்டு வளரும் தன்மை யுடையது என்று இங்கு நடந்த ஆராய்ச்சிகளிலுல் தெரிய வரு கிறது.

கத்திரிச் செடியில், 'ஆல்டி கார்ப்','டைசிஸ்டான்','கார்ப் போப்யூரான்' முதலிய மருந் துக் குருணைகளைப் போட்டு ஆராய்ச்சி நடத்தியதிலும், மேற்கூறிய வகைகளில் நுண் ணுயிர்களில் மாறுதல் ஏற்பட் டன.

அதே மாதிரி, நெற்பயிரில் கார்போப்யூரான்', 'என்ட் ரின், 'போரேட்' ஆகிய மருந் துக் குருணைகளைப் போட்டு பாக் டீரியா, பூஞ்சாளங்கள் மற்றும் ஆக்டினோமைசிட்டுகளின் எண் ணிக்கையை ஆராய்ந்ததில், அவைகள் சோதனை நடத்திய 15 நாட்களிலும் எண்ணிக்கை யில் மிகவும் குறைந்தே காணப் பட்டன. காற்றிலுள்ள கால சுத்தை (நைட்ரஜன்) கிரகிக் கும் தன்மை வாய்ந்த 'அஸி டோபேக்டர்'' என்ற நன்மை பயக்கும் நுண்ணுயிர் பொது வாக பூச்சி கொல்லி மருந்து போட்டவுடன் குறைந்து விடு கிறது.

பூச்சிக்கொல்லி மருந்துகளி ஞல் மற்ற நன்மை பயக்கும் கிருமிகளின் எண்ணிக்கையும், அதன் செயல் முறைகளும் எவ் வாறு பாதிக்கப்படுகின்றன என்று அறிய மேலும் பல நுட்பச் சோதனைகள் நடை பெற்று வருகின்றன.

(தொகுப்பு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.)







பதிவு எண். M.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



1-9-1974 50 காசு



# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் சர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.




# விடுதலைநாள் பரிசு!


மலர்-5 **தமிழரசு** இதழ்-5
1-9-1974


இந்தியப் பெருநாடு விடுதலை பெற்று
இந்தத் திருநாளில் என் இன்பு வாழ்த்
துக்களைத் தமிழ்நாட்டுமக்களுக்குத்
தெரிவித்துக்கொண்டு, வீரசுதந்திரம்
வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்து
பட்ட மாவீரர்களுக்கும் தியாகச்
செம்மல்களுக்கும் வணக்கத்தைத்
தெரிவிக்கிறேன்.
மண்மீட்க எடுத்த போராட்டத்தின் முடிவில்
வெற்றிக் களிப்புடன் விண்முட்டப்பறந்து
பட்டொளி வீசும் இந்திய தேசியக்
கொடியை, மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள்
தான் இந்நாளில் ஏற்றிவைக்க 107

வேண்டுமென்று தமிழக அரசு எழுப்பிய உரிமைக் குரலைப் புறக்கணிக்காமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உழைப்புக்குக் கை கொடுப்போம் — உரிமைக்குக் குரல் கொடுப்போம்" — என்று நேற்று உழைப்பாளர் உள்ளத் திற்குக் கிடைத்த "விடுதலை நாள் பரிசு," இதுவென எண்ணி மகிழ்கிறோம்.

அண்ணல் காந்தியடிகளும், ஆசிய ஜோதி நேருவும், படேலும், திலகரும், தென்னாட்டுச் சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், மூதறிஞர் ராஜாஜியும், வீரர் நேதாஜியும் — எண்ணற்ற இந்தியப் பெருவீரர்களும் சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சிமலர் தான் இந்த நாட்டின் சுதந்திரம்.

அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தேரில் ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலை மாறி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திட வேண்டும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், 1947 ஆகஸ்ட் 15 - அன்றைய அதிகாரத் துரைக்குக் கிடைத்த நாள் என்றும், அவ்வாறு கண்டோம் கொண்டதை ஆகஸ்ட் 15 - சுதந்திரத் தின் பண்டிகைக் கொண்டாடப் பார்த் திருநாள் என்றும் அழைக்கப்படக் கூறினார்.

சுதந்திர முழக்கம் செய்த தியாக சீலர்கள் வரையும் இந்த அரசு மறக்கவில்லை — மதிக்கத் தவறவில்லை. வெள்ளையனை எதிர்த்து முதற்குரல் ஒலித்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அழிந்து போன பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இதோ - மீண்டும் உருவாக்கி விட்டோம்; அந்தத் தீரனின். திருநாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்!

தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.

சிதம்பரனார் பிழைப்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டு பிடித்துச் சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம்.

கவிதை வழியில் விடுதலைப் போர்க் கவிதைகள் தயாரித்துக் கொடுத்த கவியரசன் பாரதிக்குச் சிலை மண்டபம்; எட்டயபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கி யிருக்கிறோம்.

மூதறிஞர் ராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முழுவதும் தயாராகிவிட்டது

1.1.

ஆங்கிலத்துக்கு ஏற்பட்ட நிலை
கலைக்கு நிலைச் சொல்லும் மாண்பும் —
தமிழக அரசின் ஆட்சியில் விடுதலைப்
பட்டயம் — இப்படிக் கடமை தவறு-
தலால் அதற்குப் போர்க் கால
கண்டவர்க்கு வழங்கும் ஆண்டுக்
காணிக்கையை இந்த அரசு திட்டமே
தயங்காமல் வழங்கி வருகிறது.
வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்று
வதுமட்டும் அதற்குத் தான் நோக்க
மல்லவே! மக்களுக்குச் சுதந்திர
ஆக்கத் திட்டத் தொண்டாற்றி ஆதில்
வெற்றி காண்பதும் முக்கிய குறிக்
கோள் அன்றோ!

அதே நாட்டுச் சமுதாயத்தின் இன்றி-
யமையாத் தேவைகளான உணவு,
உடை, உறையுள் — இவைகளை
நிறைவு செய்வதில் நாம் முழு
வெற்றி பெற்று விட்டோமா?
இன்னும் ஏழை பசிப் பிணி
தீர்க்கத் தேவை அதிகம் இருக்கிறதே!
தமிழகத்தைப் பொறுத்த
வரையில் — நமது அரசு, நமது
வசதி வாய்ப்புக்களைச் சேர்த்து வாழ
இயன்ற வரையில் எல்லையின்றிப்
இவைகளைக் காண முயன்று வருகிறோம்.

அழுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்
பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட
மக்கள், ஏழை எளியோர்
மேன்மை பெற நமது திட்டங்கள்
தீட்டப்படுகின்றன.
நமது கண்ணெனப் போற்றும் தியாகப்
பணிகள், காட்டாம்பட்டுத் தமிழ்
நாடுபெற்ற மக்களின் கையில்
அமைந்திருக்கின்றன.
காப்பியக் கலை கட்டிடக் கலை
நாவலர்க்கு, வாழ்விற்கு
அடியோடு அழிந்து விட்டோம்.
உலகமெங்கும் உதவிட இந்த

ஆண்டு முடிந்துள்ளோம். சமுதாயத்
தாழ் நிலைமையை மட்டுமல்ல;
தீண்டாமையெனும் தீமையையும்
இந்த ஆண்டு அழித்து விட்டோம்.
இதோ பாருங்கள் தேசியக் கொடி
இந்திய அரசமைப்புச் சட்டம் இன்ன
மென்று தெரிகிறது. அதில் —
மதுவிலக்கும், தீண்டாமைப் பற்று
ஒழிப்பும் — மகாத்மாவின் கொள்கை
கள் என்னும், அவை அனைத்திற்கும்
அடிப்படை நாட்டுப்பற்றுப்
படலம். இந்திய அமைப்புப்
பட்டை நிலைநாட்ட, தமிழகம்

பேச்சுக்கள் இந்த நேர முழுவதும்
இந்திய மாநிலங்கள் அனைத்தும்
பின்பற்றும் போக்கின் அரசாங்க
நிலைப்பாடு வழிவகை காண
வேண்டும்.

தன்னையுடன் விளங்கிய தமிழ்
மாநாட்டில் உரைப்பிரச்சினை
நமக்கு வேதனையளிக்கும் ஒரு
சம்பவம்!

தமிழாசிரியன் தேவைகள், தன்
னையோவன் தன் அயராட்சியில்
காக்கும் அரசுக்கு எதிராக

முழுப்பேச்சும் எழுப்பும் தேவைகளில்
அதனால் இந்த உரையைப்
பிரித்தேன்!

பிரச்சினைக்கு ஏற்ப நடவடிக்கை
அரசியல் ஆய்வு ஆட்சியில்
பதிப்பகம் அரசு எடுத்த
நடவடிக்கைகள் - பொருட்களின்
தரம் அதிகரிப்பு - இவைகளின்
காரணமாக - தமிழ் விலை
வளர்ச்சித் தடைகள் தோன்ற
காத்திருந்து விட்டன.
பழக்கம் புதியவை - வெட்கம் பெருமை -

தமிழ் பேசுவோர் நிரப்பித் தொகுப்பு
எனவே வளர்ச்சி அறுபது, மன
னிக்க முடியாத துரோகம். அவர்கள்
கடமையான சட்டத்துக்கும், பொறுப்பு
அளிப்பட்ட எல்லோரும் கொள்கைப்பாட்டில்
என்பதை இந்த நாட்டின் பேரில்
எச்சரிக்கையாக இருக்க
முடியாது. எனவும் பேசித் தீர்க்கவேண்டியவை
பட்டதில் தந்து பொருந்தாத முறைய
முறையாக - தமிழ் மாநாட்டிலே தேசீய
மட்டத்தில் கட்டாயமாகத் தடைகள்
இருக்கக் கூடாது - இவை
கள் இந்த அரசு, தமிழ் தொட்டால்
மின்னலில் சிக்கிக்கொள்ளும், சுமைக் கூடு

என்பதை உறுதியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதற்காக - என்னால் மன்றாடுகின்றேன்!
அவரே வாழ - அவரே வீழ்த்தினர்!
தமிழரே வாழ்ப்பெருக்க வாழும்
இது தேசத்தின் வாழ்க்கை காடும் என்றோ
உறுதி உறுதி பயன் விளக்கும்
நினைவு உரைப்புத் தோரண வழிக்குறிப்
பயன்பட அதற்காகும் —
பொறுமையாகப் படிக்க முடிந்தது, மனிக்
குறைப் போல் எழுதிய முறை
அமைச்சர்களின் பயன் பட
அதற்காகும் —

413

...ட்டவனுக்கு நிலவாகத் தான்
இருந்தபடியே —
அதனைக் கேட்டவனுக்கும் அந்த
நிலவாக்க இருந்தாலும் அனுபவம்
உறுதி எடுப்போம்.

விடுதலை என்னும் — வேட்கையால்
திண்டாட்டம் — எனும் வேதனைக் குழலுக்
கிடையே அதற்காகத் திரள் எனும்
மகிழ்ச்சி ஒரு தென்றல் காற்று எனினும்
அதன் சுவை இன்றும் எனக்கு உயர்வாய்
இல்லை. இன்றும் தேசியவிலேயே மிகப்
பெரிய ஒரு பொறுப்பாக மாற்றுக்
அதைச் செய்து தர வேண்டிய

கட்டத்தில் இருக்கிறோம் என்பதை
மறந்திடலாகாது. அதிகார வளைப்
பிலும், பொருளாதாரத் துறையிலும்
தனித்து எடுக்கின்ற புரட்சிகரமான
நடவடிக்கைகளின் மூலமே, இந்திய
வை ஒளி பொலிந்திய நாடாகத்
திகழவைக்க முடியும். இந்த வகைக்
கடமையாற்ற பெருமையைக் கொண்ட
வணக்கம், தொண்டாற்றத் தொடர்
வோம்! தாய் நாட்டின் விடுதலைக் காப்
போம் — என்று கூறி என் இதய
வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்
துக் கொள்கிறேன். வணக்கம்.

சென்னை கோட்டை கொத்தளத்தில் (15.8.1974) விடுதலைநாள் விழாவில் முதல்முதலாக நாட்டுக் கொடியை ஏற்றிவைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

# கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தாயகத்தின் விடுதலைக்காகவும் தமிழினத்தின் தன்மானம் காக்கவும் முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி புரிந்த பாஞ்சாலங்குறிச்சியில், பதினைரை ஏக்கர் நிலத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் தமிழக அரசு எழுப்பியுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையினை 18—8—1974-ல் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திறப்பு விழாவையொட்டி, முக்கடல் சங்கமமோ, மூவேந்தர் அணிவகுப்போ என்று வியக்கத் தக்க வகையில், எழுச்சியும் உணர்ச்சியும் இரண்டறக் கலந்து, மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. திறப்பு விழாவிற்கு முன்னர் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கோட்டையின் உள்ளே கட்டபொம்மன் அரியணையில் வீற்றிருப்பதுபோல் அமைந்த 7 அடி உயரக் கருங்கற் சிலை இடம் பெற்றுள்ளது. மற்றும், ஊமைத்துரை, பகடை சுந்தரலிங்கம், வெள்ளையத்தேவன், தானாபதிப்பிள்ளை ஆகியோருக்கும் சிலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்களில் 200 பேருக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அன்றைய தினம் நிலப்பட்டா, மனைப்பட்டா ஆகியவற்றை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. க. சுப்பு வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்களும், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் மணலி கந்தசாமி, முத்தையா, கதிரவன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். சிவசாமி அவர்களும் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சென்னப்ப ரெட்டியார் அவர்களும் இந்த விழாவில் பங்கேற்றனர்.





# செய்தித் துறையும் தமிழ்நாட்டு அரசும்

## அமைச்சர் என்.வி.நடராசன்

நமது ஜனநாயகம் சிறு பிள்ளைப் பருவத்தில் உள்ளது. நமது மக்கள் தொகையோ லட்சோப லட்சமாய்ப் பெருகி வருகிறது.

எனினும், நம் மக்களில் பெரும்பாலோர் இன்னும் பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன் போன்ற தகவல் தொடர்பு வசதிகளைப் பெறவில்லை.

ஒரு திட்டமிட்ட சமுதாய அமைப்பு முறையை நாம் நாடி உழைத்து வருகிறோம். இந்தச் சூழ்நிலையில் தகவல் மற்றும் விளம்பர அமைப்புகள் பெருங் கடமையை ஆற்ற வேண்டியிருக்கின்றன.

பொருளாதார-சமூக முன்னேற்றத் தேவையான அளவு தற்போது இந்தியாவில் தகவல் அமைப்பு முறை இல்லை. எனவே இந்தப் பொதுத் தொடர்பு வசதிகள் நவீன அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்; விஸ்தரிக்கப்பட வேண்டும்.

நீங்களெல்லாம் அறிந்தபடி நமது நாட்டில் சக்தி வாய்ந்த செய்தித் தொடர்பு வசதிகள் வானொலி, டெலிவிஷன் மற்றும் திரைப்படங்களாகும்.

அவைகள் மொழி எல்லைகளைக் கடந்து செல்கின்றன. குக்கிராமத்திலிருந்து மக்களைக் கூட எட்டுகின்றன.

1972-ஆம் ஆண்டின் கணக்கின்படி, இந்தியாவில் உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகள் ஒரு கோடியே 30 லட்சம் உள்ளன என்று அறிகிறேன். அதாவது நான்கில் ஒரு பகுதி வீடுகளில்தான் அவைகள் உள்ளன.

நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் உள்ள வானொலிப் பெட்டிகளின் விகிதாச்சாரமோ ஏற்றத்தாழ்வு கொண்டவை.

எமது மாநிலத்தில் இரு வானொலி நிலையங்கள் கிராம வாசிகளுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. இதனால் கிராமப்புறங்களில் வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகி வருகின்றன. எமது மாநிலத்தில் மேலும் வானொலி நிலையங்களை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையிலிருந்து இதை அறியலாம்.

நெல்லை மற்றும் கோவையிலுள்ள அஞ்சல் நிலையங்களைத் தரம் உயர்த்தும்படி எமது அரசாங்கம் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சரைக் கேட்டு வருகிறது.

அன்றியும், மதுரையில் முழுமையான வசதிகளுடன் வானொலி நிலையம் அமைவதையும் நாங்கள் விரும்புகிறோம். இந்த நிலையம் அமைந்தால், அது விவசாயிகளின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும்.

ஐந்தாம் திட்டக் காலத்திலேயே மதுரையில் வானொலி நிலையம் அமைக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னையில் டெலிவிஷன் நிலையம் அமைக்க எமது அரசு எல்லா உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகிறது என்பதை இந்த மாநாட்டுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையம் விரைந்து இயங்கத் தொடங்குவதைத் தமிழ்நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

ஏற்கனவே வேறிடங்களில் அமைந்துள்ளவை போலன்றி, சென்னையில் அமையும் டெலிவிஷன் நிலையம் தொடக்கப் பள்ளிகளுக்கான கல்வி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என எமது அரசாங்கம் நினைக்கிறது.

குழந்தைகளைச் சிறந்த குடிமக்களாக்க வேண்டும்; விரும்பிய இலக்கை அடையும் வண்ணம் இளம் மனதுகளை உருவாக்க வேண்டும்; இதுவே ஒரு சேம நல அரசின் அடிப்படையான பொறுப்பென்பதை நீங்களெல்லோரும் அறிவீர்கள்.

இந்த நோக்கை நிறைவேற்ற சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 1500-க்குக் குறையாமல் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேவைப்படும்.

எனவே, இந்தப் பெட்டிகளை இலவசமாய் வழங்க மத்திய அரசு முன்வருமென்று கருதுகிறேன்.



பம்பாயிலும் டெல்லியிலும் எமக்குக் கிடைத்த அனுபவங்கள் (சொந்தத்தில்) தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்திருப்போருக்கு மட்டுமே இதைக் கண்டுகளிக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் அது கூடாது.

நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்னதை இத்தொடர்பில் எடுத்துக் கூறுவது தொடர்புடையது என்று கருதுகிறேன்.

"ஒரு குறிப்பிட்ட சிறு பகுதியினருக்கு மட்டுமே டெலிவிஷன் வசதி கிடைப்பதென்றால், அது தக்கதில்லை. எனவே, நாம் எங்கெல்லாம் டெலிவிஷன் அல்லது ரேடியோ நிலையம் வைத்திருக்கிறோமோ அங்கெல்லாம் அதன் பயன் பெருமளவு மக்களுக்கு எட்டும் படியும் அதிகப்படியான பொதுப் பெட்டிகள் இருக்கும் படியும பார்த்துக் கொள்ள வேண்டும்!" என்றார் அவர் 1972-ல்

"மது தமிழ்நாட்டுத் திரைப்டத் தொழில் நுட்பக் கல்லூரி கற்பனைத்திறம் படைத்த தொழில் நுட்பதாரிகளை உருவாக்கி இருக்கிறது. அவர்களை சென்னையில் மட்டுமின்றி இந்தியாவெங்கணும் டெலிவிஷன் நிலையங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தகவல் துறை விஸ்தரிப்பு என்பது ஒரு தொழில் நுட்பச் செயல் திட்டம். எனவே, இத்துறையில் பயிற்சி என்பது தவிர்க்க முடியாதது.

எனவே, உள்ளிருப்பு ஊழியப் பயிற்சிக் கேந்திரம் என்ற உத்தேசத் திட்டம் எமது மாநில ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு அங்கமாக மாநிலத்துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அந்தப் பயிற்சிக் கேந்திரத்தை நடப்பு ஆண்டிலேயே துவக்க நாங்கள் கருதியுள்ளோம். எனவே அதற்கான நிதி ஒதுக்கீட்டைத் தரும்படி நான் திட்டக் கமிஷனைக் கோருகிறேன்.

செய்திப்படங்கள் போக, கிராமப்புறங்களுக்குத் தேவையான சிறு படங்களைத் தயாரிப்பதிலும் எமது மாநில அரசின் திரைப்படப பிரிவு ஒரு சாதனையைக் கண்டிருக்கிறது.

ஆங்கிலத்திலும், தமிழிலும் நாங்கள் வெளியிடும் 'தமிழரசு' என்ற மாதமிரு முறை ஏடு ஐம்பதாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன.

சிறந்த தகவல் பணிக்காகவும், பொது மக்கள் தொடர்புக்காகவும் நாங்கள் எல்லா வசதிகளையும் பயன்படுத்த முயன்று வருகிறோம்.

ஆனால், திரைப்படக் காமிராக்கள், பிலிம் மற்றுமுள்ள கருவிகளைப் பெறுவதில் (இறக்குமதி சம்பந்தப்பட்டவற்றில்) நாங்கள் அடிக்கடி தொல்லைகளைச் சந்தித்து வருகிறோம். தேவையான அந்நியச் செலாவணியை அனுமதிக்க வேண்டுமென நான் மத்திய அரசை வேண்டுகிறேன்.

நாங்கள் திரை அரங்கக் கார்ப்பரேஷன் என்ற ஓர் அமைப்பை வைத்திருக்கிறோம். இந்தியாவில், அவ்வகையிலேயே முதலாவதாகும் இது. கிராமப்புறப் பகுதிகளில் நிரந்தரக் கொட்டகைகளை உருவாக்க, கடன் தருதல், தொழில் நுட்ப ஆலோசனை உட்பட தொடர்புடைய பிற உதவிகளையும் அளித்தல் ஆகியவற்றின் மூலம் இந்தக் கார்ப்பரேஷன் ஊக்கமளித்து வருகிறது.

எழுபது தியேட்டர்களுக்குக் கடன் தந்ததில், ஐந்து இப்போது இயங்கி வருகின்றன. வரும் செப்டம்பர் திங்களில் இன்னும் ஐந்து இயங்கவிருக்கின்றன



சமூகத் திட்டமிடல், வறியோரின் உயர்வு ஆகியவற்றின் மீது எமது முதல்வர் கலைஞர் அவர்கள் அதிக அழுத்தம் காட்டிவருகிறார்.

அதற்கேறப உடல் ஊனமுற்றோருக்கும், தொழு நோயாளிகளுக்கும் மறுவாழ்வுதரும் திட்டத்தை நாங்கள் அமல்படுத்தி வருகிறோம். இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறோம். வீடற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களைத் தாராளமாக வழங்கி வருகிறோம்.

இந்த நல்வாழ்வுத் திட்டங்களெல்லாம் பிற மாநிலங்களிலும் விளம்பரப்படுத்தப்பட வேண்டியவை; அப்படிப்பட்ட தகவல் முயற்சிகள் பாமரனின் மனத்தில் நம்பிக்கையை ஊட்டி-அவன் இந்நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கெடுப்பதை உத்திரவாதம் செய்யும். எனவேதான் நான் இவற்றை இங்கே குறிப்பிட்டேன்.

சுதந்தரத்திற்குப் பின், இந்தியாவின் உண்மையான தோற்றத்தை எடுத்துக்காட்டுவதில் ஏடுகள் அடிக்கடி தவறிவிடுகின்றன. எனவே, இதற்கென்று ஓர் ஒழுக்க நியதியை இந்த மாநாடு எடுத்துக்கூறும் என்று கருதுகிறேன்.

புதிய சமூக அமைப்பை உருவாக்க இந்த நாடு போடும் நடையோடு பத்திரிகை உலகமும் சேரவேண்டும்.

[புதுடெல்லியில் 4—8—1974 அன்று நடைபெற்ற மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை].

## மிருகங்களுக்குத் தரும் மருந்துகள்



யானையிலிருந்து பூனை வரை விலங்கினங்கள் பல வகை. உடலமைப்பு, உடல்வாகு பல திறப்பட்டவை. நோய்க்காக இவைகளுக்கு மருந்து கொடுக்கும் போது, அந்த மருந்தின் அளவு மிருகத்துக்கு மிருகம் வேறுபடும். எந்த அளவுககு அதில் வேறுபாடு உள்ளது என்பது கீழேதரப்படுகிறது. இநதத தகவல் கால்நடை மருததுவக கல்லூரி அண்மையில் நடத்திய பொருட்காட்சியிலிருந்து பெறபபட்டது.

நாயககு ஒரு வேளை மருநது ஏறக்குறைய மனிதர்கள் உட்கொள்ளும் அதே அளவு

பூனைக்கு அதில் பாதி;

பன்றிக்கு இரண்டு மடங்கு;

வெள்ளாடு, செம்மறியாடு ஆகியவைகளுக்கு மூன்று மடங்கு;

குதிரைக்கு 16 மடங்கு;

மாடுகள், எருமைகள் 24 மடங்கு.



# கட்டபொம்மன்

வானந்தா னுய்ப்பொழியும்; குளிரும் பூமி!
வாட்சிமாறப் பயிர்செய்வான் நமது தோழன்!
எனந்த வெள்ளையனுக் கிறை செலுத்தி
இழிநிலையில் நம்மைநாம் ஆள வேண்டும்?
மானந்தான் பெரிதுநமக்கு; உயிரோ துச்சம்!
மறத்தமிழர் குடிப்பெருமை புராணம் அல்ல!
ஆனந்தம் அடிமைமண்ணில் இல்லை; என்றும்
அந்நியருக் கிடங்கொடுத்தல் மடமை என்றேன்!

வழக்கம்போல் உடன்பிறந்தான் உடன்தான் நின்றான்!
வஞ்சகமாய் நரிவேலை செய்யும் ஈனன்
சழக்கருடன் சேர்ந்துகொண்டான்; சதிகள் செய்தான்!
சண்டாளர், பிழைக்கவந்தோர், நாட்டை ஆள
உழக்களவும் உரிமையிலார் படியளந்தால்—
உப்பிட்டுச் சோறுதின்போன் உணர்வு போமோ?
கிழக்கையாள மேற்கிருந்து வந்த கூட்டம்
கிடுகிடுக்கப் போர்தொடுத்தேன்; எனைய ழித்தார்!

பூண்டற்றுப் போகட்டும்; எனது வம்சம்
புகழற்றுப் போகட்டும் நம்நா டென்றே—
ஆண்டஅந்தப் பரங்கியர்கள் கனவு கண்டார்!
அடிமட்ட மாய்இடித்தார் கோட்டை யெல்லாம்!
வேண்டுமென்றே உழுதுபோட்டார்! ஆம ணக்கை
விதைத்திட்டார்! சுதந்தரத்தின் வேட்கை யாக
மூண்டெழுந்து வெள்ளையரை வெளியே தள்ளி
முழுவதுமே குடியரசாய் மலர்ந்த தன்றோ?

# பேசுகின்றேன்!



இருபத்தே ழாண்டுகள்முன் இந்தி யாவின்
ஈடற்ற சுதந்தரத்தைப் பெற்றீர்! ஆனால்
ஒருபக்தன் பாரதத்தாய் விடுத லைக்கே
உயிர்விட்டேன் முதன்முதலாய்; எனைம றந்தீர்!
கருவத்தால் என்தலைதான் கனக்கும் வண்ணம்
கனித்தமிழன் ஒருவன்தான் கனவு கண்டான்—
உருவத்தைச் சிதைத்தழித்தோர் வியக்கு மாறு
ஓங்கியெழும் கோட்டையொன்றைச் சமைத்தான் மீண்டும்!

இதன்முன்னர் வேறெவர்க்கும் தோன்றா எண்ணம்
எத்தனையோ இவன்அறிவில் முளைத்த தாலே—
முதன்முதலாய் நம்நாட்டுக் கொடியை ஏற்றும்
முதலமைச்சாய் இவனன்றோ உரிமை பெற்றான்
அதன்பயனை இன்றுணர மாட்டீர்! என்னை
இத்தனைநாள் ஏறெடுத்தும் பாரா மக்கள்—
நிதமினிமேல் பாஞ்சாலங் குறிச்சி நோக்கி
நிமிர்ந்தநடை போட்டுவர நினைப்பீர்; திண்ணம்!

கோட்டையென்ன; கொத்தளங்கள், மதில்கள் என்ன;
கொலுவிருக்கும் நேர்த்தியென்ன; என்முன் னாலே
கோட்டைவிடா ஊமதுரை, வெள்ளைத் தேவன்,
கொள்கைக்கோ சுந்தரன், நம் பிள்ளை உள்ளார்!
நாட்டையாளும் நற்கலைஞர் உயிரை மீட்டார்;
நன்றிசொல்லத் தான்வந்தேன்; நினைவிற் கொள்வீர்!
நாட்டவரே; வீரனுக்குச் சாவே இல்லை;
நம்பிடுவீர்; வாழ்கின்றேன், உமக்கா கத்தான்!

## கலைஞர் கருணாநிதி

# புள்ளி நோய் தடுக்கவும், எள்ளின் விளைவு பெருக்கவும் ஒரு மருந்து!

ஆனைத்திந்திய எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், வேளாண் தாவர இயல் துறை மற்றும் தாவர நோயியல் துறை ஆகிய துறைகளில் எள்ளின் சராசரி மகசூலை அதிகரிக்கச் செய்யத் தகுந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொறுக்கு வித்துக்கள் உட்பட்ட சீரிய வேளாண்மை முறைகளினால் கிடைக்கும் விளைச்சல், நோய்த் தாக்குதலினால் மிகவும் குறைந்துவிடுகிறது. எள்ளைத் தாக்கும் நோய்களில் ''ஆல்ட்டர் நேரியா செசாமி'' என்னும் பூசணத்தால் உண்டாகும் ''இலைப்புள்ளி நோய்'' முக்கியமானதாகும்.

இந்தப் புள்ளி நோய், ஆடிப்பட்ட எள்ளிலும், மாசிப்பட்ட எள்ளிலும் விதைத்த ஒரு மாதத்திற்குப் பிறகு தோன்றும். ஈரக் காற்று மிகுந்த சீதோஷ்ண நிலையில் இது வேகமாகப் பரவும். நோய் அதிகமானால் இலைகள் உதிர்ந்து விடும். இதனால் விளைச்சலில் ஏறத்தாழ 50 முதல் 80 சத விகிதம் வரை இழப்பு ஏற்படும். இந்த நோயைத் தடுக்க 1973-ஆம் ஆண்டு பல்வேறு பூசண மருந்துகளை உபயோகப்படுத்தி இரு வயல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 'டைத்தேன் எம். 45' என்னும் மருந்தை 0.2 சத விகித நீர்க் கலவையாக (எக்டேருக்கு 750 கிராம் மருந்து) தெளிப்பதன் மூலம் 'ஆல்ட்டர் நேரியா' இலைப் புள்ளி நோயை வெகுவாகக் குறைத்து விடலாம் என்று கண்டறியப்பட்டது.

மாசி (மார்ச்சு) மாதம் விதைத்த பயிருக்கு எள் விதைத்து 5-வது வாரத்திலும், பிறகு ஏழாவது வாரத்திலும் ஆக இரு முறைகள் மருந்து தெளிக்கப்பட்டது.

ஆடி மாதம் (ஆகஸ்ட்) விதைத்த பயிருக்கு மூன்று முறை அதாவது 5, 7, 9-வது வாரங்களில் மருந்து தெளிக்கப்பட்டது. ஆய்வின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன இந்த ஆய்வு சிறிய பாத்திகளில் (3.6 × 3.6 மீட்டர் அளவு) மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் கிடைத்த மகசூல் எக்டேர் அளவிற்குக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. ''டைத்தேன்—எம். 45'' மருந்து தெளித்ததால் ஏற்பட்ட பயன் பின்கண்டவாறு உள்ளது:

| | விதைப்புக் காலம் | |
|---|---|---|
| | மார்ச் 1973 | ஆகஸ்ட் 1973 |
| விவரம் | எக்டேர்மகசூல் | எக்டேர்மகசூல் |
| மருந்தடிக்காத பயிர் .. | 403 கிலோ | 385 கிலோ |
| 'டைத்தேன் எம். 45' மருந்து தெளித்த பயிர் | 665 கிலோ. | 702 கிலோ |
| அதிக விளைச்சல் (கிலோ) ... | 262 கிலோ. | 317 கிலோ. |
| அதிக விளைவு சத விகிதம் ... | 65.00 | 82.40 |
| மருந்தடிப்பு செலவு (ஏறக் குறைய) ... | 80.00 ரூபாய் | 120.00 ரூபாய் |
| நிகர இலாபம் (ஒரு கிலோ எள், ரூ. 2.50 வீதம்) | 575.00 ரூபாய் | 672 ரூபாய் |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து 'டைத்தேன்—எம். 45' மருந்து தெளிப்பதனால் 'ஆல்ட்டர் நேரியா' புள்ளி நோய் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுவதோடு, விளைச்சலும் 65 முதல் 82 சத விகிதம் வரை அதிகமாகிறது என்பது புலனாகின்றது. நிகர இலாபமும் எக்டேருக்கு ஏறக் குறைய அறுநூற்றுக்கு மேல்கிடைக்க ஏதுவாகிறது இதனால், 'மாங்கனீஸ்' கலந்த பூசண நாசினியாகிய 'டைத்தேன்—எம். 45' மருந்து இலைப்புள்ளி நோயைத் தடுப்பதோடு, எள்ளின் விளைச்சலையும் பெருகச் செய்கிறது என்பதும் தெளிவாகிறது எனவே, இந்த உண்மையை உழவர் பெருமக்கள் உணர்ந்து, எள் பயிரில் 'டைத்தேன்—எம். 45' மருந்து தெளித்து, அளப்பரிய விளைவு பெருக்கிப் பலனடையும்படி கோருகிறோம்.

தொகுப்பு : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

423

# ஆண்டாள் நினைவு வரும் ஊரில்



# ஆலையின் நினைவும் வரும்

ஆண்டாள் நினைவுவரும் ஊரில் ஆலையின் நினைவும் வரும் அளவுக்குச் சிறந்து விளங்குவது ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையாகும்.

நெசவாளர் பெருமக்களுக்கு நூல் தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலையில் தரமான நூல் கிடைக்க வேண்டும் என்ற அரசின் திட்டப்படி தமிழகத்தில் இரண்டாவதாக தொடங்கப்பட்ட ஆலை ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையாகும். இவ்வாலை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 1957-ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாள் துவக்கப்பட்டது.

தொடக்கத்தில் 12, 544 கதிர்களுக்கு உரிமம் பெறப்பட்டு. 1961-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து உற்பத்தி தொடங்கியது. பின் இவ்வாலையின் வளர்ச்சிக்காக மேலும் 12,544 கதிர்களுக்கு உரிமம் பெறப்பட்டது. இவற்றை நிறுவும் வேலைகளனைத்தையும் மேற்கொள்ளப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து முழுவதும் உற்பத்திக்கு கொண்டு வரப்பட்டு விரிவாக்கும் பணி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60 இலட்சமாகும். பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 'ஏ', 'பி', 'சி', 'டி' என்று நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முறையே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இதர கூட்டுறவு சங்கங்களும், தனிப்பட்ட நபர்களும், தமிழ்நாடு அரசு சேர்ந்து 1,071 உறுப்பினர்கள் பங்குகள் எடுத்துள்ளனர். செலுத்தப்பட்ட மொத்த பங்குத்தொகை ரூ. 39.78 இலட்சத்தில் தமிழ்நாடு அரசின் பங்குத்தொகை ரூ. 28.70 இலட்சமாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை நிருவாகம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கீழ் 15 பேர் அடங்கிய நிருவாகக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிருவாகக் குழுவில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களும் அலுவலால் நியமிக்கப்பட்ட இயக்குநர்களும் உள்ளனர். மேலும் நிர்வாக இயக்குநராக அரசு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு அன்றாட நடைமுறைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் வாரத்தில் ஏழு நாட்களும், நாள் ஒன்றுக்கு மூன்று பணிமாற்று முறைகளில் (Three shifts) வேலை நடைபெற்று வருகின்றது. ஆலையில், நெசவாளர் பெருமக்களின் தேவைக்கேற்பஅவ்வப்போது 40 நிர் முதல் 100 நிர் வரை கார்டட் கோம்ப்ட் ஓரிழை நூலும், 2/40 ஈரிழை நூலும், 60 நிர் கோன் நூலும் உற்பத்தி செய்யப்பட்டு, பெரும்பகுதி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கே விற்கப்படுகின்றது. நிறுவப்பட்ட கதிர்களில் பாதி கதிர்களில் 40 நிர் நூலும், மீதி பாதி கதிர்களில் 60 நிர், 80 நிர், 100 நிர் ஆகிய உயர்ந்த ரக நூலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.





இந்த ஆலையில் தற்பொழுது 763 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் 494 நிரந்தர தொழிலாளர்கள் ஆகும். மேலும் பர்மா இலங்கை அகதிகளுக்கு புனர் வாழ்வளிக்கும் பொருட்டு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் 200 பேர்களுக்கு ஆலையில் பயிற்சி அளிக்கப்பட்டு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தமிழக அரசு ரூ. 15 இலட்சம் பங்குகளில் முதலீடு செய்து உதவியுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் தமிழகத்தில் ஏற்பட்ட ஆலை தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தைத் தவிர வேறு எந்த வேலை நிறுத்தமும் அண்மைக் காலங்களில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தின

# கேளுங்கள் கொடுக்கப்படும்




**வினா :** ஐயா, வணக்கம் ! 1973—74-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தின் சிறந்த வானொலி மன்றமாக 'சிவகுருநாதபுரம் வானொலி மன்றம்' தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களது 'தமிழரசு' இதழ் எம் போன்ற அமைப்பாளர்களுக்குத் தக்க கட்டுரைகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும், பயிர் செய்யும் முறைகளையும் வெளியிடுவது மிகவும் பயனுள்ளதாய் உள்ளது. அதனை எமது உறுப்பினர்கள் கண்டு, படித்துப் பாராட்டுகின்றனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். உழவர்களுக்குப் பயன்படும் வண்ணம் 'தமிழரசு' ஏட்டில் 15 நாட்களுக்கு ஒரு முறை, ஒரு சிறு பகுதியை ஒதுக்கி, இரவு 7-30 மணி முதல் 8 மணி வரை ஒலிபரப்பு ஆகும் விவசாயிகளுக்கான நிகழ்ச்சி நிரலை வெளியிட்டால் மிகவும் பயனுடையதாக இருக்கும். செயல்படுத்துவீர்களா?

ஜிப்சத்தை கடலைக்கு அடியுரமாக போடுவது நல்லதா? அல்லது 40-ஆம் நாள் மேலுரமாகப் போடுவது நல்லதா?

கரிகாலன், கண்ணகி ரகங்களை நெல்லை மாவட்டத்தில் 'பிசானம்' பருவத்தில் பயிரிடலாமா? எவ்வளவு மகசூல் தரும்?

—எஸ். ராஜூ,
அமைப்பாளர்,
கிராம வானொலி மன்றம்,
சிவகுருநாதபுரம் (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை :** தங்கள் வேண்டுகோளுக்கு இணங்க, விரைவில் உழவர் பெருமக்களுக்கான வானொலி நிகழ்ச்சி நிரலைத் தொடர்புடைய அலுவலர்களிடம் இருந்து பெற்று, அதை உரிய முறையில் வெளியிட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜிப்சத்தை நிலக்கடலைக்கு அடியுரமாகப் போட வேண்டாம். நிலக்கடலை விதைத்த 40 முதல் 45 நாட்களுக்குள் அதாவது விழுது தோன்றும் சமயத்தில் (Peg formation stage), ஏக்கருக்கு 80 கிலோ வீதம் இடுவதே சிறந்தது.

நெல்லை மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் பயிரிடுவதற்கு 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய ரகங்கள் ஏற்றவையல்ல. 'கரிகாலன்', 'கண்ணகி' ஆகிய இரு ரகங்களும் நெல்லை மாவட்டத்தில் கார் பருவத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) பயிரிடுவதற்கே சிறந்தவையாகும்.

நெல்லை மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் 'பவானி' 'ஐ.ஆர். 20' ஆகிய இரு ரகங்களையும் பயிரிடுவதே சிறந்தது என்பது 1973—74-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சிகளில் இருந்து (Adaptive Research) தெரியவருகிறது. மேலும் 'பவானி' ரகம், 'ஐ.ஆர். 20' ரகத்தைவிட 8 சதம் அதிக தானிய மகசூலும், 23 சதம் அதிக வைக்கோல் மகசூலும் கொடுத்துள்ளது என்பதும் தெளிவாகியுள்ளது. அச்சோதனைகளில் இருந்து பிசானம் பருவத்தில் 'பவானி' ஏக்கருக்கு 2,186 கிலோ வரையும், 'ஐ.ஆர். 20' ஏக்கருக்கு 2,028 கிலோ வரையும் மகசூல் அளிக்க வல்லது என்பதும் புலனாகியுள்ளது.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் 'பவானி', 'ஐ.ஆர். 20' ஆகிய இரு ரகங்களையும் பயிரிடுவதே சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா :** விவசாயக் குறிப்பின்படி நெல் சாகுபடிக்கு மருந்து அடிக்கும் பொழுது ஒரு பூச்சி மருந்தையும், ஒரு பூஞ்சாள மருந்தையும் நட்ட 3 வாரங்களுக்கு ஒரு முறை அடிக்கும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது பத்திரிகைகளில் (Sevidol 4G, Furadon 3G) போன்ற குருணைகளைத் தண்ணீரில் போடும்படி கூறி இருக்கிறார்கள். இந்தக் குருணைகளைத் தண்ணீரில் வயலில் போட்டு விட்டு, இன்னும் மற்ற பூச்சிப் பூஞ்சாள மருந்தை ஸ்ப்ரேயரில் அடிக்க வேண்டுமா? இக் குருணைகள் பூச்சி மருந்தா? பூஞ்சாள மருந்தா? அல்லது பூச்சிக்கும், பூஞ்சாளத்திற்கும் இக் குருணைகளை மாத்திரம் பாவினால் போதுமா? உயர் விளைச்சல் ரகங்களான 'ஐ.ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'கருணை' போன்றவற்றிற்கு இக்குருணைகளைப் பாவலாமா?

—செல்வி வி. எம். உமா,
53, மேற்குத்தெரு,
தாத்தையங்கார்பேட்டை,
திருச்சி மாவட்டம்.

**விடை :** நெல்லில் பூச்சிகளும், நோய்களும் வந்தபின் மருந்து தெளிப்பதை விட வருமுன் தடுப்பாக (Prophylactic treatment) மருந்து தெளிப்பதே சிறந்த பயனுடையதாகும். எனவேதான், நெல்லில் தோன்றும் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த வருமுன் தடுப்பாக ஒரு பூச்சி மருந்தையும், ஒரு பூஞ்சாள மருந்தையும் நட்ட 3 வாரங்களில் இருந்து, 3 வாரங்களுக்கு ஒரு முறை வீதம் மருந்து தெளிக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து பூச்சி மருந்துகளைத் தூளாகவோ அல்லது தண்ணீரில் கலந்தோ பயன்படுத்துவதை விட, குருணைகளாகப் (Granules) பயன்படுத்துவதால் நல்ல பயன் ஏற்படுவதுடன், பூச்சிகளைக் கட்டுப்படுத்த எளிதான முறை இதுவே, என்பதும் தெளிவாகியுள்ளது.

'செவிடால்' (Sevidol) 4 சத குருணைகளாகவும், 'ஃபூரடான்' (Furadon) 5 சதக் குருணைகளாகவும் விற்பனையாகின்றன. இவை பூச்சி மருந்துகளே! இக் குருணைகள் நோயைக் கட்டுப்படுத்தும் பூஞ்சாள மருந்து அல்ல!

குறிப்பாக நெல்லில் தோன்றும் 'மஞ்சள் குருத்துப் பூச்சி' 'குருத்து ஈ' போன்ற பூச்சிகளை ஒழிக்க மருந்து தெளிப்பதற்குப் பதிலாக, வயலில் தண்ணீரை 5 முதல் 7 சென்டிமீட்டர் (2 முதல் 2.5 அங்குலம்) அளவுத் தேங்கச்செய்து, அதில் 'செவிடால்', 'ஃபூரடான்' போன்ற குருணைகளைத் தூவ வேண்டும். குருணைகள் தூவி 3 நாட்கள் வரை, வயலில் தண்ணீர் மட்டம் குறையாமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும். இவ்வகைக் குருணைகளை நெல் நாற்று நட்ட 15-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக இரு முறைகள் தூவ வேண்டும்.

நெல்லில் தோன்றும் 'தத்துப் பூச்சிகள்', 'மஞ்சள் குருத்துப் பூச்சி' ஆகியவைகளை அழிக்க 'செவிடால்' 4 சத குருணைகளைப் பயன்படுத்த வேண்டும்.

நெல்லைத் தாக்கும் 'மஞ்சள் குருத்துப் பூச்சி', 'ஆனைக் கொம்பன்', 'குருத்து ஈ' ஆகியவைகளைக் கட்டுப்படுத்த 'ஃபூரடான்' 5 சத குருணைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

பூஞ்சாளங்களால் ஏற்படும் நோய்க்குப் பூஞ்சாள மருந்துகளைத் தனியே தெளித்திட வேண்டும்.

'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20', 'கருணை' போன்ற உயர்விளைச்சல் இரகங்களில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'செவிடால்' அல்லது 'ஃபூரடான்' குருணைகளைப் பயன்படுத்தல் சிறந்தது.

**வினா:** சூரிய காந்தியை நன்செய் நிலங்களில் ஜூன், ஜூலை ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பயிரிடலாமா? விதையை முழுமையாக விற்பனைக்குக் கொள்முதல் செய்யும் வனஸ்பதி ஆயில் மில்களின் விலாசங்களைத் தெரிவிக்கவும். எப்.சி.ஐ. (F.C.I.) மூலம் இதை விற்க முடியுமா?

—பாலு பி.ஏ.,
மாயூரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை :** சூரியகாந்தியை மழைக்காலம் தவிர்த்த (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) மற்றெல்லா காலங்களிலும் இறைவையாகப் பயிரிடலாம். சூரிய காந்தி விதைகள் தரமானவைகளாக இருந்தால், வேளாண்மைத் துறையினரே வாங்கிக் கொள்கின்றனர். வனஸ்பதி எண்ணெய் ஆலையினர் தற்சமயம் வியாபாரிகள் மூலமே சூரியகாந்தி விதைகளை வாங்கிக் கொள்கின்றனராம். தனிப்பட்ட உழவர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதில்லையாம். ஏனெனில், பெருமளவில் சூரிய காந்தி பயிரிட்டு, பெருமளவில் விற்பனைக்கு வழங்க இன்னும் உழவர்கள் முன்வரவில்லை. சூரிய காந்தி விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்து விற்பனை செய்யலாம். அவ்வாறு செய்ய இயலாவிட்டால் அல்லது சூரியகாந்தி விதைகளை விற்பது பிரச்சினையாக இருந்தால் மாயவரத்தில் உள்ள உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களிடம் இதுபற்றி கலந்தாலோசித்தால், அவர் உங்களுக்கு உதவிடக்கூடும்.



**வினா:** 16-5-74 தேதிய 'தமிழரசு' இதழில், சாகுபடி விவரங்களைப் பற்றி எழுதும் புத்தகங்களின் பட்டியலைப் பார்த்தேன். உழவர் துணைவன், வானொலிக் கதிர், விவசாயச் செய்திக் கதிர், ஆகியவை தனிநபர்களுக்கு இலவசமாகக் கிடைக்குமா? அல்லது கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கத்திற்கு மட்டுமே அனுப்பப்படுமா?

—வி.ஆர். நாதன்,
கோவை-16.

**விடை:** ''உழவர் துணைவன்' என்ற திங்களிதழுக்கு ஆண்டு சந்தா ரூபாய் 6 செலுத்த வேண்டும் என்று அதன் செயலர் அண்மையில் தெரிவித்துள்ளார். எனவே, சந்தா கட்டினால் மட்டுமே 'உழவர் துணைவன்' இதழ் பெறமுடியும்.

'வானொலிக் கதிர்' தனிப்பட்ட உழவர்களுக்கும் இலவசமாக அனுப்பப்படும். 'செய்திக் கதிர்' (News Letter) என்பது திங்கள் தோறும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்படும் ஆங்கில இதழாகும்.

இலவச வெளியீடுகள் என்றவுடனே பலர் அவைகளை அனுப்பச் சொல்லி கடிதம் எழுதி விடுகின்றார்கள்! இதனால் இலவச வெளியீடுகளை எல்லார்க்கும் அனுப்ப இயலாமல் போய் விடுகிறது. எனவே, தனிப்பட்டவர்கள் இலவச வெளியீடுகளைக் கேட்டுப் பெறுவதை விட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கிராம வானொலி மன்றங்கள் அல்லது உழவர் விவாதக் குழுக்கள் ஆகியவைகளின் சார்பில் 'வானொலிக் கதிர்' போன்ற இலவச வெளியீடுகளைப் பெற்று, எல்லா உறுப்பினர்களும் படித்துப் பயன்பெறச் செய்வதே சிறந்தது.

—ஆர்.எம்.

ருக்கும் இடையே நல்லுறவு சிறப்புடன் விளங்கி வருகிறது.

பொதுவாக நம்நாடே மின் சாரப் பற்றுக்குறையால் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. இந்த நெருக்கடி ஆலை தொழி லுக்கு பெரிய இடர்ப்பாட்டை ஏற்படுத்தியிருந்தாலும் இந்த ஆலையில் மின்வெட்டை எதிர் நோக்கி 250 கிலோ வாட் சக்தி யுள்ள ஒரு 'டீசல் ஜெனரேட்டர்' நிறுவப்பட்டு இயங்கி வருவதால், மின்வெட்டு இருக்கும் காலங் களில் ஓரளவு உற்பத்தி பாதிப்பு குறைக்கப்பட்டு வருகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டு களாக இயங்கிக் கொண்டிருக் கின்ற இயந்திரங்கள் பழுதுபட்டி ருப்பதால், இந்த இயந்திரங் களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி நவீன கருவிகளுடன் புதுப்பித்தல் வேலைகளும் ஸ்ரீவில்லி புத்தூர் கூட்டுறவு நூற்பாலையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆலையில் தொழிலாளர் களுக்காக ஒரு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கமும், அத்தியா வசிய பண்டங்களை விநியோகிக்க ஒரு கூட்டுறவு பண்டகசாலையும் தொழிலாளர்களால் இயக்கப் பட்டு வருகின்றன. தொழிலா ளர்களுக்காக தொழிலாளர் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டு ஆலையின் செலவில் கல்விச் சுற்று லாக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில பிரிவு தொழி தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டும், தொழிலாளர் களுக்கும், அலுவலர்களுக்கும் ஆலையின் செலவில் மருத்துவச் சிகிச்சை தருவதற்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டும் வரு கின்றன.

1971-72-ஆம் ஆண்டில் இந்த ஆலை இலாபகரமாக இயங்கி உறுப்பினர்களுக்கு ஆதாயப் பங்கு வழங்கப்பட்டது. இந்த ஆலை தொடர்ந்து இலாபகரமாக இயங்கி வருகின்றதால் சட்டப் படி கொடுக்கக்கூடிய உச்ச அளவு கூடுதல் ஆதாயப்பங்கு வழங்கி யுள்ளது சிறப்பானதாகும். 1973-74-ஆம் ஆண்டில் முந்திய ஆண்டைவிட கூடுதலான நிகர லாபம் கிடைக்கப்பெற்று ஆலை நல்ல நிலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் ஸ்ரீவில்லிபுத் தூர் கூட்டுறவு நூற்பாலை, ஏனைய ஆலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பது மிகப் பொருத்தமாகும்.

—மா.










# இதயம் போல இயங்கும் ஒரு நிலையம்

"அதோ, விரைந்து செல் கிறதே ஒரு ஊர்தி, அது என்ன காவல் துறையைச் சேர்ந் ததா?"

"இல்லை! சென்னை அரசினர் பொது மருத்துவமனையைச் சேர்ந்தது. 'மாரடைப்பு சிகிச்சை நடமாடும் நிலையம்' என்று அதற்குப் பெயர்!"

ஆம். இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட் டுள்ள இந்த 'மாரடைப்பு சிகிச்சை நடமாடும் நிலையம்' (Mobile coronary care unit) ஜூலை 29-ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊர்தியை டி.வி.எஸ். அறக்கட்டளையைச் சேர்ந்த திரு. இரத்தினம், சென்னை அரசினர் பொது மருத்துவ மனைக்கு (Govt. General Hospital) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதன் மதிப்பு ரூ. 80,000 ஆகும். இதில், மேலைநாட்டி லிருந்து தருவிக்கப்பட்ட நவீன மருத்துவக் கருவிகள், சாதனங் கள் முதலியன பொருத்தப் பட்டுள்ளன. இவை மின்சார பாட்டரிகள் மூலம் இயங்கும்.

கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2 இலட்சமும், சிகிச்சை நிலையத்தின் நடைமுறைப் பணிச் செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ. 2 இலட்சமும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கி யுள்ளது.

சென்னை மாநகர மக்களுக்கு இந்த நடமாடும் நிலையம் ஒரு சமய சஞ்சீவியாகும். மார டைப்பு ஏற்பட்ட ஒரு சில நிமிடங்களுக்குள் இதுநோயாளி இருக்கும் இடத்தைத் தேடி வந்து முதல் உதவி அளிக்கும்; பிறகு மருத்துவ மனைக்கு அழைத்து வரும். இந்த ஊர்தி யில் மருத்துவத் துறை உதவிப் பேராசிரியர்களும், பிற மருத் துவ வல்லுநர்களும் இருப்பார் கள். அதாவது 4 மருத்துவர் கள், 4 செவிலியர்கள், 3 உதவியாளர்கள், ஒரு தகவல் தொடர்புப் பணியாளர் ஆகி யோர் இருப்பர்.

இந்த நடமாடும் ஊர்தியில் தொலைதூரத் தகவல் தொடர்பு (Wireless communication) வசதிகள் அமைக்கப்பட்டிருக் கின்றன.

காவல் துறையிலும், இராணு வத்திலும் மட்டுமே இது போன்ற தகவல் தொடர்பு வசதிகள் கொண்ட ஊர்திகள் உள்ளன; மருத்துவத் துறை யில் இந்த வசதியைப் பெறு வது இதுவே முதல் தடவை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்த ஊர்தி அனைத்து நாட்டு நகரங்களுக்கு ஏற்ப, உலக சுகாதார நிலையத்தின் நியதிகளுக்கு இசைவாக வடிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடமாடும் நிலையத் தின் அவசர உதவியைப் பெற, பொறுப்பான, ஒருவரோ அல்லது குடும்ப மருத்துவரோ தொடர்பு கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே, சென்னை அர சினர் பொது மருத்துவமனை யில் மாரடைப்புச் சிகிச்சைக் கான தனிப் பகுதி (Coronary care unit) ஒன்று 1972 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்தப் பகுதிக்குள் நுழை கிறோம்.

மேலை நாட்டு மருத்துவ மனையோ என்று ஐயுறத்தக்க அளவில் காட்சியளிக்கும் இது, முற்றிலும் குளிர் சாதன வசதி யுடையது. இந்தப் பகுதியில் ஐந்து படுக்கைகள் உள்ளன.

ஒவ்வொரு படுக்கையறையி லும் இதய நோயாளிக்கான நவீன மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதோ! அந்த நோயா ளிக்கு அருகே உள்ள ஒரு கருவி யில் மின் அலைகள் ஓடுகின்ற னவே! ஆம். இதயத்தின் ஓட் டத்தைத்தானே அது துல்லி யமாகக் காட்டிக் கொண்டிருக் கிறது! மானிட்டர் (Monitor) என்னும் அந்தக் கருவியை, மனித இதயத்தின் தன்மை களை—துடிப்புகளை எடுத்துக் காட்டும் ஒரு 'மினி' டெலி விஷன் என்றும் கூறலாம்.

ஐந்து படுக்கைகளுக்கு மத்தி யில் 'மைய எச்சரிக்கும் நிலை யம்' (central Monitoring Station) ஒன்று காட்சியளிக்கிறது. இது கண்ணாடியால் மூடப்பட்டு அழகாய்த் தோற்றம் அளிக் கிறது. அதனுள்ளே அமைந் துள்ள ஒரு நவீன சாதனத்தின் முன், செவிலியர் ஒருவர் உட் கார்ந்து அப்படியென்ன கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்!

ஐந்து படுக்கைகளில், எந்தப் படுக்கையின் நோயாளி எப்படி இருக்கிறார் என்பதையும், அவரது இதய ஓட்டம் முதலிய வற்றையும் இவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே இந்தச் சாத னத்தை இயக்கித் தெரிந்து கொள்ள முடியும்.

இருபத்து நான்கு மணி நேரமும் இதயம் போல் இயங் கும் இந்தப் பகுதி, இயங்கா இதயத்தை இயங்க வைக்கும் மகத்தான பணியினை மேற் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரிவில் டாக்டர் சி. செந்தில்நாதன் அவர்கள் தலைமையில் 8 மருத்துவர் களும், 10 செவிலியர்களும் அல்லும் பகலும் அரும் பணி யாற்றி வருகின்றனர்.

இவ்வளவு பெரிய சென்னை மாநகரத்துக்கு இந்த ஐந்து படுக்கைகள் போதுமா?

இந்தப் பகுதியில் மார டைப்பு (Heart attack) நோயாளி அபாய கட்டத்தைத் தாண்டும் வரைதான் வைக்கப் படுகிறார். அதாவது மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை அவர் இங்கே சிகிச்சை பெறு கிறார். அபாய கட்டத்தைத் தாண்டியதும் அவர் வேறொரு பகுதிக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்.

இதயம் சரிவர இயங்க வில்லை என்றால் 10 வினாடிகளுக் குள் சிகிச்சை அளிக்க வேண்டு மாம். ஒரு அம்மையாருக்கு இதயம் பத்து தடவை சரிவர இயங்கவில்லையாம். அதாவது பத்து தடவையும் அவர் செத்துப் பிழைத்திருக்கிறார்! அந்த நிலையில் இதயத்தைத் துடிக்க வைத்து, அவருக்கு உயிரூட்டியுள்ளனர் இங்குள்ள



## கண்புரை நோயும் நீக்கும் வழிமுறைகளு

**சா**தாரணமாக அறுவைச் சிகிச்சை என்றாலே எல்லாருக்கும் அச்சம். அதிலும் கண்ணில் அறுவைச் சிகிச்சை என்றால் பயம் அதிகமாகவே இருக்கும். சாதாரணமாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே பெரும்பாலும் கண்ணில் புரை உண்டாகிறது. பலர் "வயது அதிகம் ஆகிவிட்டது. இந்த வயதில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் உடல் தாங்குமா?" என்று கேட்கிறார்கள்.

எந்த வயதிலும் 90 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கூட அறுவைச் சிகிச்சை செய்யலாம். அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் உடலை நன்றாகப் பரிசோதனை செய்து உடல் நல்ல நிலையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருதயம் சரியாக வேலை செய்கிறதா என்று பார்க்க வேண்டும். இருதயம் சரியாக வேலை செய்கிறதா, இரத்த அழுத்தம் ஏதாவது இருக்கின்றதா, இருமல், ஆஸ்துமா போன்ற வியாதிகள் இருக்கின்றனவா, நீரிழிவு வியாதி இருக்கின்றதா என்பதை எல்லாம் விவரமாகப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். வயதானவர்களுக்கு இரத்தக் கொதிப்பு, நீரிழிவு போன்ற வியாதிகள் ஏற்படுவது இயல்பு. அந்த மாதிரி வியாதிகள் இருந்தால் அறுவைச் சிகிச்சைக்கு முன் வேண்டிய மருந்து கொடுத்து இந்த வியாதிகளைத் தடுத்து விடலாம். ஆதலால் வயது அதிகமாகிவிட்டது என்ற காரணத்தால் அறுவைச் சிகிச்சையை நிறுத்த வேண்டியதில்லை.

'ஒரு கண்ணில் புரை முற்றினால் பரவாயில்லை மற்றொரு கண் நன்றாக இருக்கிறது. ஆதலால் அறுவைச் சிகிச்சை வேண்டாம்' என்று பலர் கருதுகிறார்கள். புரை முற்றிவிட்டால் அதனால் பல கோளாறுகள் உண்டாகின்றன; சாதாரணமாகப் புரை முற்றினால் கண் அழுத்தம் அதிகமாகி கண்ணில் பொறுக்க முடியாத வலி ஏற்படும். கண் சிவந்து விடும். அப்பொழுது வலியைக் குறைத்து கண் பார்வையைக் காப்பாற்றுவது கடினமாகும். கண் பார்வையை இழப்பதுடன் கண் வலி

இது மருத்துவ மனையல்ல; மாரடைப்புச் சிகிச்சைக்கு உங்கள் இல்லம் தேடி வரும் நடமாடும் நிலையத்தின் உட்புறத் தோற்றம்.

மருத்துவர்கள். அதற்கான கருவி ஒன்றிருக்கிறது இங்கே. அதன் பெயர்: ஃபிப்ரிலேஷன் (Fibrillation).

அமைதியான சூழ்நிலை.

அழகிய தோற்றம்.

குளிர்சாதன வசதி.

அடிக்கடி வந்து கவனிக்க மருத்துவர்கள், செவிலியர்கள்!

சிகிச்சைக்குக் கட்டணம் நிறைய இருக்குமே!

அதுதான் இல்லை. ஏழை, எளியவர்களுக்குக் கூட இங்கே இலவச சிகிச்சைதான். ஆனால் ஒன்று. வருமான அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றில் மாரடைப்பு சிகிச்சைக்கான தனிப் பகுதிகள் (Coronary care unit) உள்ளன.

சென்னை அரசினர் பொது மருத்துவ மனையோடு இணைந்த 'நடமாடும் மாரடைப்புச் சிகிச்சை நிலைய'த் துவக்க



விழாவில் பேசிய நல்வாழ்வுத் துறை அமைச்சர். பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்:

"மாரடைப்பினால் பாதிக்கப்பட்டவரை மருத்துவ மனைக்கு எந்தவித ஆபத்தும் இல்லாமல் பாதுகாப்புடன் கொண்டு வர தேவையான வசதிகளும், சிகிச்சைக் கருவிகளும் இந்த நடமாடும் நிலையத்தில் உள்ளன.

"இந்த அமைப்பில் பணியாற்றுபவர்கள் இதயத்தைப் போலவே இயங்க வேண்டும். நீங்கள் எந்த ஒரு நிமிடத்திலும் கடமையாற்ற வேண்டியதிருக்கலாம். ஆர்வத்துடன் பணியாற்றினால்தான் சிறந்த பலன் கிடைக்கும்".

இந்த நடமாடும் நிலையத்துக்கு, இதய நோயால் பாதிக்கப்பட்ட திரு. கே.டி.எஸ். மணி, திரு. திருநாவுக்கரசு, தம் கணவர் சார்பில் திருமதி பிரேமா தேவதத்தா ஆகியோர் டேப் ரிகார்டர், மின் விசிறி போன்ற பரிசுகளை வழங்கி, தம் இதயம் திறந்து பேசியதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி.வி.ஜி.

427

# கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு முன்

## தெரிந்து கொள்ள வேண்டியவை!

டாக்டர் ஜி. வெங்கடசாமி

வேதனையாலும் அல்லல் படுகிறார்கள். ஆதலால் புரை உண்டான பின்னர் அறுவைச் சிகிச்சை தவிர்க்க முடியாத நிலை ஆகும். அதனால் அறுவைச் சிகிச்சை பற்றிய விவரமெல்லாம் தெரிந்து கொண்டு எந்த மாதிரி நடந்து கொண்டால் நல்ல விதமாக குணம் பெறலாம் என்பதை அறிதல் அவசியமாகும்.

**எப்பொழுது அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது?**

சாதாரணமாகப் புரை முற்றிப் பார்வை மிகவும் குறைந்த பின்னர்தான் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று பலர் கருதுகிறார்கள். இது சரி அல்ல. அமெரிக்காவில் புரை ஆரம்ப நிலையிலேயே, பார்வை குறைந்து வரும்போதே அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள். அங்கு நடக்கும் புரை அறுவைச் சிகிச்சையில் பெரும்பாலும் ஆரம்ப நிலையிலேயே—அதாவது பார்வையை இழப்பதற்கு முன்பாகவே——அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது. புரை முற்றிய பின்னர்தான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளைக் கூடச் செய்ய முடியாமல் பல மாதங்கள் துன்பப்படுகிறார்கள். இவ்வாறு துன்பப்படுவது அவசியமில்லை. புரை ஆரம்பத்திலேயே அறுவைச் சிகிச்சை செய்தாலும் புரை முற்றிய பின்னர் அறுவைச் சிகிச்சை செய்தாலும் இரண்டிலும் ஒரே பார்வைதான் கிடைக்கிறது. ஆதலால் அனாவசியமாகப் பார்வை குறைந்து புரை முற்றும் வரை காத்திருந்து அவதிப்படுவதைவிட புரையின் ஆரம்ப நிலையிலேயே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இழந்த பார்வையைத் திரும்பப் பெறலாம்.

**எந்தெந்த மாதங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது நல்லது:**

வட இந்தியாவில் பெரும்பாலும் குளிர் மாதங்களிலேயே அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள். அங்கு கோடைக் காலத்தில் தாங்க முடியாத வெய்யிலாக இருப்பதாலும், ஈயினால் தொந்தரவு அதிகமாக இருப்பதாலும் குளிர் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறார்கள். தமிழ் நாட்டில் வெய்யில் காலத்திற்கும் குளிர் காலத்திற்கும் அதிக வேறுபாடு இல்லை. வட இந்தியாவைப்போல் இங்குக் குளிரும் அதிகம் கிடையாது. வெய்யிலும் அதிகம் கிடையாது. ஆதலால் ஆண்டு முழுவதும் எல்லா மாதங்களிலுமே அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்.

**அறுவைச் சிகிச்சையின்போது வலி தெரியுமா?**

சாதாரணமாகப் புரை அறுவைச் சிகிச்சையின் போது மயக்கம் கொடுப்பதில்லை. கண்ணின் அருகில் வலி தெரியாமல் இருப்பதற்காக ஊசி போடப்படும். அதனால் அறுவைச் சிகிச்சையின் போது வலி தெரியாது.

### கண் பார்வை சோதிகசு கருவி

கண் பார்வையைச் சோதிப்பதற்கும் அளவிடுவதற்கும் ஒரு கருவி உருவாக்கியிருக்கிறார்கள் ஒளி–மின்விசை முறையில் இது செயல்படுகிறது. 'ஐ-டிராக்' (Eye Trac) என்று பெயர் உலகம் நெடுகிலும் பல வணிக, மருத்துவக் காட்சிகளில் இதனைப் பார்வைக்கு வைக்கின்றனர்.

கண்ணிலுள்ள குறைகள் அனைத்தையும் இந்தக் கருவி பதிவு. செய்ய வல்லது. அண்மைப் பார்வை, தொலைவுப் பார்வை, நிறம் புலப்படாமை, பார்வைத் துல்லியம், மருத்துவத்தினால் ஏற்படும் பலன்கள் போன்றவற்றையெல்லாம் இது அளவிட்டுப் பதிவு செய்யும்.

மருத்துவ உதவியாளர்களே கருவியை இயக்கி, விவரங்கள் பதிவு செய்ய இயலும். பின்னர். மருததுவர் அல்லது வல்லுநர் அவற்றை ஆராய்ந்து உரிய மருத்துவம் செயயலாம்; கண் நோயாளி பற்றி நிலையான விவரத் தொகுப்புப் புத்தகம் ஒன்றில் விவரங்களைப் பதிவு செய்து வைக்கலாம்.

அமெரிக்காவில் உருவாக்கியுள்ள இப்புதிய கருவியில், அவ்வப்போது மாற்றவேண்டியது ஒன்று உண்டு; அதுதான் வெப்ப முறையில் விவரங்களைப் பதிவு செய்து வைக்கும் காகிதச் சுருள்.

காது அருகில் போடப்படும் ஊசியால் முகத்தின் ஒரு பகுதி மரத்துப் போய் இருக்கும். 24 மணி நேரம் கழித்து இது சரியாகி விடும். சிறு குழந்தையாக இருந்தால் மயக்க ஊசி போடுவார்கள். கண்ணின் அருகில் ஊசி போடுவதால் வலி தெரியாமல் இருப்பதுடன் கண் விழி அசைக்க முடியாதபடி ஒரே நிலையில் இருக்கும். அறுவைச் சிகிச்சையின் போது விழி அசையாமல் இருப்பது நல்லது.

**ஈளை நோய் இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்யலாமா?**

வயதானவர்கள் சிலருக்கு ஈளை நோய் (ஆஸ்துமா) வியாதி இருக்கலாம். படுத்தால் மூச்சுவிடுதல் இயலாது. பல சமயங்களில் உட்கார்ந்து கொண்டே தூங்குவார்கள். இவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம். கண் விழியில் அறுவைச் சிகிச்சை செய்த இடம் நன்றாக இணைய வேண்டும். இதற்குக் கண்களுக்கும் உடலுக்கும் ஓய்வு தேவை. அதனால்தான் கண் அறுவைச் சிகிச்சை செய்தவுடன் ஒரு வாரமாவது ஓய்வுடன் படுக்கையில் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்த இடம் நல்ல முறையில் தைக்கப் பட்டிருந்தால் இணைவது எளிதாகும்; ஆதலால் இப்பொழுது விழியை அறுத்து புரையை எடுத்த பின்னர் அறுத்த இடத்தைத் தைத்துவிடுகிறார்கள். நன்றாக தைக்கப்பட்டிருந்தாலும் ஆஸ்துமாக்காரர்கள் படுக்காமல் உட்கார்ந்திருந்தாலும் எந்த விதக் கெடுதலும் இல்லை. படுக்கையிலேயே மல்லாந்து 24 மணி நேரமும் படுக்க வேண்டும். என்பது அவசியம் இல்லை. கூடுமான வரை அதிக ஆட்டம் இல்லாமல் உடலுக்கு ஓய்வு கொடுப்பது நல்லதாகும். ஒவ்வொருவருடைய உடல் நிலைக்கேற்ப அறுவைச் சிகிச்சையில் சில மாறுதல்கள் செய்து கொள்ளலாம். அறுவைச் சிகிச்சை செய்த இடம் நன்றாக இணைந்து விழி முன் போலவே இருக்க வேண்டும் என்பதுதான் குறிக்கோள். இப்பொழுதுள்ள நவீன அறுவைச் சிகிச்சை முறையில் இது சாத்தியமாகிறது.

**அறுவைச் சிகிச்சைக்கு முன்னால் கவனிக்கப்பட வேண்டியவை:**

எந்தப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்தாலும் உடல் முழுவதும் நன்றாக சுத்தமாக இருக்க வேண்டும். நம் நாட்டில் பலர் மருத்துவ மனைக்கு வரும் பொழுதோ சிகிச்சை முகாமிற்கு வரும் பொழுதோ இதில் கவனம் செலுத்துவதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் ஆண்கள் முகச் சவரம் செய்து கொண்டு, சுத்தமாகக் குளித்து அழுக்கற்ற ஆடைகளை அணிந்து கொள்வது அவசியம். சில மருத்துவமனைகளில் ஒவ்வொருவரையும் குளிக்கச் செய்து அவர்கள் அணிந்து வந்த பழைய ஆடைகளைச் சலவைக்குப் போட்டுவிட்டு மருத்துவமனை ஆடைகளை அணிந்து கொள்ளக் கொடுக்கிறார்கள். எல்லாவற்றையும்விட முக்கியமானது உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வது ஆகும்.

மருத்துவமனைப் படுக்கையை எவ்வாறு சுத்தமாக வைத்துக் கொள்வதென்று பலருக்குத் தெரிவதில்லை. பழங்களைச் சாப்பிட்டு விட்டுத் தோலைப் படுக்கைக்கு அருகிலேயே போட்டு விடுகிறார்கள். திராட்சைப் பழத்தைச் சாப்பிட்டு விட்டுத் தோலையும் விதைகளையும் அருகிலேயே போட்டு விடுகிறார்கள். அல்லது சன்னலுக்கு வெளியே போட்டு விடுகிறார்கள். அதேபோலக் கழிவிடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்வதில்லை. மலம் கழிக்கச் செல்லும் வழியிலேயே சிறுநீர் கழித்து விடுகிறார்கள். இதனால் கிருமிகள் பெருகிக் கண்ணுக்குள் சென்று கேடு உண்டாக்கலாம். மேலை நாடுகளில் மருத்துவ மனைகளை மிகச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். அதனால் அறுவைச் சிகிச்சையில் கோளாறு ஏற்படுவது மிகக் குறைவாகும். நம் நாட்டில் இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். கைகள் கண்களின் அருகில் சென்றாலும் அதில் கிருமிகள் இல்லாவிட்டால், கேடுகள் வராது. அது போலவே சாப்பிட்ட பின்னரும் நன்றாக வாயையும் கைகளையும் சுத்தம் செய்துவிட வேண்டும். கூடிய மட்டும் நாம் சுத்தமான ஆடைகளை அணிவது அவசியமாகும்.

**உணவு:**

அறுவைச் சிகிச்சைக்கு முன்னரும் அதன் பின்னரும் எந்த உணவு உட்கொள்வது, எவ்வளவு உட்கொள்வது என்பதை அறிந்து உண்ண வேண்டும். அளவுக்கு மீறி அதிகமாக உணவு உண்பதோ அல்லது பட்டினி கிடப்பதோ நல்லதல்ல. மிதமாக பல்லுக்கு அதிக அசைவு தராத உணவையே உட்கொள்ள வேண்டும். நம் நாட்டில் ஒரு நோயாளி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டால் சுற்றத்தார் யாவரும் வந்து அவரைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவசியமானதற்கு வேண்டியவர்கள் மட்டும்தான் மருத்துவமனைக்கு வரவேண்டும். அநாவசியமாகக் கூட்டம் போடக் கூடாது. வசதியுள்ள நோயாளிகளைச் சுற்றி மருத்துவ மனையில் பெரிய கூட்டத்தைப் பார்க்கலாம். இது நோயாளிகளுக்கு நன்மை அளிப்பது இல்லை. அவர்களுக்கு ஓய்வு அவசியம். (முக்கியமாக சிறு குழந்தைகளை மருத்துவ மனைக்கு நோயாளிகளைப் பார்க்க அழைத்து வருவது தவறு. பல்வேறு நோய் உள்ளவர்கள் மருத்துவ மனைக்கு வருகிறார்கள். பல தொத்து நோய்கள் இருக்கலாம். இது குழந்தைகளை எளிதில் பற்றிக் கொள்ளும். ஆதலால் கூடுமான வரை குழந்தைகளை நோயாளிகளைப் பார்ப்பதற்கு மருத்துவமனைக்குக் கொண்டு வருவது தவறாகும்.

அறுவைச் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்ற பின்னர் கூடச் சில வாரங்கள் வரை உணவில் கட்டுப்பாடு தேவை. வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுவது, பொடி போடுவது போன்ற பழக்கங்களை நிறுத்தி விட வேண்டும். மலச்சிக்கல் உள்ளவர்கள் மருத்துவர்களிடம் சொல்லி அதற்குரிய சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருந்தாலும் மருத்துவரிடம் சொல்லவேண்டும். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் நாள் சிறு நீர் கழிக்க எழுந்திருப்பதை அனுமதிப்பதில்லை. பலருக்குப் படுக்கையிலிருந்து சிறுநீர் கழிப்பது சிரமமாயிருக்கலாம். அவர்களைப் பத்திரமாக எழுந்து உட்காரச் செய்து சிறுநீர் கழிக்கும் பாத்திரத்தில் சிறுநீர் கழிக்கச் செய்ய வேண்டும்.

புரை அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தலைக்கு வெள்ளை மிளகை அரைத்துத் தேய்த்துப் பால் தேய்த்து முழுகவேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். இது அவசியமில்லை. அறுவைச் சிகிச்சை செய்த பின்னர் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் கழித்துத் தலையில் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்யலாம். அதன் பின்னர் இரண்டொரு வாரங்கள் கழித்து எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். சிலர் கண்பார்வை மங்குவதற்குத் தலையில் தைலம் தேய்த்துக் குளிக்காததுதான் காரணம் என்று கருதித் தலையில் தைலம் தேய்த்துக் குளிக்கிறார்கள். தைலம் தேய்ப்பதனால் மங்கிய கண் பார்வை சரியாகிவிடும் என்பது விஞ்ஞான முறையாக நிரூபிக்கப்படவில்லை. எந்தக் காரணங்களினால் பார்வை குறைந்திருக்கிறது என்பதைத் தகுந்த வைத்தியரிடம் காட்டி வைத்தியம் செய்து கொள்வதுதான் முறையாகும்.

**அடுத்த இதழில்**

மருத்துவமனையிலும் கண் சிகிச்சை முகாமிலும் கவனிக்க வேண்டிய முறைகள்.








# உங்கள் உற்பத்தித் திறன் வெகு சீராக இருப்பதன் காரணம்?

சீரான ஒளி தொழிலாளர்களின் பார்வையைத் தெளிவாக்கி, விபத்து விகிதத்தைக் குறைத்து, உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது. தொழிற்சாலைகளுக்கேற்ற நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்காண்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.



பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-701(R)



ஆலையின் உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி.



தொழிற்சாலையின் ஒரு தோற்றம்.

# மேலைநாடு செல்லும் மேட்டூர் அலுமினியம்

**வா**ழ்க்கை என்னும் நாடகத்தில் நாமெல்லாம் ஒரு பாத்திரம் தானே?

பாத்திரமான நமக்கு, நம் அன்றாட வாழ்க்கைக்கும் சில பாத்திரங்கள் தேவைப்படுகின்றன!

பண்டைக்காலத்தில் மட்பாண்டங்களே மனிதனின் முக்கிய பாத்திரங்களாக இருந்தன. நாகரிகம் வளர வளர மனிதன் உலோக வகைகளைக் கண்டுபிடித்தான். பிறகு அவற்றின் மூலம் பல பொருள்களைச் செய்ய இயந்திரச் சாதனங்களை உருவாக்கினான்.

அதன் விளைவாக இன்று பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, அலுமினியம், இரும்பு, எவர்சில்வர் போன்ற உலோக வகைகளிலும் பிளாஸ்டிக், தோல் முதலானவற்றிலும் கண்கவர் பொருள்கள்-பாத்திரங்கள்-சாமான்கள் முதலியன செய்யப்படுவதையும், அவை கடைகளில் அழகுற அடுக்கி வைக்கப்பட்டு விற்பனையாவதையும் பார்க்கிறோம்.

அன்னை பூமி அள்ளி வழங்கும் செல்வங்களில் அலுமினியமும் ஒன்று. ஏழை எளியவர்கள் பெருமளவில் பயன்படுத்தும் பொருள்களில் இன்று அலுமினியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது எனலாம்.



மின் உலையில் மின்னலிடும் அலுமினியம்!

கம்பி சுருட்டிவிட்டார் இங்கே!

இந்த அலுமினியக் கனிப்பொருள் எப்படிக் கிடைக்கின்றது? எவ்வாறு உருவாக்கப்படுகின்றது?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண மேட்டூருக்குப் போவோம் வாருங்கள்!

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணைக்கட்டிற்கு அருகில் பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கிறது 'மால்கோ'. அதுதான் 'தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்' (The Madras Aluminium Company Ltd.) இது 1965-லிருந்து இயங்கி வருகிறது.

தொழிற்சாலைக்குள் நுழைகிறோம்.

அதோ தெரிகிறதே அது என்ன? மலையா?.

தொழிற்சாலைக்குள் மலை எப்படி வந்தது என்று மலைப்பதற்குமுன், ''இதுதான் அலுமினியம் தயாரிக்க உதவும் மூலப்பொருள். பெயர்: பாக்சைட்!'' என்று ஒரு பொறியாளர் சொன்னதும் மேலும் விந்தையாக இருந்தது.

லாரியிலிருந்து வந்த கட்டி கட்டியான மண் அந்தப் பெரிய கிடங்கில் கொட்டப்படுகின்றது. அவற்றைக் 'கிரேன்' மூலம் அமைந்துள்ள ஒரு பெரிய இரும்புத் தொட்டி அள்ளியெடுத்து இன்னொரு பக்கம் குவிக்கிறது. அந்தக் குவியல்தான் மலைபோலக் காட்சியளிக்கிறது!

சுருங்கச் சொன்னால் இந்த மண்தான் அலுமினியக் குழம்பாக வெளி வருகிறது! அது எப்படி என்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்க்கரைக்கு, மூலப்பொருள் கரும்பு, காகிதத்துக்கு மூலப்பொருள் மூங்கில் என்பது போல அலுமினியத்துக்கு மூலப்பொருள் பாக்சைட் என அறிந்தோம்.

பாக்சைட்டு (Bauxite) கிரையோலைட் (Kryolite), டர்க்காயிஸ் (Turquoise), அலுனைட்டு (Allunite), ஸ்பைனல் (Spinal) என்பவை சில அலுமினியக் கனியங்களாகும். இவற்றுள் பாக்சைட்டும், கிரையோலைட்டும் முக்கியமானவை.

பாக்சைட்டிலிருந்து அலுமினியத்தைப் பிரித்தெடுக்க இது முதலில் மிக நன்றாக சுத்தப்படுத்தப்படுகிறது. பின் நன்றாக அரைக்கப்பட்டுத் தாழ்ந்த வெப்பத்தில் சுடப்படுகிறது. சோடாக்காரக் கரைவில் இதைக் கரைத்தால் கனியத்திலுள்ள அலுமினிய ஆக்சைடு மட்டும் கரைந்து அசுத்தங்கள் பின்தங்கி விடுகின்றன. இக்கரைவுடன் சிறிது சோடியம் ஹைடிராக்





130 அடி உயரமுள்ள மாடியல்ல. அலுமினியக் கலவையைக் கெடாமல் காக்கும் மிகப் பெரிய தொட்டி!

சைடைச் சேர்த்து பல மணி நேரம் கலக்கினுல் அலுமினியம் ஹைடிராக்சைடு படிகிறது. இதை வடிகட்டிப் பிரித்துக் கழுவி உலர வைக்கலாம்.

அலுமினியம் ஆக்சைடிலிருந்து உலோகத்தைப் பெற மின்பகுப்புமுறை வழங்குகிறது. அலுமினியம் ஆக்சைடு 20 பாகமும், கிரையோலைட்டு 60 பாகமும், புளோர்ஸ்பார் 20 பாகமும் கொண்ட கலவையை இளக்கி, மின்பகுப்பால் அலுமினியம் பிரித்தெடுக்கப்படுகிறது.

மின் பகுப்புக் கலம் ஓர் இரும்புத் தொட்டி. இதன் உட்புறம் கரியால் பூசப்பட்டு எதிர்முனையாக (Negative) இயங்குகிறது. தொட்டிக்குள் தொங்கவிடப்படும் சில கார்பன் குச்சிகள் நேர்முனையாக (Positive) இயங்கும். மின்சாரம் பாயும்போது எதிர்முனையில் அலுமினியம் வெளிப்பட்டுத் திரவ நிலையில் கலத்தின் அடியில் சேர்கிறது. இதை வடித்து எடுத்துவிடலாம்.

கார்ப்பனுல் ஆன நேர்முனையில் (Positive) ஆக்சிஜன் தோன்றி அதை எரித்துக் கார்பன் மானுக்சைடாக வெளிப்படுகிறது. அவ்வப்போது புதிதாக அலுமினியம், ஆக்சைடைச் சேர்த்துப் பகுபொருளின் செறிவு மாருமல் செய்ய வேண்டும். இதில் கிடைக்கும் அலுமினியம் 99 சதவீதம் சுத்தமானது. இதை மின்பகுப்பால் மேலும் தூய்மையாக்கலாம்.

பாக்சைட்டிலிருந்து அலுமினியம் தயாரிப்பதற்கான வகை வகையான நவீன இயந்திரங்களை இங்கே காணலாம். மூலப்பொருளான பாக்சைட் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலையிலிருந்து (ஏர்க்காடு) பெருமளவில் கிடைக்கிறது. கொல்லி மலையிலும் ஓரளவு பாக்சைட் தருவிக்கப்படுகிறது.

4 டன் பாக்சைட்டில் 2 டன் அலுமினியம் ஆக்சைடு கலந்திருக்கிறது. இதை மின் உலையில் இடும்போது நமக்குக் கிடைக்கும் அலுமினியம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு டன்தான்!

1827-ல் வலர் என்ற இரசாயன அறிஞரால் இந்த உலோகம் பிரித்தெடுக்கப்பட்டது. இதைப் பிரித்தெடுக்கத் தற்காலத்தில் வழங்கும் முறையை ஹால் என்னும் அமெரிக்க மாணவர் கண்டுபிடித்தார்.

1888-ல் ஜெர்மன் விஞ்ஞானியான கார்ல் ஜோசப் பேயர் என்பவர் பாக்சைட்டிலிருந்து சுத்தமான அலுமினியத்தைத் தயாரிக்கும் முறையைக் கையாண்டார்.

வரலாற்றைப் பார்க்கும்போது, அலுமினியத்தின் சிறப்பினை நாம் நன்கறியலாம். நெப்போலியனின் விருந்தினர்கள் விருந்தின்போது அலுமினியக் கரண்டியையே உபயோகித்தார்களாம். பேரரசர்களின் குழந்தைகளெல்லாம் அலுமினியக் 'கிலுகிலு'ப்பையையே ஒலித்து மகிழ்ந்தனவாம். பாரிசுக்கு வருகை தந்த மன்னர் சியாம் என்பவருக்கு, வீரன் நெப்போலியன் அலுமினியத்தாலான கடிகாரப் பட்டையை பரிசளித்தாராம்!

இத்தகு சிறப்புமிக்க அலுமினியத்தைத் தயாரிக்கும் இந்தத் தொழிற்சாலையில் சுமார் 600 பேர் பணியாற்றுகின்றனர். இங்கு 24 மணி நேரமும் வேலை நடக்கிறது. குறிப்பாக மின் உலையில் இந்த பணி இடைவெளி இல்லாமல் நடக்கிறது. மின்சாரத் தடையோ, இயந்திரக் கோளாருே ஏற்பட்டால் உருகுநிலையில் உள்ள அலுமினியக் குழம்பெல்லாம் கெட்டியாகி அதாவது ஐந்து நிமிடத்தில் இது சிமெண்டுபோல் கட்டியாகி விடும். பிறகு அது எதற்கும் உதவாததாகி விடுமாம். எனவே, மின்சாரமும் இத்தொழிலுக்கு ஒரு மூலப் பொருள் என்கிருர் ஒரு பொறியாளர்.

மின் உலையிலுள்ள அலுமினியக் குழம்பை வட்டவடிவ இரும்புத் தொட்டியில் நிரப்பி வார்ப்படச் சாலைக்குக் (Foundry) கொண்டு வரப்படுகிறது. வார்ப்படச் சாலையில் இந்த அலுமினியக் குழம்பு ஒரு குழாய் மூலம் வெள்ளியை உருக்கி வார்த்தாற்போல் வெளிவருகிறது. இக்குழம்பு சுடு நிலையிலேயே தகரக் கால்வாயில் ஓடி ஒரு இயந்திரத்திற்குள் நுழைகிறது. இங்கே இக்குழம்பு கனத்த கம்பியாக உருவாகிறது; அந்தக் கம்பி நீண்டுகொண்டே இன்னெரு இயந்திரத்திற்குள் நுழைந்து சன்னக் கம்பியாக உருவெடுத்து பிறகு நூலைச் சுற்றுவது போல சக்கரத்தில் சுருட்டப்படுகிறது. இப்போது அலுமினியக் கம்பி தயார்!

கம்பிகள், கன அளவுக்குத் தக்கவாறு தயாரிக்க இயந்திரத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் ஒரு பக்கம் 130 அடி உயரமுள்ள 18 தொட்டிகள் பிரம்மாண்டமாய்க் காட்சியளிக்கின்றன. 'லிப்ட்' மூலம் அதன் உச்சிக்குச் சென்று பார்க்கிருேம். காற்று அழுத்தம் (Compressed Air) மூலம் அலுமினியக் கலவையைத் திரவ நிலையிலேயே வைக்க இந்தத் தொட்டிகள் பெரிதும் உதவுகின்றன.

அதோ! அங்கே என்ன பளபளவென மின்னுகின்றனவே, அவையென்ன வெள்ளிக் கட்டிகளா?

அலுமினியக் குழம்பிலிருந்து கனத்த, சன்னக் கம்பிகளை உருவாக்கியதுபோல, அலுமினியக் கட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. வார்ப்படத்தின் (Mould) உதவியால் உருவான இந்த அலுமினியக் கட்டிகள் ஓரிடத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. பிறகு அவை லாரிகளில் ஏற்றி அனுப்பப்படுவதையும் பார்க்கிருேம்.

உலகிலுள்ள நவீன அலுமினிய நிறுவனங்களில் 'மால்கோ'வும் ஒன்று என்பதை அறிகிருேம். இங்கு ஒரு ஆண்டுக்கு 10,000 டன் அலுமினியம் தயாரிக்கப்படுகிறது.

இன்று உலகில் ஒரு ஆண்டுக்கு 8 மில்லியன் டன்னுக்கு மேற்பட்ட அலுமினியம் தயாரிக்கப்படுகிறது என்றும், 100 ஆண்டுகளுக்கு முன் அலுமினியத்தின் விலை 1 பவுண்டுக்கு 545 டாலராக இருந்தது என்றும், இப்போது 1 டன்னுக்கு 500 டாலராக விலை குறைந்திருக்கிறது என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையில் அலுமினியக் கம்பிகள், தகடுகள், பாளங்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன. இவை தரமானவையாக இருப்பதால் வெளிநாடுகளில்கூட இவற்றுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்தத் தொழிற்கூடத்தில் ஒரு பரிசோதனைக் கூடமும் இருக்கிறது. அது, அலுமினியத்தில் எத்தனை சதவிகிதம் உலோகப் பொருள்கள் கலந்திருக்கின்றன என்பதையும், தரத்தைக் கணக்கிடவும் பயன்படுகிறது.

அலுமினியத்தின் தன்மையும், வன்மையும் பற்றித் தெரிந்து கொள்வோமா?

அலுமினியம் வெண்மையான உலோகம். இலேசான பொருளான இதன் இழுவலிமை இரும்பையும் செம்பையும் தவிர மற்றெல்லா உலோகங்களையும்விட அதிகம். இதற்கு நன்ருக மெருகேற்றலாம். இதன் உருகுநிலை 658 டிகிரி. இது பல உலோகங்களுடன் கலவையாகிறது.

வறண்ட காற்ருே, ஆக்சிஜனே இதைப் பாதிப்பதில்லை. ஈரமான காற்றும், கொதிக்கும் நீரும் இதன் மேல் அலுமினியம் ஆக்சைடைப் படிவிக்கும். இதனை ...

நீராவியைச் சிதைக்கும். நுண்ணிய தூளான அலுமினியம் மிகப் பிரகாசமான ஒளியுடன் ஆக்சிஜனில் எரியும். இரும்பு, குரோமியம் அல்லது மாங்கனீஸ் ஆக்சைடுகளுடன் அலுமினியத் தூளைக் கலந்து பற்ற வைத்தால் மும்முரமான வினை நிகழ்ந்து ஆக்சைடு உலோகமாகக் குறையும். எஃகை இளக்கவும், இணைக்கவும் வழங்கும் தெர்மைட்டு முறைக்கு (Thermite Process) இந்த வினை அடிப்படையானது. குரோமியம், மாங்கனீஸ், யுரேனியம் போன்ற உலோகங்களைத் தயாரிக்கவும் இம்முறை பயனுகிறது.

அலுமினியமானது குளோரினுடனும் நைட்டிரஜனுடனும் நேரடியாகக்கூடுகிறது. சூடான அடர் ஹைடிரோ குளோரிக அமிலத்திலிருந்து இது ஹைடிரஜனை வெளிப்படுத்துகிறது. நீர்த்த கந்தகாமிலமாவது நைட்ரிக் அமிலமாவது இதைப் பாதிப்பதில்லை. அடர் கந்தகாமிலத்தில் இது விரைவாகக் கரைந்து கந்தக டை ஆக்சைடை வெளிவிடுகிறது. சூடான காரக் கரைவுகளில் இது கரைந்து, ஹைடிரஜனை வெளியிட்டு அலுமினேட்டுகளை அளிக்கிறது. உப்புக் கரைவுகளில் இது அரிப்புற்றுப் போகும்.

அலுமினியத்தால் நமக்கு அநேக நன்மைகள் உண்டு.

அழுத்தம் அதிகமான மின்சாரத்தைக் கடத்தச் செம்பைவிட இலேசான அலுமினியக் கம்பி அதிகமாகப் பயனுகின்றது. இது மலிவானதும், நச்சுத்தன்மை இல்லாததுமானதால் பாத்திரங்கள் செய்யப் பயன்படுகின்றன. அலுமினியத் தூள் ஆளிவிதை எண்ணெயுடன் கலக்கப்பட்டு, நீராவிக் குழாய்கள், விளக்குக் கம்பங்கள், தந்திக் கம்பங்கள் முதலியவற்றிற்கு வர்ணமாகப் பூசப்படுகிறது. அலுமினியமும் அலுமினியக் கலவைகளும் விமான உறுப்புகள் செய்யவும், மருத்துவக் கருவிகள் செய்யவும் பயனுகின்றன. எஃகு வார்ப்படங்களில் குமிழிகள் தோன்றுவதைத் தடுக்க இது இளகிய எஃகுடன் கலக்கப்படுகிறது. மெல்லிய அலுமினியத் தகடு உணவு வகைகளுக்கும், சிகரெட்டு, சாக்லெட்டு முதலியவற்றிற்கும் உறையாகப் பயனுகிறது.

தமிழ்நாட்டு மண்ணிலே பிறந்த இந்த அலுமினியம், பிறநாட்டவர் கண்ணிலே கவின்மிகு பொருளாய்க் காட்சியளிக்கிறது என்ருல் அதற்குக் காரணம், மேட்டூர் அலுமினியம் மேலான அலுமினியம் என்றல்லவோ பொருள்?

—பி. வி. ஜி.



# உள்ளதையே கூறுகிறேம்: ஹைட்ராலிக் பரிட்சிப்பு என்றல் ஒவ்வொரு குழாய்க்கும் ஹைட்ராலிக் பரிட்சிப்பு.

# ஜெனித் தரம் என்றல் அதுதான்!



**முற்போக்கான விவசாயிகள் தேர்ந்தெடுக்கும் தரம்**

ஜெனித் தொழிற்சாலையிலே, அத்யாவசியமான தரநிர்ணயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிகழ்த்தப் படுகின்றன—அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுத்த குழாய்களைக் கொண்டு அல்ல; தனித்தனியே ஒவ்வொரு குழாயும் இப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் படுகிறது. உதாரணமாக, ஜெனித் நடத்தும் ஹைட்ராலிக் (நீரழுத்த) பரிசோதனை ஒவ்வொரு குழாயும் 50 கிலோ/செமீ$^2$ அழுத்த விசையினைத் தாங்கி நிற்பதற்கு உறுதி தருகிறது; ஒவ்வொரு குழாயினையும் மிகக் கண்டிப்பான இந்திய, பிரிட்டிஷ், சர்வதேசத் தரநிர்ணய விதிப்புகளுக்கு ஈடு நிற்கச் செய்கிறது.

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப் பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா, ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே உழைப்புத்திறனை நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.

**ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,**
195, சர்சகேட் ரிக்ளமேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458




everest/865a/ZSP/tm


# காணி நிலம் வேண்டும்

# 15. ஆசை அன்னத்துக்கு அருமைத் துணைவன்!

**ஊ**ர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவரும் சிங்கப்பூர் ராமையாத் தேவரும் ஒருவரையொருவர் எரித்து, ஒருவர் சாம்பலை மற்றவர் நெற்றியில் பூசிக் கொண்டு கொக்கரிக்கத் தவிப்பவர்கள் போலவும், ஒருவரை மற்றவர் விழுங்கி ஏப்பம் விடத் துடிப்பவர்கள் போலவும் தோன்றிஞர்கள்! ஐந்தாறு நிமிட இடைவெளிக்குள்ளே ஆயிரம் தடவை அவரவர் கையில் மின்னிப் பளிச்சிட்ட வைரச் சிமிக்கியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கவும் அவர்கள் மறந்துவிடக் காணேம்!

கூத்தை ரசிக்கும ஆர்வத்துடன் அன்னக்கொடியும் வீரமணியும் புதிய சுதாரிப்புடன் தங்களைத் தயார் செய்து கொண்டவாறு, ஒருவரோடொருவர் உரசிக் கொண்டே புழக்கடை மண்ணில் கால் பாவி நடக்கத் தொடங்கிஞர்கள்.

ஆதிமூலத் தேவர் தலைமுடிகளைத் தடவி முடிந்து கொண்டே பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டார்.

ராமையாத் தேவர் கிராப்புத் தலையை வருடிக் கொண்டே சிறிதாக ஒரு பெருமூச்சை நெட்டித் தள்ளிஞர்

''மச்சான்காரரே! மண்ணிலே நிலைக்குப்புற விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டலேன்னு சில புறக்குடிப படைகள் பேசுவாங்களாம்! ஆனு, நீங்க உயர்ந்த புள்ளி, ஊர்க்கார்வாருக்கு உரிய ஆம்பளை. என்றலும், எனக்குச் சொந்தமான வைரச் சிமிக்கியைச் சந்தடி சாக்கிலே நீங்க லவட்டி எடுத்து வெளிச்சத்திலே ஏந்தி நிற்கிற போக்கை என்னுலே அம்பிட்டுத் தொலைவுக்கு ரசிக்க வாய்க்கல்லேங்கிறேன்! மரியாதையாய் என்னேட வைரச் சிமிக்கியை என் கிட்டே நீட்டிப் பிடுங்க!''

ராமையாத் தேவரின் பேச்சில் ஆத்திரம் பதுங்கிக் கிடந்த ஏளனம் குரல் கொடுத்தது.

பெரியவர் ஏளனமாக அலட்சியத்தோடு சிங்கபூர் தேவரைப் பார்த்தார் பிறகு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, கையிலிருந்த வைரச் சிமிக்கியை கைக்குள்ளாகவே சமர்த்தாகவும் சாமர்த்தியமாகவும் குலுக்கிக் கொண்டு ஓர் அட்டகாசமான நிர்த்தாட்சண்யச் சிரிப்பைக் கொட்டிவிட்டுப் பேசிஞர்.

''மச்சான்காரா... ராமையா! நீ எனக்குக் கை நீட்டி கை ரொக்கமாகக் கொடுக்காத — கொடுக்கிறதாகச் சொல்லி, கடைசியிலே கொடுக்காமல் ஏய்ச்சுப்பிட்ட அந்த ரெண்டாயிரம் ரூபாய்க்கும் சேர்த்து நீ என் கிட்டேயிருந்து புரோநோட்டை முன் கூட்டியே மோசடியாய் எழுதி வாங்கிக்கிட்டே! கொடுத்த கடனேட, கொடுக்காத கடன் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் சேர்த்து அடாவடியாய் கோர்ட்டு கச்சேரியிலே என் மேலே 'தாவா' போட்டாய்! நான் வாங்காத



பூவை எஸ். ஆறுமுகம்

ரெண்டாயிரத்துக்குச் சாட்சி வைக்க என் கையிலே ஆதாரம் இல்லாததனுலே, நீ கொடுக்காத பணத்துக்குப் சேர்த்து நான் உனக்குப் பணம கட்டியாகத்தான் வேணும். இது சட்ட ரீதியான நீதி! ஆனு, சடடத்துக்கு அப்பாலே உள்ள உன்னேட மனச்சாட்சி உன் மாதிரியே ஊமைத்தனமாய் இருந்துகிட்டு வருதே, அந்தப் பொல்லாத பாவத்துக்கு உண்டான கூலியை நீ அனுபவிக்காமல் தப்பிச்சுகிடலாம்னு மனப்பால் குடிச்சிருப்பாய். ஆனு, அந்தப் பாவத்தின் கூலியை நீ அனுபவிக்காமல் ஒருநாளும் தப்பவே வாய்க்காது என்கிற சத்தியத்துக்குச் சாட்சி சொல்லத்தான் இதோ, என் கையிலே கைக்கு மெய்யாய் உன்னுடைய இந்த ஒற்றை வைரச் சிமிக்கி விதியாகவும் வினையாகவும் தெய்வமாகவும் சிரிக்காமல் சிரிச்சுக்கிட்டே இருக்குதாக்கும்! இம்மாங்கொத்த நடப்பிலே, என் கையிலே தேடி வந்திருக்கிற இந்த ஒரு வைரச் சிமிக்கிக்கு நீ சொந்தம் கொண்டாடுறியே? அந்தச் சொந்தத்துக்கு உன் கையிலே என்ன சாட்சி இருக்குதாம்? சொல்லுடா, ராமையாத் தேவனே!''

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது; ஒரு வழியாகச் சமாளிக்க எத்தனம் செய்தார் பெரியவர் ஆதிமூலம். இடுப்பு வேட்டியைச் சரிப்படுத்தியவண்ணம் தன் மச்சான் ராமையாத் தேவரை வெஞ்சினத்தோடு முறைத்து வெறித்துப் பார்த்தார் அவர்.

காளியம்மன் சந்நிதிக்கு எல்லை சொல்லிக் காத்து நிற்குமே சாம்பான் சிலை, அம்மாதிரி, ராமையாத் தேவர் சிலையாக மலைத்து நின்றுவிட்டார்.

''ஊம்; ஏண்டா ராமயைா, வாயடைச்சுப் போய் நின்னுக்கிட்டு இருக்கே? பேசுடா, பேசு! உன் மனச் சாட்சியைப் பேச விடுடா! ஊம்!'' என்று அதிகாரம் பண்ணினர் பெரியவர்.

ஆத்திரமும் ஏமாற்றமும் புதுப் புனலாகப் பொங்க, ஆதிமூலத் தேவரை நோக்கினர் ராமையாத் தேவர்.

''உங்ககிட்டே நான் ஏன் பேச வேணும்? என் மனச்சாட்சியை எதுக்கு நான் பேசவிடணும்? நீர் ஊருக்கு ஒசந்த மனிதராய் இருக்கலாம். ஆனல் என் வரையிலும் நீர் சாதாரண ஆள்தான்! அம்மன் கோயில் 'முதல் காணாஞ்சி' விசயத்திலே நீர் என்னை ஆட்டிப்படைச்சு என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்திரே. அந்த ஆத்திரத்துக்குப் பதில் சொல்ல வேண்டித்தான் நான் ஒரு 'தில்லுமுல்லு' செஞ்சு, உம்மைக் கச்சேரிப்படி வரைக்கும் இழுத்துப் போட்டு வேடிக்கை பார்த்தேன். இன்னம் வேடிக்கை காட்டவும் போறேனுக்கும்! அந்த வேடிக்கைக்குத் தூபம் காட்டத்தானே நீங்க எங்க வெள்ளைக் காளையையும் கையாலாகத்தனமாய் 'அமுச்சாட்டியம்' பண்ணிக் கட்டிப் போட்டு வச்சிருக்கீங்க? சரி; இப்ப நீங்க களவாடி வச்சிருக்கிற என்னேட ஒற்றை வைரச் சிமிக்கிக்கு ஆதாரம் கேட்கிறீங்க! இல்லையா? . . . உம்மோட யுக்தி எனக்குப் புரியாமல் இல்லே! நான் உம்மை ஏய்ச்சு உபரியாய் இரண்டாயிரத்துக்கும் சேர்த்து பிராமிசரி நோட்டு பூரிச்சு வாங்கிக்கிட்டதுக்கு ஈடுகட்டி என்னை ஏய்க்கிறதுக்கு என்னேட அந்த ஒரு வைரச் சிமிக்கியைப் பகடையாக்கி விளையாடப் பார்க்கிறீராக்கும்? நஷ்டத்தை ஈடுபட்ட லாபம் சேர்க்க ஆசைப்படுறீராக்கும்?''

## அண்ணு தலைமை அஞ்சல் நிலையம்.

சென்னை அண்ணுசாலையிலுள்ள தலைமை அஞ்சல் நிலையம், செப்டம்பர் 15-ந் தேதி முதல் 'அண்ணு தலைமை அஞ்சல் நிலையம்' என்று அழைக்கப்படும். மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு.கே.பிரம்மானந்த ரெட்டி, புதுதில்லியில், தமது அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் இதை அறிவித்தார்.

இவ்வாறு ராமையாத் தேவர் கவடு தொனிக்கப் பேசி முடித்து, கண் இமைப் பொழுதிற்கு தன் அத்தான் ஆதிமூலத்தை ஓரக் கண் பதித்துப் பார்வையிட்டார். அடுத்த இமைப்பில், சற்றே பின் வாங்கிப் பதுங்கினர். பின்னர், கையிலிருந்த தன்னுடைய ஒரேயொரு வைரச் சிமிக்கியைப் பரிதாபமாகப் பார்த்தவாறு, அதை இடுப்பு மடியில் செருகிக் கட்டிக் கொண்டார். மேலேயும் கீழேயும் மிரள மிரள விழித்துப் பார்த்தார். மறு விஞடியில், பதுங்கிப் பாயும் வெம்புலியாக உருக்கொண்டு ஆதிமூலத் தேவர் மீது ஒரே பாய்ச்சலாக—காட்டுப் பாய்ச்சலாகப் பாய்ந்தார் ராமையாத் தேவர்!

அப்பொழுது

கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு எச்சரிக்கையோடு நின்றிருந்த முதியவர் ஆதிமூலத் தேவர் வெகு நயமான நிதானமான மிடுக்கோடு ராமையாவை 'லாகு' கொடுத்து. 'லாகு' கணித்துச் சாடி சமாளித்துக் கொண்டார். ராமையாயின் பிடரியிலே ஒரு 'பிடி' முடுகி, அந்தப் பிடியை முறுக்கி அவர் நெஞ்சோடு அழுத்திக் கீழே தள்ளினர்.

கீழே விழுந்துவிட்ட தன் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதை நிரூபித்துக் காட்டியவராக, பேந்தப் பேந்த விழித்தார் சிங்கப்பூர்ச் சீமான். சுற்றிச் சூழப் பார்வையை வெட்டினர். வெட்டுக் கடாவாக ஒரு துள்ளல் துள்ளினர். அவர் ஆசையோடு எதிர்பார்த்த மாதிரி, ஆதிமூலத் தேவரின் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கி அசந்து மறந்து கீழே விழுந்து கிடந்தால்தானே? ஆதிமூலம் அந்த வைரச் சிமிக்கியைப் பத்திரமாக இடுப்பு மடியில் முடி போட்டு வைத்துக் கொண்டிருந்த சிதம்பர ரகசியம் அவருக்கு விளங்கிலைல்தானே?

ஆதிமூலத்திற்கென்று அப்படியொரு நிர்த்தாட்சண்யமான அட்டகாசச் சிரிப்பு நினைத்த மாத்திரத்திலே கூடி வருகிறது; கை கூடி ஓடி வருகிறது. சிரித்தார். இடுப்பு மடியைத் தந்திரப் போக்கோடு லாகவமாகத் தடவிப் பார்த்து நிம்மதியடைந்தார். இருந்திருந்தாற்போலத் தாவிக் குதித்தார். அடுத்த மூன்ருவது நிமிடம், அவருடைய திருக்கரத்தில் மற்றொரு வைரச் சிமிக்கியும் கண்சிமிட்டிச் சிரிப்பை வெடித்து பொடிக்கத் தலைப்பட்டது. 'டேய் ராமையா! நீ என்னை ஏமாற்றின ரெண்டாயிரம் ரூபாய்க்கு இப்பத்தாண்டா கணக்குச் சரியாகப் போச்சு! உன்னேட இந்த ரெண்டு வைரச் சிமிக்கியும் என்னேட அஞமத்துப் பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் இப்பத்தாண்டா ஈடு ஆகுது!'' என்று குரோதம் மண்டிய நிம்மதியோடு கொக்கரித்து விட்டு, அடுத்த வைரச் சிமிக்கியையும் இடுப்பு மடியில் கெட்டியாக முடிபோட்டு முடிந்து கொண்டே, கொல்லைப்புறத்தை விட்டு நகர முயன்ருர்.

அடிபட்ட வெம்புலிக்கு அவமானம் மூளுவது இயற்கை; ஆத்திரம் கொப்பளிப்பது இயல்பு. ஆதிமூலத் தேவரின் குடுமியைப் பற்றி மடக்கலானர் ராமையாத் தேவர்.



திமிறிக் கொண்டு விடுதலை அடைந்திட முயன்ற பெரியவர் ஆதிமூலத் தேவர், அவ்வாறு முயன்ற அவசரத்தின் விளைவாக, மண்ணிலே — கட்டாந்தரைப் புழுதி மண் வெளியிலே 'தொபுகடீர்' என்று சாய நேர்ந்தது. அதன் விளைவாக, பெரியவர் ஆதிமூலத்துக்கு நெஞ்சடைப்பு வந்துவிட்டது. அது மட்டுமல்ல! —அவருடைய நெற்றிப் பொட்டிலிருந்தும் ரத்தம் பீறிட ஆரம்பித்தது.

''அப்பா!'' என்று வீறிட்டான் வீரமணி.

''மாமா!'' என்று விம்மினள் அன்னக்கொடி.

''அத்தான், மாமாவுக்கு மூச்சு இருக்குங்களா?'' என்று தழுதழுத்த குரலிலே வினவியவளாக, அருமை அத்தானை ஒட்டிக் குந்தினள் அன்னம்.

''ஒண்ணும் மட்டுப்பட மாட்டேங்குது, புள்ளே!'' ரத்தத்தைத் துடைத்தபடி சொன்னன் வீரமணி.

''ஐயையோ!''

பாவம், ராமையா விழித்தார். சந்தடி சாக்கில் தப்பினமட்டும் ஆதாயமென்று எண்ணி, பையப் பைய நழுவ வேளை பார்த்திருந்தார்; தப்பிவிடவும் முனைந்தார்.

வீரமணி 'கச்சம்' கட்டியபடி கோபாவேசமாக எழுந்தான். 'அம்மான்! என்னேட அப்பாவை உயிர்க் கழுவிலே தவிக்க வச்சுப்பிட்டு எங்கிட்டுக் கால் மாறப் பார்க்கறீங்க? போனதும் வந்தது மாய் ஓட்டமாய் ஓடிப் போய், நம்ப நாட்டு வைத்தியர் சோமசுந்தர ஐயாவைக் கையோட இட்டுக்கிட்டு ஓடியாங்க!'' என்று ஆணையிட்டான். அவனது வேட்டியின் முனையில் ரத்தம் சொட்டியது.

''அப்படியே செய்கிறேனுங்க, மாப்பிள்ளை!''

பெட்டிப் பாம்பாகவோ அல்லது மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாகவோ மாறிவிட்டார் ராமையா.

இரண்டாந் தடவையாகப் புதுப் பிறவி கொண்டார் ஊர்நாட்டாண்மை ஆதிமூலத் தேவர். கண்களை மருள மருள விழித்த வண்ணம் சுற்று முற்றும் பார்வையைப் பரப்பினர். ராமையாவைக் கண்டவுடன், அவரது கண்வலையங்களைக் குரோத யனப்பான்மை வளைத்துக் கொண்டது. பற்களை கடித்துக் கொண்டார். எதையோ நினைவுபடுத்திக் கொண்டவர் போன்று ஓர் அரைக்கணம் திகைப்படைந்தார். அவசரம் அவசரமாக, படுத்த நிலையிலேயே தன் அடிமடியைத் தடவி பார்த்தார். இரண்டு சிமிக்கிகளும் பத்திரமாக இருப்பதைக் கண்டு கொண்டவுடன், ஆறுதலோடு நெடு மூச்செறிந்தார்.

''நான் விடை வாங்கிக்கிடட்டுமா, மாப்பிள்ளை?'' என்று விடை கேட்டார் ராமையா.

## சேலம் பெற்ற பரிசு

அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி பரிசுத் திட்டப்படிப் புது தில்லியில் நடந்த பரிசுக் குலுக்கலில் சேலம் மாவட்டம் கருப்பூர் அஞ்சல் நிலையத்தில் பணம் போட்டிருக்கும் ஒருவருக்கு இரண்டாவது பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது.

அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளில், 1973 டிசம்பர் முதல் 1974 மார்ச் வரையில் 200 ரூபாய்க்குக் குறையாமல் பணம் போட்டு வைத்தவர்கள், இந்தப் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முதல், இரண்டாவது பரிசுகள் தவிர, 50 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள வேறு பல பரிசுகளும் வழங்கப்படும்.

''ஏய் ராமையா! என் அருமை மகன் வீரமணியை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடிக் கைக்குள்ளே போட்டுகிட கனவிலே கூட நான் சொன்னதை மறந்துபிட்டா, மறுதக்கமும் 'வீரமணி மாப்பிள்ளை'ன்னு அழைச்சு அவன் கிட்டே விடை கேட்கிறே? — உனக்கு எம்புட்டு நெஞ்சழுத்தம் இருக்க வேணும்? டேய் ராமையா? உனக்கு விடை கொடுக்க வேண்டியவன் நான்தாைக்கும்! ஏன் தெரியுமாடா? என்னேட இந்த ரத்தத்துக்குப் பதில் சொல்லித் தீர வேண்டியவன் நீதாைக்கும்!'' என்று முழக்கம் செய்தார் அவர். கை விரல்களில் படிந்திருந்த ரத்தக் கறையின் சுவடுகளைச் சாட்சியாகக் காட்டினர்.

ராமையாத் தேவருக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து தொலைக்கவே, அவர் தன்னுடைய பவித்திரமான மீசையை வருடி விட்டார். ''நீர் 'அதகடி' பண்ணி எடுத்து வச்சிருக்கிற என்னேட வைரச் சிமிக்கிகளுக்கு முதலிலே நீர் 'வகை' சொன்னல், நான் உம்மோட ரத்தத்துக்கு வழி சொல்லுறேன்!'' என்ருர்.

''ஓகோ! அப்படியா கதை மடக்குறே நீ? . . சரி; உன்னேட வெள்ளையை மடக்கிப் போட்டு வச்சிருக்கிற என்னை நீ எந்தச் சட்டத்தைக் கொண்டு மடக்கப் போறியோ; அதே சட்டத்தைக் கொண்டு, உன்னேட வைரச் சிமிக்கிகளை நான் உன் கண்ணுக்கு முன்னலேயே லாந்தி வச்சிருக்கிற சங்கதிக்கும் என்னை மடக்கிப் போடுவேன் பார்க்கலாம்!'' என்று வீராப்புடன் மொழிந்தார் பெரியவர்.

''ஊம்; பார்க்கலாம்!'' என்று காட்டமாகத் தெரிவித்தார் சிங்கப்பூர்க்காரர். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டே, ''அருமை மச்சானே! இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னெரு உண்மையையும் உம்மகிட்டே நான் செப்பிட வேண்டும்!'' என்று கோடி காட்டிவிட்டு, நின்ருர் ராமையா.

இப் பேச்சைக் கேட்டதும், முதியவர் மூர்த்தண்யமாகக் கை கொட்டி நகைத்தார். ''அப்பனே ராமையாத் தேவா! உண்மையை நீ நம்புறியா? அதை நீ மதிக்கிறீயா? அட, பைத்தியக்கார பாவி! கேப்பையிலே நெய் வடியுதின்ஞ, கேட்பாருக்கு மதி இல்லையா? நான் உன்னை மாதிரி மதிகெட்டவன் இல்லே! உன்னை மாதிரி, மகள் பேரைச் சொல்லிக்கிட்டு, யாரோ ஊர் பேர் தெரியாத சிறுக்கிக்காக வைரச் சிமிக்கிகளைப் பண்ணிப்புட்டு, இப்ப அதுகளைக் கோட்டைவிட்டுப்புட்டு அம்போன்னு நிற்கிறவஞ நான்? போடா, போ!'' என்று அதிர்வேட்டுச் சிரிப்பை உமிழ்ந்தார்.

''ஏய் ஆதிமூலத் தேவா! . . . வாயை மறுபடியும் எக்குத் தப்பாய் நீட்டினியோ அப்பாலே நான் கையை நீட்ட வேண்டி வந்திடும். ஜாக்கிரதை!''

''சரிதான் போடா, போக்கணங்கெட்ட பயமவனே!'' என்று ஓங்காரமிட்டு உறுமியபடி, ராமையாவை நோக்கிப் பாய்ந்தார் மூத்தவர்.

வீரமணியும் அன்னக்கொடியும் முன் மேல் நின்ருர்கள்.

நாட்டு வைத்தியர் இடைமறித்து, ராமையாவின் கைகளைப் பற்றினர்.

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்! சாதனைகள்!

இன்னும் ஏழு ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் எல்லா ஊர்களுக்கும் சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்திட நமது அரசு திட்டமிட்டுள்ளது. இப் பணிகளை விரைந்து செயல்படுத்திவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அமைப்பு மாநில அளவில் இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது.

1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளன்று தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றியுள்ள பணிகளும் தொடர்ந்து ஆற்றிடும் பணிகளும் சுருக்கமாக விளக்கப்படுகிறது இங்கே:—

குமார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்னால் நம்முடைய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் தேவைக்கு ஏற்ப குடிநீர் வழங்கிடவும் புதை வடிகால் அமைத்திடவும் முனைந்து செயல்படக் கூடிய ஒருங்கிணைந்த ஓர் அமைப்பு கிடையாது. அப்பொழுது எல்லாம் குடிநீர் வழங்குதல், புதை வடிகால் அமைத்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற பல்வேறு அமைப்புகள் கூட்டு முயற்சியாக செயல்பட வேண்டியிருந்தது. இதனால் விரைந்து செயல்படவும் முடியவில்லை. சிக்கல்களே வளர்ந்தன. திட்டங்களை நிறைவேற்றிட ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியும் அமைய வாய்ப்பில்லை. குடிநீர் திட்டங்கள் பற்றிய அடிப்படையான விவரங்களும் உணரப்படவில்லை. திட்டங்களுக்குரிய முக்கியத்துவம் தரப்படவில்லை.

ஆனால், இந் நிலையை மாற்றியமைத்திட அமைப்பாக உருவாகியது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

நவீன நாகரிக வாழ்க்கை வசதிகளோடு வளரும் நகரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலும், புதை வடிகால் (சாய்க்கடை) முறைகள் அமைதலும் மிக இன்றியமையாததாகும். நோய்த் தடுப்புகளுக்கு மட்டுமல்ல தொழில்கள் வளர்ச்சியடையவும் தண்ணீர் வசதி முக்கியமாகும். மக்களின் நல்வாழ்வுக்கான இந்த அடிப்படைத் தேவைகளை விரைந்து செயல்படுத்தவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை நமது அரசு அமைத்தது.

தன்னுள் தனி அதிகாரம் படைத்த ஓர் அமைப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை நமது அரசு 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் அமைத்தது. இதற்கு முன்பு மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறையும், நகராட்சிப் பணித் துறையும் நிறைவேற்றி வந்த பணிகளையும் கடமைகளையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. இதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டில் குடிநீர் வழங்கும் பணிகளில் மகத்தான சாதனைகள் உருவாகியுள்ளன.

ரூபாய் ஐம்பதாயிரம் செலவுக்கு மேற்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், புதை வடிகால் அமைக்கும் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொண்டு நிறைவேற்றுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ள திட்டங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. நகர்ப் புறங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டமும், புதைவடிகால் திட்டமும்,

2. கிராமப் புறங்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்,

3. தொழில்களுக்காக நீர் வழங்குதல்.

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் 1.55 கோடியாகும். நகர்ப்புற மக்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு வழங்கும் கடன்களைக் கொண்டு இப்பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி சில தகவல்கள்.

| | |
|---|---|
| தமிழ்நாட்டின் பரப்பளவு | : 1,29,900 சதுர கிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | : 4·11 கோடி |
| நகர்ப்புற மக்கள் தொகை | : 1·55 கோடி |
| கிராமப்புற மக்கள் தொகை | : 2·56 கோடி |

| நகர்ப்புறங்களில் அடங்கியவை : | | இதில் குடிநீர் வசதி பெற்றவை : | |
|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 2 | மாநகராட்சிகள் | 2 |
| நகராட்சிகள் | 100 | நகராட்சிகள் | 87 |
| நகரியங்கள் | 13 | நகரியங்கள் | 8 |
| பேரூராட்சிகள் | 625 | பேரூராட்சிகள் | 71 |

குடிநீர் வசதி பெற்றுள்ள மொத்த நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை —1 கோடி (65 சதவிகிதம்)

கிராமப்புறங்களில் அடங்கியவை :

374 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 13,000 ஊராட்சி மன்றங்களில் அடங்கியுள்ள ஊர்களும் சிற்றூர்களும் —58,595

இதில் குடிநீர் வசதி பெற்றவை :

ஊர்களும் சிற்றூர்களும் சேர்த்து மொத்தம் : 40,709

குடிநீர் வசதி பெற்றுள்ள கிராமப்புற மக்கள் எண்ணிக்கை —1·46 கோடி (58 சதவீதம்)

இப்பொழுது தமிழ் நாட்டில் 118 குடிநீர்த் வழங்கும் திட்டங்களும் புதை வடிகால் திட்டங்களும் ஐம்பத்தேழு கோடி முப்பத்தொரு லட்சத்து அறுபத்தேழாயிரம் மதிப்பீட்டில் பல்வேறு கட்டடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்னை நகருக்கு :

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி சென்னை மாநகரத்தின் மக்கள் தொகை 24.7 இலட்சமாகும். சென்னை நகரத்திற்குரிய தண்ணீர் முழுவதும் சத்தியமூர்த்தி சாகரம், சோழவரம் ஏரி, செங்குன்றம் ஏரி முதலியவற்றின் மூலம் பெறப்படுகிறது. சோழவரம் ஏரி செங்குன்றம் ஏரிக்கு கொற்றலையாறு மூலம் தண்ணீர் கிடைக்கிறது. வடகிழக்குப் பருவ மழையின் மூலம்தான் கொற்றலையாறுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும்.

இப்பொழுது சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 5 கோடி 2 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதாவது சென்னை நகரில் தலைக்கு 17 காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப 1991-ஆம் ஆண்டில் சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 27 கோடியே 5 இலட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும். இந்தத் தேவையின் அடிப்படையை நோக்கியும் உடனடித் தேவைகளுக்கு வகை செய்யும் வகையிலும் அமைந்தது வீராணம் திட்டம்.

வீராணம் திட்டத்தின் மூலம் இப்பொழுது சென்னை நகருக்கு கிடைக்கும் தண்ணீர் இரட்டிப்பாகும். காங்க்ரீட் குழாய்கள் மூலம் தென்னார்க்காடு மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகிலுள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வரப்படும். இரண்டு கட்டங்களில் நீரேற்றும் முறையில் தண்ணீர் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படும்.

வீராணத்திலிருந்து முதலில் நீரேற்றி, அங்கிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வடக்குத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

வடலூர் அருகிலுள்ள வடக்குத்துவில் தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய 'நீர் துப்புரவு நிலையம்' அமைக்கப்பட்டுள்ளது. வீராணம் ஏரியிலிருந்து வரும் நீர் இங்குத் துப்புரவு செய்யப்படும்.

வடக்குத்துவிலிருந்து சென்னை நகரம் 198 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. வடக்குத்துவில் துப்புரவு செய்யப்பட்ட நீரை, அங்கிருந்து நீரேற்றிக் குழாய்கள் மூலம் சென்னை தியாகராயநகர் பிரகாச முதலி தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி தென் பகுதி பணிக்கூடத்துக்குக் கொண்டு வரப்படும். அங்கிருந்து சென்னை நகருக்கு நீர் வழங்கப்படும்.

வீராணம் திட்டம் பற்றிய சில தகவல்கள் வருமாறு :

வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகருக்கு மொத்தம் 218.62 கிலோ மீட்டர் தொலைவுக்குக் குழாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

மொத்தம் 36,500 குழாய்கள் தேவைப்படும். ஒவ்வொரு குழாயின் நீளம் 6 மீட்டராகும். அந்தக் குழாய் உட்புறத்தின் குறுக்களவு 5 அடி 5 அங்குலமாகும்.

இந்தக் குழாய்களைத் தயாரிக்க திருக்கழுக்குன்றம் அருகில் மங்கலத்திலும் பண்ணுருட்டி அருகிலும் இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் கொண்டு வருவதற்காக இங்குத் தயாரிக்கப்படும் குழாய்கள்போல இந்தியாவில் வேறு எங்கும் தயாரிக்கப்படவில்லை.

இத் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 28 குழாய்கள் தயாரிக்கும் திறனுடையவை.

15—7—74 வரையில் இத்

[illegible]

''அந்த வெறும் பயல் கையை நீட்டுவானேன்னு, நீங்க வேலை மெனக்கெட்டு அந்த முடிச்சு மாறிப் பயல் கையைப் பிடிக்கிறீங்க? அவன் கையை நீட்டினால், என் கை பூப்பறிக்கவாபோயிடும்? என்னமோ, முதுகுப்புறத்தாலே பயங்கொள்ளியாட்டம் பாய்ஞ்சு என்னைக் கீழே தள்ளிப் போட்டான் அவன். அதுக்கு உண்டான கூலியை அவனுக்குக் கொடுக்காமலா இருக்கப் போறேன்? இந்தத் துப்புக் கெட்ட பயலுக்கு எங்க வீரமணி மாப்பிள்ளையாமே? கேட்டீங்களா கதையை?!! என்று உறுமினார் பெரியவர்.

''ஆமாங்காணும்! உங்க வீரமணி எங்க வீட்டு மாப்பிள்ளை தானாக்கும்!''

இப் பேச்சைக் கேட்டதுதான் தாமதம், உடனே, ஆதிமூலத் தேவர் தன் மைந்தன் வீரமணியைச் சந்தேகக் கண்ணோடு பார்வையிட்டார். ''வீரமணி!'' என்று விளித்தார். சாமியாடியின் கண்களாக அவருடைய கண்கள் உருமாறின!

வீரமணி கடைக்கண் பார்வையால் அன்னத்தை அளந்தவண்ணம் தன்னுடைய உரிமையின் முடிவு பளிச்சிட, கம்பீரமான மிடுக்கோடு நடந்து வந்து நின்றான். மெல்லிய குரலெடுத்து, ''அப்பா!'' என்றான். ஏனோ அவனது அழகான கண்கள் இரண்டும் கலங்கிவரத்தொடங்கி விட்டன!

''தம்பி வீரமணி! உன் அம்மான் ராமையாத் தேவன் உன்னை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடிக் கும்மாளமடிச்சுக் கொக்கரிக்கிறானே? மெய்தானா அது?''

அப்பாவின் ஏடாகூடமான கேள்விக்கு மகன் விறையிறுக்கத்தான் வேண்டும். ஆனால், அவனோ வாய் மூடி மௌனியானான்!

ஆதிமூலத்தின் இதயத்திலே சாம்பல் பூத்த தணலாகக் குமைந்து கொண்டிருந்த ஐயமும் சினமும் காற்றுப் பட்டுக் கனல் ஆரம்பித்தன. ''வீரமணி! உன்னைப் பெற்ற அப்பன்—இந்த ஆவணத்தாங்கோட்டை ஊர் நாட்டாண்மைக்காரன் கேட்கிறேன். கேட்டதுக்கு பதில் சொல்லாமல் வாயை மூடிக்கிட்டு நிற்கிறதைப் பார்த்தால், உன் அம்மான் தன் மகள் அன்னத்தைக் கொண்டு உன்னை மசிய வச்சு வசியம் பண்ணிட்டான்னு அர்த்தமா? பேசு தம்பி, பேசு!'' என்று ஆற்றாமையோடு கேட்டார்.

''அப்பா நீங்களோ என்னைச் சிலட்டூர் மாப்பிள்ளையாக்கக் கங்கணம் கட்டிட்டீங்க; என் அம்மானோ என்னைத் தன் வீட்டு மாப்பிள்ளையாக ஆக்கிக்கிடப் போறதாகச் சவால் விட்டிருக்காங்க! இதுக்கு ஊடாலே என்னோட சொந்த அபிப்பிராயத்தை பற்றித் தெரிஞ்சுக்கிட உங்க ரெண்டு பேரிலே யாருக்குமே பொறுப்பு ஏற்பட்டதில்லீங்களே!'' என்று ஒரு புதிய குரலில் சொல்லி முடித்தான் வீரமணி.

அன்னக்கொடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நின்றாள். வேகமாக அடித்த சுழிக் காற்றில் பறந்து வந்து காலடியில் தஞ்சம் அடைந்த ஒரு கடிதத் தாளை நலியாமல் கைப்பற்றி நிமிர்ந்தாள். ஆசை அத்தானை குழந்தைத்தனமாக நிர்மலப் போக்கோடு ஊடுருவினாள்.

சுயப்பிரக்ஞை கொண்ட ஆதிமூலம், ''ஓகோ! அப்படியா சங்கதி! சரி, சரி. நான் என் முடிவை உன்கிட்டே சொன்னப்பவே நீ என்கிட்டே சொல்லியிருக்கோணும்! ஊம், இப்போது சொல்லப்பா, வீரமணி!'' என்று கேட்டுக் கொண்டார். நெஞ்சு அடித்துக் கொண்டது!

''அன்னக்கொடி தவித்தாள்!

''நான் என்னோட ஆசை அன்னத்துக்கு அருமையான புருசனாக ஆகப் போறேனுங்க, அப்பா!'' என்று தன்னுடைய தீர்ப்பைத் தெரியப்படுத்தினான் வீரமணி! . . .

(வளரும்)


**மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628.**

**படாளம்**

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!


# வெற்றி மணங் கமழும் விடுதலை நாள் விழா

இந்தியா விடுதலை பெற்ற நாளிலிருந்து, ஆண்டுதோறும் அந்த விடுதலை நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம். இப்படி நாம் ஆண்டுதோறும் அந்த மகிழ்ச்சித் திருநாளை ஆடிப்பாடிக் கொண்டாடினாலும், அந்தந்த மாநிலத் தலைநகரில் அந்தந்த மாநில முதல்வரே கொடியேற்றும் உரிமையின்றி, மாநிலத்தின் ஆளுநர் கொடியேற்றுவதே மரபாக இருந்து வந்தது. இவ்வாண்டு, சுத்தியின்றி, இரத்தமின்றி, ஒரு சிறு போராட்டம் கூட இல்லாமல், அமைதிப் புரட்சியால் அந்த மரபை மாற்றியமைத்த பெருமை-வரலாற்றுச் சிறப்பு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

"மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில், வெற்றிக் களிப்புடன் விண்முட்டப் பறந்து பட்டொளி வீசிடும் இந்திய தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்கள்தாம் இந்த நாளில் மாநிலங்களின் தலைநகரங்களில் ஏற்றி வைக்க வேண்டும்'' என்று தமிழக முதல்வர் எழுப்பிய உரிமைக்குரலுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்ததற்கிணங்க, சென்னை கோட்டைக் கொத்தளத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள், 15-8-74 காலை 8 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள்.

15-8-74 காலை கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றுவதற்கு முன்னால், முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழர்களின் இதய தெய்வமான

**அட்டை சொல்லும் செய்தி**

பேரறிஞர் அண்ணா துயில் கொள்ளும் அண்ணா சதுக்கத்திற்குச் சென்று, அங்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். பின்னர், அங்கிருந்து திறந்த காரில் புறப்பட்டுக் கோட்டையின் வாயிலை வந்தடைந்தார்கள். கோட்டை வாயிலில் பெருந்திரளாகக் கூடியிருந்த பொது மக்கள் 'கலைஞர் வாழ்க' என்று விண்ணதிர முழக்கமிட்டனர். முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுமக்களுக்கு அன்போடு வணக்கம் தெரிவித்தார்கள். பின்னர் முதல்வர் அவர்களுக்கு சென்னையிலுள்ள முப்படைத் தளபதிகள் அறிமுகம் செய்து வைக்கப் பெற்றனர். அதன் பின், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

காவல்துறை 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் இன்னிசை முழக்கினர்.

வாழ்த்து மலர்களைச் சொரிந்த மக்கட் கடலை நோக்கிப் புன்னகை தவழக் கரம் அசைத்து நன்றிதெரிவித்தபின் வெண்புரவிகளின் மீதமர்ந்த காவலர் வீர வரவேற்பளித்தனர். முதல்வர் கலைஞர் அவர்கள் கோட்டைக் கொத்தளத்திற்கு வந்து அங்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்ததும், தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, தமிழக முதல்வர், தமிழக மக்களுக்குச் சுதந்திர தினச் செய்தியை வழங்கினார்கள். இந்த 27-வது சுதந்திரதினம், மரபை மாற்றியமைத்து, மாநில முதல்வர்களுக்குக் கொடி ஏற்றும் உரிமையை வழங்கும் வரலாற்றுச் சிறப்புடைய நாளாக விளங்கியது என்பதும் 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதுபோல, வல்லார் ஒருவர் கேட்ட இந்த உரிமை இந்தியாவில் உள்ள எல்லா மாநிலத்திற்கும் கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சாமி பழ



## செய்தியாளர்களுக்கு முதல்வரின் விருந்து

முதல்வர் கலைஞர் அவர்கள் 15—8—74-ல் சுதந்தர நாளன்று, சென்னை ராஜாஜி மண்டபத்தில் செய்தியாளர்களுக்கு ஒரு விருந்தளித்தார்கள். செய்தித் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில்,

''இன்றைய விருந்தைப் பற்றி உங்களுடைய பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் என்னிடம் கூறும்போது, நிருபர்களை அழைத்து, முதன் முதலாக ராஜாஜி மண்டபத்தில் நடைபெறுகிற விருந்து இதுதான் என்று குறிப்பிட்டார்; இந்தியாவில் நடைபெறுகிற- பாராட்டத்தக்க பல காரியங்கள் தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக நடைபெறுகின்றன என்பதை அறிகிற நேரத்தில் இது ஏதோ ஒரு கட்சிக்குரிய பெருமையாகக் கருதாமல், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய பெருமையாக நாம் இந்த நாளில் கருதிக்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

குமார்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்களின் பட்டியல் :

| எண். | திட்டத்தின் பெயர் | திட்டங்களின் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **1971 — 72 ஆம் ஆண்டில்** | |
| 1. | திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் (வட ஆர்க்காடு மாவட்டம்) | 45.57 |
| 2. | கடையநல்லூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 30.00 |
| 3. | போளூர் குடிநீர் வழகும் திட்டம் | 15.37 |
| 4. | திருக்கோயிலூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 11.45 |
| 5. | கள்ளக்குறிச்சி குடிநீர் வழங்கும் திட்டம் | 9.99 |
| 6. | பெருந்துறை குடிநீர் வழங்கும் திட்டம் | 42.45 |
| 7. | திருவாரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 27.76 |
| | **1972 — 73 ஆம் ஆண்டில்** | |
| 8. | ஆம்பூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 40.00 |
| 9. | பண்ணுருட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 26.09 |
| 10. | ஆத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 23.86 |
| 11. | கிருஷ்ணகிரி குடிநீர் வழங்கும் திட்டம் | 28.00 |
| 12. | பூவிருந்தவல்லி குடிநீர் வழங்கும் திட்டம் | 24.40 |
| 13. | உத்திரமேரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 18.51 |
| 14. | விக்கிரமசிங்கபுரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 27.55 |
| | **1973 — 74 ஆம் ஆண்டில்** | |
| 15. | வாணியம்பாடி குடிநீர் வழங்கும் திட்டம் | 46.43 |
| 16. | மேல்விஷாரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 13.87 |
| 17. | சோளிங்கர் குடிநீர் வழங்கும் திட்டம் | 23.80 |
| 18. | காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 9.57 |
| 19. | நிலக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 19.40 |
| 20. | மோகனூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 6.50 |
| 21. | பரமத்தி குடிநீர் வழங்கும் திட்டம் | 12.92 |
| 22. | இராமநாதபுரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 37.41 |
| 23. | புஞ்சை புளியம்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 25.74 |
| 24. | அருப்புக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 65.88 |
| 25. | குளித்தலை குடிநீர் வழங்கும் திட்டம் | 13.00 |
| 26. | லப்பைக் குடிகாடு குடிநீர் வழங்கும் திட்டம் | 5.50 |
| 27. | புஞ்சை புகளூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 15.68 |
| 28. | செந்தாரப்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம் | 1.92 |
| 29. | திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்) | 28.50 |
| | **1974 — 75 ஆம் ஆண்டில் (இதுவரை)** | |
| 30. | காட்பாடி, காட்பாடி புதுக்குடியிருப்பு விருதம்பட்டு ஏனைய ஊராட்சிகளுக்குமான குடிநீர் வழங்தும் திட்டம். | 55.00 |

புதிய திட்டங்களின் மொத்த எண்ணிக்கை : 30

மொத்தச் செலவு ரூ. 753.12 இலட்சம்

தொழிற்சாலைகளில் 7,000 குழாய்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

திருத்திய மதிப்பீட்டின்படி வீராணம் திட்டத்துக்காகும் மொத்தச் செலவு ரூ. 29.25 கோடி. 15—7—74 வரை இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 15.44 கோடியாகும்.

வீராணம் திட்டத்தின் மூலம் 1975-ஆம் ஆண்டில் சென்னை நகருக்குத் தண்ணீர் கிடைக்கும்.

**புதை வடிகால் திட்டம் :**

சென்னை மாநகரத்தின் மக்கள் தொகையான 24.7 இலட்சம் பேரில் 21.5 இலட்சம் மக்கள் புதைவடிகால் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நகரத்தின் முக்கால் பகுதி அளவுக்குப் புதைவடிகால் திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்திலுள்ள கழிவு நீர்க் குழாய்களின் நீளம் 1,000 கிலோ மீட்டராகும்.

1957-ஆம் ஆண்டில் சாய்க்கடை நீரேற்று நிலையங்கள் 22 இருந்தன. இப்பொழுது இந்த எண்ணிக்கை 54 ஆகும். கழிவு நீரேற்றும் நிலையங்கள் ஒவ்வொன்றிலிருந்து இருந்தும் இன்னொரு பகுதிக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள கழிவு நீரேற்றும் நிலையத்திலிருந்து நீரேற்றப்படுகிறது.

முதன் முதலில் சென்னை நகருக்கு ஆறரை இலட்சம் மக்கள் தொகை அடிப்படையில் புதை வடிகால் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனல் இன்று மாநகரத்தின் மக்கள் தொகை 25 இலட்சத்துக்கு மேலாகும். எனவே பழைபுதை வடிகால் திட்டங்களை விரிவுபடுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதைவடிகாலை மேம்படுத்தும் பணிகள் ஐந்து தனிப்பட்ட மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

ஐந்து மேம்படுத்தப்படும் திட்டங்களுக்காக செலவு ரூபாய் 10.32 கோடியாகும்.

இந்த மேம்படுத்தும் திட்டங்களினல் இதுவரை புது வடிகால் வசதி பெருத பகுதிகள் வசதி பெறும். தேவையுள்ள இடங்களில் கழிவு நீரேற்றும் நிலையங்கள் அமைக்கப்படும்.

புது வடிகால் மேம்படுத்தும் பணிகள் 1976-ஆம் ஆண்டில் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகருக்காக வருங்கால நிலைகளை ஒட்டி மாபெரும் புதைவடிகால் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டம் மூன்று கட்டங்களில் மேற்கொள்ளப்படும் :

1. இப்போதுள்ள புதைவடிகால்களைப் பழுது பார்த்து அமைத்தல்.

2. புதிய முக்கியமான புதை வடிகால்களை மதிப்பீடு செய்தலும் விரிவான திட்டங்களை வகுத்தலும்.

3. புதை வடிகால்களை இணைக்கும் வடிகால் திட்டங்களை அமைத்தலும்.

இந்த மூன்று கட்டங்களில் முதல் கட்டப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு 40.93 இலட்சம் ரூபாயாகும். இத்திட்டப் பணிகள் அரசுக்கு அனுக்ப்பப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டப் பணிகளில் 28 முக்கியமான புதை வடிகால் பாதைகள் அமைக்கப்படும். ஏறத்தாழ ரூபாய் 5.50 கோடி செலவில் இது நிறைவேற்றப்படும். மூன்ருவது கட்டப் பணிகளில் முக்கிய புதை வடிகாலில் கிளை வடிகால் பகுதிகள் இணைக்கப்படும்.

**கோவைக்கு சிறுவாணி நீர் :**

கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி இரண்டு மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் திட்டமாகும் சிறுவாணி நீர்த்தேக்கத் திட்டம். இதன் மூலம் ஆண்டுதோறும் சிறுவாணி ஆற்றிலிருந்து 130 கோடி கன அடி அளவு தண்ணீர் நமக்கு அளிக்கப்படும். கோவை நகராட்சி பகுதிக்கும் அதனை ஒட்டியுள்ள கிராமங்களுக்கும் சிறுவாணி ஆற்று நீர் கிடைக்கும்.

கேரளப் பகுதியில் சிறுவாணி ஆற்றில் சிறிய நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டு அங்கிருந்து தண்ணீர் எடுத்து வரப்படும். அங்கு செய்யப்படும் பணிகளைக் கேரள அரசின் பொதுப் பணித்துறை நமது சார்பில் செய்கிறது. நீர் துப்புரவு நிலையம், நம் பகுதியில் தண்ணீர் கொண்டு வரும் பணிகள், தேக்கி வைக்கும் இட அமைப்பு, சிறுவாணிக்குச் சாலையமைத்திடும் பணிகளை நமது அரசு ஏற்றுள்ளது.

கேரள அரசுக்கு இத்திட்டத்தால் ரூ. 550 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாட்டுக்கு ரூ. 642 இலட்சம் செலவாகும்.

இப்பொழுதுள்ள கோவை நகரத்திற்கு மட்டுமல்லாது பெரிய கோயம்புத்தூர் என்று அழைக்கப்படும் பகுதியில் உள்ள உப்பிலிபாளையம், கணபதி, சிங்காநல்லூர் சௌரிபாளையம், பீளமேடு, குனியமுத்தூர், தெலுங்குப்பாளையம், குறிச்சி, சங்கனூர் பகுதி, கவுண்டன்பாளையம், கிருஷ்ணராயபுரம், இராமநாதபுரம், புளியங்குளம், சுண்டைக்காமுத்தூர், ஆட்டுப்பாளையம் முதலிய இடங்களுக்கும் சிறுவாணி நீர் கிடைக்கும்.

சிறுவாணி நீர் வரும் வழியிலுள்ள ஊர்களான தெப்பிபாளையம், ஆலந்துறை, புழுவப்பட்டி, மடம்பட்டி, கள்ளம்பாளையம், பச்சாபாளையம், செட்டிபாளையம் பேரூர், தெலுங்குப் பாளையம் முதலிய ஊர்களுக்கும் சிறுவாணி நீர் கிடைக்கும்.

**தொழிலுக்கு நீர் :**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள தண்ணீர் வசதிகள் வருமாறு :

ரூபாய் 470 இலட்சம் செலவில் தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலை தொடர்புடைய அனைத்து தொழிலகங்களுக்கும் நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 76.50 இலட்சம் செலவில் துறைமுகத்துக்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 26.16 செலவில் திருச்சி ஆயுதத் தொழிற்சாலைக்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 22.00 இலட்சம் செலவில் அரக்கோணம் எஃகு உருக்காலைத் திட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம்.

ரூபாய் 58.94 இலட்சம் செலவில் ஆவடி கனரக வாகன தொழிற்சாலைக்கு நீர் வழங்கும் திட்டம்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சேலம் இரும்பாலை திட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம் முடி

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட (Improvements Scheme) திட்டங்களின் பட்டியல்

| எண். | திட்டங்களின் பெயர் | செலவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| | **1971—72 ஆம் ஆண்டில்** | |
| 1. | தாம்பரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 12.75 |
| 2. | புதுக்கோட்டை குடிநீர் வழங்கும் திட்டம் | 30.00 |
| | **1972—73 ஆம் ஆண்டில்** | |
| 3. | செங்கல்பட்டு குடிநீர் வழங்கும் திட்டம் | 21.72 |
| 4. | சிதம்பரம் குடிநீர் வழங்கும் திட்டம் | 3.24 |
| 5. | புளியங்குடி குடிநீர் வழங்கும் திட்டம் | 10.13 |
| 6. | அறந்தாங்கி குடிநீர் வழங்கும் திட்டம் | 1.58 |
| | **1973—74 ஆம் ஆண்டில்** | |
| 7. | மன்னார்குடி குடிநீர் வழங்கும் திட்டம் (தொடக்கநிலைத் திட்டம்) | 29.65 |
| 8. | திருநெல்வேலி குடிநீர் வழங்கும் திட்டம் (தொடக்கநிலைத் திட்டம்) | 54.00 |
| | **1974—75 ஆம் ஆண்டில் இதுவரை** | |
| 9. | ஸ்ரீரங்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 28.75 |
| 10. | கரூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 35.26 |

மேம்படுத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை : 10

மொத்தச் செலவு ரூ. 753.12 இலட்சம்

உங்கள்
எதிர்காலத்திற்கு
ஓர்
நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத
அதிகப்படியான வட்டி
இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு
கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

| ரூ 100/-ம், அதற்கு மேலும் | வட்டி விகிதம் வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.50% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.00% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.00% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.00% |
| 3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.00% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.00% |

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001

தந்தி அர்பாங்க் தொலைபேசி: 20367 டெலக்ஸ் 7225

என்.எல்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.

குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்

ஆர்.கனகசபை, தலைவர்.


**ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
செயல்படுத்தப் போகும் திட்டங்களின் மதிப்பீடு**

| | | |
|---|---|---|
| 1. | சென்னை நகரம் நீங்கலாக | ரூ. 25·50 கோடி |
| 2. | சென்னை நகருக்கு | ரூ. 27·40 கோடி |
| 3. | கிராமப்புறங்களுக்கு | ரூ. 25·00 கோடி |

1974-75-ஆம் ஆண்டு திட்டச் செலவு மதிப்பீடு :

| | | |
|---|---|---|
| 1. | சென்னை நகரம் நீங்கலாக நகர்ப்புறங்களுக்கு | ரூ. 5·62 கோடி |
| 2. | சென்னை நகருக்கு | ரூ. 5·50 கோடி |
| 3 | கிராமப்புறங்களுக்கு | ரூ. 2·50 கோடி |

கூடுதலாக முதலமைச்சர் ஒதுக்கியுள்ள தொகை :

| | | |
|---|---|---|
| 1. | சென்னை நகரம் நீங்கலாக நகர்ப் புறங்களுக்கு | ரூ. 1 கோடி |
| 2. | சென்னை நகருக்கு | ரூ. 2 கோடி |
| 3. | கிராமப்புறங்களுக்கு | ரூ. 3 கோடி |

மெ`க்கும் கட்டத்தில் உள்ளது.

**கிராமப்புறங்களுக்கு நீர் வசதி:**

தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 2.56 கோடி மக்கள் 58,595 கிராமங்களிலும் குக்கிராமங்களிலும் வாழ்கின்றனர்.

இவர்களுக்கான குடிநீர் திட்டங்களைப் பல்வேறு முறைகளில் நமது அரசு நிறைவேற்றி வருகிறது.

ரூபாய் 29.35 கோடி செலவில் 5,754 விரைவுபடுத்தும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 455 திட்டங்கள், 1972—73-ஆம் ஆண்டில் ரூ. 136.42 இலட்சம் செலவிலும் 1973—74-ஆம் ஆண்டில் 118.44 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களால் 237 கிராமங்கள் பயனடைந்து உள்ளன.

தமிழ் நாட்டில் தண்ணீர் பற்றுக்குறையுடைய ஊர்களிலும் காலரா பரவக்கூடிய சூழல் உள்ள ஊர்களிலும் ரூபாய் 2.71 கோடி செலவில் 8,850 குழாய்க் கிணறுகளை ஐந்தாண்டில் அமைத்திட ஐக்கிய நாடுகளமைப்பின் உலக நாடுகள் குழந்தை நல அவசர ஏற்பாட்டு நிதி (UNICEF) உதவியுடன் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஐக்கிய நாடுகமைப்பின் உலக நாடுகள் குழந்தை நல அவசர நல ஏற்பாட்டு நிதி உதவியால் தேவையான தளவாடங்களும் வாகனங்களும் மற்ற கருவிகளும் கிடைத்தன.

தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தின் முதல் கட்டப்பணியாக 1971—72-ஆம் ஆண்டில் 2,000 துளைக் கிணறுகள் வெட்ட திட்டமிட்டது. இது வரை 1,575 குழாய்க் கிணறுகள் அமைத்ததில் 1,367 குழாய்க் கிணறுகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன. ரூ. 70.6 இலட்சம் செலவில் அமைந்த இத் திட்டங்களில் 706 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

1974—75-ஆம் ஆண்டில் நோய்கள் பரவக்கூடிய சூழல் உள்ள கிராமங்களுக்கு ரூ. 200 இலட்சம் செலவில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பற்றுக் குறை கிராமங்களுக்கும் 200 கோடி செலவில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இப்படி ஒவ்வொரு துறையிலும் பணிகளை விரைவாகவும் செம்மையாகவும் செய்துவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1972—73-ஆம் ஆண்டில் 11 கோடி ரூபாயும், 1973-74-ஆம் ஆண்டில் 14 கோடியே 37 இலட்சம் ரூபாயும் செலவிட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டான (1974—75) இந்த ஆண்டில் வீராணம் திட்டம், கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டம் சென்னை மாநகராட்சி புதைவடிகால் திட்டத்துக்காகவும் ரூ. 14 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது.

—மாமூலன்



## கிராம குடிநீர்த் திட்டங்கள்

இதுவரை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும், குடிநீர்த் திட்டங்களுக்கென, ஒரே அளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒரே அளவான நிதி ஒதுக்கீடு, அதிக அளவில் நிதி தேவைப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவேற்ற இயலவில்லை. எனவே, குடிநீர்த் திட்டங்கள் தொடர்பாக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கிராம வேலைத் திட்டங்களின் கீழ், கிராம குடிநீர்த் திட்ட வேலைகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

எந்தெந்தப் பகுதிகளில் குடிநீர் பற்றுக்குறையாகக் காணப்பட்டு, பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதோ, அங்கெல்லாம் கிராம குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.

கிராம மக்கள் முடிந்த அளவு பயன்பெற வேண்டும் என்பதே கிராம குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசின் நோக்கமாகும். இயன்ற இடங்களில், குழாய் மூலம் வழங்கும் முறை இல்லாமல், தரை மட்ட குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்படும். கிராமத்தின் தொலைவிலிருந்து, மின் ஏற்றத்தின் வாயிலாகத்தான் கிராமத்திற்கு நீர் கொண்டுவரமுடியும் என்ற நிலையிலிருக்கும் கிராமங்களுக்கு, தொழில் நுட்ப வல்லுநரின் சான்றின் பேரில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க ஒப்புதல் வழங்கப்படும்.

இந்தத் தற்போதைய-மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ், கிணறுகள் வெட்டிக் கட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்த துளையிடுதல், தரைமட்டத்தில் நீர்த் தேக்க நிலைகளுக்காகக் குழாய்க் கிணறுகள் அமைப்பது போன்ற வேலைகளை எடுத்துக் கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில், ஒவ்வொரு புதிய குடிநீர் வழங்கும் திட்டத்தையும் செய்து முடிக்க ரூ. 15,000 அரசு மானியமாக அளிக்கப்படும். மொத்த நிதி ஒதுக்கீட்டில் 20 சத விகிதம் அரிசனங்களின் நலனுக்கென்று மட்டுமே செலவிடப்படும்.

தற்போது, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் இல்லாத அரிசனக் குடியிருப்புக்களில் குடிநீர் வசதி செய்வதில் தனிக் கவனம் செலுத்தப்படலாம்.



# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் திருப்பணி

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகளில் திருவல்லிக்கேணிக்குத் தனிச் சிறப்பும் பெருமையும் உண்டு. தொண்டமான் என்னும் பழந்தமிழ் மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி, திருவேங்கடமுடையான் கண்ணபிரானாக உருக்குமினிப் பிராட்டியாருடன், அநிருத்தன் பிரத்தியும்னன், பலராமன், சாத்யகி ஆகிய தன் குடும்பத்தாருடன் சேவை சாதித்து அருள்புரிந்த தலம்.

இவ்வளவு சிறப்புமிக்க இத்திருக்கோயிலுள்ள இராச கோபுரம், ஆனந்த விமானம், கஜேந்திர வரதர், ஆண்டாள், திருமழிசை ஆழ்வார், ஆளவந்தார், உடையவர், மணவாள மாமுனிகள் விமானங்கள், நரசிம்மசுவாமி ராஜகோபுரம் முதலியவற்றிற்குத் திருப்பணிகள் வேலை செய்ய சுமார் 2 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. இதற்கு முன் இத்திருக்கோயிலில் 1936-ல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு மகாசம்ரோட்சணம் நடைபெற்றுள்ளது. திருப்பணி நன்கொடைக்கு வருமானவரி விலக்கு உண்டு. மேலும் ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிக்கும் அன்பர்கள் பெயரை சலவைக் கல்லில் பொறிக்கப்படும்.

ஆகவே இதைக் காணும் அன்பர்கள் அருள்மிகு பார்த்தசாரதியின் திருவருளுக்குப் பாத்திரமாகித் தங்கள் வாழ்க்கை ரதத்தை செவ்வனே ஓட்டி இன்புற்றிருக்க கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடை அனுப்பி மகிழலாம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

நிருவாக அதிகாரி,
அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.

P. G. செங்கல்வராய செட்டி,
தலைவர், அறங்காவலர் குழு,

K. R. சீனிவாசாசாரி, M.A.,
நாதெள்ள ஆதிகேசவலு குப்தா,
அறங்காவலர்கள்

S. சோமசுந்தரம், B.A., B.L.,
திருவாக அதிகாரி.

447

# நிலக்கடலை மற்றும் உருளைக் கிழங்கு அறுவடை செய்ய ஒரு கருவி!



குமார்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சிப் பொறியாளர் பணிமனையில், நிலக்கடலை மற்றும் உருளைக் கிழங்கு அறுவடை செய்வதற்குரிய ஒரு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. நிலக்கடலை, உருளைக் கிழங்கு ஆகியவைகளை அறுவடை செய்வதற்கு ஏற்றாற்போல் தனித் தனி இணைப்புகளைப் பொருத்திக்கொள்ளக் கூடிய வகையில் இக் கருவி அமைந்துள்ளது. நிலக்கடலை அறுவடை செய்ய பிறை போன்ற வடிவம் உடைய கத்தியையும் (Blade), உருளைக் கிழங்கு அறுவடை செய்ய பார் பிடிக்க உதவும் பகுதி போன்ற அமைப்பையும் (Ridger) இக் கருவியில் பொருத்திக் கொள்ள வேண்டும். இவ்விரு இணைப்புகளும் வளைவான ஒரு அச்சில் இணைக்கப்படுகின்றன. இவ்வச்சு, இரு எஃகுச் சக்கரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாடுகளைப் பிணைத்து இயக்கக்கூடிய இக் கருவியில், ஓட்டிச் செல்பவர் வசதியாக அமர்ந்து கொள்ள இருக்கையும், ஆழத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யக்கூடிய அமைப்பும் உள்ளன. இக் கருவியினால், அறுவடை செய்யும் பொழுது உருளைக் கிழங்குகளுக்கும், நிலக்கடலைகளுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுவதில்லை.

இக் கருவியைக் கொண்டு 8 மணி நேரத்தில் 1.15 எக்டேர் பரப்பு நிலக்கடலை அல்லது 0.88 எக்டேர் பரப்பு உருளைக் கிழங்கை அறுவடை செய்யலாம்.

இக் கருவியின் நீளம், அகலம், உயரம், அறுவடைச் சக்தி, விலை இயக்கச் செலவு ஆகியவை பின்கண்டவாறு உள்ளன:

மொத்த நீளம்: 172செ.மீ.

மொத்த அகலம்—75செ.மீ.

மொத்தஉயரம்—109செ.மீ.

எடை—120 கிலோ.

இயக்கத் தேவைப்படும் சக்தி—ஒரு இணை எருதுகள்.

விலை—ரூபாய் 575 (இரு வகை இணைப்புடனும்).

இக் கருவியைக் கொண்டு அறுவடை செய்யத் தேவைப்படும் ஆட்கள்—(1) நிலக்கடலைக்கு 2 ஆண்கள், 4 பெண்கள், (2) உருளைக் கிழங்குக்கு 2 ஆண்கள், 6 பெண்கள்.

அறுவடைச் செலவு—(1) நிலக்கடலைக்கு எக்டேருக்கு 45 ரூபாய்.
(2) உருளைக் கிழங்கிற்கு எக்டேருக்கு 100 ரூபாய்.

இக் கருவியால் 8 மணி நேரத்தில் அறுவடை செய்யக் கூடிய பரப்பு—1.15 எக்டேர் நிலக்கடலை அல்லது 0.88 எக்டேர் உருளைக்கிழங்கு.

இக் கருவி பற்றி மேலும் விவரம் வேண்டின் பின்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்கலாம்:

முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர்,
மண்டல ஆராய்ச்சி நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

தகவல் :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.




451



# மானாவாரி எள் மகசூல் பெருக்கிடும் முறைகள்

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறக்குறைய 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஏறத்தாழ 37,000 ஏக்கரில் மட்டுமே இறைவையாக எள் பயிரிடப்படுகிறது. மீதமுள்ள 2.63 இலட்சம் ஏக்கரிலும் மானாவாரியாகவே எள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆயினும்-எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய் ஒரு சிறந்த உணவு எண்ணெய்யாகவும், மருந்துப் பொருளாகவும் பயன்படுவதால்-தமிழ்நாட்டில் நல்லெண்ணெய் விலை ஏறுமுகமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம், தமிழ் நாட்டில் ஏக்கருக்குச் சராசரியாக 128 கிலோகிராம் மகசூலே கிடைக்கிறது. ஆகவே, எள் மகசூலைப் பெருக்கி வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மை செய்ய வேண்டியது உழவர் பெருமக்களின் கடமையாகும்.

மானாவாரியாகத் தனி எள் பயிரிடும் உழவர்கள் இரசாயன உரமிட்டு, திருந்திய இரகங்களைப் பயிரிட்டு, பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டால் ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டை வரை (225 கிலோ முதல் 300 கிலோ வரை) எள் மகசூல் பெற வாய்ப்பு உள்ளது! எனவே, எள் உற்பத்தியைப் பெருக்கிட, கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

## எள் சாகுபடி முறைகள்

ஏற்ற மண்: நல்ல வடிகால் வசதியுடைய வண்டல் கலந்த மணற்பாங்கான நிலம், எள் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. தண்ணீர்த் தேங்கக்கூடிய இடங்களிலும், களர் நிலத்திலும் எள் பயிர் நல்ல மகசூல் தராது.

பட்டம்: ஆடி, ஆவணி மாதங்கள், மானாவாரி எள் விதைக்க ஏற்ற பட்டமாகும். குளிர் பருவத்தில் எள் விதைக்க கார்த்திகை, மார்கழி மாதங்கள் ஏற்றவையாகும்.

இரகங்கள்: ஆடி, ஆவணி மாதங்களில் டி.எம்.வி. 1 (85 நாட்கள்), கே.ஆர்.ஆர். 1 (125 நாட்கள்), கே.ஆர்.ஆர். 2 (110 நாட்கள்) வயதுயுடைய எள் இரகங்களையும், கார்த்திகை - மாதங்களில் டி.எம்.வி. 2 (80 நாட்கள்) வயதுடைய எள் இரகத்தையும் விதைப்பது சிறந்தது.

நிலம் தயாரித்தல்: நிலத்தை நாட்டுக் கலப்பையால் 6 முதல் 8 தடவை அல்லது இரும்புக் கலப்பையால் 4 முறை உழுது நன்கு புழுதியாக்க வேண்டும்.

அடியுரம்: கடைசி உழவிற்கு முன்பு ஏக்கருக்கு 5 வண்டி (2.5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்), 8 கிலோ மணிச் தழைச்சத்து, 4 கிலோ சாம்பல் சத்து; சத்து, 4 கிலோ 'மாங்கனிஸ் சல்பேட்' 2 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

மேற்கூறிய அளவுச் சத்துக்களை அளிக்க 18 கிலோ யூரியா, 25 கிலோ சூப்பர்பாஸ்பேட், 7 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களையோ

அல்லது

24 கிலோ 17:17:17 'காம்ப்ளெக்ஸ்', 9 கிலோ யூரியா உரங்களையோ

அல்லது

9 கிலோ டை-அமொனியம் பாஸ்பேட், 14 கிலோ யூரியா, 7 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களையோ அடியுரமாக கடைசி உழவிற்கு முன்பு இட வேண்டும்.

அடியுரமாக இரசாயன உரம் இடும் பொழுதே, ஏக்கருக்கு 2 கிலோ 'மாங்கனீஸ் சல்பேட்' இடுவதால் எள் மகசூலைக் கணிசமாகப் பெருக்கிடலாம்.

விதைப்பு: ஏக்கருக்கு 2.5 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், வரிசையில் செடிக்குச் செடி 9 அங்குலமும் இடைவெளி விட்டு விதைக்க வேண்டும். விதைகளைக் கையால் தூவி, பரவலாக விதைத்தால், விதைத்த 15-ஆம் நாளில் செடிக்குச் செடி 9 அங்குலம் × 9 அங்குலம் இடைவெளி விட்டு, அதிகமாக உள்ள செடிகளை அகற்றிட வேண்டும்.

களை எடுத்தல்: விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் தடவையும், 35-வது நாளில் 2-வது தடவையும் கொத்தி விட்டுக் களையெடுக்க வேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு: எள் செடிகளில் பெருஞ்சேதம் விளைவிக்கும் கொண்டைப் புழுவைத் தடுக்க விதைத்த 15-வது நாளிலும், பூ பூக்கும் சமயத்திலும் ஆக 2 முறை ஏக்கருக்கு 10 கிலோ

# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறுசேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


# படிக்கும் பொழுதே பணம் சம்பாதிக்கலாம்



படிக்கும் பொழுதே மாணவர்கள் கடின உழைப்பின் புனிதத் தன்மை, உழைப்பின் மதிப்பு ஆகியவைகளை உணர்ந்து கொள்ளவும், வேளாண்மையில் சிறந்த பயிற்சி பெறவும், ஓரளவிற்குப் பணம் சம்பாதித்துத் தங்கள் படிப்பிற்குத் தேவையானப் பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு உதவி செய்யும் வகையிலும், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''படிக்கும் பொழுதே சம்பாதிக்கும் திட்டம்'' (Earn while you learn programme) என்ற ஒரு புதிய திட்டத்தைத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தினால் வேளாண்மைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள், படித்துக் கொண்டிருக்கும் பொழுதே கணிசமான தொகையைச் சம்பாதிக்க வழி பிறந்துள்ளதுடன், கடின உழைப்புக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும், உழைப்பின் மதிப்பினை நன்கு உணர்ந்து கொண்டு செயல்படவும், நவீன சாகுபடி முறைகளை நன்கு புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது!

இப்பயனுள்ள திட்டம் 1973 ஆண்டு துவக்கப்பட்டது. பி.எஸ்சி. (வேளாண்மை) இறுதி வகுப்பில் படிக்கும் 20 மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, சென்ற செப்டம்பர் திங்களில் துவக்கப்பட்ட காய்கறி உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். காய்கறி உற்பத்திக்கு என ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் 5 சென்ட் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இரசாயன உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் முதலிய தேவைப் பொருள்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், தெளிப்பான் போன்ற கருவிகள், டிராக்டர்கள் முதலியன வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. முள்ளங்கி, வெண்டை, அவரை, ஆகியவைப் பயிரிடப்பட்டன. தேவைப் பொருள்களுக்கான செலவுத் தொகை, பயிர்ப் பருவ முடிவில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

1974-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் வாரத்துடன் முடிந்த முதல் பருவச் சாகுபடியில் 20 மாணவர்களும், தேவைப் பொருள்களின் விலை ரூபாய் 451-55-ஐக் கொடுத்துவிட்டு, 3 திங்கள் 15 நாட்களில் நிகர இலபமாக ரூபாய் 843-70 சம்பாதித்துள்ளனர்!

பயிரிட்ட காய்கறிகளுக்கும், காய்கறிச் சாகுபடியில் காட்டிய ஈடுபாட்டிற்கும் ஏற்ப ஒவ்வொரு மாணவருக்கும் 5 சென்ட் நிலத்திலிருந்து ரூபாய் 15.36 முதல் ரூபாய் 81.50 வரை இலாபம் கிடைத்துள்ளது! இந்த இலாபத் தொகை, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்களால் 31—5—1974 அன்று 20 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இதுபோன்ற மற்றொரு திட்டம் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ஆம் நாள் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பி.எஸ்சி. (வேளாண்மை) இறுதி வகுப்பு மாணவர்களில் 2 தொகுதியினருக்கு 200 இறைச்சிக்கான கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதியிலும் 5 மாணவர்கள் இருந்தனர். அம்மாணவர்களுக்கு, கோழிக் குஞ்சுகளுக்கான தீனியை நிர்ணயித்தல், அறைத்தல், கலத்தல், கோழிக் குஞ்சுகளைப் பராமரித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டன. கோழிக் குஞ்சுகளுக்கான கோழி வீட்டை கட்டியதுடன், கோழி வழங்கப்பட்ட நாள் முதல் அவை 10 வார வயது அடையும் வரையான காலத்தில் கோழி வளர்ப்புத் தொடர்புடைய அன்றாடப் பணிகளையும் அந்த மாணவர்களே செய்துள்ளனர். தீனிச் செலவு அதிகமாக இருந்ததால், கோழி வீட்டிற்கான இடமும், பொருள்களும், மற்றும் இதர சாதனங்களும் இலவசமாக அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு மாணவர்களால் வளர்க்கப்பட்ட கோழிக் குஞ்சுகள், உரோமம் அகற்றப்பட்டு நவீன முறையில் பக்குவப்படுத்தப்பட்டு இறைச்சியாக எடைபோட்டு விற்கப்பட்டன. இத்திட்டத்தினால் முதல் தொகுதியில் அடங்கிய ஒவ்வொரு மாணவரும் ரூபாய் 26.80-யும், இரண்டாம் தொகுதியில் அடங்கிய ஒவ்வொரு மாணவரும் ரூபாய் 133.56-யும் வருவாயாக ஈட்டியுள்ளனர். முதல் தொகுதியினர் வளர்த்த கோழிக் குஞ்சுகள் விரைவில் வளர்ச்சி யடையாததாலும், அக் கோழிக் குஞ்சுகளின் இறைச்சி குறைந்த விலையில் விற்கப்பட்டதாலும் முதல் தொகுதி மாணவர்கள், இரண்டாம் தொகுதி மாணவர்களைப் போல் அதிக இலாபம் பெற முடியவில்லை.

படிக்கும் பொழுது பணம் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படுத்தும் திட்டங்களின் பயனாய் ஓரளவு வருவாய் ஈட்ட முடிவதுடன், தீவிர செயல் முறைப் பயிற்சி பெற முடிவதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்கள் இத் திட்டங்களில் பேரார்வம் காட்டுகின்றனர். படிப்பதுடன், நல்ல பயிற்சியும் பெற உதவும் இத் திட்டங்களைத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுத்தி வருவது, மற்ற பல்கலைக் கழகங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது!

—ஆர். எம்



டீ.எம்.வி. 1



டீ.எம்.வி. 2

வீதம் 'டி.டி.டீ. 5 சதம்' தூளைத் தூவிட வேண்டும்.

இலைப்புள்ளி நோய் தோன்றுவதைத் தடுக்க விதைத்த 5, 7, 9-வது வாரங்களில் 'டைத்தேன் எம். 45' மருந்தை 0.2 சத நீர்க்கலவையாகத் (ஏக்கருக்கு 300 கிராம்) தெளிக்கவும்.

அறுவடை: இலைகள், தண்டுப் பாகம் ஆகியவை மஞ்சள் நிறம் அடைவதும், இலைகள் உதிர ஆரம்பிப்பதும், பயிர் போதிய முதிர்ச்சி அடைந்து, அறுவடைக்குத் தயார் நிலையை அடைந்து விட்டதற்கான அறிகுறிகளாகும். அந்த நிலையில் அறுவடை செய்துவிட வேண்டும். அந்த நிலைக்குப் பின்னர் அறுவடை செய்யத் தாமதமானால், முற்றிய காய்கள் வெடித்து விதைகள் சிதறி மகசூல் குறையக்கூடும்.

அறுவடை செய்த எள் செடிகளின் அடிப்பாகத்தை வெளிப்புறமாக வைத்து, வட்ட வடிவ குவியலாக்கிச் சில நாட்கள் அப்படியே விட்டு வைத்திருக்கவேண்டும். அவ்வாறு செய்வதால், சரிவர முதிர்ச்சியடையாதிருக்கும் காய்களும், குவியலின் உட்பகுதியில் ஏற்படும் வெப்பம், புழுக்கம், ஆகியவற்றின் காரணமாக போதிய முதிர்ச்சி அடையும். இவ்வாறு சில நாட்கள் வைத்திருந்த பின்னர் குவியலைப் பிரித்து எள் செடிகளை 2 அல்லது 3 நாட்கள் வெய்யிலில் உலர வைக்க வேண்டும். உலர வைக்கும்போது காய்கள் வெடித்து, விதைகள் சிதறி கீழே விழும். மேலும், காய்ந்த செடிகளைக் கையினால் அலசிவிட்டால் விதைகள் முழு அளவில் உதிர்ந்து விடும். பிறகு விதைகளைச் சேகரித்து, தூய்மைபடுத்தி, மீண்டும் காய வைத்து சேமித்து வைக்க வேண்டும்.

மகசூல்: மேற்கூறிய முறையில் மானாவாரி எள் பயிரிட்டால் ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டை அதாவது 225 கிலோ முதல் 300 கிலோ வரை மகசூல் பெறலாம்.

—ஆர். எம்.




உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு 'ப்ளேனோஃபிக்ஸ்? தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோஃபிக்ஸ் மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

M&B May & Baker

மே & பேக்கா (இந்தியா) பிரைவேட் லிட

"ப்ளேனோஃபிக்ஸ்" என்பது ஒரு எம & பி. ரகத் தயாரிப்பு

டிரேடு மார்க்


# நிலக்கடலையில் ஒரு புதிய நோய்.



தமிழ்நாட்டில் 'ஆண்டுதோறும் 9,40,000 எக்டேரில் நிலக்கடலை பயிரிடப்பட்டு, அதிலிருந்து 9,54,000 டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது.' தமிழ்நாடு, இந்தியாவிலுள்ள மாநிலங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் பரப்பில் நான்காவது இடத்தையும், உற்பத்தியில் மூன்றுவது இடத்தையும் வகிக்கின்றது. நிலக்கடலையில் தோன்றும் முக்கிய நோயான "டிக்கா" இலைப்புள்ளி நோயை 0.75 சதவிகித 'போர்டோக்கலவை' தெளித்தல் அல்லது கந்தகத்தூள் தூவுதல் அல்லது 0.1 சதம் 'பிரஸ்டான்' மருந்து தெளித்தல் ஆகிய ஏதாவதொரு முறையினால் எளிதில் கட்டுப்படுத்தி விடலாம். இந்த 'டிக்கா' புள்ளியைத் தவிர, "துரு" எனப்படும் ஒரு புதிய நோய், 1969-ஆம் ஆண்டில் இந்தியாவில் முதன் முதலாக பஞ்சாப் மாநிலத்தில் தோன்றியுள்ளது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த நோய் கோவையில் மிகச் சிறிய அளவில் காணப்பட்டது. கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குள் தமிழ்நாட்டில் மேலும் வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றது. சென்ற ஆண்டு பழனி, திண்டுக்கல், ஒட்டன் சத்திரம் ஆகிய பகுதிகளில் கோடை கால இறைவை நிலக்கடலைப் பயிரில் "துரு" அதிகமாகத் தோன்றியது.

இந்த "துரு" வெ வேகமாகப் பரவக்கூடியதும், பெருத்த இழப்பு ஏற்படுத்தக் கூடியதுமாகையால், இந்த நோயைப் பரவ விடாமல் தடுக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந்த நோய் தோன்றிய காரணத்தால் மேற்கு இந்தியத் தீவுகளில் நிலக்கடலைச் சாகுபடியே சில ஆண்டுகளில் நிலை குலைந்து விட்டது என்று அறியப்படுகிறது. எனவே, இந்த நோயைக் குறித்தும், அதன் தடுப்பு முறைகளைக் குறித்தும் தமிழக உழவர் பெருமக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆடி, ஆவணி மாதங்களில், செங்கல்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ஆகிய பகுதிகளிலும், வடஆற்காடு மாவட்டத்தில் வேலூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதிகளிலும், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், ஆகிய பகுதிகளிலும் மானாவாரி நிலக்கடலை விதைப்பு நடக்கும் காலமாகும். இந்த பருவத்தில் உழவர்கள் பெருமக்கள் இந்த நோயைக் குறித்து அறிந்து கொள்வது மிக அவசியம்.

துருநோயை ஆங்கிலத்தில் "ரஸ்ட்" (Rust) என்று கூறுவார்கள். இந்த நோய் "பக்சீனியா அராக்கிடீஸ்" (Puccinia arachidis) என்னும் பூசணத்தால் உண்டாகிறது. சாதாரணமாக இந்த நோய், நிலக்கடலை விதைத்து ஒரு மாதத்திற்குப் பின்போ அல்லது முன்போ தோன்றலாம். பெரும்பாலும் இலைகளின் அடியில் பழுப்பு நிறப்புள்ளிகள் போல் சின்னஞ்சிறு கருஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறக் கொப்புளங்கள் தோன்றும். இவை இலைத் தோலிலிருந்து சொர உயர்ந்திருப்பதால், சொரசொரப்பாக இருக்கும். இந்தச் சின்னஞ்சிறு கொப்புளங்களிலிருந்து பூசண வித்துக்கள், சிவப்புநிறத் துகள்களாக வெளிப்படும். இவை காற்றின் மூலமாகப் பல கிலோ மீட்டர்கள் தூரம் பரவி, இலைகளின் மீது பட்டு, "துரு" நோய் உண்டாகிறது. "துரு" அதிகம் தோன்றின இலைகள் கருகிவிடும்! அதன்பின் இலைகள் உதிர்ந்து நிலக்கடலைச் செடி செடியே வாடிப் போகும்! ஒரே, இலையில் 'டிக்கா' இலைப்புள்ளி நோயின் கருவட்ட புள்ளிகளினிடையே, "துரு" நோய் காணப்படலாம்.

இந்த நோய் அண்மையில் தோன்றியதால் தகுந்த ஆய்வு மேற்கொள்ளப் படவில்லை. அதுவரை உழவர்கள் கீழ்க்கண்ட தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம்.

(1) நிலக்கடலைத் "துரு" விதைகளின் மூலமாகப் பரவலாம் என்று எண்ணப்படுவதால் நோய்த்தோன்றிய வயல்களிலிருந்து விதைக்கடலைகளைத் தேர்ந்தெடுக்கக்கூடாது.

(2) நிலக்கடலை விதைக்கும் முன்பு விதைகளை ஒரு கிலோ விதைக்கு மூன்று கிராம் வீதம் 'காப்டான்' அல்லது 'திராம்' (T. M. T. D. or 'Thiram') போன்ற மருந்துகளுடன் கலந்து விதைத்தொற்று நீக்கிய பிறகே விதைக்க வேண்டும். விதைத் தொற்று நீக்குவதால், விதைகளின் மூலம் பரவும் வேரழுகல் போன்ற நோயையும் ஓரளவுத் தடுக்கலாம்.

(3) நோய்த் தாக்கிய உடனே 'ஜினெப்' போன்ற 'டைதையோ கார்பமேட்' மருந்துகளை 15 நாட்கள் இடைவெளிக்கு ஒருமுறை 0.2 சதவிகித அளவில் (ஏக்கருக்கு 300-400 கிராம்) இரண்டுமுறை தெளித்தால் இந்தத் "துரு" நோயைப் பெருமளவில் கட்டுப்படுத்தலாம்.

(4) பெரும்பாலான பரப்பளவில் "துரு" நோய் தோன்றினால், தலைவர், தாவர நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3 என்ற முகவரிக்குத் தொடர்புக் கொள்ளவும்.

இப்புதிய "துரு" நோய் மேலும் பரவாமல் தடுக்க உதவும்படி உழவர் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


தகவல் :—
டாக்டர் என். சண்முகம்,
இணைப்பேராசிரியர்,
தாவரநோய் இயல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

விலைவாசியைக்
கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை
கோடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR I C CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ்
லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன்
உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA

இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர்
அண்ட்
போர்ட்ஸ்
லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark
of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்




பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைந்திடத் திட்டங்கள்! பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
—குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு

பதை நான் சொல்லாவிட்டால் என்னுடைய கடமையிலிருந்து தவறியவன் ஆவேன்.

காந்தியடிகளுடைய விழாவை இங்கே நடத்துகின்ற நேரத்தில் தீட்சித் அவர்களின் ஆங்கில உரையை இங்கேயிருக்கிற அனைவரும் புரிந்து கொள்கிற அளவிற்குத்தமிழிலேயாராவது மொழி பெயர்த்தால் நலமாக இருக்கும் என்று அவர் என்னிடம் வினவியபோது, நான் அதற்குத் தகுதியானவர் திருமதி அனந்தநாயகி என்று குறிப்பிட்டுச் சொல்லி, அவர்கள் அந்த மொழி பெயர்க்கும் பணியை நிறைவேற்றினார். அதிலே எனக்கு இரண்டு வகையான இலாபம் என்பதை நீங்கள் எல்லாம் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இன்றைக்கு இந்தியாவின் நிலைமையை - தமிழகத்தின் நிலைமையை ஏன் உலகப் பொருளாதார நிலைமையை நம்முடைய மத்திய உள்துறை அமைச்சர் தீட்சித் அவர்கள் வெகு விளக்கமாக இங்கே படம் பிடித்துக் காட்டினார்கள். நான் நூறு கூட்டங்களுக்குச் சென்று இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து அங்கே எடுத்துச் சொல்லி மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு, படவேண்டிய கஷ்டத்தை இங்கே ஒரு 20 நிமிடப் பேச்சில் தீட்சித் அவர்கள் தீர்த்து வைத்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எதற்கும் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்கிற, அந்தத் தியாக உருவங்களாக மனிதர்கள் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் காந்தியடிகளுடைய மணிவாக்காகும். அந்த மணிவாக்கின் அடிப்படையில், இயன்றவரையில், சக்திக்கேற்ற வரையில் தமிழக அரசின் சார்பில் நாம் சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் நம்முடைய தீட்சித் அவர்களுடைய கரங்களாலேயே இங்கே அடையாளப் பூர்வமாகப் பல அங்கஹீனர்களுக்குச் சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதை நீங்கள் கண்டீர்கள். தமிழ்நாட்டில் 2 இலட்சம் பேர் உடல் ஊனமுற்றவர்கள், கைகாலற்றோர், காது கேளாதோர், ஊமையர், முடமானோர் என்கிற இந்த வகையில் இருக்கிறார்கள்.

அந்த இரண்டு இலட்சம் பேருக்கும் ஒரேயடியாக இந்த மறுமலர்ச்சித் திட்டத்தின் பயனை அடையச் செய்கிற மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வழிவகை இல்லாவிட்டாலும், இந்த ஆண்டு முதற்கட்டமாக 22 ஆயிரம் பேருக்கு நல்வாழ்வை அளிப்பது என்று தமிழ்நாடு அரசு திட்டமிட்டு, அதை ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைக்குப் பரவலாக செய்து வருகிறோம். காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவில் அந்தக் காரியத்தை அடையாளப் பூர்வமாகச் செய்ய வேண்டும். என்பதற்காகத்தான் தீட்சித் அவர்களின் கையால் அந்த நல்ல பணி இங்கே நடைபெறுகிறது.

இதைப்போலக் காந்தியடிகளின் மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்றான மனிதனை மனிதன் இழுக்கிற கைரிக்ஷாக்களை அகற்றி, அந்தக் கை ரிக்ஷாக்களை இழுத்த தொழிலாளர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை இந்த அரசின் சார்பில் நாம் வழங்கியிருக்கிறோம். அதைப் போலவே தொழுநோய்ப் பிச்சைக்காரர்களிடம் காந்தியடிகள் எவ்வளவு அன்பு கொண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்டவர்களை, அவரே கையால் தொட்டுச் சிகிச்சை அளிக்கும் உத்தமர் அவர். அப்படிப்பட்ட தொழு நோய்ப் பிச்சைக்கார்களும் இந்தச் சமுதாயத்தில் ஓர் அங்கம், அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்களல்லர்; ஒதுக்கப்பட வேண்டியவர்களல்லர்; அவர்களும் வாழ வேண்டியவர்கள். அவர்களும் மனிதர்கள்; மண் அன்று! அவர்கள் பொட்டுப் பூச்சிகள் அல்லர். புண்மைத் தேரைகளல்லர்; அவர்களும் வாழ வேண்டும்; அவர்களுக்கு வாழ்க்கை அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழகத்தில் பத்து இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அருமையான இல்லங்கள் அமைத்துள்ளோம். அப்படிப்பட்ட மாளிகையில் ஒன்றைத்தான் செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூரில் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் பார்வையிட்டார்கள். இப்படிச் செய்யப்படுகிற சமுதாய நலக் காரியங்களில் அரசியல் குறுக்கிடக்கூடாது என்று தீட்சித் அவர்கள் சொன்னதை நான் வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து அப்படியே வழிமொழிகிறேன்.


காந்தி ஜோதியை முதல்வர் கலைஞர் பெற்றுக் கொள்ளுதல்.

இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகிற நேரத்தில் அவைகளைப் பாராட்டுவதற்குப் பதிலாக எப்படி நடைபெறுகிறது; என்னென்ன வழிகளில் நடைபெறுகிறது என்றெல்லாம் கேட்பதில்தான் அரசியல் நோக்கம் வந்து குறுக்கிட்டு விடுகிறது. சமுதாய நலனுக்காக நடைபெறுகிற காரியங்களை எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொண்டு செய்ய வேண்டும். காந்தியடிகள் விழாவில் எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொள்கிறோம். கவர்னர் அவர்கள் நான்கைந்து நாட்களுக்கு நடத்துகின்ற இந்த விழாவில் எல்லாக் கட்சியின் தலைவர்களையும் கலந்து கொள்ளச் சொல்கிறாரே, அதைப்போல சமுதாய நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில், கட்சிச் சார்பற்ற முறையில் இன்னும் பரந்த மனப்பான்மையோடு சிந்திக்க வேண்டுமானால் நாமெல்லாம் மனித சாதியைச் சேர்ந்தவர்கள், தனித் தனி சாதிகள் அல்லர் என்கின்ற அந்த உணர்வோடு பாடுபட்டாக வேண்டும்.

காந்தியடிகளின் மற்றொரு பொன் மொழியையும் தீட்சித் அவர்கள் சொன்னார்கள். அதுதான் குடும்ப நலத் திட்டம். அரசாங்கத்தின் மூலம் திணிக்கக்கூடாதென்பது காந்தியடிகளின் கொள்கை. கருத்தடை செய்தல் கூடாது என்பது அவருடைய கொள்கை. ஆனாலும் இன்றைக்குக் காந்தியடிகள் சொன்ன மனஅடக்கம், கட்டுப்பாடு, பிரம்மச்சரியம் ஆகியவைகளை எல்லா மனிதர்களும் கைக்கொள்ள முடியாத சூழ்நிலைக்கு ஆளாகின்ற காரணத்தால்தான் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளைச் சட்டத்தின் வாயிலாக அல்லது பிரச்சாரத்தின் விளைவாகச் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறது.

பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு தமிழகத்தின் முதலமைச்சரை இரண்டரைக்கோடி மக்களின் நாயகர் என்று அழைத்ததற்கு மாறாக இப்போது நாலரைக்கோடி மக்களின் நாயகர் என்று அழைக்கிறார்கள். என்றால் தமிழகத்தின் மக்கள் வளர்ச்சி எவ்வளவு வேகமாக நடைபெறுகிறது, என்பதை அறியலாம்.

குடும்பத்திலே பெருகவேண்டியது எது? நல்வாழ்வு, அறிவு, ஆற்றல் பெருக வேண்டும். மக்களிடம் காட்டுகின்ற அன்பு பெருக வேண்டும்; இரக்கம் பெருக வேண்டும். இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி, குழந்தை உற்பத்தி வேகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. மனோதிடத்தாலேயோ, குடும்பநலத் திட்டத்தாலேயோ குடும்பக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக ஆக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், அது பாவமாயிற்றே என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். கடவு






மலர்: 5 **தமிழரசு** இதழ்: 8

16-10-1974



# நாடு முழுதும் மது விலக்கு வேண்டும்

— முதல்வர் கலைஞர் —

இந்த ஆண்டு வழக்கம்போல நடைபெறுகின்ற காந்தியடிகளுடைய விழா இது என்றாலும், இந்த விழாவில் அன்புக்குரிய மத்திய அமைச்சர் திரு உமாசங்கர் தீட்சித் கலந்து கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. மத்திய அமைச்சரைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நம்முடைய ஆளுநரோடு இணைந்து வரவேற்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

காந்தியடிகளுடைய விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்த வேண்டும் என்கின்ற முனைப்போடு கடந்த நான்கு ஐந்து ஆண்டு காலமாக நடத்தி வருகிறோம். முதலில் காந்தியடிகள் விழாவைத் தமிழக அரசின் சார்பில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தான் இந்த விழாவை நாம் தொடங்கினோம். அதற்குப் பிறகு காந்தியடிகளுடைய நினைவாலயம் சென்னையில் ஒன்று இருக்கும்போது அந்தப் புனிதமான இடத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த விழாவை நடத்துவது என்ற முடிவை மேற்கொண்டோம். அந்த முடிவிற்கு எங்களையெல்லாம் உந்தித்தள்ளிய பெருமை தமிழக ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களையே சாரும் என்று நான் சொன்னால் அது மிகையாகாது.

தமிழகம் எத்தனையோ ஆளுநர்களைப் பெற்றிருந்திருக்கிறது. பலர் கவர்னர்களாக வந்து, போய் இருக்கிறார்கள். நான் மற்ற எந்தக் கவர்னர்களையும் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதக்கூடாது. ஆனால், இந்த கவர்னர் அளவிற்கு வேறு எந்தக் கவர்னரும் மக்களோடு இவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இல்லை என்



மத்திய உள்துறை அமைச்சர் திரு உமாசங்கர் தீட்சித், உடல் ஊனமுற்றோர்க்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல்.

குமார்

ளுக்கு அடுக்குமா, என்று கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். குடும்பங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லுவது குடும்பங்கள் வாழ வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்தியாவின் மக்கள்தொகை இன்னும் 20 ஆண்டுக் காலத்திற்குள் இரட்டிப்பு மடங்கு ஆகுமென்றால் இருக்கிற மலைகள் அப்படியேதான் இருக்கும். நாட்டில் ஆறுகள் அப்படியேதான் இருக்கும். நமக்கு என்று இருக்கிற இயற்கை வளங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு வரும்; கடல்வளங்கள் குறைந்து கொண்டு வரும்; அல்லது அப்படியே இருக்கும். இவைகளால் பயன்பெற வேண்டிய மக்கள் தொகை பெருகி, திட்டங்களின் பயனை அனுபவிக்க முடியாத சங்கடத்திற்கு ஆளாவார்கள்.

கடவுள் பெயரில் பாரத்தைப் போட்டு, பாவ புண்ணியம் என்று கூறிச் சமுதாயத்தை நாம் கெடுத்துவிடக்கூடாது. அண்ணா ஒருமுறை கூறியது போல ஆண்டவனேகூட குடும்பக் கட்டுப்பாட்டு விஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறார். பரமசிவனும் பார்வதியும்கூட இரண்டு பிள்ளைகளோடு முடித்துவிட்டார்கள். நாம் இன்றைக்குத்தான் 'நாமிருவர் நமக்கு இருவர்' என்று கூறுகிறோம். ஆனால் அவர்கள், அன்றே அந்த முடிவிற்கு வந்து முருகன், பிள்ளையார் என்ற இரண்டோடு முடித்துவிட்டார்கள். முருகன் இரண்டு பெண்களை மணந்தும், ஒரு பிள்ளைகூடப் பெறாமல் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகத் தீவிரமாக இருந்திருக்கிறார். ஆகவே கடவுள்களுக்கும் ஏற்புடைய கொள்கைதான் இது. இதை யாரும் தவறாகக் கருதத் தேவையில்லை.

உலகம் முழுவதும் பொருளாதாரத் துறையில் இன்றைக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நாம் வாங்க வேண்டிய பெட்ரோலானாலும், க்ருடாயிலானாலும், இந்திய நாட்டுக்குத் தேவையான அன்னிய நாட்டுப்பொருள்கள் எதுவானாலும் அவைகளின் விலைகள் எல்லாம் இன்று உயர்ந்திருக்கின்ற சூழ்நிலையை மத்திய அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அந்தச் சூழ்நிலைதான் இந்தியாவைப் பாதிக்கிறது. இந்தியாவைப் பாதிக்கிறதென்றால், இந்தியாவில் இருக்கிற எல்லா மக்களையும் பாதிக்கிறது என்றுதான் பொருள். அந்தப் பாதிப்பு தமிழ்நாட்டு மக்களுக்கும் உடன்பாடானதுதான். ஆகவே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதையும் காந்தியடிகளின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற அறிவுரையையும் மத்திய அமைச்சர் குறிப்பிட்டார்.

மிக அழகாக காந்தியடிகளின் பொன் மொழி ஒன்றை அவர் இங்கே குறிப்பிட்டார். இட்சியம் மிகச் சிறப்பானதாக இருக்கலாம். ஆனால், இந்த இலட்சியத்தையடைவதற்காக மேற்கொள்கிற வழி இருக்கிறதே, அந்த வழி நேர்மையானதாக இருக்க வேண்டும்- அற வழியாக இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் எடுத்துரைப்பதை தீட்சித் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

காந்தியடிகள் இன்னும்கூடத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நம்மை ஒருவன் வாளால் வெட்டி, அதன் காரணமாக வழிகிற இரத்தத்தால் ஏற்படுகிற அந்தத் தியாக உணர்வு நாம் அவனை வாளால் வெட்டி, அவனுடைய இரத்தத்தைக் கீழே கொட்டச் செய்கிறோமே அந்த வீர உணர்வைவிட உயர்வானது என்று கூறியிருக்கிறார்.

சாதி பேதங்கள் ஒழிய வேண்டுமென்கிற தீவிரக் கொள்கை, தீண்டாமை அகற்றப்பட வேண்டுமென்ற கொள்கை! காந்தி அடிகளுடைய பெயரை உச்சரிக்கின்ற நாம் உண்மையிலேயே நம்முடைய மனச்சாட்சியைத் தொட்டுப்பார்த்து அவைகளை எல்லாம் இன்றைக்கு நிறைவேற்றி விட்டோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டும். இன்றைக்கும் சாதிகள் தனித்தனியாக இருப்பதைப் பார்க்கிறோம். பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், முன்னேறியோர் என்ற இந்தப் பாகுபாடு கூட ஒருவகையில் குறிப்பிட்ட காலத்திற்கு சலுகைகள் வழங்க இருந்திடக் கூடும். ஆனால், அதற்குள்ளேயே ஆயிரக்கணக்கான சாதிகள், பேதங்கள், வகுப்புவாதங்கள் இருக்குமேயானால் நாம் காந்தியடிகளுக்கு விழா எடுத்துப் பயனில்லை.

ஆளுநர் அவர்கள் சென்ற ஆண்டு மாணவர்கள் கொண்டு வருகிற ஜோதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று என்னை அழைத்திருந்த போது நான் அன்றுவர இயலவில்லை. அதுவும் ஒரு பொருத்தமாக அமைந்துவிட்டது. சென்ற ஆண்டு மதுவிலக்குக் கொள்கையில் பாதி நிறைவேறியும், பாதி நிறைவேறாமலும் இருந்த நேரம்; அந்த நேரத்தில் காந்தி ஜோதியை வாங்க என்னுடைய கரங்கள் அவ்வளவு தகுதிதானா என்று எனக்குச் சந்தேகம். இந்த ஆண்டு பூரண மதுவிலக்கு தமிழகத்தில் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இன்றைக்கு என்னுடைய கரங்கள் அந்தத் தீபத்தை வாங்கத் தகுதி பெற்றிருக்கும் என்ற அடிப்படையில் இன்றைக்குக் காலையில் இங்கே நான் அந்தத் தீபத்தைப் பெற்றுக் கொண்டேன்.

மத்திய அமைச்சர் திரு தீட்சித் அவர்கள் தவறாகக் கருதிக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களிடம் ஓர் அன்பு வேண்டுகோளை அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில் விடுக்க விரும்புகிறேன். தமிழகத்திலும், குஜராத்திலும் மாத்திரம் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினால் போதாது. இந்தியா முழுமையும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த, காந்தியடிகளோடு நெருங்கிப் பழகிய பெரும் தலைவர்களில் ஒருவராக இருக்கும் தீட்சித் போன்றவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காந்தியடிகள் விழாவில் நான் விடுக்கின்றவேண்டுகோள் இதுதான்!

வாழ்க்கையை விரும்பவும் வேண்டாம்; வெறுத்துத் தள்ளவும் வேண்டாம். வாழ்வதை மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும்.
—மில்டன்.

**2-10-1974 அன்று கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.**





# சமதர்மச சமுதாயம் அமைத்திடுவோம்!

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**அன்பில் தருமலிங்கம்**

"சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்கேற்ப இன்றைய, தமிழ்நாடு அரசு சிற்றூர்கள் செழித்திட வகைசெய்யும் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் இன்றைய தமிழ்நாடு அரசு, 'சமதர்மச் சமுதாயம்' அமைத்து எல்லார்க்கும் எல்லா வசதிகளும் கிடைத்திடச் செய்ய வேண்டும்' என்பதற்காக அரும்பாடுபட்டு வருகிறது. சமதர்மச் சமுதாயம் அமைந்திட வேண்டுமானால், ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, சாமான்ய மக்கள் நிறைந்த கிராமங்கள் முன்னேற வேண்டும் என்று இன்றைய தமிழ்நாடு அரசு விரும்புகிறது. எனவேதான், கிராமங்களின் மேம்பாட்டிற்கு உதவும் சமுதாய நலத் திட்டங்களைச் செம்மையாகவும், சிக்கனமாகவும், விரைவாகவும் செயல்படுத்திடுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அந்த ஆர்வத்தின் காரணமாகவே, ஒரு வார காலத்திற்குச் "சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா" கொண்டாட இன்றைய தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் எதிர்காலம், கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேறினால் தான், இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்! இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு, என்று தன்னிறைவு பெறுகிறதோ அன்றுதான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்!

"இந்த நாட்டின் உயிர் நாடி கிராமங்களிலேயே உள்ளது!" என்று அண்ணல் காந்தியடிகள் அன்றே குறிப்பிட்டார்கள். 'கிராம ராஜ்யம்' அமைய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அண்ணல் கூறிய கிராம வளர்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்தியாவின் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் 1952-ஆம் ஆண்டு, அக்டோபர் 2-ஆம் நாள்-அண்ணல் பிறந்த நாளில்-நாடெங்கும் துவக்கப் பெற்றது. அந்தத் திட்டத்தின் பயனாய் இந்தியாவின் கிராமங்கள் முன்னேறி வருகின்றன! இதை இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. ஆனால் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்பட்டு 22 ஆண்டுகள் முடிந்திருந்தும், இந்தியா விடுதலை பெற்று 27 ஆண்டுகள் முடிந்திருந்தும், இன்னும் அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவு நிறைவேறவில்லை! ஆம்! இன்னும் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிட்டவில்லை! ஆகவே, இந்தியாவின் பொருளாதார விடுதலைக்கு வழி வகுக்கும்-கிராம முன்னேற்றத்திற்கு உதவும்-சமுதாய மேம்பாட்டுத் திட்ட வேகம் போதவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. சமுதாய மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேலும் தீவிரப்படுத்திடவே, ஒருவார காலத்திற்கு 'சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா' இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது.

"விழா நடத்திவிட்டால் சமுதாயம் மேம்பாடு அடைந்து விடுமா?" என்று பலர் கேட்கலாம். "விழா நடத்துவதனால் சமுதாயம் மேம்பாடு அடையாது! ஆனால் சமுதாயம் மேம்பாடு பெறுவதற்குரிய உள்ளுணர்வுகளையும், செயல் திறனையும் கிராம மக்களுக்கு ஏற்படுத்திட முடியும்!"

இந்த நோக்கத்துடனேயே சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாடப் பெறுகிறது.

"சமுதாயத்தின் அடிந்தளத்திலே உள்ளவர்களும் மேம்பாடு பெற வழி பிறக்க வேண்டும்"! என்பது காந்தியடிகள் கண்ட கனவாகும். "ஏழ்மையும் வறுமையும் ஒழிந்து, சமுதாயம் முழுவதும் முன்னேற வேண்டும்" என்று அண்ணல் கூறினார். அண்ணல் கண்ட கனவை நனவாக்கவும், அவர் கூறியவைகளை நிறைவேற்றவுமே, இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் சமுதாய நல மேம்பாட்டு விழாவைக் கொண்டாடி வருகின்றன.



குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சமுதாயத்தை மேம்படுத்தி, ஏற்றத்தாழ்வில்லாத சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடுவதே இன்றைய தமிழ்நாடு அரசின் இலட்சியமாக உள்ளது.

'' சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள ஏழை, எளிய, சாமான்ய மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையிலேயே எங்கள் அமைச்சரவை, திட்டம் தீட்டி செயல் படுத்தும் '' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே - ராஜாஜி அரங்கின் முன்னால் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னே உறுதி கூறினார். அதன்படி, சமுதாயத்தை மேம்படுத்தும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார்.

அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழியிலும், 'தென்னாட்டுக் காந்தி அண்ணா' அவர்கள் வழியிலும் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சமுதாய மேம்பாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, பல்வேறு பயன்மிகு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். வீடற்றவர்க்கு வீட்டுமனைப் பட்டாவும், நிலமற்றவர்க்கு நிலப்பட்டாவும் வழங்குவதில், தீவிர கவனம் செலுத்தி வருகிறார் கலைஞர்.

'' ஏன் எடுத்தோம் இந்த ஜென்மம்?'' என்று தன்னையே நொந்து கொண்டு வாழும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் துவங்கிய கலைஞர், கண்பார்வை இழந்து கஷ்டப்படும் ஏழை எளியவர்களுக்கெல்லாம் கண்ணொளி வழங்குவதற்காக இலவசக் கண்சிகிச்சை முகாம் திட்டத்தைத் துவக்கினார்.

'மனிதனை மனிதன் இழுப்பது இழிவு என்று அண்ணல் காந்தியடிகள் அன்றே குறிப்பிட்டார். அதை மனதிற்கொண்ட கலைஞர் அவர்கள், கைரிக்ஷா இழுத்துப் பிழைப்பவர்களுக்கு இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைச் சென்ற ஆண்டு துவக்கினார். இந்த ஆண்டில், காணார், கேளார், கால்முடம்பட்டோர், பேணுநர் இல்லோர் ஆகியவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளிக்க, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தைத் துவக்கியுள்ளார். விரைவில் சமுதாயத்தில் குறைந்த வருவாய் உள்ள அனைவருக்கும் பயன்தரும் 'பென்ஷன்' திட்டத்தைத் துவக்கிட விருக்கிறார். 'சமூகப் பாதுகாப்பு திட்டம்' என்ற பெயரில் இத்திட்டம், 'ஆசிய ஜோதி' என்று புகழப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த நாளிலே, தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கிறது.

இத்தகைய திட்டங்களை எல்லாம் இந்தியாவிலேயே முதல் முதலாக, கலைஞர் நிறைவேற்றுவதற்கு மூல காரணம், '' சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும், சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடவேண்டும் '' என்ற இலட்சியமேயாகும்.

சமுதாயத்தில் உள்ள சாதி பேதத்தையும், பொருளாதார ஏற்றத்தாழ்வையும் போக்கி எல்லாரும் சமம் என்ற நிலையை ஏற்படுத்தவே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகைகள், கலப்புத் திருமணம் செய்து கொள்வோருக்குத் தங்கப்பதக்கம், அரிசனங்களுக்கும் ஆலயங்களில் அறங்காவலர் பதவி, பிற்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகைகள், அரிசன காலனிகளுக்கு மின் விளக்குத் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதித் திட்டம், அரிசனங்களுக்கென தனி வீட்டு வசதி வாரியம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஊர் வளர்ச்சித்துறையை, வருவாய் துறையிலிருந்துத் தனியாகப் பிரித்து, தனித் துறையாக இயங்கச் செய்தது.

சிற்றூர்களில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், எல்லா ஊர்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்த இணைப்புச் சாலைகளை அமைக்கவும் ஊராட்சித் துறை முயன்று வருகிறது.



ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள 24,000 பாசன ஆதாரங்களைத் தூரெடுத்து நீர்த்தேக்கக் கொள்ளளவை அதிகப்படுத்தவும், பாசனக் கால்வாய்களைச் சீரமைக்கவும் முன்பே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதுடன், மேலும் ''சிறிய நீர்ப் பாசன விரைவுத் திட்டம் '' என்ற புதிய திட்டத்தை உருவாக்கி, அதற்கென 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. தமிழக கிராமங்களில் உள்ள 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களெல்லாம் சமுதாய மேம்பாட்டிற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களேயாகும்!

உணவு உற்பத்தியில் ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளன. இதன் பயனாகவே தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி பெருகியுள்ளது. ஆனால், உணவு உற்பத்திப் பெருக்கத்தைவிட, மிக வேகமாக மக்கள் தொகை உற்பத்தி பெருகி வருகிறது. இதைக் கட்டுப்படுத்த வேண்டியது நமது இன்றியமையாத கடமையாகும். சமுதாயம் மேம்பாடு அடைய வேண்டுமானால், குடும்பத்தை அளவோடு அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே, குடும்ப நலத் திட்டத்தில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.



எனவே, வட்டார நிலையில் உருவாக்கப்பட்டுள்ள, நிருவாக அமைப்பின் வாயிலாக, வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும், நன்றாக இணைந்து செயல்பட வேண்டும். இந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டு வரவே, சமுதாய நல வாரவிழா, இந்திய நாடெங்கும் கொண்டாடப் பெறுகிறது. இதையொட்டியே, இந்த வார நிகழ்ச்சிகள், விரிவாக நடைபெற, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை, அரசாணை பிறப்பித்துள்ளது.

பசுமைப் புரட்சியில் நாம் கண்டுள்ள வெற்றியைப்போல், வெண்மைப் புரட்சியிலும், நீலப்புரட்சியிலும் வெற்றி காண நமது சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முனைப்பாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதுபோல் எல்லா துறையிலும் வெற்றிகாண, கிராமப்புற மக்கள் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் எல்லாத் துறையிலும் வெற்றி ஏற்படும்; இராமப் பொருளாதாரம் செழிக்கும்!



அடுத்து சமுதாயத்திலே உள்ள சாதி வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வு மனப்பான்மையும் போக்க, சமூகக் கல்விப் பணிகளை விரிவுபடுத்த முயன்று வருகின்றோம். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில், தமிழ்நாடு அரசு பேரார்வம் கொண்டுள்ளது. அதுபோலவே, பிற்பட்டோர் நலனிலும் தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே, சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி, ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைத்திட முயன்று வரும் தமிழ்நாடு அரசுக்கு, உங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்திட வேண்டும் என்று பொது மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சமுதாயத்தின் [illegible] வினரும், இதில் எல்லா வேற்றுமைகளையும் மறந்து, ஒன்றுபட்டுச் செயலாற்றுமாறு வேண்டுகிறேன். குறிப்பாக, சமுதாயத்தின் பின்தங்கியோர்க்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் உள்ள வேதனைகளைத் தீர்க்கும் வகையிலும், அவர்கள் கண்ணீரைத் துடைக்கும் முறையிலும், ஒன்றுபட்டு உழைப்போமாக! ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் இப்பணிகளில் பேரார்வம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.



இதுவே, அண்ணல் காந்தியடிகளுக்கும், அமரர் அண்ணா அவர்களுக்கும், அவர்கள் வழியில் நின்று பணியாற்றும் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசுக்கும் செலுத்துகின்ற அன்புக் காணிக்கையாகும் வணக்கம்.



**சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழாவின் தொடர்பாக, 3-10-1974 ஆம் நாளன்று இரவு 7-00 மணி அளவில் தமிழ்நாடு அரசின், ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் பி. தர்மலிங்கம் அவர்கள் சென்னை வானொலியில் ஆற்றிய உரை.**

## தமிழரசு சிறுகதைப் போட்டி 1974

16-7-1974 தமிழரசு இதழில் வெளியிடப்பெற்ற வேண்டுகோளுக் கிணங்க ஆயிரத்துக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் சிறுகதைகளை அனுப்பியுள்ளனர். ஆசிரியர் குழுவினர் அனைத்தையும் ஆய்வுசெய்து வருகின்றனர்.

பரிசுக்குரிய கதைகளைத் தேர்தெடுக்க, தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற மூன்று பெருமக்கள் அன்போடு இசைந்துள்ளார்கள். முடிவுகள் 1-11-74 தமிழரசு இதழில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நடுவர்கள்

1. திரு. டி. கே. சீனிவாசன், எம். பி.
(மாநிலங்கள் அவை உறுப்பினர்)
2. திரு. எம். எஸ். விசுவநாதன், (சாவி)
('தினமணி கதிர்' ஆசிரியர்)
3. திரு. பி. வி. அகிலாண்டம், (அகிலன்)
(அனைத்திந்திய வானொலி, சென்னை)

# அண்ணலின் பிறந்தநாள் விழா!

தமிழகத்தில் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா தனி சிறப்போடு நடைபெற்று வருகிறது. இதில் மக்கள் தாங்களாகவே—யாருடைய தூண்டுதலுமின்றி, முன் வந்து உற்சாகம் காட்டுகிறார்கள்.

தமிழகம் காந்தியடிகளின் திட்டங்களோடும், கொள்கைகளோடும் ஒன்றிக் கலந்திருப்பதாகும் என்பதையே இது காட்டுகிறது. தன் கையே தனக்குதவி என்று தன்னம்பிக்கையோடு மக்கள் இருக்க வேண்டுமென்ற மகாத்மா காந்தியின் கொள்கையை நிறை வேற்றும் வகையில் தமிழ்நாட்டில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

கிராமங்களில் மக்கள் ஒவ்வொருவருக்கும், வேலை இருக்கும் வகையில் பயிற்சி அளிப்பதே இந்தத் திட்டம்.

கிராமப்புறங்கள், வளம் பெற்றால்தான் நகரங்களில் வளம் தேங்கும் என்றார் மகாத்மா காந்தி. அவர் சொன்ன அந்த அடிப்படையில் கிராமப்புறங்களின் முன்னேற்றத்திற்குத் தமிழக அரசு பெரிதும் பாடுபட்டு வருகிறது.

- மேதகு. கே. கே. ஷா,
தமிழக ஆளுநர்

"சுதந்தரத்தின் குறிக்கோள் ஒவ்வொரு இந்தியனின் கண்களிலிருந்து துயரம் காரணமாக வருகின்ற கண்ணீர் துடைக்கப்பட வேண்டும்" என்று மகாத்மா காந்தி சொன்னார். அவருடைய நினைவு உண்மையாகத் தக்க வகையில் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கக் கூடிய திரு. மு. கருணாநிதி அவர்கள் இன்று ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடிய — உண்மையிலேயே ஒரு நல்ல திட்டத்தை ஆரம்பித்துள்ளது, ஒரு சேம நலத் திட்டம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஊனமுற்றவர்களுக்குக் கருவிகளை வழங்கும் வாய்ப்பினை எனக்குத் தமிழக அரசு அளித்திருப்பது குறித்து மகிழ்ந்து, இந்த நேரத்தில் இந்தத் திட்டத்திற்காக அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காந்தியடிகளின் பிறந்த தினமாக இருப்பதால் அவருடைய இலட்சியங்கள் சிலவற்றை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். காந்தியடிகள் மக்கள் முன்னால் ஆறு பெரிய கொள்கைகளை எடுத்துச் சொன்னார்.

முதலாவதாக, குறிக்கோள் மாத்திரம் சிறப்பானதாக இருக்கக் கூடாது. அந்தக் குறிக்கோளை அடையக் கூடிய வழி சிறப்பானதாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, சொல்லுக்கும் செயலுக்கும் இடையே அதிக வேறுபாடு இருக்கக் கூடாது. என்ன சொல்கிறோமோ அதைச் செயல்படுத்த வேண்டும். ஏனென்றால் நாம் என்ன சொல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதை மக்கள் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாநிலத்திலும் மத்தியிலும் இருக்கக் கூடிய தலைவர்கள் மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தாமல் என்ன செய்யப் போகிறோம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

மூன்றாவதாக, குடும்பக் கட்டுப்பாடு. இதை அவரவர்களாக மேற்கொள்ள வேண்டுமே தவிர, அரசாங்கம் திணிக்கக்கூடிய நிலை இருக்கக் கூடாது. காந்தியின் இந்தக் கொள்கைகளை மறந்துவிட்டதால்தான் மக்கள் பெருக்கம் அதிகமாய்ப் போய்விட்டது.

நான்காவதாக, அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது. அவைகள் பரவலாக்கப்படவேண்டும். தொழில் துறை ஆனாலும், பொருளாதாரத் துறை ஆனாலும், அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருந்தால் நல்லதல்ல. அதிகாரங்கள் பரவலாக இருப்பதுதான் நல்லது என்று அவர் போதித்திருந்தார்.

ஐந்தாவதாக, ஒவ்வொரு கிராமத்திற்கும் நாம் செல்ல வேண்டும். கிராம மக்களுடைய சுய தேவையை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். கிராம மக்கள் நகரங்களுக்கு நகரும் நிலையைப் போக்க வேண்டும். இந்த நல்ல திட்டத்தைத் தமிழக அரசு மேற்கொண்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். கிராம மக்கள் அங்கேயே வாழ்வதற்கு, அங்கேயே வேலை வாய்ப்புக்களைக் கொடுக்க ஆசைப்படுகிறார்கள். அது வரவேற்கத்தக்கது.

ஆறாவதாக, நம் நாட்டில் பெரிய தொழிற்சாலைகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. காரணம் பெரிய விமானங்களை, தளவாடங்களை, டாங்கிகளை உற்பத்தி செய்யவில்லை என்றால், இந்த நாட்டின் உரிமையைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படும். மக்கள் குவிந்துள்ள நாடுகளில் வேலைவாய்ப்புக்களைக்கொடுக்க பெரும் தொழிற்சாலைகளை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. எப்படி பெரும் தொழிற்சாலைகள் இருக்கிறதோ, அதைப் போல நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளை நாம் தொடங்க வேண்டும்.

- திரு. உமா சங்கர் தீட்சித்,
மத்திய அமைச்சர்

காந்தியின்றி, இரத்தமின்றி, உண்மை, அன்பு, நேர்மை வழி நின்று போராடி நாட்டு விடுதலையை வாங்கித் தந்தவர் காந்தியார்.

புத்திரப் பேறுடைய ஆண்-பெண் உறவு ஏற்பட வேண்டுமேயல்லாது இன்பத்திற்காக அல்ல என்றார் காந்தியார். பாலிய விவாகங்களும், பழக்க வழக்கங்களும் அதிகமான பிள்ளைப் பேற்றுக்கு வழி செய்வதாகக் கண்டறிந்த அவர், அவைகளைச் சீர்திருத்தினால் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமே என்கிறார்.

எனவே, காந்தியார் வற்புறுத்திய குடும்பக் கட்டுப்பாட்டை நினைவிலிருத்தி, குடும்ப நலம் தழைக்க மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

சமூகத்தில் கீழ்த் தளத்தில் நலிந்துள்ள மக்களைக் கை கொடுத்துத் தூக்கி வாழ்வு அளிக்க விழைந்த காந்தியார் கனவை நனவாக்க நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். அவ்வகையில், ஊனமுற்றோருக்கு இங்கே சக்கர வண்டிகளைத் தமிழக அரசின் சார்பில் டெல்லி மந்திரி உமா சங்கர் தீட்சித் வழங்கியதை நீங்கள் நன்கறிவீர்கள்.

ஏழை எளிய மக்களின் பங்காளனாக — நலிந்த — மெலிந்த மக்களின் உயிர்த் தோழனாக விளங்கும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த நல்வாழ்வுத் திட்டங்கள் வெற்றி பெற்றிட ஒல்லும் வகையில் அவருக்கு உடனிருந்து உறுதுணை புரிந்து ஒத்துழைப்பு நல்குவோம்.

- திரு. சி.வி.எம். அண்ணாமலை,
சமூக நல அமைச்சர்

சென்னை காந்திமண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்தநாள் விழா உரைகள்





எழுத்துக் கோக்கும் பிரிவில் ஆடவரும், மகளிரும்.



தனியச்சுப் (மானோடைப்) பிரிவு.

# தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சகம்!

விஞ்ஞானம் மனித குலத்துக்கு வழங்கிய மாபெரும் சாதனங்களில் அச்சகமும் ஒன்று என்பதை நாமறிவோம்.

எண்ணியதை, எண்ணற்ற அளவில் அச்சடித்துக் கொள்வதற்கு இன்று மூலைக்கு மூலை அச்சகங்கள் முளைத்திருக்கின்றன; மனித மூளையிலிருந்து உருவான இவை, இன்று உலகமெங்கணும் பரந்து பயன் விளைத்துக் கொண்டிருக்கின்றன.

அன்றாடம் படிக்கும் செய்தித் தாள்களிலிருந்து இதன் பணி சொல்லி முடியாதே!

இதோ! சென்னை வள்ளலார் நகரிலுள்ள அரசினர் மத்திய அச்சகம்!

இன்று மிகப் பெரிய அளவில் பரந்து விரிந்து காட்சி தரும் இந்த அச்சகம்தான், 1831-ல் பழைய அச்சு எழுத்துக்களைக் கொண்டு, பத்துப் பேரோடு சென்னைக் கோட்டையில் துவக்கப்பட்டது!

பத்துப் பேரோடு தொடங்கிய இந்த அச்சகம் இன்று பல்லாயிரவர் பணியாற்றும் பெரிய அச்சகமாக-ஏன், தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய அச்சகமாக விளங்கி வருவதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.



சிறிய பெரிய எழுத்துக்களில், பல்வேறு வகையான தாள்களில், பலவண்ண எழிலோடு அச்சிடும் அளவுக்கு இன்று அச்சுக் கலை வளர்ந்திருக்கிறது.

புத்தகக் கடைகளிலே காட்சியளிக்கும் புத்தகங்கள், இதழ்கள் முதலியன, முதலில் வாசகர்களைக் கவர்வது அதன் உள்ளே இருக்கும் எழுத்துக்கள் அல்ல; அதன் கவர்ச்சியான வண்ண முகப்பிலேயாகும்.

இந்த வண்ண முகப்பிலிருந்து வகை வகையான அச்சுவேலைகளுக்கெல்லாம் அருந் துணை புரிவது மெச்சத் தகுந்த அச்சுத் தொழிலேயன்றோ?

எழுதுபொருள்—அச்சுத் துறையானது, அரசு அச்சகம், எழுதுபொருள் கிடங்கு என்ற இரண்டு பெரிய அங்கங்களைக் கொண்ட அமைப்பாய் இயங்கி வருகிறது.

தமிழக அச்சுத்துறை எனும் தருவானது, கீழ்க்காணும் கிளைகளைப் பெற்றுள்ளது :

1. வள்ளலார் நகரிலுள்ள மத்திய அச்சகம்.

2. சென்னை மத்திய சிறையில் உள்ள கிளை அச்சகம்.

தனியச்சிலிருந்து எழுத்துக்களை உருவாக்கும் பிரிவு.

3. அண்ணாசாலையிலுள்ள கிளை அச்சகம்.

4. உயர்நீதி மன்றக் கட்டடத்தில் அமைந்துள்ள வழக்குப் பட்டியல் மற்றும் உயர்நீதி மன்றக் கிளை அச்சகம்.

5. புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.

6. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார அச்சகம்.

7. சேலத்தில் உள்ள வட்டார அச்சகம்.

8. விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்.

9. கிளை அச்சகம் ஆனைக்கார் தோட்டம்

வள்ளலார் நகரிலுள்ள மத்திய அச்சு (Intertype) மற்றும் வரியச்சு (Linotype) இயந்திரப் பொறிகளும், 20 தனியச்சு (Monotype) எழுத்துப் பலகணிகளும், 40 வார்ப்புப் பொறிகளும், 2 வார்ப்பு இயந்திரங்களும், 2 சீரிய வார்ப்புகள் (Super), 1 இலகுவான (Loosetype) எழுத்து வார்ப்புப் பொறி (Caster)களும் உள்ளன.

அச்சடிப்பதற்குத் தேவையான வகை வகையான சிறிய பெரிய நவீன அச்சடிக்கும் இயந்திரங்கள் இங்கே உள்ளன. அதோடு 39 கட்டமைப்பு (Binding) இயந்திரப் பொறிகளும் உள்ளன.

பற்றிய வெளியீடுகள், 12. நிதி—பொருளாதார மதிப்பீடு, 13. அறிவியல் வரலாறு, 14. காவிரி நீர் பற்றிய நடைமுறை அட்டவணைகள், 15. ஐந்தாவது ஐந்து ஆண்டுத் திட்டம், 16. நீண்ட காலத் திட்டம், 17. அரசு அரும்பொருட் காட்சியகம், 18. உயர் நீதி மன்ற நிலை ஆணைகள், 19. கருவூலக் கணக்குகள் தொடர்பான கணக்குத் துறைத் தலைவரின் விரிவான புத்தகம், 20. காவல் பதக்கம் பற்றிய சில வெளியீடுகள்.

இதோடு நிற்கவில்லை இதன் பணி, மேலும் தொடர்கின்றது:

தமிழ் நாடு சட்ட மன்றப்



வரியச்சுப் (லினோடைப்) பிரிவு.



'சூப்பர்செட்' அச்சு இயந்திரம்.

இரவும் பகலும் எந்நேரமும் இயங்கும் சென்னை அரசினர் மத்திய அச்சகத்தில் ஏறக்குறைய 3,000 பேர் பணி புரிகின்றனர். காலை 6 மணி முதல் 2 மணி வரையிலும், பகல் 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும், இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரையிலும் ஆக மூன்று முறைமாற்றுப் பணிகளில் (Shifts) அச்சகம் இயங்குகிறது.

எழுத்துக் கோக்கும் பகுதியில் ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித் தனியே பிரிவுகள் இருக்கின்றன. இவையன்றி மின்னல் வேகத்தில் எழுத்துக்களை கோக்க உதவும் 28 தொடர்பு அச்சகத்தில் கீழ்க்காணும் வெளியீடுகள் உரிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தரப்படுகின்றன:

1. தமிழ் நாடு அரசிதழ், 2. மாநிலத் திட்ட ஆணைக் குழு அறிக்கை, 3. இந்தியச் சட்ட அறிக்கைகள், 4. அரசு உறுதிமொழிக் குழு அறிக்கை, 5. மதிப்பீட்டுக் குழு அறிக்கை, 6. மாநில நிருவாக அறிக்கைகள், 7. கைத்தறிக் குழுவின் அறிக்கைகள், 8. சுகாதாரப் பணிகள்—குடும்பநலத் திட்ட நிருவாக அறிக்கைகள், 9. பருவ காலப் பணிகள் பற்றிய அறிக்கைகள், 10. தொழிற்சங்கச் சட்ட ஆண்டு அறிக்கை, 11. விடுதலை வீரர்கள்

பேரவை, சட்ட மன்ற மேலவை விவாதங்கள், வாரச் சிறப்பு அரசிதழ்கள், மாநிலப் பரிசுச் சீட்டுகள், பால் அட்டைகள், உணவுப் பங்கீட்டு அட்டைகள், நில உரிமைப் பத்திரங்கள், தமிழ் நாட்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள், அறிவுரைக் குறிப்புகள் (Instructions), வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள், பேருந்துப்பயணச் சீட்டுகள் ஆகியவையும் அச்சிடப்படுகின்றன.

இவையன்றி ஊராட்சி நடைமுறை நூல், கருவூல நடைமுறை

ஆப்செட் பிரிவின் ஒரு பகுதி.



நூல், வேளாண்மை நடைமுறை நூல், எழுதுபொருள் நடைமுறை நூல் ஆகியவற்றையும் இந்த அச்சகம் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றது.

உயர்நீதி மன்றக் கட்டடத்திலுள்ள வழக்குப் பட்டியல் அச்சுப் பிரிவில் சுமார் 100 பேர் அல்லும் பகலும் பணியாற்றுகின்றனர். இந்தப் பிரிவு ஒரு செய்திப் பத்திரிகை அலுவலகம் போன்று நாள் முழுவதும் விழிப்போடு செயலாற்றி வருகிறது.

மத்தியச் சிறையிலுள்ள அரசு கிளை அச்சகம் 16 அச்சுப் பொறிகளுடன் இயங்கி வருகிறது. குற்றவாளிகளுக்கு அவரது நலனைக் கருதி, அச்சுத் தொழிலில் இங்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

சூளை ஆனைக்கார் தோட்டத்தில் புதிய கிளை அச்சகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இந்த அச்சகத்தில், ரஷ்ய நாட்டு அச்சு இயந்திரங்கள், வெட்டு இயந்திரங்கள், காற்று அழுத்தப் பொறிகள், தனியச்சு எழுத்துப் பலகணிகள், தனியச்சு வார்ப்புப் பொறிகள் ஆகிய இயந்திரங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.



அச்சானவை அழகுறக் கட்டமைக்கப்படுகின்றன.

மதுரை மாநகரிலும் ஒரு கிளை அச்சகத்தை அமைக்கத் தக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 27.20 இலட்சம் செலவில் அச்சகம் அமைக்கவும், சுமார் 21 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுளது. இந்த அச்சகத்தில் சுமார் 750 பேர் பணியாற்றுவர் என்றும், இந்த அச்சகம் மூன்று முறைமாற்றுப் பணிகளில் (Shifts) பணியாற்றத் தொடங்கும்போது படிவங்கள், பதிவேடுகளைப் பொறுத்தமட்டில் தமிழகத்திலுள்ள பெரும்பாலான அரசு அலுவலகங்களின் தேவைகள் நிறைவு செய்யப்படும் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகத்தின் சார்பில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஓய்வு இல்லத்தில் பயிற்சி பெற்ற தொழிலாளர் ஒருவர் மூலம் தொழிலாளர்களுக்கு அச்சுப் பிரிவு அளவில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

திருச்சி கிளை அச்சகத்தில், அன்றாடக் குற்றங்கள்—நிகழ்வுகள் பற்றிய தாள்கள், குற்றம்—நிகழ்வு பற்றிய வாரத் தாள்கள், மாதாந்திரக் குற்ற ஆய்வுரை போன்றவையோடு பிற அரசு அச்சகப் பணிகளும் நடக்கின்றன.

இதேபோன்று சேலம், விருத்தாசலம் வட்டார அச்சகங்கள் பல்வேறு அச்சுப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

எழுது பொருள்—அச்சுத் துறை உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிப்பதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகின்றது. இந்த வகையில் கண் பார்வையற்றவர்கள் 7 பேர், காது கேளாதவர்கள் 3 பேர், பேச இயலாதவர்கள் 6 பேர், நடக்க இயலாதவர்கள் 37 பேர், பிற உறுப்புகள் ஊனமுற்றோர் 4 பேர் ஆக 57 பேர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் இணையற்ற பணி ஆற்றியமைக்காக எழுது பொருள் அச்சுத்துறை தேசியப் பரிசைப் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். 1974-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாள் புது தில்லியில் இதற்கான நடந்த சிறப்பு விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவரால் இப்பரிசு வழங்கப் பெற்றது.



கண்பார்வையற்றோர் காகித உறைகள் செய்கின்றனர்.



இத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அச்சகத்திலுள்ள மருந்தகத்தில் நாள்தோறும் 175 தொழிலாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தொழிலாளர் நல்வாழ்வுக்காகவும், விளையாட்டுகளுக்காகவும் நல நிதியிலிருந்து இதுவரை ரூ. 2,253 வழங்கப்பட்டுள்ளது.

அண்ணாசாலையிலுள்ள கிளை அச்சகம், எழுதுபொருள் பண்டகசாலை ஆகியவற்றில் பணி புரியும் பணியாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக ஒவ்வொரு இடத்திலும் தனியாக ஒரு மருந்தகம் செயற்பட்டு வருகிறது. இங்குள்ள



பெண் தொழிலாளர்கள் பணி புரியும்போது, அவர்களது குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்குக் 'குழந்தைகள் காப்பகம்' ஒன்றும் உள்ளது. இந்தக் காப்பகத்தில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு இரு பெண் பணியாளர் உள்ளனர்.

அச்சகத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் காரியத்தால் உடல் நலம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவர்களுக்குப் பலவித ஊட்டச் சத்து மிக்க குளிகைகள் வழங்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு வழக்கம் போல் ரொட்டியும் தேநீரும் வழங்கப்படுகிறது. இத்துறையைச் சேர்ந்த காலமான தொழிலாளர்களைச் சார்ந்திருப்போருக்கு நல நிதியிலிருந்து ரூ. 50 அளிக்கப்பட்டு வருகிறது.

இவையன்றி மாநகரில் அமைந்துள்ள கிளை அச்சகங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்க்கும் பொருட்டு அரசு அச்சகத்திலுள்ள தொழிலாளர் நல அலுவலர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்வையிடுகின்றனர்.

அச்சகத்திற்குள்ளே சிறப்பாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம், தொழிலாளர்களுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது. 1,877 உறுப்பினர்கள் கொண்டது இந்தச் சங்கம். இச்சங்கத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 6.75 இலட்சம் ஆகும். இது உறுப்பினர்களுக்குக் கடனாக ரூ. 84.43 இலட்சம் வழங்கியுள்ளது. பொன் விழாவினைக் கண்ட இச் சங்கம், 1972-73-ல் ரூ. 65,656 நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது.

ஆறுண்டுகளாக நற்பணியாற்றி வரும் 'தமிழ்நாடு அரசு எழுது பொருள் அச்சுத் துறைத் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை' தமது உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை விற்பனை செய்து வருகின்றது.



அச்சக உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி.



படம் அச்சு (Block making)

தண்டையார்பேட்டை காமராஜ நகரில் தொழிலாளர்களுக்கான 300 குடியிருப்புகளும் உள்ளன.

சிறந்த பணிகளை ஆற்றி வருவதற்காக இது பரிசுகளும், பாராட்டுதல்களும் பெற்று வருகின்றது. 1972-ஆம் ஆண்டிற்கான தேசியப் பாதுகாப்புப் பரிசுகளைச் சென்னை மத்திய அச்சகம் பெற்றுள்ளது. பம்பாய் தேசியப் பாதுகாப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பெற்ற இப் பரிசுகள் 1973-ல் குடியரசுத் தலைவரால் வழங்கப்பெற்றது.

சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசுக் கிளை அச்சகம் (தமிழரசு அச்சகம்) 1971-ஆம் ஆண்டிற்கான மாநிலப் பாதுகாப்புப் பரிசைப் பெற்றுள்ளது.

எழுதுபொருள் அச்சுத்துறையின் ஓர் அங்கமான 'எழுது பொருள் கிடங்கு' காகிதம், அட்டைகள், அச்சகத்தால் தயாரிக்கப்படும் பொருள்கள், அச்சகத்திற்குத் தேவையான தட்டெழுத்துப் பொறிகள், கணக்கெடுப்புப் பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வினியோகம் செய்யும் ஒரு மத்திய செயலாண்மை நிலையமாக இயங்கி வருகிறது.

143 வயதுள்ள சென்னை அரசினர் மத்திய அச்சகம் இவ்வாறு அரசுத் துறைகளுக்காகப் பல்வேறு பணிகளைப் பாங்குடன் ஆற்றி வருவதைப் பாராட்ட வேண்டும்.

—பி.வி.ஜி.


உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு
'ப்ளேனோஃபிக்ஸ்'
தேவை.



சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானல், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோஃபிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புதானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட

பம்பாய், கல்கத்தா, கவுஹாத்தி, இந்தோர், லக்னோ, சென்னை, நியூடெல்லி, பாட்னா

"ப்ளேனோஃபிக்ஸ்" என்பது ஒரு எம் & பி ரகத் தயாரிப்பு

* டிரேடு மார்க்





# புதுமைக் கதர்

ஒரு பொருளை வாங்குவதற்கு முன் ஒரு முறைக்குப் பல முறை சிந்திக்கிறோம். கதர்த் துணி வாங்குபவர்களில் பெரும்பாலோர் அப்படித்தான் சிந்திக்கிறார்கள். தங்களைத் தாங்களே சில கேள்விகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

எண்ணற்ற இரகங்களில்-விதவிதமான வண்ணங்களில் ஆலைத்துணிகள் விற்பனையாகும்பொழுது கதர்த்துணி வாங்க வேண்டுமா?

ஆலைத்துணிகளைவிட கதர்த் துணி விலை அதிகமானதா?

நாம் கொடுக்கும் பணத்துக்கு ஈடானதா?

அது நீடித்து நாள்பட உழைக்குமா?

இவையே அந்தக் கேள்விகள். இவை நியாயமானவையும் கூட. ஏனெனில் உழைத்துச் சம்பாதித்த பணத்தை உபயோகமான வழிகளில் தானே செலவிட வேண்டும்!

எண்ணற்ற இரகங்களில்-விதவிதமான வண்ணங்களில் ஆலைத்துணிகள் உள்ளன. உண்மைதான். ஆனல் அதே அளவுக்குக் கதரிலும் இன்று கண்களைப் பறிக்கும் வண்ணங்களும்-கவனத்தை ஈர்த்திடும் இரகங்களும் வந்துள்ளன. 'கதர் ஒரு முரட்டுத்துணி — மென்மையோ நளினமோ இல்லாதது' என்ற அறியாமையில் சிலர் சொல்லிய காலம் மலையேறிவிட்டது. இது ஆலைத் துணியா ? அல்லது கதர்த் துணியா? என்று வேறுபாடு காணமுடியாத அளவுக்குக் கதரில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை ஒரு மறுமலர்ச்சி என்றுகூடச் சொல்லலாம்.

இதன் விளைவாகத்தான் கதர் விற்பனையும் இன்று அதிகரித்துள்ளது. முன்பு ஒரு சிலர் மட்டுமே கதர்த்துணி வாங்கி அணிந்தார்கள். ஆனல் இன்று வாழ்க்கையின் பல நிலைகளில் உள்ள மக்கள்-பல்வேறு அளவு வருவாய் உள்ளவர்கள் அனைவரும் கதர்த்துணி வாங்குகிறார்கள். தொழிலதிபர்கள்-தொழிலாளர்கள்; அலுவலக அதிகாரிகள்-ஊழியர்கள் குடும்பத் தலைவியர்-கல்லூரி மாணவர்கள் - மாணவியர் இளஞ்சிறார் என்று பலரும் கதர்த்துணியும், பட்டுப் புடவைகளும், ரெடிமேட் ஆடைகளும் அணிகிறார்கள். இந்த அளவுக்கு பல தரப்பட்ட மக்களும் வாங்குகிறார்கள் என்றால்-கதரில் எண்ணற்ற இரகங்களும், விதவிதமான வண்ணங்களும் உள்ளன என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**மு. அ. க. தய்யப் ஐ.ஏ.எஸ்.**
**தலைமைச் செயல் அலுவலர்**
**தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்.**

ஆலைத்துணிகளை விட கதர்த் துணி விலை அதிகம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. ஏனெனில் எந்த வகையில் பார்த்தாலும் தரமான ஒரு கதர்த் துணியைவிட-தரமான ஒரு ஆலைத்துணி விலை குறைவானதாக இருக்கவே முடியாது. ஆலைத்துணிகள் விற்பனைக்கு வருவதற்கு முன்பு எவ்வளவோ வரிகள் அவற்றின் மேல் சுமத்தப்படுகின்றன. அத்துடன் ஆலை நிருவாகச் செலவு-முதலீட்டுக்கான வட்டி-விளம்பரச் செலவு-இவை தவிர ஆலை அதிபரின் இலாபம் இவையெல்லாம் சேர்த்துத்தான் ஆலைத்துணியின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனல் கதர்த்துணிக்கு இத்தகைய சுமைகள் இல்லை. கதர் உற்பத்திக்கு அரசாங்கத்திடமிருந்தும், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்தும் வட்டியில்லாக் கடனும் மானியமும் கிடைக்கின்றன. கதர்த் துணிக்கு வரி கிடையாது. கதர் விற்பவர்களுக்கும் துணி நெய்பவர்களுக்கும் கணிசமான கூலி கிடைக்க வேண்டும் என்பதைத் தவிர இதில் யாருக்கும் எந்த இலாப நோக்கமும் கிடையாது. நிருவாகச் செலவில் ஒரு பகுதியை ஈடுகட்டுவதற்கு மட்டும் ஆலையில் மிகக்குறைவான சதவிகிதம் அதிகப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வருகிறது. இப்படி இருக்கும் பொழுது ஆலைத் துணியைவிட கதர்த்துணி விலை அதிகமானது என்று எப்படிச் சொல்ல முடியும் !

நாம் கொடுக்கும் பணத்துக்குக் கதர்த்துணி ஈடானதா?

என்று சிலர் கேட்கலாம். கதர் இயக்கத்தின் பின்னணியில் காந்தியடிகள் கூறிய சித்தாந்தம் ஒன்று உள்ளது. அந்த சித்தாந்தத்தைப்பற்றி இப்போது இங்கு விவரிக்க வேண்டியதில்லை. மாறாக, பொருளாதார அடிப்படையில் கதர்த்துணியின் விலை மதிப்பை-பெறுமானத்தை ஆராயலாம்.

பன்னிரெண்டு ரூபாய்க்குத் தரமான ஒரு ரெடிமேட் சிலாக் கதரில் கிடைக்கிறது. இதே அளவு தரமுள்ள ஆலைத்துணி வாங்கி தைக்க வேண்டுமானால் குறைந்தது 15 ரூபாய் ஆகும். போதிய நீள அகலமுள்ள ஒரு வேட்டியும்-துண்டும் கதரில் 15 ரூபாய்க்குள் வாங்கலாம். அதுபோல் கதர்ப்புடவைகள் 50 ரூபாயிலிருந்து கிடைக்கிறது. இளஞ்சிறுர்களுக்கான ரெடிமேட் ஆடைகள் ஏழெட்டு ரூபாயிலிருந்து உண்டு. இன்று ஆலைத்துணிகள் விற்கும் விலையையும்-கதரில் நீங்கள் வாங்கும் பொருள்களின் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கதர்த் துணியின் பெறுமானத்தைச் சொல்லாமலேயே புரிந்து கொள்ளலாம்.

இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமும் இதில் உண்டு. 15 ரூபாய் கொடுத்து ஒரு வேட்டியும், துண்டும் வாங்கினால் அதில் பாதி அந்த வேட்டி-துண்டுகளை தயார் செய்த நூற்பாளர்களுக்கும் - நெசவாளர்களுக்கும் கூலியாகப் போய்ச் சேர்கிறது. கதர்த் துணியில் எது வாங்கினாலும் ஏறக்குறைய அதில் பாதித்தொகை ஏழைத் தொழிலாளர்களுக்கு ஊதியமாகக் கிடைக்கிறது. அவர்கள் யார்? கிராமப் புறங்களிலும், ஒருசில நகர்ப்புறங்களிலும் வேலையில்லாமல் - வாழ்வுக்கு வழி இல்லாமல் வறுமையில் அவதிப்படுபவர்கள். இப்படி இலட்சக்கணக்கான மக்கள் நம்நாட்டில் உள்ளனர். கதர்த் தொழில்தான் அவர்களுக்கு ஆதாரம். அதுதான் அவர்களுக்குச் சோறு போடுகிறது.

நீங்கள் பணம் கொடுத்து கதர்த்துணி வாங்குபொழுது பணத்தின் மதிப்புக்கேற்ற துணி உங்களுக்குக் கிடைப்பதுடன், உங்களது ஏழைச் சகோதர-சகோதரிகளின் அன்றட வாழ்வுக்கும் நீங்கள் உதவி செய்திருக்கிறீர்கள் என்ற மன நிறைவும் கிடைக்கிறது. உங்களது பணம் தனிப்பட்ட ஒருவரின் இரும்புப் பெட்டிக்கோ—கடைத்தரகர்களின் கைகளுக்கோ போய்ச் சேராமல்,

கதரில் கிடைக்கக்கூடிய துணிமணிகள் அவற்றின் விலை ஆகிய விவரங்களை கீழ்வரும் அட்டவணை விளக்கிவிடும்:

| | | |
|---|---|---|
| ஷர்ட்டிங் | ... | (மீட்டருக்கு) |
| வெள்ளை | ... | ரூ. 4.50 முதல் 17.45 வரை |
| கலர் | ... | ரூ. 6.70 முதல் 10.95 வரை |
| சூட்டிங் | | |
| வெள்ளை-கலர் | ... | ரூ. 7.00 முதல் 10.75 வரை |
| டிரில் | ... | ரூ. 5.95 |
| **ரெடிமேட்** | | **(ஒன்று)** |
| சிலாக் | ... | ரூ. 12.00 முதல் 21.00 வரை |
| முழுக்கைச் சட்டை | ... | ரூ. 16 முதல் 25.00 வரை |
| 'குரு' சட்டை | ... | ரூ. 15.000 முதல் 18.00 வரை |
| பட்டு சிலாக் | ... | ரூ. 35 முதல் 50.00 வரை |
| **குழந்தைகள் ரெடிமேட்** | | |
| பாபா சூட் | ... | ரூ. 15.90 முதல் 26.00 வரை |
| மற்ற இரகங்கள் | ... | ரூ. 7.00 முதல் 21.00 வரை |
| புடவைகள்: | ... | |
| 'பாடிக் பிரிண்டட்' புடவை | ... | ரூ. 55.00 முதல் 70.00 வரை.. |

நேரடியாக ஏழைத் தொழிலாளர்களின் மடியில் போய் விழுகிறது என்பதை ஒரு விநாடி எண்ணிப் பாருங்கள்.

கதர்த்துணி நாள்பட உழைக்குமா? அணிந்து கொள்வதற்கு நன்றாக-எடுப்பாக இருக்குமா? என்று சிலருக்குச் சந்தேகம் வரும். ஆள்பாதி-ஆடைபாதி என்பார்கள். நன்றாகச் சலவை செய்த கதர்த்துணி அணிந்தால் அதன் கவர்ச்சியே தனி தான்.

ஒரு துணி நாள்பட உழைக்குமா - உழைக்காதா என்பது அந்தத் துணியை நாம் பயன்படுத்துகிற விதத்தைப் பொறுத்தது. அது எவ்வளவு கெட்டியான-உயர்வான துணியாக இருந்தாலும் அதைக் கவனமாக வைத்துக் கொள்ளாவிட்டால், ஒரே மாதத்தில் உபயோகமற்றுப் போகும். இதற்குக் கதர்த் துணி விலக்கானதல்ல.

நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். சலவை செய்வதற்காக அவர்களால் அதிகம் செலவிட முடியாது. மிகக் குறைந்த செலவில் சலவை செய்யத் தக்க துணிகளே அவர்களுக்குத் தேவை. கதர்த்துணி அத்தகையது. அதை இன்னின்ன விதத்தில் இந்த சோப் போட்டுத்தான் சலவை செய்ய வேண்டுமென்றில்லை. எளிய முறையில் சலவை செய்யலாம்.

மேலும் நமது நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு உகந்தது கதர்த் துணிகள் தான். வெய்யில் காலத்தில் கதர் அணிந்து பார்த்தால் அந்தச் சுகம் தெரியும். அதுபோல் குளிர் காலத்தில்-மழைக்காலத்தில் கதர்த் துணியின் சிறப்பு தெரியும்.

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியமானது தமிழகத்தில் கதர் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளது. ரூரல் டெக்ஸ்டைல் சென்டர் (Rural Textile Centres) என்று சொல்லப்படும் கதர் நூற்பு நிலையங்கள் மற்றும்கதர் நெசவு நிலையங்கள், இன்று கதர்த் துணிக்கு உள்ள கிராக்கியையும் - தேவைப்பாட்டையும் நிறைவு செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாடு - பாண்டிச்சேரி மாநிலங்களில் 150-க்கும் மேற்பட்ட காதி கிராப்ட் நிலையங்கள், எண்ணற்ற கதர்த்துணி இரகங்களை விற்பனை செய்து வருகின்றன. அருகிலுள்ள கதர் கிராப்ட்டுக்கு ஒரு முறை சென்று பாருங்கள்... கதர்த் துணி பற்றிய புதுமையான இந்த உண்மைகளை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.



# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

## 20. ஊர்ப் பஞ்சாயத்தில் புது நீதி விசாரணை!

திட்டமிட்ட காரியத்தைத் திட்டமிட்டவாறே செய்து முடித்துவிட்ட ஆணவத்துடன் நின்று கொண்டிருந்த சிலட்டூர்க் கங்காணி மகள் கன்னி பவளக்கொடியை நோக்கி ஆத்திரம் கொடிகட்டிப் பறக்க நடந்தாள், ஆவணத்தாங் கோட்டை ராமையாத் தேவர் மகள் அன்னக்கொடி.

''அடிபாவி! பழிகாரி!'' என்று வீரிட்டுக்கொண்டே விரைந்தாள் அவள். வீரிட்ட குரல் வீங்கி வெடிப்பதற்குள், பவளக்கொடியின் கறுப்புக் கதுப்புக் கன்னங்களிலே ஓங்கி ஓர் அறை விட்டாள் அன்னம்.

பசையும் பச்சாப்பும் மிகுந்த பெருந்தனக்காரரின் மகள் பவளக்கொடி இந்தப் பயங்கரமான அறையை எப்படி எதிர்பார்த்திருப்பாள்? பாவம் அவள் அப்படியே கதிகலங்கி, பொறிகலங்கி நின்றுவிட்டாள்!

''கேடு கெட்ட குட்டி உனக்கு என் மூஞ்சியிலே அறையறதுக்கு அம்மாம் கொழுப்பு முட்டுப் பூடுச்சாங் காட்டி?'' என்று கொள்ளி வாய்ப் பிசாசு மாதிரிக் கத்திக் கொண்டே அன்னக்கொடிக்குப் பதில் அறை கொடுக்கக் கையை ஓங்கலானாள் பவளக் கொடி.

பவளத்தின் 'சவடால்' அன்னத்திடமா சாயும்? அன்னம் அவள் மார்பில் கைவைத்து ஆவேசத்தோடு அப்படியே தள்ளிவிட்டாள்.

நாவற்பழம் மண்ணிலே உதிருமே அந்தக்கதையாகச் சாய்ந்தாள் பவளம். பதனமாக எழுந்தாள்; நின்றாள்.

பொங்குமாங்கடலெனக் காட்சியளிக்கின்றாள் கன்னிக் கொழுந்து அன்னம்!

"அடி பாவிப்பட்டி! அடி மூதேவி! தர்மராட்டமும் அரிச்சந்திரராட்டமும் மனிதாபிமானத்தோடவும் ஊர்நாட்டிலே மானத்தோட நடமாடிக்கிட்டிருக்கிற என்னோட அன்பு அத்தான் வீரமணி மேலேயா இருந்திருந்து நீ பழிபாவம் சுமத்தத் துணிஞ்சே? என் ஆசைமச்சான் வீரமணிபேரிலே அநியாய அவதூறு சுமத்துறதன் மூலம் உன்னோட பேரிலே நீயே பழிசுமத்திக்கிட நேரிட்ட இடுசாமச்சங்கதி நாளைக்கு நம்ம மறக்குலச்சமுதாயத்திலே காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கினால், கன்னிப் பொண்ணான உன் கதி என்னாகும்னு ரோசிச்சுப் பார்க்கக் கூடவா உனக்கு மதிகெட்டுப் போச்சு?''

தடம்புரண்டு நழுவியோட முனைந்தாள் பவளக்கொடி.

சீமைக் கொய்யாப் பழத்தைக் கள்ளத்தனமாகக் கடித்துத் தின்றுவிட்டு நழுவி ஓடிவிட முயலும் எலியைத் துரத்திப் பிடித்துக் கைக்கு மெய்யாகத் தண்டனை கொடுக்க முனைவது மாதிரி, பவளக்கொடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அன்னம்.

''ஏ பவளம்! உன்னைப்போய் தங்கச்சின்னு விளிச்சேனே! நான் ஒரு பைத்தியக்காரி! ஆனா நீ பலே கைகாரி! அது மட்டுமல்ல; நீ படு சூதுக்காரி! அதாலேதான், யானை தன் தலை மேலே மண்ணை வாரிக் கொட்டிக்கிடுற தொப்ப, நீயே உன் பேரிலே வினையைத் தூவி விதைச்சுப்பிட துணிஞ்சிருக்கே!

''சே! நீயும் ஒரு பொம்பளையா? தமிழ்ச்சாதியோட நல்ல பேரைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு நீ! சீ! எச்சிற் கலைக்கு அலைகிற வெறிநாயே!''

சிம்மக்குரல் வீசி முழங்கிவிட்டு, எச்சிலைக் காறிப் பவளத்தின் மீது துப்பிவிட்டாள் அன்னம்.

அவ்வளவுதான்!

பவளக்கொடி காட்டேரியாக மாறினாள். அன்னத்தின் பேரில் அவளும் பதிலுக்குப் பதில் எச்சிலை உமிழ்ந்தாள். அத்துடன் விடவில்லை, கங்காணி மகள். அன்னத்தின் குழற் கற்றையை மடக்கிப் பிடித்துக் கொண்டாள்.

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.



ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

தொலைபேசி சென்னை 29684 81954 திருச்சி 3814 கோவை 35051





"சுயத்தைப் பார்த்து இளிக்கு தாம் பித்தளை! நானடி கெட்டழிஞ்சவ? நீதான் கெட்டழிஞ்ச லம்பாடிச் சிறுக்கி. உன் சிங்கப்பூர் அப்பன் செங்கமலத்தோட கொசுவத்தைச் சுற்றிக்கிட்டு இருந்திட்டு, இப்ப ஏமாந்து நிற்கலையா? அந்தப் புத்திதானே உனக்கும் இருக்கும்! நான் ராமருக்கு வாய்ச்சிட்ட சீதை கணக்காக்கும்!

"எனக்கு அந்த வீரமணி நம்பிக்கைத் துரோகம் செஞ்சு என்னை மோசம் செய்யத் துணிஞ்சால், அப்பவே அந்த வீரமணியை நாசமாக்கிப்பிட மாட்டேனா?" என்று முழங்கினாள் பவளம்.

"ஆ" என்று கூக்குரல் பரப்பிப் பவளத்திடமிருந்து விடுதலை பெற்று விட்டாள் அபலை அன்னம். 'அப்படின்னா, பவளம் செப்புறதெல்லாம் மெய்யேதானா?' மெய் நடுங்கியது. புயலிடை அகப்பட்ட அகல் விளக்கானாள். கொழுந்த விட்டெரிந்த மனத்திரி ஏன் இப்படி 'அலமந்து' துடிக்கிறது? பவளம் கடைசிவரை அவள் பிடியில் கிடைத்தால்தானே? அவள் ஆத்திரத்துடன் தவித்தாள்; வேதனையோடு துடித்தாள்; அச்சத்தோடு துவண்டாள். கண்ணீர் மடைமாறிய வெள்ளமாக வெட்டிச் சாடிற்று.

'மச்சான், வெறிபிடிச்ச இந்த நாய் உங்களைப் பார்த்துக் குலைக்கிறது ஒட்டுக்குமே நிசந்தானா? உங்களை மலைபோலே நம்பிக்கிட்டிருந்தேனே நான்? கடைசிலே, நீங்க சதம்னு உங்க காலடியிலே உயிர்ச்சரணை அடைஞ்சிருந்த உங்க அருமை அம்மான் மகளான என்னை மலை மேலேயிருந்து உருட்டி விட்டிடுவீங்க போலத் தோணுதுங்களே? ஐயையோ, தெய்வமே! என் சாமியே வீரமணி!' —மனம் தூண்டிற் புழுவாகித் துடிதுடித்தது!

சூழ்வினை, மாய விதியாகச் சூழ்ந்து, மௌனத்தின் குழலைக் கைகொட்டிச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறதா, என்ன?

இப்போது உள்ள சூழலிலே அன்னத்திற்கு அழத்தான் தெரிகிறது!

"ஏட்டி அன்னக்குட்டி! ஏண்டி வாயடைச்சிட்டே? கோட்டையிலே பிறந்தாலும் போட்ட சுழி தப்பாது அப்படின்னு ஒரு பழமொழி உண்டே, அந்தக் கதை தெரியாதா உனக்கு? பாவம்!" என்று நிர்த்தாட்சண்யமாகவும் ஆணவச் செருக்காகவும் சிரிப்பினை வெடித்தாள் பவளம்.

குனிந்திருந்த தலையைப் பைய நிமிர்த்தினாள் அன்னம். பவளத்தை ஏக்கமும் சோகமும் ஏமாற்றமும் சூழ நோக்கினாள் அவள்.



பவளம் மேலும் சிரிக்கலானாள். ''ஏலே, அன்னம்! இனிமே வீரமணி எனக்கேதானாக்கும்! வீரமணி என்னோட ஆசை மச்சானாகி, நேச மச்சானாகி, வள்ளிசாய் நாள் முப்பத்தஞ்சு ஆகிடுச்சு! ஆமா!'' என்றாள்.

பவளம் பெண்தானா? அவளைக் கடிந்துக் குதறிப்போட்டால் என்ன? - அன்னத்தின் கைகள் மறுபடி குறுகுறுக்கத் தொடங்கின. 'இவளை மாதிரி மான ரோசம், சூடு, சுரணை இல்லாத ஈனச்சென்மமாக என் அன்பு மச்சான் வீரமணியையும் ஆக்கிப்போடக் கங்கணம் கட்டித்தான் கூத்து ஆடுறாள் போலே!-கூத்தடிக்கிறாள் போலே இந்தப்பாவி! பற்கள் கடிபட்டன. பவளத்தை விசையாக நெருங்கினாள் அன்னம்.

''அசலூர்க் குட்டியாச்சே நீ அப்படின்னு உன்னைச் சமிச்சு உனக்கு மாப்பு விட்டிருக்கிறேன். இல்லாங்காட்டி, உன்னை முந்தியே கடிச்சுக் குதறி வீசியிருப்பேன்! என் ஆசைமச்சான் பாதை தவறிப் போற ஆம்பளையே இல்லே. அந்த நம்பிக்கை இந்த வினாடி வரை எனக்கு உண்டு. ஆனா, நீயாக மோடி பண்ணி என் மச்சானை எங்கிட்டேயிருந்து அபகரிச்சுக்கிட உனக்கு வயசு பற்றாது! எதுவுமே என் மச்சான் வீரமணியோட தீர்ப்புப் படித்தான் நடக்கும்!''

அன்னம் தீயாகிச் சிதறினாள்.

பவளக்கொடி துளிகூட அதிர்ச்சியடையாமல், தன்னுடைய பயங்கரச் சிரிப்பைத் தொடர்ந்து வெடித்தாள்.

''ஏலே, பவளம்! நான் கேட்கப்போற சங்கதிக்கெல்லாம் பதில் சொல்லு, பார்க்கலாம்!''

''ஊம்!''

''நீயும் வீரமணியும் கூடிக் களிச்சிங்க என்கிறதுக்குச் சாட்சி என்ன வச்சிருக்கே ? சொல்லுடி, பவளம், சொல்லு!

''காளி மகமாயி சத்தியமாகச் சாட்சி வச்சிருக்கேன்!''

''ஓகோ! அப்படியா? அப்படீன்னா, இப்பவே என் பின்னாடி ஓடிவா. இப்பவே தமுக்கடிச்சு, காளி ஆத்தா சந்நதித் திட்டிலே ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டுறேன். இப்பவே எனக்கு எது நிஜம், எது பொய், யார் அசல், யார் போலி என்கிற உண்மையும் தர்மமும் சத்தியமும் விளங்கியாகவேணும்! ...ம்..வாடி, பவளம்!''



அழைத்துக் கொண்டே பவளக்கொடியின் கரங்களைப் பற்றி, மாட்டை இழுப்பது போன்று 'பரபர' வென்று இழுக்கலானாள் அன்னக்கொடி.

ஆனால், பவளமோ திமிறிக் கொண்டு பின்னுக்கு இழுத்தாள். அன்னத்தின் பிடியை விட்டு விலகிக் கொண்டாள். ''அன்னம், நான் கெட்டுப் போனவள் என்கிற ரகசியத்தை ஊரைக் கூட்டித் தமுக்குக் கொட்ட நினைக்கிறே நீ. நான் வாரேன். ஆனா, அதே ஊர்ப்பஞ்சாயத்திலே, உன் ஆசை மச்சான் வீரமணியாலே நான் கெடுக்கப்படல்லே என்கிறதையும் நிரூபிச்சுக் காட்டவேணுமாக்கும்! ஆமா, சொல்லிப்புட்டேன்!'' என்று ஓங்காரமிடலானாள் பவளக்கொடி. வெயிலில் மூக்குத்தி பளபளத்தது.

## கல் குழாய்த் தொழிற்சாலை! கடம்பத்தூரில்

அரசு துறை நிறுவனமான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தினர் செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் 6000 டன் குழாய்கள் உற்பத்தி செய்யக் கூடிய கல் குழாய்த் தொழிற்சாலை ஒன்றை நிறுவவிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலேயே இத்தகைய தொழிற்சாலைகளில் இதுவே பெரிதாக விளங்கும்.

இந்தத் தொழிற்சாலை ரூ. 35 இலட்சம் செலவில் நிறுவப்படும்

இப்பேச்சைக் கேட்டதும், அப்படியே வாயடைத்துப் போய்விட்டாள் அன்னம். மறுபேச்சாடவில்லை அவள். பவளக்கொடியின் அறைபடாத இன்னொரு கன்னத்திலும் இப்போது ஓங்கி ஓர் அறை கொடுத்தாள் அன்னக்கொடி. பத்ரகாளியாக உருக்கொண்டு விட்டாளா அன்னம் ?

அப்போது:

''அன்னம்!'' என்று விளித்த வண்ணம், அன்னத்திற்கு உடைமை பூண்ட வெள்ளைக் காளையும் கையுமாக அங்கே தோன்றினான் வீரமணி!

# 21. மணல் வீடு!

'தேடிவந்த தெய்வம்' என்று சொல்லுவது உண்டல்லவா?- தெய்வம் தேடிவருமோ என்னவோ? ஆனால், வீரமணி அன்னத்தைத் தேடி வந்தான்.

வீரமணியை உச்சிப் பொழுதில், தன் இல்லத்தில் அன்னம் எதிர்பார்க்கவில்லைதான். என்றாலும், பழி சுமத்திப் பவளக்கொடியைப் பழிக்கு ஆளாக்கப்பட்டுள்ள ஆசை மச்சான் வீரமணியின் முன்னிலையில் நிறுத்தி நீதி விசாரணை நடத்திவிடவேண்டுமென்ற உள்நோக்கத் துடிப்போடுதான், ஆத்தா சந்நிதானத்தில் 'ஊர்ப் பஞ்சாயம்' கூட்டப் போவதாகப் 'பாவலா' காட்டி, அவளைக் கையைப் பிடித்து இழுத்தாள் அன்னம்.

வீரமணி வெள்ளைக்காளையும் கையுமாக அப்போது அங்கே காட்சியளித்தான்!

வீரமணியைக் கண்டதும், அவனைத் தேடிவந்த தெய்வமெனவே மதித்தாள் அன்னம். அடித்தாலும், அணைத்தாலும் சேய்க்குத் தாய்தான் சதம்.

வீரமணியைக் கண்டதும், தாயைக் கண்ட சேயாக மாறிவிட்டாள் அன்னக்கொடி. உடனே ''மச்சான்'' என்று அலறினாள். கதறினாள்!.

வீரமணிக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் விளங்கவில்லை. ''அன்னம்! ஏன் அழுகிறே, அன்னம்? என்னத்தைப் பறிகொடுத்திட்டே? உன்னோட வெள்ளைக்காளையைத்தான் நான் உன்கிட்டே வாக்குக் கொடுத்ததுபோல கொண்டாந்து சேர்த்துப் புட்டேனே? என் அப்பாரோட வம்பை விலை கொடுத்து வாங்கினாலும் பாதகமில்லே ; உன்னோட அன்பை விலை கொடுக்காமல் வாங்கக் கடமைப்பட்டவன்; உரிமைப்பட்டவன் அப்படின்னு தீர்மானம் பண்ணித்தான் மறுதக்கமும் கோதாவிலே இறங்கிப்புட்டேனே? இரங்கமாட்டீயா நீ, அன்னம்?'' என்று சிறுபிள்ளை மாதிரி செருமத் தொடங்கினான் வீரமணி.

வெள்ளை கத்திக் கொண்டே அன்னத்திடம் ஓடிப் பாய்ந்து வந்து நின்றது.

அத்தானை ஏக்கத்தோடும் சோகத்துடனும் பார்த்தவண்ணம், வெள்ளையைக் கைத்தாங்கலாகப் பிடித்துச் சென்று மாட்டுத் தொழுவத்தின் நிழலில் கட்டிப் போட்டுவிட்டுத் திரும்பிய அன்னத்தின் பேதை நெஞ்சமும் கூடத்தான் கட்டிப் போட்டுவிட்ட பாங்கில் தவித்தது; தடுமாறியது!

பவளக்கொடியையும், அன்னக்கொடியையும் வீரமணி மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

''என்ன நடந்திச்சு, அன்னம்?''

''மச்சான்'' என்று மீண்டும் விம்மினாள் அன்னம். நடந்த கதையை எங்ஙனம் விளக்குவது என்ற துப்பு விளங்காமல் குழப்பமும் ஏக்கமும் சலனமும் சூழ்ந்திட வீரமணியை உறுத்துப் பார்வையிடலானாள் கன்னி. ''என்ன நடக்கப்படாதின்னு நான் கவலைப்பட்டேனோ, என்ன நடக்காதின்னு நான் நம்பினேனோ, அது நடந்து போச்சுங்க!'' என்று பொருமினாள் அவள். தொடர்ந்து பவளக் கொடியை நடுங்கும் விரலால் சுட்டிக்காட்டி, ''இவளைத் தெரியுமா உங்களுக்கு?'' என்று ஆத்திரக் குரலெடுத்துக் கேள்வி கேட்டாள் அன்னம்.

குழப்பமும் சங்கடமும் மலிந்திட, பவளக்கொடியை ஏற இறங்கப் பார்வை பரப்பினான் வீரமணி; எங்கேயோ எப்போதோ அந்த முகத்தை, அந்தப் பார்வையை இதற்கு முன்னம் சந்தித்திருப்பதாகவே அவனுக்குப் பட்டது. பிறகு, பவளக்கொடியை அன்புடன் ஊடுருவியவனாக, சற்றே நெகிழ்ந்த வெட்கச் சிதறலோடு, ''நீ..நீ..பவளக்கொடி ....சிலட்டூர்ப் பவளக்கொடி தானே?'' என்று கேட்டான்.

இவளைத்தான் ஏதோ ஒரு பிரதிப் பிரயோசனம் கருதி, தன்னுடைய தலையில் அப்பா கட்டக் கங்கணம் கட்டியிருந்தார் என்கிற விவரத்தையும் அவன் மனச்சாட்சி உணர்ந்துதான் இருந்தது. ஆனால், இவளேதான் இப்போது தன் மூச்சைப் பிரித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறாள் என்ற விஷயத்தை மட்டும் அவன் உணர்ந்திருக்க இயலாது!

ஆடு திருடிய கள்ளிக்குச் சமதையாக நின்றாள் பவளக்கொடி. பின்னர், என்னவோ முடிவுக்கு வந்தவளாக, ''ஆமா'' என்று தலையைப் பலி ஆடு மாதிரி உலுக்கிக் குலுக்கினாள். வைரச் சிமிக்கிகளின் ஒளியில் மூக்குத்திக் கற்கள் முகம் கண்டன. மாரகச் சேலை இடம் பெயர்ந்த காரணத்தால், கழுத்து அட்டிகை இப்போது தான் தன்னைக் காட்டிக் சொள்ளவோ, காட்டிக் கொடுக்கவோ வேலை பார்த்திருக்கலாம்.

''பவளம்! என்னைத் தெரியுதா, உனக்கு?''

''உங்களை எப்படிங்க மறப்பேன் நான்? நெஞ்சிலே உள்ளதை நினைப்பிலே கொண்டாந்து, உள்ளதை உள்ளபடி சொல்றேனுங்க! நெஞ்சை ஒளிச்சு ஒரு வஞ்சகம் இருக்குங்களா?''

வீரமணியின் மனப் பதற்றம் சூடு பிடித்தது.



பவளம் பழைய காட்டேரியாக உருக்கொண்டாள்! உடனே ''மச்சான்''! என்று வீரிட்டாள். குரல் தழுதழுத்தது. கறுப்புக் கண்கள் கன்றிச் சிவந்தன. சிவப்பில் ஒரு 'சாகசம்' சிவப்பு விளக்குக் காட்டுகிறதே?......

அன்னக்கொடிக்குச் சுருக்கென்றது.

வீரமணி உந்திக்கமலத்தில் உதை பட்டமாதிரி பதைத்தான்; ''மச்சானா? எங்கே உன் மச்சான்? யாரு உன் மச்சான்?'' என்று ஆத்திரத்தோடு வினவினான்.

பவளக்கொடி விம்மத் தொடங்கினாள். ''நீங்கதான் என் மச்சான்! என்னோட மச்சான், நீங்களேதானுங்க!'' என்று நறுக்குத் தெறித்தாற் போல முழக்கம் செய்தாள்.

'அடிபாவி'— வீரமணிக்குக் கண் தெரியாத காட்டிலே கண்களைக் கட்டிவிட்ட மாதிரி இருந்தது. 'கண்ணாமூச்சி விளையாடுறாளே இந்தச் சிறுக்கி?'— சீறுகொண்டான் வீரமணி. ''பவளம், என்னா கதை பண்ணுறே?'' என்று ஆவேசத் தீ கொழுந்து விட்டெரிய, அவளை அண்டினான்.

அன்னம் முள்மேல் நிற்கிறாள்!

''நானா கதை பண்ணுறேன்? நீங்கதான் எல்லாத்தையும் மறந்துப்புட்டு, ஒண்ணுமே அறியாத பச்சைப்பிள்ளை கணக்கிலே என்னை என்னென்னமோ விசாரிக்கிறீங்க! அடிநாள் தொட்டு என் நெஞ்சைத் தொட்டவங்க நீங்க. துல்லிதமான அந்த மயக்கத்திலே மயங்கினேன் நான். ஆனா, நீங்களோ அன்னத்தையே கொண்டுக்கிடப் போறதாகத் தீர்ப்பு படிச்சிட்டீங்களாம்! ஐயோ, நீங்க எனக்குத் துரோகம் செஞ்சிட்டீங்களே! மச்சான்! ''

வீரமணியின் இதயத்தை என்னவோ ஓர் உணர்வு பிராண்டத் தொடங்கியது. ''நான எப்படி உனக்குத் துரோகம் செஞ்சதாக அர்த்தமாக முடியும் பவளக்கொடி?''

''நீங்க எனக்குத் துரோகமே செய்யலையா? ஒரு நிலா ராத்திரிப் பயணத்திலே என்னை எங்க ஊர் மாரியத்தா கம்மாய் கரைப்பத்தைப் பக்கம் சந்திச்சு, என்னையே நீங்க கண்ணாலம் கட்டிக்கிடுதாக ஆத்தா பேரிலே ஆணை வச்சுக் கையடிச்சுக் கொடுத்தீங்களே, அப்ப என்னா நடந்திச்சாம்..''

தலையில் இடிவிழுந்த மாதிரி தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான், வீரமணி.

''ஒரு ஆவணிக் கெடுவிலே உங்க ஊரையும், எங்க ஊரையும் ஒருமிக்கக் கூட்டி ருசுப்படுத்திச் சொல்லத்தான் போறேன்! நீங்க என்னை ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்த மாதிரியே, நீங்க உங்க முறைப்பொண்ணு அன்னக்கொடியையும் ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்திருக்கீங்க......என்கிற நடப்பையும் மூதலிச்சு மெய்ப்பிக்கத்தான் போறேன். ஆமா!''

''பவளம்....!''

அன்னக்கொடி மட்டிலும் தான் இப்படி அலறிக் கதறினாளா? வீரமணியும்தான்!

(வளரும்.)





# திருச்சியில் நடைபெறும் திருப்பணி

நரிக்குறவர்கள்!

இயற்கையிலேயே மிகவும் பரபரப்பான - நிச்சயமில்லாத வாழ்க்கை அமைப்பு அமையப் பெற்றவர்கள். விலங்குகள் கூடத் தமக்கென்று நிலையான இடத்தைத் தேடிக் கொள்கின்றன. ஆனால், மனித சமுதாயத்தில் அங்கம் பெறும் இந்த இனத்தினர், நிலையான-நீடித்த இன்ப வாழ்வுக்கு உரிய உறைவிடத்தை ஒருபோதும் தேடிக் கொள்வதில்லை. எப்போதும் இடம்விட்டு இடம் மாறுவதும், ஊர் விட்டு ஊர் அலைவதும் இவர்களுக்கு வழக்கமான செயல்கள். காலையில் ஓர் ஊருக்குள் நுழைவார்கள்; அவசர அவசரமாகக் கூடாரத்தை அமைப்பார்கள்; மாலையில் அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று, நம் கண்களை விட்டே மறைந்துவிடுவார்கள்; நம்மை எல்லாம் வியப்புக்கு ஆளாக்கி விடுவார்கள். சுருக்கமாகச் சொன்னால் நரிக்குறவர்களுக்கு நல்வாழ்க்கை அமைத்துத் தருவது என்பது பொய்யாய், கனவாய், கற்பனையாய்க் காட்சியளித்து வந்தது.

மெய்ம்மை, பெருந்தன்மை, ஆற்றல், நம்பிக்கை, ஒருமைப்பாடு-இவை, நரிக்குறவர்கள் விடாப்பிடியாகக் கொண்டிருக்கும் குணநலன்கள். இவ்வளவு உயர்ந்த குணநலன்கள் கொண்டிருக்கும் இந்த இனம்-கல்வி கற்பதில்லை என்பதற்காக அசட்டை செய்யப்படக் கூடாது.

நரிக்குறவர்களுக்கு நல்ல தொண்டாற்றுகின்ற வாய்ப்பைத் திருச்சி மாவட்டம் பெற்றிருக்கிறது. இந்த மாவட்டத்தில் தொடர்ந்து 15 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் நரிக்குறவர்களுக்கு நாகரிகமான, அருமையான, நிலையான வாழ்வை வகுத்துக் கொடுப்பதில் திருச்சி முன்னணியில் இருக்கிறது. இந்த இனம் தமிழக அரசினரால் கொடுக்கப்பட்ட ஓரளவு நிலத்தில் வேளாண்மையைச் செய்து வருகிறது. வேளாண்மையைத் தவிர, ஊசி, கொண்டை ஊசி, பாசிகள் மற்றும் சின்னஞ்சிறு பொருள்களை விற்றுத் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் இந்த இனத்தினர். தஞ்சை-திருச்சி முதன்மைச் சாலையில் - அமைந்துள்ள - தேவராயநேரி அருகில் இந்த நரிக்குறவர்கள் அங்கும் இங்கும் அலைந்து செல்வது மறக்க முடியாத காட்சியாகும்.

நாகரிகம் மலர்ந்துள்ள இந்த நவீன யுகத்தில் நாகரிகத்தால் கவரப்படாமல் வாழ்வது உண்மையிலேயே, பரிதாபமான காட்சிதான். அவர்களது குடியிருப்புப் பிரச்சினை மிக நீண்ட காலத் தேவையாகும்.

அரிசன வீட்டு வசதிக் கழகம், தமிழக அரசினால் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களில் புகழ் பெற்ற திட்டமாகும். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்ற நம்பிக்கை கொண்டு, ஆயிரக்கணக்கான ஏழைமக்களின் கண்ணீரைத் துடைக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரும் எண்ணற்ற திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

திருச்சியைப் பொறுத்த அளவில், நரிக்குறவர்களின் குடியிருப்புப் பிரச்சினைக்காக அரும் முயற்சி, எடுத்துள்ளார், மாவட்ட ஆட்சியாளர் வைத்தியலிங்கம் அவர்கள்.

தமிழ்நாடு முழுதும் நரிக்குறவர் சமுதாயத்திற்காக வீடுகள் கட்டப்படுகின்றன. வீட்டின் விலை ரூபாய் 3,000. திருச்சி-அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் உதவியால் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பெற்று வருகிறது; உண்மையில் நரிக்குறவர் இனத்துக்கு நலம் சேர்த்திட இது ஒரு நவீன திட்டம்—மூலமுதலான திட்டம்.

எந்த விதமான பொறுப்பு உணர்ச்சியும் இல்லாது, நாள்தோறும் இடம் விட்டு இடம் மாறிச் செல்லும் இந்த நரிக்குறவர் சமுதாயம் நலமடைவதற்காகத் தீட்டப்படும் இந்தத் திட்டம் வெற்றி பெறப் பணிபுரியும் மாவட்ட ஆட்சியாளரின் முயற்சியினால், ஒவ்வொரு நரிக்குறவர் குடும்பத்திடமும் அவர்களின் நலத்தை எண்ணி ரூ. 500/- நிலையான பொறுப்புத் தொகையாக வசூலிக்கப்பெற்று ரூ. 3500 விலையுள்ள வீடு வழங்கப்படுகிறது.



இந்தத் திட்டத்திற்காக ரூ. 20 ஆயிரம் திரட்டப்பெற்று, சில திங்களுக்கு முன்னர்தான் வங்கியில் போடப்பட்டது. நரிக்குறவர்கள் இனியும் கல்வி அறிவில்லாதவர்களாக இருக்கவேண்டிய தேவையில்லை. ஏற்கெனவே இங்கே அவர்களுக்காக. ஒரு பள்ளி நடைபெற்று வருகிறது. இங்கே நரிக்குறவர் இனத்து மாணவர் 55 பேர் கல்வி கற்கின்றனர். துவக்கப் பள்ளி ஒன்றினைக் கட்டுமாறு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அதிகாரிகளுக்கு, மாவட்ட ஆட்சியாளர் ஆணை பிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆகஸ்டு திங்கள் 23-ஆம் நாளன்று நரிக்குறவர் வீடு அமைப்புத் திட்டத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். முதல்வரின் வெற்றிக்கரங்களால் அடித்தளம் அமைக்கப் பெற்ற இந்தத் திட்டம்-வீடற்ற நரிக்குறவர்களுக்கு நல்வாழ்வு-நிலையான வாழ்வு உருவாக்கித் தரும் என்பது உறுதி. நரிக்குறவர்கள் தெருவெல்லாம் அலைந்து திரியும் காட்சி, எதிர் காலத்தில் கற்பனைக் காட்சியாகத்தான் இருக்க முடியும் என்பதைத் திருச்சி நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

—த. பி.





# உலக நல்வாழ்வு நிறுவனம் உருவாக்கிய பயிற்சி

குமார்

மக்கள் தொகைப் பிரச்சினை விஞடிதோறும் வளர்ந்து, பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டு வருவதை நாம் அறிவோம். நம்மை நோக்கி மிக விரைவாக நெருங்கி வருகின்ற அந்தப் பேராபத்தைத் தடுப்பதற்கு நாள்தோறும் சிந்தித்துச் சிந்தித்துப் பல்வேறு திட்டங்களை அரசும், நாட்டு நலனில் அக்கறைகொண்ட நல்லவர்களும் முயன்று உருவாக்கி வருகின்றனர்.

இன்றைய நாளில் திட்டமிட்ட குடும்பத்தை-அளவான குடும்பத்தை உருவாக்குவதில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்ற நாம்-அதே நேரத்தில் கருவுற்ற அன்னையர் தங்கள் உடல் நலனைப் பேணிக் காத்துத் தங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் காண்பதற்குரிய சரியான கவனிப்பும், அறிவுரைகளும் பெறுகின்றனரா என்பதைக் கவனிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் நீங்காப் பொறுப்பாகும்.



முன்னேற்றம் பெற்ற நாடுகளிலும்கூட வளர்ச்சியுற்ற குழந்தைகளின் (14 வயதுவரை) இறப்பு விகிதத்தைக் காட்டிலும் புதிதாகப் பிறந்த சில நாள் குழந்தைகளின் இறப்பு விகிதம் 15 பங்கு அதிகரித்துள்ளது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

வீட்டில் நடைபெறுகின்ற மகப்பேற்றினுல் பிறக்கின்ற குழந்தைகளில் நான்கில் ஒன்று அதன் ஒரு மாதகால வளர்ச்சிக்குள் இறந்து விடுகிறது என்பது தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை, மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவத்துறை ஆகியவை நடத்தியுள்ள ஆராய்ச்சி முடிவாகும். இந்த வகையில் இந்தியாவில் மட்டும் ஆண்டுக்குச் சுமார் 4,00,000 குழந்தைகள் இறக்கின்றன. குழந்தைகள், பிறப்பிலே குறைந்த எடையில் இருத்தல், மகப்பேற்று முறையில் கையாளுகின்ற தவருன வழிகள், தொற்றுநோய் போன்றவைகளால் இத்தகைய கொடூரமான இறப்புக்கள் நிகழ்கின்றன.

## அட்டை சொல்லும் கட்டுரை

இப்படிப்பட்ட மிகப்பெரிய விபத்துக்களைத் தடுத்து நிறுத்த வழி உண்டா? புதிதாகப் பிறக்கின்ற குழந்தைகளைச் சரியான வகையில் மருத்துவச் சிகிச்சைகளின் மூலம் காப்பாற்ற முடியுமா? கருவுற்ற தாய்மார்கள் தங்களின் உடல் நிலையைத் தக்கமுறையில் வைத்துக் கொள்ள முடியுமா? என்பன போன்ற விஞக்களுக்கு விடை காணுகின்ற வகையில் உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organisation) குழந்தைகள் மருத்துவம் பற்றிய அனைத்து நாட்டுப் பயிற்சி ஒன்றினை அண்மையில் சென்னையில் நடத்தியது.

புதிதாகப் பிறந்த குழந்தைகளை-பிறந்த சில நாட்கள்வரை அவைகளுக்கு நல்ல மருத்துவ வசதிகள் அளித்துக் காத்தல்' (Care of New-born) குறித்துத் தொடங்கப் பெற்ற அனைத்து நாட்டுச் சிறப்புப் பயிற்சி ஒரு குறுகிய காலப் பயிற்சியாக ஐந்து வாரங்கள் கொண்ட பயிற்சியாக நடைபெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்த செவிலியர், மருத்துவர் பங்கு பெற்ற இப்பயிற்சி, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல ஆராய்ச்சி மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலேயே குழந்தைகள் மருத்துவ வளர்ச்சியில் இந்த மருத்துவமனை முன்னணியில் நிற்கிறது. இந்தியாவிலேயே குழந்தைகளுக்கான மருத்துவப் பகுதியை முதன் முதலில் —28 ஆண்டுகளுக்கு முன்பே இங்குத் தொடங்கினுர்கள். மருத்துவமனையாக முதலில் இயங்கிப் பின்னர், குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமாக 1967-ஆம் ஆண்டு முதல் இது செயல்பட்டு வருகிறது. அரசு அளித்த ஊக்கத்தினுலும், உற்சாகத்தினுலும், உதவிகளினுலும் நம் நாட்டிலே-ஏன் தென் கிழக்கு ஆசியாவிலேயே வேறு எந்த மருத்துவ நிலையமும் பெற்றிராத வசதிகளையும் சாதனங்களையும் பெற்றுச் சீரிய முறையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க ஒன்றுகும்.

இத்தகைய அனைத்து நாட்டுப் பயிற்சி இங்கு நடைபெறுவது இது முதல் தடவை அல்ல. 1968- ஆம் ஆண்டில் உலக நல்வாழ்வு நிறுவனம், 'பிறந்த குழந்தைகளுக்குச் சில நாட்கள் வரை எத்தகைய வகையில் மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும், எந்தெந்த மருத்துவச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்' என்பனவற்றை (Neonatology) விளக்குகின்ற வகையில் அனைத்து நாட்டினைச் சார்ந்த மருத்துவத் துறையினர் கலந்து விவாதிக்கின்ற ஒரு பயிற்சியினை இரண்டு வார காலம் நடத்தியது.



பிறந்த ஒரு வாரக் குழந்தையைப் பரிசோதித்தல



குழந்தையிடம் காணப்படும் குறைபாடுகள் குறித்து விளக்குதல்



# உலகில் எதுவும் உங்களுக்கு மங்கலாகத் தெரிகிறதா?

கண்பார்வைக்கு சீரான ஒளி அத்தியாவசியமாகும். எதையும் நன்று காண, கூசலைத்தடுக்க மற்றும் வர்ணங்களை சிதறல் இன்றித் தெளிவாகக் காண அது மிகவும் உதவுகிறது. உங்கள் வீட்டிற்குகந்த நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்கான்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.





பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்–
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

PHILIPS

PHL-7 194

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

# செழிப்புக்கு வழிகாட்டும்

# 'ஜே' பண்ணை!




'ஓராண்டிற்குத் திட்டமிட்டால்', நெல் பயிரிடுக!

'பத்தாண்டிற்குத் திட்டமிட்டால்', பழம் தரும் மரம் நடுக!

'நூறு ஆண்டிற்குத் திட்டமிட்டால்', மக்களுக்குக் கல்வி கற்பித்திடுக!

'நீண்டகாலத் திட்டமிடுவதில்' நம்பிக்கை கொள்க!

என்று எழுதப்பட்ட பொன்மொழியையும், அதற்கு மேலே சிரித்த முகத்துடன் உள்ள தொழில் அதிபர் திரு. எஸ். அனந்த ராமகிருஷ்ணன் அவர்களது பெரிய புகைப்படத்தையும் 'ஜே' பண்ணை அலுவலகத்திற்குச் செல்லும் யாரும் பார்த்துச் சிந்திக்காமல் இருக்க முடியாது!

'ஜே' பண்ணை, நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்குவதற்குரிய வழிமுறைகளை வகுத்து, அவைகளைச் செயல்படுத்திக் காட்டி, உழவர் பெருமக்களின் வழிகாட்டியாக விளங்குவதை எண்ணிப் பார்த்து யாரும் வியக்காமல் இருக்க முடியாது!

''பல்லவ நாட்டின் நெற்களஞ்சியம்'' என்று போற்றப்படும் பகுதியில், புதுப்பாக்கம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள 'ஜே' பண்ணை, புத்தம் புதிய ரகங்களைப் பற்றியும், நவீன சாகுபடி முறைகளைப் பற்றியும் உழவர் பெருமக்களுக்குத் தெளிவு ஏற்படுத்தும் ஒரு மாதிரிப் பண்ணையாக விளங்குகிறது என்றால் மிகையல்ல! 200 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள 'ஜே' பண்ணை, சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில், சென்னை - மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ளது. மறைந்த தொழில் அதிபர் திரு எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்களால் இப்பண்ணை அமைக்கப்பெற்றது.

திரு அனந்தராமகிருஷ்ணன் அவர்களை, அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள்-குறிப்பாக அயல் நாட்டவர் - 'ஜே' என்றே அழைப்பது பழக்கமாம்! எனவே, திரு அனந்த ராமகிருஷ்ணன் அவர்களால் அமைக்கப்பெற்ற இப்பண்ணை, 'ஜே' பண்ணை என்று வழங்கப்படுவதுடன், பெயருக்கேற்பப் பல வெற்றி முழக்கங்களை பிரபல தொழிலதிபரும், திரு அனந்தராமகிருஷ்ணன் அவர்களின் புதல்வருமான திரு சிவசைலம் அவர்களின் நிருவாகத்தில் அவ்வப்பொழுது ஒலித்துவருகிறது!

'ஜே' பண்ணையின் முக்கிய அங்கமாக 'டாஃபி' (TAFE) எனப்படும் டிராக்டர் மற்றும் பண்ணைக் கருவிகள் நிறுவனம் (Tractor and Farm Equipment, Limited) அமைந்துள்ளது. இந்நிறுவனம் மாடுகளோடு பிணைந்த உழவுத்தொழிலை இயந்திரமயமாக்க வழிகாட்டுவதுடன், இந்நிறுவனம் தயாரித்து வழங்கும் இயந்திரங்களையும், கருவிகளைப் பற்றியும், அவைகளை இயக்குவது பற்றியும் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், வாங்குகின்றவர்களுக்கும் பல்வேறு பயிற்சிகளை அளிக்கிறது. அனுசரணை ஆராய்ச்சி, பண்ணையை இயந்திரமயமாக்குதல் ஆகிய தீவிர பணிகளின் மூலம் இந்திய வேளாண்மையை மேம்படுத்துவதே 'டாஃபி' நிறுவனத்தின் அடிப்படை இலட்சியமாக உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தைச் செழிக்கச் செய்ய வேண்டும், குறிப்பாக வேளாண்மை உற்பத்தியில் உபரி நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் இந்திய உழவர் பெருமக்களுக்கும், இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்

சில குழந்தைகள் பிறக்கும் பொழுதே கை, கால் போன்றவைகளில் ஊனம் ஏற்பட்டிருக்கலாம்; பிறக்கும்பொழுதே சில குழந்தைகளுக்குக் கட்டிகள் உண்டாகியிருக்கலாம். சில குழந்தைகள் பிறக்கும் பொழுதே ஆசனவாய் இல்லாமல் பிறந்திருக்கலாம். இவைகளையெல்லாம் அறுவைச் சிகிச்சை மூலம் ஆரம்பத்திலே நீக்கிவிட இயலும் என்பதைக் காட்டுவதற்காக 1970-ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை முறைகள் (Paediatrics Surgery) என்ற குறுகிய காலப் பயிற்சியினை நடத்தியது. மீண்டும் 1972-ஆம் ஆண்டில் இதே நிறுவனம் 'குழந்தைகள் மருத்துவம் மற்றும் குடும்ப நலத் திட்டம்' இவைகளை விளக்குகின்ற ஒரு பயிற்சியினையும் நடத்தியது.

எனவே இத்தகைய பயிற்சி மீண்டும் இங்கு நடைபெறுவது ஆச்சரியப்படத்தக்க ஒன்று அல்ல. இங்குள்ள குறைப் பிரசவக் குழந்தைகள் பகுதி (Pre-mature Baby unit) 1959-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. அதுமுதல் இந்தப் பகுதியும், புதிதாகப் பிறந்த குழந்தைகள் பகுதியும் (New-born Baby-unit) முறையே மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் இயங்கத் தொடங்கின. புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் பேணுவதில் நன்கு பயிற்சிபெற்ற-குழந்தை மருத்துவத்தில் தேர்ச்சி பெற்று அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மேற்பார்வையில் இவை நடத்தப்பெற்று வருகின்றன.

அண்மையில் நடத்தப்பெற்ற இந்த அனைத்து நாட்டுப் பயிற்சியினைத் தமிழ்நாடு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 29-7-1974-ல் துவக்கி வைத்தார்கள். 29-7-1974 முதல் 30-8-1974 முடிய 5 வார காலம் நடத்தப்பெற்ற இப்பயிற்சியில் முதல் மூன்று வாரங்களில் செவிலியர் மட்டுமே பங்கு பெற்றனர். நான்காவது, ஐந்தாவது வாரங்களில் செவிலியருடன் மருத்துவர்களும பங்கு கொண்டனர். பங்குபெற்ற செவிலியர் 22 பேர்கள், மருத்துவர் 11 பேர்கள். இவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்த இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, நேபாளம், வங்காள தேசம், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்களாவர்.

முதல் மூன்று வாரங்கள் நடைபெற்ற பயிற்சியின்போது செவிலியர்களுக்குக் குழந்தைகளின் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களைக் கொண்டு, குழந்தைகள் மருத்துவம் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. பல நாடுகளைச் சார்ந்தவர்கள் பங்கு பெற்றதால் அவரவர் நாட்டில் கையாளுகின்ற மருத்துவ முறைகளைப் பற்றி மற்றவர் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் காட்டி நேர்ந்து விளக்கங்கள் செய்து கொண்டனர். கருவுற்ற தாய்மார்களின் நிலை, அந்த நேரத்தில் அவர்களுக்குக் காப்பட வேண்டிய மருத்துவங்கள், கருப்பையில் உள்ளபோதும் குழந்தையாகப் பிறந்த பிறகும் அதன் வளர்ச்சியும், முன்னேற்றமும் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள், அவைகளை நீக்கும் முறைகள் முதலியன செய் முறைகளின் மூலம் விளக்கப் பட்டன.

முக்கியமாக மகப்பேற்றுக்கு முன்னர் தாய்மார்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மருத்துவங்கள்-அவர்களைக் காத்திடும் வகை, குழந்தைகள் பிறப்பதற்கு முன்பும், பிறந்ததற்குப் பின்பும் கவனிக்கப்பட வேண்டிய வழிமுறைகள், குடும்ப நலத் திட்டத்திலும், குழந்தை மருத்துவக் கல்வி முறையிலும் செவிலியர்க்கு உள்ள முக்கியப் பங்கு போன்றவைகளும் கற்றுத் தரப்பட்டன.

தவிர, அவர்கள் மகப்பேற்றிற்கென அனுமதிக்கப்பெற்ற தாய்மார்கள் தங்கியுள்ள மருத்துவமனைகள், மகப்பேறு நடைபெறுகின்ற அறைகள், பெற்றபின் தாய்மார்கள் தங்கியுள்ள இடம், புதிதாகப் பிறந்த குழந்தைகள் வைக்கப்பெற்றுள்ள மருத்துவ நிலையங்கள் போன்றவைகளுக்கு நேரில் சென்று அங்கு நடைபெறுகின்ற செயல் முறைகளையும் அறிந்து வந்தார்கள். சென்னை சூளையில் அமைந்துள்ள மாநகராட்சி மகப்பேறு நிலைய மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு நிலையம் ஆகியவைகளுக்குச் சென்று அங்குச் செயல்படுகின்ற குடும்ப நலத் திட்ட முறைகள், குழந்தைகள் வளர்ப்புப்போன்றவைகளையும் கண்டறிந்தார்கள்.





புதிதாகப் பிறந்த குழந்தைகள் பகுதியில் (New-born Baby Unit) தாய்லாந்து நாட்டு செவிலியர்

நான்காவது, ஐந்தாவது வாரத்தில் 6 நாடுகளிலிருந்து பங்குபெற்ற மருத்துவர்கள் செவிலியர்களுடன் இணைந்து பயிற்சி பெற்றனர். இந்த நேரத்தில் அவர்களுக்குக் குறைந்த அளவில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் அதிக அளவில் கூட்டாகச் சேர்ந்து வாதிட்டு ஆராய்தல், நடுவர் ஒருவரை வைத்துக் கொண்டு குழந்தை மருத்துவம் பற்றி வாதிடுதல், புதிதாகப் பிறந்துள்ள குழந்தைகளிடம் தொடக்கத்தில் காணப்படுகின்ற சிக்கல் குணவியல்புகள் பற்றியும், தனியான-முனைப்பான கவனஞ் செலுத்திக் காத்திடும் வழிமுறைகள் குறித்தும் இந்தப் பயிற்சியின்போது கற்றுத் தரப்பட்டன. இந்தக் காலப் பகுதியில் இவைகள் ஒரு கூட்டுப்பணியாக மருத்துவர், செவிலியர் இடையே மட்டுமின்றி குழந்தைகள் நலத்தில் ஈடுபட்டுள்ள எல்லாத் துறையினரும் கூட்டாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டுமெனவும் வலியுறுத்தப்பெற்றது.



செவிலியர்களுக்கு பயிற்சி நடத்தும் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர் வி. பாலகோபால்ராஜ்



குறைமாதக் குழந்தைகள் பகுதியில் (Pre-mature Baby unit) உலக நல்வாழ்வு நிறுவன ஆய்வுரையாளர்கள்

இப்பயிற்சியில் பங்கு பெற்ற செவிலியர், மருத்துவர்களுக்குக் குழந்தை மருத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், புதிதாகப் பிறக்கின்ற குழந்தைகளைக் காத்திடும் முறைகளைத் தெரிந்து கொள்ளவும் இப்பயிற்சி பெரிதும் வாய்ப்பளித்தது. இத்தனை சிறப்பு வாய்ந்த இப்பயிற்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் இந்தப் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும், இதில் பங்குபெற்ற செவிலியர், மருத்துவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக்கொண்டு, பிறந்த குழந்தைகள் நலனைப் பேணிக் காப்பதிலும், கருவுற்ற தாய்மார்களின் உடல் நலனைக் கவனித்துக் கொள்ளவும், குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தவும், பெரிதும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

உலக நல்வாழ்வு நிறுவனம் நடத்திய இப்பயிற்சியின் இயக்குநராக செல்வி பியன் பூன் சுவானும் (Miss Pien Poon Suwan), குழந்தைகள் மருத்துவத்தின் ஆய்வுரையாளராகப் பேராசிரியர் 'கே' யும் (Prof. Keay), செவிலியர்களின் ஆய்வுரையாளராக செல்வி 'யங்'கும் (Miss Young) அமர்த்தப்பெற்றுப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையின் இயக்குநரான டாக்டர் வி. பாலகோபால்ராஜ் அவர்களும் இப்பயிற்சியின் ஆய்வுரையாளராக இருந்து பயிற்சி வெற்றிகரமாக நடைபெறப் பெரிதும் உதவினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குழந்தை மருத்துவம் வெற்றி பெறுவதற்கு, இது போன்ற பயிற்சிகள் மிகவும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை!

—ஆயிரம்.

கும் 'டாஃபி' நிறுவனம் முழு ஒத்துழைப்பையும் அளித்து வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலாதாரமான பலஉயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களை உழவர் பெருமக்களிடையே பிரபலப்படுத்த 'ஜே' பண்ணை சிறந்த பணியாற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**1964**-ஆம் ஆண்டில், ''தைச்சுங் நேட்டிவ்-1'' என்ற தைவான் நாட்டு நெல்ரகத்தை புகுத்தியபோது, வேளாண்மை விஞ்ஞானிகள் பலர் ''இந்த ரகம் 'பாக்டீரியல் இலைக்கருகல்' நோயினால் எளிதில் தாக்கப்படுவதால், இந்த ரகத்திற்கு எதிர்காலம் இல்லை'' என்று கருதினர். ஆனால் 'ஜே' பண்ணை சில குறிப்பிட்ட நிலைமைகளில் 'தைச்சுங் நேட்டிவ்-1' நெல் ரகத்தைப் பயிரிடும் பொழுது பாக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்காது என்றும், ஒட்டுச் சேர்ப்பதன் மூலம் புதிய ரகங்களை உருவாக்க இந்த ரகம் உதவும் என்றும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது. இன்று புகழ்பெற்று வரும் புதிய நெல் ரகங்கள் 'தைச்சுங் நேட்டிவ்-1' என்ற ரகத்துடன் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டதே என்பதை உணரும்பொழுது, 'தைச்சுங் நேட்டிங்-1' ரகம் பற்றிய 'ஜே' பண்ணையின் முடிவுக்கு, உழவர் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டதாக உள்ளது.

அதே முறையில் 'ஜே' பண்ணை தொடர்ந்து 'கருணை', 'ஐ. ஆர். 20', 'கண்ணகி' ஆகிய ரகங்களையும் அனுசரணை ஆராய்ச்சியாகப் பயிரிட்டுப் பார்த்து குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஏற்றதென மெய்ப்பித்துக் காட்டியது. 'கருணை' ரகத்தைப் புகுத்தியபோது, அந்த ரகத்தைப் பற்றி, பலர் கடுமையாக விமர்சித்தனர். ஆனால் 'ஜே' பண்ணை, 'கருணை' செங்கை மாவட்ட குறுவைக்கு ஏற்ற ரகம் என்பதைப் பல்வேறு பரிசோதனை மூலம் எடுத்துக் காட்டியது! செங்கற்பட்டு மாவட்டத்தில் 'கருணை', 'ஐ. ஆர். 20,' 'கண்ணகி' ஆகிய ரகங்கள் பிரபலமடைந்ததற்கு 'ஜே' பண்ணையே மூலகாரணம் என்றால் மிகையல்ல!

சில ரகங்களில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டி, அந்த ரகங்கள் தமிழ்






நாட்டிற்கு ஏற்ற நல்ல என்பதைச் சுட்டிக் காட்டவும் 'ஜே' பண்ணை தயங்கியதில்லை! இப்பண்ணையின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, 'டைனன்-3', 'ஐ. ஆர். 22' ஆகிய ரகங்களை விரிவினைத் திட்டத்தின் கீழ், உழவர்களுக்கு வழங்குவதைத் தமிழ்நாடு அரசு நிறுத்திவிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 'கண்ணகி' ரகம்பற்றி 'ஜே' பண்ணையின் ஆராய்ச்சிகளின் காரணமாகவே, குறுகிய கால வயதுடைய 'கண்ணகி' ரகம், செங்கற்பட்டு மாவட்ட உழவர் பெருமக்களிடையே பெரும் புகழ்பெற்று இன்று நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய பயன் மிகு பணிகளைச் செய்துவரும் 'ஜே' பண்ணை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் அந்நியச் செலாவணியைப் (Foreign exchange பெருமளவில் ஈட்டுதற்கு உதவும் ஏற்றுமதிக்குகந்த குறுகிய வயதுடைய நறுமண நெல் ரகம் (Exportable, short term, scented paddy) ஒன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது! இந்த ரகத்தின் பெயர் 'பூசா-33'.

## ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற நெல்

'பூசா-33' என்ற ஏற்றுமதிக்குகந்த, குறுகிய கால வயதுடைய, நறுமண நெல் ரகம், டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் (Indian Agricultural Research Institute) 'சபர்மதி' என்ற ரகத்தையும், ரத்னா' என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். இந்த ரகம் நீண்ட சன்னமான, பாடிகம் போன்ற அரிசியைக் கொடுப்பதுடன், 'பாஸ்மதி' (Basmathy) அரிசியின் நறுமணத்தையும் கொண்டுள்ளது. இது கைக்குத்தலில் 65 சத அரிசியையும், அரைவையில் 58 சத அரிசியையும் கொடுக்கிறது. இதன் அரிசி சமையலுக்கு ஏற்ற சிறந்த குணங்களைப் பெற்றுள்ளது. இந்த ரகம், 'குலைநோய்' (Blast) கருகல் நோய் (Blight) குருத்துப்பூச்சி (Stem borer) ஆகியவைகளின் தாக்குதலைச் சுமாராகத் தாங்கிக் கொள்ள வல்லது. ஆனால் 'கால்மிட்ஜ்' என்னும் குருத்து ஈக்களின் தாக்குதலுக்கு உள்ளாகும். ஆகவே, அவைகளைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு முறைகளைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

இந்த ரகத்தை 'ஜே' பண்ணை கடந்த சொர்ணவாரி (மே முதல் செப்டம்பர் வரை) பட்டத்தில் அனுசரணை ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் வெற்றிகரமாகப் பயிரிட்டது.

தமிழ் நாட்டின் வருங்காலத்தை வளமாக்கவல்ல இந்த ரகத்தினைத் தமிழகமெங்கும் பரப்பிட வேண்டும் என்ற கடமை உணர்வுடன் 'ஜே' பண்ணையினர், கடந்த 13-9-1974 அன்று பத்திரிகை நிருபர்களை அன்புடன் அழைத்துச் சென்று 'பூசா-33' ரகத்தைக் காட்டினர்.

'டாஃபி' நிறுவன விளம்பர அலுவலர் திரு ஆர். வெங்கடேசுவரன் அவர்கள், 'பூசா-33'' நெல் ரகத்தைக் காணச் சென்ற பத்திரிகையாளர்களை வரவேற்று உரையாற்றினார். 'ஜே' பண்ணையில் அமைந்துள்ள 'டாஃபி' நிறுவன உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையத்தின் (Product Training Centre) மேலாளர், திரு ஓம்ஜி பிர் அவர்கள், அந்நிலையத்தில் நடைபெறும் பயிற்சிகளைப்பற்றி விவரித்தார்.

'டாஃபி' நிறுவனத்தின் வேளாண்மைப் பொருளாதார வல்லுநர் திரு எஸ். எஸ். நாகராஜன் பி.எஸ்.ஸி. (வே)., எம். எஸ்.ஸி., அவர்கள் 'பூசா 33' ரகத்தைப் பற்றிய விளக்கமளித்தார்.

'டாஃபி' நிறுவன வெளியீடுகளின் ஆசிரியர் குழு நிருவாகி (Editorial Executive) திரு டி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நன்றி தெரிவித்தார்.

பிறகு, 'பூசா-33' ரக நெல் பயிரிடப்பட்டிருந்த வயலுக்குப் பத்திரிகை நிருபர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த 'பூசா-33' ரகம், குட்டையானதாக இருந்ததைப் பத்திரிகை நிருபர்கள் கண்டனர், ஆனால் 'மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது' என்ற பழமொழிக்கிணங்க 'பூசா-33' ரகத்தின் சிறப்புக் குணங்களை, திரு எஸ். எஸ். நாகராசன் அவர்கள் விளக்கியது கேட்டுப் பத்திரிகை நிருபர்கள் உண்மையிலேயே வியந்தனர்!

## ''பூசா-33'' நெல்லின் சிறப்புக் குணங்கள்!

'பூசா-33' நெல்கரம், பின் கண்ட 6 சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளதால், தமிழ்நாட்டிற்கு மிகவும் ஏற்றது என்று திரு எஸ். எஸ். நாகராஜன் அவர்கள் விளக்கினார்.

1. மிகவும் குறுகியகால வயதுடையது (100 நாட்கள்- விதை முதல் விதை வரை).

2. எல்லா பருவத்திலும், நாட்டின் எல்லா இடங்களிலும் நன்கு பயிராகக்கூடிய ரகமாகும் (Cosmopolitant).

3. ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற நறுமணமுள்ள தரமான அரிசி தரவல்லது.

4. சிக்கனமாக நீர்ப்பாசனம் செய்து பயிரிடுவதற்கு ஏற்ற ரகமாகும். (வயலில் எப்பொழுதும் தண்ணீரைத் தேக்கிவைக்கவேண்டியதில்லை)

5. ஏக்கருக்கு 2 டன் வரை மகசூல் தரக்கூடியது.

6. அதிக விலைக்கு விற்கக் கூடிய அரிசியை அளிக்க வல்லது (கிலோ ரூபாய் 9 விதம் விற்கிறது)

## ஏற்றுமதி செய்யலாம்!

''பாஸ்மதி போன்ற நறுமண அரிசிக்கு, மத்திய கிழக்கு நாடுகளில் (Middle East Countries) மிகுந்த தேவை (Good demand) உள்ளதால், பஞ்சாப், அரியானா ஆகிய இரு மாநிலங்களும் இவ்வகை அரிசி தரும் நெல் ரகங்களைப் பயிரிடுவதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. அவ்விரு மாநிலங்களும் இதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியும் பெற்றுள்ளன!

நீண்ட கால வயதுடைய (150 நாட்கள்) 'பாஸ்மதி' ரகம் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே ஏக்கருக்குச் சராசரியாக 500 கிலோ மகசூல் தரும். ஆனால், 'பாஸ்மதி' ரகம் தமிழ்நாட்டிற்கு ஏற்றதாய் அமையவில்லை. பாஸ்மதி அரிசிக்கு ஈடான அரிசியைத் தரவல்ல 'பூசா-33' ரகம் தமிழ்நாட்டில், 100 நாட்களில் ஏக்கருக்கு 2,000 கிலோ மகசூல் தரவல்லதாக இருப்பதால், தமிழ்நாட்டில் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட்டுப் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் 'பாஸ்மதி' அரிசியை ஏற்றுமதி செய்வது போல, தமிழ்நாடும் 'பூசா 33' அரிசியை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டிடலாம்!

## தமிழகத்திற்கு ஏற்றது!

நூறு நாட்கள் வயதுடைய 'பூசா-33' என்ற ரகத்தை 'தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம்' என்று புகழப்படும் தஞ்சை மாவட்டத்தில், குறுவைப் பாப்பு முழுவதிலும் வெற்றிகரமாகப் பயிரிட்டு, வடகிழக்குப் பருவ மழை துவங்கும் முன்பே அறுவடை செய்திட இயலும். தகுந்த நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாவிட்டாலும், தஞ்சை மாவட்டத்தில் கிணறுகளின் மூலம் உறுதியான பாசன வசதி கிடைக்கும் இடங்களில் குறைந்தது ஒரு இலட்சம் ஏக்கரில் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட முடியும் !'' என்று திரு எஸ். எஸ். நாகராஜன் கூறினார்.

''செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் பெரும்பாலும் மணல் கலந்த மண்ணாக இருப்பதால், தண்ணீர் பாய்ச்சிய உடனேயே வடிந்து விடும். ஆகவே, இவ்விரு மாவட்டங்களிலும் வயல்களில் பெரும்பாலும் தண்ணீரைத் தேக்கி வைக்க முடிவதில்லை ; மேலும் தண்ணீரைத் தேக்கி நிறுத்தி வைக்கும் அளவுக்கு அதிக தண்ணீரும் கிடைப்பதில்லை. ஆகவே, இவ்விரு மாவட்டங்களிலும் உருட்டுத் தண்ணீர் பாய்ச்சும் (Staggered irrigation) முறையே உள்ளது. இந்த மாதிரிப் பாசனத்திற்கு 'பூசா-33' ரகம் மிகவும் ஏற்றதாக இருப்பதால் செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில், சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களில், 'பூசா-33' ரகத்தைப் பயிரிடுவது பயனுள்ள செயலாகும்''.

''மற்ற மாவட்டங்களிலும் 'பூசா-33' ரகத்தைப் பயிரிட வாய்ப்பு உள்ளது. ஆடுதுறை, கோவை, சென்னை ('ஜே' பண்ணை) ஆகிய இடங்களில்



# 'சேமிப்பு'
## சிறந்த பழக்கம்! திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**


தைக்க முடிகிறது. அறுவை செய்த இடத்தைத் தைக்க உபயோகப்படுத்தப்படும் ஊசி 5 மில்லி மீட்டர் நீளம்தான் இருக்கும். இவ்வாறு தைக்கப்படுவதால் நோயாளி முன்போல் ஆடாமல் அசையாமல் படுத்திருக்க வேண்டியதில்லை. அறுத்த இடம் நன்றாக இணைக்கப்படுவதால் நோயாளிக்கு நடமாட முடிகிறது. முன்பெல்லாம் தையல் போடாததினால் அறுக்கப்பட்ட இடம் சரியாக இணையாமல் உள்ளே இருக்கும் ஐரிஸ் (Iris) வெளியே வருவது சகஜமாகிறது. வெளியிலிருந்து கிருமிகள் உள்ளே செல்வதற்கும் முடிந்தது. நன்றாக தைத்து சரியாக இணைக்கப்பட்டால் இந்த மாதிரிக் குறைகள் உண்டாக வழியில்லை.

கண்ணிற்குள்ளிருக்கும் வில்லை (Lens) சிலந்தி போன்ற மெல்லிய நூல்களினால் பிணைக்கப்பட்டிருக்கிறது. உறையோடு புரையை எடுப்பதனால் இந்த மெல்லிய வலையைக் கிழிக்க வேண்டும். புரையைப்பற்றிக் கொண்டு ஆட்டினால் செடியை ஆட்டும்போது வேர்கள் முறிந்து விழுவதைப் போல் இந்த மெல்லியதான நூல் போன்ற இழைகள் முறிந்துவிடும். இவ்வாறு ஆட்டி பிணைப்பைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒரு திரவத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். (Alpha-chymotrypsin) என்ற திரவத்தை ஒரு சொட்டு சிறுஞ்சியின் மூலமாக இந்தப் புரையைச் சுற்றி இருக்கும் வலையில் விழச் செய்வதால் அந்த வலை கரைந்து புரை மட்டும் தனியாக மிதக்கும். அப்பொழுது புரையை எடுத்துவிடுவது சுலபம்.

இப்பொழுது புரையை எடுப்பதற்குக் குளிர்சாதன முறையை உபயோகப்படுத்துவது ஒரு சிறந்த விஞ்ஞான முன்னேற்றமாகும். கருவிழியைச் சுற்றி அரை வட்டத்தில் அறுத்துக் கொண்டு பின்னால் புரையின் மீது ஒரு நுண்ணிய குளிர்சாதனக் கருவியை வைக்கிறார்கள். பொத்தானை அமுக்கியவுடன் இக்கருவியின் நுனி-70 டிகிரி சீதளத்திற்கு செல்கிறது. அப்பொழுது அதன் நுனியைச் சுற்றி ஐஸ் கட்டி உண்டாகிறது. புரையில் இருக்கும் நீரும் ஐஸாக மாறி இந்த நுனியை நன்றாகப் பற்றிக் கொள்கிறது. தெருவில் விற்கும் குச்சி ஐஸில் குச்சியைச் சுற்றி ஐஸ் பற்றிக் கொண்டிருப்பதைப்போல இந்த புரை அந்த சீதள-நுனியைப் பற்றிக் கொள்கிறது. அவ்வாறு பற்றிக் கொண்ட புரையை லேசாகப் பற்றி அசைத்து எடுத்து விடலாம்.

கண் விழியினால் புரைக்குப் பின்னால் விட்ரியஸ் (Vitreous) என்னும் திரவம் இருக்கிறது. முட்டையில் வெள்ளைக் கருபோல இந்தத் திரவம் இருக்கும். இதை சிதைக்காமல் ஆட்டாமல் கண் விழியை விட்டெடுப்பதுதான் முக்கியப் பிரச்சினையாகும். புரை அகற்றப்பட்ட பின்னரும் வெள்ளைக் கரு போன்ற நிறமற்ற விட்ரியஸ் அதனிடத்திலேயே இருக்க வேண்டும். அதன்மேல் ஏதாவது ஆயுதம் பட்டாலோ கண்ணை அதிகமாக அழுத்தினாலோ அது கண்ணின் முன்பகுதிக்கு வரும். அப்பொழுது பல கோளாறுகள் ஏற்படும். எவ்வாறாவது புரையை எடுத்துவிடுவது என்பது கருத்தல்ல. கண்ணினோடு இருக்கும் இதர பாகங்களைத் தொடாமல் அசைக்காமல் புரையை மட்டும் வெளியில் எடுப்பதுதான் நுட்பமானப் பணியாகும். இதில்தான் தேர்ச்சி பெற்ற மருத்துவரின் சாதனையைப் பார்க்கலாம்.

புரை அகற்றப்பட்ட பின்னர் அரைவட்டமாக ஆக்கப்பட்டுள்ள கருவிழியைத் தைக்க வேண்டும். சிறந்த முறையில் ஏற்றத்தாழ்வில்லாமல் தைப்பதுதான் கஷ்டமான பணியாகும். அறுவை நுண்பெருக்கிக் கருவி வந்த பின்னர் இவ்வாறு தைப்பதற்கென நுண்ணிய கருவிகள் வந்துள்ளன. இந்தியாவில் இன்னும் இவை தயார் செய்யப்படவில்லை. சாதாரணமாக அறுவைச் சிகிச்சைக்கு அறுக்கப்படும் நீளம் சுமார் 17 மில்லி மீட்டராகும். அறுக்கப்படும் நீளம் குறையக் குறைய குணமாகும் காலமும் குறையும். இந்தக் கருத்தை மனத்தில் கொண்டு கடந்த நாலைந்து ஆண்டுகளில் புரை அறுவைச் சிகிச்சையில் நூதன முறைகளைக் கடைபிடித்து வருகிறார்கள்.

> **சாயம் பூசும் புதிய இயந்திரம்!**
>
> ஆடு, மாடு போன்ற விலங்குகளின் ரோமத்தையும், கம்பளி இழைகளையும் ஒரே சீராகக் கன்னங்கரேலென்ற நிறத்தில் மாற்றக்கூடிய செய்முறை ஒன்றை, சென்னையில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்திருக்கிறது.
>
> இந்த வகையில் நிறம் ஏற்றப்படும் ரோமமும், கம்பளி இழையும் மென்மையாகவும், பளபளப்பாகவும் காணப்படுகின்றன. நிறம் நீடித்து நிற்கிறது. ஒளி, ஈரம், சலவைச் சோப்பு கலந்த சுடு நீர் போன்றவை இந்த நிறத்தைப் பாதிப்பதில்லை.
>
> வெளிநாடுகளில், கரு நிற ரோமத்தையும், கம்பளத்தையும் ஏற்றுமதி செய்து ஏராளமாக வெளிச் செலாவணி ஈட்ட இந்த முறை உதவும்.

புரையின் அகலம் சுமார் 10 மில்லி மீட்டர் ஆகும். 10 மில்லி மீட்டர் நீளமும் 5 மில்லி மீட்டர் கனமும் உள்ள புரையை எடுப்பதற்கு அரை வட்டமான வழி செய்யவேண்டுமானால் 17 மில்லி மீட்டர் நீளமுள்ள இடத்தை அறுக்க வேண்டி உள்ளது. இதற்குப் பதிலாக வில்லையைப் பொடியாக்கி சிறு துவாரத்தின் வழியாக எடுத்துவிட்டால் மருத்துவமனையில் இருக்கும் காலத்தை மிகவும் குறைத்து விடலாம். இதற்கு 2.5 மில்லி மீட்டர் நீளமுள்ள இடத்தை மட்டும் அறுத்து அதன் வழியாக ஒரு ஊசியை உள்ளே புகுத்தி ஒளி அலைகளை (Ultrasonic) இந்த ஊசி வழியாகப் புகுத்தினால் புரை உடைக்கப்பட்டு சிறு துகள்களாக மாறுகிறது. இந்தத் துகள்களை சிறுஞ்சி மூலமாக வெளியே எடுத்து விடலாம். இந்த விதமான அறுவைச் சிகிச்சை முறை புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவில் செய்யப்பட்டு வருகிறது. ஒரு வாரம் மருத்துவமனையில் தங்குவதற்குப் பதிலாக 24 மணி நேரத்தில் நோயாளி வீட்டிற்குச் சென்று விடலாம். ஆறு வாரங்கள் ஓய்வெடுத்து வேலைக்குச் செல்பவர்கள் இந்த புதிய அறுவைச் சிகிச்சையின் மூலம் ஒரு வாரத்தில் வேலைக்குச் செல்லலாம். இந்தக் கருவியின் விலை சுமார் 2 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிறது. இது நம் நாட்டில் எளிதில் சாத்தியமாகக்கூடிய முறையில் இல்லை. இந்த முறையில் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கருவிகளை உபயோகப்படுத்திச் சாதனைகள் பெற மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை முயன்றுவருகிறது.

கண் புரை அறுவைச் சிகிச்சையில் கடந்த 15 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறைகள்:

1. அறுவைச் சிகிச்சை செய்வதற்கு புரை முற்றும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. அவரவர்கள் செய்யும் வேலையைச் செய்ய எப்பொழுது சிரமம்

நடைபெற்ற பரிசோதனைகளிலிருந்து தமிழகமெங்கும் உள்ள உழவர் பெருமக்கள் தங்களுடைய நிலத்தின் ஒரு பகுதியை 'பூசா-33' ரகம் பயிரிடுவதற்கென்று ஒதுக்கி-அதாவது அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் என்று ஒதுக்கி-'பூசா-33' ரகத்தைப் பயிரிட்டால், நமது உள்நாட்டுத் தேவையை ஈடுசெய்வதுடன், வெளிநாடுகளுக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்ய முடியும் என்பது தெளிவாகிறது. அரசு வியாபாரக் கழகத்தின் (State Trading Corporation) உதவியுடன் தமிழ்நாடு அரசு, 'பூசா-33' அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்பி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிட முயற்சிக்கலாம். அரிசி உற்பத்தியில் இந்தியாவிலேயே, குறிப்பிடத்தகுந்த அளவில் முன்னேற்றம் கண்டுள்ள தமிழ்நாடு அரசு, உள்நாட்டுத் தேவைக்காக மட்டுமல்லாமல், ஏற்றுமதி செய்வதற்காகவும் — எவ்வித சங்கடமும் இன்றி—'பூசா-33' அரிசி உற்பத்தி செய்ய முடியும்!'' என்று அவர் மேலும் விளக்குகிறார்.

''ஐ.ஆர். 8'' போன்ற உயர் விளைச்சல் தரும் ரகங்களுக்குப் பொதுவாக 75 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ஆனல் 'பூசா-33' ரகத்திற்கு 42 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல்சத்து இட்டாலே போதும்! அடியுரமாக 24 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட்டு, மீதமுள்ள 18 கிலோ தழைச்சத்தை மூன்ருகப் பிரித்து, பயிர் கிளைக்கும் சமயம் முதல்முறையாகவும், பூங்கொத்து உருவாகும் சமயம் இரண்டாவது முறையாகவும், பூட்டை தோன்றும் சமயம் மூன்ருவது முறையாகவும் மேலுரமிடுவது இன்றியமையாததாகும். எனவே, இரசாயன உரப்பற்ருக்குறை நிலவும் இந்நேரத்திலே குறைந்த உரம் ஏற்று, அதிக இலாபம் தரும் 'பூசா-33' ரகத்தைப் பயிரிடுவது சிறந்தது'' என்று அவர் கூறினர்.

''பூசா-33 ரக விதைகளை உழவர்களுக்கு விற்பனை செய்வீர்களா ?'' என்று கேட்டதற்கு, அவர், ''இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைத்த 2 கிலோ விதையை நாற்றுவிட்டு நட்டுள்ளோம். இதில் கிடைக்கும் விதையை நாற்று விட்டு, வருகிற நவரைப் பருவத்தில் நடவு செய்வோம். நவரை அறுவடையில் கிடைக்கும் விதையை உழவர்களுக்கு விற்பனை செய்யலாம் என்று எண்ணியுள்ளோம். அதற்குள் இவ்விதையை வழங்க எங்களால் முடியாது'' என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

'பூசா-33' ரகத்துடன், 'பூசா-4-1-11' என்ற புதிய ரகத்தையும் 'ஜே' பண்ணை அனுசரணை ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் சாகுபடி செய்துள்ளது. 108 நாட்கள் வயதுடைய இந்த ரகம், 'பூசா-33' ரகத்தை விட குட்டையானதாக உள்ளது. ஆனல் சன்னமான அரிசியையும், அதிக மகசூலையும் தரவல்லது. இந்த ரகமும் 'ஜே' பண்ணை மூலமாக விரைவில் தமிழ் நாட்டில்பரவக் கூடும் என்று நம்பப்படுகிறது.

'டாஃபி' நிறுவனம் நவீன வேளாண்மைக் கருவிகளை புகுத்தி வருவது போல, புதிய ரகங்களையும், நவீன சாகுபடி முறைகளையும் பரப்பி வருகிறது 'ஜே' பண்ணை!

உண்மையிலேயே உழவர்களின் உயர்வுக்கு—தமிழகத்தின் செழிப்புக்கு—வழிகாட்டும் ஒருமாதிரிப் பண்ணையாக உள்ளது 'ஜே' பண்ணை என்பது, 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' தெளிவாகிறது.

—ஆர்.எம்



## குச்சியில் கோபுரம்!

இந்த மாதாகோவில் எந்தப் பொருளால் கட்டப்பட்டது?

செங்கற்களாலா? காங்க்ரீட்டாலா? இல்லை. வெறும் குச்சிகளால்! அதுவும் தீக்குச்சிகளால்!

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். 61 வயதுள்ள கோட்லிப் கிளெங் என்னும் ஜெர்மானியர் இதைத் தயாரித்திருக்கிருர். இதற்குத் தேவைப்பட்ட தீக்குச்சிகள் 25 இலட்சம் டன்!




# கண்புரை அறுவைச் சிகிச்சை முறைகள்

— டாக்டர் ஜி. வெங்கடசாமி

உலகத்திலே ஆதிகாலத்தில் கண்சிகிச்சை முறையில் இந்தியா நாடுதான் முன்னேறி இருந்தது. ஹர்ஷர் காலத்தில் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. 150 ஆண்டுகளுக்கு முன்புகூட இந்தியக் கண் மருத்துவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று கண் புரை அறுவைச் சிகிச்சை செய்திருக்கிருர்கள். அப்பொழுதெல்லாம் ஒரு கூர்மையான ஊசியைக் கொண்டு புரையைக் கண் விழிக்குள் தள்ளிவிடுவதுதான் சிகிச்சை முறையாக இருந்திருக்கிறது. அதில் பல கோளாறுகள் ஏற்படுவதுண்டு. புரை உள்ளே தள்ளப்படுவதால் கண் அழுத்தம் அதிகமாகும்.

150 ஆண்டுகளுக்கு முன்னல் கிருமிகளால் எவ்வாறு சீழ் உண்டாகிறதென்று கண்டுபிடிக்கப்படவில்லை. விஞ்ஞான வளர்ச்சியில் நுண்பெருக்கிக் கருவி (Microscope) கண்டு பிடிக்கப்பட்டதால் கிருமிகளைப்பற்றி நாம் அறியமுடிந்தது. கிருமிகளால் எவ்வாறு சீழ் உண்டாகிறது, எவ்வாறு பல நோய்கள் உண்டாகின்றன என்பதை அறிந்து அறுவைச் சிகிச்சையின்போது கண்ணிற்குள் இந்தக்கிருமிகள் செல்லாததற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவருடைய கைகள், அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் எல்லாமே கிருமிகள் இல்லாமல் தூய நிலையில் இருக்க வேண்டும். இதில் ஏதாவது தவறு இருந்தால்கூட கிருமிகள் கண்ணில் சேர்ந்து சீழ் ஏற்பட்டு கண் கெட்டுவிடும். ஆதலால் அறுவைக் கூடத்தையும் அறுவைச் சிகிச்சையின்போது உபயோகிக்கும் கருவிகளையும் மிக சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு புரையை விழிக்குள் தள்ளுவதற்குப் பதிலாக கண்விழியைக் கருவிழியின் ஓரத்தில் அறுத்து புரையை வெளியே எடுக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. புரையைச் சுற்றிலும் மெல்லியதான உறை ஒன்று இருக்கிறது. உறையோடு புரையை எடுத்தல் ஒரு முறை. உறையின் ஒரு பகுதியைக்கண்ணினுள்ளே விட்டு விட்டுப்புரையை மட்டும் எடுத்து விடுவது மற்ருெரு முறை. இந்த இரண்டு முறைகளுமே எல்லா நாடுகளிலும் மருத்துவர்கள் கையாண்டு வரும் முறைகளாகும். கடந்த 20 அல்லது 30 ஆண்டுகளில் தீவிர விஞ்ஞான வளர்ச்சியினல் பல்வேறு மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கிறது. நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டும் நல்ல பார்வை கிடைப்பதற்காகவும் அறுவைச் சிகிச்சை முறையில் பல ஆராய்ச்சிகள் செய்து வருகிருர்கள்.

அறுவைச் சிகிச்சை செய்த இடத்தை மெல்லியதான பட்டு நூலிஞலோ அல்லது நரம்பு போன்ற நூலிஞலோ தைத்துவிடுவது ஒரு முன்னேற்றமாகும். அறுவைச்சிகிச்சைக்கென நுணுக்கமான தனி நுண்பெருக்கிக் கருவி உள்ளது-(Microscope). கண்ணின் உறுப்புக்களை பல மடங்கு பெரியதாக இந்தக் கருவி காட்டுவதால் வெகு நுண்ணிய முறையில் அறுவை செய்த இடத்தை

ஏற்படுகிறதோ அப்பொழுதே செய்யலாம்.

2. நோயாளியும் சுத்தமாக இருந்து அறுவை முறைகளும் கிருமியற்ற முறையில் செய்யப் பட்டால் கோளாறுகள் ஏற்படு வது மிகமிகக் குறைவாகும். நல்ல பார்வையை திரும்பப் பெற லாம் என்பதைத் திட்டவட்ட மாகச் சொல்லலாம்.

3. நுண்பெருக்கிக் கருவிஅறுத்த இடத்தைத் தைப்பதற்கு நல்ல ஊசி, நுண்ணிய கருவிகள் ஆகிய வைகளை உபயோகிக்கும் முறை கள் நம் மருத்துவர்களுக்கு மட் டும் அளிக்கப்பட்டால் நம் புரை அறுவைச் சிகிச்சை முறை இன் னும் பலன் தரும்.

4. இதில் இன்னும் மக்களின் வசதியை முன்னிட்டுப் பல பல முறைகளில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி உள்ளது. இதற்கு ஆராய்ச்சி செய்யவும் வெளி நாட்டிலிருந்து பல கருவி கள் வாங்கவும் பொதுமக்கள் மன முவந்து நிதிஅளித்தல் நலமாகும்.

தமிழ்நாட்டில் மட்டும் கண் களில் புரை உண்டாகி, பார்வை குறைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 7 அல்லது 8 இலட்சம் ஆகும். இவர்கள் நகரங்களில் வாழ்ந்தாலும் குக்கிராமங்களில் வாழ்ந்தாலும் என்ன பணி செய் தாலும் நல்ல பார்வை பெற்றி ருப்பது அத்தியாவசியமாகும். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி திட்டத்தின்கீழ் ஒளி இழந்த இந்த மக்களுக்கு ஒளி பெற நிறைய வாய்ப்பிருக்கிறது. உலகிலேயே இதுபோன்ற திட் டம் எங்கும் நடந்ததில்லை. இந்தி யாவில் இதர மாநிலங்களுக்கும் இதர நாடுகளுக்கும் ஒரு முன் னோடியாக இருக்கிறது இந்தத் திட்டம். இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் குறைந்த செலவில் பெரும்பாலான மக்களுக்கு சிறந்த சேவை அளிக்க முடி யும். இவ்வாறு இவ்வளவு பேருக்கும் மருத்துவ மனைகள் கட்ட வேண்டுமென்றால் பல ஆண்டுகள் ஆகும். ஏராளமான பணமும் செலவாகும். இன்னும் குறைந்தது 30 ஆண்டுகளாகும். அதுவரை அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். அவர் களுடைய வாழ்நாளிலேயே இப் பொழுதுள்ள நிதியை வைத்துக் கொண்டு பார்வை அளிக்க வேண்டுமானால் இந்தத் திட்டத்தி னால்தான் முடியும். மக்கள் யாவரும் இந்தத் திட்டத்தின் முக் கியத்துவத்தை உணர்ந்து அவர் களால் இயன்ற உதவிகளை அளிக்க முன் வரவேண்டும்.

வாக்குப் பதிவுசெய்ய தானே இயங்கும் புதுவகை இயந்திரம் ஒன்று பெங்களூரிலுள்ள இந் தியன் டெலிபோன் தொழிற் சாலையில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இதில் பகிரங்க வாக்கும் பதிவு செய்யலாம்; இரகசிய வாக்கும் பதிவு செய்யலாம்; வாக்கு அளிப்பவர்களின் புகைப்படங்களையும் கூடப் பதிவு செய்யலாம்.

பேட்டரி மூலமோ, மின் சாரம் மூலமோ இதை இயக் கலாம்.

சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்தில் ஒரு விநாடி யில் 600 வாக்குகளை இது எண்ணிவிடும்.


**சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண். 151.**

**சேலம்-1.**

தொலைபேசி எண் 2402

கிளைகள் :—நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம் ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 323 லட்சம்** **நடைமுறை மூலதனம் 1690 லட்சம்**

**வட்டி விகித அட்டவணை 23-7-'74 தேதி முதல்**

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) 3¼%
ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) 3½%
சீசன் டெபாசிட்டுகள் : ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் 3½%
பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு
1. 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் 5½%
2. 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள் 6%
3. 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்... 7%
4. 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள்... 8%
5. 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள். 9%
6. ஐந்து வருடங்களுக்கு மேல் ... 10%
நடப்புக் கணக்கு ½% சேமிப்பு கணக்கு 5%

ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க!

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்





மணிக் கூண்டு கடியாரம் இரவு மணி பன்னிரண்டு அடித்துவிட்டு ஓய்ந்தது.

எங்கும் மை இருட்டு!

ஒரே அமைதி!

அப்போது—

இரண்டு உருவங்கள் அந்தக் கரடிக் குகை எஸ்டேட் பங்க ளாவிற்குள் நுழைந்து . . . .

என்ன செய்தன?

ஒன்றும் செய்யவில்லை!

அவை ஏதாவது செய்வதற்கு இது ஒன்றும் துப்பறியும் கதை இல்லையே!

கரடிக் குகை எஸ்டேட் என்று ஒன்று இருக்கிறது, அந்த எஸ்டேட்டில் ஒரு அழகிய பங்களா இருக்கிறது. அந்தப் பங்களாவிற்குப் பக்கத் தில் ஒரு கரடிக் குகை இருக் கிறது . . . .

ஆமாம். இந்த எஸ்டேட், பங்களா, கரடிக்குகை எல்லாம் எங்கே இருக்கிறது? அதைச் சொல்லுங்கள்!

பூமியிலிருந்து 5,020 அடி உயரத்தில் இருக்கிறது!

என்ன சார் 'கரடி' விடுகி றீர்கள்?

கரடி இல்லை. உண்மைக் கதையைத்தான் சொல்கி றேன்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு மலை வளைவுப் பாதை யில் 'ஜீப்' வளைந்து வளைந்து செல்கிறது. ஒரு பக்கம் மலைப் பாறையும், மறுபக்கம் பச்சைப்



பசேலென்ற மரஞ் செடி கொடிகள் மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றன.

ஜீப் மேலே மேலே சென்று கொண்டேயிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகக் குளுமை நம் உடலைச் சில்லிட வைக்கிறது . . இப்போது மூடுபனி முழுதுமாக வந்து நம் உடலை முற்றுகையிடுகின்றது. வெய்யிலின் தகிப்பிலிருந்து வந்த நமக்குக் குளுமை இதமாக இருந்தாலும், கொஞ்சம் நடுக்கம் இருப்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்!

ஏர்க்காடு மலையிலே எழில் மிகு இடங்கள்—அழகிய ஏரி, அண்ணு பூங்கா, சுற்றுலா மாளிகை, பாவையின் பீடம், சேர்வராயன் குகைக் கோயில், கிளியூர் அருவி, பகோடா பாயிண்ட், காவேரி பீக், லூப் ரோடு, மான்ட்ஃபோர்டு பள்ளி, தேயிலைத் தோட்டங்கள்—இவற்றைப் பற்றியெல்லாம் எழுதிக் கொண்டே போகலாம். ஆனால், நாம் எடுத்துக்கொண்ட பொருளோ அந்தக் கரடிக் குகை எஸ்டேட் பங்களா தானே? வாருங்கள், அங்கே போவோம்!



திரு. ஆர். சாம்பசிவம்

அழகிய மலர்கள், அடர்ந்த மரஞ் செடி கொடிகள். எங்கும் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகள். இதன் நடுவே காட்சியளிக்கிறது, அந்த அழகிய பங்களா!

பங்களாவுக்குப் பின்னும் மலை முடி தெரிகிறது. வெண்ணிறப் புகை போன்ற பனிப் படலங்கள் வீட்டைச் சுற்றி அலை மோதுகின்றன. அதோடு மழையும் வெளுத்து வாங்குகிறது. அங்கிருந்து கீழே பார்க்கிறோம். மலைப்பாதையையும் அல்லவா அந்தப் படலம் வழி மறித்திருக்கிறது!

''வாங்க, வணக்கம்!''

புன்னகையுடன் அழைக்கிறார் அந்தப் பங்களாவில் வசிக்கும் திரு. ஆர். சாம்பசிவம்.

பங்களாவின் புற அழகை ரசித்துக் கொண்டிருந்த நாங்கள் உள்ளே நுழைகிறோம்.

''இங்கே கரடிக் குகை இருக்கிறதாமே?''

''ஆமாம். அதற்குப் பக்கத்தில்தானே நாங்கள் வசிக்கிறோம். . .நீங்கள் அங்கே போய் பார்க்க வேண்டுமா?'' என்று அவர் கேட்டதும், நாங்கள் 'ஆமாம்' என்று தலையசைத்தோம். உடனே அவர் ஒரு டார்ச் லைட்டை எடுத்துத் தம்முடன் வசிக்கும் ஒரு இளைஞரிடம் கொடுத்து எங்களுக்கு 'வழிகாட்டி'யாக அனுப்பினார்.

''பார்த்துப் போங்கள் ஒரே இருட்டாக இருக்கும் . . . .''

என்றும் அவர் சொல்லி வைக்கத் தவறவில்லை.

'இந்தக் குகையில் உண்மையாகவே கரடி இருக்குமோ?' என்ற இலேசான பயம் உள்ளுக்குள் இருந்தது! குளிர் வேறு—கேட்க வேண்டுமா பயத்தை வெளிக்காட்ட!

''உள்ளே 100 அடி வரைக்கும்தான் போக முடியும். அதற்கு இடையில் வழி சரியாகத் தெரியாது. குனிந்தும் படுத்த நிலையிலும் செல்ல வேண்டியிருக்கும். வௌவால்கள் நிறைய இருக்கின்றன . . . ஜாக்கிரதை!'' என்று இன்னும் பயமுறுத்தி விட்டார் திரு. சாம்பசிவம்.

கரடிக் குகையில் இருந்தது இந்தக் கரடி அல்ல!





பெரிய மலைப் பாறைகளுக்கு இடையே ஒரு சிறு இடைவெளி. அதுதான் கரடிக் குகையின் வாயில்!

''இதுதான் கரடிக் குகை!'' என்று டார்ச்சை கையிலேந்தியவர் குனிந்து உள்ளே நுழைந்தார். நாங்கள் தைரியமாக அவருக்குப் பின்னால் குனிந்து குனிந்து இறங்கிச் சென்றோம்.

எங்களுடன் வந்த புகைப் படக்காரரோ ''காமிரா' இருக்கிறதே எப்படிக் குனிந்து குனிந்து வர முடியும் . .?'' என்று காமிராவை இறுகப் பற்றிக் கொண்டார்.

அப்பாடா! ஒரு இடத்தில் வந்து நிமிர்ந்து நின்றோம்!

''இந்த இடத்தில்தான் அந்தக் கரடி படுத்துக் கொண்டிருக்குமாம்'' என்று நாங்கள் நின்றிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினார் எங்களுடன் வந்த இளைஞர்.

சுமார் 15 அடி வரைதான் நாங்கள் சென்றோம். ஒரே இருள். வௌவால்கள் தலைக்கு மேலே சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன!

''குகைதான் பார்த்துவிட்டோமே. இன்னும் போய்ப் பார்க்க வேண்டுமா என்ன?'' என்று நான் கேட்டதும் அனைவரும் 'கொல்' லென்று சிரித்துக் கொண்டே முன்னே வைத்த காலைப் பின்னே வைத்தனர்.

''இந்தக் குகைக்குள் நான் 100 அடி வரை சென்றிருக்கிறேன். மேலும் இதனுள்ளே செல்வதற்குப் பிராணவாயு தேவைப்படும் என்கிறார்கள். சிலர் மலைப் பாம்புகள் கூட இங்கே இருக்கின்றன என்கிறார்கள். இந்தக் குகைக்குள் சென்றால் மேலே உள்ள சேர்வராயன் கோயிலுக்குப் போகலாம் என்றும் சொல்கிறார்கள் . . .'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் அந்த இளைஞர். நாங்கள் அனைவரும் வெளியே வந்தோம். மழை விட்டிருந்தது. ஆனால், குளிர் தான் விட்டபாடில்லை!

''என்ன? குகை எல்லாம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே எங்களை வரவேற்றார் திரு. சாம்பசிவம்.

பங்களாவிற்குள் நுழைந்த எங்களுக்கு, குளிருக்கு இதமான சூடான தேநீர் தயாராக இருந்தது. நாங்கள் சுற்று முற்றும் கண்ணோட்டம் விட்டோம். மிகப் பழைமையான அந்த பங்களாவைப் புதுப்பித்திருந்தார் அதன் சொந்தக்காரர்.

''இந்தப் பங்களா[illegible] பற்றிக் கொஞ்சம் தெரிந்[illegible] கொள்ளலாமா?'' என்[illegible] கேட்டதற்கு ''அதுவா அ[illegible] ஒரு கதை!'' என்றார் தேநீரை[illegible] சுவைத்துக் கொண்டே திரு. சாம்பசிவம்.

இந்தப் பங்களா 1868-ல் கட்டப்பட்டது. அதாவது இதைக் கட்டி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. 1888 வெளியான ''The early History of Yercaud'' என்னும் நூலில் பிரான்சிஸ்கா எச். வில்சன் என்பவர் இந்தப் பங்களாவைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார். இந்தப் பங்களா ஒரு காலத்தில் பிரபல குற்றவியல் வழக்குரைஞராயிருந்த நார்ட்டன் என்ற ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்தது. அதனால் இதை 'நார்ட்டன் பங்களா' என்றும் அழைப்பர்.

இந்தப் பங்களாவில் இதற்கு முன் சுப்பராயலு என்பவர் வசித்து வந்தாராம். இவரது உறவினர் ஒருவர் விமான ஓட்டியாக இருந்தார்.

ஒரு நாள் அந்த விமானத்தில் இருவரும் ஏர்க்காட்டு மலைக்கு வந்து வட்டமிட்டனர். விமானத்தை மலையில் எப்படியாவது இறக்க வேண்டும் என்ற வீராப்புடன் இறக்க முயன்றனர்.

அப்போது—

எதிர்பாராத விதமாக மலை முகட்டில் பயங்கரமாக விமானம் மோதி நொறுங்கியது! அதிலிருந்த இருவரின் கதி?

அதிசயமாக அவர்கள் தப்பிப் பிழைத்துவிட்டனர்!



...ன இந்தப் பங்க[illegible] சொந்தக்காரர் [illegible] வாங்குவதற்கு முன் "இந்த வீட்டிற்கா குடி [illegible]போகிறீர்கள்? இது பேய் [illegible] . . ." என்றெல்லாம் [illegible]மறுத்தினர்களாம்.

"இரவில் ஒரு அறையில் [illegible]த்துக் காலையில் எழுந்து பார்த்தால், வேறொரு அறை [illegible]ல் இருப்பீர்கள்! இதற்கு முன் இப்படி நடந்திருக்கிறது . . ." இப்படிச் சிலர், இவர் இங்கே வரவேண்டாம் என்று அ[illegible]சுறுத்தினராம்.

ஆனால், இவரோ எதற்கும் [illegible]சியவில்லை.

'பேயாவது, பிசாசாவது... அதெல்லாம் நான் இங்கே வந்தால் ஓடிப் போய் விடும் . . .!" என்று அடித்துப் பேசிப் 'புதுமனை புகுவிழா' நடத்தி விட்டார்!

இவர் ஏர்க்காட்டிலுள்ள நூலகம், விளையாட்டுக் குழு போன்றவற்றில் உறுப்பினராக இருக்கிறார். தோட்டக் கலையில் மிகுந்த ஆர்வம் காட்டும் இவர், வித விதமான செடி வகைகளை வளர்ப்பதைப் பொழுது போக்காக வைத்துக் கொண்டுள்ளார். இவரது பங்களாவைச் சுற்றி வளர்த்துள்ள ஒரு சில செடிகளின் இலைகள் மஞ்சள், நீலம், சிவப்பு நிறங்களில் அடிக்கடி வண்ணம் மாறுகின்றனவாம்!

40 ஏக்கர் பரப்பளவில், இயற்கை எழில் மண்டிக் கிடக்கும் சூழலில் அமைந்துள்ள இந்தப் பங்களாவின் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 37,500.

"வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம் வாருங்கள்!" என்று உள்ளே மேலும் சில இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார்.

நிறைய மலர்ச் செடி வகைகளைப் பார்த்துவிட்டு வந்த நமக்கு, ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பூந்தொட்டி ஒரு வினாடி நம்மை நிற்க வைத்து விடுகிறது.

"இது என்ன செடி? மிக அழகாக இருக்கிறதே!"

"இதுவா? முட்டைச்செடி!" என்று அவர் சிரித்துக் கொண்டே சொன்னதும் எங்கள் கண்ணோட்டம் அதன் மீது பாய்ந்தது.


முட்டைச் செடி!

முட்டை ஓடுகள் அந்தச் செடியின் ஒவ்வொரு கிளைகளிலும் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு முட்டைக்கும் ஒவ்வொரு வண்ணம் தீட்டப்பட்டிருந்தது. ஓட்டு மொத்தமாகப் பார்க்கும் போது அவை வண்ண விளக்குகள் போல காட்சியளித்தன.

அடுத்த அறைக்குச் செல்கிறோம். சுவற்றில் உறையுடன் கூடிய பெரிய துப்பாக்கி ஒன்று மாட்டப்பட்டிருக்கிறது.

"நீங்கள் துப்பாக்கி சுடுவதில் கூட வல்லவர் போலிருக்கிறதே?" என்று கேட்டதற்கு, "அதெல்லாம் ஒன்றுமில்லை. இரவு நேரங்களில் காட்டுப் பன்றிகள் கூட்டமாக வந்து இந்தச் செடிகளையெல்லாம் பாழாக்கி விடுகின்றன . . . அவைகளைச் சுடுவதற்குத்தான் இந்தத் துப்பாக்கி . . கடந்த வாரம் கூட ஆறேழு காட்டுப் பன்றிகளைச் சுட்டிருக்கிறேன்!" என்று அவர் சொன்னதும், இவ்வளவு தொல்லைகளுக்கும் இடையில் — பனி, மழையில் எப்படித்தான் இந்தத் தனி பங்களாவில் வசிக்கிறாரோ என்று நாங்கள் வியந்தோம்.

ஏர்க்காட்டுக்கு வருபவர்கள் இந்தக் கரடிக் குகைக்குப் பக்கத்தில் இருக்கும் இந்தப் பழம் பெரும் பங்களாவையும் பார்க்கத் தவறுவதில்லை — அனுமதியுடன்தான்!

—பி. வி. [illegible]

பங்களாவிலுள்ள ஒரு தமிழ்ப்பாவை!



# சென்னையில் [வ]ள்ளுவர் கோட்டம்!

வையகத்துக்கு வாழும் நெறி வகுத்து அளித்த வான் புகழ் வள்ளுவருக்குச் சென்னை நகரில் மாபெரும் நினைவுச் சின்னமாக வள்ளுவர் கோட்டத்தை நமது அரசு அமைத்து வருகிறது.

வள்ளுவர் கோட்டம், பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த நுங்கம்பாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

வள்ளுவர் கோட்டத்தின் கால்கோள் விழா, கடந்த 18—9—74 அன்று சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரைத் திடலில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் வரவேற்றார்.

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

வள்ளுவர் கோட்டம் கால்கோள் விழாப் பணியினை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வள்ளுவர் கோட்டம் நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதியில் ஏழு ஏக்கர் பரப்புள்ள திடலில் அமைக்கப்படுகிறது. இங்கு ஐம்பது அடி முதல் 60 அடியில் பாறைகிடைப்பதால் கட்டடத்தின் கடைகால் 50 அடிக்குக் குறைவில்லாமல் எடுக்கப்படும்.

900 அடி நீளமும் 350 அடி அகலமும் கொண்ட இந்த இடத்தில் 400 அடி நீளமும் 130 அடி அகலமும் கொண்ட இடத்தில் கோட்டம் அமைக்கப்படுகிறது.

கோட்டம் பற்றிய ஏனைய விவரங்கள் :—

வள்ளுவர் கோட்டம் தமிழகத் தேர்களில் சிறப்பு வாய்ந்த திருவாரூர்த் தேரின் அமைப்பியல்புகளைப் பெற்று இருக்கும். 101 அடி உயரம் உள்ள இத் தேர், நயமான கருங்கல்லால் கட்டப்படும். தேரின் அணி மிக்க அடிப்பகுதிக்கும் இடைப் பகுதிக்கும் கருங்கல்லும், மேற்கோப்பிற்குச் சிவப்புக் கல்லும் தலைப் பகுதியான சிகரத்திற்கு வெள்ளைக் கல்லும் பயன்படுத்தப்படும்.

திருவண்ணாமலையில் 'வைரக் குன்று' என்ற பாறையில் கருங்கல் எடுக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

தேரின் அடிப் பகுதியில் உட்பட்ட அடுக்குகளில் திருவள்ளுவரின் திருவுருவம் 133 புடைப்புச் சிற்பங்களாக் அமைக்கப் பெறும். ஒவ்வொன்றும் திருக்குறளின் ஓர் அதிகாரத்தை உருவகப்படுத்தும். பிற இடங்களில் பொதிகை, பூமுனைகள், கருக்கு வேலைகள், சிறு தூண்கள் மற்றும் நுணுக்கமான அணிகள் இடம் பெறும்.

தேர் முட்டியின் தளத்தில் மலர்ப் பீடம் அமைத்து அதன் மேல், குறள் நெறியை உலகுக்கு எடுத்தோதும் பாவனையில் நின்ற கோலத்தில் திருவள்ளுவரின் திருவுருவம் ஒன்று கல்லிலே செய்து அமைக்கப்படும்.

முப்பாலின் உருவகமான மூன்று யானைகள் இத்தேரினை நடத்திச் செல்வது போல— தேரின் முன் பக்கத்தில் யானைகள் கல்லிலேயே செய்தமைக்கப்பெறும். நடுவில் 10 அடி உயரமுள்ள யானையும், இருமருங்கில் 7 அடி உயரமுள்ள இரு யானைகளும் செய்தமைக்கப்படும்.


வள்ளுவர் கோட்டம் சிறப்புப்பணிகளை முதல்வர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்.



வள்ளுவர் கோட்டம் கால்கோள் விழாவில் பங்கேற்ற முதல்வர் கலைஞர், கல்வியமைச்சர் நாவலர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர், அமைச்சர் ப. உ. சண்முகம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஆகியோர்.

திருவாரூர்த் தேரின் தனிச் சிறப்பு— அழகு— அத்தேரின் சிகரப் பகுதியின் அமைப்பில் விளங்கும். தலைப் பகுதியான இச் சிகரம் அகண்டு விரிந்து, உயர்ந்துள்ளதால் தேரோடும் போது இப் பகுதி சிலிர்த்து ஆடி வரும். இக்காட்சி காண்போரின் உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும். திருவாரூர்த் தேரின் அழகை இவ்வசைவினிலே காணலாம்.

தேர் அமைப்பைக் கட்டடமாகச் செய்து, கட்டடத்தின் பக்கங்களில் சக்கரங்களை இணைத்துச் செய்வதே இன்று வரை தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் சிற்பிகள் அமைத்துள்ளார்கள். ஆனால் இங்கு மாத் தேரின் அமைப்பை அப்படியே கல்லிலே அமைத்துக் காட்டுவது சிற்ப வரலாற்றில் ஒரு புதுமையே! இதனைச் சாதிக்க இன்றையத் தொழில் நுட்ப அறிவு பயன்படுகிறது.




வள்ளுவர் கோட்டம் மாதிரி வடிவம்.





வள்ளுவர் கோட்டமான தேரின் முன் புறத்தில் 100 அடி அகலமும், 220 அடி நீளமும் கொண்ட பெருமன்றம் ஒன்று அமைக்கப்படும். தென் கிழக்கு ஆசியாக் கண்டத்திலே தூண்கள் இன்றி, கான்கிரிட் அமைத்துக் கட்டப்படும் முதல் மன்றம் இதுவேயாகும். உலகம் முழுவதும் பரந்து விரிந்த புகழ் கொண்ட குறளுக்கு — வள்ளுவன் புகழுக்குச் சின்னமாக இம்மன்றம் நிற்கும்.

இம்மன்றத்தைச் சுற்றி அணி பொருந்திய தூண்களால் ஆக்கப்பெற்ற தாழ்வாரம் அமைக்கப்படும். ஒவ்வொரு பக்கத்திலும் 3 வாயில்கள் அமையும். வாயில்களிலும், சன்னல்களிலும் தோரண அமைப்புகள் அணியூட்டுவதாக அமையும்.

இம்மன்றத்தின் உட்புறச் சுவரில் 1,330 குறளும் கல் வெட்டுக்களாக அமைக்கப் பெறும்.

மன்றத்தின் தட்டோட்டில் (மேல் தளத்தில்) பூங்காவும். நீர்த்தடாகமும், நடைபாதையும், மக்கள் கூடுவதற்கான இடவசதியும் செய்யப்படும்.

முகப்பு :

மன்றத்திற்கு மேலும் முன் புறத்தில் இருமருங்கிலும் ஏறி இறங்கிச் செல்வதற்கேற்ற வகையில் படிகள் அமைக்கப்படும். அணி மிக்க கைப்பிடிச் சுவர்கள் அணி பெற அமையும். படிக்கட்டுகளுக்கு இடையில் சிறந்த இடம் ஒன்று அமைகிறது.

படி ஏறுமிடத்தில் சிறு முகப்பு மண்டபங்கள் அமையும். நடு மண்டபம் ஒன்று இதற்கிடையில் அமையும். இவ்வழி சென்றால் சிறந்த முற்றத்தை அடைந்து, திருமன்றத்தின் தலைவாயிலை அடையலாம். வாயிலில் சுற்றுப் படிகள் அமையும். சிறந்த முற்றத்தில் இருமருங்கிலும் யானைகள் நின்று வரவேற்கும்.

பூங்கா :

வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி வண்ணப் பூங்கா அமைக்கப்படும். இதில் மகிழம், நாகலிங்கம், சரக் கொன்னை, தென்னை, பாக்கு, மலர்ச் செடிகள், நறுமணம் பரப்பும் செடி கொடிகளும் இடம் பெறும்.

சுற்றுச் சுவர் :

நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் வந்து பார்த்து மகிழ்ந்திட நான்கு தோரண வாயில்கள் அமைக்கப்படும். கோட்டத்தையும் பூங்காவையும் சுற்றிச் சிறு சுவர் ஒன்று அமைக்கப்படும்.

முப்பாலை உணர்த்தும் வண்ணம்:

(1) தேர் மூன்று அடுக்குகளாக — மூவண்ணங்களில் அமையும்.

(2) மூன்று யானைகள் தேரினை இழுத்து நிற்கும்.

(3) முப்பால் 133 அதிகாரங்களைக் கொண்டிருப்பதை உணர்த்த 133 படிகள் அமையும்.

(4) திருமன்றத்தின் பக்கங்களில் மும்மூன்று வாயில்கள்.

(5) முகப்பில் மூன்று மண்டபங்கள்.

(6) பெருமன்றத்தின் கைப்பிடிச் சுவரினை ஒட்டியதாக 1,330 கட்டைத் தூண்கள் அமையும். இதில் 1,330 விளக்குகள் பொருத்தப்படும்.

...ளுவர் கோட்டத்தின் சிற்பப் பணிகளைச் சிற்பிகள் ...ராய்கிறார்கள்.



வேலை வாய்பபு :

வள்ளுவர் கோட்டம் பணியின் மூலம் ஐநூறு சிற்பிகளுக்கும் ஆயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

வள்ளுவர் கோட்டப் பணிகள் 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கேளுங்கள் கொடுக்கப் படும்!

'ஆர்.எம்.'




**வினா:** 16-8-74 தேதிய 'தமிழரசு' இதழில் கேளுங்கள் கொடுக்கப்படும் பகுதியில் பிண்ணாக்கில் உள்ள சத்துப் பொருள்களின் விகிதம் அளித்துள்ளீர்கள். அதில் 100 கிலோ ஆமணக்கு பிண்ணாக்கில் 26.5 கிலோ அமோனியம் சல்பேட் 10 கிலோ சூப்பர் பாஸ்பேட் உள்ளது எனப் பதில் அளிக்கப் பட்டுள்ளது. அது புரியவில்லை. 100 கிலோ பிண்ணாக்கில் தழைச்சத்து, மணிச்சத்து சதவிகிதம் கொடுக்கவும்.

பிண்ணாக்கை அடியுரமாக இடுவதா? அல்லது மேல் உரமாக இடுவதா? எந்தெந்த தருணங்களில் இடுவதென்று தெரிவிக்கவும். அடியுரமாக இடுவதென்றால், மணிச்சத்து அதிகமாக உள்ள செயற்கை உரம் எந்த அளவு சேர்த்து இட வேண்டும்? பிண்ணாக்கில் உள்ள சத்து எவ்வளவு காலத்திற்குள் பயிருக்குக் கிடைக்கும்?

தங்கள் பரிந்துரைப்படிதான், தாளடிப் பயிருக்கு உரமிட வேண்டும். எனவே, அதற்கு ஏதுவாக, விரைவில் பதில் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—ப. பழனிச்சாமி,
கச்சமங்கலம்,
தஞ்சை மாவட்டம்.

**விடை:** 100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கில் தழைச்சத்து, மணிச்சத்து சதவிகிதம் கொடுக்கும்படி கேட்டுள்ளீர்கள். 16-8-74 தேதிய 'தமிழரசு' இதழிலேயே பக்கம் 41-ல் 3-வது கலத்தில், ஆமணக்குப் பிண்ணாக்கில் உள்ள தழைச்சத்து. மணிச்சத்து ஆகியவைகளின் சதவிகிதம் கொடுக்கப் பட்டுள்ளது. அதை தாங்கள் கவனிக்கவில்லை போலும்! அதைத் தங்களுக்கு விளக்கவே 100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு, 26.5 கிலோ அமோனியம் சல்பேட் மற்றும் 8.1 கிலோ சூப்பர்பாஸ்பேட்டிற்குச் சமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தங்களுக்குப் புரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளதால் மீண்டும் விளக்கத்தை இங்கே கொடுத்துள்ளோம்.

சாதாரணமான ஆமணக்குப் பிண்ணாக்கில் 5.3 சதம் தழைச்சத்தும், 1.6 சதம் மணிச்சத்தும் உள்ளது. இந்த அளவு சராசரி அளவேயாகும்.

ஆனால் மேல் ஓடு நன்கு நீக்கப்பட்டு, ஆமணக்குப் பருப்பை மட்டும் இட்டு எண்ணெய் எடுத்தால், வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கு கிடைக்கும். இதில் 6.3 சதம் தழைச்சத்து, 2.6 சதம் மணிச்சத்து, 1.1 சதம் சாம்பல்சத்து இருக்கிறது என்பது பகுப்பாய்வில் இருந்து தெரியவருகிறது. மேல் ஓடு நீக்கப்படாமல், ஆமணக்கு விதையை அப்படியே போட்டு எண்ணெய் எடுத்தால் கருப்பு நிறமான பிண்ணாக்கு கிடைக்கும். இதில் 4.5 சதம் தழைச்சத்து, 1.8 சதம் மணிச்சத்து, 0.7 சதம் சாம்பல் சத்து உள்ளதென்று பகுப்பாய்வின் மூலம் தெரிகிறது.

ஆகவே, 100 கிலோ வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கில் 6.3 சதம் தழைச்சத்து 2.6 கிலோ மணிச்சத்து, 1.1 கிலோ சாம்பல் சத்தும், 100 கிலோ கருப்பு ஆமணக்குப் பிண்ணாக்கில் 4.5 கிலோ தழை சத்து, 1.8 கிலோ மணிச்சத்து, 0.7 கிலோ சாம்பல் சத்தும் உள்ளன.

ஒரு கிலோ தழைச்சத்து என்பது 5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 2.2 கிலோ யூரியாவிற்குச் சமம். ஒரு கிலோ மணிச்சத்து என்பது 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட்டிற்குச் சமம். ஒரு கிலோ சாம்பல் சத்து என்பது 1.6 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்திற்குச் சமம். இந்த அடிப்படையில் கணக்கிட்டால் 100 கிலோ வெண்மையான ஆமணக்குப் பிண்ணாக்கு, 31.5 கிலோ (6.3 × 5) அமோனியம் சல்பேட்டிற்குச் சமமாகும். இது போலமற்ற சத்துக்களுக்கும் சமமான உரங்களை கணக்கிட்டுக் கொள்ளவும்.

பிண்ணாக்கை நெல்லிற்கு அடியுரமாகவே போடவேண்டும். ஆனால் சில இடங்களில் மேலுரமாகப் போடும் வழக்கமும் உள்ளது; இது சிறந்ததல்ல! கரும்பிற்கு மேல் உரமாகப் போடுவதே சிறந்தது. குறிப்பாக, ஆமணக்குப் பிண்ணாக்கு கரும்பிற்கும், கடலைப் பிண்ணாக்கு, புங்கம் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு ஆகியவை நெல்லிற்கும் சிறந்தது.

பிண்ணாக்கை எந்த ரகத்திற்கு இட விரும்புகின்றீர்களோ, அந்த ரகத்திற்கு இட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படும் அளவு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகள் கிடைக்க இரசாயன உரங்களையும் சேர்த்து இடுவதே சிறந்தது. ''எந்த ரகம் பயிரிடப் போகின்றீர்கள்? எந்தப் பிண்ணாக்கில் எவ்வளவு போடப்போகின்றீர்கள்?'' என்பதைத் தெரிவித்தால்தான், அதற்கேற்ப மணிச்சத்து எவ்வளவு இட வேண்டும் என்பதைத் தெரிவிக்க இயலும்.

பிண்ணாக்கு, இரசாயன உரங்களைப் போல் எளிதில் பயிருக்குக் கிடைக்காது; பிண்ணாக்கு தண்ணீரில் ஊறி, கரைந்த பிறகுதான் பயிருக்குக் கிடைக்கும். பிண்ணாக்குப் போட்டதன் பயன் சுமார் 15 நாட்களுக்குப் பிறகே நெற்பயிரில் தெளிவாகத் தெரியும்.

* * *

**வினா:** தழை உரச்செடிகளில் எந்த வகைச் செடியை நடவு வயலுக்கு விதைத்து மடக்கி உழுதால் பயன்தரும்?

ஆடுதுறை-31 (கல்ச்சர் 8940) நெல்விதை எங்கு கிடைக்கும்? அதன் சாகுபடி முறைகளையும், எந்தப் பட்டத்தில் நடவு செய்ய வேண்டும் என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கவும்.



நவரைப் பட்டத்தில் எந்த வகை நெல் ரகம் சாகுபடி செய்தால் அமோக விளைச்சல் பெறலாம்?

—சி. ஏழுமலை,
தின்னலூர் கிராமம்,
அனந்தமங்கலம் (அஞ்சல்)
மதுராந்தகம் வட்டம்,
செங்கை மாவட்டம்.

**விடை:** தக்கைப் பூண்டு, செஸ்பேனியா, பில்லிப்பசரா, சணப்பை, அவுரி, தட்டைப் பயறு ஆகிய தழை உரச் செடி விதைகளை விதைத்து, பூக்கும் தருணத்தில் அவைகளை மடக்கி உழுதால் நிலவளம் செழிப்பாகும். தக்கைப்பூண்டு செஸ்பேனியா, பில்லிப்பசரா, சணப்பை ஆகிய விதைகளுடன் நுண்ணுயிர் ராசிகளைக் கலந்து விதைப்பதால், இவ்வகைச் செடிகளின் வேர்முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை இழுத்து நிலத்தில் இருத்துகின்றன. உரப்பற்றாக்குறை நிலவும் இந்நேரத்தில், இவ்வாறு தழை உரச்செடிகளைப் பயிரிட்டால் [illegible] ஏக்கருக்கு 20 முதல் 40 [illegible] தழைச்சத்தை [illegible] இருத்தமுடியும்!

ஆடுதுறை-31 (கல்ச்சர் 8946) நெல்விதை, தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் கிடைக்கும். இந்த ரகம் குறுவைப்பட்டத்திற்கே ஏற்றது. இது அண்மையில்தான் வெளியிடப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டுமே இந்த ரகம் ஏற்றது எனப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இந்த ரகம் ஏற்றதா, இல்லையா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த ரகம் பற்றிய அனுசரணை ஆராய்ச்சி நடைபெற்று முடிவு தெரிந்தபின், இந்த ரகத்தைப்பயிரிடமுயற்சி செய்யலாம். 'கரிகாலன்' ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் சாகுபடி முறைகளையே இந்த ரகத்திற்கும் மேற்கொள்ளலாம்.



செங்கற்பட்டு மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் 'ஐ.ஆர். 8', 'ஐ.ஆர். 20' ஆகிய ரகங்களைப் பயிரிட்டு அமோக விளைச்சல் பெறலாம்.

* * *

**வினா:** 'கோ-25' நெல் பயிரிடுவதற்குக் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை விவரிக்கவும். பின்னைப் பிண்ணாக்கு கையிருப்பில் வைத்துக் கொள்வதால் சிவப்பு வண்டு துளைத்து மாவாக்கி விடுகிறது. இதனால் 'என்', 'பி' சத்து குறையுமா? பூச்சியைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

தற்பொழுது காகிதப் பற்றாக்குறை ஏற்படுவதினால், பசுமை புரட்சி, சிறுசேமிப்பு போன்ற விளம்பரங்களை எல்லாம் இருபுற அட்டையில் வெளியிட்டு-உள்பக்கங்களில் போட்டு பக்கத்தை வீணாக்காமல்-நல்ல செய்திகளை வெளியிட்டால் என்ன? கேளுங்கள் கொடுக்கப்படும் பகுதியில் 20 கேள்விகளுக்காவது பதில் வெளியிட்டால் என்ன?

--எஸ். வெங்கிடாசலமய்யர்
பெருமாள் கோயில் சந்து,
பூதபாண்டி அஞ்சல்,
குமரி மாவட்டம்.

**விடை:** 'கோ. 25' நெல் இரகத்தைக் குமரி மாவட்டத்தில் பிசானம் பருவத்தில் (செப்டம்பர் — அக்டோபர் முதல் பிப்பரவரி - மார்ச்சு வரை) பயிரிடலாம். சம்பா பட்டத்தில் 180 நாட்கள் வயதுடைய கோ-25 நெல், பிசானம் பருவத்தில் 165 நாட்களிலேயே அறுவடைக்கு வரக்கூடும்! ஒரு ஏக்கரில் 'கோ-25' நெல் பயிரிட 18 கிலோ விதையை, 36 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்துடன் கலந்து, 12 சென்ட் பரப்பில் நாற்று நட வேண்டும்.

நாற்று பறிக்க 7 நாட்களுக்கு முன்பாக 25 லிட்டர் 'பாரத்தியான்' மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 17 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியா, 130 கிலோ சூப்பர் பாஸ்பேட், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாகஇட வேண்டும்.




நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களில் நாற்றைப் பறித்து நடவு செய்ய வேண்டும். நடவு செய்யும் பொழுது வரிசைக்கு வரிசை 10 அங்குலம் இடைவெளியும், வரிசையில் தூருக்குத்தூர் 5 அங்குலம் இடைவெளியும் விட்டு நடவு செய்ய வேண்டும். சாதாரண முறையில் நடவு செய்தால் 6 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்யலாம்.

நடவு செய்த 15 நாட்களுக்குள் முதல் முறையாக களையெடுக்கவும். பிறகு 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் பூட்டை வெளிவரும் வரை களையெடுத்தல் நல்லது.

நடவு செய்த 21-ஆம் நாள் 5.5 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட, 27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவைத் தூவி விடவும். பிறகு, தொண்டைப் பூ தோன்றும் சமயத்தில் 5.5 கிலோ தழைச்சத்து அளிக்க 27.5 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவைத் தூவி விடவும்.

நடவு செய்த 21-வது, 42-வது, 63-வது நாட்களிலும், பூட்டை தோன்றும் சமயத்திலும் ஆக 4 முறை, 200 மில்லி லிட்டர் 'பாரத்தின்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்டரின்' மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும். 21-வது நாள் தெளிக்கும் மருந்து

13. திரு. எஸ். வரதராஜன்,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
மதுரை தெற்கு.

14. திரு. எஸ். முருகேசன்,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
நீலகிரி.

15. திரு. பி. என். எழுத்தச்சன்,
துணை ஆய்வாளர்,
தமிழ்நாடு சிறப்புக் காவல் படை நான்காவது அணி,
கோவைபுதூர்.

16. திரு. இ. இராமநாதன்,
உதவித் துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இரயில்வே காவல் துறை.

17. திரு. என். மாரிமுத்து,
நிலையத் தீயணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

காவல் பதக்கமும் ரூபாய் ஆயிரம் உதவித் தொகையும் பெற்றவர்கள் விவரம் வருமாறு :

18. திரு. கே. வரதன்,
தலைமைக் காவலர்,
சேலம்.

19. திரு. கே. நீலகண்டன்,
காவலர்,
ரயில்வே காவல் துறை.

20. திரு. ஷேக் முகமது,
காவலர் 1372,
வட ஆர்க்காடு மாவட்டம்.

21. திரு. ஏ. கோவிந்தராஜன்,
காவலர் 1279,
சென்னை நகரக் காவல் துறை.

**வீரச்செயல்களுக்கு :**

வீரச்செயல்களுக்காகவும் குறிப்பிடத் தகுந்த அளவில் மகத்தான பணிகள் ஆற்றியமைக்காகவும் காவல் பதக்கத்துடன் ரூபாய் மூவாயிரம் உதவித் தொகை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

1. திரு. கே. ஆர். வெங்கடேசன்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
பொள்ளாச்சி.

2. திரு. ஆர். வி. வீரண்ணன்,
தனித் துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இராமநாதபுரம்.

3. திரு. பி. அய்யாக்கண்ணு,
துணை ஆய்வாளர்,
காவல் துறை,
இராமநாதபுரம்.

4. திரு. ஆர். வெள்ளைச்சாமி,
காவலர் 1008,
மதுரை தெற்கு.


## தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நே. எக்ஸ் 406

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை-600007.

தொலைபேசி எண் : 30877
30878.
தபால் பெட்டி எண். 486.
தந்தி: ''ஹவுஸ்பாங்க்''

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்; எம் எல்.ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி [illegible]
பொருளாளர் : திரு எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.5 கோடி. |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ... | ரூ. 2.33 ,, |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | ... | ரூ. 15.97 ,, |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது சம்பந்தமான விபரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடு அடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

ரூ. 500-க்குக் குறையாமல் [illegible] ஆண்டிற்குக் குறையாமலும் தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும். தவணைவைப்புத் தொகைகளுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது.

| | | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு. |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | | |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட | ... | ரூ. 25,000/- |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும் | ... | ரூ. 10,000/- |
| | ... | ரூ. 10,000/-. |

பூ.க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.




டன், 500 கிராம் தாமிரப் பூசணக் கொல்லியையும் கலந்து தெளிப்பதால் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். நெல் பூவில் தோன்றும் நாவாய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் 'பி. எச். சி. 10 சதம்' மருந்து தெளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 2 முதல் 4 டன் வரை மகசூல் பெற இயலும்!

பின்னை பிண்ணாக்கைச் சிவப்பு வண்டு துளைப்பதால், மாவாகி சேதமடையும்! இதனால், நாளடைவில் ஓரளவிற்கு 'என்', 'பி' சத்து குறையக் கூடும். சிவப்பு வண்டைக் கட்டுப்படுத்த, பிண்ணாக்கைச் சற்று வெய்யிலில் உலர்த்தி, வண்டுகளைப் அப்புறப்படுத்தி விட்டு, பிறகு சாக்குகளில் சேமிக்கவும். சாக்குகளின்மேல் இலேசாக 'பி.எச்.சி. 10 சதம்' தூளைத் தூவி விடவும். பிண்ணாக்கைத் தரையிலேயே குவித்து வைத்திருந்தாலும், குவியலைச் சுற்றி 'பி.எச்.சி. 10 சதம்' தூளைத் தூவி விடலாம்.

காகித பற்றுக்குறையும், காகித விலை உயர்வும் உள்ள இந்நேரத்தில் தாங்கள் கூறியுள்ளதுபோல் விளம்பரத்தைக் குறைத்தால், 'தமிழரசு' இதழுக்கு நட்டம் ஏற்படும்! தற்பொழுது உள்ள மற்ற இதழ்களுடன் ஒப்பிட்டால், 'தமிழரசு' இதழின் விலை மிகவும் குறைவு. ஆகவே, 'தமிழரசு' இதழில் விளம்பரம் வெளியிடுவது அவசியமாகிறது. மேலும் பசுமைப்புரட்சி, சிறுசேமிப்பு போன்ற விளம்பரங்களை வெளியிடுவது, பொதுமக்களை அந்த நல்லப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காகவேயாகும்! எனவே, 'தமிழரசு' இதழில் விளம்பரம் வெளியிடுவது பக்கங்களை வீணாக்குவதற்கல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் 20 கேள்விக்களுக்காவது விடையளிக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றோம். ஆனால் உங்களைப்போல், கோ. 25 நெல் சாகுபடி முறைகள் அனைத்தையும் தெரிவிக்கும்படி பெரிய கேள்வியைக் கேட்டால் எப்படி 20 கேள்விகளுக்கான பதில்களை வெளியிட இயலும்? எனவே, தேவையானவைகளை மட்டும் சிறிய கேள்விகளாக எழுதி அனுப்பினால்தான், 20 கேள்விகளுக்கான பதில் வெளியிட முடியும். அல்லது நீங்கள் கேட்டுள்ளது போன்ற முக்கிய கேள்விகளை விட்டு விட்டு, சிறு சிறு கேள்விகளுக்கு மட்டும் பதில் அளித்தால் தான் தாங்கள் கூறுவது போல் 20 கேள்விகளுக்குப் பதில் கூற இயலும். அவ்வாறு செய்வது நல்லதா நீங்களே கூறுங்கள்?

**வினா:** மண்பரிசோதனைக்கு எங்கே அனுப்ப வேண்டும் ? அதற்குக் கட்டணம் உண்டா? வேளாண்மைக் குறிப்புகளடங்கிய தொகுப்பு நூல் கிடைக்குமா?

—தமிழாலயன்,
எழுத்தர்,
குளமங்கலம் (அஞ்சல்),
மதுரை மாவட்டம்.

**விடை:** மதுரை மாவட்டத்திலுள்ள உழவர் பெருமக்கள், தங்கள் வயலின் மண்ணைப் பரிசோதனைச் செய்து கொள்வதற்காக, மதுரையிலேயே ஒரு மண் பரிசோதனைக்கூடம் உள்ளது. நீங்கள் மண்மாதிரியைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

''உதவி மண் இரசாயன
வல்லுநர்,
மண்பரிசோதனைக் கூடம்,
மதுரை.''

மண்பரிசோதனை செய்ய கட்டணம் ஏதும் இல்லை; இலவசமாகவே மண்பரிசோதனை செய்து முடிவு அறிவிக்கப்படும். உங்கள் வயலில் மண்மாதிரி எடுத்து அனுப்பிட, உங்கள் ஊர்நல ஊழியர் (கிராமசேவகர்) உதவியை நாடலாம்.

வேளாண்மைக் குறிப்புகள் அடங்கிய தொகுப்பு நூல் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் வேளாண்மைக் குறிப்புகள் அடங்கிய சிறு சிறு இலவச வெளியீடுகளை மதுரையில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்திலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**வினா:** எனது தோட்டத்தில் கரிய நிறமுடைய கடினமான கற்கள் அதிக அளவு கிடைக்கின்றன. நான், இக்கற்களில் இரும்புப்படிகள் இருக்கும் என எண்ணுகிறேன். ஆகவே, அதைத் தெளிவு செய்து கொள்ள வேண்டுமாயின், கற்களை எந்த விலாசத்தில் உள்ள ஆராய்ச்சிச் சாலைக்கு அனுப்ப வேண்டும்? அதற்கு ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமா? எவ்வளவு நாளில் முடிவு தெரியும்? எந்த முறையில் கற்களை அனுப்ப வேண்டும்?

—சி. நாராயணசாமி,
6-84, வையம்பாளையம்
(அஞ்சல்),
கோயம்புத்தூர்.

**விடை:** தங்கள் தோட்டத்தில் உள்ள கற்களில் இரும்புத் தாதுக்கள் கலந்திருக்கிறதா அல்லது இல்லையா என்பதைக் கண்டறிவதுபற்றிய விவரங்களையெல்லாம் அறிந்துகொள்ள பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

State Geologist,
Tamil Nadu Mineral
Development Project,
Madras-600032.

நீங்கள் கேட்டுள்ள கேள்விகளை எல்லாம் எழுதி, மேற்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

## தமிழகத்துக்குப் பாராட்டு

''அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தரத் தமிழக அரசு வகுத்து நிறைவேற்றி வருகிற பணிகள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன. குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கவும், அரிசனங்களுக்காக வீடுகள் கட்டித் தரவும் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் போல இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் செய்யவில்லை.

இந்தப் பணிகளுக்காக முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்கள் பாராட்டப்பட வேண்டியவராவார்.

இந்தக் காரியங்களில் தமிழ் நாட்டின் முன்னுதாரணத்தைப் பின்பற்றும்படி இதர மாநிலங்களின் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

கட்டடங்கள் கட்டும்போது கிராமப்புறத்து ஏழை மக்களுக்கான வீடுகள் கட்டுவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். தமிழ் நாடு அரசு இதில் கவனம் செலுத்தியுள்ளது.

—மத்திய வீட்டு வசதித்துறை
அமைச்சர்
போலோபஸ்வன் சாஸ்திரி.''





# பதக்கம் பெற்ற காவலர்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் வழங்கும் விழா 14-9-1974 அன்று, மதுரையில் நடைபெற்றது. தன்னிகரற்ற பணிகளுக்காகவும் வீரச் செயல்களுக்காகவும் காவல்துறையைச் சேர்ந்தோருக்குக் காவல் பதக்கமும் உதவித் தொகையும் அளிக்கப்பட்டன.

தன்னிரகற்ற பணிகளுக்காகக் காவல் பதக்கங்களையும் ரூபாய் மூவாயிரம் உதவித் தொகையையும் பெற்றவர்கள் விவரம். வருமாறு :

1. திரு. டி. எம். குருசாமி,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
சிறப்புப் பிரிவு 2, சி.ஐ.டி.,
திருச்சிராப்பள்ளி.

2. திரு. எம். துரைராஜ்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
விழிப்புப்பணி-ஊழல் தடுப்பு,
திருநெல்வேலி பிரிவு.

3. திரு. கே. குப்புசாமி,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
திருச்சிராப்பள்ளி (புறநகர்ப் பகுதி).

4. திரு. டி. கே. எம். அப்துல்ரசாக்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை,
சிவகாசி.

5. திரு. எஸ். சத்தியநாராயணன்,
துணைக் கண்காணிப்பாளர்,
கம்ப்யூட்டர் பிரிவு,
சென்னை.

6. திரு. ஏ. அருணாசலம்,
துணைக் கண்காணிப்பாளர்,
காவல் துறை இனம் 2,
கோயம்புத்தூர் (நகர்ப்புறம்).

காவல் பதக்கமும் ரூபாய் இரண்டாயிரமும் உதவித் தொகை பெற்றவர்கள் விவரம் வருமாறு :

7. திரு. ஜி. ஜி. ராஜேந்திரன்,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-ஊழல் தடுப்பு
இயக்ககம்,
சென்னை.

8. திரு. எஸ். ராஜன்,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-ஊழல் தடுப்பு
இயக்ககம்,
மதுரைப் பகுதி.

9. திரு. கே. ஏ. மீனாட்சி சுந்தரம்,
காவல் துறை ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.

10. திரு. எல். ஜே. மோனச்,
காவல் துறை ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.

11. திரு. என். லிங்கசாமி,
காவல் துறை ஆய்வாளர்,
விழிப்புணர்வு-அமைப்பு,
வேலூர்.

12. திரு. ஜி. டேவிட் திருத்துவராஜ்,
தனிக் காவல் ஆய்வாளர்,
சென்னை நகரக் காவல் துறை.


பசுமைப் புரட்சியால் உற்பத்திப் பெருக்கம்!
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள்! உதவிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் குடிநீர் வசதி!
புதிய முயற்சிகளால் தொழில்துறை வளர்ச்சி!
ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைந்திடத் திட்டங்கள்! பணிகள்!
இப்படித் தொடரும் நமது அரசின் அரும்பணிகளின்
வெற்றிக்கு
அடித்தளமே
அளவான குடும்பம்.
குடும்ப நலத் திட்டம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!
— குடும்ப நலத்துறை
தமிழ்நாடு